# ஆராய்ச்சித் தொகுதி

மு. இராகவையங்கார்

# ஆராய்ச்சித் தொகுதி

பேராசிரியர் மு. இராகவையங்கார்

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

இரண்டாம் பதிப்பு: மார்ச்சு, 1964.

விலை ரூ. 12-00

அச்சிட்டோர்:
ஜெனரல் பிரிண்டர்ஸ்
சென்னை-3.

# பதிப்புரை

முதற் பதிப்பின் பதிப்புரையில் ஆராய்ச்சித் தொகுதியின் தொடர்ச்சியாய்ப் பிற்பாகமாக அமையக்கூடிய கட்டுரைகளை வெளியிடும் சீரிய வாய்ப்பை வேண்டி, என் தமையனார் சேஷாத்திரி ஐயங்காரும் நானும் இறைவனை இறைஞ்சியிருந்தோம். அவ்வாறே ஆசிரியர் அவர்களின் 15 கட்டுரைகள் "**இலக்கியக் கட்டுரைகள்**" என்னும் பெயருடன் 1952-ஆம் ஆண்டு அச்சாகி, சென்னை, அண்ணாமலை, திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தார்களின் ஆதரவு பெற்றுத் திகழ்கிறது. பிற கட்டுரைகளையும் அச்சிட நினைத்திருந்தபோது, 1954-ஆம் வருடத்தில் தூய உள்ளமும் கவித்துவமும் வாய்ந்த என் தமையனார் காலம் சென்று விட்டார்கள். எஞ்சி நின்ற ஏராளமான கட்டுரைகளில் 14 மணிகளை ஆசிரியர் அவர்கள் பொறுக்கிக் கொடுத்தார்கள். "**கட்டுரை மணிகள்**" என்ற பெயரால் அவற்றை 1959-ஆம் வருடம் பதிப்பிக்கும் பாக்கியம் பெற்றேன். **தெய்வப் புலவர் கம்பர்** பற்றிய சில கட்டுரைகளைப் பாரி நிலையத்தார் பிரசுரிக்க ஒப்புக் கொண்டுள்ளார்கள். விரைவில் அவை வெளியாகக் கூடும்.

ஆசிரியரின் 80-ஆம் ஆண்டு நிறைவு, 'வினைத்திரிபு விளக்கம்' என்னும் நூலைப் பதிப்பிக்க ஒரு சீரிய வாய்ப்பளித்தது.

ஆராய்ச்சித் தொகுதியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வித்துவான் தேர்வுக்குச் சில ஆண்டுகள் தொடர்ந்து பாடமாக நியமித்திருந்தார்கள். சென்ற ஐந்து ஆண்டுகளாக இந்நூற் பிரதிகள் கிடைக்காமல் கற்போர் சிலர் இடருற்றனர். ஆராய்ச்சித் தொகுதியின் தகுதியை நோக்கிப் பொருட் செலவைப் பாராட்டாமல் அச்சிட முன்வந்த பாரி நிலைய முதல்வர் ஸ்ரீ **செல்லப்பன்** அவர்களின் தமிழ் ஆர்வம் பாராட்டற்பாலது. பாரி நிலைய முதல்வர் அவர்களுக்கும், இவ்விரண்டாம் பதிப்பை ஊக்குவித்து, அச்சுப் பிழை நீக்கி நிறைவேற்றிக் கொடுத்த வித்துவான் **மு. சண்முகம் பிள்ளை** அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

மானாமதுரை }
13-1-64 }

நாராயணையங்கார்

# உள்ளுறை

பக்கம்


முதற் பதிப்பின் பதிப்புரை ... ... vii
முன்னுரை ... ... ix
ஆசிரியர் வரலாறு ... ... xiii
பேராசிரியர் மு. இராகவையங்காரின் பின் வாழ்க்கை வரலாறு ... ... xxvii
தமிழறிஞர் கடிதப்பகுதிகள் ... ... xxxi
1 ஸ்ரீவால்மீகி முனிவருந் தென்னாடும் ... ... 1
2 இராமாயணமுந் தமிழ்வழக்குக்களும் ... ... 16
3 கண்ணபிரானைப்பற்றிய தமிழ்நாட்டு வழக்குக்கள் ... 52
4 அருச்சுனனும் பாண்டியமரபும் ... ... 70
5 தலைச்சங்கம் ... ... 78
6 இடைச்சங்கம் ... ... 88
7 தொல்காப்பியத்துக் கண்ட பழைய வழக்குக்கள் ... 101
8 தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும் ... 121
9 பழைய குறியீட்டெழுத்துக்கள் ... ... 136
10 பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள் ... ... 143
11 வீரத்தாய்மார் ... ... 167
12 தமிழ்வேந்தரின் இமயப்படையெடுப்பு ... ... 177
13 மார்கழிநோன்பாகிய தைந்நீராடல் ... ... 185
14 திருவள்ளுவரைப்பற்றிய சில குறிப்புக்கள் ... 204
15 ஒப்புரவறிதல் ... ... 213
16 மணிமேகலையும் புத்தஜாதகமும் ... ... 218
17 பத்தினிதேவியைப்பற்றிய சில குறிப்புக்கள் ... 230
18 ஸ்ரீ இருந்தவளமுடையார் ... ... 241
19 சேரர்வஞ்சியும் சிலாசாஸனவழக்கும் ... ... 244
20 ஸ்ரீ திருவேங்கடமுடையான் ... ... 264
21 தேவாரம்பெற்ற தலங்களும் சிலாசாஸனவழக்கும் ... 278

22 விலங்குப்போர் விளையாட்டு ... ... 297
23 அருகிவழங்கிய சிலவினைவிகற்பங்கள் ... ... 304
24 தமிழரும் ஆந்திரரும் ... ... 311
25 சேரவேந்தர் தாயவழக்கு ... ... 339
26 இளம்பூரணவடிகள் ... ... 398
27 கலிங்கத்துப்பரணிக் குறிப்புக்கள் ... ... 406
28 கருணாகரத் தொண்டைமான் ... ... 426
29 நரிவிருத்தம் ... ... 446
30 கூத்தச்சாக்கையன் ... ... 451
31 கருமாணிக்கன் கோவை ... ... 455
32 வயிரமேகவிருத்தி ... ... 459
33 பகழிக்கூத்தர் ... ... 461
34 'ஆழிவடிம்பலம்ப' என்ற நளவெண்பாப் பாட்டுரை... 466
35 மண்டலபுருடர் ... ... 474
மேற்கோட் செய்யுளகராதி ... ... 486
பொருட் குறிப்பகராதி .. ... 490
அநுபந்தம் ... 502

# முதற் பதிப்பின் பதிப்புரை

தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், தம் பொதுமறையில் தந்தை மகனுக்குப்புரியும் நன்றியையும் மகன் தந்தைக்குப்புரியும் நன்றியையும் அழகாக விளக்கியிருத்தலை யாவரும் நன்கறிவர். அப்பெரியார் திருவாக்கின்படி, எங்கள் தந்தை எம் விஷயங்களில் ஆற்றற்குரிய **செயலைக்** குறைவறப் புரிந்தவர்களேயாவர். ஆனால் மக்கள் தந்தைபாற் புரிதற்குரிய **அருஞ்சொல்லை** ஆற்றுந் திறம் எங்கட்கு அமையவில்லை. ஆயினும், எங்கள் நன்றியைக் காட்டற்கு வேறு சீரிய முறையும் சந்தர்ப்பமும் உண்டோ என்று சிந்தித்துக்கொண்டிருந்த எங்கட்கு, அவை இரண்டும் இப்போது வாய்த்துள்ளமைக்குப் பெரிதும் மகிழ்கின்றோம். அச்சந்தர்ப்பமாவது, எந்தையாரின் **அறுபதாம் ஆண்டுநிறைவு** நிகழவிருத்தலையாம். இவ் ஆண்டுநிறைவைத் தக்கபடி கொண்டாடுமளவில் எங்கள் நன்றியைப் பூர்த்தி செய்துகொள்ள நாங்கள் விரும்பவில்லை. அத்திருநாளையொட்டி அவர்கள் வெளியிட்டுள்ள அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஒரு தொகுதியாக்கி **ஷஷ்டியப்த பூர்த்தி ஞாபகப்பிரசுரம்** ஆக வெளியிட வேண்டுமென்று விரும்பினோம். அதனைச் சிலமாதங்கட்கு முன்பு எங்கள் தந்தையிடம் அறிவித்துக் கொண்டதோடு, அக்கட்டுரைகளை முறைப்படுத்திச் செப்பனிட்டுத் தரும்படியும் கேட்டுக்கொண்டோம். அவர்கள் அனுமதி எங்கட்குக் கிடைத்தது. அதுமுதலே அவர்கள் வியாசங்களில் முக்கியமானவற்றைத் திரட்டி **ஆராய்ச்சித் தொகுதி** என்ற பெயருடன் அச்சிடலாயிற்று. இக்கட்டுரைகளின் அருமை பெருமைகளைத் தமிழுலகம் நன்கறியும். தமிழ்நாட்டுப் பெரியோர்களும் அறிஞர்களும் அவைபற்றி எழுதிய கடிதங்களாலும் அவற்றின் சிறப்பியல்புகள் விளங்கக்கூடியன. அதனால் அவைபற்றி நாங்கள் எழுதவேண்டியது ஒன்றுமேயில்லை. அக்கட்டுரைகள் யாவும் ஒரே சமயத்தில் எழுதப்பட்டனவல்ல. ஒரு முகமாகக் கிடைக்கக்கூடியனவு மல்ல. பலகாலங்களில் பல பத்திரிகைகள் மூலம் வெளிவந்தவையாதலின், தமிழ்கற்றாரும் கற்பாரும் அவற்றைப் பெறுவதிற் பெருவிருப்பங் கொண்டிருந்தும், அவை கிடைப்பது அருமையாகவே இருந்தது. அவ்வழகிய வியாசங்களை ஒருமுகப்படுத்திப் படிக்கும் விருப்பம் எங்கட்கும் நெடுநாளாக உண்டு.

ஆகவே, 38-ஆண்டுகட்கு மேலாக எங்கள் தந்தையார் எழுதி வந்தவற்றுள் முக்கியமான 35-கட்டுரைகளைத் தொகுத்து அச்சிட்டு நிறைவேற்றி, அவர்களது அறுபதாம் ஆண்டுநிறைவுத் திருநாளின் ஞாபகப் பிரசுரம் ஆக இவ் ஆராய்ச்சித் தொகுதியை வெளியிடுகின்றோம். இவ் வெளியீடு, வள்ளுவனர் குறித்த உதவியைச் சேர்ந்ததன்றாயினும், எங்கள் உபகாரஸ்மிருதியின் அறிகுறியான ஒருசிறு கைங்கரியமேயாம். இச் சிறியதொண்டினையேனும் நல்ல சந்தர்ப்பத்திற் செய்யநேர்ந்தது எங்கட்கு ஒருவகைத் திருப்தியே அளிக்கின்றது.

சென்னை யூனிவர்ஸிடி தமிழ் ரீடர்: ராவ்ஸாஹிப்: ஸ்ரீ. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் B. A., B. L., அன்போடனுப்பிய முன்னுரையும், சென்னை யூனிவர்ஸிடி சரித்திராசிரியருள் ஒருவரான ஸ்ரீ R. V. இராமசந்திரதீக்ஷிதர் M. A., உரிமையின் எழுதிய ஆசிரியர்வரலாறும் இப்பதிப்பினைச் சிறப்பிப்பனவாகும். இவர்கட்கு எங்கள் நன்றியும் பாராட்டும் உரியனவாகுக. இந்த ஞாபகவெளியீட்டைப்பற்றி நம் நாட்டுத் தமிழறிஞர்பலர்க்கு முன்னதாகத் தெரிவித்துக்கொண்டு, எந்தையைப்பற்றிய அவர்கள் சிறப்புரைகளையும் பெறவேண்டும் என்ற விருப்பம் எங்கட்கு உண்டு. அவகாசம் சிறிதும் கிடையாமற் போனமையால், அங்ஙனஞ்செய்ய இயலவில்லை. ஆயினும், மேற்கூறிய முன்னுரைகளும், தமிழ்ப்பெருமக்கள் பலருடைய புகழ்ச்சிக்கடிதங்களும் அவ்விருப்பத்தைப் பூர்த்திசெய்வனவாகவே அமைந்துள்ளன. அவசரமாக இத்தொகுதியை நாங்கள் அச்சிட்டுவர நேர்ந்தமையின், அச்சுத்தவறுகள்பல இதனுள் அமைந்திருத்தல் கூடும். அவற்றைத் தமிழபிமானிகள் பொறுப்பார்களாக.

எங்கள் தந்தையாரால் எழுதப்பட்ட கட்டுரைகளிலே, இத்தொகுதியுள் வெளிவந்தனபோக எஞ்சியுள்ளவை பல. நீண்டகாலமிருந்து இன்னும் இவர்களால் வெளிவரவேண்டியனவும் உள. அவையாவும் இத்தொகுதியின் பிற்பாகங்களாக அமையக்கூடியவை. அவற்றை வெளியிடும் கைங்கரியத்தையும், இதுபோன்ற சீரிய சந்தர்ப்பங்களில் எங்கட்கு அளித்தருளுமாறு எம்பெருமான் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

இராமநாதபுரம்
18 - 7 - 1938

R. சேஷாத்திரி,
R. நாராயணன்.

# முன்னுரை

ஆராய்ச்சிநயஞ் செறிந்த இக்கட்டுரைகள் தமிழறிஞருள்ளே பெருஞ்சிறப்புற்று விளங்கும் **ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்** சுமார் நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்த்துறைகள் பலவற்றிலும் உழைத்துவந்ததன் பயனாக வெளிவந்தவை.

இக்காலத்தும் ஆராய்ச்சியென்பது புதியதொரு துறையெனின், 40-ஆண்டுகட்கு முன்னர் அஃது ஒரு புத்தம்புதிய துறையென்பது சொல்லவேண்டா. ஆங்கிலக்கல்விதான் அதற்கு மூலமாயிருந்தது. சிறிதேனும் பொருள்வருவாயும் பிறவசதிகளு முடைய தமிழ்மக்களனைவரும் ஆங்கிலக்கல்வியையே பெரிதும் போற்றிக் கற்கத் தொடங்கினர். அவ்வாறு கற்றோர்களே அரசாங்கத்திலும் பிறவிடங்களிலும் செல்வாக்குள்ள உத்தியோகங்களில் அமர்ந்து சிறப்புற்றிருந்தனர். இவர்களுக்குத் தமிழுக்குரிய விஷயங்களையும் ஆங்கிலத்திற் கற்பதே எளிதாயிருந்தது. அன்றியும் ஆங்கிலக்கல்வியில் வல்லவர்களே ஆராய்ச்சித் துறையை மேற்கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தமிழில் எழுதுவதைக் காட்டிலும் ஆங்கிலத்தில் எழுதுவதே எளிதாயிருந்தது. மேலும் ஆங்கிலர் முதலிய பிறமொழிமக்கள் தமிழ் வடமொழி முதலியனபற்றிய ஆராய்ச்சியிற் பேராவல் கொண்டு உழைத்துவந்ததோடு, இவ்வகை யாராய்ச்சி பெருகும்படி செய்தற்கும் அவர்கள் வல்லவர்களா யிருந்தார்கள். ஆகவே இக்காலத்திற் காட்டினும் அக்காலத்தில் ஆராய்ச்சிநூல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலெழுதுதலே நலமென்ற உணர்ச்சி வலியுற்றிருந்தது. வேறொரு காரணத்தாலும் இவ்வுணர்ச்சி பரவத் தொடங்கிற்று. ஆராய்ச்சித்துறை பலவற்றுள்ளும் தலைமைபெற்று விளங்குவது தேசசரித்திரம் பற்றியதாகும். இதற்குச் சிலாசாஸன பரிசோதனை அடிப்படையாகவுள்ளது. இவ்வகைப் பரிசோதனைகளைத் தமிழர், தெலுங்கர், கன்னடர் முதலிய அனைவர்க்கும் விளங்கும்படி பொதுவான ஓர் மொழியில் வெளியிட்டாலன்றி, அவை பெரும்பயனை யளிக்கமாட்டா வென்பது திண்ணம். அனைவரும் பயின்று வரும் பொதுமொழி ஆங்கிலமா யிருந்ததினாலே, அம்மொழியிலே இப்பரிசோதனைகள் வெளிவந்தன. இம்முறையை மேற்கொண்டே தேசசரித்திரமும் ஆங்கிலத்தில் வெளிவரலாயிற்று. ஆராய்ச்சியின் ஒருபகுதி இங்ஙனமாகவே, பிறபகுதிகளும் இம்முறையையே கையாளலாயின.

இந்நிலையிலே தமிழ்க்கல்வி புத்துயிர்பெறத் தொடங்கியது. தொன்றுதொட்டுத் தமிழுக்கு உரிமைபூண்ட மதுரையம்பெரும் பதியிலே, ஸ்ரீ **பாண்டித்துரைத் தேவரவர்கள்** தமிழ்ச்சங்கம் நிறுவினார்கள். தமிழ்க்கல்வியிற் சிறந்த புலவர்களெல்லாரும் இத்தமிழ்ச்சங்கத்தோடு உறவுகொள்ளலாயினர். இச்சங்கத்தின் அங்கங்களுளொன்றாக, தமிழ்நாட்டிலுள்ள அரிய தமிழ் நூல்களனைத்தையும் தொகுத்து வைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 'பாண்டியன் புத்தகாலயம்' ஒன்றும் நிலையிடப்பெற்றது. அச்சில் வாராத தமிழ் நூல்கள் நூற்றுக்கணக்காக இப் புத்தகாலயத்தில் தொகுக்கப்பெற்றன. சங்கத்தின்செய்திகளை வெளியிட்டுத் தமிழ்க்கல்வியைப் பரப்புதற்கெனச் 'செந்தமிழ்' என்னும் மாதபத்திரிகை யொன்றும் பிரசுரிக்கப்பட்டது.

இப்பத்திரிகைக்கு முதன் முதலில் ஆசிரியரா யமைந்தவர்கள் ஸ்ரீ. **ரா இராகவையங்காரவர்கள்;** உதவியாசிரியரா யிருந்தவர்கள் ஸ்ரீ **மு. இராகவையங்காரவர்கள்.** பத்திரிகை நடத்தும் பொறுப்பு பெரும்பாலும் உதவியாசிரியரைச் சார்ந்ததாகவே ஆரம்பமுதற்கொண்டு இருந்ததெனல் தவறாகாது. உதவியாசிரியரவர்கள் ஆண்டில் இளையரா யிருந்தபோதிலும் கல்வியறிவாற்றல்களில் சிறந்தவர்களா யிருந்தார்கள். தங்குடிக்கு இயல்பாக அமைந்த தமிழ்க்கல்வியோடு ஆங்கிலவறிவுஞ் சிறுகச்சிறுகத் தேடிப் பெருக்கிக் கொண்டனர். ஆங்கிலங்கற்றுவல்ல ஆராய்ச்சியாளர்களோடு அளவளாவி, அக்கல்வியால் உண்டான நலத்தையும், பெருநோக்க முதலியவற்றையும் அறியலாயினர். திரு. வி. கனகசபைப் பிள்ளையவர்கள் முதலானோருடைய நூல்களைப் பலமுறை கற்று புத்தம் புதிய ஆராய்ச்சியின் முறையையும் நன்கு தெளிந்தனர். இங்ஙனம் பலபடியாலும் தகுதிமிக்க உதவியாசிரியர் சிலகாலத்திற்குள் செந்தமிழின் ஆசிரியராயமைந்தமை அப்பத்திரிகைக்கும் தமிழுக்கும் அதிருஷ்டம் என்றே கூறல்வேண்டும்.

தமிழ்க்கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக்கொண்ட தமிழ்மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையேயாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையிலும் அதுவரை அறியாத அரிய விஷயங்களைக் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்துகொண்டே யிருந்தன. பத்திராசிரியர் எழுதியனவெல்லாம் தமிழ்மணமும் ஆராய்ச்சிநலமுஞ் செறிந்து விளங்கின; கற்பார்க்குப் பெருவிருந்தா யமைந்தன. ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்

பர்கள் எதிர்பார்த்த வண்ணமா யிருந்தார்கள். தமிழ்நாட்டுப் பெரும்பேராசிரியனு யமைந்து தமிழ்மக்கள் வீடுதோறுஞ் சென்று தமிழ்க்கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்துவந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாயிருந்தது. இப் பத்திரிகையின் உயிர்நிலையா யிருந்தவர்கள் இவ்வாசிரியரவர் களே. பலர் சிறந்த தமிழறிஞர்களாக விளங்குதற்கும், அறிவு கலமிக்க பலர் தமிழாராய்ச்சியை மேற்கொள்ளுதற்கும் இவர் களே காரணமாயிருந்தார்கள்.

பத்திரிகை தோன்றிய காலத்தேயே, ஆராய்ச்சிக்குரிய விஷ யங்களையும் இவர்கள் தாமே அரிதில் தேடிக் கொண்டார்க ளென்று சொல்லவேண்டும். பாண்டியன் புத்தகசாலையில் அச் சில் வாராத அரியநூல்கள் பல இடம்பெற்றமை இவர்களுக்கு அனுகூலம் விளைத்தது. தமிழ்நாட்டிற் பற்பல விடங்களிலுஞ் சிறப்புற்று வாழ்ந்துவந்த தமிழ்ப்புலவர்க ளில்லந்தோறுஞ் சென்று அவர்களுடைய முன்னோர்கள் ஈட்டிவைத்த அரும்பெறற் றமிழ்ச் செல்வங்களைப் பெற்றுப் பாண்டியன்புத்தகசாலையிற் சேமித்து வைத்தற்கு இவர்களும் முயன்றுவந்தனர். இங்ஙனந் தேடிப் பெற்ற நூல்களைத் தொகுத்துவைத்துக் கண்குளிரப் பார்த்த லோடமையாது, சமயம் வாய்த்தபோதெல்லாம் அந்நூல்களைக் கற்று அவற்றை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டனர். அந்நூல்களுட் சில இலக்கிய ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்தன. சில இலக்கணவாராய்ச்சிக்குத் துணை புரிந்தன ; சில சரித்திர ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்தன ; சில சமய ஆராய்ச்சிக்குத் துணை புரிந்தன ; சில காலவாராய்ச்சிக்குத் துணைபுரிந்தன. இவ்வகை யாராய்ச்சியுரைகள் பல செந்தமிழ்ப்பகுதிகள் பலவற்றில் இவ்வா சிரியரால் வெளியிடப்பெற்றுள்ளன.

இலக்கிய ஆராய்ச்சியில் இவ்வாசிரியர் ஈடுபட்டிருந்தது போலவே, சரிதவாராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார்கள். சிலாசா ஸன வெளியீடுகள் தோன்றத்தோன்ற, அவற்றையெல்லாம் நன்கு கற்று ஆராய்ச்சிக்குரிய பொருள்களை ஈட்டிக்கொண்டனர். சிலா சாஸனப் பயிற்சி சரிதநிர்மாணத்திற்கு மாத்திரம் பயன்படுவ தோடு அமைந்துவிடுவதன்று ; இலக்கிய வுணர்ச்சிக்கும் பயன் படுவதாகும். சிலாசாஸன வழக்காறுகளுக்கும் இலக்கிய வழக் காறுகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனை நன்குதெரிந்து, இலக்கியங்களை யுணர வேண்டுமாயின் சிலாசாஸனங்களில் தக்க பயிற்சிவேண்டு மென்பதையும், அவ்வாறே சிலாசாஸனங்களை யுணரவேண்டுமாயின் இலக்கியப்பயிற்சி மிகுதியும் உளதாதல்

வேண்டுமென்பதையும் தாம் எழுதிவந்த ஆராய்ச்சியுரைகளால் முதன்முதல் நிறுவியவர்கள் இவ் வாசிரியரே யென்று கூறுதல் வேண்டும். போதிய தமிழறிவின்மையால் சிலாசாஸன பரிசோதகரிற் சிலர் வெளியிட்டுள்ள விநோதமான பொருள்களை நாம் அறிவோம். இங்ஙனமே சிலாசாஸனப் பயிற்சியின்மையால், தமிழ் நூல்களில் வரும் வாக்கியங்களின் பொருளுணரமாட்டாது தமிழறிஞர்கள் விநோதப் பொருள்கள் உரைத்திருப்பதும் நாம் அறிவோம். இவ்வாபாசங்களை நீக்கி அடிப்பட்ட வழக்கொடு தமிழறிவு ஒத்துச்செல்லுதற்கு இவ்வாசிரியரவர்கள் வழிகாட்டியா யுள்ளார்கள். சிலாசாஸன பரிசோதகர்களுடைய வேலையையும் இவர்கள் சில சமயங்களிற் செய்திருப்பது உண்டு. காலஞ்சென்ற **டி. ஏ. கோபிநாத ராயரவர்களுடன்** சில விடங்களுக்குச் சென்று அங்கங்கேயுள்ள சிலாலிகிதங்களை வாசித்தும் பெயர்த்தெழுதியும் தமது சிலாசாஸன அறிவைப் பெருக்கிக் கொண்டனர்.

இங்ஙனம் 8—ஆண்டுகளாக இவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராயமைந்து பெரும்புகழ் பெற்றார்கள். பத்திராசிரியர் என்ற நிலையில் இவர்கள் காட்டிய ஆற்றலே தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் ஏற்பட்டவுடன் அதன் தலைமைத் தமிழ்ப்பண்டிதராக இவர்களை ஆக்குவித்தது. இப்புதுநிலையில் இவர்கள் எய்திய சிறப்பினைக்குறித்து இங்கே கூறுவது மற்றொன்று விரித்தலாம். இக்காலத்து இவர்களது ஆராய்ச்சித்திறம் பரிபக்குவமடைந்ததொன்றே இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆராய்ச்சிக்குரிய ஒவ்வொரு விஷயத்திலும் கருத்து வேறுபாட்டிற் கிடமுண்டு என்னும் பரந்தவுணர்ச்சியும் மாறுபட்ட கருத்துக்களைப் பொறுமையுடன் சாவதானமாய் ஆராயும் பெருங்குணமும் எளிதிற்கிடைப்பனவா? கல்வியறிவாற்றல்களை யெல்லாம் பரீக்ஷித்துத் தகுதியை அளவிடுதற்கு அகராதிவேலையினுஞ் சிறந்த தொன்றைக் கூறுதல் ஏலாது. ஓயாது கற்றல்வேண்டும்; ஓயாது ஆராய்தல் வேண்டும்; ஓயாது எழுதுதல்வேண்டும்; எழுதியவற்றை மீண்டு மீண்டும் சிந்தித்துத் திருத்துதல் வேண்டும். இவ்வகை வாழ்வினல் இவ்வாசிரியருடைய ஆராய்ச்சித்திறம் எத்துணை சிறந்து மேம்பட்டிருக்க வேண்டுமென்று எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். இயற்கையாகவே கூர்ந்த அறிவும், நிரம்பிய கல்விகேள்வியும், அரிய ஆராய்ச்சித்திறனும், இனிய மக்கட்பண்பும் உடைய இவ்வாசிரியரால் அகராதியடைந்துள்ள பெரும்பயன் தமிழுலகு நன்கறிந்ததே.

இங்ஙனம் சென்ற நாற்பது ஆண்டுகளாகத் தமிழாராய்ச்சி செய்துவந்ததன்பயனைகச் செந்தமிழிலும் பிறபத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் பல அரிய கட்டுரைகள் இவ்வாசிரியரவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இவற்றிற் பெரும்பாலனவற்றைத் திரட்டிப் புத்தகருபமாக இவர்களது **ஷஷ்டியப்தபூர்த்தியின் ஞாபகசின்னம்** ஆக இவர்களது **அருமைப் புதல்வர்கள்** பதிப்பித்திருக்கின்றனர்.

இப்பதிப்பில் தொகுக்கப்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்திலும் ஆராய்ச்சிநயம் சிறந்துவிளங்குதல் காணலாம். ஒவ்வொன்றிலும் இதுவரை பிறரால் அறியப்படாத ஒரு புதியமுடிவு ஆராய்ந்து நிறுவப்பட்டுள்ளது. முடிவு நிறுவுகின்ற முறையும் பெரிதும் போற்றத்தக்கது; ஆசிரியரது அறிவினின்றும் காரணங்கள் சுரந்தெழுந்தவண்ணமாயுள்ளன. இக்காரணங்கள் ஒன்றன்மேலொன்றுய்ச் சூழ்ந்து கற்பாரது மனத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றித் தமதாக்கிக் கொள்ளுகின்றன. வெற்றெலும்புக்குச் சமமென்று சாதாரணமாகக் கருதும் ஆராய்ச்சிப் பொருளுங்கூட, இவ்வாசிரியரது எழுதுகோலால் அழகிய உருவமெடுத்துவந்து நம் அறிவை வசீகரித்துவிடுகிறது. ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பொருள்களும் பல திறத்தனவாய்ப் பலதிறப்பட்ட வாசகர்களும் அநுபவிக்கும்படியாயுள்ளன. இலக்கியம், இலக்கணம், மொழிநூல், எழுத்துவரலாறு, நூற்பதிப்புமுறை, நூலாராய்ச்சி, தேசசரித்திரம், சமயம், பண்டை யாசிரியர்கள், பண்டைத் தமிழ்மக்களின் ஒழுக்கநெறி, சிலாசாசனங்கள் இடப்பெயர்கள், பண்டைக்காலத்துச் சான்றோர்கள் முதலிய பல பொருள்கள் இக்கட்டுரைத் தொகுதியிலே அடங்கியுள்ளன.

ஆசிரியரது கட்டுரைகளுள் ஒருசில விவாதங்களுக்கு இடந்தந்து நின்றனவெனல் உண்மை. இவ்வகையான ஆராய்ச்சியுரைகளிலும் ஒருநயம் காணப்படுகின்றது. ஆசிரியர் விவாத விஷயத்தில்மட்டுமே கண்ணுங் கருத்துமா யிருக்கின்றார். இக்காலத்துச் சிலர் செய்வதுபோல வாசிப்பார்க்கு அருசி தோன்றும் வண்ணம் எதிர் கூறுவாரை இழித்துரையாடுதல் ஓரிடத்தும் காணுதலில்லை. எதிருரை எழுதியோர் அங்ஙனம் வழுவியவிடத்தும், இவ்வாசிரியர் நெறியின் புறஞ்செலாது, தமது கௌரவத்தைப் பாதுகாத்து நம்மை மகிழ்விக்கின்றனர். விவாத விஷயங்களின் முடிபுகளைக் குறித்து யாதொன்றும் இங்குக் கூறுதல் தக்கதன்று. எனினும் ஒன்றுமட்டும் துணிந்து கூறலாம். பெரும்பாலும் ஆசிரியரது முடிந்த கருத்துக்கள் கொள்ளத்தக்கனவாகவே உள்ளன.

இனி ஆசிரியரது உரைநடையைக் குறித்துச் சில கூறுவது ஈண்டு ஏற்புடையதே. உரைநடைக்கு உயிர்நிலையாக உள்ளது 'தெளிவு' எனப்படுங் குணம். இக்குணம் இல்லையேல் அது நடைப்பிணம் எழுந்து இயங்க முயலுவது போன்று இருக்கும். உரைநடையில் தெளிவு ஏற்படவேண்டுமாயின் கருத்தும் தெளிவு பெற நிகழவேண்டும், கருத்தின் தெளிவு உரைநடையிற் பிரதி பலிப்பதாகும். தேசிய கவியாகிய சுப்பிரமணிய பாரதி,

**" உள்ளத்தே யுண்மையொளி யுண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாகும் "**

என்று பாடியிருப்பது உரைநடைக்கும் மிக்க பொருத்தமுள்ளதே. தெளிவு என்ற அளவில் நயமற்ற எளிய கருத்துக்களை எளிய சொற்களாற் கூறுதல் என்று கொள்ளுதல் கூடாது. இங்ஙனம் கூறுவதனை 'நடை' யென்றலே தக்கதன்றாம். இவ்வாசிரியரது உரை நடையைத் **தெளிந்தநடை** என்று குறிப்பதொன்றே அதன் சிறப்பை யுணர்த்தவல்லது. இவர்கள் தமது ஆராய்ச்சித் திறத்தாலும், கருத்துக்கள் தெளிவுபெற நிகழ்கின்ற இயல்பாலும், நிரம்பிய சொல்வன்மையாலும் ஓரிடத்தும் பொருள்மயங்க இடமின்றித் தெளிவுபெற எழுதுந் தன்மையாளர்.

தெளிவு இருப்பதோடு, பரிபக்குவமடைந்ததென்றும் ஆசிரியரது உரைநடையைச் சொல்லுதல் வேண்டும். பாண்டித்ய படாடோபமென்பது இவர்கள் நடையில் சிறிதும் இல்லை. பண்டையிலக்கியங்களிலும் பிறநூல்களிலும் நன்குபயின்று, மனம் பரிபக்குவமடைந் திருத்தலால், இவர்கள் உரைநடையிலே ஓர் அபூர்வமான கனிவும் இனிமையும் வெளிப்படுகின்றன. தமிழின்சுவை இந்நடையிலே ததும்பிநிற்றல் எங்குங் காணலாம். இத்தெளிவும் இனிமையும் இவ்வுரைநடைகற்பார்க்கு மனவெழுச்சிதர வல்லனவாகும்.

இக்கட்டுரைகளைத் தமிழ்மக்கள் கற்று இன்புறுவார்களாக! இவைபோன்ற கட்டுரைகள் எழுதி ஆராய்ச்சிகள் பல செய்து தமிழுலகிற்கு மேன்மேலும் நன்மைபுரியும்படி, எல்லாம்வல்ல இறைவன் உடல்நல முதலிய எல்லா நலன்களையும் இவ்வாசிரியர்க்கு அருள் புரிவானாக!

சென்னை,
ஸர்வகலாசங்கம்
15—7—'38

**S. வையாபுரிப் பிள்ளை,**
*தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்.*



பேராசிரியர் : மு. இராகவையங்கார்

# ஆசிரியர் வரலாறு

---

## [முன்னோர்]

பரதகண்ட முழுவதும் வந்து படிந்துவணங்கும் புண்ணியத் துறைகளைக் கொண்ட ஸேதுஸம்ஸ்தானத்தின் தலைநகரான இராமநாதபுரத்திலே, 150-ஆண்டுகட்குமுன் வந்தேறிய வைஷ்ணவப் பிராமண குடும்பங்களுள் இவ்வாசிரியரின் முன்னோர் சிறந்தவர்கள். இவர்களிலே, **சின்னப்பிரதானி கிருஷ்ணையங்கார்** என்பார் பிரசித்தராக விளங்கினர். இவர், ஸ்ரீ ஸம்ஸ்தானாதிபதியான முத்துராமலிங்கஸேதுபதியின் ஆட்சியில் (கி. பி. 1763-95) பிரதான மந்திரியாயிருந்த முத்திருளப்ப பிள்ளையவர்களை அடுத்து இரண்டாவது மந்திரிபதவியை வகித்தவர். இதுபற்றிச் 'சின்னப்பிரதானி' என விசேஷிக்கப்படுவர். இராமேசுவரங் கோயில் மூன்றும் பிராகாரத் திருப்பணியைச் சேதுவேந்தர் கி. பி. 1740-ல் தொடங்கியபோது, இம் மந்திரிகளிருவர் மேற்பார்வையினும் அஃது இனிது நடைபெற்று, 1769-ல் பரிபூர்த்தி பெற்றது. இவ்வாறு 29-ஆண்டுகளாக அரியபணிகள் செய்யப் பெற்ற அப்பிராகாரம் சொக்கட்டான் கட்ட வுருவில் அமைக்கப் பெற்றமையால், 'சொக்கட்டான் மண்டபம்' என வழங்கப் பெறும். இதன் அமைப்பும் அழகும் காண்போர்க்கெல்லாம் வியப்பும் உவப்பும் விளைக்கத்தக்கவை. இப்பிராகாரத்தின் கிழக்கிலும் மேற்கிலும் அமைந்த மண்டபங்களிலே ஸ்ரீ முத்துராமலிங்க ஸேதுபதியின் உருவமும் அவர்க்கு இருபுறங்களிலும் அவர் மந்திரிகளான முத்திருளப்பபிள்ளை, கிருஷ்ணையங்கார் ஆகிய இருவர் உருவங்களும் தனித்தனிக் கற்றூண்களில் அழகாக வகுக்கப்பட்டு விளங்குதலை இன்றுங் காணலாகும்[1]. இவ்வாறு இராஜகாரியங்களையும் தெய்வகைங்கரியங்களையும் சிறப்புற நடாத்திவந்த சின்னப்பிரதானி கிருஷ்ணையங்கார் தம் அரசரால் வெகுமானிக்கப்பெற்றுப் பெருஞ்செல்வராக இராமநாதபுரத்தில்

---

[1] Tamil and Sanscrit Inscriptions by Jas. Burgess C. I. E. p. 57; Manual of the Administration of the Madras Presidency. Vol. iii, p. 741 (1893); Ramnad Manual, p. 248.

வாழ்ந்து வந்தனர். ஷெ இராமேசுவரத்திருப்பணி முற்றுப்பெற்ற பின்பும் இவர்க்கு ஸேதுமன்னர் ஸர்வமானியபூமிகள் அளித்துச் சிறப்பித்தார். இது, அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட சேதுபதி செப்பேடுகளில் ஒன்று[1]—

**சகாப்தம் 1706-ல் சோபகிருது௵ சைத்ர சுக்லபக்ஷம் அஷ்டமியும் புனர்வஸுவுங் கூடிய மேஷசங்கராந்தி புண்யகாலத்தில் ஹாரீத கோத்ரத்து ஆபஸ்தம்பஸூத்ரத்து யஜுஸ்சாகையினரும் சேஷாத்ரி ஐயங்கார் புத்ரருமான கிருஷ்ண ஐயங்காருக்கு, கைகிநாட்டு முத்துராமலிங்கபுரமான செப்பேடுகொண்டான் என்ற கிராமம் ரவிகுலசேகர ஹிரண்ய கர்ப்பயாஜி ரகுநாத ஸேதுபதி காத்ததேவர் வழித்தோன்றலான முத்துராமலிங்க விஜயரகுநாத ஸேதுபதி காத்ததேவர் அவர்களால் தானமாக அளிக்கப்பெற்றது—**

என்று கூறுவதால் தெரியவருகின்றது. ஷெ கிருஷ்ணையங்காருக்கு, சோணாட்டில் திருவாரூர்ச் சேகரத்தைச் சார்ந்த **திருமாஞ்சோலை** என்ற கிராமமொன்றும் உண்டு. இது, தஞ்சையரசர்க்கு இவர் புரிந்துதவிய அரிய செயல்பற்றி அவ்வரசரால் அளிக்கப்பட்டதாம். இவர் தம் இறுதிக்காலத்தை அக்கிராமத்திலே கழித்துப் பரமபதம் அடைந்தார். இவ்வாறு சீருஞ்சிறப்பும் பெற்று வாழ்ந்த இச் சின்னப்பிரதானியின் மூத்தபேரர் **நாராயணையங்கார்** என்பார். இவர்க்கு இருவர்புத்திரர்களும் ஒருபுத்திரியும் இருந்தனர். இவர்களுள் மூத்தவர்—

**துவாத்ரிம்சதவதானி கிருஷ்ணையங்கார்** என வழங்கும் திருநாமம் உடையார். வடமொழிதென்மொழிகளில் வல்லவர். சமய நூலாராய்ச்சி பெரிதும் உடையவர். இவரது நுண்ணறிவோடு கூடிய வாதவன்மை, அக்காலத்து விளங்கிய வடமொழி மஹாவித்வான்களாலும் பாராட்டப்பெற்றது. 32—அவதானங்கள் புரியவல்லவ ராதலின் 'துவாத்ரிம்சதவதானி' என விசேடித்து வழங்கப்பட்டார். ஸேதுஸம்ஸ்தான மந்திரியாயும் செந்தமிழ்ச் செல்வராயும் விளங்கிய ஸ்ரீ. **பொன்னுஸாமித் தேவரவர்கள்** பேரவையில் விளங்கிய வித்வன்மணிகளுள் இவரொருவர். இவர்க்கு இளவல்—

**[தந்தையார்]**

**சதாவதானம் முத்துஸ்வாமி ஐயங்கார்** என்பார். சேஷாத்ரி ஐயங்கார், அனந்தாழ்வான் என்பனவும் இவர்க்கு வழங்கிய திருநாமங்கள். இவர்க்கு அடுத்த சகோதரியார் திருப்பெயர் **பத்மாஸனி அம்மாள்** என்பது. இவ்வம்மையின் திருக்குமாரரே

[1] Setupati Grant, No. 17 (pp. 100–7); I. M. P. p. 1175, No. 122.

மஹாவித்வான்: ரா. இராகவையங்கார் அவர்கள். மதுரைத்
தமிழ்ச்சங்கத்துக் கூடிய பேரவையொன்றில், இவர்களால்
உபந்யஸிக்கப்பெற்ற "சேதுநாடுந் தமிழும்" என்ற பொருளுரை
யிலே, தம் இளைய அம்மானைப் பற்றி இவர்கள் குறிப்பிட்டுள்
ளவை அடியில் வருமாறு :—

"இவர் என் அருமைமாதுலரும் என் தமிழாசிரியரும் ஆவர்.
இத் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கி நடத்திய பெரிய தமிழபிமானி
யாகிய பாண்டித்துரைத்தேவர்க்கும் தமிழாசிரியர் இவரே. இவர்
அதிபாலியத்தில் கன்னட நாட்டரசரான ஸ்ரீ. கிருஷ்ணராஜ உடை
யார் திருமுன்பு கன்னடபாஷையிலே சதாவதானம் புரிந்து பல்லக்கு
குடை முத்துமாலை பொற்குவை இவை பரிசிலாகப் பெற்றவர்.
இவரது உரைவன்மையுங் கவித்திறமும் கற்றூர் பலரும் புகழ்வன.
இவரியற்றிய நூல்கள் :—சந்திராலோகம், மணவாளமாமுனி நூற்
றந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதி அகவல், ஷஷ்டி பதிகங்கள், குருகைக்
கலம்பகம் முதலியன. இத்தமிழ்ச்சங்கம் இவர்பாற் சிறப்பித்து
நன்றிபாராட்டுங் கடப்பாடுடையது. என்னையெனின், தமிழ்ச்சங்க
ஸ்தாபகரான பாண்டித்துரைத்தேவர் இவர் மாணுக்கராதலாலும்
செந்தமிழ்ப் பத்திரிகையை முதற்கண் தொடங்கிநடத்திய ஏழையேன்
இவர்க்கு அன்புள மருகரும் மாணுக்கருமாதலாலும், எனக்குப்பின்
அப்பத்திரிகையைச் சீர்பெற நடத்தினராகிய வித்வான் மு. இராக
வையங்கார் இவர் திருக்குமார ராதலானும், அவர்க்குப்பின் அப்
பத்திரிகையை இனிது நடத்தும் வித்வான் திரு. நாராயணையங்கா
ரும், கலாசாலைப் போதகாசிரியராயுள்ள வித்வான்: அரங்கசாமி
ஐயங்காரும், இவர் மாணுக்கர்களாதலாலும் என்க. இவரது அள
வில்லாக் கருணையே ஏழையேனை இப்பேரவைக்கண் நிறுவியது.
இவர் சேதுபதி அன்னப்பிரபாவத்தால் தமிழ் வளர்த்தவர் என்பது
யான்கூறித் தெரிய வேண்டுவதன்று. இவரது அவதான சக்தி, திரு
சிரபுரம் மஹாவித்வானும் பெருந்தமிழறிஞர்க்கெல்லாம் நற்றமிழா
சிரியருமான மீனுட்சிசுந்தரநாவலரான் வியந்து பாராட்டப்பட்ட
சிறப்புடையது" (பக். 28 – 9)

மைசூர் ஸம்ஸ்தானத்தில், சரஸ்வதிவிலாசா அத்தியக்ஷராக
விளங்கிய மஹாமஹோபாத்யாய : ராவ்பகதூர் R. நரசிம்மாசாரி
யர் M. A., அவர்கள் இப்பெரியாரின் மாணுக்கரில் ஒருவர். தம்
ஆசிரியர் இயற்றிய நூற்றெட்டுத்திருப்பதி அகவல், மணவாளமா
முனிகள் நூற்றந்தாதி என்ற இருபிரபந்தங்களையும் சேர்த்தச்சிட்டு
1908ஆம் இவ்வாசாரியரவர்கள் வெளியிட்டபோது, அப்பதிப்பு
முகவுரையில்,

"………இராமநாதபுரம் சிவகங்கை ஸம்ஸ்தானங்கட்கு வித்வா
னாக விளங்கிய இவர், 'கம்பராமாயணத்துக்குப் பொருள் சொல்வதில்
அற்புதமான ஆற்றலுடையவர். மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும்

பாலவனத்தம் ஜமீந்தாருமான ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவரவர் கள் இவ்வாசிரியரிடம் கம்பராமாயண முழுவதற்கும் பாடங்கேட்ட வர்கள். இவர், இராமநாதபுரத்திலும் ஆழ்வார் திருநகரியிலும் திருவல்லிக்கேணியிலும் மைசூரிலும் வசித்தபோது மிகப்பலர் இவ ரிடம் பாடங்கேட்டுவந்தனர்.

" அங்ஙனம் இவ்வாசிரியரிடம் படித்தவர்களில் யானும் ஒருவன் என்பதை இங்குக் கூறுவது மிகையாகாதென்று எண்ணு கிறேன். அக்காலத்தில் தாமியற்றிய இவ்விரு நூல்களின் கையெழுத் துப் பிரதியை ஆசிரியர் அடியேனிடம் அளித்து, 'அனுகூலப்படும் போது இவற்றைப் பதிப்பித்து வெளியிடுக' என்று கட்டளையிட்டரு ளினர். நெடுநாள் சென்றபோதிலும் இக்கைங்கரியம் என்னால் நடத்தப்படாமலே இருந்தது. அதனை நிறைவேற்றுதற்கு இப்போது சமயம் வாய்த்ததற்கு மகிழ்கின்றேன் "

என்று எழுதியுள்ள பகுதி குறிப்பிடத்தக்கது. இதனால், இப் பெரியாரின் பிரபாவம் கன்னடநாட்டில் விளங்கிய சரித்திராசிரிய ரொருவராலும் பிரகாசிப்பிக்கப் பெற்றதென்பது தெரியலாம்.

இற்றைக்கு 55—ஆண்டுகட்குமுன், பெரிய சரித்திராசிரியராக விளங்கிய டாக்டர் —பர்ஜஸ் (Dr. Burgess) துரையவர்கள், இராமே சுவரத்திற் பலமாதகாலந் தங்கி, அத்தலத்துச் சிற்பங்களையும் சிலாதாமிர சாஸனங்களையும் ஆராய்ச்சி செய்துவந்தபோது, அவ ரிடம் பண்டிதராய் அமர்ந்திருந்து தமிழ்த்துறையில் அவர்க்குப் பேருதவி புரிந்தவர் இப்பெரியார். " இராமேசுவரம் " என்ற தலைப்பெயருடன் ஆங்கிலத்தில் அத்துரையால் வெளியிடப்பட்ட சிறுநூலுள், சின்னப்பிரதானி கிருஷ்ணையங்காரைப் பற்றி எழுது மிடத்து—இப்பிரதானியின் கொட்பேரர் முத்துஸ்வாமி ஐயங்கார் என்றும், இவர் தமக்குப் பண்டிதரும் சிறந்த கவியுமாயுள்ளவர் என்றும் எழுதியுள்ள கீழ்க்குறிப்பு அறியத்தகும். மற்றும் இவரது அருமைபெருமைகளாகக் கூறற்குரியவை பலவாம்.

[மதுரை வாழ்க்கை]

இத்தகைய பெரியாரின் ஏகபுத்திரரே இவ்வாராய்ச்சித் தொகுதியின் ஆசிரியர். இவர், பாண்டிநாட்டு அரியக்குடியில் தம் மாதுலர்[1] கிருகத்தில் பகுதான்ய ௵ ஆடி௴ மிருகசீரிஷ நக்ஷத்திரத்தில் பிறந்தவர் (1878 ௵ ஜூலை௴ 26உ). 16-ம் வயதில் இவர் தந்தையார் பரமபதமடைந்தபின், ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவரின் ஆதரவாலும் ஊக்குதலாலும் தமிழ்த்துறையிற்

[1] இவர், சூரியங்குட்டம் கிருஷ்ணமாசாரியர் என்ற திருநாம முடையார். அப்பக்கத்தில் தமிழாசிரியராய்ப் பிரபலம் பெற்றிருந் தவர்; பல நூல்களியற்றியவர்.

பயின்று இவர் தேர்ச்சி பெற்றார். தேவரவர்கள் 1901 ௵ மதுரையில் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்தகாலையில், இவரும் உடனழைத்துச் செல்லப்பெற்று, முதலில் சங்ககலாசாலை உபாத்தியாயராகவும், அடுத்த வருஷம் **செந்தமிழ்ப்** பத்திரிகையைத் தொடங்கியபோது அதன் உதவியாசிரியராகவும் நியமனம் பெற்றனர். இப்பத்திரிகையின் முதற் பத்திராசிரியராக இருந்தவர், இவருடைய அத்தை குமாரரான **மஹாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள்**. இவர்கள், மூன்றாண்டுகள் வரை அப்பத்திரிகையைச் சிறப்புற நடாத்தி விலகியபின், ஆண்டில் இளையராயிருந்த இவரையே அதன் ஆசிரியராகத் தேவரவர்கள் நியமித்தனர். இதன்காரணம், இவரது எழுத்திலும் ஆராய்ச்சியிலும் அப்பிரபு அவர்கட்கிருந்த மதிப்பேயாகும். அவர்கள் எதிர்பார்த்தபடியே அரிய கட்டுரைகள் பல இவரால் அப்பத்திரிகையில் எழுதப்பட்டு வந்தன. 40-ஆண்டுகட்கு முன்பு, இலக்கிய இலக்கணசம்பந்தமான ஆராய்ச்சி தமிழறிஞரிடம் உண்டாயினும், சரித்திரத்துறை அவர்கள் பெரும்பாலார்க்குப் புதியதொன்றாகவே இருந்தது. பழைய சரித்திரச்செய்திகளை அறிவதில், தமிழ்மக்களேயன்றி ஆங்கிலம்வல்ல அறிஞர்களும் அக்காலத்துப் பெரிதும் விருப்புற்றிருந்தனர். அதனால், இவ்வாசிரியர் அத்துறையில் இறங்கி முற்காலத்தவும் பிற்காலத்தவுமான அரிய செய்திகள் பலவற்றைத் துருவிக்கண்டு அவற்றை எடுத்து விளக்க, புதியவான அச்செய்திகளை அறிந்த தமிழ்மக்கள் பலரும் வியப்பும் உவப்பும் அடைந்தனர். அங்ஙனம் வெளியிட்ட ஆராய்ச்சியுரைகளுள் **வேளிர் வரலாறு** என்பதும் ஒன்று. சிற்றரசரைப் பொதுவிற் குறிப்பிடுவதாகக் கருதப்பட்டு வந்த **வேளிர்** என்ற பழஞ்சொல், ஒருசார் தனிவேந்தர் குலத்தைச் சுட்டுவதென்பதும், அக்குலத்தவரின் பழைய வரலாறுகள் இன்ன என்பதும் அரியபல பிரமாணங்களுடன் தெளிய இதனுள் விளக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை, 1905௵ நிகழ்ந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 4-ம் வருஷக்கூட்டத்தில் "The Tamils 1800 years ago" என்ற அரிய சரிதநூலின் ஆசிரியர் ஸ்ரீமாந் **வி. கனகசபைப் பிள்ளை** B. A. B. L. அவர்களின் தலைமையின்கீழ்க் கூடிய அறிஞர் குழாத்தின் முன்பு படித்து உபந்யஸிக்கப்பட்டது. இதனைக் கேட்ட பிள்ளையவர்களும் சபையோர்களும், இக்கட்டுரையின் அருமை பெருமைகளைப் பாராட்டலாயினர். செந்தமிழ்ப் பத்திரிகையில் இது வெளிவந்ததும், இதனைப் படிக்க நேர்ந்த அறிஞர்பலரும் சரித்திரவுண்மைகள் பல பிரமாணபூர்வமாக இதனுள் அமைந்திருந்ததற்கு உவந்து தம் ஆதராதிசயங்காட்டிப் பல கடிதங்களைச் சங்கத் தலை

வர்க்கும் ஆசிரியர்க்கும் எழுதலாயினர். இக்கட்டுரை, சரிதவாராய்ச்சி வல்லாராய்க் கொழும்பில் வாழ்ந்த **ஸ்ரீ. வி. ஜே. தம்பிப்பிள்ளை** (M. R. A. S) அவர்களால் ஆங்கிலத்திற் பற்பல கீழ்க்குறிப்புக்களுடன் அழகாக மொழிபெயர்க்கப்பெற்று "ராயல்-ஏஷியாடிக்-ஸொஸைடி-ஜெர்னல்"லில் பிரசித்தப்படுத்தப்பட்டது. சென்னை யூனிவர்ஸிடியாரும் 'இண்டர்மீடியட்' பரீக்ஷாபாடங்களுள் ஒன்றாக இருமுறைவைத்து இதனைச் சிறப்பித்தனர்.

இங்ஙனம், இவ்வாசிரியரது தலைமையின்கீழ்ச் செந்தமிழ்ப் பத்திரிகை **எட்டு ஆண்டுகள்** இனிது நடைபெற்றது. இக்காலத்தில், பத்திராசிரியரது தலையங்கக் கட்டுரைகளும் பிறவும் புதியபுதிய கருத்துக்களை வெளியிடுவனவாய் அமைந்தமையின், அப்பத்திரிகையின் மதிப்பும் பிரசாரமும் அதிகமாயின என்பது யாவரும் அறிவர். இவையாவும், இத்தொகுதியில் அடுத்துப் பதிப்பிக்கப் பெற்ற **தமிழறிஞர்கடிதப்பகுதி**களாலும் விளக்கமாகும்.

## [சென்னை வாழ்க்கை]

1912-ல் நம் அரசாங்கத்தார், சென்னை யூனிவர்ஸிடியின் மேற்பார்வையில் தமிழ்ப் பேரகராதியொன்று நிர்மாணித்தற்கு வேண்டிய பொருளுதவிசெய்ய முன்வந்தபோது, அவ்வகராதிக்கு உதவத்தகுந்த பண்டிதராக இவ்வாசிரியர் குறிப்பிடப்பெற்றார். இவ் அகராதிக்கமிட்டிக்கு ஆதித்தலைவராகவும் பதிப்பாளராகவும் இருந்தவர், மதுரை அமெரிக்கன் மிஷனைச்சார்ந்த Rev J.S. **சாண்ட்லர்** துரையவர்களாவர். தமிழ்ப்பெரியார்களின் தூண்டுதன்மேல் துரையவர்களால் தெரிந்தெடுக்கப்பெற்ற இவ்வாசிரியர், 1913 ம் வருஷத் தொடக்கத்தில் அதன்பண்டிதராய் **அமர்ந்தது முதலே** அகராதிவேலையும் **ஆரம்பமாகி** நாளும் பெருக்கமுற்றது. மதுரையிலும் சென்னையிலும் இவர் தம் தலைவருடன் ஒத்துழைத்து, அப்பேரகராதி அச்சேறுதற்கு அடிப்படையான தமிழ்வேலைகளையெல்லாம் முடித்து உதவினர். இவரது ஊக்கத்திற்கும் உழைப்பிற்கும் பெரிதும் உவந்த துரையவர்கள் இவரைத் தக்கவாறு வெகுமானித்ததோடு, அகராதி வேலைநிகழ்ச்சி பற்றி இந்நாட்டிலும் புறநாட்டிலும் பத்திரிகைகட்கு அவர்கள் எழுதிவிடுத்த கட்டுரைகளிலே இவரைப் பாராட்டியும் போந்தனர்.[1] இங்ஙனம் 7-ஆண்டுகளாகத் தலைமைவகித்து விலகிய சாண்ட்லர் துரையவர்கட்குப் பின், அத்தலைமையை ஏற்று அப்பேரகராதியை யாவரும் பெற்றுமகிழும்படி பூர்த்திபெறச்செய்த அகராதிக்கமிட்டி அக்கி

[1] இப்பாராட்டை, தமிழறிஞர் கடிதப்பகுதியுள் xxiii-ம்பக்கம் காண்க.

ராசனரும், அதன் பதிப்பாசிரியரும் இவ்வாசிரியரிடம் காட்டி வரும் மதிப்பும் அபிமானமும் அதிகம் என்றே சொல்லத்தகும். இவ்வாறு பேரகராதி தொடங்கப்பெற்றதுமுதல் அது நிறைவேறிய காலம்வரை, இவ்வாசிரியர் தலைமைப்பண்டிதராய் இருந்து வந்ததோடு, அதன் அநுபந்தத்தொகுதி நடைபெற்று வருந் தற்காலத்தும் அப்பணியில் தலைநின்று நடாத்திவருகின்றனர்.

[ஆராய்ச்சி நூல்கள்]

இங்ஙனமாக, மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பத்திராசியராயிருந்த காலத்திலும், சென்னையில் அகராதிப்பணியில் அமர்ந்துள்ள காலத்திலும் இவ்வாசிரியர் எழுதிவெளியிட்ட நூல்கள் பலவாகும். அவையாவன :—

**வேளிர் வரலாறு**:—முன்புகுறித்த வேளிரின் ஆதிவரலாற்றுடன், அவ்வேள்குலத்தவராய்ச் சங்கநாளில் வள்ளல்களாக வாழ்ந்த தலைவர்களின் சரிதங்களையெல்லாம் ஆராய்ந்து எழுதப்பெற்றது, இந்நூல். இஃது, இருவகைச் செல்வமும் படைத்து, சென்னைச் சட்டசபை அங்கத்தினராக விளங்கிய **திவான்பஹதூர்: S. Rm. M. இராமசாமிச் செட்டியார்** அவர்களின் ஆங்கில முகவுரையுடன், மதுரைத் தமிழ்ச்சங்கப் பிரசுரங்களுள் ஒன்றாக வெளிவந்தது. இவ்வாசிரியரிடம் அன்பும் மதிப்பும் உடையராயிருந்த, காலஞ்சென்ற சேதுவேந்தர் **ஸ்ரீராஜராஜேஸ்வரஸேதுபதி** அவர்கட்கு உரிமையாக்கப்பெற்றது. இஃது இருபதிப்புப்பெற்றுள்ளது.

(2) **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி**:—இலங்கைத் தமிழ்ச் செல்வரும், Hon. Sri. P. குமாரசுவாமியவர்களின் அருமைப் புதல்வருமான ஸ்ரீமாந் கு. ஸ்ரீகாந்தன் அவர்கள் 1912-ம் ஆ வெளியிட்ட விளம்பரத்தின்படி, தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்திபற்றிப் பல்லோர் எழுதிய கட்டுரைகளிலே சிறியதாக மதிக்கப்பட்டுப் பரிசளிக்கப்பெற்றது. அகப்பொருள் புறப்பொருள்முதலிய பொருட்கூறுகளின் பழைய வரலாறுகளை அகங்கை நெல்லிக்கனி போல் விளக்குவது. தொல்காப்பியக்கடலுள் தமிழ்மக்கள் இறங்கித் திளைத்தாடுதற்குப் பெரும்புணையாய்த் திகழ்வது. இச்சிறப்புப் பற்றி நல்லறிஞரெல்லாராலும் கொண்டாடப்பட்டதென்பதும், சென்னை யூனிவர்ஸிடி வித்வான் பரீக்ஷைக்குப் பல்லாண்டுகளாகப் பாடமாக நியமிக்கப்பெற்றதென்பதும் யாவரும் அறிவர். இந்நூலும், மதுரைத்தமிழ்ச்சங்கப் பிரசுரங்களுள் ஒன்றாய் இருபதிப்புக்கள் பெற்றது.

(3) **சேரன் செங்குட்டுவன்**.—கடைச்சங்ககாலத்துப் பெருவேந்தனை இச்சேரனது வரலாறுகளைச் சரிதமுறை பிறழாது, சங்கநூல்களையும் பிற கருவிகளையுந் துணைக்கொண்டு எழுதப்பட்ட அரியநூல் இஃதென்பதை அறியாத தமிழ்மக்களில்லை. இந்நூலின் தோற்றத்துக்குப்பின் சங்ககாலத்தைப் பற்றிய தமிழாராய்ச்சித்துறை விரி

வடைந்ததென்றே சொல்லலாம். இது, சென்னை மைசூர் ஆந்திர யூனிவர்வஸிடிகளிலும் இலங்கையிலும் பலமுறை தமிழ்ப்பாடமாக நியமிக்கப்பெற்று நாடெங்கும் வழங்குவதாகும். தம் செய்ந் நன்றி காட்டி ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவரவர்கட்கு இதனை ஆசிரியர் உரிமையாக்கியுள்ளார். நான்கு பதிப்புக்களை இந்நூல் பெற்றுளது.

ஆழ்வார்கள் காலநிலை:—திருமால் அடியார்களாகிய ஆழ்வார்களின் காலங்களைப்பற்றிப் பல்லாண்டுகளாக ஆசிரியர் ஆராய்ந்து கண்ட அரிய முடிவுகளை இதனுட்காணலாகும். வைஷ்ணவ சமயத்துக்கும் தமிழகத்துக்கு மிருந்த பழந்தொடர்புகளும், ஆழ்வார்களின் அவதார காரணங்களும், அவர்கள் காலங்களும், அக்காலத்து வாழ்ந்த அரசர் தலைவர்களின் வரலாறுகளும் முன்னூல்களையும் சாஸனங்களையும் துணைக்கொண்டுஇந்நூலுள் ஆசிரியரால் சரித முறை பிறழாது விளக்கப்பட்டுள்ளன. இதன் முதற்பகுதியே இப்போது வெளி வந்திருப்பது. சென்னை யூனிவர்ஸிடியாரால் பீ. ஏ. வகுப்புப் பாடமாக இஃது இருமுறை நியமிக்கப்பெற்றது.

(5) சாஸனத் தமிழ்க்கவி சரிதம்:—பண்டைப்புலவர் பெருமக்களைப் பற்றிச் சாஸனவாயிலாக அறியப்படும் செய்திகளையெல்லாம் இந்நூலால் ஒருங்கறியலாகும். எண்பதின்மர்க்கு மேற்பட்ட புலவர்வரலாறுகள் இதனுள் வரையப்பட்டுள்ளன. இவர்களுள், இதுவரை அறியப்படாத புலவர்கள் பலராவர். அன்னார்செய்திகளையும், அவர்களியற்றியனவாய் வழக்குவீழ்ந்த நூல்களையும், தெரிந்த புலவர்களைப்பற்றிச் சாஸனமூலங்கண்ட புதிய வரலாறுகளையும் இந்நூலால் அறிந்துகொள்ளலாகும். காலமுறையில்வைத்துப் பிரமாண பூர்வமாக இவர்கள் சரிதங்கள் யாவும் வரையப்பட்டுள்ளன. பேராராய்ச்சி காட்டி இந்நூல் ஆசிரியரால் இயற்றப்பெற்றதென்பது, நோக்குவார்க்கெல்லாம் தெளிவாகும். தம் தந்தையாரின் திருவடிகளில் ஆசிரியரால் இஃது உரிமையாக ஸமர்ப்பிக்கப்பெற்றது.

## [பதிப்பித்த நூல்கள்]

இவ்வாசிரியர், செந்தமிழ்ப்பத்திரிகை நடாத்திய காலத்தில் அப்பத்திரிகையில் ஆராய்ந்துபதிப்பித்த சிறு நூல்களாவன:—(1) நரிவிருத்தம் (அரும்பதவுரையுடன்), (2) சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்), (3) திருக்கலம்பகம் (உரையுடன்), (4) விக்கிரம சோழனுலா (5) சந்திராலோகம், (6) கேசவப்பெருமாள் இரட்டைமணி மாலை முதலியவை. இவையன்றி இவ்வாசிரியரால் சொந்தத்தில் ஆராய்ந்து வெளியிடப்பட்டனவும் படாதனவுமான நூல்களும் உள. அவையாவன:—

(1) பெருந்தொகை (முற்றொகுதி):—பண்டை நூலுரைகள், கவடிகள், சாஸனங்கள், கர்ணபரம்பரை முதலிய பலவழியாகவும்

கிடைத்த பழைய தனிப்பாக்களை யெல்லாம்—கடவுள் வாழ்த்தியல், அறவியல், பொருளியல் என முப்பெரும் பகுதிகளாக அமைத்து முறைப்படத் தொகுக்கப்பெற்றது. இதுவரை தெரிந்திராத தனிப் பாசுரங்கள் பலவற்றைச் சரித்திரக் குறிப்புக்களுடன் இதன் வாயி லாக அறியலாகும். 2200-க்கு மேற்பட்ட செய்யுட்களும், அவற் றிற்கு ஆராய்ச்சிகாட்டி எழுதிய குறிப்புரையும், விரிந்த விஷய சூசிகையகராதியும் உடையது. இந்நூல் அரியபல செய்திகளை அறி விப்பதாதலின், ஆராய்ச்சியாளர் பலராலும் புகழப்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் பதிப்பித்து வெளியிடப்பெற்றது. இன்பவியல், ஒழிபியல்கள் இரண்டும் அடங்கிய இதன் இரண்டாம் பாகம் இன்னும் அச்சிடப் பட்டிலது.

(2) நூற்பொருட் குறிப்பு:—இறையனார் களவியலுரை, குறுந் தொகை, நற்றிணை, வீரசோழியம், திருக்கோவையார், தேவாரம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களுக்கு விஷயசூசிகைகள் ஆசிரிய ரால் அரிதின் முயன்று தொகுக்கப்பெற்றது. நூலாராய்ச்சியாளர்க் கும் சரித்திரவாராய்ச்சி செய்வார்க்கும் பெரிதும் உதவக்கூடிய கருவி யாவது. இம்மாதிரி வெளிவந்த பொருட் குறிப்புத் தொகைநூல் இ.ஃ.தொன்றேயாம்.

(3) நிகண்டகராதி:—திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி, உரிச்சொல் என்ற நிகண்டுகள் நான்கினுங்கண்ட சொற்களெல் லாம், அவற்றின் பொருள்களும் இடங்களுந்தந்து, அகராதி வரிசை யில் அமைக்கப்பெற்றது இந்நூல். தமிழ்ப் பேரகராதியில் இவ்வா சிரியர் முனைந்து நின்றபோது, இத்தகைய கருவியொன்று தமக்கு இன்றியமையாதது என்பதனை உணர்ந்து, பெரு முயற்சியுடன் பல மாதங்க ளுழைத்து, இது முடிக்கப்பெற்றது. அப்பேரகராதி இயற் றுதற்கு இத்தொகைநூல் புரிந்த உதவி பெரிதாகும். இ.ஃ.து அச்சி டப்பட்டிலது. இவ்வாறே, திவாகரநிகண்டும் பற்பல ஏட்டுப்பிரதி களைக் கொண்டு சோதிக்கப்பெற்று, எண்ணிறந்த திருத்தங்களுடன் ஆசிரியரால் அச்சுக்குச் சித்தப்படுத்தி வைக்கப்பெற்றுள்ளது.

(4) திருக்குறள், பரிமேலழகருரையுடன்:— (கையடக்கப் பதிப்பு) பல்லிடங்களினின்றுங் கிடைத்த திருக்குறட் பிரதிகளை வைத்துச் சோதித்துப் பற்பல திருத்தங்களும் கீழ்க்குறிப்புக்களும் அமைத்து, முன்னுரையுடன் இது 28 - ஆண்டுகட்கு முன்பு வெளி யிடப்பட்டதாகும். அடியளவாற் குறளாயிருந்த தமிழ்வேதம் வடி வளவாலும் குறளாகி இவ்வாறு வெளிவந்த போது, கற்றோரும் மற் றோரும் இதனைப் பெற்று உவந்தனர். இதனுள் ஆசிரியரமைத்த அரிய பாடங்களையும் குறிப்புக்களையும் ஏனைக் குறட் பதிப்பாளர்களும் ஏற்று வெளியிடலாயினர். இவ்வாசிரியரின் நண்பராய் விளங்கிய ஸ்ரீ. மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள் உதவியால் இப்பதிப்பு நிறைவேறியது. இரண்டாம் பதிப்பினையும் இ.ஃ.து அடைந்துள்ளது.

### [யூனிவர்ஸிடி உபந்யாஸங்கள்]

சென்னைச் சர்வகலாசங்கத்தார் விருப்பின்படி, 1929௵ பிப்ரவரி ௴, இலக்கியங்களும் சாஸனங்களும் ஒன்றற்கொன்று உதவி வரும் நெறியை விளக்கி இவ்வாசிரியர் நான்கு உபந்யாஸங்கள் யூனிவர்ஸிடியின் சார்பில் நிகழ்த்தி வெகுமானிக்கப்பெற்றார். 'இலக்கிய சாஸன வழக்காறுகள்'[1] எனப் பெயர்கொண்ட இப்பொருளுரை அரசர், தலைவர், புலவர், வழக்குக்கள் என்ற நான்கு பிரிவு கொண்டதாம். இப்பிரசங்கங்களை விருப்புடன் வந்துகேட்ட தமிழ்ப்பெருமக்களும் சரித்திராசிரியரும் பலர். **மகாமகோபாத்யாய டாக்டர்-ஐயரவர்கள்** இவ்வுபந்யாஸ நாட்களெல்லாம் வந்திருந்து கேட்டருளி, உபந்யாஸகரால் வெளியிடப்பட்ட அரியபல சரித்திரவுண்மைகட்கு உவந்ததோடு, முடிவுரையாக அருமை பாராட்டியும் பேசினார்கள். மற்றும் தமிழறிஞர்களும் சரித்திராசிரியரும் அவ்வாறே கொண்டாடினர். இவ்வுபந்யாஸக் கட்டுரைகளுள், மேலே குறிப்பிட்ட **சாஸனத் தமிழ்க்கவிசரிதமும்** ஒரு பகுதியாம். ஏனையவை இன்னும் அச்சிடப்பட்டில.

### [கௌரவ பத்திராசிரியர்]

**தமிழர் கல்விச்சங்கத்தின்** சார்பாக நன்கு நடைபெற்றுவந்த "தமிழர்நேசன்" (Tamilian Friend) என்ற மாதாந்த பத்திரிகைக்கு அச்சங்கத்தின் தலைவரான ஜஸ்டிஸ் **ஸர். டி. சதாசிவ ஐயரவர்கள்** விரும்பியவாறு கௌரவ-ஆசிரியராகச் சிலவாண்டுகள் இருந்து அரிய கட்டுரைகள் பல இவர் எழுதிவந்தனர். இவ்வாறே சென்னையில் நடைபெறும் **கலைமகள்** என்ற அரிய பத்திரிகையின் கௌரவ ஆசிரியர்களுள் இவரும் ஒருவரானவர் என்பதைப் பலரும் அறிவர். இவற்றுடன், சென்னை யூனிவர்ஸிடித் தமிழ்க்கல்விச்சபை, பரீக்ஷாசபைகளிலும் அங்கத்தினராயிருந்த சிறப்பும் இவர்க்குண்டு.

இவர், தமிழில் எழுதிய கட்டுரைகளேயன்றி, ஆங்கிலத்தில் நடைபெறும் பத்திரிகைகள் சிலவற்றிற்கும், தாமெழுதிய அரிய விஷயங்கள் பலவற்றை அன்பர்களைக் கொண்டு மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டுதவினர். ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிஞர்கள் எழுதிவெளியிட்ட நூல்கள் பலவற்றிற்கு இவ்வாசிரியர் எழுதியவை உதவிசெய்துவருவன என்பது, அந்நூல்களின் எடுத்தாட்சி

---

[1] இதன் முன்னுரையாயமைந்த பகுதி "கலைமகள்" இதழ்களில் வெளிவந்தன.

களினின்று தெரியலாம். இவரது உதவிகளை நேரிற்பெற்ற நூலாசிரியரும் பலர். தமிழ்த்துறையுள் யானும் புகும்படி செய்வித்து என்னை அதனில் ஊக்கி உதவிவருபவர்களும் இவ்வாசிரியரே என்பதை மகிழ்ச்சியுடன் இங்கு அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வாசிரியரது கட்டுரைகளிலே இவ்வாராய்ச்சித் தொகுதியுள் வெளிவந்தவைபோக எஞ்சியுள்ளவை அடுத்துத் தனியே காட்டப்பட்டுள்ளன[1]. அவை, இத்தொகுதியின் இரண்டாம்பாகமாக வெளியிடப்பட வேண்டியவை. தமிழிலக்கிய சரித்திரங்கள் பற்றி இக்கட்டுரைகள் மூலம் வெளியிடப்பட்ட அரிய கருத்துகளும் முடிவுகளும் அனேகமுள்ளன. அவற்றிற் சில, தமிழ்மக்களுள் அடிப்பட்ட வழக்காகவும் அமைந்தன. இத்தகைய ஆராய்ச்சிகளிலே அபிப்பிராயபேதங்கள் உண்டாவதும், அவைபற்றிச் சர்ச்சைகள் நிகழ்வதும் எக்காலத்துமுள்ள இயல்பே. இவ்வாசிரியர் கொள்கைகள் சிலவற்றில் அலவ நிகழ்ந்த சந்தர்ப்பங்களு முண்டு. அவ்வாறு கருத்துவேறுபாடு கொண்டவர்களும் இவ்வாசிரியரது ஆராய்ச்சிகளிலும் தமிழ்த்தொண்டிலும் பெருமதிப்பைக் காட்டியே வந்தவர்கள் என்பதும், துவேஷபுத்தியின்றித் தமிழாராய்ச்சி பெருகுதலையே அவர்களும் அக்காலத்திற் பெருநோக்கமாகக் கொண்டிருந்தவர்கள் என்பதும் அடுத்து வெளியிடப்பட்ட கடிதப்பகுதிகளை நீளநோக்குமிடத்து யாவர்க்கும் விசதமாகும்.

[பிற சிறப்புக்கள்]

இவ்வாசிரியர், கவித்துவசத்தியும் சிறக்கப்படைத்தவர். சொல் நயம் பொருள்நயங்களுடன் சுவை மிகுந்து விளங்குவன இவர் செய்யுணடை. இவரது வசனநடையோ, அறிஞர்களெல்லாம் அறிந்துகொண்டாடுவது. ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளுங் கொண்டு இவை ஒளிர்தலை இவ்வாராய்ச்சிக் கட்டுரைதோறும் காணலாம். இவற்றோடு ஒழுக்க நடையாலும் உத்தமகுணங்களாலும் யாவரும்புகழும் பெருமையுடையார் நம்மாசிரியர் என்பதையும் இங்குக் குறிப்பிடல் தகும்.

இங்ஙனம் 38–ஆண்டுகட்குமேலாகத் தமிழாராய்ச்சித் துறையைத் திறந்து விசாலப்படுத்தித் தமிழ்மக்கள் அதனில் திளைத்தாடுதற்கு வழிகாட்டியவர்களுள் இவ்வாசிரியரைச் சிறந்தவராகவே சொல்லத்தகும். தஞ்சைமாநகரில் பிரபலம்பெற்று விளங்கிய ராவ்பஹதூர்: ஸ்ரீ. K. S ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள்:—

---

[1] இவற்றுள் பலவும் பின்பு வெளிவந்த 'இலக்கியக் கட்டுரைகள்' 'கட்டுரை மணிகள்' என்னும் நூல்களில் இடம் பெற்றுள்ளன. அதனால் இக்குறிப்பு இப்பதிப்பில் கொடுக்கப்படவில்லை.

"தமிழாராய்ச்சி செய்து தமிழில் புத்தகரூபமாய் வெளியிட்டிருப்பவர்களில் முக்கியமானவர் தாங்களே. ஏனையோர்களுக்கு மார்க்கதரிசி என்றுசொல்வதே பொருத்தமுடைத்தாம்"[1]

என்று குறிப்பிட்டிருப்பதும், இவ்வாறே அறிஞர்பலரும் எழுதியுள்ளனவும் சிறிதும் புனைந்துரையல்ல. இவ்வாசிரியர் புரிந்து வரும் இத்தகைய சீரிய தொண்டுக்கு, பரம்பரையாகத் தமிழ்த்தாயிடம் இவர்கள் வைத்துள்ள பிரதிபத்தி காரணமேயன்றிப் பிறிதன்று. இவ் வரியபெரிய தொண்டு அறுபதாம் ஆண்டு நிறைவு கொண்டுள்ள நம் ஆசிரியரது பின்வாழ்க்கையிலும் வளர்ந்தோங்குவதாக.

Department of Indian History & Archeology, University of Madras. 12—7—38

இங்ஙனம்,

வி ஆர் இராமசந்திர தீக்ஷிதர்

[1] 'தமிழறிஞர்' கடிதப்பகுதிகள்'. xxxviii-ம் பக்கம் காண்க.

# பேராசிரியர் மு. இராகவையங்காரின் பின் வாழ்க்கை வரலாறு

ஆசிரியரின் அறுபதாம் ஆண்டு நிறைவு இராமநாதபுரத்தில் ஒரு பெருவிழாவாகக் கொண்டாடப் பெற்றது. சென்னைப் பல்கலைக் கழகப் பிரமுகர்கள், பல்கலைக்கழக உபதலைவர் ஸ்ரீ. S. E. ரெங்கநாதன் அவர்கள் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தி, சன்மானமும் வழங்கினார்கள். அக்கூட்டத்தில் மகாமகோபாத்யாய டாக்டர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஐயங்கார் அவர்களின் தமிழ்ப் பணியை மனமார வாயாரப் பாராட்டினார்கள்.

தமிழ் அகராதி வேலை முடிந்ததும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் தொடக்கம் முதல் இறுதிவரை சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியரின் தகுதியைப் பாராட்டி, அரசாங்கத்தின் மூலம் '' ராவ் ஸாஹேப் '' என்ற கௌரவப் பட்டம் 1939 - ஆம் வருடம் வழங்கச் செய்தார்கள்.

ஆசிரியர் தம் சொந்த ஊரான இராமநாதபுரத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கையில், சென்னை லயோலாக் கல்லூரியில் தமிழ்த்துறையிலே கௌரவ விரிவுரையாளராக அழைக்கப் பட்டார். லயோலாக் கல்லூரியில் நான்கு மாதம் மட்டுமே பணியாற்றினார்கள். இத்தருவாயில் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் (இப்பொழுதுள்ள கேரளாப் பல்கலைக் கழகம்) வள்ளல், ஸ்ரீ. அழகப்பச்செட்டியாரவர்கள் தமிழாராய்ச்சிப் பேராசிரியர் இடம் ஒன்றைப் பெரும் பொருட் செலவில் நிறுவச் செய்தார்கள். 1944 - ஆம் வருட இறுதியில் ஐயங்கார் அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றார்கள்.

திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியில் ஐயங்கார் அவர்கள் அமர்ந்திருந்த காலத்தில், அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பல. அவற்றுள் சிலவற்றை, ' Some Aspects of Kerala from Tamil Literature '' என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகப் பிரசுரமாக வெளியிட்டுள்ளார்கள். ஐயங்கார் அவர்கள் கேரளநாட்டில் பணியாற்றிய சமயம் சேர வேந்தர்கள் பற்றியுள்ள செய்யுட்களை அடைவுபடுத்தித் தம் விளக்க உரையுடன் ''சேர வேந்தர் செய்யுட் கோவை'' என்ற தலைப்பில் இரண்டு பாகங்களாக வெளி

யிட்டார்கள். திருவிதாங்கூர் அரண்மனைச் சுவடி நிலையத்தி லிருந்து கிடைத்த "அரிச்சந்திர வெண்பா" என்ற அரிய நூலைத் தம் உரையுடன் அச்சிடுவித்தார்கள். ஐயங்கார் அவர்கள் 1951-ஆம் வருடம் திருவிதாங்கூர்ப் பேராசிரியர் வேலையிலிருந்து விலகினார்கள்.

ஆசிரியரைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடுத்திய ஸ்ரீமாந், பாண்டித்துரைத் தேவரும் அவர் பிதா பொன்னுச்சாமித் தேவரும் சிறந்த கவிகளாகவும் செந்தமிழ் வளர்த்த செல்வர்களாகவும் நாடு போற்ற வாழ்ந்தவர்கள். சேது சம்ஸ்தானத்தின் 19 - ஆம் நூற்றாண்டுச் சரிதத்துடன் அவ்விருவருடைய வாழ்க்கையும் பின்னியுள்ளது. "செந்தமிழ் வளர்த்த தேவர்கள்" என்ற பெயரால் அவர்கள் சரிதையைப் பற்றி ஓர் அருமையான நூலை ஆசிரியர் அவர்கள் வெளியிட்டார்கள். ஜமீன் ஒழிப்புக்கு முன்பிருந்த சேது சமஸ்தானத்தின் சோபையையும் தமிழ் வளர்த்த முறையையும் ஆசிரியர் எக்காலத்திலும் நிலைத்திருக்கும்படி அதில் சித்திரித்துள்ளார்கள். இந்நூலைச் சென்னை அரசாங்கத்தார் பள்ளி இறுதித் தேர்வுக்கு ஓர் உப பாடமாக நியமித்தார்கள். இந்நூல் மூலம் பேராசிரியர் அவர்களுக்குக் கிடைத்த ரூபாய் இரண்டாயிரத்தையும் மூலதனமாகக் கொடுத்து, அதன் வருவாயிலிருந்து தம் சொந்த ஊரான இராமநாதபுரத்திலுள்ள ராஜா உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவத்தில் சிறப்பாகத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து, தம் ஒப்புரவறிதலை விளக்கியுள்ளார்கள்.

சிரமம் என்பதைச் சிறிதும் அறியாமல் இடையறாது தமிழ்ப் பணி புரிந்து வந்த ஐயங்கார் அவர்களுக்கு 1954 - ஆம் ஆண்டில் தம் உயிருக்குயிராய் நேசித்து வந்த ஆசார சீலமும் தரும சிந்தையும் விசால புத்தியும் நிறைந்த மனைவியையும், மூத்த குமாரனையும் மருகியையும் இழக்கும்படி நேர்ந்தது. இந்நிகழ்ச்சி அவர்களுடைய உள்ளத்தில் பெருஞ் சோகத்தைத் தோற்றுவித்தது. இச்சோகம் இந்நூலின் அனுபந்தத்தில் சேர்த்திருக்கும் 'கையறு நிலை'க் கவிதையாக வெளிப்பட்டது. பின்னர், ஆசிரியர் அவர்கள் மானாமதுரையில் தம்முடைய இளைய குமாரனுடன், 1954 - லிருந்து வசித்து வந்தார்கள்.

சோகத்தில் ஆழ்ந்திருந்த ஐயங்கார் அவர்களை 1955 - ஆம் ஆண்டுக் காரைக்குடிக் கம்பர் விழாவுக்குத் தலைமை தாங்கும்படி ஸ்ரீ சா. கணேசன் அவர்கள் அழைத்தார்கள். கம்பர் விழாவில் கம்ப நாடரின் தெய்வப்புலமை பற்றி ஐயங்கார் அவர்கள் அரிய

தோர் ஆய்வுரை நிகழ்த்தினர்கள். தமிழ் எழுத்தாளர் சங்கத்தார், கவர்னர், ஸ்ரீபிரகாசா மூலம் கேடயம் அளித்துக் கௌரவித்தார்கள். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தார் கம்பராமாயணப் பதிப்பாசிரியர் குழுவில் உறுப்பினராகப் பணியாற்ற அழைத்தார்கள். 1956 முதல் 1959 வரை ஐயங்கார் அவர்கள் பாலகாண்டத்திற்கும் சுந்தரகாண்டத்திற்கும் சில பகுதிகளுக்குச் சிறப்புரை எழுதி, கம்பராமாயணப் பிரசுரப் பணியில் ஈடுபட்டுத் தம் துயரை மறந்தார்கள்.

ஐயங்கார் அவர்களின் சதாபிஷேகத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற அவா நிறைவேறுமோ என்னும் சந்தேகம் அவர்கள் தேகநிலையால் தோன்ற ஆரம்பித்தது. அதனல் அவர்களின் 80 - ஆம் ஆண்டு நிறைவு 1958 - ஆம் ஆண்டில் கொண்டாடப் பெற்றது. அப்பொழுது தமிழ்ச் சொற்களின் வினை முதனிலைகளை எடுத்தெழுதி, அவை இயங்கும் விதங்களைப் பாகுபாடு செய்து, அவற்றிற்கு ஒரு நியதி கண்டு, தமிழ் மொழியின் இயற்கை மேம்பாட்டைக் காட்டி, "வினைத்திரிபு விளக்கம்" என்னும் நூலை நூற்பாவும் விளக்கவுரையுமாக இயற்றியுள்ளார்கள். இந்நூல் 80 – ஆம் ஆண்டு நிறைவு ஞாபக வெளியீடாக அச்சிடப்பெற்றது.

## ஆசிரியரின் அறுபதாம் ஆண்டு நிறைவுக்குப் பின் புத்தக வடிவில் வெளிவந்துள்ள நூல்கள்

1. **இலக்கியக் கட்டுரைகள்** : 15 வியாசங்களின் தொகுப்பு. சென்னை, அண்ணமலை, திருவிதாங்கூர், பஞ்சாப் பல்கலைக் கழகத்தினராலும் ஹிந்தி பிரசார சபையாராலும் பரீட்சா பாடமாக நியமிக்கப் பெற்றது.

2. **வினைத் திரிபு விளக்கம்** : ஆசிரியரின் 80 - ஆம் ஆண்டு நிறைவு ஞாபக வெளியீடு.

3. **கட்டுரை மணிகள்** : சீரிய 14 கட்டுரைகளின் தொகுப்பு.

## பேராசிரியரின் மறைவும் நிறைவும்

கட்டுரை மணிகளின் 13 - ஆவது கட்டுரையான 'களப்பிரர்' பற்றிய கட்டுரையை எழுதி முடிக்கையில் ஆசிரியர் அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். 1960 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 - ஆம் தேதி ஆசிரியர் அவர்கள் பரமபதம் அடைந்தார்கள்; தமிழன்னையின் புகழொளியில் கலந்து நிறைவு பெற்றுர்கள்.

தமிழிலக்கிய வரலாற்றிலும் ஆசிரியர் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளார்.

## அச்சிட வேண்டிய நூல்கள்

1. **தெய்வப் புலவர் கம்பர்** பற்றிய கட்டுரைகள். இவை பாரி நிலையத்தார் மூலம் விரைவில் வெளிவரும்.

2. **இலக்கிய சாஸன வழக்காறுகள்** என்னும் பெயருள்ள சென்னைப் பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள். இவை தமிழாராய்ச்சிக்கு மிகவும் பயன்படக் கூடியவை. சுமார் 500 பக்க அளவில் அச்சில் வெளிவரும்.

3. **கேரளமும் தமிழிலக்கியமும்** கேரள நாட்டிற்கும், மலையாள மொழிக்கும் தமிழோடுள்ள தொடர்புகளை விளக்குவது.

4. **பெருந் தொகை** (இரண்டாம் பாகம்) : பண்டை நூலுரைகள், சுவடிகள், சாஸனங்கள் முதலிய பல வழியாலும் கிடைத்த பாடல்களின் தொகுதி. இன்பவியல், ஒழிபியல் பகுதிகள் இதில் அடங்கும்.

5. **பரிசோதித்து வைத்துள்ள பழந்தமிழ் நூல்கள்**

   (1) திவாகரம்

   (2) தமிழ் நாவலர் சரிதை ஏட்டுச்சுவடிகளைக் கொண்டு பரிசோதித்துச் செப்பஞ் செய்யப்பெற்றவை. திருந்திய பாடல்களுடனும் பொருட்குறிப்புக்களுடனும் கூடியவை.

---

ஆராய்ச்சித் தொகுதிக் கட்டுரைகளில் தமக்குள்ள அருமைப்பாடுபற்றி அவ்வக்காலங்களில்

# தமிழறிஞர்கள் எழுதிய கடிதப்பகுதிகள்

---

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**

**ஜகத்குரு: ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**

**ஆஜ்ஞையிட்டருளிய ஸ்ரீ முகம்**

**( 19 – 11 - 25 )**

ம-ா-ாஸ்ரீ, மு. ராகவையங்கார் அவர்களுக்கு.........தற்காலத்தில் காணப்படும் சிலாசாஸனங்கள் தாமிரசாஸனங்களாகிய இவைகளின் ஆராய்ச்சியில் தங்களுக்கு நிரதிசயமான வன்மை உளதாகத் தெரிகிறது. ஆகையால் ஆரியதர்மத்திற்கு மாதமொருமுறை ......... (விஷயம்) அனுப்பிக்கொண்டுவரும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளவேணுமென்று ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் ஆஜ்ஞையானபிரகாரம் எழுதலானது. (ஸ்ரீ காரியம்—)

---

**திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்களாய் விளங்கிய**

**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் அவர்கள்**

**அன்புகூர்ந்து அருளிய திருமுகம்**

**(பரிதாபிஞு, கும்பரவி, கஉ)**

தாங்கள் பேரன்பிற் பொறித்துய்த்த ஆப்தவாக்கிய விகிதம் பார்த்து இன்புற்றனம்.

இவ்வுலகின்கண் தமிழகராதி கரைகாண்டற் கரிதாயிருக்கிறது. அதற்குக் காருண்ய கவர்மெண்டாரவர்கள் பேருபகாரம் செய்திருத்தல் மிக்க நன்மையே. அவ்வேலைக்குத் தாங்கள் பண்டிதராயிருப்பது தெரிந்து உவந்தோம். கரைகாணவொண்ணு வேலைக்குக் கரையியற்றல் இராகவனது இயல்பே.

தாங்கள் அச்சிட்டுமுடித்த "வேளிர்வரலாறு" வந்தது பார்த்தோம். மிகவும் ·நன்றுயிருக்கின்றது. மற்றுமுள்ளன பின் எழுதுவோம்.

மகாமகோபாத்யாய: டாக்டர்

## ப்ரும்மஸ்ரீ: உ. வே. சாமிநாத ஐயரவர்கள்

i இந்தமுறை வெளிப்பட்ட செந்தமிழில் வந்துள்ள நன்னன் வேண்மான் முதலிய வியாசங்கள் மிக்க ஆனந்தத்தை உண்டு பண்ணின. மிகவும் கடினமாகிய சங்கச்செய்யுளிற் புகுந்து ஆராய்ந்து ஒழுங்காக விஷயங்களை எடுத்தெழுதுவதைக் காட்டி லும் சிறந்த அருமை வேறு யாதுளது? எல்லாம் அவ்விடத்துப் பெருமுயற்சியால் வந்த பயனே'' (ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவ ரவர்க்கு 3—5 -06-ல் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.)

ii 16—2—07 ''செந்தமிழி''ல் தாங்கள் எழுதிவருவது நாளுக்கு நாள் மிகுந்ததிருப்தியை அளிக்கின்றது; உழைப்பை வெளிப்படுத்து கின்றது. நரிவிருத்தம் பார்த்து மிகுந்த சந்தோஷமடைந்தேன்.

iii தேவர் அன்புடனனுப்பிய கலிங்கத்துப்பரணி யாராய்ச்சிப் புத்தகமிரண்டும் வரவேற்றுப் படித்துப்பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன்.

உங்களுடைய பலநூற் பயிற்சியையும், ஆழ்ந்த ஆராய்ச்சியின் ஒழுங்கையும் தெரிவிக்கின்றது இப்புத்தகம். நடை, மிகவும் விளக்க மாகவும் திருத்தமாகவும் விளங்குகின்றது. தங்கள் போன்றவர் களுக்கு இதுபோன்ற காரியங்களைச்செய்தல் இயல்பாக இருந்தாலும், இக்காலத்தை உத்தேசிக்கும்போது இது மிகவும் அருமையான தென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. ஈண்டுள்ள நண்பர்களும் இதனை நோக்கி இன்புற்றார்கள்.

---

மகாவித்வான் பாஷாகவிசேகரர்:

## ஸ்ரீ: ரா. இராகவையங்கார் அவர்கள்

i (5—3—1906) ''இம்முறைப்பகுதி விஷயங்கள் எனக்குத் திருப்திகரமானவையே. ஆய் அண்டிரன் வியாசம் செவ்வனம் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. நீ எழுதும் எல்லாவியாசங்களும் நுண்ணிய ஆராய்ச்சியோடு கூடுதலால் எனக்கு மிகுந்த சந்தோ ஷமே விளைக்கும் என்பது திண்ணம்'

ii (17-9-1937) ஆசீர்வாதம்: உபயக்ஷேமம். உன் கடிதமும் சாஸனகவிசரிதமும் பெற்றுப் பெருமகிழ்கூர்ந்தேன். மிகவும் அழ காகவும் அருமையாகவும் உள்ளது. தமிழுலகம் பெரும்பயனெய்த லாற் போற்றிப் பாராட்டுமென்று உறுதியாக நம்புகின்றேன். மாமாவுக்கு உரிமையாக்கியது எனக்கு ஸந்தோஷத்தை விளைத்தது. அவர்க்கு அருமையாக நீ பிறந்து இத்தகைய சிறந்த வித்வானுகி, ஒருதிரளாக நல்ல கவிசரிதங்களைத் தொகுத்து அவர் திருவடியில் ஸமர்ப்பிக்க நேர்ந்தது, நம் முன்னோர் செய்த தவப்பயனென்றே

நினைக்கின்றேன். அவரது அநுக்கிரகம் நமக்கு நிச்சயமாக உள்ளதனாற்றான் இம்மாதிரி அறிவுத்துறையில் புகுந்துள்ளோம். இதனை நான் ஒவ்வொருநாளும் மறவாது பாராட்டுதல் நீ அறிந்தது. எனக்கு இதைக்காட்டிலும் சிறந்தது வேறில்லை.

---

**திவான்பஹதூர் S.R M.M. இராமசாமிசெட்டியார் அவர்கள்**

*13 - 2 - 13.*

*அன்பார்ந்த நண்ப! க்ஷேமம். தங்களது க்ஷேமங்களை யறிய ஆசையுடையேன். அன்புநிரம்பிய 8-2-13 நிருபங்கள் கண்டு மகிழ்வுற்றேன். "வேளிர்வரலாறு" மூன்று பிரதிகள் இன்று வரப் பெற்றுப் பேரானந்தமடைந்தேன். இந்நூல் தங்களது அறிவையும் ஆராய்ச்சிவன்மையையும் புலப்படுத்துவதோர் சிறந்த நூலாம்.* **தங்கள் புகழ் என்றும் அழியாது நிற்பதற்கு நாட்டியதோர் ஸ்தம்பமாம்.**

*அகராதிக்கமிட்டியின் தமிழ்ப்பண்டிதராகத் தங்களை யெடுத்துக்கொண்டது* **தமிழ்நாட்டிற்குச் சிறப்பாம்.** *

---

## Rev. Dr. J S. CHANDLER, M. A.

Chairman and Editor. Tamil Lexicon Committee.
Madras, June 1917.

i Much of the success in launching the work & conducting it thus far is due to the presence on the staff, from the beginning, of, Pandit M. RAGHAVIANGAR, Vidvan of Ramnad, a thorough Tamil Scholar with long experience in the work of the Madura Tamil Sangam, and an enthusiast in the work of the new Lexicon. —June, 1917

ii The Staff has consisted of three Pandits, viz, one in Tamil, one in Sanskrit, and one in other languages, as Urdu and Dravidian Languages other than Tamil. The most important of these is the Tamil Pandit, and learned Tamil Scholar for this post has worked in the office from the beginning, and is still at it. His name is Mr. Raghavaiyangar, Vidvan of Ramnad, *a Brahmin with thorough training in Tamil, vigorous in body and alert in mind.* (From the Journal of American Oriental Society, Vol. 44, No. 2 pp. 134-37)

## Sri. K. SUNDARARAMA AIYAR AVARGAL, M A.

Professor of History, Kumbakonam College
(26 - 8 - 05)

I read 2-articles in "Sen Tamil" with very great interest, **வேளிர் வரலாறு** and **பாரதகாலமும் தமிழரும்.** I was taken by surprise at the erudition displayed and the ingenuity of the

suggestions and inference made regarding the past history of S. India. The writer expresses himself also with unusual reform of style—a style that commends itself to me at least. It is that which has most affinity to the vigour and ease of modern English Writers. I trust Mr. மு. இராகவையங்கார் will continue his researches and writings and convey more instruction regarding ancient S. India. I regard his writings altogether as of an epoch - making character and trust he will keep the promise he has given of a future of renown. It is now that the work of our great scholar Mr. Aiyer Avergal, is bearing fruit.

---

## Sri. V. GOPALA AIYER, B. A., B. L.

Author of Chronology of Ancient India, Chittoor:—(11—7—05)

I am much obliged to you for your instructive essay on Velir, a copy of which was duly received by me a few days ago. The various lines of reasoning by which you seek to prove your theories are the evident result of your varied and extensive study of Tamil history and literature and I hope you will continue your interesting researches. I am glad to find you support the date I have given for the great Mahabharata War.

---

## Sri. V. J. TAMBI PILLAI AVARGAL, M.R.A.S.

Audit Office, Colombo:—(11—8—05)

i. May I take the liberty to write to you that I intend to have an English translation of your very interesting paper entitled வேளிர் வரலாறு appearing in the last but one issue of Shen-Tamil published in the Journal of the Royal Asiatic Society here. It is full of facts that ought to be more generally known. I had arrived at the same conclusions nearly two years ago. I hope that S. India, will yet reveal facts of history that will tend to unite all the great races of India into one great nation. I shall send you a copy when printed.

ii. (12th. June, 07.) Dear Sir, You will be very glad to hear that the committee of the Royal Asiatic Society, Ceylon Branch have informed me to day that they have accepted with thanks my

English translation of your interesting paper on the history of the Vels [வேளிர் வரலாறு]. Your paper is no doubt, one of great merit and deserves to be published in the Journal of the Royal Asiatic Society for the perusal of learned men all over the world. You are indebted, I think, to me, for bringing your idea and theories to such prominence. I have done it is a labour of love.

iii. (18—6—07) Your paper on Tamil Alphabet is most interesting and original in some respects.

---

### திருமணம்

### ஸ்ரீ: செல்வக்கேசவராய முதலியார் அவர்கள், M. A. பச்சையப்பன் காலேஜ், சென்னை.

ஐயரே! புறநானூறு வகுப்பிற் பாடமாக நடக்கும்போது, அதில் இருங்கோவேளின் ஆதிக்கமுரைக்கும் இடத்திலும், நச்சினார்க்கினியர் வேளிரின் ஆதிக்கம் உரைக்கின்ற இடத்திலும் பிற்றை நாள் வரலாறுகளுடன் தொடர்புபடுத்தவியலாது இடர்ப்பட்டு விட்டேன். ஆயினும், தாங்கள் எழுதிய **வேளிர்வரலாற்றில்** இன்றியமையாத சரித்திரக் கூறுகளும் மேற்கோள்களும் இடையிடையே பற்றுசான சான்றுகளும் "பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய, மாமலை பயந்த காமரு மணியும், இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந், தருவிலை நன்கலம் அமைக்கும் காலை, ஒரு வழித் தோன்றியாங்கு"—இயைபுபடத் தொடர்புடையவாய் அமைந்திருத்தல் கண்டு அடங்காமகிழ்ச்சி அடைந்துளேன். தங்கள் வியாசத்தைப் படித்தவுடனே, தொண்டை மண்டலத்து உயர் துளுவ வேளாளர் என்னும் எங்கள் பூர்வோத்தரம் இப்பொழுது வெள்ளிடை விலங்கலாக விளக்கமெய்துகின்றது. தங்கள் வியாசத்தைப் படித்த அளவிலே என்பாலெழுந்த மகிழ்ச்சி யான் உள்ளபடி செல்வக்கேசவராயனையின் உடனே வரிசைகள் பல செய்யுமாறு என்னை ஏவியிருக்கும். யான் சேதுபதியல்லனே, பாண்டித்துரைச்சாமி அல்லனே, புதுக்கோட்டைத் தொண்டைமானல்லனே......இதனால் என்னுளங்கொளா மகிழ்ச்சி என்னை விட்டு என் உள்ளத்தை ஈர்த்துக்கொண்டு தங்கள்பாற் சென்றுவிட்டது. அதன் மகிழ்ச்சியை அங்கீகரித்து அதனை என்பால் விடுக்க" (ஜூலை—5)

மஹாமஹோபாத்யாய:

ராவ்பஹதூர்: R. நரஸிம்மாசாரியர், M. A, M. R. A. S.

(Retired Director of Archaeology in Mysore)

(1—5—1935)

தேவரீருடைய கட்டுரைகளெல்லாம் மிகவும் சூட்சுமமான ஆராய்ச்சியை உட்கொண்டனவா யிருக்கின்றன. எல்லார்க்கும் பயன்படுமவை என்பதில் ஐயமில்லை.

---

Hon, Siri. P. RAMANATHAN. Colombo. (30—10—22)

......All who love Tamil Literature must acknowledge the good work you have done towards a better understanding of it.

......Will your engagements permit you to come to Jaffna and address our students here in December neat between 25th and 31st of that month. On that occasion there will be a large audience. It will do our young men good to hear you and to become familiar with your writings.

---

ஸ்ரீ: கு. காந்தன் அவர்கள்,

Rosmead Place, Colombo, (10—6—1922)

தங்களரிய வியாசத்தைப் போன்றதொன்று இதுகாறும் எத்தகையினராலும் இயற்றப்படவில்லை. அதை, பொருளதிகாரத்தின் பெருமையை அறிந்தவர்களே பாராட்டத்தக்கவர்கள். இதை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் பதிப்பித்தது அதன் யோக்யதையைத் தெளிவாய் விளக்குகின்றது.

---

ஸ்ரீ: மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள்

'மதுரை விவேகபானு' பத்திராதிபர் (5—8—12)

அன்பார்ந்த ஐயா! வணக்கம். தாங்கள் தொல்காப்பியப் பரிசு பெற்ற விஷயத்தில் எனக்கு மகிழ்ச்சி புதிதாகத் தோன்றவில்லை. தங்கட்கே கிடைக்கும் என்பது முன்னரே அறிவேன். தாங்கள் எழுதியிருப்பதாக அறிந்தவுடன் பரிசுத்தொகையைத் தங்கட்கு அனுப்பிவிடாது இதுகாறும் ஆராய்ச்சிசெய்தது சரியாகத் தோன்றவில்லை. நிச்சயமானவற்றில், இங்ஙனமே தோன்றுவது உலகியல்யென்பதை சீதாபிராட்டி திருமணச் சமயத்தில்,

"வள்ளல் மணத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை யெடுத்தோர்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார்"

எனக் கூறுமாற்றாற் காண்க. உண்மைப் புலமைக்கு எக் காலத்தும் யாண்டும் மதிப்புண்டென்பதற்கு ஐயமில்லை.

---

### ராவ் பஹதூர்
### கே. எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள்
### தஞ்சாவூர் (19—2—22)

அன்பார்ந்த ஐயா,

i உபக்ஷேமம். 'தமிழ்வரலாறு' என்ற ஒரு புத்தகம் எழுது கின்றேன். அதன் முற்பாகம் வெளிவந்துளது. தங்களுக்கு ஒரு பிரதி அனுப்பினேன்... தாங்கள் தயவுடன் அதை ஒப்புக்கொண்டு அப்புத்தகத்தைப் பற்றிய தங்களுடைய அபிப்பிராயத்தையும், அதில் கூட்டவும், குறைக்கவும், மாற்றவும் வேண்டிய விஷயங்களை யும் எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். **இப்புத்தகத்தின் அமைதி, தாங்கள் செந்தமிழ்ப் பதின்மூன்றாந் தொகுதியில் எழுதியிருக்கும் வியாசத்தைத் தழுவியதாகும். முன்னுரையில் அதைக் காட்டுவது என்னுடைய நோக்கம்.** கொடுத்த தொந்தரவை மன்னிக்கவேண்டும்.

ii *11—7—1922* மகா. ா—ா ஸ்ரீ மு. இராகவையங்கார் சுவாமிகள் அவர்களுக்கு ஸ்ரீநிவாசன் அநேககோடி நமஸ்காரம்.

க்ஷேமம். தாங்கள் அன்புடனனுப்பிய கடிதமும் புத்தகமும் வரப்பெற்று மகிழ்வடைந்தேன். **மண்டலபுருடர் காலத்தை ஆராய்ச்சி** செய்து தாங்கள் எழுதியிருக்கும் **பத்திரிகை வியக்கத் தக்கதே.** நான் எழுதிய புத்தகத்தில் ஸ்ரீமான்: குப்புசாமி சாஸ்திரிகளோடு ஒத்து கி. பி. 10—ஆம் நூற்றாண்டினரென்று எழுதியிருக்கிறேன். **தங்களுடைய சிறந்த ஆராய்ச்சிக்குப் பின்னர் என்கொள்கை புனராலோசனைக் குரியதே.** 'தமிழ் வரலாறு' பிற்பகுதியின் முற்பாகம் தங்களுடைய பார்வைக்கு இற்றைத்தினம் அனுப்பியிருக்கிறேன். அது முழுவதையும் தாங்கள் படித்துத் தங்களுடைய அபிப்பிராயத்தை எழுதப் பிரார்த்திக்கிறேன். நான் எழுதியிருப்பதொன்றையும் முடிவுரை என்று சொல்வதற்கில்லை சரித்திர ஆராய்ச்சி மேற் செல்லச்

செல்ல மாற்றவேண்டியவைகளும் கூட்டவேண்டியவைகளும் பல இருக்கலாம். Frame work ஒன்றை ஏற்படுத்துவது எனது நோக்கம்.

தமிழ் ஆராய்ச்சிசெய்து தமிழில் புத்தகரூபமாய் வெளியிட்டிருப்பவர்களில் முக்கியமானவர்கள் தாங்களே. ஏனையோர்க்கு மார்க்கதர்சி என்று சொல்லுவதே பொருத்தமுடைத்தாம்.

பொருளதிகாரத்தை இன்னதென்றறியாதார் பலருளர். தாங்கள் எழுதியிருக்கும் பொருளதிகாரவாராய்ச்சி பலருக்கு மிகப் பயனளிப்பதாம். நான் அதை ஊன்றி வாசிப்பேன்.

---

யாழ்ப்பாணம்

ஸ்ரீ: ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யவர்கள்

தங்கள் 'பொய்யா மொழிப்புலவர்' என்னும் விஷயம் ஆராவமுது போல் உள்ளத்திடைநின்று தித்திக்கின்றது; தாங்கள் எழுதும் விஷயங்கள் நம்மனோர்க்கு நல்விருந்தாயிருக்கின்றன.

---

ஸ்ரீ: டி. சவரிராய பிள்ளையவர்கள் M. R. A. S.

தலைமைத் தமிழ்ப்பண்டிதர், ஸென்றஜோஸப்ஸ் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

தாங்கள் "செந்தமிழ்" ப் பத்திரிகையிற் பத்திராதிப ஆஸனத்தின் கீழ் எழுதிவருவன.........ஆராய்ச்சித் திறமமைந்தவை. மிக அருமையான விஷயங்கள். தங்கள் ஆராய்ச்சித்திறத்தையும் மதிநுட்பத்தையும் எக்காலத்தும் வியக்கின்றேன்......தாங்கள் வெளியிட்ட வேளிர்வரலாற்றை (கொழும்பு) ஸ்ரீமான் V. J. தம்பிப் பிள்ளை யவர்கள் M. R. A. S., ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி"க்கு அனுப்பியிருக்கிறார்கள். அவ்விஷயம் அச்சங்கத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இச்சங்கத்தின் 'மெம்பர்ஷிப்' தான் M. R. A. S என்பது; தங்களுக்குக்கும் அக்கௌரவம் உரித்தாகவேண்டுமென்பது என் அத்தியந்தவிருப்பம். ... இன்னுந் தாங்கள் எழுதியுள்ள பழைய கைத்தொழில் வியாபாரங்கள், வீரத்தாய்மார் முதலிய விஷயங்கள் மிக அருமையானவை; தமிழரின் பண்டைப்பெருமைகளை நன்கு விளக்குவன.

## ஸ்ரீ: S. இராதாகிருஷ்ணையரவர்கள், B.A.

### பிரின்ஸிபால், மகாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.

i தங்கள் நரிவிருத்தப் பதிப்பைப் பார்த்தேன், மிகவும் நன்ருக வேலை செய்யப்பட்டிருக்கிறது. முகவுரையும் அரும்பத வுரையும் மிக அழகாக எழுதப்பட்டிருக்கின்றன.

ii. 5—2—1908. தங்களால் எழுதப்பெற்ற பழைய கைத் தொழில் வியாபாரங்கள், வேளிர்வரலாறு, மாதைத் திருவேங்கட நாதர், பொய்யா மொழிப்புலவர், வீரத்தாய்மார் முதலியவை வந்து சேர்ந்தன. இவற்றுட் சிலவற்றை முன்னரே வாசித்திருக்கிறேன். இவை, மிக்க ஆராய்ச்சியைக் காண்பிக்கின்றன வென்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள். தாங்கள் தமிழுக்கென்று உழைத்து வருவது போல் அநேகர் உழைத்தால், மறைந்து கிடக்கும் பல விஷயங்கள் எளிதில் வெளிவருமென்பதில் சந்தேகமில்லை.

---

## ஸ்ரீ: V. O. சிதம்பரம்பிள்ளை அவர்கள்,

### வக்கீல், தூத்துக்குடி—(26—10—07)

### வந்தே மாதரம்

சீருஞ் செல்வமுந் தெய்வ வருளுஞ்
சேரப் பிறந்து சிறப்புற் ஞேங்கி
ஆரியந் தமிழெனு மணிகளைப் பூண்டு
பாரினி லுயர்ந்த பழையகந் நாவலந்
தீவினிற் சிறந்த தென்ன டதற்குக்
கேர்யி லென்னக் கூறுதற் கமைந்த
மதுரையம் பதிதனின் மாட்சிபல பொருந்தி
யிதுநாள் விளங்கு மினிய தமிழ்ச் சங்கம்
பெருமை பெற்றிடப் பெற்றுள புலவோய் !
தருமமு மொழுக்கமுந் தழைத்திடத் தோன்றி
கற்றவ ருளத்தினுங் கற்றவ ருளத்தினு
முற்றுற விளங்கி மூவுல களிக்கு
மெற்றவத் தேவா மிராகவ வருளைப்
பெற்றதைக் குறிக்கும் பெற்றித் தாகவு
மிந்தியர் தம்முடை யெளிமையை யுணர்ந்து
சிந்தைகொ டவர்தஞ் சிறப்பினை யுன்னி
இராகமுற் றிருப்பதை யியம்புத லொத்தும்
இராகவைய்யங்கா ரெனும் பெயர் பூண்டுளோய் !
பாரிலெந் நாட்டினும் பண்பு மிகுந்த

பாரத வருடத்தின் பழைய கைத்தொழில்
வியாபா ரங்களை விரித்து வரைந்தநின்
வியாச மதனை விருப்பொடு படித்தேன்
முற்றெழில் நிலைமையை முற்றுற மொழிந்த
கற்றநின் வாசகங் கண்டுளங் களித்தேன்
செற்றுநந் தொழில்கள் சிறுமை யுற்றுநாம்
மற்றவர் சகிக்கா வறுமையின் மூழ்கி
வருந்தின வியல்பினை வரைந்தன வுணர்ந்து
பெருந்துய ருழந்து பெருக்கினேன் கண்ணீர்
தற்கால நிலையினைச் சாற்றிய படித்து
நற்காலப் பிறப்பினை நன்கறிந் தாறினேன்
முக்கால நிலையினை முன்னுற மொழிந்த
தக்கோ னெனத்தகுந் தண்ணளி யாள !
நின்னையு நின்றமிழ் தன்னையும் பெற்றநம்
மன்னையு மின்னநம் மையன தருளினைப்
பெற்றிடா னென்றே பேசுவா ரியாரே !
முற்று முணர்ந்த மூதறி வாளருங்
கற்றவ ரியாவருங் கண்டிட விரும்பும்
நற்றவக் கொழுந்தே ! நாவல ரரசே !
கடவு ளருளினைக் கைவரப் பெற்றுத்
திடமுடன் வாழ்ந்து சிறப்பெலாம் பெறுவையே.

வந்தே மாதரம்

---

**தேசிய செந்தமிழ்க்கவிஞர்**

**ஸ்ரீ C. சுப்பிரமணிய பாரதியவர்கள்**

''இந்தியா'' ஆபீஸ், சென்னை. (18—10—07)

அநேக நமஸ்காரம். ஒவ்வொரு காலத்துச் சோம்பர் மிகுதியாலும் ஒவ்வொருகாலத்தே முயற்சி மிகுதியாலும் தங்களைப் போன்ற பெரியோர்களுக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதிப் புனிதத் தன்மை பெறுவதற்கு அவகாசமில்லாதவனாய் இருக்கிறேன்.

சென்றமுறை வெளிவந்த ''செந்தமிழ்'' பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் ''வீரத்தாய்மார்கள்'' என்ற அற்புத உரையைக்கண்டு மகிழ்ச்சிபூத்து அம்மகிழ்ச்சியைத் தமக்கு அறிவிக்கும் பொருட்டாக இக்கடிதம் எழுதலானேன்.

தங்கள் பாண்டித்தியத்தை நான் புகழவரவில்லை. அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் ஸ்வதேச பக்தி என்ற புது நெருப்புக்குத்தான் நான் வணக்கம் செய்கிறேன்.

'காலசக்கரம் சுழல்கிறது' என்று அவ்வுபக்கியாசத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆம்! காலசக்கரம் சுழலவே செய்கின்றது. அச்சுழற்சியிலே சிறுமைச்சேற்றில் ஆழ்ந்துகிடந்த நீச பாரதம் போய் மஹாபாரதம் பிறக்கும் தருவாய் வந்து விட்டது.

தாழ்நிலை என்ற இருளிலே மூழ்கிக்கிடக்கும் பாரதவாசிகளுக்கு மஹாபாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப்பு ஒன்றாகும்; அதற்கு வணக்கம் செய்கிறேன். அது வளர்க. [குறிப்பு:—ஸ்ரீ அழகிய சிங்கப்பெருமாள் ஐயங்கார் (பச்சையப்பன் காலேஜ்) அவர்களும் அவர் தம்பி ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாரும் தங்களுக்கு ஸாஷ்டாங்க வணக்கம் கூறும்படி என்னிடம் கற்பித்தார்கள்.]

---

ஸ்ரீ: து. அ. கோபிநாதராயர் அவர்கள், M. A.
சிலாசஸான அத்யக்ஷர், திருவநந்தபுரம். (9—1—18)

அநேக நமஸ்காரம். உபயக்ஷேமோபரி. தங்களிடமிருந்து பெற்ற அருமையான குறிப்புக்களை முழுதும் சாவதானமாய்ப் படித்து மகிழ்ந்தேன். வெகு சிரமசாத்தியமான காரியமென்பதில் தடையேயில்லை. இங்ஙனம் உழைக்கக்கூடியவர்களே அகராதிசெய்ய வல்லவர்கள். மற்றவர்களால் அது இயல்வதன்று.

---

ஸ்ரீ: J M. நல்லசாமிப்பிள்ளை யவர்கள், B. A. B. L.
டிஸ்டிரிக்ட் முன்ஸீப், இராஜமகேந்திரம் (10—4—1910)

புறப்பொருள் வெண்பாமாலை புறநானூறு இவைகளினின்றும், Dr. G. U. Pope அய்யர் அவர்களால் மொழிபெயர்த்தவைகளை இப்பொழுது அச்சிட்டுவருகின்றனன். அதன் உரைப்பாயிரத்தில் சில விஷயங்கள் எழுதிவருகின்றேன். தாங்கள் எழுதியுள்ள வான்மீகரும் தென்னாடும் என்ற விஷயங்கள் மிகவும் உபயோகமாயிருந்தன. வேள், வேள்புலம் என்ற விஷயமும் மிகவும் முக்கியமானவை...

### ஸர். டி. சதாசிவ ஐயர் அவர்கள்.

(Retired High Court Judge, Madras.)

(மயிலாப்பூர்த் தமிழர்கல்விச்சங்கத் தலைவர்)

தமிழர்நேசன், தொகுதி 10, பகுதி-1 (1926)

இந்தப் பகுதிமுதல், தமிழ்ப் பேரறிவாளரும், தமிழுக்காக நீடித்தகாலம் உழைத்துப் பேரும்புகழும் பெற்றவருமான பண்டிதர் மு. இராகவையங்கார் அவர்கள் நமது பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து பத்திரிகையை நடத்திவர உடன்பட்டிருக்கின்றனர். இதற்கு அனுமதிகொடுத்த தமிழகராதிக் கமிட்டியாருக்கு, தமிழர் கல்விச் சங்கத்து வந்தனங்களை நேரில் தெரிவித்ததோடு, இதன் மூலமாயும் தெரிவிக்கிறோம்.

---

### ஸ்ரீ. K. G. சேஷையர் அவர்கள்,

'Retired High Court Judge, திருவநந்தபுரம்—18—4—37

அன்பார்ந்த ஐயங்காரவர்களுக்கு அநேக வந்தனம். உபய குசலோபரி.

தாங்கள் பேரன்புடன் அனுப்பிய "ஆழ்வார்கள் காலநிலையும்" பெருந்தொகையும் வரப்பெற்று மகிழ்ச்சியுற்றேன். பெருந்தொகை செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்தபோது அதை ஆவலோடும் ஆசையோடும் படித்து வந்திருக்கிறேன். ஆழ்வார்கள் காலநிலையைப்பற்றிய தங்களுடைய அருமையான கருத்துக்கள் எனக்குப் புதியனவல்ல. ஆயினும் அப்புத்தகத்தை இப்பொழுது தான் பார்த்தேன். இவ்விரு புத்தகங்களும் எனக்கனுப்பி உதவியதற்குத் தங்கட்கு நான் கடன்பட்டிருக்கிறேன்.

தாங்களியற்றி வெளியிடும் புத்தகங்களைப் புகழ்ந்து பேசுதல் மிகையேயாகும். தமிழ்வித்வான்களுள், ஆராய்ச்சித்துறையில் மிகப் பெரும் வேலைசெய்து நம் நாட்டின் பெருமையை விளக்கி வருபவர் மிக அரியர். தாங்கள் செய்திருக்கும் ஆராய்ச்சி விஷயங்களோ மிகப் பல. எல்லோரும் வியக்கக் கூடியன.

திருமங்கை மன்னனைப் பற்றித் தாங்கள் Dr. S. K. Aiyangar Com Vol.த்தில் எழுதியுள்ள கட்டுரையில் அஷ்டபுஜகரப் பதிகத்திலுள்ள "மன்னவன் தொண்டையர்கோன்" என்ற செய்யுவின் பொருளைவிளக்கி எழுதியிருப்பதைக்கண்டு மகிழ்வுற்றேன்.

அச் செய்யுள் விஷயமாக ஒருகாலத்தில் என்னைப்பற்றிச் செந்தமிழ்ப்பத்திரிகையில் தாங்கள் எழுதின அபிப்பிராயம் முற்றும் மாறியதைக் கண்டு சந்தோஷமடைந்தேன். "சங்ககாலத்துச் சேர அரசர்கள்" என்னும் என் ஆங்கிலநூலின் பிரதி ஒன்று தங்களுக்கு வந்திருக்குமென்று நம்புகிறேன். அதைப் படித்தீர்களா?

---

### ஸ்ரீ. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்,
### புத்தேரி, நாகர்கோயில் (14—1—38)

அன்பிற்சிறந்த நண்பரவர்களுக்கு அநேக நமஸ்காரம். தாங்கள் அன்பளிப்பாக அனுப்பின **சாசனத் தமிழ்க்கவிசரிதம்** வந்து சேர்ந்தது. மாண்டு மறைந்துபோன புலவர்களுடைய சரிதங்களை அரைகுறையான சாசனப்பகுதிகளை வைத்துக்கொண்டு எழுதி முடிப்பது எளிதான காரியமன்று. **தங்கள் புஸ்தகத்தைப் படிக்கும்பொழுதெல்லாம், திருஞானசம்பந்தர் எலும்பு பெண்ணுருவாக்கின கதையே ஞாபகத்தில் வந்துகொண்டிருக்கிறது. தமிழில் இம்மாதிரியான நூலொன்றை நான் இதுவரையிலும் பார்த்ததேயில்லை.** தாங்கள் எழுதிவைத்திருக்கும் சாசனக் கட்டுரைகளனைத்தையும் விரைவில் வெளியிடும்படி வேண்டிக் கொள்கிறேன்.

---

### ஸ்ரீ. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள், B. A., B. L.,
### வக்கீல், திருநெல்வேலி. (22—4—36)

அன்பார்ந்த ஐயா! நேற்று மதுரையில் நண்பர் T. C. **ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களை** வீட்டில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். பல வருஷங்களாக நான் எதிர்பார்த்துக் கொண்டு வந்த **பெருந்தொகைப்**பிரதி ஒன்றை அவர்கள் எனக்கு உதவினார்கள். புஸ்தகத்தைக் கையால் வாங்கினதும் எனக்கு எவ்வளவோ உவகை ஏற்பட்டது. அரிய பாடல்கள் பலவற்றை உரையாசிரியர்கள் உரையில் ஒளித்துவைத்தமாதிரி இருந்தது. **தாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு அவைகளைத்திரட்டித் தமிழுலகுக்கு உதவியிருக்கிறீர்கள். தமிழ் பயின்றவர்கள் அதில் வருஷம் வருஷமாக உழைத்துக்கொண்டேயிருக்கலாம். அவ்வளவு அரியமணிகள் ஆங்காங்குக் கிடைக்கின்றன.** அனுபந்தப்பகுதிகள் செவ்வையாய்ச் செய்து அமைக்கப்பட்டிருக்கின்றன. **முக்கியமாக விசேடக்குறிப்பும் பொருட்குறிப் பகராதியும் எவ்வளவோ பயன்படத்தக்கன.** இவ்வளவு துணைக் கருவிகளையும் செய்து முடிக்கத் தங்களுக்கு எவ்வளவோ சிரமம்

ஏற்பட்டிருக்கும். புத்தகத்தை உபயோகிப்பவர்கள் தக்கபடி தங்களுக்கு நன்றி பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். தாங்கள் தமிழுக்குச் செய்துள்ள இந்தத்தொண்டுக்கு என் மனப்பூர்வமான நன்றி. அடுத்தபாகத்தையும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உரிமையுரை தங்கள் உள்ளத்துக்கு அவசியமாய்வேண்டிய ஆறுதலைக் கொடுக்கும் என்பது உறுதி. அதோடு இறைவனது அருளும் சேர்ந்து தங்களுக்கு ஆரோக்யத்தையும் மனோதிடத்தையும் கொடுத்து இரண்டாவது பாகத்தையும் பூர்த்திசெய்து வெளியிடல் சீக்கிரத்தில் கூடுமென்று நம்புகிறேன்.

---

ஸ்ரீ: நா. வேதாசலம்பிள்ளை அவர்கள்,
(மறைமலையடிகள் என்பது இப்போதைய வழக்கு)
சென்னை, (26—7—02)

என் ஆப்தநண்பரும் வித்துவசிகாமணிகளுமான ஐயா அவர்கள் திவ்விய சமுகத்தின்கண்ணே அடியேன் வந்தனஞ் செய்தெழுதும் விஞ்ஞாபனவுரை வருமாறு:—

தாங்கள் நேற்றுவிடுத்த தருக்கவுரை வியாசமும் இன்று விடுத்த அன்பூறிச்சுவைக்கும் ஆப்தலிகிதமுங் காணப்பெறுதலால் வரம்பு கடந்த மகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் நுட்பவறிவும் தருக்க வன்மையும், அவற்றுற் பிறழாது பெருக்கமுறும் விழுமியவொழுக்கமும் எம்போல்வாராற் பெரிதும் வியந்தெடுத்துப் போற்றப்படுவனவாம் . . .

---

ஸ்ரீ: S. சோமசுந்தரபாரதி அவர்கள், M.A., B.L.,
வக்கீல். தூத்துக்குடி. (30—5—13)

அன்புண்மையார்ந்த அரும்புலமை ஐயா!

வேளிர்வரலாறு என்னும் தங்கள் சிறுநூலைப் படித்தேன் என்பது சாலாது; முழுதும் விடாது குடித்தேன். அது, ஒழுகிய நடையும், அதற்கினிய விழுமிய பொருளும், புலனும் புந்தியுமொருங்கு கவர்ந்து நிற்க, படிப்போர்க்கு அறிவும் சுவையும் நிறையக் கிடைக்குமா றமைந்துள்ளது. அதுதரும் மனவெழுச்சி கேவலம் உணர்ச்சிவாயெழுவதன்று; நுண்ணறிவை அடித்தெழுப்ப ஆராய்ச்சிப்பெருங்கடலில் விழுந்துழக்கிச் செம்மாந்த அகத்தறிவின் களிப்பதாகும்.

புதிய மேனாட்டுப் புலமைகலந்த தமிழறிஞர் முயற்சியெல்லாம், இவ்வேளிர்வரலாறனைய பயன்தரப் பெறுவேமாயின், நம் தமிழ் மகளின் தற்கால வீழ்ச்சிநிலை நீட்டியாது. தங்கள்

ஆராய்ச்சியின் முடிவுகளனைத்தும் எனக்கு ஒப்பமுடிந்தனவன்று: இன்னும் மேலாராய்ச்சியின் மாறுபடுவனவுமுள என்பதைத் தாங்களுமொப்புவீர்கள்; எனினும், ஆராய்ச்சிமுறையும், அதற் கென்று கையாண்டுள சாதனமும், பொருளும், கிடைத்தன தூக்கித் துணியு மளவவியும், புதியன தெளிந்தேற்கு முறுதியும் ஆங்கிலப்பழக்க மிகவுடையார் மாட்டு மினைத்துணை காண் பரிது. இஃதே எம்மனோர் மனத்தைப் பெரிது மிழுக்கின்றது. உழைப்போர்க் கூக்கம்தழைக்கத் தரும் அபிமானிகள் கருங்கிய நாளில், தங்களனைய பண்டிதசிகாமணிகள் மனவெழுச்சி குறையாது முயற்சிப்பதரிது. கைம்மாறு கருதாமல் தமிழுல கைச் சிறப்பித்தலொன்றே விரும்பி வேலைசெய்யும் தங்க ளருமை மறவாதிருத்தலே கடனாகக்கொண்ட தங்களுண்மை யுள்ள......

---

## ஸ்ரீ. N. M. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்,

### தமிழ்ப்பண்டிதர், S. P. G. காலேஜ், திருச்சி. 22—7—15

மதிநுட்பம் நூலோடுடைய பெருந்தகையீர்! யான் தங்கள் பால் அறிவித்துக்கொள்வ தொன்று. தாங்கள் எழுதியுள்ள வேளிர் வரலாற்றினை மாணக்கர்களுக்குப் பாடம் நடத்தியகாலத் தில் அதன் முடிந்த கருத்துக்கள் என்னறிவிற்கு மாறாகத் தோன்றினமையின், அதனையாராய்ந்து ஓரமயம் ஒரு வியாசமாக எழுத நேர்ந்தது. சமீபகாலத்தில் அதுவும் ஓர் சிறு புத்தக வடிவில் அச்சிடப்பெற்றது. இன்று தங்கட்கு ஓர் பிரதி அனுப்பி யுள்ளேன். எனக்குத் தோற்றியவைகளை உள்ளவாறு வெளிப் படுத்தவேண்டுமென்னும் கருத்தானன்றி வேறு எக்காரணத் தானும் அது எழுதப்படவில்லை. யான் எழுதியது பிறர்க்கெல்லாம் ஒப்பமுடிவதாம் என்றும் நினைக்கின்றேனில்லை. தங்கள் கொள்கைகளை மறுத்தெழுதிய காரணத்தால் யான் தங்கள் ஆராய்ச்சித்திறத்தையும் தாங்கள் தமிழுலகுக்குச்செய்யும் பெருநன்றிகளையும் அறியாதவனென்றாவது தங்கள்பால் பெரு மதிப்பு வைத்திராதவனென்றாவது தாங்கள் எண்ணி விடா திருக்க வேண்டுமெனப் பெரிதும் வேண்டுகிறேன். தாங்களும் தங்களைப்போன்றவர்களும் பரீக்ஷைசெய்து சன்மானிக்கப்பெற்ற மாணவர்களில் ஒருவனாகிய நான், தங்கள் வியாசத்தை ஆராய்ந் தெழுதியது தவறாயிருப்பினும், தங்கட்கு உவப்பாயிருக்குமென்பது என் கருத்து. தங்களுடைய அன்பும் ஆசீர்வாதமும் என்றும் விரும்புகின்றேன்.

ஸ்ரீ: T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்
18—11—37

பிரம்மஸ்ரீ ஸ்ரீ. உ. வே. சுவாமிகட்கு. சென்ற வைகாசித் திங்கள் கலைமகளில் தாங்கள் எழுதியிருந்த "தேவாரம் பெற்ற ஸ்தலங்களும் சிலாசாசன வழக்கும்" என்ற ஆராய்ச்சியைப் படித்து மகிழ்ச்சியுற்றேன். வைப்புத்தலங்களுள் சிலவற்றை நானும் கல்வெட்டுக்கள் மூலம் ஆராய்ந்துணர்ந்துள்ளேன். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆராய்ச்சித்துறையிற் புகுந் துழைத்துவரும் தாங்கள் இத்தகைய அரிய உண்மைகளை வெளியிடுவதுபற்றிப் பெரிதும் மகிழ்வதோடு சைவ உலகின் சார்பில் தங்கட்கு நன்றியும் தெரிவிக்கின்றேன் ...

---

ALL - INDIA ORIENTAL CONFERENCE, MADRAS, 1924.

Esteemed Sir,

The Committee of the All - India Oriental Conference, at a meeting held yesterday, have decided to honour you with a SHAWL on the occasion of the holding of the Oriental Conference at Madras on the 22nd and the following days. I shall be obliged if you inform me beforehand and in any case before monday evening, by wire if necessary, your acceptance of the offer and your readiness to be present to Madras at least on Tuesday Morning (23rd),. I would suggest your calling on me in person, if possible.

JOINT SECRETARY.

Madras, 21st Dec. 1924.

---

குறிப்பு:— இக்கடிதங்களிற் பல சமீபத்தில் தேடிக் கண் டெடுத்தவை. ஆசிரியரின் கட்டுரைகளைப்பற்றி அவ்வக்காலங் களில் செந்தமிழ்மக்கள் சிறப்பித்து எழுதிவந்த கடிதங்கள் இன்னும் எத்தனையோ உண்டு. அவை இப்போது அகப்படாமை யின், கிடைத்த வளவிலே வெளியிடலாயின. இவ்வாசிரியரது நூல்களையும் கட்டுரைகளையும்பற்றிப் பத்திரிகைகளில் வெளிவந்த சீரிய மதிப்புரைகள், விரிவஞ்சி ஈண்டுப் பதிப்பிக்கப்படவில்லை.

---

# ஆராய்ச்சித் தொகுதி

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம் :

# ஆராய்ச்சித் தொகுதி

## 1. ஸ்ரீ வால்மீகி முனிவருந் தென்னாடும்*

" வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான் "

என்று பெருங்கவிஞர் புகழும் ஸ்ரீ வால்மீகிமுனிவர் தம் காலத்தில் விளங்கிய பரதகண்ட நிலையைத் தம் ஆதிகாவியத்தில் உரிய விடங்களிலெல்லாம் சூசிப்பித்தருளுவர். அம்முறைப்படி, தென்னாடும் அவர் வாக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. வால்மீகி முனி கூறிய தென்னாடென்பது விந்தியமலையின் தென்பக்க முழுமையுமாம். கிஷ்கிந்தையில்,† சுக்கிரீவ மகாராஜன், பிராட்டியைத் தேடி வரும்படி வானர வீரர்களை ஏவும்போது, தென்பக்கமாகச் செல்லுதற்குரியாரை நோக்கிச் சொல்லியதாக அம்முனிவர் கூறியவை அடியில் வருமாறு :—

" அப்பெரிய வானரசேனையை அனுப்பிவிட்டு, குறிக்கப்பட்ட வானரர் சிலரைத் தென்றிசைக் கேவுவானாயினன்......பின்பு அவன் தென்றிசையில் போதற்கரிதாயிருக்கு மென்பதைப்பற்றி அவர்களை நோக்கிச் சொல்லத் தொடங்கி—"பலவித மரங்களுங் கொடிகளுஞ் செறிந்த ஆயிரஞ்சிகரங்களையுடைய விந்தமலையையும், பெரும் பாம்புகள் தங்குவதும் கடத்தற்கரியதுமாகிய நருமதா நதியையும், கோதாவரி கிருஷ்ணவேணி வரதா நதிகளையும், மேகலை உத்கலை

* செந்தமிழ், தொகுதி - 8, பகுதி, 1 (1909-10) The Tamilian Antiquary, No. 7, pp. 83—99 (1910)

† கிஷ்கிந்தை என்பது, துங்கபத்திரா நதிக்குச் சமீபமானதும் பம்பாசரஸ் இருந்த இடமுமாகிய ஹம்பி (Humpi) நகரை அடுத்து, மதங்காசிரமத்தைப் பெற்றிருந்ததாகிய ரிசியமுக பர்வதத்தின் தென்பாலும், நீலகிரி குடகு மலைத்தொடர்களுக்கு வடபாலுமாக மைசூர் மலைப்பிரதேசங்களை யுள்ளடக்கிய மேற்குத் தொடர்ச்சி மலையாம்.

தசார்ண முதலிய நாடுகளையும், அசுவவந்தி முதலிய நகரங்களையும் நீங்கள் காண்பீர்கள். விதர்ப்பம் ருஷிகம் மாகிஷகம் வங்கம் கலிங்கம் கௌசிகம், மலைகளும் நதிகளும் குகைகளு முடைய தண்டகாரணியம், கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள்; அவ்வாறே, ஆந்திரம் புண்டரம் சோளம் கேரளத்தொடு கூடிய பாண்டிய நாடுகளையும் காண்பீர்; பின்பு தாதுக்கள் நிறைந்ததும் விசித்திரமான சிகரங்களுடையதும் பல வர்ணமான பூக்கள் நிறைந்த சோலைகளை யுடையதும் சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுக மலையைத்* தேடுங்கள்; அதன்பின், தேவரம்பையர் வந்து நீராடுகின்ற திவ்யமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள்; மலயமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்டரான அகஸ்தியரைக் காண்பீர்கள். பின் அம்மகருஷியிடத்தில் ஆணைபெற்றுச் சென்று முதலைகள் திரம்பிய பெரிய தாமிரபர்ணி நதியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளால் மூடப்பெற்ற திட்டுக்களை யுடையதாய், கணவனிடத் தன்புள்ள யுவதியானவள் புக்ககம் புகுமாறுபோல, சமுத்திரத்திற் சென்று விழும். பிறகு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்து மயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்கியமாயுமுள்ள கவாடத்தையும் பார்க்கக் கடவீர்கள்; அதன்பின் சமுத்திரத்தை யடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்" என்பது.

வான்மீக பகவானது இவ்வாக்கியங்களில், விந்திய பர்வதத்துக்குத் தென்பக்கத்தே—நருமதை, கோதாவரி, கிருஷ்ணவேணி, காவிரி, தாமிரபர்ணி முதலிய நதிகளும், மேகலதேசம் (விந்த ப்ரதேம்), உத்கல தேசம் (கஞ்சம்), தசார்ணம் (சந்திரகிரியின் கிழக்கு), அசுவவந்தி, விதர்ப்பம் (பீரார்), ருஷிக தேசம் (பங்காளப்பகுதி), மாகிஷகதேசம்†, கலிங்கம் (வடசர்க்கார்), கௌசிகம் ஆந்திரம் (தெலுங்காணம்), புண்டரம் (வங்கதேசப்பகுதி), சேர சோழ பாண்டியம் முதலிய நாடுகளும், தண்டகாரணியம் என்ற பெரிய வனமும் குறிக்கப்பட்டுள்ளன. சுக்கிரீவன் வானர வீரர்களைத் தென்றிசைக்குச் செல்லும்படி விடுக்குமிடத்து இந்நாடு முதலியவை வருதலால், இவை ஆரிய மக்களால் தக்ஷிணப் பிரிவுகளாக முன்பு கருதப்பட்டிருந்தன வென்பது விளங்கும்.

---

* இது மலயமலையைக் குறிக்கும். [அயோமுகம் - ஆட்டுத்தலை; இல்வலன் வாதாபி கதைகளையொட்டிக் குடகுமலைக்கு வந்த பெயர்.]

†இது விந்தப்பிரதேசத்தைச் சார்ந்த அநூபதேசத்தின் தலைநகர் என்பது. இரகுவம்சத்து, ௬ - ம் சர்க்கம், ௩௭, ௪௩ - ம் சுலோகங்களால் விளங்கும்.

இவற்றுள் தண்டகாரணியத்தினைப் பற்றிய வரலாறுகள் சில வான்மீகப் பிரதிகளினின்று அதிகமாக அறியப்படுகின்றன. அவ்வரலாறு வருமாறு—"பகவான் அகஸ்திய முனிவர் ஸ்ரீராமனை நோக்கி. இத்தேசத்தினது வரலாற்றை உள்ளவாறு கூறுவேன் கேட்பாயாக. பார்க்கவ மகரிஷியினது சாபத்தால் தண்டகனு மழிந்து, அவன் தேசமாகிய இதுவும் மக்களும் விலங்குகளும் வாழப் பெறாததாயிற்று. விருக்ஷம் செடி கொடிகள் தவ முனிவர் கள் இல்லாததும், மிக்க பயங்கரமும் சகித்தற்கரிய வெம்மையு முடையதுமாகிய பாலைநில மாயிற்று. விந்தியகிரியினது அடிவார முதல் தெற்கே ஆயிரயோசனை தூரம் வரையும் மழை வீழ்தலும் சுகமான காற்று வீசுதலும் இல்லை. மிக்க பயங்கர முடையதும் கொடியதும் கனற்புகை சூழ்ந்ததுமாகிய காடாய்ப் பல்லாயிரம் வருஷம் நிர்மானுஷ்யமாய்க் கிடந்தது. பின்னர் வெள்ளிமயமாகிய இமயத்தினின்றும் இங்கு வந்தேன். பர்ஜன்னியமென்னும் ஜல தேவதையோடு மேகங்களைக் கொணர்ந்தேன். இமயத்திலிருந்து நானாவகை ஔஷதிகளும் கொணர்ந்து வளர்க்கப்பட்டன. மீண்டும் அழகிய தாமரையோடைகளும் நதிகளும் குளங்களும் அமைக்கப்பட்டன. அவற்றால் செழித்தடர்ந்த திவ்ய வனங்களும் பலவகைத் தானியங்கள் விளைகின்ற விளைநிலங்களும் உண்டாயின. வனங்களெங்கும் இருடிகள் குடிகொண்டார்கள். மனத்திற்குக் களிப்பைத் தருகின்ற காட்சியினையுடைய தேசமாயிற்று" என்க.*

இச்செய்திகளால், இராமாயண சரித்திரம் நடந்தேறுதற்கு முன்னர், தண்டகாரணியத்துக்கு அகஸ்தியமகருஷி வந்தாரென் பதும், அவர் வருகைக்கு முன்பு இக்காடு வெறும் பாழ்வனமாயும் சிலவிடத்து அடர்ந்த பெருங்காடாயு மிருந்த தென்பதும். அம் முனிவர் இங்கு வரும்போது அநேக ருஷிகளையும் அழைத்து வந்தாரென்பதும், அவரே இத்தேசத்தில் நல்ல மழை நல்ல நதி நன்மரங்கள் முதலியவற்றை உண்டாக்கினவரென்பதும் புலப் படும்.

---

* இப்பகுதி—ஆரணியகாண்டத்துப் பதின்மூன்றும் அத்தியா யத்துக் கண்டதென்று—"முதற்குறளுண்மை" என்னுந் தலைப்பெய ருடன் 1900-ல் சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையினின்று வெளி வந்த புத்தகத்தும், யாழ்ப்பாணத்து ஸ்ரீ: முத்துத்தம்பிப் பிள்ளை யவர்கள் எழுதிய 'தமிழ்நாட்டின் பூர்வ நிலை' என்ற கட்டுரையிலும் (செந்தமிழ். தொ. 1, பக். 309) விவரிக்கப்பட்டுள்ளது. இப்பாகம் அச்சுப்பிரதிகளிற் காணப்படவில்லையென்றும், சில வான்மீகக் கையெழுத்துப் பிரதிகளிற் கண்டதென்றும் தெரியவருகின்றன.

அகத்தியனார் தெற்கே வருவதற்குமுன், இக்ஷ்வாகு மைந்தனாகிய தண்டகன் சுக்கிர சாபத்தினால் மண்மாரி பெய்ய மடிந்த காலத்து அவன் ராஜ்யமும் மடிந்ததென்பது இராமாயணம் உத்தர காண்டத்துக் கண்டது. இக்ஷ்வாகுவின் மைந்தனான தண்டகன் கொடியோனாய் விந்தத்துக்கும் சைவலத்துக்கும் இடைப்பட்ட நாட்டை ஆட்சி செய்து வருகையில், பார்க்கவன் (சுக்கிரன்) புத்திரியாகிய அரசை யென்பாளைக் காதலித்து அவளை வலிதிற் கலந்த காரணததால் அங்ஙனம் சுக்கிரசாபம் பெற்றனன் என்பது கதை.*

தண்டகாரணிய மென்பது, முற்காலத்தில் சேர சோழ பாண்டிய நாடுகளை அடுத்திருந்த தென்பது, அந்நாடுகட்கும் விந்தத்துக்குமிடையில் வேறு தேசங்களைக் குறியாது,† "விந்தத்தின் தெற்கே ஆயிரம் யோசனையளவும் வெறுங்காடாய்க் கிடந்தது" என வான்மீகி கூறுதலால் விளங்கும். ஸ்ரீராமபிரான் காலத்தே, அப்பெருவனாந்தரத்தில் அங்கங்கே ருஷிகள் அநேகர் குடியேறி வசித்துவந்தன ரென்பதும், அப்பிரதேசம் **ஜனஸ்தானம்** எனப் பெயர் பெற்றதென்பதும் மேற்காட்டிய பிரமாணங்களே விளக்கும். "**ஜனஸ்தானத்தில்** போருண்டாகு மென்று சந்தேகித்தவனும் இலங்கைக் கரசனுமாகிய இராவணன், ஈசுவரனிட மிருந்து அடைதற்கரிய பிரமசிரமென்ற அஸ்திரத்தைப் பாண்டியன் பெற்றிருப்பது தெரிந்து, அம்மன்னனுடன் சந்தி செய்துகொண்டு இந்திரலோகத்தை வெல்லப்போனான்"‡ எனக்**காளிதா**சர் ரகுவமிசத்திற் கூறுவதால், அந்த ஜனஸ்தானமும் தமிழ்நாட்டுக்கு வெகுதூர மன்றென்பது பெறப்படுவது. இத்தண்டகாரண்யம், ஆரிய மக்களால் மிகுதியுங் குடியேறப்பெற்ற பிற்காலத்திலும், அவ்வனத்தின் ஆதிப் பெயரே தன் பெயராய்த் தண்டகாரணிய நாடென்னும் பெயர் பெறலாயிற்று. பதிற்றுப்பத்தின் ஆறுவதன் பதிகத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனது செய்கைகளுள்,

---

* இராமாயணம், உத்தரகாண், சம்புவன்வதைப். 63-5.

† சேர சோழ பாண்டிய தேசங்கள் நீங்க, மேலே கூறிய நாடுகளெல்லாம் விந்தியத்தையொட்டியும் அதனைச் சிறிது அடுத்துமுள்ளவைகளே யாதலாலும், விந்தத்துக்குந் தென்னாட்டுக்கும் மத்தியில் வேறு தேசங் குறிக்கப் படாமையாலும் வால்மீகி காலத்து அவ்விடம் பெருவனாந்தரமாயிருந்தது என்பது நன்கு தெரியப்படும். பாரதத்தில், தெற்கே அவ்விடைப்பிரதேசத்தில் அநேக ராஜ்யங்கள் குறிக்கப்பட்டுள்ளன (Dr. Bhandarkar's History of Dekkan. p. 142.)

‡ இரகுவமிசம், ஸர்க்க ௬; சுலோ—௬௮.

"தண்டகாரணியத்துக் கோட்பட்டவருடையைத், தொண்டியுட்டந்து கொடுப்பித்து" எனவும், அதனுரையில் "தண்டாரணியமென்றது ஆரிய நாட்டிலுள்ளதோர் காடு"* எனவும் வருதலால், தமிழ்நாட்டை யடுத்து அஃதிருந்ததுவும் பிறவும் உணர்க.

இத்தண்டகாரணியத்துக்குப் பின், வான்மீகி முனிவர், ஆந்திர புண்டர சோழ கேரள பாண்டிய நாடுகளைக் குறித்துவிட்டு, பின்னர் அயோமுகமாகிய மலயபருவதத்தின் சிறப்பையும் அம்மலையினின்று காவிரி நதிபெருகுதலையும் குறிப்பிட்டுள்ளார். மலய பர்வதம் என்பது தெற்குக்கோடியிலுள்ள பொதியமலைமட்டுமன்றி நீலகிரியுங்குடகும் அடங்கிய "மேற்குத் தொடர்ச்சி மலை"ப் பிரதேசமுமாம். இம்மலையினின்று தெய்வத்தன்மை வாய்ந்த காவிரி வெளிப்படுதலையும் அம்மலையினுச்சியில் அகஸ்தியமுனிவர் விளங்குதலையும் வான்மீகியார் கூறியுள்ளார். அகஸ்தியர் காவிரியுற்பத்தியாகுமிடத்தில் வசிப்பதாக முனிவர் இங்கே கூறினும், ஆரணிய காண்டத்தில், கோதாவரிக்கரையிலுள்ள பஞ்சவடிக்கு (Nasik) இரண்டுயோசனை தூரத்தில் அகஸ்தியாச்சிரம மிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதனால், அக்குறுமுனிவர், மேற்குத் தொடர்ச்சிமலை முழுமைக்கும் உரியவராய்த் தென்னாட்டைக் காத்தருளியவர் என்பது விளங்கும். இனி வானரவீரர்களை நோக்கி சுக்ரீவன் வழி கூறும்போது, "அம் மலயமலையி னுச்சியில் மிகவும் தேஜோவானாய்ச் சூரியஸமானராய் ருஷிசிரேஷ்டராய் உள்ள அகஸ்திய முனிவரையும் பாருங்கள்; பிறகு, நிர்மலசித்தரும் மிகவும் ஞானவானுமான அம்முனிவரது ஆணைபெற்றுக்கொண்டு தாமிரபர்ணியைத் தாண்டுங்கள்" எனக் குறித்தலான், தென்னாட்டிற்புகுவதற்கு அகஸ்திய முனிவரது அநுமதி பெறுதல் அக்காலத்தில் அநுகூலமாயிருந்த தென்பதும் விளங்கும். இதனை நோக்கும்போது, குறுமுனிவர் "இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து அவனை ஆண்டு (தென்னாட்டுள்) வாராமை விலக்கிப் பொதியின்கண் இருந்தனர்" என்ற நச்சினார்க்கினியர் கூற்று ஞாபகத்துக்கு வருகின்றது. அக்காலத்தே அரக்கராதியரால் தென்னாட்டில் நேரும் இடுக்கண் நீக்கி அநுகூலஞ்செய்தற்கு அகத்தியரே முன்னின்றுதவியவரென்பதற்கு வடமொழி தென்மொழிப்

* மகாராஷ்டிர தேசத்துப் பிராமணர், விசேடகாலங்களிற் செய்யும் வடமொழி ஸங்கல்பக் கட்டுரையில் "மகாராஷ்ட்ர தேசே" என்னாது, "தண்டகாரண்ய தேசே" எனக் கூறிவருதல் இன்றும் வழக்கமென்று தெரிதலால் அம்மகாராஷ்டிர தேசமே இவ்வாரிய நாடாகக் கருதத்தக்கது (Dr. Bhanbarkar's History of Dekkan, P. 136).

பிரமாணங்கள் பல காட்டலாம். ஸ்ரீ ராமபிரான் லக்ஷ்மணரை நோக்கி அகஸ்தியாச்சிரமத்தைப் பற்றிக் கூறியதை வான்மீகி பகவான் குறிக்கும்போது "அம்மகானுகிய அகஸ்தியர், தாம் இவ்வுலகத்துக்கு நன்மைசெய்யும்பொருட்டு, இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி இத்தென்றிசையும் சுகமாக வசிக்கத்தக்க திசையாகத் தமது தவவலிமையாற் செய்துவைத்தார்" எனவும், "எவருடைய மகிமையால், இன்றைக்கும் அரக்கர்கள் இத்தென்றிசையைக் கண்ணெடுத்துப் பார்த்து உட்புக நடுங்குகிருர்களோ அவருடைய ஆச்சிரமம் அது; மகா புண்ணியமூர்த்தியாகிய அவர் இத்திசைக்கு வந்தது முதல், இங்கே அரக்கர்கள் தம் பகைமை நீங்கிச் சாந்தமுள்ளவராய் விட்டனர். அம்முனிவர் பெயரைக் கொண்டே இத்தென்றிசையும் **அகஸ்தியர் திசை** என்று வெகு சாந்தமான பெயர்பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சும் திசையாக விளங்குகிறது" எனவும் ஆரணிய காண்டம் கக - ம் சருக்கத்துக் கூறுதலால் மேற்கூறிய விஷயம் நன்கு வெளியாகும்.

இனி, தமிழ் வரலாறுகளை நோக்குமிடத்து, முற்காலத்தே அசுரர்களால் துன்பம் நேர்ந்தபோது சோழனெருவன் "தூங்கெயிலெறிந்"தது, இக்குறுமுனிவர் அருளினுலேயாம் என்பது விளங்கும். இதனை,

" உலகந் திரியா வோங்குயர் விழுச்சிர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் "

என்னும் மணிமேகலையடிகளிற் (காதை - க.) காண்க. காந்தமன் என்னும் மற்றொரு சோழன் பரசுராமரது கொடுமையினின்று தப்ப இம்முனிவரது பேரருளை நாடிய வரலாறு "அமர முனிவனகத்தியன் றனது, துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங் ககந்தன் காத்தல்" என்பதனுலும் (உஉ - சிறை செய்காதை, கூ௯-கூ௪), இக்காந்த மன்னவன்பொருட்டே காவிரியைச் சோணுட்டிற் பெருக் கெடுக்கும்படி அவ்வகத்தியனர் செய்தாரென்பது,

" செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பாபதி " .

என வரும் அந்நூற் பதிகத்தாலும் அறியலாகும். இவற்றுள் “அமரமுனிவ னகத்தியன்றனாது, கரகங்கவிழ்த்த காவிரி” என்பதனால், அகஸ்தியாச்சிரமமொன்று குடகு மலையில் இருந்தமை வலிபெறும். இவ்வாறே, பாண்டியனுக்கும் அகத்தியனார் மிகவும் அருள் செய்தவரென்பது, தமிழ் நூல்களிலும் சாஸனங்களிலும் காணப்படுவதால் அறியலாம்.* காளிதாஸரும், “இப்பாண்டியர் தம் அசுவமேத யாகத்தை முடித்து அவபிருதஸ்நானஞ் செய்தவுடன், அகஸ்திய மாமுனிவர், வெகு அன்போடும் இம்மன்னரிடம் வந்து, ‘உங்களுடைய ஸ்நாநம் சரிவர முடிந்ததா?’ என்று கேட்கிறார்” என்று இரகுவமிசத்துக் (சருக் - [illegible]; சுலோ - [illegible]) கூறுதல், அகஸ்தியர்க்கும் பாண்டியர்க்குமுள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும்.

மேற்கூறிய அகத்தியமுனிவர் வரலாறுகளையெல்லாம் கூட்டிப் பார்க்குமிடத்து, அம்முனிவர் மேற்கொண்ட முயற்சி முழுதும் முக்கியமாக, ஜனப்பெருக்கமின்றிப் பெருங்காடாய்க் கிடந்த விந்தத்தின் தென்பகுதியில் மக்களைக் குடியேற்றி, அப் பகுதியை நிலவளம் நீர்வள முடையதாக்கி, அன்னார்க்கு வேண்டிய சௌகரியஞ் செய்து விருத்தி செய்ததே என்பது பெறப்படும். பூமியின் வடபாகம் ஜனநெருக்கத்தின் மிகுதியால் தாழ்ந்தும் தென்பாகம் அஃதின்றி உயர்ந்தும் இருந்தவற்றைச் சமநிலைப்படுத்தவேண்டித் தேவர்களால் அகத்தியர் தென்றிசைக்கு அனுப்பப்பட்டார் என்று புராணங்கள் கூறுவதில் உண்மையுளதேல், அது, தென்பகுதியில் அம்முனிவர் மேற்கொண்ட குடியேற்ற முயற்சியே யன்றிப் பிறிதன்றாம். இதற்கேற்ப, தென்றிசைக்குப் போதுகின்ற அகத்தியர், “துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண், பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொடு போந்து காடுகெடுத்து நாடாக்கி”ச் செழிக்கவைத்தார் எனத் தொல்காப்பியப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியர் குறித்த பழைய செய்தி பெரிதும் பொருந்துமாறு கண்டுகொள்க.

இனி, விந்தியத்தின் தென்பாலுள்ள நாடுகளைக் குறித்து வந்த வான்மீகி முனிவர், “சோளாந் பாண்டியாந் ஸகேரளாந்”— (—சோழ தேசத்தையும் **கேரளத்தோடு கூடிய** பாண்டிய தேசத்தையும்) என்று கூறுகின்றார். “ஒருவினை யொடுச்சொல் உயர்பின் வழித்தே” என்னுந் தமிழ் வழக்குப்படி, ‘கேரளத்

* சின்னமனூர்ச் சாஸனப்பிரசஸ்தி; சாஸனத் தமிழ்க்கவிசரிதம், பக். 2 - 3.

தொடு கூடிய பாண்டியம்' என்பது கேரளதேசம் உயர்ந்த தென் பதைக் குறிக்குமாயினும், வடமொழி வழக்கு இதற்கு நேர்மாறு ரும்; என்னை? "ஸஹயுக்தே அப்ரதானே" என்பது அதனிலக் கணமாதலின், அஃதாவது "ஒருவினை யொடுச்சொல் இழிபின் வழித்தே" என்பதாம். இங்ஙனம் 'பாண்ட்யாங் ஸகேரளாங்' என அப்பிரதானத்தில் கேரளத்துக்கு 'ஒடு'க் கொடுத்திருத்தலால் வான்மீகி காலத்தே பாண்டியநாட்டுக் குள்ளடங்கிச் சேரநாடு இருந்ததுபோலும்.

இனி, மலயத்திலுள்ள அகத்தியமுனிவர்பால் விடை பெற்ற பின்னர், தாமிரபர்ணி நதியைத் தாண்டும்படி கூறப்படுதலோடு, அந்நதி சமுத்திரத்துச் செல்லுமாறுஞ் சொல்லப்படுகிறது.* அதன் பின்பு பாண்டியனது நகர விசேடம் வருவதாம். இங்ஙனம், அந்நதி சமுத்திரஞ்சார்தலைக் கூறிப் பாண்டியன் நகர விசேடத்தை வான்மீகி குறித்தலால், அப்பட்டினம் தாமிரபர்ணி யின் சங்கமத் தயலில் இருந்ததாகக் கருதத்தக்கது. "அதன் பின் சமுத்திரத்தை யடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்" என முடிவில் மகருஷி கூறுதலாலும் இதுவே கருத்தாதல் காண லாம்.' இனி, இப்பாண்டியனது நகர விசேடத்தைப்பற்றி முனிவர் கூறும் சுலோகம் வருமாறு:—

ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம் ।
யுக்தம் கவாடம் பாண்ட்யானாம் கதா த்ரக்ஷ்யத வானரா: ॥

இதன் பொருள்:—"பிறகு, பொன்னிறைந்ததாயும், அழகுடைத் தாயும், முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப்பட்டதாயும், பாண்டியர்க்கு யோக்யமானதாயு முள்ள கவாடத்தை வானர வீரர்காள்! பார்க்கக் கடவீர்" என்பது. இவ்வுரை, திலகர் தீர்த்தர் கோவிந்தராஜர் என்னும் இராமாயண வியாக்யாதாக்களுள் பின் னவர் கூறியது. முன்னவ ரிருவரும் "பின்பு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமணி யிவற்றால் அணியப்பட்டதாயும் நக ரத்தரணோடு இணைக்கப்பட்டதாயு முள்ள பாண்டியர் வாயிற் கதவை வானரர்காள்! போய்க் காண்பீர்" என்னும் பொருள்படக் கூறினர். அஃதாவது—"கவாடம்—பாண்ட்யாநாம் நகர த்வார கபாடம்" (—பாண்டியரது நகர வாயிற்கதவு என்பது தீர்த்தீயம்; "யுக்தம்—புரப்ராகார கடிதம்" (—நகரத் தெயிலோடு இணைக்கப் பட்ட) என்பது திலகம். இங்ஙனம், வடநாட்டாராய் விளங்கிய

* தென்பாலுள்ள வையை முதலிய நதிகளை முனிவர் கூறாமை கவனிக்கத்தக்கது.

உரையாசிரியர் கருத்திவை யாயினும், தென்னாட்டாராய்வான்மீகத்துக் குரையிட்ட கோவிந்தராஜர் முழுக்கருத்தும் ஈண்டு ஆராயத் தக்கது. அவர் அடியில்வருமாறு எழுதுகிறார். “ததோ ஹேமமய மிதி। பாண்ட்யாநாம் = பாண்ட்யராஜாநாம்। யுக்தம் = யோக்யம்। கவாடம் = கபாட நகரம் இத்யர்த்த:। முக்தாமணிபி: முக்தாபி: மணிபி: விபூஷிதம் = தத்ரோத்பத்திதேசத்வாதிதி பாவ:” இதன் பொருள் பாண்டியானாம் - பாண்டியராஜாக்களுடைய; யுத்தம் – யோக்யம்; கவாடம், இதனால் நகரம் குறிக்கப்படுகின்றது; முக்தாமணி விபூஷிதம்-முத்துமயமான மணிகளால் அலங்காரமாகிய : என்றது, அது பிறக்குமிடமாதலால் (அங்கே அது மிகுந்துள்ளது) என்பது கருத்து—என்பதாம்.

இவ்வரும்பதவுரையால், ஸ்ரீகோவிந்தராஜர், “முத்துமயமான மணிகளால் அலங்காரமானதும், பாண்டியர்க்கு யோக்யமானதுமான பாண்டியரது கவாடபுரம்” என்பதே பொருள் என்று கருதினராதலால் தெரியலாம். முற்கூறிய தீர்த்தீய திலக வியாக்கியானங்களினும், இவ்வியாக்கியானம் தமிழ் வழக்குக்கணைத் தழுவி மிகச் சிறந்து நிற்றல் தெளியப்படும்; என்னை? “கபாடபுரம்” என்பது பழங்காலத்தே பாண்டிய ராஜதானியாய், இடைச் சங்கமிருந்து தமிழ் ஆராய்ச்சி செய்துவந்த நகரம் என்பதும், இக் கபாடபுரச் சங்கத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதென்பதும், இச்சங்கமிருந்தார் ஐம்பத்தொன்பதின்பர் என்பதும் பிரசித்த மாதலால் என்க. இதனை, களவியலுரைப் பாயிரத்தில் “அவர் (இடைச் சங்கத்தார்) சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத் தென்ப” எனவும்; சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் “இரண்டா மூழியதாகிய கபாடபுரத்தில் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திரீ இய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து” எனவும்,

> “இவ்வகை யரசரிற் கவியரங் கேறினர்
> ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
> விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
> கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப”*

எனவும் வருவனவற்றால் காண்க. திலகமுதலாய வியாக்யானங்களின்படி, கவாட மென்பது பாண்டியரது வாயிற் கதவெனக்

* சிலப்பதிகார உரைப் பாயிரத்தில், மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் காட்டியிருக்கும் பழைய அகவலொன்றைப் பார்க்க.

கொண்டு, அதற்கேற்ப 'யுக்தம்' என்னும் சொல்லை 'நகரத் தரணோடு இணைக்கப்பட்ட' என்னும் பொருள்படுத்திக் கவாடத்துடன் பொருத்தல் சிறவாமை கண்டு, அது பாண்டியரது நகரத்தையே குறித்ததாகல் வேண்டுமெனச் சுலோகவியல்பையறிந்து கோவிந்தராஜர் எழுதிய உரை ஈண்டுப் புகழத்தக்கதாம். கபாடமென்னும் பெயர்கொண்ட பாண்டியநகரமொன்றிருக்கும்போது, கதவெனல் வேண்டா என்பது எளிதில் விளங்கத்தக்கதன்றோ? மேலும், நுணுக்கமான இடமெல்லாம் பிராட்டியைத் தேடும்படி வானரவீரர்கள் ஏவப்பட் டிருக்க, ஈண்டு மட்டும், பாண்டியரின் பொற்கதவைப் பார்த்துவிட்டுப் போம்படி கூறப்பட்டதென்பது வான்மீகியின் கருத்தாகாதென்க இனி, "முக்தாமணிவிபூஷிதம்" என்னும் அடைக்கு, கோவிந்தராஜர் 'முத்தும் மணியுமிவற்றால் அலங்கரிக்கப்பட்ட' எனக் கதவுக்கேற்றிப் பொருள்கொள்ளாது, "முத்துமயமானமணிகளால் அலங்காரமாயுள்ள என்றது, அது பிறக்குமிடமாதலால் (அந் நகரத்தில் அது மிகுந்துள்ளது) என்பது கருத்து" என்று நகரத்துக்கேற்றிக் கூறுகின்றார். இவ்வுரை பழைய வடமொழி தென்மொழி வழக்குக்கட்குப் பெரிதும் இயைந்ததாகும். தாமிரபர்ணி கடலுடன் கலக்குமிடத்தே பாண்டியரது கவாடம் இருந்த தென்பது, முதலிற்காட்டிய வால்மீகி வசனங்களால் அறிந்தது. அங்குண்டாகும் முத்தைப்பற்றி 2200–ஆண்டுகட்கு முற்பட்ட **கௌடில்யரும்** தம் அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிடுதல் அறியத்தகும். அவர் முத்தின்பேதங்களைப்பற்றிக் கூறுமிடத்தே. தாம்ரபர்ணிக, பாண்டய கவாடக, சூர்ணேய என்றவைகளை எழுதுகின்றார்.* இவற்றுள் இடையிலுள்ள பாண்ட்யகவாடக என்பது, பாண்டியரது கவாடத்திற் கிடைக்கும் முத்து என்னும் பொருளதாம். தாமிரபர்ணி முதலியவற்றிற் கிடைக்கும் முத்தைத் தாம்ரபர்ணிக என்பது முதலாக அவராளுதலும் காண்க. இங்ஙனம், முத்துப் பிறக்கும் இடமாகக் கௌடில்யர்கூறிய பாண்டியகவாடமே 'முக்தா மணி விபூஷிதம் யுக்தம் கவாடம் பாண்ட்யாநாம்' என்று வால்மீகி பகவானாலும் சிறப்பிக்கப்பட்டதென உணர்க. எனவே, இக்கவாடம் வாயிற்கதவு முதலிய பிறபொருளிற் கூறப்பட்டதன்றென்பதும் வானரவீரர்கள் தேடுதற்கேற்ற மகாநகரமே இஃதென்பதும் தெளிய அறியத்தக்கன. இவ்வாறு வான்மீகிகாலமுதல் கௌடில்

*Kautilya's Arthasastra. (Dr. R. Shamasastry's Translation) P. 83.

யர்வாழ்ந்த காலம்வரை பிரபலமாயிருந்ததாகத் தெரியும் கபாட புரம் பின்பு கடல்கொள்ளப்பட்டதென்றும், அதன் ஸ்தானத்தில் தோன்றிய துறைமுகநகரமே கொற்கையென்றும் கொள்ளத் தகும்:* தாமிரபர்ணி சங்கமத்தின் அயலதாகவும் முத்துண்டா மிடமாகவும் கடைச்சங்க நூல்களினும் பின்னூல்களினும் சிறப் பிக்கப்படுவது இக் கொற்கையேயாம்.

"கொற்கையம் பெருந்துறை முத்து" (அகநா. 27; சிலப். 14 : 180) "முத்தின் கொற்கை" (மதுரைக் காஞ்சி. 217)

முதலியன காண்க. **தாலமி** முதலிய யவன ஆசிரியரும் இக் கொற்கைத் துறையில் நடந்தேறிய முத்துச் சலாபத்தைச் சிறப் பித்துக் கூறுவர் † "ரகுமகாராஜர்க்கு அப்பாண்டியர், தாமிர பர்ணி சமுத்திரத்தில் விழுமிடத்திலிருந்து எடுத்த நன்முத்துக் களைத் தாங்கள் அவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்திருந்த புகழைக் கொடுப்பதுபோலக் கொடுத்தார்கள்" என மகாகவி காளிதாசரும் (ரகுவம்.ஸர்க். ௪, ௫௰)

"முந்நீர்பொருந் தண்பொருந்தத் திலங்கார் வலவடம்"‡
( தஞ்சைவா. கோ. 54)

எனப் பொய்யாமொழியாரும் பிறரும் புகழ்வனவெல்லாம் இக் கொற்கைத்துறை முத்தினங்களேயாம். ஆகவே, கோவிந்தராஜர் 'கவாடம் பாண்ட்யாநாம்' என்பதற்கு எழுதிய வியாக்யானமே வால்மீகிபகவானது திருவுள்ளம் என்பது மலையிலக்காகும்.

இங்ஙனம் "விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக் - கண்ணகன் பரப்பிற் கபாடபுர" த்தை, தெய்வப் புலமை வான்மீகி முனிவர் சிறப்பித்துக் கூறியிருத்தல் போலவே, அவரால் வேறு தமிழ் நாட்டு முக்கியபட்டணமும் கூறப்பட்டதுண்டோ எனின்; உண்டு, வானர வீரரிற் சிலரை, சுக்ரீவன் மேல்நாடுகளில் தேட விடுக்கும் போது அடியிற் கண்ட ச்லோகம் சொல்லப்பட்டுள்ளது.

முரசீபத்தநம் சைவ ரம்யம் சைவ ஜடீபுரம் ।
அவந்தீம் அங்கலேபாம் ச ததா சாலக்ஷிதம் வநம் ॥

(கிஷ்கிந். ௪௨-ம் அத்யா. ௧௨-ம் ச்லோகம்)

இச்லோகத்துக் கண்ட நகர முதலியவற்றில், முதலிற் குறித்த **முரசீபத்தனம்** என்பது அம் மேல்கடற்கரையிலுள்ள முசிரி

* இதன் விவரத்தை, 'இடைச் சங்கம்' என்ற கட்டுரையிறுதியிற் காண்க.

† The Tamils 1800-years ago. PP. 22-3

‡ "கடலை யெதிரும் தண்ணிய பொருநை யாற்றின்கண் பிறந் தொளிரும் முத்துக்களா கோத்த வலிய வடம்" என்பது இதனுரை

என்னும் பட்டினமே யாதல் வேண்டும். இது முற்காலத்தே, சூர்ணு என்றும் கள்ளியென்றும் வழங்கிய பேர்யாறு கடலுடன் கலக்கும் இடத்து விளங்கிய பெருந்துறைமுகமாயும், சேரவரசரது சிறந்த பட்டணங்களில் ஒன்ருயும் இருந்ததென்றும், மேனுட்டு யவனரது மரக்கலங்கள் மிளகு முதலியன ஏற்றுதற்கு இதுவே அக்காலத்து ஏற்ற பட்டினமானதென்றும், மேற்றேயத்து யாத்திரைக்காரராகிய பிளினி, தாலமி முதலிய யவனுசிரியர் குறிப்புக்களால் விளங்குதலோடு, "சேரலர், சுள்ளியம்பேர்யாற்று வெண்ணுரை கலங்க யவனர் தந்த வினைமா ணன்கலம், பொன்னெடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழு முசிறி" என்னும் அகநானூற்றடிகளாலும் (146) தெளிவாகின்றது. இத்தகைய பட்டினம், மிகுந்த பழமையும் மேல் கடற்பக்கத்ததுமாய் இருந்தமையால் இதனையே வான்மீகி முனிவர் 'முரசீபத்தனம்' என்றனராதல் வேண்டும். முசிறி என்பதை வான்மீகி முரசீ என்று ஒருபடியாகத் திரித்து வழங்க, பின்னையோராகிய **வராகமிகிரர்** பிரகத்சம்ஹிதையில் இதனை **மரீசிபத்தனம்** என வழங்கினர். மரீசி-மிளகு; மிளகின் வளமிகுதியைக் கொண்டிருந்தமையால் அப்பட்டினம் இவ்வாறு பெயர் பெற்றிருந்தது போலும்.

இனி, வான்மீகியார் திருவாக்கில் சோணுட்டுவிசேடமாகக் குறிக்கப்பட்டதும் ஒன்று உண்டு. அந்நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தை அம்முனிவர் சுட்டாமற் போயினும், அதன் பக்கத்துள்ள ஒரு தலத்தின் விசேடத்தைக் கூறுதல் கவனிக்கத்தக்கது. ஸ்ரீராமபிரான் விட்ட பாணத்தால், அரக்கனுன கரன் பூமியில் மாண்டு விழுந்ததைக் கூறும்போது வால்மீகியார் அடியில் வருமாறு கூறுகின்ருர்.

ஸ பபாத கரோ பூமௌ தஹ்யமாந: ஶராக்நிநா
ருத்ரேணேவ விநிர்தக்த: ஶ்வேதாரண்யே யதாந்தக:॥

இதன் பொருள்:— **சுவேதாரண்யத்தில்** உருத்திரனுல் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்ததுபோல, கரன், ஸ்ரீராமபிரானுடைய சராக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான்—என்பது. இவ்விடத்திற்கு உரையிட்ட தீர்த்தர் என்னும் ஆசிரியர் "சுவேதாரணிய மென்பது காவேரிநதி கடலுடன் கலக்கும் இடத்துள்ளது" என்ருர். அஃதாவது இப்போதுள்ள **திருவெண்காடு** என்னும் சிவதலமேயாம். காவேரிக் கரையிலுள்ள சுவேதாரண்யத்தில் அந்தகாசுரன் என்பவனைச் சிவபிரான் எரித்தது புராணப்பிரசித்த மென்பர் **திலகர்**. மற்றும் இவ்வுரைகாரரே, சுவேதாரணியத்தில் சிவபிரான் மார்க்கண்டேயரின் உயிர்

காத்தற் பொருட்டு யமனைக்கொன்ற சரிதம் நிகழ்ந்ததாக அத்தலமான்மியத் துண்மையால், வான்மீகி அதனைக் குறித்தனராகக் கொள்ளுதலும் அமையும் என்றனர். யமனை யுதைத்த சரிதம் திருவெண்காட்டுக்கடுத்த திருக்கடவூரில் நிகழ்ந்ததென்பது பிரசித்தமாயினும், அவ் விருதலங்களும் சுவேதாரணியம் என்ற ஒரே பிரதேசத்தைச் சார்ந்தனவாக முன்பு கருதப்பட்டு இங்ஙனம் சரித்திரவொற்றுமை பெற்றனவென்று கொள்ளுதல் குற்றமாகாது. திருக்கடவூர் போலவே, திருவெண்காட்டிலும் சிவபிரான் யமனைக் கொன்ற செயல் நிகழ்ந்ததென்பதற்கு சம்பந்தமூர்த்திகள் தேவாரத்தில்,

"வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநான் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே."

"கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்து மாணிக்காய்
ஆள்வித் தமர ருலக மளிப்பா னூர்போலும்
வேள்விப் புகையால் வான மிருள்கூர் வெண்காடே"

என்ற பாசுரங்களில் அச்சரிதம் திருவெண்காட்டுக் குரியதாகவும் கூறப்படுதலே தக்க சான்றாவது. இப்போதுள்ள தலமான்மியத்தில் இச்சரித்திரம் காணமற்போயினும் பழைய புராணத்தில் அவ்வாறமைந்திருந்ததுபோலும். இவற்றால், வான்மீகி பகவான் தமிழகத்தே சோணாட்டின் முக்கிய தலவிசேடம் ஒன்றைக் குறிப்பிட்டுச் செல்லுதல் காண்க.

இவற்றால், தமிழ்நாட்டுத் தலைமை நகரங்கள் சிலவும் வான்மீகி முனிவரால் நன்கறியப்பட்டிருந்தன என்பது எளிதில் விளங்கத்தக்கது. நகரங்கள் மட்டுமல்ல; தமிழ் மக்களது வழக்க ஒழுக்கங்கள் சிலவும் அம்முனிவர்க்குத் தெரிந்திருந்தன வென்றே சொல்லலாம். அயோத்யா காண்டம், கூ௯-ம் ஸர்க்கத்தில் அம் முனிவர் பரதநம்பி கூற்றாக அடியில் வருமாறு கூறுகின்றார்.

கவேஷ்டிகவாஜவஷோது ஸிரஸ்ஸு ஷாஹீதே: ,
தெவஹ்ருகாதெபோ: ஸஹதெகேஷாஷ்கிணாத்யா யதா நரா:

இதன் பொருள் :—'நம் யுத்த வீரர்கள் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன் தென்னாட்டாரைப் போலத் தலைக் கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்' என்பது.

தமிழரசர் போர்க்குச் செல்லும்போது அதற்கென்று ஒரு வகைப் பூவும் தங்குலத்திற்கென்று ஓர் அடையாளப் பூவும்ஆக இரு வகைப் பூவுடையரென்பது பழைய தமிழ் நூல்களால் அறியப் படும். அன்றியும், நிரைகவர்தல் நிரைமீட்சி முதலாக நிகழும் போர்த் தொழில்களில் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு பூச் சூடிச் செல்லுதலும் மரபாம். இப் பூப்பற்றியே வெட்சி கரந்தை உழிஞை வஞ்சி என அப்போர்த்துறைகள் பெயர்பெறுதலுங் காண்க. இவ்வாறே அகப்பொருட்டுறைகளாகிய புணர்தல் பிரிதல் முதலி யனவும் குறிஞ்சி பாலை என அவ்வந் நிலத்துக்கேற்ற பூப் பெயரானே வழங்கப்படும். இவற்றால் தென்னாட்டார் பூவணி வதிற் கொண்டுள்ள பெருவிருப்பம் வெளியாம். இதனையே, மஹருஷி, "நம் யுத்த வீரர் தென்னாட்டாரைப் போலத் தலைக்கணி யாகப் பூக்களைச் சூடுகின்றனர்" என்று கூறிப்போந்தன ரெனக் கொள்க. அயோத்தி வீரர் பூச்சூடிச் சென்றதற்குத் தென்னாட்டு மக்கள் சூடுதலை உவமை கூறுதலால் அம்மக்களை வீரராகக் கொள்ளுதலே ஏற்றதாம்; அன்றித் தமிழ்ப் பொதுமக்களைக் கூறினரெனினும் அமையும். தென்னாட்டாரைப் போல வேறெந் நாட்டாரும் பூவை மகிழ்ந்தணிதல் இன்றும் வேறெங்கும் காணக் கிடையா தென்பதும் அறியத் தக்கது.

இன்னும், தென்னாட்டு அரக்கர் செய்கைகளில் அவரிறந்தால் எரிக்கப்படாது புதைக்கப்படுதல் ஒன்றென்று தெரிகிறது; விராதன் என்ற அரக்கன் சாகுந்தருணத்தில் இராமலக்ஷ்மணர் களை நோக்கி, "என்னைக் குழியில் அடக்கஞ் செய்தலே பழமை யான தர்மம்" என்று கேட்டுக்கொண்டதாக ஆரணிய காண்டம் 4-ம் சருக்கத்தில் வால்மீகி கூறுகின்றார். இனி, வாதாபி இல்வலர் கதையை இராமபிரான் தம்பிளவற்கு எடுத்துரைக்குமிடத்தே, இல்வலன் பிராமண வேடந்தரித்துத் தம்மவர்க் குரியதல்லாத ஸம்ஸ்கிருத பாஷையைப் பேசிக்கொண்டு வந்ததாகக் கூறுவதால், அரக்கர்க்கு வடமொழி அந்நிய பாஷையா யிருந்தது என்பதும் விளங்கும். அன்றியும் ஆரணிய காண்டத்தில் மாரீசன் இராம னது பெருமையை இராவணனுக்கு எடுத்துரைக்கும்போது, "இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால், ரகாரத்தில் தொடங்கும் 'ரத்னம்' 'ரதம்' என்ற பெயர்கள்கூட எனக்குப் பெரும் பயத்தை உண்டாக்குகின்றன" என்றதாக வால்மீகி கூறு கின்றார். இவ்விடத்தில் ரகாரத்துக்குச் சிறப்பாக விதிக்கப்பட்ட 'இப்'ச்சாரியையிட்டு "ரேபாதிநீ" எனக் கூறாது, "ரகாராதிநீ" என முனிவர் கூறியிருத்தலைத் தென்னாட்டானன மாரீசன் கூற்றுக்

கேற்ப வைத்த தமிழ் வழக்கு—என்று கருதுவாருமுண்டு. தமிழர் "ரகாரம்" எனக் 'கார'ச் சாரியை யிட்டே வழங்குவர்.

இனி வான்மீகியைப் பற்றிய மற்றொரு பெருத்த ஐயமும் தமிழ் மக்கட் குண்டு; அஃதாவது அம் முனிவர் பெருமான் தலைச் சங்கத்தவரில் ஒருவராக எண்ணப்பட்ட வான்மீகியார் தாமோ? என்பது. தலைச்சங்கத்தவரில் வான்மீகனா ரெனப் பெயர்கொண்ட புலவரொருவருள ரென்பது, தொல்காப்பியப் பொருளதிகாரம், புறத்திணையியலில் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலான் அறியப்படுவது. வான்மீகனார் பாட்டொன்று புறநானூற்றில் (ருஙஅ) வருவது அடியில் வருமாறு:—

"பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே;
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கை விட்டனரே காதலர்; அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே."

இப்பாட்டு, வான்மீகியாரதென்பதற்கேற்பத் தவத்தின் பெருமையை மிக அழகாகச் சிறப்பித்தல் அறியத்தகும். இதனை நோக்கும்போது, "தபஸ்வாத்யாயநிரதம்" என்று தம்மிராமாயணத்தைத் தொடங்கிய மகருஷி வான்மீகி பகவான் தலைச் சங்கத்தை அறிந்திருந்தவர் தாமோ—என்று சிலர் சங்கிப்பர். ஆயின், இதனை ஆதரித்தற்கு வேறு தக்கபிரமாணங்கள் வேண்டும்.

# 2. இராமாயணமும் தமிழ்வழக்குக்களும்*

—:o:—

## முன்னுரை

சங்கச் செய்யுட்களிலும் பிற சான்றோர் பாடல்களிலும் வடமொழி இதிகாச புராணங்களிற் கண்ட சரிதைகள் பலவும் பயில்கின்றன. திருமால், சிவபிரான், முருகக் கடவுள் முதலிய தெய்வங்களின் சரிதங்களும், நளன் பாண்டவர் முதலிய அரசர் செய்திகளும் உவமைமூலமோ எடுத்துக்காட்டாகவோ அம்முன்னூல்களிற் கூறப்படுதலால், புராணேதிகாச வழக்குக்களைப் பழைய தமிழ் மக்கள் நன்கறிந்திருந்தவர் என்பது தெளிவாகின்றது. அவ்வாறுள்ள சரித்திரங்கள் வடநூல் வழக்குக்களுடன் பெரிதும் ஒத்தும் சிறுபான்மை வேறுபாடு கொண்டும் உள்ளன. அன்றியும் வடநூல்களில் இல்லாத கதைப் பகுதிகள் தமிழில் வழங்குவனவும் உண்டு. முருகக் கடவுள் கண்ணபிரான் முதலியவரைப் பற்றிய சரிதப் பகுதிகள் சிலவற்றை ஆரியத்திலேனும் வேறு மொழிகளிலேனும் காண்டல் அரிது.† இவ்வாறே, தமிழ் வழக்கான இராமாயணச் செய்திகள் சிலவும் முன்னூல்களிலே ஆங்காங்குக் காணலாம். இராமசரிதம் பற்றிய அத்தமிழ் வழக்குக்களை நம்மவர் அறிய விரும்பி, அவற்றை இங்கே தொகுத்துக் கூற விரும்புகின்றேன்.

———

### 1. தமிழிலமைந்த இராமாயண நூல்கள்

இராமசரிதம் கூறும் நூல்கள் தமிழில் பண்டைக்காலத்தே இயற்றப்பட்டிருந்தன. "பாரதஞ் சீராமகதை"‡ என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் கூறுதலால், சீராமகதை எனவும் முன்னோர் இராமாயணத்தை வழங்கிவந்தனர் என்பது தெரியலாம். கம்ப நாடர்க்கு நெடுங்காலத்துக்கு முன்பே, பெருந்தேவனார் பாரதம் போலப் பெரும்பாலும் வெண்பாயாப்பில் அமைந்த இராமாயண நூலொன்று பெருவழக்குடையதாயிருந்ததாகும். இச்செய்தி, யாப்பருங்கல விருத்திகாரர் "பாதம் பலவிற் பஃறொடை வெண்பா" என்ற சூத்திரவுரையில், "பலவடியான்வந்த பஃறொடை வெண்பா, இராமா

---

* கலைமகள், சஞ்சிகை, 37, 38, 40 (1935)

†இவற்றைக் 'கண்ணபிரானைப் பற்றிய தென்னாட்டு வழக்குக்க'ள் என வரும் 3-ம் கட்டுரையுட் கண்டுகொள்க.

‡ திருவள்ளுவமாலை, 30

**யணமும்** புராணசாகரமும் முதலாய செய்யுட்களிற் **கண்டு** கொள்க" என்று எழுதுதலால் அறியப்படுகின்றது. வீரசோழிய உரையிற் கண்ட மேற்கோட்பாடல்கள் சிலவற்றை நோக்குமிடத்து அவை இராமாயண கதை பற்றியவை என்பது எளிதில் விளங்கும். அவை வருமாறு :—

" மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்காள்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி"

" ஐயிருப தோசனையு மாங்கோ ரிடனின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவந்து வேறுக மீட்டு"

(பொருட்படலம், 'வேந்தன் சிறப்பு' என்பதனுரை.)

இவை அப்பழைய இராமாயணச் செய்யுட்கள்போலும். புறத்திரட்டுட் கோக்கப்பட்டுள்ள **ஆசிரியமாலை** என்ற தொகைநூற் செய்யுட்களுள், இராம சரிதம் பற்றிய பாடல்கள் சில பயில்வன.* அவையும் பழைய தமிழிராமாயண நூலொன்றைச் சார்ந்தவை என்றே தோற்றுகின்றன. ஜைனதீர்த்தங்கரருடையவும் சிலாகா புருஷர்களுடையவுமான சரிதங்களைக்கூறும் ஸ்ரீபுராணம் என்ற மணிப்பிரவாள நூலில், விருத்தம் அகவற்பாக்களில் இராமசரிதம் அமைந்த பாடல்கள் சில உதாகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுட் சில பாடல்கள் வருமாறு :—

### சூர்ப்பணகையை நோக்கிய இராவணன் கூற்று

" அலைவட்டங் கிடந்த வல்குற் கதிபதி யாரும் பெற்றி
கலைவட்டங் கிடந்த வல்குற் காரிகைக் கறிவித் தாயேல்
முலைவட்டங் கிடந்த முத்த மாலைமென் முறுவ லாளென்
சிலைவட்டங் கிடந்த தோளைச் செறிதற்கை யுறவு முண்டோ"

### சீதையின் சோர்வு

" உருமிடிப் புண்ட வருமணி நாகமெனத்
திருமணி நிலத்திற் றேவி சோர்ந்து
செய்த பாவையின் மெய்திரி வின்றி
மையணி ஞயிர்த்து மடிந்துடன் கிடப்ப

*இக்கட்டுரையுள், '16. இராமாயணமும் புறத்துறைகளும்' என்ற தலைப்பின்கீழ் இப்பாட்லகளைக் காண்க.

# 2. இராமாயணமும் தமிழ்வழக்குக்களும்*

—:o:—

## முன்னுரை

சங்கச் செய்யுட்களிலும் பிற சான்றோர் பாடல்களிலும் வடமொழி இதிகாச புராணங்களிற் கண்ட சரிதைகள் பலவும் பயில்கின்றன. திருமால், சிவபிரான், முருகக் கடவுள் முதலிய தெய்வங்களின் சரிதங்களும், நளன் பாண்டவர் முதலிய அரசர் செய்திகளும் உவமைமூலமோ எடுத்துக்காட்டாகவோ அம்முன்னூல்களிற் கூறப்படுதலால், புராணேதிகாச வழக்குக்களைப் பழைய தமிழ் மக்கள் நன்கறிந்திருந்தவர் என்பது தெளிவாகின்றது. அவ்வாறுள்ள சரித்திரங்கள் வடநூல் வழக்குக்களுடன் பெரிதும் ஒத்தும் சிறுபான்மை வேறுபாடு கொண்டும் உள்ளன. அன்றியும் வடநூல்களில் இல்லாத கதைப் பகுதிகள் தமிழில் வழங்குவனவும் உண்டு. முருகக் கடவுள் கண்ணபிரான் முதலியவரைப் பற்றிய சரிதப் பகுதிகள் சிலவற்றை ஆரியத்திலேனும் வேறு மொழிகளிலேனும் காண்டல் அரிது.† இவ்வாறே, தமிழ் வழக்கான இராமாயணச் செய்திகள் சிலவும் முன்னூல்களிலே ஆங்காங்குக் காணலாம். இராமசரிதம் பற்றிய அத்தமிழ் வழக்குக்களை நம்மவர் அறிய விரும்பி, அவற்றை இங்கே தொகுத்துக் கூற விரும்புகின்றேன்.

---

### 1. தமிழிலமைந்த இராமாயண நூல்கள்

இராமசரிதம் கூறும் நூல்கள் தமிழில் பண்டைக்காலத்தே இயற்றப்பட்டிருந்தன. "பாரதஞ் சீராமகதை"‡ என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் கூறுதலால், சீராமகதை எனவும் முன்னோர் இராமாயணத்தை வழங்கிவந்தனர் என்பது தெரியலாம். கம்ப நாடர்க்கு நெடுங்காலத்துக்கு முன்பே, பெருந்தேவனார் பாரதம் போலப் பெரும்பாலும் வெண்பாயாப்பில் அமைந்த இராமாயண நூலொன்று பெருவழக்குடையதாயிருந்ததாகும். இச்செய்தி, யாப்பருங்கல விருத்திகாரர் "பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா" என்ற சூத்திரவுரையில், "பலவடியான்வந்த பஃறொடை வெண்பா, இராமா

---

* கலைமகள், சஞ்சிகை, 37, 38, 40 (1935)

† இவற்றைக் 'கண்ணபிரானைப் பற்றிய தென்னாட்டு வழக்குக்க'ள் என வரும் 3-ம் கட்டுரையுட் கண்டுகொள்க.

‡ திருவள்ளுவமாலை, 30

யணமும் புராணசாகரமும் முதலாய செய்யுட்களிற் கண்டு கொள்க" என்று எழுதுதலால் அறியப்படுகின்றது. வீரசோழிய உரையிற் கண்ட மேற்கோட்பாடல்கள் சிலவற்றை நோக்கு மிடத்து அவை இராமாயண கதை பற்றியவை என்பது எளிதில் விளங்கும். அவை வருமாறு :—

" மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்காள்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி"

" ஐயிருப தோசனையு மாங்கோ ரிடனின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவந்து வேறுக மீட்டு"

(பொருட்படலம், 'வேந்தன் சிறப்பு' என்பதனுரை.)

இவை அப்பழைய இராமாயணச் செய்யுட்கள்போலும். புறத் திரட்டுட் கோக்கப்பட்டுள்ள ஆசிரியமாலை என்ற தொகைநூற் செய்யுட்களுள், இராம சரிதம் பற்றிய பாடல்கள் சில பயில்வன.* அவையும் பழைய தமிழிராமாயண நூலொன்றைச் சார்ந்தவை என்றே தோற்றுகின்றன. ஜைனதீர்த்தங்கரருடையவும் சிலாகா புருஷர்களுடையவுமான சரிதங்களைக்கூறும் ஸ்ரீபுராணம் என்ற மணிப்பிரவாள நூலில், விருத்தம் அகவற்பாக்களில் இராமசரிதம் அமைந்த பாடல்கள் சில உதாகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுட் சில பாடல்கள் வருமாறு :—

### சூர்ப்பணகையை நோக்கிய இராவணன் கூற்று

" அலைவட்டங் கிடந்த வல்குற் கதிபதி யாரும் பெற்றி
கலைவட்டங் கிடந்த வல்குற் காரிகைக் கறிவித் தாயேல்
முலைவட்டங் கிடந்த முத்த மாலைமென் முறுவ லாளென்
சிலைவட்டங் கிடந்த தோளைச் செறிதற்கை யுறவு முண்டோ"

### சீதையின் சோர்வு

" உருமிடிப் புண்ட வருமணி நாகமெனத்
திருமணி நிலத்திற் றேவி சோர்ந்து
செய்த பாவையின் மெய்நிறி வின்றி
மையலி னுயிர்த்து மடிந்துடன் கிடப்ப

*இக்கட்டுரையுள், '16. இராமாயணமும் புறத்துறைகளும்' என்ற தலைப்பின்கீழ் இப்பாட்டுக்களைக் காண்க.

விம்முறு துயரித் தொம்மென வுயிரா
விளைந்த தெல்லா முளங்கொள வுணரா
எழுதுகண் ணருவிய னினைந்தினைந் திரங்கலின்
ஒழுகுபு கழிய முழுகிய மேனியள்
அழுதழு தலறி யாவோ வென்னும்
இணைபிரி யன்றிலி னேங்கி நீங்காத்
துணைவனை நினைந்து சோகமீ தூர்தர
வான்பழி சுமந்துநின் வனமலர்ச் சேவடி
யான்பிரிந் தேதல விடவயி னிடர்ப்பட
மான்பின் போகிய மன்னவ னேயெனும்
மாயோன் செய்த மாயா மானிடை
மாயவன் செய்த மகிழ்ச்சிகண் டருளி
ஆவதொன் றின்றி யதன்வழி யொழுகிய
நாயக னேயெனை நணுகாய் வந்தெனும்
கொற்றவன் துணையே குலவிளங் களிறே
செற்றலர்ச் செருக்குஞ் சினத்தீ யுருமே
மைத்துன மலையே மன்னவ னேயெனும்
நாற்கடற் பரந்தன வேற்படைத் தானையொடு
கூற்றுறழ் மொய்ம்பிற் கொடுஞ்சிலைத் தடக்கைத்
தம்பித் துணைவனிற் றனிப்படப் பிரிந்திட்
டெம்பெரு மகனை யென்வயி னிறுவி
மாற்றவன் செய்த மாயா மானினை
தோற்றி லாதே னூக்கிய நோக்கின்
அருவினை யேனை யருளிய மனத்தால்
மருவிய மாய வுருவுதரற் செழுந்த
வரிசிலைக் குரிசிலை மன்னர்பெரு மானை
மான்மறி தொடர்ந்துசெல் வாளரி போலக்
கானெறி விடுத்துக் கடுவனம் புகுத்து
மாயப் புணர்ப்பின் மன்னனை நினைந்து
ஆயமுந் தாயருந் தோழியு மின்றியோர்
நொதும லாளன் விதிவழி யொழுகி
இடனிடை யிட்ட சேய்மைத் தன்றியும்
கடலிடை யிட்ட காப்பிற் றாகிய
இலங்கை மூதூ ரிடுசிறைப் பட்டு
மலங்கு விழிமான் வழிதேர்ந் தருளிய
மன்னவற் குற்றது மின்னதென் றறியாது
இன்னற் படவெனை யின்னண மிழைத்த
வினையே வலிதே வினிதரல் புரிவாய்
மனுவே யனையனை வார ணாசியில்
தனியொரு மான்பினை தன்னின் விடுத்தே
எனையுந் தனியே யிவணிட் டதுவே" .

"கழல்விழித் தருகட் பேழ்வாய்ச் சுடர்க்கைவேற்
றி(ர)ண்ட தோனாய்
புழைவிழி யாற்சொற் கொண்டா ருறுவர்வெந்
துயர மென்னும்
பழமொழி யதனை யோர்ந்தும் பாவியேன் சொல்லைக் கேளா
உழையின்பின் போன வேந்தே யுனக்குற்ற தறிகி லேனே"

"கோம்பி கண்டு குலுங்குபு கலங்காச்
சாம்பிய மஞ்ஞையிற் சாய்ந்தனன் கிடப்ப"

இவை, ஜைனராமாயண சரித்திரம்பற்றி முன்னோர் பாடிய பழைய காவியத்தைச் சார்ந்தனவாகத் தோற்றுகின்றன. இஃதன்றி, சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள **பலதிரட்டு** என்ற சுவடியிற் கண்ட செய்யுட்களிலே- **இராமாயண வெண்பா** என்ற தலைக்குறிப்பின்கீழ்:—

"சனகன்மொழி கேட்டுத் தவமுனிவன் சொன்னன்
தினகரனார் தெய்வக் குலத்தோன்—மனமகிழ
வந்தசிறுச் சேவகனை மன்னு வறியீரோ
இந்தவகை யென்னினைந்தீ ரென்று"

"தயரதனும் புத்திரருந் தாமரையோன் பெற்ற
நயமுனியுந் தானையுட னண்ணச்—சயமுடைய
கோதமன்றன் புத்திரனைக் கொண்டு மிதிலேசன்
ஏதமிலான் வந்தா னெதிர்"

"வசிட்டனுங் கோசிகனு மன்னவருங் கூடி
விசித்திரமா மங்கலச்சொல் விண்டு—சசிக்குநிகர்
மாமுகத்துச் சீதைக்கும் வாழு முருமிளைக்கும்
மாமுகூர்த்த மிட்டார் மகிழ்ந்து"

"சூரியனார் வம்சத் துதித்த தயரதனை
மாரியனை யிங்கே யழையுமெனென்றான்—மூரி
வளைக்குலங்கள் முன்றிறெறு மாமுத்த மீன்று
இளைக்கு மிதிலையர்கோன் நேர்ந்து"

என்ற செய்யுட்கள் காணப்படுகின்றன. இவையும் வேறோர் இராமாயண நூலைச் சேர்ந்தவையாகும். ஆயின், இது பிற்காலத்து நூலாக வேண்டுமென்பது இதன்வாக்கால் தெரிகின்றது. இந் நூல்களில் ஒன்றுமே இப்போது அகப்படவில்லை.

## 2. இராமாவதாரம்

மேற்கூறியபடி, தனக்கு முன்றோன்றிய இராமாயணங்களெல்லாம் "அகல்வானிற் கங்கை யெனும் அணங்கிழியப் பொலிவிழந்த ஆறொத்தன" என்னும்படி அவதரித்தது, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் அருளிய இராமசரிதம். இப்பெருநூல் தோன்றிய பின் அவை பொலிவிழந்ததோடு வழக்கும் வீழ்ந்தன. கம்பர் தம் பெருங்காப்பியத்துக்கு யாவரும் வழங்கவேண்டும் என்று இட்ட திருப்பெயர் **இராமாவதாரம்** என்பதாம். இதற்கு, திருமாலின் தசாவதாரங்களிலே இராமாவதாரத்தில் நிகழ்ந்த சரிதங்களைக் கூறும் நூல் என்பது பொருள். இதனை—

> "நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
> இடைநிகழ்ந்த இராமவதாரப்பேர்...மாக்கதை"

என்று, கம்பரே பாயிரமுறைப்படி தம் நூற்குப் பெயரிட்டு ஆளுதலால் அறியலாம். 'புறத்திரட்டு' என்ற நூல்தொகுத்த புலவரும் இராமாவதாரம் என்ற தலைக்குறிப்பிட்டு அந்நூற்பாடல்களை எடுத்தாளுவர். அத்தியாத்தும ராமாயணத்தில் "**இராமாவதார சரித்திரம்** யாவையும் எனக்கு அப்பொழுதே சொல்லியிருக்கிறார்" என்ற வாக்கியம் காணப்படுதலும் (v. i.), காசுமீரதேசத்தில் அத்தேச பாஷையில் இயற்றப்பட்டுள்ள இராமாயணத்துக்கு 'இராமவதார சரிதம்' என்பது பெயராக வழங்குதலும் இங்கு ஒப்பிடத்தக்கன. இவற்றால் இராமாவதாரம் என்ற பெயர்வழக்கு, இராமாயணத்துக்கு முன்னோர் வழங்கிய தொன்றென்பதும் அதனையே கம்பரும் தம் நூற்பெயராக இட்டு வழங்கலாயினர் என்பதும் விளங்குவனவாம்.

இவ்விராமாவதாரத்தில், கம்பநாடர், முக்கியமாக வான்மீகத்தையே தமக்கு முதனூலாகக் கொண்டவரேனும், வடமொழியினும் தமிழினுமமைந்த மற்ற இராமாயணங்களையும் ஆராய்ந்து தழுவிக் கதையமைத்துக் கொண்டவரேயாவர். வான்மீகத்துடன் கம்ப ராமாயணம் பலவிடங்களிற் கதை வேறுபாடு கொண்டுள்ளது என்பது பலருமறிந்ததே. முன்னூல்களை ஆதாரமாகக் கொண்டே கம்பர் கதைக் கூறுகளை அவ்வாறு வேறுபடுத்திக் கொண்டவரே யன்றித் தாமே அவற்றைக் கற்பித்துக்கொண்டவரல்லர். அத்தியாத்தும ராமாயண முதலிய வடநூல்களிலே அவ் வேறுபாடுகள் சிலவற்றைக் காணலாகும். அவ்வாறே அவர்க்கு முன் வழங்கிய தமிழிராமாயணங்களும் அம்மாறுபாடுகள் உடையனவாதல் வேண்டும். ஆனால் அந்நூல்கள் நமக்குக் கிடையாமை

யால் அவற்றிலமைந்த சரித்திரவேற்றுமைகளை நாம் அறிய இடமில்லை. எனினும், ஆங்காங்கு உதாகரிக்கப்பட்டுள்ள இராமசரிதங்கூறும் பழம் பாடல்களை நோக்குமிடத்து, கம்பர்க்கு ஆதாரமாயிருந்தவற்றுள் தமிழ்முன்னூல்களுஞ் சார்ந்தவை என்பது தெரியலாம். இதற்குச் சில பிரமாணங்கள் கூறுவேன்.

---

## 3. சீதை மதியுடம்பாடு

மிதிலாபுரியில் கன்னிமாடத்திலே "சதகோடி மின்சேவிக்க மின்னரசு என்னும்படி"யும் "கல்லும் புல்லுங் கண்டுருக"வும் பெண்கனியான சீதாபிராட்டி நின்றபோது, முனிவருடன் அந்நகரிற் பிரவேசித்த இராமபிரான் அப்பிராட்டியைத் தற்செயலாக ஆங்குக் காண அவளும் அப்பிரானைக் கண்டு இருவரும் நோக்கெதிர் நோக்கி உள்ளங்கலந்து ஒருயிராயின நிலையை—

"எண்ணரு நலத்தினா ளிணைய நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்"

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்த முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார்"

"அந்தமி லழகனை யணைகி லாமையால்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினான்"

"பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே"

எனக் கம்பநாடர் மிகவழகாகப் பாடுதலை அறிஞர் பலரும் நன்கறிவர். இக் கதாசந்தர்ப்பம் வான்மீக முனிவர் கூறாத தொன்றாம். வில்முறிவு நிகழ்ந்தபின்பே, இராமபிரான் சீதையைக் கண்டனர் என்றார் அம் முனிவர். இவ்வாறு கம்பநாடர், காப்பியத் தலைமக்களின் உள்ளக் கலப்பைத் தமிழர் சுவைக்கேற்ப வைத்து

நயம்பெறப் பாடியது, அவரது சொந்தக் கற்பனையாகவே பலருங் கருதல்கூடும். ஆனால், இக்கருத்து கம்பர்க்கும் முற்பட்ட தமிழ் நூலில் அமைந்து கிடப்பதொன்று என்பது இங்கு அறியத் தக்கது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில்:—

"ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய விராம னவனொடு
மிதிலை மூதூ ரெய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கட் சீதை
கடுவிசை வின்ஞா ணிடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந்து மயங்கின ளதான்று"

(தொல். பொருள். 54-உரை.)

என்ற பழைய செய்யுட்பகுதியை—சுட்டியொருவர் பெயர் கொண்ட கைக்கிளைக்கு—நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டு கின்றனர். இதனுள், "இராமன் மிதிலைமூதூ ரெய்திய ஞான்றே மதியுடம்பட்ட...சீதை" என்பதனால், அப்பிரான் முனிவருடன் மிதிலையிற் பிரவேசித்தபோதே, உள்ளப்புணர்ச்சியாகிய மதி யுடம்பாடு அவர்க்கும் பிராட்டிக்கும் நிகழ்ந்தது என்று கூறப் பட்டிருத்தல் அறியலாகும். இப்பாட்டுப் பழைய இராமாயணத் தைச் சார்ந்ததோ அன்றி வேறு நூற்கு உரியதோ தெரியவில்லை. எவ்வாறாயினும், கம்பர்க்கு முற்பட்ட பழைய நூற்பகுதியே இஃது என்பது, தொல்காப்பிய சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டியதினின்று தெரிகின்றது. இதனால், கம்பநாடர் சீதாராமரின் மதியுடம்பாட்டைத் தாமே கற்பித்துக் கூறினவ ரல்லர் என்பதும், முன்னோர் அகத்துறை நயம்பெறக் கூறிய தனையே தம் பெருங்கவித்திறம் விளங்கப் பாடியவர் என்பதும் தெளிவாதல் காண்க. இது மட்டுமன்று; பெருமானும் பிராட்டியும் நோக்கெதிர் நோக்கி உள்ளங்கலந்து ஒருவர்க்கொருவர் விழைவு மிகுத்தனர் என்று அவர் கூறிய செய்யுட்கருத்தும் அவர்க்கு முன்னூலினின்றே தோற்றிய தொன்றாகும். கலித்தொகையுள் —

"எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு

* * * *

என்னெஞ்ச மென்னோடு நில்லாமை நனிவெளவித்
தன்னலங் கரந்தாளை" (138)

எனத் தலைவியைக் கண்டதனால் தலைவன் நிறையழிந்த நிலைக்கு, தோட்டியைக் கைநிமிர்த்துச் சென்ற மதவேழத்தின் தன்மை உவமிக்கப்பட்டிருத்தல் காணலாம். இக்கருத்தேபெறப் பெருங்கதையில் கொங்குவேளிர் என்ற புலவர் பெருமானும்,

"கதிர்முடி வேந்தன் கண்ணிய நுண்பொருட்
கெதிர்மொழி கொடீஇய வெடுத்த சென்னியன்
மன்னவன் முகத்தே மாதரு நோக்கி
உள்ளமு நிலையுந் தள்ளிடக் கலங்கி

* * * *

துடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து
மதக்களி திரண்டுடன் மண்டி யாஅங்கு
இல்வழி வந்ததம் பெருமை பீடுறத்
தொல்வழி வயத்துத் தொடர்வினை தொடர
வழுவில் போகமொடு வரம்பின்று நுகரும்
உழுவ லன்பி னுள்ளந் தாக்கி

* * * *

அமைப்பருங் காதலு மிமைப்பினு ளடக்கி
ஒருவயிற் போல வுள்ளழி நோக்கமொ
டிருவயி னொத்தஃ திறந்த பின்னர்" (1, 32, 30—49.)

என்று பாடுகின்றார். உதயணன், நளகிரி என்ற மதயானையை அடக்கி நடத்திக்கொண்டு பிரச்சோதனன் முன்னிலையில் வந்து நிற்க, அதுபற்றி அவ்வரசன் அவனை உசாவுகின்றபோது அரசன் பின்னின்ற வாசவதத்தை அவன் கண்ணெதிர்ப்பட, உதயணனும் அவளும் ஒருவரையொருவர் கண்டு உள்ளங்கலந்த நிலை இவ்வடிகளில் அழகாகக் கூறப்பட்டுள்ளமை காணலாம். ஆனால் தலைவன் தலைவி இருவர் மனங்களையும் மத்தயானைகளாகக் கொண்டு அவர்கள் தம் வசமிழந்தனரென்று அவ்வேளிர் கூறுகின்றார். இவ்வாறு தலைவன் மனத்தை செய்தற்கலியும், தலைவன் தலைவியரிருவர் மனங்களையும் பெருங்கதையும் தோட்டியை நிமிர்த்துச் சென்ற மதவேழங்களாகக் கூறிய கருத்தினையே கம்பர் தம் காப்பியத்தலைவியான பிராட்டியின் கைக்கிளை கூறுமிடத்து,

"பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசர
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே"

என்று தழுவிப்பாடுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கது. ஆண்மக்கட்கும் நிறை வேண்டுவதொன்றாயினும் அது மகளிர்க்குப்போல அத்

துணைச் சிறப்புடைய தாகாமையாலும், பலதாரமணம் புரிதற்குரிய அரசர் குலத்து அவதரித்த இளைஞரான இராமபிரானது மனநிலை ஏகதாரவிரதத்தில் நிலைநின்றது என்று கவி கதைத்தொடக்கத்தே வரையறுத்தற்கு ஏலாமையாலும், தம் தந்தையைப் போலவே அப்பிரானும் மணந்து வாழ்தற்குத் தகுதியுடையராதலாலும் கம்பர் காப்பியத் தலைவனது விரகத்தை முதலில் வருணிக்க ஒருப்படாது, நிறையினின்று வழுவாதொழுகற்குரிய தலைவியின் ஒருதலைக்காம நிலையினையே விசேடமாகக் கூறலாயினர் என்றும், அவளது காதல் கைம்மிக்க மனத்தை மத்தயானையாகக்கொண்டு அதனைத் தன் நிறையங்குசத்தால் அவள் அடக்க முயன்றதனையே பெரிதுஞ் சிறப்பிக்கலாயினர் என்றுங் கொள்க. கற்பிற்கரசியான பிராட்டி, இன்னனியையான் என்று அறியப்படாமல் முனிவருடன் தெருவிற்சென்ற புருடனொருவனைக் கண்டு காமுற்று உள்ளந்தன் வசமிழந்தாள் எனின், அது மானுட நெறிக்கு எங்ஙனம் அடுக்கும் என்னும் ஆசங்கையைப் பரிகரித்தற்கே, மேற்கூறிய "பிறையெனு நுதலவள்" என்ற பாட்டை அப்புலவர் பெருமான் பாடுகின்றார் என்பது தெரியலாம். பிராட்டி, நற்குண நற்செய்கைகள் மிக்க ஒப்புயர்வற்ற பெண்மணியே யாயினும் தெய்வம் இடைநின்று கூட்டுதலால் அவளுள்ளம் முன்னறிந்திராத இராமன்பாற் கலந்த தென்றும், அந்நிலைமையிலும் தன்னியற்கைக் குணமான நிறை யென்னும் அங்குசத்தையிட்டு மனமாகிய மத்தயானையை அடக்கி யொடுக்கத் தன்னலான அரும்பாடுபட்டனள் என்றும், அந் நிறையங்குசத்தைக் கைவிடுதலின்றியே அவள் கொண்ட அப் பெருமுயற்சியைச் சிறிதும் பொருட்படுத்தாமல், கைக்கொண்ட நிறை சிதையதேயாக, அந்நிறைத்தோட்டியின் பிடிப்பு விலகும்படி அதன் கொக்கியை நிமிரச்செய்துவிட்டு, அவள் மனமாகிய மத்த யானை இராமன்பால் ஓடிவிட்டதென்றும், ஒரு பெண்மணிக்கு இதனிலும் தற்காக்கச் செய்து கொள்ளக்கூடியமுறை வேறில்லை யாதலின் பிராட்டியின் நிறையில் யாதொரு குற்றமும் நிகழ்ந்தில தென்றும், கவி அருமையும் பெருமையும் பெறப் பாடுதல் பல முறையும் சிந்தித்து மகிழத்தக்கது. இவ்வாறு கவித்தொகை பெருங்கதைகளினின்று தோற்றிய கருத்தொன்றினை நயம்படப் பெருக்கிக் கதா சந்தர்ப்பத்துக் கேற்ப அதனை அழகுபெற அமைத்துக்கொண்ட கம்பரது அருங்கவித்திறம் பாராட்டற்பால தன்றோ? கவித்தொகையினும் பெருங்கதைக் கருத்தே அவரால் இங்குப் பெரிதும் தழுவப்பட்டமை அறியலாம். அந்நூலிலுள்ள சொற்றொடர்களையும் பொருள்களையும் இவ்வாறே எடுத்துக் கொண்டு தமக்கேற்ற முறையில் கம்பர் அமைத்துப்பாடுதலை

வேறிடங்களினும் நாம் காணலாகும். "பரந்துமீ னரும்பிய பசலை வானகம்" (தைலமாட்டு. 6) எனக் கம்பர் பாடிய தொடர்—

" வரம்பில் பன்மீன் வயின்வயின் விலங்கிப்
பரந்துமீ தரும்பிய பசலை வானத்து" (1, 33, 49-50.)

என்ற பெருங்கதையடிகளுடன் ஒத்திருத்தல் கண்டுகொள்க. இவ்வடிகளுள் 'பரந்துமீதரும்பிய' என்பதனைப் 'பரந்து மீனரும்பிய' என ஓரெழுத்தை மாற்றி, 'பன்மீன் வயின்வயின் விலங்கி' எனவரும் முன்னடிப் பொருளும் அடங்கக் கம்பர் அமைத்துக் கொண்ட திறம் அறியத்தக்கது. இன்னும்—

" உள்வழி யுணரா துழலுமென் னெஞ்சினைப்
பல்லிதழ்க் கோதைப் பதுமா பதியெனும்
மெல்லியற் கோமகள் மெல்லெனவ வாங்கித்
தன்பால் வைத்துத் தானுந் தன்னுடைத்
திண்பா னெஞ்சினைந் திரிதலொன் றின்றி
என்னுழை நிறீஇ" (பெருங்கதை. 3, 8, 92-7.)

என்ற பெருங்கதைத் தொடரின் பொருளை—"வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையு, மிருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்" என்று கம்பர் அமைத்திருத்தல் காண்க. இவ்வாறே முன்னூல்களி னின்று காட்டக்கூடிய ஒப்புமைப் பகுதிகள் பல. இவற்றால் வான்மீகத்தினும் வேறுபட்ட கதைக்கூறுகளைக் கம்பர் பழைய தமிழ் நூல்களினின்றும் தழுவி அமைத்துக்கொண்டவரென்பதும் முன்னூற் கருத்துக்களைத் தமக்கேற்ற முறையில் வளம்படப் பெருக்கி நயம்பெறக்கூற வல்லவரென்பதும் நன்கு விளங்கக் கூடியன.

---

## 4. அகல்யா சாபம்

கௌதம முனிவரால், அவர் மனைவி அகலியை இந்திரனுடன் கூடிய தீச்செய்கையின் பொருட்டு, அவ்விருவருமே சபிக்கப்பட்ட சரித்திரம் பிரசித்தமானது.

" ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"

என்றார் திருவள்ளுவனாரும். அகலியையுடன் கலந்தபின், ஆங்குக் கௌதமமுனிவர் வருதலையறிந்து, "புரந்தரன் நடுங்கி ஆங்கோர் பூசையாய்ப் போகலுற்றான்" என்றார் கம்பநாடர். இந்திரனை

அவனது இயற்கையுருவத்துடன் அம்முனிவர் கண்டனர் என்று வால்மீகி கூறுவர். அன்றியும்,

" எல்லையி னிணை மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி ளெடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளணைய நீயும்
கல்லிய லாதி யென்றுன் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்"

" பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே யென்பர்
அழற்றருங் கடவு ளன்னுய் முடிவிதற் கருளு கென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிர்தி யென்றுன்"

என்று கல்லுருவாக அகலிகை சபிக்கப்பெற்ற நிலையைக் கம்பர் கூறுகின்றார். வான்மீகரோ, "அநேக ஆண்டுகள்வரை உணவின்றிக் காற்றையுண்டு சாம்பரில் விழுந்து தவித்துக்கொண்டு வசிப்பாயாக. எல்லாப் பிராணிகட்கும் கண்ணுக்குப் புலப்படாமலே இவ்வாச்சிரமத்தில் வாழ்வாயாக. அருந்திறல் படைத்த இராமன் இக்கொடிய வனத்துக்கு எப்போது வருவரோ அப்போதுதான் நீ புனிதமாவாய்" என்று கூறுகின்றார். இவ்வாறு முதனூலோடு மாறுபடக் கம்பர் பாடியதும் பழைய தமிழ்வழக்குப் பற்றியேயாகும். எட்டுத்தொகையுள் ஒன்றுவ பரிபாடலுள், திருப்பரங்குன்றத்துக் கோயிலில் அமைந்த சித்திர மண்டபத்தே, அகல்யா சாபம் பற்றிய சித்திரமும் எழுதப்பட்டிருந்த தென்றும், அவ்வாலயத்துத் தொழ வருவோர் அதனைக் கண்டு,

" இந்திரன் பூசை; இவள் அகலிகை; இவள்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது'—என்றுரை செய்வோரும்" (19, 50-2.)

என அச்சித்திரமமைந்த திறத்தை வியந்து கூறியதாகவும் பாடப்பட்டுள்ளது. இதனல், சங்ககாலத்தில் வழங்கிய அகலியையின் சாப வரலாறு இத்தகையதென்பது சுருக்கமாக விளங்கும். இதுவே பழைய தமிழிராமாயணங் கூறிய கதையாகு மென்றும், அதனைத் தழுவியே கம்பருங் கூறலாயினர் என்றும் நாம் கருதத் தடையில்லை. இந்திரன் பூனையுருக்கொண்டதும் அகலியை கல்லுருவானதும் பாத்ம புராணம், கதாசரித்ஸாகரம், துளஸீதாஸர் ராமாயணம் முதலியவற்றிலும் கூறப்படுவனவாம். இதனல் இவ்வரலாறு முற்காலத்தும் பிற்காலத்தும், தமிழகத்தும் பிறவிடங்களினும் பெருகவழங்கியதே யென்பது பெறப்படும்.

இக்கதை பற்றி வான்மீகத்துக்கு உரையிட்ட **திலகர்** கூறுவது வருமாறு:— "முன்சொல்லாத விஷயங்களைப் பின்னரேனும், பின் சொல்லாத விஷயங்களை முன்னரேனும் நிச்சயமாய் விளக்குவது வான்மீகமுனிவர் வழக்கம். ஆதலால் அவர் சொல்லாத தொன்றை உண்டென்பது அநுசிதம். புராண இதிகாசங்கள் எதுவும் வான்மீகத்துக்குப் பிற்பட்டதே யாதலால், அம்முத நூலுக்கு ஒவ்வாதபோது அது தள்ளத் தக்கதே. இக்கதை வான்மீகத்துக்குள் எங்குங் காணுமையால் 'கல்லாகுக' என்று சபித்தா ரென்ற புராணந்தரகதை விருத்தமேயாம். ஆதலால் கல்பாந்தர விஷயம் என்று நயப்படுத்திச் சொன்ன கோவிந்த ராஜர் முதலியோர் வியாக்கியானங்கள் சிந்திக்கத்தக்கன" என்பதாம். இதனுல் வட நூலாசிரியருள் ஒருசாரார்க்கு மேற்கூறிய தமிழ் வழக்கு ஒவ்வா திருந்தமை தெரியலாம்.

---

## 5. பிராட்டி கழற்றியிட்ட அணிகளும் குரக்கினமும்

இராவணன் சீதாதேவியைப் பற்றிக்கொண்டு தேரோடுபோம் போது, ரிசியமுகபர்வதத்தருகில் பிராட்டி தன் ஆபரணங்களைக் கழற்றி யெறிய, அவற்றை அங்கிருந்த வானரவீரர்கள் கண்டு பொறுக்கிச் சேமித்து வைத்திருந்த செய்தியைக் கம்பநாடர்—

"உழையரி னுணர்த்துவ துளதென் றுன்னியோ
குழைபொரு கண்ணினுள் குறித்த தோர்கிலம்
மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டனள் யாங்க ளேற்றனம்.

"வைத்தன மிவ்வழி வள்ளல் நின்வயின்
உய்த்தன தந்தபோ துணர்தி யாலெனக்
கைத்தலத் தன்னவை கொணர்ந்து காட்டினன்
நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயத்தான்."

என்று பாடுவர். இச்செய்தியைப் பெரிதும் ஒத்தே வான்மீகியுங் கூறுகின்றூர். இனி, பிராட்டி, கழற்றியிட்ட அவ்வணிகளைப் பற்றிய அரிய தமிழ்ச்செய்தியொன்று முற்காலத்தே வழக்கிலிருந்த தென்பது புறநானூற்றுல் அறியப்படுகின்றது. வறியரான புலவரொருவர் தம் குடும்பத்துடன் சென்று வள்ளலான சோழனெருவனைக் கண்டு அவனுற் பெரிதும் உபசரிக்கப்பட்டு அணிகல முதலிய பரிசுகள் அளிக்கப் பெற்றபோது, அவனுதவிய ஆபரணங்களை

முறை தெரியாமல் அவ் எளியபுலவரின் குடும்பத்தோர் தம்முறுப் புக்களில் மாறியணிய, அதுபற்றி அரசவையில் விளைந்த பெரு நகையை அப்புலவரே—

"எஞ்சா மரபின் வஞ்சி பாட,
எமக்கெனை வகுத்த வல்ல : மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே ; அதுகண்டு
இலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தே றிராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ அருநகை யினிதுபெற் றிகுமே" (புறநா. 378)

என்று கூறுகின்றார். இப்பாட்டில், பிராட்டி இடைவழியில் போகட்ட அணிகளை வானரர்கள் கண்டெடுத்து அவற்றை அணிமுறை யறியாமல் விரலணிகளைச் செவியிலும், செவியணி களை விரலிலும், அரையணிகளைக் கழுத்திலும், கழுத்தணிகளை அரையிலுமாக மாறியணிந்தனர் என்ற இராமாயணச் செய்தியை உவமைப்படுத்தியிருப்பது காணலாம். இவ்வரியசெய்தி வேறெங் குங் காணப்படாததாகும். "என்னுடன் ஐந்து பேர்கள் பர்வதத் தின் தாள்வரையில் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து, அவள் (சீதை) மேலாடையையும் அழகிய ஆபரணங்களையும் கீழே போட்டாள். இராகவ! அவற்றை நாங்கள் எடுத்துக் கொண்டு போய்ப் பாதுகாத்து வைத்திருக்கிறோம்" என்று சுக்கிரீவன் இராமபிரானிடம் சொல்லியதாக வான்மீகிமுனிவர் கூறுவர். இதனால், குரங்குக் கூட்டங்கள் இவ்வணிகளைக் கண்டெடுத்தன என்பதும், அவற்றைப் பிறர் பரிகசிக்கும்படி மாறியணிந்து கொண் டன என்பதும் தமிழ்நாட்டில் வழங்கிய பழைய சரித்திர வழக் காகவே தெரிகின்றன.

---

## 6. ஆலின்கீழ் இராமபிரான் புரிந்த மந்திராலோசனை

மேற்கூறிய வானரர்செய்திபோலவே, வான்மீகி ராமாயணத்தில் வழங்காத மற்றொரு வரலாறு சங்கச் செய்யுளிற் பயில்வதாம். அஃதாவது :—தனுஷ்கோடிக் கடற்கரையில் ஆலமரமொன்றன்கீழ் இராமபிரான் தங்கி, மேல்நடத்தற்குரிய யுத்தகாரியங்களைப்பற்றி வானரவீரர்களுடன் ஆலோசனை புரிந்தனரென்றும், அப்போது அவ்வாலில் வாழ்ந்த பறவைகளின் கலப்போசை அதிகமாகி, ஒருவர் சொல்வது மற்றவர்க்குக் கேட்காதபடி இடையூறு விளைத்தனவாக, பெருமான் அவற்றைத் தம் திருக்கையாலமர்த்தி அவ்வொலி முழுதும் அடங்கும்படி செய்தனரென்றும் கடுவன்மள்ளனார் என்ற பழம்புலவர் உவமைமுகத்தாற் கூறுவதேயாகும். இதனை—

" வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராமன் அருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே." (70)

என்று அகநானூற்றடியால் அறிக. இக்கதை இராமாயண நூல்களில் காணப்படாத தொன்றாகும். ஆயினும், சேதுபுராணத்தில் இம் மந்திராலோசனைச் செய்தி அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது. அஃதாவது:—இராமன் கடற்கரையில் முற்கூறியவாறு வானரவீரர்களுடன் ஆலோசனை புரியும்போது சமுத்திரகோஷம் அதற்குப் பெருந்தடையாயிருந்தமையால் முனிவுற்று அதனை அடங்கச் செய்தனர் என்பதாம். இவ்வரலாற்றைச் சேதுபுராணம் அமுததீர்த்தச் சருக்கத்தில் நிரம்பவழகியதேசிகர்—

" சானகி தன்னை யுன்னித் தசமுகத் தரக்கற் கோறற்
கானகா ரியங்கள் செய்வா னவனிருந் தாயும் வேலை
மீனமார் தரங்க வேலை மிக்கெழு குரைப்பி னுள்ளே
தானடங் குற்றுத் தம்மிற் சாற்றிய மாற்றங் கேளார்.

" ஆயின ரவையி னுள்ளோ ரஃதுணர்ந் தடலி ராமன்
ஏயெனச் சீறி வல்லே யிருபிரு குடிமு ரிப்பால்
ஓயெனக் குறிப்பி னார்க்கு முதநிலை நிறுத்தா னந்நாள்
மேயதே காந்த ராம விழுப்பெய ரப்ப நிக்கே."

என்று பாடுதலால் உணர்க. இராமேச்சுரத்தீவில் தனியேகோயில் கொண்டுள்ள ஏகாந்தராமமூர்த்தி சம்பந்தமாக இந்த ஐதிகம் கூறப்படுவதுபோலவே, நவபாஷாணம் என்ற தேவிபட்டணத்தி

லும் இவ்வழக்கு உள்ளது. அவ்வூரிலுள்ள சமுத்திரம், கரைக்குச் சிறிது தூரம்வரை அலையொலியில்லாமல் அடங்கியிருப்பதற்கு இராமபிரானிட்ட திருவாணையே காரணமாகக் கூறப்படுகின்றது. அவர் தனுஷ்கோடிக்கரையில் ஆலமரத்தின் ஒலியடங்கச்செய்த தற்கும் சமுத்திர வொலியை அடக்கினதற்கும் ஒருபுடை ஒற்றுமை இருத்தலை இச்செய்திகளினின்று நாம் தெரியலாம். இதனால் மந்திராலோசனைக்குத் தடையாயிருந்ததொன்று இராமபிரானால் ஒலி யடங்கச் செய்யப்பட்டது என்ற வரலாறு தமிழ்நாட்டில் முற்காலத்தும் பிற்காலத்தும் பெருவழக்குப் பெற்றிருந்த தென்பது பெறப்படும்.

---

## 7. "குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை"

சங்கப்புலவராகிய சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையிற்கூறியது இத்தொடர். 'குரங்குகளாற் பணிசெய்யப்பட்ட கடலையுடைய அழகிய கன்னியாகுமரித் தீர்த்தத்துறை' என்பது இதன் பொருளாம். இவ்வாறு வானரசம்பந்தம் பெறக் குமரித்துறையை அப்புலவர் விசேடிப்பதால், அத்துறையைச் சேதுசம்பந்தமுடையதாக முன்னோர் வழங்கிவந்தனர் என்பது தெரியலாகும். சேதுபதிகள் ஆட்சிக்குரிய சீமையில் தர்ப்பசயனம் என்ற திருப்புல்லாணியினின்று தொடங்கும் இராமசேதுவைக் கன்னியாகுமரிக்குரியதாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்ற சங்கை இங்கு எழுதல் இயல்பே. இதற்குக் கன்னியாகுமரித் தலபுராணம் முதலியன தக்க விடைதருவனவாம். இராமபிரான், பிராட்டியின் மீட்சியையும் இராவணவதத்தையும் கருதித் தென்சமுத்திரமுனைக்கு வந்து ஆங்குவாழும் துர்க்காதேவியை வணங்கி, கடலில் சேதுபந்தனஞ்செய்து அதன் வழியே தம்பெருஞ் சேனை செல்லவும், சேதுமூலமான குமரியிலும் கிழக்கே தேவிபட்டணத்திலும் இருந்து அத் திருவணையைப் பாதுகாக்கவும் வேண்டி, அவ்வாறே தேவியின் வரம் பெற்றனர் என்று அக்குமரித்தலபுராணத்துச் சேதுமூல வரலாற்றுச் சருக்கம் கூறுகின்றது. அப்புராணம் பாடிய சங்கரநாவலர் என்ற புலவர் அதுபற்றிக் கூறும் செய்யுட்கள் வருமாறு:—

"அடலுடை யிராம னென்பா னுறிரு மிலங்கைக் கேகக்
கடலுடைச் சேது வொன்று க்ட்டிடக் கருத்தி லுன்னி
மடலவிழ் மாலைச் செங்கை மாதவக் கன்னி வாழும்
திடலுறு குமரியென்னுந் தென்கடற் கரைக்கண் வந்தான்

*    *    *    *

" கருதிடுஞ் சேது வொன்று கட்டவும் கட்டுஞ் சேது
வருமிடை யூறென் றின்றி வழிக்கொண்டு செலவு மற்றப்
பொருவலி யிராவ ணாதி யரக்கரைப் பொருது கொல்வான்
பெருவலி பெறவுந் தந்தே னென்றவன் பின்னுஞ் சொல்வான்.

" சேதுவின் கீழ்பா லாய தேவிபட் டணத்துக் கிப்பால்
ஒதிய மேல்பாற் சேது மூலமா யுள்ள தாய
ஆதியாங் குமரி யென்னு மத்தலத் திருந்தி யானும்
பேதியா ததனைக் காத்தல் செய்குவன் பேணிப் பேணி.

*    *    *    *

" அவ்வரங் கொள்ளப் பெற்ற வடல்வலி யிராம னுனும்
செவ்விதிற் பூசித் துள்ள தேவிவாழ் குமரி தன்னைத்
திவ்விய சேதுமூல மென்பது செய்யப்பெற்ற
தெவ்வமி லத்தலத்தின் பெருமையா ரியம்ப வல்லார்.

" ஆங்குள விராமசேதுக் காதியாஞ் சேதுமூலம் ஈங்கிது "

இவற்றால் குமரித்துறையை இராமசேது தொடங்குமிடமாக முன்னோர் வழங்கியது உண்டென்பது தெரியலாம். இன்று கன்யாகுமரித்துறையில் நீராடுவோர் ஸங்கல்பக்கட்டுரைகளிலே "ஆதிஸேதோ: கன்யாகுமரிக்ஷேத்ரே மாதுர்பிதுர்தீர்த்தே" என்று கூறுதலையும் கன்யாகுமரி ஆதிஸேதுவாகவும் தனுஷ்கோடி மத்யஸேதுவாகவும் சோணாட்டுக் கோடிக்கரை அந்த்யஸேதுவாகவும் கருதப்படுவதையும் நாம் கேட்டறியலாம். இத்தகைய வழக்கே சாத்தனார்காலத்தும் பிரபலமாயிருந்ததென்பதனை, 'குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை' என்றதொடர் குறிப்பிடவல்லது.

" நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறுபுக் காங்கு (மணி. 17, 10-4)

என, வானரங்கள் சேதுகட்டிய செய்தியை வேறிடத்தும் சாத்தனார் உவமைமுகத்தாற் கூறுதல் காண்க. தருப்பசயனமாகிய திருப்புல்லாணியைச் சேதுமூலம் ஆதிஸேது என்று கூறும் வழக்கு நெடுக உண்டு. தேவிபுரம் என்ற தேவிபட்டணத்தைச் சேதுமூலமாகச் சேதுபுராணம் கூறுமாயினும், திருவணைக்கு அப்பட்டணம் உரிய தன்றென்பதும், அதன் தெற்கே 15-மைலிலுள்ள திருப்புல்லாணியே சேதுமூலமாவதென்பதும் யாவரும் நன்கறிவர். "ஸேதுமூலே புல்லார்ண்யக்ஷேத்ரே" என்று அங்கே தீர்த்தக்

துறை மூழ்குவோர் சங்கல்பம் செய்துகொள்வது இன்றும் உள்ள வழக்கு. இவ்வாறு திருப்புல்லாணியைத் திருவணை தொடங்கும் ஆதிஸேதுவாக வழங்குவதுபோலவே, கன்னியாகுமரியும் முன்னோரால் வழங்கப்பட்டதென்க. அத்திருவணை, மேற்கே கன்னியாகுமரியிலிருந்து தொடங்குவதென்ற வழக்கும் உள்ளமையால், சேதுமூலமாகக் குமரித்துறையை முன்னோர் கொண்டது ஏற்புடையதென்றே சொல்லலாம். இராமபிரான் மகேந்திரபர்வத சிகரத்தினின்று சமுத்திரத்தைப் பார்த்தாரென்றும், பின்பு அவர் மலயபர்வதத்தை யடைந்து அதனினின் றிறங்கியதும் சமுத்திரக் கரையை அடைந்தனரென்றும், அச் சமுத்திர தீரத்திலிருந்தே சேதுபந்தனத்தைப்பற்றி வானரவீரர்களுடன் ஆலோசனை புரிந்தாரென்றும் வால்மீகி கூறுவர். இதனால் மலயபர்வதத்தை அடுத்ததே, அப்பிரான் அணைகட்ட எண்ணிய சமுத்திரப் பகுதி என்பது பெறப்படும். படவே, சேதுமூலமாகக் குமரியைக் கூறும் பழைய வழக்குக்கு இராமாயணத்திலும் குறிப்புண்மை காணலாம். இந்தச் சேது, கிழக்கே திருப்புல்லாணி தனுஷ்கோடி வழியாகச் சென்று இலங்கை சேர்வதால், பல வெள்ளங்கொண்ட வானரசேனை சென்ற மார்க்கம் அதுவே யென்பதும், இராமபிரான் அவ் வழியே வந்து தனுஷ்கோடியில் தங்கி,—அகநானூறும் சேதுபுராணமும் கூறியவாறு—மேற்கொண்டு போர்க்குரிய ஆலோசனைகளை அங்கு நடத்தலாயினர் என்றும் மேற்சொன்ன செய்திகளெல்லாம் பொருந்த அமைத்துக்கொள்வது தகும். இவ்வாறன்றி—

𑌦𑌶𑌯𑍋𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌶𑌤𑌯𑍋𑌜𑌨𑌮𑌾𑌯𑌤𑌮𑍍 ।
𑌦𑌦𑍃𑌶𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌨𑌲𑌸𑍇𑌤𑍁𑌂 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥

(வால்மீகிராமா. யுத்தகாண். ஸர்க். 22. சுலோ. 74)

" எய்த யோசனை யீண்டொரு நூறிவை
அய்யி ரண்டி னகல மமைந்திடச்
செய்த தாவணை யென்றிது செப்பினர்
வய்ய நாதன் சரணம் வணங்கியே " (கம்பரா. சேதுபந். 71)

என்ற முன்னோர் திருவாக்குக்களின்படி, 100–யோசனை நீளமும், 10–யோசனை அகலமும் உடையதாக இராமஸேது அமைக்கப்பட்டதென்று தெரிவதால், குமரி தனுஷ்கோடிகள் 80–மைல் அகலமுள்ள ஸேதுவால் இணைக்கப்பட்டு ஏறக்குறைய ஒன்றாயிருந்ததென்று கொள்ளினும் அமையும். இனி, சேதுமூலமான குமரித்துறைபற்றிய மற்றோர் அரிய செய்தியும் இங்கே நாம் குறிப்பிடற்குரியது.

தனுஷ்கோடித்துறையைப்பற்றி, மேற்கூறிய அகநானூற்றுத் தொடரன்றி, வேறு பழைய தமிழ்ப்பிரமாணமொன்றுமே காணப் படவில்லை. அக்கோடித் துறையும் இராமபிரான் மந்திராலோசனை செய்த தலமாகக் குறிக்கப்பட்டதேயன்றி, யாவரும் நீராடி வந்த துறையாகக் கூறப்பட்டிலது. அத்துறை பிற்காலத்துப்போல முற்காலத்தும் பிரபலமாயிருந்திருப்பின், பாவவிமோசன முதலியன கருதிப் பலருஞ்சென் றாடிவந்த புண்ணியகட்டமாகச் சங்க நூல்களில் அது மிகுதியும் சிறப்பிக்கப்பட்டிருக்கும். அவ் வாறன்றிக் குமரித்துறையே அத்தகைய சிறப்பை முற்காலத்தில் அடைந்திருந்ததாகச் சங்கச் செய்யுள் பலவும் ஒருமுகமாகக் குறிப் பிடுதல் சிந்திக்கத்தக்கது. பாரத கண்டத்தில் பஞ்சமாபாதகம் புரிந்தவர்களும், குடிக்குற்றப்பட்டோரும், பிறரும் தம் பாவங் கழுவவேண்டித் தருமயாத்திரையாகப் பெருந்திரளுடன் வந்து பொதிய மலையை வலங்கொண்டு இக்குமரித்துறை சென்று நீராடிப்போந்தனரென்ற செய்தியை—

" மாமறை முதல்வன் மாடல னென்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன்" (சிலப். 15, 12—1)

" மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வோன்" (ஷை 27, 63-9)

" பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்திய
எற்கெடுத் திரங்கித் தற்றக வுடைமையின்
குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப்
பரந்துசென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்"
(மணி. 5, 35-8)

" பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்
தென்றிசைக் குமரி யாடிய வருவோள்" (ஷை., 13, 5-7)

" பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னொழுகி
காப்புக்கடை கழிந்து கணவனை யிழந்தேன்
தெற்கட் குமரி யாடிய வருவேன்" (ஷை., 13, 80-4)

" இமயப் பொருப்பகத் தீராண் டுறைந்தபின்
குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்
தருமயாத் திரையெனத் தக்கிணம் போந்துழி"
(பெருங்கதை, 2, 36, 236-8)

" குண்டுநீர்க் குமரித் தெண்டிரை யாடிய
போயின னென்னும் பொய்யுரை பொத்தி"

(மணி, 12, 20 82-3)

" வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்
சிந்தைநவி வின்றதிரு நீர்க்குமரி யாட
வந்திலதி ஞயபய னென்னைமொழி கென்றுள்"

(சீவக. 2020)

" குமரியாடிப் போந்தேன், சோறு தம்மின்" (தொல். சொல்.)

என்பன முதலிய முன்னோர் கூற்றுக்களால் உணர்க. இவையன்றிச் சங்க காலத்தில் இத்தேசத்துக்கு வந்து சென்ற யவனாசிரியரெழுத்தாலும் இச்செய்தியை நன்கறியலாம். பெரிப்ளுஸ் (Periplus) நூலாசிரியர், இக்குமரித்துறையை இல்லறத்தாரும் துறவிகளுமான ஆண்பாலர் பெண்பாலரெல்லாம் தம் பாவ விமோசனார்த்தம் பெருங்கூட்டமாக நீராடிவருமிடமாகக் கூறுதல் காண்க (Tamils 1800 years ago p. 35). இக்காலத்து இராமேச்சுர யாத்திரிகர்போல, முன்னாளில் குமரியாடச் செல்வோர், " குமரியாடிப் போந்தேன் சோறுதம்மின்" என்று பிறரைக் கேட்டால், உடனே அவர்க்குத் தவறாது உணவிட்டு உபசரிப்பது நாட்டின் பெருவழக்காயிருந்தது. " அறங்கெடுத்தார் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவத்துப் படுவார்களாகவும்" எனத் தருமக்கேடு விளைப்பவரைப் பற்றி வழங்கும் சாஸனத் தொடரும், வடக்கே கங்கை போலத் தெற்கே பிரபலம் பெற்ற தீர்த்தத் துறையாயிருந்தது குமரியே என்பதைப் புலப்படுத்தக்கூடியது. 'கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடு வினைகளைத் தடுகிற்கும்' கங்கைக்கரையிலுள்ள காசிமாநகர் வாசிகளும் அக்காலத்தே தம் பாவங்கழிய இக்குமரித்துறையை நாடிவந்தவர்* எனின் இதன் சிறப்புக்கு வேறு சான்றும் வெண்டுமோ? இவ்வாறு சேது மூலமாகக் குமரித்துறை முன்னோராற் கருதப்பட்டமைபற்றியே 'குரங்குசெய் கடற் குமரியம் பெருந்துறை' எனச் சாத்தனாராலுங் கூறப்பட்ட தென்பதும், அதனால் 'ஆஸேதுஹிமாசலம்' என்ற வடமொழித் தொடர்க்கு, 'குமரிமுதல் இமயம்வரை' என்று பழைய வழக்கிற்கேற்பப் பொருள்கொள்வதும் இயையும் என்பதும் அறியத்தக்கன.

---

* மணிமேகலை, 13, 3 - 7; 78 - 83.

## 8. அணிலும் சேதுபந்தனமும்

வானரவீரர்கள், இராமபிரான் திருவாணைப்படி திருவணை கட்டும் பெருமுயற்சியில் ஈடுபட்டு நின்றபோது, அப்பக்கத்திருந்த அணிற்சாதியும் அத்தொண்டினில் ஈடுபட்டு, நீரில் நனைந்த தம் முடம்பை மணலிற்சென்று புரட்டி உடம்பி லொட்டிய அம்மணலைக் கொண்டுவந்து கடலிற் சேர்த்துத் தம்மாலான உதவிபுரிந்து வந்ததென்றும், அதனைக் கண்டு இராமபிரான் பெரிதும் உவந்தருளினர் என்றும் வழங்கும் கதை தென்னாட்டில் பிரசித்தமானது. இதனைத் தொண்டரடிப்பொடியாழ்வாரும்,

" குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்
[டோடித்
தரங்கநீ ரடைக்க லுற்ற சலமிலா வணிலம் போலேன்"

என்று தம் திருமாலையில் (27) பாடியருளினர். இக்கதை வேறு வட நூல்களிற் காணப்படாத தொன்றாகும்.* இவ்வரலாறு ஆழ்வார்கள் காலத்துக்கு முற்பட்ட வழக்காயிருத்தலால், பழைய தமிழ்ச் செய்திகளுள் ஒன்றாகவே இதுவும் நாம் சேர்த்துக்கொள்ளற்குரியது.

---

## 9. இராமராவண யுத்தமாகிய இராமாயணம்

இராமராவண யுத்தத்தை 'ராமாயணம்' என்ற பெயரால் முன்னோர் வழங்கிவந்தனர். இதனை,

" தேவாசுர ராமாயண மாபாரத முளவென்
றோவாவுரை யோயும்படி யுளதப்பொரு களமே"
(கலிங். 11, 161).

எனச் செயங்கொண்டாரும், "தேவாசுரம், இராமாயணம், மகாபாரதம் என்கிற போர்' (சீவக. 2353-உரை) என நச்சினார்க்கினியரும் " தாரகாம்யம்,† தேவாசுரம், இராமாயணம், மகா

*சிலவாண்டுகட்குமுன் Prof. காளிதாசநாக் என்பார், சென்னை சர்வகலாசாலை மண்டபத்தில், ஸுமாத்ரா ஜாவா முதலிய தீபங்களில் வழங்கும் ஆரியவழக்கங்களைப் பற்றிப் புரிந்த உபந்நியாச மொன்றில்; அப்பிரதேசத்து வழங்கும் இராமாயணத்திலே இவ்வணிற்கதை அமைந்த சித்திரத்தை 'மாஜிக் - லாண்டெர்ன்'மூலம் விளங்கக் காட்டியதோடு, அதற்குத் தென்னாட்டு வழக்கு உண்டென்று தெரிந்து கூறியதையும் அறிஞர் பலர் அறிந்திருப்பர்.

† தாரகாசுரனுக்கும் முருகவேட்கும் நடந்தபோர்; 'தாரகாரி' என்பது முருகவேட்கு ஒரு திருநாமம். தாரகவதை, மச்சபுராண முதலியவற்றில் விரியக் கூறப்படுவதாம்.

பாரதம் போலப் பலநாட் கூடி இறப்பதல்லது" எனத் தக்க யாகப்பரணி உரைகாரரும் கூறுதலால் உணரலாம். தேவாசுரம் - தேவர்கட்கும் அசுரர்கட்கும் நிகழ்ந்த போர்; "தேவாசுரம் பொருதாய் செற்று" (மூன்ரும் திருவந்தாதி, 48) "தேவாசுரம் செற்றவனே" (திருவாய். 9, 8, 7.) என்ருர் பெரியார்களும். 'கோவிந்தா நீயன்றி, மாபாரத மகற்ற மற்ருர்கொல் வல்லாரே" என்ற வில்லிபுத்தூரர் வாக்கால் (உத்யோ. 34) மகாபாரதம் பாண்டவதுரியோதனர் யுத்தமாதல் காண்க. இவை போலவே, இராமாயணம் என்பதனை இராமராவண யுத்தத்துக்கே பெயராக முன்னோர் வழங்கலாயினர் என்பது அறியத்தக்கது.

## 10. இராமாயணப்போர் நடந்தேறிய காலம்

இனி, இராமாயணப்போர் நிகழ்ந்தகாலம் இரண்டு மாதங்கள் என்றும் ஒரு மாதம் என்றும் ஒருபக்ஷம் என்றும் கூறுவர், வால்மீக வியாக்யாதாக்கள். எவ்வகையினும் அவர்கள் கருத்தின்படி இரண்டு மாதங்கட்குமேல் அது நடந்ததில்லை யெனலாம். தமிழ் வழக்கிலோ, இராமராவண யுத்தம் 18 மாதங்கள் நடைபெற்றன என்று உள்ளமை புதியதோர் செய்தியாகும். சேரன்—செங்குட்டுவன் பத்தினிப் படிவத்துக்கு இமயத்தினின்று கல் லெடுத்துவரப் படையுடன் வடநாடு சென்றபோது, தன் பகைவரான கனகவிசய ரென்ற ஆரியவேந்தருடன் அவன் பெரும்போர் புரிந்ததனை இளங்கோவடிகள்—

" செறிகழல் வேந்தன் தென்றமி ழாற்றல்
அறியாது மலைந்த வாரிய மன்னரைச்
செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட வொன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளுங் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபக லெல்லை யுயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்" (சிலப்-27, 5-13.)

என்று சிறப்பிக்கின்ருர். (யமன்) "உயிர்த்தொகையுண்ட ஆண்டும், மதியும், நாளும், கடிகையும் ஒன்பதிற்றிரட்டி (பதினெட்டு) என்று அவற்ருேடே கூட்டி எண்ண (என்றது), தேவாசுரயுத்தம் 18–ஆண்டிலும், இராமராவண யுத்தம் 18–மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் 18–நாளிலும், செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த யுத்தம் 18–நாழிகையிலும் முடிந்த

என்று எண்ண" என்பது இவ்வடிகளின் பழைய அரும்பதவுரை. 18-என்ற எண்ணில் வருஷமாத நாட்கள் அமையும்படி நடந்த பழைய போர்களுடன் நாழிகையையுங் கூட்டி உலகம் எண்ணும்படி, 18-நாழிகையில் செங்குட்டுவன் ஆரியப்போரை வென்று முடித்தான் என்பது கருத்து. 'எண்கொண்ட ஞாட்பு' என்ற சிந்தாமணிப் பாடலில் (2553), சீவகன் செய்த போரைத் திருத்தக்கதேவரும் இக்கருத்தேபெற அமைத்துச் சிறப்பித்தல் காண்க. இவற்றால் இராமாயணப்போர் 18-மாதகாலம் நடந்ததென்ற செய்தி சங்ககால முதல் தமிழ்மக்களால் வழங்கப்பட்டு வந்ததென்பது தெரியலாம். இப்பதினெட்டு மாதக்கணக்கு வான்மீகத்துக்கு எவ்வகையினும் பொருந்துவதாகத் தெரியவில்லை. பிராட்டிக்குத் தீங்கிழைத்த சூர்ப்பணகை இலக்குமணரால் அங்கபங்கப்படுத்தப்பட்டதைக் கம்பர்,

" கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைது மித்தென விராவணன் மணியுடை மகுடந்
தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை"

(கம்பரா. சூர்ப்ப. 96)

என்று பாடுகின்றார். இவ்வங்கச்சேதஞ்செய்த நாளை இராமராவண யுத்தத்தின் தொடக்கமாகக் கொண்டு 18-மாதவளவாகத் தமிழ் மக்கள் கணக்கிட்டனரோ, அன்றி இதர இராமாயணத்து இச்செய்தி கூறப்பட்டுளதோ தெரியவில்லை; இஃது அறிஞர் ஆராய்தற்குரியது.

---

## 11. இராமாயணமும் புறத்துறைகளும்

இராமராவண யுத்தத்தின் செய்திகளைப் புறத்திணைமுறையில் வகுத்து முன்னோர் பாடியுள்ளார் என்பது புறத்திரட்டாலும்* தொல்காப்பியவுரைகளிற்கண்ட மேற்கோட்செய்யுட்கள் சிலவற்றாலும் தெரியவருகின்றது. எயில்கோடல் என்ற புறத்திணையில் வானரசேனைகளின் செயல்களை,

---

* 'ஆசிரியமாலை' என்ற தொகைநூலுள் இப்பாட்டுக்களிற் சில தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வாசிரியமாலைச் செய்யுட்களாகப் 'புறத்திரட்டு' என்ற நூலிற் காட்டப்பட்டவற்றைத் திரட்டி யான் செந்தமிழில் வெளியிட்டுள்ளேன் (தொகுதி 5, பகுதி 10). இப்புறத்திரட்டு நூல் முழுதும், சென்னை யூனிவர்ஸிடி ரீடர் ஸ்ரீ எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களால் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப்பெற்று அவ் யூனிவர்ஸிடிப் பதிப்பாகச் சமீபத்தில் நன்கு வெளியிடப்பட்டுள்ளது.

"மாமுது தாதை யேவலி னூர்துறந்து
கானுறை வாழ்க்கையிற் கலந்த விராமன்
மாஅ விரலை வேட்டம் போகித்
தலைமகட் பிரிந்த தனிமையன் தனாஅது
சுற்றமும் சேணிடை யதுவே முற்றியது
நஞ்சுகறை படுத்த புன்மிடற் றிறைவன்
உலகுபொதி யுருவமொடு தொகைஇத் தலைநாள்
வெண்கோட்டுக் குன்ற மெடுத்த மீளி
வன்றோ ளாண்டகை யூரே
யன்றே சொன்முறை மறந்தனம் வாழி
வில்லு முண்டவற் கந்நா ளாங்கே
மாதர்க் கெண்டை வரிப்புறத் தோற்றமும்
நீலக் குவளை நிறனும் பாழ்பட
இலங்கை யகழி மூன்று மரக்கியர்
கருங்கா னெடுமழைக் கண்ணும் விளிம்பழிந்து
பெருநீ ருகுத்தன மாதோ கதுவக்
குரங்குதொழி லாண்ட விராமன்
அலங்குதட டெருள்வா ளகன்றஞான்றே"
(புறத்திர. எயில்கோ.)

"இருகடர் வழங்காப் பருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
யெச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தனிற்
கடல்சூ ழரணம் போன்ற
துடல்சின வேந்தன் முற்றிய வூரே"
(ஷை, ஷை; தொல். புறத். 12ம் - சூத். உரை.)

என்றும், எயில்காத்தல் என்றதுறையில் இராவணன் செயல்களை

"மேலது வானத்து மூவா நகரும்
கீழது நாகர் நாடும் புடையன
திசைகாப் பாளர் தேயக் குறும்பும்
கொள்ளை சாற்றிக் கவர்ந்துமுன் றந்த
பல்வேறு விழுநெதி யெல்லா மல்வழிக்
கண்ணுதல் வானவன் காதலி னிருந்த
குன்றெந்து தடக்கை யனைத்துந் தொழிலுறந்
தோலாத் துப்பிற் றுணிமுல் வாழ்க்கை
வலம்படு மன்னர்க்கு வீசி யிலங்கையின்
வாடா நொச்சி வகுத்தனன்
மாலை வெண்குடை யரக்கர் கோவே" (ஷை

என்றும், தானைமறம் என்ற புறத்துறையில்—

"இருபாற் சேனையு நனிமருண்டு நோக்க
முடுகியற் பெருவிசை யுரவுக்கடுங் கொட்பின்
எண்டிசை மருங்கினு மெண்ணிறைந்து தோன்றினும்
ஒருதனி யனுமன் கையகன்று பரப்பிய
வன்மரத் துணிபட வேறுபல தோன்படை
வழங்கிய வகம்பன்றேன் புடையாக வோச்சி
ஆங்க, அனும னங்கையி னழுத்தலிற் றனது
வன்றலை யுடல்புக்குக் குளிப்ப முகங்கரித்
துயிர்போகு செந்நெறி பெருமையிற்
பொருகளத்து நின்றன னெடுஞ்சேட் பொழுதே" (டி)

என்றும் 'கட்டினித்தபால்' (சிங்காதனக் துறத்தல்) என்னும் புறத் துறைக்கு,

"கடலூ மலையு நேர்படக் கிடந்த
மண்ணக வளாக நுண்வெயிற் றுகளினும்
நொய்தா லம்ம தானே யிஃதெவன்
குறித்தன னெடியோன் கொல்லோ மொய்தவ
வாங்குசிலை யிராமன் தம்பி யாங்கவ
னடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே."
(தொல். பொருளதி. 76, நச்.)

எனவும் இராமசரிதங் கூறும் பாடல்கள் எடுத்தாளப்படுதல் காண்க. இவை யாவும் முற்கூறியபடி சங்காலத்து வழங்கிய இராமாயணப் பாடல்களாகக் கருதற்குரியனவாம்.

இவ்வாறே 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' என்ற துறைக்கு, இலங்கைகொள்வதன் முன்னர் அதனை இராமன் வீடணற்குக் கொடுத்ததையும், தழிஞ்சி என்ற துறைக்கு முதனாட் போரிலே சேனைமுழுதும் இழந்து இராவணன் தோற்றுத் தனியனாய் நின்ற நிலையை நோக்கி இராமபிரான் 'இன்றுபோய்ப் போர்க்கு நாளைவாவென நல்கிய' தையும் முன்னோர் மேற்கோள் காட்டுவர். இன்னுமிதனை விரிப்பிற் பெருகும்.

## 12. வசந்தன் உயிர்பெற அருளியது

வசந்தன் என்பான், இராமபிரான் படைத்தலைவருள் ஒருவனை வானவீரன். கும்பகர்ணன் புரிந்த பெரும்போரில் இவ்வானரத்தலைவனை அவ்வரக்கன் போரிற்பிடித்துத் தன்னுடலிற்றேய்த்துப் பூசிக்கொண்டனன் என்பர். இவ்வரலாறு கும்பகருணப்படலத்துக் கம்பர் கூருததாயினும்* உத்தரகாண்டம் பாடிய பெரும்புலவர்—

"வியந்து வீடண னழைத்தலும் வெய்யவன் மறுத்து.
வயந்த னைப்பிலைசத் தருக்கன்மா மகனைக்கொண் டகன்றுன்"
(அசுவமே. 228.)

என, குசலவர்கள் வாக்கில் வைத்துப் பாடுதல் காண்க. இராவண வதம் முடிந்தபின், பிராட்டி இளைய பெருமானுடனும் எல்லாவானரத் தலைவர் சேனைகளுடனும் இராமபிரான் அயோத்தி செல்லப் புஷ்பக விமானத்தில் இவர்ந்துநின்றபோது, ஒருசார் வானரக்கூட்ட மட்டும் அதனில் ஏருமல் தாமதித்து நிற்க, அதுபற்றிப் பெருமான் உசாவிய காலையில், இறந்துபட்ட வானவீரருள் கும்பகருணனுற் கொல்லுண்ட வசந்தன் என்ற தலைவன் மட்டும் உயிர்ப்பிக்கப் பெருமையால் அவனைச் சார்ந்த வீரர்கள் துக்கத்துடன் அதனில் ஏருமல் நின்றுவிட்டனர் என்ற செய்தி தெரியவந்தது. உடனே இராமபிரான் யமதருமனுக்கு திருபமொன்றெழுதி அனுமானிடம் கொடுத்து. வசந்தனை மீட்டுவரும்படி கட்டளையிட, அச் சிறியதிருவடி யமலோகம்புக்கு, குறித்த வானரவீரன் அங்கின்மையால் இந்திரலோகமும் பின் பிரமலோகமுஞ் சென்று, பிரமதேவனுல் அவ்வசந்தனிருப்பிடமறிந்து போய் அவனைமீட்டு இராமரிடம் கொணர்ந்தனர் என்றும், பின் அவ்வசந்தனுடன் அவனைச் சார்ந்தோரும் விமானத்தில் ஏறியதும் அது செல்லலாயிற்றென்றும் வரலாறென்று பழைமையாகவே வழங்கி வருகின்றது. இச்செய்தி, கம்பராமாயண ஏட்டுப்பிரதிகள் பலவற்றில் காணப்படவில்லையேனும் சில பிரதிகளில் இயமப்படலம், வசந்தனுயிர்பெறுபடலம் என்ற தலைப்புக்களின்கீழ்ப் பலபாடல்களாற் கூறப்பட்டுள்ளது†.

---

* கம்பராமாயணம், கும்பகருணப்படலத்து. 177-ஆம் பாடலை அடுத்து, 'பற்றினன் வசந்தன் றன்னை" என்ற செய்யுள் ஒருபிரதியில் மட்டும் காணப்படுகின்றதாயினும், அது கம்பர் வாக்காகத் தோன்றவில்லை (ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய ஸ்வாமி பதிப்புக் காண்க).

† இப்பாடல்களை டி ஸ்வாமி உரையுடன் பதிப்பித்துள்ள யுத்த காண்டத்தில், மீட்சிப் படலத்துட் கண்டுகொள்க (பக். 770-74)

இச்சரிதம் தமிழ் நாட்டிற் பண்டுதொட்டே வழங்கிவருதென்பது, இராமாயண உத்தரகாண்ட வாசிரியர்—

"ஏறிட்ட விமானந் தன்னில் யாவரு மிறைவி தானும்
மாறினை வசந்தன் சேனை நின்றது மலரா வன்பால்
கூறின னனுமன் வாங்கிக் கொண்டபின் குரிசிலுனும்
ஆறிய பரத்து வாச னணிமலர்ச் சோலை புக்கான்" )
(அசுவமே, 259 .

எனக் குசலவர் கூற்றில்வைத்துப் பாடுதல் காண்க. பின்னேரான புலவர்களிலே, காரி ரத்தினகவிராயர் என்பார், தாம் பாடிய பாப்பாவினம் என்ற நூலில்,

"அமரிடை வசந்தன்மீ வானந் தோய்ந்திடும்
உடலுயி ருடன்வர நின்று
தமர்தொழத் தின்பேடர் நடைகற்ற தலையுழுர்" (பக். 80.)

எனவும், இராமநாடகம் பாடிய காழி அருணசலக் கவிராயர்—

"முடிபுனை யுந்தச ரதனுரை யிங்கிது முழுதுமொ ழிந்துடனே
முதல்வர் வரந்தனி லனைவர்க ளும்பழ முறையிலெ முந்தபினே
இடர்பெரு கும்பர தனையரு ளும்படி வடதிசை புஷ்பகமேல்
இரகுபதி யுஞ்சன கியுமொரு தம்பியு மெவருநி றைந்திடுமுன்
வடுபடி யும்வசந் தனைநிமி ஷங்கொடு வருசென வெம்பெருமான்
வரைநிருபந்தனை முடிமிசைகொண்டொருமறலியின்
[மண்டலமும்
அடுகளி றிந்திர னுறைதரு மண்டல மயனுறை மண்டலமும்
அதிரதி ரும்படி விசையனு மந்தன வளவு கிளம்பினனே".

என்ற விருத்தத்திலும், "தாவி யனுமன் வந்தானே" என்ற பதமுழு திலும் விரிவாகவே பாடுதல் காண்க. இராமாயணவண்ண முதலியவற்றிலும் இச்செய்தி கூறப்பட்டுள்ளதாம். இவ்வசந்தன் கதை வேறு எந்த வடமொழி யிராமாயணத்தில் உள்ளதோ, தெரியவில்லை. எனினும், தமிழ்நாட்டில் சில நூற்றாண்டுகட்கு முன்வரை இச்சரிதம் பெருவழக்கா யிருந்ததென்பது, மேற்கூறிய பிரமாணங்களால் அறியத்தகும்.

---

## 13. அனுமானுடன் இராமன் விருந்துண்டது

இராவணவதத்துக்குப் பின் இராமபிராமன் பிராட்டியுடனும் வானர வீரர்களுடனும் புஷ்பகவிமானத்திற் சென்று பரத்துவாசர் ஆச்சிரமத்திற் றங்கியபோது, பெருமான் அம்முனிவர்க்கு அனுமானது அரும்பேருதவியைப் புகழ்ந்து கூறி, அம்முனிவராற்றிய

விருந்தில் தம்முடன் உண்ணும்படி அச் சிறியதிருவடியை அழைத்தனர் என்றும், அவ்வுபசாரத்தை அவர் ஏற்றுக்கொள்ளாது இராமரது பரிகலசேடத்தையே உண்ணலாயினர் என்றும் வரலாறொன்று வழங்குகின்றது.

"முனிவன் வாண்முக நோக்கிமெய்ம் முழுதுணர் முனியே
அனும னுண்டகை யளித்தபே ருதவியின் றெம்மால்
நினைய வும்முரை நிரப்பவு மரிதினி நீதி
புனித வுண்டியெம் முடனெனப் புரவலன் புகன்றான்"

என்பன முதலாகவரும் கம்பராமாயணச் செய்யுட்களால்* இதனை உணர்க. இவ்வாறு உடனுண்ணும்படி பெருமான் விரும்பிய கருணைத் திறத்தை வியந்து திருமங்கைமன்னனும்—

"வாத மாமகன் மற்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை யுகந்து
காத லாதரம் கடலினும் பெருகச்
செய்தகவினுக் கில்லைகைம் மாறென்று
கோதில் வாய்மையி னாயொடு முடனே
உண்ப னானென்ற வொண்பொரு ளெனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழிற்றிரு வரங்கத் தம்மானே"

(பெரிய திருமொழி, 5, 8. 2.)

என்று அருளிச்செய்தல் அறியதக்கது. பரதனிடம், தாம் குறித்த தினத்தில் வந்துசேரும் செய்தியை முன்சென்று சொல்லி வரும்படி இராமபிரானால் விடுக்கப்பட்ட அனுமான், அதனை அப்பரதற்கு அறிவித்துவிட்டுத் திரும்பி, பரத்துவாசமுனிவரால் அப்பெருமான் விருந்துண்ணும் சமயத்தில் வந்துசேர்ந்தனர் என்றும், அதுகண்டு பெரிதுமகிழ்ந்து சிறியதிருவடியை அவரினைப்புத்திரத் தம்முடனுண்ணும்படி பெருமான்அருளிக்கூறினரென்றும் பின்னோர் இச்சரித்திரத்தைச் சிறிது வேறுபடக் கூறுவர். காழி அருணசலக்கவிராயர் தம் இராமநாடக்தில் இதனை,

"நீதமுட னனுமனிது சொன்னா னிந்த
நிமிஷம்வந்து சாமியுனக் கருள்வ னென்றான்

* இச்செய்யுட்கள் கம்பராமாயண அச்சுப்பிரதிகளிற் காணப்படா; சில ஏட்டுப் பிரதிகளில் மட்டுமுள்ளன. (ஸ்ரீ வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியஸ்வாமியின் யுத்தகாண்ட உரைப்பதிப்பு, பக். 811 - 2.)

போதரவாய்ப் பரத்வாசன் மடத்திற் பூர்வ
போசனவே ளையிற்போய்ரா கவனைக் கண்டான்
பாதமலர் வணங்கினன் பரதன் றன்னைப்
பார்த்ததுங்காத் ததுஞ்சொன்ன னப்போதையன்
காதலனே யனுமானே நீயே யென்றன்
கண்ணென்று னென்னுடன்வா உண்ணென் றனே"

"வாவா அனுமானே—என்னுடன்உண்ண—வாவா சீமானே"

என்று பாடுதல் காணலாம். இச்சரித்திரத்தையே, பாப்பாவினம் என்ற நூலியற்றிய காரி ரத்தின கவிராயர்,

"கனையடைந் தொடுங்குவான் விருத்தறைந் நெடுகாலைத்
தமையன்வந் தனனெனப் பரதன துயிர்தந்தான்
அமைவுகண டுடனுண்பா னருள்தநத குணனுரூர்"
(பரிபா. 2, பக். 80.

என்றும், திருவைகுந்தநாதர் பிள்ளைத்தமிழாசியர்—

"கார்நிறக் கோதையும் மதிபொருவு வதனமுங்
கச்சடங் காத தனமுங்
கமலவிழி யுங்கொண்ட சனகியுந் தம்பியுங்
கதிரவன் பெறுமதலையும்
ஏருலவு வானரத் தலைவருஞ் சேனையு
மிலங்கையர சன்றனுடனே
எதிபரத் துவனுறையு மினிதான சாலையினி
லெர்நியவ னல மைந்த
வார்சுவையி னேடடிசில் போனக முணக்கரு்தி
வாய்மடுத் துற்ற பொழுதில்
வந்துதொழு மாருதியை யென்றனுட னுண்ணநீ
வாவென் றழைத்து மகிழுஞ்
சீர்மருவு தாரணி யிராகவ முகுந்தநீ
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்த நாதரகு வீரநீ
சிறுதே ருருட்டி யருளே"

என்றும் பாடியிருத்தல் காண்க. இத்தகைய வரலாறு வால்மீகி முனிவர் கூறுததொன்றுகும். பரத்துவாசமுனிவரது விருப்பின்படி ஒருநாள் வரை அவராச்சிரமத்தில் தாமதித்த இராமபிராமன், மறு நாள் தாம் வந்துசேருஞ் செய்தியைப் பரதற்கு முன்சென்று அறி விக்கும்படி அனுமானை அனுப்பி, அம்மறுநாளே பரதனிடஞ் சென்றுவிட்டதாக அம்முனிவர் கூறுகின்றரேயன்றி அனுமான்

திரும்பிய செய்தி கூறினரில்லை. இவ்வாறு வான்மீகத்துக் காணப் படாமைபற்றியே, மேற்கூறிய திருமங்கைமன்னன் பாசுரத்துக்கு வியாக்யானமிட்ட பெரியோர் 'உடனுண்பனுன்' என்பதற்குத் தம் திருமேனி யனுபவத்தை அளித்துவியதாகக் கருத்துக் கூறலாயி னர். ஆயினும், மேற்கூறிய ஆசிரியர் பலர் வாக்குக்களாலும், அனுமாற்குத் தம்முடன் உண்ணும் பெரும்பேற்றை அளித்து அவ ரைச்சிறப்பிக்கப் பெருமான் விரும்பினர் என்பதே தமிழ்நாட்டார் வழங்கிவந்த வரலாறு என்பது நன்கு விளங்குகின்றது. இவ்வரிய செய்தி ஆழ்வார் காலத்துக்கும் முற்பட்டதாயிருத்தலின் பழைய தமிழ்வழக்கினுள் ஒன்ருக இதுவும் கொள்ளற்குரியதாகும்.

---

## 14. பிராட்டி மல்லிகைமாலையாற் பெருமானைக் கட்டியது

பெரியாழ்வார் தம் திருமொழியில், அசோகவனிகையிலிருந்த பிராட்டியிடம் தெரிவிக்கும்படி இராமபிரான் அனுமான்மூலம் சொல்லி விடுத்தனவாகப் பாடிய அடையாளங்களிலே—

"அல்லியம்பூ மலர்க்கோதாய்! அடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய் துணைமலர்க்கண் மடமானே !
எல்லியம்போ தினிதிருத்த லிருந்ததோ ரிடவகையில்
மல்லிகைமா மாலைகொண்டங் கார்த்ததுமோ ரடையாளம்"

என — பெருமானுக்கும் பிராட்டிக்கும் நிகழ்ந்த அந்தரங்க நிகழ்ச்சி யொன்றும் குறிப்பிடப்பட்டதாக அவ்வாழ்வார் அருளிச் செய்தல் காணலாம். இதனுல், அயோத்தியிலே இராமபிரானும் பிராட்டியும் ஒருநாளிரவு ஏகாந்தமா யிருந்தகாலையில், பிரணய கலகமுண்டாக அப்போது மல்லிகைமாலையைக்கொண்டு பிராட்டி தன் நாயகனைக் கட்டினள்—என்ற செய்தி தெரிவருகின்றது. இது வான்மீகி முனிவரேனும் கம்பரேனுங் கூருததொன்ரும். இதற்கு மூலமும் தமிழ்நாட்டுவழக்கே போலும்.

---

## 15. தசமுகன் தலைகளைத் திருமால் எண்ணியது

தசமுகனுன இராவணன் தன்னை ஒருதலையுடையனுக உரு மாற்றிக்கொண்டு,பிரமதேவனிடம் நீண்ட ஆயுள் வரம்பெறும்விருப் புடன் வந்துநின்றபோது, திருமால் குழந்தைய்ருவாய் அப்பிரமன் மடியில் தங்கி, 'தன்னியற்கை வடிவினை மறைத்து வஞ்சகனுய்

வரும் இவ்வரக்கனுக்கு வரமளித்தல் கேடாம்' என்ற குறிப்பினைத் தம் திருவடிகளைத் தூக்கி அவற்றால் தசமுகன் தலைகளை எண்ணிக் காட்டி மறைந்தனரென்றும், அத்தலைகள் தம்மால் அழித்தற்குரியவை என்பது புலப்படக்காட்டிய அக்குறிப்பை அறியாமலும், வணங்காமுடியனாக அவ்விலங்கேசன் தன்னை வணங்கிக் கேட்டதற்கு உவந்தும் பிரமதேவன் வேண்டிய வரத்தை அவர்க்கு அளித்து விடுத்தனன் என்றும் வரலாறொன்று தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கியதாகும். இதனை, ஆழ்வார்களுள் முன்னோரான பொய்கையார் தம் முதற்றிருவந்தாதியில்,

"ஆமே யமரர்க் கறிய வதுநிற்க
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன் றாள்பணிந்த வாளரக்க னீண்முடியைப்
பாதமத்தா லெண்ணினான் பண்பு" (45)

என்றும், பேயாழ்வார் தம் மூன்றாந் திருவந்தாதியில்,

"ஆய்ந்த வருமறையோ னான்முகத்தோ னன்குறங்கில்
வாய்ந்த குழவியாய் வாளரக்கன்—ஏய்ந்த
முடிப்போது மூன்றேழென் றெண்ணினா னார்ந்த
அடிப்போது நங்கட் கரண்" (77)

என்றும், திருமழிசையாழ்வார் தம் நான்முகன் திருவந்தாதியில்,

"கொண்டு குடங்கான்மேல் வைத்த குழவியாய்த்
தண்ட வரக்கன் றலைதாளாற்—பண்டெண்ணிப்
போங்குமர னிற்கும் பொழில்வேங் கடமலைக்கே
போங்குமர ருள்ளீர் புரிந்து" (44)

என்றும் அருளிச்செய்தவாற்றால் அறியலாம். இவற்றுள், இரண்டாம் பாசுரத்துக்கு—

"(பிரஹ்மா) ஸ்வாபாவிகமாக சேஷித்வமில்லாமையாலே புதுக்கும்பிடைக்கண்டு இறுமாந்து, தங்களனர்த்தமறியாதே ராவணனுக்குத் தொடுத்ததெல்லாங் கொடுக்கப்புக, 'இவனாலே நோவுபட்டாலும் நம்முடைய பாடேயிறே இவர்கள் வந்து விழுவது' என்று பார்த்து (அவன் குறங்கிலே) அழகிய பிள்ளையாய் ஸாயுதனான ராவணனுடைய தலைகளை மௌக்த்யத்தாலே மூன்றேழென்று எண்ணினவன்"

என்றும், முற்பாசுரத்துக்கு—

"ப்ரஹ்மாவின் மடியிலே ஒரு சிறுபிள்ளையாய்க் கண்வளருவாரைப்போலே கிடந்து, 'இவனுக்கு வரங்கொடுக்கவேண்டா, இது அநர்த்தமாம்' என்று, ராவணன் தலையைத் தன் திருவடிகளாலே

எண்ணினவன்...ராவணன் பத்துத்தலையையும் மறைத்துவர அத்தைச் சிறுபிள்ளைகள் காலையாட்டுமாப்போல எண்ணிக் காட்டினன்''

என்றும் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை எழுதியுள்ள வியாக்யான பந்திகள் அறியத்தக்கன. ஆழ்வார்களிலே முற்பட்டார் மூவர் ஒருசேரக் கூறிய இவ்வரிய வரலாற்றுக்கு வேறு வடமொழிப் பிரமாணங் காணப்பட்டிலது. அதனால், இதுவும் இராமாயண சம்பந்தமாகத் தமிழ்நாட்டில் வழங்கிவந்த பழைய கதைப்பகுதி என்றே கொள்ளத்தக்கது

## 16. அகத்தியரும் இராவணனும்

தசமுகனான இராவணனைப் பற்றிய வரலாறுகள் சிலவும் வடநூல் வழக்கின்வேருகத் தமிழகத்து வழங்கிவந்தனவாம். இவ்விராவணன் குணங்களாலும் செய்கைகளாலும் பழிக்கப்பட்டவனயினும், பெருந்தவம்புரிந்து பிரமனலும் சிவபிரானலும் நீண்ட நாளும் வாளுமாகிய வரங்கள் அளிக்கப்பெற்றனனென்றும், இசையிற் பெரிதும் வல்லவன் என்றும் நூல்களிற் சிறப்பிக்கப்படுவன். இவனது சிவபத்தித்திறத்தை வியந்தே சம்பந்த மூர்த்திகள் தம் தேவாரப்பதிகங்களில் எட்டாம்பாடல்தோறும் இவனைப் பாடுவராயினர். ஆயினும் குணஞ்செயல்களாற் கொடியோன் இவன் என்பதனை,

''மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனன் புள்ளிருக்கு வேளூரே''

''தேவிதன்னை யொருமாயையால்,
கானதில் வவ்விய காரரக்கன்''

''உரையுணராதவன் காமமென்னு முறுவேட்கையான்''

''பொருண்மன்னனைப்பற்றிப் புட்பகங்கொண்ட மருண்மன்னன்''

என்பன முதலியவற்றுல் அம்மூர்த்திகள் பல்லிடத்துங் குறிப்பிட்டுச் செல்வர். இத்தசமுகன் தன் பேராற்றலால் தென்னுட்டை அடிப்படுத்தி ஆட்சிபுரிந்து வந்தவன் என்றும், அகத்தியமுனிவர் இவனை ஓர் உபாயத்தால் இந்நாட்டிலணுகாதபடி செய்து ஓட்டினரென்றும் தமிழ் வரலாருென்று வழங்குகின்றது. இதனை,

''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் ரொன்முதுகடவுள்''
என்னும் **மதுரைக்காஞ்சி**த் தொடராலும் (*40-1*)' அதற்கு நச்சினார்க்கினியர் —

"இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின இட்டு தற் கரியவலிமையினையுடைய பொதியமலையிலிருக்குங் கடவுளாகிய பழமை முதிர்ந்த அகத்தியன்...இராவணன் தென்திசையாண்டமை பற்றித் தென்னவன் என்றூர் ; இராவணனுனுதல் தொல்காப்பியப் பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையான் உணர்க."

என்றெழுதிய உரைக்குறிப்பாலும் அறியலாகும். "தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக்கண்டு" என, இராவணனைத் தென்னவன் என்ற பெயரால் திருநாவுக்கரசுநாயனுரும் வழங்குதல் அறியத் தக்கது.

இனி, நச்சினர்க்கினியர் எழுதியவாறு, இராவணன் தென்றிசையாண்ட செய்தியை உரையாசிரியரது உரையினின்றேனும், அவனை அகத்தியமுனிவர் தமிழ்நாட்டினின்று ஓட்டிய வரலாற்றைப் பிறநூல்களினின்றேனும் விவரமாக நாம் அறியக்கூடவில்லை. அச்சிடப்பட்ட தொல்காப்பியம் - இளம்பூரணப் பாயிரவுரையுள் இராவணன்செய்தி ஒன்றுமே காணப்பட்டிலது. எனினும் தம் பாயிரவுரையில் அகத்தியனுர் வரலாறு கூறுமிடத்து—

"பொதியிலின்கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற்பிணித்து அவனை ஆண்டுவாராமை விலக்கி"

என்று எழுதிச்செல்வர் நச்சினர்க்கினியர். தஞ்சைவாணன் கோவையில், "இசைக்குருகப்படுசிலை" (345) எனப் பொய்யாமொழிப் புலவர் கூறிய தொடரும், அதற்கு—"இராவணனைப் பிணிக்கக் குறுமுனி பாடும் இசைக்கு உருகப்பட்ட பொதியமலை' • என அட்டாவதானி சொக்கப்ப நாவலர் எழுதிய உரையும் அந்நச்சினர்க்கினியர் கூற்றையே வலியுறுத்துதல் காணலாம். இவ்வரலாற்றையே—

"இனியபைந் தமிழின் பொதியமால் வரைபோல்
இசைக்குரு காநிம மலையின்
தனையையின் நீஞ்சொற் குருநறுஞ் சோண
சயிலனே கயிலைநா யகனே" (சோணசைலமாலை, 26)

எனச் சிவப்பிரகாசமுனிவரும் கூறினர். இவற்றல் தென்றிசை ஆண்டுவந்த இராவணன் அகத்தியரது ஆச்சிரமமான பொதியமலையினிடையிற் புக்கபோது, அவனைப் பிணித்துத் தமிழகத்தை விட்டு அகற்றவேண்டிக் கந்தருவகானத்தைத் தம் யாழ்கொண்டு அம்முனிவர் வாசிக்க,.அப்பாடற்குப் பொதிய முருகி அவ்வரக்கனைச் சூழ்ந்து நெருக்கித் தன்னுள் அகப்படுத்திக் கொள்ளவும்,

அதற்காற்றாத இராவணன் வேண்டிக் கொண்டவாறு, தென் ஞட்டில் இனிப்புகாதபடி அவனுக்கு ஆணையிட்டு, அவ்வாபத்தி னின்று அவனை விடுவித்து ஓட்டினர்—என்பதுபோன்ற கதை இந் நாட்டில் வழங்கியதாக வேண்டும் என்பது புலப்படுகின்றது*. அகத்தியர் யாழிசையில் வல்லவர் என்பதனை,

"மன்னு மகத்தியன்யாழ் வாசிப்ப" (திருக்கைலாய ஞானவுலா)
"தமிழ்க்குன்றில் வாழுஞ் சடாதாரிபேரியாழ்" (தக்க.பரணி 539)

என்பவற்ருல் உணர்க. இவ்வாறு அகத்தியமுனிவர் இராவணனைத் தென்ஞட்டை விட்டு அகற்றியவர் என்ற வரலாற்றை வடநூல்களிற் காண்டல் அரிதாக வுள்ளது. அதனுல் இது பழைய தமிழ்வழக்காகவே கொள்ளத்தகும். சீதாபிராட்டியைத் தேடிவரும்படி சுக்ரீவன் வானரவீரர்களை ஏவும்போது—"அம்மலய பர்வதத்தின் உச்சியில், மிகவும் தேஜோவானாய் சூரியஸமானராய் ருஷிசிரேஷ்டராயுள்ள அகத்தியமுனிவரையுந் தரிசியுங்கள். பிறகு நிர்மலசித்தரும் பரமஞானவானுமான அம்முனிவரது ஆணை பெற்றுக்கொண்டு தாமிரபர்ணியைத் தாண்டுங்கள்" என்றும், இராமபிரான் அகஸ்தியாச்சிரமத்தைப்பற்றித் தம் இளவலான இலக்குமணர்க்குக் கூறும்போது, "அம்மகானுகிய அகஸ்தியர் இவ்வுலகிற்கு நன்மை புரியும் பொருட்டு இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி, இத் தென்திக்கினையும் சுகமாக வசிக்கத் தக்க திசையாகச் செய்துவைத்தார்" எனவும், "எவருடைய மகிமையால் இன்றைக்கும் அரக்கர்கள் இத்தென்திக்கைக் கண்ணெடுத்துப் பார்த்து உட்புக நடுங்குகின்ருர்களோ, அவருடைய ஆச்சிரமம் அது; பெரும் புண்ணிய மூர்த்தியாகிய அவர் இத் திசைக்கு வந்தது முதல் இங்கே அரக்கர்கள் தம் பகைமை நீங்கிச் சாந்தமுள்ளவர்களாகி விட்டனர். அம்முனிவர் பெயரைக் கொண்டே இத்தென்திக்கும் **அகஸ்தியர் திசை** என்ற வெகு சாந்தமான பெயர்பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சுந் திசையாக விளங்குகின்றது" என்றும் வால்மீகி முனிவர் கூறுகின்ருர். இவற்ருல் இராவணன் தென்ஞட்டை யாளாதபடி அகத்தியர் செய்வித்தவர் என்ற தமிழ்ச் செய்திக்கு, வடமொழியிதிகாசமும் ஆதரவளித்தல் அறியத்தகும்.

---

* இவற்றையெல்லாம் "மதுரைக்காஞ்சியாராய்ச்சி" என்ற தலைப் பின்கீழ் 26- ஆண்டுகட்குமுன் யான் எழுதிய கட்டுரையுள்ளுங் குறித் துள்ளேன் (செந்தமிழ், தொகுதி-7).

## 17. முடிவுரை

இன்னும், இராமாயணசரிதங்கள் பல உவமையாகவும் எடுத்துக்காட்டாகவும் சங்கச்செய்யுட்களிற் கூறப்படுதலைக் காணலாம். உதாரணமாக, கோவலன் தன் மனைவியுடன் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டகன்றதும், அந்நகரம் இராமபிரானைப் பிரிந்த அயோத்தியினிலையை அடைந்ததாக ஒப்பிட்டு,

"பெருமகன் ஏவ லல்ல தியாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்" (சிலப் 13, 63-)

என்று இளங்கோவடிகள் பாடுகின்றார். 'மஹாவீர:' 'ஸத்யபராக்ரம:' என்று வால்மீகி பகவான் இராமபிரானைச் சிறப்பித்துக் கூறுதல்போல, **அருந்திறல்** என்று அப்பிரானை இளங்கோவடிகள் இங்கே குறிப்பிடுதல் அறியத்தக்கது. இவ்வாறே, இளைய பெருமாளான இலக்குமணரது தொண்டாற்றுந் திறத்தைக் காங்குவேளிர்—

"இறைமீக் கூறிய விராமன் நம்பி
மறுவொடு பெரிய மதலைக் கிளைய்ந்த
ஆனைப் பெரும்புகழ் யாமு மெய்தத்
தேனூர் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றுதும்" (3, 24, 90 - 4.)

னெப் பெருங்கதையிற் சிறப்பிக்கின்றார். இதனுள் 'லக்ஷ்மணர் என்பது, மறு (—உடல்மச்சம்) உடைமை பற்றி வழங்கிய பெயர் என்பதனை 'மறுவொடு பெரிய மதலை' என்ற தொடரால் அவ்வாசிரியர் குறித்தல் குறிப்பிடற்பாலது. ஜைனநூலான வடமொழி உத்தரபுராணத்தில் (பர்வம்-67, ச்லோ. 151) இராமாயண சரித்திரம் வருமிடத்து—"அந்தத் தேவனுன மணிசூளனவன் சக்கர ரேகை என்ற அடையாளத்துடன் கூடியவனுதலால் லக்ஷ்மணன் என்ற பெயருடையவனுனன்" என்ற கருத்தமைந்த சுலோகம் கூறப்பட்டுள்ளதென்பர்*. இது, ஜைனரான் அங்கொங்குவேள் கூறிய மேற்கண்ட தொடருடன் ஒப்பிட்டறியத்தக்கது. இங்ஙனமே, தனக்கு நேர்ந்த பழிக்கு அஞ்சிப் பூமிக்குள் ஒளித்துத் தன் புகழை உலகில் நாட்டிய சீதாபிராட்டியின் அரியபெரிய செயலை,

---

* ஜைன-கெஸட்' டத்திராதிபரான ஸ்ரீ: ஸி. எஸ். மல்லிநாதர் அவர்களால் இவ்விஷயம் அன்புடன் அறிவிக்கப்பட்டது.

"சிறுமையி னுணர்ந்த பெருமக னிரங்க
மண்கெழு மடந்தாய் மறைவிடந் தாவென
ஒன்றுபுரி கற்போ டுலகுவிளக் குறீஇப்
பொன்ற லாற்றிய புகழாள் போல" (1, 36, 338—41)

எனப் புலவர் பெருமானாகியஅவ்வேளிரே கூறுதல் அறியத்தக்கது இனி, இராவணன் கயிலையங்கிரியை எடுத்துநின்ற நிலையை,

"இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையி னரக்கர் கோமான்
தொடிபொலி தடக்கையிற் கீழ்புகுந் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடுறு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள்"

என்று குறிஞ்சிக்கலியில் (2) கபிலர் கூறுவர். இதனுள் வேங்கை மரத்தைப் புலியென்று தன் கோட்டாற் குத்தி அக்கோட்டைத் திரும்ப வாங்கமாட்டாது வருந்திக் கூப்பிடும் மதயானையின் நிலைக்கு இராவணன் கயிலையையெடுத்து வருந்திய நிலையை அவர் ஒப்பிட்டிருப்பது காண்க. தருக்க முதலிய சாஸ்திரப்பொருளை விரிக்குமிடத்தும்—"மீட்சியென்பது இராமன் வென்றானென, மாட்சியிலிராவணன் தோற்றமை மதித்தல்" என்பதுபோல (மணி 27, 53-4) இராமாயண சரிதத்தைத் திட்டாந்தங் கூறுதல் பண்டையோர் வழக்காம். இவ்வாறே, இராமாயண சம்பந்தமான சரிதங்கள் தமிழகத்தில் பெருக வழங்கிவந்துள்ளவற்றைத் தலமான்மியங்களானும் நாம் பலபடியாகத் தெரியலாகும். கழுகின் வேந்தாகிய சம்பாதி இருந்த வனம், காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்திருந்ததென்று மணிமேகலை கூறும். இச்சம்பாதிவனத்தைப் புள்ளிருக்கு வேளூர் என்பர். இதனை,

"வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்" (மணி. 3, 53—4)

"தள்ளாய சம்பாதி சடாயென்பர் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"
(தேவா. புள்ளிருக்கு. சம் 4.)

என்ற முன்னோர் வாக்குக்களால் உணர்க. இனி, இராவணன் பெருந்தேவியான மண்டோதரிக்குச் சிவபிரான் அருள்புரிந்ததனை—

"ஏர்தருமே ழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை யழகமர்வண் டோதரிக்குப்
பேரருளின்பமளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்"
(திருவாசகம், குயிற்பத்து, 1.)

"உந்துதிரைக் கடலைக் கடந்தன்
றோங்குமதி லிலங்கை யதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறிவார்" (ஷை, திருவார்த்தை. 5)

எனத் திருவாதவூரடிகள் அருளியதும் அரியதோர் தமிழ்ச்செய்தியாகும். பாண்டிநாட்டுத் திருவுத்தரகோசமங்கையில், அக்கினி தீர்த்தக்கரையிலே தம்மைநோக்கித் தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்குழாத்தின்முன்பு சிவபெருமான்தோன்றி, இலங்கையில் இராவணன் தேவியான மண்டோதரி தம்மை இடைவிடாது வழிபடுதலால் அவளுக்கு முதலில் அருள்புரிதற்குத் தாம் செல்ல வேண்டியிருத்தலையும், அம்முனிவர்க்குத் தாம் பிரசன்னமாகுங் காலத்தையுங் குறிப்பிட்டு இலங்கைசென்றனரென்றும், ஆண்டு மண்டோதரியின் விருப்பிற்கிசைந்து அவளுடன்கலந்து அவளை மகிழ்வித்து வந்தபோது, இலங்கேசன் அவளிருப்பிடத்தை நோக்கித் திடீரென்றுவர, சிவபிரான் குழந்தையுருக்கொண்டு அத் தேவிமடியிலிருத்தல் கண்டு அதுபற்றி அவன் உசாவ, ருஷிபத்தினியொருத்தியின் மகவென்பதை அவளால் அறிந்து அம்மகவின் அழகுக்கு வியந்து அதனைத் தழுவவும், குழவியானசிவபெருமான் மறைந்து, தம் தலத்தில் நோற்கும் முனிவர்க்கு அருள்புரியச் சென்றனர் என்றும் ஷை உத்தரகோசமங்கைத் தலபுராணம்* கூறும். இவ்வாறே, சேது புராணமுதலிய தலமான்மியங்களில் வழங்கும் இராமாயணவழக்குக்கள் பல. அவற்றையெல்லாம் இங்கு விரிப்பிற்பெருகும்; அவ்வம்மான்மியங்களை நோக்கியுணர்க. இவற்றால், சீராமசரிதம் சங்ககாலத்துத் தமிழ்மக்களுட் பெருவழக்குப்பெற்றிருந்த தென்பதும், தமிழிராமாயண நூல்கள் இயற்றப்பட்டிருந்தன வென்பதும், தென்னாட்டு வழக்கேயான சரித்திரக்கூறுகள் அச்சங்ககாலத்தும் பிற்காலத்தும் பெருக வழங்கிவந்தன என்பதும் நன்கறியலாகும்.

---

* இப்புராணம், கமலை ஞானப்பிரகாசர் சிஷ்யரான மாசிலாமணிச் சம்பந்தர் என்பவரால் இயற்றப்பெற்றது. இந்நூலுள் பார்ப்பதி தவம்புரிந்த அத்தியாயத்தில், 3-முதல் 10-வரையுள்ள பாடல்கள் இச்சரிதங் குறிப்பன. இந்நூல் அச்சிடப்பெற்றிலது.

# 3 கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குக்கள்*

## 1. தென்னாடும் கண்ணபிரானும் †

—:o:—

திருமாலைப் பரம்பொருளாகக்கொண்டு வழிபட்டுவந்த முறை தமிழ்மக்களது புராதனசமயங்களுள் ஒன்றாகும். இந்நாடு மக்களை யுடையதான காலந்தொட்டே திருமால்சமயமும் இங்குத்தோன்றி நிலைபெற்ற தென்பதற்குத் தமிழ்முன்னூல்களே தக்க சான்றுபகர் வன. கடல்சூழ்ந்த பூமியை நான்கு நிலங்களாகப் பகுத்தும் அந் நிலங்கட்குத் தெய்வங்களை வகுத்தும் போந்த ஆதித் தமிழாசிரியர் கள், காடுசார்ந்த நிலமான முல்லையையும் அதன் அதிதெய்வமான திருமாலையும் முதற்கண்வைத்துச் சிறப்பித்துள்ளதைப் பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தே காணலாம். எனவே, நாவிலம் என்ற பெயரை இப் பூபாகம் பெற்றதற்குமுன்பே திருமாலுக்குஉரிமையுந் தலைமையும் இக்நாட்டில் ஊன்றிவிட்டன என்பது தெளியப்படும். இத்தகைய உரிமைபற்றியே—

> " அங் கண் முல்லையின் தெய்வமென் றருந்தமி ழுரைக்கும்
> செங்கண்மால்" (பெரியபு. திருக்குறிப். 18.)

என்றார் சேக்கிழாரும். 'மாயோன்மேய காடுறையுலகம்' ஆன முல்லைக்குரிய மக்களை ஆயர் ஆய்ச்சியர் என்று கூறுவர் தமிழ் முன்னோர். கோகுலத்தவராய்த் 'தென்னவன் தொல்லிசைநட்ட குடியொடு தோன்றிய நல்லினத்தவர்' என்று கூறப்படும் இன்னோர், தம் குலத்து வளர்ந்தருளிய கண்ணபிரானைத் தம்

---

* செந்தமிழ், தொகுதி-8, பகுதி-4 (1909-10); தமிழர் நேசன் - தொ-10, பக். 97—105; 169—174.

† இப்பகுதி, 'ஸ்ரீவைஷ்ணவம்' என்னும் பெயரால் 1937-ம் ௵, திருவல்லிக்கேணி ஹானரரி-மாஜிஸ்த்ரேட், ஸ்ரீமான் ஆ. அரங்கநாத முதலியாரவர்கள் வெளியிட்ட வியாசத்திரட்டுநூலில், இந்நூலா சிரியர் எழுதிய முகவுரையைத் தழுவி யமைக்கப்பட்டது.

தொழுகுலமாகக் கொண்டவர் என்பது யாவரும் அறிவர். ஆகவே, மாயோன் என்று முன்னோர்களாற் குறிக்கப்பட்ட முல்லைத் தெய்வம், திருமாலின் பூர்ணவதார மூர்த்தியான கண்ணபிரானே என்பது பெறப்படுகின்றது. மாயோன் என்பதும் கண்ணன் என்பதும் 'கருநிறமுடையோன்' என்ற ஒத்த பொருளவாதல் காண்க. இவ்வுரிமை தலைமைகள் அப்பெருமானுக்கு இங்கமைந்ததற்கு, அவனது இறைமைக்குணங்களே காரணமாகும்.

> "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
> றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" (தொல். பொ. 60)

என, பூவைநிலை என்னும் புறத்துறைகூறுமிடத்து அக்கடவுளின் பொருள்சேர் புகழ்களைப் பலபட விசேடித்துத் தொல்காப்பியனார் அடுக்குதலாலுந் தெரியலாம்.* இவ்வாறு அவ்வாசிரியர் காலத்துக்கு முன்பே கண்ணபிரானைப் பரதெய்வமாகக் கொண்டு அப்பிரானது குழவிச் செயல்களில் தமிழ்மக்கள் ஈடுபட்டுவந்தனர் என்பதற்கு, அவர் கூறிய வேறுகுறிப்பும் ஒன்றுண்டு. மானிடராகிய பெண்மக்கள் அவ்வினத்து ஆண்மக்களிடமும் ஆண் குழவிகளிடமுமே யன்றிக் கடவுளரிடத்தும் கடவுட்குழவிகளிடத்துங் காமப்பகுதி செலுத்தற்குரியர் என்பதனை அவ்வாசிரியர்—

> "காமப் பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் மருங்கினு மென்மனார் புலவர்"
>
> "குழவி மருங்கினுங் கிழவ தாகும்" (தொல். பொரு. 83-4)

என்ற சூத்திரங்களாற் கூறுவர். இஃது அத்தகைய தெய்வக்குழவியாகிய கண்ணனிடம் ஆயமகளிர் கொண்ட காதல்வெள்ளத்தை உட்கொண்டு கூறியதென்றே கொள்ளற்பாலது.† சிலப்பதிகார முதலிய சங்கநூல்களிலும் ஆண்டாள் ஆழ்வாராதிகள் அருளிச்செயல்களினும் அமைந்த காதற் பாக்கள்யாவும் அவர் கண்ணனிடம்வைத்த இத்தகைக் காமப்பகுதியையே அனுகரித்துக்

---

* ஆழ்வார்கள் காலநிலை என்ற நூலின் தொடக்கத்தே இன்னோரன்ன செய்திகளெல்லாம் விரிய விளக்கப்பட்டுள்ளன.

† பிற்சூத்திரத்துக் 'குழவிமருங்கினும்' என்ற உம்மை முற்சூத்திரத்துள்ள கடவுளும் ஏனோருமாகிய இறந்ததை தழீஇயிற்று. கண்ணபிரான் தெய்வக்குழவியாகவே அவதரித்தும், அக்குழவிநிலையில் 'தந்தெய்வநிலை யுலகிற்புகவுய்த்தும்' போந்தமை பிரசித்தமாதலின், 'தெய்வக்குழவியின்மையின் மக்கட்குழவியே கொள்க' என்ற நச்சினார்க்கினியர் கருத்து ஏற்கத்தக்கதன்றென்க.

கூறியவை என்பது அறிஞர் அறிவர். இவற்ருல் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே திருமால்வழிபாடு தமிழகத்தில் வேரூன்றியிருந்தமை விளக்கமாம். வாசுதேவனை இக்கண்ணனை, சங்கர்ஷணமூர்த்தியான பலதேவருடன் கொண்டு போற்றியமுறை விந்தத்துக்கும் அப்பாலுள்ள வடநாடுகளிலே ஒருகாலத்துப் பிரபலமா யிருந்தது என்பது புராதன வடநூல்களாலும் சாஸனங்களாலும் தெரிந்தது.* அத்தகைய சங்கர்ஷண வாசுதேவ வணக்கமே தென்னுட்டிலும் பரவி வழங்கியதாம்; இதற்குச் சங்க நூல்கள்பலவும் தக்க சான்று பகர்வன. தொல்காப்பியனுர்க்கு இவ்வணக்கத்தைப்பற்றி வெளிப்படக்கூற நேராமற்போயினும், அவர்காலத்து. மாயோனை கண்ணன் வழிபாடேயன்றி நம்பி மூத்தபிரானைப் போற்று முறையும் இருந்ததென்பதற்கு அவர் நூலில் ஒரு சிறந்த குறிப்புண்டு. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், பனைக்குமுன் வரும் சொற்கள் புணரும் முறை கூறுமிடத்தே—

“ கொடிமுன் வரினே யையவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி” (285)

என, அதன்முன் ‘கொடி’ என்பது வருமொழியாக வருமிடத்து ஏனையவைபோல ஐகாரங்கெட்டு அம்முச்சாரியைபெருது ஐநிற்ப வல்லெழுத்துப் பெற்றுப் புணரும் என்று விதித்தல் காணலாம் அஃதாவது, பனங்கொடி எனப்படாது பனைக்கொடி என முடியும் என்பதாம். இங்ஙனம் பனைக்கொடியைத் தனியே எடுத்துக் கொண்டு ஆசிரியர் விதிகூறுதலின்று, அக்கொடி அக்காலத்து வழக்கு மிகுதிபெற்றிருந்தது என்பது பெறப்படும். இங்ஙனம் பிரபலம் பெற்ற பனைக்கொடி, நம்பி மூத்தபிரானை பலதேவர்க் கன்றி வேறெவர்க்கும் உரியதன்றென்பது கற்ருர் அறிவர். எனவே, நாட்டாரது வணக்கத்துக்கும் மரியாதைக்கும் பெரிதும் உரியதாயிருந்தது அக்கொடி என்பதும், அதுபற்றியே தொல்காப்பியனுர் அத் தொடர்வழக்கின் முறையை உணர்த்தலாயினர் என்பதும் பெறப்படுவன. இதுகாறுங் கூறியவற்ருல், சங்கர்ஷண வாசுதேவர்கள் வடநாட்டிற்போலவே தமிழகத்தும் தொன்றுதொட்டு வழிபடப்பெற்றுவந்த அவதாரமூர்த்திகள் என்பது விளக்கமாகும்.

இங்ஙனம் தமிழ்மக்களின் ஆதிதெய்வங்களுள் ஒருவரான கண்ணன் தாமே தனித்தும் நம்பிமூத்தபிரானுடனும் நிகழ்த்தியவாக அம்மக்கள் வழங்கிவந்த சரிதங்கள் பல. அவற்றுள், வடநூல்

* Dr. Bhandarkar's Vaishnavaism Saivism and Minor Religious Sistems, pp. 3-4.

வழக்குப் பெற்றவை அநேகமேனும் தமிழகத்துக்கே உரிய வரலாறுகளும் சிலவுள. இவற்றுக்குப் பாரதம் பாகவதம் முதலிய புராணேதிகாசங்களில் ஆதாரங்காண்டல் மிகவரிது. அதனால், கண்ணபிரான் வழியினராய்த் தென்னாட்டிற் குடியேறிய வேளிரும் அப்பிரான் வளர்ந்த கோகுலத்தவராய் இங்குவந்தேறிய ஆயரும் போன்ற பழந்தமிழ்க் குடிகளால் அச்சரிதவழக்குக்கள் இங்கு வழங்கி நடைபெறலாயின என்றே கொள்ளத்தகும். அவ்வரலாறுகளுட் சிறப்புடையவை—நப்பின்னைப்பிராட்டி திருமணம், குருந்தொசித்தது, குடக்கூத்தாடியது, ததிபாண்டற்கு வீடளித்தது முதலியனவாம். அவற்றை ஒவ்வொன்றாக இனி எழுதுவேன்.

---

## 2. நப்பின்னைப் பிராட்டியார்

கண்ணபிரான் மணந்த பிராட்டிமார்களுள்ளே, தமிழ் நூல்களில் மிகுதியுஞ் சிறப்பித்துக் கூறப்படுவோர், **நப்பின்னை** என்ற திருநாமமுடைய தேவியாராவர். ஆழ்வார்கள் மட்டுமன்றிப் பிறசான்றோரெல்லாம் இப்பிராட்டியையே விசேடமாகச் சிறப்பித்துக் கூறுவதை அடியில்வருந் தொடர்களிற் காணலாம்.

"வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாள்நம் பின்னைதானும்" (சிலப்பதிகாரம்)

"மாமணி வண்ணனுந் தம்முனும் பின்னையும்
ஆடிய குரவையிஃ தாமென வேத்தியும்" (மணிமேகலை)

"நிலமகட்குக் கேள்வனும் நீணிரை நப்பின்னை
யிலவலர்வா யின்னமிர்த மெய்தின னன்றே" (சிந்தாமணி)

"ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவன்" (திருக்கோவையார்)

"பின்னை நம்பும் புயத்தான்" (தேவாரம்)

வடநூல்களில், கண்ணன்தேவியருட் சிறந்தவளாகக் கூறப்பட்ட உருக்குமிணிப்பிராட்டியாரை **நம்மாழ்வார்**—

"அன்றங் கமர்வென் றுருப்பிணிநங்கை
யணிநெடுந் தோள்புணர்ந்தான்" (திருவாய். 7, 10, 6)

என்றும், **பெரியாழ்வார்**—

"உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக்கொண்டு
விருப்புற்றங் கேக (பெரியாழ். 3, 9, 3)

" வாரேற்ற கொங்கை யுருப்பிணியை
வலியப் பிடித்துக்கொண்டு, தேரேற்றி" (பெரி, 4, 1. 5)

" உருப்பிணிநங்கை தன்னை மீட்பான்தொடர்ந் தோடிச்சென்ற
உருப்பனை யோட்டிக்கொண்டிட் டுறைத்திட்ட வுறைப்பன்
மலை" (பெரி, 4. 3, 1)

என்றும் கூறிய இடங்கள் தவிர, ஏனைய இடங்களில் எல்லாம் நப்பின்னையையே இவர்களும் மற்ற ஆழ்வார்களும் கூறியிருத்தல் அறியத்தக்கது. இப்பிராட்டியைப் பின்னை, பிஞ்ஞை, நீளை எனவும் வழங்குவர். நேமிநாத விருத்தியுடையார், "பாலே திணையே" என்ற வெண்பா வுரையுள்—

" உப்பக்க நோக்கி * உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப"

என்று, நல்கூர் வேள்வியார் பாடிய திருவள்ளுவமாலைப் பாட்டை (21) எடுத்துக்காட்டி, "இதனுள் உபகேசியார்—நப்பின்னைப் பிராட்டியார்" என்று உரை கூறுதலால், உபகேசி என்பது இவர்க்குப் பழையகாலத்து வழங்கிய பெயரென்பது அறியப்படுகின்றது. "நப்பின்னை என்பதிலுள்ள ந சிறப்புப் பொருளுணர்த்துவ தோர் இடைச் சொல்: நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன்

* 'இச் செய்யுளில் 'உபகேசி தோண்மணந்தான்' என்றது கண்ணபிரானை. உபகேசம்-மயிராற் பின்னிய பின்; அதனாற் பெயர் சிறந்தாள் பின்னைப்பிராட்டி. உபகேசத்தையுடையாளை உபகேசி என்பது தமிழ்நூன் முடிபு: குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்றாற்போலக் கொள்க. இதனால், உபகேசியும் பின்னையும் ஒருபொருட் பன்மொழியாதல் காண்க"—எனவும், இவ் வெண்பாவைக் காட்டி, "இதனுள் உபகேசியார்-நப்பின்னைப் பிராட்டியார்" என நேமிநாதவிருத்திகாரர் கூறியவாற்றானும் நன்குணர்க...இக் கருத்தறியாதார் உபகேசியை உமாதேவியார் எனவும் உத்தர மதுரையை வடதிருவாலவாய் எனவும் உரைத்தார். அவர், 'கேசி - திருமால், அஃது அக்கடவுள் சகச்சிரநாமத்திற் கண்டது; கேசிக்குப் பின்னே பிறந்தவள் உபகேசி என்றாயது உபேந்திரன் என்பது போல' என்றார். கேசி திருமாற்குப் பெயரன்மையும், அஃது அக்கடவுள் ஆயிரநாமத்துள் இன்மையும் வல்லார்வாய்த் தேறுக 'கேசவ: கேசிஹா ஹரி:' என்புழிக் கேசிஹா என்பது கேசி என்னும் அசுரனைக் கொன்றோன் என்னும் பொருட்டு. இதனை அந்நூலுரைகளிற் கண்டுகொள்க. கேசி திருமாற்குப் பெயரன்மையானே அதுபற்றிவந்தன யாவும் உரையன்மை காண்க" எனவும் ஸேதுஸம்ஸ்தானம் மஹாவித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்கள் எழுதிய உரைநயம் இங்கு அறியத்தக்கது (செந்தமிழ். தொகுதி 1, பகுதி. 2).

என்றாற் போல; நம்பின்னை (என்பதன்) விகாரமுமாம்" என்பர் நச்சினார்க்கினியர் (சீவக. நாமக. 74, உரை.)

இப்பிராட்டியை, ஆயர்குல மகள் எனவும் அவ்வாயர் பழைமையாகக் கொண்டொழுகிய மணமுறைப்படி கன்யாசுல்க மாக நிறுத்தப்பெற்ற ஏழுவிடைகளையும் தழுவி யடர்த்து இந் நங்கையைக் கண்ணபிரான் மணம்புரிந்தனர் எனவும் பண்டைத் தமிழ் நூல்களெல்லாங் கூறுகின்றன. கூர்நுதிக் கோட்டினை யுடைய இமிலேறுகளைப் பறையறைந்து வெளியில் விடுத்து அவற்றைத் தழுவிப்பிடிப்பானுக்கே மகட்கொடுப்பது என்னும் மணவிதி ஆயர்கள் தொன்றுதொட்டு நடத்திவந்ததென்பது, கலித்தொகை முல்லைப்பகுதியை நோக்குவார்க்கு நன்குவிளங் கும். அம் முறைப்படி பெருமான் விடை யேழும் அடர்த்த செயலை,

" ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமி
[லேற்றுவன்கூன்
கோட்டிடை யாடினை கூத்தட லாயர்தங் கொம்பினுக்கே"
(திருவிருத். 21)

" நிறையினாற் குறைவில்லா நெடும்பணைத்தோண் மடப்பின்னை
பொறையினன் முலையணைவான் பொருவிடையே
[முடர்த்துகந்த" (திருவாய். 4, 8, 4)

என்று சிறப்பித் தருளினர் நம்மாழ்வாரும். இவ் வேழுவிடை களும் பலநிறமுடையனவாகச் சிலப்பதிகாரம் வருணிக்கும். இந் நப்பின்னை யமுனையாற்றில் ஒருநாள் மாலையிலே தன்னை வஞ்சஞ் செய்த கண்ணபிரானையும் தன்னழகில் ஈடுபடச்செய்து மயக்கி னாள் என்பது பழைய வரலாறுகும். இதனை—

" விழுமிழை நல்லார் வெருள்பிணைபோல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும்—தொழுநையுள் *
மாலையுள் மாலை மயக்குறுத் தாள.·.தால்
சால்பினைச் சால்பறுக்கு மாறு" (பழமொழி. 13)

" வஞ்சஞ் செய்தான் றொழுநைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தாள் நிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்"
(சிலப்· ஆய்ச்சியர்குரவை)

என்ற முன்னோர் கூற்றுக்களால் உணர்க. இங்ஙனம் கண்ணன் பின்னையை மணந்தபின், அவனுடன் அப்பெருமான் நிகழ்த்திய சரிதைகளைப் பழைய தமிழ்மக்கள் நாடகமாக நடித்துவந்தனர்

* தொழுநை-யமுனையாறு; 'பீதாஜ்நா' என்றும் இந்நிலை டாலமி வழங்கியிருத்தல் ஈண்டு ஒப்பிடத்தகும்.

என்பது இளங்கோவடிகள் வாக்கால் அறியப்படுகின்றது. இந் நாடகங்களில் சிறந்தது—ஆயர்பாடியிலே தாதெருமன்றம் (—பகலினெருக்கலை வேலியாக இட்டமைத்த பொதுவிடம்) என்றவிடத்து, யசோதைப் பிராட்டியும் பிறரும் காணுமாறு, கண்ணனும் நம்பிமூத்தபிரானும் (பலராமரும்), பின்னையை நடுவிற் கொண்டு ஆடிய அற்புதக் குரவையே யாகும்.

“ ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முனுடிய
வாலசரிதை நாடகங்களில்
வேனெடுங்கட் பிஞ்ஞையொடாடிய
குரவையாடுதும் யாமென்றாள்
கறவைகன்றுதுயர் நீங்குகவெனவே”

“ மாயவன்றன் முன்னினெடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார்
[தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே.”

என்ற சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர்குரவைப்பகுதி இங்கு அறியத் தக்கது.' குரவையாவது “செய்தோர்செய்த காமமும்விறலும் எய்த எழுவர்மங்கையர் கைகோத்துச் சுழன்றுடுதல்” என்பர். இங்ஙனம் குரவை நிகழ்த்திய பின்னைப்பிராட்டி ஆயர்குலமகள் என்பதே தமிழ் முன்னையோர் வழங்கிய கொள்கை என்பது அடியில் வரும் பாடற்பகுதிகளாலும் விளங்கும்.

“ குலம்நினையல் நம்பி ........
நிலமகட்குக் கேள்வனும் நீணிரை நப்பின்னை
இலவலர்வா யின்னமிர்த மெய்தினு னன்றே” (சீவக. 482)

“ ஆயனுகி ஆயமங்கை வேயதோள் விரும்பினுய்”
(திருச்ச. விருத். 41)

இனி, வடநூல்களை ஆராயுமிடத்து, கண்ணன் மணந்த தேவியர் பல்லாயிரவரென்பதும், அவருள் தலைசிறந்தார்—உருக்குமிணிப் பிராட்டி, சத்தியபாமை, ஜாம்பவதி, காளிந்தி, மித்திரவிந்தை, சத்தியை, பத்திரை, லக்ஷ்மணை என்ற அஷ்டமஹிஷிகள் என்பதும், அவருள்ளும் கண்ணனல் மிக உகந்தருளப்பெற்றவர் முதலிருவருமே என்பதும் பாகவதத்தால அறியப்படும். விஷ்ணு புராணத்தில் நாக்னஜிதீ எனக் காணப்படும் பெயர் சத்தியைக் குறிப்பதாம். அயோத்தியரசனுன நக்னஜித் என்பான் மகளாதலால் நாக்னஜிதீ எனப்பட்டாள். சத்யவதி என்றும் இத்தேவி வழங்கப்பெறுவள். பேரெழில் வாய்ந்த அவளைக் காதலித்து அரசர் பலருந் தன்னைத் துன்புறுத்தி வந்தமையால்

இந்த நக்னஜித்தரசன், தன் நிரைகாவலனும் யசோதைப் பிராட்டிக்குத் தம்பியுமான கும்பாண்டன் என்பவனிடமுள்ள கொடிய விருஷபங்களேழையும் தழுவிப்பிடிப்பவற்கே தன் மகளை மணம் புரிவிப்பதாக நிச்சயிக்க, அவ்வெருதுகட்கு அஞ்சி அரசர்கள் மகட்பேசுதலைத் தவிர்ந்தொழிந்தாராக, அக்காலத்துக் கண்ணபிரான் அவ் வரசனிடஞ்சென்று அவனுற் கன்யாசுல்கமாக வைக்கப்பட்ட விடையேழையுந் தழுவிப்பிடித்து, சத்தியை என்ற அவன்கன்னியை மணம்புரிந்தார் என்பது பாகவத வரலாறு. இதனால், விடை தழுவிமணந்த கண்ணன்தேவி, க்ஷத்ரிய வமிசத்தவள் என்பதே புராணக் கருத்தாதல் விளங்கும். இப்பாகவத வரலாறு தமிழ் நூல்கள் கூறும் எழுவிடை தழுவிய செய்தியோடு ஒற்றுமை பெறினும், ஆயர்குலத்தினளாகக் கூறப்பட்ட நப்பின்னை க்ஷத்திரிய மரபினளாகக் காணப்படுவது மட்டும் வேறுபடுகின்றது. அன்றியும், இச்சத்தியவதியைத் திருமணம்புரிந்து அவளுடன் கண்ணன் துவாரகைக்குத் திரும்பும்போது, அரசர்பலர் திரண்டெதிர்த்தனராக, அப்போது உடனிருந்த அருச்சுனன் அவர்கள்மேற் சரமழை பொழிந்து புறங்கொடுத்தோடச் செய்தானென்ற வரலாற்றையும் பாகவதங்கூறும். இது, கண்ணன் கோகுலத்திருந்த காலத்தில் நப்பின்னையை மணந்ததாகக் கூறுந் தமிழ்ச் சரிதத்துடன் மாறுபடுவதாகும்.

இனி, நெல்லிநகர் வரதராசர் அருளிச்செய்த பாகவதத்தில், நப்பின்னையும் நாக்னஜிதீயும் கண்ணனது வெவ்வேறு தேவியராக 44, 85-ம் அத்தியாயங்களில் முறையே கதைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் முன்னதான நப்பின்னைப் படலத்துள் யசோதைப்பிராட்டியின் தமையனாய் மிதிலையில் வாழ்ந்த கும்பகன் என்ற ஆயர் தலைவனது பசுத்தொழுவில், காலநேமியின் புத்திரர் எழுவர் விடையுருவங்கொண்டு யாவரையும் அச்சுறுத்தி வந்தனர் என்றும், மிதிலாதிபனை வெகுலாசுவன் என்பவனது சேனைகளால் அவை அடக்கப்படவில்லையென்றும், அவற்றைத் தழுவியடர்ப்பவர்க்குத் தன் மகள் பின்னையை மணம்புரிந்து கொடுப்பதாகக் கும்பகன் நியமனஞ்செய்தும் ஒருவரும் வந்திலரென்றும், அதனால் கோகுலத்தினின்று கண்ணன் அழைக்கப்பெற, அப்பெருமான் அசுராவிஷ்டமான அவ்விருஷபங்களேழையும் தழுவியடர்த்து அவன் மகளைத் திருமணம் புரிந்தனர் என்றும் சரித்திரங் கூறப்படுகின்றது. நாக்னஜிதீயின் திருமணப்படலத்துள், மேற்குறித்த பாகவத வரலாறே பெரும்பாலும் உள்ளது. இங்ஙனம் விடை தழுவிமணந்த தேவியர் இருவராக அவ்வரதராசர் பாகவதங் கூறுவதற்கு ஆதாரமான நூல் இன்னதென்பது தெரியவில்லை. இவ்வாறு வடமொழிப் புராண வரலாறுகள் மாறுபடினும், நப்

பின்னைப்பிராட்டியார் ஆயர்குலமகளே என்பதும், கண்ணன் விடை தழுவி அவரை மணந்தது, கோகுலத்தில் அப்பெருமான் வளர்ந்தருளிய காலத்து நிகழ்ச்சி என்பதுமே அநாதியாகத் தமிழ் நாட்டில் வழங்கிவந்த வரலாறு என்று தெரிகின்றது. "நீளா துங்கஸ்தனகிரீதட" என்ற திருப்பாவைத் தனியனுக்கு வியாக்யானஞ் செய்யுமிடத்தே—ஸ்ரீ பிள்ளைலோகம்ஜீயர், "இவளும் யசோதைப்பிராட்டி சகோதரரான கும்பர் குமாரத்தியாக அவதரித்தபடி" * எனக் கூறியும், "மிதிலா தேசத்தே நந்தகோபன் மைத்துனனும், மிகுந்த ஆனிரையுடையோனும், யசோதையார்க்குத் தம்பியுமான கும்பகனுக்கும் அவன் தேவி தர்மதை என்பாட்கும் ஸ்ரீ தாமா என்ற புத்திரனும் நீளை என்ற கன்னிகையும் பிறந்தார்கள்" என்னுங் கருத்துடைய பழைய சுலோகங்களை உதாகரித்தும் போந்தமையால், ஆயர்குலமகளே நீளை என்ற நப்பின்னை என்பது வலியுறுகின்றது.

இனி, கண்ணன் நப்பின்னைப்பிராட்டியுடனும் பலராமருடனுங் கூடி ஆயர்பாடியில் தாதெருமன்றத்தே பலருங்காணக் குரவைக் கூத்து ஆடியதாகப் பழைய தமிழ் நூல்கள் கூறும் வரலாறு, பாகவதம் விஷ்ணுபுராணம் முதலிய வடநூல்களிற் காண்டல் அரிது. ஆனால் அப்புராணங்களில் கோவர்த்தனத்தைக் குடையாகத் தாங்கிய பின்னர், கண்ணன் கோபியர்களெல்லாருடனும் சேர்ந்து, "ராஸக்ரீடை" என்ற குரவைக்கூத்து நடத்தியருளினர் என்று கூறப்பட்டுள்ளது. "குரவை யாய்ச்சியரோடு கோத்ததும்" என்றார் நம்மாழ்வாரும்.

நாக்னஜிதீ என்ற சத்யவதியை விடை தழுவி மணந்த சரித்திரமொன்று தவிர வேறு நிகழ்ச்சியேனும் புகழ்ச்சியேனும் புராணங்களிலும் பிற வடநூல்களிலும் காணப்படவில்லை. பழைய தமிழ் நூல்களோ, கண்ணபிரானுடைய மற்றத் தேவியரைப்பற்றி ஒன்றுமே கூறாமல், நப்பின்னையோடு அப்பெருமான் புரிந்த லீலைகளையே கூறுகின்றன. வடநாட்டார் **இராதாதேவி**யைக் கண்ணன் காதலியருட் சிறந்தவளாகக் கொண்டாடுதல் போல, தென்னாட்டவராற் பண்டைகாலமுதலே பாராட்டப்படுந் தேவி இந்நப்பின்னைப் பிராட்டியேயாவர். இவற்றால் இப்பிராட்டியைப்பற்றி வடநாட்டார்க்குத் தெரிந்தவற்றினும், வேறுபாடும் அதிகமுமான வரலாறுகள் தமிழகத்திற் பழங்காலமுதலே வழங்கலாயின என்பது நாம் நன்கறியக்கூடியது.

* இவை, ஹரிவம்சத்துள்ளன என்பர்.

## 3. குருந்தொசித்தது

கண்ணபிரானது பாலசரிதங்களிலே, அப்பெருமான் 'குருந்த மரத்தை ஒசித்த' வரலாறும் ஒன்றாகும். இதனை,

"பரப்புற்ற, கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற்
பாடுதும்"

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்"

"கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்"
(சிலப். ஆய்ச். குரவை)

"காமருசீர்த், தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்"
(திரிகடுகம்)

என்னும் சங்ககாலத்துச் சான்றோர் செய்யுட்பகுதிகளாலும்,

"ஆன்குருந்தம்...மேய்த்தொடித்து" (பொய்கையார்.)

"குருந்த மொன்றொசித் தானொடுஞ்சென்று கூடியாடி
விழாச்செய்து" (பெரியாழ்வார்.)

"கொங்கலர்ந்த மலர்க்குருந்த மொசித்த கோவலன்"
(திருமங்கையார்.)

"குருந்திடைக் கூறைபணியாய்" (ஆண்டாள்.)

என்னும் ஆழ்வார்கள் திருவாக்குக்களாலும் அறியலாம். கண்ணபிரான் யமுனையில் நீராடிநின்ற கோபியரின் துகில்களை ஒருங்கு வாரிக்கொண்டு, அந்நதிக்கரையில் இருந்த குருந்தமரத்தின்மேல் ஏறப்போவதைக் கண்டறிந்தவனும் கஞ்சனால் ஏவப்பட்டவனுமாகிய அசுரனொருவன், அப்பெருமானை நலிதற்காக அம்மரத்தில் ஆவேசித்துக்கிடந்தான் என்பதும்,அஃதறிந்த கண்ணன் அந்த மரத்தை முறித்துப் போகட்டார் என்பதும் புராண வரலாறும். "கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்" என்ற சிலப்பதிகாரத் தொடர்க்கு—"புனக்கொல்லையைச் சார்ந்தவிடத்து வஞ்சனையால் வந்து நின்ற குருந்தை முறித்த மாயவன்" என்று அடியார்க்குநல்லார் பொருள் கூறியதும், 'குருந்தொசித்த' எனவரும் ஆழ்வார் பாசுரத் தொடர்கட்கு 'அசுராவிஷ்டமான குருந்து' என்று முன்னோர் வ்யாக்யானஞ் செய்திருத்தலும் ஈண்டு அறியத்தக்கன. இனி, சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகத்தில் (209)—

"நீனிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுகை யாற்றுட்
கோனிற வளையி னார்க்குக் குருந்தவ னொசித்த தென்றான்"

என்ற பாட்டும், "வேந்தே! மாயோன் பலதுகில்களைக் கவர்ந்து தம்முனாகிய பானிறவண்ணன் (பலராமன்) நோக்கின் பழியுடைத்தென்றுகாண், தொழுனையாற்றிலே கோவியர்க்குக் குருந்தொசித்தது; இஃது அங்ஙனம் தீது என்றான் என்க" என்ற நச்சினார்க்கினியர் உரையும்—குருந்தொசித்த வரலாற்றை மற்றொருவகையாகக் கூறுவனவாகும். ஒருநாள் யமுனையாற்றிலே நீரில் விளையாடிக் கொண்டிருந்த கோவியருடைய துகில்களையெல்லாம் விளையாட்டுநிமித்தம் கவர்ந்துகொண்டு கரையிலுள்ள குருந்தமரத்தில் ஏறி நின்ற கண்ணபிரான், தம்முடைய முன்னோனாகிய பலராமன் ஆங்கு வருதலையறிந்து, தம் செய்கையை அவன் காணின் தனக்கு மிக்க பழியுண்டாகும் என்று நினைத்து, அக்குருந்தமரத்தை முறித்து யமுனையாற்றில் வீழச்செய்து, தாம் கவர்ந்த துகில்களை நீரினின்ற அக்கோவியர் எளிதிற் பெறும் வண்ணம் செய்ததன்றித் தாமும் நீந்தி வேறிடஞ்சென்றார்" என்று சைனர் கூறுவர் என்றும், குருந்தவன் ஒசித்த தென்பதற்குக் குருந்தமரத்தில் ஒளித்துக்கொண்டதென்று அவர்களில் ஒருசாரார் பொருள்கூறுவ துண்டென்றும் தெரியவருகின்றன.* இவ்வாறு சைனர்கூறுங் கதை, முற்கூறிய புராணவரலாற்றோடு மாறுபடுவது மட்டுமன்றிச் சிந்தாமணிப் பாட்டின் உள்வீடான கருத்தைச் சிறிது மிகைப்படுத்துவதாகும். ஆயினும் பலராமன் வருதலை அறிந்து, கோபியரது மானங்காக்கவேண்டிக் கண்ணன் குருக்கொசித்துத் தம்செயலைத் தமயனறியாமற் செய்தார் என்ற அளவிலுள்ள வரலாறு, தமிழ்நாட்டிற் பழங்காலத்தில் வழங்கியதென்றே சொல்லலாம். அகநானூற்றில் மதுரை மருதனிளநாகனார் என்ற சங்கப்புலவர் வாக்காயுள்ள பாடலின் (59) ஒருபகுதி அடியில் வருமாறு:—

> " வடாஅது, வண்புனற் றொழுநை வார்மண லகன்றுறை
> அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
> மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
> புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை
> நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
> படிஞிமிறு கடியுங் களிறே" என்பது.

இதனுள், 'வடக்கணுள்ள யமுனையாற்றின் துறையிலே நீராடிநின்ற கோவியர், தழையை உடுத்துத் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளுதற்பொருட்டு மரத்தை வளைத்துக் கொடுத்த திருமாலைப்

---

* மஹாமஹோபாத்யாய: ஐயரவர்கள் பதிப்பித்த சீவக சிந்தாமணி, மூன்றாம் பதிப்பின் விசேடக்குறிப்பு, 197-ம் பக்கம் காண்க.

போல, களிறனது தன் பெண்யானை உண்ணும்படி யாமரத்தை வளைத்துக் கொடுத்துத் தன் கன்னத்து மதநீரிற்படியும் வண்டு களைக் கடியாநிற்கும், கணவர் சென்ற வழியின்கண்; அவர் அது கண்டு மேற்செல்லாது திரும்புவர்" என்று—தலைவனது பிரிவின் கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழி சொல்லியதாக அப்புலவர் பாடுதல் காணலாம். இவ்வடிகளுள் "அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்-மரஞ்செலமிதித்த மாஅல்" என்றதன் வரலாறுபற்றி அகநானூற்றின் பழைய உரைகாரர் எழுதியுள்ள செய்தி பின்வருமாறு :—

"ஆயர்பெண்கள் குளியாநின்றார்களாக அவர் இட்டு வைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக்கொண்டு (கண்ணன்) குருந்தமரத்து ஏறினாராக, அவ்வளவில் நம்பிமூத்தபிரான் (பலராமர்) வந்தாராக, அவர்க்கு ஒருகாலத்தே கூடமறைதற்கு மற்றொரு வழியின்மையின் ஏறிநின்ற குருந்தமரத்துக் கொம்பைத் தாழ்த்துக்கொடுத்தார், அதற்குள்ளே அடங்கி மறைவாராக. அவர் போமளவும் தானையாக வுடுக்கத் தாழ்த்தார் என்பாருமுளர்......ஒற்றி-வளைத்து" எனக் காண்க.

இதனால், கோவியர் துகில்களைக் கண்ணபிரான் கவர்ந்தபின் எதிர்வந்த பலதேவன் காணுவகை அம்மகளிர் ஒருங்கு மறையும் படி அப்பிரான் குருந்தமரக்கொம்பை வளைத்துக்கொடுத்தார் என்பதே சங்ககாலத்து வழங்கிய சரிதமாதல் தெரியலாம். 'தண்டழை யுடீஇயர்' என்பதனால், முன்பே துகில் கவரப் பட்டமை பெறப்படும். பிடியுண்ணும்படி களிறு யாமரக்கொம்பை ஒற்றி (வளைத்துக்) கொடுத்த செயலுக்குக் கண்ணன் மரஞ்செல மிதித்ததைப் புலவர் உவமை கூறுதலால், 'குருந் தொசித்தது' என்பதற்குக் குருந்த மரக்கொம்புகளுள்ளே மறையும்படி அதனை வளைத்துக் கொடுத்தது' என்பதே பொருளாதல் தெரியலாம். ஆகவே, "தொழுநையாற்றுட் கோனிற வளையினார்க்குக் குருந்தவ னொசித்தது" என்று சிந்தாமணியுடையார் கூறியதும் மேற்கூறிய அகநானூற்று வரலாற்றையேயன்றிப் பிறிதன்றென்பதும், அத னுல் அவர்கூறிய ஒசித்தல் என்ற சொற்கு முறித்தல், ஒளித்தல் என்று பிறர் உரைத்த பொருள்கள் ஏற்புடையனவல்ல என்பதும் தெளிவாதல் காண்க.

"நுண்கருமை கொண்டொசிந்து" (சீவக. 166)

"வாயருகு வந்தொசிந்து" (ஷை, 595)

என்ற தொடர்களில் ஒசிதல் வளைதற்பொருளில் வருதலின் ஈண்டு ஒசித்தல் வளைத்தலேயாம் என்க. நச்சினார்க்கினியர், மேற்குறித்த சிந்தாமணித் தொடரின் பொருளையும் கதையையும்

ளங்கவைத்தில ராயினும், சங்கச் செய்யுட்களின் சொற்பொருள் வழக்குக்களைப் பெரிதும் தழுவிப் பாடுதலையே இயல்பாகவுடைய சிந்தாமணியாசிரியர், ஈண்டும் அகநானூற்றுத் தொடரில் அமைந்த வரலாற்றை உட்கொண்டு அமைத்தனர் என்பதே பொருத்தம். "கொல்லைப்புனத்துக் குருந்தொசித்த மாயவன்" "கொல்லையஞ்சாரற் குருந்தொசித்த மாயவன்" என்று இளங்கோ வடிகள் கூறிய தொடர்களும், அவ் அகநானூற்று வரலாற்றினும் வேறுபட்ட கதையுடையனவாகக் கொள்ளவேண்டுவன அல்ல. இத்தொடர்கட்கு அடியார்க்கு நல்லார் "கொல்லைப்பக்கத்தில் வஞ்சனையால் வந்துநின்ற குருந்தை முறித்துப் போகட்ட மாயவன்" என்று பொருள் கூறினரேனும், "யமுனையாற்றுப் பக்கத்ததான முல்லைநிலத்துள்ள குருந்த மரத்தைக் கோவியர்க்காக வளைத்த கண்ணன்" என்று, முன் வழக்குக்கு இயையப் பொருள்கொள்ளலே ஏற்புடையதென்க.

இவ்வாறு பலராமன் காணுமைப்பொருட்டுக் கண்ணன் தழைத்த குருந்தங்கொம்பைத் தாழ்த்துக்கொடுத்து ஆயர்பெண்களின் மானங்காத்த வரலாறு முழுதும் பழைய 'தமிழ்ச்செய்தியேயன்றி வடநூல் வழக்குடையதன்று. பாகவதமுதலிய புராணங்களில் மார்கழி நோன்புக்காகக் காலையில் யமுனையில் நீராடிநின்ற கோவியரது துகில்களையெல்லாம்வாரிக்கொண்டு கண்ணன் ஏறிய மரம், **கடம்பு** என்றே கூறப்பட்டுள்ளது.

> " அமிழ்திற் றோன்றிய வம்மலர்த் திருமக ளேய்ப்ப
> இமிழ்தி ரைப்புன லாடுமவ் வின்னகை மடவார்
> உமிழ்நி லாத்திகழ் பூந்துகி லொருங்குகைக் கொண்டு
> கமழ லந்துறைக் கடம்பின்மே லேறினன் கண்ணன்"

என்றார் **செவ்வைச்சூடுவாரும்** (பாகவத. கோவியர்துகில்கவர். 18). அன்றியும், அக்கடம்பு அசுராவிஷ்டமானதென்று கூறாமல், கண்ணன் திருவடி தீண்டப்பெற்றதனால் நற்கதி பெற்றதாக அப்புராணங்கள் கூறுகின்றன. ஆயினும், வரதராசர் அருளிய பாகவதம், கூறைகொள் படலத்திலே—

> "விரைவினில்வந் தாய்ச்சியர்பொற் கலைகள் வாரி
> வெறியமலர்க் குருந்தேறி நகைத்து நின்றான்"
>
> "அம்பர மெல்லாம் வாரி யழகிய குருந்தி னேறும்
> உம்பர்கள் பெருமான் றன்னை"

என்று, கண்ணன் கூறைகொண்டேறிய மரம் குருந்தென்று கூறப்பட்டுள்ளது. இக்கூற்றுக்கு ஆதாரமான வடநூல்யாதோ,தெரிந்தி

லது. தமிழ்வழக்குக்கேற்ப அங்ஙனம் பாடப்பட்டதாயினும் ஆகலாம். மேற்கூறிய அகநானூற்று வரலாற்றைத் தழுவிய சரித்திரம் வரதராசர் பாகவதத்தும் இல்லையாயினும், "குருந்திடைக் கூறை பணியாய்" என வரும் ஆண்டாள் பாசுரத் தொடர்க்கு அவர் பாடிய சரிதம் ஒருபடியாக ஏற்றதாதல் அறியலாகும். இஃதன்றிக் கண்ணனேறிய மரம் புன்னையென்று கூறும் வழக்கும் உண்டு (திருவரங்கத் தந்தாதி. 62). இவற்றால், கண்ணன் குருந்தொசித்ததுபற்றித் தமிழ் நாட்டிற் பழங்காலத்தே வழங்கிய வரலாறு இஃதென்பது அறியலாம்.

---

## 4. குடக்கூத்து முதலிய ஆடல்கள்

கண்ணபிரான்பேரனும் பிரத்தியும்நன் மகனுமாகிய அநிருத்தன், சோணிதபுரத்தே பாணாசுரன் மகளான உஷாதேவியைக் காதலித்து அவளோடிருத்தலை அவ்வசுரன் கண்டு அவனைச் சிறைப்படுத்த, அச்செய்தி தெரிந்து கண்ணபிரான் அவ்வசுரனுடன் பெரும்போர்புரிந்து தம் பேரனைச் சிறைமீட்ட வரலாறு புராணங்களிற்கூறப்பட்டுள்ளது. பழைய தமிழ்நூல்களில், இச்சரித்திர சம்பந்தமாக மூன்று கூத்துக்கள் கூறப்படுகின்றன. அவை, குடக்கூத்து, பேடு, மல்லாடல், என்பன. இவற்றுள்—

குடக்கூத்தென்பது, கண்ணன் பேரனான அநிருத்தனைத் தன் மகள் உழை காரணமாக வாணன் சிறைவைத்தபோது, அப்பிரான் அவ்வசுரனது சோ(சோணிதபுரம்) என்ற நகரிற் சென்று குடங்கொண்டாடியதைக் குறிப்பதென்பர்.* "இதனை வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ னாடிய குடமும்" என்ற சிலப்பதிகார அடிகளானுணர்க. இங்ஙனம் கண்ணனாடிய இக்கூத்தினையே—

---

* இக் குடக்கூத்து வகுக்கப்பட்ட சிலாசிற்பமொன்றனைக் கண்டு திருவாங்கூர் ஸம்ஸ்தானம் சாஸனவிலாகாத் தலைவரான ஸ்ரீமான் எ. எஸ். இராமநாத ஐயரவர்கள் அதனை விளக்கியுள்ளார்கள் (T.A.S. vol. v. p. 187). அதனின்றும், பல குடங்களை மேலெழ வீசிப் பிடித்து அம்மானை போல ஆடும் கூத்து இஃதென்பது அறியப்படுகின்றது. இது, "குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாட வல்லவெங் கோவே" என்ற பெரியாழ்வார் திருவாக்குடன் ஒற்றுமைப் படுவதாயினும், இருகுடங்கொண்டாடுதலும் பழைய வழக்கென்பது மேற்குறித்த சிறிய திரு மடற்பகுதியால் தெரிகின்றது.

"குடமாடு கூத்தன்" (திருவாய். 10, 1, 11)
'குடமாடி' (பெரியதிரு. 5, 5, 6) (தேவா. 235-8)
"கூத்தர் குடமெடுத்தாடிற் கோவிந்தனுமெனு வோடும்"
(திருவாய். 4,4,6)
"குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாட வல்லவெங் கோவே"
(பெரியாழ்)

"செங்கண்மா லென்றொருவன்
பாரோர்க ளெல்லா மகிழப் பறைகறங்கச்
சீரார் குடமிரண் டேந்திச் செழுந்தெருவே
ஆரா ரெனச்சொல்லி யாடு வதுகண்டு" (சி. மடல், 11-13)

எனப் பெரியாரெல்லாம் சிறப்பிக்கலாயினர். இவற்றுட் பின்னி ரண்டு பிரயோகங்களினின்று, கூத்தர்கள் குடங்களிரண்டை யேந்தித் தெருவில் ஆடுவதுண்டென்பதும், அந்தகையதே கண்ணனுடிய தென்பதும் தெரியலாம்.

இனி, **பேடு** என்னுங் கூத்தாவது, கண்ணபிரான் மகனுகிய பிரத்தியும்நன் (இவனைக் காமனென்று தமிழ் நூல்கள் கூறும்) உஷை காரணமாக வாணனுற் சிறைவைக்கப்பட்ட தன் மகன் அநிருத்தனைச் சிறைமீட்டு வாணனது சோநகரத்தே பேடியுருவங் கொண்டு ஆடியதென்பர். "வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி—நீணிலமளந்தோன் மகன்முன் னுடிய, பேடிக்கோலத்துப் பேடு" என மணிமேகலையில் வருதலால் அறிக.

**மல்லாடல்** என்பது—"வாணனுகிய அவுணனை வேறற்கு மல்லனுய்ச் சேர்ந்தாரிற்சென்று அறைகூவி உடற்கரித்தெழுந்து அவனைச் சேர்ந்த அளவிலே சடங்காகப்பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்த"போது ஆடியதென்பர் (சிலப். 6, 48 - 9) அடியார்க்கு நல்லார். இதனுல், மேற்கூறிய வாணுசுரன் வரலாற்றை யொட்டி, கண்ணன் நிகழ்த்திய மற்றோராடலும் பண்டு வழங்கி வந்தமை தெரியலாம். இஃதன்றி, அப்பிரான் நிகழ்த்திய அல்லியத் தொகுதி என்ற வேறு கூத்தும் உண்டு.

"கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
அஞ்சன வண்ண னுடிய வாடலுள்
அல்லியத் தொகுதியும்" (சிலப். 6, 46-8.)

என்ற இளங்கோவடிகள் கூற்றுலும், "கஞ்சன் வஞ்சத்தின் வந்த யானையின்கோட்டை ஒசித்தற்குநின்றுடிய அல்லியத் தொகுதியும்" என்ற அடியார்க்குநல்லா ருரையாலும், குவலயாபீடத்தின் கொம்பை முறித்தபோதும் கண்ணன் கூத்துநிகழ்த்தினரென்பது

பழந்தமிழ்ச் செய்தியாதல் விளங்கும். இத்தகைய வரலாறுகட்கெல்லாம் வடநூல்களில் ஆதாரங்காணப்படாமை அறியத்தகும்.

இனி, ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் வழங்கும் கண்ணன் வைபவங்கள் சிலவற்றுக்கும் வடமொழிப் பிரமாணமில்லையெனக் கூறுவர். அவை ததிபாண்டனும், அவன் தாழியும் மோக்ஷம் பெற்றது, சீமாலிகன் தலையறுப்புண்டது—என்பவை.

---

## 5. ததிபாண்டனுக்குந் தாழிக்கும் வீடளித்தது

கண்ணபிரானது அற்புத லீலைகளிலே, அப்பிரான் ததிபாண்டனுக்கும் அவன் தாழிக்கும் மோக்ஷமளித்த வரலாறும் ஒன்று. அஃதாவது:—கண்ணன் இளம்பருவத்தில் ஒருநாள் வெண்ணெய் களவு கண்டபோது, தாயான யசோதைப்பிராட்டியார் அறிந்து வெகுண்டு பிள்ளையைத் தண்டிக்கவெண்ணி அப்பிரானைப் பிடித்தற்கோட, கண்ணனும் அதற்கஞ்சியதுபோல் நடித்துத் தாயின் கைக்கு அகப்படாமற் றப்பித் ' ததிபாண்டனென்னும் இடையனதகம் புக்கு ஒளித்துக்கொள்ளவே, அவ்விடம்நோக்கி யசோதையார் விரைந்து வருதலறிந்து அங்கிருந்த அவ்விடையனை நோக்கி, "என் தாய் என்மேல் வெகுண்டு வருதலால், யான் அவள் கண்களிற் புலப்படாதவாறு உன் பக்கத்துள்ள தயிர்த் தாழியை என்மேற் கவிழ்த்துச் சிறிது நேரம் என்னை ஒளித்து வை" என்று இரந்து வேண்டிக்கொண்டனர். அவ்வார்த்தைக்குத் ததிபாண்டனும் இணங்கி, தன் தாழிக்குள் பெருமானை வைத்து மூடிவிட்டுப் பக்கத்திலிருந்தான். பிள்ளையைத் தேடிவந்த யசோதையார் அங்கிருந்த இடையனிடம் கண்ணன்வந்த செய்தியை உசாவ, அவன், "இங்கே கண்ணன் இல்லை" என்னவும், அவளும் 'வீடு வந்ததும் பிள்ளையைத் தண்டிப்பேன்' என்று கூறி முணுமுணுத்துக்கொண்டு திரும்பினள். அவள் சென்றதும் ததிபாண்டன், கண்ணனை வெளியில் விடாமல் தான் மூடிய தாழியின்மேற் சடக்கென்று ஏறி உட்கார்ந்துகொண்டான். அவ்விடையன் இங்ஙனம் செய்ய உள்ளிருந்த பெருமான், தாய் சென்றுவிட்டமையால் தன்னை வெளியே விடுமாறு அவ்விடையனை வேண்டலானார். இடையனோ, ஜன்மாந்தரங்களிற் செய்த பெருந்தவப்பேற்றால் ஞானவானாயிருந்தமையால், ஸர்வேசுவரன் இவ்வுலகிலவதரித்து மிக எளியனாக யாவர்க்கும் அருள்புரிந்து வருங்காலத்தே தானும் பெரும்பேறடையக் கருதி, தம்மை வெளியில் விடுமாறு வேண்டிய பெருமானை நோக்கி, "எனக்குத் தேவரீர் மோக்ஷமளித்தாலன்றி வெளியில்விட ஒருப்

படேன்'' என்று கூறித் தாழியை முன்னினும் பலமாக அழுத்திக் கொண்டான். உள்ளிருந்த கண்ணன் புன்முறுவல்கொண்டு, அவ்விடையனிலையை உணர்ந்தவராதலின், அவனுக்குப் பரம கிருபை செய்யத் திருவுளங்கொண்டு, அவனை நோக்கி, ''உனக்கு மோக்ஷமளித்துவிட்டேன்; இனி என்னை வெளியில் விடலாமே'' என்றார். அதுகேட்ட இடையன் பெருமான் தனக்கருளிய பெரும்பேற்றுக்கு மகிழ்ந்தனனாயினும், வேறோர் சிந்தையுடையனாய், மறுபடியும் அத் தாழியை விட்டொழியாது அதிகமாக அதனை அமிழ்த்திக்கொண்டே இருப்பானாயினன். உள்ளிருந்த பெருமான் இடையனை நோக்கி' ''நீ கேட்டபடி முத்தியளித்த பின்பும் என்னை வெளியில்விடாது தாழ்ப்பதேன்'' என்று அவனை உசாவ, ''ஸ்வாமி! தேவரீர் அடியேன்பாற் பரமகிருபை செய்ததற்கு உற்ற துணையாயுதவிய இத்தாழியைத் தனியேவிட்டு நீங்கேன்; ஆதலால் இதற்கும் யான் பெற்ற பேற்றை அளித்தா லல்லது இந்தச் சமயத்தில் உம்மைவிடுவது தவறாகும்'' என்று அவ்விடையன் பெருமானும் அதிசயிக்கக் கூறினன். அதுகேட்ட பகவான் ''இவ்விடையன் நம்மைக் காரியங் கொள்ளுமா றென்னே'' என வியந்து, நம் நிரேதுக பரமகிருபையால், அவன் விருப்பின்படி ''தாழிக்கும் வீடுதந்தேன்'' என்றருளிச் செய்ய, ததிபாண்டனும், மூடிய அத்தாழியை நீக்கிக் கண்ணனை வெளியேறவிட்டுத் தான் தன் றயிர்த்தாழியுடன்* மோக்ஷம் பெற்றனன்— என்பது. இச்செய்தி, திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ஸ்ரீஇராமாநுஜரை நோக்கி, ''இங்குண்டு என்றேனோ பிரகலாதாழ்வானைப் போலே; இங்கில்லையென்றேனோ ததிபாண்டனைப் போலே'' எனக் கூறிய வார்த்தையாலும், ஆசாரியஹ்ருதயத்தும் அதன் வியாக்யானத்தும் குறிக்கப்படுதலாலும் தெரியவருகின்றது. வில்லிபுத்தூராரும் ''அருச்சுனனும்—தாழிதனக்குமுன் வீடுகொடுத்தருள் தாளிணையைப் பிடியா'' என்று பாடினர். திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் திருவரங்கத்துமாலையில் (ஙக)—

''சிந்திக்க நெஞ்சில்லை வாயில்லை நாமங்கள் செப்பதின்னை
வந்திக்க மெய்யில்லை வந்திரு போதுமொய்ம் மாமலர்ப்பூம்
பந்தித் தடம்பொழில் சூழரங் காததி பாண்டனுன்னைச்
சந்தித்த நாண்முத்தி பெற்றதென் னோதயிர்த் தாழியுமே''

* ''இந்த ஜீவனைச் சரீரமாகவுடைய நான் அசித்துக்களிற் பிரவேசித்து அவற்றின் நாம ரூபங்களைப் பிரகாசிப்பிக்கிறேன்'' (சாந்தோக்யம்) என்பது பகவத் வாக்யமாதலின், தாழிக்கும் ஒருவகை யாத்மாவுண்டென்றும், அதனால் அதுவும் மோக்ஷம்பெற உரியதாயிற்று என்றும் பெரியோர் கூறுவர்.

என்ற பாட்டில் இவ்வினிய சரிதத்தைக் குறிப்பிட்டார். "அரங்கா பண்டங்களைக் கொள்ளுதற்கன்றி உன்னைச்சிந்தித்தற்கு உதவாத நெஞ்சையும் (கழுத்து), உள்ளவற்றை வெளியில் விடுதற்கன்றி உன்னாமங்களைச் செப்பற்குதவாத வாயையும், நின்னைத்தாழ்ந்து வந்திக்கத்தகாத மேனியையுமுடையதாய் அசித்தாயிருந்ததொரு பாண்டமும் வீடுபெறச் செய்தது உனது பரமகிருபை எனின், உண்மையில் உன்னைச் சிந்தித்தற்குரிய நெஞ்சும், உன்னாமங்கள் செப்பற்குரிய வாயும், வந்தித்தற்குரிய மேனியும் உடையராய்ச் சித்தாயிருக்கும் எம்போலியர்க்கு அது வாய்க்காததென்னே" என்பது இப்பாட்டின் கருத்தாதல் காண்க. இச்சரித்திரத்தை வேறுவிதமாக எம்பிரான் சதகமுதலியவை கூறும். அஃதாவது—

திண்ணமுடன் கோபாலா மனையில் வெண்ணெய்
  திருடினதைக் கண்டவர்கள் துரத்தும் போது
கண்ணில்லாத் ததிபாண்டன் மனையிற் புக்குக்
  கண்கொடுத்துச் சாடியிற்போந் தொளித்துக் கொள்ளப்
புண்ணியரால் கண்வேண்டேன் கதிதா வல்லாற்
  போகவிடே னெனச்சாடி மூடிக் கொள்ள
எண்ணரிய பரமபத மவனுக் கீந்தாய்
  இறைவநா ராயணனே எம்பிரானே.

இவ்வினிய வரலாறுகள் புராணங்களிற் காணப்படாதன வாகித் தமிழ்நாட்டில் வழங்கிவருதல் கவனிக்கத்தக்கது.

---

## 6. சீமாலிகன் தலையறுப்புண்டது

சீமாலிகனென்பான் ஓர் இடையன் இவன் கண்ணனுக்கு உசாத்துணைவனாய் உடனிருந்தவன். இவனுடன் கண்ணன் ஒருகால் சம்பாஷித்துக் கொண்டு செல்லும்போது அப்பெருமானது கரத்திருந்த சக்கராயுதத்தைத் தான் தூக்கிச்செல்லும்படி தன்னிடம் கொடுக்குமாறு இவன் கண்ணனைப் பல முறைகேட்க, பெருமான், "அது தலையை அறுத்துவிடும்" என்று கூறியும் கேளானாய் அவ்விடையன் வற்புறுத்த, முடிவில் சக்கரத்தைக் கண்ணன் அவன் கையிற் கொடுக்கும்படி நேரவும், உடனே அஃது அவன் தலையை அறுத்துத் தள்ள அவன் நற்கதிபெற்றனன் என்பர். இது—

"சீமாலிகனவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய்
  சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்"

என்ற பெரியாழ்வார் திருமொழியாலும் அதன் வியாக்யானத்தாலும் அறிந்தது. இவ்வாறு வடநூல்களில் காண்டற்கரியனவாய்த் தமிழ்நாட்டிற் பெருவழக்குப் பெற்றுள்ள கண்ணன் சரிதங்கள் வேறு சிலவும் இருக்கக்கூடும். இவற்றுக்கு வடநூலாதரவுகள் உள்ளனவாயின், அவற்றை அறிந்தோர் அறிவிப்பார்களாக.

---

## 4. அருச்சுனனும் பாண்டியமரபும்*

ஸ்ரீ வியாஸபாரதம் ஆதிபர்வத்தே தீர்த்தயாத்திரையின் பொருட்டுத் தேசாடனஞ்செய்துவந்த அருச்சுனன், நாககன்னியாகிய உலூபியை யணைந்தபின், கலிங்கமுதலிய தேசங்களைக்கடந்து பாண்டியநாடு சென்று நிகழ்த்திய சரித்திரம் தென்னாட்டுப் பிரதிகளில் அடியில் வருமாறு காணப்படுகிறது.

‡ "ஸமர்த்தனான அவன் (அர்ச்சுனன்) கலிங்கதேசத்தைத் தாண்டி அழகான தேவாலயங்களையும் மாளிகைகளையும் பார்த்துக் கொண்டு சென்றான். மஹாபலசாலியான அவன் ருஷிகள் விளங்குகின்ற மகேந்திரபர்வதத்தைக் கண்டு, அதன் பிறகு கோதாவரியில் ஸ்நாநம் செய்து அதைத் தாண்டி ஸமுத்திரஸங்கமத்தில் பிரசித்திபெற்ற காவேரியையடைந்து ஸ்நானஞ் செய்து, தேவருஷி பிதிர் தர்ப்பணங்கள் செய்து, சமுத்திரக்கரையாலேயே கிரமமாக மணலூர் என்னுமிடத்துக்குச் சென்றான். ராஜாவே! சிறந்த கைகளையுடைய அருச்சுனன் அவ்விடத்துள்ள புண்ணியத் தீர்த்தங்களையும் தேவாலயங்களையும் அடைந்து தர்மந்தெரிந்தவனான சித்திரவாகனனென்னும் மணலூர் அரசனிடம் போனான். அவனுக்குச் சித்திராங்கதை என்னும் காட்சிக்கினிய பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அந்தப் பட்டணத்தில் தன்னிச்சைப்படி ஸஞ்சரிப்பதை அவன் கண்டான். சிறந்த பெண்ணாகிய அச் சித்திரவாகனன் மகளைக் கண்டு அவன் விருப்புற்றான். ராஜாவிடஞ் சென்று, "ராஜாவே! மஹாத்மாவும் க்ஷத்திரியனுமாகிய எனக்கு இந்தப் பெண்ணைக் கொடு" என்று தன் காரியத்தைத் தெரிவித்தான். அவ்வரசன் அதைக் கேட்டு "நீ யாருடைய புதல்வன்? உன் பெயர் என்ன?" என்று கேட்க, அருச்சுனன் "நான் பாண்டவன்; குந்திபுத்ரனான தனஞ்சயன்" என்று அவனுக்கு உத்தரஞ்சொன்னான். அதன்பிறகு அவ்வரசன் அருச்சுனனைப் பார்த்துப் பிரியவசனமாகப் பின்வருமாறு சொல்லலுற்றான்:

---

* செந்தமிழ், தொ - 8, ப - 10 (1910)

‡ ஸ்ரீவியாஸபாரதம், தமிழ்மொழி பெயர்ப்பு, (ஸ்ரீமத்-ம. வீ. இராமநுஜாசாரியரவர்கள் பதிப்பு. பக்கம் - ௨௬௬ - ௨௭௪)

"பிரபஞ்சனன் என்னும் அரசன் இந்தக் குலத்திற் பிறந்திருந்தான். அவனுக்கு ஸந்தியில்லாமலிருந்ததனால் ஸந்ததியை விரும்பிச் சிறந்த தவஞ் செய்தான். அர்ச்சுனா! அவனுடைய உக்கிரமான தவத்தினால் தேவ தேவரும் பிநாகமென்னுந் தனுஸைத் தரித்தவரும் உமாபதியுமாகிய சங்கரர் ஸந்தோஷமடைந்தார். தேவர்களுக்குத் தேவரும் பகவானுமாகிய அந்த உமாபதி அவனுக்கு 'இந்தக்குலத்தில் ஒவ்வொரு குழந்தைதான் பிறக்கும்' என்ற வரத்தைக் கொடுத்தார். அதனால் இந்தக் குலத்தில் எப்போதும் ஒவ்வொரு ஸந்ததிதான் உண்டாகிறது. என் முன்னோர்கள் எல்லாருக்கும் புத்ரர்களே பிறந்தனர். எனக்கு இந்தக் கன்னிகை ஒருத்திதான். இவள் தான் என் குலத்தை முழுதும் விருத்தி செய்கிறவளென்பது நிச்சயம். புருஷச்ரேஷ்டனே! பரதச்ரேஷ்டனே! புத்ரிகா தர்மம்* என்கிற சாஸ்திரவிதியினால் இவளைப் புத்திரனென்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன். பரதவம்சத்தவனே! உனக்கு இவளிடம் பிறக்கும் ஒரு புத்திரன் எனக்குக் கன்யாசுல்கமாக இருக்கக் கடவன். அவன் இங்கிருந்து என் சந்ததியை விருத்திபண்ணுபவனாக இருக்கக்கடவன். இந்த உடன்பாட்டின்படி இவளை நீ விவாகஞ் செய்துகொள்" என்றான். அர்ச்சுனன் "அப்படியே ஆகுக" என்று பிரதிஞ்ஞை செய்து அந்தக் கன்னிகையை வாங்கிக்கொண்டு, பதின் மூன்றாவது மாதத்தில் விவாகச்சடங்கைச் செய்து அங்கே மூன்றுமாதகால மிருந்தான்" எனவும், பிறகு அர்ச்சுனன் தெற்கு சமுத்திரத்திலுள்ள தீர்த்தங்கட்குச் சென்று அவற்றில் ஸ்நானஞ் செய்து முடித்துக்கொண்டு சித்ராங்கதையைப் பார்க்க மறுபடியும் மணலூர் சென்று, பப்ருவாகனனென்னும் ராஜபுத்ரனை அவளிடம் உண்டு பண்ணித் தன் மாமனிடம் அம்மகனைக் கன்யாசுல்கமாகக் கொடுத்துத் தன் கடனைத் தீர்த்துக்கொண்டு தீர்த்த யாத்திரைக்குத் திரும்பவும் புறப்பட்டானெனவும் கூறப்பட்டுள்ளமை காணலாம்;

இச்சரித்திரத்தால், சித்திரவாகனனென்னும் மணலூர் புரத்தரசன் மகளை, அருச்சுனன் தீர்த்த யாத்திரையிடையில் மணம் புரிந்து, பப்ருவாகனனென்னும் புத்திரனைப் பெற்று, தன் மாமனுக்கே அம்மகனைப் புத்ரிகாபுத்ரனாக அளித்துச் சென்றான் என்பது விளங்கும். இக்கதை நிகழ்ச்சி, ஆதிபர்வம், அம்சாவதரண பர்வத்தும், (அத் - ..) "அவன், ஒரு வருஷ முழுவதும் மேலே ஒரு மாஸமும் வனத்தில் வசித்துத் தீர்த்த யாத்திரையுஞ்செய்து நாககன்னிகையையும் பாண்டியன் பெண்ணையுமடைந்து அவர்களுடன் அங்கேவாஸஞ் செய்தான்" என்று குறிப்பிக்கப்

* எவளுக்குப் பிறக்கும் புத்திரனை அவள் தந்தை தனக்குப் புத்திரனாக எடுத்துக் கொள்ளுகிறதென்ற உடன்படிக்கையோடு கன்னிகாதானஞ் செய்கிறாரோ அவளுக்குப் புத்ரிகையென்பதும் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்குப் புத்ரிகாபுத்ரனென்பதும் பெயர்களாம்.

படுதலால், மணலூர் புரத்தரசன் பாண்டியனேயாவனென்பது புலப்படும். இவ்வாறே, விஷ்ணு புராணம் நான்காம் அம்சம், ௨௰-ம் அத்தியாயத்திலும், பாகவதம், ௯-ம் ஸ்கந்தம் ௨௨-ம் அத்தியாயத்திலும், பாரதசம்புவிலும் பிறவற்றிலும் மணலூரரசனாகிய பாண்டியன் மகளையே அருச்சுனன் மணந்ததாகக் குறிக்கப்பட்டுளது. இனி, சபாபர்வத்தே, ராஜசூயயாகத்தின் பொருட்டுப் பாண்டவராற் செய்யப்பட்ட திக்குவிசயத்தில், தென்றிசையை வெல்லச்சென்ற சகதேவன் பாண்டிநாட்டு மணலூரையடைந்து, தன் தமையன் அருச்சுனனுடைய மகனுன பப்ருவாகனனைக் கண்டு மகிழ்ந்து, அவனுக்கு வேண்டிய வெகுமதி செய்து திரும்பினனென்று கூறப்படுகின்றது. அவ்விடத்தே, அருச்சுனற்கு மாமனாகிய பாண்டியன் பெயர் மலயத்வஜனென்றும், மற்றோரிடத்துசுவேதனென்றும் வழங்குகின்றது. இங்ஙனமாக, அருச்சுனன் மணந்த சித்திராங்கதை, மணலூரரசனான பாண்டியன் மகளே என்பது, தென்னாட்டுப் பாரதப்பிரதிகளிலும் விஷ்ணுபுராணம், பாகவத முதலிய புராணப்பிரதிகளிலுந் தெளிவாகக் காணப்படுவதாம்.

இனி, வடநாடுகளில் வழங்கும் அப் பிரதிகளிலெல்லாம், மணிபுரத்தரசனாகிய சித்திர வாகனன் மகளையே விஜயன் மணம்புரிந்து பப்ருவாகனனைப் பெற்றானென்று காணப்படுமென்பர். இங்ஙனம் வழங்கிவரும் வடநாட்டுப்பாடமே உண்மையுடையதாக வேண்டுமென்றும், பாண்டியன் மகளென்னும் தென்னாட்டு வழக்கு பிற்காலத்து இடைச்செருகலாகக் கொள்ளத்தக்கதென்றும் விதேச அறிஞரெல்லாங் கருதியதோடு, சுதேச நிபுணர் சிலரும் அங்ஙனமே எழுதிச் சென்றனர்.* இவ்வாறெழுதியதற்குக் காரணம், வடநாட்டுப் பிரதிகளில் அதிக மதிப்பு வைத்ததேயன்றிப் பிறிதன்றாம். ஆனால், தென்னாட்டார் வழக்கு, அன்னோர் கருதியபடி இடைச்செருகலா, அன்றித் தொன்று தொட்டுவரும் வழக்கா—என்ற கேள்வி பிறத்தலால், அவற்றை இங்கே ஆராய்ந்து உண்மையைக் கொள்வது இன்றியமையாததாகும்.

வடநாட்டுப் பிரதிகளிலே, அருச்சுனன் செய்த தீர்த்தயாத்திரையில், அவன், கலிங்கதேசத்தைக் கடந்து பற்பல நாடுகளையும் பரிசுத்த தலங்களையும் பார்த்துக்கொண்டே மகேந்திர பர்வதமடைந்து, பின் கடற்கரை வழியாகவே சென்று மணிபுரம்

---

* ஸ்ரீ வி கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிய "1800-ஆண்டுக்கு முற்பட்ட தமிழர்" என்ற ஆங்கில நூலின் 53-ம் பக்கம் பார்க்க.

போய்ச் சேர்ந்தானென்று கூறப்படுகின்றது.* இதனால், கலிங்க தேசத்துக்கும் பல நாடுகளுக்கும் மகேந்திரமலைக்கும் இப்பால், வெகு தூரத்தே மணிபுரம் இருந்ததென்பது பெறப்படும். இனி, இம்மணிபுரஞ் சென்று அந்நகரத்தரசன் மகளை மணந்து பப்ருவாகனனென்னும் புத்திரனைப் பெற்றபின், அருச்சுனன் மறுபடியும் யாத்திரைக்குப் புறப்பட்டுச் சேர்ந்த தலம், தென்சமுத்திரக் கரைத் தீர்த்தங்களென்று அவ் வடபிரதிகளிலுங் காணப் படுதலின் தென்கடலையடுத்தே அம்மணிபுரமிருந்ததென்பது தெளிவாகும். இன்னும், தென்பக்கத்துத் தீர்த்தங்களெல்லாம் ஆடி முடிந்தபின், அருச்சுனன் திரும்ப ஒருமுறை சித்திராங் கதையைப் பார்க்க மணிபுரம் சென்றான் என்று அவ்விடத்துக் காணப்படுதலால், தென்கடலுக்கும் மணிபுரத்துக்கும் அதிக தூரம் இடையீடின்மை தெரியலாம். இவற்றால், தென்னாட்டு வழக்காகிய மணலூர்புரமும் வடநாட்டார் கூறும் மணிபுரமும் இடத்தால் வேற்றுமைப்படாது ஒரூர்க்கே இரண்டு வகையாக வழங்கிய பெயர்கள் என்று கருத இடந்தருகின்றது. ஏனெனில், மணிபுரமென்ற தனிராஜ்யமொன்று தென்கடற் பக்கத்திருந்தாக வேனும், அத்தேசத்தவர் அருச்சுனன் தம்நாட்டுக்கு வந்துசென்ற வரலாற்றை வழங்கியிருப்பதாகவேனும் யாண்டும் கேட்கப் படாமையால் என்க.

இனித் தென்னாட்டுப் பிரதிகளிற் கண்டபடி, அருச்சுனன் மணலூர் புகுந்து சித்திராங்கதையை மணந்தான் என்னுஞ் சரிதம் தென்னாட்டாரால் பன்னூறாண்டுகளுக்கு முன்பு தொடங்கி இன்றுவரை வழங்கி வருவதொன்றாம். அம்மணலூர் என்ற நகரம்,மதுரை உண்டாவதற்கு முன்னரே பாண்டியன் தலைநகராக விருந்தமை பிரசித்தம். ஆகவே, அருச்சுனனது தீர்த்த யாத்திரை யைப் பற்றிய தென்னாட்டு வழக்குச் சிறிதும் ஐயுறக்கூடியதன்று என்பது விளங்கும். சித்திராங்கதை பாண்டியன் மகளாகவும், மணிபுரம் மணலூர் புரமாகவும் பிற்காலத்தவர் சிலரால் கூட்டி வழங்கப்பட்டன என்று கூறுவோர், தங்கூற்றுக்குத் தக்க ஆதாரங்காட்டாததோடு, பாண்டிய அருச்சுனர்களது சம்பந்தம் பற்றிப் பழந்தமிழ் வழக்கை அறியாமலும் எழுதினவராவர். பாண்டி நாட்டில் சமீபத்தே அகப்பட்டதும் 10-ம் நூற்றாண்டில் அமைந்ததுமான சின்னமனூர்த் தாமிரசாஸன மொன்றில், அருச்சுனற்குச் சித்திராங்கதையிடம் பிறந்த பப்ருவாஹனனைப்

* ஸ்ரீ பிரதாப சந்திரராய், மன்மதநாததத்தர் இவர்கள் வெளியிட்ட வியாஸபாரத ஆங்கிலமொழிபெயர்ப்புக்களைப் பார்க்க.

‡ S. I. I. vol. iii p. 454.

பாண்டியரது முன்னோர்களில் ஒருவனுகக் குறிப்பிடப்பட்டிருத்தல் தமிழ் நாட்டில் வழங்கிய அப்பண்டை வழக்கினுண்மையை விளக்குகின்றது. அச்சாஸனத்தில் 'ஜிதவிஜய:' "விஜயனை வசு சாபம் நீக்கியவன்" என்று பாண்டியனொருவன் சிறப்பிக்கப் படுகின்றான். இது பாண்டியர்க்கு முன்னோனுகிய பப்ரு வாஹனனது வரலாற்றையே குறிப்பதாகும். மஹாபாரதம் அசுவ மேதபர்வத்தில் (அத் - அ௪.) யாக அசுவத்தின் பொருட்டு அருச்சுனற்கும் அவன் மகன் பப்ருவுக்கு நடந்த பெரும்போரிலே அருச்சுனன் வீழ்ந்து மூர்ச்சையடையவும், நாககன்னிகையாகிய அவன் மனைவி உலூபி என்பாள் ஆங்கு விரைந்து வந்து தன் கணவனை மூர்ச்சை தெளிவித்து—இங்ஙனம் அருச்சுனற்கு நேர்ந்த துன்பம், அவன் பீஷ்மரைப் பாரதப்போரில் வஞ்சகமாகக் கொன்றதைப் பொருத வசுவொருவனுல் இடப்பட்ட சாபமென்றும், அச் சாபம், 'பப்ரு வாஹனனென்னும் தன் புத்திரனுல்போர்க்களத்தில் விஜயன் வீழ்த்தப்பட்டபின் தீரும்' என்ற அவ்வசுவின் நியமனப் படி இப்போது விளைலாயிற்றென்றும் அந்நாககன்னிகை கூறிய செய்தி விரிவாகச் சொல்லப்பட்டிருத்தலின் * வசுசாபத்தை நீக்கியவன் பப்ருவேயாதல் காண்க. ஆகவே, அருச்சுனன் மகனைப் பாண்டியர் முன்னோனைகப் பன்னூற்றுண்டுகட்கு முன்பே தமிழ் நாட்டார் வழங்கிவந்தமை தெளியப்படும். இன்னும், அருச்சுனனுல் மணக்கப்பெற்றவள் பாண்டியன் மகளே என்பதை—

"பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பனை முலைச் சாந்தம்
வேறு தொடங்கெ விசய னெஞ்சத்
தாரமு லாற்று தைஇ யோகியிற்
பொதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினு முழங்கத் செந்தீப்
பொத்துவது போலும் புலம்புமுந் துறத்தே." †

என்னும் பழஞ்செய்யுளுங் கூறுதல் காண்க. வில்லிபுத்தூரரும் இச்செய்தியை அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தே அலங்கரித்துப் பாடியுள்ளார். இவையன்றி, புகழேந்தியார் ஒரு சமயத்திற் பாடியதாக நாட்டார் வழங்கும் **அல்லியரசாணி**

---

* ஸ்ரீ பிரதாபசந்திரராய் அவர்களது ஆங்கில மொழிபெயர்ப்பு (சாந்திபர்வம் - 205 - 6 - ம் பக்கங்கள் பார்க்க.)

† தொல்காப்பியம், பொருளதிகாரம், ௲ச - ம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோள்.

மாலையிற் கூறப்பட்ட சரித்திர முழுதும், பாண்டியன் மடமகளைப் பார்த்தன் மணம் புரிந்து பப்ருவாகனனைப் பெற்ற வரலாறுகளே யாகும். இந்நூல், தமிழறிஞர்க்கேற்ற பாஷை நயமுடையதன்றாயினும், இதனிற்கண்ட சரிதம், தமிழ்நாட்டிற் பழங்கால முதலே வழங்கி வரும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கல்லாதாருமறிந்து மகிழ எளிய நடையில் இயற்றப்பட்டது என்பது யாவர்க்குந் தோன்றக் கூடியது. இம்மாலையில், சித்திராங்கதையின் பிறப்பு வளர்ப்புக்களும், அருச்சுனன் அவளைக் கண்டு காமுற்று நிகழ்த்திய செயல்களும், முடிவில் அவன் அவளை மணந்து பப்ருவாகனனைப் பெற்றதுமாகிய கதைகள் விநோதமாகவும் புனைந்தும் கூறப்பட்டுள்ளன. சித்ராங்கதையை "அல்லி" என்ற பெயரானே இந்நூல் வழங்கும். இவற்றால், தென்னாட்டு வழங்கும் கன்னபரம்பரைகளும், அருச்சுனனால் மணம் புரியப்பட்ட சித்திராங்கதை பாண்டியன் மகளே என்பதை நன்கு விளக்குதல் காணலாம்.

இனி, தென்னாட்டுப் பாரதப்பிரதிகளிற் கண்ட மணலூர்புரமென்பது, மதுரையுண்டாவதற்கு முன்பே பாண்டியன் தலைநகராயிருந்ததென்பதைத் திருவிளையாடற்புராணம் படித்தவரெல்லாம் அறிவர். இதனை, மணலூர், மணலூர், மணற்புரம் என்று மதுரை மான்மியங்கள் வழங்கும். இவ்வூர், மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. வடநாட்டார் வழங்கும் மணிபுரம் என்பதை மணலூர்புரமென்பதன் திரிபாகவேனும், "அயிலிலங்கு மணற்புரத்தரசற் குவந்தளித்தனன்" என வேப்பத்தூரர் திருவிளையாடற் புராணத்திற் (படலம்-௩௫; பாட்டு-௪௦) கண்டவாறு, மணற்புரமென்பதன் திரிபாகவேனும் கொள்ளுதலே முன்பு கூறிப்போந்த நியாயங்களோடு பொருந்துமென்க. வியாஸபாரதம் ஆதிபர்வம் தெலுங்கு மொழி பெயர்ப்பில் மணிபுரமென்றே காணப்படுவதாயினும், அந்நகரம் காவிரிக்குத் தெற்கேயிருப்பதாக அம்மொழிபெயர்ப்பில் காண்டலால்,* மணலூர்புரம் அல்லது மணற்புரமென்பதன் திரிபே மணிபுரமென்பது வலியுறுகின்றது. இம் மணலூர்புரமென்னும் பாரத வழக்கு இக்காலத்தவர் சேர்த்ததன்றென்பது "மணலூர்புரமென்னுந் தமிழ், வியாசபாரதத்திற் சென்றது தேசிகம்" எனப் பிரயோக விவேகநூலார் கூறிச்செல்லுதலாலும் (காரகப்-௨.) அறியத்தகும்.

இனி, அருச்சுனன், மணலூரரசனிடம் சென்று அவன் மகளை விரும்பிக் கேட்டபோது, அவ்வரசன், தன்மகட்குப் பிறக்கும் புத்திரனைத் தன் சந்ததிவிருத்தியின் பொருட்டுப் புத்ரிகாபுத்திரனாக-

* The Tamils 1800 Years Ago, pp. 54. (foot note)

அளிக்குமாறு கேட்டுக்கொண்டபடி, அருச்சுனன் உடன்பட்டு அவ்வரசன் மகளை மணந்து பப்ருவாகனைப்பெற்றுப் பாண்டியர்க்கு உதவிச் சென்றானென்ற செய்தி. தலைப்பிற் கூறப்பட்டது. இவ்வரலாறு, மணலூரரசனாகிய தென்னவனது வமிசம் பாண்டவ சம்பந்தம் பெற்றதைக் குறிப்பதோடு, பாண்டவனான அருச்சுனன் மகனைத் தென்னாடாண்ட பப்ருவாகனனுக்குப் பின்பே "பாண்டியர்" என்ற சிறப்புப் பெயரை அவ்வமிசத்தவர் பெற்றவர் போலும் என்று கருதற்கும் இடந்தருகின்றது. பாணினிபகவான் அருளிய வியாகரணத்திற்கு வார்த்திகை எழுதியவரும் பிராசீனரு மாகிய காத்யாயன முனிவர், பாண்டிய சப்தத்தை விளக்குமிடத்து—'பாண்டிய வமிசத்தவனிடமிருந்து தோன்றியவன் யாவன் அவனும், பாண்டிய தேசத்து அரசன் யாவன் அவனும் 'பாண்ட்ய' என வழங்கப்பெறுவர் என்பதைப் 'பாண்ட்யோர்ட் யண்' என்ற சூத்திரத்தாற் குறிப்பிடுவர் என்பர். இவற்றுள், முதற்கருத்தின்படி, பாண்டுவமிசத்தவனான அருச்சுனன் தன் மகன் பப்ருவாகனனைத் தென்னவனுக்கு அளித்துச் சென்ற பின்னர், அவனை ஆதிபுருஷனாகவுடைய வமிசத்தவர் தம் மூலமரபு இன்னதென்பது விளங்கப் பாண்டியப் பெயரை எய்தினர் போலும் என்று சங்கிக்க இடந்தருகின்றது. பாண்டிய தேசத்து அரசனாமை பற்றிப் பாண்டியன் எனப்பட்டான் எனக்கொள்ளவும் படுமாயினும், பஞ்சவன் கௌரியன் எனத் தென்னவர்க்கு வழங்கும் வேறு பழம்பெயர்கள், முதலிற் குறித்த கருத்தையே ஆதரிப்பனவா யுள்ளன.

"செருமாண் பஞ்சவரேறே" (புறநா. 58.)

"கௌரியர் பெருஞ்சீர்க் கோலின் செம்மையும்" (சிலப். 15, 2-3)

என முன்னூல்களில் அவை வழங்கல் அறியத்தகும். இப்பெயர்களிரண்டும் முறையே பஞ்சவரான பாண்டவர் மரபினன், கௌரவர் மரபினன் என உறுப்புப்பொருள் உடையன என்றும், இவற்றுள் கௌரியர் என்பது கௌரவர் அல்லது கௌரவ்யர் என்பதன் திரிபாமென்றும் கொள்ளற்பாலன. இவ்வாறு, பாண்டவ மரபினனான பப்ருவாகனனிலிருந்து பாண்டியப் பெயர் தென்னவர்க்கு வழங்கியது போலும் என்ற கருத்து, முடிபுகூறத் தக்கதன்றாயினும் ஆராய்ச்சிக்குரியதாமென்க. இது நிற்க.

இற்றைக்கு 2200-ஆண்டுகட்கு முன், மௌரிய சக்கரவர்த்தியான சந்திரகுப்தனிடம் யவனராஜதூதராய் வந்துசென்ற **மெகாஸ்தனிஸ்** என்ற ஆசிரியர், பெண்டிரால் ஆளப்பட்டு

வந்ததாகக் கருதப்பெற்ற தென்னாட்டரசியைப்பற்றித் தங் காலத்தில் கேள்வியுற்ற சில செய்திகளைக்குறிப்பிட்டிருக்கின்றார்.* அவை—'ஹெர்குலஸ் என்ற பெரிய வீரனாகிய அரசனொருவன், பாண்டியை என்று சொல்லப்பட்ட ஒரே புத்திரியைப் பெற்றான்; அவ்வரசன், கடல்வரையுள்ள தென்பக்கத்து ராஜ்யத்தை அவளுக்களித்தான். அந்நாட்டை 365-ஊர்களாகப் பிரித்துத் தன் கீழ்ப்பட்ட சிற்றரசரிடம் அவற்றை ஒப்படைத்து, ஒவ்வோரூர்த் தலைவரும் தத்தம் திறைப்பணத்தை நாள்தோறும் அவட்குத் தவறாது அளித்து வரும்படி ஒழுங்குசெய்து—இவ்வாறு அவ்வரசியானவள் எக்காலத்தும் அத்தலைவர்களுடைய உதவியோடு வாழவும், கொடிய பஞ்சத்திலும் அவள் எவ்விதக் குறைவுமில்லாதிருக்கவும் தக்க திட்டங்களைச் செய்திருந்தான்—என்பதே. இச்செய்தியையே, பிற்காலத்து வந்த அரியன் முதலிய யவனாசிரியரும் வற்புறுத்துவதோடு, அவ்வரசியின் படைவன்மையையும் திறமையையும் பற்றித் தாம் கேட்டிருந்த வேறு சில விஷயங்களையுங் குறிப்பிட்டனர். இங்ஙனம், பண்டைக் காலத்திருந்த அந்நியர்களும், தென்னாட்டு ராஜாங்க முறையைப் பற்றிக் கேள்வியுற்றதாக எழுதிய விஷயங்கள், அருச்சுனன் மணந்த சித்திராங்கதையைக் குறித்தனவாகவே தோற்றுகின்றன. அல்லி என்று தமிழ்ப்பெயர்பெற்ற அவ்வரசி, இளமையிற் பற்பல போர்களில் வெற்றியுற்றுப் பாண்டிநாட்டை மிக்க திறமையுடன் ஆட்சி செய்த சரிதம், அல்லியரசாணிமாலையாலும் நன்கறியப்படும். இதனால், பன்னூறாண்டுகட்கு முன்னிருந்த யவனாசிரியர்களெழுத்தாலும், பாண்டியன் மகளாகிய சித்திராங்கதையைப் பற்றிய வழக்கு முற்காலத்துப் பிரபலமாயிருந்தமை தெளியப்படுகின்றது.

இவ்வாறு, பாரத முதலாய நூல்களாலும் பழைய வழக்குக்களாலும் சித்திராங்கதை என்பாள் பாண்டியன் மகளே என்பதும் அவளையே அருச்சுனன் மணந்து பப்ருவாகனனென்னும் புத்திரனைப் பெற்றானென்பதுந் தெளியப்படுதலால், தென்னாட்டுப் பிரதிகளிற் கண்ட செய்திகள் இடைச்செருகலென்று சிலராற் கூறப்படுவது எவ்வாற்றானும் பொருந்தாமை கண்டுகொள்க.

அருச்சுனன் மகனும் பாண்டியனுமாகிய இப் பப்ருவாகனன் தருமபுத்திரரால் நடத்தப்பட்ட அசுவமேத யாகத்துக்கு அழைக்கப்பட்டு இந்திரப்பிரஸ்தஞ் சென்று ஆங்குப் பாண்டவராற்

* V. A. Smith's The Early History of India (Second Edition) p. 408.

பேரன்புடனும் மிக்க சிறப்புடனும் வரவேற்கப் பெற்றனென்றும், அவ்யாகத்தில் விருந்தினரெல்லார்க்கும் உண்டியளித்து உபசரிக்குங் காரியத்தை பப்ருவே மேற்கொண்டு நடத்தினனென்றும் வ்யாசபாரதம்அசுவமேதபர்வத்தில்(அத்தி-௨௰.)கூறப்பட்டுள்ளது. பாரதப் போரில், உதியன் சேரன் என்னும் தமிழரசன், பாண்டவ சேனைக்கு இவ்வாறே உணவளித்துப் பேர்பெற்ற செய்தியை முரஞ்சியூர் முடிநாகராயரென்ற தலைச்சங்கத்துப் புலவரும்பிறரும் பாடியுள்ளார்.* சோழனும் அங்ஙனம் உணவளித்தவனென்று சிலப்பதிகாரங் கூறும் (காதை - ௨௯, அடி-௫௫.) இவற்றால் தமிழ் நாட்டரசர்கள், பாண்டவர்க்கு உற்றசமயங்களிலெல்லாம் பெருஞ்சோற்று நிலையால் உதவியவரென்ற செய்தி அறியப்படும்.

இனிப் புறநானூற்றில் "விழுக்கடிப்பறைந்த" என்னும் ௩௬௬-ம் பாட்டு தருமபுத்திரனைக் கோதமனார் என்ற புலவர் பாடியதாகக் காணப்படுகின்றது. இச்செய்தியை மேலே குறித்த விஷயங்களோடு சேர்த்து நோக்கும்போது, அசுவமேதயாகம் போன்ற சந்தர்ப்பமொன்றில், தமிழரசருடன் சென்ற தமிழ்ப் புலவரொருவர் பாண்டவரின் முன்றோன்றலையே அவ்வாறு பாடினரோ என்று சங்கிக்க இடந்தருகின்றது. அப்புறப்பாட்டில் "அறவோன் மகனே" எனத் தருமபுத்திரர் அக்கோதமனாரால் அழைக்கப்படுதலும், தலைச்சங்கத்தவர்களில் கோதமனார் என்ற பெயருடைய புலவரொருவர் காணப்படுதலும் இங்கு அறியத் தக்கன.*

---

## 5. தலைச்சங்கம் †

முற்காலத்தே, தலை இடை கடை என்ற முச்சங்கங்களாலே, செந்தமிழணங்கின் சீருஞ்சிறப்பும் செழித்தோங்கின என்பதை, அறிந்திராத தமிழ்மக்கள் யாவர்? இச்சங்கங்களின் உண்மை நிலை பற்றி அச் சங்கநூல்களில் ஒன்றுமே கூறப்பட்டதில்லையேனும்,

* '5. தலைச்சங்கம்' என்ற கட்டுரையிலும் இவை விளக்கப் பட்டுள்ளன.

† இக்கட்டுரை, 34 - வருஷங்கட்கு முன், ஸ்ரீரங்கத்தில் நடைபெற்று வந்த 'ஸ்ரீ வாணீவிலாஸினி' என்ற மாதாந்த பத்திரிகையின் 2-ம் சஞ்சிகையில் (1904-5) ஐயன் ஆரிதன் என்ற கோத்திரப் பெயருடன் ஆசிரியரால் வெளியிடப்பெற்றது. அது, சிலமாறுதலும் திருத்தங்களும் செய்யப்பெற்று இப்போது ஈண்டு வெளியிடப் படுகின்றது.

அவற்றினிருப்பைக் குறிப்பிடுங் கர்ணபரம்பரைச் செய்திகள் பல நூற்றுண்டுகட்கு முன்ளுெடங்கியே வழங்கி வருகின்றன. இவ்வாறு பெருவழக்கிருப்பவும் அச்செய்திகளில் நம்பிக்கை கொள்ளாமல் ஐயுறவுகொள்ளும் நவீனர்களும் உண்டு. அவ்வையத்திற்கு அவர் கூறுங் காரணங்களில் தலைமையானது, சங்க காலத்து நூல்களாக வழங்குவனவற்றுள் அச்சங்கத்தைக் குறிக்குஞ் செய்தி ஒன்றும் காணப்படாமையே யாம். சிறிது நுணுகியாராய்ந்தால் அவர் கூற்றுப் பொருத்தமுடையதன்று என்பது புலனும். இடைச்சங்க மிரீஇய பாண்டியருள் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பானும் ஒருவன் என்பது முன்னூல்களால் அறியப்படுகின்றது. இவனே தொல்காப்பியத்தை இயற்றுவித்தோன். இதனை 'நிலந்தருதிருவிற் பாண்டியனவையத்து' எனவரும் அந்நூற்பாயிரத்தான் அறிக. கடைச்சங்கத்தவரான மாங்குடி மருதனரால் மதுரைக்காஞ்சியுள்—

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால்சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன்" (760 - 4.)

எனப் புகழப்பட்டவன், இப்பாண்டியனே யாவன்.* இதனால், சங்கமென்னும் வடசொல்லாற் பெயர் கூறப்படாமற்போயினும், நல்லிசைப் புலவர் பலரைக் கொண்டு அப்பாண்டியன் செந்தமிழாராய்ச்சி செய்தவன் என்பது 'புணர்கூட்டுண்ட' என்பதனுல் விளக்கமாம். புணர்கூட்டுண்ணுதல் – சங்கமாக விருந்து தமிழாராய்ச்சி செய்தல். புணர், சங்கம், தொகை என்பன ஒரு பொருட் கிளவிகள். புணர்கூட்டுண்ட தொல்லாணை நல்லாசிரியராவர்—நான்மறை முற்றிய அதங்கோட்டாசான், தொல்காப்பியர் முதலியோராவர். இவ்வாறே,

"புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க" (மணிமே.7, 114)

எனப் புலவர் குழாத்தைச் சங்கமென்ற பெயராற் கடைச்சங்கத்தவரான சாத்தனர் வழங்கல் காண்க. இத்தகைய வழக்கினையே, அச்சங்கத்தை அடுத்துத் தோன்றிய சான்றோர்பலரும்,

"நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன்காண்" (அப்பர்)
"சங்கத்தமிழ் மாலை முப்பதும்" (ஆண்டாள்)

---

*இவ்வடிகட்கு நச்சினர்க்கினியர் வேறுபொருள் கூறுவராயினும் இதுவே ஏற்புடையதென்பது ஆய்ந்தறியதக்கது.

"அந்தண் மதுரைத் தொகை* யாக்கினனும்" (சம்பந்தர்) என ஓதுவாராயினர். ஆகவே, தமிழ்வேந்தரிடம் தமிழ்ப்புலவர் பேரவை எக்காலத்துமிருந்து தமிழாராய்ச்சி செய்துவந்த தென்பதிலும், அதுவே சங்கமென்ற பெயரால் முற்காலத்தும் பிற்காலத்தும் அழைக்கப்பட்டதென்பதிலும் நாம் ஐயுறவு கொள்ளவேண்டியதில்லை.

இனி, அம் முச்சங்கங்களுள் கடைச்சங்கநிலையை அறிதற்கு அச்சங்க நூல்கள் துணையாவதுபோலத் தலையிடைச் சங்கங்கட்குரிய கருவிகள் கிடைத்தில. எனினும், கர்ண பரம்பரையில் அவற்றைப் பற்றிய செய்திகள் சில நெடுங்காலமாக வழக்கில் உள்ளன. உத்தேசம் 1150-ஆண்டுகட்கு முற்பட்டவராகக் கருதப்படும் இறையனார் களவியலுரைகாரரும் வேறு சிலரும் அவற்றைத் தத்தம் உரைகளிற் குறித்துள்ளனர். இவற்றுள், களவியலுரைப்பாயிரத்தே **தலைசங்கமிருந்தார்**:— சிவபிரான், முருகவேள், நிதியின்கிழவன், அகத்தியனர், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலாக 549-ன்மர் என்றும், அவர்கள் 4440-ஆண்டு அச்சங்கத்து விளங்கினர் என்றும், அச்சங்கத்தை நடைபெறச்செய்த பாண்டியர் 89-ன்மர் என்றும், அச்சங்கமிருந்த நகரம் **கடல்கொள்ளப்பட்ட தென்மதுரை** என்றும் எழுதப்பட்டுள்ளன. இத்தலைச்சங்கத்தவருள், வான்மீகனர் கௌதமனர் என வேறிருவரையுஞ் சேர்த்துக் கூறுவர் நச்சினர்க்கினிர் (தொல். பொ. 74). இவர்களுள், சிவபிரான் முருகவேள் நிதியின்கிழவன் (குபேரன்) என்போர் தெய்வங்களாதலின், அவரைப் பற்றிய ஆராய்ச்சி ஈண்டு நிகழ்த்தற்குரியதன்று. ஆதலின், ஏனைப் பெருமக்களுள் தலைவரான அகத்தியனரை முதலில் நோக்குவோம்.

இம்முனிவர், இதிகாசங்களினும் புராணங்களினும் பலவிடங்களிற் பிரஸ்தாபிக்கப்படுகின்றார். சிவபிரான் உமாதேவியைத் திருமணம் புரிந்த காலத்தில் அகத்தியனர் தென்றிசை செல்ல அபிப்பிராயல் ஏவப்பட்ட வரலாறு, காந்த முதலிய புராணங்களிற் கூறப்படுகின்றது. சிவபிரான் திருமணம் இராமாவதாரத்துக்குப் பலயுகங்கள் முற்பட்டதென்பர். இவையன்றி, அம்முனிவர், 'தழற்புரைநிறக்கடவுள்தந்ததமிழ்தந்தவர்' என்பதும் தலைச்சங்கத்

---

*மதுரைத்தொகையாக்கினன் - 'கூடன்மாநகரத்துச் சங்கம் வைத்தவன்' என்றார் சேக்கிழார் (பெரியபு. திருஞான. 843). "உன்னடியார் தொகைநடுவே" என்ற திருவாதவூரடிகள், தொகை என்பது - குழு, சங்கம் என்ற பொருளில் வழங்கல் காண்க. (திருவாச. 44, 1)

தவருள் ஒருவராய் அகத்தியம் என்ற தமிழிலக்கண நூலை ஆக்கி யருளியவர் என்பதும் தமிழ்நாட்டுப் பெருவழக்காக உள்ளன. இவற்றை யெல்லாம் சேர்த்து நோக்குமிடத்து, அகஸ்திய முனிவர் பலயுகங்கள் வாழ்ந்தவ ரென்று கொள்ள வேண்டும். அங்ஙனங் கொள்வதில் நவீனவராய்ச்சியாளர் மனமொருப்பட்டிலர். அவர் உடம்படாமை பற்றி ஏனையர்க்குக் கவலையில்லை யாயினும், முன்னோர் மொழிந்தவைகளை ஆராய்ச்சி செய்தலேகூடாது என்பது ஏற்கத்தக்கதன்று. புராணங்கள் பல நன்னோக்கங்களைக் கருதிப் புனைந்துரைகள் பலவற்றுடன் முன்னோர்களால் எழுதப் பெற்றவை என்பதை அறிஞர் எவரும் மறுக்கார். அதனால், சிவபிரான் திருமணக்காலத்தில் அகஸ்தியர் தென்றிசையிருந்த நொய்ம்மைபோகத் தெற்கே பொதிய மலைக்கு விடுக்கப்பட்டார் என்பது முதலிய புராணக்கூற்றில், அம்முனிவர் வடபால் இமயத்தினின்றும் தென்திசை நன்மையடைய அனுப்பப்பட்டு வந்தவர்—என்றவளவில் யாவரும் ஒப்பக்கூடியதாகும்.

இங்ஙனம் அம்முனிவர் வந்த செய்தி, முற்பட்ட இதிகாசமான வான்மீகி ராமாயணம் ஆரண்யகாண்டத்தும் குறிப்பிடப்படுகின்றது. அதனுள், அவர் பஞ்சவடிக்கு இரண்டுயோசனை தூரத்திருந்த தம் ஆச்சிரமத்தில் வசித்தாரென்றும், இராமபிரான் தண்டகாரண்யம் புக்கபோது, அம்முனிவர் அப்பிரானை வரவேற்று உபசரித்தாரென்றும் வான்மீகி கூறுவர். இனி, கிஷ்கிந்தா காண்டத்தில், காவேரிநதியின் உற்பத்தியிடமான அயோமுகம் என்ற மலயபர்வதத்தின் சிகரத்திலும் அவ்வகஸ்தியர் விளங்கியவராக அம்முனிவரே குறிப்பிடுகின்றார். இவற்றால், இரண்டிடங்களில் அம்முனிவர்க்கு ஆச்சிரமங்களிருந்தன என்பது பெறப்படுகின்றது. ஆனால் சிவபிரான் திருமணக்காலத்து அகத்தியர் அங்கு வந்தவரென்று அவர் இதிகாசங் குறிப்பிட்டிலது. இவ்வகத்தியாச்சிரமங்களைச் சூழ்ந்த பிரதேசம் தண்டகநாடு எனப்படும். அந்நாடு, சுக்ரபகவானது சாபங் காரணமாக நிர்மானுஷ்யமாகவும் புற்பூண்டுபற்றுமலும் முற்றும் அழிந்து கிடந்ததென்றும், தாம் அங்கு வந்தபின் அப்பிரதேசம் செழிப்பிக்கப்பெற்று முனிவரும் மக்களும் ஆங்குக் குடியேறும்படி செய்யப்பட்டதென்றும் அகஸ்தியரே இராமபிரானுக்குக் கூறியதாக வான்மீகி முனிவர் சொல்லுகின்றார். இதனைத் தமிழுத்தரகாண்டத்தே—

"அவன்ற நாட்டிற் றண்டகமா மடவி யாகி யாரமுகிந்
சிவந்த வெள்ளி சாபத்தால் நரர்புள் மிருகஞ் சேரன்றித்

தவஞ்செய் முனிவர் நெருங்குதலாற் சன்மத் தான மெனப்பேராய்
உவந்த கருணை பொழிவிழியா யுற்ற நிதுமுன் பெனவுரைத்தான்*

எனவருஞ் செய்யுளானும் உணர்க. இதனால், இராமாயண காலத்தே அகஸ்தியர்* வடதிசை நீங்கி வந்து தங்கியவிடம் தமிழ் நாட்டின் கோடியிலுள்ள பொதியமலையா யில்லாமல், மகாராஷ்டிர தேசத்தைச் சார்ந்த பஞ்சவடி முதல் குடகுமலைவரையுள்ள பிரதேசமே என்றும், அவ்விரிடத்தும் ஆச்சிரமமும் அமைத்துக் கொண்டு அரக்கருபத்திரவத்தை நீக்கிஅப்பிரதேசத்தில் மக்களைக் குடியேற்றிச் செழிக்க வைத்தனரென்றும் தெரியலாம். காவிரி தோன்றும் அக்குடகு மலையில் இருந்த குறுமுனிவர் அதற்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தையும் பாதுகாத்து வந்தவர் என்பது, அவரது அனுமதியின்மேல் தெற்கே செல்வது நலமென்று சுக்கிரீவன் தம் வானரவீரர்க்குக் கூறி யேவியதாக வால்மீகி கூறுதலாற் புலப்படுகின்றது.

இனி, சிவபிரானது திருமணக் காலத்தில் தேவரெல்லாஞ் சேர இருந்தமையால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்ததாக, அங்ஙனம் நேர்ந்த கொய்ம்மை போக,அகஸ்தியர் தெற்கே பொதிமலைக்குச் சிவபிரானல் அனுப்பப்பட்டார் என்று புராணங்கள் கூறுகின்றன. இச்செய்தி, அம்முனிவர் குடகுமலை யாச்சிரமத்தோடு மற்றுந் தெற்கே சென்று தென்கோடியில் மற்றோராச்சிரமமும் அமைத்துக் கொண்டதைக் குறிப்பதாகும். ஆகவே, அகஸ்திய முனிவர் வடக்கினின்று வந்த நோக்கமெல்லாம், தக்ஷிணப் பிரதேசங்களைச் சிறுகச்சிறுக நிலவள நீர்வளமுடையதாக்கி ஆண்டு மக்களைக் குடியேற்றிச் செழிக்கவைத்ததே என்பது விசதமாகும்.§இங்ஙனங் குடியேற்றிய செய்தியைத் தொல்காப்பியப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியர் கூறும் வரலாறும் நன்கு வலியுறுத்துவதாம். அவர் எழுதுவதாவது :—

"தேவரெல்லாங்கூடி, 'யாம் சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசையுயர்ந்தது: இதற்கு அகத்தியனாரே ஆண்டு இருத்தற் குரியர்' என்று அவரை வேண்டிக்கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர்...துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து காடு

* மகாபாரதத்தும் அகஸ்தியரது இப்பஞ்சவடியாச்சிரமம் குறிக்கப்பட்டுளது (ஷி. iii 99, 8632 Sorenson's Index).

§ "1. ஸ்ரீவால்மீகிமுனிவருந் தென்னாடும்" என்ற கட்டுரையுள் (பக். 6-7.) இச்செய்தியை விரிவாகக் கண்டுகொள்க.

செடுத்து நாடாக்கி ..இராவணனைக் கந்தருவத்தாற்பிணித்து இராக்கதரை ஆண்டு வாராமை விலக்கிப் ..பொதியிலின்கணிருந்தனர்'' என்பதாம்.

இவ்வரலாற்றுக்கு அவ்வுரைகாரர் மேற்கோளிடம் காட்டினரில்லையேனும், இது பண்டை நூலினின்றே அவர் கொண்டதாதல் வேண்டும். இல்லையேல், 'இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன் றொழில் உரித்தென்கின்றது* என இதுவே செய்தியை அவர் வேறிடத்தும்* குறிப்பிட்டுச் செல்ல ஒருப்பட்டிரார் (பொரு. 32). இதனால், அகத்திய முனிவரால் தென்னாட்டுக்காடுகளிற் குடியேற்றப்பட்டவர்களிலே கண்ணபிரானின் வமிசத்தவரும் சேர்ந்தவர் என்பது பெறப்படுகின்றது. இச்செய்திகளையும், கண்ணன் அவதரித்த யதுவமிசத்தவரே வேளிர் என்பதற்குரிய பிரமாணங்களையும் 'வேளிர் வரலாறு' என்ற தனிநூலுள் தெரிய விளக்கியுள்ளேன். எனவே, குடகாகிய மலயமலையிலிருந்த அகத்தியனார் வேளிர் முதலியோரைக் குடியேற்றித் தமிழகத்துப் பொதியமலையையும் தம் ஆச்சிரமமாகக் கொண்டது, கண்ணபிரான் காலத்தை அடுத்ததே என்பது பெறப்படுகின்றது. குடகும் பொதியிலும் அவர்க்கு ஆச்சிரமங்களென்பதனை—

> 'அமர முனிவனகத்தியன் தனாது
> கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை' (மணி 3ம. பதிகம்)
> 'ஓங்குயர் மலயத் தருந்தவன் (டிெ. 1, 4)
> 'மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு' (சிலப். 27, 69)

என்னும் முன்னோர் கூற்றுக்களானும் உணர்க. அவ்விரு மலைகளும் அகத்தியாச்சிரமங்களானமை பற்றியே **மலயம்** என்ற பெயரை அவ்விரண்டும் ஏற்கலாயின என்க.

இங்ஙனம் அகத்தியனார் பொதியத்தில் இருந்த காலத்தேதான், தமிழ்நாட்டுப் பூர்விகமக்களது பாஷையையும் அவர் வழக்கவொழுக்கங்களையும் அறிந்து தம்பெயரால் இலக்கணநூலை அவர் இயற்றியதும், தென்னாட்டரசரைக் கொண்டு தலைச்சங்கத்தை நிறுவியதுமாகும். இந்நிலத்தினை, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென நான்கு பிரிவினதாகப் பகுத்து அவ்வந்நிலத்தவரின் வழக்காறுகளை அறிந்து அகத்தியனார் நூலியற்றியவரென்பதும், அந்நிலப்பிரிவுக

* கண்ணபிரான் காலத்துக்குப் பிற்பட்டவனாகத் தெரியும் இவ்விராவணன், வேறோர் கொடிய இராக்கதன் போலும்.

ளுள், முல்லையான காடுசார்ந்த நிலம் மாயோனாகிய கண்ணபிரானை அதிதெய்வமாகவும் அப்பிரான் வளர்ந்த ஆயர்குலத்தவரை மக்களாகவும் உடையதென்பதும், அம்முனிவரது தலைமைமாணாக்கராகச் சொல்லப்படும் தொல்காப்பியனார் கூற்றுக்களினின்று நாம் நன்கறியலாம். 'மாயோன் மேய காடுறை யுலகமும்' என்று கூறிய தொல்காப்பியர் கருத்து, முல்லைத் தெய்வம் கண்ணபிரான் என்பதேயாம்.* அம் முல்லைக்குரிய ஆய்க்குலத்தவர்க்கு அப்பெருமானே வழிபடு கடவுள் என்பதனையும், கடைச்சங்க நூல்களும் பிறவும் திருமாலின் ஏனையவதார மூர்த்திகளை அந்நிலத் தெய்வமாகக் குறியாது, கண்ணனையே அவ்வாறு சிறப்பித்துச் செல்லுதலையும் கற்றோர் அறிவர். இவற்றால், அகத்தியனார் காலத்தேயே கண்ணபிரான் வழிபாடு பிரபலம் பெற்றிருந்தது என்பது தேறப்படும். எனவே கண்ணபிரான் வாழ்ந்த காலத்துக்குப் பின்பே அகத்தியர் தென்னாடு புகுந்து தலைச்சங்கத்தைத் தாபித்தும், அகத்தியம் என்ற முத்தமிழிலக்கண நூலினை இயற்றியும் போந்தவர் என்பது தெளிவாம்.

அகத்தியனார் இயற்றிய அவ்விலக்கண நூல் நெடுங்காலத்துக்கு முன்பே வழக்கு வீழ்ந்ததாயினும், சிற்சில சூத்திரங்கள் மட்டும் இன்றுவரை நடையாடுகின்றன. அவற்றைப் பழைய உரையாசிரியர் சிலரும் பிரமாணமாகக் கொண்டு ஆள்வாராயினர். அவற்றுள்—

'ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையால்
இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்
(தொல். சொல் 75. சேனாவரையம்; நன். 290 - சங்கர. வி.)

என்பது ஒன்று. இதனால், விளியைப் பெயரது விகாரமென்றடக்கி வேற்றுமைகள் ஏழே என்று இலக்கணம் வகுத்த வடமொழிப் புலவரொருவர் கொள்கையையும், அவ்வாறடக்காது வேறாக வைத்து எட்டென்று இலக்கணம் வகுத்த இந்திரனது கொள்கையையும் எடுத்துக் காட்டி, இவற்றுள் இந்திரனது கூற்றைத் தம்மதமாகக் கொண்டனர் அகத்தியனார் என்பது அறியப்படும். இவ்வாறு விளியை எழுவாயிலடக்கி வேற்றுமையேழென்று இலக்கணஞ் செய்தவர், இப்போது தெரிந்தவளவிற் **பாணினி** முனிவராகவே சொல்லலாம். 'ஓதிய புலவனு முளன்' என்ற அகத்தியனார் கூற்றுப்

---

* '3. கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குக்கள்' என்ற கட்டுரையின் முகப்பிலும் இவை நன்கு விளக்கப்பட்டன.

பாணினியையன்றி அவர்க்கு முற்பட்ட வடமொழியிலக்கண வாசிரியரையும் குறிக்கத்தக்கதேனும், ஒருவழக்காற்றைக் கருதுமிடத்துப் பாணினியையே அது சுட்டுவதாகக் கொள்ளற்குரித்து. உலகியற் பொருள்களை மனோநிலைக் கேற்ப விரிவாகப் பகுத்து வந்த வழக்கம் பண்டையோர்க்கும், அவற்றை அடக்கும்வாயெல்லாம் அடக்கிச் சுருக்கிவந்த வழக்கம் பின்னோர்க்குமாகவே யாண்டுங் காணலாகும். இவற்றுக்குக் காரணம், முன்னையோர் புதிதுபுதிதாகப் பொருள்களைக்கண்டு பாகுபடுத்துவதும், பின்னையோர் அக் கண்டுபிடித்தவற்றை விரிவஞ்சிச் சுருக்கிச் சீர்திருத்தஞ்செய்து வந்ததுமேயாம். அம் முறையில், முன்னோரால் எட்டாகக் கொள்ளப்பட்டுவந்த வேற்றுமைகளுள் விளியை எழுவாயிலடக்கி ஏழாகச் சுருக்கியவர் பிற்பட்ட பாணினி பகவானே என்று நாம் கொள்ளக்கூடியதன்றோ?

மேலும், வடமொழி தென்மொழி யிரண்டற்குஞ் சிவபிரானே மூலமானவரென்றும், அவரே வடமொழியைப் பாணினிக்கும் பின்பு தென்மொழியை அகத்தியர்க்கும் உபதேசித்தவரென்றும் புராணங்கள் கூறுகின்றன. இதனை—

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" (காஞ்சிப்பு)

என்ற சிவஞானமுனிவர் வாக்காலும் உணர்க. இக்கொள்கைப்படி நோக்கின் சிவபிரானது உபதேசம் பணினிக்கும் அகஸ்தியர்க்கும் ஒப்ப நிகழ்ந்ததென்றேனும் பாணினிக்கு முன்னும் அகஸ்தியர்க்குப் பின்னும் நிகழ்ந்ததென்றேனும் இருவகையுங் கொள்ளக் கிடக்கின்றது. இவற்றுள் உண்மை எதுவாயினும், அம்முனிவர்களிருவரும் நெருங்கி வசித்தவர்களென்பதை இச்செய்தி குறிப்பிடக் கூடியது எனலாம்.

பாணினி முனிவர் தம் இலக்கண நூலில், மகாபாரத காலத்துப் பெருமக்களாகிய குந்தி, யுதிஷ்டிரன், வாசுதேவன், அருச்சுனன், துரோணன் முதலியோர் பெயர்களை எடுத்தோதுதலால் அம்முனிவர் அப்பாரதகாலத்துக்கும் பிற்பட்டவர் என்பது தேற்றமாம். பாணினி விஷயமாகப் பிரபல ஆராய்ச்சிசெய்து எழுதிய **கோல்ட் ஸ்டக்கர்** (Dr. Goldstucker) என்ற ஜர்மனாசிரியர், பாணினிபகவான் காலம் இற்றைக்கு 2700, 2800-வருஷங்கட்கு—அஃதாவது கி.மு. 8, 9-ம் நூற்றாண்டுகட்கு முன்னாகும் என்று பலகாரணங்கள் காட்டி முடித்துள்ளார். இதனைப் பெரும்பாலும் ஆதரித்தே, ஸ்ரீ ரோமேசசந்திரதத்தரும் மற்றும்

சரித்திராசிரியர் பலரும் கூறுவர். இஃது உறுதிபெறுவதாயின், அகத்தியனார் தெற்கே வேளிருடன் வந்தேறிய காலமும் அக்காலத்தை ஒட்டியதே என்று கொள்ளப்படும். இக்கால வரையறை, வேளிர் தென்னாடு வந்த காலமாக யான் **வேளிர் வரலாற்றுள்** காட்டிய 11-ம் நூற்றாண்டு முடிபோடு நெருங்கி யிருத்தல் குறிப்பிடத்தக்கது

இனி, அகஸ்திய முனிவர் இருக்குவேதத்தில் பல மந்திரங் கட்கு ஆசிரியராகக் காணப்படுகின்றார். இம்முனிவரே தலைச் சங்கத்தவரான அகத்தியனார் என்பதற்குப் பிரமாணங்கள் கிடையாமையின், முற்கூறியபடி, அகஸ்திய கோத்திரத்தில் வந்த பெரியாருள் ஒருவராகப் பின்னவரிருந்திருக்கலாம் என்று சிலர் கருதுவர். இவ்வாறு கூறுதலை நம்மவரில் ஒரு சாரார் ஒப்பாராயின், ஒரு முனிவரே தம் தபோமகிமையால் பன்னூற்றாண்டுகள் வாழ்ந்தவரெனல் வேண்டும். இதன் முடிபு எவ்வாறாயினும், தென்றிசையடைந்த நொய்ம்மை போகப் பொதியமலையைத் தம் ஆச்சிரமமாக்கிக்கொண்டு தென்னாட்டைச் செழிப்பித்தும், தலைச் சங்கத்தைத் தொடங்கி அந்நாட்டு மொழியினைச் சீர்ப்படுத்தியும் போந்த அகத்தியனார் பாரதகாலத்தை ஒட்டியோ அன்றி அதற் கடுத்தோ வாழ்ந்தவர் என்று முன் கூறியவற்றினின்று நாம் ஒருபடியாகக் கருதலாகும். இது நிற்க.

தலைச்சங்கத்தவருள் ஒருவராகக் களவியற்பாயிரங்கூறும் முரஞ்சியூர் முடிநாகராயரை நோக்குவோம். பழைய புலவர் செய்திகளைத் தெரிதற்குப் பெருங்கருவியாயுள்ளதும் சங்கச் செய்யுட்களின் திரட்டுமான புறநானூற்றுள், சேரமான் பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் என்ற சேரனைப் பற்றிய பாடல் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது. அவனைப் பாடிய புலவர், முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார். இவர், அச்சேரனை, பாரத யுத்தத்தில் பாண்டவர்பக்கல் நின்று அப்பெரும்போர் முடியுந் துணையும் பாண்டவசேனைக்கு உணவளிக்கும் பெருங்கருமத்தை மேற்கொண்டு புரிந்தவன் என்று புகழ்கின்றார். இங்ஙனம் பேருணவளித்த சிறப்புப்பற்றியே 'பெருஞ்சோற்றுதியன்' என இவன் விசேடிக்கப்பட்டனன். இதனை—

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என, அவ்வரசனை இம்முடிநாகர் நேரில் விளித்துக்கூறுமாற்றான் உணர்க. இதனால் அவ்வரசனும் இப்புலவரும் ஒரே காலத்தவர் என்பதும், இப்பாட்டுப் பாரதயுத்தம் முடிந்த சமீப காலத்தே பாடப்பட்டதென்பதும் புலனும். இவ்வுதியன் பாண்டவசேனைக்கு அளித்த பெருஞ்சோற்று நிலையை—

"மறப்படைக் குதிரை மாறா மைந்நிற்
* றுறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை யிரும்பல்,
கூளிச் சுற்றங் குடியிருந் தாங்கு" (அகநா. 233)

என மாமூலனாரும்,

"ஓரைவ ரீரைம் பதின்மருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன்
(செய்: 29, ஊசல்.)

என இளங்கோவடிகளும் புகழ்வர். இனி இவ்வுதியனை முன்னிலைப் படுத்துப் பாடியவரும் தலைச்சங்கப் புலவருள் ஒருவரென்று கூறப் பட்டவரும் முடிநாகராயர் என ஒரேபெயருடையவரா யிருத்த லோடு, முரஞ்சியூர் என ஊரொற்றுமையுங் கொண்டிருத்தல் காணலாம். ஆகவே, புறநாநூற்றுட் கண்ட புலவரே தலைச்சங்கத் தவர் என்று கொள்வது பெரிதும் பொருந்தும்; இங்ஙனம் அமைந்த பெரும் பழைமை பற்றியே, அவரது செய்யுளைச் சங்கத்துப் புலவர் பாடல்களெல்லாவற்றினுந் தலைமையில் வைத்துப் புறநானூறு தொகுத்த புலவர் சிறப்பித்ததூஉம் என்க. எனவே, பாரத யுத்தத்தில் உதவிபுரிந்த சேரலாதனை நேரிற் பாடியவருந் தலைச்சங்கத்தவருமான முடிநாகராயரும் அகத்தி யனார்போலவே, அப்பாரதகாலத்தை அடுத்திருந்தவர் என்பது நன்கு பெறப்படுகின்றது.

இனி, கோதமனார் என்பாரும் தலைச்சங்கத்தவருள் ஒருவ ரென்று நச்சினார்க்கினியர் கூறுவர். ஆயின் இக்கூற்றுக்குரிய பிரமாணத்தை அவர் குறிப்பிடவில்லை. கோமதனார் என்ற புலவ ரொருவர் தருமபுத்திரன் என்பானைப்பாடிய பாடலொன்று புற நானூற்றுள் (366) காணப்படுகின்றது. அவனை முன்னிலைப் படுத்து மிடத்து 'அறவோன் மகனே' என்று அப்புலவர் விளிக் கின்றார். இத்தருமபுத்திரன், பாண்டவர் முன்றோன்றலே என்பர் ஒருசாரார். இஃது ஏற்புடையதாயின், இக்கோதமனார் பாரத

* 'துறக்கமெய்திய...முதியர்' என்பது, மகாப்பிரஸ்தானஞ் செய்து சுவர்க்கமடைந்த முன்னோரான பாண்டவர் என்றவாறு.

காலத்தவரென்றும், நச்சினர்க்கினியர் கூறிய கோதமனரும் இவரும் ஒருவராகக் கருதப் பொருத்தமுண்டென்றுஞ் சொல்லலாம்,

பாரதயுத்தகாலம், கலியுகாரம்பத்தையொட்டி. இன்றைக்கு 5000 ஆண்டுகட்குமுன்பு என்பது நூல்களில் வழங்கும் பிரபலமான வழக்காகும். இதனை நம் நாட்டினும் பிறநாட்டினுமுள்ள சரித்திராசிரியர் பலரும் நவீன ஆராய்ச்சிமுறையிற் சோதித்து வருவதில், அம்மகாயுத்தம் நடந்தேறியது இன்றைக்கு 3000-ஆண்டுகட்கு முன் (அஃதாவது கி. மு. 12-ம் நூற்றாண்டினிடையில்) என்று முடிவு கூறுகின்றனர். அச்சரித்திராசிரியர் பாணினியின் காலத்தை கி. மு. 9, 10-ஆம் நூற்றாண்டென்று அறுதியிட்டுள்ளதை முன்னரே குறிப்பிட்டேன். இத்தகைய முடிபுகளிற் புகுந்து நாம் ஆராயவில்லையேனும். இவர்கள் கொள்கையிலிருந்து பாணினிபகவான் பாரதகாலத்தை அடுத்திருந்தவரென்றவளவில் நமக்கு விளக்கமாகின்றது. ஆகவே, அப்பாரதயுத்த நிகழ்ச்சிக்குப் பின் பாணினிகாலத்தையொட்டியே அகத்தியனர் தென்னாட்டுப் பொதியிலிற் றங்கித் தலைச் சங்கத்தைத் தொடங்கியவராக வேண்டும் என்று மேற்கூறிய செய்திகட்கியைய, நாம் கொள்ளலாகும்.

---

# 6. இடைச்சங்கம்*

இனி, இடைச்சங்க நிலையை நோக்குவோம். தலைச்சங்க வரலாறு போலவே, இடைச் சங்கச் செய்திகள் சிலவும் இறையனார் களவியலுரைப்பாயிரத்தே வரையப்பட்டுள்ளன. அவை யாவன:—"இடைச்சங்கமிருந்தார் அகத்தியனரும் தொல்காப்பியனரும் இருந்தையூர்க் கருங்கோழியும் மோசியும் வெள்ளூர்க்காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன்மாறனும் துவரைக் கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்றுவர் பாடினரென்ப; அவர்களாற் பாடப்பட்டன கலியுங் குருகும் வெண்டாளி

* இக்கட்டுரை, 34 - வருஷங்கட்குமுன், ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற 'ஸ்ரீவாணி விலாஸினி' என்ற பத்திரிகையிலும் செந்தமிழ்ப் பத்திரிகையினும்(1904)ஐயன் ஆரிதன் என்ற கோத்திரப்பெயருடன் இவ்வாசிரியரால் எழுதி வெளியிடப்பட்டது. பின்பு கண்ட செய்திகள் சிலவும் இதனுள் இப்போது சேர்க்கப்பெற்றுள்ளன.

யும் வியாழமாலையகவலும் என இத்தொடக்கத்தன என்ப; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமு மென இவை; அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவரைச் சங்கமிரீ இயினர் வெண்டேர்ச் செழியன்முதலாக முடத்திருமாறன் ஈருக ஐம்பத்தொன்பதின்ம ரென்ப; அவருட் கவியரங்கேறினர் ஐவர் பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப; அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது" என இவை. இச்செய்திகளும் கர்ண பரம் பரைகளே என்பதை, முன்னது போலவே 'என்ப' என்னும் முற்றுச்சொல்லால் ஒவ்வொரு வாக்கியமும் முடிந்திருத்தலால் அறியலாம். இவற்றால், அகத்தியனார் காலமுதலாக முடத்திரு மாறன் காலம்வரை இடைச்சங்கம் நிகழ்ந்ததென்பது வெளியா கின்றது. இம்முடத்திருமாறன் காலத்தேதான் சமுத்திரம் பாண்டியநாட்டிற் சிலபகுதியை அழித்ததாகவேண்டும் எனவும், அக்கடல்கோளில் அழிந்த கபாடபுரம் என்னுந் தலைநகரைவிட்டு, அவ்வரசன் மதுரையைத் தன் தலைநகராக்கி அங்கே கடைச் சங்கத்தைத் தொடங்கினனெனவும் அக்களவிய லுரைப்பாயிரம் கூறுகின்றது. இதனால், இடைச்சங்கத்தின் முடிவும் கடைச் சங்கத்தின் ஆரம்பமும் அரசனொருவன் காலத்தே நிகழ்ந்தன என்பது தெளிவாம்.

மேற்கூறிய இடைச்சங்க வரலாறுகள் ஒவ்வொன்றையும் வேறு கருவிகொண்டு உண்மையென்று சாதித்தல் இப்போது அருமையாயினும், அவற்றுள்ளே கடல் பாண்டிநாட்டின் ஒரு பகுதியை விழுங்கியதென்ற செய்தியைப் பண்டை நூல்கள் வலியுறுத்துகின்றன. கடைச்சங்க நாளிலே அக்கடல்கோட் செய்தி பிரபலமாயிருந்து வந்தது என்பது,

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

எனக் கலித்தொகையிலும், (க௦௪)

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" (17 - 5 - 7)

எனச் சிலப்பதிகாரத்தும் வருதலால் அறியலாம். இவற்றுள்ளே பின்னதில், பாண்டிநாட்டின் தென்கோடியில் இக்கடல்கோள் நிகழ்ந்ததென்று குறிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே, "வட வேங்கடந் தென்குமரி யாயிடை" என்னுந் தொல்காப்பியப் பாயிரத்துக்கு உரையெழுதுமிடத்து உரையாசிரியராகிய இளம் பூரணவடிகள், "மங்கலத்திசையாகலின் வடக்கு முற்கூறப்பட்டது; கடல்கொள்வதன் முன்பு பிறநாடு முண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது; கிழக்கும் மேற்கும் பிறநாடின்மையிற் கூறப்படாவாயின" என்று எழுதிப்போகின்றார். "வினையினீங்கி" என்னும் மரபியற்சூத்திர வுரையில், பேராசிரியர்—"பனம்பாரனார், வடவேங்கடந் தென்குமரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ் செய்தமையின், சகரர்வேள்விக் குதிரைநாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னைய தென்பதும்" என வரைந்தனர். சிலப்பதிகாரத்து வரும் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்ற வேனிற் காதை அடிகளின் உரையிலே இக்கடல்கோளைப்பற்றி அடியார்க்கு நல்லார் எழுதுவன அடியில் வருமாறு:—"முதற்சங்க காலத்துக் கவியரங்கேறிய எழுவர் பாண்டியருள் ஒருவனும் தொல்காப்பியஞ் செவித்தோனுமாகிய "சயமாகீர்த்தி" என்ற நிலந்தருதிருவிற் பாண்டியன்காலத்தே, பாண்டிநாட்டுத் தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய ப.்றுளி என்னும் யாற்றிற்கும் குமரி என்னும் யாற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் கண்ணவாகிய ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன் பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரை நாடும் ஏழ்குறும்பனைநாடு மென்னும் இந்நாற்பத்தொன்பது நாடும், குமரிகொல்ல முதலிய பன்மலைநாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண்டொழிந்தது......இதற்கு 'வடிவேலெறிந்த......கடல் கொள்ள" என வரும் சிலப்பதிகார அடிகளும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையும், உரையாசிரியரான இளம்பூரணவடிகள் முகவுரையும் மேற்கோள்களா மெனவும் கூறிப்போந்தனர். நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் கூறியவாறே, தெற்கே கடலாற் கொள்ளப்பட்டவை நாற்பத்தொன்பது நாடுகள் என்று தொல்காப்பியப் பாயிரவுரையில் வரைகின்றார். இவற்றால் முற்கூறிய கடல்கோள் தமிழ்நாட்டின் தெற்கே குமரியாற்றுக்கும் ப..றுளியாற்றுக்கும் இடையிலிருந்த நிலத்தை விழுங்கியதென்பது ஐயமின்றிப் போதரும். ஆனால், கடல்கோட்பட்ட அவ்விடை நிலம் எழுநூற்றுக்காத தூரமுடைய

நாற்பத்தொன்பது நாடென்று, அதன் வகையெலாங்காட்டிச் சென்ருர் அடியார்க்குநல்லார். இதனைக் குறிப்பாக ஆதரிக்கின்ருர் நச்சினர்க்கினியர். நான்கு கூப்பீடு அளவுடைய காதமென்பது இக்காலத்து இரண்டுமைல் தூரமாக வைத்துக்கொண்டாலும், 700-காதத்துக்கு 1400-மைலளவு நிலம் கடல் கொண்டதாக முடிகின்றது. இவ்வளவு பெருந்தூரம் பாரத காலத்துக்குப் பின் கடல்கோளால் பரதகண்டத்தில் அழிவுற்றதென்பது ஒப்பத்தக்கதாகத் தோன்றவில்லை. சிலர் பல்லாயிரவருஷங்கட்கு முன்பு, ஆபிரிகா கண்டம் ஆசியா கண்டத்துடன் ஒன்றியிருந்ததைப் பிரிவுபடச் செய்த கடல்கோட் செய்தியைக் குறிப்பதே, அடியார்க்குநல்லார் எழுதியதென்று கூறுகின்றனர். அந்நிகழ்ச்சி ஒருகால் உண்மையாயிருப்பினும், பாரதகாலத்துக்குப் பிற்பட்டதென்று தெளியப்பட்ட இடைச்சங்க வரலாற்ரேடு அஃது எவ்வாற்ருனும் பொருத்தமுடையதன்ரும். இவ்வாறு பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் 700-காவத நீளமுள்ளதென்று அடியார்க்குநல்லார் எழுதியது ஒருபுறம் நிற்க: அவ்வுரையாசிரியர்க்கும் முற்பட்ட சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் அச்சிலப்பதிகார அடியுரையில் "**பஃறுளியாறு குமரிப் பக்கததோர் யாறு**" என்றெழுதியுள்ளார். இது குமரியாறும் பஃறுளியாறும் நெருங்கியிருந்தனவே என்பதை விளக்கி, அடியார்க்குநல்லார் கூற்ரேடு முரணுகின்றது. இதனுல், அவ்விரண்டாற்றுக்கும் இடைப்பட்டதொரு சிறுநாடே தென்னுட்டில் அழிந்ததாகல் வேண்டுமென்பது பெறப்படும். பேராசிரியர் எழுத்தாக நான் முதலிற்காட்டியதில், "குமரியாறு **பனைநாட்டோடு** கடல்கொள்ள' என வந்த சொற்ருடரைக் கொண்டு, அவ்வாறு அழிவுற்ற நிலப்பகுதி பனைநாடே என்பது தெரியலாம். இனி நாற்பத்தொன்பது பெருநாடுகள் அப்போது அழிந்தன என்பதற்கு ஏற்புடைய மேற்கோள்கள் நூல்களிற் காணப்பட்வில்லையாயினும், அந்நாற்பத்தொன்பதும் அவ்விரண்டாற்றுக்கும் இடையிலிருந்த சிறுசிறு நிலப்பகுதிகளே எனக்கொள்ளின், ஒருவாறு பொருந்தலாம். எங்ஙனமாயினும், 1400-மைல் நீளமுள்ள பூமி இந்தியாவில் பாரதகாலத்துக்குப்பின் அழிவுற்றதென்பதற்குச் சிறந்த ஆதாரங்கள் கிடையா என்க. எனினும், இடைச்சங்க நாளில் ஒரு கடல்கோளாற் பாண்டிநாட்டின் ஒரு பகுதி முழுகிவிட்டதென்பது மறுக்கப்படாதது. அன்றியும், பாண்டியன் தன்னுட்டிற் சில பகுதியைக் கடல்கொண்டதற்குப் பிரதியாகச் சேரசோழ நாடுகளில் முறையே **குண்டூர் முத்தூர்** என்னுங் கூற்றங்களிரண்டை வென்று பெற்று நிரப்பினனென்று

அவ்வடியார்க்குநல்லாரே சிலப்பதிகாரக் காடுகாண் காதை 17–22-ஆம் அடிகளின் விசேடவுரையில் வரைந்திருக்கின்றனர். முற்காலத்திலே கூற்றமென வழங்கியது இப்போது "ஜில்லா" என வழங்கும் நிலப்பிரிவுக்கும் அதிகமானதன்று. ஆக, இழந்த பாகத்துக்குப் பிரதியாகப் பாண்டியன் பெற்றது இரண்டு கூற்றங்களேயாயின், அவ்விழந்த நிலம் 1400-மைல் நீட்சியதாகுமா? இதனால், இரண்டுகூற்றம் அளவுள்ள நிலங்களே அப்போது சமுத்திரத்தால் விழுங்கப்பட்டனவென்பது விளக்கமாம். பாண்டியன், சேரசோழ நாடுகளினின்று தானிழந்த நிலத்துக்குப் பிரதிநிலம் பெற்றானென்பது, "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின், புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர் கெண்டை" எனக் கலித்தொகையினும் குறிப்பாக உரைக்கப்பட்டமை காண்க.

இனி, மேற்கூறிய அடியார்க்குநல்லார் செய்திகளில், முதற்சங்கத்துப் பாண்டியருள் ஒருவனாகிய சயமாகீர்த்தி என்ற நிலந்தருதிருவிற்பாண்டியன் காலத்தே கடல்பொங்கி 49-நாடுகளை அழித்ததென்றும், அஃது இறையனார்களவியலுரையாலும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையாலும் பெறுதும் என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. அவ்வுரையாசிரியர் பிரமாணமாகக் கொண்டவற்றுள்ளே, களவியலுரை, இடைச்சங்கத்திறுதியிருந்த முடத்திருமாறன் காலமே அக்கடல்கோட்காலமென்று ஊகிக்கின்றதேயன்றி, அடியார்க்குநல்லார் கூறியவாறு முதற்சங்க காலமென்று கூறிற்றில்லை. இதனை, முதற்கண் யாங்குறித்த அக்களவியலுரைப் பாயிரத்தாற் றெளிக. "முதற்சங்கத்தார் இருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப" எனத் தலைச் சங்கவரலாறு எழுதுமிடத்து அவ்வுரையில் வரையப்பட்டுளதே எனின், இடைச்சங்க முடிவில் நிகழ்ந்த கடல்கோளால், தலைச்சங்கத்தவரிருந்து தமிழாராய்ந்த தென்மதுரையும் அழிவுற்றது நோக்கி அது கூறப்பட்டதேயன்றி, தலைச்சங்ககாலத்து நிகழ்ந்த செய்தியாக அதனைக் கொள்ளக் கூடவில்லை. கூடியதேல், அக்கடல்கோள் நிகழ்ச்சியை "முதற்சங்ககாலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது" என அவ்வுரைப்பாயிரம் ஊகிக்கவேண்டிய காரணமில்லை. தலைச்சங்ககாலத்து ஒரு கடல்கோளும், இடைச்சங்க காலத்து ஒரு கடல்கோளுமாக இரண்டு நிகழ்ந்தன என்பதற்கு ஆதரவே கிடையாது. இறையனார்களவியலுரை ஏனையவுரைகளெல்லாவற்றினும் பழைமை உடையதாதலால், பிற்பட்ட ஏனையோர் கூறும் செய்திகளினும் அஃது அதிக நம்பகம் வைத்தற்கு

ஏற்றது. அடியார்க்குநல்லாருரைச் செய்தி அதனோடு மாறுபடு மாயின் அவ்விரண்டனுள் நாம் முன்னதையே பிரமாணமாகக் கொள்ளத்தகுமென்பது இதனாற் போதரும். ஆயினும் மாறுபடு மிடங்களை விட்டு, ஏற்பன சில அதிகமாகக் காணப்படுஞ் செய்தி களைப் பின்னூலினின்றும் தழுவுதல் குற்றமுடைத்தன்று. அம் முறையில் முற்பட்ட இறையனார் களவியற் பாயிரத்தாலும் ஏனை யோர்கூற்றுக்களாலும் இடைச்சங்கச் செய்திகளாக அறியக்கிடப் பவை என்னவெனின்:—பாரத காலத்துக்குப் பின்னும் கடைச் சங்ககாலத்துக்கு முன்னுமாகிய இடைச்சங்க நாளிலே ஒரு கடல் கோள் நிகழ்ந்தது உண்மை யென்பதும், அந்நிகழ்ச்சியிற் பாண்டிய நாட்டின் தெற்கெல்லையாகவிருந்த நிலத்திலே இரண்டுகூற்றம் அளவுள்ள பூமி அழிவுற்ற தென்பதும், அவ்வழிவுநிலம் குமரி பஃறுளியாறுகட்கு இடையிலிருந்த பனை நாடென்பதும், அந் நாடு 49-சிறு நாடுகளாகவும் பகுக்கப்பட்டிருந்ததென்பதும், அக் கடல்கோட் காலத்து இருந்த பாண்டியன் முடத்திருமாறனென்ப தும் அவன் தானிழந்த நிலத்துக்குப் பிரதியாகச் சில கூற்றங்களைச் சேரசோழ நாடுகளினின்று பெற்றானென்பதும், அதுபற்றி நிலந் தருதிருவிற் பாண்டியனெனவும் சயமாகீர்த்தியெனவும் அவ் வரசன் பெயர்பெற்றான் என்பதும், அவன் காலத்தேதான் தொல்காப்பியம் வெளியிடப்பட்ட தென்பதும், கடல்கோளின் பின்பு அவ்வரசன் கபாடபுரத்தை விட்டுக் கூடலைத் தன் தலை நகராக்கினனென்பதும், ஆக்கிக் கடைச்சங்கத்தைத் தானே தொடங்கினனென்பதும் பிறவுமாம். இவ்வாறு கொள்ள நேர்ந்த தற்கு இன்னொரு காரணமுமுண்டு. அடியார்க்குநல்லார் பிரமாண மாகக் கொண்டவற்றுள், இறையனார் பொருளுரை அவர்க்கு மாறு பட்டதோடு, மற்றொரு பிரமாணமாகிய இளம்பூரணர் முகவுரை யும், தலைச்சங்கத்தில் நிலந்தருதிருவிற் பாண்டியன்நாளிலே கடல் கோள் நிகழ்ந்ததென்று கூறியதாகவும் காணவில்லை. இதனால் அவர் செய்திகளில் ஒன்றாகிய கடல்கோள் தலைச்சங்கச் செய்தி களுள் ஒன்றாகக் கொள்ளுதல் கூடாமையாயிற்று. இது கிடக்க.

இதுவரை கூறிவந்த கடல்கோள், என் கருத்துப்படி, பாரத காலத்துக்குப்பின் பாண்டி நாட்டின் தென்பாரிசத்திலே நிகழ்ந்த துண்டா? என்பதே இனி நாம் ஆராய வேண்டுவது. இவ்வாரய்ச் சியில் அத்திசையில் அக்காலத்தே ஒரு கடல்கோள் நிகழ்ந்த தென்பதற்குப் பிரமாணங்கள் கிடைக்குமாயின், அதனை இடைச் சங்ககாலத்தின் கடையெல்லையாக நாம் கொள்ளுதலின் யாதோ ரிழுக்குமின்றாகும்.

இ. டென்னன்டு என்ற பிரபல ஆங்கிலவாசியர் எழுதிய "சிலோன்" (Tennet's Ceylon) என்ற புத்தகத்தின் முதற்றொகுதியில் 7-ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பில் அடியில்வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. "இந்தியாவிலிருந்து இலங்கையானது கடலோரத்தில் உண்டாகியதோர் கலக்கத்தால் கிறிஸ்து பிறக்குமுன். 2387-ஆம் வருஷத்தில் பிரிவுற்றதாகப் பௌத்தர்களாற் சொல்லப்படுகின்றது. இஃதன்றி, மற்றுமொருமுறை கி. மு. 504-ஆம் வருஷத்தில் "பாண்டுவாஸா" (இலங்கையரசரிலொருவன்) காலத்தில் அவ்வாறே ஒரு சமுத்திரக் கலக்கம் உண்டாயிற்றென்றும், இதற்கு 200-வருஷங்கட்குப்பின், கி-மு. 306-ல் ஆட்சிபுரிந்த தேவானும்பிரியதிஸ்ஸாவின் காலத்தே கொழும்புப் பக்கத்தில் பூமியானது தன் மட்டத்திற் றாழ்ந்து அமிழ்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளன." இலங்கா தீப மான்மியங்களில் ஒன்றாகிய "இராஜாவளி" என்ற நூலில் அடியில் வருமாறு வரையப்படுகின்றது:— "இக்காலங்களிற் கடலானது கல்யாணி என்னும் இடத்தினின்று ஏழு லீக் அளவு தூரம் இருந்தது. கல்யாணி அரசனால் துன்புறுத்தப்பட்ட 'தேருகான்ஸே' என்னும் ஆசாரியனுக்கு விளைத்த துன்பங்காரணமாக, இலங்காதீபத்தைக் காத்து வந்த தேவர்கள் சினங்கொண்டு பூமியின்மேற் கடல் பொங்கி வழியும்படி செய்வித்தார்கள். இராவணனுடைய கொடுமையால் துவாபரயுகத்தில் 25-அரண்மனைகளும் 4-லக்ஷத் தெருக்களும் கடலால் அழிக்கப்பட்டமைபோலவே, இப்போது திஸ்ஸாராஜா காலத்திலே லக்ஷம் பெரும் பட்டணங்களும் 910-செம்படவர் ஊர்களும், முத்துக்குளிப்போர் வசித்த 400-கிராமங்களும் ஆக மொத்தம் கல்யாணி ராஜ்யத்தில் 12-இல் 11-பாகம் கடலால் விழுங்கப்பட்டது" (இராஜாவளி vol. II. pp, 180, 190) என்பன. இச்செய்தி மகாவமிசத்தில் இன்னுஞ்சிறிது பிற்காலத்தே நிகழ்ந்ததாகச் சிற்சில மாறுதலுடன் அதன் 22-ஆம்அத்தியாயத்துக் கூறப்படுகின்றது.* இவற்றால் இற்றைக்கு 4292-வருஷங்கட்குமுன் நிகழ்ந்த முதற் கடல்கோள், ஒன்றாகவிருந்த இலங்கை இந்தியாக்களைப் பிரித்துவிட்டதென்பதும், இரண்டாங் கடல்கோள், கி. மு. 6-ம் நூற்றாண்டின் தொடக்கத்தே நிகழ்ந்ததென்பதும், மூன்றாங் கடல்கோள், நான்காம்நூற்றாண்டில் நடந்ததென்பதும் விளங்கின. இவற்றுள் நமக்கு ஏற்புடையது யாதாம் என்பது இங்கு நோக்கத்தக்கது. முதலில் 4294-ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததாக இலங்கைச் சரித்திரங் கூறுங் கடல்கோள், இலங்கையும் இந்தியாவும் ஒன்றாயிருந்த பழங்கால நிகழ்ச்சி

*The Tamil 1800 - years ago. p. 21.

யாதலின், அதனை அவ்விரண்டும் வேறுபட்டிருந்த இடைச்சங்க காலத்துக் கடல்கோளாகக் கொள்ளுதல் பொருந்தாது. அன்றியும், பாரத யுத்தகாலம் 12-ம் நூற்றாண்டது என்று கருதும் நவீன சரித்திராசியரோ இதனை ஒருபோதும் ஒப்பார். இனி, கி.மு. 6-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தே, இலங்கைத் தீவின் தென்மேற்றிசையில்—அஃதாவது கன்யாகுமரிச் சார்பான கடற்பகுதியில்—நிகழ்ந்ததாகக் கூறப்படும் இரண்டாங் கடல்கோளும் 4-ம் நூற்றாண்டுத் தொடக்கத்து நிகழ்ந்த மூன்றாங் கடல்கோளும் ஆகிய இரண்டினுள் ஒன்றை இடைச்சங்க காலத்ததாகக் கொள்ளுதல் கூடியதே. ஆனால் அடியில் வருஞ் செய்தியின்று, முன்னதும் அதற்கேற்றதன்றென்பது விளங்கும்.

பாண்டியரது பழைய தலைநகராகவும் இடைச்சங்க மிருந்த இடமாகவும் கூறப்படும் கபாடபுரம், வால்மீகிமுனிவர் காலமுதல் கௌடில்யர் காலம்வரை விளங்கியிருந்தது என்பதனை, 'வால்மீகி முனிவருந் தென்னாடும்' என்ற கட்டுரையுள் (பக் 10) தெளிய விளக்கியுள்ளேன். மகாபாரத காலத்தும் இக்கபாடபுரம் பிரபலமாயிருந்ததாகும். கேசவனான கண்ணபிரானால், பாண்டியனும் அவன் தலைநகரும் ஒருகால் அழிக்கப்பட்ட செய்தி கூறுமிடத்தே—

* "கேசவேந ஹதே ஸங்க்யே பிதர்யத நராதிபே
பிந்நே கபாடே பாண்ட்யாநாம் வித்ருதேஷுச பந்துஷு"

(துரோணபர்வம், 23, 69, Poona Ed. 1938)

என மகாபாரதம் கூறுதல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். இதனாலும், கபாடபுரம், பாரதகாலத்தில் பிரபலமாயிருந்த பாண்டியரது நகரம் என்பது மலையிலக்காகும். பாரதவியாக்யாதாவான ஸ்ரீ **நீலகண்டர்** 'கபாடே-நகரவிசேஷே' எனப் பொருள் குறித்திருத்தலும் ஈண்டு அறியற்பாலது.

---

* "கேசவனாலே அரசனை தன்பிதா யுத்தத்திற் கொல்லப்பட்டுப் பாண்டியருடைய கபாடபுரமும் பிளக்கப்பட்டு உறவினரும் தங்கள் தங்கள் ஸ்தானத்தை விட்டு ஓடிப்போன சமயத்தில்" என்பது பொருள். மஹாமஹோபாத்யாயர்: ஸ்ரீ ம. வீ. இராமாநுஜாசாரியரவர்களும், தம் பாரதத் தமிழ்மொழி பெயர்ப்பில், பாண்டியரது இக்கபாடத்தைப்பற்றிக் கீழ்க்குறிப்பிட்டுக் காட்டியிருத்தல் நோக்கத் தகும் (டி. துரோணபர்வம், பக். 93)

இக்கபாடபுரத் துறையில் உண்டாம் முத்துவிசேடத்தைப் பற்றி வால்மீகியும் கௌடில்யரும் குறிப்பிடுதலினின்று, அவ்விருவர் காலத்தும் அம்மாநகரம் அழியாதிருந்த தென்பது தெளிவாம். ஆகவே, வால்மீகி வியாசர்கள் காலத்து மட்டுமின்றிக் கௌடில்யர் காலத்துக்கும் பின்னே அந்நகரினழிவு கடலாலமைந்த தென்பது பெறப்படும். இனி, இலங்கைச் சரித்திரம் கூறும் மேற்குறித்த 6, 4-ஆம் நூற்றுண்டுக் கடல்கோள்களுட் பின்னதான நான்காம் நூற்றுண்டுக் காலம் கௌடில்யர் வாழ்ந்த காலத்துடன் பெரிதும் நெருங்கியிருத்தல் ஈண்டுக் குறிக்கொண்டு நோக்கத்தக்கது. இக் கௌடில்யர், மௌரிய சக்ரவர்த்தியான சந்திரகுப்தனிடம் (கி. மு. 322-272) பிரபல அமைச்சராகவும் ஆசிரியராகவும் விளங்கியவரென்பதை அறிஞர் அறிவர். இப் பெரியார் காலத்தையொட்டி கி. மு. 306-ல் பெருங்கடல்கோளொன்று நிகழ்ந்ததாக மேற்குறித்தபடி இலங்கைச் சரித்திரத்தால் தெரிதலால் **கௌடில்யர் காலத்தோ அவர்க்குச் சிறிது பின்போ, கபாடபுரமும்* தென்னாட்டுப் பகுதியும் கடலால் அழிவுற்றனவாதல் வேண்டும்** என்று நாம் கருதல் தகும். இனி, இச்சங்கப் புலவர்களை நோக்குவோம்.

## தொல்காப்பியனார்[1]

இடைச்சங்கத்து வீற்றிருந்த புலவர்களுள்ளே அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் சிறப்புடையராவர். இவருள் முன்னவரான முனிவரைப்பற்றித் தலைச்சங்கக் கட்டுரையுட் கூறப்பட்டது. இக்குறுமுனிவர்க்குத் தொல்காப்பியனார், அதங் கோட்டாசான் பனம்பாரனார் முதலிய மாணாக்கர் பன்னிருவர் என்றும், இவருள் தலைசிறந்தார் தொல்காப்பியனார் என்றும், இவர்க்குத் திருணதூமாக்கினி என்பது இயற் பெயரென்றும், சமதக்கினி முனிவரின் புத்திரர் இவரென்றும், அகத்தியனார் இவரை இவர்தந்தையின் அனுமதி பெற்றுத் தென்னாட்டுக்குத் தம்முடன் அழைத்து வந்தாரென்றும் நச்சினார்க்கினியர் வரலாறு கூறுவர். இவ்வுரையாளர் கூற்றினின்று, தொல்காப்பியர் வரலாறு முன்னூல்களிற் கூறப்பட்டதாய் அவ்வுரையாளரால் எடுத்தாளப்பட்டதொன்று என்றே சொல்லலாம்.

---

*இக் கபாடபுரஸ்தானத்தில் பின்பு தோன்றிய நகரமே கொற்கையாக வேண்டும் என்பதனை, இந்நூலின் 11-ம் பக்கத்துக் கண்டு கொள்க.

[1] 'தமிழர்நேசன்' என்ற பத்திரிகையில் (தொ-10, ப-1) ஆசிரியரால் வெளியிடப்பட்ட இக்கட்டுரை ஏற்புடைமை பற்றி இங்குச் சேர்க்கப்பட்டது.

தொல்காப்பியன் என்பதற்குப் 'பழைய காப்பியக்குடியில் உள்ளோன்' என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுவர். இதனால், காப்பியம் என்பது அவ்வாசிரியர் குலமென்பது பெறப்படும். கவி என்று பெயர் பெற்ற பிருகுமுனிவரது மரபினர்—'காவ்யர்' என்றும் 'பார்க்கவர்' என்றும் வடமொழித் தொன்னூல்களில் வழங்கப் பெறுவர். பிருகுமுனிவரின் பத்தினியைக் கவிமரபினரின் தாய் என்ற பொருளில் 'காவியமாதா' என்று வான்மீகிமுனிவருங் கூறுகின்றார். கவியாகிய பிருகுவின் புத்திரராதலால், சுக்கிரபகவானுக்குக் காப்பியன் என்ற பெயர் வழங்குதலுண்டு (பிங்கலந்தை). பாரதாயன்* (=பாரத்துவாசன்), கௌணியன் (=கௌண்டின்யன்), மாடலன்† என்பன போலவே, காப்பியன் என்பதும் பார்ப்பனரது பழைய கோத்திரப் பெயராம். பார்க்கவ மரபில் உதித்த காவ்யராகிய சமதக்கினிமுனிவரின் ‡ புத்திரராகத் தொல்காப்பியனார் கூறப்படுவதும், அவர்க்கு வழங்கும் அப்பெயர் குடிபற்றியதென்பதற்குச் சிறந்த சான்றாகின்றது. வெள்ளூர்க் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார், காப்பியஞ் சேந்தனார் முதலாகவுள்ள பழம்புலவர்கள் இக்குடியினரென்றே கொள்ளத்தகும்.

இனி, சாத்தன் என்ற தெய்வம், கண்ணகியின் தோழியான தேவந்திக்குக் கணவனாக வந்த வரலாறு கூறுமிடத்தில்—

> "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து
> தேவந்திகையைத் தீவலஞ் செய்து" (சிலப். 30, 83-4)

என்று இளங்கோவடிகள் பாடுவர். இங்கே கூறிய "காப்பியத் தொல்குடி" என்பது, மேற்கூறிய காவ்யகோத்திரத்தைக் குறிப்பிடுவதென்று கொள்வதே நேராகும். காப்பியக்குடி என்று பெயர் பெற்றுள்ள ஊரொன்று, சோழநாட்டில் சீகாழிக்கு வடக்கில் சிறிது தூரத்திலே உள்ளதென்று தெரியவருகிறது. (சிலப். பக். 645). காப்பியகோத்திரத்துப் பார்ப்பனர் பலர் வாழ்ந்த இடமாயிருந்தது பற்றி, அவ்வூர் அப்பெயர் பெற்றதாதல் வேண்டும்.

* S.I.I.V. V, No. 1408

† Ibid, No, 986.

‡ சமதக்கினி, கவியாகிய பிருகுமரபினர் என்பது ஸ்ரீ மஹாபாரதம் ஆதிபருவம் 67-ம் அத்தியாயத்தால் அறியலாகும்.

இனி, யாஞ்ஞவற்கியரும் போதாயனரும் இயற்றிய ஸ்மிருதி களில், பூர்வருஷிகளினின்றும் தோன்றிய கோத்திரங்கள் பிரவரங் களைப் பற்றிப் பேசுமிடத்தில் 18—கணங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் கபிகணத்துக் கபி கோத்திரமும் ஒன்றாகும். இக்கோத் திரத்தவரிற் பிரபலரான பிராமணர் இன்றும் தென்னாட்டில் உள்ளார்[1]. இவ்வாறே காப்பியகோத்திரத்துப் பார்ப்பனர் வங் காள தேசத்தில் இன்றும் மிகுதியாக உள்ளனரென்று தெரியவரு கின்றது. யானை நூலாசிரியரான பால காப்பியர் என்ற பழைய முனிவர், தம்மைக் காப்பிய கோத்திரத்தவராகக் கூறிக்கொள்ளு தலும் அறியத்தக்கது.

இத்தகைய கோத்திரத்தவராகவே ஆசிரியர் தொல்காப்பிய னரைக் கொள்வதற்கு இடமுண்டு. இவர் பெயரில் உள்ள தொல் என்ற அடையை அவர் குடிக்கு உரியதாகக் கொள்ளக்கூடியதாயி னும், அக்குடிப்பிறந்த முனிவருக்கு ஏற்றிக் கொள்ளுதலும் பொருந்தும். வடமொழியில், பராசரர், கர்க்கர் என்ற முனிவரின் வேறாக விருத்தபராசரர், விருத்தகர்க்கர் என்று அடையுடன் வேறு முனிவர் சிலரும் வழங்கப்படுகின்றனர். அவர்போலவே, காப்பியர் பலரினின்றும் பிரித்தற்காகத் தொல் என்ற விசேட ணம் கொடுக்கப்பட்டிருத்தலுங் கூடியதே யன்றோ. விருத்த சப் தத்துக்கு நேராகத் 'தொல்'என்பதை வழங்குதல் பழையவழக்கே என்பது, கபிலர் எனப் பெயர்பெற்ற புலவர் ஒருவர் இருப்பினும், அவரின் வேறாகத் 'தொல் கபிலர்' என மற்றொருவர் சங்கச் செய் யுளில் (நற்றிணை) காணப்படுவதினின்று அறியத்தக்கது. இனி, தொல்காப்பியர்க்கும் அகத்தியனார்க்கும் இடையிலுண்டான மன வேறுபாட்டினையும் அதனால் நிகழ்ந்த சாபச்செய்திகளையும் பற்றி நச்சினார்க்கினியர் கூறியவற்றை அவர் பாயிரவுரையால் அறியலாம்.

---

[1] The Quarterly Journal of the Mythic Society, Bangalore; Vol. Xi, pp. 69 - 70.

[2] காப்பியகோத்திரத்தவரான பிராமணர் வடநாட்டினுந் தென்னாட்டினும் பண்டு வாழ்ந்தவர் என்பது, சாளுக்கிய வேந்தனான முதல்விக்கிரமாதித்தனது கத்வால்சாஸனத்து, அத் தானசாஸனம் பெற்றவன் காப்பியகோத்திரத்தவன் எனப்படுதலாலும் (Ep. Ind. Vol. X, p. 105), 'காப்பியன் ஆதித்தன் கண்டத்தடிகள்'என முதலாம் இராஜேந்திரசோழன் காலத்தவனொருவன்பெயராலும் அறியப்படும். (S. I. I. Vol. V, No. 660).

இவ்வரலாற்றுக்கு ஆதாரமாயிருந்த முன்னூல் யாதோ, தெரிந்திலது.

தொல்காப்பியத்துக்குப் பாயிரம்பாடிய பனம்பாரனரும், அந்நூல் அரங்கேற்றும்போது அவைத்தலைமை வகித்துக் கேட்ட அதங்கோட்டாசானும் தொல்காப்பியர்க்கு ஒருசாலை மாணாக்கர் எனப்படுதலாலும் அகத்தியனார்மாணாக்கர் பன்னிருவருள் அவ்விருவரும் அடங்குதலாலும், அவர்களும் ஏனை அகத்தியர் மாணாக்கர்களும் இடைச்சங்ககாலத்தில் விளங்கியவர் என்பது பெறப்படும். இம்மாணாக்கருள், அவிநயனார் அவிநயமும், காக்கைபாடினியார் காக்கைபாடினியமும், செம்பூட்சேயார் கூத்தியலும் ஆகிய இயலிசை நூல்கள் இயற்றிய ஆசிரியர்கள் என்பது முன்னோர் எழுத்துக்களால் அறியப்படுகின்றது. குறுந்தொகையுள் பனம்பாரனார் பாட்டொன்று (52) உளது. இப்புலவர், தொல்காப்பியப்பாயிரம் பாடிய பனம்பாரனரோ என்று கருத இடமுண்டு. இவ்வாறே, முடத்திருமாறன் பாடலிரண்டு நற்றிணையுள் (105, 228) கோக்கப்பட்டுள்ளன. இத்திருமாறன் இடைச்சங்கத்திறுதியிலிருந்த பாண்டியனை முடத்திருமாறன்போலும்.

இனி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியனை நெட்டிமையார் என்ற பழம்புலவர்—

"எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறநா. 9)

என்று விளித்து வாழ்த்துகின்றார். இதனுள், "பஃறுளியாற்று மணலினும் நீ பலகாலம் வாழ்வாயாக" எனக் கூறப்படுதல் காணலாம். "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என இளங்கோவடிகளும் பிறரும் கூறியபடி, கடல் கொண்டதாகத் தெரியும் பஃறுளியாறு அதனால் அழிவுற்றதற்குமுன்பு இப்பாட்டுப் பாடப்பட்டதாதல்வேண்டும் என்றும், ஆகவே, இம்முதுகுடுமியும் அவரைப்பாடிய நெட்டிமையார், காரிகிழார், நெடும்பல்லியத்தனார் என்ற புலவர்களும், அக் கடல்கோட் காலத்திருந்த முடத்திருமாறனுக்கு முற்பட்டவர்களாக வேண்டும் என்றும் சொல்லலாம்.

இனி, மதுரையில் சில வருஷங்கட்குமுன் (1902) **செங்கோன் தரைச்செலவு** என்ற சிறுநூலொன்று அச்சிடப்பட்டுள்ளது. அந்

நூலால், அது பஃறுளியாறு கடல் கொள்வப்பட்டதற்கு முன்பு இயற்றப்பட்டதென்று தெரிகின்றது. இதுபாடிய புலவர் **முதலூழித் தனியூர்ச் சேந்தன்*** என்பார். இந்நூலில் *–பாடலும் அவற்றின் உரையுமே இப்போது அகப்பட்டவை. இது பெருவள நாட்டரசனாகிய 'செங்கோன்' என்பான், வேற்றரசரது மண்வேட்டுப்படையெடுத்து வென்ற சிறப்பைப் பற்றியது. இந்நூலானும் உரையானும் ஏழ்தெங்கநாடு, பெருவளநாடு, என்னும் நாடுகளும் பேராறென்னும் நதியும் மணிமலை என்னும் மலையும், முத்தூர் என்னும் ஊரும், சக்கரக்கோ, அகத்தியன், நெடுந்துறையன், இடைக்கழிச் செங்கோடன் எனப் புலவர் சிலரும், பெருநூல் இயனூல் எனச் சில நூல்களும், தாப்புலி என்னும் பாவிகற்பமும் பிறவும் தெரிகின்றன. இந்நூலாற் சிறப்பிக்கப்பட்ட செங்கோன் என்பான், சூரியவமிசத்தவனாகவும் ஏற்றுக்கொடியினனாகவும் கூறப்படுகின்றான். இவனாட்டைச்சார்ந்து பேராறென ஓராறும், வழிக்கழி என ஒரு கடற் பகுதியும் இருந்தனவாகச் சொல்லப்படுகின்றது. இவ்வளவு செய்தி கொண்டதும் மிகப் பழைமையானதுமாகிய இந்நூலைப் பண்டை உரையாசிரியரெவரும் எடுத்தாளாமைக்குச் சிறந்தகாரணம் இன்னதென்று தெரியவில்லை. இதன் அமைப்பாற் பழமை விளங்குகின்றதாயினும், இதனை யெடுத்தாளுதற்குப் பண்டையோர் ஆட்சியில்லாக்குறை தடையாகின்றது. இது நிற்க.

தலைச்சங்கக் கட்டுரையில், அகத்தியனாரைப்பற்றிக் கூறியவிடத்து, அவர் விந்தமலையைக்கடந்து வடக்கினின்று மக்களைக் கொணர்ந்து குடியேற்றித் தெற்குப்பிரதேசங்களைச் சிறுகச்சிறுகச் செழிக்கவைத்து முடிவாகப் பொதியிலில் தங்கினவர் என்ற செய்தி குறிக்கப்பட்டது. பிற்பட்டு நிகழ்ந்த அறிஞர்களின் ஆராய்ச்சிகளால், இக் குறு முனிவர் மேற்கொண்ட முயற்சி இப்பாரதகண்டத்தின் தென்பாகமாக மட்டுமல்லாது, அதன் தென்கீழ்த்திசையிலுள்ள தீபாந்தரங்களிலும் நெடுந்தூரம் கடலைக் கடந்து சென்று பரவியது என்பது அறியப்படுகின்றது. அம்முனிவர் விந்தமலையின் செருக்கை அடக்கிய வரலாறு கடத்தற்கரிதாயிருந்த அம்மலையைக் கடந்து செய்த அருஞ்செயலையும், அவர் கடலைக் குடித்தார் என்ற கதை அங்ஙனமே அரியதாயிருந்த பெருங்கடலைக் கடந்துபுரிந்த அருஞ்செயலையும் குறிப்பிடும்

* 'முதலூழி - முன்னே கடல்கொள்ளப்பட்ட பெரும்பரப்புத் தமிழ் நிலம்' என்று அந்நூலின் பழைய உரையிற் காணப்படுகின்றது. இதனால், முதலூழி என்பது யுகத்தைக் குறிப்பதன்று என்பது தெரிய வருதலின், அங்ஙனம் குறிப்பதாக அதனைக் கொண்டவர் பிற்காலத்தவரே போலும்.

என்பர் சரித்திரவறிஞர். அத்தென்கீழ்த்திசையிலுள்ள சுமாத்ரா, ஜாவா, பலி முதலிய தீபங்களில் அகஸ்தியர் வரலாறுகளும் வழிபாடுகளும் பிரபலமாயுள்ளன. திருணபிந்து, மரீசி என்ற சிஷ்யரிருவர் உருவங்களுடன் அகஸ்தியரின்படிமைகள் ஆங்குள்ளன. அவ்விருவருள், திருணபிந்துவின் வரலாறு வாயுபுராணத்தும் கூறப்படுகின்றது. அவர்க்குத் திராவிடா என்ற பெண்ணொருத்தி உண்டென்பது அவ்வரலாற்றில் ஒன்று. இச்செய்திகளினின்று இத்திருணபிந்து என்பாரும் திருணதூமாக்கினியான தொல்காப்பியரும் ஒருவரேபோலும் என்று கருதல்கூடியதே. ஆனல் இதனை முடிவுபடுத்துவது அரிதென்பது. வாயுபுராணங் கூறும் வேறுபட்ட திருணபிந்து வரலாறுகளாற் புலப்படுகின்றது.*

---

# 7. தொல்காப்பியத்துக் கண்ட பழைய வழக்குக்கள்

—: 0 :—

இக்காலத்து வழங்கும் தமிழ் நூல்களிலே, பழைமையும் பெருமையும் வாய்ந்து விளங்குவது தொல்காப்பியமென்னும் இலக்கண நூலே என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்த துணிபாம். பன்னிரு படல முதலிய இலக்கணங்களும் இந்நூலோ டொத்த பழைமையுடைய வேனும், அவை நம் காலத்தில் அருகியதோடு, தொல்காப்பியம் போன்ற அத்துணைப் பெருமைக்குரியனவுமல்ல. "ஆனைப் பெருமை அகத்திய னென்னும், அருந்தவ முனிவ னாக்கிய முதனூல். பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர், நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்" எனப் பன்னிருபடலப் பாயிரத்தும், "கூறிய குன்றினு முதனூல் கூட்டித்—தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்—ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே" எனப் பல்காப்பியத்தும் தொல்காப்பியமுனிவர் புகழப்பட்டிருத்தலே அவரது பழமை பெருமைக்குத் தக்கசான்றும். இடைச்சங்க

---

* "Some Aspects of the Vayu Purana" by V. R Ramachandra Dikshitar, M. A. (Lecturer in Indian History, University of Madras), pp. 29 - 33.

நாளிலிருந்த நூல்களெல்லாம் இறந்தொழியவும், இந்நூல் மட்டும் இன்றுவரையும் நின்று நிலவுவது தமிழ்மக்களின் தவப்பயனே யாகும். தொல்காப்பியனாரின் காலம் வரலாறு முதலியவற்றைப் பற்றி நம்மால் அறியக்கிடப்பவை மிகச்சிலவேயாயினும், கடைச் சங்கத்தார் நாளிலே இறந்தொழிந்த வழக்குக்களும் மரபுகளும் பலவாக அவர் நூலிற்காணப்படுதலை நோக்கும்போது, அதன் தொன்மைப்பெருமையும் தமிழ்மொழியின் பண்டைநிலைமையும் நன்கு விளங்குகின்றன. கடைச்சங்கநூல்களினும் வழங்கப் பெறாத தமிழ்வழக்குக்களே தொல்காப்பியத்துக் காணப்படுவன வாயின், இக்காலத்தில் வீழ்ந்தனவாக அந்நூலிடை எத்தனை வழக்குக்கள் இரா? இங்ஙனம் எண்ணிறந்த சொற்பொருண் மரபுகள் வீழ்ந்தமை பற்றியன்றே, நன்னூல் சின்னூல் முதலிய இலக்கணங்கள், காலத்துக்குத்தக்க கோலத்தோடு தோன்றுவன வாயின. ஆயினும், கடைச்சங்ககாலத்தும் அதன்பிற்காலத்தும் வீழ்ந்த தொல்காப்பியவழக்குக்களும் மரபுகளும், பழந்தமிழ் மக்கள் கொண்ட முறையை நமக்கறிவித்து இன்பம் பயப்ப தோடு, சரித்திரவாராய்ச்சி செய்வோர்க்கும் பயன்படுவன வாதலால், அவற்றுள் தெரிந்துகொண்ட சிலவற்றை இவ்வியா சத்துக் குறிப்பிடலாயினேன்.

**மெய்ம்மயக்கம்** தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபியலில், தனிமெய் கள் பிறமெய்களோடு மயங்கும்மயக்கங்களிலே, ஞநமவ என்ற எழுத்துக்கள் யகரத்துடனும், மகரம் வகரத்துடனும் மயங்குமென்பதை உணர்த்தற்கு:—

"ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றல் மெய்பெற் றன்றே"

"மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்"

என்ற சூத்திரங்கள் வருகின்றன. உரையாசிரியர் முதலாயினர், இம்மெய்ம்மயக்கங்கள் — உரிஞ்யாது பொருந்யாது, வரும் வண்ணக்கன் என்றல்லது ஒரு மொழிக்கண் வாராமைகண்டு அவை இருமொழிக்கண்ணே மயங்குவனவாகக் கொண்டார். ஆனல், நச்சினர்க்கினியர், இருமொழி புணர்தற்குப் புணரிய லென்று வேறோர் இயல்கூறி, அதன்கண் ஆசிரியர் ஈறுகளை எடுத் தோதிப் புணர்ப்பராகலின், மெய்ம்மயக்கங்கூறும் ஈண்டு அவ் விருமொழிப்புணர்ச்சி காட்டுதல் கூறியது கூறலாம்—என

மறுத்து ஒருமொழிக்கண் வந்தனவே இம் மெய்ம்மயக்கங்களென் றும், "இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின், அக்காலத்து ஒருமொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றும். (உதாரணங்கள்) இக்காலத்திறந்தன" என்றும் எழுதினர். இவர் கருத்துப்படி, தான்யம், சம்யக், பவ்யம் முதலிய வடசொற் கள்போலத் தமிழ்ச் சொற்களும் தொல்காப்பியர் காலத்து வழங்கின வாகல் வேண்டும். இவர் கூறியவாறு, அச்சொற்களின் வழக்கத்தைப்பற்றிய உண்மைநிலை இப்போது தெரியவில்லை யேனும், ஆராய்ச்சிக்குரியவாதலின் ஈண்டுக் காட்டப்பட்டன.

**மொழிக்கு முதலாகாத எழுத்துக்கள்**

தமிழ்மொழியில், "பன்னீருயிருங் கசதநபமவய-ஞஙவீ ரைந் துயிர் மெய்யு மொழிமுத" லாகுமென்பது பிரசித்தம். இவற்றுள் வயஞங என்ற எழுத்துக்களொழிந்தவை, எல்லா வுயிர்களோடுஞ் சேர்ந்து மொழிக்குமுதலாக இப்போது வழங்குகின்றன. இங்ஙனம், மொழி முதல்வரும் எழுத்துக்களுள் ஒன்றான சகரம், தொல்காப்பியர் காலத்தில், அ ஐ ஔ என்னும் மூன்றுயிர்களோடும் சேர்ந்து வழங்கியதன்று என்பது—

'சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே"

என்னும் மொழிமரபுச்சூத்திரத்தால் தெரியலாம். "கடிசொ லில் லைக் காலத்துப் படினே ' என்ற எச்சவியற் சூத்திரவுரையில் நச்சி னார்க்கினியரும்—'சட்டி, சள்ளை, சமை எனவும்,"சான்றோர் சமழ்த் தனர் கிற்பவே" (நாலடி. அவையறிதல் – ௪.) "தையலாய் சமழா துரை யென்றதே" (சீவகசிந் – குணமாலை - ௧௫௦) எனவும் சகரம் மொழிக்கு முதலாக வந்தவாறு காண்க. இவை "சகரக்கிளவியும்... ......கடையே" என ஆசிரியர் விலக்கலின், அக்காலம் மொழிக்கு முதலாகாது விலக்கிய சகரம் பிற்காலத்து வழங்கியதாயிற்று. ஞெண்டென்பது ஞண்டாய்ப் பின்னர் நண்டாயிற்று'—எனக் கூறுதல் காண்க. இவற்றால், "சமன்செய்து" (௧௧௮) "சலத்தாற் பொருள் செய்து" (௬௬௦) "சலம்பற்றி" (௯௫௬) எனத் திருக்குற ளினும், "மன்பதை சவட்டுங் கூற்ற முன்ப" எனப் பதிற்றுப்பத் தினும் (௮௪) பிற சங்கச்செய்யுட்களினும் சகரமுதலாகவருமொழி கள் வழங்குவது, தொல்காப்பியர் காலத்துக்கு அவை பெரிதும் பிற்பட்டவை என்பதை நன்கு குறிப்பதாகும்.

தொகைமரபில், இடப்பொருளுணர்த்தும் இகர ஐகாரவீற்று இடைச்சொன்முடிபு கூறும் சூத்திரத்தில் (௭) 'சுட்டு முதலாகிய இகரவிறுதியும்' என்புழி, சுட்டெழுத்தினை முதலாகவுடைய இகரவீற்று இடைச்சொற்களை ஆசிரியர் குறிப்பிட்டார். இவை—**அதோளி, இதோளி, உதோளி** என்பன. அதோளி-அவ்விட மென்னும் பொருட்டு. இச்சுட்டு முதலாகிய இகரவிறுதிச் சொற்கள், கடைச்சங்கத்தார் காலத்தேயே வழக்கு வீழ்ந்தன என்பர் பேராசிரியர்; அவர் எழுதுவன:—"ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்து வாராதாகப்பொருள் வேறுபடுதலுமுடைய; **அதோளி, இதோளி, உதோளி** எனவும் **குயினெனவும் நின்ற இவை ஒருகாலத்துள்வாகி இக்காலத்திலவாயின:** இவை முற்காலத்துளவென்பதே கொண்டு வீழ்ந்தகாலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்தகாலத் துளவாயினும் **கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற்** பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர், அவற்றுக்கு இது மரபிலக்கணமாகவினென்பது" (செய்யுளியல் - ௮௦) எனக் கண்டுகொள்க.*

**சுட்டு முதலாகிய இகரவிறுதிச் சொற்கள்**

இவ்வாறே, தொல்காப்பியனர் பெயரியலில் உயர்திணைப் பெயர்களிவை எனவுணர்த்தும் சூத்திரத்திலே (௧), அவைமுதலாகிய பெண்டென் கிளவியும்" என்றார். அவை முதலாகிய என்பது சுட்டெழுத்துக்களை முதலாகவுடைய எ-று. அச்சுட்டை முதலாகவுடைய பெயர்கள்:— **அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு** என்பவை. இதனல், தொல்காப்பியனர் காலத்தில், சுட்டொடுகூடிய பெண்டென்னும்பெயர் வழக்கு மிகுதியாக இருந்ததென்பது விளங்கும். நச்சினர்க்கினியரும், "தொல்காப்பியனர் காலத்து (அப்பெண்டெனச்) சுட்டொடு வழங்கிய சொல்லே, "கடிசொலில்லை" என்பதனல் (இக்காலத்து) பெண்டென நின்றது" என்றார்; ஆனல் "வண்டும் பெண்டும்" (எழுத்ததிகாரம் - ௪௨௦) "பெண்டென் கிளவிக்கு" (௸ ௪௨௪) எனத் தொல்காப்பியனரே வழங்கலின், அவர்காலத்து அப்பெண்டு, பெண்டு என்ற இருவழக்குக்களும் உயர்திணைப் பெண்பாற்கு உளவெனத் தெரிகின்றது.

**சுட்டுமுதலாகிய பெண்டென் கிளவி**

---

*நச்சினர்க்கினியரும் பேராசிரியர் போலவே எழுதினரேனும் 'ஈதோளிக் கண்டேனல்' (கலித். 117) என்னும் முல்லைக்கலித் தொடர்க்கு-'இதோளி ஈதோளி எனச் சுட்டுநீண்டது' எனக் குறிப்பெழுதலினின்று, சுட்டு முதலாகிய இச்சொற்கள் அருகிவழங்கியவை என்பதே அவர்க்குக் கருத்தாமென்க.

**மனவீற்று வினைச்சொல்**

தொல்காப்பியனுர், அகரவீற்றுள் ஒருசாரனவற்றிற்கு இயல்பு கூறும் "அன்ன வென்னுமுவமக்கிளவியும்" என்ற சூத்திரத்தில்— 'செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும்" என் மனவீற்றுத் தொழிற் சொல்லொன்றை எடுத்தோதினுர். அவை, **உண்மன, செய்ம்மன** முதலியன. இவை, செய்யுமென் வினைபோல, உண்மன குதிரை (உண்ணுங் குதிரை) எனப் பெயரெச்சமாகவும், குதிரை உண்மன (குதிரை உண்ணும்) என முற்ருகவும் அக்காலத்து வழங்கியனவாகும். இம்மனவிறுதிச் சொல் எதிர்காலமொன்றே உணர்த்துவதென்பதும், இருதிணையைம்பாற்குமுரிய விரவுவினையாம் என்பதும் "முன்னிலையியங் கோன் (வினையில்-௨௯) "எஞ்சியகிளவி" (ஷ-௨௮) என்னுஞ் சூத்திரங்களை நோக்கி உணர்க.

இனி, இம் மனவிறுதிச் சொற்பற்றி நச்சினர்க்கினியர் எழுதுவன வருமாறு:— "உண்மன குதிரை செந்நாய் தகர் பன்றி என்பவற்றுக்கு உண்ணுமென விரித்தும், யானுண்மன, நீயுண்மன, அவனுண்மன என நிறுத்திக் கூழ் சோறு தேன் பால் என வருவித்தும் முடிக்க. இவற்றிற்கும் அவ்வாறே முடிக்க. இங்ஙனம் செய்யுமென்பதன் பொருட்டாகிய **மனவெனிறுதிச்சொல்** அக்காலம் **வழங்கியதாகலின்** ஆசிரியர் ஈண்டு வேருக எடுத்தோதினுர்" (எழுத்ததிகாரம்-௨௩௦) எனவும், "**இச்செய்யுமென் வாசகம் அக்காலத்து மனவென்னும் வாசகத்தாலும் வழங்கலின்** ஆசிரியர் ஈண்டு வேருக எடுத்தோதி, எழுத்தோத்தினுள்ளும் "செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும்' என்ருர்" (சொல் – ௨௨௭) எனவும் கண்டுகொள்க. இவற்ருல், தொல்காப்பியர் காலத்தே செய்யும் என்பது போலச் செய்மன என்னும் வினைவிகற்பமொன்று வழங்கியதாகல் உணரப்படும். "ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' என்புழி இசைக்குமன என்பது, செய்ம்மன வென்னுந் தொழிற்பெயர். அது செய்யுமென விரிந்துநின்றது" என்ருர் தெய்வச்சிலையார். இதனுல், வினைப்பகுதியையடுத்துச் சாரியைபெற்றுச் செய்யுமன, இசைக்கு மன என்பனபோல முடிதலும் ஆசிரியர்காலத்து வழக்கு என்பதுதெரியலாம். சேனுவரையர் 'இசைக்கு மன' என்பதற்கு வேறு சொன்முடிபு கூறுவராயினும், தெய்வச்சிலையார் கொள்கையே பெரிதும் ஏற்புடையதாகும்.

இனி, தொல்காப்பியனுர், புள்ளிமயங்கியலில் (கூ௯௰) இயற்பெயர் சிலவற்றின்முன் தந்தைமுதலிய சொற்கள்புணரும்விதிகூறு

**சில இயற் பெயர்கள்**

மிடத்தே "தானும் பேனுங் கோனுமென்னும், ஆமுறையியற் பெயர் திரிபிடனிலவே' என்பதனல் **தான், பேன், கோன்** எனச் சில இயற்பெயர்களைக் குறித்தார்- இப்பெயர்கள், தந்தையொடும் மக்கள் முறைமையொடும் புணரும் வழி இயல்பாகும் என்பது இச்சூத்திரக் கருத்து. தான்றந்தை பேன் கொற்றன் என உதாரணங் காண்க. பேன் கோன் எனப் பெயரிடும் வழக்குப் பிற்காலத்து வீழ்ந்ததென்பது, நச்சினர்க்கினியர்" "**பேன் கோன் என்பன முற்காலத்து வழக்கு**" எனக் கூறுதலால் விளங்குகின்றது.

**அழன், புழன், குயின் என்ற சொற்கள்**

இனி, தொல்காப்பியனர், "அழனே புழனே யாயிரு மொழிக்கும்" (எழுத்ததி – கக௬.) "அழனெ விறுதிகெட" (ஷை - ௧௫௪) என்ற சூத்திரங்களால், **அழன் புழன்** என்ற சொற்கள் தங்காலத்து வழங்கியவற்றைக் குறிப்பிட்டார். அழன்-பிணமென்பர் நச்சினர்க்கினியர். இச்சொற்கள், ஆசிரியர் காலத்துக்குப் பின் வழக்கு வீழ்ந்தொழிந்தன வென்பது, "முதல்வழியாயினும்" என்னும் மரபியற் சூத்திரத்து, உரைகாரர், 'அழன் புழன் என்பனபோல்வன **இக்காலத்திலவென்று களைந்து** யாத்துச்செயினும்" எனவும், நச்சினர்க்கினியர் "கடிசொலில்லை" என்னும் எச்சவியற் சூத்திரத்தே "புதியன தோன்றினற்போலப் பழையன கெடுவனவுமுள; அவை அழன் புழன் முதலியனவும், எழுத்திற்புணர்ந்த சொற்கள் **இக்காலத்து வழங்காதனவுமாம்**" எனவும் கூறுவனவற்ருல் தெளியப்படும். இனி, மொழிமரபியலில் (அ௨),

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃதென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன"

என்னுஞ் சூத்திரத்தே, (நிலன் நிலம் என்பது போல) மகரத்தொடு மயங்காத னகரவீற்று அஃறிணைப் பெயர்கள் ஒன்பதென ஆசிரியர் கூறினர். அவை—எகின் செகின் விழன் பயின் குயின் அழன் புழன் கடான் வயான் என எண்ணினர் உரைகாரர். இவ்வெண்ணப்பட்டசொற்களினும் சில தொல்காப்பியர் காலத்துக்குப் பின் இறந்தொழிந்தன என்பது, மரபியலில் எதிர்பொருளுணர்த்தலென்னும் உத்திக்குப் பொருள் கூறுமிடத்தே, உரைகாரர் "மகரத்தொடர்மொழி ......மேன" என்ருேதிய இலக்கணத்துச் **சில பிற்காலத்துக் குறைய வருதல்** எதிர் பொருளெனப்படும். அத

லைத் தான் உணர்ந்து "கடி சொலில்லைக் காலத்துப்படினே," என்று கூறினன்" என எழுதிச் செல்லுதலான் அறிக. இவ்வொன்பது பெயர்களுள் அழன் புழன் என்பனவன்றி வேறுசிலவும் ஆசிரியர்காலத்துக்குப் பின் வீழ்ந்தன போலும். இவற்றுள் "குயின்" என்ற சொல் கடைச்சங்கத்தார் நாளிலேயே வழக்கு வீழ்ந்ததென்பது "மரபேதானும்" என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தே பேராசிரியர் இச்சொல்லையு மெடுத்தோதி "அவை ஆசிரியர் நூல்செய்த காலத்துளவாயினும் **கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற்** பாட்டினுந்தொகையினும்* நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்" எனக் கூறுதலால் விளங்குவது. "குயின் மேகம்: அஃது அஃறிணைப் பெயர்" என்பர் நச்சினார்க்கினியர். எனவே, மேகத்துக்குக் குயின் என்ற வழக்குக் கடைச்சங்ககாலத்தவர்க்குப் பொருந்தாதென்பது முன்னோர் கருத்தாயிற்று. இனி மணிமேகலைச் சக்கரவாளக்கோட்டமுரைத்த காதையில் "அழற்பெய் குழிசியும் பி (பு)ழற்பெய் மண்டையும்" (92) எனவரும் தொடர் முற்காட்டிய அழன் புழன் என்ற வழக்குக்களைக் குறிப்பது போலும்.

**'ஊ' என்னு மொழி**

"ஊவெ னொருபெய ராவொடு சிவணும்" என்னும் உயிர் மயங்கியற் சூத்திரத்து, ஆசிரியர் எடுத்தோதிய 'ஊ' என்ற ஓரெழுத்தொரு மொழியும் தொல்காப்பியர் காலத்தே வழங்கிப் பின் வீழ்ந்ததாம். "ஊ என்பது தசையை உணர்த்தி நின்ற வழக்கு **ஆசிரியர் நூல் செய்தகாலத்து வழக்கு**" என்றார் நச்சினார்க்கினியர்.

**பெண்மகன் என்னும் வழக்கு**

இனித் தொல்காப்பியனார் பெயரியலில் பாலறியநின்ற உயர்திணைப்பெயர்களைக் கூறிவருமிடத்தே "பெண்மையடுத்தமகனென் கிளவியும்" என எண்ணினார். இதற்கு நச்சினார்க்கினியர் — "கட்புலனாயதோர் அமைதித்தன்மையடுத்து நானுவரையிறந்து புறத்துவிளையாடும் பருவத்தாற் பால்திரிந்த **பெண்மகன்** என்னும் பெயர்ச்சொல்லும்" என்று பொருளும், பெண்மகனென்பது **அத்தன்மையாரை அக்காலம் அவ்வாறே வழங்கினாராயிற்று**, இங்ஙனம் கூறலின்" என விசேடமும் கூறினர். உரையாசிரியர், "புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்பாலரைப் பெண்மகன் என்று வழங்கும்" என்றும், சேனாவரையர் "மாறோக்கத்தார் அப்பருவத்துப் பெண்பாலாரை **இக்காலத்தும்** பெண்மகனென வழங்குப" என்

* பத்துப்பாட்டினும் எட்டுத்தொகையினும் எ - று.

றும் எழுதினர். இப்பெண்மகன் என்னும் பால்திரிந்துநிற்கும் பெயர் வினையேற்குமிடத்துப் "பெண்மகன் வந்தாள்" என்றே முடிந்து வழங்கப்பட்டதென்பது 'மகடூஉ மருங்கிற் பாறிரி கிளவி மகடூஉ வியற்கைத் தொழில்வயி னன" என ஆசிரியர் தனித்து விதி கூறுதலால் விளங்கும். இவற்றால் பெண்மகன் என்னும் ஒரு வகை வழக்குத் தொல்காப்பியனர்காலத்துப்பிரபலமாக வழங்கிப் பின் வீழ்ந்தமை தெளியப்படும். ஆயினும், தமிழகத்து ஒருபகுதி யான மாரோகநாட்டில் (கொற்கை சூழ்ந்த பிரதேசத்தில்) சேன வரையர் காலத்து இவ்வழக்கிருந்தது என்பது அவர் கூற்றால் அறி யலாம். கவிச்சக்கரவர்த்தியான கூத்தர் "பெய்த மலரோதிப் பெண் சக்ரவர்த்தியுட - னெய்திய பள்ளி யினிதெழுந்து" (விக்கிரம சோழனுலா) என்புழி "பெண்சக்ரவர்த்தி" எனக்கூறியதும், மலை யாளநாட்டார் 'பெண்ராஜா' என இன்றும் வழங்குவதும் இப் பெண்மகன் என்பது போன்ற வழக்காதல் காண்க.

**சுட்டு முதலாகிய வகரவீற்றுப் புணர்ச்சி**

சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ், இவ், உவ் என்னும் வகரவீற்றுப்பெயர் மூன்றும், அல்வழியில் வல்லினம் வந்து புணருமிடத்து ஆய்த மாகும் என்பது, "வேற்றுமை யல்வழி யாய்த மாகும்" (எழுத் - ௩௭௯) என்னுந் தொல்காப்பிய சூத்திரத்தால் அறியப்படும். அவ்+கடிய=அஃகடிய என்பன முதலாக உதாரணங்காண்க. இவ்வாறு அஃகடிய, இஃகடிய, உஃகடிய எனப் புணரும் வழக்கு இக்காலத்தரிய என்பர் நச்சினர்க்கினியர்.

**சிறப்புப் பெயரும் இயற் பெயருந் தொடருமுறை**

ஆசிரியர் தொல்காப்பியனர் 'சிறப்பி னகிய பெயர்நிலைக் கிள விக்கு - மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" (சொல் - ௪௨) என்னுஞ் சூத்திரத்தால்— அரசராற் பெறும் ஏனதி காவிதி முதலிய சிறப்புப் பெயர்களும், தவம் கல்வி குடி முதலிய வற்றை உணர்த்தும் முனிவன் ஆசிரியன் பாண்டியன் முதலிய பெயர்களும் இயற் பெயர்களோடு சேர்த்து வழங்குங்கால், சிறப்புப்பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னுமாகவே வைத்துக் கூறல்வேண்டு மென் றும், மாறி வழங்கின் வழூவாமென்றுங் குறிப்பிட்டார். இவ்விதிப் படி, ஏனதி நல்லுதடன், முனிவன் அகத்தியன், தெய்வப் புலவன் திருவள்ளுவன், பாண்டியன் குலசேகரன் என உதாரணங் காண்க.

எனவே, அகத்தியமுனிவன், திருவிரவாசிரியன், குலசேகர பாண்டியன் முதலாக இயற்பெயர்முன்னும் சிறப்புப்பெயர் பின்னுமாகப் பிற்காலத்தார் வழங்குமுறை தொல்காப்பியர்நாளில் வழுவாகக் கருதப்பட்டமை விளங்கும். நச்சினார்க்கினியர், "திருவிரவாசிரியன் என்றாற்போல இயற்பெயர் முற்கூறுவன பிறவும்... **'கடிசொல்லில்லை' என்பதனாற் கொள்க"** என்றமையுங் காண்க. சேனாவரையர், "திருவிரவாசிரியன் முதலியன தொகைச்சொல்லாதலாற் 'பண்புத்தொகை யாராச்சிக்கட் பெறுதும்' என வேறு காரணங் கூறுவர். நன்னூலாரோ "இயற்பெய ரேற்றிடிற் **பின்வரல் சிறப்பே"** எனக் கூறி முன் வரல் வழுவை அமைத்துக் கொண்டார்.

**'தூணின்கட் சார்ந்தான்' என வழங்காமை**

வேற்றுமை மயங்கியலில், இரண்டாம் வேற்றுமைப் பொருளும் ஏழாம் வேற்றுமைப்பொருளும் மயங்கு மயக்கங் கூறுமிடத்து "கரும மல்லாச் சார்பென் கிளவிக்குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை" (சொல்-அச.) என்றார். இதன் கருத்து:— [இரண்டாம் வேற்றுமைக்கு ஓதிய பொருள்களிலேசார்பு என்னும் பொருண்மை கருமச்சார்பு கருமமல்லாச் சார்பு என இரண்டு வகைப்படும்; அவற்றுள் கருமச் சார்பாவது தூணைச்சார்ந்தான் என ஒன்றனையொன்றுமெய்யுறுஞ் சார்பாகும்; கருமமல்லாச் சார்பாவது அரசரைச்சார்ந்தான் என அங்ஙனம் மெய்யுறுதலில்லாத சார்பாகும். இவ்விருவகைச் சார்புகளிலே,] அரசரைச்சார்ந்தானென்னும் கருமமல்லாச்சார்புப் பொருளுக்கு ஏழாம்வேற்றுமை உரித்தாய்வருதலு முடைத்து— என்பது. கருமம் ஈண்டுமெய்யுறல்.*

இதனால், கருமச்சார்பாகிய தூணைச்சார்ந்தான் என்றாற்போல் வனவற்றை, தூணின்கட்சார்ந்தான் என ஏழாவதற்கும் உரியதாக்கி இக்காலத்தார் கூறுமுறை, தொல்காப்பியர்காலத்து வழக்கன்றென்பதும், அரசரைச்சார்ந்தான் என்னுங் கருமமல்லாச் சார்பையே அரசர்கட் சார்ந்தானென ஏழாவதுடனும் அக்காலத்தார் வழங்கினர் என்பதுந் தெளிவாம். இதுபற்றியே, சேனாவரையர், "தூணின்கட்சார்ந்தான் என உலகத்தார் வழங்குதல் இடைத்தெரிவின்றி வழங்குகின்றாரெனவே படும்: ஆசிரியர்

---

*'செயப்படு பொருளை அவர் கருமம் என்று வழங்குப' எனவும் ''மனையைச் சார்ந்தான், மனைக்கட்சார்ந்தான் எனவரும்; தூணைச் சார்ந்தான் என்பதுபோலச் சாரப்பட்ட பொருள்தோன்றாது இடமே தோன்றுதலின் ஏழாவதற்கும் உரித்தாயிற்று' எனவும் எழுதுவர் தெய்வச்சிலையார்.

"கருமமல்லாச் சார்பென்கிளவி' என விதந்துகூறினமையா னென்பது" எனவும், நச்சினர்க்கினியர் **"தூணின்கட் சார்ந்தான் என்பது வழக்கமின்று, ஆசிரியர் மறுத்தலின்"** எனவும் கூறினமை காண்க.

**எல்லாம் என்னுஞ்சொல், உயர்திணையில் தன்மைப் பன்மை ஒன்றற்கே வருதல்**

எல்லாம் என்னுஞ்சொல், அஃறிணையிலன்றி உயர்திணைக்கண் வருங்கால், தன்மைப் பன்மை யொன்றுக்குமே வருமென்பது "தன்னு ளுறுத்த பன்மைக் கல்லது - உயர்திணை மருங்கி னாக்க மில்லை" (சொல்-௪௮௯) என்ற சூத்திரத்தால் அறியப்படும். இதனால், தொல்காப்பியர் காலத்தே எல்லாமென்பது அஃறிணைப் பன்மையோடு உயர்திணையில் தன்மைப்பன்மை யொன்றற்குமட்டும் வழங்கினமையும், ஏனை முன்னிலைபடர்க்கைப் பன்மைகட்கு அது வழங்காமையும் பெறப்படுவனவாம். சேனவரையர் "நெறிதா மிருங்கூந்தனின்பெண்டி ரெல்லாம்" எனப் படர்க்கைக்கண்ணும் வந்ததாலெனின்—எழுத்ததிகாரத்துள் (எல்லாமென்றசொற்கு) "உயர்திணையாயி னம்மிடை வருமே" எனத் தன்மைக்கேற்ற (நம்முச்) சாரியை கூறினமையானும் ஈண்டு நியமித்தலானும் அஃது இடவழுவமைதியாம்" எனக் கூறி, படர்க்கைக்கண் பிற்காலத்தார் வழங்குதலை அமைத்துக் கொண்டார். நச்சினர்க்கினியர், இச்சூத்திரத்துள்ள ஆக்கமென்பதற்குப் பெரும்பான்மை எனக் கருத்துக்கொண்டு, "எனவே, சிறுபான்மை முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப்பன்மைக்கும் வருமாயிற்று" என்று உதாரணங்காட்டினர். நன்னூலாரோ 'எல்லாமெனல் பொது" (௨௫௮) "எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்" (௨௮௨) என இருதிணைக்குமுரிய பொதுப்பெயர்களுள் ஒன்றாகவே இதனை எண்ணினர். இவையெல்லாம் "உயர்திணையாயின் நம்மிடை வருமே" (எழுத்ததி-௪௮௦) "தன்னுளுறுத்த பன்மைக்கல்லது, உயர்திணை மருங்கி னாக்க மில்லை" என்னுஞ் சூத்திரங்களால் எல்லாமென்னுஞ் சொல்லியல்பை நன்கு விளக்கிய தொல்காப்பியனர் காலத்துக்குப் பெரிதும் பிற்பட்ட கொள்கைகள் என்பது தெள்ளிது.

**எண்ணிடைச் சொற்கள் சொற்றொறும் நிற்றல்**

எண்ணிடைச் சொற்களாகிய என்று, என, ஒடு என்பவை ஓரிடத்திற் றோன்றிப் பிறவழியும் பிரிந்துசென்று எண்ணப்படும் பொருள்கடோறும்போய்ப் பொருந்துமென்பது—"என்றுமெனவு மொடுவுந் தோன்றி - யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே" என்ற தொல்காப்பியச் சொல்லதிகார சூத்திரத்தால் (௨௮௮) விளங்கும். 'வினைபகை

யென்றிரண்டினெச்சம்' 'கண்ணிமை நொடியென' 'பொருள் கருவி காலம் வினையிடனொ டைந்தும்' என்றவிடங்களில்—வினையென்று கண்ணிமையென, பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு என்று, அச்சொற்கள் பிறவழியுஞ்சென்று ஒன்றியவாறு காண்க. இச்சூத்திரத்தே "ஒன்று வழியுடைய" எனச் சிறுபான்மையே வருமெனக் குறிக்கப்படுதலை நோக்கி, சேனாவரையரும் "ஒன்றுவழியுடைய வென்றதனால், சொற்றோறு நிற்பதே பெரும்பான்மை; சொற்றொறுநின்ற எண் இக்காலத்தரிய" என்றார். எனவே, வினையென்று பகையென்றிரண்டினெச்சம் பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடனொடு ஐந்தும் என்று கூறுவதே தொல்காப்பியர்காலத்து வழக்கென்பதும், முற்கூறியபடி ஓரிடத்துநின்று பிரிந்துசென்றியைதல் அக்காலத்துச் சிறுபான்மையே வழங்கியது என்பதும் அறியப்படுவனவாம். பின்வரும் "கண்டீரென்றா" முதலிய சூத்திரங்களும் இதனை வற்புறுத்தும்.

**வினைச்சொற்களுட் சில அசைநிலையாதல்**

கண்டீர், கேட்டீர், சென்றது, போயிற்று என்னும் சொற்களைன்கும் வினாவோடு பொருந்திநின்றவிடத்தும், கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்னும் முன்னிலை வினைச்சொல் நான்கும் முன்னிலைப் பொருளை உணர்த்தாதவிடத்தும் அசைநிலைகளாகும் என்பது:—

"கண்டீ ரென்றா கேட்டீ ரென்றா
சென்ற தென்றா போயிற் றென்றா
வன்றி யனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி யசைக்குங் கிளவி யென்ப" (சொல்லதி-சஉ௯)

"கேட்டை யென்றா நின்றை யென்றா
காத்தை யென்றா கண்டை யென்றா
வன்றி யனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே" (ஷை-சஉ௬)

என்ற சூத்திரங்களாற் கூறப்பட்டது. இவை கண்டீரே கண்டீரே என அடுக்கியும், அடுக்கின்றித் தனித்தும் வரும். இவற்றுள் வினாவொடு பொருந்திநின்று அசைநிலைகளாகுஞ் சொற்களுள் கண்டீர் கேட்டீர் என்பன சிறுப்பான்மை வழக்கிலுள்ளன. ஒருவன் கூறிய சொல்லிற்கு உடம்படாதவன் கண்டீரே, கேட்டீரே என்றால், அச்

சொற்கள், வினைச்சொற்பொருண்மையும் வினைச்சொற்பொருண்மையுமின்றி நிற்குமென அறிக. இவ்விரண்டு சொற்களுங்க, ஒழிந்த சென்றது, போயிற்று என்பவை வினையொடு பொருந்தி அசைநிலையாதலும், அடுத்த சூத்திரத்துக்கண்ட கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்ற வினைச்சொல் நான்கும் முன்னிலைப் பொருளை உணர்த்தாது அசைநிலையாதலும் தொல்காப்பியர் காலத்தே வழங்கியவாயினும், உதாரணங் காணாமையின் இக்காலத்தரியவாயின என்பர், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

**கடைச்சங்க நாளில் வீழ்ந்த கற்பியல் விதிகள்**

தொல்காப்பியனார், கற்பியலில், தலைவனுந் தலைவியும் களவு வெளிப்பட்ட பின்னர் வரைந்துகொண்டு இல்லறம் நிகழ்த்துங் காலத்தே, அவ்விருவரையும்பற்றி இன்னார் இன்னகூற்று நிகழ்த்தற்குரியர் என விதிக்குமிடத்துப் பார்ப்பார்க்குரிய கிளவிகளாக—.

> "காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலும்
> கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்
> மாவொடு பட்ட நிமித்தங் கூறலும்
> செலவுறு கிளவியுஞ் செலவழுங்கு கிளவியு
> மன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய"

என்று கூறினர். இக்கிளவிகள் கடைச்சங்க காலத்துக்கு முன்னரே வழக்கு வீழ்ந்தன என்பது— "இவையெல்லாம் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாருஞ் செய்த பாடலுட் பயின்றன போலும்; இக்காலத்து இலக்கியமின்று" என நச்சினார்க்கினியர் எழுதுதலான் அறியப்படுகின்றது. இவ்வாறே கூத்தர்க்குரிய கிளவிகூறும் "தொல்லவையுரைத்தலும்" என்ற சூத்திரத்தும், நற்றாய்க்குஞ் செவிலிக்குமுரிய இலக்கணங்கூறும் "கிழவோனறியா" என்ற சூத்திரத்தும் "இலக்கியம் இக்காலத்திறந்தன" "இலக்கணமுண்மையின் இலக்கியமும் அக்காலத்துளவென்றுணர்க" என அவர் எழுதிச் செல்லுதலுங் கண்டுகொள்க.

**அணிகளுள் உவமமொன்றே முற்காலத்து வழங்கியமை**

தொல்காப்பியத்துக்கண்ட பொருளதிகாரவியல்களுள் உவமவியல் ஒன்று. இவ்வியல், பலவகையாகிய அணிகளிலே உவமமொன்றனையே கூறும். அகத்திணையியலுள், உவமத்தினை உள்ளுறையுவமம் ஏனையுவமமென இருபகுதியாகக்கூறி, இவ்வுவமவியலில் அவற்றினை விரித்து ஆசிரியர் கூறினர். உவமக் கூறுபாடுகள் தொல்காப்பியத்துக் கூறியபடி நான்காகும்: அவை—தொழில், பயன், மெய்

வடிவென்பன. பிற்காலத்து நூல்களிலோ எனின், இவ்வணி பல வாகித் தோன்றும். உவமம் பலவகையாயிருத்தலானும், வேறுபல அலங்காரங்கட்கு அடிப்படையாதலானும் பிற்காலத் தணி நூல்கள் இதனைப் பலவகையாகவும் வேறு பல அலங்காரங்களைக் கூட்டியும் பொருளணி யிலக்கணங் கூறுவனவாயின. சொல்லணி எத்துணைச் சிறப்பிற்றாய்ப் பின்னூல்களிற் காணப்படுகின்றதோ, அத்துணையாகத் தொல்லாசிரியர் கருதவில்லையென்பது, தொல் காப்பிய முதலியவற்றையும் பிற்காலத்து நூல்களையும் ஒப்பிட்டு நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

உவமத்தின் பலவிகற்களும் வெவ்வேறணிகளாகத் தொல் காப்பியர் காலத்து வழங்கினவல்ல என்பது, உவமவியல் ௩௭-ம் சூத்திரவுரையில், உரைகாரர் "இனி, இவ்வோத்தினுட் கூறு கின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத்துள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக் கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென **இக்காலத் தாசியர் நூல்செய்தாருமுளர்;** அவை ஒருதலையாகச் செய்யுட் கணியென்று இலக்கணங் கூறப்படா.........பொருளதிகாரத்துட் பொருட்பகுதி யெல்லாம் செய்யுட்கணியாகலான், அவை பாடலுட் பயின்றன வென்றதனுன் அவையெல்லாந்தொகுத்து அணியெனக்கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில்கூற்றாமென்பது" எனப் பிற்காலத் தணிவகைகளை விரிவாக மறுத்துக் கூறுதலால் அறியப்படுகின்றது.

**உவமவுருபுகள் மரபுபற்றியே வழங்கியமை**

தொல்காப்பினர் "அன்ன வேய்ப்ப வுறழ வொப்ப" முதலாகப்படித்த உவமவுருபுகள் வினை பயன் மெய் யுரு என்ற நான்கன்பாலும் வழங்குமிடத்து இன்ன வுருபுகள் இன்ன வுவமைகட்கே உரியன என வரையறைப்படுத்துக் கூறினர். இது,

"அன்ன வாங்க மான விறப்ப
வென்ன வுறழத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்"

"போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றொத்துவரு கிளவி யுருவி னுவமம்"

என்பன முதலிய சூத்திரங்களான் அறியப்படும். "தத்த மரபிற் றோன்றுமன் பொருளே" என்ற சூத்திர வுரையில், உரைகாரர்

"மறுப்ப ஒப்ப வென்பன முதலாயினவும் ஒரு காரண முடைய வென்பது, ஆசிரியன் பெருமரபினவாக உரிமைப்படுத்துக் கூறி னமையின் அறிந்தாம். அல்லதூஉம் 'மரபிற்றேன்றும்' என்றத ஞல், இவையெல்லாம் மரபுபற்றி அறிதல்வேண்டும்; எனவே, **தலைச்சங்கத்தார் முதலாயினுர் செய்யுட்களுள் அவ்வாறு பயின்றுவருமென்பது அறிந்தாமன்றே, இவ்வாறு சூத்திரஞ் செய்தலானென்பது**" என்று கூறுதலால், இவ்வுருபுகள், முற்காலத்து மரபுநிலைபிறழா வழக்குடையவாயிருந்தமை விளங்கும்.

இவ்வுவம வுருபுகளில், 'நளிய' 'நந்த' என்பவை, முற்கா லத்தே வழக்கு வீழ்ந்தன என்பது—"**நளிய, நந்த வென்பன இக்காலத்தரிய போலும்;** அவை வந்தவழிக் கண்டுகொள்க' என உரைகாரர் கூறுதலான் அறியப்படுகின்றது.

**குற்றுகர குற்றிக ரங்களும் மகரக் குறுக்கமும் புள்ளி பெறுதல்**

தொல்காப்பியனுர் "மெய்யி னெல்லாம் புள்ளியொடு நிலையல்' "குற்றிய லுகரமு மற்றென மொழிப" என்ற சூத்திரங்களால் (எழுத்ததிகாரம்-௦௪-௬)' மெய்யீறுபோலக் குற்றியலுகரமும் புள்ளி பெறுதல் கூறினர். இச்சூத்திரங்கட்கு உரையாசிரியரும் நச்சினர்க்கினியரும் கூறிய வேறுரையை, நன்னூல் விருத்திகாரர்— 'அற்று என்னும் மாட்டேற்றிற்கு, மெய்யீறுபோலக் குற்றியலு கரவீறும் புள்ளியொடு நிற்குமெனக் கொள்ளாது, இம்மூன்ருஞ் சூத்திரத்தைப் 'புள்ளியீற்றுமுன்' என்னும் ௬௬-ம் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாகக் கொண்டார்......அவ்வாறு கூறுதல்மாட்டேற் றிலக்கணம் அன்ரும்" எனக் கூறி மறுத்தனர். இதனுல், குற்றியலு கரம் மெய்போலப் புள்ளிபெறுதலைக் கூறுவதே அவ்விருத்திகாரர் கருத்தென்பது விளங்கும். அக்கொள்கையே யாப்பருங்கல விருத்தியுடையாருங் கொண்ட தென்பது, அவர், "**குற்றியலு கரமுங் குற்றியலிகரமும் புள்ளிபெற்று நிற்கும்;** என்னை? 'குற்றியலுகரங் குற்றியலிகரம் - மற்றவைதாமே புள்ளிபெறுமே, என்பது **சங்கயாப்பு**" என்றெழுதலான் உணர்க. இவர் கூற்றில், குற்றியலுகரத்தோடு, குற்றியலிகரமும் புள்ளிபெறுமாறு கூறப் படுதல் அறியத்தக்கது. ஆசிரியர் தொல்காப்பியனுர் காலத்தும், அக்குற்றிகரம் புள்ளிபெற்றே வழங்கியதென்பது, பேராசிரியர் "ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்" என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில்—"எனவே எழுத்தோத்தினுள் 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்' எனக் கூறி, 'குற்றிய லுகரமு மற்றென

மொழிப' எனக் கூற்றிய ஓகரத்துக்குப் புள்ளிபெறுதலுங் கூறினர்; அதுபோல, குற்றியலிகரமும் புள்ளிபெற்றுநிற்றல் உடைத்தென்றவாறாயிற்று............இவற்றையெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' என்றதனால் புள்ளியிட்டேயெழுதுக'' என்று கூறுதலால், தெள்ளிதின் உணரப்படும். இவற்றால், நாகழகிது, நாகியாது என்னுங் குற்றுகர குற்றிகரங்கட்கு, மெய்யெழுத்துப் போல—ககர கிகரங்கட்கு மேலே—புள்ளியிட்டெழுதல் தொல்காப்பியர் காலத்து வழக்காதல் தேறப்படும். இவ்வாறே, மகரக் குறுக்கமும் புள்ளிபெறுமென்பது ''உட்பெறு புள்ளி யுருவா கும்மே'' என்னும் எழுத்ததிகார சூத்திரத்தால் நன்கறியப் பட்டதாம்.*

**நாற்சீரடிப்பாக்களே முற்காலத்து வழங்கினமை**

ஆசிரியர் தொல்காப்பியனார்-''யாத்த சீரே யடியாப் பெனாஅ' என நிறுத்தமுறையானே அடியுணர்த்தப்புகுந்து—அடியென்று சொல்லப்படுவது, நாற்சீரடியே என்னும் பொருள்பட, ''நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே'' எனக் கூறிப் பின்னர், இந்நாற்சீர் கொண்ட அடி இரண்டும் பல்வுமடுத்து வந்த தொடையாற் பாட்டென்பது தோன்றும் என்பார்—''அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே'' என்றார். இவ்வாறு, நாற்சீர் கொண்டதே அடியென்றும், அவ்வடியானே பாட்டுத் தோன்றுமென்றும் கூறப்படுதலால், தொல்காப்பியனார் காலத்து நாற்சீரடிப் பாடல்களே பெரிதும் பயின்று வந்தவை புலப்படும். பேராசிரியரும் அச்சூத்திரவுரையில் ''தலையிடைகடைச் சங்கத்தாரும் பிறசான்றோரும், நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியும பெரும் பான்மையுஞ் செய்தார்: வஞ்சிப்பா சிறுவரவிற்றெனக் கொள்க'' என்று எழுதிச்செல்லுதல் இங்கு அறியத்தக்கது.

**பாவின முதலிய உறுப்புக்கள் அக்காலத்து வழங்காமை**

ஆசிரியர் தொல்காப்பியனார், பா நான்கென்று அவற்றினிலக்கணமெல்லாம் விரித்து, அவற்றின் சேர்க்கையாற்றோன்றுவது மருட்பாவென்றுங் குறித்துப் பின் ''அவ்விய லல்லது பட்டாங்குக் கிளவார்'' என அப்பாக்கட்கு ஒருவரையறையுங் கூறினர். அஃதாவது—''மேற் கூறிய நான்கு பாவிலக்கணத்தானல்லது பாட்டின்கண் வேறுபாக் கூறப்படாது' என்பதாம். இதனால்

---

* இவற்றின் விரிவைத் '8. தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்' என்ற கட்டுரையுட் கண்டுகொள்க.

பாவின முதலிய செய்யுள் வகைகள் தொல்காப்பியர் காலத்து வழங்காமை புலப்படும். இதனைக் குறித்துப் பேராசிரியர் அச்சூத்திரவுரையில் எழுதுவன வருமாறு:—“இது கூறிப் பயந்த தென்னையெனின், மேற்கூறிய பாக்களாற் பெயர்கூறாத செய்யுட் களும் அவை பாவாக வரினல்லது வேறு தமக்குப் பாவிலவென் பதூஉம், ‘மருட்பா வேனை யிருசா ரல்லது, தானிது வென்னுந் தனிநிலை யின்று’ எனவே, அவ்விரண்டன் கூட்டத்தின் கண்ணும் வேறோர்பாப் பிறக்குமெனக் கொள்ளினுங் கொள்ளற்க வெனவும், பிற்காலத்து நூல்செய்யும் ஆசிரியர் பிறவகையாற் பாவுறுப்பினை மயக்கப்பட வேண்டுவாருளராயின் அவரை விலக்கியுங் கூறிய வாறு. அல்லதூஉம், பண்ணுந்திறனும் பகுத்தானைக் கண்டு இவற்றையும் பாவுமினமுமாகப் பகுத்தான்கொல் என்று ஐயுறாமை விலக்கி, இயனூலுள் அவ்வாறு கூறிற்றிலன் எனச் சொல்லினானென்பது”—எனக் கண்டுகொள்க.

**ஆசிரியமும் வெண்பாவுமே ஆதிப் பாக்களென்பது**

ஆசிரியர் நால்வகைப் பாவின் ஆதிவரலாற்றினை—“பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின், ஆசிரி யப்பா வெண்பா வென்றாங், காயிரு பாவினு ளடங்கு மென்ப” “ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை, வெண்பா நடைத்தே கலியென மொழிப”—என்ற சூத்திரங்களாற் குறிப்பிடுவாராயினர். மேற்கூறிய “பாவினதுவிரி நான்குந் தொகுங்கால் இரண்டாகித் தொகுமென்பதூஉம், அங்ஙனம் இரண்டாமிடத்தும் யாதானும் ஒன்றடக்கி இரண் டாகா: முதற்பா என்று நாட்டப்படுவன இவையெனவும், அவை முதலாகத் தோன்றி ஆண்டடங்குவன இவையெனவும் உணர்த்து கின்றது” எனப் பேராசிரியர் இச்சூத்திரங்கட்கு அவதாரிகை கூறி—“மேற் பாக்கள்விரிந்த தன்மையை நோக்கித் தொகுப்பின், ஆசிரியமும் வெண்பாவுமே யாம்;அவற்றுள் ஆசிரியத்து விகற்பமா கித் தூங்கலோசை விரிந்தடங்கும்; வெண்பாவின் விகற்பமாகிக் கலிப்பா விரிந்தடங்கும்; அங்ஙனம் அடங்கி இரண்டாகும் பாவின் வகை”—எனப் பொருளுங் கூறினர்.

இவற்றால், தமிழ்மொழியில், ஆதியிற்றோன்றிய பாக்கள் ஆசிரியமும் வெண்பாவுமே யாமெனவும், அவற்றினின்றே ஏனை வஞ்சியும் கலியும் கிளைத்தன எனவும் தொல்காப்பியர் கருதினா ராதல் நன்குணரப்படும்.

தொல்காப்பியனார், செய்யுளுறுப்புக்களாகக் கூறிய ‘அம்மை யழகு தொன்மை தோலே, விருந்தே யியைபே புலனே

**இயைபுஎன்னுஞ் செய்யுளுறுப்பில், னகரவீறொழிய ஒழிந்தவீறுகளுடைய நூல்கள் வீழ்ந்தமை**

யிழைபு" என்பவற்றில், இயைபு என்னும் உறுப்புக்கு இலக்கணமுரைத்துமிடத்து—

"ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே."

என்றார். இதன்பொருள்—ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொருபுள்ளியீற்றினுள் ஒன்றனையிறுதியாகச் செய்யுஞ் செய்யுள், பொருட்டொடராகவுஞ் சொற்றொடராகவுஞ் செய்வது இயைபு எனப்படும்—என்பதாம். பேராசியர் இவற்றுக்கு உதாரணங் காட்டுமிடத்து—"சீத்தலைச்சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும் கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன; அவை னகாரவீற்றான் இற்றன. மற்றவீற்றான் வருவனவற்றுக்கும் ஈண்டிலக்கணமுண்மையின் இலக்கியம் பெற்ற வழிக்கொள்க: இப்பொழுது அவை வீழ்ந்தனபோலும்" எனக் கூறினார். இதனால், னகாரவீற்றான் முடிந்த நூல்களொழிய, ஏனை, ஞ ண ந ம ய ர ல வ ழ ள ஈறுகளான் முடிந்த இயைபுநூல்களுந் தொல்காப்பியர் காலத்து வழங்கிப் பின் இறந்தமை தெரிகின்றது.

**பண்ணத்தி அடியிகந்து வருவது வீழ்ந்த வழக்காதல்**

தொல்காப்பியர் "பாட்டிடைக்கலந்த பொருளவாகிப்—பாட்டினியல பண்ணத்தி யென்ப" என்பது முதலாக நான்கு சூத்திரங்களால் "பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டு முறையும்போலச் செய்யப்படுவன பண்ணத்தி"—எனப் பண்ணத்திக்கிலக்கணம் கூறினார். "இவை நாடகச்செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டு முதலாயின" என்பர் பேராசிரியர். இதன் அடிப்பெருக்கம் பன்னிரண்டெனக் குறித்து, "அடியிகந்து வரினுங் கடிவரையின்றே" என்பதனால், அது பரந்துபட்டு வரவும் பெறுமென்று ஆசிரியர் கூறினர். இங்ஙனம் அடியிகந்துவரும் பண்ணத்திக்கிலக்கியம்—"முற்காலத்துள்ளார் காணாமையிற் காட்டாமாயினும்: இக்காலத்து உள்ளனவேற் கண்டுகொள்க. இலக்கணமுண்மையின் இலக்கியங்காணமாயினும் அமையுமென்பது' என்று கூறி உதாரணங்காட்டாது சென்றார் பேராசிரியர்.

தொல்காப்பிய மரபியலிற்கண்ட வழக்குக்கள் பலவும் கடைச்சங்கத்தார் காலத்துக்கு முன்பே வீழ்ந்தனவென்பதற்குப் பல மேற்கோள்கள் உள்ளன.

**முற்காலத்தே வீழ்ந்த சில மரபுப்பெயர்கள்**

அவற்றுட் சிறந்தன சில வருமாறு:— குழவி என்ற பெயர் (இக்காலத்து மக்கட்கு வழங்குவதாயினும்) குஞ்சரம், ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் என்ற விலங்குகட்கும் உரியதென்பது மரபியல் ௧௯—௨௨-சூத்திரங்களால் அறியப்படும். இவ்விதிப்படி குஞ்சரக்குழவி, ஆக்குழவி, எருமைக்குழவி, குரங்குக்குழவி— என்றிவ்வாறு வழங்குதல் தொல்காப்பியர் காலத்து மரபென்பது விளங்கும். இவ்வாறே, அப்பரென்ற வழக்கு யாட்டிற்கும், யாடு என்பது மூடு கடமைகட்கும், பாட்டி என்பது பன்றி நாய் நரி என்பவற்றுக்கும் அவ்வாசிரியர் காலத்து வழங்கியனவாம் (மரபியல்-௪௭, ௧௪௪. சூத்திரங்கள்). உரைகாரர், இவற்றுக்கெல்லாம் இலக்கியம் முற்காலத்தே வீழ்ந்தன என்று கூறிச் செல்லுதலால், கடைச்சங்கத்தார் காலத்துக்கு முன்பே இவை அருகிய வழக்காதல் வேண்டும்.

ஆசிரியர், அருகி வழங்கிய மரபுகள் சிலவற்றை அடியில் வருஞ் சூத்திரத்தாற் குறித்தனர்:

**தொல்காப்பியர் காலத்து மருவி வந்த சில மரபுகள்**

"குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலும்
செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்
குதிரையு ளாணினைச் சேவ லென்றலும்
இருணிறப் பன்றியை யேன மென்றலும்
எருமையு ளாணினைக் கண்டி யென்றலும்
முடிய வந்த வவ்வழக் குண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே."

இதனல், தொல்காப்பியர் நாளில் — ஆண்குரங்கு — **கடுவன்** எனவும், கூகை—**கோட்டான்** எனவும், கிளி - **தத்தை** யெனவும், வெருகு - **பூசை** எனவும், ஆண்குதிரை - **சேவல்** எனவும், பன்றி- **ஏனம்** எனவும், ஆணெருமை-**கண்டி** எனவும் மருவி வழங்கிய வழக்குக்கள் என்பது விளங்கும். "முடியவந்த அவ்வழக்குண்மையிற்—கடியலாகா கடனறிந் தோர்க்கே" என ஆசிரியர் கூறுதலினின்று, இம்மரபுகள் அக்காலத்தில் வழுவாக நினைக்கப் பட்டன வாயினும் ஆன்றோர் வழக்கானமையின் அமைவுடையன வாகக் கருதப்பட்டன என்பது புலப்படுகின்றது. இம்மரபுகளிலே,

ஆண்குதிரையைச் சேவலென்பதும் ஆணெருமையைக் கண்டியென்பதும் ஒழிய, ஒழிந்த மரபுகள் இக்காலத்தும் வழங்குவனவாம். உரைகாரர் இச்சூத்திரவுரையில் எழுதுவன இவை:—'கடுவனு மரியுமக் கொடியோ னையே"—ஆண் குரங்கு: இதனைக் கடியலாகாதெனப்பட்ட இழுக்கென்னை யெனின், மக்கட்கும் வெருகிற்கும் அக்காலத்துப் பயின்றனபோலுமாதலின்... குதிரையைச் சேவலென்றல் இக்காலத்தரிதாயிற்று...எருமையேற்றினையுங் கண்டியென்பபோலும்: அது காணலாயிற்றில்லை" என்பன. இவற்றால் தொல்காப்பியர் காலத்தே. குதிரைச் சேவல் எருமைக்கண்டி என ஆண்பெயர்கள் வழங்கியதோடு, நம் காலத்துப் பெருகிவழங்கும் பெயர்கள் சில, அவர் காலத்தே அருகிவழங்கியமையும் தெளியப்படும்.

**வேறு சில வழக்குக்கள்**

மேற்கூறியவாறு தொல்காப்பியத்துக் கண்ட பழைய வழக்குக்களே யன்றி, உரைகாரர் கூற்றுக்களால் அறியப்பட்ட பண்டை மரபுகள் சிலவும் உள்ளன. மரபியலில் "மரபு நிலைதிரிதல்" என்னுஞ் சூத்திரவுரையில், உரைகாரர் மிறைக் கவிகளைப் பற்றிக் கூறுமிடத்து—"இனி நிறைமொழிமாந்தர் மறைமொழிபோல்வன சில மிறைக்கவிபாடினருள ரென்பதே பற்றி, அல்லாதாரும் அவ்வாறு செய்தல் மரபன் றென்றற்கும் இது கூறினன் என்பது; அவை—சக்கரஞ் சுழிகுளம் கோமூத்திரிகை ஏகபாதம் எழுகூற்றிருக்கை மாலைமாற்று என்றாற் போல்வன. இவை மந்திரவகையானன்றி வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கும் அகனைந்திணைக்கும் மரபன்றென்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்குஞ் செய்தற்குரியவென இழியக்கருதி, அன்ன வகையான் வேறுசில பெய்து கொண்டு அவற்றிற்கு இலக்கணஞ் சொல்லுப. அவை இத்துணையென்று வரையறுக்கலாகா: என்னை? ஒற்றை யிரட்டை புத்தி வித்தார மென்றாற்போல்வன பலவுங் கட்டிக்கொண்டு அவற்றானே செய்யுள் செய்யினுங் கடியலாகாமையின் அவற்றிற்கு வரையறை வகையான் இலக்கணங்கூறலாகா என்பது" என்றெழுதினர். இதனால், சக்கரஞ்சுழிகுள முதலிய சித்திரகவிகள் மந்திர வகையாற் றேவர்பொருட்டுச் செய்யப்படுவனவன்றி, மக்கட்குரியனவாக முற்காலத்தார் கருதினரல்லர் என்பது போதரும். தேவாரமுதலியவற்றில்,, ஏகபாதம் எழுகூற்றிருக்கை மாலைமாற்று முதலிய மிறைக்கவிகள், இவ்வாறு தேவரைப் பற்றியனவாயிருத்தல் கண்டுக் குறிக்கத்தக்கது.

இனி, ஆனந்தக்குற்றம் பாட்டியன்மரபு முதலியவை, பழைய இலக்கியங்களுக்குரிய இலக்கணமாகா என்பது, முன்னையுரைகாரர் கொள்கை. தொல்காப்பியமரபியலிற் குறித்த ஈரைங் குற்றங்களையும் விளக்குமிடத்து உரைகாரர்—"தன்னுனெரு பொருள் கருதிக் கூறலென்பது—மலைபடுகடாத்தினை **ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தானொருவன்** ஒரு சூத்திரங்காட்டுதலும், பதமுடிப்பென்பதோர் இலக்கணம் படைத்துக்கோடலும்போல்வன" எனவும், நின்று பயனின்மை என்பதற்கு உதாரணங் கூறுமிடத்து, "பிற்காலத்துத் தோன்றிய வழக்கேற்றிக அவற்றிற்குங் குற்றதீர இலக்கணங்காட்டியவழி அது சான்றோர் செய்யுட்குப் பயன்படாது தம்மோரன்ன செய்யுட்குப்பயன் பட்டொழியச் செய்தல்: உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க; **பாட்டியன் மரபெனக் காட்டுவனவும் அவை**" எனவும் எழுதிச் செல்லுதலால், ஆனந்தக்குற்றம் பாட்டியன்மரபு முதலியவை பிற்காலத்திலக்கணங்களே என்பதும், அவை முன்னோர் செய்யுட்கு ஏற்பனவல்ல என்பதும் வெளியாகின்றன.

இவ்வாறே ஆராய்ந்து செல்லுமிடத்து, கடைச்சங்கத்தார் காலத்தும் அதன் பிற்காலத்தும் வீழ்ந்த தொல்காப்பிய மரபுகளும் வழக்குக்களும் எண்ணிறந்தனவா மென்பது போதரும். உரைகாரர்களால் 'இவையிவை வீழ்ந்த வழக்குக்கள்' என்று குறிப்பிட்டவை பெரும்பாலவும் கடைச்சங்கத்தார் காலத்துக்கு முன்பு இறந்தவையென்றே கொள்ளத்தக்கன; என்னை? அச்சங்கத்திலக்கியங்களெல்லாம் ஆராய்ந்தே அவர்கள் அங்ஙனமெழுதலான் என்பது. இனி, இக்காலத்திறந்த தொல்காப்பிய வழக்குக்களை எண்ணுவோமாயின் அவை கணக்கிலடங்கா; நன்னூல் முதலிய பிற்கால விலக்கணங்கட்கு முற்றும் வேருகத்தோன்றும் தொல்காப்பியச் செய்திகளெல்லாம் பழைய வழக்குக்களேயாகும். ஆயினும், அவற்றை ஆராயாது பழைய காலத்தே வீழ்ந்தனவாக உரைகாரர்காட்டிய வழக்குக்கள் மட்டுமே ஈண்டு ஆராய்ச்சிக்கெடுத்துக் கொள்ளப்பட்டனவென அறிக*.

---

*குறிப்பு: இக்கட்டுரைகள், செந்தமிழ், 8-ம் தொகுதி 8, 9, 12ம் பகுதிகளினும், 9-ம் தொகுதி 1, 2-ம் பகுதிகளினும் வெளிவந்தவை.

# 8. தொல்காப்பியனரும் புள்ளியெழுத்துக்களும்*

தொல்காப்பியம் நூன்மரபியலில் எழுத்துக்களின் பெயர் முறை தொகை முதலியவற்றை விளக்குமிடத்தே, எழுத்துக்களின் வரிவடிவுகளையும் கூறப்புக்க ஆசிரியர் தொல்காப்பியனர், அவ் வெழுத்துக்களின் உருவங்கள் இன்னவாறு என்பதை முழுதுங் குறியாது, அவற்றின் ஒருசார் உறுப்பினையே கூறிச் செல்லுதல் காணலாம்.

"புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயிரண் டென்ப வுயிர்த்த லாறே" (17)

என்ற சூத்திரத்து—மெய்யும் உயிருங் கூடிப் புணருமிடத்து' மெய்யின்வடிவு திரியாதுந் திரிந்தும் நிற்கும் என்று பொதுப்படக் கூறினரே யன்றி, அம்மெய்களின் உருவம் இத்தகைய என்று ஆசிரியர் விளக்காமை காண்க. இதனல், தொல்காப்பியனர் காலத்தில் எழுத்துக்கள் வரிவடிவுடையனவாகி யாவரானுந் தெளிய அறியப்பட்டிருந்தன என்பதும், அதனல் அவ் வடிவுகளை விரித்துரைக்க அவர் முன்வந்திலர் என்பதும் அறியப்படும். படவே, நன்னூலார் கூறியவாறு. 'தொல்லை வடிவின வெல்லா வெழுத்தும்' என்பதே தொல்காப்பியனர் கருதியதும் என்பதாயிற்று. ஆயினும், அத்தொல்லைவடிவுகளிற் கண்ட ஒருசார் குறியைமட்டும் விதிமுகத்தானும் உடம்பொடுபுணர்த்தலானும் அவ்வாசிரியர் தவருது கூறிச் செல்லுதல் குறிப்பிடத்தக்க அஃதாவது—அவ்வெழுத்துக்களுட் சில புள்ளிபெற்று நிற்கும் நிலைமையேயாம். உயிர், மெய், சார்பிற்ரேற்றம் என்ற மூவகைப் பட்ட எழுத்துக்களினும் அங்ஙனம் புள்ளிபெறுவனபற்றி ஆசிரியர் கூறுவனவற்றை ஈண்டு விளக்குவேன்.

## I புள்ளிபெறும் மெய்கள்

நெடுங்கணக்கினுள் தனி மெய் பதினெட்டும் புள்ளிபெற்றே நிற்கும் என்பதனை—

*செந்தமிழ், தொகுதி-23, பக். 153-166.

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" (15).
"மெய்யி றெல்லாம் புள்ளியொடு நிலையல்" (104)

என்ற இரண்டு சூத்திரங்களால் தொல்காப்பியர் கூறுதல் காண லாம். 'மஃகான்புள்ளி' 'யரழ வென்னும் புள்ளி' என்பன முதலிய வற்றால் 'புள்ளி' என்று மெய்கட்குக் குறியிட்டு ஆளுதலின் புள்ளி யின்றித் தனிமெய்கள் யாண்டும் வழங்கா என்பதை அவர் குறித் தனராவர். "மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" என்பத னால், அம்மெய்கள் புள்ளிபெறுவது அடிப்பட்ட மரபென்றும், எழுதுவோரது சோர்வால் அம் மரபு தவற நேர்ந்விடத்துச் சொற்பொருளுணர்ச்சி சிதைந்துவந்தமையின் புள்ளியிடுவதை ஆசிரியர் இங்ஙனம் வற்புறுத்தலாயினர் என்றும் அறிக.

## II. புள்ளிபெறும் உயிர்கள்

இவ்வாறு மெய்கட்குப் புள்ளிவிதித்த ஆசிரியர் உயிர்களுட் சிலவும் அதுபெற்று நிற்கும் என்பதனை—

"எகர ஒகரத் தியற்கையு மற்றே"

என்று அடுத்த சூத்திரத்தாற் கூறுகின்றார். பன்னீருயிர்களுள்ளே எகர ஒகரங்கள் மட்டும் புள்ளிபெறுவது பண்டை வழக்கென்பது- 'எகரவொகரத் **தியற்கையும்**' என்பதனால் அறியப்படும். இதனால், எகர ஒகரக் குறிலும், ஏகார, ஓகார நெடிலுமான அவ்விருவகை உயிர்கட்கும் வரிவடிவு பொது என்பதும், அவற்றுட் குறிலின் வேறுபாடு தோன்ற அதற்குப் புள்ளியிடப்படும் என்பதும் பெறப் படுகின்றன. ஆயின், குறிலின் நீட்சியே நெடிலாதலின், அந்நெடி லின் வேறுபாடு விளங்க அதற்குப் புள்ளியையிடாமற் குறிலுக் கிட்டு ஆண்டதன் கருத்து என்னை எனின், இதற்கு இரண்டு வகையிற் சமாதானங் கூறலாகும். ஆரியமொழியுட் குறிலின்றி நெடில் ஏகார ஓகாரங்களே வழங்குதலும், அவற்றின் குறில்கள் தமிழ்க்குரிய சிறப்பெழுத்துக்களாதலும் நன்கறியப்பட்டவை. அவ்விருமொழிகட்கும் பொதுவாகவமைந்த எ, ஒ என்ற வடிவு களை ஆரியத்திற்போல நெடிலொன்றுக்குமே கொண்டு, அவை குறில்களுக்குரியனவல்ல என்று தமிழில் விலக்காமைப்பொருட்டு, அவற்றுட் குறிலெகரஒகரங்கட்குப் புள்ளியிட்டு வேற்றுமைப் படுத்திருத்தல் கூடும். இஃதன்றேல், மாத்திரை குறுகிய எழுத் துக்கட்கே புள்ளியிடுவது மரபு என்பது இனிக் கூறப்புகும் குற்றுகர குற்றிகர முதலியவற்றின் வடிவுகளாலும் விளங்கு தலின், அங்ஙனம் குறுகிய எழுத்துக்கட்கு இட்டுவந்த புள்ளியை, ஏகார ஓகாரங்கட்கன்றி அவற்றின் குறில்களுக்கே வழங்கி

யிருத்தல் வேண்டும். இவற்றுள் ஏற்புடையது கொள்க. பிற்காலத்தார் சிலர் நெடிலேகாரவோகாரங்களே புள்ளிபெறுவனவாகக் கருதியெழுதியது,* முன்னை வழக்கினை அறியாமையாலென்க.

இங்ஙனம் குறிலின் குறியாகப் புள்ளியிட்டுவந்த வழக்குத் தனி எகரஒகர உயிர்கட்குமட்டுமன்றி, மெய்யூர்ந்த அவ்வுயிர்கட்கும் உண்டென்பது, உரையாசிரியர் முதலியோர் உரைகளான் உணர்க. 'எய்தும் எகர மொகர மெய் புள்ளி' என்ற நன்னூற் சூத்திரப்பகுதிக்கு—'தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும் ஒகரமும் தனிமெய்களும் பெறும் இயல்பாகிய புள்ளியைப் பிற்காலத்து ஒழித்து வரைந்து,ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்பட வழங்கும் வழக்கினையுடையவன்றித், துணியப்படுந் தொல்லைவடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும்' என்றெழுதிய சங்கர நமச்சிவாயப் புலவர் உரை ஈண்டு அறியத்தக்கதாம். இதனால், புள்ளியிடும் வழக்கைப் பின்னோர் நெகிழ விட்டமையால், பொருளில் தடுமாற்றமுற நேர்ந்த செய்தி நன்கு விளங்கும். எகரங்கட்குப் புள்ளியிடும் வழக்கு நன்னூலார் காலத்தும் பயின்றதென்றே சொல்லலாம். அவர் காலத்து வழக்கின்றேல், இவ்வெழுத்துக்களும் மெய்களும் ஒழிய ஒழிந்தவற்றுக்குப் புள்ளியில்லை என்பது பட—

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர மொகர மெய் புள்ளி"

என்று புள்ளியெழுத்துக்களை அவ்வாசிரியர் விதந்து ஓதாரென உணர்க. பிற்காலத்துப் போலவே நன்னூலார் நாளிலும் புள்ளியிட்டெழுதுவதிற் பொதுவாகவே சோர்வு காட்டப்பட்டுவந்ததென்பதற்கு, அவர் காலத்துச் சாஸனங்களே தக்க சான்றாகவுள்ளன. அவற்றில், மெய்கட்குப் புள்ளியிடுவதே அரிதாகக் காணப்படுநிலையில், எகரஒகரங்கட்குப் புள்ளிகாணுமை வியப்பிற்குரியதன்று ஆயினும், அக்காலத்துத் தமிழறிஞர் தனித்தும் உடம்பூர்ந்தும்

* இராமாநுசகாண்டிகை காண்க. பிற்காலத்தில், எகரத்தினின்று ஏகரத்தை வேறுபடுத்தக் கீழ்கோடிழுக்கப்படுமுறையில், ஏகார நெடிலுக்கே புள்ளியையிட்டு இன்னோர் வேறுபடுத்தலாயினர் போலும். ஏகார நெடிலுக்குக் கீழ்க்கோடிழுக்கும் முறையை உண்டாக்கியவர், வீரமாமுனிவர் (Beschi) என்பர் சிலர் (Burnell's South, Indian Poleography, p. 5.). ஆனால், அங்ஙனம் கோடிழுப்பது, அம்முனிவர்க்கும் முற்பட்ட சாஸன வழக்கமாயிருத்தலால் (T. A. S. Vol , p. 202) அக்கூற்றுப் பொருந்தாதாம்.

வரும் எகர ஒகரங்கட்குப் புள்ளியிடும் வழக்கைப் போற்றிவந்தவர் களையாவர். மாத்திரைச் சுருக்கத்துக்குத் தண்டியலங்கார முடையார் காட்டிய மேற்கோளில்,

> "நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
> நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்"

எனவரும் வெண்பாப் பகுதி இங்கறியத்தக்கது. நேரிழையார் கூந்தல்—ஓதி: அது புள்ளி பெறவே ஒதி என்றாகி மரத்தைக் குறிக்கும்; நீர்நிலை ஏரி: அது புள்ளி பெறவே எரி என்றாகி நெருப்பைக் குறிக்கும்—என்பது இப்பாடற்கருத்தாய் எகர ஒகரவுயிர்கள் புள்ளிபெற எழுதப்பட்டு வந்த பழைய வழக்கைத் தெளிவாக்குதல் காண்க.

இனி, மெய்யூர்ந்த எகரவொகரங்கள் புள்ளிபெற்று வழங்கின என்பதற்கு மேற்குறித்தபடி பிரமாணங்காண்டல் அரிது. ஆயினும் வேள்விகுடித் தாமிரசாஸனத்தும், தந்திவர்மன் (கி. பி. 800-840) என்ற பல்லவனது 4-ம் ஆட்சி வருஷத்தே திருவெள்ளறைக் கிணறொன்றில் வெட்டப்பட்டுள்ள கல்லெழுத்திலும்* மெய்யூர்ந்த எகர வெழுத்துக்கள்—நான்காவ தெ்டுத்து' ,பெ்ருங்கிணறு' செ்ய்து' என்றிவ்வாறு புள்ளியிட்டு வரையப்பட்டுள்ளமை காணலாம். மெய்யூர்ந்த ஒகரத்துக்கு இத்தகைய பிரமாணங் கிடைத்திலது.

## III. புள்ளிபெறுஞ் சார்பெழுத்துக்கள்

ஆசிரியர் தொல்காப்பியனார் குற்றுகரம், குற்றிகரம், ஆய்தம் என்ற மூன்றும் சார்பிற்றோன்றும் எழுத்துக்கள் என்பதை—

> "அவற்றுள்,
> குற்றியலிகரம் குற்றியலுகரம்
> ஆய்தமென்ற
> முப்பாற் புள்ளியு மெழுத்தோரன்ன"

என்ற சூத்திரத்தாற் கூறுவர். இம்மூன்றும் புள்ளியுடையனவாகவே ஆசிரியர் காலத்து வழங்கின என்பது குறிக்கொண்டு அறியத்தக்கது. அவற்றை முறையே விளக்குவேன்.

### (1) குற்றியலுகரம்

தொல்காப்பியம் புணரியலில் 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்பதனால், மொழியீற்று மெய்யெல்லாம் புள்ளி

*The Journal of the S. I. Association, Oct. 1910, pp. 172-173.

பெற்று நிற்கும் என்று நியமித்த ஆசிரியர்—'குற்றியலுகரமு மற்றென மொழிப' என்ற அடுத்த சூத்திரத்தால், குற்றுகரமும் அம்மெய்யீற்றின் தன்மையைப் பெறும் என்று கூறினார். இதனால், குற்றுகரமும் மெய்யீறுபோலப் புள்ளிபெற்று நிற்கும் என்பதே ஆசிரியர் கருத்தென்பது நன்கு பெறப்படும். இதுவே முன்னோர் பலருங் கொண்ட முடிபுமாம். "ஒற்றெழுத் தியற்றே குற்றியலிகரம்" என்ற செய்யுளியற் சூத்திரவுரையுள்—"எழுத்தோத்தினுள் 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல், எனக்கூறிக் 'குற்றியலுகரமு மற்றென மொழிப' எனக் குற்றுகரத்துக்குப் புள்ளிபெறுதலுங் கூறினான்"—என்று நல்லறிவுடைய தொல்**பேராசிரியர்** முற்குறித்த தொல்காப்பியனார் கருத்தறிந்து எழுதியது காண்க. இவ்வாறே, **யாப்பருங்கலம்** 2-ஆம் சூத்திரத்திற்கு—,குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளி பெற்று நிற்கும்; என்னை?

> "குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமும்
> மற்றவை தாமே புள்ளிபெறுமே"

என்பது **சங்கயாப்பு** ஆதலின்" என, அந்நூல் விருத்திகாரரும் முன்னூற் பிரமாணத்துடன் எழுதிய குறிப்பு அறியத்தக்கது. இவற்றால், முற்காலத்தே குற்றுகரத்துக்குப் புள்ளியிட்டெழுதும் வழக்குப் பெருகியிருந்தமை புலனாம்.

இனி, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்பதிலுள்ள 'அற்று' என்பது, மேற் சூத்திரத்திலுள்ள 'புள்ளியொடு நிலையல்' என்ற தொடரை நோக்கியதாகக் கொள்ளாது, தொடர்பற்று நிற்கும் சூத்திரமொன்றனுடன் மாட்டெறிந்து—'ஈற்றுக்குற்றியலுகரம் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுக்கும்' என்று பொருள் கூறலாயினர். இப்பொருள் ஆசிரியர் கருத்து ஆகாதென்பது பற்றி, நன்னூல் விருத்திகாரரான **சங்கரநமச்சிவாயப்புலவர்** "உயிர்வரி னுக்குறள் மெய்விட்டோடும்" என்ற உயிரீற்றுப் புணரியல் 14-ம் சூத்திரத்து எழுதிய விசேடவுரை வருமாறு :—

"ஆசிரியர் தொல்காப்பியர் 'அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனவும், 'குற்றிய லுகரமும் மற்றென மொழிப' எனவும் கூறிய சூத்திரங்களுள், 'அற்று' என்னும் மாட்டேற்றிற்கு 'மெய்யீறு போலக் குற்றியலுகரவீறும் புள்ளியொடு நிற்கும்' எனப் பொருள்கொள்ளாது, இம்மூன்றாஞ்சூத்திரத்தைப் 'புள்ளி யீற்றுமுன் னுயிர் தனித் தியலாது, மெய்யொடு சிவணு மவ்வியல் கெடுத்தே, என்னும் முப்பத்தாறாஞ் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாக்

கொண்டு, குற்றியலுகரமும், புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுத்துக் கெடாது இரண்டுயிரும் ஒருங்குநிற்கும்' எனக் கூறிச் சாதிப்பாரும் உளர். அவ்வாறு கூறல் மாட்டேற்றிலக்கண மன்றும்; அன்றியும் மெய் உயிர் என்பன உவமவாகுபெயராய் வந்த காரணக்குறியல்லவாதல் வேண்டும்; அதனுல் அஃது அந்நூலாசிரியர்க்குக் கருத்தன்றும்'' எனக் காண்க.

இவற்ருல், பிற்காலத்து உரைகாரரும், குற்றியலுகரம் புள்ளி பெற்று நிற்கும் என்ற பேராசிரியர் முதலியோர் கொள்கையையே பெரிதும் தழுவிநிற்றல் காணலாம். ஆகவே, முற்றுகரத்தின் வேறுபாடுதோன்றக் குற்றுகரங்கட்குக் கொக்கு, நாடு, வரகு என்பன போலப் புள்ளியிட்டெழுதலே தொல்காப்பியர் காலவழக்கு என்பது தெளியப்படும்.

## (2) குற்றியலிகரம்

குற்றியலுகரத்தைப் பெரிதும் பற்றுக்கோடாகக்கொண்டு வரும் குற்றியலிகரம் புள்ளிபெறு முறையும் தொல்காப்பினர் காலத்து வழக்கேயாம். என்னை? 'ஒற்றெழுத் தியற்றே குற்றியலிகரம்' என அவ்வாசிரியரே செய்யுளியலில் தெளிவாக இதனையெடுத்தோதுதலான் என்க. இச் சூத்திரத்துக்குப் **பேராசிரியர்**—

"மேற்கூறிய எழுத்திலக்கணவகையானும், ஈண்டோதும் அசைக் குறுப்பாமாற்ருனும் எல்லாம் குற்றியலிகரம் ஒற்றெழுத்தியற்றேயாம். எனவே, எழுத்தோத்தினுள் ..(ஒற்றேபோலக்) குற்றியலுகரத்துக்குப் புள்ளிபெறுதலுங் கூறினன்; அதுபோலக் குற்றிகரமும் புள்ளிபெற்று நிற்றலுடைத்து... இவற்றை யெல்லாம் ஒற்றெழுத்தியற்றே' என்பதனுல் புள்ளியிட்டு எழுதுக''

என்று எழுதிச்செல்லும் உரைவிசேடம்* ஈண்டு உணரற்பாலது. யாப்பருங்கல விருத்தியுடையாரும், குற்றுகரம்போலவே குற்றிகரமும் புள்ளிபெறும் என்பதற்குச் **சங்கயாப்பு** என்ற முன்னூலை மேற்கோள் காட்டுதல் மேலே குறிக்கப்பட்டது. **சிவஞானமுனிவரும்,** தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியுரையுள்—''குற்றியலுகரமு மற்றென மொழிப'' என்னுஞ் சூத்திரத்தாற் குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்கும் என முற்றுகரத்தோடு இதனிடை வரிவடிவினும் வேற்றுமை தோன்றக் கூறி, உம்மையாற் **குற்றியலிகர**

---

*நச்சினர்க்கினியர், குற்றியலிகரத்துக்குப் புள்ளியிடும் வழக்கைக் குறியாமைபோலவே, 'ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்' என்ற இச் சூத்திரத்துக்கும் குற்றிகரம் புள்ளிபெறும் என்று உரையெழுதாதுபோயினர்.

மும் புள்ளிபெற்று நிற்கும் என்றோதினமையானும்" என்றெழுதி குற்றுகரத்தோடு குற்றிகரமும் புள்ளிபெற்று நிற்கும் என்பதே தொல்காப்பியனார் கருத்தென்று விளக்கிச்செல்லுதல் கண்டு கொள்க. இவற்றால், வண்டியாது, நாகியாது, கேண்ம்யா என்று, குற்றிகரங்கட்கு புள்ளியிட்டெதுழுவதும் தொல்காப்பியனார் கால வழக்கென்பது நன்கறியப்படும்.

## (3) ஆய்தம்

குற்றெழுத்தின் முன்னதாகவும் உயிரொடுபுணர்ந்த வல்லெழுத்தின்மேலதாகவும் வரும் ஆய்தவெழுத்து அடுப்புக்கூட்டுப் போல மூன்று புள்ளிவடிவினது என்றெழுதுவர் நச்சினார்க்கினியர். கேடகப்படையின் ஒருசார் உறுப்புப்போறலின், ஆய்தம் என்பது திரிந்த காரணக்குறியாமென்பது பின்னோர் கொள்கை. இவற்றுள் பிற்கூறிய உறுப்புப்பொருள் அடிப்பட்டதொன்று அன்று. கருவிகட்கெல்லாம் பொதுவாக வழங்கும் ஆயுதமென்பது திரிந்து ஈண்டுக் கேடகத்தைமட்டுஞ்சுட்டி அதனுருப்பான முக்குமிழ் வடிவை உணர்த்திற்றென்றல் அத்துணைச் சிறப்புடையதன்று அதனால், ஆய்தச் சொல்லின் உண்மையான விற்பத்தி வேறென்றே தோன்றுகின்றது.

பாஷாதத்துவ ஆராய்ச்சியில் வல்லவராய் மயிலாப்பூரில் விளங்கிய ஸ்ரீ ஆர். சாமிநாத ஐயரவர்கள்—வேதத்திலே ஜிஹ்வாமூலீயவொலி* பெறுவதோர் எழுத்துக்கு 'ஆஶ்ரிதம்' என்ற பெயரை வேதவிலக்கணம் இட்டு வழங்குவதென்றும், அத்தகைய உச்சரிப்புடன் அஃகம் முதலியனவாகத் தமிழில் வழங்கும் எழுத்துக்கும் அவ்வடபெயரையே தமிழிலக்கணம் வகுத்த ஆதியிருடிகள் '**ஆய்தம்**' என்று திரிய வழங்கினராதல் வேண்டும் என்றும் கருதுவராயினர்.† இக்கருத்து அரியதொன்றாதலின், நம்மனோர் ஆராய்ச்சிக்கு உரியதேயாகும். வடமொழியுள் சொல்லிடைவரும் ஶகாரம் ஶ்மஶானம்—மயானம், ஶ்மஶ்ரு—மயிர் என்றவாறு யகரமாதலும். ஶ்ருதி—சுதி, ஶ்ரீதரன்—சீதரன் என்றவாறு ரகரங் கெடுதலும் தமிழுக்கமைந்தாவனம். அம்முறையில், ஆஶ்ரிதம் ஆய்தம் எனத் திரிந்ததென்றல் ஏற்புடைத்தாம் என்க. ஆஶ்ரிதம் என்பது 'சார்ந்தது' என்னும் பொருட்டாகலின்

* ககரத்தின் முன்வரும் விஸர்க்கவொலி.

† இக்கருத்தை எழுத்து மூலமாக ஐயரவர்கள் வெளியிட்ட செய்தி தெரியவரவில்லை. எனினும், நேரில் என்னிடம் பிரமாணத்துடன் விளக்கமாக அவர்கள் கூறினர்.

அதன்றிரிபான ஆய்தம் சார்பெழுத்தொன்றற்குப் பெயராயிற்று. எனவே, "கஃகரோதி, கஃவேபதி' என்ற வட தொடர்களில் வரும் விஸர்க்கத்தின் ஜிஹ்வாமூலீய உபத்மானீய* ஒலிவடிவுகள் போன்றதே 'சார்ந்துவரினல்லது தமக்கியல்பில' எனப்பட்ட ஆய்தத்தின் ஒலி வடிவும் என்பது பெறப்படும். இனி, ஆய்தத்தின் வரிவடிவு முப்புள்ளியுடையது என்றெழுதிய நச்சினார்க்கினியரே—'இக் காலத்தார் நடுவுவாங்கியிட்டு எழுதுப' என்று, அது தங் காலத்து வழங்கிய மாதிரிகையையும் கூறுவர். இதனால் அடுப்புக் கூட்டுப்போல, ஃ என்றவாறு முப்புள்ளியுடையதாகக் கருதப் பட்ட ஆய்தம், மேலிடமான நடுப்புள்ளியின்றி ௦௦ என்று பிற் காலத்தே மாறலாயிற்றென அவ்வுரைகாரர் கருதினர் என்பது விளங்கும். எனவே, வடமொழியுள் மேலுங்கீழுமாக அமைந்த விஸர்க்கத்தின் இரட்டைப் புள்ளிகளைப் போலவே தமிழில், அடுத் தடுத்து ஆய்தப்புள்ளிகள் முன்பு வழங்கின என்பதாயிற்று. இவ் வாறன்றி ⁖ என மேலுங்கீழுமாக இரண்டும், அவற்றையடுத்து மத்தியில் ஒன்றுமாக முப்புள்ளிகளுடன் ஆய்தம் முன்பெழுதப் பட்டதென்றும், அவற்றுள் நடுப்புள்ளியை நீக்கித் தங் காலத்தவர் வழங்கிவந்ததனையே நச்சினார்க்கினியர் குறிக்கலாயினர் என்றும் கருதவும் இடமுண்டு. இவ்வாறாயின், விஸர்க்கவடிவும் ஆய்த வடிவும் ஒன்றாகவேமுடியத் தடையில்லை. அடுப்புக்கூட்டை அவ் வுரைகாரர் உவமையாகக்காட்டியது ஈண்டுப் பெரும்பான்மை உருவொத்தல்பற்றி என்றே கொள்ளற்பாலது.

இனி, ஆய்தம் முப்புள்ளியினதாக உரைகாரரிற் சிலர் எழுதி வருவதற்குப் பழைய நூற்பிரமாணங் காணப்படாமை குறிப்பிடற் குரியது. 'ஆய்தமென்ற முப்பாற்புள்ளியும்' எனத் தொல்காப்பிய னார் அதன்வடிவு கூறிற்றிலரோ எனின், அதனை ஈண்டு ஆராய் வேன். தொல்காப்பிய நான்மரபில்—

" அவைதாம்
குற்றிய லிகரங் குற்றிய லுகரம்
ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன "

என்பது சார்பெழுத்துக்களைப்பற்றிய சூத்திரம். இதற்கு—"மேற் சார்ந்துவரும் எனப்பட்டவைதாம் குற்றியலிகரமும், குற்றியலுகர மும், ஆய்தமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவும் ஆம்; அவையும் முற்கூறிய முப்பதெழுத்தோடு ஒருதன்

* பகரத்தின் முன்வரும் விஸர்க்கவொலி.

மையவாய் வழங்கும்" என்பது நச்சினார்க்கினியருரை. உரையாசிரியராகிய இளம்பூரணவடிகளும் இக்கருத்தேபடப் பொருளெழுதிக் "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என எண்ணும்மை விகாரத்தாற் றொக்கன" என்றார். இவற்றால் 'முப்பாற்புள்ளியும்' என்ற விசேடியத்துக்கு—'ஆய்தமென்ற' என்ற தொடரை மட்டும் விசேடணமாக்கி—'குற்றிகரமுங் குற்றுகரமும் ஆய்தமாகிய முப்புள்ளியும்' என அவ்வுரையாளர்கள் பொருள் கொண்டனர் என்பது புலப்படும். ஆயின், இதுவே தொல்காப்பியனார் கருத்தென்பதற்குச் சூத்திரப் போக்குச் சிறிதும் அனுகூலமுடையதாகத் தோன்றவில்லை. இதுவே கருத்தாயின், எண்ணும்மைகளைக் குற்றிகர குற்றுகரங்கட்குங் கொடுத்து. மயங்கவையாது அவர் சூத்திரித்திருப்பர். அங்ஙனமன்றி முற்றும்மை ஒன்றே கொடுத்து முடித்தெண்ணினமையான் 'குற்றியலிகரங் குற்றியலுகரம், ஆய்தமென்ற, முப்பாற்புள்ளியும்' என்பதற்கு, அம்மூவகைப்பட்ட புள்ளியெழுத்துக்களும் என்பதே ஆசிரியர் கருதியபொருளாம் என உணர்க. 'அவைதாம்' 'ஆய்தமென்ற' என்பன, 'சொற்சீரடி' என்று நச்சினார்க்கினியரே எழுதுவர். இவற்றுள் பிற்றொடரைச் சொற்சீரடியாக்கி ஆசிரியர் தனியே பிரித்த கருத்து 'முப்பாற்புள்ளியும்' என்ற விசேடியத்தை ஆய்தத்துக்கே உரியதாகக்கொண்டு உலகமயங்காமைப் பொருட்டே என்பது நோக்குவார்க்கெல்லாம் நன்கு விளங்கும். எனவே, 'முப்பாற்புள்ளியும்' என்பதற்குச் சார்பெழுத்துக்கள் மூன்றுமே விசேடணங்களென்பதும், அம்மூன்றும் புள்ளிபெறுவனவாதலின் 'முப்பாற்புள்ளி' எனப்பட்டன என்பதும் தேற்றமென்க. இது பற்றியே **பேராசிரியர்**, இம்முப்பாற் புள்ளியைப்பற்றிய சூத்திரத்தைக் குறிப்பிட்டு—

"குற்றியலிகரம் புள்ளியென்று யாண்டும் (ஆசிரியரால்) ஆளப்படாமையானும், அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும் அங்ஙனம் புள்ளியென்று ஆளப்படும் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன்கூறுத லாயிற்று" (தொல். பொரு. 665) என்றும்,

தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியுள், ஆசிரியர் **சிவஞான முனிவர்**,—

"ஒரு மொழியைச் சார்ந்துவரும் இயல்பன்றித் தனித்தியங்குமியல்பு தமக்கில என்றலின் அவைதம்மை எடுத்தோதிக்காட்டலாகாமையின், வருஞ் சூத்திரத்தால் அவற்றுக்கு வேறு பெயரிட்டு—'அவைதாம், குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தம்' என்றும், அம்மூன்றும் புள்ளிபெறுதல் பற்றிப் பொதுப் பெயராக 'முப்பாற் புள்ளியும்' என்றும் ஓதினார்.

என்றும் மேற்கூறிய 'கருத்தேபட எழுதிச்செல்லுதல் ஈண்டு அறிந்து போற்றத்தக்கதாகும். இன்னோரின் சீரிய கருத்தைத்

தழுவாது, ஆய்தத்துக்கே முப்பாற்புள்ளியை உரியதாக்கி உரைகாரர் சிலர் கூறிப்போந்த பொருளின்றே மூன்று புள்ளியுடையதாக அவ்வாய்தங்கருதி யெழுதப்பட்டதென்றே தோன்றுகிறது. எனவே, நச்சினர்க்கினியர் குறித்தவாறு, விஸர்க்கம்போல இரு புள்ளிகளுடையதாக இவ்வெழுத்து ஆசிரியர் காலத்தில் வழங்கியதெனலே பொருத்தமென்க. ஆயின், இத்தகைய ஆய்தவடிவு பழையசாஸன முதலியவற்றிற் காணப்படவில்லை. 8-ஆம் நூற்ருண்டில் பல்லவமல்லன் காலத்ததாக அமைந்த கசாகுடிப்பட்டயத்துள்*—'வெஃகா' என்ற சொல் வருமிடத்து ⁛என்று மேலும் கீழும் புள்ளிகளும், இவற்றிடையே சிறிது வளைந்த கோடும் உடையதாக ஆய்தம் வரையப்பட்டுள்ளது. இஃது அக்காலத்து வழங்கிய அவ்வெழுத்தின் மாதிரிகையாகக் கொள்ளத்தகும். **ஆயதம்** என்ற வடசொற்கு 'நீண்டது' என்பது பொருளென்பராகலின், ஈண்டு நீண்டகோடுள்ளது எனல் பொருந்தும். [பலவகைவடிவுகளைக் கூறுமிடத்து நன்னூற் பழைய உரைகாரரான **மயிலைநாதர்**†—சதுரம், **ஆயதம்**, வட்டம், முக்கோணம், சிலை என்றின்னவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் இவ்வாயதமும் ஒன்ருய் நீண்ட வடிவினைக் குறித்தல் காண்க.] இதனுல், நீண்டகோடுள்ளதாய்ப் புள்ளிபெறுதலின், அவ்வாயதமே, ஆய்தம் என்றும் ஆய்தப்புள்ளி (38) என்றும் வழங்கலாயிற்றுப் போலும்-என்று சாஸனவெழுத்தமைதிகொண்டு நாம் கருதலும் பொருத்தமுடையதாகின்றது. பல்லவசாஸனத்துக் கண்ட இவ்வாய்தவடிவைப் போலவே, வடமொழி விஸர்க்கத்துக்கு—மேலுங்கீழும் அமைந்த இரட்டைப்புள்ளி வடிவேயன்றி ÷என இடைக்கோடு வளைவின்றியும் பிற்பட்ட பாண்டியசாஸனமொன்றில்‡ காணப்படுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கதாம். ஆகவே ஆய்தச்சொல்லின் மூலம் ஆஶுதமாயினும் ஆயதமாயினும், அவ்வெழுத்துக்கும் விஸர்க்கத்துக்கும் ஒலிவடிவும் வரிவடிவும் ஒன்ருகவே ஆசிரியர் காலத்தில் அமைந்திருந்ததாக வேண்டும் என்பதும், முப்பாற்புள்ளியினதாக அது கருதப்பட்டது மிகப் பிற்காலத்தேதான் என்பதும் மேற்கூறியவற்றினின்று நன்கு பெறப்படுகின்றன.

இனி, எழுத்துக்களின் பிறப்புமுறையைக் கூறிவருமிடத்தே ஆசிரியர் தொல்காப்பியனர்—

---

*S.I.I. Vol. ii, No. 73—Kasakudi Plates of Nandivarman. Plate XV.

† நன்னூல் 453, மயிலைநாதருரை.

‡ Dalavay Agraharam Plates — T. A. S. Vol i, pp. 126—7.

"சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றும்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்"

என்ற சூத்திரத்தால், குற்றிகர குற்றுகர ஆய்தங்களாகிய சார்பெழுத்துக்களின் தோற்றவியல்புங் கூறுவர். குற்றுகர குற்றிகரங்கள் தத்தஞ்சார்பாகிய வல்லெழுத்துக்களின் சிறப்புப் பிறப்பிடங்களையே தமக்கும் உரியனவாகக்கொண்டு ஒலித்தல்போல ஆய்தமும் கொண்டொலிக்கும் என்பது இச்சூத்திரத்தால் அறியலாகும். எனவே, ஆய்தம் தன்சார்பாய வல்லெழுத்தின் தன்மையதாமன்றித் தனக்கென்று பிறிதோரொலி உடையதன்று என்பதாயிற்று; அஃதாவது—ககரத்தின்மிசை கஃகேரொதி என்பதிற்போலவும், சகரத்தின்மிசை நிஃஷயே, விஃஷராந்தி என்பவற்றிற்போலவும், தகரத்தின்மிசை கஃதேவதி என்பதிற்போலவும், பகரத்தின் மிசை கஃவேவதி என்பதிற் போலவும், றகரத்தின் மிசை (குதிரைக்குத் தெலுங்கர் கூறும்) 'குர்ரம்' என்பதன் ஒலிபோலவும்—ஆய்தம் ஆசிரியர் காலத்தே உச்சரிக்கபெற்று வழங்கியதென்பதாம்* பிற்காலத்தே, ககரத்துக்குமுன் வரும் ஜிஹ்வாமூலீய ஒலியே, ஏனை வல்லெழுத்துக்கட்கு முன் வரும் ஆய்தங்களின் ஒலியாக வழங்குவதாயிற்று. ஆயினும், அத்தகைய உச்சரிப்புத் தொல்காப்பியர் காலத்து வழக்கன்று என்பதற்கு—'ஏனை மூன்றுந் தத்தஞ் சார்பிற பிறப்பொடு சிவணி... தம்மியல்பியலும்' என்று சார்ந்ததன் வண்ணமான அவற்றின் ஒலியை ஆசிரியர் வற்புறுத்துக் கூறுவதே தக்க சான்றாகும்.

## IV. புள்ளிபெறும் மகரக்குறுக்கம்

தொல்காப்பியனர், மகரம் தன்மாத்திரையிற் குறுகிவருமிடத்தைக் குறித்து (13), அடுத்து "உட்பெறுபுள்ளியுருவாகும்மே" என்று தனிச் சூத்திரமொன்று கூறுகின்றார். இதற்கு, உரையாசிரி

* பஃது என்பது—க:தபதி என்பதிற் போலச்—சார்ந்த தகரத்தின் ஒலிபெற உச்சரிக்கப்பட்டது பற்றியே, அவ்வாய்தம், தன்னோடு ஒலியாற்பெரிதுமொத்த தகரவொற்றின் தன்மையாய்ப் பத்து எனவும் ஆசிரியர் காலத்தே வழங்கலாயிற்றென்றும், இருமொழிப் புணர்ச்சியினும் முஃடீது, முட்டீது (தொல். எழுத். 369), கஃறீது கற்றீது (ஷை 399) என இருவகைப்பட வழங்குவதற்கு, ஒற்றுமை பெரிதுமுடைய அவற்றின் ஒலிகளே காரணம் என்றும் கருதற்குரியன. அஃதை (=அதனை) என்பதை அத்தை —என இக்காலத்தார் வழங்குவதும் இத்தகையதே.

யரும் நச்சினர்க்கினியரும்—'மகரக்குறுக்கங் கூறிய மேற்சூத்திரத்தினுள் மகரமே ஈண்டு அதிகாரப்பட்டுநின்றதாகக் கொண்டு,'பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்கின்றது இச் சூத்திரம்' என அவதாரிகையும், 'புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி மகரத்துக்கு வடிவாம்' என்று பொருளும், புறத்துப்பெறும் புள்ளியாவது 'அடுத்துவருஞ் சூத்திரத்து மெய்கட்குக் கூறும் புள்ளி' என்று விசேடமுங் கூறுவர். இவற்றால், 'ப்' என்ற பகரவடிவின் உள்ளிடமாக 'ப்' என்று மற்றொரு புள்ளியையிடின் அது மகரத்தின்வடிவு என்பதைக் குறிக்க வந்ததே இச்சூத்திரம் என்று அவ்வுரையாளர்கள் கருதியமை விளங்கும்.

இங்ஙனம் அவர்கள் கருதினும், "உட்பெறு புள்ளி யுருவாகும்மே" என்று ஆசிரியர் கூறிய சந்தர்ப்பத்தை நோக்குமிடத்து, அச்சூத்திரம், மகரத்தின் வடிவைக் குறியாது மகரக்குறுக்கத்தின் ஒருசார் உருவத்தையே குறிப்பதாகல் வேண்டும் என்பது, என் நண்பர் ப்ருஹ்மஸ்ரீ **டாக்டர் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியவர்களது** (M.A., L.T.,) கருத்து.* அவர்கள் அங்ஙனங் கருதற்குற்ற காரணம் அடியில் வருமாறு:—உட்பெறுபுள்ளி கூறும் இச்சூத்திரத்துக்கு முற்சூத்திரம்—

"அரையளவு குறுகன் மகர முடைத்தே
இசையிட னருகுந் தெரியுங் காலை"

என்பது. "வேறோர் எழுத்தினது ஓசையின்கண் மகரவொற்றுத் தன் அரைமாத்திரையிற் குறுகிச் சிறுபான்மையாகவரும்" என்பது இதன்பொருளாம். மெய்களும் சார்பிற்றோற்றத்து மூன்றும் அரைமாத்திரைபெறுதலும், அவற்றுள் மகரமெய்மட்டும் கால்மாத்திரை பெறுமாறுங்கூறி, அடுத்து 'உட்பெறு புள்ளி யுருவாகும்மே' என்று ஆசிரியர் முறையே குறித்தலால், முன்சூத்திரத்து வந்த மாத்திரை குறுகிய மகரமே ஈண்டு அதிகாரப்பட்டதென்பதன்றிக் குறுகாத மகரமெய் அதிகாரப்பட்டதெனல் இயையாதாகும். அன்றியும், மெய்களின் வடிவை 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்' எனப் பின்வருஞ் சூத்திரத்தில் ஆசிரியர் கூறுதலின், பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்தற்கு இச்சூத்திரம் முன்னின்றதென்பது பொருத்தமுமன்று. இவற்றால், அரைமாத்திரையவாகிய மெய்களும் சார்பெழுத்துக்

* The Bishop Heber College Magazine-என்ற பத்திரிகையில், இவர்களால் எழுதப்பட்டுள்ள "தொல்காப்பிய ஆராய்ச்சி" 101, 102-பக்கங்கள்.

களும் புள்ளிபெறுவன என்று கூறியவாறே, ஈண்டு மகரம் தன் அரைமாத்திரையிற் குறுகுமிடத்து ஒற்றுக்குரிய புறப்புள்ளியோடு, மகரச்சுழியினுள்ளாக மற்ருெரு புள்ளியும் பெற்றுவரும் என்று ஆசிரியர் கருதிக் கூறினர் என உணர்க. குற்றிகர குற்றுகரங்கள் போலவே மகரக்குறுக்கமும் சிறப்புப்புள்ளிபெற்று முன்பு வழங்கி வந்ததென்பது, வீரசோழியஞ் சந்திப்படலத்து 19-ம் செய்யுளுள்—

"முன் வயிற்கால் வவ்வரின்—வருமொழிமுதல் வகரம் வந்து புணர்ந்தால் அந்த மகரமானது குறுகிக் கால்மாத்திரையாய் உட் புள்ளிபெறும்"

என்று அதனுரைகாரரான பெருந்தேவனர் எழுதிய பொருளின் நயம் ஈண்டு அறிந்து மகிழத்தக்கது. இப்பிரமாணவுண்மையும் சாஸ்திரியவர்களால் அன்புடன் எனக்கு அறிவிக்கப்பட்டதே யாம்.

## V. காலுக்குப்பிரதியாக வழங்கிய புள்ளி

"புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்
ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே" (17)

என்ற சூத்திரத்தால், மெய்யும் உயிருங் கூடுமிடத்து, மெய்கள் வடிவுதிரியாதுந் திரிந்தும் நிற்றலை ஆசிரியர் கூறுவர். இவற்றுள் திரிந்துநிற்கும் உயிர்மெய்களின் வடிவுகளைக் குறிக்குங்கால், நச்சினர்க்கினியர்—

"உருவுதிரிந்துயிர்த்தலாவது—மேலும் கீழும் விலங்குபெற்றும் கோடுபெற்றும் புள்ளிபெற்றும் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி, கீ முதலியன மேல் விலங்கு பெற்றன. கு, கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ, கே. முதலியன கோடு பெற்றன. கா, ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். கொ, கோ, ஙொ, ஙோ முதலியன புள்ளியுங் கோடும் உடன்பெற்றன.

என்று குறிப்பிடுகின்ருர். இவற்ருல் கா, ஙோ என்பவற்றின் அருகிலுள்ள கால்கள் முற்காலத்தே புள்ளிகளாக எழுதப் பட்டன என்பது அவ்வுரைகாரர் கருத்தாதல் விளங்கும். இம் முறையைச் சாஸனங்களிலேனும், கையெழுத்துப் பழம்பிரதி களிலேனும் காண்டல் அரிதேயாம். ஆயினும், தண்டியலங் காரத்தில் மாத்திரைச் சுருக்கத்துக்குக் காட்டப்பட்ட வெண்பா வொன்று, இத்தகைய வழக்குண்மையைக் குறிப்பிடுவதாகவே தோற்றுகின்றது. அது வருமாறு:—

" நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம்—சீரளவும்
காட்டோன் றொழிப்ப விசையா மதனளவு
மீட்டோன் றொழிப்ப மிடறு " என்பது.

மகளிர்கூந்தற் பெயரான 'ஓதி' என்பதனுட் புள்ளியிடின் 'ஒதி' என்றாகி மரமொன்றனைக் குறிக்கும். நீர்நிலையின் பெயரான 'ஏரி' என்பதனுட் புள்ளியிடின் 'எரி' என்றாகி நெருப்பைக் குறிக்கும். காட்டின் பெயரான காந்தாரம் என்பதில் ஒன்றைக் குறைக்கக் கந்தாரம் என்றாகிப் பண்ணைக்குறிக்கும். அக்கந்தாரச் சொல்லினும் ஒன்றைக் குறைக்கக் கந்தரம் என்றாகி மிடற்றைக் குறிக்கும் என்பது இப்பாட்டின் பொருள். இதன்கண், 'காட்டோன்றொழிப்ப' 'மீட்டோன்றொழிப்ப' என்பவற்றிலுள்ள 'ஒன்று' என்பன, 'புள்ளிபெற' என மேல்வருந்தொடர்கள் கொண்டு அப்புள்ளியினையே குறிப்பன வென்றும், அதனால் 'ஒன்றொழிப்ப' என்பதற்குப் 'புள்ளியைக் குறைக்க' என்பதே பொருளாமென்றுங் கொள்ளத்தக்கன. இவ்வாறன்றி, ஒருசார் உயிர்மெய்களின் குறியாக இடப்படும் காலே (ா) யே 'ஒன்று' என்ற சொற்கள் குறிக்கவந்தனவாகக் கொள்ளுதல் ஏற்புடைத்தன்று. அதுவே கருத்தாயின், 'கூந்தலினோர் புள்ளிபெற' 'நீர்நிலையோர் புள்ளிபெற' என்று மேலே கூறினாற்போல 'காட்டிலோர் காலொழிப்பப் பண்ணு மதனளவு, மீட்டோர்கால் நீக்க மிடறு' என்றவாறு, இன்னதொழிய என்பது விளங்கப் பாடப் பட்டிருக்கும். அங்ஙனமின்மையால், ஒன்றென்பன புள்ளியை யன்றி வேறுகுறிக்கும்மெனல் இயையாதென்க. எனவே, புள்ளியைக் கூட்டுதலாலும், அதனைக் குறைத்தலாலும் எழுத்தளவு சுருங்கிவரும் 'மாத்திரைச்சுருக்கம்' என்ற சொல்லணியின் இரு வேறு வகைக்கும் இரண்டிரண்டு உதாரணங்களை இரண்டிரண்டு அடிகளாற் கூறவந்ததே இவ்வெண்பா என்பது நன்கு பெறப் படும். க.ந்த.ரம் என்றவாறு முன்பு எழுதப்பட்டு வந்தபுள்ளியே பிற்காலத்துக் காந்தாரம் என்றவாறு காலாகமாறியது என்று எழுதிய நச்சினார்க்கினியர் கூற்றை, இங்ஙனம் பழையபாட லொன்று பெரிதும் ஆதரித்து நிற்றல் கண்டுகொள்க.

## VI. புள்ளிபெறும் வேறெழுத்துக்கள்

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்தும்' என்ற நன்னூற் சூத்திரத்துக்குப் பழையவுரைகாரரான மயிலைநாதர் எழுதிய விசேடவுரை அடியில் வருமாறு :—

''ஆண்டு' என்ற மிகையானே, தாது, ஏது என்றற்றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு, கொட்டு என்றற்றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர் மொழிகளும், பொருள் வேறுபாடு அறிதற்பொருட்டுக் குற்றுகர குற்றிகரங்கட்குமேல் புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க'' எனக் காண்க.

இவ் விசேடவுரையால் ஆரியமொழியான தாது இந்து முதலியன குற்றுகரமேயாயினும் உயிர்வரின் மெய்விட்டோடல் முதலிய செய்கைபெறும் இயல்பிலாமையின் அத்தகைய ஆரியமொழிகளின் வேறுபாடு விளங்கவும், பொதுமொழி புணர்மொழிகளில் நேரும் பொருட்டடுமாற்றத்தை அகற்றவும் வேண்டி அவற்றுக்குப் பண்டையோர் புள்ளியிட்டுவந்த செய்தி தெரியலாம். இவையன்றி, தவறாக எழுதப்பட்டவற்றை நீக்கிப்படிப்பதற்கு அறிகுறியாய், அத்தவற்றெழுத்துக்களின் மேலிடமாகப் புள்ளிகளிட்டுக்காட்டும் வழக்கும் ஏட்டுச்சுவடிகளிற் பெரிதும் காணப்படும். இவ்வாறு காட்டுவது தொன்றுதொட்ட முறையே என்பது—"எழுத்து உருவழியாதே கிடந்தாலும், **புள்ளிகுத்தினால் அத்தைக் கழித்து** மேலேபோமா போலே" எனவரும் திருவாய்மொழி ஈட்டின்பந்தியாலும் (7,3,4) தெரியலாம். எனவே, எழுத்தின் மாத்திரையைக் குறைத்தற்குமட்டுமன்றி, அவ்வெழுத்தையே குறைத்தற்குறியாகவும் புள்ளியை முன்னோர் உபயோகித்துள்ளமை புலப்படும்.

இதுவரை கூறியவற்றால், எழுத்துக்களின் வரிவடிவுகளை நன்கு விளக்காது, அவை பழைய முறையே வழங்குவன என்று குறிப்பிட்டு, அவற்றுட் புள்ளிபெறுவனவற்றை மட்டும் தொல்காப்பியரும் பிறரும் விதந்தோதுவது நன்கு விளங்கும். சொல்லினுந்தொடரினுந் தெளிவான பொருளுணர்ச்சி யுண்டாதற் பொருட்டு ஆசிரியர்கள் இங்ஙனம் புள்ளிவிதித்துப் போந்ததைப் பின்னோர் நெகிழவிட்டவிடங்களில்,பிழைச்சொற்களும் பொருட்டிரிபுணர்ச்சியும் நிகழலாயின என்றே சொல்லலாம்: கன்மாப் பலகை—கனமாப்பலகை (சங்கப்பலகை), 'கள்வன்-களவன் (நண்டு), நேர்திறம்-நோதிறம் (பண்வகை), சாகம்-சரகம் (தேனீ) முதலாகச் சொற்களின் உண்மையுருவந் தெளியப்படாமைக்கெல்லாம், இப்புள்ளியிடுவதில் நேர்ந்த சோர்வே காரணமன்றோ. இதற்கு இன்னும் எத்தனையோ உதாரணங்கள் காட்டலாகும். இங்ஙனம் தமிழ் வரம்பு சிதையாமைப் பொருட்டு முன்னோர். கையாண்ட இப்புள்ளியிடுமுறை, நம்மனோராற் பெரிதும் போற்றத் தக்கதாம் என்க.

# 9. பழைய குறியீட்டெழுத்துக்கள்*

நம் பரதகண்டத்து அமைந்த சாஸனங்களைநோக்கின், அவை, முக்கியமாக அசோக சக்கரவர்த்தி காலத்தினின்று தொடங்குதலைக் காணலாம். தலையிடைச் சங்கங்களோ, நூல்வழக்குப்படி அதற்கும் முற்பட்டனவாகும். ஆகவே, அவ் வாதிகாலத்தில் அமைந்த சாஸனங்களை நாம் எதிர்பார்க்க இடமில்லை. ஆயினும், சாஸனங்களும் பிறவும் வரைதற்குத் தமக்கென்றமைந்த எழுத்தமைதியைப் பழைய தமிழ் மக்கள் உடையராயிருந்தவர் என்றே நாம் சொல்லலாகும். பண்டையோர் வழங்கிய வடிவெழுத்துக்கள் சிலவற்றைப்பற்றித் தொல்காப்பியனர் குறிப்பிடுகின்றார். மெய்களும், எகரவொகரங்களும், குற்றிகரகுற்றுகரங்களும. ஆய்தமும் புள்ளிக்குறி பெறுவன என்றும், மகரக்குறுக்கம் மகரவொற்றின் உள்ளாகப் புள்ளிபெறுமென்றும் அவ்வாசிரியர் கூறுவர்.† முன்னூல்களின்படி, அவர் அகத்தியனர் மாணுக்கருள் ஒருவராய் இடைச்சங்கத்தில் வீற்றிருந்தவர் என்பது பிரசித்தம். தொல்காப்பியத்தினும் பழைமை பெருமை வாய்ந்த தமிழ்நூல் வேறில்லை என்று ஆராய்ச்சிமுறையாலும் துணியப்படுகின்றது. அந்நூலாசிரியர் இவ்வாறு புள்ளியெழுத்துக்களைச் சிறப்பாகக் கூறிச்செல்வதை நோக்குமிடத்து, தமிழுக்குத் தனிமையான எழுத்தமைதி பழைமையாகவே உண்டென்பது நன்கு பெறப்படும். பரதகண்டத்தில இப்போதுவழங்கும் எழுத்துக்கட் கெல்லாம் **பிராமிலிபிகளே** மூலமானவை என்று சாஸனவறிஞர் பெரும்பாலார் கருதுவர். இரண்டாயிரமாண்டுகட்கு முற்பட்ட சாஸனங்கள் பெரும்பாலவும் இப்பிராமியிலே அமைந்துள்ளன. இவற்றுள் 'அசோக சக்கரவர்த்தியின் கட்டளைகள்' அமைந்த சாஸனங்களைத் தலைமையாகச் சொல்லலாம். இப் பிராமிசாஸனங்கள் சில, தமிழ்நாட்டில்—முக்கியமாகப் பாண்டிநாட்டினும் சேரநாட்டினுமுள்ள மலைச்சார்வுகளில்—இப்போது அருமையாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவும், சைனபௌத்த முனிவர்

* இது—'கலைமகள்' என்ற பத்திரிகையில் 'இலக்கியசாஸன வழக்காறுகள்' என்னுந் தலைப்பின்கீழ் ஆசிரியர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியாகும்.

† "8 - தொல்காப்பியனரும் புள்ளியெழுத்துக்களும்" என்ற மேற் கட்டுரை பார்க்க.

கள் இருந்து நோற்பதற்கு அமைத்துக்கொண்ட மலைப்பாழிகளில் பொறிக்கப்பட்டனவாகும். அவற்றில் அமைந்துள்ள பாஷையானது, பிராகிருதமொழி கலந்த தமிழின் சிதைவாகத் தெரிகின்றது. இச் சாஸனங்களிற்கண்ட எழுத்தமைதியே தமிழுக்குரியது என்று கொள்ள இடமில்லை. உரியதாயின், மெய்யெழுத்து முதலியன சிறப்பாகப் புள்ளிபெறுதற்குரியவை என்று தொல்காப்பியனார் நியமித்தபடி இப் பிராமிசாஸனங் களினும் அப் புள்ளிகள் அமைந்திருத்தல் வேண்டுமன்றோ? அவ்வாறு இச்சாஸனங்களிற் காணப்பட்டில. அன்றியும் நம் நாட்டிற் காணும் பிராமியெழுத்துக்கள் சில வடநாட்டுப் பிராமியினும் வேறான குறியீடுகளையும் மாறுபாடுகளையும் கொண்டுள்ளன. இவற்றால் தமிழ்மக்கள் தனியே வழங்கிய எழுத் துக்களும் பிராமிலிபிகளும் கலந்த எழுத்தமைதியும், பாகதமும் தமிழுங்கலந்த பாஷையமைதியும் உடைய சாஸனங்களாகவே இவை தோற்றுகின்றன. எனவே, ஆதித்தமிழர் பிராமியினும் வேறாகத்தமக்கென அமைந்த எழுத்துவகை யுடையரல்லர் என்று சிலர் முடிவுகட்டுவது பொருந்தாதென்பது தெரியலாம். ஆயின், தமிழ்மொழிக்குத் தனியே யமைந்த ஆதி லிபிகள் உண்டோ என்ற கேள்வி நிகழக்கூடியதே. 30-வருஷங்கட்கு முன் செந் தமிழ்ப் பத்திரிகையில் இதுபற்றிய கட்டுரையொன்று வெளி யிட்டுள்ளேன்.* சாஸனபரிசோதகர் கூறுமாறு, பழையன வும் புதியனவு மாகவுள்ள தமிழ்லிபிகள் யாவும், பிராம்மியின் திரிபுகளே என்பது ஒருவாறு பொருந்துவதே என்றும், ஆனால் கடைச்சங்கத்தார் காலத்தினும் அதற்கு நெடுங்காலத் துக்கு முன்னும் வழங்கிய எழுத்துக்களில் ஒரு பகுதி எகிப்தியர் சீனர் முதலியோர் வழங்கிவந்த சித்திரசங்கேத லிபிகள் (Hieroglyph) போன்றனவாதல் வேண்டும் என்றும் நான் அவ் வுரையிற் குறிப்பிட்டிருக்கிறேன். அவற்றை அடியில் வருமாறு சுருக்கமாக அறியலாம்.

தமிழ்மக்கள் பூர்வகாலத்தில் வழக்கிவந்த எழுத்துவகைகள் நான்காகும். அவை :—வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மை யெழுத்து, முடிவெழுத்து என்பனவாம்.

"வடிவு பெயர்தன்மை முடிவுநான் கெழுத்தே" (திவா. பிங்.)

எனப் பழைய நிகண்டுகளும் இவ் வெழுத்துக்களைக் குறிப்பிடுதல் அறியத்தகும். பிங்கலநிகண்டிற் கண்ட இதுவே சூத்திரத்துக்குப் பிற்காலத்தவராற் கூறப்பட்டுள்ள உரை, விளக்கமும் பிரமாணமும்

* செந்தமிழ், தொகுதி. 5, பகுதி. 5.

உடையதாகத் தெரியவில்லை.* அதனால் அவற்றைப் பற்றி ஈண்டு ஆராய்ச்சி செய்யவேண்டியதின்று. இவ்வெழுத்துக்கள், தமிழ் மக்கள் நெடுங்காலமாக வழங்கிவந்த ஒருவகை லிபிவகைகளாகவே தோற்றுகின்றன. இவற்றுள் வடிவெழுத்து என்றது, பூர்வ எகிப்தியர் வழங்கியதுபோன்ற சித்திரக்குறிகளேயாதல் வேண்டும். அவ் வெகிப்தியர் மனிதன் அன்றி விலங்குபோன்றவற்றை யுணர்த்த அவற்றின் முழுவுருவத்தையேனும் ஒருபாகமாகிய தலையையேனும் சித்திரித்துக் காட்டுதல் மரபு. இதனை உருவெழுத்து என்பதும் உண்டு.

"காணப் பட்ட உருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்"

என்பது பழஞ்சூத்திரம். இதனால், சித்திரவுருவில் எழுதிக் காட்டி வந்தனவே வடிவெழுத்து அல்லது உருவெழுத்து என்பது பெறுதல்கூடும். இனி, பெயரெழுத்து என்றது சீனர்களைப் போல ஒவ்வொரு பெயரை உணர்த்தற்கு இட்டுவழங்கிய சங்கேதக் குறிகளையும், தன்மையெழுத்து என்றது குணங்கள் சக்திகள் முதலியவற்றைக் குறித்தற்கு வழங்கிய அடையாளங்களையும், இறுதியான முடிவெழுத்து என்றது வினைமுடிபுள்ள வாக்கியங்களைக் குறிக்க வழங்கிய அறிகுறிகளையும் குறிப்பன போலும்—என்பதே.

பலவாண்டுகட்குமுன்பு யானெழுதிய இக்கருத்து சரித்திர அறிஞர்க்குப் பேரதிசயம் விளைக்கத் தடையில்லை. தமிழுக்கு இப்படியும் ஓர் எழுத்தைக் கற்பித்துக்கூறுதல் ஏற்குமோ என்று அன்னோர் சங்கித்தல்கூடியதே. ஆனால், இக்கருத்து என்பால் தோன்றுதற்குக் காரணமாயிருந்த பிரமாணம் அவ்வறிஞரின் ஆராய்ச்சிக்கும் உரியதாகும். தமிழாசிரியனொருவன்

* பிங்கல நிகண்டின் கீழ்க்குறிப்பிற் கண்டவை வருமாறு:—"வடிவெழுத்து—செவிப்புலவொலியைக் கண்ணுக்குப் புலப்பட வெழுதும் எழுத்து. பெயரெழுத்து—வடிவெழுத்து முதலாக வழங்கும் எழுத்துக்களுக்கு இடும் பெயரெழுத்து. தன்மையெழுத்து—செவிப்புலனாகிய ஒலியெழுத்து. முடிவெழுத்து - வடிவெழுத்து முதலாயுள்ள எழுத்தினை மனத்தாற்றுணிவது முடிவெழுத்து" எனக் காண்க. இக் கருத்து, இலக்கணக் கொத்துப் பாயிரம் 7-ம் சூத்திரவுரையின் கீழ்ப் பதிப்பாசிரியர் காட்டிய சூத்திரங்களை அடியாகக் கொண்டது என்று தோற்றுகின்றது. இவையன்றி, உருவெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மையெழுத்து' என வேறு நான்கு வகையும் யாப்பருங்கலவிருத்தி கூறும். (பக். 535).

அறிந்திருக்க வேண்டுவனவற்றுள், நாட்டில்வழங்கும் குறியீட்டெழுத்துக்களையெல்லாம் அவன் நன்கறிந்தவனாதல் வேண்டும் என்பது ஒன்று எனத் தமிழ் முன்னோர்கள் நியமனஞ் செய்துள்ளார். இதுபற்றி யாப்பருங்கல முடையார் கூறும் இறுதிச் சூத்திரத்தின் உரையில், அதன் விருத்திகாரர் எழுதுவன வருமாறு:—

"மகடூஉ, ஆ, பிடி, குமரி, கன்னி, பிணவு, முடுவல் என்றின்ன சில வெழுத்தும்,[1] [அகசடதபய முதலியவாய வெழுத்தும் அசல வரஙய முதலிய இராசியெழுத்தும் கார்த்திகை முதலிய நாளெழுத்தும்], தேர், பதம்[2] முதலிய நால்வகையெழுத்தும், சாதி முதலிய **தன்மையெழுத்தும்,** உச்சாடன[3] முதலிய உக்கிரவெழுத்தும், சித்திரக்காருட முதலிய முத்திறவெழுத்தும், பாகியல்[4] முதலிய நால்வகை யெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதி யெழுத்தும், தாது முதலிய யோனியெழுத்தும், மாதமதியம்[5] முதலிய **சங்கேத வெழுத்தும்,** கவி முதலிய **சங்கேத வெழுத்தும்,** பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் என்று இத்தொடக்கத்தனவும், **கட்டுரையெழுத்தும்,** வச்சிரமுதலிய **வடிவெழுத்தும்,** மற்றும் **பலவகையாற் காட்டப்பட்ட எல்லாவெழுத்தும் வல்லார் வாய்க் கேட்க"**

இவ்வாக்கியங்கள் நாம் கூர்ந்து நோக்கத்தக்கன. இவை, பிழைபட்டுக் கிடப்பனவாயினும், இத் தொடர்களினின்று நாம் அறியக்கிடக்கும் அரிய செய்திகள் உள. வடிவெழுத்து, தன்மை யெழுத்து, சங்கேத வெழுத்து, கட்டுரை யெழுத்து என்று இத் தொடர்களிற் கூறப்படுவன, மேற்காட்டிய வடிவு, பெயர், தன்மை, முடிவெழுத்துக்களுடன் ஒப்பிடற் குரியவை. 'வச்சிர முதலிய வடிவெழுத்தும்' என்பதனால் அவை வடிவு விளங்க எழுதப்பட்டமை தோற்றும். சாதி முதலிய தன்மை யெழுத்தும் என்பதற்கு, விவேகத்துக்குக் கண்ணும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன்பாம்பும், வெற்றிக்குக் கருடனும்போல எகிப்தியர்வழக்காக உள்ளவைபோலும். ஆகவே, சிலர் எகிப்தியர் வழங்கியவைபோன்ற எழுத்துக்கள் தமிழகத்தில் அளவற்றிருந்தன வென்றும், அவற்றுட் சில யாப்பருங்கல விருத்தியுடையார் காலத்துக்கு—அஃதாவது உத்தேசம் 11-ம் நூற்றாண்டுக்கு—முன்னும் வழக்கிலிருந்துவந்தன என்றும் நாம் கொள்ளக்கூடியன.

[1] இப்பகுதி, பழைய யாப்பருங்கலவிருத்திப்பிரதி யொன்றிற் கண்டது; அச்சுப் பிரதியிற் காணப்பட்டிலது.

[2] தோபதம். [3] முச்சுடரனே. [4] பரசினுகிய. [5] மாதமடையும்

இவ்வாறு பலவாண்டுகட்குமுன் யான் கண்ட கருத்தை வேறு பிரமாணமொன்றும் இப்போது வலியுறுத்துகின்றது. காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் 'இறக்குமதி'யாகும் மூடைகட்கும் பண்டமேற்றிய வண்டிகட்கும் **கண்ணெழுத்துக்கள்** இடப்பட்டிருந்தன என்பது—

> "வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
> **கண்ணெழுத்துப்** படுத்த வெண்ணுப் பலபொதி"
> (சிலப். 26, 13-6)

> "இருபதினுயிரங் **கண்ணெழுத்துப்** படுத்தன
> கைபுனே சகடமும்" (சிலப். 5, 112.)

என்ற இளங்கோவடிகள் வாக்கால் அறியலாம். இவ்வாறே அரசர்க்குத் திருமுகமெழுதுவாரைக் **கண்ணெழுத்தாளர்** என்று வேறிடத்தும் அவ்வடிகள் வழங்குவர்.

> "**கண்ணெழுத் தாளர்** காவல் வேந்தன்
> மண்ணுடை முடங்கலம் மன்னவர்க் களித்து"
> (சிலப். 25, 170-1)

எனக் காண்க. இவற்றால் கண்ணெழுத் தென்பது, கடைச்சங்க நாளில் வழங்கிய ஒருவகை யெழுத்தின்பெயர் என்பதும், புறநாட்டு வணிகர் (வம்பமாக்கள்) தம் பெயர்முதலியவற்றை இவ்வெழுத்துக்களிலே பொறித்துவந்தவர் என்பதும், இவ்வெழுத்திலும் அக்காலத்து அரசர் திருமுக முதலியன எழுதப் பட்டுவந்தன என்பதும் அறியப்படுகின்றன. இனி, 'கண்ணெழுத்து' என்பதன் பொருள் யாது என்பதை நோக்குவோம்.

'கோல்' என்பது பலபொருள் குறிக்கும் பொதுச் சொல்லேனும், சார்பினல் அது சிறப்புப் பொருளை உணர்த்திநிற்றல் இயல்பளவையாகும் என்பதனைக் கூறுமிடத்து—

> "மாமே லிருந்தொரு கோல்தா வெனிற்கள்ளிக் கோல்தரலும்
> சோமே லிருந்தொரு கோல்தா வெனிற்றர வேதுணிந்து
> பூமேவு கண்ணமுத் தங்கோல் கொடுத்தலும் பூதலத்தே
> நாமே வியல்பென்று கூறுவர் நல்லசொன் ஞவலரே"

என்ற பழையபாட்டொன்று வழங்குகின்றது.* இதன் முதலிரண் டடிகளின் கருத்து—குதிரைமேலிருந்து 'கோல்கொடு' எனின் அது கள்ளிக்கோலும், மதில் மேலிருந்து 'கோல்கொடு' எனின்

---

*இப்பாட்டு, சிவஞான சித்தியார்ச் சுபக்கத்தில், அளவை யிலக்கணங் கூறுமிடத்து மறைஞான தேசிகர் காட்டிய மேற்கோட் செய்யுட்களுள் ஒன்று.

அது கண்ணழுத்தங்கோலுமாய்ச் சார்பினுந் பொருளுணர்த்தும் என்பதாம். சுள்ளிக்கோல் - குதிரையோட்டுங் கருவிகளுள் ஒன்று இளம்பூரணவடிகள், இதனைச் 'சுள்ளற்' கோல் என்பர்.* இனி, சோ (மதில்) மேலிருந்து 'கோல்தா' என்றால், கண்ணழுத்தங் கோலை அது குறிக்கும் என்ற பகுதி ஆராயத்தக்கது. கண்ணழுத் தங்கோல் என்பது கண்ணேணியைக் குறிக்கும் என்பது அறிஞர் சிலர் கருத்து. ஆனல், கோல் கண்ணழுத்தங்கோல் என்பன ஏணிப் பொருளில் வழங்கும் சொல்லல்ல. அன்றியும், சுவரிடமாக இருப்பவன் 'ஒரு கோல் தா' என்று கேட்பதற்கேற்ப, அக்கோல், பிறன் கொடுத்தற்கும் வாங்குபவன் கையிற்பெறுதற்கும் உரிய பண்டமாதலே பொருந்தும். கண்ணேணியோ மதின்மே லிருப் பவற்கு உதவியாக அம்மதிலிற் சார்த்தற்கு உரியதேயன்றி 'ஒரு கோல்தா' என்று கேட்டுக் கையிற் பெறுதற் குரியதாகாமை தெரியலாம். எனவே, ஈண்டுக் கொடுத்தற்கும் பெறுதற்கும் ஏற்றகோல் வேருகவே வேண்டும். அஃது **எழுதுகோல்** எனலே பொருத்தமாம். 'எழுதுங்காற் கோல்காணுக் கண்ணேபோல்' **குறள்**, 1285) என்பதனல், கோல் சித்திரமெழுதுங் கருவியாதல் தெளிவு. அதனல் 'சுவரிடமாக இருந்துகொண்டு ஒருவன் "கோல்தா" எனின், அது சார்பு பற்றி எழுதுகோலாகவே மற்ற வன் கருதிக் கொடுத்தலும்' என்பதே அத்தொடர்ப் பொருளாகக் கொள்ளற்பாலது. "மாடக்குச் சித்திரமும்" "சித்திர முதுசுவர்" "சுவர்மிசைச் சார்த்தியும் வைத்துந் தொழுவர்" என்பன முதலிய வற்ருல், மதிலில் ஓவியமெழுதும் வழக்குப் பிரசித்தம். இவ்வாறு யின், கண்ணழுத்தங்கோல் என்ற தொடரின் முற்பகுதி சித்திரத் தைக் குறிக்குஞ் சொல்லாதல் வேண்டும் என்றும், 'கண்ணழுத்து' என்று அச்சிட்டுள்ள அப்பகுதியைக் 'கண்ணெழுத்து' எனத் திருத்திப் படித்தலே பொருத்தமென்றும் தெரியலாகும். கண் ணெழுத்து-சித்திரவெழுத்து. 'கண்ணுள் வினைஞர்' என்பது சித்திரகாரிகட்கு ஒரு பெயர் என்பது சங்க நூல்களால் அறியப் படும். இதற்கு 'நோக்கினர் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' என்று பொருள் கூறுவர் நச்சினர்க்கினியர். இவ்வாறே, கண்ணெழுத்தும், பார்ப்பவர்கண்ணில் தொழிற் றிறமை காட்டிநிற்கும் எழுத்து என்று விரிந்து பொருள்பெறும். எழுதல் என்பதற்குச் சித்திரித்தல் என்ற பொருள் பழைமையான

* "குதிரைமேலிருந்து 'கோல்தா' என்றால் மத்திகைக்கோலாம் ஆகவானும் சுள்ளற்கோலாம் ஆகவானும் செல்லும்" என்பது இளம் பூரணம் (தொல். சொல். 53).

தாம். அதனல், சித்திரத்தினடியாகவே எழுத்து என்ற சொல் வந்ததோ என்று கருதற்கும் இடமுண்டு.

இவ்வாறு பழைமையாக வழங்கிய சித்திரசங்கேதக் குறியெழுத்துக்கள் தமிழிற் பிற்காலத்தும் வழங்கியிருந்தன என்றே தெரிகின்றது. சாஸனவிலாகாவினின்று வெளிவந்த புத்தகத் தொகுதிகளை நோக்குமிடத்து, தமிழில் முன்னளில் வழங்கிவந்த குறியீட்டெழுத்துக்களைக் காணலாம். உதாரணமாக :—

நெல் (S. I. I. III, 7, 93) குறி (S I. I III, 176)
சர்மன் (Ibid. 10) யாண்டு (Ibid. V, 156)
கொல்லம் (T. A S V, 56) பொன் (Ibid)

என்பன காண்க. மேற்குறித்த சாஸன சம்புடங்களின் கீழ்க் குறிப்புக்களில் இத்தகைய குறியீடுகள் பல ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. இவற்றிற் சில இன்னவற்றைக் குறிப்பன என்று ஊகத்தால் அறியப்பட்டனவேனும், பல தெளியக்கூட வில்லை. சாஸனங்களில் இக்குறியீடுகள் அருமையாகக் காணப்படினும் உலகவழக்கில் மிகுதியாகவே அக்காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும். சாஸனம் வரைந்தோரின் நோக்கம், தாம் புரிந்த அறச் செயல்கள் அனைவர்க்கும் வெளிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டும் என்பதேயாம். அதனல், அக்காலத்தில் நாட்டாரால் நன்கறியப்பட்டிருந்த சங்கேதவெழுத்துக்க ளன்றி, ஏனைய குறியீடுகள் சாஸனங்களிற் பயில இடம்பெறவில்லை என்றே தோற்றுகின்றது.

இனி, **கரந்தெழுத்து** என்று வழங்கப்பட்ட எழுத்துவகையும் ஒன்றுண்டு. காந்தருவதத்தை சீவகனுக்கு அவ்வெழுத்திற் கடிதம் எழுதினள் என்று, தங்காலத்து வழங்கிய அத்தகைய எழுத்துக்களை உள்ளத்துக்கொண்டு திருத்தக்கதேவர் பாடுதல் இங்கறியத் தக்கது (**சீவக சிந்.** 1767). தமிழாசிரியனெருவன் நாட்டில் வழங்கும் இத்தகைய எழுத்து வகைகளையெல்லாம் உணர்ந்தவனதல் வேண்டும் என முன்னேர் நியமித்திருத்தலால், பழைய வடிவு பெயர் தன்மை முடிவு முதலிய சங்கேதவெழுத்துக்கள் நாட்டிற் பெருவழக்குப் பெற்றிருந்தன என்றும், அவை யாவும் முன்னேரால் முறையாகக் கற்கவும் கற்பிக்கவும் பெற்று வந்தன என்றும் நாம் நன்கறியக்கூடும். இத்தகைய எழுத்துக்கள், தமிழுக்கே பழைமையாக உரியனவா அன்றி எகிப்து முதலிய புறநாட்டாரிடமிருந்து வந்தேறி வழங்கியனவா என்பது

தெளிய இடமில்லை. சிந்து பாஞ்சால தேசங்களில் உள்ள ஹரப்பா, மொஹிஞ்சதாரோ என்ற ஊர்களிலே, சமீபத்திற் கண்டறியப்பட்ட ஸுமேரியன் எழுத்துக்களாகக் கூறப்படுபவை, இச் சித்திர சங்கேதக் குறிகளாகவும், 5,000, 6,000—ஆண்டு கட்கு முற்பட்டனவாகவும் உள்ளன என்பர். இதனால், இக் குறியெழுத்துக்கள் நம் தேசத்துப் புராதன மக்கட்குப் புறம் பானவையல்ல என்றும், அம்மக்களில் தமிழரும் சேர்ந்தவ ரென்றும் சொல்லலாகும்.

---

# 10. பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்*

---

இப்போது நம் தேசத்தார் மனத்தில் உதித்துவரும் "தேசிய உணர்ச்சி"யானது, முக்கியமாகக் கைத்தொழில்களாலும் வியாபா ரத்தாலும் இந்தியாவின் பொருளாதார நிலையை விருத்தி செய்த லைப் பற்றியதாகவே உள்ளது. இவ்வுணர்ச்சி தேசாபிமானமும் ஊக்கமுமுடைய அறிவாளர் சிந்தையிற் பல்லாண்டுகளாக உதித்துவந்திருப்பினும், ஜனசமூக முழுதும் அதனில் தம் விருப் பத்தைக் காட்டத் தொடங்கியது சமீபகாலத்திலேதான் என்பது நாம் அறியாததன்று. இத்தகைய உயர்ந்த உணர்ச்சியும் அதன் மூலம் முயற்சியும் புதியனவா யுண்டாயிருப்பதற்குச் சிறந்த காரணம், நம் நாட்டார் உலகியல்களை முன்னிலும் அதிகமாகத் தெரிந்துவருதலேயாம். தேசத்தின் கைத்தொழில் வியாபாரங்கள் நெடுங்காலமாக நம்மவரது கையைவிட்டு விலகிவருவதால், இந்தியாவின் செல்வநிலை பெரிதும் சீர்கெட்டு வருஞ்செய்தி நம்மவர்க்கு எட்டிப் பெரிதும் அதிசயத்தையும் அச்சத்தையும் கொடுத்து வருகின்றது. இது நற்காலத்தின் அறிகுறி என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இக்காலத்துச் சீர்கேடான நிலைமையை மாற்றுதற்குத் தேசிய முயற்சி தக்க கருவியாதலால், அது பெரிதும் வேண்டப்படுவதே யாம். ஆனால், முன்னுளிலே நம்மவர்க்குப் பொருளாதார நிலையைப் பற்றிய கவலையேனும் அதன் மூலம் இத் தகைய முயற்சிகளேனும் நெருக்கடியாக நேரிட்டனவல்ல. அந்நிய வியாபாரிகளால் இந்தியக் கைத்தொழில் வியாபாரங்கட்கு எவ் வித இழுக்கும் அப்போது நிகழ்ந்ததில்லை. நாட்டில் விளைந்த

* செந்தமிழ், தொ - 7 ; Tamilian Antiquary No. 8.

இயற்கைப் பொருள்களில் வேண்டியவளவு இங்கேயே செயற்கைப் பொருள்களாகமாறி உபயோகிக்கப்பட்டன. அவை இங்கு மட்டுமல்ல; அந்நிய வியாபாரிகளால் தேசாந்தரங்கட்கு மிகுதியாக 'ஏற்றுமதி' செய்யப்பெற்றும் பெருலாபம் தந்தன. இச்செய்திகளெல்லாம், இற்றைக்கு 1800–வருஷங்கட்குமுன் இந்தியாவுக்கு வந்து சென்ற அந்நியர்களுள் பிளினி, டாலமி, பெரிப்ளுஸ், ஸ்ட்ராபோ—முதலிய யவனசிரியர்கள் எழுதியுள்ள சரித்திரக் குறிப்புக்களால் வெளியாகின்றன. இவருள் பிளினி என்பவர், தம் குறிப்பில், நம் தேசம் "ஆண்டு தோறும் உரோம ராஜ்யத்திலிருந்து 10 – லக்ஷம் பொன் கவர்தற்குரிய பண்டங்களை 'ஏற்றுமதி செய்துவர, அப்பண்டங்கள் அந்நிய நாடுகளில் நூறு மடங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன' என்று கூறியிருக்கின்றார்[1]. இவ்வாறு, முற்காலத்தே, பிறர்க்கு மிகவும் அருமையும் அதிசயமுந் தரத்தக்க பண்டங்களை யளித்து இயற்கை வளமெல்லாம் நிரம்பிப் பொன்கொழிக்கும் பூமியாக விளங்கியது நம் பாரத வர்ஷம். பொன்கொழிக்கும் பூமி என்று நாம் சொல்வது புனைந்துரை யன்று: "இந்தியர் உங்களைவிட மகாபாக்கியசாலிகள்; நீங்கள் பொன்கொழிக்கும் அந்நாட்டாரொழிய ஏனையரினும் பாக்கியசாலிகள்; உங்களுடைய துணிபும் இதுவே" என்று கி. பி. 117- ல் இறந்த **கிரிஸாஸ்டம்** என்னும் யவனசிரியரே, தம் நாட்டாரை நோக்கிக் கூறுவதன்மூலம் நம்மவரை வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர்.[2] இவ்வாறு இருக்கும்போது செல்வக்குறைவு அக்காலத்து இருந்தது என்று சொல்ல இடமுண்டோ? இல்லை. இற்றைக்கு 2300 - ஆண்டுகட்குமுன் விளங்கிய சந்திரகுப்தசக்கரவர்த்தியிடம் ராஜதூதராய் வந்து சென்ற மெகாஸ்தனிஸ் என்னும் யவனர், தாம் நேரிற் கண்டுகளித்த இந்தியவளத்தையும் ஏனைப் பெருமைகளையுங் குறித்தெழுதி—" இவற்றால், இந்தியாவுக்குப் பஞ்ச மென்பது வந்ததேயில்லையென்றும், உணவு முதலியவற்றுக்கு வேண்டும் பண்டங்களில் யாதொரு குறைபாடும் இருந்ததில்லை யென்றும் சொல்லப்படுகின்றன"[3] என்று எழுதிப் போந்தனர் என்றால், இக்கால நிலைக்கும் முற்கால நிலைக்கும் எத்தனை பெரிய வித்தியாசம் உள்ளது! இப்படியே, அந்நியர் எழுத்துக்களைக் கொண்டு, நம் நாட்டின் பூர்வநிலையை ஆராய்வதில் பல அரிய செய்திகள்

---

[1] The Tamils 1800 Years Ago, p. 38.

[2] "செந்தமிழ்"—தொகுதி 4, பக். 173.

[3] Civilisation in Ancient India, Part. I. p. 228.

தெரியக் கூடுமாயினும், அவ் வாராய்ச்சி மிக நீளுவதோடு, தக்க அறிஞரால் முன்னரே வெளியிடப் பட்டிருத்தலால் மிகையுமாகும். ஆதலால், தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில், முற்காலத்தே நிகழ்ந்த கைத்தொழில் வியாபாரப் பெருமைகளாகத் தமிழ் முன்னூல்களால் தெரியவருவனவற்றைமட்டும் இங்கு எழுவோம்.

ஆரியமக்களால் "புண்ணியபூமி" என்று கருதப்படும் இவ் இந்தியாவுக்குப் பரதகண்டம், பாரதவர்ஷம் முதலிய பெயர்கள் முன்னுண்முதல் வழங்குவதுபோலவே, இதற்குக் "கர்மபூமி" என்னும் பெயர்வழக்கும் உண்டு. "கர்மபூமி" என்ற தொடர்க்கு வெவ்வேறு பொருள்கள் இப்போது கூறப்படுகின்றன. கேவலம் வைதிக கர்மங்கள் பரதகண்டத்திலன்றி வேற்றுநாடுகளிற் செய்யப்படின் பயனளியா வாதலால், அப்பெயர்பெற்றதென்பர் ஒருசாரர். மற்றொருசாரார், சுவர்க்க நரகங்கள் இன்பதுன்பங்களை அநுபவித்தற்குரிய இடங்களாதலால் அவை "போகபூமிகள்" எனவும், அவ்வின்ப துன்ப அநுபவங்கட்குக் காரணமான நல்வினை தீவினைகள் செய்யப்படும் இடம் இப்பரதகண்டமன்றி வேறில்லை யாதலின் இது "கர்மபூமி" எனவும் பெயர்பெற்றது என்று கூறுவர். இப்பொருள்கள் ஒருவாறு இசைத்துக் கூறப்பட்டன வேனும், அத்தொடரை வழங்கிய முன்னோர்களிலே ஒருசாராரின் எண்ணம் இன்னும் விரிந்ததாகும். அத்தொடரிலுள்ள "கர்மம்" என்பதை வைதிக கர்மமொன்றற்கே கொண்டு பொருளைக் குறுக்கியும் நற்கருமத்துடன் தீக்கருமமும் செய்தற்குரிய இடம் என ஒன்றைக்கூட்டியும் கூறுமல், "உயர்ந்த தொழில்களையே செய்தற்குரிய பூமி" என்பதே முன்னோர் கருத்து என்க. அஃதாவது—அவ்வவ் வருணத்தார் ஜீவனோபாயத்துக்குரிய நற் கருமங்களை முறைப்படி செய்துவந்த பூமி இப்பரதகண்ட மாதலின் இது "கர்மபூமி" எனப்பட்ட தென்பதாம். முன்னோரான செந் தமிழ்மக்கள் இக்கருத்தையே தழுவிக்கொண்டவர் என்பது பண்டை நிகண்டு நூலியற்றிய திவாகரமுடையார்—

" உழவு தொழிலே [1] வரைவு [2] வாணிபம்

[1] கைத்தொழில்கள்.

[2] எழுதல், ஓவியத்துறை முதலியன.

வித்தை சிற்ப ‡ மென் றித்திறத் தறுதொழில்
சுற்கும் நடையது கருமபூமி"

எனக் கூறுதலால் நன்கறியலாகும். முன்பு, அவ்வவ் வருணத் தார் தத்தம் செய்தொழிலைக் குறைவறப் புரிந்துவிளங்கிய பாரத நாட்டில், பிற்காலத்து வர்ணங்களும் கர்மங்களும் தலைதடுமாறின மையால் கர்மபூமி என்னுந் தொடர்ப்பொருளுந் தடுமாறியது போலும்! திவாகரர் கூறிய பொருளுக்கு ஜைனமதகிரந்தமும் மணிப் பிரவாளநடையினதுமாகிய ஸ்ரீபுராணம் சிறந்த பிரமாண மாக உள்ளது. அந்நூலுள் ஆதிதீர்த்தகரர்காலத்து விசேடங் கூறிச்செல்லுமிடத்தே, "பரதக்ஷேத்திரம் ஷட்கர்மங்களாலே ப்ரவர்த்தித்தலின் போகபூமி என்னும் பெயர்தவிர்ந்து கர்மபூமி என்னும் பெயர்பெற்றது" எனவும், "பகவான் ஜனங்கட்கு ஜீவனோபாயமாக உழவு, தொழில், வரைவு, வாணிபம், வித்யா, சில்ப மென்னும் ஷட்கர்மங்களையும் உபதேசித்தருளி" எனவும் வரும் வாக்கியங்களால், பாரதகண்டத்துக்குக் "கர்மபூமி" என்னும் பெயர்வந்தவாறும் ஷட்கர்மங்கள் (அறுதொழில்) இன்ன வையென்பதும் நன்கு விளங்குமாறு கண்டுகொள்க.

இனி, இக்கர்மபூமிக்குரிய அறுவகைத் தொழில்களிலே, உழவும் வாணிபமும் தலைசிறந்தன என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்தது. ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரண்டு தொழில் களும் ஒருங்கு செழித்திருத்தல் இன்றியமையாத தாகும். இவ் விரண்டில் ஒன்று செழித்து ஒன்று செழித்ததில்லையேல், அந்நாடு பரிபூர்த்தி பெற்ற வளமுடையதென்று சொல்லத் தகாததாம். நம் தமிழகமோ முற்காலத்தே இவ்விரண்டு தொழில்களும் குறை வறப் பெற்றிருந்த தென்பதற்கு எண்ணிறந்த சான்றுக ளுள்ளன. உதாரணமாக—மதுரைக் காஞ்சியில்,

"வியன்மேவல் விழுச்செல்வத்து
இருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிசெழீஇய நானிலவரோடு"

---

‡"கல்லு முலோகமும் செங்கலு மரமும்
மண்ணுஞ் சுதையுந் தந்தமும் வண்ணமும்
கண்டசர்க் கரையு மெழுகு மென்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"—திவாகரம்

எனவரும் அடிகளாலும், அவற்றிற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "உலகத்துத் தொழில்களில் மேலாகச்சொல்லும் **உழவு வாணிகம் என்னும் இரண்டு கூற்றுலே,** அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே" என்று கூறிய உரையாலும் தமிழ்நாட்டின் பழநிலை வெளியாவதோடு, விவசாயம் வியாபாரமென்னும் இரண்டும் தேசவிருத்திக்கு மூலதாரமானவை என்னும் இக்காலத்தறிஞர் கருத்து முன்னோர்க்குச் சிறிதும் புதியதன்று என்பதும் விளங்கத்தக்கது. இவற்றுள், உழவின்பெருமை வேண்டியவளவு தமிழ்நூல்களிற் காணலாமாதலால், எடுத்துக்கொண்ட பழைய கைத்தொழில் வியாபாரச் சிறப்புக்களை மட்டும் இங்கே கூறுவேன்.

வணிகர்க்கு முக்கியமாக வேண்டப்படும் குணங்கள் பழைய நிகண்டான திவாகரத்திலே பின்வருமாறு கூறப்படுகின்றன :—

"தனிமை யாதல், முனிவில னாதல்,
இடனறிந் தொழுகல், பொழு தொடு புணர்தல்,
உறுவது தெரிதல், இறுவ தஞ்சாமை
ஈட்டல், பகுத்தல்—என்றிவை யெட்டும்
வாட்ட மில்லா வணிக ரியற்குணம்."

வியாபாரமுறைக்கு வேண்டியனவாக இக்காலத்தாராற் சொல்லப்படுங் குணங்களில் முக்கியமானவை இவ்வெட்டுமேயன்றோ, இவற்றுள் "தனிமையாதல்"—என்னுங் குணம் வியாபாரத்துக்கு உரியதாக முன்பு கருதப்பட்டது. "கொள்ளைக்குப் போனாலும் கூட்டுப்பங் குதவாது" என்பது நம்மவர் பழமொழி. கூட்டு வர்த்தக முறையில், இக்காலத்துப்போல எண்ணிறந்த சௌகரியம் முன்பு அமைந்திலாமையால் அஃது ஒதுக்கப்பட்டது போலும் ஆயினும் அக்கூட்டு வியாபாரமும் முன்னிகழ்ந்ததேயென்பதும், அக்கால வியல்புக்கு அது பெரும்பாலும் ஒவ்வாதாயிற் றென்பதும் "தனிமையாதல்" என ஒன்றை எடுத்துக் கூறுதலானே உய்த்தறியப்படும். மனுமுதலிய நீதிநூல்களிற் சொல்லப்படும் பதினெட்டு வியவகாரபதங்களில் "கூடிமேம்படல்"—அஃதாவது கூடியிலாபம் சம்பாதித்தலும்—ஒன்றாக விருத்தலால், முற்காலத்தே அவ் வியாபாரமுறைமை தழுவப் பட்டிருத்தல் காண்க. இனி, தனிமையாத லென்பது கூட்டு வியாபாரத்தை விலக்காது. வாணிபத்தொழிலில் சுதந்தர முடையனாதல் என்பதைக் குறிக்கும் எனினும் அமையும்.

இத்தகைய குணங்களுடன், தமிழ்மக்கள் பண்டைக்காலத்தே அந்நியநாடுகளிலும் உண்ணாடுகளிலும் தங்கள் வாணிப நிலையைப்

பெருக்கி வந்தார்கள். வெளிநாடுகளுடன். இவர்கள் முக்கியமாகச் செய்துபோந்த வியாபாரம்—துணி, மணி, மிளகு முதலியனவாம். நம் நாட்டில் நெய்யப்பட்ட துணிகள் மிகப் பழங்காலத்தேயே அந்நியரால் பேராச்சரித்துடன் புகழப்பட்டுள்ளன. ஏறக்குறைய இற்றைக்கு 2400-வருஷங்கட்கு முன்பிருந்தவரும், "சரித்திர வாசிரியர்க்கெல்லாந் நகப்பன்" என்று புகழப்படுபவருமாகிய "ஹெரடோடஸ்" என்னும் யவனாசிரியர் நமது பஞ்சைப் பற்றிப் பேசும்போது "அங்கு (இந்தியாவில்) மரங்களில் வளரும் உரோமம்" என்றும், "அஃது ஆட்டுரோமங்களால் உண்டாம் கம்பளிகளினும் விசேடமானது" என்றும் கூறுகின்றார்.* இத் துணிநெய்தற்றொழில் இலக்கியங்களில், "காருகவினை" என்று கூறப்படும். இதனை,

"பருத்திநூல் பட்டுநூல் அமைத்தாடை யாக்கலும்
சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்"

என்னுந் திவாகரத்தாலும், "காருக ரிருக்கை" "காருகமடந்தை" எனவரும் முன்னூற் றொடர்களாலும் உணர்க. தத்தம் கிருகங்களில் இருந்துகொண்டே செய்துவந்த தொழிலாதலின் அப்பெயர் பெற்றது. முற்காலத்தே, தத்தம் வீடுகளிலேயே அருமையான ஆடைவகைகள் நெய்வதற்கு வேண்டிய நுண்ணிய நாலிழைகள் முழுதும் பெண்பாலரால் நூற்கப்பட்டுவந்தன என்பதற்குப் பற்பல மேற்கோள்கள் தமிழிற் காணலாம். உதாரணமாக—"பருத்திப் பெண்டின் பனுவல்" (—பருத்தி நூற்கும் பெண்ணின் சுகிர்ந்த பஞ்சு) எனப் புறநானூற்றுள் (125, 326) வருந்தொடர் அறியத்தக்கது. பஞ்சிநூலையும் படிப்புநூலையும் ஒற்றுமைப் படுத்துமிடத்தில் பவணந்திமுனிவர்—

"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு"

என்று கூறுகின்றார். "சொல்லானது பஞ்சாகவும், அச்சொற்களால் தொடுக்கப்படும் தொடை இழையாகவும், புலவனே அவ்விழையை நூற்கும் பெண்ணாகவும், அப்புலவனது வாயே கையாகவும், அவன் அறிவே கதிராகவும் இவ்வாறு பஞ்சிநூல் போலப் படிப்புநூலும் அமைகின்றது"—என்பது இப்பாட்டின் கருத்து. இதனுள், புலவனைப் பெண்ணாக வைத்து உருவகப்

* செந்தமிழ், தொ. 5, பக். 158.

படுத்திக் கூறியதனாலேயே, நூல்நூற்றல் பெண்டிர்க்கன்றி ஆடவர்க்கு அதிகவுரிமை யில்லாதிருந்த தொழில் என்பது தெளிவாகும்.

> "நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளால் கைவன்மகடூஉத் தன் செயற்கை நலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூல் நூற்றல் என்பது"

என்று, இறையனார் களவியலுரையிற் காணுந் தொடரும் இக்கருத்தையே வற்புறுத்தல் காண்க. ஆகவே, மகளிர் நூற்ற நுண்ணிய நூலிழைகளே, பழங்காலத்திற் சிறந்த ஆடைகளாகி அரசர் முதலியவரை அலங்கரித்துவந்தன என்பது பெறப்படும்.

"நம் தேசத்தில், கைம்பெண்களின்தொகை மிகுதிப்பட்டு வருதலால், அவர்கள் வருத்தமின்றிச் சீவிப்பதற்கு இராட்டினமாகிய 'சக்ரா' வேலை இன்றியமையாதது"—என்று நம்நாட்டுத் தலைவர்கள் கூறியுள்ளதைப் பலரும் அறிவர். இந்நூற்றற்றொழில் பொதுவாக மகளிர் கையாண்டதாயினும், சிறப்பாகக் கைம்பெண்களுக்கு மிகவும் ஏற்ற விருத்தியாக முற்காலத்தில் அமைந்திருந்ததாகும். கபிலர் என்ற புலவர் பெருமான்—

> "ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
> நுணங்குநுண் பனுவல் போலக் கணங்கொள
> ஆடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை"

என்று பாடுதல் (நற்றிணை, 353) இங்குக் குறிப்பிடத்தக்கது. சம்பாத்தியத்துக்குரிய கணவனையில்லாத கைம்மைமகளிர் (நூற்பதற்கென்று) தம் முயற்சியால் நுட்பமாகப் பன்னிவைத்த நுண்ணிய பஞ்சுபோல, கூட்டமாகக் காற்றால் அலைக்கப்படும் வெண்மேகம் தவழ்கின்ற சிகரங்களையுடைய நெடியமலை" என்பது இதன் பொருள். இவ்வாறு பாடிய உவமையிலிருந்து, உயர்ந்த ஆடைகள் உண்டாக்குதற்குரிய பஞ்சுப்பனுவல்கள் தம்மைப் போஷித்தற்குரிய கணவரையிழந்த மகளிரால் அரும்பாடுபட்டு நூற்கப்பட்டு வந்தன என்பது நன்குவிளங்குவ தன்றோ? இவ்வாறு பெண்டிர் நூற்கும் வழக்கம் இன்றும் நம் நாட்டுள் நடைபெறுவதேயாம். இங்ஙனம் நூற்றுவந்த இழைகளின் சிறப்புப்பற்றியே, பாண்டிய நாட்டிற் சிறப்பாக மதுரையிலே செய்யப்பட்ட நுண்ணிய நூலிழைகளையும் ஆடைகளையும் ரத்னகம்பளங்களையும் பரதகண்டத்திற் சிறந்த வினங்களாகக் கௌடில்யரும் தம் அர்த்த சாஸ்திரத்திற் பாராட்டி, 'பௌண்டரக' 'க்ஷௌம' எனப்பெயரிட்டு அவற்றை ஆளுவாராயினர். அவற்றின் சிறப்புப்பற்றியே, நூலிழைகளைக்கொண்டு அரிய வேலை செய்துவந்த தொழிலாளர் வாழும் மதுரைவீதியை,

"பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டும் நுண்வினைக் காருக ரிருக்கையும்" (சிலப். 5, 16 - 17)

என்று இளங்கோவடிகளும் கூறினர். இவர்கூற்றுள் 'மயிரினும்' என்பதற்கு 'எலிமயிரானும்' என்று பொருள் கூறப்பட்டுளது. இவ்வெலிமயிராடை மிகுந்த குளிரையுந் தாங்கக் கூடியதென்பதும் பிறவும்,

"கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
பங்க யப்பகைப் பருவம் வந்தென
எங்கு மில்லன வெலிம யிர்த்தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வை தாங்கினர் (சீவக. 2680)

"செந்நெ ருப்புணுஞ் செவ்வெலிமயிர்
அந்நெ ருப்பள வாய்பொற் கம்பலம்" (ஷ. 2686)

"பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்ப்பன கண்கொ ளாதன
எலிமயிர்ப் போர்வை" (ஷ. 2477)

" எலிப்பூம் போர்வையோடு மயிர்ப்படம் விரித்து"
(பெருங். 1,47,176)

என்னும் முன்னோர்கூற்றுக்களால் அறியப்படும். இங்ஙனம் போர்வைக்குரிய மயிருதவும் எலிகளை 'மயிரெலி' என்பர் (சீவக. 1874). இவ்வெலியினம் செம்மைநிறமும், பூனையினும் பெரிய உருவும் உடையதாய் மலையிடங்களில் வாழ்வது என்பது—

"புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன
பவழமே யனையன பன்மயிர்ப் பேரெலி" (1898)

எனச் சிந்தாமணியுடையார் கூறுதலின்று அறியப்படுகின்றது. இதனால் நாட்டெலிகளினும் வேறுபட்ட பெரிய பிராணிவகை இஃதென்பது விளங்கும். இத்தகைய சாதியொன்று அமெரிக்கா நாட்டில் உள்ளதென்றும், அங்கே கஸ்தூரி எலி (Musk-Rat) என அது வழங்குவதென்றும், பீவர் (Beaver) என்ற பிராணியையும் முயலையும் ஒப்ப மதிக்கப்படுவது இஃதொன்றும், இதன்மயிரால் உயர்ந்த ஆடை கம்பளமுதலியன செய்யப்படுமென்றும் கூறுவர்*. இத்தகைய எலியினம் போன்ற வகையே முற்காலத்தில் இத்தேசத்திலும் பெருகியிருந்ததாக வேண்டும். உயர்ந்த ஆடை போர்வை முதலியன நெய்தமைத்தற்கு இப்பிராணிகளின்மயிர்கள் அக்காலத்துப் பெரிதும் உபயோகிக்கப்பட்டு வந்தமையால்

* "Clothing from animals—The other materials were the fur of the mask-rat of America, which comes nearest to the beaver in value and that of the rabbit and hare"—The Arts of Life, p. 141.

அவ்வினமே அழிவுண்டு இக்காலத்து முற்றும் ஒழிந்தன போலும்.[1] குளிரைத் தாங்குவதிற் சிறந்தனவாகவும் அரசரும் செல்வர்களும் உபயோகித்து வந்தனவாகவும் இவ்வெலிமயிராடை நூல்களிற் சிறப்பிக்கப்படுதலின் விலையுயர்ந்த பொருள்களுள் ஒன்றாக இது விளங்கியதென்பது பெறப்படுகின்றது. இங்ஙனம், பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் நெய்யப்பட்ட ஆடை முதலியவற்றின் பல்வகைப்பட்ட தொகுதி சிலப்பதிகாரவுரையால் தெரியவருகின்றன. அவற்றின் பெயர்களாக அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டவை வருமாறு :—

"கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க் காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், நத்தியம், வண்ணடை, கவற்று மடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப் பொத்தி" (சிலப்பதி. பக். 336)

இவற்றால் எண்ணிறந்த ஆடை வகைகள் முன்பு வழங்கின என்பது தெளிவாம். இவை, குழிப்பாடி, கலிங்கம் முதலிய ஊர்களிலே நெய்யப்பட்டு வந்தன. இத்தகைய ஆடைகளிலே சிறந்தவை சில, சங்கவிலக்கியங்களிற் பின்வருமாறு புகழப்பட்டுள்ளன :—

[2]"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை நல்கி" (பொருநராற். 82-83)

[3]"காம்பு சொலித்தன்ன அறுவை" (சிறுபாண். 236)

"கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண அறுவையர்" — (மணிமேகலை-காதை.28)

"ஆவி யன்ன[4] அவிர்நூற் கலிங்கம்" (பெரும்பாண். 469)

---

[1] "ஏகபாதம் கூற்றங் கோண்மா குன்றுறை அசுணம்" போன்ற விலங்குகளும் இந்நாட்டில் இங்ஙனமே அழிவுண்டனவாகும்.

[2] கண்ணிற் பார்வை, இஃது இழைபோன வழியென்று குறித்துப் பார்க்க வாராத நுண்மை உடையவாய், பூத்தொழில் முற்றுப் பெற்றமையாற் பாம்பினது தோலையொத்த துகிலைக் கொடுத்து.

[3] மூங்கிலாடையை உரித்தாலொத்த மாசில்லாத உடை.

[4] ஆவியன்ன = பாலாவியொத்த.

[1] "பாம்பு பயந்தன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்" (புறம். 383)

இவை போன்ற புகழ்ச்சிகள் பழைய நூல்களிலே அதிகமாம். பழைய காலத்தே, தேர்ந்தபெண்டிர் கையாண்டுவந்த நூல் நூற்றல் நெசவு முதலிய தொழில்களை, அரசாங்கத்தார் தனியதிகாரிகளைக் கொண்டு மேற்பார்க்கும்படி செய்து ஆதரித்து வளர்த்து வந்தனர் என்பதும், அவ்வதிகாரிகளும் நூற்கும் மகளிரும் தவறுமல் நடந்து கொள்ளுதற்குரிய விதிகளை ஏற்படுத்தியிருந்தனர் என்பதும்—கௌடிலீய அர்த்த சாஸ்திரம், இரண்டாம் பகுதி, 23-வது "ஸூத்ராத்யக்ஷா" என்ற அதிகாரத்தால் நன்கறியலாம். இவ்வாறு, இழை நூற்றல் பெண்டிர் கொண்டிருந்த தொழிலென்பது இருக்குவேதத்துங் கூறப்பட்டுள்ளது என்பர் (Civilisation in Ancient India, Part. i, p. 44). இத்தகை ஆடையாபரண முதலியவை செய்யுந் தொழிலைப் படித்தறிதற்குரிய கருவி நூல்களும் முன்பு இல்லாமற் போகவில்லை. யாப்பருங்கல விருத்தியில், "இவற்றை, மந்திரவாத மருத்துவ நூலும் சாமுத்திரிகமும் நிலைத்துநூலும் ஆயுதநூலும் பத்து விச்சையும் ஆடை நூலும் அணிகலநூலும் அருங்கலநூலும் முதலியவற்றாலுணர்க" எனவரும் வாக்கியத்தால், முற்காலத்திற் பலதொழில்களையும் அறிதற்குரிய நூல்கள் வழங்கிவந்தன வென்பது தெளிவாம். அன்றியும்,

"ஏரண முருவம் யோகம் இசைகணக் கிரதம் சாலம்
தாரண மறமே சந்தம் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள"

எனவழங்கும் பாடலும், "மூவேழ் துறையும்" என்ற புறநானூற்றுத் (166) தொடரின் விசேடவுரையிலே "இருபத்தொரு கூறுபட்ட அர்த்தநூல்" எனக் கூறப்பட்டிருப்பதும் "உல்லியர் கூவநூலுணர்வோர்" என்னுந் திவாகர சூத்திரமும் பிறவும் முற்காலத்தே தொழில்நிலை பொருளாதாரநிலைகளை அறிதற்கு வேண்டிய கருவி நூல்கள் தமிழ்மொழியில் மலிந்திருந்தன என்பதை நன்கு விளக்கக் கூடியன.

---

[1] பாம்புச் சட்டை போறலால் அது பயந்தது போன்ற வடிவுடையனவும், மூங்கிற்கழையில் உண்டாப் ஆடைபோல, இழைப்புக் கண்ணுக்குத் தோன்றுதனவும், ஒள்ளிய பூத்தொழில் உடையனவுமான ஆடை என்க.

இந்நூல்களெல்லாம் இப்போது எங்கே யுள்ளன? இங்ஙனம் முற்காலத்தில் ஆடைக்குப் பேர்போன நாடாய் விளங்கி, பிற நாடுகளின் மானத்தைக் காத்து வந்த நம் பரதகண்டம் நம் காலத்தில் ஏறக்குறைய அப்பெயர் போனதேயாகி, தன்மானத்தைக் காத்தற்குப் பிறர்கையை அபேக்ஷிப்பதாக மாறிவிட்டது. இது நம்மவர்க்குப் பெரிதும் துக்கமும் வெட்கமுந் தரத்தக்க தன்றோ? முன்னாளில், இவ் வருமையான துணிகளுடன், மிளகு, தந்தம், முத்து முதலிய இயற்கைப் பொருள்களையும் வாங்கிச் செல்லும் பொருட்டு, காவிரிப்பூம்பட்டினம், முசிரி, தொண்டி முதலிய கடற்கரைப்பட்டினங்களில் யவன வியாபாரிகள் தங்கள் கப்பல்களுடன் மிகுதியாக இறங்கி வந்தனர். சிலப்பதிகாரத்தே,

" கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனறி வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"

எனவும், அகநானூற்றில்,

" யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிரி' [1]

என்வும் பிறவாறுங் கூறப்பட்டிருத்தல் காண்க. இவ் யவனர் தம் நாடுகளிலிருந்து இங்கு 'இறக்குமதி' செய்த பொருள்கள், முக்கியமாகக் கண்ணாடி, உயர்ந்த மது, பித்தளை முதலியனவாம். இவற்றுள் மதுவாகிய சாராயம் தமிழ்ப்பேரரசராலும் சிற்றரசராலும் அக்காலத்து விரும்பி உபயோகிக்கப்பட்டு வந்தது. இச் செய்தி,

" யவனர்—நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்திநாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற!" (புறம். 56)

" விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும" (மதுரைக் காஞ்சியிறுதி)

---

[1] யவனவியாபாரிகளால் கொண்டுவரப்பட்டதும் செய்தொழிலால் மாட்சிமை பெற்றதுமான நல்ல கப்பல்கள், தாம் புறப்படும்போது பொன்களோடு வந்து, செல்லும்போது மிளகு மூட்டைகளுடன் பெயர்கின்ற வளப்பம் பொருந்திய முசிரி என்னும்
என்க.

என நக்கீரனர் பாண்டியன் - நன்மாறனையும், மாங்குடி மருதனர் நெடுஞ்செழியனையும் முறையே வாழ்த்துதலால் தெளியப்படும். இவ்வாறு தமிழ் நாட்டில் மலிந்திருந்த யவனர் என்பவர் கிரேக்கம் அரபியா எகிப்து முதலிய மேனடுகளிலிருந்து வந்தவர்களே. இவருள் கிரேக்கயவனர் இங்குவந்து வியாபாரஞ் செய்தவராயினும், சங்க நாளிலும் அதன் பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத் தங்கினவர் சோனகர் என்னும் யவனராவர். தமிழர் கூறும் பதினெண்தேயங்களுள் ஒன்ருன சோனகம் என்பது, பரதகண்டத்துக்கு மேல்பாலுள்ள நாடுகளி லொன்று என்று சொல்லப்படுதலால், அஃது அரபியா என்னுந் தேசமாகக் கருதப்படுகின்றது. தென்னட்டுக் காயற்பட்டினம் கீழைக்கரை முதலிய கடற்கரைப் பக்கங்களிலே இக்காலத்தும் இச் சோனகர் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கள் முற்காலத்தே, காவிரிப்பூம்பட்டினத்து வசித்து வந்த வியாபாரக் கூட்டத்தைச் சேர்ந்தவரென்றும், பிற்காலத்திற்ருன் அங்கு நின்றும் பாண்டி நாடு அடைந்தவரென்றும் தங்கள் ஆதி வரலாறு கூறுகின்ருர்கள். இச் சோனகரது பூர்வபாஷை அரபியே யாயினும், பன்னூருண்டுகளாகத் தமிழகத்தில் தங்கிவிட்டவர்க ளாதலாலும், தமிழருடன் சம்பந்தம் புரிந்தும் தமிழர் வழக்கங்களிலேயே பழகியும் வந்தமையாலும் இவர்கள் தமிழ்மொழியே பேசுவோராயினர். தமிழ்மக்கள் இச்சோனகரை யவனரென்னும் பெயரால் அழைத்து வந்தனரென்பது, 'சோனகர் யவனர்' என்னுந் திவாகரத்தாலும், பத்துப் பாட்டில் யவன ரென்னுஞ்சொல் வருமிடமெல்லாம் நச்சினர்க்கினியர் "சோனகர்" என்றே உரை கூறிப் போதலாலும் விளங்கத்தக்கது. பிற்காலத்தில் இச்சோனகரெல்லாம் தம் பழைய தேசத்தார் போலவே முகம்மதிய மதத்தைத் தழுவலாயினர். இது பற்றி, யவனர்–துருக்கர் என்ருர் அடியார்க்கு நல்லார் (சிலப். பக், 333). இச் சோனகர்க்குள் "மரக்காயர்" என்னும் பட்டப் பெயர் வழங்குகின்றது. ஆதிமுதலே மரக்கலமியக்குந் தொழிலைக் கையாண்டமையால் இவர்க்கு இப்பெயர் வழங்கியதென்பர். இச்சொல், அரபி பாஷையில் கப்பலின் பெயராக வழங்கும் ' மார்கல் " என்பதினின்று வந்ததென்று கூறுதலும் உண்டு. இது நிற்க, சிலப்பதிகாரத்து வரும்,

"ஓங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும்

தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்"

என்பதனுரையிலே, அகிலில்,—அருமணவன், தக்கோலி, கிடாரவவன், காரகில் என்று சொல்லப்பட்ட பலவகைத் தொகுதியும், ஆரத்தில்—மலையாரம், தீமுரன்பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேரச்சுக்கொடி யென்னுந் தொகுதியும், வாசத்தில்—அம்பர், எச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம். பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், தைலம் என்னுந் தொகுதியும், கருப்பூரத்தில்—மலைச்சரக்கு, கலை.[1] அடைவுசரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மாரப்பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாலுேசு[2], சூடன்,சீனச்சூடன் என்னும் தொகுதியும் கூறப்பட்டுள்ளன இவை உண்ணாடுகளினின்றும் வெளிநாடுகளினின்றும் தமிழகத்தில் அக்காலத்தே இறக்குமதியான பொருள் வகைகளாதல் காண்க,

இனி, பரத கண்டத்தேயுள்ள மற்ற நாட்டுத் தொழிலாளரில் திறமை வாய்ந்த பலர் தமிழ் மக்களால், மிகவும் அபிமானிக்கப் பெற்று தமிழ்த் தொழிலாளிகளுடன்கூடித் தங்கள் தொழிற் திறமைகளைக் காட்டி வந்தனர். இது,

" மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை"

என்னும் மணிமேகலையடிகளால் தெளியப்படும். இவரது தொழில்களே யன்றி, கூர்ச்சரச் சிற்பவேலையும்[3] கோசல நாட்டு ஓவியவேலையும், வற்சநாட்டுக் கம்மவேலையும் பிறவும் தமிழராற் பாராட்டப்பட்டன[4]. இவ்வாறு பூர்விகர் பலவகைப்பட்ட கைத்தொழில்களிலும் பயிற்சிபெற்றிருந்ததோடு, கரும்பாலைகளிலே விசேஷக் கவலைசெலுத்தியும், மிளகு வியாபாரத்தைப் பெருக்கியும், பல்வகைக் கள்ளுச் சமைத்தும், வெள்ளுப்பு உண்டாக்கியும் வியா

[1] Kalah on the Malay Peninsula (Mythic S. Journal. vol xl. p. 41)

[2] Fansur or Barus campher forests in Rami or Cambri. (Do Do.)

[3] மணிமேகலை, காதை-18, அடி. 152.

[4] ஷை, காதை-19, 107-ஆம் அடிகளின் அரும்பதவுரை.

பாரஞ்செய்து பேருதியமடைந்து வந்தார்களென்பது முன்னூல்களால் தெளிவாகின்றது. முற்காலத்தே தொழில் செய்மாக்கள் வியாபாரிகள் முதலியோரின் பெருந்திரளும் ஆரவாரமும் சிலப்பதிகாரத்தே இந்திரவிழவூரெடுத்த காதையிலும் கடலாடுகாதையிலும் சிறப்பிக்கப்பட்டுள்ளவை அடியில் வருமாறு :—

" கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரும் நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்
ஆரமும் அகிலுந் தூசுந் துகிரும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பைந்நிண விலைஞரொடு
ஓசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறவினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்" (9-39)

"மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி நடுவட் போகிக்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி
வண்ணமுஞ் சாந்து மலருங் கண்ணமும்
பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்
கூவியர் காரகிற் குடக்கால் விளக்கமும்
நொடைநவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்
மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்
கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்
எண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி.

* * *

மலைப்பஃ றாரமும் கடற்பஃ றாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை"

இளங்கோவடிகள் கூறிய இவ்வருணனைகள் பெரும்பாலவும் வஞ்சிமாநகர்த் தொழிலாளர்க்கும் உரியவாகச் சாத்தனர் மணி மேகலை 28 - காதையிற் பாடுவர். இவ்வாறு, இயற்கையும் செயற் கையுமான பண்டங்களைக் கொண்டு வியாபாரஞ் செய்து பெரும் பொருள் படைத்த வணிகரைத் தமிழரசர்கள் பெரிதும் அபிமா னித்து வந்தனர். வாணிபத்தாற் செல்வமும்புகழும் சிறக்கப்படை த்த வணிகர்க்கு, அரசன் "எட்டி" என்னும் அரும்பட்டமும் அதற் கடையாளமான பொற்பூவும், புரவும் (நன். 158, மயிலை) அளித்து அவரை ஊக்குதல் பண்டைமரபாக இருந்தது. மணிமேகலையில்,

"வாணிக மரபின் வருபொரு ளீட்டி
நீணிதிச் செல்வனுய் நீணில வேந்தனால்
எட்டிப் பூப்பெற்று இருமுப் பதின்யாண்டு
ஒட்டிய செல்வத்து உயர்ந்தோ னாயினன்"

என ஒரு வணிகன் இவ்வாறு புகழப் பட்டிருத்தல் காண்க. இவ் வணிகர் தாம் படைத்த செல்வச்சிறப்புக்கேற்ப—இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூவகையின ராவர். இவர்களைப் பற்றிய வரலாறு அடியில்வரும் ஜீவஸம்போதனைப் பாட்டால் விளங்கும்.

"இப்பர் கவிப்பர் பெருங்குடி வாணிகரென்
றெப்புடைய மூவ ருரைக்குங்கால்—றப்பில்
மிதியடியே ரானைமிசை நோக்கினர்கள் காணா
நிதியுடைய ராவர் நிலத்து"*

பழையகாலத்தே, தமிழ்மக்கள் கப்பல்செய் தொழிலினும் வல்லவரா யிருந்தனர். "கலஞ்செய் கம்மியர்" "கலம்புணர் மாக்கள்" என வரும் மணிமேகலைத் தொடர்களால் இஃது உணரப் படும். இம்மரக்கலங்களுள், கரிமுகவம்பி பரிமுகவம்பி என மதுரையில் உள்ளனவாக இளங்கோவடிகள் கூறும் நாவாய்கள் புறநாட்டாரும் வியந்து புகழக்கூடியவாக விளங்கின. இவற்றுள், பாண்டிநாட்டுக் கரிமுகவம்பியை 'அத்திநாவம்' என்று வடநாட்டார் வழங்கியதோடு, அற்புதமும் ஆச்சரியமு முடையதென்று அதனை வியந்து வந்தன ரென்பது 2100-ஆண்டுக்கு முன்னாண்ட கலிங்கவேந்தனை காரவேலனது சாஸனமொன்றாலும் அறியப் படுகின்றது.† இனி, கப்பல்கள் நடுக்கடலிற் சென்று திரியுங் காலத்தே, திசை தடுமாறாது கரைசேர்தற்கு அநுகூலமாக, சோணாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலும், தொண்டைநாட்டு நீர்ப் பெயர்த்தொல்லையில் இருந்த கடற்கரைப்பட்டினத்திலும் (மாமல்லபுரம்)‡, **கலங்கரை விளக்கங்கள்** அமைக்கப்பட்டிருந்தன என்பது சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையினும் (141) பெரும்பாணாற்றுப் படையினும் (349-350) காணலாம். [கலம் கரை விளக்கம் - கப்பல்களை (கரைக்கு) அழைக்கும் விளக்கு [கரைதல் - அழைத்

---

* அதன் உரை:—"இப்ப ராவார்—பொன்னின் ராசியை நடுவே குவித்து யானைமேலேறிக் குடையிடை நின்றால் ஒருவரையொருவர் காணவொண்ணாத பொன் விராசியை யுடையார்; கவிப்ப ராவார்—அப்படியே விருஷபத்தின் மேலேறிக் குடையிடை நின்றால் ஒருவர் ஒருவரைக் காணவொண்ணாத பொன்னிராசியை உடையார். பெருங்குடி வணிக ராவார்.—மிதியடிமேலேறிக் குடையிடை நின்றால் ஒருவரொருவரைக் காணவொண்ணாத பொன்னிராசியை உடையராவார்."

† Hathigumpha Inscription.—அத்திநாவம் என்ற இவ்வானை முகங்கொண்ட ஓடத்தின் செய்தி யறியாமையால், இதற்கு வேறு வேறு பொருள் கூறினர் சரித்திரவறிஞர் சிலர் (J. B. O. R. S. vol. iii, pt. iv p. 446)

‡ நீர்ப்பெயர்த்து என்பது நீரின் பெயர்கொண்ட ஊர் எ-று. "பொற்கொடிப்பெயர்...நகர்' (மணிமே) 'மதிலொடு பெயரிய பட்டினம்' (சிறுபாண்) முதலியனபோல, நீர்ப்பெயர்த்து என்பது ஆமூர் என்ற நகரைக் குறிப்பதாம் [ஆம்-நீர்]. இவ்வாமூர்க் கோட்டத்துள்ளதே மாமல்லபுரம் என்ற துறைமுக நகராம்.

தல்]. சென்னை முதலிய பெரும்பட்டினங்களில் இக்காலத்து வைக்கப்பட்டுள்ள "லைட்-ஹௌஸ்" (Light-House) போன்றதே இவ் விளக்கமும், இதனால் பழையோரது நாகரிகம் இத்தன்மைத் தென்பது நன்கு விளங்கக் கூடியது.

இனி, உள்நாடுகளிலே, வணிகரின் பெருஞ்சாத்து* ஓரிடத் திருந்து மற்றோ ரிடத்துக்குத் தங்கள் பண்டங்களைக் கொண்டு செல்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் முற்காலத்தே அரசர்க ளால் அமைக்கப்பட்டிருந்தன. பெருங்காட்டு வழிகளிலே முக்கிய மான ஊர்களிலெல்லாம் காவற்படைகள் வைக்கப்பட்டு, வழிப் போக்கர்க்கும் வணிகர்க்கும் திருடர் முதலியவராற் சிறிதும் கேடு வாராதபடி பாதுகாக்கப்பட்டன என்றும், அப்படைகளின் செலவுக்காக அவ்வவ்விடங்களிலே சுங்கச்சாலைகள் அரசனாணை யால் அமைந்திருந்தன என்றும் முன்னூல்களால் விளங்குகின்றன இவற்றை,

"நெரியத்-புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டியவு"†
"அத்தஞ் செல்வோர் அலறந் தாக்கிக்
கைப்பொருள் வௌவும் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்"‡

எனவரும் பெரும்பாணாற்றுப்படையடிகளால் உணர்க. இனி, புகார் முதலிய பெருந்துறைமுகப்பட்டினங்களிலுள்ள பண்டசாலை

---

* சாத்து (Sartha)—வணிகரின் கூட்டம். இவரில் ஒருசார்பெருங் குழுவை "மாசாத்துவாணிகர்" என்ப. "மாசாத்துவாணிகன் மகனை யாகி" என்றார் இளங்கோவடிகளும் (சிலப்.) பிற்காலத்தும், மாசாத்துவாயர் என இன்னோர் வழங்கப்பெற்றனர் (Tamil and Sanscrit Inscriptions. p. 11—17)

† [பொருள்] மிளகினது ஒத்த கனத்தைத் தாங்கிய, வடு வழுந்திய வலியினையுடைய முதுகினையும் எடுத்த செவியினையுமுடைய கழுதையிலே மிளகெடுத்துக் கொண்டு போகும் கூட்டத்தோடே வியாபாரிகள் வழங்கும் பெரிய வழியில், சுங்கச் சாலைகளையுடைய கவர்பட்ட பாதைகளைக் காத்திருக்கும் விற்படையிருக்கும் ஊர்களைக் கொண்ட அகன்ற காட்டு மார்க்கம் எ-று.

‡ வழிச் செல்வோரை அவர் அலறும்படி வெட்டி அவர் கைப் பொருளை அபகரிக்குங் ,களவுச் சீவனமுடைய கொடியோர், அவனது காவலையுடைய அகன்ற நாட்டின்கண் இல்லை எ-று.

களின் சிறப்புக்கள் பட்டினப்பாலை முதலியவற்றிற் கூறப்படுவன வற்றைப் படிப்பவர்க்கு, இக்காலத்துப் பெருந் துறைமுகங்களின் பண்டசாலை நிலைமையினும் குறைந்தவைக ளல்லவென்று தோன் றத் தடையில்லை.

" நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
வைகல்தொறும் அசைவின்றி
* உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிசெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
வலியுடைய வல்லணங்கினோன்
† புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்" (பட்டினப்பாலை.)

இவ்வடிகள், காவிப்பூம்பட்டினத்திற் சரக்குகள் ஏற்றுமதி இறக்கு மதியாகும் நிலையையும், அவற்றிற் சோழவரசனது புலிமுத்திரை யிட்டு எண்ணிச் சுங்கங்கொள்ளும் சிறப்பையும் எவ்வளவுநன்றாக விளக்கிநிற்கின்றன. இன்னும், இறக்குமதியாகும் பண்டங்களில் முக்கியமானவை சில பின்வருவனவற்றால் விளங்கும்.

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
‡ குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடன் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் § காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய வீண்டி" (பட்டினப்பாலை.)

வியாபாரிகள், தாம்கொடுக்கல் வாங்கல் செய்யும் பண்டப் பொதிகளில் அவற்றின் நிறை, அளவு, எண் இவற்றை எழுதிச் சாலைகளில் அடுக்கிவைத்துப் பின்பு எடுத்துச்செல்லவர். இச் செய்தியை,

---

* சுங்கம் கொள்ள.

† பொதிகளில் சோழனது புலிமுத்திரையிட்டு வெளியேற்றி.

‡ குடமலை-மலயபர்வதம் § காழகம்-பர்மா.

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்"

என்னுஞ் சிலப்பதிகாரவடிகளிற் காண்க. இவ்வடிகளிலே அந்நிய தேசத்துவணிகர் மூடைகளிலே கண்ணெழுத்து அமைந்த எண்களிடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தகும்* தமிழ்வியாபாரிகள் அக்காலத்து விளங்கிய பெருநிலைமை பின் வருமாறு புகழப் பட்டுள்ளது.

"நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவும் ஒப்பநாடி
கொள்வதூஉ மிகைபடாது
கொடுப்பதூஉங் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டி துவன்றிருக்கை" (பட்டினப்பாலை)

எனக் கண்டுகொள்க. இவ்வியாபாரிகளில், கடற்கரையிலிருந்த அந்நியவணிகர் தாம்தாம் விற்கும் பண்டங்கள் இன்னவை யென்பதை ஒவ்வோர் அடையாளக் கொடியாற் குறிப்பித்துவந்தனரென்பது,

"கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி"

என்னும் சிலப்பதிகாரத் தொடர்களால் விளங்கும். இனி, பண்டைத் தமிழ்மக்கள் தம் நாட்டினைவிட்டு அந்நிய நாடுகட்குச் சென்று பெரும்பொருள் திரட்டிவந்தார்கள். சுமாத்ரா, ஜாவா, மலேயா முதலிய தீபங்களிலுந் தீபகற்பங்களிலும் முற்காலத்தே நம்மவர் குடியேறி அரசமுறை நாட்டியும் வர்த்தகஞ்செய்தும் வந்த செய்தி மணிமேகலை நூலை யாராய்வார்க்கு நன்கு புலப்படத் தக்கது. அவற்றுள், ஜாவா என்பது 'சாவகநாடு' என இலக்கியத்துக் காணப்படும். அங்கே புண்ணியராஜன் என்பான் நாகபுரி என்னும் நகரினை ராஜதானியாகக் கொண்டு தர்மிஷ்

* இக் கண்ணெழுத்தினைப்பற்றி, 'பழைய குறியீட்டெழுத்துக்கள்' என்ற கட்டுரையில் விளக்கப்பட்டது.

டனாய் ஆண்டன னென்பதும், மணிமேகலை அவ்வரசனிடஞ் சென்றுவந்ததும், பிறவரலாறும் நமக்குத் தெரியவருகின்றன. இவற்றிற்கேற்ப, அந்நாடுகளில் நம் முன்னோர் முற்காலத்தே கட்டிய கோயில்களும் கட்டிடங்களும் அழிந்துகிடப்பவை இன்றும் காணப்படுகின்றன வென்றும், அங்கிருந்த விக்கிரகங்கள், ஐரோப்பாவில் லீடன்நகர்ப் பொருட்காட்சிசாலையிலே இன்றும் உள்ளன என்றுங் கூறுவர்*. "ஏறக்குறைய 2000-வருஷங்கட்கு முன் இந்தியரும் அவர் அரசரும் குடியேறி, மலேய தீபகற்பத்தின் தென்கோடிவரையிலும் ராஜாங்கம் வகித்து வந்தன ரென்பது தற்காலத்தில் அங்கே கிலமாகக் கிடக்கும் பாகான் (Pagan) பட்டினத்தின் இடிபாடுகளை நோக்குவார்க்கு நன்கு விளங்கும்" என்று அப்பிரதேசத்தேயுள்ள ஒரு தமிழ்ப்பத்திராசிரியர் கூறியிருக்கின்றார்.

"மேலும், கீழ்நாடாகிய காம்போதியாவில் வெகு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஹிந்து அரசர்கள் அரசாட்சி செய்து வந்ததைக் காட்டும் சின்னங்களாக, அங்கே வெகு உன்னதமான அரண்மனைகளும், தேவாலயங்களும், ஹிந்து தேவதைகளின் பிரதிமைகளும் இப்போதும் காணப்படுகிறபடியால், அவைகளைப் பார்க்கும் ஐரோப்பிய யாத்திரிகர்கள் மூக்கில் கைவத்துத் திகைக்கிறார்களாம். அவ்வாறே ஜாவா என்ற பஸிபிக்கடல் தீவிலும் ஹிந்துக்களின் நாகரிகம் ஒரு காலத்தில் மேம்பாடுற்றிருந்ததற்கு அறிகுறிகளான அனேக பாழான கட்டிடங்களும் கோயில்களும் காணப்படுகின்றன. இவ்வாறு ஒரு காலத்தில் ஹிந்துக்கள் ஊக்கப்பிரியர்களாய்க் கடல்கடந்து தூரதேசம் போய் ராஜாங்க ஸ்தாபனம் செய்தும், பிற்காலத்தில் தாய்த் தேசமாகிய இந்தியாவில் நேரிட்ட அநேக கேடுகளால், ஜனங்கள் ஊக்கமும் பேரெண்ணங்களுமிழந்து, தூரதேசம் சென்றிருந்த தம்மினத்தாரை ஆதரிக்காமல் கைவிட்டு விடவே, அங்கு மகமதியர்கள் ஆக்கிரமித்து ஆரிய நாகரிகத்தை இருந்த விடந்தெரியாம லழித்து விட்டார்கள்."†

---

* "செந்தமிழ்"—தொகுதி-6, பக்கம்-160.

† ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களது "ஜப்பான் சரித்திரம்" - முகவுரை. ஸ்ரீ O. C. கங்கோலி என்ற சரித்திராசிரியர் எழுதிய 'அகஸ்தியர் வழிபாடும், தீபாந்தர இந்திய சிற்பங்களின் உற்பத்தியும்" என்ற விஷயம்பற்றி எழுதப்பட்ட அரிய கட்டுரையால், ஜாவா, ஸுமாத்ரா முதலிய தீபங்களில், பழங்காலத்தே தென்னாட்டினின்று சென்ற அகஸ்திய வழிபாட்டு முறையும் சிற்பவேலைத் திறங்களும் மிகத்தெளிவாக விளங்குவன—(Quarterly Journal of the Mythic Society Vol. xvii, pp. 170—191)

இவ்வாறு, பண்டைக்காலத்தே, தமிழ்மக்கள் ஊக்கமும் உழைப்பும் பலவழிகளிலுஞ் சென்று பயனளித்து வந்தன. காலகதி யாரையும் விடாதாகலின், அவரது பழைய உந்நதநிலை பிற்காலத்தே தாழ்ந்துவிட லாயிற்று. நம்நாட்டுத் தொழில் வியாபாரங்கள் நசித்துப் போனதற்குப் பல காரணங்க ளுண்டாயினும், முக்கியமான தொன்றுவது :—தேசாபிவிர்த்திக்கு இன்றியமையாத தொழிற்றுறைகளை, அவ்வளவு கூரிய அறிவும் ஆற்றலுமில்லாச் சிலவகுப்பினர்க் குரியவாக ஒழித்தமையால், அப்பழைய தொழிற்றுறைகள் காலத்துக் கேற்ற திருத்தங்களும் பெருமையும் பெற வியலாது, பழைய நிலைமையிலே நிற்பனவாயின—என்று மகா நிபுணரும் தேசாபிமானியுமான பரோடா மகாராஜா அவர்கள் சமீபத்தே அப்பிராயங் கூறினர். இக்கருத்து உண்மையிற்றிட்ப நுட்பமுடையதே யாம். பண்டுமுதலே நல்லறிஞரெல்லாம் தொழிற்றுறைகளிலே கவலை செலுத்தி வந்திருப்பராயின், ஏனைய துறைகளில் அவரால் உண்டான பெருமைகள் கைத்தொழிற்கண்ணும் அமைந்திருக்குமென்பதில் ஐயமில்லை. முன்னாளில் நல்லறிஞர்கள் யந்திர தந்திரங்களிலே தம் கவலையைச் செலுத்தி வந்ததாலன்றோ, எத்தனையோ அருமையான யந்திரங்களும் ராஜதந்திரங்களும் பழைய சங்க நூல்களிலும் பிறவற்றிலும் காணப்படுகின்றன. "நிறைக்குறி னிறைத்துப் போக்குறிற் போக்கும், பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" என்னும் யந்திரவாவியும், சிலப்பதிகாரத்து அடைக்கலக் காதையிற் கூறப்படும்,.

"வளைவிற் பொறியும், கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்தெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பு முழுவிரற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்"—என்று

அக்காலத் துபயோகப்பட்ட யந்திரவாயுதங்களின் வகைகளும் பூர்விகரது யந்திரஞ்செய்யுந் திறமையை நன்கு காட்டுவனவாகும். இவ் யந்திரங்களின் பொருள்கள் அவ்வடிகளின் உரையிற் கண்டு களிக்கத் தக்கன. இவ்வாறே, முற்காலத்துவழங்கிய யந்திர ஆயுத விசேஷங்கள், சிந்தாமணி நாமகளிலம்பகம் 72–75ம்

பாடல்களிலும் மிகுதியாகக் காணப்படும். இவ்வாறு வழங்கிய வைகளெல்லாம், விருத்திமுகங் காட்டாமற்போயினும், இறந்து போகாமலேனும் நம் காலத்தில் இருத்தலாகாவோ? நாம் வரவர அறிவாற்றல்கள் குறைந்தவராகி நம் முன்னோர்கள் வைத்த பெருமையைக் காப்பாற்றாது ஒழிந்ததனால் நம் அருமைத் தேசம் சிறுமைப்பட்டது. ஆயினும், "வறுமை" என்பது, ஒரு ஜனசமூகத்தை நெடுங்காலம் கண்ணை மூடிக்கொண்டு தூங்கும்படி விடாதன்றோ! கைத்தொழில் வியாபாரங்களால் தமக்கு நேர்ந் துள்ள குறைகளையும், அதனால் தம் வறுமை அதிகப்பட்டுத் தேசம் க்ஷீணநிலையடைதலையும் நம்மவரெல்லாம் அறியத் தொடங்கி விட்டார்கள். ஆதலால், உயர் வகுப்பாருள்பட யாவரும் தொழிற்றுறை வியாபாரத்துறைகளில் விருப்பத்துடன் புகுங் காலமும் நெருங்குகின்றதென்னலாம். இங்ஙனமாயின், இந்தியாவின் வருங்காலம் பழமைபோலவே சீருஞ் சிறப்பும் பெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை. முற்காலத்தே விளங்கிய தெய்வப்புலவராகிய திருவள்ளுவரினும் சீரிய பெரியார் வேறு உளரோ? அப்புலவர்பெருமானே தம் ஜீவனோபாயத்துக்காக மேற்கொண்ட விருத்தி நெய்தற்றொழில் என்றால், கைத்தொழிலைப் பற்றி நம்முன்னோர்கொண்டிருந்த எண்ணம் எவ்வளவு உயர்ந்ததாகும்? "செய்யுந்தொழிலெல்லாஞ்சேர எடுத்துரைக்கின், நெய்யுந் தொழிற்கு நிகராகா" என்பதே அத்தெய்வப்புலவர் திருவுள்ளமாம். அவர் நெய்தற்றொழில் செய்துவந்தவரென்பது, "இழைநக்கி நூல்நெருடும் ஏழையறிவேனே, குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து"—என வழங்கும் அவர் பாடற் பகுதியால் அறிக. இப் புலவர்பெருமானைப் போலவே, பண்டைக் காலத்தே, கைத்தொழில் வியாபாரப்பெருமைகளை நன்குணர்ந்து அவற்றையே தம் செய்தொழிலாகக் கொண்டு வாழ்ந்த நல்லிசைப்புலவர்கள் பலர் உளர். மணிமேகலையாசிரியரான சீத்தலைச் சாத்தனார் நெல்லுப் புல்லு வரகு முதலிய தானியங்களை விற்றுவந்த கூலவியாபாரியாவர். அறுவை வாணிகன் இளவேட்டனார் என்னும் மற்றொரு புலவர் ஆடை வியாபாரி (அறுவை-துணி). உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்பார் வைத்தியர். மதுரைப் பண்டவாணிகன் இளந்தனார் என்பவர் பலசரக்கு வியாபாரஞ் செய்தவர். மதுரை வெண்ணாகனார் என்பவர் பொன்செய் கொல்லராவர். இவரன்றி மதுரைப் பெருங் கொல்லனார், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தங் கொற்றனார் முதலிய புலவர்களின் பெயர்களும் மேற்கூறியவிஷயத்தைத்தெளிவாக்கும். இவ்வாறு, தாங்கொண்ட தொழில்களாற் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினர் முன்னையோரெனின், கைத்தொழிலைப்

பற்றிய அன்னோர்மதிப்பு இத்தகைத்தென்பது விளங்குமன்றோ. இடைக்காலத்தில், அத் தொழிற்பெருமையை அறிஞர்கள் அறியாது கைநெழ விட்டமையாலேயே, நம் தேசம் உண்டு உடுப்பதற்கும் கண்டுகளிப்பதற்கும் பெருக்கி மெழுகுவதற்கும் ஊர்ந்து உலாவுதற்கும் அந்நியச் செயற்கைப் பொருள்களையே எதிர்பார்க்கும்படி நேர்ந்துவிட்டது. இவ்வாறு அந்நியநாட்டுக் கைத்தொழில் வியாபாரிகட்கு நாம் அடிமைப்பட்டிருப்பதை நிவர்த்தித்து, உலகத்து நாகரிகமக்கள் முன்பு நம்மைக் காட்டிக்கொள்ள வேண்டுமாயின், எல்லா மேல்வகுப்பாரும் நல்லறிஞரும் நாகரிகம் படைத்த செல்வர்களும் தேசவிருத்திக்கு இன்றியமையாத தொழிற்றுறைகளிற் புகுவது ஆவசியகமாகும். இத்தேசத்துள்ள எல்லா மக்களும் தமக்குள்ள அற்பவேற்றுமைகளை அறவேயொழித்து, "தேச நன்மை" என்னும் பொது நோக்கத்துக்காகத் தம் சக்திகளையெல்லாம் ஒருங்குதிரட்டி ஒற்றுமையுடன் உழைத்து வந்தால், நினைத்த எண்ணங்கள் யாவும் எளிதின் முற்றுப் பெறுதல் திண்ணம். உண்மையான சுதேசிய உணர்ச்சி நம் நாட்டிலுண்டான சில வஷங்களுள், நம் தேசத்தார் அடைந்திருக்கும் எண்ணிறந்த நன்மைகள் இதற்குத் தக்க சான்றாம்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்பவை பொய்யாமொழிகளன்றோ. "எல்லாம் பொருளிற் பிறந்து விடும்' என்பது முதுமொழியாதலின், அப் பொருளிலார்க்கு இவ்வுலக சுகமில்லை யென்பது திண்ணம். உலக சுகமேயன்றி மறுமையின்பமுங்கூட, அப்பொருளில்லையேல் எளிதிற்பெற இயலாதென்பது மேலோர் திருவுள்ளமாகும்.

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு"

என, மறுமைக்குரிய அருள்வளர்ச்சிக்கு இம்மைக்குரிய பொருளைக் காரணமாகக் கூறுதல் தெரியலாம். இது பற்றியே, "ஆரா யிற்றானே அறம்பொருளின்பமென்று, ஆரா ரிவற்றி னிடையதனை யெய்துவார், சீரா ரிருதலையு மெய்துவர்" எனவும், "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்" எனவும் திருமொழிகள்

பிறந்தன. உலகத்துச் செல்வப்பெருக்கிற் சிறந்த தேசங்கள் "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்றுண்டாகச் செய்வான் வினை" என்றபடி, எந்த அருமையான காரியத்தையும் சாதிக்க வல்லன. இதற்கு மேனாடுகளே போதிய சான்றாகும். பொருள் வருவாயின்றி ஏழைமையுற்ற நாடோ எத்தனை ஞானவலியைப் பழங்காலமுதலே பெற்றிருப்பினும், இம்மையின்பத்துள்ள பற்று, அநுபவித்துக் கழித்தற்கு இடமின்றாதலால் அஞ் ஞானம்,பெரும்பாலும் போலியாகி அஞ்ஞானமாகவே முடிதலும் கூடும். ஆகவே உலகவாழ்வுக்கு இன்றியமையாத பொருணிலையின் தத்துவத்தைச் செவ்வனே உணர்ந்துபோற்றுதல் ஒவ்வொரு தேசத்தாருடைய கடனுமாம். அதிலும் இந்தியா தேசத்தின் நிலைமைக்கு அது அத்தியாவசியம் என்று கூறவும் வேண்டுமோ! ஆதலால், நம்மவரொவ்வொருவரும் கைத்தொழில் வியாபார முயற்சியைத் தத்தம் அறிவாற்றல்களுக்கு ஏற்றவளவு கொண்டு செலுத்துதல் தேசத்தின் பெருநன்மைக்கு முக்கிய காரணமாகும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்னும் அருமைத் திருவாக்குப்படி, நம்முடைய எண்ணங்களும் கருமங்களும் மேன்மையுடையன வாகுக. நம் முயற்சி ஒருகால் தவறினும், அது பயனளித்தற் குரியதேயாகும். கைத்தொழில் வியாபார முதலிய துறைகளில் நிகரற்ற அறிவும் அநுபவமும் வாய்ந்து, நமக்கு அநுகூலர்களாயுள்ள அந்நியரிடம் மதிப்பும் அபிமானமும் காட்டி அவரை யொட்டியும் நம் பெருமைகளை முற்படுத்த முயலவேண்டும். உலகியலறியாத பலர் கருத்தில் அந்நியநாட்டா ரெல்லாம் மிலேச்சர் என்னும் எண்ணம் சில காலமாக இருந்ததாயினும், இப்போது, அவர்கள் உலகியல் விஷயங்களில் பெரிதும் உயர்ந்தவரென்றும், அன்னாரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளற்குரியவை எத்தனையோ உள்ளனவென்றும் நம்மவர் மனத்தில் உதித்துவருகின்றன.

வானசாஸ்திரத்தில் உலகத்தே ஒப்புயர்வற்று விளங்கியவரும், இற்றைக்கு 2000-வருஷங்களுக்கு முற்பட்டவருமான கர்க்காசாரியர் மேல்நாட்டு அறிஞரைப்பற்றிக் கூறுவதாவது:— "யவனர்கள் மிலேச்சர்களே; ஆனால் 'அவர்கட்குள்ளே இந்த சாஸ்திரம் (வான சாஸ்திரம்) அநுபவசித்தமாக நிலைபெற்றுள்ளது: ஆதலால் பிராமணஜோதிஷ்கரிலும் அவர்கள்

ருஷிகளாக மிருதியும் மதிக்கப்படுகிறார்கள்" என்பது. இதனால், முன்காலத்தில் அறிவு அநுபவமிக்க மேல்நாட்டார்களை ஆரிய மக்கள் எவ்வளவு மேலாக மாவித்திருக்கிறார்க ளென்பது விளங்கும். இத்தகைய விரிந்த சிந்தனையும் தேசாபிமானமும் கொண்டு, "உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி, இடைக்கண் முரிந்தார் பலர்" என்றவாறில்லாமல், தளராத உறுதியுடன் நின்று நல்லறிஞர்கள் நம்மவர்க்கு வழிகாட்ட முயல்வராயின், யாவரும் அவ்வழியையே பின்பற்றி நல்வாழ்வு பெறுவர் என்பது திண்ணம். அப்போது, பரதக்ஷேத்திரம், "உழவு தொழிலே வரைவு வாணிபம் வித்யா சிற்ப" மென்னும் ஷட்கர்மங்களும் நிரம்பிக் "கர்ம பூமி" என்னும் பழம்பெயரோடு நிலைபெற்று விளங்கத் தடையு மில்லை. ஆதலால், அறிஞர்காள்! தென்னாட்டு ஞானபரிபூர்ணரான பெரியார் திருவாய்மொழியால் யான் கூறிமுடிப்பதாவது:—

**"வம்மின் புலவீர்! நும் மெய்வருத்திக் கைசெய்து உய்ம்மினோ"**
**(—திருவாய்மொழி)**

---

# 11. வீரத் தாய்மார்[2]

—:o:—

நம் புராதன நாடான பரதகண்டம், முற்காலத்தே தனதானி யாதி சம்பத்துக்களுக்கு நிலைக்களமாயிருந்தது போலவே, வீர லக்ஷ்மி மகிழ்ந்து விளையாடற்குரிய களமாகவும் விளங்கியதென்ப தற்கு எண்ணிறந்த உதாரணங்களுண்டு. இச்செய்தி, இராமா யணம் பாரதாதி இதிகாசங்களாலும் பிறவற்றாலும் எளிதினுணரப் படும். இவ்வாறு வீரச்செயல்கட்குப் பேர்போன பூமியாக நம் தேசம் விளங்கியதற்கு அநேக காரணங்கள் கூறலாம். ஆயினும், அவையெல்லாவற்றிலுஞ் சிறந்த காரணமாகக் கூறத்தக்கது, அந்நாளில் தோன்றிய தாய்மாரின் பெருமையேயாகும். தாய்மார் மட்டும் அறிவும் ஆற்றலுமுடையராய்த் தம்மக்களை நல்வழிகளிற் கவலையோடு பழக்கி வருவராயின் அம் மக்கட்கூட்டம் உலகத்தே

[1] Civilisation in Ancient India, Part II p. 120.

[2] செந்தமிழ், தொ-5, ப-10; The Tamilian Antiquary, Vol viii.

பெருமையும் புகழும் பெற்றுவிளங்கத் தடையென்னை? மூலைப்பாலோடு தீரமோ வீரமோ தியாகமோ கலந்து ஊட்டப்படுமாயின் அவை என்றும் அழியாது உயர்வுமுறுதியும் பெறுமென்பது திண்ணம் "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பவை முதுமொழிகளன்றோ. அத்தகைய தாய்மார்களையுடைய தேசங்களே உலகத்தார்கண் முன்னே உயர்ந்துதோன்றுவன. உதாரணமாக — ஜப்பான் தேசத்தை எடுத்துக்கொள்வோம். சமீபத்தில் நடந்த "ரஷ்ய—ஜப்பானியப்" பெரும்போரிலே ஜப்பானியர் உலகம் வியந்து புகழத்தக்க வெற்றியை அடைந்த செய்தி நாம் அறியாததன்று. தேசவளவிலும் ஜனத்தொகையிலும் தம்மினும் மிகப் பெரிய இரஷியருடன் எதிர்த்து ஜப்பானியர் வெற்றிபெற்றதற்கு, வேறு காரணங்களுமுண்டேனும், முக்கியமானது, அவர்கள் தாய்தந்தையரால் சூழவிப்பருவ முதலே பெற்று வந்த வீரப்பயிற்சியென்றே தெரிகின்றது. ஜப்பானியச்சிறுவன் கொஞ்சிப் பேசும்படி பெற்றவளால் முதலிற் கற்பிக்கப்படும் வார்த்தைகள்—தேசாபிமானமும் தியாகமுமாகும். அவனது விளையாட்டுப்பொருள்கள் யுத்தாயுதங்களின் போலிகள். அவனுக்குப்போதிக்கப்படும் முதற்பாடங்கள்-அவ்வாயுதங்களை உபயோகிக்கும் முறையும், தீரமும், தன் மறுப்பும், பிறவீரக் குணங்களுமே. அவன் சிறுவயதிற் கற்றுக்கொண்டவை, தன்னாட்டின் க்ஷேமத்தின் பொருட்டு ஆன்மபரித்தியாகஞ் செய்வதே பெருங்கீர்த்தி யென்பதும், மானங்கெடவரின் மரணம் உத்தமமென்பதுமே. இத்தகைய பயிற்சி சிறுபருவமுதலே நிகழ்ந்துவருமாயின், அந்த ஜனசமுகத்தை வெல்லவல்லவர் உலகில் யாவர்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதன்றோ. இவ்வுண்மையை அறிந்துநடத்தி ஜப்பானாட்டின் சரித்திரத்தை உயர்வுபெற வைத்தவர், முக்கியமாக, அந்நாட்டுத் தாய்மார்களென்றே சொல்லவேண்டும். அத் தாயர் தம்மக்களை ஒருங்கு கூட்டித் தைரியங்கூறிப் போர்க்கனுப்பி வந்ததும், யுத்தகளத்தில் சிறிதுக்தளர்வின்றிப் போர்புரியவும், சமயம் நேரும்போது நாட்டின் பொருட்டு மகிழ்ச்சியுடன் உயிரைப் பரித்தியாகம்செய்யவும் கடிதமூலம் எழுதித் தம்மக்களை ஊக்கப்படுத்தி வந்ததும் நாம் படித்துங் கேட்டு முள்ளனவேயாம். இன்னும் யுத்தகாலத்தில் ஜப்பானியத் தாய்மார்கள் காட்டிய தேசாபிமான வீரச் செயல்களை, அப்போது வெளிவந்த இரஷ்யோ-ஜப்பானிஸ்வார் என்னும் புத்தகத் தொகுதிகளிற் பரக்கக் காணலாம். இவ்வரலாறுகள் இக்காலத்தவரான நமக்கு அருமையுடையனவாகத் தோன்றினும், நமது பழைய சரிதங்களை ஆராயின், நம் நாட்டிலும் அத்தகைய வீரத்தாயரும் வீரமக்களும் மிகுதி

யாக இருந்தனர் என்பது தெரியலாம். முற்கூறிய உண்மைகளை யெல்லாம் முற்றும் அறிந்து நடத்தவல்ல தாய்மார்களாகவே பண்டை மகளிர் இந்நாட்டில் விளங்கினர் என்பதற்கு வடநூல் களிலும் தமிழ் நூல்களிலும் பற்பல மேற்கோள்கள் உள்ளன. அவற்றில் வடமொழியினுள்ள விசேடங்கள் மிகுதியாக அறிஞர் வாய்க் கேட்கக்கூடுமாதலின், தென்மொழியில் அன்னோரைப் பற்றி அமைந்த விசேடங்களை மட்டும் நம்மவர் அறிய இங்கே கூறுவேன்.

தமிழ்மொழியிலுள்ள புராதன நூல்களாகிய புறநானூறு முதலியவற்றில் வீரச்சுவையே ஏனைய சுவைகளினும் மிகுதியாகக் காணப்படுவன. அவ்வீரம் பற்றி நிகழ்ந்த அற்புதச் செயல்களை யெல்லாம் கூறுதற்கு இஃது இடமன்று. ஆயினும், அக்காலத்தே தாய்மார்களாற் சிறந்த வீரர்கள் எவ்வாறு சிருட்டிக்கப்பட்டார் கள் என்பது மட்டில் கவனிக்கத்தக்கது. இவ்வீரத் தாயர்க்கு இருந்தனவாக நூல்களிற் காணப்படும் குணவிசேடங்களை நோக்கும்போது, உலக சரித்திரத்திலேயே இத்தகைய பெருமை காண்டற்கரிது என்று தோன்றுமென்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் முற்காலமுதலே இவ்வீரப் பெண்டிர்களின் பெருமை யைப் புகழ்ந்துவந்த வழக்கமும் இருந்தது. புறப்பொருட்டுறை களில் இது "மூதின்முல்லை" என்று கூறப்படும். அஃதாவது,

" அடல்வே லாடவர்க் கன்றியு மவ்வில்
மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று"

"கொல்லும் வேலினையுடைய வீரர்க்கேயன்றி அவ்வீரக்குடி யில் மடப்பத்தினையுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித் தது" என்பது இதன் பொருள். இவ்வீரப் பெண்டிரின் செய்கைக ளாகத் தமிழ் நூல்களிற் கண்ட பாடல்கள் முழுதும் நல்லிசைப் புலமை வாய்ந்த பெண்மணிகளாலேயே பாடப்பட்டிருத்தலும் குறிப்பிடற்பாலது,—பொன் முடியார் என்னும் பெண் புலவர், தாய் தந்தை அரசன் மகன் முதலியவர்க்குரிய கடமைகள் இன்ன வென்பதை அடியில் வருமாறு கூறுகின்றார் :—

" ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'' (புறம்-312)

இப்பாட்டால் அக்காலத்து வீரத் தாயரது மனநிலை இத் தகையதென்பது தெளியப்படும். "என்றலைக்கடனே" என்பத ஞல், பொன்முடியார் தம்மையே தாயாகக் கூறிக்கொள்ளுதல் காணலாம். பொருள் வெளிப்படை. இது போலவே, தகடூர் யாத்திரை என்னும் பழைய நூலிலுள்ள அரிய பாட்டொன்று வருமாறு :—

"தருமமும் ஈதேயாந் தானமும் ஈதாம்
கருமமும் காணுங்கால் ஈதாம்—செருமுனையிற்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப என்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்" (புறத்திரட்டு)

இப்பாட்டில், தாயொருத்தி 'தன்மகன் யுத்தகளத்தே சாகப் பெற்ருல், அதுவே தர்மமும் தானமும் கர்மமுமாகும்' என்றுகூறிய அற்புதச் செய்தி குறிக்கப்பட்டுள்ளது. தன் அருமைமகன் போரில் மடிதல், நாட்டின் மேம்பாடு கருதியதேயன்றித் தன்னலம் கருதிய தன்ருதலால், அச்செயலினுஞ் சிறந்த தர்மமும் தியாகமும் கர்ம மும் பிறவில்லை என்பது கருத்து. எவ்வளவு உயர்வும் பெருமை யும் கொண்ட சிந்தை முற்காலத்துப் பெண்டிர்க்கு இருந்த தென்பது இப் பாட்டை நோக்குவார்க்கு விளங்கும். இனி, மற்ருெரு வீரத் தாயை பற்றிப் பூங்கணுத்திரை என்னும் பெண் பாற் புலவர் பின்வருமாறு புகழ்கின்ருர்.

"மீனுண் கொக்கின் றூவி யன்ன
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே" (புறம்-277)

இதன் கருத்து :—கொக்கின் இறகுபோல நரைத்த கூந்தலை யுடைய முதியவள், தன் புதல்வன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் மடிந்தான்—என்னுஞ் செய்தி கேட்டு, அவனைப் பெற்றபோது தானடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியை அடைந்தாள்—என்பது. இதனுல், அக்காலத்தே, வீரத்தாய ரான பெண்டிர், தாம் புதல்வரைப் பெறுவது ஓர் அற்புத வீரச் செயலையேனும் அவரிடம் கண்டு மகிழ்தற்கே என்று கருதினவ ரென்பதும், அவர் வீரச்சாவில் அப்பெண்டிர்க்கு மனமகிழ்ச்சியே

யன்றித் துக்கமில்லை யென்பதும் நன்கு விளங்கும். இப்பாட்டில், தாய் கண்ட அதிசய வீரச் செயலாவது தன் சிறுவன் ஒரு பெருங் களிற்றைக் குத்திக் கொன்றதாகும். "வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்" என்பதனால், நெடுங்காலத்திற்குப் பின் ஒரே புத்திரனைப் பெற்றவள் அவள் என்பது பெறப்படும். "தன் புத்திரன் மூடனாகவே பூர்ணாயுளுடன் இருந்தாற்போதும்" என்று கருதும் இக்காலத்து மடவாரியல்பும் மேற்குறித்த வீரத்தாயர் இயல்பும் எவ்வளவு விரோதங்கொண்டுள்ளன! இனி, மற்றொரு பாடல் பெரிதும் உருக்கங்காட்டி நிற்கின்றது. வீரத்தாய் ஒருத்தி தன் ஏகபுத்திரனையே போர்க்கு விடுக்கின்ற மாட்சியை, ஒக்கூர்மாசாத்தியார் என்னும் பெண் புலவர் வியந்தும் இரங்கியும் அடியில் வருமாறு கூறுகின்றார்.

"கெடுக சிந்தை; கடிதிவள் துணிவே!
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கிவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே;
நெருநல் உற்ற செருவிற்கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (புறம் 279)

இதன் கருத்து—(ஒரு தாய்) முன்பு அவள் தகப்பன் யுத்த களத்தில் யானையையெறிந்து இறந்துபோயிருப்பவும் சமீபத்தில் நடந்த போரில் தன் கணவன் எதிரிகளைக் கொன்று தானும் மடிந்து ஒழியவும் இவற்றிற்காக மனத்தளர்ச்சியின்றி, எதிரிகளின் யுத்தப் பறை ஒலிப்பதைக் கேட்டு மகிழ்ச்சி மிகுந்து, தன் சிறுவனைத் தழுவி அவற்கு ஆடையணிவித்து அவன் குடுமியை எண்ணெயிட்டுச் சீவி முடித்து, தான் ஒரே புத்திரனை உடையளாயிருந்தும் சிறிதும் மனங் கவலாது, போர்க்களம் நோக்கிச் செல்க என்று அவனை அனுப்புகின்றாள். இச்செய்கையைக் கண்ட என் மனம் கெடுவதாக. இவள் துணிவு கடுமையானது. "பழைய வீரக்குடியிற் பிறந்தவளென்பது இவட்கே தகும்"—என்பது. என்ன வீரம்! இன்னினும் ஆச்சரியகரமான செய்தி கேட்டதுண்டோ. இக் கருத்துக்களையே அமைத்து வெண்பாமாலையுடையாரும்,

[1] "வந்த படைநோனுள் வாயின் மூலைபறித்து
வெந்திற லெஃக மிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் ருன்காட்டி மூதில் மடவாள்
புதல்வனைச் செல்கென்றுள் போர்க்கு"

[2] "கன்னின்று னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் பின்னேடி
எய்போற் கிடந்தானென் ஏறு"

என்று கூறுதல் காணலாம். இனி, மற்றொரு பாடல், மேற்கூறிய தினும் மிக்க வீரத்தன்மையைக் குறிப்பதென்னலாம். காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் நல்லிசைப் பெண் புலவர் பாடியது இது :

" நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (புறம்-உஎஅ)

இதன் கருத்து—வயது முதிர்ந்த ஒரு தாய் தன் சிறுவன் யுத்தத்தில் வலியழிந்து புறங்கொடுத்தோடினன் என்று பலர் சொல்லக் கேட்டு, 'அவ்வாறு அவன் போரிற் புறங்கொடுத் தோடினவனாயின் அவன் பாலுண்டு வளர்ந்ததற்குக் காரணமா யிருந்த என் முலைகளை அறுத்திடுவேன்' என்று வாளைக் கையிற்

[1] இதன் பொருள்—தங்கள்மேல் எதிர்த்துவந்த சேனையைக் கண்டு பொருதவளாய், பிள்ளை வாயிலுள்ள முலையைவாங்கி, கொடிய வலிதங்கிய வேலாயுதத்தை முன்பு பகைவரைக் குத்தி வளைந்த வளைவுகளை நீக்கி, தன் முன்னோர்களது நடுகல்லைத் தான் அவனுக்குக் காட்டி, பழைய மறக்குடிப் பெண்ணானவள், தன் மகனைப் போர்க்குச் செல்க என்றாள் என்பது.

[2] இதன் பொருள்—கல்லிலே பொருந்தி நின்றான் என் தகப்பன்; என் கணவன் போர்க்களத்திலே பட்டான்; பகைவர்முன்பு நின்று எதிர்த்து யுத்தத்திலே விழுந்தார் என் தமையன்மார்; தன்சேனை அழியவும் தான் அழியாமல் பின்னே நின்று, தன்கை சென்று அம்பைச்செலுத்தப் பகையரசன் மேலே பாய்ந்து, பின் முள்ளம் பன்றிபோலப் பட்டுக்கிடந்தான் என்னுடைய வீரப்புதல்வன்— என்பது.

கொண்டு போர்க்களம் புகுந்து, வீழ்ந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டித் தேடிவருபவள், ஆங்கு இருதுண்டமாகக் கிடந்த தன் மகனுடலைக் கண்டு, அவனைப் பெற்றபோதடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சியடைந்தாள்—என்பது. இப்பாட்டிற் கூறப்பட்டதை நோக்கும்போது, இத்தகைய வீரத் தாய்மார் உலகத்திலேயே அரியர் என்று தோன்றுமென்பதில் ஐயமில்லை. இவ்வாறே ஔவையாரும்,

"கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வெந்துவாய் மடித்து வேலிலைப் பெயரித்
தோறுகைத் தெழுதருந் தாரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்படை விலங்கி
இடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே" (புறம்-உகூ௯)

இப்பாட்டிலே, பாசறையில் எதிர்த்த பகைவர் சேனையின் ஊடே வீழ்ந்து அவரை வெட்டிக்கொண்டே சென்று, அச்சேனை நடுவில் தானும் வெட்டுண்டு இருதுண்டமாகக் கிடந்த தன் புத்திரனது மாட்சியைக் கண்டு அகங்குளிர்தலால், அவனைப் பெற்ற வயது முதிர்ந்த தாய்க்கு முலையூறிப் பால் சுரந்தது என அழகுபெறக் கூறியிருத்தல் படித்து மகிழத்தக்கது. இது போலப் புறத்திரட்டிலே தகடூர் யாத்திரைப் பாடல்களாகக் கண்டவை, தம் வீரப் புதல்வர் செயலைக் கண்டு தாயர் கூறியனவாகவே அமைக்தொளிர்கின்றன.

"எற்கண் டறிகோ எற்கண் டறிகோ
என்மக னுதல் எற்கண் டறிகோ
கண்ணே கணைமூழ் கினவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
வாயே, பொருநனைப் பகழி மூழ்கலிற் புலால்வழிந்து
ஆவ நாழிகை அம்புசெறித் தற்றே
நெஞ்சே வென்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பல்சர நிறைத்தன அதனால்
அலிழ்பூ அப்பணைக் கிடந்தோன்
கவிழ்பூங் கழற்றின் காய்போன் றனனே"* (புறத்திரட்டு)

*'அப்பணைக் கிடந்த மைந்தன்...பொலங்கழற் காயு மொத்தான்' என்றார் திருத்தக்கதேவரும் (சீவகசிந். 2287.)

"இத்தகடுர் யாத்திரை, துறக்கத்துப் பெயர்க்த நெடுங்கோளன் தாய் இறந்துபட்ட தலைப்பெயலிலே" என்பர் நச்சினார்க்கினியர் (தொல். புறத்திணையியல், சூத்-உச).

"குரங்கு மேனித் திரங்குமுகச் செதுமுலை
நரைமூ தாட்டி வினவுதி யாயின்
நும்மகன் கொல்லோ அறியேன் இம்மகன்
கொற்ற வெண்குடை மன்னர்க்கு உதவிச்
செஞ்சோற் றருங்கடன் வெஞ்சமத் தாற்றிக்
களிறுதலை மடுத்து மாகா வீட்டிப்
பிளிறுகுரன் முரச மெத்தணை யாகப்
பருந்தின் செறுநிழல் பந்த ராக
அறிபிணைக் குன்றே வேலி யாக
கழுதணைக் கிடந்த காளை
நும்மகன் கொல்லோ யானறி யேனே" (புறத்திரட்டு)

"வாழிய துடிய! வாழிய துடிய!
என்மகன், ஆர்த்தெறிந் தனனோ எறிந்தார்த் தனனோ?
ஆர்த்து மெறியான் எறிந்து மமரான்
கையது வேலே காலது கழலே
மெய்யது சினனே மேற்சென் றனனே
வேந்த ரெல்லாந் தன்னோக் கினரே
நோக்கி நோக்கா முறுவலன் றுக்கித்
தமீஇந் தாமெனத் தன்னுமை
கழித்தா னென்வாள் வீழ்ந்தன களிறே" (ஷை)

இனி, காவற்பெண்டு என்னும் பெண்புலவரை நோக்கி ஒருவன் 'நும் மகன் யாண்டுளான்' என்று கேட்ப, அதற்கு அவர் கூறிய அழகிய பாடலாகப் புறநானூற்றிற் காணப்படுவது பின் வருவது:—

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" (86)

இதன் பொருள்—சிறிய வீட்டிலே நல்ல தூணைப் பிடித்துக் கொண்டு, உன்மகன் எங்குள்ளான் என்று கேட்கின்றாய்; என்னுடைய மகன் எவ்விடத்திருப்பினும் யான் அறியேன். புலி தங்கிப்போன மலைக்குகையே போல அவனைப்பெற்ற வயிறோ இது; அவன் யுத்த களத்திலே தோன்றுவான்; ஆண்டுச்சென்று காண்பாயாக—என்பது. இதனால், இப்பாட்டுப் பாடியவர் மறக்குடிப் பெண்டிராதல் வேண்டுமென்பதும், புலியொத்த போர்வீரனை மகனாக உடையவர் என்பதும் அத்தகைய வீரமகனைப் போர்க்களத்தே போக்கியபின் அவனைப்பெற்ற தம் வயிற்றைப் புலி கிடந்துபோன கன்முழையாகக் கருதினாரென்பதும் விளங்கும். இது பாடியவர் மனநிலை எவ்வளவு அருமைபெருமை வாய்ந்துளது! வீரமக்களைப் பெறுவதில், பழைய காலத்துப் பெண்டிர் அடையும் மகிழ்ச்சியும் பெருமிதமும் இத்தன்மையன என்பது இதனால் நன்கு விளங்கும்.

இனி தம் வீரமக்கள் போர்க்குச் சென்று அங்கே சிறிது மானத்தாழ்வான செயலைச் செய்ததாகத் தெரியவரின் அவர் தாயர் அம்மக்களை மிகச்சினந்து வெறுப்பர். ஒரு தாய், தன் மகன், பகைக்களிற்றின் மேலே வேலையெறிந்து, அவ்வேலைத் திரும்பப்பெறும் ஆற்றலில்லாது வெறுங்கையனாய்ப் புறங்கொடுத்து மீண்டது கண்டு,

> "வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
> நோவ லத்தை நின்வயின் றனனே
> பொருந்தா மன்னர் அருஞ்சம முருக்கி
> அக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
> புகர்முகக் குஞ்சர மெறிந்த எஃகம்
> அதன்முகத் தொழிய நீபோந் தனையே
> அதனால், எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
> கல்லாக் காளையை ஈன்ற வயிறே"

(புறத்திரட்டு—தொல். பொரு. 71. உரை)

என்றுகூறி மிகவும் வெறுத்தனள். இப்பாட்டின் கருத்தாவது—பகையரசரைப் போரில் வென்று அக்களத்திலே தானும் இறந்து படாமல், யானைமுகத்தெறிந்த தன் வேலை அதனோடே போகவிட்டு நீ புறங்கொடுத்துத் திரும்பினை; இதனால் எமது முன்னோர் செய்யாத பெரும்பழியை விளைத்த மூடனாகிய உன்னைப் பெற்ற என் வயிற்றை அறுப்பேன், அறுப்பேன்—என்பது. இவ்வாறு இகழும் வீரத்தாயர் கூற்றுத் தொல்காப்பியத்தில் "தாய்தப வந்ததலைப்பெயனிலை" என்று கூறப்பட்டுள்ளது. அஃதாவது

போர்க்களத்துப் பொருதுமாயும் சிறப்பிற்றீர்ந்து தன்மகன் புறங்கொடுத்தானாக அதுகேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்று மகனைக்கூடும் கூட்டம்" என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு தமிழ்நாட்டு வீரப்பெண்டிர் செயல் பழங்காலத்தே புகழ்ச்சிக்குரியதாக இருந்ததாலன்றோ, அவர்களைப்பற்றிப் பழைய இலக்கண நூல்களும் விதிகூறுமுகத்தாற் பெருமை கூறத் தலைப்பட்டன. போர்க்களத்தே தங்குடிக்குச் சிறிது மானங்கெட வரும்போதும் அக்காலத்துப் பெண்டிரியல்பு இத்தன்மையதாயின், வேறு கெட்டவழியால் தம் குடிக்குவரும் இழிவை அவர்கள் எவ்வாறு கருதியவராதல் வேண்டும்? சோழவரசன் ஒருவனது ஏகபுத்திரனாகிய உதயகுமரன் என்பான், மணிமேகலைமேல் வைத்த கழிபெருங் காமத்தனாகி, அவள் தனியே சோலையிலிருந்தபோது அவளிடம் செல்ல அங்கே ஒரு விஞ்சையனால் அவ்வரசகுமரன் கொலையுண்டனன். இச்செய்தியைக் கேள்வியுற்ற சோழன், அம்மகன் தன் பெருங்குடிக்கு ஒரு வழித்தோன்றலாயிருப்பவும், அவனது இழிவான செய்கையை வெறுத்து அவன் சாவைப் பொருட்படுத்தாது,

"மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
ஈங்கிவன் றன்னையு மீமத் தேற்றி"

கொளுத்திவிடுக" என்று ஆணையிட்டனன் என்று சொல்லப்படுகின்றது. அன்றியும், அச்சோழன் மனைவிக்கு, அவள் மகனது சாவை ஒருத்தி கூறும்போது,

"தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்று
என்னெனப் படுமோ நின்மக னிறந்தது
மன்பதை காக்கும் மன்னவன் தன்முன்
துன்பங் கொள்ளேல்"

என்று இறந்தமகன் செயலை இழிவுபடுத்தி, அவளைத் தேற்றுவாளாயினள். இவற்றால் ஒழுக்கங்கெட்ட மக்களை, அவர்கள் எத்தகைய உயர்பதவியிலிருப்பினும், அரசரும் குடிகளும் பெரிதும் வெறுத்து வந்தமை புலப்படும்.

இவ்வாறு, தமிழகம், முன்னாளில் அறிவாற்றல் மிக்க வீரத் தாயர்களை உடையதாகி, அருமையும் பெருமையுங் கொண்ட செயல்களுக்குரிய நிலைக்களமாயிருந்தது. அவர்கள் பெற்ற வீரர்கள், குடிகளின் க்ஷேமத்தின் பொருட்டும் தந்நாட்டு அரசன் பொருட்டும் ஆன்மபரித்தியாகம் செய்வதிற் பயிற்சி

நிக்கவர்களாய், சமயநேர்ந்த போதெல்லாம் அவ்வாறு செய்து, தமிழகத்தின் பெருமையை மலைமேலிட்ட தீபம்போல விளக்கி வந்தனர். சங்ககாலில், தமிழ்நாட்டின்மேல் வடவரசர் படையெடுத்து வென்ற செய்தி கேட்கப்படுதலே அரிது. ஆனால், தமிழரசர் வடவருடன் போர்புரிந்து வெற்றிபூண்ட விஷயம் காணலாம். இதன் காரணம், அக்காலத்து விளங்கிய தமிழர் வீரத்தின் மாட்சிமையேயாம். அத்தகைய வீரத்தை வளர்த்து வந்தவர் யாவர்? தமிழ்த்தாயர்களே என்க. அச் சங்ககாலத்துக்குப் பின்பு வீரத்தாயர்களும் ஆத்மபரித்தியாகம் செய்யவல்ல வீரமக்களும் குறைந்துவந்தமையால் வடவேந்தர்பலர் தமிழகத்தே பிரவேசிக்கத் தொடங்கிய செய்திகள் கேட்கப்படுகின்றன. அக்காலத்துக்குப் பின்பு வடவர் தமிழர்க்குள் நிகழ்ந்துவந்த போர்கள் அளவுபடுவனவல்ல. களப்பிரர்என்றும் பல்லவரென்றும் இரட்டரென்றும் சளுக்கரென்றும் கூறப்படும் வடவரசர் கூட்டம் தமிழகத்தைக் கைப்பற்றலாயின. அதனால் தமிழ்வேந்தராகிய சேரசோழபாண்டியரும் பிறரும் தம் பழம்பெருமை குன்றினர். முடிவில், ஆண்மையும் தியாகமுமாகிய பயிற்சிகள் குறையத் தமிழர் வீரம் முற்றும் தலைகவிழ்ந்தது. இக்காலத்தவராகிய நமக்கோ, மேலே கூறிவந்த அற்புதவீரச் செயல்களெல்லாம் வெறுங்கற்பனைக் கதைகளாகவே தோற்றும் என்பது திண்ணம். ஏனெனில், நம்மவரது மனநிலை அவ்வளவு குன்றி யொழிந்தது. காலசக்கரத்தின் சுழற்சியால் உலகத்தில் ஓரிடத்திற்குள்ளே உண்டாம் அற்புதமாறுதல்கள் இவை.

---

# 12. தமிழ்வேந்தரின் இமயப் படையெடுப்பு.*

பரதகண்டத்தின் தென்பகுதியானது பழங்காலமுதலே சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தரின் ஆட்சிக்கமைந்த நிலமாய்த் தமிழகம் என்ற பெயர் பெற்றிருந்ததாகும். 'வண்புகழ்மூவர் தண் பொழில் வரைப்பு' (தொல்காப்பியம்), 'இமிழ்கடல் வேலித் தமிழகம்' (சிலப்.) எனவரும் முன்னோர் கூற்றுக்களால் இதனை அறியலாம். மூவேந்தரும் ஆட்சிபுரிந்து வந்த இத் தமிழ்நாடு அவர்களின் கூட்டு வலிமையால் சுதந்திரம்பெற்ற தனித்தேசமாய் நின்று முற்கால முதலே பெருமைபெற்று விளங்கியது. பரதகண்ட

* கலைமகள், தொகுதி - 1, பக். 56 - 63.

முழுமையும் தன் ஒரு குடைக்கீழ் கிறுவி ஆட்சிபுரிந்த மௌரிய சக்கரவர்த்தியாகிய அசோகனும், தமிழகத்தைத் தன்னுட்சிக் கடங்காத் தனி நாடாகவே மதித்துக் கௌரவித்துவந்த செய்தி அவன் சாஸன வாயிலாக அறியப்படும். அம்மதிப்புக் கேற்றபடி வடவேந்தர்களும் அஞ்சத்தக்க அரியபெரிய வீரச்செயல்களைத் தமிழரசர் அவ்வக்காலங்களிற் காட்டிவந்தவர் என்பது பழைய நூல்களால் தெளியக்கிடக்கின்றது. நெடுஞ்சேரலாதன் என்ற சேரவேந்தன்—'இமயவரம்பன்' 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்று முன்னூல்களிலே புகழப்படுகின்றான். இமயவரம்பன் என்பதற்கு, இமயகிரியைத் தன் ஆணை செல்லும் எல்லை நிலமாகக் கொண்டவன் என்பதும், 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்பதற்கு, இமயத்தில் தன் இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்தவன் என்பதும் பொருள்களாம். பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தால் அச்சேரவேந்தனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர்.

"ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே" (11)

என்று கூறுதல் காண்க. பரணர் என்ற புலவர் பெருமானும்,

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" (அகம். 396)

என்று புகழ்வர். இவற்றால், இமயமுதல் குமரி வரைதன் ஆற்றலைப் பரப்பியவன் இவ் வேந்தன் என்பது தெரியலாம். இவன் 'நயனில் வன்சொல் யவனரைப் பிணித்தவன்' என்றும் புகழப்படுவன்.

இவ்வாறே, திருமாவளவன் என்ற சோழனொருவன் வடதிசை முழுதும் வெல்லவெண்ணிப் படையெடுத்துச் சென்று ஆங்குத் தமிழரின் அருந்திறலைக் காட்டி, இமயத்தில் தன் புலிப்பொறியை நாட்டி மீண்டனன் என்று முன்னூல்களும் பின்னூல்களும் ஒருங்கே புகழ்கின்றன. இவனைக் கரிகாலன் என்று கருதுவர்.

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி னிமயச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிப்பொறி பொறித்தது மறித்த பொழுதே"

எனக் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டாரும் இவன் செயலைப் புனைந்து கூறுதல் காண்க.

இனி, பாண்டியர் முன்னோருள் ஒருவனும், தன் குலசின்னமாகிய மகரலாஞ்சனையை இமயகிரியிற் பொறித்தவன் என்று நூல்களும் சாஸனங்களும் புகழ்கின்றன. இவனை மலயத்துவசன் என்றும், உக்கிரகுமாரன் என்றும் புராணங்கள் கூறும். 'பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்' என்றார் பெரியாழ்வாரும். இவ்வாறாகத் தமிழரசர் மூவரும் இமயம்வரை சென்று தம் ஆற்றலைத் தோற்றுவித்த பெருமையுடையார் என்பது முன்னோர் மொழிகளால் தெளிய அறியப்படுகின்றது.

ஆயினும், தமிழ்வேந்தர்களைப் பற்றி இவ்வீரச்செய்திகளிலே நவீன சரித்திரவறிஞர் பலரும் ஐயுறுவர். கிறிஸ்தவாப்தத்துக்கு முன்னும் பின்னும் பல நூற்றாண்டுகள்வரை இருந்த வடவேந்தர்கள் பேராற்றல்பெற்று விளங்கியவராதலாலும், தமிழரசரின் வடவெற்றியைக் குறிப்பிடத்தக்க பிரமாணமொன்றும் வடக்கே அகப்படாமையாலும் அவரது இமயப்படையெடுப்பைப் பற்றிய செய்தி முழுதும் வெறுங்கற்பனையே யன்றிப் பிறிதில்லை என்பது அன்னோர் முடிபு. அவர்கள் கூற்றை நம்பிச் சங்ககாலத்துச் சான்றோர் பலரும் ஒருமுகமாகக் கூறும் சரித்திரவுண்மையை நாம் புறக்கணித்தொழிதல் கூடுமோ? அசோகவர்த்தனன் காலத்தில் அவனால் மதிக்கப்பெற்ற சுதந்திரநாடுகளுள் ஒன்றாகத் தமிழகம் விளங்கிய தென்பதில், அச்சரித்திவறிஞர் எவரும் சந்தேகங் கொண்டவர் அல்லர். பரதகண்டத்தின் பெரும்பகுதியையும் ஆண்ட அவ்வசோகனுக்கு, அதன் கடைக்கோடியிலுள்ள தமிழகத்தையுங் கைப்பற்றிக்கொண்டு, பொதுவற இக் கண்ட முழுதுமே தனியாட்சி புரியும் விருப்பம் இருப்பது இயல்பன்றோ? தனக்குப் பணியாத கலிங்கதேசத்தை அவன் போரிற்படுத்திய பாடு சரித்திரப் பிரசித்தமானது. அவ்வாறே, தனியே பிரிந்து நின்ற தமிழ்நாட்டிலும் அவன் சிந்தை சென்றிருக்கக் கூடியது தானே? அவ்வாறு அதனைக் கைப்படுத்த அச்சக்கரவர்த்தி ஒரு முயற்சியும் செய்யாமற்போன தென்னோ? அன்றியும். பாரசீகம் கிரேக்கம் முதலிய அன்னிய தேசம் போலவே தமிழ்நாட்டை மதித்துத் தன் சமய தூதுவர்களைத் தமிழ் வேந்தரிடம் அவன் விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றால் அச்சக்கரவர்த்தி காலத்துக்கும் முன்பே, தமிழரசரின் பேராற்றல் ஆரிய வேந்தரும் மதிக்கத்தக்க நிலையில் அமைந்திருந்தென்பது ஐயமின்றி விளங்கும். அத்தகைய மதிப்பு வடவேந்தரின் உள்ளத்தே யன்றியிருக்கவேண்டுமாயின், அதற்கு, அவர்களும் அஞ்சும்படியான

பெருஞ்செயல்கள் சிலவற்றைத் தமிழகவேந்தர்கள் அவர்கட்கறியக் காட்டிவந்ததே காரணமாதல்வேண்டும் என்றும், அச்செயல்களுள் ஒன்றாகவே அவர்களது இமயப்படையெடுப்பும் அமைந்திருத்தல் கூடும் என்றும் நாம் கருதல் தகும்.

பெருவீரனான சேரன் செங்குட்டுவன் ஆரியவரசரை வெற்றி கொள்ளவும், பத்தினிக்குக் கல்லெடுத்துவரவும் நடத்திய வடயாத்திரை வரலாறுகள் சிலப்பதிகார முதலியவற்றால் அறியப் பட்டவை.* அவன் அவ்யாத்திரை நிகழ்த்தியதற்குக் காரணமா யிருந்த செய்தியொன்றை அச்சேரனுக்கு இளவலாகிய அடிகள் அடியில் வருமாறு கூறுகின்றார் :—

"வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலைசூட்டி
உடனுறைந்த இருக்கைதன்னில் ஒன்றுமொழி நகையினராய்த்
தென்றமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழுமிமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநாள்
எம்போலு முடிமன்னரீங் கில்லைப்போலும் என்றவார்த்தை
அங்குவாழு மாதவர்வந் தறிவுறுத்த" (சிலப். 28, உரை. மடை)

வடநாட்டில் நடந்த இராசகன்னியொருத்தியின் திருமணத்தில் விருந்தினராக ஆரியமன்னர் பலர் ஒருங்கு கூடியிருந்தபோது, 'தமிழ்நாட்டரசர் போர்க்கோலம் பூண்டுவந்து இமயகிரியில் தம் இலாஞ்சனைகளான வில் புலி கயல்களைப் பொறித்துச் சென்ற காலத்திலே, எங்களைப் போலும் வீரசூரர்களான வேந்தர் இருந்தனர் இல்லைப்போலும்' என்று கூறி நகையாட, அவ்விகழ்ச்சியுரையை வடபக்கத்தினின்று வந்த மாதவர்சிலரால் அறிந்தனன் செங்குட்டுவன் என்றது மேற்கூறிய அடிகளினின்று தெரியலாம். இச்செய்தியைக் கொண்டு நோக்குமிடத்து, தமிழரசர் இமயத்தில் தம் சின்னங்களைப் பொறித்தவர் என்ற வரலாற்றில், நவீனர் சிலர்க்கு உள்ளதுபோலச் செங்குட்டுவன் காலத்து வடவேந்தர்க்குச் சிறிதும் ஐயமிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், 'தம்போலும் வீரசூரர்கள் தமிழரை எதிர்த்துப் போராட அக்காலத்து இல்லைப் போலும்' என்பதே அவர்கள் தற்பெருமையாகக் கூறிக்கொண்டதாம். எனவே, பண்டைக்காலத்து ஆரியவேந்தரின் கருத்தாலும் தமிழ்மன்னரின் இமயப் படையெடுப்பு உண்மை வரலாறாகவே

* 'சேரன் - செங்குட்டுவன்' என்ற என் நூலால் இச்செய்தி யாவும் விளக்கமாகும்.

கொள்ளப்பட்டிருந்தமை தெளிவாகும். செங்குட்டுவன் சரிதத்தைப் பாடிய அவன் தம்பி இளங்கோடிகள் கூறும் இச்செய்தியையும் கற்பனையாக அப்பிறர் கருதுவதற்கில்லை. அச்சேரர்பெருமான் வடநாட்டிற் படையெடுத்துச் சென்றதற்குக் காரணம், மேற்கூறியபடி, வடவரசர் இகழ்ந்து கூறிய தமிழர் குலப்பெருமை தம்மவர்க்குண்டு என்பதை மெய்ப்பித்துக்காட்டுவதே யன்றோ? அங்ஙனம் தமிழராற்றலை வடவர்க்கு வலியுறுத்திக்காட்டிய செங்குட்டுவனது அருஞ்செயலை, பிரமாணங்கள் சில தற்காலங் கிடையாமைபற்றிச் சிலர் எளிதாகக் கருதிநெகிழ்வராயின், அஃது அவ்வடவேந்தர் செயலினும் அதிசயிக்கத்தக்கது என்றே நாம் அசதியாடிக் கழிக்கலாம். சேரநாட்டையடுத்து ஆட்சிபுரிந்த கங்கவமிசத்தரசர்கள் இமயச்சாரலில் உள்ள நேபாளத்தை அடிப்படுத்திப் பலதலைமுறை ஆண்டதுபோலவும்,* கலிங்க வேந்தான காரவேலன், மகதம் அங்க முதலிய வடநாடுகளைவென்று பெருமை பெற்றது போலவும், பிற்காலத்துத் தமிழ்வேந்தருள் முதலாம் இராசேந்திரன் கங்கைக்கரைவரையுமிருந்த வடநாடுகளையும் கடாரமுதலிய தீவாந்தரங்களையும் வென்று, கங்கைகொண்டசோழன் என்ற பெரும்பெயர் பெற்றது போலவும் ஒரு காலத்தில் மூவேந்தராற்றல் இமயம்வரை ஓங்கியிருந்தது என்று முன்னோர் கூற்றுக்களிலிருந்து நாம் கொள்வதே முறை என்க.

மேற்கூறியவாறு, சேரசோழபாண்டியர் மூவரும் இமயத்தில் இலச்சினைபொறித்த பெருமை தத்தமக்குரியதாகத் தனித்தனியே பாராட்டிக் கொண்டனராயினும், அம்மூவரும் ஒன்றுகூடி வடவருடன் போராடி அப்பெருமைபடைத்தவர் என்றே நாம் கருதத்தக்கது.

"தென்றமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழும் இமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநாள்"

என்ற இளங்கோவடிகள் வாக்கிலும், அம்மூவரும் ஒன்றுபட்ட வலியுடன் சென்று, பனிமலையிலே தங்கள் சின்னங்களைப் பதித்த செய்தி குறிப்பிக்கப்படுதல் காணலாம். சேரமரபினரான அவ்வடிகள் தம் முன்னோர் செயலைமட்டுஞ் சிறப்பியாமல், மூவேந்தருமே தம் இலச்சினைகளை ஆண்டுப்பொறித்தவர் என்று கூறுவராயின், அஃது அவர்கள் ஒருங்கு கூடிச்செய்த செயல் என்பதை உணர்த்தக்கூடிய தன்றோ? கூடிச்செய்த அருஞ்செயலை அவ்வவர் தம்

* Lewis Rice's Myscre and Coorg from the Inscriptio, p. 48

குலப்பெருமையாகப் பாராட்டிக்கொள்ளுதல் இயல்பேயாம். ஆகவே, தமிழரசரில் இமயஞ்சென்று பெருமைபடைத்தவர் யாவர் என்பது பற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை. அரசர் பலர் ஒன்றுசேர்ந்து பகைவர் மலையைக் கைப்பற்றுவராயின் அப்பலர் இலாஞ்சனைகளும் ஒரு சேர அம்மலையிற் பொறிக்கப்படுவது பண்டை வழக்கேயாகும்.

"கொடுவரிக், கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையோடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே" (புறம். 58)

என, நட்பினராயிருந்த சோழபாண்டியரிருவர் சின்னங்களும், பகைவர் குன்றுகளில் ஒருங்கு பொறிக்கப்படவேண்டும் என வாழ்த்திப் புலவரொருவர் பாடியிருத்தலும் இங்கறியத்தக்கது.

இங்ஙனம், மூவரசருங்கூடி நிகழ்த்திய இமயப்படையெடுப்பில், சோழனை திருமாவளவனே தலைமை வகித்தவனாதல் வேண்டும் என்று நாம் கருதல்தகும். அறிவு ஆற்றல் பெருமைகளில் அவனே தன் காலத்தில் இணையற்று விளங்கியவன். கடைச்சங்காலத்து வாழ்ந்த சோழருள் முற்பட்டவன் இவன் என்றே தோற்றுகின்றான். இவனது வடயாத்திரையைப் பற்றி இளங்கோவடிகள் கூறுவன வருமாறு:—

" செருவெங் காதலிற் றிருமா வளவன்

*    *    *

புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையெனக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத் துக்கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்" (சிலப். 5, 90-104)

இவ்வடிகளில், இமயப்பக்கத்தும் அதற்கு அப்பாலுமுள்ள நாடுகளை வென்றுகொள்ள விரும்பித் திருமாவளவன் படையெடுத்

துச் சென்ற காலத்தில், அவன் நோக்கம் கைகூடாதபடி இமயமலை தடைப்படுத்தியதென்றும், அப்போது அப் பெருமலையில் தன் புலிப்பொறியைப் பொறித்துத் தன் ஆணையை ஆங்கு நிறுவிவிட்டு அவன் திரும்புங்காலே, எதிர்த்துத் தன்னுடன் பொருத வச்சிர மகத வேந்தர்களை வென்று அவர்களிடம் விரும்பிய திறைகளைப் பெற்று மீண்டனன் என்றும் குறிக்கப்படுதல் தெரியலாம். இமயத்தினின்று திரும்பியதும் எதிர்த்துப் போராடிய வடவரசர், வச்சிரவேந்தனும் மகதமன்னனும் எனவே, அச் சோழன் சென்று வந்த இமயப்பகுதிக்கு அடுத்த நாடுகளாயிருந்தவை வச்சிரநாடும் மகததேசமும் ஆகும் என்பது எளிதிற் பெறப்படும். வச்சிரநாடு என்பது சோணை (Son) நதி சூழ்ந்த தேசமாகும். அதனையடுத்துள்ளதே மகதநாடு. இது கங்கையடுத்த பிரதேசமென்பது தெரிந்ததே. அவ் விருநாட்டரசரையும் வென்றபின்பே, அவந்தி வேந்தனிடம் நட்புமுறையில் அவ்வளவன் சென்றவன் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவர். இவற்றால், வச்சிரமகத நாடுகளையடுத்து அவற்றின் வடபக்கத்துள்ள இமயப்பகுதியே சோழன் தன் அடையாளத்தை நாட்டிய இடம் என்பது நன்கு விளங்கும். இமயத்துக் கப்பாலும் தன்னெல்லைய நிறுவ எண்ணியிருந்ததை அப்பனிமலை பழுதாக்கினமையால், அம்மலையின், தென்புறத் திற்றானே தன் இலாஞ்சனையைச் சோழன் பொறிக்கலாயினன் என்பது இளங்கோவடிகள் கருத்தாகத் தோன்றுகின்றது. இது, மேற்கூற்றாலும்

> " இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
> உப்பாலைப் பொற்கோட் டுழையதா எப்பாலும்
> செருமிகு சினவேற் செம்பியன்
> ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே"

எனவரும் சிலப்பதிகார மங்கலவாழ்த்தடிகளாலும் உய்த்தறியப்படும். இதனால், வச்சிரமகத நாடுகட்கு அப்பாலுள்ள இமயப் பகுதியில் தீபெத்துக்குச் செல்லும் வழியுள்ள பிரதேசமே அச்சோழன் நாடிச்சென்ற இடம் என்பதும், அவன் சேன்றபோது அவ்விடம் தீபெத்துக்குச் செல்ல ஏற்றதாகாமையால், திரும்பி வச்சிரமகத நாடுகளை அவன் அடையலாயினன் என்பதும் நாம் ஊகிக்கக்கூடியன.

இவ்வாறு, இமயப்படையெடுப்பு, சோழன் தலைமையின்கீழ்த் தமிழரசரால் ஒரு காலத்து நிகழ்ந்தது என்ற வரலாற்றை, புதியதாகத் தெரியவரும் அரிய செய்தி யொன்றும் ஆதரித்து நிற்பதை இனிக் கூறுவேன். மேலே நான் கூறியவற்றையெல்லாம்

ஒருசேரக் கொண்டு நோக்குமிடத்து, திருமாவளவன் சென்று வந்த இமயமலை, இப்போது ஸிக்கிம், புட்டான் என்ற ராஜ்யங்களுக்கு இடையிலுள்ள மலைப்பகுதியேயாதல் வேண்டும். என்னெனில், இப்பகுதியிற்றான் வங்காளத்துள்ள டார்ஜீலிங்கிலிருந்து திபெத்துக்குச் செல்லும் கணவாய்கள் உள்ளன. இக்கணவாய்களிற் சில, முற்காலத்தும் வியாபாரப் போக்குவரத்துக்கு உரினவாய் அமைந்தனவாகும். இவைகளும் பல மாதங்கள்வரை பனிமூடப்பெற்று அடைபட்டுக்கிடத்தலால், சில காலங்களே அப்போக்குவரத்துக்கு ஏற்றவாகின்றன. உலகத்துள்ள மலைகளிலே உன்னத சிகரமுடைய கிஞ்சின் ஜிங்கா என்ற இமயப்பகுதி இக்கணவாயை அடுத்துள்ளதே. 'கௌரீசங்கர்' என்று வழங்கப் பெறுவதும், கிஞ்சின்ஜிங்காவினும் அத்தியுன்னத சிகரம் வாய்ந்ததுமான மௌண்ட் - எவரெஸ்டு (Mount Everest) இங்கு நின்று வடமேற்காக 70, 80-மைலில் உள்ளதே. வங்காள மாகாணத்தில் அடங்கியுள்ள வச்சிரமகத நாடுகளுக்கு வெகு தூரமில்லாததாய், இமயத்தைக் கடந்து செல்வதற்கு ஏற்ற வழியுடைய பிரதேசங்களுள் ஸிக்கிம் புட்டான்களுக்கு இடையில் உள்ள கணவாய்களே சிறந்தவை. ஸிக்கிம் ராஜ்யத்துக்குக் கிழக்கே அதற்கும் திபெத்துக்குமுள்ள எல்லையை வரையறுத்து நிற்கும் மலைத்தொடரானது, செங்குத்தாய் ஆகாசத்தை அளாவிக்கொண்டு, பெருங் கோட்டை மதில்போல நீண்டு செல்கின்றது. இம்மலைத்தொடரை அடுத்துச் செல்லுங் கணவாய், சமுத்திர மட்டத்துக்குமேல் 14,500 - அடி உயரமுடையதாய், திபெத் பிரதேசமாகிய சும்பிப் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுபோய் விடக்கூடியது. இம்மலைக்கும் இதனையடுத்த கணவாய்க்கும் வழங்கும் பெயர்கள் கவனிக்கத்தக்கன. சோழமலைத் தொடர் (Chola range) சோழர் கணவாய் (Chola pass) என்பன அவற்றிற்கு இன்றும் வழங்கிவரும் நாமங்களாகும்.* மேற்கூறியவற்றைக் கொண்டு நோக்குமிடத்து, இமயப்பகுதி யொன்றற்கு வழங்கும் இப்பெயர் சோழன் தொடர்புபற்றி வந்ததாகக் கூடாதோ என்பதே என் ஆராய்ச்சி. இம்மலையடியாகவே, இதனையடுத்துள்ள கணவாயும் அப்பெயர் பெற்றதாகவேண்டும். 'சோல' (Chola) என்பதற்கு ஸிக்கிம் திபெத் பாஷைகளில் வேறுபொருள் இருப்பதாகத் தெரியவில்லை. லா என்பதற்குத் திபெத் பாஷையிற் கணவாய் என்ற பொருள் உண்டு. நது-லா (Natu-la) ஜெலப்-லா(Jelap-la)

* Imperial Gazetteer of India—*Sikkim*, Vol. X, p. 327 Vol. XXII. p. 365; Hand Gazetteer of India—*Chola Pass;* Encyclopaedia Britannica—***Sikkim***, Vol V. p 667; Vol. XX, p. 640.

எனக் காண்க. ஆனால், சோல (Chola) என்பது அவ்வாறு இருசொல்லுடையதன்றி ஒருசொல்லாகவே மலைக்கு வழங்கிவருவதும் அச்சொற்கு வேறு நேர்பொருள் காணாமையும் நோக்கத்தக்கன. அதனால், திருமாவளவன் அப்பிரதேசத்தைக் கைப்பற்றி ஆண்டுள்ள மலைச்சிகரத்தில் தன் புலிப்பொறியை நாட்டி அங்கே தன்னாணையை நிறுவிய காலமுதலே அம்மலை அவ்வாறு பெயர் பெற்றதுபோலும் என்று கருத இடந்தருகின்றது. இமயத்துக் கப்பாலும் அவ்வளவன் செல்லக் கருதியிருந்ததை அம்மலை தடுத்துவிட்டதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டதற்கு, மேற் குறித்தபடி, அச்சோழன் சென்றகாலத்தே பனியால் முழுதும்மூடப் பட்டு அக் கணவாய் அடைபட்டிருந்தது என்பதே கருத்துப் போலும். இவ்வரிய செய்திகளை யெல்லாம் அறிஞர்கள் மேலும் ஆராய்ந்து உண்மை கொள்வார்களாக.

---

# 13. மார்கழிநோன்பாகிய தைந்நீராடல்*

---

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்து வாழும் நன்மக்களெல்லாம் அநாதிகாலமாகத் தத்தம் வருணாச்சிரம நிலைக்கேற்பக் கருமானுஷ்டானங்களைக் கைக்கொண்டு வாழும் இயல்பினர் என்பது யாவரும் தெரிந்தது. உரிய கருமங்களை ஒழுங்காக நடத்தி வருந் தேசமாதல் பற்றியே, இப் பாரதவருஷம் கருமபூமி என்னும் பெயர் பெற்றதென்பர். இக்கருமங்கள் யாவும் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டு நிகழ்த்தப்படுவனவாகும். இவை, அவ்வவ் வாச்சிரமநிலைக்கேற்ப எண்ணிறந்தனவாக உள்ளன. கிருகஸ்தாச்சிரமி கொண்டொழுகும் கர்ம விரதங்கள், உரியதெய்வத்தைப் பற்றியனவாய்ப் பெரும்பாலும் இம்மைப்பயன் கருதி நிகழ்த்தப்படுவன. இவற்றுள், யாகாதி கிருத்தியங்களொழிய, முன்னோர் அனுஷ்டானத்தையே பின்

---

* செந்தமிழ், தொ - 19, பக். 428 - 429 (1918-19); ஹரிசமய திவாகரம், தொ - 4, ப - 12 (1927 - 28).

பற்றி அநாதிகாலமாக நடைபெற்றுவரும் நோன்புகளும் சிலவுண்டு. பங்குனிமாதப் பௌர்ணிமைக்குப்பின் நடைபெறுவதும் ஹோலீ ஹோளகம் என்று வழங்கப்பெறுவதுமான காமனோன்பை வேதவிதியின்றிச் சிஷ்டாசாரமே பற்றியதென்று கூறுவர் முன்னோர்.

இவ்வாறு, இல்லறத்தார் நிகழ்த்திவந்த விரதங்களிலே "மார்கழி நோன்பு" என்பதும் ஒன்று. இது பண்டைக்காலத்திற் பிரபலமாக வழங்கியதென்பது, ஸ்ரீ கோதை அருளிச்செய்த திருப்பாவையாலும், திருவாதவூரடிகள் அருளிய திருவெம்பாவையாலும் தெரியவருகின்றது. திருப்பாவை வியாக்யானத்தின் தொடக்கத்தே ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை என்ற பெரியார் இவ்விரத்தைப் பற்றிக் குறிக்குமிடத்து "இந்நோன்புக்கு மூலம் என்னெனில், மீமாம்ஸையிலே ஹோளாதிகரண நியாயத்தாலே* சிஷ்டாசாரஸித்தம். 'மேலையார் செய்வனகள்' என்று ஸ்ரீஆண்டான் தானும் அருளிச்செய்தாள்" என்று எழுதலால், மார்கழி நோன்புக்கு வேத விதியில்லையென்பதும், ஆன்றோர் அனுஷ்டானமே அதற்கு மூலமென்பதும் பண்டையோர் கொள்கையென்பது நன்கு விளங்கும்.

இவ்வாறு சிஷ்டாசாரமே பற்றி இந்நோன்பு வழங்கியதாகக் கூறப்பட்டிருப்பினும், அவ்வாசாரத்துக்கும் மூலவரலாறொன்று இருந்ததாகல் வேண்டுமென்பது நிச்சயம். அவ்வரலாறு யாது— என்பதனை அறியமுயல்வதே இவ்வியாசத்தின் நோக்கமாகும். இங்கு அறிஞர்க்கெல்லாம் முன்னதாக அறிவித்துக் கொள்வதொன்று உண்டு. சைவரும் வைஷ்ணவர்களும் திருவெம்பாவை திருப்பாவை என்ற அடியார்கள் திவ்யப்பிரபந்தங்களைப் பாரணஞ் செய்பவராய் மார்கழி மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். அங்ஙனம் கொண்டாடிவருதற்கு அவரவர் தத்தம் மதத்துக்கேற்ப வேறுவேறு ஐதிகங்கள் கூறக்கூடும். அக்கூற்றுக்களுட்புகுந்து இன்னார் கொள்கையே ஏற்புடையது என்று நிர்ணயிப்பது என் கருத்தன்று. மற்று என்னெனில், இந்நோன்பு பற்றிப் பண்டைத் தமிழ் நூல்வழியாலும் பிறவழிகளாலும் தெரியும் வரலாறுகளை ஒருங்குதிரட்டி எடுத்துக்காட்டுவதேயாகும். மார்கழிக் கொண்டாட்டம் வைணவர்க்குள்ளும் சைவர்க்குள்ளும் சிறப்பாக நடைபெறுவதொன்றாதலால், ,,அதன் ஆதிவரலாறு

* வேதத்தால் விதிக்கப்படாதிருப்பினும் வஸந்தோத்ஸவாதிகள் மேலோர் வழக்காதல்பற்றி வேதவிஹிதமென்று குறித்துணரும் நெறி

யாது என்பதையறிவதில், யாவர்க்கும் விருப்பமிருப்பது இயல்பாம். அதனால், அறிஞர்கள் யான் கூறுவனவற்றை ஆராய்வார்கள் என்றே நம்புகின்றேன்.

மார்கழிநோன்பின் மூலவரலாற்றை அறிவதற்கு வேறு சில ஆதாரங்களும் உண்டாயினும், முற்கூறிய ஆண்டாளது திருப்பாவையும் வாதவூராது திருவெம்பாவையுமே சிறந்தகருவிகளாகச் சொல்லலாம். இவற்றுள், திருப்பாவை முப்பது பாசுரங்கள் கொண்டது. இவ்வருளிச்செயற்குப் பூர்விகர்பலர் வியாக்கியானங்கள் செய்திருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிய வியாக்கியானமே பழமையும் பெருமையு முடையதாகும். கோகுலத்துள்ள ஆயர்கள் மழைபெய்யாக்குறையை நீக்கவேண்டிக் கண்ணனைத் தலைமையாக நியமித்துத் தங்கள் பெண்களை மார்கழிநோன்பு நோற்கச்சொல்ல, அவர்கள் அதற்கிசைந்து பெருமானையும் தோழிமார்களையும் அதிகாலையில் துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டு, யமுனாநதியில் மார்கழி நீராடி நோற்று, கண்ணபிரானை நாயகனாகப்பெறும் தங்கள் மனோரதத்தை அடையப்பெற்றார்கள் — என்பதே ஆண்டாள் அருளிய திருப்பாவையின் வரலாறென்று அவ் வியாக்யாதா அவதாரிகையில் எழுதியுள்ளார். ஆனால் மேலே குறித்த சரித்திரத்திற்கு ஆதாரமாயுள்ள நூற்பிரமாணம் அவ்வுரையாளராற் குறிக்கப்பட்டிலது. ஆயினும் ஸ்ரீமத் பாகவதம்—தசமஸ்கந்தம் 22-ஆம் அத்யாயத்தில், கண்ணன் கோபியர் துகில் கவர்ந்த சரிதங்கூறுந் தொடக்கத்தே மார்கழிநோன்பு பற்றிய முக்கியமான செய்திகள் கூறப்படுகின்றன. அதன் மொழிபெயர்ப்பு அடியில் வருமாறு:—

"அரசனே! கோகுலத்துள்ள பெண்கள் ஏமந்தருதுவின் முதல் மாதத்தில் (—மார்கழியில்) காத்யாயனீ பூஜையாகிய விரதத்தைத் தொடங்கி ஹவிஸ்ஸைப் புஜிந்துக்கொண்டு அதனை நடத்தி வந்தார்கள். அருணோதயத்தில் அவர் எழுந்திருந்து யமுனாநதியில் ஸ்நானம்பண்ணி ஈரமண்ணினால் காத்யாயனீ தேவியின் உருவத்தைச் சமைத்து, சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் இவற்றாலும், சிறந்த நைவேத்யங்களாலும் அத்தேவியைப் பூஜித்தனர். "காத்யாயனீ! ஏ மகாமாயே! மகாயோகினி! ஈசுவரீ! உன்னை வணங்குகின்றோம்; எங்களுக்கு நந்தகோபர் மைந்தனாகிய கண்ணனை நாயகனாக அருள்வீராக"—என்ற இந்த மந்திரத்தை ஜபித்தவர்களாய் அவர்கள் கண்ணனைத் தியானித்துக்கொண்டு ஒரு மாசகாலம் பூஜை செய்து விரதத்தை விடாமல் நடத்தி வந்தனர். அக்கோப கன்னியர் ஒருநாள், யமுனாநதியில் ஸ்நானஞ் செய்தற்காக அருணோதயத்தில் எழுந்திருந்து அவரவருடைய தோழிமார்களின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு ஒருவர்க்கொருவர் கையைக்

கோத்துக் கொண்டும் கிருஷ்ணசரிதங்களைப் பாடிக்கொண்டும் நடந்து சென்றனர். அப் பெண்கள் யமுனைநதியின் ஒரு பக்கஞ் சேர்ந்து, அவ்விடத்தே, வழக்கப்படி தங்கள் ஆடைகளை அவிழ்த்து வைத்துவிட்டுக் கண்ணன் சரித்திரங்களைக் கானஞ்செய்துகொண்டு நீரில் விளையாடுவாராயினர். பரமயோகிகளுக்கும் யோகியும் ஸர்வஜ்ஞனுமாகிய கண்ணபிரான் கோபகன்னியர் அங்ஙனம் நீர் விளையாட்டு நிகழ்த்துவதறிந்து, அப்பெண்களின் விரதபலத்தை அளிப்பதற்காகத் தம் நண்பர்கள் சூழ அவ்விடஞ் சென்றார்''

என்றும், சென்றபெருமான் கரையிலிருந்த அம்மகளிர் துகில்களை யெல்லாங் கவர்ந்துகொண்டு பக்கத்திருந்த கடம்பமரத்திலேறி நிற்க, நீராடி முடிந்த பெண்கள் "ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையதுகொண்டு மெய்யது பொத்திக்" கண்ணனிடம் வந்து தங்கள் துகில்களைத்தருமாறு பிரார்த்தித்தபோது, பெருமான் அவர்களனைவரையும் பல வகையாகவுஞ் சோதித்து முடிவில் அவரவர் துகில்களை அளித்துச் 'சதிகளாகிய நீங்கள் எந்த நோக்கத்தைக் கொண்டு காத்யாயனீ விரத்தைநடத்தினீர்களோ அந்தமனோரதம் இன்றிரவில் என்னுடன்கூடி விளையாடுவதால் நிறைவேறும்; எல்லாரும் கோகுலம் செல்லுங்கள்'' என்று நியமித்தருளினர் என்றும் கூறப்படுகின்றன.

இவ்வுபாக்கியானத்தையும் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை எழுதிய முன் வரலாற்றையும் கூட்டி நோக்குமிடத்து, நாடு வளங் குன்றியபோது மழைபெய்யவும், உத்தமநாயகர்களையடைந்து இம்மை நலமெய்தவும் வேண்டிக் கன்னியர் காத்யாயனீதேவியைக் குறித்து மார்கழி முழுதும் நோற்பதும், அதன் பொருட்டு அவர்கள் வைகறையில் எழுந்திருந்து ஒருவரையொருவர் துயிலெழுப்பிச் சென்று நதீ தீரமடைந்து நீராடித் தேவியின் பிரதிமையொன்றைச் சமைத்துத் தத்தம் இஷ்டாபீஷ்டங்கள் நிறைவேறப் பூஜிப்பதும் பண்டைமரபென்பது பெறப்படுகின்றது. மழை பெய்யாக் குறையை நீக்கவேண்டிக் கோபகன்னியரால் இந்நோன்பு நோற்கப் பட்டதாக ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை எழுதிய திருப்பாவை வரலாற்றுக்கு மூலம் எதுவாயினும், மேற்குறித்த பாகவதவிஷயம், மார்கழி நீராட்ட நோன்பை நன்கு விளக்குவதோடு, திருப் பாவைப் பாசுரங்களுக்கு ஏற்ற செய்திகள் பலவற்றை உடைத்தா யிருத்தலும் அறியத்தக்கதாம். ஆனால் இந்நோன்பு காத்யாயனீ சம்பந்தமுடையதென்பதற்குத் திருப்பாவை மூலத்தில் ஆதார மில்லையே என்று சிலர் சங்கித்தல் கூடும். இதற்கு, திருப்பாவைப் பாசுரங்களின் ஈறுகடோறும் வரும் 'எம்பாவாய்' என்ற தொடர்,

பாகவதத்திற் கண்டவாறு, ஈரநுண்மணலாற் சமைக்கப்பட்ட தேவியின் உருவத்தைப் பற்றியதாகக் கொள்ளுதல் பொருந்துமாயின், தேவி சம்பந்தம் மூலத்தும் கூறப்பட்டதாகவே சொல்லலாம். பாவையென்பது, 'கொல்லிப்பாவை' என்புழிப்போல ஈண்டுப் பெண்தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும். 'நம் பாவைக்குச் செய்யுங் கிரிசைகள்' 'நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்' 'பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்' என வரும் திருப்பாவைத் தொடர்களிலும் பிரதிமையொன்று வைத்து வணங்குங் குறிப்புத்தோன்றுதல் காணலாம். ஆனால், பாவையெனவரும் இடங்கட்கெல்லாம் வியாக்யானத்துள் 'நோன்பு' என்ற பொருளே தரப்பட்டுள்ளது. நோன்புப்பொருளிற் பாவையென்ற பெயர் வேறிடத்து வழங்குதல் அருமையாம். அதனால், அப்பொருளும் வணங்கப்பெற்ற பிரதிமையடியாக வந்ததென்றே கொள்ளற்பாலது. இனித் திருமால்பத்தியிற் சிறந்த ஆண்டாள் தேவீ விரதத்தை மூலமாகக் கொண்டு ஒரு பிரபந்தம் பாடினர் எனல் தகுமோ என்று, சிலர் சங்கித்தல்கூடும். கண்ணனைத் தம் நாயகனாக அடைவதற்குக் கோபியர்காத்யாயனீதேவியைஆராதித்துப்போந்தசெய்தி பாகவதத்தாற் பிரசித்தமாயிருக்கும்போது, அக்கோபியர் விஷயத்தையே ஆண்டாளும் கொண்டுகூறினரெனின் அதனில் இழுக்குமுளதாமோ? திருமாலைத் தன்நாயகனாக அடையவேண்டி 'உன்னையும் உம்பியையுந் தொழுதேன்' எனக் காமனையும் அவன் தம்பியாகிய சாமனையுங்கூடத் தொழப்புக்க* ஆண்டாள் தேவியைப் பிரார்த்தித்து அப் பெருமானைப் பெற முயன்ற கோபியர் செய்தி கூறியதிற் குற்றமென்னை? தேவீ விரதமானது கண்ணனையடைய வேண்டிக் கோபியர் தங் குலாசாரப்படி நிகழ்த்தியதாதலாலும், உத்தேசியத்தின் பெருஞ் சிறப்பை நோக்குமிடத்து அஃது எவ்வழியாலும் அடையத்தக்க தொன்றாதலாலும் அதனில் சம்பிரதாய விரோதம் நிகழச் சிறிதும் இடமில்லையென்க.

இனி, வாதவூரடிகளது திருவெம்பாவையை நோக்குவோம். இஃது இருபது பாடல்களுடையதாய்த் திருவாசகத்துள் அடங்கியுள்ளது. வாதவூரர் திருவண்ணமலை சென்று சிவபிரானை வணங்கிக் கொண்டு சிலகாலம் அத்திருப்பதியில் தங்கியிருக்கும் நாளில் மார்கழி மாதம் வருதலும் திருவாதிரையுற்சவத்துக்கு முற்படப் பத்துத் தினங்களுள்ள காலத்தே மகளிரெல்லாம்

* 'தையொருதிங்களும்' என்னும் நாச்சியார் திருமொழி முதற் பதிகம் பார்க்க.

வைகறையிலெழுந்து வீடு கடோறும்போய், ஒருத்தியை ஒருத்தியும் பலருமாகத் துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டு பொய்கையிற் கூட்டமாய்த் திருவாதிரைவரை நீராடிய செய்தியை, அம்மகளிர் கூற்றில் வைத்து அவ்வடிகள் பாடியதென்பர். இதனைத் திருவாதவூரர் புராணம் திருவம்பலச் சருக்கத்தில்,

"வென்றிடும் கன்னிமேதிச் சென்னிவிக் கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந்தீரக் குறித்திட வருள்வாய் போற்றி
அன்றுவந் தென்னை யாளு மணியண்ணு மலையாய் போற்றி
என்றுதம் பரிவா லேத்தி யிறைஞ்சியங் குறையு நாளில்"

"மாதர்கொண் மாத ரெல்லா மார்கழித் திங்க டன்னில்
ஆதிரை நாண்முன் னீரைந் தாகியத் தினங்க டம்மின்
மேதகு மனைக டோறு மழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல் செய்வார்"

"அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசிப் பின்னர்
தன்னியர் பாடி யாடும் கவின்கொளம் மனைகண் டன்னூர்
பன்னிய பாட லாக வம்மனைப் பாடல் செய்தார்"

எனவரும் பாடல்களால் அறியலாம். இத்திருவெம்பாவை, திருப்பெருந்துறையிற் பாடப்பட்டதாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணங் கூறும். இனி, அத் திருவெம்பாவைப் பாடல்களை நோக்குவோம். அதன் ஒவ்வொரு செய்யுளும் "எம்பாவாய்" என்றே முடிந்து நிற்றலோடு, "போற்றியா மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்" என மார்கழி நீராட்டத்தைப் பற்றிக் கூறியும், அம்மாதத்தே பெண்கள் ஒருவரையொருவர் வைகறையிற்றுயிலெழுப்பி நீராடி—கண்ணபிரானைக் கணவனாக அடைய ஆய்ச்சியர் வேண்டியதுபோல—சிவனடியாரைத் தம் நாயராக* அடையப் பிரார்த்திப்பதை யுணர்த்தியுஞ் செல்வதாம். அன்றியும் ஆண்டாள்,

"ஆழி மழைக்கண்ணா வொன்றுநீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொ டார்த்தேறி
யூழி முதல்வ னுருவம்போன் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோன் மின்னி வலம்புரிபோ னின்றதிர்ந்து

* 'முன்னைப் பழம்பொருட்கும்' "உங்கையிற்பிள்ளை" என்ற திருவெம்பாவைப் பாடல்களை நோக்குக.

தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

என நாடு செழிக்க மழைபெய்யும்படி வருணனை வேண்டியது போலவே—

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவில்லா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"

என்று வாதவூரரும் மழைக்கடவுளை வேண்டிப்பாடுதல் காணலாம். இவற்றால், திருப்பாவையும் திருவெம்பாவையும் வேறுவேறு தெய்வச்சார்புடையவாயினும், ஒரே பொதுக்குறிப்புடையன என்பது வெளிப்படும். ஆனால், வாதவூரர் திருவெம்பாவையும் தேவீ சம்பந்தமுடைய தென்பதற்குப் பிரமாண முண்டோவெனிற் கூறுவேன். திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அதனதன் பருப்பொருள் புலப்படுமாறு, தலைக்குறிப்புக்கள் அமைந்திருப்பது பலருமறிவர். அக்குறிப்புக்களின் வாக்காலும் போக்காலும் அவை வாதவூரராலோ அன்றி அவர்க்குப்பின் வந்த பெரியோராலோ பண்டைக்காலத்தே அமைக்கப்பட்டவை என்பது புலப்படத் தடையில்லை. இத்திருவெம்பாவைக்கு அங்ஙனம் அமைந்த தலைக் குறிப்பு சத்தியை வியந்தது என்பதாம். [சத்தி-உமாதேவி.] இதனால் தேவியின் புகழ்ச்சியே திருவெம்பாவையின் கருத்தென்பது மிகத் தெளிவாகும். இக்கருத்தமைந்த தலைக்குறிப்பையும், மார்கழி நீராட்ட நோன்பிற் காத்யாயனி வணங்கப்படுவதாகக் கூறும் பாகவத உபாக்யானத்தையும், அவ்வுபாக்யானமே ஆண்டாள் திருப்பாவைக்கு மூலமாயிருத்தலைஞ் சேர்த்து ஆராயுமிடத்து, திருவாதவூரரது திருவெம்பாவையும் தேவியின் விரத்தை மகளிர் கொண்டாடிய முறையைக் குறிப்பதேயென்று கொள்ளத்தகும் என்க. ஆனால் "சத்தியை வியந்தது" என்பதற்கு—மனோன்மணி முதல் வாமையீறாகவுள்ள நவசத்திகளும் ஒருவரையொருவர் பிரேரிக்க அதனாற் பிரபஞ்சசிருஷ்டி தொடங்குங்காலம் மார்கழி மாதமென்றும், அக்காலத்து நிகழும் அந்தச் சத்திகளின் பிரேரகங்களையே வாதவூரர் திருவெம்பாவையில்

துயிலுணர்த்துவதாகக் கூறினரென்றும் சிலராற் கருத்துரை கூறப்பட்டுள்ளது. ஆயின், இக்கருத்து, திருவெம்பாவை வரலாற்றைக் கூறும் திருவாதவூரர் புராணத்தேனும் வேறு பழைய நூல்களிலேனும் குறிக்கப்பட்டிலது. நவசத்திகளும் திருவெம்பாவையில் வியந்து கூறப்பட்டனர் என்பதே முன்னையோர் கருத்தாயின் அதன் தலைக்குறிப்பு "சத்திகளை வியந்தது" எனப் பன்மையாக அமைந்திருக்கும். திருவெம்பாவையின் இருபது பாடல்களுள் ஒன்பது பாடல்கட்கு மட்டும் நவசத்திகளின் பிரேரணையை விஷயமாகக் கூறி, ஏனைப்பதினொரு பாசுரங்களுக்கு அவதாரிகை கூறவியலாமற் செல்வதானும் அக்கருத்துரைதெளியத் தக்கதாயில்லை. அன்றியும், அதன் பாடல்களில் சிருஷ்டி கொழும்படி நவசத்திகள் முறையே பிரேரிக்குஞ் செய்தி குறிக்கப்படாமல், சிவனடியாரைத் தந்தலைவராக அடைதல் வேண்டிப் பெண்கள் பிரார்த்திக்குங் கருத்தே குறிப்பிக்கப்பட்டிருத்தலும், "இன்னருளே யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என மழைபெய்யவும் பிறவாறும் வேண்டப்படுதலும் காணலாம். ஒருகால் முற்கூறிய கருத்துரை, திருக்கோவையாருண்மை முதலியனபோலத் திருவெம்பாவையின் ஸ்வாபதேச (உள்ளுறை)ப் பொருளாகச் சிலர் எழுதியிருத்தல் கூடும். இதனுண்மை எத்தகையதாயினும், வரதவூரர்புராணங் கூறுமாறு, மார்கழியிற் பெண்கள் நீராடிநோற்பதை வாதவூரடிகள் கொண்டுகூறினர் என்பதே யாவரும் எளிதில் அறியக்கூடியது. 'சத்தியை வியந்தது' என்ற திருவெம்பாவைத் தலைக்குறிப்பு, காத்யாயனீ அல்லது சத்தியின் விரதத்தையே புலப்படுத்தக் கூடியதென்ற என் கொள்கையை, மழைவேண்டிக் கூறிய 'முன்னிக்கடல்' என்ற திருவெம்பாவைப் பாட்டிற் பராசத்தியே உவமை கூறப்பட்டிருத்தலும்,

"பேணித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்"

என அந்தச் சத்தியே சிறப்பாக வணங்கப்பட்டிருத்தலும் நன்கு வலியுறுத்துதலுங் காண்க.

இங்ஙனம் திருப்பாவை* திருவெம்பாவைகளால் மார்கழி நோன்பின் வரலாறு அறியப்படுதல் போலவே, பண்டைச் சங்க நூல்கள் வாயிலாகவும் அதன் செய்திகள் சில புதியவாகத் தெரிய

---

* திருப்பாவை போன்ற பிரபந்தங்கள் 'பாவைப்பாட்டு' என முன்னோரால் வழங்கப்பட்டன (தொல். பொருளதி. 461, உரை; யாப். விருத்தி, பக். 394). யாப்பருங்கல விருத்தியின் இறுதிச் சூத்திரவுரையுள், "கோழியுங் கூவின குக்கி லழைத்தன தாழியுணீலத் தடங்கணீர் போதுமினோ-ஆழிசூழ்வையத் தறிவ னடியேத்திக்-கூழை

வருகின்றன. பரிபாடலுள், வையையாற்றின் சிறப்பைப்பற்றிக் கூறும் 11-ம் பாடலிலே இந்நோன்பின் வரலாறுகளை ஆசிரியர் நல்லந்துவனார் அடியில்வரும் அடிகளாற் கூறுகின்றார் :—

"கனைக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்க
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியி
னூதை யூர்தர வுறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளிர் ஈரணி புலர்த்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று;
மையாட லாடல் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந் நீராடுதல்
நீயுரைத்தி வையை நதி" எனக் காண்க.

இவ்வடிகளாற் போதரும் பொருளாவது:—"கறுத்த மேகங்கள் இடிக்குங்குரல்நீங்கப் பனிமிகுதலாற் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப்பருவத்தில், சூரியவெப்பந்தராக்காத கடைமாரியை யுடைய மார்கழி மாதத்திலே, நிறைமதிநாளாகிய திருவாதிரை

---

நீயைக் குடைந்து குளிர்புனல், ஊழியுன் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்" என்ற பாட்டொன்று உதாரணங் காட்டப்பட்டுள்ளது. இதனால், திருப்பாவை திருவெம்பாவைகள்போல வேறொரு பிரபந்தமும் முன்பு வழங்கியமை தெரியலாம். 'அறிவனடியேத்தி' எனவருந் தொடரினின்று அஃது அருகக்கடவுளையோ, புத்தரையோ பற்றியதாதல் வேண்டுமென்று தோற்றுகின்றது. மார்கழிநோன்பைக் கொண்டாடுதற்கு ஜைனர் பாராயணஞ்செய்யும் "திருவெம்பாவை" என்ற பழைய பிரபந்தமொன்றும் அச்சிடப்பட்டுளது. ஆயின் மார்கழிநோன்புக்கு அன்னோர் கூறும் வரலாறு இன்னதென்று தெரியக்கூடவில்லை. இஃதன்றிப் பிற்காலத்தில் தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடுதுறை'யுள், சுவரூபானந்தர் திருவெம்பாவைகள் இரண்டு, வேதாந்தபரமாகக் காணப்படுகின்றன.

யில், ஆகமங்களையுணர்ந்த பூசகர் தெய்வத்திற்குத் திருவிழா வைத் தொடங்கினராக, **'பூமியானது மழைவளம் பெற்றுக் குளிர்வதாக'** என்று சொல்லி **அம்பாவாடலைச்** செய்வதற்குக் **கன்னிப்பெண்கள் கூடி,** சடங்கறிந்த முதிய பார்ப்பனிமார் நோன்புநோற்கு முறைமையைத் தெரிவிக்க, பனியையுடைய **அருணோதயத்திலே நீராடி,** நீர்வாடை வீசுதலாற் கரையிற் றங்கி யிருக்கும் அந்தணரது வேதாக்கினியை அக்கன்னியர் வணங்கிய வராய், அவ்வக்கினியிலே தம் ஈரத்தைப் புலர்த்திநிற்க, அவ் வந்தணர் வேள்வித்தீயிற்பெய்யும் ஹவிஸ்ஸானது வையையே! உனக்கு வாய்ப்புடையதாயிருந்தது. ஓலையைப் பிடித்துப் படிக் கும் இளைய ஆண்மக்களோடு காமக்குறிப்பில்லாத விளையாட்டைப் புரியும் கூட்டத்தாராகிய அச்சிறுமியர் புலன்களடக்கித் தீமுன் னர்ச் செய்யுந் தவத்தை முன் (பிறவிகளில்) அடுத்தடுத்துச் செய்த தனைப்போலும் **தாயருகாகநின்று தவமாகிய தைந்நீராடலை,** வையையே! நின்னிடமாக வாய்க்கப்பெறுவாராயினர்: இதனை நீ கூறுவாயாக"–என்பதாம்.

இப் பரிபாடற்பகுதியால், வையைக்கரையில் மார்கழிநீராடி நோற்கும் நோன்பு சங்கநாளிலே கன்னிப்பெண்களுக்குட் பெரு வழக்காயிருந்தமை தெளிவாகும். "திங்கள் மறுநிறை யாதிரை... விழவுதொடங்க' என அவ்வடிகளுள் வருவதனால் 'மார்கழித்திங் கள் மதிநிறைந்த' நன்னாளில் இந்நோன்பு ஆரம்பமாகி நடை பெறுவதென்பது உய்த்தறியலாம். இங்ஙனம் தொடங்குவது மார்கழியிறுதியோடு பூர்த்திபெறுவதாதல் வேண்டும். என் னெனில், அம்மார்கழிமாதமே இந்நோன்புக்குரிய காலமாகப் பாகவதமுதலியன குறிப்பித்தலால் என்க.

இனி, இந்நோன்பை 'அம்பாவாடல்' என்ற பெயரால் ஆசிரி யர் நல்லந்துவனார் கூறுகின்றார். தாயோடு ஆடப்படுதலின் இப்பெயர் பெற்றதென்பர், உரையாளராகிய பரிமேலழகர். 'தாயருகாநின்று தவத் தைந்நீராடுதல்' என்று இறுதியில் வரும் தொடரைக்கொண்டு அவ்வுரையாளர் இப்பொருள் கருதினாராகத் தெரிகின்றது. விரதம் நடத்துவோர் சிறுமியரேயாதலின் அவர் நீராடும்போது அவர் தாயரும் பக்கத்தில் நிற்பது இயல்பாதல் பற்றித் 'தாயருகாநின்று' என்று கூறப்பட்டதாகக் கொள்ளத் தக்கதேயன்றி, அங்ஙனம் தாயர் நிற்பதை ஒருபெரிய விசேட மாக்கி, அதுபற்றி 'அம்பாவாடல்' என்று மார்கழிநீராட்டத்துக்கே பெயர்வழங்கலாயிற்று என்று கொள்வது ஏற்புடைத்தாமோ—

என்பது அறிஞர் ஆராய்தற்குரியது. அதனால் முன் குறித்த பாகவதவரலாற்றுக்கியைய, அம்பாவாடலென்பதற்குத் 'தேவியின்பொருட்டு செய்த்தப்படும் நீராட்டு' என்று பொருள் காணுதலே மிகவும் பொருத்தமுடையதாகத் தோற்றுகின்றது. அம்பா என்பது தேவியைக் குறித்தல் வெளிப்படை. மார்கழிநோன்பைத் திருவாதிரைக்குரிய இறைவனது விழாவாகப் பரிமேலழகர் கருதினரேனும், அச்செய்தியொன்றும் மூலத்தாற் புலப்படாமையும் காண்க.

இவ்வாறு, மார்கழித் திருவாதிரையில் நீராட்டத்துடன் தொடங்குவதாகக் கூறப்பட்ட நோன்பைத் திருப்பாவை கூறுமாறு 'மார்கழிநீராடல்' என்று குறியாது, 'தைந்நீராடல்' என்ற பெயராற் சங்கநூல்கள் கூறுகின்றன. இதனை—'தவத்தைந்நீராடல்' 'இன்னபண்பினிற் றைந்நீராடல்' எனவரும் இப்பரிபாடற் றொடர்களாலும்

[2]"வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ" (கலித்தொகை-59)

[3]"இழையணி யாயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கட் டண்கயம் படியும் பெருந்தோட் குறுமகள்"
(நெடு-80)

"நறுவீ யைம்மான் மகளி ராடும்
தைஇத் தண்கயம் போலப் பலர்படிந்து" (ஐங்குறு-84)

"வான்பெய னனைந்த புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையின்" (நற் 22)

என்பன முதலிய முன்னூற்றொடர்களாலும் அறிக.[4] பரிபாடல் கூறுமாறு, மார்கழிப் பௌர்ணிமையிற் றொடங்குவதாகிய நீராட்

---

[1] 'ஆருத்திராதரிசனம்' என்னுந் திருவிழாவைப் பரிமேலழகர் கருதினர்போலும்.

[2] "கூரிய எயிற்றினையுடைய இளையமகளிர்க்குநடுவே வகுப்புடைய கோலத்தாலே பொலிவுபெற்று, நீ தைத்திங்களில் நீராடிய நோன்பின் பயனைப் பெறுவையோ, பெருய்காண்" என்று, இரந்து குறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றுறுய்த் தலைவியைநோக்கிக் கூறினன் என்க.

[3] ஆபரணங்கள் அணிந்த தோழியரோடு, தக்கநாணத்தால் தடுக்கப்பட்டு, என்னைப் பெறுமாறு தான் எடுத்துக்கொண்ட நோன்பின் பயனாக தைத்திங்களிலே தண்ணீர்த்தடத்தில் ஆடுகின்ற குறுமகள் என்றவாறு.

[4] 'ஒன்றொழிபொதுச்சொல்' (268), 'இருதிணை யாண்பெண்ணு ளொன்றனையொழிக்கும்—பெயரும் வினையுங் குறிப்பி னானே' என்ற நன்னூற்சூத்திரங்களினுரையில், மயிலைநாதர், உயர்திணை வினைச்

டத்தைத் தைந்நீராடலென இங்ஙனம் முன்னோர் கூறியதன் காரணம் என்னெனிற் கூறுவேன். பௌர்ணிமையும் திருவாதிரையும் மார்கழிமாதம் 15-ஆம் தேதியிலேனும் அதன்பின்பேனும் ஒன்றுசேர்வது இயல்பு. அமாவாசையோடும் பௌர்ணிமியோடும் மாதங்கள் முடிவுபெறுதலால் முறையே அமாந்தம், பூர்ணிமாந்தம் என்னும் பெயர்கொண்ட இருவகைமாதமுறைகள் வழங்கிவருவனவற்றுள், பூர்ணிமாந்தம் என்ற முறைப்படி, மார்கழியிடையிற் பௌர்ணிமைக்குப் பின்வரும் மாதம்—மார்கழியின் பிற்பகுதியும் தையின் முற்பகுதியுமாமென்றும், அதனால் மார்கழிநீராட்டம் தைந்நீராட்டம் என்று இருவகையாகவும் அந்நீராடலைக் கூறுவது கூடுமென்றும் கூறுவர். அதனால், மார்கழியில் நிகழ்த்தப்படுவதாகத் தெளிவாய் அறியப்பட்டதைத் தைந்நீராடல் என்று பரிபாடல் முதலியவை வழங்குவதற்கு இதுவே காரணம் என்க. எனவே, மார்கழிநோன்பு முற்காலத்தே பூர்ணிமாந்த முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதும், ஆயினும், ஸௌரமானப்படி தைம்மாதமும் அதனுடன் கலந்துவருதலால் 'தைந்நீராடல்' என்று அதற்குப் பெயர் வழங்கியிருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றன.

இனி, மழை பெய்து நாடு செழிக்கவேண்டி ஸ்ரீ ஆண்டாளும் வாதவூரடிகளும் கூறியவாறே 'வெம்பாதாக வியனில வரைப்பென' (=இம்மாநிலம் மழையாற் குளிர்வதாக) என்று கன்னியர்கூற்றில் வைத்துப் பரிபாடல்கூறுவதும் ஈண்டு ஒப்பிடத்தக்கது. மேலும், கண்ணபிரானையும் சிவனடியாரையும் தங்கணவராக அடைதல் வேண்டிக் கன்னியர் நோற்பதாகத் திருப்பாவை திருவெம்பாவைகள் முறையே குறிக்குமாறுபோலப் பரிபாடலிலும்—"வரைவு மலிந்த தோழி, கன்னிப்பருவத்துத் தைந்நீராடத் தவந்தலைப்பட்டேம் என வையையைநோக்கித் தலைமகன்கேட்பச்சொல்லியது" எனத் துறைக்குறிப்பு எழுதப்பட்டிருத்தலும் அறியத்தக்கதாம். அக்குறிப்புக்குக் கன்னிப்பருவத்தில் தைந்நீராடி நோற்ற விசேடத்தால் தன் தலைவி உத்தமநாயகனைப்பெற்று இப்போது விளங்குகின்றாள் என்று தலைவன்கேட்பத் தோழி மகிழ்ந்துகூறினள் என்பது கருத்தாதல் காண்க. இவற்றால் திருப்பாவை திருவெம்பாவைகளோடு, 11-ம் பரிபாடல் கருத்தாற் பெரிதும்

சொல் ஆணொழித்து நின்றமைக்கு—'மருவூரார் தைந்நீராடினார், இன்று இவ்வூராரெல்லாந் தைந்நீராடுப' என்ற தொடர்களை உதாரணங்காட்டலால், தைந்நீராடல் மகளிர்க்கு உரியதேயன்றி ஆண்பாலார்க் குரியதன்றென்பது விளங்குதல் காண்க.

ஒத்து மார்கழிநோன்பின் ஆதிவரலாற்றை மிகத்தெளிவாக்குதல் அறியலாகும்.

இனிப் பெண்பாற்பிள்ளைப்பாட்டின் செய்திகூறும் பிங்கலந் தைச் சூத்திரத்துள் (1369)—

''பேணுஞ் சிறப்பிற் பெண்மக வாயின்
மூன்று மாண்டிற் குழமண மொழிதலும்
ஐந்தின் முதலா வொன்பதின் காறும்
ஐங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும்
பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்''

எனவரும் அடிகளிலே ஈற்றிலுள்ள 'பனிநீர் தோய்தலும் பாவையா டலும்' என்பன, தைந்நீராடிப் பாவைநோன்பு நோற்பதைப் பற் றியதாகவே கொள்ளத்தகும். 'குழமணமொழிதலும்' (=பாவைக்கு மணம்பேசி விளையாடலும்) என வேறுவருதலால்' 'பாவையாடல்' என்பது, பாவையைவைத்து விளையாடலன்றென்பதும், 'பனிநீர் தோய்த' லுடன்கூடிவருதலின், அது மார்கழிப் பாவைநோன்பே யாதல் வேண்டுமென்பதும் உய்த்தறியக்கிடக்கின்றன. தை இத் தண்கயம்' என்பவாகலின் 'பனிநீர்தோய்தல்' என்றார். 'திருந்து பூவல்லியுந்தி தோணோக்கஞ் சிறந்தபாவை' எனவும் (திருவாலவா யுடையார் புராணம், 27, 58.) பாவைப்பாட்டு (தொல் - பொருள். 461, உரை) எனவும் வழங்கலின் மார்கழித் திருவெம்பாவை நோன்பைப் பாவை எனவும் தனியே வழங்குதலுண்டு என்பது தெரியலாம். மேற்கூறிய பிங்கலந்தைக்கூற்றால், ஐந்துமுதல் ஒன் பதுவயதுவரையுள்ள சிறுகன்னியரே தைந்நீராடி நோற்றற்குரியர் என்பது பழைய விதியாதல் பெறப்படும். நல்லந்துவனாது பரிபாட்டினும், காமக்குறிப்பில்லாத கன்னியர்நடத்தும் விரத மாகவே கூறப்பட்டிருத்தல் கண்டுகொள்க. இவ்வாறாயினும் சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்தே கன்னியரெல்லாராலும் இந் நோன்பு கைக்கொள்ளப்பெற்று வழங்கியதென்பது திருப்பாவை திருவெம்பாவைகளினின்று தெரிகின்றது.

இனி, ஆண்டாளது திருப்பாவையில் இந்நோன்பின்செய்தி கள் சில குறிப்பிக்கப்படுகின்றன. இவ்விரதகாலத்திற் கன்னியர் நிகழ்த்திவந்த கிரியைகளை ஆண்டாளது திருப்பாவையில்—

''வையத்து வாழ்வீர்காள் நாமுநம் பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுட்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி

மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்"

என்னும் பாசுரத்தாலும், இந்நோன்புக்காலத்தே வழங்கும் வாத்தியங்களையும் விருதுகளையும்—

"மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும், நோன்புமுடிந்ததும் மகளிர்கொள்ளுங் கோலத்தையும் விருந்தையும்—

"கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினா லன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறும்
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும், இந்நோன்பால் விளையும்பயன் மழைபெய்து நாடு செழித்தலும் கோவிருத்தியுமா மென்பதை—

"ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும் மாரிபெய்
தோங்கும் பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வ நிறைந்தேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும், இந்நோன்பைக் கன்னியர் நோற்பது தாம் ஒப்புயர் வற்ற தலைவரையடைந்து உய்வதற்கே என்பதை—

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரை யடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றமேய்த் துண்ணுங் குலத்தில் பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும் அறியலாகும். இறுதியிற் குறித்த பயனையே,

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்"

"உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழி லென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்"

எனத் திருவெம்பாவைப் பாசுரங்களும் குறிப்பிடுதல் காண்க. இவ்வாறு இம்மைப்பயன்கருதிக் கன்னியரால் ஆதியில் நடத்தப்பெற்றுவந்த மார்கழிநோன்பானது, மறுமைகருதி அடியார்களால் ஈசுவரபரமாகப் பாடப்பெறும் பெருமையை அடைந்தது. ஆனால், இந்நோன்பின் பழஞ்செய்திகள் மறக்கப்பட்டும் கன்னிப் பெண்களால் இது கைக்கொண்டு நடத்தப்படாமலும்போயின. எனினும், அவ்வடியார்கள் அருளிய திருப்பாவை திருவெம்பாவைகளை முக்கியமாகக்கொண்டு அம்மாதத்துவரும் உதயகாலங்களில் நீராடுவதும் அத்திவ்யப்பிரபந்தங்களை யோதுவதும், ஆராதனை

கள்நடத்துவதுமாய் ஆண்பாலர் பெண்பாலர் எல்லாராலும் சமயாசாரமாகக் கொண்டு பின்னோராற் பெரிதும் இஃது அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. திருவாதிரைக்குப் பத்துநாள்கட்கு முன்பு தொடங்கி அவ்வாதிரையோடு திருவெம்பாவையிருபதுபாடலும் சைவர்களால் ஓதப்பெற்றும், நாளொன்றுக்கு ஒருபாடலாகத் திருப்பாவைமுப்பதும் வைஷ்ணவர்களால் மாதமுழுதும் ஓதப்பெற்றும் கொண்டாடப்படுகின்றன. மார்கழிமுழுதுமே நீராட்ட்த்துக் குரியதாயினும், திருவாதிரையே அதற்குச் சிறந்தநாளாக முன்னோரெல்லாராலும் ஒருங்கு கொள்ளப்பட்டதென்றேதோன்றுகின்றது. இதனை,

"மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்க"

என்னும் பரிபாடலாலும்,

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"

என்னும் திருப்பாவையடிகளாலும்,

"......................மார்கழித் திங்கடன்னில்
ஆதிரைநாண்முன் னீரைந் தாகிய தினங்களெல்லாம்...
புனற்றடமாடல் செய்வார்"

என்னும் திருவெம்பாவை வரலாற்றாலும் அறியலாம். ஆயினும் அநுஷ்டானமுறையிலே சிற்சில பேதங்களைப் பண்டையோர் கொண்டிருந்தவர்களேயாவர்.

இவ்வாறு, மார்கழி நோன்பானது தன்பூர்வநிலைமாறிச்சமயாநுஷ்டானமாக இப்போது எல்லோராலும் கொள்ளப்படினும், தமிழ்நாட்டின் பழைய வழக்கங்கள் பலவும் இன்றுங் காணக்கூடிய பிரதேசமான மலையாளநாட்டிலே, அந்நோன்பு தன் முன்னிலைமையிற் சிறிதுமாறி இன்றும் வழங்கிவருதல் அறியத்தக்கதாம். அந்நாட்டார் கொண்டாடும் முக்கிய உற்சவங்களுள்ளே, 'திருவாதிரைத் திருவிழா' என்பதும் ஒன்று. இப்பெரிய விழா, மார்கழியில் இளம் பெண்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று, அம்மாதத்துவரும் திருவாதிரைநாளோடு முடிவுறுவதாகும். அங்கு நடைபெறும் இத்திருவிழாவின் செய்திகளாக, ஸ்ரீமாந். கோபால பணிக்கர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "மலையாளமும் அதில் வாழ்நரும்" (Malabar and its folk) என்ற நூலிற் காணப்படுஞ் செய்திகள் அடியில் வருமாறு:—

* மார்கழியின் மதிநிறைந்த நன்னாளாகிய் பௌர்ணிமை, திருவாதிரை நக்ஷத்திரத்தை ஒட்டிவருவதாதல் காண்க.

"மலையாளத்தில் நடைபெறும் மூன்று முக்கிய உற்சவங்களிலே திருவாதிரை என்பதொன்றும். அஃது அங்கே தனுர்மாஸத்தில் திருவாதிரை நாளிலே முறைப்படி நிகழும். இவ்வுற்சவம் பெண்களால்மட்டும் மிகுதியாகக் கொண்டாடப்படுகின்றது. உத்தேசம் ஒருநாள்தான் அது விசேடமாக நடைபெறும். இவ்விழா, புராணத்துக் கூறப்பட்டபடி, காமனுடைய அழிவுக்காலத்தைக் காட்டுகிறதென்பது ஜனங்களின் அபிப்பிராயம்......(காமனுடைய) துக்ககரமான கதையானது ஞாபகத்தில் வைக்கப்பட்டு முக்கியமாக ஸ்திரீகளால் வருஷத்துக்கொருமுறை விசேஷ உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. குறித்தநாளுக்கு ஒருவாரத்துக்கு முன்பாகவே இவ்வுற்சவம் தொடங்கப்பெறும். காலை நாலுமணிக்கே பெண்களெல்லாம் படுக்கைவிட்டெழுந்து ஆசாரமுறைப்படி தடாகங்களில் ஸ்நானம் செய்வார்கள். அவருள்ளும், பாலப்பருவமுள்ள பெண்களே கூட்டங்கூட்டமாகச்சேர்ந்து நீராடுதல் அதிகம். அக்காலங்களில் எல்லோரும் தண்ணீருக்குள் மூழ்கி உற்சாகமாகப் பாடுவர். அப்பாட்டு, யாரேனும் ஒருபெண்ணால் சுருதியை அநுசரித்து மன்மதனைக் குறித்து ஆரம்பிக்கப்படும். இந்தப்பாட்டு, பெண்கள் தம் கைகளால் தண்ணீரைத் தட்டுவதனால் உண்டாகும் ஒரு விசேஷசப்தத்தை அநுசரித்து நிற்கும். அவர்கள் இடக்கையை மூடித் தண்ணீர்மட்டத்திற்குக் கீழே ஜலத்தில் அமிழ்த்துக்கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்ப்பாக அடித்து இந்தத் தாளத்தை உண்டாக்குகின்றனர். இப்பெண்கள் பாடுங்காலமுழுதும் இவ்வாறு சத்தம் செய்யப்படும். இத்தகைய தாளத்துடன் ஒருபாட்டு முடிந்ததும் மற்றவரும் அதனைப் பின்தொடர்ந்து பாடியும் சிறிதுநேரம் இளைப்பாறி மறுபடியும் அதனைத் தொடங்கியும் இவ்வாறு முறைவைத்துக் குதூகலிப்பது வழக்கம். இவ்விதமாக அருணோதய காலம்வரை பெண்களெல்லாம் காலத்தைப்போக்கி உடம்பை நன்றாகத் துடைத்துக்கொண்டு சுத்தமும் மிக்க அலங்காரமுமுள்ள ஆடைகளை உடுத்தும் கண்களுக்கு அஞ்சனந் தீட்டியும் நெற்றிக்குறி தரித்துக்கொண்டும் தாம்பூலதாரணஞ் செய்தும் விளங்குவார்கள். பிறகு எல்லாப்பெண்களும் உற்சவத்தில் முக்கியமாக நடைபெறும் ஊஞ்சலாட்டத்தைத் தொடங்குவார்கள்.

* * * *

இவ்வாறு ஸ்நானஞ்செய்வதும் பாடுவதும் ஊஞ்சலாடுவதும் உற்சவக் கடைசிநாளோடு முடிவுபெறும். ஆனால் இக்கொண்டாட்டமானது இறுதிநாளிற்றான் விசேடமாக நடைபெறுவதாம். உற்சவ முடிவில் காலையிலே எல்லாப் பெண்களும் ஸ்நானஞ் செய்தபிறகு கொஞ்சம் வெள்ளம் குடித்துவிட்டுப் பகலில் ஒரு பெரிய விருந்து நடத்துவார்கள். அவ்விருந்தில் உயர்ந்த மலைப்பழங்களும் சர்க்கரை கலந்த சீந்திற்பாயஸமும் உண்ணப்படும். அஸ்தமனம் வரையிற் கொண்டாட்டமும் ஆடல்பாடல்களும் நடைபெறும். விஷு, ஓணம்

என்ற திருவிழாக்களிற் புருஷர்கள் எவ்வாறு மாலையில் வந்திருப்பது அவசியமோ, அவ்வாறு இத்திருவாதிரைத் திருவிழாவிலும் வந்திருத்தல் அவசியம். அப்படிச் செய்யத்தவறிய புருஷர் செயலை, தங்கள் ஸ்திரீகளை விட்டுப்பிரிந்துபோவதற்கு அடையாளமாகக் கருதுவார்கள். மார்கழிமாதத்துப் பனியுறைப்பும் கீழ்காற்றின் குளிர்மிகுதியும் பெண்களின் மெல்லிய மேனிகட்கு மிக்கதுன்பத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தும், இம்மகோற்சவத்தில், காலையில் நீராடுவதிலும் அந்நீராட்டத்தில் ஆடல்பாடல் நிகழ்த்துவதிலும் அதிக ஆனந்தத்தை அன்னோர் அடைகின்றனர். பனியின் உறைப்பால் காற்றில் இலை நடுங்குவதுபோலச் சரீரம் படபடத்துக்கொண்டிருந்தும் நீராடுகின்ற இக்கொண்டாட்டம் அவர்கட்கு அதிக மனோற்சாகத்தை அளிக்கின்றது. மலையாளநாட்டில் நடக்கும் இக்கொண்டாட்டத்தைப்போல வேறு எவ்விடத்துங் காண்பதரிது" எனக் கண்டுகொள்க.

மேலேகாட்டிய செய்திகளால், மலையாளத்துத் திருவாதிரைப் பெருவிழாவானது, பழைய மார்கழிநோன்பினின்றே சிற்சில மாறுபாடுகளுடன் இக்காலத்து நடைபெறுவதென்பது புலப்படும். திருப்பாவை திருவெம்பாவைகளின் கருத்தைத்தழுவிச் சைவமுறையாகவோ வைணவமுறையாகவோ மலையாளத்துப் பெண்களால் இவ்வுற்சவம் நடைபெறுவதன்று; மற்றுத் தமிழ்நாட்டுப் புராதன வழக்கொன்றைப் பற்றியே அஃது அங்கு வழங்குவதாம். மார்கழிநீராடும்போது, ஜலத்திற் பெருஞ்சப்தம் கிளப்பிக் கொண்டு மலைநாட்டுப் பெண்கள் மூழ்கும் மாதிரிகையையே, வாதவூரரும்,

"மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி"

—எனவும்,

"பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புன லாடேலோ ரெம்பாவாய்"

எனவும் கூறுதல் காண்க. இவ்வுற்சவத்திறுதியில் மலைநாட்டு மகளிர் ஆடையாபரணாதிகளால் தம்மை அலங்கரித்துக்கொண்டு கூடி விருந்துண்பதும் அவ்விருந்திடையே பாயசம் விசேடமாக உபயோகப்படுவதும் முற்காலத்தும் வழங்கியவைகளே என்பதைத் "கூடாரைவெல்லுஞ்சீர்" என்னும் பாசுரத்தில்,

"பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறும்
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

எனவரும் அடிகளால் அறியலாம்*. இவ்வொற்றுமைகள் திருவாதிரைத் திருவிழாவுக்கும் பழைய மார்கழிநோன்புக்கும் உள்ளனவாயினும், அத்திருவிழா காத்யாயனீவிரதமாகக் கருதப்படாமல் மன்மதனைப் பற்றியதாக மலையாளநாட்டாராற் பாவிக்கப்படுகின்றது. ஆனால், மன்மதசம்பந்தமுடையதாக அந்நாட்டார் அதனைக் கருதுவதற்குச் சிறிதும் நியாயமேயில்லை. என்னெனில், காமனோன்பு பங்குனிமாதத்தே பழங்காலமுதல் நடைபெறுவதேயன்றி மார்கழிக்குரியதன்றும். ஸ்ரீ ஆண்டாளும், மார்கழிநோன்பைத் திருப்பாவையாற் பாடிக் காமனோன்பைத் "தையொரு திங்களும்" என்ற தனிப்பதிகத்தாற் கூறுவதோடு, அந்நோன்பு பங்குனியோடு முடிவுறுவதென்பதைக் குறிப்பித்தருளுதலும் காணலாம். ஆதியிற் கன்னியர்க்குள்மட்டும் நடைபெற்றுவந்த இவ்விரதம் மலையாளநாட்டிற் பெண்களெல்லாராலும் நடத்தப்படுவதாகவும் தெரிகின்றது.

மேலே யான் விரிவாகக் காட்டிப்போந்த விஷயங்களால், மார்கழிநோன்பின் ஆதிவரலாறு இத்தகையதென்பதும், சங்கச் செய்யுட்களில் 'தைந்நீராடல்' என்று கூறப்படும் விரதம் அம்மார்கழிநோன்பின் வேறுகாதென்பதும் புலப்படக்கூடியன.

---

* மார்கழித் திருவாதிரையன்று 'அக்காரடலை' நிவேதனம் செய்வதற்கென்று, முதல் இராஜராஜசோழன் கோயிற்கு நிலங்கள்விட்டுள்ள செய்தி சாஸனத்தால் அறியப்படுகின்றது (Ep. Rep. 68 of 1914). இதனால் அக்காரடலை (சர்க்கரைப் பொங்கல்) அவ்வுற்சவத்திற்கு முக்கியமானதென்பது உணரப்படும். வைஷ்ணவர்க்குள் அது சிறப்பாக இன்றும் வழங்கப்படுகின்றது. திருவாதிரைக்களி எனச் சைவர்க்குள் வழங்குதலும் இத்தகையதேயாம்.

# 14. திருவள்ளுவரைப்பற்றிய சில குறிப்புக்கள்*

## (1) திருவள்ளுவர் காலம்

இடைச்சங்கத் திறுதியில் கபாடபுரம் கடல்கோளால் அழிவுற்றபின்பு, அச்சங்கமிரீஇய முடத்திருமாறனால் மதுரையிற் கடைச்சங்கம் தொடங்கப்பட்ட தென்பதும், அக்கடல்கோட் காலம் கி. மு. 3, 4–ம் நூற்றாண்டுகள் என்பதும் களவியலுரையாலும் பிறகருவிகளாலும் தெரியவருஞ்செய்தி முன்னரே விளக்கப்பட்டது. இங்ஙனம் மதுரையில்நிகழ்ந்த சங்கம், பாண்டியர் தலைமையிற் பன்னூறாண்டுகள்வரை தமிழ்வளர்ச்சிபுரிந்ததாகும். அதனால், கடைச்சங்ககாலம் இன்னநூற்றாண்டது என்று வரையறுத்தல் கூடாததாயினும், 1400-க்கு வருஷங்கட்குமுன்—அஃதாவது கி. பி. 5–ம் நூற்றாண்டுவரை—அதன்தொடர்ச்சி இருந்து வந்ததென்றே சொல்லலாம். இச்சங்ககாலத்து விளங்கிய பெருமக்களுட் பழமைவாய்ந்தவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் ஆவர். கடைச்சங்ககாலத்தவர் பலர்க்கு முன்புவிளங்கியவர் இத்தெய்வப்புலவர் என்றே தெரிகின்றார். திருவள்ளுவர் வழங்கிய சொற்பொருள்வழக்குக்களை எடுத்தாளாத சங்கநூல்கள் சிலவென்றே சொல்லலாம். அங்ஙனம் ஆண்டவற்றுளொன்றான மணிமேகலையிலே, பரசுராமர் காலத்திருந்த சோழவரசனாகிய ககந்தன் என்பானுடைய மகன், புகார் நகரில் காவிரிக்கரைக்குச் சென்ற மருதி என்னும் பார்ப்பனியை இச்சிக்க, அதற்கு அவள் உள்ளநடுங்கி விரைந்தோடி அந்நகர்ப் பூதசதுக்கஞ்சென்று, அத்தெய்வத்தை நோக்கித் தனக்குநேர்ந்த கற்புக்குறைவைப்பற்றிப் பிரலாபித்தபோது,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என, அத்தெய்வம் அவளைநோக்கிக் கூறியதாகச் சாத்தனார் பாடியிருத்தலைக் கற்றோர் அறிவர். இங்ஙனம் பரசுராமர் காலத்துக்

---

* செந்தமிழ், தொ - 8, ப - 11 (1909 - 1910) தமிழர்நேசன், தொ-10 ப - 1.

கதையிலே, தெய்வமொன்றன் கூற்றில்வைத்து நம் திருவள்ளுவர் வாக்கைஅப்புலவர் தொடுத்திருத்தல் குறிப்பிடத்தக்கது. இதனுல், அப்புலவர்பெருமான் சில நூற்றாண்டுகளளவேனும் சாத்தனுர்க்கு முற்பட்டவராதல்வேண்டும் என்பது பெறப்படத் தடையில்லை. நம் காலத்திருந்த பெருங்கவிஞரொருவர் வாக்கை, இராமாயண காலத்தவரான ஒருவரது கூற்ருகவைத்து 'சிரபுரப்புலவன் சிறப்புரை தேருய்' எனின் அது சிறிதும் ஏற்புடையதாகாதென்பது திண்ணம். எனவே, பொய்யில்புலவர் எனப்பட்ட தெய்வப்புலவர் தமக்குச் சில நூற்றாண்டுகளேனும் முற்பட்டவ ராயிருந்தாலன்றி, இவ்வாறு மணிமேகலையில் அமைத்துப் பாடச் சாத்தனர் ஒருப்பட்டிரார் என்றே சொல்லலாம்.

## (2) பிரமதேவனும் திருவள்ளுவரும்

இங்ஙனம் பழைமை பெருமை வாய்ந்த திருவள்ளுவனுரை நான்முகனமிசம் என்று கூறும்வழக்குப் பழமையாக வழங்கி வருவதாகும். திருவள்ளுவமாலையிலே—

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—நூன்முறையை"

என்று உக்கிரப் பெருவழுதியாரும்

"ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனுகி
அந்தா மரைமே லயன்"

என்று காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனுரும்பாடியிருத்தல் காண்க. "வேதப்பொருளை விரகால் விரித்துலகோர்—ஓதத் தமிழால் உரைசெய்" தமைபற்றி வள்ளுவனுரை இவ்வாறு முன்னேர் உபசரித்துக் கூறினர் என்பது ஒரு கருத்தாயினும், இதனினும் சிறந்த காரணமொன்று இதிகாசத்தினின்று புதியதாகத் தெரிய வருகின்றது. அஃதாவது—பிரமதேவர் **திரிவர்க்கம்** என்ற மகா சாஸ்திரத்துக்கு ஆசிரியர் என்ற செய்தியேயாம். மகாபாரதம், சாந்திபர்வம் 58–ஆம் அத்தியாயத்தில், உலகம் ஒரு காலத்தே தர்மங் குன்றி அதர்மத்தால் தலைதடுமாறி நின்றபோது, தேவர்கள் பிரமதேவரிடஞ் சென்று முறையிட, அப்பகவான் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, லக்ஷம் அத்யாயமுள்ள பெருநூலொன்றைத் தம் புத்தியால் இயற்றினர் என்றும், அதனில் **அறம்பொருளின்**

பங்களான திரிவர்க்கங்கள் அவரால் விரிவாக உரைக்கப்பட்டன என்றும், அம் மகா சாஸ்திரத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் இன்னவின்ன என்றும், பின்பு அத் திரிவர்க்கமென்னும் தண்ட நீதியைச் சுருக்கி வைசாலாக்ஷம், பாகுதந்தகம், பார்ஹஸ்பத்தியம், சுக்கிரநீதி என்ற நூல்கள் முறையே சிவபிரான் இந்திரன் வியாழன் வெள்ளி என்பவர்களால் இயற்றப்பட்டன என்றும் விரிவாகக் கூறப்படுகின்றன.

இவ்வரிய செய்தியினின்றும், பிரதேவர் இயற்றிய திரிவர்க்கம் முப்பாலாக முதன்முதற் றோன்றிய தென்பதும், அதனிலிருந்தே ஏனைய நீதி நூல்களெல்லாம் கிளைத்தன என்பதும் தெரியலாம். இவ்வாறு வள்ளுவனார், பிரமதேவரது **திரிவர்க்க நூலைச்** சுருக்கி **முப்பால்**என்ற பெயரால் தம் அரியபெரிய நூலைத் தமிழுலகுக்கு அருளிய சிறப்புப் பற்றியே, முன்னோர் 'நான்முகன் அவதாரமான திருவள்ளுவர்' என்று கூறலாயினர் என்று கொள்ளுதல் பெரிதும் பொருந்துவதாதல் காண்க.

## (3) திருவள்ளுவப் பெயர்க்காரணம்

திருவள்ளுவர் என்ற இவர் பெயர், பிறந்த குலம்பற்றி இவர்க்கு வழங்குவதென்று கூறுவர். வள்ளுவர் என்ற குடியினர் தாழ்குலத்தவருள் ஒருவராய் (தொல். பொருளதி. 91, நச்.), விசேட காலங்களிலே அரசாணையை முரசறைந்து சாற்றுவோர்* என்பது முன்னூல்களால் அறியப்படுகின்றது. சோதிட நூல்வல்ல நிமித்திகராகவும் பண்டைக் காலத்தே இவர் விளங்கினர் (சீவக. 419). சங்க காலத்தே, தமிழ் நாட்டவருள் சாதிபற்றிய இழிவும் அதன் மூலம் அருவருப்பும் இப்போதுள்ளனபோல இருந்தனவல்ல. தமிழ் வேந்தர்களுந் தலைவர்களும், பாணர் முதலிய தாழ்குலத்தவர்களை அவரது கல்வி யறிவு முதலியனபற்றி எவ்வளவு சிறப்பாகக் கௌரவித்துவந்தன ரென்பதற்குச் சங்கச்செய்யுட்களே தக்க சான்றாக உள்ளன. ஔவைப்பிராட்டியை ஆடல்பாடல் வல்ல விறலியர் கூட்டத்தவராகக்கொள்ள இடமுண்டு. ஆகவே, குலச்சிறுமை, அவரது கல்விப்பெருக்கிற்கும் கௌரவத்துக்கும் தடையாகப் பண்டைக் காலத்தில் இருந்ததில்லை என்று உறுதி கூறலாம். அதனால் நம்புலவர்பெருமான் வள்ளுவக்குடியிற் பிறந்து பெருமைபெற்றவர் என்று ஒருசாரார் கொள்வதிற் குறையொன்றுமில்லை என்க.

---

* "இருநாள் படைநாள் கடிநா ளென்றிப், பெருநாட் கல்லது பிற நாட் கறையா...வள்ளுவ முதுமகன்" என்பது பெருங்கதை (2, 2, 32-4).

இனி, அரசர்க்குக் கருமத்தலைவராய் உயர்பதவி வகித்தவர்க்கு **வள்ளுவன், சாக்கை** என்ற சிறப்புப்பெயர்கள் முன்பு வழங்கலாயின என்பது—

"வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்கு
உள்படு கருமத் தலைவர்க் கொன்றும்"

என்ற திவாகர சூத்திரத்தால் அறியப்படுகின்றது. உள்படு கருமத்தலைவர்—அரசர்கீழ்க் காரியத் தலைமை வகிக்கும் அதிகாரிகள். இதனால் இராசகாரிய வல்லபராய் விளங்கியவர்க்கு வள்ளுவப் பட்டம் வழங்கிவந்தசெய்தி தெளியப்படும். இதனின்று அப்பெயரின் உண்மையுருவமும் பொருளும் ஒருபடியாக விளங்க இடமேற்படுகின்றது. அஃதாவது **வல்லபர்** என்ற வடமொழி **வள்ளுவர்** என்று தமிழில் திரிந்தது போலும் என்பதாம். இவ்வாறு கூறுவது சிலர்க்குப் புதுமையாகத் தோன்றக்கூடும், ஆனால், அடியிற்கண்ட அரிய செய்தி இக்கருத்தை ஆதரித்து நிற்றல் அறியத்தக்கது.

புதுக்கோட்டைச் சித்தண்ணவாசலிலே அமைந்த மலைக்குகைச் சாஸனமொன்று, பாண்டியன் **அவனிபசேகரன்** காலத்ததாக உள்ளது. இப்பாண்டியன் 9-ம் நூற்றாண்டில் ஆண்ட ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனவன். இச்சாஸனம் அமைத்தவர் **மதுரையாசிரியன் இளங்கௌதமன்** என்ற புலவர். அதனில் இப்பாண்டியன் **சிரீவல்லுவன்"*** என்று குறிக்கப்பட்டுள்ளான்.

ஸ்ரீவல்லபன் என்றபெயரைப் பாண்டியர் பலர்பெற்றிருந்தவர் என்பது சரித்திரவறிஞர் நன்கு அறிவர். ஆகவே, இச்சாஸனத்துள்ள சிரீவல்லுவன் என்ற பெயரின் மூலவுருவம் ஸ்ரீவல்லபன் என்பதேயாதல் காண்க. இவ்வாறே சோணாட்டுத் திருவிசலூரிலுள்ள சிவன்கோயில் வடக்குத் திருமதிலில் அமைந்த பரகேசரிவர்மன் இராஜேந்திரசோழனது (1011—43) மூன்றும் ஆட்சி வருஷத்தில் அமைந்த சாஸனமொன்றும், **பாண்டியன் ஸ்ரீவல்லுவர்** மனைவி டி கோயிலுக்குச் சில திருவாபரணங்கள் அளித்தனள் என்று கூறுகின்றது. "பாண்டியன் ஸ்ரீவல்லுவர் தேவியார்... சுந்தப் பாவையார்" (Ep. Rep. 46 of 1907; I. M. P. Tj. 416) என்பது அச்சாஸனத் தொடர். அச்சோழன்காலத்துப் பாண்டியன் ஸ்ரீவல்லபன் என்பது சாஸனங்களால் தெளிய அறிந்த செய்தியாம். இச்சோழன் மகன் வீரராஜேந்திரன்—

* ஆர்கெழு வைவே லவனிப சேகரன், சீர்கெழு செங்கோற் **சிரீவல்லுவன்**" (Ep. Rep. 368 of 1994; I. M. P. Pd. 267)

**"தென்னனைச் சிரீவல்லவன் மகன் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீரகேசரியை
மதவரை யொன்றா லுதைப்பித்து"ப்**

போந்தான்—என்று மெய்க்கீர்த்தி கூறுவதும் காணலாம். இவற்றால், வல்லபன் என்ற வடசொல் வல்லுவன் என்று தமிழிற் பண்டைக்காலத்தே திரிந்து வழங்கிவந்ததென்பது பெறப்படுகின்றது. வல்லபன் என்ற அச்சொல், அன்புக்குரியவன், நாயகன், **கருமஅத்க்ஷயன்** என்ற பொருள்கள் உடையதாம். ஸ்ரீவல்லபன் என்பது அரசனைக் குறிக்கும்போது, திருமகள்நாயகன் என்று பொருள்பெறும். எனவே, மன்னரின் கீழ்க் கருமத்தலைவராக விளங்கியவர்க்கு வழங்கும் வள்ளுவப்பெயரும் அவ்வல்லபச்சொல்லின் திரிபு என்று கொள்ளுவது ஏற்கும். மாளவர், குட்டவர் (=குட்ட நாட்டவர்), ஈழவர் என்பன—மாளுவர், குட்டுவர், ஈழுவர் என இடையுகரம் பெறுதலும், வல்லி, வள்ளி (கொடி), வல்லூரம், வள்ளூரம் (=தசை) என்றவாறு, வடமொழி லகரம் ளகரமாகத் திரிதலும் பெருவழக்காதல் காண்க.

மேற்கூறியவற்றிலிருந்து, நம் புலவர் பெருமான் "மன்னர்க்கு உள்படு கருமத்தலைவராய்" விளங்கியிருந்தமையால் வள்ளுவரென்ற பெயர்பெற்றனர் என்று கூறுதற்கிடமுண்டு என்பது தெரியலாம். தென்பாண்டியிலுள்ள நாஞ்சில்நாட்டின் தலைவனொருவன் புறநானூற்றில் (137) சிறப்பிக்கப்படுகின்றான். இவன் சேரனது படைத்தலைமை வகித்தவன். இவனுக்கு **நாஞ்சில் வள்ளுவன்** என்ற பெயர் வழங்குகின்றது. அரசனது கருமத் தலைவனாயிருந்தது பற்றியே இப்பெயரை அவன் பெற்றிருத்தல் வேண்டும். "ஸ்ரீ சோகிரத்துப் பருடையாரும்...**இயாய சேகராயின வள்ளுவருங்** கூடிச் செய்த செய்த கச்சமாவது" என்ற சாஸனத் தொடரும் இக்கருத்தினையே வலியுறுத்துதல் காண்க. (S. I. I. Vol. V, No. 776). இவ்வாறே வள்ளுவனாரும் தம்பெயரைப் பெற்றவர் என்பதற்கு ஆதாரம் என்னை என்று சிலர் உசாவலாம்? அதற்கு அவர் அருளிய நூலையன்றி வேறு சான்றும் வேண்டுமோ? அரசியலில் ஒப்புயர்வற்ற அறிவும் அனுபவமும் இருந்தாலன்றி, திருக்குறளின் பொருட்பால்போன்றதொன்று பிறரால் இயற்ற முடியும் என்று யாவர் கூறவல்லார்? "மன்னர் தடமுடிமேற் றாரன்றே, பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்" என்று சீத்தலைச் சாத்தனார் பாடியதினின்று, வள்ளுவரது அரசியல் ஞானத்தின் நிரதிசயப்பெருமையை மன்னர்கள் கொண்டாடியசெய்தி வெளி

யாதலுங் காணலாம். ஆயின் இத்துணை இணையற்ற அரசியலறிவு மன்னரைச்சார்ந்தொழுகி அரசாங்க விஷயங்களில் ஆழ்ந்தீடுபட்டிருந்தாலன்றி இத்தெய்வப்புலவர்க்கு வாய்த்திராதென்பது திண்ணம். அதனால், இராஜகாரிய நிர்வாக வல்லபராயிருந்தவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை என்க.

வள்ளுவர் என்ற குடியினர்க்கு, அரசாணையை முரசறைந்து சாற்றுதலாகிய 'உள்படு கருமத்தலைமை' இருந்தமையால், வல்லபர் என்பதன் திரிபான வள்ளுவப் பெயர்வழக்கு அமைந்ததென்றும், அத்தலைமைவகிக்கும் முதுகுடியில் அவதரித்தவரே நம் தெய்வப் புலவர் என்றும், அதனாற்றான் இத்தகைய ஒப்புயர்வற்ற திப்பிய நூலைச் செய்யும் திறமையுடையராயினர் என்றும் கொள்ளுதலும் பொருந்தும். இவ்வாறாயின், பழைமையாக வழங்கும் நம் புலவர் வரலாற்றுக்கு யாவும் இயைவனவாகும். எங்ஙனமாயினும், வல்லபசப்தமே வள்ளுவச்சொல்லாய்த் திரிந்துவழங்கியதென்றும், தெய்வத்தன்மை வாய்ந்த அரசியல்நிர்வாக வல்லபராக விளங்கியமை பற்றியே திருவள்ளுவர் என்ற திருநாமம் இப்பெரும் புலவர்க்கு வழங்கலாயிற்று[1] என்றும் கொள்வது ஏற்புடையதாகும்.

## (4) திருவள்ளுவர் ஊர்[2]

தெய்வப்புலவரது ஊர் மயிலாப்பூர் என்பர். இதற்குப் பழைய மேற்கோள் காண்டல் அரிதாயினும் உலகவழக்குப் பெரிதாயுள்ளது. இனித் திருவள்ளுவமாலையில் வரும் முன்னோர் வாக்கொன்று ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

"உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

---

[1] தஞ்சைச் சரசுவதி பண்டாரத்தில், திருக்குறட்கு மொழி பெயர்பாயமைந்த வடநூலொன்றுள்ளதெனவும், இது நூறு வருஷங்கட்கு முன்பிருந்த ஸம்ஸ்கிருத பண்டிதரொருவர் இயற்றியதென்றும், இவர் குறளாசிரியரை வல்லபாசாரியர் என்ற பெயரால் வழங்கியுளாரென்றும் டாக்டர் ஸ்ரீமாந். பி. எஸ். சுப்பிரமணியசாஸ்திரிகள் என்னிடம் ஒருகால் அறிவித்த செய்தி இங்கே குறிப்பிடத்தக்கது.

[2] இது, 1910-ம் ஆண்டு இந்நூலாசிரியரால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பெற்ற திருக்குறள் (கையடக்கப்) பதிப்பின் முன்னுரையுள், 4, 5-ம் பக்கத்துக் கீழ்க் குறிப்பாக அவர்கள் குறித்துள்ள அரியகருத்தைத் தழுவி யமைக்கப்பட்டது.

என்ற நல்கூர்வேள்வியார் பாட்டில், "வடதிசையை நோக்கி, நப்பின்னைப்பிராட்டியை மணந்த கண்ணபிரானை உத்தர மதுரைக்கு அச்சு (ஆதாரம்) என்று கூறுவர்; இப்பக்கத்தை நோக்குமிடத்து, மாதானுபங்கியுடன் கூடியவரும் குற்றமற்ற புலமையுடைய செங்காப்போதாருமான திருவள்ளுவர் தென் மதுரைக்கு அச்சாவார்" என்னும் பொருள்படக் கூறப்பட்டுள்ளது. கீதாசாரியராய் உலகை வாழ்வித்தருளிய கண்ணபிரான் வட மதுரைக்கு எங்ஙனம் ஆதாரமாய்ச் சிறந்தவரோ, அங்ஙனமே திருக்குறளாசிரியராய்த் தமிழகத்தை வாழ்வித்த திருவள்ளுவர் தென்மதுரைக்கு ஆதாரமாய்ச் சிறந்தவரென்பது கருத்து. இப் பாட்டின் போக்கிலிருந்து, வடமதுரை கண்ணன் **அவதாரஸ் தலமாய்** விளங்கியது போலத் தென்மதுரை திருவள்ளுவர் அவ தாரவிடமாக விளங்குவது என்னுங் குறிப்புத் தோன்றுதல்காண்க. கூடற்குத் தென்மதுரையென்னும் வழக்குப் பழமையானதென்பது "தக்கிண மதுரை தான்வறிதாக" என்னும் மணிமேகலையடியானும் அறியப்படும். இவற்றால், திருவள்ளுவர் அவதாரஸ்தலம் மதுரை யெனக்கொண்டு, அவர் வசித்தவிடம் மயிலாப்பூராகக் கோடல் பொருத்தம் என்னலாம்.

## (5) திருவள்ளுவரின் தேவியார்

மேற்காட்டிய 'உப்பக்கநோக்கி' என்ற நல்கூர்வேள்வியார் பாட்டினுள், நம் தெய்வப்புலவரின் தேவியார் பெயரும் குறிப் பிடப்பட்டுள்ளதென்றே சொல்லலாம். கண்ணபிரானையும் வள்ளுவ னரையும் ஒப்புமைப்படுத்துமிடத்து, உப்பக்கநோக்கி + இப் பக்கநோக்கி, உத்தர மதுரை + கூடல் (தக்கிணமதுரை) எனப் பாடிய அப்புலவர், உபகேசி (நப்பின்னை) என்ற தேவியைக் கண்ணனுக்குக் கூறியவாறே 'மாதானுபங்கி' என்ற தொடரால் வள்ளுவர்தேவியைக் குறிப்பிட்டனர் என்றே, பாட்டமைதியாற் கொள்ளத்தகும். மாதானுபங்கி என்பது தாயை நிகர்த்த ஒழுங்கினர் எனப் பொருள்படும் என்பர். தந்தையை நிகர்த்தவர் என்னாது தாயைநிகர்த்தவர் என்றமையால், அவ் வடதொடர் பெண்பாலுக்கே பெரிதும் ஏற்புடையதாதலுங் காண்க. எனவே, 'மாதானுபங்கி...செங்காப்போதார்' என்ற தொடர்க்கு, 'மாதானு பங்கியாகிய செங்காப்போதார்' எனப் பின்னோர் கொண்ட பொருள் ஏற்கத்தக்கதன்று என்பதும், மாதானுபங்கியைத் தேவியாகவுடைய செங்காப்போதார் என்று பொருள் கோடலே பொருந்துவதென்பதும் தெரியலாம். இங்ஙனமாயின், மாதானு

[1] இச்சொல்லின் வரலாற்றை இந்நூல், 56-ம் பக்கத்துக் கீழ்க் குறிப்பிற்காண்க.

பங்கி என்பது நம் தெய்வப்புலவரின் தேவியார் திருநாமம் என்பது பெறப்படுகின்றது. இப்போதை வழக்கின்படி வாசுகி என்பது அத்தேவியின் இயற்பெயரும், மாதானுபங்கி என்பது உபகேசிபோன்ற சிறப்புப்பெயருமாகக் கொள்ளத்தகும். இனி 'மாதானுபங்கி **மருவு** புலச்செந்நாப்போதார்' என்பது பழம்பாடமாயின், உபகேசியின் தோண்மணந்தவனைக் கண்ணன் விசேடிக்கப்பட்டமுறையில் மாதானுபங்கியை மணந்தவராக வள்ளுவரும் விசேடிக்கப்பட்டார் என அமைந்து நயம் பெற்றொளிரும். அதனால், **மருவு** என்பதே, உண்மைப் பாடமாயிருந்து 'மறுவில்' எனப் பின்னர் மாறியதுபோலும். உத்தம பதிபத்தியாலும் உழுவலன்பாலும் பிரசித்தியடைந்திருந்தமையின், இவ்வாறு புகழ் புரிந்த இல்லினராற் கண்ணனும் வள்ளுவரும் சிறப்பிக்கப்பட்டனர் என்க. தந்தேவி இறந்தபோது தெய்வப்புலவர் உருகிப் பாடிய வெண்பாவே அவர் தேவியின் மாட்சிமையை நன்குவிளக்க வல்லது. நச்சினார்க்கினியர் கொண்ட பழம்பாடப்படி அப்பாடல் அடியில் வருமாறு:—

"அடிசிற் கினியாளே யன்புடை யாளேப்
படிசொற் பழிநாணு வாளே—யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றாகுமென்கண் ணெனக்கு" (தொல். பொ. 156, உரை.)

## (6) ஒரு குறிப்பு

திருக்குறளில் மற்றொரு விசேடங் குறிப்பிடற்குரியது. கடைச் சங்க நூல்கள் பெரும்பாலவற்றினும் "குஃறொடர்ந்த அன்மொழி" பயிலுதல் காணலாம். அவற்றிலும், அகப்பொருளைப்பற்றிய நூல்களிலோ எனில், அச்சொல்வழக்கு மிகுதியேயாம். இம்முறையே உரு - அதிகாரங்கள் காமவிஷயமாகக் கூறிய திருவள்ளுவர் நூலினும் அச்சொல்லை எதிர்பார்த்தல் இயல்பே. ஆனல், அந்நூலுள் ஓரிடத்தும் அது வழங்கப்படாமை வியக்கத்தக்கது. இச்செய்தி, வள்ளுவனார் தம் நூற்பெருமையில் பெருநோக்குடையராயிருந்தவர் என்பதைப் புலப்படுத்தக்கூடியது. ஏனைப்புலவர்கள் அகப்பொருள் விஷயமாகக் கூறியவற்றினும் சிறப்பாகவும் கௌரவமாகவும் வள்ளுவனார் தம் காமத்துப்பாலையியற்றியவர் என்று அறிஞர்கள் போற்றும் புகழ்ச்சியோடு இவ்விஷயமும் சேர்த்து மதிக்கற்பாலது

## (7) இஷ்டம் பூர்த்தம் தத்தம்

வடநூலார் அறஞ்செயன்முறையை மூன்றுவிதமாக வழங்குவர்; அவை—இஷ்டம், பூர்த்தம், தத்தமென்பன. அவற்றுள் **இஷ்டமாவது**, உலகனைத்தும் வாழ்கவெனக்கருதித் தெய்வங்களை நோக்கித் தொழுஞ்செயல்; இஃது, அக்கினி, ஆகுதி, மந்திரமுதலியவற்றால் வேள்விமூலம் ஆராதித்தலாம். **பூர்த்த**மென்பது, எல்லாவுயிர்களும் இடுக்கணின்றி இன்பமடையும் வண்ணம் இயற்றும் அறச்செயலாம். வித்தியாசாலை, வைத்தியசாலை, தண்ணீர்ப்பந்தல் முதலாய பொதுநன்மைகளை இது குறிக்கும் **தத்தமென்பது** எளியார்க்கிரங்கி ஈதலாம். இம்மூவகையுள்ளே, முதலிற்குறித்த இஷ்டம் அவ்வவ் வருணாச்சிரமங்கட்கு ஏற்றவாறு சிறப்பாயமைவதென்றும் ஏனைப்பூர்த்தமும் தத்தமும் எல்லார்க்குமொத்த தர்மங்களென்றும் உணர்க. இங்ஙனம் வடநூலார் வகுத்த முறையையே, திருவள்ளுவரும் கூறியிருத்தல் குறிப்பிடத்தக்கது. அம்முப்பகுதியறங்களுட் சிறப்பியல்புடைய இஷ்டத்தை—'எல்லா அறநூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதலை இயல்பாகவுடைய" வள்ளுவனர் தம் நூலில் விரித்துரைக்க ஒருப்பட்டிலராயினும், இல்வாழ்க்கையதிகாரத்தில்:—

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

என்பதனால் அவ்வறச்செயல்கள் இன்னவென்று குறிப்பித்திட்டார். வள்ளுவனர் வைதிகச்சார்புடையராதலின், தென்புலத்தாரான பிதிரர்க்குப்புரியுங்கடன் முதலிய பஞ்சமகாயஞ்ஞங்களை ஈண்டெடுத்துக் கூறினர் எனவுணர்க. இங்ஙனமே "இல்வாழ்வானென்பா னியல்புடைய **மூவர்க்கும்**—நல்லாற்றி னின்ற துணை' என, வேதமுறையினமைந்த வானப்பிரஸ்த முதலிய சிறப்பிடங்களிற் புரியும் தருமங்களையும் தெய்வப்புலவர் சூசிப்பித்தல்காண்க இனிப் பொதுநன்மையாகிய பூர்த்தமும், வறியராய் ஏற்றார்க்கு மாற்றுதீதலாகிய தத்தமும், இல்லறவியலினீற்றல் **ஒப்புரவு, ஈகை** என்ற இரண்டு அதிகாரங்களால் முறையே அவர் விரித்துக் கூறினர். ஒப்புரவு எனத் தெய்வப்புலவர் கூறியது பொதுநலங் கருதிய தர்மங்களையே குறிக்கும் என்பதனை இனி விளக்குவேன்.

---

# 15. ஒப்புரவறிதல்*

தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தம்முப்பாலுள் அறத்துப் பாலை இல்லறவியல் துறவறவியல் என இருதிறப்படுத்து, அவற்றுள் இல்லறவியலை—இல்வாழ்க்கைமுதற் புகழீறாகப் பத்தொன்பது அதிகாரங்களாற் கூறினர். இப் பத்தொன்பதனுள் "ஒப்புரவறிதல்" என்பதுமொன்று. ஒப்புரவு என்னுஞ்சொல் உபகாரம் ஒற்றுமை, சமாதானம் முதலிய பலபொருள்களை யுணர்த்து மேனும், திருக்குறளில் தெய்வப்புலவர் எக்கருத்தில் அதனை வழங்கினர் என்பது இங்கு நாம் ஆராயத்தக்கது. பரிமேலழகர், 'ஒப்புரவறிதல்' என்பதற்கு—'உலகநடையினை அறிந்துசெய்தல்; உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யுந் தன்மைத்தாகலின் ஒப்புரவறிதல் என்றார்' எனவுரைத்தார். இவ்வாறு 'உலகநடையினை யறிந்து செய்தல்' என்று அவ் உரையாசிரியர் பொருள்கூறுதலால், உயர்ந்தோர் ஒழுகிய நெறியில் ஒழுகல் என்பதே அவ் 'உலகநடைக்கு'ப் பொருளென்று கொள்வோமெனின்—ஒப்புரவறிதலதிகாரத்து வரும் திருக்குறள்களில் ஒன்றேனும் அவ்வொழுக்கத்தைக் குறியாமையாலும், ஆன்றோராசாரம் போற்றலை 'ஒழுக்கம்' என்னும் அதிகாரத்துள் "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங் கல்லா ரறிவிலா தார்" என்ற குறளில் விளக்குதலானும், பரிமேலழகரும் அக்குறளின் விசேடவுரையில் "உலகத்தோடு பொருந்த ஒழுகலாவது—உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல்... ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்" எனக் கூறுதலால் 'சிஷ்டாசாரம்' குறிக்கப்பட்டமையாலும் அது கருத்தாகாதென்க.

இனி, 'ஒப்புரவறிதல்' என அதிகாரமிட்ட தெய்வப்புலவர் கருத்து யாது? பரிமேலழகர் கூறிய "உலகநடையினை அறிந்து செய்தல்" என்பதனுள், 'உலகநடை' என்னுந்தொடர்க்கு "உலகத்தின் நடைபேறு" என்று பொருள்கொள்ளுதலே வள்ளுவனார் திருவுள்ளத்துக்கு ஏற்றதாகும். என்னை? ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத லோகோபகாரங்களை அறிந்துசெய்தல் என்பதே ஒப்புரவறிதலதிகாரத்துவரும் ஒவ்வொரு குறளும் விளக்கி நிற்றலால் என்க. ஜனசமூக வாழ்க்கையாவது:—தனியரசபுரியும் சக்கரவர்த்தி முதல் தாழ்மையுற்ற குடியானவனீறாக

* செந்தமிழ், தொகுதி - 4, பகுதி - 9.

வும், நுண்ணறிவுபெற்ற புலவன்முதல் எண்ணெழுத்தறியாக் கசடனீறாகவும், முற்றத்துறந்த முனிவன்முதல் பற்றே மிக்க உலகாயதனீறாகவும் உள்ள உலகத்து மாந்தரெல்லாம் பரஸ்பரவுதவியானே வாழ்ந்து வருகின்ற நிலையாகும். செல்வம் வலிமுதலியவற்றை ஒருவன் எவ்வளவு சிறப்பாக அடையப்பெற்றவனேயாயினும், பிறருடைய உதவியில்லாவிடத்து அவன் உலகத்தே தனித்துநின்று இல்வாழ்க்கையாலாய இன்பத்தை நுகர்தல் ஒருபோதுங் கூடாதென்பது திண்ணமன்றோ. முற்றத்துறந்த துறவிக்கும் இல்வாழ்வானது துணை இன்றியமையாததாகும். ஆகவே, இவ்வுலகவிருத்தி மக்களின் பரஸ்பரவுதவியின்றிக் கைகூடாதென்பது தெளிவாம். இனி, அவ்வாழ்க்கையின் வளர்ச்சிக்குரிய உபகாரங்களாவன:—ஊருணி, ஆதுலசாலை, கல்விச்சாலை, வைத்தியசாலை முதலியன செய்வித்தலும், ஜனசமூகத்தின் அறிவையும் செல்வத்தையும் பெருக்கற்குரிய வழியைத் தேடலும், தேசவிருத்திக்கு இடையூறானவற்றை விலக்கமுயறலும் பிறவுமாம். இவ்வாறு உலகநடைக்கு வேண்டப்படும் உபகாரமே தெய்வப்புலவரால் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தால் விரியக் கூறப்பட்டதென்க. பரிமேலழகியார், 'கண்ணோட்டத்துள்ள துலகியல்' என்னுங் குறளில், 'உலகியல்' என்பதற்கு 'உலகநடை எனப்பொருள் கூறி, 'உலகநடையாவது—ஒப்புரவுசெய்தல், புறந்தரல், பிழைத்தன பொறுத்தன் முதலாயின' என்று விரித்தலால், உயர்ந்தோர் ஒழுக்கம் என்னும் பொருளில் 'உலகநடை' என்னுந்தொடரை வழங்காது 'உலகத்தின் நடைபேறு' என்னும் பொருட்கண்ணே அவர் வழங்குதல் கண்டுகொள்க. அன்றியும், "உலகநடையும் பழிப்புமல்லாத ஆன்றோரொழுக்கமாகலின்" எனவரும் தருக்கசங்கிரகதீபிகை வாக்கியத்தின்கண்ணே, சிவஞானமுனிவர், உலகநடையை ஆன்றோரொழுக்கத்தின் வேறாகவைத்து வழங்குதலும் அறியத்தரும். இவ் உலகநடைக்குரிய உதவி, மானுடவியற்கைக்குற்ற முறையில் ஒரு படியாக நடைபெறுவதாயினும், அதனை மக்களிற்சிறந்தான் தன் பேராற்றலால் உலகிற்குப்புரியுஞ் சிறப்பையே திருவள்ளுவனார் எடுத்துரைப்பாராயினர். இவ்வொப்புரவு பொருளான்மட்டுமன்றி மனமொழி மெய்களாற் செய்யப்படும் எல்லாவுதவிகளையும் அடக்கி நிற்பதென அறிக.

உலகவிருத்திக்குரிய ஒப்புரவு, அதனைச் செய்வானு மடங்க எல்லார்க்கும் இம்மையிலே பயனளிப்பதாகலின், அவ்வொப்புரவு மறுமை நோக்கியதன்றி இம்மைநோக்கிய"தெனவும், 'வறியராய் ஏற்றோர்க்கு மாற்றாதுதவும்' ஈகை, ஒப்புரவுபோல இம்மையிலேயே

பயனளிப்பதன்றாதலால், அது மறுமைநோக்கியதெனவும் தம் நுட்பமதியால் ஆராய்ந்து, ஆசிரியர் பரிமேலழகர் ஈகையதிகாரத்தின் அவதாரிகையில் "ஈகை—மறுமை நோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது" எனக் கூறுதல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இனி, இவ் 'ஒப்புரவறிதல்' ஜனசமூகவாழ்விற்குரிய லோகோபகாரச் செய்கையையே குறிப்பதென்பதனை, அவ்வதிகாரத்துவரும் திருக்குறள்களைக்கொண்டும் தெரியலாகும். அதன் முதற்குறள்,

> "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
> டென்னாற்றுங் கொல்லோ வுலகு"

என்பது. மேகங்கள் நீரையுதவுதல் பிரதிப்பிரயோசனத்தைக் கருதியதில்லையாதல்போல, அம் மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு கருதுவனவல்ல—என்பது இதனிற் கூறப்பட்டது. ஜனசமூகவாழ்க்கைக்கு இன்றியமையாத பரோபகாரத்தை ஒவ்வொருவருங்கொண் டொழுகினாலன்றி, அவ் வாழ்க்கை நடைபெறாதாதலால் இக்குறளில் ஒப்புரவைக் 'கடப்பாடு' எனத் தெய்வப்புலவர் வழங்கினமை அறியத்தக்கது. இனி, எத்தகைய செல்வம் வலி முதலியவற்றை ஒருவன் உடையனாயினும், உலகவாழ்விற்குரிய இவ்வொப்புரவைக் கடைப்பிடியாது தனிநின்று வாழக்கருதின், அவன் உலகிற் செத்தவனேயாவனென்னுங் கருத்து,

> "ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
> செத்தாருள் வைக்கப் படும்"

என்னுந் திருக்குறளிற் பயிறல் காண்க. இக்குறளில் ஒத்தறிவான் என்பதற்குப் பரிமேலழகர் 'உலகநடையினை அறிந்துசெய்வான்' என்று பொருள்கூறினர். உலகநடைபேறு எல்லாரும் மனமொத்து நடத்தலால் நிகழ்வதுபற்றி, 'ஒத்தது' என அவ்வொப்புரவு, வள்ளுவனாரால் வழங்கப்பெற்றதென்க. இனி, இவ்வொப்புரவு, ஈகைபோல வறியார்க்கு மட்டுமன்றி, ஜனசமூகத்திற்கே பெரும்பயனளிப்பதாதலால்,

> "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
> பேரறி வாளன் றிரு"

> "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
> நயனுடை யான்கட் படின்"

"மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"

என்னும் மூன்றுகுறள்களில், ஒப்புரவாளன் செல்வம் உபகாரப் படுஞ் சிறப்பு, தக்க உவமான முகத்தால் விளக்கப்படுதல் அறியத்தக்கது. ஊருணியும் பயன்மரமும் மருத்துமரமும் யாவர்க்கும் எக்காலத்தும் எளிதில் உபயோகப்படுதல் போல, ஒப்புரவாளன் செல்வமும் பயன்படும் எனவே, ஜனசமூகவாழ்விற்குரிய பொது நன்மையே தெய்வப்புலவர் கருதிய ஒப்புரவென்பது தெளிவாயிற்று. "உலகவாம் பேரறிவாளன் றிரு' என்னும் அருந்தொடரும் முற்கூறிய கருத்தையே வலியுறுத்துதல் உய்த்துணர்க. இனி, இவ் வொப்புரவு செல்வத்தான் மட்டுமாவதன்று: மனமொழி மெய்களாற் செய்யப்படும் எல்லாவுதவிகளையும் குறிப்பதென்னுங் கருத்து,

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"

"நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு"

என்னுங் குறள்களில் அமைக்கப்பட்டதாம். இவற்றுள் முதற்குறளில் "செல்வமில்லாமையொன்றானே ஒப்புரவு இழக்கப்படுவதன்று; அதனைச் செலுத்தும்வழி பலவாம்; அவ்வழியினை அறிந்து செய்யவல்ல இயற்கையறிவுடையார், அஃதொன்றில்லாமைபற்றி அவ் வொப்புரவு செய்யத் தளரார்" என்னுங் கருத்தும், இரண்டாங்குறளில், "செயுநீர செய்யா தமைகலா வாறு" எனவே, ஒப்புரவு என்பது செல்வத்தான்மட்டும் ஆவதன்று என்பதும் குறிக்கப்பட்டவாறு நோக்குவார்க்கு விளங்கும். இனி இவ்வதிகாரத்தின் ஈற்றுக் குறள்—

"ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"

என்பது. இவ்வருமைக்குறள் இவ்வதிகாரத்திற்கே ஓர் சிகாமணி என்னலாம். லோகோபகாரஞ் செய்யும் முயற்சியில், ஒருவனுக்கு வருவது கேடு என்பாருண்டாயின், அக்கேடு, அவன் தன்னை விற்றாயினும் பெற்றுக்கொள்ளுந் தகுதியுடையதாம் என்பது இதன பொழிப்பு: என்றது ஒப்புரவுசெய்தலால் ஒருவனடையுங் கேடு கேடன்று, பேறென்று கருதத்தக்கது என்பதாம். இக்கருத்தையே

"கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு"

என்னுங்குறளிலும் தெய்வப்புலவர் அமைத்தருளினர். தேசோபகாரமான காரியங்களை ஒருவன்செய்யுமிடத்துப் பொருட்கேடு மானக்கேடு முதலியன நேரிடுமாயின், அவை அவ் வுபகாரியொருவற்கேயுறுந் துன்பமாயினும், அவன் செய்கையாலாம்பயன் உலகமுழுதுஞ் சார்ந்து இன்புறுத்தலால், அவ்வுபகாரி தனக்குவருங் கேடுகளைத் தைரியத்துடன் ஏற்று உலகத்தைக்காக்கப் பின்வாங்கான் என்பது இக்குறளாற் புலனும். ஜனசமூகத்துக்கு இன்றியமையாத பொதுநன்மை புரியுமிடத்துத் தம்மானக்கேட்டையும் பொருட்கேட்டையுஞ் சிறிதுமதியாது பாடுபட்டு, உலகவாழ்வை ஓங்கவைத்த உத்தமகுணசீலர்களை உலகசரித்திரத்தில் அங்கங்கே நாங்காணலாம். இவ்வுலகத்தில் அவ்வுத்தம மக்களின் தொகை சுருங்கியதாகவே யிருக்குமாயினும், அப் பெருந்தகைகளையுடைமையாற்றான் இவ்வுலகமும் நடைபெறுவதென்பது நாம் மறக்கற்பாலதன்று. பழைய செந்தமிழ்ச்சான்றோர்கள் இத்தகைய உத்தம மக்களையே,

> "உண்டா லம்மவில் வுலக மிந்திரர்
> அமிழ்த மியைவ தாயினும் இனிதெனத்
> தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
> துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
> புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
> உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
> அன்ன மாட்சி யனைய ராகித்
> தமக்கென வாழா நோன்றாட்
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" (புறநானூறு - ௧௮௨)

> "பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்" (திருக்குறள்)

என்று, சிறப்பிப்பாராயினர். இவ்வாறு, தெய்வப்புலமைத் திருவள்ளுவனர், தம் அருமைத் திருக்குறளில், ஜனசமூகவாழ்க்கைக்கு வேண்டப்படும் 'பூர்த்தம்' என்ற பொதுநன்மைக்கு "ஒப்புரவறிதல்" என்னும் பெயரிட்டு, அதனைப் பத்துக்குறள்களால் ஓரதிகாரமாகவைத்து விளக்கியருளிய மாட்சி உலகினராற் போற்றத்தக்கது. 'ஒப்புரவு' என்னும் பதத்தை இவர் வழங்கிக் காட்டியவாறே, நல்லிசைப்புலவராகிய ஔவையாரும் 'ஒப்புரவொழுகு' எனச்சுருங்க உரைத்தனர். இவ்வொப்புரவு, பொதுவாக எல்லார்க்கும் பயனளித்தலால் முன்னர்க்கூறி, பின் வறியார்க்கே பயன்தரும் ஈகையைவைத்து, அவ்விரண்டனுலும் பெறற்குரிய புகழை இல்லறவியலின் ஈற்றில் வைத்து நம்புலவர்பெருமான் முடித்தருளியதும் நோக்கத்தக்கது.

# 16. மணிமேகலையும் புத்தஜாதகமும்*

அரைநூற்றாண்டுக்கு முன்பு நம் தமிழ்க்கலைமகள் அடைந்திருந்த தோற்றத்திலும் இப்போதுள்ள நிலை அதிகப்பொலிவுள்ளதென்றே சொல்லலாம். அக்காலத்தே அவள் தன் சீரியவணிகளிற் சிறந்தனவற்றை அணிந்து விளங்கியவள் என்று சொல்வதற்கில்லை. அவற்றுள் ஒருசிலவற்றைத் தமிழணங்கு அப்போது தரித்துவந்தவளாயினும், தன் செவ்விநலத்துக்கேற்ற திருந்திழைகளை மிகுதியும் பூண்டுபொலிவது இக்காலமேயாம். அச்சிங்காரவணிகளாவன—சங்க நூல்களே என்பது சொல்லவும் வேண்டுமோ? அப்பேரணிகளிலே, இழுமென்னும் இன்னோசைகொண்டு செந்தமிழ்ப்பாவையின் விழுமிய நடையழகைச் சிறப்பித்துநிற்பவை இரண்டாம். அவை சிலப்பதிகாரம் மணிமேகலை என்பன. இந்நூல்கள் வெளிவந்த காலந்தொட்டுத் தமிழ்மக்களின் உள்ளங்களை இவை கவர்ந்துவரும் அளவு பிறநூல்கள் கவர்ந்தனவல்ல. இப்பேரணிகளை மாசுநீக்கித் தூய்மை செய்து செப்பனிட்டுத் தமிழ்த்தெய்வத்துக்கு அணிந்துதவிய **பெரியாரை** நாம் வந்திப்போமாக. இவர்களாராய்ச்சியால் இந்நூல்கள் பற்றித் தெரியவந்த அரியசெய்திகள் அளவிறந்தன. இச் சங்கவிலக்கியங்களில் ஈடுபட்ட தமிழறிஞர்களும் அறிந்தசெய்திகளை அவ்வப்போது வெளியிடலாயினர். சமீபத்தில் புத்தஜாதகக்கதைகளை யான் படித்துவந்தபோது இந்நூல்கள் சம்பந்தமான பௌத்தச்செய்திகள் சில எனக்குத் தெரியவந்தன. அவற்றை இப்போது வெளியிட விரும்புகின்றேன்.

## (1) மணிமேகலையும் ஜாதகக்கதைகளும்

சிலப்பதிகார மணிமேகலைகள் இரண்டும், ஒருகாலத்தவரான இளங்கோவடிகள் சாத்தனார் என்ற புலவர்பெருமக்களால் முறையே இயற்றப்பெற்றவை என்பதும், முன்னது கோவலன் கண்ணகிகளின் வரலாற்றையும், பின்னது அக்கோவலன் காதற்கணிகையான மாதவியின் மகள்வரலாற்றையும் கூறுவன என்பதும், அவற்றுள் மணிமேகலை சிலப்பதிகாரத்துக்கு முன்பே செய்யப்பட்டதென்பதும் பலரும் அறிந்தவை. மாதவிமகள் பௌத்தபிக்ஷுணியாகி நிகழ்த்திய அருஞ்செயல்கள் மணிமேகலை நூலிற் கூறப்படுகின்றன. இவள் வரலாறுகளை நோக்குமிடத்து, அவை பெரும்பாலவும் உண்மை நிகழ்ச்சிகள் என்று இக்காலத்தவர் ஒப்பக்கூடியனவல்ல. புத்தபகவானது முற்பிறவி வரலாறுகளைக்

* கலைமகள், தொகுதி - 1, பக். 159 - 170.

கூறும் ஜாதகக்கதைகளைப் படித்துவருவோர்க்கு, அவற்றின் போக்கைத்தழுவியே மணிமேகலைச் செய்திகள் மிகுதியும் அமைந்துள்ளன என்பது எளிதில் விளங்கும். மணிமேகலையின் அமானுஷ்ய கிருத்தியங்களாகக் கூறப்பட்டவையாவும் உண்மையாக நிகழ்ந்தனவாயின், சாத்தனார்க்குப்பின் தம் நூலைப் பாடிமுடித்த இளங்கோவடிகள் அவற்றிற் சிலவற்றையேனும் கூறிச் சிறப்பிக்கத் தவறுவாரன்றோ? அவ்வாறு ஒன்றுங்கூறாமல், கோவலன் இறந்தபின் மாதவியும் அவள்மகளும் புகாரில் பௌத்த சங்கத் தலைவராயிருந்த அறவணவடிகளைப் புகலடைந்து பிக்ஷுணிகளாயினர் என்ற வரலாறொன்றையே அவர் கூறிப்போதல் காணலாம்.[1] பண்டைக் காலத்துப் பௌத்தர்கள் தம் முற்பிறவி நிகழ்ச்சிகளை அறியமுயல்வதில் அதிக உற்சாகங்காட்டி வந்தவர்கள். அந்நிகழ்ச்சிகளை மிகுதியும் புனைந்துரைத்து, அவற்றின் மூலம் தம் சமயக் கொள்கைகளை உலகிற் பரப்பிவரலாயினர். இம்முறை, சைனரும் கொண்டதேயாம். இவை ஜாதகக்கதை முதலியவற்றால் விளங்குதல் போலவே, மணிமேகலையாலும் அறியப்படுகின்றன. தாம் எடுத்துக்கொண்ட நூல்வரலாற்றை உலகியல்களுக்கு ஒப்பக்கூறுவதிற் பெருநோக்கமுள்ள இளங்கோவடிகளும், தம் காலநிலைக்கேற்றபடி, சென்மாந்தர நிகழ்ச்சிகளைப் புனைந்துகூறுவதிற் பின்வாங்கவில்லை. இவற்றால் இத்தகைய புனைவுரைகள் சங்ககாவியங்களில் அதிகம் எனின், அது, பண்டைத் தமிழ்மக்களின் மனநிலைக்கேற்ற 'காப்பியவமைதி' என்றே நாம் கருதல்தகும். இனி, முதலில் மணிமேகலை வரலாறுகள் சிலவற்றை நோக்குவோம்.

## (2) மணிமேகலாதெய்வம்

கோவலனுடைய ஒன்பதாந்தலைமுறை முன்னோனும் புண்ணிய சீலனுமான வணிகனொருவன், தேசாந்தரஞ்செல்லுதற்கு ஏறிச்சென்ற மரக்கலங் கவிழ்ந்தமையாற் கடலிடையே ஆதரவற்று அவன் வருந்திநின்றபோது, மணிமேகலை என்ற தேவதை ஆங்குத் தோன்றி அவனைக் காத்துதவினள் என்றும், அப்பேருதவியைப் பாராட்டியே, கோவலன் தனக்கு மகள்பிறந்ததும் அத்தேவதையின் பெயரை அவளுக்கு இட்டுவழங்கினன் என்றும் சாத்தனாரும் இளங்கோவடிகளும் கூறுவர்.[2] இம் மணிமேகலாதெய்வத்தைப் பற்றி, ஜாதகக்கதைகளினும் வரலாறுகள் வழங்குகின்றன.

---

[1] சிலப்பதிகாரம், 30, 10—36.

[2] மணிமேகலை, 29, 14—31; சிலப்பதிகாரம், 15, 28—37.

உலகபாலரான தேவர்களால் மணிமேகலை என்பாள் சமுத்திர தேவதையாக நியமிக்கப்பட்டு தருமசீலர்கள் கடலிடையே கலங் கவிழ்தல் முதலியவற்றால் வருந்துமிடத்து, அவர்களை உற்றசமயங் களிற் காத்துதவும்படி ஆணையிடப்பட்டிருந்தனள் என்பதும், அம் முறையே, அந்தணனான **சங்கன்** என்பவனும், அரசகுமரனான **மஹாஜனகன்** என்பவனும் மரக்கலச்சிதைவாற் கடலிடையே வருந்திநின்றபோது, **ஏழாநாளில்** அம் மணிமேகலாதெய்வத்தாற் காக்கப்பட்டனர் என்பதும் அந்த ஜாதகக்கதைகளிற் கூறப்பட் டுள்ளன.[1] இச்செய்தியை நான்கு வருஷங்கட்குமுன்னர் நான் எழுதி வெளியிட்ட **சேரன் செங்குட்டுவன்** சரித்திர நூலிற் குறிப் பிட்டுள்ளேன் (பக். 13–1) இவ்வொற்றுமையைச் சரித்திராசிரிய ரான **டாக்டர்-ஸில்வன் லெவி** (Dr Sylvain Levi) என்பாரும் கண்டுகொண்டு, மற்றுஞ்சில விசேடச்செய்திகளுடன் சென்ற வாண்டிற் கட்டுரைகள் வரைந்திருக்கின்றனர்.[2] இந்து-சைன சியம், பர்மா, இலங்கை முதலிய பிரதேசங்களில் மணிமேகலா தெய்வத்தின் வரலாறுகளாக வழங்குவன சில அவர் வியாசத் தால் அறியப்படுகின்றன. அவற்றினின்றும், கன்னியாகுமரிக்குக் கிழக்கேயுள்ள தீபாந்தரங்களெல்லாம் இந்தச் சமுத்திரதேவதை யின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருந்தன என்பதும், போதிசத் துவராக வரக்கூடிய புண்ணியசீலர் கடலிடையே வருந்துகின்ற போது இந்திரனேவலால் இத்தேவதை **ஏழுநாள்**களுக்குள் அவரைக் காத்து உதவிவந்தவள் என்பதும், புத்தபகவானிடம் இத்தெய்வத்துக்குள்ள பத்திமேலீட்டால் அப்பகவானுக்குச் சைத்தியங்கள் செய்வித்தும் மனமுருகி வழிபட்டும் வந்தவள் என்பதும் விளங்குகின்றன.

"நின்னுயிர்த் தந்தை நெடுங்குலத் துதித்த
மன்னுயிர் முதல்வன் மகர வேலையுள்
முன்னிய வங்க முங்கிக் கேடுற

. . . . . . . . . .

ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத னாவான் நளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற் றொன்றன தெவ்வந் தீரென"

"தீவ திலகையுந் திருமணி மேகலா
மாபெருந் தெய்வமும் வந்தித் தேத்துதற்கு

1 The Jataka by Prof. E. B. Cowell, Nos 442, 539.

2 Indian Historical Quarterly "More on Manimekhala" Vol. iii, No. 2.

ஒத்த கோயி லுளத்தகப் புனைந்து
விழவுஞ் சிறப்பும் வேந்த னியற்ற" (29, 14-25)

என்பனபோலும் பகுதிகளால், மேற்கூறிய செய்திகள் மணிமேகலையினுங் கூறப்படுதல் காணலாம். புத்தபகவானிடம் வைத்த பத்தி மிகுதியால் மனந் தன்வசமிழக்க நேரினும், இறுதியெல்லையாகிய ஏழாநாளில் இத்தெய்வம் போதிசத்துவருடைய துன்பநிலையைத் தன்பூர்வஞானத்தால் உணர்ந்து உதவமுன்வருவள் என்பர். இவற்றால், ஜாதகக்கதைகளிலும் பௌத்ததேசங்களிலும் வழங்கும் மணிமேகலாதெய்வம், சாத்தனார் இளங்கோவடிகள்காலத்தே பிரபலமான கடற்றேவதையாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டு வந்தவள் என்பது பெறப்படுகின்றது.

## (3) பாண்டுகம்பளந் துளங்குதல்

"ஈண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கியது" (14, 28-29)

"தனாது பாண்டு கம்பளம்...
தானடுக் குற்ற தன்மை நோக்கி
ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத னவோ னளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற் றூன்றன தெய்வந் தீரென" (29, 14-25)

என்னும் அடிகளால் உலகில் போதிசத்துவர்கள் ('போதி மூலத்து நாதனவோர்') தோன்றி அருஞ்செயல்கள் நிகழ்த்துமிடத்தும் அவர்கட்கு இடுக்கண் விளையும் காலத்தும் இந்திரனது ஆசனமாகிய பாண்டுகம்பளம் நடுக்குறும் என்றும், அஃதறிந்து அவன் உரியவற்றைச் செய்ய முந்துவன் என்றும், அம்முறையே ஆபுத்திரனது தருமச்செயல்களும், கோவலன்முன்னோனது கடல் விபத்தும் இந்திரனது ஆசனத்தைக் கம்பிக்கச்செய்ய அவற்றையறிந்து அவ்விந்திரன் நேரிலோ பிறர்மூலமோ தன் கடமையைச் செய்யலாயினன் என்றும் கூறப்படுதல் தெரியலாம். பாண்டு கம்பளம் என்பது இந்திரனது கம்பளவடிவான ஆசனம் என்று இதுவரை கருதப்பட்டது. ஆனல், ஜாதகக்கதைகளிலே இஃது ஒப்புயர்வற்றதும் மஞ்சணிறமுள்ளதுமான ஸ்படிகமணியால் அமைந்த சிங்காதனம் என்று கூறப்படுகின்றது *

"ஹா! பாண்டு'கம்பல சிலா!
ஹா! தேவஸபா!"

*The Jataka, Vol. ii. p. 63; iv. p. 168.

எனவரும் திவ்யாவதானத் தொடராலும் இவ்வாசனம் சிலேவடி[1] வானது என்பது தெரியலாம். மேற்கூறியபடி, போதிசத்துவரால் உண்டாக்கப்படும் நிகழ்ச்சிகளால் இவ்வாசனங் கம்பித்ததென்று மணிமேகலே கூறியபடியே, ஜாதகக்கதைகளிலும் அடிக்கடி இச் செய்தி கூறப்படுதல் அறியத்தக்கது.

## 4. மணிபல்லவம்

மணிபல்லவம் என்ற தீவிற்கு மேற்கூறிய சமுத்திரதேவதை யால் மணிமேகலே அழைத்துச்செல்லப்பட்டதும், ஆங்கிருந்த புத்தபீடிகையால் அவள் தன் பழம்பிறப்பு உணர்ந்துகொண்ட தும், அங்குள்ள பொய்கையொன்றிற் பெற்ற அமுதசுரபி என்ற அக்ஷயபாத்திரத்தோடு அவள் வெளியேறி அறங்கள்பல செய்த தும் பிறவும் மணிமேகலே நூலால் அறியப்படும். இம்மணிபல்ல வம் காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தெற்கே[2] முப்பதுயோசனையில் உள்ளதாகச் சாத்தனர் கூறுவர். இத்தீவு இப்போது யாழ்ப் பாணப்பகுதிகளுள் ஒன்ருகவே பலராலும் கருதப்படுகின்றது. அவற்றுள்ளும் **காரைத்தீவு** என்ற பகுதியே மணிபல்லவமாகக் கருதப் பொருத்தம் உண்டு இதற்கும் புகார்நகர்க்கும் பண் டைக்காலத்திருந்த தொடர்பை அடியில்வரும் அகித்தி ஜாதகக் கதையால்[3] அறியலாம்.

காசியிலே, பெருஞ் செல்வமுடைய பிராமணகுடும்பமொன் றிற் பிறந்த **அகித்தி** என்பார், தம் தந்தை இறந்ததும் தமக்குக் கிடைத்த செல்வமுழுதையும் **ஏழுநாளில்** தானதருமங்களிற் செலவு செய்துவிட்டுத் துறவியாய்த் தம் சகோதரியுடன் **தமிள ராஜ்யத்து**க்குச் சென்று **காவேரிப்பட்டினத்தில்** உள்ள உபவன மொன்றில் தங்கித் தியானத்திலிருந்தனர் என்றும், பின் அவ்விட மும் அவர்க்கு ஏற்றதாகாமையால், ஆகாசவழியே நாகதீபத்தின் வடபாலுள்ள **காரைத்தீவிற்குச்** சென்று, அங்கிருந்த காரைமரத் தின்கீழ்க் குடில் அமைத்துக்கொண்டு அதனுளிருந்து தனியே நோற்றுவந்தனர் என்றும், அவரது அருஞ்செயல்கள் இந்திரனது பளிங்காசனத்தை நடுங்கச் செய்யவே,[4] அவன் நேரில்வந்து அவரது பெருமையை அறிந்து உரியவற்றைச்செய்து சென்ருன் என்றும் அந்த ஜாதகங் கூறுகின்றது. இலங்கையை நாகதீபம்

1 Divyavadana-University Press, Cambridge, pp. 194-5.

2 மணிமேகலே, 10, 57.

3 The Jataka, Vol. v, p. 150

4 இந்திரனது பளிங்காசனத்தைக் கொதிக்கச்செய்ததாக ஆங்கில மொழிபெயர்ப்புக் கூறும்.

என்ற பெயரால் ஜாதகங்கள் பலவும் வழங்கும். இத்தீபத்தின்[1] வடபால் உள்ள காரைத்தீவு பௌத்தர்களால் முற்காலத்தே பெரிதும் மதிக்கப்பட்டதென்பதற்கும், காவிரிப்பூம்பட்டினத்தோடு இதற்கு நெருங்கியதொடர்பிருந்தது என்பதற்கும் இக்கதையே தக்க சான்றாதலால், மணிமேகலையிற்கண்ட மணிபல்லவம் இவ்வியாழ்ப்பாணத் தீவாகவே கருதற்குரியதன்றோ? காவிரிப்பூம் பட்டினத்தின் தொன்மைச்சிறப்பும் இச்சாதகச்செய்தியாற் புலனாதல் அறியத்தக்கது.

## 5. மணிபல்லவத்துப் புத்தபீடிகை

மேற்கூறிய தீவிலிருந்த புத்தபீடிகையின் தரிசனத்தால் மணிமேகலை தன் பூர்வஞானம் பெற்றவள் என்பது அவள் வரலாற்றால் தெரியலாம். இப்பீடிகையின் வரலாற்றை,

**"தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை**
**பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனம்**
**கீழ்நில மருங்கி னாகநா டாளும்**
**இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி**
**எமதீ தென்றே யெடுக்க லாற்றார்**
**தமபெருந் பற்று நீங்கலு நீங்கார்**
**செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்**
**தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்**
**இருஞ்செரு வொழிமின் எமதீ தென்றே**
**பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்**
**தரும பீடிகை" (9, 52-63)**

என்ற அடிகளிற் காண்க. இவற்றால், நாக நாட்டரசர் இருவர் அம்மணிப்பீடிகையைப் பெறவிரும்பிப் பெரும்போர் புரிந்துவந்தபோது புத்தபகவான் ஆங்குத் தோன்றி, அது தமக்குரியதென்று கூறி அதனில் வீற்றிருந்து, அவர்கட்குத் தருமோபதேசம் புரிந்து அன்னோர் கொண்டிருந்த செற்றநீக்கி உய்வித்தருளினர் என்பது விளங்கும். இவ்வரலாறே, இலங்கைச் சரித்திரமாகிய மகாவமிசத்தும் சிறுமாறுபாட்டுடன் கூறப்பட்டுள்ளது. நாகதீபத்தில், மகோதரன் சூலோதரன் என்ற மாமனும் மருமகனுமாகிய அரசரிருவர்க்குள் மணியிழைத்த சிங்காதனமொன்றன் விஷயமாக விவாதமுண்டாய்ப் பெரும்போர்நிகழ, புத்தபகவான் அதனைத் தடுக்க விரைந்து அவர்கள்முன்பு பிரசன்னராகி, அன்னோரது அஞ்ஞானம் நீங்கும்படி தருமோபதேசம் புரிய, உடனே அவ்விருவரும் தம் பகைமை நீங்கி அவ்வாசனத்தைப் பகவானுக்கே சமர்ப்பித்தனர் என்றும், அம்மணியாசனத்தில் அவர் வீற்றிருந்து, அவ்

1 The Jataka, Vol. ii, 90; iii, 124; iv, 150.

வேந்தரளித்த தெய்வவுணவை அமுது செய்தனர் என்றும், பின் ராஜாயதன (அரசுபோலும்) மரக்கிளையை ஆங்கே அடையாளமாக நாட்டி அம் மணிப்பீடிகையையும் அவர்க்கே திரும்பவளித்து அதனை வணங்கிவரும்படி ஆணையிட்டுச் சென்றனர் என்றும் அந்நூலுட் காணப்படுகின்றன.[1] இம் மகாவமிசவரலாறும் புத்த ஜாதகங்களுள் ஒன்றாகவே கருதத்தக்கது. இவற்றால் மணிபல்லவ பீடிகையின்செய்தி இலங்கை வரலாற்றாலும் ஆதரிக்கப்படுதல் அறியப்படும்

## 6. இந்திரவிகாரம்

காவிரிப்பூம்பட்டினத்தில், ஏழுரங்குகள் உடையதாய் மிகப் பிரபலம்பெற்ற பௌத்தவிகாரம் ஒன்றிருந்த செய்தி சிலப்பதிகார மணிமேகலைகளால் அறியப்படுகின்றது. இதனை ஆதியில் நிருமித்தவன் இந்திரன் என்று அந்நூல்கள் கூறும். அசோக சக்கரவர்த்தியால், பௌத்தமதப் பிரசாரஞ்செய்வதற்கு அனுப்பப்பட்ட அவன் இளவலும் பிக்ஷுவுமான மகேந்திரன் என்பான், தமிழ்நாடு சென்று சோணாட்டில் ஒரு பெரிய விகாரங்கட்டிக் கொண்டு அதனிற் சிலகாலம் வசிக்கலாயினன் என்றும், அவ்விகாரத்தின் இடிந்த பகுதிசில 7-ம் நூற்றாண்டில் இங்கு வந்துசென்ற **யுவான்-ஸுவாங்** என்ற சீனயாத்திரிகர் காலத்தும் இருந்தன என்றும் கூறப்படுகின்றன. சோணாட்டிற் கட்டப்பட்டதாக இங்குச் சொல்லப்படுவது, காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கிய விகாரமாகவே கொள்ளல் பொருத்தமாகும். ஆயின் இந்திரவிகாரம் என்பதற்கு மகேந்திரன் கட்டிய விகாரம் என்பதே பொருளாக வேண்டும். அரசகுலத்தவனை இந்திரன் அல்லது மகேந்திரன் கட்டியதொன்றே தேவனை இந்திரன் கட்டியதாகப் பின்னோராற் கருதப்படலாயிற்று என்பது இதனாற் பெறப்படுகின்றது. மகேந்திரன் கட்டிய விகாரம் அமைந்த ஊரை வேறாகவும் சிலர் கருதுவர்.

## 7. கச்சித் தருமதவனம்

மணிமேகலை, கச்சிமாநகர் சென்றபோது, அந்நகரின் தென்மேற்காகவுள்ள தருமதவனத்தை முதலில் அடைந்தனள் என்றும், அவள் வருகையறிந்து அந்நகரத்தரசனான இளங்கிள்ளி மணிமேகலையை எதிர்கொண்டு வணங்கியபின், அவளேவலால், மணிபல்லவப் பீடிகைபோன்ற பீடிகையும், மணிமேகலாதெய்வம்

1 Mahavamsa, 1, 45-49.

2 V. A. Smith's 'The Early History of India', 3rd Edition, p. 185.

வழிபடற்கேற்ற புத்தசைத்தியமும் வகுத்தனன் என்றும், அவ்வுபவனத்தே மணிமேகலை அறஞ்செய்துகொண்டிருக்கும்போது அறவணவடிகளைத் தன் தாயுடன் ஆங்குச் சந்தித்தனள் என்றும் கூறப்பட்டுள்ளன. சீனயாத்திரிகரான யுவான்-ஸுவாங்கும், கச்சிக்குத் தெற்கேயுள்ள சங்காராமம் ஒன்றைப்பற்றிக் குறிப்பிடுதல் இதனுடன் ஒப்பிடத்தக்கது. அவ்வாராமத்துள், அசோகனுற் கட்டப்பட்டதாகக் கருதப்பட்டதும், 100-அடி உயர முள்ளதுமான ஸ்தூபமொன்று தங்காலத்து விளங்கியதாகவும் அதனுட் பௌத்தப் பெரியோரும் கற்றவர்களும் கூடும் இடம் இருந்ததாகவும் அவர் குறிப்பிடுவர்.[1] அசோகன், காஞ்சியில் ஸ்தூபங்கட்டியதாகச் சொல்லப்படுதற்கு வேறு தக்க சான்றின்மையால், அஃது இளங்கிள்ளி கட்டியவற்றுள் ஒன்ருகவே கருதத்தக்கது[2]. கச்சிமாநகர் மயிலுருவமாக அமைந்திருந்ததென்பதும், அந்நகரின் பிற்பகுதியில் அம்மயிலின் தோகைபோல அமைந்த சோலையொன்று இருந்ததென்பதும்,

> "ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிருக்
> காருடைய பீலி கடிகாவாச்—சீருடைய
> அத்தியூர்[3] வாயா அணிமயிலே போன்றதே
> பொற்றேரான் கச்சிப் பொலிவு" (யாப். வி. 93, உரை.)

என, பெருஞ்சித்திரனுர் என்ற பழம்புலவர் பாடிய வெண்பாவால் அறியலாம். இதனுட்கூறப்பட்ட கடிகா என்பது மணிமேகலை கூறும் தருமதவனமாகவே கருதப் பொருத்தமுண்டு.

## (8) அறவணவடிகள்

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிகாரத்திருந்த பௌத்த சங்கத்தாரின் தலைவரும் மாதவிமணிமேகலையிருவரையும் பிக்ஷுணிகளாக்கிய பெரியாருமாகிய அறவணவடிகள், புகாரைக்கடல் கொண்டதும் மாதவியுடன் கச்சிமாநகரடைந்து, மணிபல்லவத்தினின்று வந்த மணிமேகலையை ஆங்குச் சந்தித்து, அவளுக்குத் தருமோபதேசஞ்செய்த பின்பு, அவளுடன் கச்சியிலே தம் இறுதிக்காலத்தைக்கழித்தனர் என்பது மணிமேகலையால் அறியலாம். இவ் வறவணவடிகளை,

---

1 Beals 'Siyu Ki,' Vol ii p. 230.

2 Buddhistic Studies—Buddhism in Tamil Literature by V. R Ramachandra Dikshitar M. A. pp 687-8.

3 அத்தியூர்—சின்னக் காஞ்சிபுரம்.

'மறவணை நீத்த மாசறு கேள்வி யறவணவடிகள்'
'நரைமுதிர் யாக்கை நடுங்காநாவி லுரைமுதாளன்'

என்றும் பிறவாறும் சாத்தனர் பலபடப் புகழ்வர். இப்புலவர், அறவணவடிகள் பெருமையைத் தம் நூலில் உள்ளுருக்கத்துடன் சிறப்பிப்பதை நோக்குமிடத்து, அவர்க்கும் ஞான குருவாய் விளங்கியவர் இவ்வடிகளோ என்ற ஐயம் நிகழக்கூடியதேயாம். அறவணவடிகள் கச்சிமாநகரில் தம் இறுதிக்காலத்தைக் கழித்தவர் என்பதற்கு மற்றொரு குறிப்பும் உண்டு. பெரிய காஞ்சீபுரத்தில் அடிஸன்பேட்டைக்குச் சமீபத்தில் உள்ள தொண்டைமானத் தத்தை அடுத்து **அறப்பணஞ்சேரி** என்ற தெரு உள்ளது. இச்சேரிப்பெயர் அறவணவடிகள் சம்பந்தம்பற்றி வழங்கியதாக வேண்டும் என்பது அதன் பெயரொற்றுமையால் எளிதில் உணரப்படும். அறவணன்சேரி என்பது அறப்பணஞ்சேரி என மாறுதல் தமிழ்வழக்குக்கு ஒத்ததே. காஞ்சியில், கச்சபேசுவரர் ஆலயத்துக்குப் பக்கத்துள்ள ஏரியும் தெருவும்—புத்தேரி (புத்தவேரி), புத்தேரித்தெரு என்ற பெயர்களால் வழங்குதலும் அறியத்தக்கது. பௌத்தர்கள் ஒருகாலத்தே இத்தெருவில் மிக்குவசித்தவர்கள் என்பது இதனால் அறியப்படும். ஏகாம்பரநாதர் கோயிலிலும் பிறவிடங்களிலும் அகப்பட்டுள்ள புத்தச்சிலைகளும் பிற பௌத்த அடையாளங்களும், யுவான்ஸுவாங் கூறியவாறே, 7-ம் நூற்றாண்டுக்கு முன்பே பௌத்தமயமாக ஒருகாலத்துக் கச்சிப்பதி இருந்த நிலைமையைக் குறிப்பிக்கக்கூடியன.

## (9) ஏழென்ற எண் வழக்கு

ஏழென்ற எண், பௌத்தர்க்குள் சிறப்பாகக் கொள்ளப்பட்டிருந்த செய்தி மணிமேகலையால் அறியப்படும். இதனை,

"எழுநா ளெல்லை யிடுக்கண்வந் தெய்தா" (29, 19)
"இன்றேழ் நாளி னிந்நகர் மருங்கே, வந்துதோன்றும்"(7, 24)
"இன்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனொடு நின்பிறப் புணர்ந்து" (7, 106-107)
"எழுநா ளெல்லையு ளிரவலர்க் கீத்து" (28, 129)

என்பன முதலியவற்றால் அறியலாம். போதிசத்துவரது துயரை ஏழாம்நாளில் மணிமேகலாதெய்வம் தீர்த்துவைத்ததென்பதும், அப்புண்ணியசீலர் ஏழுநாள்களில் தம் செல்வத்தைத் தானவழியிற் செலவிட்டனரென்பதும், மற்றும் பல செய்திகட்கு ஏழு நாளளவு கொள்ளப்பட்டிருப்பதும் புத்தஜாதகங்களிலும் பரக்கக் காணலாம்[1].

---

1 The Jataka. See Index under 'Seven.'

"ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (1269)

"நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளே மேனி பசந்து" (1278)

என்ற குறள்களும் இவ்வழக்குப்பற்றிக் கூறப்பட்டனபோலும்.

## (10) பிக்ஷுக்களுக்குத் தாம்பூலம் உதவல்

அறவணவடிகள் கச்சியிலுள்ள தருமதவனத்தே மணிமேகலை யைச் சந்தித்தபோது, அவள் அவ்வடிகளை வணங்கி,

"நன்றென விரும்பி நல்லடி கழுவி
ஆசனத் தேற்றி அறுசுவை நால்வகைப்
போனக மேந்திப் பொழுதினிற் கொண்டபின்
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து" (28, 240-43)

உபசரித்தனள் என்று சாத்தனார் கூறுவர். இதனுள், திரை யல் என்பது வெற்றிலையும் பளிதம் என்பது கர்ப்பூரமும் ஆகும். இவ்வாறு உணவளித்தபின் தாம்பூலம் படைத்துப் பிக்ஷுவை உப சரிக்கும் வழக்குப் புத்தஜாதகம் ஒன்றினுங் காணப்படுகின்றது[1]. இங்ஙனம் தாம்பூலம் அளித்து உபசரிப்பது, சங்ககாலத்து மேன் மக்களின் ஒழுக்கமாயிருந்ததென்பது—"தையாஅல் தம்பலந் தின் றியோ" (கலித். 65), "உண்டினி திருந்த வுயர்பேராளற், கம்மென் திரையலோ டடைக்கா யீத்த. மையீரோதியை" (சிலப். 16, 54-6) என்பனவற்றால் அறியலாம். இவற்றால், தாம்பூலந்தரிக்கும் வழக் கம் பிற்காலத்ததே என்று, சரித்திரகாரர்சிலர் கொண்ட கருத் துத் தவறானது என்பது தெளியப்படும். தாம்பூலத்திற் சுண்ணாம் புக்குப் பிரதியாகக் கர்ப்பூரமிட்டுக் கொள்ளுதல் பண்டை முறை யாகும்.

"அடகுபுலால் பாகு பாளிதமு முண்ணான்
கடல்போலுங் கல்வி யவன்" (தொல். இடை. 36, இளம்.)

என்ற பழைய குறள்வெண்பாவினும் கர்ப்பூரமே தாம்பூலத்திற்கு உரியதாகக் கூறப்படுதல் காண்க.

## (11) பிக்ஷுணிகளின் சமயவாராய்ச்சி

மணிபல்லவத்திலின்று வஞ்சிமாநகர்க்கு ஆகாயவழியே சென்ற மணிமேகலை அந்நகரில் தங்கிச் சமயவாதியர்பலருடன்

1 The Jataka, Vol. i, pp. 132, 152.

அளவளாவி அவ்வவர் கொள்கையை அறிந்துகொண்டனள் என்று கூறப்படுகின்றது. இவ்வாறே பௌத்தபிக்ஷுணிகள் முற்காலத்தே சமயவாராய்ச்சியில் முனைந்துநின்றவர்கள் என்பது ஜாதகக்கதையாலும் விளங்கும். மதபேதங்களைத் தெரிந்து உண்மையறியவே மணிமேகலை சமயக்கணக்கருடன் உரையாடியவளாயினும், சமயவாதப்போரை நேரில் நடத்திவந்தவர் பழைய பௌத்தமகளிர் என்பது ஜாதகக்கதையால் அறியலாம். குண்டலகேசி யென்பாள் பௌத்தசங்கத்தைச் சார்ந்தபின், இவ்வாறே வாதம்புரிந்து பிறசமயத்தவரை வென்று பௌத்தசமயத்தை நிலைநாட்டியவள் என்று அவள் வரலாறு கூறுகின்றது. சைனரிலும் இத்தகையோர் உண்டென்பது நீலகேசி வரலாற்றால் அறியப்படும். சமயவாதத்துக்குச் செல்லும் மகளிர், நாவல்மரக்கிளையைக் கையிற்கொண்டு சென்று அதனைக் குறித்த விடத்தே நட்டுப் பிறமதத்தவரை அறைகூவி வாதுக்கழைப்பதும், அங்ஙனம் அறைகூவி நட்ட நாவற்கிளையைப் பிடுங்கி யெறிந்து மிதிப்பாருடன் அவ்வாதம் நிகழ்த்தப்படுவதும் பண்டைமரபென்பது குண்டலகேசி சரிதத்தால் அறியப்படுகின்றது[1]. இத்தகைய வழக்கே ஜாதகக்கதை யொன்றினுங் காணப்படுதல்[2] குறிப்பிடத்தகும். நாவல் என்பதற்குப் போருக்கழைத்தல் என்ற பொருள் கூறுவர் மயிலைநாதர்[3]. 'நாவலோ நாவல்' என்பது அறைகூவும் போது வழங்குந்தொடர். 'நாவலிட் டுழிதர்கின்றோம் நமன்றமர் தலைகள்மீதே' என்றார் தொண்டரடிப்பொடிகளும்[4]. இத் தமிழ் நூல்வழக்கு நாவல்மரக்கிளையை நட்டு எதிரிகளை அறைகூவி யழைக்கும் மேற்குறித்த செய்தியுடன் ஒப்பிட்டறியத்தக்கது. பிறரைக் காரியத்தடைசெய்தற்குக் **குழைபிடித்தல்** என்ற தொடரை யாழ்ப்பாணத்தார் வழங்குவதும் இந்நாவல்வழக்கைக் குறிப்பதுபோலும்.

## (12) பிற வழக்குக்கள்

இவ்வாறே ஜாதகக்கதைகளிற் கூறப்பட்ட பௌத்தச்செய்திகள் பலவற்றை மணிமேகலையினும் நாம் காணலாகும். உதாரணமாக:—

1. இருத்திபெற்ற பௌத்தப் பெரியோர் ஆகாயவழியே சேறல். (ii, 70, 71, 191).

---

1 நீலகேசி, குண்டலகேசி வாதச் சருக்கம், 164-174.
2 The Jataka, Vol. iii, p. 1.
3 நன்னூல், 100, உரை.
4 திருமாலை, 1.

2. உபவனங்கள் பௌத்தமுனிவர் தங்கும் இடங்களாக அமைதல் (vi, 37).
3. பிக்ஷாபாத்திரப் பெருமையும், அதுகொண்டு மன்னு யிர்க்கு உணவளித்தற் சிறப்பும்.
4. சக்கரவாளகிரிச் சிறப்பு (v. 137)
5. சக்கரவாளக் கோட்டம் போன்ற நகரமயானங்கள் அறச்சாலையாதல்.
6. சதுக்கப் பூதர்க்கு (நாற்சந்தியிலுள்ள தேவதைகட்கு)ப் பலியிடும் வழக்கு (i, 187.)
7. பளிக்கறைச் செய்தி.

என்பன முதலியன காண்க. பஞ்சகாலம் நேர்ந்தமையால் மணிமேகலை கச்சிமாநகர் சென்று, அமுதசுரபி என்ற அக்ஷயபாத்திரத்தைத் தன் கையில் ஏந்தியவளாய் 'உண்ணுதற்கு எல்லாஉயிர்களும் வருக' என்றழைத்ததும்,

> "மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
> காணார் கேளார் கான்முட மாணேர்
> பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
> படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
> மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
> பன்னூ றுயிரம் விலங்கின் றொகுதியும்
> மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி" (28, 221-227)

அவ் வமுதசுரபியளித்த உணவை அருந்தி மகிழ்ந்தன என்றும், அவ்வறச்செயலால் எங்கும் மழைபெய்து நாடு வளம்பெற்றதென்றும் மணிமேகலை கூறும். கச்சிமாநகர்க்கு இத்தகைய அறச்செயல்கள் முற்காலத்தே சிறந்திருந்தன என்பது மற்றொரு வரலாற்றாலும் தெரியலாம். அந்நகரிற் கோயில்கொண்ட ஸ்ரீகாமாக்ஷியம்மை சிவபிரானைநோக்கித் தவம்புரிந்தகாலத்தே, தான் பெற்ற இருநாழி நெற்கொண்டு எண்ணான் கறங்களையும் செய்து, வறுமையால் வருந்திய மன்னுயிர்களை வாழ்வித்தருளினள் என்பது அந்நகர்ப் புராண வரலாறு. இக் கதை, மேற்குறித்த மணிமேகலை வரலாற்றுடன் ஒருவகையில் ஒப்பிடத்தக்கதாகும். மற்றும், புத்ததேவரது முற்பிறவி வரலாறுகளாக மணிமேகலை முதலியன கூறுவனவற்றை ஜாதகங்கள்மூலம் தெளிவாக நாம் அறியலாம். அவற்றை இங்கு விரிப்பிற் பெருகும். இந்த ஜாதகங்களால் வேறு தமிழ்நூல்களிற் கண்ட வழக்குக்கள்சிலவும் அறிய இடமுண்டு. உதாரணமாக அடியில் வருவன காண்க:—

"நாய்பெற்ற தெங்கம் பழம்" (பழமொழி. 216)—இது பயனின்மையைக் குறிக்க ஜாதகத்தில் (v, 206) வழங்கப்படுகின்றது.

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு" (கலித்தொகை)—இதனுட் கண்டவாறு யானை யாழிசைக்கு வசப்படுதலை ஜாதகமுங் (vi. 227, 130) கூறும்.

இவ்வாறு புத்தஜாதகம் முதலியவை கூறும் பௌத்தவரலாறுகளை அடிப்படையாகக்கொண்டு மணிமேகலைச்செய்திகள் அமைந்திருத்தல்பற்றி, அந்நூல் கூறுவன யாவும் கற்பனைகளே என்று நாம் கருதிவிடல் தகாது. மணிமேகலைகாலத்து அமைந்திருந்த அரசியன் முறைகளும், அவ்வச்சமயங்களின் நிலைமையும், மக்களின் வழக்கவொழுக்கங்களும். மற்றும் பல அரிய தமிழ்வழக்குக்களும் சரித்திரவாராய்ச்சிக்கு உற்றவைகளாகும். உண்மை நிகழ்ச்சிகளான செய்திகளும் அந்நூலுள் அநேகமுள்ளன. அவை இன்னஇன்ன வென்பதை எடுத்துரைத்தற்கு இஃது இடமன்று. இவற்றால் ஜாதகக்கதைகள்போலும் பழைய பௌத்தநூல்கள், தமிழ்நூல் வழக்குக்களை அறிதற்கு ஏற்ற சாதனங்களாயிருத்தலால், அவற்றை அறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துதவல் பெரிதும் வேண்டத்தக்கது என்னலாம்.

---

## 17. பத்தினிதேவியைப் பற்றிய சில குறிப்புக்கள்[1]

—: 0 :—

கோவலன்மனைவியும் கண்ணகி என்று பெயர்பெற்றவளுமான பத்தினிதேவியைப் பற்றி முன்னூல்களாலும் ஆராய்ச்சியாலுங் கண்டறிந்த செய்திகளைச் "சேரன்-செங்குட்டுவன்" என்ற நூலில் யான் விரிய எழுதியிருத்தல் தமிழ்மக்கள் பலரும் நன்கறிந்தது. கற்பிற்கரசியாய்த் தன் நாடடைந்து விண்ணுலகுற்ற அப்பெண் மணியைப் பத்தினித்தெய்வமாகக்கொண்டு கோயிலெடுத்து வழிபட்டவனும், அவ்வழிபாடு தமிழகத்தும் பிற தேயங்களினும் பரவுதற்குக் காரணமாயிருந்தவனும் சேரன்-செங்குட்டுவனே என்பதும், அவ்வணக்கம் பலநாடுகளினும்பெருகிய வரலாறும் அந்

1 இக்கட்டுரை, காலஞ்சென்ற திருவாளர்: கா. நமசிவாய முதலியார் அவர்களின் ஞாபகவெளியீடான நினைவுமலரில், ஆசிரியரால் எழுதப்பெற்றதாகும்.

நூலுள் விளக்கப்பட்டுள்ளன. அத்தகைய சிறப்புவாய்ந்த பத்தினிதேவியைப்பற்றி அநநூல் எழுதாதனவும் பின்பு கண்டனவுமான செய்திகள் சிலவற்றை இக் கட்டுரையுள் தொகுத்துக் கூற விரும்புகின்றேன்.

## 1. கண்ணகியின் குறிப்புப்பெயர்

கவுந்தியடிகளுடன் கோவலனுங்கண்ணகியும் உறையூர் நீங்கி மதுரைநோக்கிச் செல்லும் இடைவழியில், வேட்டுவரூரில் உள்ள துர்க்காதேவி கோயிலுள் தங்கநேர்ந்த காலத்து, வேடுவரும் அவர் மகளிரும் அத் தேவிக்கு விழாவயர்ந்து வரிக்கூத்தாடினர் என்றும், அக்கூத்தில் தேவியின் ஆவேசங்கொண்ட சாலினி என்பாள் ஆங்குக் கோவலனுடனிருந்த கண்ணகியை அணுகி அவளை நோக்கி-

> "இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
> தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
> ஒருமா மணியா யுலகிற் கோங்கிய
> திருமாமணி" (சிலப். 12, 47-9)

எனப் பாராட்டினள் என்றும் இளங்கோவடிகள் கூறுகின்றார். தமிழகத்தும் பிறநாடுகளினும் தெய்வமாகக் கொண்டாடப்பெறுஞ் சிறப்புக் கண்ணகிக்குப் பின்பு நிகழப்போவதால், அந் நிகழ்ச்சியை இவ்வாறு முன்னறிந்து குறிப்பிட்டனள் அச்சாலினி என்க. கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து வழிபட்டமையின் 'கொங்கச் செல்வி' என்றும், சேரவேந்தன் கோட்டமெடுத்து வணங்கலின் 'குடமலையாட்டி' என்றும், பாண்டியசோழர்கள் விழாவெடுத்துக் கொண்டாடுதலின் 'தென்றமிழ்ப்பாவை செய்தவக்கொழுந்து' என்றும், இலங்கையரசனும் மாளுவவேந்தராலும் அவ்வாறே போற்றப்படுதலின் 'ஒருமாமணியா யுலகிற் கோங்கியவள்' என்றும் கண்ணகி குறிப்பினுற் சிறப்பிக்கப்பெற்றமை காண்க. இங்ஙனம் குறிப்பிற் கூறப்பட்டவற்றுள்—

> "ஒருமா மணியா யுலகிற் கோங்கிய
> திருமாமணி"

எனவருந் தொடர், ஈண்டுச் சிறிது ஆராய்ச்சிக்குரியதாகின்றது. "இவ்வுலகுக்கு முழுமாணிக்கம் போன்று உயர்ச்சிபெற்ற பெண்ணுருக்கொண்ட திருமணி" என்பது இதற்கு அடியார்க்குநல்லார்

---

1 "கொங்கச் செல்வி குடமலை யாட்டி' என்றது, மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடுமிடன் கூறியவாறு; இவள் துர்க்கையாகவே பிறந்தாள் என்றவாறு' என்றார் சிலப்பதிகார அரும்பதவுரைகாரரும்.

எழுதிய உரை. இத்தொடருள் 'ஒருமா மணியாய்...ஓங்கிய திருமாமணி' என இருமுறை 'மாமணி' கூறப்பட்டிருப்பதன் உட்கருத்தை, அவருரை விளக்கியதில்லை. உலகுக்கு மாமணியாகிய மாமணி என்று கவியரசராகிய அடிகள் ஒருபொருட்சிறப்பின்றியே கூறினர் எனல் ஏற்புடையதுமன்று. அதனால், ஏதோ ஒன்றை நயம்பெறக் குறிப்பித்தற்கே பின்னரும் திருமாமணி என அவர் கூறுகின்றார் என்றே தோற்றுகின்றது. அக் குறிப்பு யாது என்பதே ஈண்டு ஆராய்ச்சி.

பத்தினிதேவியை 'உலகுக்கு ஒருமாமணியானவள்' என்று சாலினி கூறிவிட்டமையின், அங்ஙனம் மாமணியான **திருமாமணி** என்று அவள் பின்னரும் கூறிய தொடர், அத்தேவியின் இயற்பெயரை அதன் உறுப்புப்பொருள் விளங்க வேறுவகையாற் குறித்தவாறும். திருமாமணி என்பது திருமகள் தங்கும் சீரிய மணி என்னும் பொருளது. திருவளர்தாமரையைத் திருமலர் (பெருங்கதை, 2, 1, 39) என முன்னோர் கூறலும் ஒப்பிடுக. திருமகள் தங்கும் மாமணியாவது தாமரைக் கொட்டை அல்லது பொகுட்டாகும்.

> **"செந்தாமரைப் பொகுட்டிற் செம்மாந்து வீற்றிருக்கும்**
> **நந்தாவிளக்கை" (கம்பரா. இரணியன்வதை, 164)**

எனவரும் கம்பநாடர் திருவாக்கால், தாமரைப் பொகுட்டுத் திருமகட்கு உறைவிடமாதல் விளங்கும். இனி,

> **"சேயிதழ் பொதிந்த செம்பொறற் கொட்டை" (சிறுபாண் 75)**
> **"தாமரை மைதபு கிளர்கொட்டை" (கலித். 74)**

என்ற முன்னோர் கூற்றுக்களிலே, கொட்டை என்பது பொகுட்டு என்ற பொருளில் வழங்கியவாறே, அதன்பரியாயமான மணி என்பதும் அப்பொருள்பெற நின்றதென உணர்க. கோவலன் தேவியை இங்ஙனம் திருமகட்கு உறைவிடமான தாமரைப் பொகுட்டு என்றதனால், அவளது இயற்பெயர் குறிப்பிக்கப்பட்டதாயிற்று. என்னை? **கர்ணக கர்ணிக** என்ற பொகுட்டையுணர்த்தும் வடசொல் அடியாக அவ்வியற்பெயர் பிறந்ததாகலின் என்க. கர்ணகா என்பது அப்ஸரஸ் பதினொருவருள் ஒருத்தியின் பெயராக மகாபாரதத்தால் அறியப்படுதலும்.[1] பதுமபீடமான பொகுட்டுப்போன்றவள் என்பது அதன் உறுப்புப் பொருளாத

**1 பாண்டவருள் ஒருவனான அருச்சனனது ஜனனகாலத்தில், தேவகணத்தாரெல்லாம் அகங்களித்து நின்றதைக் கூறுமிடத்து—"மேனகை, ஸஹஜன்யை, கர்ணிகை, புஞ்சிகஸ்தலை, ருதுஸ்தலை, இருதாசி, விச்வாசி, பூர்வசித்தி, உம்லோசை, ப்ரம்லோசை, ஊர்வசி**

லும் இங்கு அறியத்தகும். பெருங்கதையில், ஆயமகளிர் சூழ மாடச்சிவிகையிற் சென்ற வாசவதத்தையை—

"செய்யோ ளமர்ந்த செம்பொற் றுமரை
வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல" (3, 38, 257-8)

எனச் சிறப்பித்தலினின்று, தாமரைப் பொகுட்டினை மகளிர்க்கு உவமையாகக் கூறல் முன்னோர்வழக்கு என்பது விளக்கமாம். ஆகவே, **கர்ணகா** அல்லது கர்ணிகா என்பது கண்ணகி எனத் தமிழில் மருவியதெனல் பெரிதும் பொருத்தமாதல் காணலாம். கர்ணம் (காது)வழியாகப் பிறந்தவளாதலின் கண்ணகி எனப் பெயர்வழங்கியதென்று 'கோவலன் கதை' என்ற பிற்காலத்து நூல் கூறும்.[1] கர்ணகா அல்லது கர்ணிகா என்பதினின்றே இக் கண்ணகிப்பெயரும் வந்ததாகலின் மேற்கூறியகருத்தே பெரிதும் பொருத்தமாதல் தெரியலாம். இவற்றால், கண்ணகத்துள்ளாள் என்ற பொருளுடையதாக இப்பெயர் கருதப்படுவதினும், முற்கூறியதே பெரிதும் ஏற்புடைப் பொருள் என்று கொள்ளத்தக்கது. 'கொங்கச் செல்வி' முதலிய தொடர்களால், கண்ணகியின் பின்னிகழ்ச்சிகளைக் குறிப்பிற் கூறியவாறே, திருமாமணி என்ற இம்முடிவுத்தொடரால் அவளியற்பெயரையும் அக்குறிப்பமையக் கூறலாயினள், தெய்வாவேசமுற்ற சாலினி என்க. மாடலன் என்ற மறையவன் கோவலனை நோக்கி—

"உம்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" (15,92-93)

என்று கூறியதாக, இளங்கோவடிகள் வேறிடத்தும் இத்தகைய தொடரை ஆளுதல் நோக்கத்தக்கது. இம்மாடலன் கோவலற்குப் பெருநட்பினன் என்பதும் செங்குட்டுவன் பத்தினிப்பிரதிஷ்டை புரிதற்குப் பெருந்துணையாய் நின்ற நான்மறையாளன் என்பதும் சிலப்பதிகாரத்தால் நன்கறியப்பட்டவை. அத்தகைய அந்தணன் கூற்றிலும் **திருத்தகுமாமணி** என்ற தொடரை அடிகள் வைத்துக்

---

ஆகிய அப்ஸரஸ்கள் பதினொருவரும் பாடினர்" என்று கூறப்படுதல் காண்க. (ஆதிபர்வம், 132-ம் அத்யாயம்). **கர்ணகை** என்றும் இவள் வழங்கப்படுவள். [Sir M. Monier William's Sanskrit-English Dictionary—See Karnaka.]

1 "ஐந்துதலை நாகமது அந்தக் குழந்தைதன்னைக், காளியென்று தானறிந்து கனமாக ஏதுசெய்யும், கன்னவழி வாய்ப்பிறந்த கட்டழகி யாகுமெனக், கண்ணகியா ளென்றுசொல்லிக் கன்னிக்குப் பேர் கொடுத்த" எனக் காண்க (10).

காட்டியது மேற்கூறிய கருத்தை உட்கொண்டே என்று கொள்ளத் தடையில்லை. திருத்தகு மாமணிக் கொழுந்து - திருமகள் விரும்பத்தக்க இளம்பொருட்டு என்றவாறு. இக்கண்ணகிப் பெயர் கடைவள்ளல்களுள் ஒருவனான வேள்பேகனுடைய மனைவிக்கும் உரியதென்பது புறநானூற்றால் அறிந்ததாம். வடமொழிப் பெயர்கள், நேராகவும் மருவியும் மக்களியற்பெயராகத் தமிழகத்தே முற்காலத்திற் பெருகவழங்கிவந்தமை, சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய காவியங்களால் அறியப்பட்டதாகலின், கோவலன்தேவிக்கும் பேகன்தேவிக்கும் வழங்கிய கண்ணகிப்பெயரும் அத்தயதொன்றே எனல் பொருந்துமாறு கண்டு கொள்க.

## (2) கண்ணகி வரலாறுபற்றிய சங்கச்செய்யுள்.

கோவலன் கண்ணகிகளைப்பற்றிய செய்திகள், எட்டுத்தொகை நூல்களிலேனும் பிற சங்கச்செய்யுட்களிலேனும் எடுத்துக் கூறப்படாமையால், அவர்களைப் பற்றியமைந்த சிலப்பதிகாரமும் அதன் தொடர்பான மணிமேகலையும் சங்ககாலத்துக்குப் பிற்பட்டகாவியங்களே என்று கருதுவாரும் உளர். சிலப்பதிகார, வஞ்சிக்காண்டங் கூறும் செங்குட்டுவன்செயல்களிற் சில, பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்திற்கண்ட அச்சேரன் செய்திகளுடன் ஒற்றுமைப்படுதலையும் பிறகாரணங்களையுங்கொண்டு அன்னோர்கருத்துச் சிறிதும் பொருந்தாமையைச் 'சேரன்–செங்குட்டுவ'வில் நன்கு விளக்கியுள்ளேன். இனி, வேறு சங்கநூற்பாடலொன்றும் இப்பத்தினியின் வரலாறு கூறி, அவர்கொள்கைக்கு மாறுபடநிற்றலை விளக்குவேன். எட்டுத்தொகையுள் ஒன்றான நற்றிணையுள் மதுரை மருதனிளநாகனார் பாடிய 216–ஆம் செய்யுள் ஈண்டு ஆராய்தற்குரியது. அச்சுப்பிரதியில் உள்ளபடி அப்பாடல் வருமாறு:—

"துனிதீர் கூட்டமொடு துன்னு ராயினும்
இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்
கண்ணுறு விழுமங் கைபோ லுதவி
நம்முறு துயரங் களையா ராயினும்
இன்னு தன்றே யவரில் லூரே
எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியி னிதணத் தாங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமா வுண்ணிக்
கேட்டோ ரனையா ராயினும்
வேட்டோ ரல்லது பிறரின் னூரே"

"இது, தலைமகட்குப் பாங்காயினர் கேட்பத், தலைமகள்தலை நின்றொழுகப்படாநின்ற பரத்தை, பாணற்காயினும் விறலிக்காயினுஞ் சொல்லுவாளாய்ச் சொல்லியது" என்பது இதன் துறைக் குறிப்பு. தலைவர் மனங்கலந்து என்னுடன் கூடாராயினும், காண்டற்குரிய அவரைக் காணுமிடத்து இருந்துவாழ்தலே எனக்கு இனியதாம்; நம் மனத்துயரை விரைந்து நீக்கிலரேனும் அவரில்லாத ஊர்ப்புறம் எனக்கு இன்னாததே; அயலானொருவன் விளைத்த பெருந்துயர் வருத்துதலாலே, ஒருமுலை யறுத்த **திருமாவுண்ணிக்**குற்ற துயரை அவள் முன்வந்து உசாவியவர்கள் இனியரேயாயினும், அவட்குத் தன் கணவனல்லது பிறரெல்லாம் இன்னரேயாயினர் அன்றோ—என்பது இதன் பொழிப்பு'. 'இவ்வூர்ச்சேரி எனக்கு இனியவர்களாயும் என் துயரைக் கேட்டு இரங்குபவர்களாயுமுள்ள நும்போன்ற மக்களை உடையதாயினும், என் அன்புக்குரியவரும் துன்பங்களையவல்லவருமான தலைவரைக் காணக் கூடாத நிலை இங்கு வாய்த்தலின் எனக்கு இவ்விடம் வெறுப்புக்குரியதேயாம்' என்று காதற்பரத்தை பாணன்விறலியர்களை நோக்கித் தன் மனநிலை கூறியவாறு. இத்தகைய மனப்பான்மை கொண்டு தன்போல் வருந்திய ஒருத்தியின்நிலையை அவள் இப்பாட்டின் பிற்பகுதியிற் குறிப்பிடுகின்றாள். இப்பகுதியுள், திருமாவுண்ணி என்பாள் ஏதிலானொருவனாற் பெருந்துயர்க்குள்ளாகித் தன் ஒருமுலையறுத்தவள் என்பதும் அவள் வேங்கைமரத்தையடுத்த பரணருகே வந்து நின்றனள் என்பதும், அவ்விடத்துவந்த மக்கள்சிலர் அவணிலைக்கிரங்கி அவளுற்ற துயரை உசாவினர்[2] என்பதும், அங்ஙனம் உசாவியவர் இனியரேயாயினும், தன் அரும்

---

1 இப்பொழிப்புக்கேற்றபடி பாடலை இயைத்துப் பொருள் கொள்க. இதணத்தாங்கண் (நின்ற) திருமாவுண்ணி என இயையும். இதணத் தாங்கண் (வந்து)கேட்டோர் என்றியைப்பினுமாம். காதற்பரத்தை கூற்றில், இஃது இனியது, இஃது இன்னாதுஎன்று கூறப்பட்டதற்கு ஏற்ப, 'கேட்டோ ரனையராயினும்' என்பது 'கேட்டோ ரினியராயினும்' எனவும், குறிஞ்சிக்குரிய வேங்கைமரம் கூறியதற்கேற்ப, 'குருகார் கழனி' என்பது 'குருகார் துழனி' எனவும் திருத்திக்கொள்ளற்பாலன. 'கேட்டோ ரனையராயினும்' என்பதும் ஏட்டுப்பிரதியொன்றிற்கண்ட பாடம். ஏதிலாளன்-அயலான், புதியவன் (கலித். 107, 14). இப்பாடற்கு யான்கூறிய இப்பொருளே பொருந்துமாறு ஆராய்ந்துகொள்க.

2 மலைமகளிர், வேங்கைநிழற்கீழ் நின்ற கண்ணகியின் துயர் பற்றி உசாவியதைக் குன்றக்குரவைத்தொடக்கத்து இளங்கோவடிகள் கூறியுள்ளதனானும் அறிக.

பெறற்கணவனது பெரும்பிரிவுத்துயர் வருத்தலால் அவரெல்லாம் அவட்கு விருப்பற்றவராயினர் என்பதுமாகிய வரலாறு கூறப்படுதல் காணலாம். இங்ஙனம் வேங்கைக்கீழ்நின்ற ஒருமுலையறுத்த திருமாவுண்ணி என்பாள், கோவலன் மனைவியேயன்றி வேறு யாவள் உளள்?

"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்கு" (பதிகம்)

"மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோ" (குன்றக்குரவை)

"ஒருமுலை குறைத்த திருமா பத்தினி" (பதிகம்)

என இதுவேசெய்தியைப் பல்லிடத்தும் இளங்கோவடிகள் கூறுதல் காண்க. ஆயின், திருமாபத்தினியைத் திருமாவுண்ணி என இப்பாடல் கூறுவதே வேறுபடவுள்ளது. இதனால், திருமாவுண்ணியென்றும் கண்ணகியை முன்னோர் வழங்கினரோ எனக் கருத இடந்தருகின்றது. இன்றேல், திருமாபன்னி, திருமாமணி என்பவற்றில் ஒன்று பழம்பாடமாய்ப் பின்பு வாசகரால் மாறியதெனல்வேண்டும். பிற்கூறியது பாடமாயின்,[1] முற்குறித்தவாறு "ஒருமாமணியா யுலகிற் கோங்கிய திருமாமணி" "திருத்தகு மாமணிக்கொழுந்து" என்ற இளங்கோவடிகள்வாக்கோடு இயைபு பெற்றுப் பெரிதும் பொருந்துவதாகும். எங்ஙனமாயினும், இந்நற்றிணைப் பாட்டுப் பாடியவர் மதுரையாசிரியரான சங்கப்புலவராதலின், தம் ஊரினும் பிறவிடத்தினும் நிகழ்ந்த கண்ணகி செய்தியையே தாம் கேட்டறிந்தபடி கூறலாயினர் என்பதும், ஒருமுலை குறைத்தவளாய் வேங்கைமரத்தையடைந்தவள் அப்பத்தினியேயன்றி வேறிலர் என்பதும் திண்ணமாம். மருதத்திணைக்குரிய காதற்பரத்தையின் கூற்றில் குறிஞ்சிநிலத்துச்செய்தி கூறப்படுதல் பொருந்துமோ எனின், எடுத்துக்காட்டுக்கு எந்நிலத்துச் செய்தியும் உரியதேயாதலின் திணைவழுவாதல் இல்லையென்க. மருதநிலத்து நிகழ்ந்த ஆதிமந்திவரலாற்றைக் குறிஞ்சித்திணைப் பொருட்கு எடுத்துக்காட்டிய பரணர்பாட்டு (அகம். 222) ஈண்டு ஒப்பிடத்தக்கது.

---

1* 'திருமணி' என்பது பாடமாம்போது பாட்டமைதிபெறத் 'திருமாமணிக்கு' என்றிருத்தல்வேண்டும். திருமாமணிக்கு...பிறரின்னுரே என இயையும்.

## (3) கண்ணகியின் தமிழ்ப்புலமை

பத்தினிதேவி என்று உலகம்போற்றிய கண்ணகி, நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியராகவும் நம்முன் தோற்றுகின்றார். இது பொன்மலர் நாற்றமும் உடையது போலுமன்றோ? யாப்பருங்கல விருத்தியுள் ஆரிடப்போலிக்கு மேற்கோளாகக் காட்டிய மூன்று பாடல்களிலே—

> "கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
> ஒண்செங் குருதியி னூடு கிடந்ததே—கெண்டிக்
> கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
> அழுதகண் ணீர் துடைத்த கை.

என்ற வெண்பாவும் ஒன்று. இதனைப் 'பத்தினிச்செய்யுள்' என்பர் அவ்விருத்தியுடையார். அவர் அம்மூன்றுபாடல்களையுங் காட்டி—

"என்று இத்தொடக்கத்துப் பெருஞ்சித்திரனார்செய்யுளும் ஒளவையார் செய்யுளும் பத்தினிச்செய்யுளும் முதலாகவுடையன எப்பாற்படுமெனில் ஆரிடப்போலி என்றும் ஆரிடவாசகம் என்றும் வழங்கப்படும் என்க. இவையெல்லாம் இருடிகளல்லா ஏனையோராகி மனத்தது பாடவும் ஆகவுங்கெடவும் பாடல்தரும் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் பெருந்தலைச் சாத்தனார் இத்தொடக்கத்தோரா லும் பெருஞ்சித்திரனார் தொடக்கத்தோராலும் ஆரிடச்செய்யுள் போல மிகவுங் குறையவும் பாடப்படுவன எனக் கொள்க"

என்று எழுதிச்செல்லுதல் அறியத்தக்கது. கபிலர் பரணர் ஒளவையார் முதலிய சங்கப்புலவருடன் ஒப்பவைத்துப் பத்தினியையும் அவர் இங்ஙனம் காட்டுதலால், அப்பத்தினி சங்ககாலத்தவரே என்பதும், சங்கப்புலவர்போல நிறைமொழியாளராய் வாக்குச்சித்திபெற்றவர் என்பதும் பெறப்படுகின்றன.

இனி, இப் பத்தினிச்செய்யுளை நோக்குமிடத்து, இது, தம் இன்னுயிர்க் கணவன் வெட்டுண்டு வீழ்ந்த நிலைகண்டு புலம்பிப் பாடியதாதல் தெரியலாம். சங்ககாலத்தே பத்தினிதேவி என்று பரவப் பெற்றவளும், பாண்டியனேவலால் வெட்டுண்டுவீழ்ந்த கணவனுக்காகப் பரிந்து செயலற்றுநின்றவளும் கோவலன் மனைவியே என்பது சொல்லவும் வேண்டுமோ? இவ்வெண்பாவில், 'கெழுதகையில்லேன்...பன்னாள் அழுத கண்ணீர் துடைத்த கை' என்று கூறப்படுவதால், கணவனுடன் தனக்கு நெடுங்காலம் கூட்டமின்றிப் பிரிவுநிகழ அதனால் தான் பெரிதும் வருந்திநின்ற நிலையும், அத்துயர்நீங்கத் தன் நாயகன் பின்பு தலையளிசெய்து போந்தமையும் நன்கு விளங்கும். அங்ஙனம் பன்னாளழுத கண்

னீரைமாற்றி அருள்புரிந்தது அவன் கரமேயாதலின், அக்கரம் தன்முன் குருதியளைந்து கிடக்குநிலைக்கு வருந்தி 'ஒண்செங் குருதியின் ஓஒ கிடந்ததே" என்று புலம்பிப் பாடினள் நம் பத்தினிதேவி என்க.

"கண்பொழி புனல்சோரக் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ"

என்றிவ்வாறு கண்ணகி, வெட்டுண்ட கணவன்முன் புலம்புகின்ற நிலையை இளங்கோவடிகள் கூறுதலுங் காண்க.

இப் பத்தினிச்செய்யுளின் இரண்டாமடி, வெண்பாவிற் கோதிய உறுப்பின்மிக்கு ஐஞ்சீர் பெற்றுவந்தமையால் ஆரிடப் போலியாம் என்றும், ஆரிடம் பாடற்குரியார் ஆக்குதற்கும் கெடுத் தற்கும் ஆற்றலுடையோராய் இம்மை மறுமை முக்காலமும் உணர்ந்த இருடிகளென்றும், ஆரிடப்போலி பாடுதற்குரியார் இரு டிகளல்லா ஏனையோராகி மனத்ததுபாடவும் ஆகவுங்கெடவும் பாடல்தரும் கபிலபரணராதியோர் எனவும், இப்பத்தினியும் அவ ருள் ஒருவர் எனவும் அவ்விருத்தியுடையார் எழுதியவை புதிய தமிழ்ச்செய்திகளாகும். இத்தகைய அரிய பத்தினிப்பாட்டை இளங்கோவடிகள் எடுத்தாளாமைக்குக் காரணந் தெரிந்திலது. ஆயினும், இச்செய்யுள் பத்தினிதேவியது என்றவழக்குப் பழமை யானதென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவற்றால், ஆதிமந்தியார் வெள்ளிவீதியார் என்ற பேரிசைபெற்ற பெண்பாற்புலவர்கள் போல, ஒப்புயர்வற்ற கற்பின்மாட்சியுடன் நல்லிசைப்புலமையும் வாய்ந்தவள் நம் பத்தினிதேவி என்பது பெறப்படுகின்றது.

## (4) பத்தினிதேவியைப்பற்றிய பிற்காலக்கதைகள்[1]

பத்தினிதேவியின் வரலாறுகூறுவனவற்றுள் 'கோவலன் கதை' என வழங்கும் நாட்டுப்பாடலும் ஒன்று. இது பின்னே ரொருவரால் இலக்கணவிலக்கியவளமற்ற எளிய அம்மானைச் செய்யுணடையில் இயற்றப்பட்டது. முன்னூலான சிலப்பதிகா ரத்துடன் சரித்திரவமைப்பிற் பெரிதும் மாறுபாடும் உடையது. அவற்றையெல்லாம் இங்கே குறிக்கவேண்டியதில்லை: ஆயினும், பத்தினிதேவியைக் காளியம்சமாகக் கொண்டு முடிவில் அத்தேவி திருவொற்றியூர்க்குவந்து வட்டபுரியம்மன் என்ற பேர்பெற்றுத் திருவிழா பலிமுதலியவற்றால் வணங்கப்பட்டனள் என்று அந்நூல் முடித்தல்மட்டும் குறிப்பிடத்தக்கது. இக்கதையின்படியே, திருவொற்றியூர்ச் சிவாலயத்தின் உட்கோயிலின் வடக்குப்

1 இப்பகுதி, புதியதாக எழுதிச்சேர்க்கப்பட்டது.

பிராகாரத்துத் தனியே கோயில் கொண்டுள்ள துர்க்கா தேவியை[1] இக்கண்ணகியாகவே கொண்டு 15-நாள் வரை பெரிய திருவிழாவும் பலிகளும் நடத்தி மிக்க பயபக்தியுடன் இன்றும் மக்கள் வழிபடுவர். இவ்விழாவின் இறுதிநாளில், கண்ணகி மதுரையைக் கொளுத்திய ஐதிகத்தை, பந்தலொன்று கட்டி அதனைக் கொளுத்தி நடத்திவருகின்றனர். முற்காலத்தே இக்கண்ணகியம்மனுக்கு உவப்பாகக் கம்மாளனொருவனை நரபலியாகக் கொடுத்துவந்தனர் என்றும் அக்கம்மாளசாதிப் புலவரொருவர், இவ்வம்மனைத் தமிழ்பதிகங்களாற் பாடி வேண்டிக்கொண்டதற்கு இரங்கி, அப்பலியை நிறுத்தி வேறு பிராணிகளின் பலியையிடத் தேவி கட்டளையிட்டனள் என்றும் வரலாறு வழங்குகின்றது. இவ்வரலாறு கோவலன் கதையிறுதியினும் கூறப்பட்டதேயாம்.[2]

இனி, இக் கோவலன்கதைபற்றி மலையாளநாட்டில் வழங்குவதும் தமிழ்மொழியில் அமைந்ததுமான காதற்பிரபந்தமொன்றும் உள்ளது.[3] இது, முற்கூறிய கோவலன்கதையினும் வேறுபட்ட கதைப்போக்கும் நடைப்போக்கும் உடையது. புகழேந்தியார் எளிய நடையிற் பாடியதாகக் கூறப்படும் கோவலன்கதை, முன்னையதினும் இதுவாகக்கருதப் பொருத்தம் உண்டு. கண்ணகி முடிவில் மலைநாட்டுத் திருச்செங்குன்றூர் சென்று அங்கே பகவதியாகக் கோயில்கொண்டு யாவர்க்கும் அருள்புரிகின்றாள் என்று இந்நூல் கூறும். கோவலன்கதையும், இம் மலையாளபகவதியாகக் கண்ணகி இருந்த செய்திகூறி முடிவில் அவன் திருவொற்றியூர்

---

1 'திருவட்டப்பிறைப் பிடாரியார்' 'துர்க்கையார்' என்று சாஸனங்களில் இத்தேவி வழங்கப்பெறுவள் (M. E. R. *1913*, p. *86*). 'வீரமாகாளியுங் காத்திட வட்டமாஞ்சிலை யுய்த்தான்' எனத் திருவொற்றியூர்ப்புராணங் கூறுதலால், 'வட்டப்பாறை' என்பதே பழைய வழக்கென்று தெரிகின்றது.

2 "வட்டபுரி யம்மனென்று வகையாகப் பேரும்பெற்று, ஆண்டுக்கொருதரந்தா னழகுள்ள கம்மாளனைப், பலிவாங்கிக் கொண்டிருந்தாள் பாவையந்தக் கண்ணகியும், அப்போ தொருவருட மானதொரு கம்மாளன், பத்துப் பதிகமது பாவையர்க்குப் முன்படித்தான், கங்கையாய்ப் பாலதுதான் கண்ணகிக்குத் தான்சுரக்க, வட்டபுரி யம்மனவள் மனதுமகிழ்ந் தேது செய்வாள், இன்றுமுத லென்றனக்கு இந்தப் பலிவேண்டாம், எருமைக்கடாக் காவுதந்தா லின்பமாய் நான் கொள்வேன், என்ன, அப்படியே சம்மதித்தார் ஆதிபுரி யீசுவரனார்... வந்தவர்க்கு வரந்தருவாள் வட்டபுரி நாய்ச்சியம்மன்"

3 சீதாளவிதழ்களிலே, தமிழெழுத்தில் எழுதப்பட்ட இந்நூற்பிரதி தம்மிடமிருந்ததைச் சென்னை யூனிவர்ஸிடி தமிழ்-ரீடர்:ஸ்ரீமான் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் என்பார்வைக்கு அன்புடன் உதவினார்கள். இந்நூல் மலைநாட்டுவழக்கான கோவலன் கண்ணகிகளின் பிற்கால வரலாற்றை விளக்கக் கூடியதாகும்.

வந்ததாக[1] மொழிகின்றது.[2] இத்தகைய வரலாறுகட்கெல்லாம் ஆதிகாவியமான சிலப்பதிகாரத்தில் ஆதாரம் இல்லை. ஆயினும்,

"மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடுமிடம் கூறின படியாலே, இவள் துர்க்கையாகவே பிறந்தாள் எ-று."

என்று முன்னோரான சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் எழுதிச் செல்லுதலால், காளியுமிசமே கண்ணகி என்ற வரலாறு அவ்வுரை காரர்காலத்தே வழங்கிவந்ததென்பது தெரியலாம். இவ்வழக்குக்கேற்ப சிலப்பதிகார வழக்குரைகாதையில், கண்ணகிவரவைப் பாண்டியனுக்கு வாயில்காவலன் அறிவுறுத்தியதாகக் கூறுமிடத்தே—

"வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்

* * * *

கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்"

என்று அடிகள் பாடியதினின்று, அக் காளியாகவே பத்தினிதேவியைப் பின்னோர் கருதி வழங்கினர்போலும்.

இனி, திருச்செங்குன்றூரினும் திருவொற்றியூரினும் கண்ணகி கோயில்கொண்டாள் என்று கூறப்படுவதெல்லாம், அக்காலத்தே பத்தினிவணக்கம் நாடெங்கும் பரவியசெய்தி குறிப்பதாகவே கருதத்தக்கது. இது நிற்க. தொல்காப்பியச் சொல்லதிகார வுரையுள் (100) தெய்வச்சிலையார், உருபுகள்பல பல வினையான் வந்து ஒருவினை கொண்டு முடிதற்குக்காட்டிய வெண்பாவொன்று, சிலப்பதிகார வரலாற்றைச் சுருங்கக் கூறுவதாம். அதனை ஈண்டு எடுத்துக்காட்டுவதுடன் இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

"காதலியைக் கொண்டு கவுந்தி யொடுகூடி
மாதரிக்குக் காட்டி மனையி னகன்றுபோய்க்
கோதி லிறைவனது கூடற்கட் கோவலன்சென்
றேத முறுதல் வினை"

———

1 "மலையாளத் தெல்லையிலே மயிலணியாள் வந்திருந்து, பகவதியாளென்றுசொல்லிப் பட்சமுடன் பேரும்பெற்று, அங்கே சில கால மரிவையாள் தானிருந்தாள்" (111).

2 'சேரன் செங்குட்டுவன்' என்ற சரிதநூலுள், பத்தினிவணக்கம் நாடெங்கும் பரவியசெய்தி என்னும் விரித்துக் கூறப்பட்டுளது.

# 18. ஸ்ரீ இருந்தவளமுடையார்*

---

சிலப்பதிகாரத்தே துன்பமாலையில் வரும்,

> " ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
> பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
> நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
> தூவித் துறைபடியப் போயினள்"

என்ற அடிகளில், மாதரியென்னும் ஆயர்முதுமகள், ஆய்ச்சியர் குரவை முடிந்ததும் வையையாற்றின் கரையிடத்துள்ள நெடுமாலைப் பூசிப்பதற்குச் சென்றான் என்று கூறப்பட்டுளது. "வையை நெடுமால்" என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் **ஸ்ரீ இருந்தவளமுடையார்** என்று விளக்கம் எழுதினர். அடியார்க்கு நல்லார், அத்திருமாலை "அந்தர்வானத் தெம்பெருமான்" என்றார் இளங்கோவடிகள் "நீடுநீர் வையை நெடுமா லடி தொழ" எனப் பொதுப்படக்கூறுதலால் மதுரையில் பிரபலமான திருமாலைப்பற்றியே அவர் குறிப்பிடுகிறார் என்பது புலப்படும். இங்ஙனம் உரையாளர் கூறியபடி, இருந்தவளமுடையார் அந்தரவானத் தெம்பெருமான் என்ற திருநாமங்களுடன் வையைக்கரையில் திருமால் கோயில்கொண்ட விஷயம், இப்போது கூடன்மாநகரிற் காண்டல் அரிதேயாம். ஆயினும், திருமாலது நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாய் மதுரையைச்சார்ந்து விளங்கும் கூடலழகரைப் பற்றியே மேற்கூறிய விஷயங்கள்யாவும் அமைந்துகிடக்கின்றன; அதனை ஈண்டாராய்வேன். அரும்பதவுரையாசிரியர் "வையைநெடுமால்" என்பதற்குரிய "ஸ்ரீ இருந்தவளமுடையார்" என்ற திருநாமம் கூடலழகர்க்கு இப்போது வழங்கவில்லையேனும், அப்பெருமானது **இருந்த திருக்கோலம்** ஆங்குவந்து தரிசிப்போருக்கு ஆனந்தந் தரத்தக்க வண்ணம் இன்றுமுண்மையால், அக்காரணம்பற்றியே அது வழங்கிய தாகல்வேண்டும். இருந்தளமுடையார்–இருந்த திருக்கோலத்தின் வளப்பமுடையார். திருமாலைத் துதிக்கும் பெரியோர்கள் அப்பெருமானது நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களைச் சிறப்பித்தல் மரபாதலுங் காண்க. இனி இருந்த திருக்கோலத்தோடு திருமால் எழுந்தருளிய பதியை இருந்தவளமெனவும், அப்பெருமானை இருந்தவளமுடையார் எனவும் கொள்ள

---

* செந்தமிழ், தொ-8, பக். 111-114 (1909-10); ஹரிஸமய திவாகரம்.

லுமாம். திருவால வாயுடையார் திருவாப்புடையார் எனச் சிவபிரானைக்கூறும் வழக்கும் ஒப்பிடுக.

இனி, தொல்காப்பியச் செய்யுளியலில், "கொச்சகமராகம்" என்ற சூத்திரத்தே, பேராசிரியர் காட்டியதும் திருமாலைப் பற்றியதுமான பரிபாடலுள்,

" வானு ரெழிலி மழைவள நந்தத்
தேனுர் சிமய மலையி னிழிதந்து
நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானு
மருந்தாகு நீநீர் [1]மலிதுறை மேய
இருந்தையூர் அமர்ந்த செல்வநின்
திருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுதே"

என்ற அடிகளிலே, இருந்தையூர் என்பது மதுரையைச் சார்ந்து வையைக்கரைக்க ணுள்ளதெனவும், அவ்வூரில் திருமால் திருக்கோயில் கொண்டவாறும் கூறப்பட்டுள்ளன. அரும்பதவுரைகாரர் கூறிய இருந்தவளமென்னும் மதுரைப்பகுதியே இருந்தையூரென்னும் பெயராற் பரிபாடலில் வழங்கலாயிற்றென்பதை இஃது எளிதில் விளக்கக்கூடியது. இருந்தையூர்-இருந்தவூர் என்பதன் மரூஉ. திருமால் திருப்பதிகளில் ஒன்றாகிய நின்றை, நின்றவூர்போல இதனைக்கொள்க. "இருந்தையூர் அமர்ந்த செல்வ" எனத் திருமாலது இருந்த திருக்கோலம் குறிப்பிடப்படுதலும் கவனிக்கத் தக்கது. இவ்வாறு இருந்தையூர் இருந்தவளம் என்ற பெயர்களுடன் மதுரைப்பக்கத்து வேறு ஊரொன்றுங் காணப்படாமையால், நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய கூடலழகர்சந்நிதியுள்ள திவ்யதேசத்திற்கே, அப்பெயர் முற்காலத்தில் வழங்கியிருக்கவேண்டு மென்பது வெளியாகின்றது.

இவ் விருந்தையூர் போலவே மதுரையைச் சூழ்ந்து பலதலங்கள் முற்காலத்திருந்தனவென்பது,

" வடதிரு வால வாய்திரு நடுவூர்
வெள்ளி யம்பலம் நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சரம் அஞ்செழுத் தமைத்த
சென்னி மாபுரம் சேரன் திருத்தளி
கன்னிசெங் கோட்டம் கரியோன் திருவுறை

[1] "மலிதுறையெம் விருந்தையூர்" என்று அச்சுப்பிரதியிலுள்ளதாயினும், சங்கத்துத் தொல்காப்பியவுரைப் பிரதிகளில் "மலிதுறை மேய விருந்தையூர்" என்றே காணப்படுகின்றது.

......................ஒருபரங் குன்றம்
சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்"

என்னும் கல்லாட (௪௪) அடிகளாலும், "நான்குமாடங் கூடுதலின் நான்மாடக் கூடல் என்றாயிற்று; அவை, திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்" எனக் கலித்தொகை, ௯௨-ம் பாட்டில் எழுதிய நச்சினார்க்கினியர் உரையாலும் விளங்குகின்றது. இவற்றிற்கண்ட பெயர்களிற்பல இக்காலத்து வழங்கக்காணாமை போல, இருந்தையூர் என்ற வழக்கும் அரிதாயிற்றெனவுணர்க. கல்லாடத்தில், "கரியோன் றிருவுறை" எனவும், சிலப்பதிகாரத்தில், "உவணச்சேவ லுயர்த்தோனியமமும்" எனவும் (ஊர்காண் காதை) கூறப்பட்டவை, "வையை நெடுமால்" கோயில் கொண்ட இவ்விருந்தையூரையே குறிப்பதாகக் கருதத்தக்கது. இருந்தையூர்க் கருங்கோழியார் என்ற புலவரதூரும் இதுவேபோலும்.

இனி, அடியார்க்குநல்லார் "வையைக்கரையி னெடுமால்" என்பதற்கு "அந்தரவானத்தெம்பெருமான்" எனக் கூறியதும் கூடலழகர் விஷயமாகவே கொள்ளல்தகும். என்னை? அத் திருக்கோயிலின் மேல்விமானத்தில், கிடந்த திருக்கோலத்தோடு அப்பெருமான் எழுந்தருளியிருத்தலால் என்க.

இனி, 'வையைக்கரையினெடுமால்' என்று சிலப்பதிகாரங் கூறுமாறு, கூடலழகர் கோயில், வையைக் கரைக்கணன்றி மதுரைக்கு மேல்புறமுளதே எனின்:—மதுரையின் இருபக்கங்களினும் அந்நதி சூழ்ந்து சென்றதாகவே முன்னைவழக்குண்மையால் தென்பக்கத்தும் அதன்போக்கு உள்ளதேயாகும். தென்பாலிலுள்ள வையைப் பிரிவு இக்காலத்துக் "கிருதமாலை" என வழங்கப்பெற்றுக் கூடலழகர் கோயிற்பக்கத் தோடுகின்றது. மதுரைக்கோட்டையைச் சுற்றி மாலைபோல் ஓடுதலின் வையைக்கு இப்பெயர் வழங்கியதென்பர்.

"வேக மாதலின் வேக வதியென்றும்
மாகம் வாய்ந்தத னால்வையை யென்றுந்தா
ராக லாற்கிருத மாலைய தாமென்றும்
நாகர் முப்பெயர் நாட்டு நதியரோ"

என்பது கூடற்புராணம். கலித்தொகையிலும் (மருதக்கலி—௨)

"இருநிலம்—
[1] தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்

[1] "பெரிய நிலமடந்தை தான், ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல, அழகு பொலிவுற்ற வையையாற்றினது நீர்

நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புனல்சூழ்ந்த வயலூரன் "

என. இவ்வையை, மாலைசூழ்ந்துள்ளதுபோல மதுரையைச் சூழ்ந்து நின்றபடி வருணிக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இவற்றால், "நீடுநீர் வையை நெடுமால்" என்ற சிலப்பதிகாரத்தொடர், அரும் பதவுரையாசிரியர் அடியார்க்குநல்லார் என்ற முன்னோர்களெழுத் தாலும் பரிபாடற்பகுதியாலும் இப்போதுள்ள கூடலழகர் சந்நிதியையே குறித்ததாகல் கண்டுகொள்க.

———

# 19. சேரர் வஞ்சியும் சிலாசாஸன வழக்கும்[1]

——

சேரசோழபாண்டியர் என்ற மூவேந்தர்க்கும் பழைமையாகவே உரிமைபூண்ட தமிழகமானது குடபுலம், குணபுலம், தென்புலம் என மூவகைப்பகுப்பு உடையதென்பதும், அவற்றுட் குடபுலம் சேரர்க்கும், குணபுலம் சோழர்க்கும், தென்புலம் பாண்டியர்க்கும் உரியன என்பதும் முன்னூல்களாலும் பின்னூல்களாலும் நன்கறியப்பட்டவை. இதுபற்றியே குடபுலங்காவலர் மருமான், குடக்கோ, குடவர்கோமான் எனச் சேரரும், குணபுலங்காவலர் மருமான் எனச் சோழரும், தென்புலங்காவலர்மருமான், தென்னவன் எனப் பாண்டியரும் வழங்கப்பட்டனர். தென்புலத்துக்கு வடபாலுள்ள தமிழக வரைப்பு இருபகுதிப்பட்டு ஒரு பகுதி குடபுலமாகவும் ஏனைப் பகுதி குணபுலமாகவும் அமைவதாம். இவற்றுட் குடபுலம், குட்டம் குடம் பூழி முதலிய மேல்கடற் பகுதிகளையும் பன்றி மலாடு முதலிய உண்ணாட்டுப்பகுதிகளையும் உடையது. உண்ணாடு கொங்குமண்டலம் எனவும் பெயர்பெறும். இவ்விரு பகுதிப்பட்ட குடபுலவுரிமை பற்றியே குட்டுவன் குடவன் பூழியன் கொங்கன் என்று சேர வேந்தர் வழங்கப்

---

சூழ்ந்து மதிலைப் பொரும் பகையன்றிப் பகைவர்போரால் வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை யுடையவன்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

[1] Annals of Oriental Research of The University of Madras, Vol. I.

பெற்றனர். சேரர்க்கே பரம்பரையுரிமையுடையனவாகச் சங்க நூல்களும் பிறவுங்கூறும் கொல்லி அயிரை முதலிய மலைகளும், ஆன்பொருநை, பேரியாறு, காஞ்சி, வானிமுதலிய நதிகளும், காவிரியுடன் பிறநதிகள் கூடும் முக்கூடலும், கருவூர் ஆரூர் குழுமூர் பேரூர் முதலிய ஊர்களும் தன்னகத்துக்கொண்ட கொங்குநாடு சேரரது குடபுலத்தின் வேறுபட்டதன்று என்பது முக்கியமாக அறிதற்குரியது. இக்குடபுலத்தின்கண்ணே அவ்வேந்தரது ஆதித் தலைநகரும் விளங்கியதாகும். இவையாவும் சங்கச்செய்யுட்களையும் பின்னூல்களையுந் துணைக்கொண்டு, மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் **எழுதிய வஞ்சிமாநகர்** என்ற நூலினும், யானெழுதிய **சேரன் செங்குட்டுவன்** என்ற நூலினும் பார்க்கக் காணலாம். இவ்வுண்மைகள், இதுவரை வெளிவந்துள்ள சிலசாஸனங்களை ஆராய்ச்சி செய்யுமிடத்தும் செவ்விதிற் பெறப்படுகின்றன. ஆதலின், அவ்வாராய்ச்சியின் பயனான உண்மைகளை இங்கு விளக்க விரும்புகின்றேன்.

சோழன் செங்கணானுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் பெரும் போர்மூண்ட களம் திருப்போர்ப்புறம்[1] என்றும், அதனில், சேரன்படைமுதலியான கணையன் என்பானை வென்று அவனது கழுமலத்தைச் சோழன் கைப்பற்றியதோடு, அச்சேரமானையே பிடித்துக் குணவாயிற் கோட்டத்துச் சிறையிலிட்டனன் என்றும், அக்காலத்துப் பொய்கையார் என்ற புலவர் பெருமான் செங்கணானது வெற்றிக்களத்தைப்பாடி அச்சேரமானைச் சிறைவிடுவித்தனர் என்றும் களவழி நாற்பது(36) அகநானூறு(44) புறநானூறுகள்(74) கூறுகின்றன. இவ்வாறு சேர சோழர்க்குப் போர் நிகழ்ந்த களமான திருப்போர்ப்புறம் என்பது, மழகொங்கநாட்டுள்ள தலங்களுள் ஒன்றாகும்[2]. இது திருப்போர்நகர், திருப்புறம்

---

[1] திருப்போர்ப்புறத்து' என்று, களவழி நாற்பது முதலிய அச்சுப் பிரதிகளிற் கண்ட பாடம், 'திருப்போர்ப்புறத்து' என்று அவற்றின் சுவடிகள் சிலவற்றிற் காணப்படுகின்றது. இதுவே பொருத்தமுடையதென்பது 'போர்வழேவோன் பழையன்' என்னும் நற்றிணைத் தொடராலுந் (10) தெளியத்தகும். இனி, 'குடவாயிற் கோட்டம்' என்னுள்ள களவழிப் பாடம், 'குணவாயிற் கோட்டம்' என்று தமிழ் நாவலர்சரிதையிற் (158) காணப்படுவதாம். முன்னதினும் பின்னதான இப்பாடமே ஏற்புடையதென்பது பின்வருங் கூற்றுக்களாற் புலப்படும்.

[2] "மழகொங்க மடிப்படுத்து" என்பது வேள்விகுடிச் சாஸனத் தொடர். இக்கொங்குப்பகுதி 'வடகரை மழநாடு' (M. E. R. Nos. 132

திருப்புறத்துறை, திருப்பேர்த் திருப்புறத்துறை எனச் சாஸனங்களில் வழங்கப்படுகின்றது. இவற்றுள் திருப்பேர்நகர் என்பது, ஆங்குள்ள பாடல்பெற்ற திருமால் ஆலயத்தையும், திருப்பேர்த் திருப்புறம் முதலியன, அடுத்துள்ள சிவாலயத்தையும்[1] குறிப்பன. இனி அப்போரிற் கைப்பற்றப்பட்ட கழுமலம்என்பது, சோணாட்டுச் சீகாழியன்றென்றும். சேரர்க்குரிய கொங்குநாட்டதோர் ஊர் என்றும் உணர்க. 'குட்டுவன் கழுமலத்தன்ன' என்பது அகம்(270). இது நெல்லை என வழங்கப்பட்ட ஊரின் பழம்பெயராகும். இந் நெல்லைக்குப் பழைய புராணமொன்று உண்டு. நெல்லைமாநகர், கழுமலம் என்பன அவ்வூரின் பெயர்கள் என்பதும், அது திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையம் தாலுகாவில் உள்ளதென்பதும், **கழுமலநாத ஸ்வாமி** என்பது அவ்வூர்ச் சிவபிரான் திருநாமம் என்பதும் அந்நெல்லைமாநகர்ப் புராணத்தாலும், அதன் சுவடி யெழுதினோர் குறிப்புக்களாலும் தெரியவருகின்றன[2].

"சூதன்...ஈசர் கழுமலப் பெருமை சொன்னான் மன்னோ"

என்றதொடர் அப்புராணத்து வருதல் குறிப்பிடற்பாலது. கழுமலத்துக் கட்டப்பட்டிருந்த களிறு கரிகாலனை முடிசூட்ட வேண்டித் தன்மேல் எடுத்துச்சென்று அண்மையிலுள்ள கருவூர்க்குச் சென்றது—என்று பழமொழியில்(62) கதைகுறிக்கப்பட்ட ஊர் இதுவேயாம். இவ்வூர் போலவே, குணவாயில் என்பதும்

---

of 1925-6). 'பாண்டிய குலபதி வளநாடு' (S. I. I. Vol. vii, p. 366) எனவும் வழங்கும். "பாண்டிய குலபதி வளநாட்டு...திருப்பேர்" (S. I. I. Vol. vii, p. 366) என்பது சாஸனப் பகுதி. இவ்வளநாடு, வடகரைமழ நாடு எனவும்படும் (M. E. R. Nos. 132 of 1925-29).

[1] S. I. I. vol. vii. p. 308—இச்சாஸன முதலியவற்றில் 'இவ்வூர்த் திருப்புறத்துறையும் பெருமானடிகட்கு" என வருதலால், திருப்புறம் என்பதும் அவ்வூர்ச் சிவன்கோயிற்பகுதியின் பெயர் என்பது தெரியலாம். இது திருச்'சடைமுடி' என்ற தேவாரவைப்புத்தலமாம் என்பது அவ்வூர்ச் சாசனங்களால் தெளிவாகின்றது (S. I. I. vii, No. 499). இதுவே, திருப்பேஎர்ப் புறம்' எனப் புறநானூறு முதலியவற்றிற் கூறப்படுவதாம். "தேவாரம் பெற்ற தலங்களும் சிலாசாஸன வழக்கும்" எனப் பின்வருங் கட்டுரையுள் 'திருச்சடைமுடி' என்ற பகுதியில் இதன் விவரங்காண்க.

[2] A Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. ii, p. 612 (1916). வெள்ளாற்றின் தென்கரையில் இவ்வூர் உள்ளதாக அப்புராணங்கூறும். ஆங்குக் கழுமங்கலம் என்றுள்ள ஊர் இது போலும்.

அக்கொங்கு நாட்டுள்ளதே. சேரர்தலைநகரான கருவூருக்கு நேர்கீழ் பால் உள்ளதனால் இஃது அப்பெயர் பெற்றது. சிதம்பரந் தாலூகாவில் குணவாசல் என்று இன்றும்வழங்கப்பெறும் இவ்வூர் தேவார வைப்புத்தலமாம் என்பது,

"குடவாயில் குணவாயி லானவெல்லாம்" (அப். க்ஷேத். கோ. 7)

"கொடுங் கோவலூர் திருக்குணவாயில்" (சம். க்ஷேத். கோ. 7)

எனவருந் தேவாரத் தொடர்களால் அறியப்படும். சேரன் சிறை வைக்கப்பட்ட இக் குணவாயிற்கோட்டமே, இளங்கோவடிகள் வாழ்ந்த இடமாகக் கொள்ளற்குரியது.

இங்ஙனம் சேரர்க்குரியவாகத் தெரியும் கழுமலம் குணவாயில் திருப்பேளர்ப்புறம் என்பன, சோழநாட்டெல்லையிற் சங்ககாலத்து அமைந்திருந்த ஊர்கள் என்றும், அவ்வெல்லைபற்றிய விவாதமே சேரசோழர்க்குட் பெரும்போர் நிகழ்ந்ததற்குக் காரணமாயிற்றென்றும் கருதற்குரியன. திருநறையூர்த்திருமாலுக்குப் பல திருப்பணிகளும் புரிந்துபணிந்த சோழன் கோச்செங்கணானை அத்தலப்பதிகத்தே பெரிதும் சிறப்பிக்கின்ற திருமங்கைமன்னன்,

"மின்னாடு வேலேந்து விளந்தை[1] வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே."
(பெரிய திருமொழி. 6, 6, 6.)

என்றுபாடுதல் நோக்கத்தகும். இதனுள், சோழன் செங்கணானுக்குப் பெரும்பகைவனாயிருந்தவன் விளந்தைவேள் என்றும், அவனைப் போரில் வென்று சோழன் உலகமாண்டனன் என்றும் கூறப்படுதல் காணலாம். பகைவனான வேள், விளந்தை என்ற ஊரின் தலைவன் என்பது அவன் பெயரே குறிக்கும். விளந்தை என்பது, முன்பு கொங்குநாட்டதாயிருந்த உடையார்பாளையஞ் சீமையில் உள்ளது.[2]

---

[1] 'விளைந்தவேளை' என நாலாயிரப் பிரபந்தத்திற் பதிப்பிடப்பட்ட பாடம், விளந்தைவேளை எனத் திருத்தஞ்செய்தற்குரியது.

[2] இவ் விளந்தையிலிருந்து, ஸ்ரீமுஷ்ணப் பிரதேசத்தைக் கச்சியரையர் கச்சியராயர் என்ற சிற்றரசர்கள் 15-ம் நூற்றுண்டினும் ஆண்டவர்கள் (M. E. R. 1916, p. 150). இந்நாட்டுக்குரிய உடையார்பாளையம் ஜமீன்தார், இக்கச்சியராயர் வழியினர்போலும்.

இவ்வூரைத் தலைமையாகக் கொண்ட பிரதேசம் விளந்தைக் கூற்றம் விளந்தைப்பற்று எனச் சாஸனங்களிற் பயில்வதாம்.[1] இக்கூற்றத்தில் முன்படங்கியிருந்த ஊர்களே மேற்கூறிய கழுமலமும் குணவாயிலும். இதனால், சேரனுடன் பொருது சோழன்கைப் பற்றியதாகக் களவழி கூறும் கழுமலம் என்ற ஊர் விளந்தை வேளுடையது என்பதும், அவ்வேள் செங்கணானுடன் பொருதவன் என்று திருமங்கையார் கூறுதலின், பெருவேந்தனை சேரன்கீழ்ப் படைமுதலியாயிருந்தவன் அவன் என்பதும் புலனும். ஆகவே, அவ்விளந்தையைச் சார்ந்த கழுமலப் போரில் சோழனை எதிர்த்தவனை அகநானூறு (44)கூறும் கணையன் என்பானே அவ்விளந்தை வேள் என்பதும், அவனை "விண்ணேறத் தனிவேலுய்த்து உலக மாண்டவன்" செங்கணான் என்பதனால், அச்சோழன் கழுமலங் கொண்ட வெற்றியே அவ் ஆழ்வாராலும் சிறப்பிக்கப்பட்டதென்பதும் பெறப்படுவன. சேரனுக்குரிய கொங்குப்பகுதி இங்ஙனம் செங்கணானால் வெல்லப்பட்டது[2] பற்றியே, அப்பெரியார் 'குட கொங்கன்' என அச்சோழனை வெற்றிப்பெயராற் சிறப்பித்ததூஉம் காண்க. 'குடகொங்கு' என்பதனால், சேரரது குடபுலத்துள் அடங்கியதே அப்பிரதேசம் என்பது பெறுதும். இக் கொங்குப்போரில் தோல்வியுற்ற சேரமானை 'வஞ்சிக்கோ' (39) எனவும், அவன் படையாளரைக் 'கொங்கர்' (14) எனவும் பொய்கையார் கூறுகின்றார். இதனால், வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு கொங்குநாட்டில் நிகழ்ந்த போரே அப்புலவராற் பாடப்பட்டதென்பது தெளியலாம். **கொங்கர்கோ-கருவூர் அரசன் ; கருவூர்-வஞ்சி** எனக் களவழியுரையாளரான முன்னோரது குறிப்பும் இக்கருத்தையே தெளிவித்தல் காண்க (39 உரை). இவ்விளந்தைப் பிரதேசம் செங்கணானால் வெல்லப்பட்டபின்பே, அது சோணாட்டுப்பகுதியாக நிலை பெற்றது என்றும் உய்த்துணரப்படும்.

இனி, மேற்கூறிய விளந்தைக்கூற்றமான உடையார்பாளையந் தாலுகாவில் **பழுவூர்** எனப்பட்ட ஊரொன்று பாடல்பெற்ற சிவாலயமுடையது. இவ்வூர்த் தலைவர்கள் பழுவேட்டரையர்[3] எனப்படுவர். முதற் பராந்தகசோழனுக்கு மகட்கொடுத்த

---

[1] M. E. R., No. 233, 249 of 1916.

[2] இக்கொங்குப்போரிற் செங்கணானுக்குப் படைத்தலைமை வகித்தவன் 'போர் இழிவான் பழையன்' என்பானென்று தெரிகின்றான் (நற். 10).

[3] பழுவேள் - பழுவூர் வேள் எ - று. பழுவேட்டரையர் என்பது, சோழியதரையர், பல்லவதரையர் என்பனபோலப் பழுவூர் வேளிரான அரசர் என்ற பொருளுடையது. [தரையர் - அரசர்]

மாமன், இப்பழுவேளிருள் ஒருவனை கண்டன் மறவன் என்னும் பெயரினன். இவனைக் **கேரளராஜன்** என்று அன்பில்சாஸனை மொன்று கூறுதல் குறிப்பிடத்தக்கது.[1] இதனால், இப்பழுவூர், கழுமலங்குணவாயில்கள் போலவே கொங்குச் சேரர்க்குரியதாய் ஒருகாலத்திலிருந்தது என்பது அறியப்படும். இப்பழுவூர்ச் சிவபிரானை,

"அந்தணர்களான மலையாளரவ ரேத்தும் பழுவூ ரரன்"

எனச் சம்பந்தமூர்த்திகள் பாடியிருத்தல்குறிப்பிடத்தக்கது. மலையாளர் என்பது மலைநாட்டு மக்கள் என்னும் பொருளதாம். கொல்லிகவிரமலைகளில் வாழ்பவரையும் மலையாளர்[2] என்றும், கொங்குப்பிரிவும் மகதைநாடுமான மலாட்டினை (மலையமானாட்டை) மலைமண்டலமென்றும்[3] சாஸனங்கள் கூறுகின்றன.

இவற்றால், சேரரது குடபுலத்தே, கொங்குமண்டலம் குண மலைநாடாமென்பதும் இப்போதை மலையாளம் குடமலைநாடா மென்பதும் பெறப்படும். இனி, மேற்கூறிய பழுவூர்போலவே 'மங்கலமடந்தை கோட்டம்' என்பதொன்று தேவந்தியின் வர லாறுரைக்கும் மாடலன்கூற்றில் வைத்து இளங்கோவடிகளாற் கூறப்படுகின்றது.[4] இது, கொங்குநாட்டில் பழனிமலைத்தொடரான மலைமேலமைந்ததும் பிரபலம்பெற்றதுமான மங்கலாதேவியின் கோயில் ஆகும். மதுரை ஜில்லா கம்பங்கூடலூரில் உள்ள சாஸனமொன்றால், கொல்லமாண்டு *844* (கி. பி. *1669*)ல் குல சேகரர் என்ற குடமலை நாட்டரசர் **மங்கலாதேவி**கோயிற்கு அக் கூடலூரில் பூமியளித்த செய்தி கூறப்படுகின்றது.[5] இளங்கோ வடிகள் கூற்றுக்கேற்பப் பிற்காலத்துச் சேரர்கிளையினராலும் கொங்குநாட்டுக் கோயில்கொண்ட இத்தேவி வணங்கப்பெற்று வந்தமை இதனால் அறியத்தக்கது. இதுவரைகூறிய சாஸனப் பிரமாணங்களால், சேரவேந்தர்க்குப் பழைமையாக உரியதே கொங்குமண்டலம் என்றும், அதன்பாலமைந்ததே அவர் நகரான கருவூர்வஞ்சி என்றும் தெளிய உணரலாம்.

---

1 M. E. R. 1926, p. 67.

2 Ibid No. 499, 501 of 1929 - 30; S. I. I. vii. No. 117.

3 Ibd No. 420 of 1907.

4 சிலப். 30, 53.

5 No. 288 of 1928 - 29.

மேற்கூறிய முடிபினையே சங்ககாலத்துக்குப் பின்பமைந்த சாஸனங்கள் பலவும் தெளிவுறுத்துவன. இப்போது கிடைத்துள்ள பழைய தமிழ்ச் சாஸனங்களிலே 8-ம் நூற்றாண்டில் ஆண்ட ஜடிலவர்மன் பராந்தகன் என்ற பாண்டியன் அளித்த சீவரமங்கலப் பட்டயமும்[1] ஒன்றாகும். அதன் முதற்கணுள்ள இப்பாண்டியன் பிரசஸ்தியில் அடியில்வரும் பகுதி குறிக்கொண்டு நோக்கத் தக்கது:—

"ஆயிர வேலி யயிரூர் தன்னிலும்
புகழி யூரிலுந் திகழ்வே லதியனை
ஓடுபுறங் கண்டவ னொலியுடை நெடுந்தேர்
ஆடல் வெம்மா வவையுடன் கவர்ந்தும்
பல்லவனுங் கேரளனு மாங்கவர்க்குப் பாங்காகிப்
பல்படையொடு பார்ஞெளியப் பல்வமெனப் பரந்தெழுந்து
குடபாலுங்[2] குணபாலு மணுகவந்து விட்டிருப்ப
வெல்படையொடு மேற்சென்றங்கு
இருவரையு மிருபாலு மிடரெய்தப் படைவிடுத்துக்
குடகொங்கத்தடன்மன்னனைக் கொல்களிற்றொடுங்
[கொண்டுபோந்து
கொடியணிமணி நெடுமாடக் கூடன்மதி லாகத்துவைத்தும்
கங்கபூமி யதனளவுங் கடிமுரசுதன் பெயரறையக்
கொங்கபூமி யடிப்படுத்துக் கொடுஞ்சிலைப்பூட் டிழிவித்துப்
பூஞ்சோலை யணிபுறவிற் காஞ்சிவாய்ப்பேரூர்புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக்
குன்ற மன்னதோர் கோயிலாக்கியும்" எனக் காண்க.

இவற்றுள் (1) அதிகனது தேர்பரிகளைக் கவர்ந்ததும், (2) குடகொங்கத்து அடன்மன்னனைச் சிறைவைத்ததும், (3) திருமாலுக்குக் கோயிலாக்கியதும் ஆகிய பாண்டியனது மூன்றுசெயல்கள் உம்மீற்று வினையெச்சங்களாற் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். இவ்வாறே, அப்பாண்டியன் வேண்மன்னனை வென்றதையும், கரவந்தபுரம் பொலிவுறுத்தியதையும் முறையே 'கொண்டும்' 'அமைத்தும்' என்ற அவ்வெச்சங்களாற் குறித்து "ஏவமாதி விக்ரமங்கள் எத்துணையோ பலசெய்து" எனப் பிரசஸ்தியாசிரியர் முடிக்கின்றார். இங்ஙனம் குறிப்பிடப்பெற்ற பாண்டியனது பெருஞ்செயல்கள் ஐந்தனுள், அவன் அதியனைவென்றபின் நடத்திய இரண்டாஞ் செய்தியே ஈண்டு ஆராய்ச்சிக்கு உரியது.

---

1 The Madras Museum Plates of Jatilavarman (Ep. Ind. Vol XXII).

2 'குணபாலுங் குடபாலும்' என்று, எதுகைக்கும் அரசர்செயற்கும் இசைய அமைத்தல் பொருந்தும்.

இதனுள், அதிகற்குத் துணையாக வந்தவர்கள் பல்லவனும் கேரளனும் என்றும்[1] அவ்விருவரும் நிலைகுலையும்படி பாண்டியன் தன் படைகளை விடுத்து, குடகொங்கத் தடன் மன்னனைப் பிடித்துச் சிறையிட்டு அவனாட்டைக் கைப்பற்றினன் என்றும், பற்றியபின் இத்தகைய பெருவெற்றியருளிய தன் வழிபடுகடவுட்குக் கொங்குப்பேரூரிற் கோயிலமைத்தான் என்றும் கூறப்பட்டுள்ளமை காணலாம். அதிகனுக்குத் துணைவந்தோர் பல்லவனுங்கேரளனுமென மேலே கூறினமையின், சிறைப்பட்ட குடகொங்கத்தடன் மன்னன் என்பான் அவருளொருவனாவனேயன்றி முன்சுட்டப்படாத மூன்றாமொருவன் ஆகான் என்பதும், அவன் கேரளனே என்பதும் தெளிவாம். குடகொங்கம் என்பதனால் கொங்குநாடு குடபுலத்தைச் சார்ந்ததெனவும், அதன் அடன்மன்னன் என்பதனால் கொல்லிமலை அயிரைமலை முதலியவற்றைக்கொண்ட அக்குடபுலச்சேரனே அவன் எனவும் எளிதில் அறியப்படும். படவே, அதிகனுடன் போர்நடத்திய கொங்குப்பக்கத்தே அவற்குத் துணை வந்தவருள் ஒருவனான சேரனைப் பிடித்துச் சிறையிட்டு அவனாட்டினைத் தனக்குரித்தாக்கி, இவ்வாறு தான் எண்ணிய கருமத்துக்கு மேற்பட்ட வெற்றிப்பயனைப் பெற்றதற்கு உவந்து தன் வழிபடுகடவுளை வணங்கினன் பராந்தகன் நெடுஞ்சடையன் என்பதே பிரசஸ்தியாசிரியர் கருத்தாதல் காண்க. குடகொங்கத் தடன் மன்னன் வடகொங்கத்து அதிகனுக்கு உதவியது, அவ்வதிகன் சேரர்கிளையினனாதல் பற்றியாம்[1]. குடகொங்கன் என்று சேரனை இச்சாஸனங் கூறியவாறே, 'தென்னாடன் குடகொங்கன் சோழன்' எனத் திருமங்கையார் பாடியதுடன், ஏறக்குறைய இச்சாஸனகாலத்தவரும் திருமாலடியாரும் சேரவேந்தருமான குலசேகரப்பெருமாள் தம்மைக் '**கொங்கர்கோன்**...கொல்லி காவலன்' என்று கூறிக்கொள்ளுதலும்[2] அறியத்தக்கது.

இனி, கொங்குநாட்டுக்கு உரியனவாகக் கல்லெழுத்துக்களிற் காணப்படும் வேறு பெயர்களும் மேற்கூறிய உண்மையையே வெளியிடுகின்றன. வீரகேரளமண்டலம் வீரகேரளநாடு என்பனவும் அக்கொங்குநாட்டுக்கு வழங்கிய பெயர்கள் என்பது,

''**வீரகேரள மண்டலத்து...முடிவழங்கு சோழபுரத்து**''[3]

---

1 '**சேரவமிசத்து அதிகமான் எழினி**' '**வஞ்சியர் குலபதி**' **என்பன சாஸனத் தொடர்கள்** (S. I. I. Vol i, p. 106)

2 திவ். பெருமாள் திருமொழி, 3, 10.

3 செந்தமிழ். தொ. 5, பக், 606.

என்ற சாஸனத் தொடராலும் குமாரலிங்கக் கல்லெழுத்தாலும்[1] தெரியலாம். முடிவழங்கு சோழபுரம் என்பது கருவூர்க்குச் சோழர்காலத்து வழங்கிய பெயர்; "வெங்காலநாட்டுக் கருவூரான முடிவழங்கு சோழபுரத்து"[2] எனக் காண்க. வீரகேரளமண்டலம் வீரகேரள வளநாடு என்பவை வீரகேரளன் என்ற சேரமானுக்கு உரித்தானநாடு என்னும் பொருளன. பொள்ளாச்சித் தாலுகா ஆனைமலைப் பிரதேசமும் இவ் வளநாட்டதேயாம்.[3]

"ஸ்ரீ வீரபால நரபதி ஸ்ரீ வீரகேரளசக்ரவர்த்தி ஆதியாய் முறை முறையே பல்நூறுயிரத்தாண்டு செங்கோல் நடத்தாநின்ற ஸ்ரீவீர ராகவ சக்ரவர்த்திக்கு"

என்று மலையாளத்துச் சாஸனமொன்று[4] கூறும். இதனால் வீர கேரளன் என்பான் சேரரின் ஆதிமுன்னோருள் ஒருவன் என்று தெரிகின்றான். இவன் பெயரைச் சேரரின் கிளையினராய்க் கொங்குநாடாண்ட இவன்வழி வேந்தர்களுந் தரித்திருந்தனர்[5]. இவ்வேந்தர் சாஸனங்கள் யாவும் பழனி, நாமக்கல், வெள்ளலூர் முதலிய கொங்கு மண்டலத்தூர்களிலே காணப்படுதல் குறிப் பிடத்தக்கது. இதனால், வீரகேரளர் எனப்பட்ட சேரரின் நாடா தல்பற்றிக் கொங்கு அவர்பெயரை ஏற்கலாயிற்று என்பது அறிய லாகும். இனி, சோழராதிக்கம் பெருகியகாலில் அவராற் கொங்குநாடு வெல்லப்பட்டமையால் சோழகேரள மண்டலம்,[6] கேரளாந்தக வளநாடு[7] என அவர் பெயர்களையும் பெறலாயிற்று. சோழகேரளமண்டலம் - சோழராட்சிக்குளடங்கிய கேரளபூமி என்றபடி. கேரளாந்தக வளநாடு என்பது, சேரர்க்கு யமன் போன்ற சோழர்க்குரிமையான நாடு என்னும் பொருளுடையது. மதுராந்தகன் என்று சோழரும், சோழாந்தகன் என்று பாண்

---

1 I. M. P. Cb. Nos. 415, 423;

2 S. I. I. iii; p. 43; ii, p. 288.

3 M. E. R. 214 of 1927-8.

4 Ind. Ant. Vol. 53, p, 185.

5 முதல் ராஜராஜசோழன் காலத்தில், கொங்கு நாடாண்ட சேரனொருவனும் (His. Insc. of S. India, p. 71), அமரபுஜங்கன் அதிராஜராஜன், கோக்கண்டன் வீரநாராயணன் முதலிய சேரர் களும் இப்பெயர் தரித்தவர்கள்.

6 S. I. I. iii, p. 6191.

7 Ibid, ii, No. 69.

டியரும்[1] இவ்வாறே பிறரும் இத்தகைய வெற்றிப்பெயர் பூணு தல் முனைவழக்கே. அதனால் கேரளர்க்கு உரியதே கொங்கு மண்டலம் என்பதும், பிற்காலத்துச் சோழரால் ஆக்கிரமிக்கப் பட்டபின் அவர்பெயரும் இணைக்கப்பட்டு அக்கொங்கு வழங்கப் பெற்றதென்பதும் ஐயமின்றி விளங்கும். பழனிப் பிரதேசத்தைச் "சேரர்கொங்கு வைகாவூர் நன்னாடு" என்று அருணகிரிநாதரும்,

"சேரன் நெடுஞ்செங் கோன்முறை யென்றுந் திகழ்நாடு
கேரள கொங்கப் பேர்பிர சங்கம் இளர்நாடு"

என இளையான் கவிராயரும்,[2] மற்றும் பிற்காலக் கவிஞர் பலரும் சேரநாடென்றே கொங்குமண்டலத்தைப் பாடிப்போந் தனவெல்லாம் பரம்பரையாய்வந்த பண்டைமரபை அடியொற்றி யனவேயன்றிப் பிறிதன்று. இம்மரபு, கொங்குநாட்டவராலும் பிறராலும் இன்றும் வழங்கிவருவதொன்றும். சிலவாண்டுக ளாகவே இக்கொள்கைக்கு நேர்மையற்ற தடைகள் நிகழலாயின என்க.

இனி, கருவூர் என உலகவழக்கும் வஞ்சியெனச் செய்யுள் வழக்கும் பெரும்பாலும் பெற்றுவிளங்கிய[3] நகரம், குடமலைநாட்டை யும் கொங்குமண்டலத்தையுங்கொண்ட சேரரது குடபுலத்தின் ஆதித்தலைநகர் என்பதும், அஃது ஆன்பொருநைக் கரையில் அமைந்தது என்பதும் முன்னூல்களால் நன்கறியப்பட்டவை. இத்தலைநகரையும் அதன்நதியையும் மேற்கே மலையாளத்து உள் ளனவாகக் கொண்டு பிறர் எழுதிவருவனயாவும் முன்னூல்வழக் குக்களோடு முற்றும் முரணுவதேதன்பதும், சேரரது வஞ்சிமாநக ரும் ஆன்பொருநையும், கொங்குநாட்டுக் கருவூரும் ஆம்பிராவதி யுமே யன்றிப் பிறவல்ல என்பதும் வஞ்சிமாநகர், சேரன் செங் குட்டுவன் என்ற நூல்களில் அரிய பல பிரமாணங்களுடன் தெளியவிளக்கப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் விரிப்பது மிகையாதலின், அவ் இலக்கியப் பிரமாணங்களை விடுத்து அம்

---

1 மதுராந்தகன் என்பது உத்தமசோழன்பெயர்; சோழாந்தகன் என்பது வீரபாண்டியன் பெயர் (I. M. P. Rd. 25).

2 இப்புலவர், அவிநாசிப்புராணம் அப்பிரமேயப் புராணங்கள் பாடியவர். இப்பாடலடிகள், பிற்கூறிய புராணத்துள்ளன என்பர் (கொங்குமலர், தொகுதி-1, பக். 15)

3 இங்ஙனம் வழக்குப்பெறுதலைச் 'சேரன் செங்குட்டுவன்' 176-7-ம் பக்கங்களிற் காண்க.

முடிவுகளைச் சாஸனங்கள் எவ்வளவுதூரம் ஆதரிப்பன என்பதை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுவேன்.

சேரவேந்தர்க்கே உரிய கொல்லிமலை அயிரைமலை[1] முதலியவற்றைக் கொங்குநாடு தன்பாற்கொண்டுள்ளதென்பது முன்னரே நிறுவப்பட்டது[2]. இவ்வாறே, அவ்வேந்தரின் தலைநகரான கருவூர் வஞ்சியைத் தன்னகத்துடைய சிறப்பும் அந்நாட்டுக்கே உரியதாகும். இஃது, அக்கருவூரையடுத்துச் சிலமைலில் உள்ள புகழியூர்க்குன்றில்,[3] 2000-ஆண்டுகட்கு முற்பட்டதும் பிராமியெழுத்தில் அமைந்ததுமான சாஸனமொன்றில்,

[4] 'கருவூர்ப் பொன்வாணிகன்'
'கோசிபன் ஆதன்'

எனவரும் தொடர்களினின்று உணரப்படுகின்றது. இவற்றுள் முதற்றொடரால், கருவூர் என்ற நகரும், அது பொன்வாணிகரை உடையதென்பதும் தெரியலாம். பொன்வாணிகர்-பொன்னின் பேதந் தெரிந்து வாணிகம் புரிவோர். இவரைப் 'பொன்னுரை தெரிவோர்' 'பொலந் தெரிமாக்கள்' என்பர் முன்னோர்.[5] பொன் வாணிகம் நிகழுமிடம் பொன்மலிந்த பெருநகரங்களே யாதலின், கருவூர்ப் பொன்வாணிகன் என்பது, பொன்னுற் பொலிவுடையது கருவூர் என்பதைப் புலப்படுத்தும். பொன்பொலிந்த தமிழகப்பகுதி கொங்குநாடே என்பது நூல்களால் நன்கறியப்பட்டதாதலின்,[6] அந்நாட்டுப் பொற்றிரள் குவியுமிடம் அதன் தலை

1 இஃது, ஆனைமலைத் தொடராகும். இதன் ஒருபகுதி திருவயிரை என்று சாஸனங்களிலும் 'ஐவர்மலை' என்று உலகவழக்கிலும் பயில்வது (I. M. P. Mr. Nos. 236-239). இதுவே "நேருயர் நெடுவரை யயிரை" "அயிரை நெடுவரை" எனப் பதிற்றுப்பத்திற் சிறப்பிக்கப்படுவதாம்.

2 வஞ்சிமாநகர், சேரன் செங்குட்டுவன் என்ற நூல்களிற் காண்க.

3 இது, புகழூர், புகளூர் (S. I. Ry) என இக்காலத்து வழங்கும்; நாமக்கல்லுக்கு 18-மைல் தூரத்துள்ளது.

4 M. E. R. No. 343 of 1927-28.

5 சிலப். 14, 203; மணிமே. 28, 54.

6 "கொங்கின் பன்னுதுலைப் பசும்பொன்" (பெரியபு. இடங்கழி. 3), 'கொங்கிற்கனகம்' (திருத்தொண். அந். 65) எனக் காண்க. பழைய ரோம சக்கரவர்த்திகளின் பொன்வெள்ளிநாணயங்கள் மிகுதியும் அகப்பட்டுள்ள தமிழகப் பகுதி, கொங்குநாடாகவே அமைதல் குறிப்பிடத்தக்கது; அந்நாட்டுக் கருவூர், வெள்ளலூர், பொள்ளாச்சி, கலியன்புத்தூர் என்ற ஊர்களினின்று கிடைத்த நாணயங்கள் மிகப் பல (Ind. Ant. LII, pp. 52-3).

நகரே என்பதும் அறியலாம். அத்தகைய நகரம், பிராமிசாஸனம் அமைந்தவிடத்துக்கு அயலதான கொங்குக்கருவூரே என்பது வெளிப்படை. 2000-ஆண்டுகட்குமுன் உரோம ஏகாதிபத்தியத்தின் செல்வவளத்தைத் தன் வாணிகத்தாற் கவர்ந்த தமிழகத்தின் பெருநகர்களிலே இக்கருவூர் சிறந்ததென்பது ரோமநாணயங்கள் அவ்வூரில் மிகுதியும் கிடைத்துள்ளதனால் அறிஞர் அறிந்தது. இத்தகைய பொன்களாலும் பொலிவுற்றது அப்பேரூர் என்க, 'செல்வக்கருவூர்' என்று பின்னோர் சிறப்பித்ததும்,[1] அந்நகரது பண்டைச் செல்வ வளத்தின் தொடர்ச்சிபற்றியதென்றே சொல்லத்தகும். இனி, 'கோசிபன்[2] ஆதன்' என்ற இரண்டாந் தொடருள், சேரவேந்தர்க்கு மிகுதியும் பயிலும் **ஆதன்** என்ற பண்டை இயற்பெயர்வழக்கைக் காணலாம். அரசர்பெயரை மக்கள் தம் கௌரவகாமமாகத் தரித்தல் என்றுமுள்ள வழக்கு, ஆகவே, சேரர்க்குரியதும் செல்வப்பொலிவு உடையதுமான பெருநகரமே புகழியூர்ப் பழங்கல்லெழுத்துக் குறிப்பதென்பதும், அந்நகரம் கொங்குக்கருவூரன்றிப் பிறிதன்று என்பதும் பெறப்படும். இம்முடிவையே பின்வரும் சாஸனங்கள் பலவும் வலியுறுத்துவன.

பத்தாம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டியன் இராஜசிம்மன் என்பானது சின்னமனூர்ப் பெரியதாமிரப் பட்டயத்தில்[3]—

''கொடும்பைமா நகர்நிறைந்த குரைகடற் பெருந்தானை
இடும்பையுற் றிரியத்தன் இரணைதய மேற்கொண்டும்
புனற்பொன்னி வடகரையிற் பொழில்புடைசூழ் மதில்வஞ்சி
கனற்படவிழித் தெதிர்ந்தவீரர் கவந்தமாடக் கண்சிவந்தும்''

எனவரும் பிரசஸ்தியடிகள் ஈண்டு நோக்கத்தக்கன. அவ் விராசசிங்கனது வெற்றிச்செயல் பலவற்றுள் கொடும்பையாகிய கொடும்பாளூரிலும் வஞ்சிநகர்ப்புறத்தும் நிகழ்ந்தவற்றை இவ்வடிகள் உணர்த்துகின்றன. இவற்றுள், கொடும்பையில் அடைந்த வெற்றிக்குப்பின் அப்பாண்டியன் 'பொன்னிவடகரையில், வஞ்சிகனற்பட விழித்தான்' என்றுகூறியது, காவிரிக்கு அக்கரையில்நின்று சேரனதுதலைநகரைத் தீப்பட நோக்கினன் அவன் என்றவாறும்.

---

1 'செல்வக் கருவூர்த் திருவானிலைக் கோயில்' (பெரியபு. திருஞான. 339)

2. கோசிபன், காசியபன் என்பதன் திரிபு.

3 S. I. I. iii. p. 455.

"நீ, உடன்று நோக்கும்வாய் எரிதவழ
நீ, நயந்துநோக்கும்வாய் பொன்பூப்ப" (புறம். 38)

"தாழார மார்பினன் தாமரைக்கண் சேந்தனவால்
பாழாய்ப் பரிய விளிவதுகொல்...(பகைவர்)நாடு"
(பு. வெ. 3, 8)

என்றிவ்வாறு, வீரவேந்தர் யாங்கிருப்பினும் அவர் செயிர்த்து நோக்குமிடம் தீப்பட்டழியும் என்று முன்னோர் பாடுதலைப் பல்விடத்துங் காணலாம். இனி, முற்கூறிய சாஸனப் பகுதியுள் 'எதிர்ந்தவீரர் கவந்தமாடக்கண்சிவந்தும்' என்றது, அங்ஙனம் நோக்கியதன்றோடும் அப்பொன்னிக்கரையில் எதிர்த்துவந்த சேரன்படைவீரரை அவன் கொன்றுகுவித்தான் என்றவாறு. 'பொன்னிவடகரையில்' என்பது முதனிலைத் தீபகமாய், கனற்பட விழித்து என்பதனோடும் கண்சிவந்தும் என்பதனோடுந் தனித்தனி இயைவதாம். ஆகவே, காவிரி வடகரையிற் பாடிதங்கிய பாண்டியன், பணியாத சேரனது வஞ்சியைத் தன் படையையேவித் தாக்கலாயினன் என்பதும், அது பொருது பகைவீரர் எதிர்க்க 'எதிர்ந்த வீரர் கவந்தமாடக் கண்சிவந்தான்' என்பதும் பிரசஸ்தியாசிரியர் கருத்தாதல் காண்க. பொன்னிவடகரையில்(நின்று) வஞ்சிகனற்பட விழித்தான் எனவே, அவ்வஞ்சி காவிரிக்கு அண்மையில் உள்ளதெனவும், அது சேரர்தலைநகரான கருவூரே எனவும் தெளிய உணரப்படும். "கருபதிபல காலவன்னி:" என்று அச்சின்னமனூர்ப்பட்டயத்துள்ள வடமொழிப்பிரசஸ்தியிற் கூறப்படுதலாலும், இவ்வஞ்சி கொங்குக்கருவூரேயாதல் மிகத்தெளிவாம். இவற்றால் அந்நதிக்கு 300-மைலுக்கப்பால் உள்ள ஊருளொன்றே வஞ்சியென்பார்கூற்றுப் பொருத்தமற்றதாதல் காண்க. இனி, 'புனற்பொன்னி வடகரையில்...மதில் வஞ்சி' என்பதற்குக் காவிரிக்கு வடகரையிலுள்ள கருவூர் என்று பொருள்கூறுதல் சிறிதும் இயையாது; என்னை? அவ்வஞ்சி காவிரிக்கரையை ஒட்டியிராது, அந்நதியின் தென்பால் சிலமைல்தூரத்தே உள்ளமையால் என்க. எனவே, மேற்காட்டிய சாஸனவடிகட்கு யான்கூறியதே பொருளாதல் தெளியத்தகும். 1800-ஆண்டுகட்கு முற்பட்ட தாலமி (Ptolemy) என்ற யவனாசிரியரும், சேரரது கருவூர் காவிரிக்கு அண்மையிலுள்ள தென்ற கருத்துற எழுதியிருத்தல் இங்கு ஒப்பிடற்பாலது[1]. இவ்வாறு பத்தாநூற்றுண்டுப் பட்டயங் கூறியதையே பிற்காலத்தமைந்த கல்லெழுத்துக்கள்பலவும் பின்பற்றி மொழிகின்றன. கருவூர்க்கு 6-மைலில் உள்ள நெருவூர்த் திருமால்கோயிலிற் பொறிக்கப்பட்டதும், கொங்குச்சேரனை குலோத்

1 Hist; Insc. of S. India, p. 9.

துங்க சோழ தேவனது 13-ம் ஆண்டில் அமைந்ததுமான சாஸன மொன்றில்—

"வீர சோழமண்டலத்து வெங்காலநாட்டு
வஞ்சிமாநகரமான கருவூர்[1]

என்ற தொடர் பயில்வதாம். இதனால், கொங்குநாடு வீரசோழ மண்டலம் என்ற பெயராலும் வழங்கியதென்பதும், அதன் உட்பிரிவுகளுள் ஒன்றான வெங்கால நாட்டிலே கருவூர் உள்ளதென்பதும், அதுவே வஞ்சிமாநகரம் எனக் கொங்குநாட்டவரால் வழங்பெற்றதென்பதும் அறியப்படும். இவ்வாறே பிறவூர்க் கல்லெழுத்துக்களிலும்—

"வீரகேரளமண்டலத்துத் திருவஞ்சிமாநகரமான
முடிவழங்கு சோழபுரத்து"[2]

"வஞ்சி ஸ்ரீவைஷ்ணவரோம்"[3]

"கொங்கு வஞ்சி"[4]

"கருவூர் வஞ்சிமாநகரமான முடிவழங்கு சோழபுரத்து"[5]

என்ற தொடர்கள் பயிலுதல் தெரியலாம். இவற்றுள் முதற்றொடரிற்கண்ட முடிவழங்கு சோழபுரம் என்பது கருவூர்க்குப் பிற்காலத்துச் சோழர்வழங்கிய பெயராகும்.

"வெங்காலநாட்டுக் கருவூரான முடிவழங்கு சோழபுரத்து"[6]

"கருவூர்...முடிவழங்கு சோழபுரத்து"[7]

என்பன சாஸனத் தொடர்களாதல் காண்க. இனி, இம் முடிவழங்கு சோழபுரமான வஞ்சிநகர் வீரகேரளமண்டலத்தே உள்ளதென்று கல்லெழுத்து கூறுதல் காணலாம். சேரர்க்குரிய கொங்கு

---

[1] M. E. R. 335 of 1927-8.

[2] Mackenzie's Miss: கருவூர்ச் சாஸனங்கள் காண்க.

[3] சேரன்-செங்குட்டுவன், பக். 162.

[4] Ep. Ind. xvii, p. 298n. ஸ்ரீ: H. கிருஷ்ண சாஸ்திரிகள் இத்தொடர் வேறு வஞ்சியைக் குறிக்குமென்று கருதினர். இதற்கு யாதோர் பிரமாணமும் அவர்கள் காட்டினரில்லை.

[5] பிரான்மலைச் சாஸனம்—S. I. I. Vol. viii. No. 441.

[6] S. I. I. Nos. 43, 47.

[7] M. E. R. No. 153 of 1903.

நாட்டுக்கு முன்னையோர் வழங்கி வந்த பலபெயர்களுள் வீரகேரளமண்டலம் என்பதும் ஒன்றென்றும், அது வழங்கிய காரணம் இன்னதென்றும் மேலே கூறினேன். இதனால், சேரநாடாகிய கொங்குமண்டலத்துள்ள வஞ்சியாகிய கருவூர் என்பதே மேற்குறித்த சாஸனவாக்கியங்கட்குப் போந்த பொருளாதல் தெளிவாம். சேரனைக் 'குடகொங்கத் தடன் மன்னன்' 'குடகொங்கன்' என்று சாஸனமும் இலக்கியமும் ஒருங்கு கூறுஞ்செய்தி மேலே விளக்கப்பட்டமையின், அக் கொங்கிலுள்ள வஞ்சியாகிய கருவூர் சேரர் தலைநகரமே என்பது சொல்லாதே பெறப்படும். "கொங்கர்கோ-கருவூரரசன்; கருவூர்—வஞ்சி" என்று முன்னோரான களவழி யுரைகாரர் கூறியதும் (களவழி 39, உரை) இப்பண்டை வழக்கின் வலிமை பற்றியே என்க. காஞ்சி நாடு, மதுரை நாடு என்பனபோல, வஞ்சிநாடு என்று தன் தலைநகரின் பெயராலும் கொங்குநாட்டுப் பகுதி வழங்கப் பெற்றதாம்.

இக்கொங்குக் கருவூர் சேரர்கிளையினர்க்குச் சிறந்த தலைநகராகப் பிற்காலத்தும் அமைந்திருந்ததென்பது, மூன்றாங் குலோத்துங்க சோழனை—"ஈழமும் மதுரையும்...கருவூருங் கொண்டருளின" எனச் சாஸனங்கள் விசேடித்தலால் உணரப்படும்.[2] மதுரையீழங்களை யொப்பக் கருவூர் அச்சோழனாற் கைப்பற்றப்பட்டது, சேர வேந்தர்க்கு அது சிறப்புடைய நகரமானமை பற்றியே என்க.

> "மீனவர் சேரரை வெந்கண்ட வீரம் விழுக்கவிஞ
> ராணவர் பாடுங் குலோத்துங்க சோழன்" (195)
>
> "ஈழம்...கொங்கோடக் குத்துங் களிற்றான்" (133)
>
> "வழுதியர் சேரர் திறைதர வேவன் சிறையைவிடுத்
> தழுதுயர் மாற்றுங் குலோத்துங்க சோழன்" (466)
>
> "பயந்தோடி வந்தக் குடராசன் சேவிக்குந் தாளான்" (253)
> (குலோத்துங்கன் கோவை)

என அக்குலோத்துங்கனைப் புலவர் பாடுதலாலும், அவனாற் கைப்பற்றப்பட்ட கருவூர் குடராசனை கொங்குச்சேரனதே என்பது நன்கு பெறலாகும். அச்சோழனது மெய்க்கீர்த்தியும்—

> "திருவிழந்த தென்னவனுஞ் சேரலனும் வந்திறைஞ்சி
> அரியணையின் கீழிருக்க வவர்முடிமே லடிவைத்துப்

---

[1] M. E. R. 189 of 1927.
[2] S. I. I. iii. pp. 43, 47.
[3] சோழவமிச சரித்திரம், பக். 113, கீழ்க்குறிப்பு.

**படிவழங்கி முடிவழங்கிப் பாண்டியற்கு விடைகொடுத்துக்**
**கொடிவழங்கு வில்லவற்குக் கொற்றவர்பெறு திருவழங்கி"**

எனக் கூறுதல் ஒப்பிடற்பாலது. இவவாறு பணிந்த சேரற்கு அச்சோழன் முடிவழங்கியமைபற்றியே, முடிவழங்குசோழபுரம் எனக் கருவூர் பெயர் பெற்றதென்று கருதல் பொருந்தும். இங்ஙனம் முடிவழங்கப் பெற்ற சேரனின் முன்னோருள் ஒருவனும் முதற் பராந்தக சோழன் காலத்தவனுமான வீரசோழன் என்ற கேரளனது சாஸனத்தினின்று, சோழராட்சியின் கீழ்ச் சேரர் அடங்கியதோடு அச் சோழர் பெயர்களையே அன்னோர் சூடிக்கொண்டவர்[1] என்பதும் தெரியவருகின்றது. பாண்டியர் என்ற பட்டப்பெயரையும் சிறுபான்மை இக்கேரளர் தரித்ததுண்டு[2]. இவருள், கோக்கண்டன் வீரநாராயணன் என்பான், தன் மரபைச் **சந்திராதித்திய குலம்** என்று கூறிக் கொள்ளுகின்றான்[3]. இதனால் சோழபாண்டியரின் தொடர்பு இன்னோர்க்கு இருந்தது என்று கருதவும்படும்.[4] எங்ஙனமாயினும் இவ்வரசர் யாவரும் சேரமண்டலத்தின் பகுதியான கொங்கு நாட்டை ஆண்ட பழைய சேரர்கிளையினரேயன்றி வேறல்லர் என்பது பழனி முதலிய இடங்களிலுள்ள வட்டெழுத்துச் சாஸனங்கள் பலவற்றால் மிகத் தெளிவாம்[5]. மேலே குறித்த வீர சோழன் என்ற கேரளனது காமக்கற்சாஸனத்தே அவன் முன்னோரான சேரரின் வமிசாவளி தரப்பட்டுளது[6]. அதனில், மணிகுட்டுவன், கோதை என்ற பழைய சேரர் பெயர்கள் பயில்கின்றன. இவருள், மணிகுட்டுவன் என்பான் சேரன் செங்குட்டுவனே என்று கருதற்கு[7] இடமுண்டு. இவற்றால் கொங்கு மண்டலத்தை வேற்றுநாடென்றும், இதன் மன்னர்களை வேற்று மரபினர்என்றும் இவர்கள் தரித்த சோழர் பாண்டியர் என்ற பட்டப் பெயர்களைக் கொண்டு அச் சோழ பாண்டியரின் அதிகாரிகளே இவரென்றும்

---

1 I. M. P. Tp. No. *217*; Mr. Nos. *279, 281.*

2 M. E. R. No. *445* of *1928-29.*

3 I. M. P. Cb. No. *106.*

4 'ஆழ்வார்கள் காலநிலை'யுள் (பக். 171-2) இத்தொடர்பினை விளக்கியுள்ளேன். பழைய சேரவேந்தரைச் சூரியகுலத்தவரென்றும் சந்திரகுலத்தவரென்றும் கொள்ளும்படி புறநானூற்று 8-ம் பாடல் அமைந்துள்ளமையும் இங்கு ஒப்பிடத்தக்கது.

5 I. M. P. Mr. Nos. *277* to *291.*

6 Ep. Ind. Vol. iii, pp. *78-82.*

7 சேரன்-செங்குட்டுவன், பக். *152.*

சிலர் எழுதிவருங் கருத்துப் பொருத்தமற்றதாம். பொருத்தமாயின், 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பில்' அக்கொங்கு அடங்காது தமிழொழி நிலமாகவே முடியும் என்பதும் உணரத் தக்கது.

இனி, சேரமண்டலத்தின் தலைநகராய் ஆன்பொருநைக்கரையிலுள்ளதாக நூல்கள் கூறும் கருவூர் வஞ்சி, குடமலைநாட்டு மகோதையாகிய கொடுங்கோளூரே என்று பலரும் அந்நாட்டுக் கொச்சிக்கு வடகிழக்கே 28 மைலில் உள்ள திருக்காரியூர் என்று வேறுசிலரும் எழுதிவருவர். இவ்விரண்டு ஊர்களும்பேராற்றங்கரையில் உள்ளனவாதலால், அப்பேராற்றையே ஆன்பொருநை என்று கொள்வதும் அவர்க்கு இன்றியமையாததாயிற்று. இவ்விருகொள்கைகளும் முன்னூல் வழக்குக்களுடன் முற்றும் பொருந்தாமையை, வஞ்சிமாநகர், சேரன்-செங்குட்டுவன் என்ற நூல்களிற் பரக்கக் காணலாம். கொடுங்கோளூர்க்கு முசிறி என்பதே சங்ககாலத்துப் பெயரென்பது ஈண்டு அறியத்தகும். பிற்காலத்தும் வஞ்சி, கருவூர் என்ற பெயர்களால் இவ்வூர் சாஸனங்களிற் குறிக்கப்படாது,

**"கோ சிரீபாற்கர இரவிவர்மன் திருவடி...முயிரிக்கோட்டு இருந்தருளியநாள்"***

**"முயிரிக் கோட்டு அஞ்சவண்ணம்"†**

என முயிரிக்கோடு என்ற அதன் பழம்பெயரானே குறிக்கப்பட்டிருத்தல் காண்க. [முயிரிக்கோடு-முசிரியாகிய நீர்த்துறை] சங்க நாளில் பிரபலம் பெற்று விளங்கிய முசிரித்துறைமுகத்தைச் சேரர் தந்தலை நகராகக் கொண்டது, பாண்டிய சோழர்களின் ஆதிக்கம் கொங்குப் பக்கத்திற் பெருகிய 7, 8-ம் நூற்றுண்டுகட்குப் பின்னரேயாதல் வேண்டும்.

**"வஞ்சியை விட்டகல வஞ்சிய கோதை மகோதை"‡**

என்று, கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தரும் இவ்வரலாற்றையே குறிப்பிடுதல் அறியத்தக்கது. இதனல் வஞ்சி வேறு மகோதையாகிய கொடுங்கோளூர் வேறு என்பது தெளிவாம். இவ்வேறுபாட்டினை—

---

* Ep. Ind. iii. p. 68.

† வஞ்சிமாநகர், பக். 56.

‡ தக்கயாகப் பரணி இறுதித் தாழிசைகள் பார்க்க.

வஞ்சியு முறந்தையு மரந்தையு மகோதையும்''
(குலோத், பிள்.)

''வஞ்சிக்கு மோதை மகோதைக்கு மாமதுரை யிஞ்சிக்கும்''
(சங்கரசோ. உலா)

கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூர்''
(தொல். சொல். 393, தெய்வச்சிலையார் உரை.)

என வேறு நூல்களும் தெளியவிளக்குதலும், தாலமி முதலிய யவனவாசிரியர், சேரபுத்ரரது தலைநகர் கருவூர் என்றே கூறி அதனைக்கடற்கரையில் வையாது உண்ணாட்டிற் காவிரிப் பக்கத்து நகரமாகவே கூறுதலும் காண்க.[1] இவற்றால், கொடுங்கோளூரைச் சேரரது பழைய வஞ்சியாகக் கருதற்குச் சிறிதும் இடமின்மை தெரியலாம். ஆயினும், பிற்காலத்தாசிரியருள் ஒருசிலர் வஞ்சிப் பெயரைக் கொடுங்கோளூர்க்கு இட்டு வழங்கியது,[2] சேரருள் ஒருகிளையினரது ஆட்சி அவ்வூரைத் தலைமையிடமாகக் கொண்டு பின்பு நிகழ்ந்ததுபற்றிக் கூறிய உபசாரவழக்கே என்க. இனி, திருக்காரியூரைக் கருவூராகச் சிலர் கருதியெழுதியது பொருந்தாது என்பதனை வேற்றுருவங்களுடைய அப்பெயர்களே வெளி

[1] மகோதை, கொடுங்கோளூர் எனச் சங்கத்தின் பிற்காலத்து வழங்கப்பெற்ற முசிரிக்கு 1½ மைலில் உள்ள திருவஞ்சைக்களமே சேரராஜஸ்தலம் என்றும், அக்கொடுங்கோளூரே முசிரியாகிய துறைமுகமென்றும் கொண்டு முன்னோர் கூறிய வேறுபாடுகளைத் தம் கொள்கைக்கேற்ப இணைக்கமுயன்று இடர்பட்டெழுதுவர்சிலர். அவர், தேவாரமுதலியவற்றில் 'அஞ்சைக்களம், அஞ்சை' என அகரமுதன் மொழியாகவே யாண்டும் வழங்குதலை நெகிழவிட்டுப் போதல் வியப்புக்கிடமாகின்றது. மதுரைப்பேராலவாய் என்பதுபோல, கொடுங்கோளூரஞ்சைக்களம், மகோதையஞ்சைக்களம் எனக் கொடுங்கோளூரிற் சிவாலயமுள்ள பகுதியாகக் கூறப்பட்டதனை வேறுபிரித்துக் கொண்டு இங்ஙனம் தங்கருத்துக்கு இயைவித்துக் கூறுமிடத்தும் முசிரியாகிய கொடுங்கோளூரையே வஞ்சி எனக் கூறிய சேக்கிழார் அடியார்க்குநல்லார்கள் கூற்றுக்களோடு பெரிதும் முரணிநிற்றல் கண்டுகொள்க.

[2] இங்ஙனம் வழங்கியோர், சேக்கிழாரும் அடியார்க்குநல்லாருமே யாவர். கொடுங்கோளூர்போலவே, பிற்பட்ட சேரர் வாழ்ந்த தாராபுரத்தை வஞ்சியென்று சாஸனமும் (Ep. Ind. Vol. xvii, p. p. 298 n, இலக்கியமும் (பேரூர்ப்புராண முதலியன) கூறுதலும், திருவனந்தபுரத்து அரசர் வாழும் பகுதி 'வஞ்சியூர்' எனவும், அவ்வரசர் 'வஞ்சிபாலர்' எனவும் வழங்கப்படுதலும் இவ்வுபசார வழக்குப் பற்றியனவேயாகும்.

யாக்குவன. "திருக்காரியூர்ப் பொன்மண்டபத்து" எனவரும்[1] கேரளோற்பத்தித் தொடருங்காண்க. இத்திருக்காரியூர் கொடுங் கோளூர்களை அடுத்துச் செல்லும் பேராற்றைச் 'கள்ளியம் பேரியாறு' என்று அகநானூறு கூறுகின்றது. இச்கள்ளியாற்றைச் **சூர்ணீ** என்பர் வடநூலார். பேரியாறு என்று தனிப்பட வழங்கப் பட்ட வேறுநதமொன்றும் மலையாளப் பிரதேசத்துச் செல்வதாம். இது, சேரர்க்குச் சிறந்ததும் கொங்குநாட்டதுமான அயிரைமலையினின்று உற்பத்தியாகி அம்மலையாளத்துப் புகுவது. பிறந்தவிடம் பற்றி அயிரையாறு[2] எனவும் முன்னோர் இதனை வழங்குவர்: "தெய்வத்துக் கூட்டமுன்னிய புனன்மலி **பேரியாறு**' என்று பதிற்றுப் பத்திற் கூறப்படுவதும், செங்குட்டுவன் மலைவளங் காணச்சென்று தங்கியபோது சிறப்பிக்கப்பட்டதும் இவ்வயிரைப் பேரியாறே யாகும்.[3] மலையாள நதங்களுள் மிகப்பெரியதாகிய பொன்னானி என்ற யாறே இது. பேரியாறு என்ற வழக்கும் பிற்காலத்து இதற்குண்டு என்பது, கோளோற்பத்தி ஆனை மலைக்கை பீது முதலியவற்றால் தெளிவாக அறியப்படுகின்றது. ஐவர்மலைச்சாஸனமொன்றில்—அயிரைமலை, பேரியாறு, கோதைமங்கலம், வையாவிநாடு, கொழுமம் முதலிய பெயர்கள் பயில்வன.[4] இதனாலும், ஆனைமலையே அயிரைமலையென்றும், அதனில் உண்டாவதே பேரியாறென்றும் தெளியலாகும். பேரியாறு என்பதற்கேற்பப் **பூர்ண வாஹினீ, பூர்ணா** என இதனை வழங்குவர் வடநூலார். இவற்றுள் பூர்ணவாஹினீயின் திரிபே பொன்னானி என்பது. எனவே, **சூர்ணீ** எனப்பட்ட பேராறும், **பூர்ணா** எனப்பட்ட பேரியாறும் வேறு வேறானவை என்பது விசதமாகும்.[5] பொன்னானிப்பெயரான பூர்ணா

1 கேரளோத்பத்தி. பக். 46-7

2 "அயிரைமண்ணி" (சிலப்: 28, 145: அரும்.)

3 வஞ்சிமாநகர் 52-56-ம் பக்கங்களில் இப்பேரியாற்றின் செய்தி விரிய விளக்கப்பட்டுள்ளமை அறியத்தக்கது.

4 M. E. R. No. 705 of 1905-6.

5 பூர்ணா, பூர்ணவாஹினீ எனப்பட்ட பொன்னானியாற்றங் கரையில் உள்ள காலடியே ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் அவதாரஸ்தலம் என்பது சங்கர விஜய முதலியவற்றால் அறியப்படுகின்றது. அந்நூல்கள் கூறுமாறே, பூர்ண வாஹினியான பொன்னானியாற்றங் (பாரதப் புழைக்) கரையில், காலடி என்ற ஊரொன்று பழமையாகவேஉள்ளது. இது, மலையாளம் ஜில்லா பொன்னானித் தாலூகாவைச் சார்ந்ததாம். இதனால், பகவத்பாதரின் அவதாரஸ்தலம் இக்காலடியாகக் கொ

என்பதனை, சூர்ணிப்பெயர் கொண்ட கள்ளிப் பேராற்றுக்கு மாறிக்கொண்டு, பூர்ணு என்பதே(ஆன்)பொருநை என்றும், அதன் கரையிலுள்ள கொடுங்கோளூரே கருவூர்வஞ்சி என்றும் ஒருசிலர் எழுதி வருதல் முற்றும் பொருத்தமற்றதென்க.

இனி, கொச்சி வேந்தரின் ராஜஸ்தலமான திருப்பூணித்துறை என்ற நகர், பூர்ணுவின் கரைக்கண்ணுள்ளதுபற்றி அதற்கு அப் பெயர் வழங்கலாயிற்று என்று சிலர் கொண்ட கருத்தும் ஏற்கத் தக்க தன்று. "பூர்ணத்ரயீ சாலா" "பூர்ணத்ரயீமங்கலம்" என்பன இந்நகரின் வடமொழிப் பெயர்கள் என்பது சாஸனங்களால் நன்கறியப்படுகின்றது (M. E. R. Nos. 334, 335 of 1924). ஸாங்கமான மூன்று வேதங்களையும் அறிந்தவர் வாழும் ஊர் என்பது இத் தொடர்களின் பொருளாகும். அறிவுதிருவாற்றல்கள் போலும் மூன்ருல் நிறைந்தோரது ஊர் எனினும் ஆம். எங்ஙனமாயினும், பூர்ணு என்பது, அச்சிலர் கருத்தின்படி கள்ளிப்பேராற்றுக்கு உரிய பெயரன்றென்பதும், அப்பூர்ணு சம்பந்தம் பற்றித் திருப்பூணித் துறைப்பெயர் வழங்கியதன்று என்பதும் தேற்றமாம்.

இதுவரை கூறிவந்தவற்ருல், சேரரது குடபுலத்துள் கொங்கு மண்டலம் ஒருபிரிவென்பதும், அம்மண்டலத்துக் கருவூர்வஞ்சியே சேரரது ஆதித்தலைநகர் என்பதும், பாண்டிய சோழர்களின் ஆதிக்கம் பெருகியதற்குப் பின்பே, ஒருமரபினராயிருந்த பண்டைச்சேரரின் ஒரு கிளையினர் தம் கடற்கரைப்பட்டினமான முசிரியைத் தலைநகராகக் கொண்டு குடமலைநாட்டை ஆண்டுவந்தனர் என்பதும், மற்ருெரு கிளையினர் கொங்குநாட்டிலிருந்தே ஆட்சிபுரியலாயினர் என்பதும், பிறவும் சாஸன வழியால் மலையிலக்காதலும், கொடுங்கோளூராகிய முசிரியைக் கருவூர் வஞ்சி என்ற பெயர்களாற் குறிப்பிட்டுள்ள சாஸனம் ஒன்றுமே யாண்டுங் காணக்கிடையாமையும் தெளிய அறியலாகும்.

———

வதே மிகப்பொருத்தமாகும். இவ்வரிய செய்தி, மகாவித்வான்: ஸ்ரீ. ரா. இராகவையங்கார் அவர்களால் எனக்கு அன்புடன் அறிவிக்கப் பட்டது. நல்லறிஞர் இதனைச் சார்புபற்ருது ஆராய்ந்து உண்மை தெளியக்கடவர்.

# 20. ஸ்ரீ திருவேங்கடமுடையான்*

---

சில வருஷங்களுக்கு முன்பு இம்மதுரையில் நடந்த தமிழ்ப் புலவர் கூட்டமொன்றில் பிரபலராயிருந்ததமிழ்ப்பண்டிதரொருவர், திருவேங்கடம் திருமாலுக்குரிய ஸ்தலமாகச் சொல்லப்படுவது பொருந்தாதென்றும், முருகக்கடவுளுக்கே அஃது உரிமையான தென்றும் தமிழிலுள்ள பழைய நூல்களின் ஆதாரங்களைக் கொண்டு உபந்யஸித்ததோடு பத்திரிகையில் வெளிப்படுத்தியு மிருந்தனர். அவர் கூறிய விஷயங்களையெல்லாம் மறுத்து அக் காலத்தே '**வேங்கடதாஸன்**' என்ற கையெழுத்திட்டுக் கட்டுரை யொன்று பத்திரிகைக்கு எழுதியிருந்தேன். ஆயினும், வைஷ்ணவ ரல்லாத தமிழ்ப் பண்டிதர் பலர் அவ்விஷயமாக இன்னும் அதிசங்கைகொண்டு எழுதியும் பேசியும் வருவதாலும், அவர்கள் கருத்துக்களை மாற்றுவதற்கு வேண்டிய பிரமாணங்கள் மேலுங் கிடைத்திருப்பதாலும் திருவேங்கடமுடையான் விஷயமாகத் தமிழ் நூல்களாற்றெரிந்த விஷயங்களை யெல்லாந் தொகுத்து இப் போது வெளியிடமுன்வந்தேன்.

ஷை பண்டிதர், தம் கொள்கைகளை ஸ்தாபிப்பதற்காக எழுதிய காரணங்களின் சுருக்கம் அடியில் வருமாறு:—

(1) பிராசீன இலக்கணமாகிய தொல்காப்பியப் பாயிரத்தே "வடவேங்கடந் தென்குமரி" எனவருந் தொடர்க்கு முன்னோரான தமிழ் உரையாசிரியரெல்லாம் திருவேங்கடத்தை இன்னகடவு ளுக்கு உரியது என்று உரை கூறவில்லை.

(2) சங்கநூலாகிய சிலப்பதிகாரத்தே வேனிற்காதை முதலில் வரும் 'நெடியோன் குன்றமும்' என்ற தொடரை, திருமால்மலை யாகக்கருதி அந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள் கூற நியாயமே இல்லை. ஏனெனில், இன்னவின்ன நிலம் இன்னவின்ன தெய்வத்துக்கு உரியதென்று பாகுபடுத்துச் சூத்திரஞ் செய்யு மிடத்தில், தொல்காப்பியர், திருமாலுக்கு முல்லைநிலமாகிய காட்டையும், முருகற்குக் குறிஞ்சி நிலமாகிய மலையையும் உரிமை யாக்குவதால், மலை நிலமாகிய வேங்கடம் முருகற்கல்லது திரு மாலுக்குரியதாகாது.

---

* இக்கட்டுரை பல்லாண்டுகட்குமுன் மதுரை '**வித்யாபாநு**' என்ற பத்திரிகையினும் ஹரிஸமயதிவாகர பத்திரிகையினும் வெளி வந்ததாம்.

(3) ஆகவே. 'ஒடியா விழவி னெடியோன் குன்றம்' என்ற அகநானூற்றுத் தொடரில் முருகன்மலை என்று பொருள்கொள்வது போல 'நெடியோன் குன்றமும்' என்ற சிலப்பதிகாரத் தொடர்க்குங் கொள்ளவேண்டுமேயன்றித் திருமால்குன்றம் என்று கொள்வது தவருகும்.

(4) ஆனல், சிலப்பதிகாரம் காடுகாண்காதையில் "வீங்குநீரருவி வேங்கடம்" என்பது முதல் 'செங்க ணெடியோ னின்ற வண்ணமும்' என்பது வரையுள்ள அடிகள், திருவேங்கடத்துத் திருமாலைத் தெளிவாகக் குறிப்பிட்டும் 'நெடியோன்' என்ற பெயரால் அப்பெருமானை வழங்கியும் உள்ளனவே எனின், அவ்விடத்தில் நெடியோன் என முருகக் கடவுட்கே முன்பு வழங்கியிருந்த விசேடணங்களைப் பிற்காலத்தில் யாரோ ஒருவர் திருமாலுக்குப் பொருத்த வேண்டிச் 'செங்கண் நெடியோன்' என விசேடித்தும் 'பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்' என்று இராமாநுஜர் காலத்துக்கு முன்பில்லாத திருமாலடையாளங்களை இடையிற் புகுத்தியும் போந்ததன்றி வேறில்லை.

(5) திருவேங்கடமுடையான் திருமேனியில் நாகாபரணமும் சடையுமுள்ளன என்பது எல்லார்க்குந் தெரிந்ததாதலால், இதுவே திருமாலுக்கு அங்கே சம்பந்தமில்லை யென்பதற்கு சாக்ஷி—என்பனவாகிய இவ்வைந்து ஆக்ஷேபணைகளே அப்பண்டிதர் கூற்றுள் முக்கியமானவை. இவற்றை ஒவ்வொன்ருய்ச் சோதித்துப்பார்ப்போம்.

(முதலாவது) பழைய உரையாசிரியரெல்லாம் மதச்சார்பு பற்ருது திருவேங்கடத்தைப் பொதுவாகவே கொண்டு எழுதினர் என்ருர். இது தவறு. பிரசித்த உரையாசிரியரும், 'தூயஞான நிறைந்த சிவச்சுடர்–தானே யாகிய தன்மையாளன்' என்று கூறப்பட்டவருமாகிய நச்சினர்க்கினியர், தொல்காப்பியப் பாயிரத் தொடராகிய 'வடவேங்கடம்' என்பதற்கு—"நிலங்கடந்த நெடிமுடியண்ணலை நோக்கி உலகந் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும், எல்லாராலும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினர்" என்று எழுதியிருத்தலையும், சைவரும் சிலப்பதிகார உரையாசிரியருமாகிய அடியார்க்குநல்லாரும், 'நெடியோன் குன்றம்' என்பதை முருகன்மலையாக எழுதாமல் திருமால்குன்றமாகவே குறிப்பிட்டிருத்தலையும் கற்ருர் அறிவர். இவற்றை அப்பண்டிதர் மறைத்தெழுதினதற்குக் காரணந் தெரியவில்லை. ஆதலால், பழைய உரையாசிரியர்க்குத் திருமலையைப்பற்றிய சந்தேகமே இருந்ததில்லை என்பது தெளிவு.

(இரண்டாவது) குறிஞ்சி அல்லது மலைநிலத்துக்குரிய கடவுள் முருகனே யாதலால், 'நெடியோன் குன்றம்' என்று வேங்கடத்தை மாயோன்மலையாகக் கருதிச் சிலப்பதிகாரவாசிரியர் கூற நியாயமே இல்லை என்றார். இவ்வாதமும் பொருத்தமற்றது. அவ்வாசிரியரே சிலப்பதிகாரம் காடுகாண்காதையில் பாண்டிய நாட்டு அழகர்மலையைப்பற்றியும் கூறியிருப்பது பண்டிதரெல்லார்க்குந் தெரிந்தது. அவ்விடத்தில் முருகற்குரிய நிலமாகிய அம்மலையைத் 'திருமால்குன்றம்' என்று அதனாசிரியராகிய இளங்கோவடிகள் கூறினர் அன்றோ? ஆயின், திருவேங்கடத்தையும் அவ்வாறே திருமால்குன்றமாக அவ்வடிகள் கருத இடமில்லையோ? பண்டிதர் எழுதியபடி, மலைப்பிரதேசம் முருகனுக்கும் வனப்பிரதேசம் திருமாலுக்கும் உரியனவாகத் தமிழ்நூல்கள் பாகுபடுத்தியிருப்பது உண்மைதான். ஆனால், மலைப்பகுதியில் திருமால் கோயில் கொள்வதுண்டெனின் அது பிழையென்றும், அதனால் அத்திருமாலை மலைக்குரிய முருகனாக்கிவிடுதலே தமிழ்நூல்முறையென்று அப்பண்டிதர் துணிந்ததுதான் விநோதமாகும். எனவே, அவர் கொள்கைப்படி, ஆழ்வார்கள் பாடல்பெற்ற திருமாலிருஞ்சோலை, திருக்குறுங்குடி, திருநீர்மலை, திருமெய்யம், சிங்கவேள்குன்றம், திருக்கடிகை, வதரியாச்சிராமம்முதலாகமலைநிலத்திற்கோயில் கொண்ட திருமால்களையெல்லாம் என் செய்வது? அன்றியும், வயல் (மருதம்), கடல் (நெய்தல்) நிலங்களிற் கோயில்கொண்ட திருமால் சிவபிரான் முருகன் முதலிய தெய்வங்களையும் அவ்விதமே நீக்கிவிட்டு, அவ்வந் நிலங்களுக்குரியவராகத் தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்ட இந்திரனையும் வருணனையும் முறையே அவரவரிடங்களில் ஸ்தாபிக்கவேண்டியதும் அவசியமாக முடியும். சுருங்கவுரைக்குமிடத்து இதுபோன்ற வாதம் அசதிக்கிடமாகுமென்க.

முருகக்கடவுள் மலை(குறிஞ்சி)த் தெய்வமாதலால், திருவேங்கடமலைக்கும் அவர் பொதுவில் அதிதெய்வம் என்னத் தட்டில்லை. ஆனால், அவர்க்குரிய மலையில் வேறெத்தெய்வமும் சிறப்பாகக் கோயில்கொள்ளக்கூடாது என்று துணிவதே நூல் வழக்கோடும் உலகவியல்போடும் மாறுபடுவதாகும். திருவேங்கட புராணத்திற் கூறப்பட்ட வாமனசரித்திரத்தில், சுப்பிரமணியர் தாரகாசுரனைக் கொன்ற தோஷம் போகும் பொருட்டு, திருவேங்கடத்துத் திருமாலைக் குறித்துத் தவஞ்செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருவரங்கம் பெரிய கோயிலின் க்ஷேத்திரபாலகருள் விநாயகரு மொருவராதல் போலத் திருவேங்கடத் திருப்பதிக்கு

முருகவேள் க்ஷேத்ரபாலகராயும் திருமாலை வழிபடுபவராயுமுள்ளார் என்பதை:—

"கந்தன் வேங்கடக் காவ லியற்றிடற்
கெந்த நோன்பியற் றிப்பெற்றனன்"

என்று திருவேங்கட புராணவாசிரியரும்,

"வந்திக்க வந்தனை கொள்ளென்று கந்தனு மாதவருஞ்
சிந்திக்க வந்தனை வேங்கட நாத"

என்று திவ்யகவி - ஐயங்காரும் பாடுவதால் அறியலாம். இவ்வாறே திருமாலின் பிரபலஸ்தலமாகச் சங்கநூல்களான பரிபாடலும் சிலப்பதிகாரமுங்கூறும் திருமாலிருஞ்சோலையிலும் முருகற்கு வாசம் உண்டென்பது—

" * * * * பஞ்சவர்தம்

பங்கங் களைந்தான் பனிரண்டு கையொருவர்
பங்கங் களைந்தான் பதி"

என்று அழகர்கலம்பகமுடையார் கூறுவதும் அறியத்தக்கது.

(மூன்றாவது) 'நெடியோன் குன்றமும்' என்ற சிலப்பதிகாரத் தொடர்க்கு முருகன்மலை என்பதே பொருள் என்று அப்பண்டிதர் நிச்சயித்ததற்கு :—

"கூடற் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
ஒடியா விழவி னெடியோன் குன்றத்து" (149)

என்று, சங்க நூலாகிய அகநானூற்றில் நெடியோன் என்ற சொல் முருகற்கு வழங்கியிருப்பதே முக்கிய ஆதாரமாகும். இவ்வாறு அருகிக் காணப்பட்ட பிரயோகமானது திருமாற்குப் பெருகி வழங்கும் வழக்குக்களிலும் குற்றங்கற்பிக்கவும், திருமால்பரமாக உள்ளதை முருகவேள்பரமாக இழுத்துக்கொள்ளவும் அப்பண்டிதரைத் தூண்டிவிட்டது. நெடியோன் என்பது, பொதுவாக உயர்ந்தோன் என்ற பொருளுடையதாய், மற்றத் தெய்வங்கட்கும் அரசர்க்கும் வழங்குவதாம். அவ்வாறு வழங்கும்போது விசேஷணத்துடனாவது முன் தொடர்ச்சிபற்றியாவது அவர்களுள் ஒருவரைக் குறிக்குமேயல்லது தனித்துநின்ற நிலையில் அங்ஙனங்குறிக்கும் சக்தியுடையதன்று. "முந்நீர் விழவி னெடியோன்" (புறம்-9), 'தேர் விசிருக்கை நெடியோன்' (நெடு. 114) 'பொலந்தார் மார்பினெடி

யோன் (மதுரைக்.61) 'நிலந்தரு திருவினெடியோன்' ,(சிலப்.28, 4) எனப் பாண்டியனையும், பாரிபோன்ற அரசர்களையும் அடையுடன் 'நெடியோன்' என்ற சொல்லாற் சங்கநூல்கள் கூறுவது காண லாம். அங்ஙனமே முருகவேளும் 'மஞ்ஞை வெல்கொடி யுயரிய ......நெடியோன்' 'சேவலங்கொடியனெடியன்' (பரிபா.) எனவிசே டணத்துடனும் 'நெடியோய் நின்குன்றின்மிசை' (பரிபா.) என முன் தொடர்புப் பற்றியும் கூறுவது பண்டை வழக்கே. ஆனால் திருமாலைக் குறிக்கும்போது, நெடியோன் என்பது அக்கடவுட்குத் தமிழில் அநாதியாக வழங்கும் மால் மாயோன் என்பவைபோன்ற திருநாமமாய், நிலங்கடத்தற்கு நீண்ட திரிவிக்கிரமன் என்ற பொருள் குறிப்பதாகும். இத்திருநாமம் :—

'நெடியோன் குறளுருவாகி'

'நெடியோன் மார்பி லாரம் போல'

'நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி'

'நெடியோ னன்ன நெடுங்கை' (பெரும். 5—4—9)

'நெடியவன் மூவகைப் படிவம் (ஷ. 2—15—10)

என்று, விசேஷணங்களும் முன் தொடர்ச்சிகளும் இல்லாமல் தனித்து நின்றே திருமாலைக் குறிக்கும் ஆற்றலுடையதாதல் காண்க. ஆகவே, இளங்கோவடிகள் தனிநிலையிற்கூறிய 'நெடி யோன் குன்றமும்' என்ற தொடரும் திருமாலையன்றி வேறெவரை யுங் குறியாது என்பது திண்ணம்.

திருவேங்கடமுடையானை நெடியோன் என்ற திருநாமத்தால் சிலப்பதிகாரவாசிரியர் கூறியது, அப்பெருமானைத் திரிவிக்கிரம னாகக் குறிக்கும் முன்னோர் வழக்குக்கட்கு மிகவும் ஒத்துள்ளது. 'நெடியோனே வேங்கடவா' என்றார் குலசேகரப் பெருமாளும். திருமலையைப்பற்றிய 'ஒழிவில் காலமெல்லாம்' என்ற திருவாய் மொழியின் இறுதிப் பாசுரத்தில் "தான்பரப்பி மண் தாவிய வீசனை" என்று பெரியாரும் பணித்தருளினார். தமிழிற் பெரிய உரையாசிரியராகிய நச்சினார்க்கினியரும் இவ்வழக்கை யறிந்தே "நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகந் தவஞ்செய்து வீடுபெற்ற மலை' (வேங்கடம்) என்ற வாக்கியத்தால் திரிவிக்கிரம னாகவே திருமலையம் பெருமானைக் கூறுதல் காணலாம். இவ்வாறு உலகளந்த சரித்திரத்தால் திருவேங்கடமுடையானைப் பெரியோர் கூறிவருவதுபற்றித் திருவாய்மொழி வீட்டில் பூர்வாசார்யர்கள்

எழுதுவன வருமாறு:—"திருவேங்கட முடையானையன்றோ கவி பாடிற்றென்னில், "கொண்டாய் குறளாய் நில மீரடியாலே, விண்டோய் சிகரத் திருவேங்கடமேய, அண்டா" (பெரிய திருமொழி) என்றும் "மண்ணளந்த இணைத் தாமரைகள்" என்றும் "உலக மளந்த பொன்னடியே யடைந்துய்ந்து" என்றும் ஆழ்வார்கள் அருளிச்செய்யாநிற்பர்கள்: எல்லாரையும் திருவடிகளின் கீழே இட்டுக்கொள்ளுகைக்காக நிற்கிற நிலையாலும், வரையாதே கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிறபடியாலும் திருவேங்கடமுடையானை ஸ்ரீவாமனனுகச் சொல்லக் கடவதிறே" என்பது.

"அகிலபுவனங்களையும் தன் மூவடிகளின்கீழ் ஒடுக்கியவன் எவனே, அப்பெருமான் கிரியில் நிலைபெற்றருளுகிறான்" என்ற கருத்தில்,

> "ஆ௫மோ நபீஃ: குசரோ கிரிஷ்டா:
> யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு
> அதிக்ஷியந்தி புவநாநி விஶ்வா"
>
> **"ம்ருகோநபீம: குசரோகிரிஷ்டா:**
> **யஸ்யோருஷு த்ருஷு விக்ரமணேஷு**
> **அதிக்ஷியந்தி புவநாநி விச்வா"**

என்று வேதமும், திரிவிக்கிரமனுகிய திருவேங்கடமுடையான் திருமலையில் நித்யவாஸஞ்செய்தருளுகிற சிறப்பை எடுத்துக் கூறும் என்பர். இவ்வேதப்பொருளையே, 'இழைத்தா ரொருவருமில்லா மறைகளை யின்றமிழாற்-குழைத்தாராகிய' குருகைப்பிரானும்—

> **"குன்ற மேந்திக் குளிர்மழை காத்தவன்**
> **அன்று ஞால மளந்த பிரான்பரன்**
> **சென்றுசேர் திருவேங்கட மாமலை"**

என்று அருளிச்செய்தார். இக்கருத்தை உட்கொண்டுபோலும், 'வேதவேற்பு' என்று திருமலையை ஸ்ரீமத். வேதாந்ததேசிகன் சிறப்பித்தருளியதூஉம் என்க.

**(நான்காவது)** மேற்கூறிய சிலப்பதிகாரத்தொடரில் ஐயமுண்டாவதற்கிடமே இல்லாதபடி, இளங்கோவடிகள் 'காடுகாண் காதை'யில் திருவேங்கடமுடையானது நின்ற திருக்கோலத்தைப் பற்றி அழகாகப் பாடுவது அடியில் வருமாறு:—

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோடிய விடைநிலத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்"

என்பது. இவ்வாறு திருமால்மலை என்று தெளிவாகக் கூறப்பட்டிருப்பது முருகவேள்குன்றமென்று சொல்வதற்கு முற்றும் விரோதமாயிருப்பதால், இதனை மறுப்பதற்கு இயலாது ஒரு புது வழி தேடினர் அப்பண்டிதர். என்னெனில், திருமால்பரமாகக் கூறப்பட்ட இவ்வடிகளெல்லாம் இடைச்செருகல் (ப்ரக்ஷிப்தம்) என்பதே. சமாதானம் சொல்லமுடியாததற் கெல்லாம் சுலபமான மார்க்கமாக இக்காலத்தார் கைக்கொள்ளும் முறைகளில் இஃது ஒன்று. ப்ரக்ஷிப்தம் என்பதோடு ஒழியாமல் அதற்குச் சில நியாயங்களை அவர் எழுதியதுதான் விநோதமாகும். மேற்கூறிய அடிகளில் "பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்' என்று திருமாலுக்குக் கூறப்பட்ட அடையாளங்கள், பிம்பத்தில் சங்கசக்கரங்களை ஸ்ரீராமாநுஜர் ஸ்தாபித்ததன்பின்பு, அவை பழைமையாயுள்ளன என்பதை வலியுறுத்த யாரோ எழுதிச் செருகியதுபோலும். ஏனெனில், சங்கசக்கரங்கள் பின்வந்த இராமாநுஜர் ஸ்தாபித்தவை என வைணவரே ஒப்புதலால், 2000-வருஷத்திற்கு முன் சிலப்பதிகாரத்தில் அவை எழுதப்பட்டதென்றால், எத்துணை ஐயப்பாட்டுக்கு இடமாகும்' என்று எழுதினர்.

இக் கொள்கையிலிருந்து, சங்கசக்கரங்களை ஸ்ரீராமாநுஜர் அப்பிம்பத்தில் ஸ்தாபித்தபின்புதான் திருவேங்கடம் திருமால் திருப்பதியாகியது என்பது அப்பண்டிதர் கருத்தென்பது வெளியாகின்றது. இது பழைய தமிழ்நூல்களையேனும் வழக்குக்களையேனும் அறியாமற் கூறியது என்பதை நாம் மெய்ப்பிக்கலாம். ஸ்ரீ ராமாநுஜர்க்கும் முன்பிருந்தவர்கள் ஆழ்வார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். அவர்கள்காலத்தும் வேங்கடம் முருகனதாகவே இருந்ததென்பது பண்டிதர் கருத்துப்போலும். ஆயின் திருவேங்கட முடையானைத் திருமாலாகவே அவர்களெல்

லாம் பாடியுள்ளனரே? ஹரிஹராகாரமான திருவேங்கடமுடையான் திருவுருவைப் புகழுமிடத்தில், பேயாழ்வார் 'தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்...தோன்றுமால்' என்று கூறினர். பொய்கையார் 'கையது வேல் நேமி' என்றருளினர். குலசேகரப் பெருமாள் 'மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன்' என்றார். திருமங்கை மன்னனும் 'சுடராழி வலனுயர்த்த மல்லார் தோள் வடவேங்கடவாணன்' என்றருளிச் செய்தார். ஸ்ரீ சடகோபரும் "சீறுவெறியுக் திருநேமிவலவா...திருவேங்கடவா" என்று பணித்தார். ஸ்ரீ ஆண்டாளும் 'வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே' என்றருளினர். இப்பிரமாணங்கள் போதாவேல் இன்னும் எத்தனையுங்காட்டத் தட்டில்லை. இவ்வாறு ஸ்ரீராமாநுஜர்க்கு முன்பிருந்த ஆழ்வார் வாக்குக்களால் திருமாலடையாளம் திருமலைநாதன் மேனியில் உள்ளனவாகத் தெரிவதால், மேற்கூறிய இளங்கோவடிகள் வாக்கில் மட்டும் இடைச்செருகல் கூறுவதைக் காட்டிலும் அவ்வாழ்வாரெல்லார் வாக்கினுங் கூறிவிடுதலே மிகவழகாகும். ஒருகால், அப் பண்டிதர், சரித்திராசிரியர் சிலர் எழுதியவாறு, இராமாநுஜர்க்கும் பின்பிருந்தவர்களே ஆழ்வார்கள் என்று கருதியிருத்தலுங்கூடும். அவ்வாறுயின் பொது நோக்கினரும், சங்கத்துப் பிற சான்றோருமாகிய ஐயனாரிதனார் வாக்கு நோக்கத்தக்கது. அவர் வெண்பாமாலையில் :—

> **"வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்லின்**
> **நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்**
> **இருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க**
> **அருளீயு மாழி யவன்"**

என்று பாடுகின்றார். இங்கே 'ஆழியவன்' என்று ஐயனாரிதனார் பாடியதும் இடைச்செருகலானால், இளங்கோவடிகள் கூறிய 'பகையணங்காழியும் பால்வெண் சங்கமும்' என்பதும் இடைச் செருகலாகக் கடவது.

இனி, சங்கசக்கரங்கள் முன்பில்லாதிருந்தவற்றை உடையவராகிய இராமாநுஜர் தாபித்ததாக வைணவரே ஒப்புகின்றனர் என்று அப்பண்டிதர் எழுதியது சிறிதும் ஆதாரமற்ற வார்த்தையாகும். அவ்வாறு கூறும் வைஷ்ணவர் எவருமேயில்லை. 650-வருஷங்கட்கு முந்திய பின்பழகிய பெருமாள்ஜீயர் அருளிய ஆறாயிரப் படிக் குருபரம்பரையிலும், ஸ்ரீராமாநுஜார்யதிவ்யசரிதையிலும்,

உடையவர் காலத்தில் திருமலையில் நிகழ்ந்த சைவவைஷ்ணவ வாதத்தைப்பற்றி எழுதப்பட்டிருப்பவை அடியில் வருமாறு:—

"தெழிகுரலருவித் திருவேங்கட மலையேறித் திருவேங்கடமுடையானையும் ஸேவித்துநிற்க, அவ்வளவிலே 'தாழ்சடையு நீண்முடியும் ஒண்மழுவுஞ் சக்கரமும்—சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழுந்—திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்-கிரண்டுருவு மொன்றா யியைந்து' என்று ஆழ்வார் அனுபவித்த ஹரிஹராகாரம் ஒத்திருக்கையாலே சைவர்கள்கண்டு 'எங்கள் நாயனார்' என்று பிணங்கிவர, உடையவரும், உங்கள் தம்பிரானுக்கு அஸாதாரண சின்னமான த்ரிசூல டமருகங்களையும், எங்கள் பெருமானுக்கு அஸாதாரண சின்னமான திருவாழி திருச்சங்காழ்வார்களையும் பண்ணித் திருவேங்கடமுடையான் திருமுன்பே வைப்போம்; அவர் எத்தை எடுத்துத் தரித்துக்கொள்ளுகிறாரோ அத்தையிட்டு அவர் ஸ்வரூபநிரூபணம் பண்ணக்கடவது' என்று அவ்வாயுதங்களைப் பண்ணி அவர் ஸந்நிதியிலே வைத்து. கர்ப்பக்ருஹத்தில் ஒருத்தருமில்லாதபடி சோதித்துத் திருக்காப்பைச் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுவந்து, ப்ராதகோலமானவாறே திருக்காப்பை நீக்கி ஸேவிக்கிறவளவிலே, கூராராழி வெண்சங்கேந்தி, த்ரிசூலடமருகங்களைக் காற்கடைகொண்டிருக்கக் கண்டு ஆனந்தாச்ருக்கள் பனிப்பக் கொந்தளித்துக் குணலைக் கூத்தாடிக் கொண்டு, "சைவர்களை ஓட்டினர்" என்பது. இதனால் உடையவரால் புதியவாக சங்கசக்கரங்கள் ஸ்தாபிக்கப்பட்டனவல்லவென்பதும் அவை ஸ்தாபிக்கநேர்ந்த வரலாறும் விசதமாகும். இவ்வாறன்றி, பக்தனான தொண்டைமான் சக்கரவர்த்திக்குச் சங்கசக்கரங்கள் பெருமானால் அளிக்கப்பட்ட ஐதிஹ்ய முண்டாதலால், அதனைக் காட்டும் பொருட்டுச் சிலகாலம் அவ்வாயுதங்கள் திருமேனியில் இல்லாதிருந்தன வென்றும், அதனால் நேர்ந்த சைவ வைஷ்ணவவாதத்தை உடையவர் நீக்கியருளினாரென்றும் ஒரு சாரார் சரித்திரங்கூறுவது முண்டு. "முனித்தொண்டைமான் கையிற் சங்காழி நல்கியென் மூரற்செவ்வாய்க்—கனித்தொண்டைமான்கையிற் சங்காழி கோடல் கருமமன்றே" என்றார் திவ்யகவி-ஐயங்காரும்.

இனி, சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறிய திருவேங்கடச்சிறப்பு முருகற்கே உரியதென்றும், அது பின்பு திருமால்பரமாக மாற்றப்பட்டதென்றும் எழுதிய பண்டிதர்கருத்து, மற்றொருவழியாலும் குற்றமுடையதாகும். எவ்வாறெனில்—திருவேங்கடமகி

மையைப் பற்றிக் கோவலனிடங்கூறிய பிராமணன், தன்னைத் திருமால் பக்தனென்று குறிப்பிட்டுத் தான் விஷ்ணுவின் திவ்ய தேசங்கட்கு யாத்திரையாகப் புறப்பட்டவன் என்று கூறிய கதாஸந்தர்ப்பத்தைப் பாடுமிடத்தில். மேற்கூறிய திருமலை வருணனையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனை:—

(திருவரங்கத்து) "திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

(திருவேங்கடத்து) "செங்க ணெடியோ னின்ற வண்ணமும்
என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட்டுள்ளேன்

* * *

நீணிலங் கடந்த நெடுமுடி யண்ணல்
தாடொழு தகையேன் போதுவல்"

என்ற அடிகளால் அறியலாம். இவ்வாறு கூறிய திருவேங்கடவருணனை முருகனதாயின் திருமால் திவ்ய தேசயாத்திரையின் பொருட்டுத் தான் புறட்டுத் திருமாலிருஞ்சோலையை ஸேவித்துக் கொண்டுவருவதாக அந்தப் பிராமணன் தன்னைச் சொல்லிகொள்வதோடும், 'கோயில் திருமலை' என்ற பண்டை வழக்குக்கேற்பத் திருவரங்கச் சிறப்பை முன்பும், திருமலைச் சிறப்பைப் பின்பும் வைத்து அவன் அவ்விடத்துக்கூறிய இயைபோடும் மிகவும் முரணுதல் காணலாம். இதனாலும் வேங்கடம் திருமால்மலை என்பதே இளங்கோவடிகள் கருத்தென்பது மலையிலக்காகும். அவ்வடிகள், திருமால் திருவரங்கத்திற் கிடந்தவண்ணத்தைக் கூறிப் பின் திருவேங்கடத்தில் நின்ற வண்ணத்தை மிக வழகாக வருணித்து வருதலை நோக்கும் அறிஞரெவரும் அவரைப் போற்றிப் புகழ்வர் என்பது திண்ணம். அத்தகைய அழகான வாக்கில் இடைச் செருகல் கண்டுபிடித்ததற்கு ஷெ பண்டிதரிடம் எந்த அளவு கருவி இருந்ததோ தெரியவில்லை. இவற்றால், வேங்கடம் திருமால் மலையே என்று சாதிப்பதற்கு வேறு கதியின்றி வைணவர்கள் சிலப்பதிகாரத்திற் புகுந்து இடைச்செருகலானார்கள் என்ற கூற்றுப் போலியே என்க.

திருவேங்கடம் திருமாற்கே சிறப்பாக உரியதலம் என்பதற்கு ஆழ்வார்கள் வாக்கன்றி வேறு பழையபிரமாணங்கள் தமிழில்உண்டோவெனின், ஒன்றல்ல, பல. 'வெறிகொளறையருவி வேங்கடத்துச் செல்லின்...அருளியு மாறி யவன்' என ஐயனரிதனர் என்ற

பழைய ஆசிரியர் திருமால்குன்றமெனத் தெளிவாகக் கூறியபாட்டு முன்பே காட்டப்பட்டது. பாரதம் பாடிய பெருந் தேவனாரும் தங் காலத்துப் பிரபலமாக விளங்கிய திருவரங்கம் பெரிய கோயில், திருமலை, பெருமாள் கோயில், அழகர் திருமலைகளாகிய திருமால் திருப்பதிகளை,

"தேனூங்கு நீழற் திருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றுப்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்"

என்று தம் பாரதத்திற் பாடினர். 'புடையது நெடுமால்வரைக் கப்புறம் புகினும்' என்றார் பழையோரான ஆசிரியமாலையுடையார். இவற்றையெல்லாம் அறிந்தே சிவபரத்துவங்கூறும் அத்வைதியாகிய நச்சினார்க்கினியர்—'நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகந்தவம் செய்து வீடுபெற்றமலை' என்று எழுதினர். திருமலை பரமபதத்தை நேரே கொடுக்க வல்லது என்று ஈண்டு நச்சினார்க்கினியர் எழுதியபடியே, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப நாடரும், "கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லுங்கொடிய கொடுமை நீங்கி வீடுறுதிர்" என்றும்,

"வலங்கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறுகின்றன மெய்ந்நெறிப்
புலங்கொள் வார்கட் கணையது பொய்க்குமோ"

என்றும் அம்மலையைச் சிறப்பித்தனர். "திருவேங்கடம் நங்கட்குச் சமன்கொள் வீடுதருந் தடங்குன்றமே" என்று ஸ்ரீ சடகோபரும் பணித்தருளுதல் அறியத்தக்கது. இவற்றை யுணர்ந்தே வீரசைவராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர் தாம் பாடிய சீகாளத்திப் புராணத்தில்:—

"அரவணைச் செல்வன் வாழு மந்தமிழ் நிலத்தி னெல்லைத்
திருமலை கண்டுணர்ந்தோர் செறிவினைத் தொடர றுக்கும்
பெருமலை கண்டிறைஞ்சிப் பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரு மேமகூடப் பொருப்பினை யினிது கண்டான்"

என்று பாடினார். திருவேங்கடத்து க்ஷேத்ரபாலகராக முருகவேள் அமைந்துள்ளார் என்று கூறப்படுதற்கேற்ப, அத்திருமலைச் செவ்

வேலைத் தம் திருப்புகழில் அருணகிரிநாதர் பாடினராயினும், திரு வாஞ்சியத்தைப் பற்றி அவர் பாடிய 'இபமாந்தர் சக்ரபதி' என்ற திருப்புகழில்:—

'உபசாந்த சித்த குருகுல பவபாண் டவர்க்கு வரதன்மை
யுருவோன் ப்ரசித்த நெடியவன் ருஷிகேசன்
உலகீன்ற பச்சை யுமையணன் வடவேங் கடத்தி லுறைபவன்
உயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே"

எனத் திருமலைத் திருமாலைப் பெரிதும் புகழலாயினர். இப்பாடல் டெ பண்டிதர் ஆக்ஷேபங்கள் பலவற்றுக்கும் சமாதானங்கூறுவது போல அமைந்திருந்தல் கவனிக்கத்தக்கது. 'நெடியோன்' என்பது திரிவிக்கிரமனைக் குறிப்பிடுவதாய்த் திருமாலுக்குப் பிரபலமான திருநாமம் என்பதை 'பிரசித்த நெடியவன்' என்பதனாலும், தமிழ்க் கெல்லையாகிய வேங்கடமே தாம்பாடுவதென்பதை 'வடவேங்கடத்தில்' என்பதனாலும், அவ்வேங்கடேசன் திருக்கரங்களில் திருவாழி யுஞ் சங்கும் என்றுமுள்ளன என்பதை 'உயர்சார்ங்கசக்ரகரதலன்' என்பதனாலும் அவ்வருணகிரியார் நன்கு விளக்குதல் குறிப்பிடத் தக்கது. இவற்றால், அக்கவிஞரின் கருத்து—திருவேங்கடம் குறிஞ் சித் தெய்வமாகிய முருகக் கடவுட்குரியதாயினும், அதுதிருமாலது பிரசித்த க்ஷேத்ரங்களுள் ஒன்றென்பதே எனத் தெளியலாம்.

(ஐந்தாவது) ஸ்ரீநிவாசக் கடவுள் பிம்பத்தில் நாகாபரணமும் சடையுமுள்ளமையால், திருமாற்கு அவ்வுருவில் சம்பந்தமேயில்லை என்றார். ஆயின், முருகக் கடவுட்குத் தான் அவ்வுருவில் என்ன சம்பந்தமுள்ளது? நாகாபரணமுஞ் சடையும் முருகற்குரியனவல் லவே. எனவே, சிவபிரானுக்கன்றி முருகற்கும் அப்பிம்பத்தோடு எவ்விதச் சம்பந்தமுமில்லை யென்பதைப் பண்டிதர் கூற்றேவிளக்கி விட்டது. இனி, சிவபிரானுக்கு அப்பிம்பத்தில் சம்பந்தமேற் பட்டதனுண்மையை ஒரு பக்கப் பார்வையாக அல்லாமல் உற்று நோக்கினால் விளங்கிவிடும். அஃதாவது, திருவேங்கடமுடையான் திருமேனி, சிவபிரானை ஒருபாற்கொண்டதாக உள்ளதென்பதே யாம். இவ் ஹரி ஹர ஆகாரத்தையே பேயாழ்வார்:—

"தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழுந்

திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து''

என்றும், பொய்கையார்:—

''அரனு ரணனும மான்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவே னேமி
யுருவமெரி கார்மேனி யொன்று''

''ஏற்றான்புள் ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்பிடந்தான்
நீற்றா னிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு''

''பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தாற்றிரிவ ரேலு மொருவன்
ஒருவனங்கத் தென்று முளன்''

என்றும் அருளிச் செய்வராயினர்.

''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் னுந்தியிலே தோற்றுவித்து''

''குழனிற வண்ணநின் கூறுகொண்ட
தழனிற வண்ணன்''

என்று அருளிச் செய்தார் திருமங்கை மன்னனும். இங்ஙனம் ஹரிஹராகாரமான திருவுருவம் இன்றும் கூர்ந்து ஸேவிக்கத்தக்கதாகவேயுள்ளதென்று கூறுவர். இத்தகைய திருக்கோலத்தை அவ்வெம்பெருமான் கொண்டிருந்ததால், அரியோ அரனோ என்ற வாதமுண்டாக, அதனை உடையவர் தீர்த்துவைத்த செய்தி முன்னரே கூறப்பட்டது.

இனி, சிவபிரானுக்குச் சிறந்த தலமாகத் திருவேங்கடம் முன்பு கருதப்பட்டிருக்கதாயின், ஆழ்வார்களும் பொதுநோக்குடைய பிறபுலவர்களும் திருமால் மலையாக அதனைப் பாடியவாறு

போல, தேவாரமுதலிய திருமுறைகளியற்றிய சிவனடியார்களுள் ஒருவரேனும் அம்மலை சிவபிரானுக்குரியதாக ஏன் பாடினரில்லை? அதுபோயினும், முருகக்கடவுள் படைவீடுகளில் முக்கியமானவற்றையெல்லாம் எடுத்துப்புகழ்ந்த நக்கீரனார் முதலிய சங்கத்தார் காலத்தேனும் திருவேங்கடம் முருகன் வரைப்பு என்று கூறப்பட்டுள்ளதோ? இல்லை. இதனாலும், பண்டைக் காலத்தேயே சிவபிரானுக்கேனும் முருகவேளுக்கேனும் திருமலை சிறப்புடைய தலமாகக் கருதப்பட்டதன்று என்பது வெளிப்படையாம்.

இவற்றையெல்லாம் விடுத்து, ஆங்கிலவரசாட்சியின் பயன்களுள் ஒன்றாய் மதச்சார்பில்லாமல் வெளிப்படுத்தப்படும் சிலாசாஸன ஆராய்ச்சிபற்றியேனும் அப்பண்டிதர் கூற்றுக்கு ஆதாரமுண்டோஎனிற் கிடையாது. ஸ்ரீராமாஜநுர்க்கு இரண்டொரு நூற்றாண்டுகட்கு முற்பட்டவர்களும் சைவாபிமானமிக்கவர்களுமான இரண்டாம் பராந்தகன், ராஜமகேந்திரன், ராஜேந்திரன் என்ற சோழ சக்கரவர்த்திகளின் சாஸனங்கள் திருமலையிற் பொறிக்கப்பட்டுள்ளன*. அச்சாஸனங்களின் விஷயங்களாலும் அவற்றின் முடிவில் 'ஸ்ரீமாஹேஸ்வரரக்ஷை' அல்லது 'ஸ்ரீ ஸ்கந்த ரக்ஷை' என்றில்லாமல் 'ஸ்ரீவைஷ்ணவர்கள் இரக்ஷை' 'இந்நிபந்தஞ் செய்தது ஸ்ரீவைஷ்ணவர்களோம்' எனக்காணப்படுவனவற்றாலும் திருமலைக் கோயில், ஸ்ரீராமாநுஜர்க்கு முன்பே சிறிதும் ஐயமின்றித் திருமால் குன்றமாகவே கொள்ளப்பட்டிருந்ததென்று தெளிந்து கொள்ளலாம்.

இதுவரை கூறிய பிரபல நியாயங்களால் திருவேங்கடத்தெம்பெருமானைப்பற்றித் தமிழ்நூல்முறையால் அறியக்கூடிய உண்மைகள் இன்னவை என்பது யாவர்க்கும் கரதலாமலகமாகும்.

* S. I. I. Vol. iv. No. *290-3*; செந்தமிழ், தொகுதி-3, பக்.105-116.

# 21. தேவாரம்பெற்ற தலங்களும் சிலாசாஸனவழக்கும்

சிலாசாஸனங்கள்மூலம் அறியப்படும் செய்திகளுள்ளே தேவாலயங்களைப்பற்றிய அறச்செயல்களே அதிகம் என்பது பலரும் அறிவர். அவ்வாலயங்கட்கு நிலையான திருப்பணிகள் பலபுரிந்தும், அறப்புறமாக இறையிலிநிலங்களை யளித்தும், வாகனம் அணிகலங்களாதிய வழங்கியும் பத்தித்திறம் வாய்ந்த உத்தமசீலர்கள் செய்துபோந்த தருமச்செயல்கள் பலவும், கோயிற்றிருமதில் முதலிய பொதுவிடங்களிலே பலரும் அறியவும் அறிந்துபேணவும் சாஸனமுறையில் வரையப்பட்டுள்ளன. அத்தகைய கல்லெழுத்துக்களினின்று தெரியவரும் பழைய வரலாறுகள் எண்ணிறந்தனவாம். அவற்றுள் தேவாரம்பெற்ற தலங்களைப்பற்றி அறியப்படும் புதிய செய்திகளும் பல. அவை சைவநன்மக்களும் பிற அறிஞர்களும் அறிதற்கும் ஆராய்ந்துகொள்ளுதற்கும் உரியனவாதலின், அவற்றை இங்குத் தொகுத்துக்காட்ட விரும்புகின்றேன். ஆராய்ச்சிக்குரிய அத்தலங்களை மூவகையாகக் கொண்டு இங்கு நோக்கத்தகும். அவையாவன:—

1. இப்போது வழங்கும் பதிகம் பெற்ற தலங்கள்
2. இப்போது வழக்குவீழ்ந்த பதிகமுள்ள தலங்கள்
3. இடம்விளங்கும் வைப்புத் தலங்கள்

## 1. வழங்கும் பதிகம்பெற்ற தலங்கள்

### (1) திருச்சிற்றேமம்

இப்பெயர்கொண்ட திருப்பதி, சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகம் பெற்றுள்ளதென்பது தேவாரத்தால் அறியப்படும். சோணாட்டுத் திருத்துறைப்பூண்டித் தாலூகாவில், திருவாய்மூர் என்ற சிவக்ஷேத்திரத்தை யடுத்து அதன் தென்மேற்கில் உள்ள **சித்தாம்பூர்** என்ற தலமாக இப்போது இது கருதப்படுகின்றது. ஆனால், இவ்வூர்க் கோயிலிலுள்ள சாஸனங்கள், இதனைத்

**கலைமகள்**, Vol. xi, pp. 5-11; 408-419.

**திருச்சிற்றேமம்** என்ற பெயராற் குறியாது, திருச்சிற்றுய்மூர் என்றே வழங்குகின்றன என்பர். இதனுல் தேவாரப்பதிகம் பெற்ற திருச்சிற்றேமம் என்பது வேறோர் தலமாகவேண்டும் என்பது தெரியலாம். இஃது இவ்வாருக.

தஞ்சாவூர் ஜில்லாப் பட்டுக்கோட்டைத்தாலூகாவில், அறந்தாங்கி செல்லும் ரயில்பாதையில், **திருச்சிற்றம்பலம்** என இப்பொழுது வழங்கும் ஊர் பழைய சிவாலயமுடையதாகும். இவ்வாலயம் மிகப் பழமையானதென்பது பாண்டியன் வரகுணன் முதலாம் ஆதித்தசோழன் முதலியோர்காலத்துச் சாஸனங்கள்* ஆங்குள்ளவற்ருல் தெரியவருகின்றது. அச்சாஸனங்கள் யாவும் அவ்வூரைத் **திருச்சிற்றேமம்** என்றே வழங்குவனவாகும். ஆகவே, சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகத்துக்குரிய திருச்சிற்றேமம் இத்திருச்சிற்றம்பலமே என்று சாஸனவாராய்ச்சியாளர் கருதுவர். இது பெரிதும் பொருத்தமாகின்றது.

## (2) திருவிசயமங்கை

இப்பெயர் கொண்ட தலமும் சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகம் பெற்றதாம். இது, கும்பகோணத்துக்குப் பக்கத்தே சுந்தரப்பெருமாள் கோயில் ரயில்வேஸ்டேஷனுக்கு 4-மைலிலுள்ள சிவதலமாக இக்காலத்தாராற் கருதப்படுகின்றது. ஆனல், சம்பந்தசுவாமிகள் பதிகத்தில்—

> **"கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்**
> **வெள்விடைக்கருள் செய்விசயமங்கை**
> **புள்ளிடத்துறை கின்ற வுருத்திரன்"** (திருவிசயமங்கைப்பதி. 3)

என வருதலால், இத்தலம் கொள்ளிடக்கரையில் உள்ள கோவந்த புத்தூரே என்பது தெரியலாம். கோவந்த புத்தூரில் 'வெள் விடைக்கு அருள்செய் விசயமங்கை' என்பதனுல் விசயமங்கை என்பது அவ்வூர்ச் சிவாலயத்தின் பெயர் என்பதும், அதனுட் கோயில் கொண்ட சிவபிரான் கோவொன்றினுக்கு அருள் புரிந்தமைபற்றி அவ்வாலயமுள்ள ஊர் கோவந்தபுத்தூர் என்ற பெயர் பெறலாயிற்று என்பதும் விளங்கும். இஃது இப்போது கோவிந்தபுத்தூர் என வழங்குவது. இதன்கண் புராதனமான

* M. E. R. 1925-6, P. 98.

சிவாலயமொன்று உண்டு. இப்போது கருதப்படுமாறு, இவ்வூர்க்கு 4-மைலில் உள்ள கிராமத்தமைந்த சிவாலயமே பாடல்பெற்ற தலமாகக் கொள்வதற்கு, கொள்ளிடக்கரையில் அஃதில்லாமலும் கோவந்த புத்தூரின் தொடர்புபெறுமலும் இருப்பது பெருந்தடை யாகின்றது. அதனுல் கோவந்தபுத்தூரில் உள்ள சிவாலயமே சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகத்துக்கு உரியதென்பது பொருத்த மாம். இதற்கேற்ப, அப்புத்தூர்ச் சிவாலயத்திலுள்ள பழைய சோழர்சாஸனங்களெல்லாம், ஆங்குக் கோயில்கொண்ட சிவபிரானை "**ஸ்ரீ விசையமங்கை** யுடையார்" "**ஸ்ரீ விஜயமங் கலத்து** மஹாதேவர்" என வழங்கியிருத்தல், மேற்கூறிய முடிபை உறுதிப்படுத்துவதாம் என்பர் சாஸனவாராய்ச்சியாளர்.* இனி, என்னுராய்ச்சியிற்கண்ட பிறதலச்செய்திகளேக் கூறுவேன்.

## (3) திருக்கடைமுடி

இப்பெயர்பெற்ற சிவதலம் திருஞானசம்பந்த சுவாமிகளது திருப்பதிகம் உடையதாகும். இதனைத் தஞ்சாவூர் ஜில்லா ஆனந்ததாண்டவபுரம் ரயில்வேஸ்டேஷனுக்குக் கிழக்கே 5-மைலில் உள்ள கீழையூர் என்ற தலமாகக்கொண்டு இக்காலத் தார் வழிபடுவர். ஆயின் முன்னேவழக்கு இதற்கு முற்றும் மாருன தாம். தஞ்சாவூர் ஜில்லா, கோவிலடி என வழங்கும் பேரூர்க்குக் கீழ்பால் 1½-மைலில் **திருச்சென்னம்பூண்டி** என்றுள்ள கிராமம் பழைமையான சிவாலயமுடையது. அதனில் திருக்கோயில் கொண்ட சிவபிரான் சடையர், ஜடேச்வரர் என்ற திருநாமங் களால் இக்காலத்து வழங்கப்படுவதோடு, ஸ்வயம்புமூர்த்தி என்றும் விசேடமாக வழிபடப்பெறுவர். இவ்வூர்க் கோயிற் றிருமதில்களிற் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் பலவாகும். அவற்றுள் 9, 10-ம் நூற்றுண்டுகளில் விளங்கிய பல்லவ சோழர்கள் சாஸனங்களும் உள்ளன.† அவையாவும், இச்சிவாலயமுள்ள ஊரைத் திருக்கடைமுடி என்றும். இதனுள் எழுந்தருளியுள்ள மூர்த்தியைப் பெரும்பான்மை திருக்கடைமுடி மஹாதேவர் எனவும் சிறுபான்மை திருச்சடைமுடிமஹாதேவர் எனவும் வழங்கு கின்றன. ஆனுல், நந்திக்கலம்பகங் கொண்டவனும் தெள்ளா றெறிந்து வென்றவனுமான மூன்றும் நந்திவன்மன், அவன் மகன் கோவிஜயநிருபதுங்கவர்மன் என்ற பல்லவர்கள் காலத்தவான பழஞ்சாஸனங்களிலே திருக்கடைமுடி மஹாதேவர் என்றே காணப்படுவதால், ககரசகரங்கட்கு வேற்றுமை தெரியாமல்

* M. E. R. Nos. 157—184 of 1926-27.

† S. I. I. Vol. Vii, Nos. 507-527.

எழுதநேர்ந்த பிற்காலத்தேதான், கடைமுடியைச் சடைமுடி என்று பின்னோர் கொண்டு வழங்கலாயினர் என்று தோற்றுகின்றது. 10-ம் நூற்றாண்டினனான முதற்பராந்தகசோழன் காலத்துச் சாஸனங்கள் அவ்விருவகையையும் ஆளுகின்றன. அதனால் அக்காலத்தேயே இம்மாறுபாடு உண்டாகியது என்று சொல்லலாம். ஆனால், இது தவறான வழக்கென்பது இத்திருக்கடைமுடிப் பக்கத்துத் திருச்சடைமுடி என வேறுதலமொன்று தனியே இருந்தமை சாஸனங்களால் தெளிவாக விளங்குவதாற் பெறப்படுகின்றது. அதனை அடுத்துவிளக்குவேன். சம்பந்தமூர்த்திகள் திருமழபாடியை வணங்கியசெய்தி கூறியபின்

"அதன்மருங்கு கடந்தருளால் திருக்கானூர்
பணிந்தேத்தி யான்ற சைவ
முதன்மறையோர் அன்பிலாலந்துறையின்
முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார்
பயில்பதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந்
துறையணைந்தார் மணிநூல் மார்பர்"

(பெரியபு. திருஞான. 308)

எனப் பாடுவர் சேக்கிழார். இப்பாட்டினின்றும், கொள்ளிடங் காவிரிகட்கு இடைப்பட்ட இடையாற்றுநாட்டில் திருக்கானூர் அன்பிலாலந்துறை, சடைமுடி என்ற மூன்றும் அடுத்தடுத்துள்ள தலங்கள் என்பதும், அவை திருஞான சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகங்கள் பெற்றவை என்பதும் விளக்கமாகும். இத்தலங்கள் மூன்றனுள், முன்னவை யிரண்டுக்கும் அம்மூர்த்திகள் பாடிய பதிகங்கள் இப்போதும் வழங்குவன. பின்னதான 'சடைமுடியார் பயில்பதி' என்பது, திருக்கடைமுடி என்றே கொள்ளற்பாலது, என்னை? சம்பந்தர் திருப்பதிகம் அக்கடைமுடிக்கே காணப்படுத லால் என்க. எனவே, 'கடைமுடியார்' என்றற்பாலது 'சடைமுடி யார்' எனச் சேக்கிழார் காலத்தோ அவர்க்குப்பின்னரோ வழங்க லாயிற்று என்பது தெரியலாம். திருச்சென்னம்பூண்டியாகிய கடைமுடிச் சிவபிரானைச் சடையர், ஜடேச்வரர் என இக்காலத்த வரும் மாறிவழங்குவர்.

இனி, மாயூரந் தாலுகாவில் திருவிளநகர்க்குக் கீழ்பால் உள்ள கீழையூரை, திருக்கடைமுடி என்று கொள்வதற்குப் பிற்

காலவழக்குத்தவிர சாஸனப் பிரமாணமேனும் பழைய நூற்பிர மாணமேனும் காணப்படவில்லை. திருக்கடைமுடிப்பதிகத்தின் இறுதிதோறும் 'வளநகர் கடைமுடியே' எனவருந் தொடர்க்கு, 'விளநகரையடுத்த கடைமுடி' என்று சிறிது பாடமாற்றிப் பொருள் கொண்டு, பின்னோர் இக் கீழையூரைத் திருக்கடைமுடி என்று வழங்க நேர்ந்தது போலும்,[1] இஃது எங்ஙனமாயினும், பழைய பல்லவர்காலமுதலாகப் பிற்பட்ட சோழர்காலம்வரை, தஞ்சாவூர்த் தாலுகாத் திருச்சென்னம்பூண்டியே திருக்கடைமுடி என்று கொள்ளப்பெற்று வழங்கியசெய்தி சாஸனங்களால் நன்கறி யப்படுதலின், தேவாரம் பெற்ற தலமாகக் கீழையூரை முன்னோர் கருதினவரல்லர் என்பது தெளிவு.

## II. வழக்கு வீழ்ந்த பதிகமுள்ள தலங்கள்

### (4) திருச்சடைமுடி

திருநாவுக்கரசநாயனார் தம் அடைவுதிருத்தாண்டகத்தில்—

"சடைமுடி சாலைக்குடி தக்களூர்...கடைமுடி கானூர் கடம்பந் துறை"

என்று பாடியவிடத்து, முற்கூறிய கடைமுடியின் வேறாகச் சடை முடி என்ற தலமொன்றைக் கூறுதல் காணலாம். இப்பெயர் கொண்ட திருப்பதி, தஞ்சைஜில்லா கோவிலடி என்ற ஊரிலுள்ள சிவாலயப் பிரதேசத்துக்குப் பண்டு வழங்கிவந்ததாகும். இதனை:-

"சகாப்தம் 1497...விட்டலதேவ மஹாராயர்...பாண்டிகுலாசனி வளநாட்டு வல்லநாட்டு மேலைமுறி திருச்சடைமுடி என்ற கிராமம் திருப்பேர்நகரான் பெருமானுக்கு ஸமர்ப்பித்த தர்மசாஸனம்"[2]

"திரிபுவன சக்ரவர்த்திகள் விக்கிரமசோழதேவர்க்கு யாண்டு 11-வது பாண்டிகுலாசனிவளநாட்டு எயில்நாட்டுப் பிரமதேயம் திருப்பேர்ப்பெருங்குறி மஹாசபையோம். இவ்வூர் வடபிடாகை திருச்சடைமுடித் திருச்சடைமுடியுடைய மஹாதேவர் கோயிலில் திருமண்டபத்தே கூட்டங் குறைவறக்கூடியிருந்து"[3]

---

1 சைவநண்பரொருவரை இதுபற்றி நான் உசாவநேர்ந்தபோது, இக்கருத்தேபட அவர் கூறலாயினர்.

2 S. I. I. vii, pp. 303—4.

3 Ibid. p. 307.

எனவரும் சாஸனப்பகுதிகளால் அறியலாம். இவற்றால் அப்பர் சுவாமிகள், முற்குறித்தபடி அடைவுதிருத்தாண்டகத்திற் பாடிய சடைமுடி என்ற தலம், கோவிலடி எனவழங்கும் பேரூரின்பகுதியே என்பது விளக்கமாம். இக்கோவிலடி பண்டைக் காலத்தில் திருப்பேர்நகர் என்று பிரபலம் பெற்ற நகரமும் ஆழ்வார்கள்பலருடைய பாடல்கள் பெற்ற விஷ்ணு ஸ்தலமும் ஆகும்.[1] இந்நகரின் வடபுறத்தே, திருச்சடைமுடி என்று வழங்கிய சிவாலயப் பகுதி, திருப்பேரைப்புறம் என்று சங்கநூல்களிலும் திருப்பேர்த்திருப்புறம் என்று சாஸனங்களிலும் வழங்குவது. சோழன் கோச்செங்கணுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் போர்நிகழ்ந்த களமாக முன்னூல்கள் கூறுந் திருப்பேரைப்புறம் என்பது இத்திருச்சடை முடிப் பிரதேசமேயாகும்.[2] இச்சடைமுடிச் சிவபிரானை—

"திருப்பேர்த் திருப்புறத்துறை மஹாதேவர்"
(S. I. I. vii. p. 308)

"உடையார் திருப்புறத்துறைவார்" (p. 311)

"திருப்புறத்துறையும் பெருமானடிகள்" (p. 309)

என்று பழையசாஸனங்கள் குறிக்கின்றன. இவற்றால் திருப்புறம் என்றும் இச்சிவாலயம் பண்டு வழங்கப் பெற்று வந்தமை தெரியலாம். இவ்வாலயம், திருமால்கோயிற்குக் கிழக்கே 3-பர்லாங்கில் உள்ளது. திருச்சடை முடிக்குக் கீழ்பால் 1½ மைலில் உள்ளதே மேற்கூறிய திருக்கடைமுடி. திருப்பேரிலுள்ள திருமால்தலத்தின் பிராபல்யத்தால் திருச்சடைமுடி என்ற ஊர்ப்பெயரின் வழக்குக் குன்றிய காலத்தே, கடைமுடி சடைமுடிகளின் வேறுபாடுமறக்கப் படலாயிற்றென்றும், அதனால் திருக்கடைமுடிச் சிவபிரானைச்சடை முடிநாதர், சடையர், ஜடேசுவரர் என்று மாற்றிப் பிற்காலத்தார் வழங்க நேர்ந்ததோ என்றும் கருத இடமுண்டு. எங்ஙனமாயினும், திருக்கடைமுடியும் திருச்சடைமுடியும் ஒன்றையொன்றாக மயங்கும்படி எழுத்தொற்றுமையாலும் இடவண்மையாலும்நெருங்கியிருந்த தலங்களே என்பதில் ஐயமில்லை. இவ்வாறன்றி, 'சடைமுடியார் பயில்பதி' என்று சேக்கிழார் கூறியது, இத்திருச்சடை

---

1 'அப்பக்குடத்தான்' என்பது வைஷ்ணவ வழக்கு.

2 இதன் விவரம், இத்தொகுதி 245-ம் பக்கத்துக் கீழ்க்குறிப்பால் அறியத் தக்கது.

முடியே என்று கூறினும் பொருந்தும். இங்ஙனமாயின் இதற்குப் பழைய பதிகமிருந்து பின் வீழ்ந்ததெனல்வேண்டும்.

## (5) திருத்தவத்துறை

திருச்சிராப்பள்ளிக்கு வடகிழக்காக 12 மைலில் லால்குடி என்ற ஊரொன்று உள்ளதைப் பலரும் அறிவர். இது ரயில்வே ஸ்டேஷனாகவும், தாலுகாவின் தலைமை ஸ்தானமாகவும் மழநாட்டுப் பிருகச்சரணம் என்ற வகுப்பைச் சார்ந்த ஸ்மார்த்தப் பிராமணர் மிகுதியும் வசிப்பதாகவும் உள்ள பேரூர். இவ்வூரிற் புராதனசிறப்புத் திறம் வாய்ந்த சிவாலயமொன்று உண்டு. இக்கோயிலின் செந்நிறமான கோபுரத் தோற்றத்தைக் கொண்டு, 'சிவப்புஸ்தானம்' என்ற பொருளுடைய 'லால்குடி'என்ற பெயரைஇதற்கு முகம்மதியர் வழங்கினர் என்பர்.[1] இவ்வூர்ச் சிவாலயத்தின் கிழக்கு வடக்குத்திருமதில்களில் 9-ஆம் நூற்றாண்டுமுதல் 14-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த அரசர்கள் காலத்துச் சாஸனங்கள் பல வரையப்பட்டுள்ளன. இவற்றின் குறிப்பை 1928-29-ஆண்டுச் சாஸனவிலாகா அறிக்கையிதழ்களில் 98-முதல் 140-வரையுள்ள எண்வரிசையிற் காணலாம். இவற்றினின்று இவ்வூரின் பழம் பெயர் **திருத்தவத்துறை** என்பது அறியப்படும். இதுவே பிற்காலத்தும் வழங்கப்பெற்றது. இதற்குத் தமிழ்ப் புராணமொன்று உண்டு.[2] இத்தலத்து சிவபிரான்,

| | |
|---|---|
| **திருத்தவத்துறைப்** | **பெருமானடிகள்** |
| ,, | **பட்டாரகர், படாரகர்** |
| ,, | **ஈசுவர பட்டாரகர்** |
| ,, | **உடையார்** |
| ,, | **மகாதேவர்** |

என வழங்கப் பெற்றனர் என்று முற்கூறிய சாஸனங்களினின்று உணரலாகும். இக்கோயில் மூர்த்திக்கு இக்காலத்து வழங்குந் திருநாமம் **ஸப்தருஷீசுவரர்** என்பது. தம்மை நோக்கித் தவஞ்

1 Trichinopoly District Gazetteer; see Lalgudi.

2 ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்: முதற் பாகம், பக்கம் 94. இத்தலத்துத் தேவியான பெருந்திருப் பிராட்டியார் (ஸ்ரீமதி)மீது பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தமொன்று, ஷை பிள்ளையவர்களாற் பாடப் பெற்றுள்ளது. இது, பிள்ளையவர்களது பிரபந்தத் திரட்டில் மஹாமஹோபாத்யாய-டாக்டர்-ஐயரவர்களால் வெளிவந்துள்ளது.

செய்த அத்திரி பிருகு முதலிய ஸப்தருஷிகட்கும் அருள் புரிந்தமையால், அம்மூர்த்திக்கு இத்திருநாமம் அமைவதாயிற்று. 9-ஆம் நூற்றுண்டினரான முதல்வரகுணபாண்டியனும், தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவனும், 10-ஆம் நூற்றுண்டினரான பரகேசரி பராந்தகசோழன், இராஜகேசரி என்பார்களும், இவர் வழியினரான வேந்தர்களும் பெரிதும் அபிமானித்துத் திருப்பணிகள் புரிந்த இத்திருத்தவத் துறையானது புராணப் பிரசித்தி பெற்றதென்பதைப் பலரும் அறிந்திருத்தல் கூடியதே. ஆனல், இது முற்காலத்துத் தேவாரப் பாடலும் பெற்றிருந்தது என்ற செய்தி முன்னூல்களாலும் சாஸனங்களாலும் இப்போது தெரிய வருகின்றது. அதனை ஈண்டு விளக்குவேன்.

தேவாரம் அருளிய மூவரால் தனிப்பதிகம் உடையவாகப் பாடப்பெறுதுபோயினும், அத்தனிப் பதிகங்களினும் பொதுப்பதிகங்களினும் குறிப்பிடப்பட்ட சிவதலங்கள் பலவுண்டு. அவை வைப்புத் தலங்கள் என்று வழங்கப் பெறும். அத்தலங்களிற் பலவற்றை 'க்ஷேத்திரக்கோவை' என்ற தலைப்பிடப்பெற்றதும் திருநாவுக்கரசு நாயனாராற் பாடப்பட்டதுமான பொதுப்பதிகத்துங் காணலாம். அதன் 11-ஆம் பாசுரத்தே.

"பண்டெழுவர் தவத்துறை வெண்டுறை"

என்ற பகுதி குறிப்பிடத் தக்கது. இத்தொடர்க்கு—ஆதியில் எழுவர் தவஞ்செய்த துறை என்பது பொருளாகும். தவஞ்செய்த துறை என்றதனல் முன்னின்ற எழுவர் என்பார் முனிவர்கள் என்பதும், பண்டெழுவர் என்பதனல் அவர்கள் ஆதியிருடிகள் என்பதும் பெறப்படும். படவே, ஸப்த ருஷிகளே அவ்வெழுவர் என்பதும், அவர்கள் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்து பேறுபெற்ற தலமாதல்பற்றித் தவத்துறை என்ற பெயர் வழங்கலாயிற்று என்பதும், அவ்வெழுவர்க்கும் அருள் புரிந்த ஸப்தருஷீசுவரர் கோயில் கொண்ட லால்குடியே அத்தலமென்பதும் நன்கு விளங்கும். எனவே, திருத்தவத்துறை தேவாரத்துள் குறிப்பிடப்பட்ட தலங்களுள் ஒன்றென்பது தெளியப்படும்.

மேற்கூறியவாறு, திருத்தவத்துறை வைப்புத் தலமென்று விளங்கினும், அது தனிப்பதிகம் பெற்ற தலங்களுள் ஒன்றென்பது, இப்போது வெளிவந்துள்ள தேவாரப் பதிகங்களைக் கொண்டு அறியக்கூடவில்லை. எனினும், அங்ஙனம் பதிகம்பெற்ற சிறப்பையும்

இத்தவத்துறை ஒரு காலத்து உடைத்தாயிருந்ததென்றே தெரிய வருகின்றது. திருஞான சம்பந்த சுவாமிகள் தலயாத்திரை செய்து கொண்டு சிவபிரானை வணங்கி வந்ததைக் கூறுமிடத்துப் புலவர் பெருமானுன சேக்கிழார்,

"ஆரணத் துட்பொரு ளாயினுரை
ஆனைக்கா வின்கட் புகழ்ந்துபாடி
ஏரணி யும்பொழில் சூழ்ந்தசண்பை
யேந்தலா ரெல்லையி லின்பமுற்ருர்"

"கைதொழு தேத்திப் புறத்தணைந்து
காமர் பதியதன் கட்சிலநாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார்
மன்னுந் தவத்துறை வானவர்தாள்
எய்தியிறைஞ்சி யெழுந்துநின்றே
இன்றமிழ்மாலை கொண்டேத்திப்போந்து
வைதிக மாமணி யம்மருங்கு
மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார்"
(பெரியபு. திருஞான. 346, 347)

என்று அந்நாயனுர் செய்திகளாகப் பாடுதல் காணலாம். திருவானைக்காவிற் சில நாள் வைகி வணங்கியபின் வேறு தலங்களையுந் தரிசிக்க விரும்பிய அப் பெரியார், அடுத்துச் சென்றிறைஞ்சியது 'தவத்துறை வானவர்தாள்' என்று இப்பாடல்களிற் கூறப்படுதல் அறியத்தகும். இத்தவத்துறையாகிய லால்குடி திருவானைக்காவுக்கு'வடகிழக்கே 12–மைலில் உள்ளதனுல், 'தவத்துறைவானவர்' என்பார் அத்தலத்துக் கோயில்கொண்ட ஸப்தருஷீசுவரரே என்பதுதானே விளங்கும். இங்ஙனம் சம்பந்தமூர்த்திகள் தவத்துறை வானவர் தாளை வணங்கியது மட்டுமன்றி,

"இறைஞ்சி யெழுந்துநின்றே இன்றமிழ்மாலை கொண்டேத்தி"னர்

என்று சேக்கிழார் பாடுகின்ருர். இதனுல், தம் திருப்பதிகமாலையொன்றும் அவ்வானவர் தாளிற் சூட்டி அந்நாயனுர் துதித்தனர் என்பது நன்கு பெறப்படும்.

"பைஞ்ஞீலி வாணர் கழல் பணிந்து மஞ்சபரவுந்
தமிழ்மாலை பாடி" (ஷை, ஷை, 332)

"ஆனைக்காவில் வெண்ணுவல் மேவிய மெய்ப்பொருளை...
பண்ணுறு செந்தமிழ்மாலை பாடி" (345)

"நெடுங்களத்தாதியை இன்னிசைமாலை கொண்டேத்தியேகி"(349)

என்பன முதலாகப் பிறதலங்கட்குச் சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகங்கள் பாடியதைக் குறிப்பிடுந் தொடரே அமைய, தவத்துறைவானவர்க்கும் அந்நாயனர் பதிகம் பாடிய செய்தியைச் சேக்கிழார் கூறுதலால், அது வைப்புத்தலமன்றிச் சம்பந்தமூர்த்திகளது தனிப்பதிகம் பெற்றிருந்ததென்பது தெரியவருகின்றது. இஃது அடியில்வரும் சாஸனப் பிரமாணங்களாலும் வலியுறுதலை இனிக் கூறுவேன்.

மேற்குறித்த லால்குடிச் சிவாலயத்தின் தெற்குத் திருமதிலில் வரையப்பட்ட கல்லெழுத்துக்களிலே, மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன் (முதற் பாரந்தகசோழன்) காலத்தமைந்தவற்றுள் அவ்வரசனது 37-ஆம் ஆட்சியாண்டிற் பொறிக்கப்பட்ட சாஸனமும் ஒன்றாகும். அதனில், சிவகோசரி[1] பிடாரன் என்பார், திருத்தவத்துறைப்பட்டாரகர் (ஸ்வாமி) திருமுன்பே நித்தம் மூன்று காலமும் பிராமணரிருவர் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய நிலம் உதவிய செய்தி கூறப்பட்டுள்ளது. அப்பராந்தகன் மகன் இராஜகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டில் டி திருமதிலில் வரையப்பட்ட மற்றொரு சாஸனத்தே, அங்ஙனம் திருப்பதியம் பாடுதற்கு உதவிய மானியம் போதியதா யில்லாமையால் அஃதுதவிய சிவகோசரிபிடாரரே மேலும் சிலநிலங்களை விலைக்குப பெற்று உதவி, அதன் செவ்வாரத்தை (மேல்வாரத்தை)த் திருப்யம் விண்ணப்பஞ் செய்வார் அடைதற்கும் பிறவற்றுக்குமாக வகைசெய்த வரலாறு கூறப்பட்டுள்ளது. இவற்றால் தேவாரவாசிரியர் மூவர் பிரபாவங்களை முதன்முதலில் உலகிற் பரவச்செய்த முதலாம் இராஜராஜசோழன் கொட்பாட்டனும் பாட்டனுமான சோழர்கள் காலங்களிலே, திருத்தவத்துறைக் கோயிலில் திருப்பதியம் ஓதப்பட்டுவந்ததென்பது வெளியாதல் காண்க. இங்ஙனம் ஓதப்பட்ட திருப்பதியம், சேக்கிழார் குறிப்பிட்டவாறு, சம்பந்தமூர்த்திகளது "இன்றமிழ்மாலை"யே ஆதல் வேண்டும் என்றுகொள்ளத்தகும். முதல் இராஜராஜசோழனே திருமுறை கண்டவனென்று பெரும்பாலும் கூறப்படுபவனாயினும், அவற்கும் முற்பட்ட சோழராட்சிகளில் பழைய தலங்களிலெல்லாம் திருப்பதியம் ஓதும் வழக்கிருந்ததென்பது சாஸனங்களால் நன்கறியப்படுகின்றது. 9-ஆம் நூற்றாண்டினனான மூன்றாநந்திவன்மன்

---

1 கண்ணப்பநாயனார் காலத்தே திருக்காளத்திநாதரைப் பூசித்துவந்த அருச்சகர்பெயர் இ.·.தென்பது அறியத்தக்கது. பிடாரன் - பட்டாரகன் என்பதன் மரூஉ.

காலத்தே திருவல்லத்தும்[1], 10–ஆம் நூற்றாண்டினரான முதல் இராஜகேசரி அவன்மகன் முதற்பராந்தகன் காலங்களில் பழுவூர்[2] அன்னூர்களிலும்[3] 11–ஆம் நூற்றாண்டினரான இரண்டாம்பரகேசரி, உத்தமசோழன் காலங்களில் முறையே திருவாவடுதுறை[4] அந்துவநல்லூர்த் திருவாலந்துறைகளிலும்[5] திருப்பதியங்கள் ஓதப்பட்டுவந்த செய்தியை அவை கூறுதல் காணலாம். இதனால், தேவாரம் பாடிய மூவரின் வரலாறுகளும் பதிகங்களும் நாட்டிற் சிறுக அறியப்பட்டிருந்தவற்றை அவ் இராஜராஜசோழன் பிரபலமடையச் செய்தவன் என்பது தகுமேயன்றி, அச்சோழனுக்கு முன்பு அவை முழுதும் வழக்கற்றிருந்தன எனல் பொருந்தாதென்பது பெறப்படும். இதனால், அச்சோழனுக்கு முற்பட்டகாலத்துச் சாஸனங்கள் கூறும் திருப்பதியங்கள் பெரும்பாலவும் மூவரோதியன, என்று கொள்ளுதலே ஏற்புடையதென்க. இம்முறையில், இராஜராஜசோழனுடைய கொட்பாட்டன் பாட்டன்காலங்களிலே திருத்தவத்துறையில் ஓதப்பட்ட திருப்பதியமாகச் சாஸனங்கூறுவது, சேக்கிழார்கூறியபடி, அத்தலத்துக்கு ஞானசம்பந்தசுவாமிகள் பாடிய திருப்பதியமாகவே கொள்ளல் பொருத்தமாகின்றது. பிராமணரிருவர் திருத்தவத்துறைப்பதியமோத நியமிக்கப்பெற்றனர் என்ற புதிய செய்தியும் இங்கே குறிப்பிடத்தக்கது. சம்பந்தர் அருளிய தவத்துறைப்பதிகம் சேக்கிழார்காலத்தும் வழங்கியது போலும். இல்லையேல், அப்பதிகமுண்மையைச் சாஸனமூலம் அறிந்து "தவத்துறை வானவர்தாள் இன்றமிழ்மாலை கொண்டேத்தி" என்று அப்புலவர் பெருந்தகை கூறினர் எனல் வேண்டும். சோழனது பேரமைச்சராக விளங்கிய சேக்கிழார்க்குத் தேவாரம்பெற்ற தலங்களின் வரலாறுகள் மூலசாஸனவாயிலாக நன்குதெரிந்திருத்தல் கூடியதேயாதலால், தவத்துறைக்குரிய அத்தகைய பிரமாணங்களைக்கொண்டே அங்ஙனம் அவர் பாடலாயினர் என்ற கருத்தும் பொருத்தமாதல் காண்க.

---

1 S. I. I. Vol. iii, pp. *92-4*.

2 M. E. R. No. *349* of *1918*.

3 Ibid " *379* of *1903*.

4 Ibid " *139* of *1925*.

5 S. I. I. iii, p. *139*.

இனி, சம்பந்த மூர்த்திகள் பாடிய பாடற்றொகை 16,000-என்பது நம்பியாண்டார் நம்பிகள் வாக்காலும்,[1] அவற்றுள் 384 பதிகங்களே பிற்காலத்து வழங்கலாயின என்பது உமாபதி சிவாசாரியர் வாக்காலும்[2] அறியப்பட்டவை. இப்போது வழக்கிலுள்ளவை 383-பதிகங்களே. விடுபட்ட ஒன்று, இன்ன திருப்பதிக்குரியதென்பது தெரியவில்லை. திருவிடைவாய் என்ற தலத்துக்குச் சம்பந்தமூர்த்திகள் பதிகமொன்றுண்டென்பது, பதிகப் பாடல்களமைந்த அவ்வூர்க் கல்வெட்டொன்றால் அறியப்படுகின்றது. இக்கல்லெழுத்து 12, 13-ஆம் நூற்றாண்டுகட்குரியதென்பர். இப்பதிகமே உமாபதிசிவாசாரியர் கூறிய கணக்கிற்குரியதென்று கருதப்படுகின்றது. ஆயின், திருவிடைவாய்க்குச் சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகம் பாடிய செய்தியை, சேக்கிழார் ஏனைத்தலங்களுக்குக் கூறியபடியே குறிப்பிடாது, திருத்தவத்துறைக்கு அம்மூர்த்திகளது பதிகமுண்மையைக் கூறுதல் நோக்கத்தக்கது.

இனி, 14-ஆம் நூற்றாண்டில் தேவராய மகாராயர் என்ற விஜயநகர வேந்தர் காலத்தும் இத்திருத்தவத்துறை பிரபலமாயிருந்த தென்பது அத்தலத்துள்ள சாஸனமொன்றால் அறியப்படுகின்றது. ஏறக்குறைய இவ்விராயர் காலத்தவரான அருணகிரிநாதரும் இத்தவத்துறையைத் தம் திருப்புகழில்,

> "சேரணி யுந்திரை தத்தி முத்தெறி
> காவிரி யின்கரை யொத்து மெத்திய
> சீர்புனை கின்ற திருத்தவத்துறை வரும்வாழ்வே"

> "திரைக்க டற்பொரு காவிரி மாநதி
> பெருக்கெ டுத்துமே பாய்வள நீர்பொலி
> திருத்தவத்துறை மாநகர் தானுறை பெருமாளே"

என்று சிறப்பிப்பர். இனித் திருத்தவத்துறைச் சாஸனங்களால் அறியப்படும் வேறு செய்திகள் வருமாறு:—இத்தலம் 'வடகரை மழநாடு என்ற பெரும்பிரிவைச் சார்ந்ததாகும். இம்மழநாடு 8, 9-ஆம் நூற்றாண்டுகளிற் பாண்டியராட்சிக் குட்பட்டிருந்த காலத்

---

1 "பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா, வித்துப்பொருளை விளக்க வலபெருமான்" (ஆளுடை. திருத்தொகை). 16,000-பதிகமென்பாருமுளர்.

2 திருமுறைகண்ட புராணம், 25.

துப் பாண்டியகுலபதி வளநாடு என்றும், சோழராட்சியில் பாண்டியகுலாசனி வளநாடு, இராஜராஜவளநாடு என்றும் பெயர் பெறலாயிற்று. இம்மழநாட்டுள் இடையாற்றுநாடு என்ற சிறு பகுதிக்கு உள்ளடங்கியதே இத் திருத்தவத்துறை. இத்தலத்துள்ள சிவாலயத்தைப் பல்லவபாண்டியசோழர்களும் பிற்பட்ட வேந்தர்களும் பிற நன்மக்களும் பெரிதும் அபிமானித்துப் பல திருப்பணிகளும் புரிந்துள்ளார். இவருள், பிற்பட்டதான பாரத வெண்பாவைப் பாடுவித்தவனும் நந்திக்கலம்பகத் தலைவனுமான 'தெள்ளாறெறிந்து வென்றுகொண்ட' நந்திபோத்தரையனும், மாறஞ்சடையனை வரகுண மகாராஜனும், முதல் ஆதித்த சோழன் அவன்மகன் பராந்தகசோழன் என்பாரும் பழைமை பெருமை வாய்ந்தவர்கள். இவருள் முதலிருவரின் ஆட்சியாண்டுகளாகக் குறிக்கப்பட்டவற்றினின்று முதல் வரகுணபாண்டியன் ஆட்சிதொடங்கிய காலத்தை ஒருபடியாகத் தெரிந்துகொள்ளக் கூடியதாகின்றது.[1] இப்பாண்டியனுக்குப் 'பாண்டியர் குலபதி' என்ற சிறப்புப்பெயரைச் சாஸனம் வழங்குதல் குறிப்பிடத் தக்கதாம். மழநாடு இவன் காலத்து அடிப்படுத்தப்பட்டமையால் அது 'பாண்டியகுலபதி வளநாடு' என்ற பெயர்பெற்றதென்று இவன் சிறப்புப்பெய்ராற் பெறப்படும். சோழர் பாண்டிரை வென்று கைப்பற்றியபின் பாண்டியகுலாசனி வளநாடு எனத் தம் சிறப்புப்பெயரை இதற்கு வழங்கலாயினர் [பாண்டிய குலாசனி—பாண்டியர்குலத்துக்கு இடியேறுன சோழர்]. மேற்கூறிய பேரரசர் சாஸனங்களிற் பல, தவத்துறைக்கோயில் புதுப்பிக்கப்பட்ட 10-ஆம் நூற்றுண்டில் வடக்குத் திருமதிலில் ஒருசேரப் பெயர்த்தெழுதப்பட்டனவாகும். இவற்றுல், லால்குடியான திருத்தவத்துறை தேவாரத் தனிப்பதிகம் பெற்ற சிவதலமென்பதும், அதன் பழைமைபெருமைகளும் நன்கு வெளியாகும்.

## (6) திருவாலந்துறை

சம்பந்தமூர்த்திகள், 'பொன்னித் தென்கரைத்தானம் பல பணிவா' ராய்த் திருப்பராய்த்துறையுட் புகுந்து ஆங்குச் சிவபிரானைத் தொழுத பின்னர், திருவாலந்துறை திருச்செந்துறை என்ற இருதலங்களையும் வணங்கித் 'திருகற்குடிமலை சேரவந்தார்' என்று சேக்கிழார் பாடியிருத்தல் காணலாம்[2] இவற்றுள் திருவா

1 ஸ்ரீமாந் கே. வி. சுப்பிரமணிய ஐயரவர்கள் (பி. ஏ.) இச் சாஸனங்கள்பற்றி எழுதிய அரிய கட்டுரை காண்க. (Ep. Ind. Vol. xx, p. 51.)

2 பெரியபுராணம், திருஞான. 339-42.

லந்துறை எனப்பட்ட தலம் இங்குச் சிறப்பாக நோக்கத்தக்கது. காவிரிக்கு வடகரையில் அமைந்த தலங்களைக் கூறுமிடத்தே,

"திருக்கானூர் பணிந்தேத்தி...அன்பிலாலந்துறையின்
முன்னவனைத் தொழுதுபோற்றி"

என அன்பிலாகிய ஆலந்துறை சம்பந்தரால் முன்னரே வணங்கப் பட்டமையால்[1] தென்கரைத் தலங்களுள் ஒன்றாக அவர் கூறிய இத் திருவாலந்துறை வேறோர் தலமே என்பது தெளிவாம். அஃது யாதோவெனில்—திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 7-மைலில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளதும், **அந்தநல்லூர்** என்று இப்போது வழங்குவதுமான தலமே என்க. இவ்வூரிலுள்ள சிவாலயம் பழமை வாய்ந்திருத்தலோடு, முதற்பராந்தகன் முதலிராஜ ராஜன் என்ற சோழர்கள் காலத்தவும், பிற்பட்டபாண்டியர்காலத் தவுமான சாஸனங்கள் பல உடையதுமாகும். அவற்றிலெல்லாம் அத்தலம் அந்தவனல்லூர் அந்துவனல்லூர் என்றும், அதன் கணுள்ள சிவாலயம் திருவாலந்துறை என்றும், ஆங்குக் கோயில் கொண்ட சிவபிரான் வடதீர்த்தநாதர் என்றும் வழங்கப்பட்டிருத் தலைக் காணலாம்[2] (வடதீர்த்தம்—ஆலந்துறை).

"பூரத் திருவிழவும் பூமியெழு மாவரையும்
பாரித்த பாசுபத மூர்த்தியையும்—வாரத்தாற்
செய்தான் றிகழந் துவனல்லூர் தென்னேனைகை
மொய்தா ருடையான் முயன்று" (S. I. I. Vol. viii. No. 661)

என்ற சாஸனவெண்பாவும் இங்கறியத் தக்கது. அந்துவனல்லூர் —அந்துவன் என்பாற்குரிய நல்லூர். அந்துவன் என்பது, சங்க காலமுதல் மக்கள் பெயராக வழங்கியதாகும்.[3] முதலிராஜராஜ சோழனுக்குமுன்பு ஆண்ட உத்தமசோழன் காலத்தே, இவ்வாலந் துறைச் சிவாலயத்துக்குத் திருப்பதியமொன்று[4] வழங்கி வந்த தென்று அவ்வூர்ச் சாஸனமொன்று கூறும். திருத்தவத்துறைக் குப் போலவே, இப்பதியமும் சம்பந்தமூர்த்திகளாற் பாடப்பெற்ற தாகச் சேக்கிழார் வாக்கைக் கொண்டு கருதல் தகும்.

---

1 பெரிய பு. திருஞான. 308.

2 I. M. P. Tp. Nos. 371, 374.

3 'அந்துவற்கொரு தந்தை' (பதிற்.) "நல்லந்துவனார்" முதலிய காண்க.

4 S. I. I. Vol. iii, p. 139.

## (7) திருச்செந்துறை

இங்ஙனம், திருவாலந்துறை சென்று வணங்கிய சம்பந்த மூர்த்திகள் அடுத்துத் 'திருச்செந்துறையேமுதலா வழுவில் பல கோயில்கள் சென்று' வணங்கினர் என்று சேக்கிழார் கூறுவர். இப்பெரியார் கூற்றின்படி, திருச்செந்துறை என்பது காவிரித்தென் கரையதேயாதலின், அதன் வடகரையில் அப்பெயர்கொண்டுள்ள எத்தலமும் ஆகாது என்பது தேற்றம். இத் தென்கரைத்திருப்பதி திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 6–மைலிலும் மேற்கூறிய அந்த நல்லூர்க்குக் கிழக்கே 1–மைலிலும் உள்ள திருச்செந்துறை என்ற ஊரேயாகும். இவ்வூரும் பழைமையான சிவாலயமுடையது. இவ் வாலயத் திருமதில்களிலே முதற் பராந்தகசோழன் காலத்துச் சாஸனங்கள் பலவும், பிற்பட்ட சோழர் சாஸனங்களும் வரையப் பட்டுள்ளன.[1] இவற்றினின்று, இத்தலம் ஈசானமங்கலம் என்ற பிரதேசத்தைச் சார்ந்த தென்பதும், அப் பராந்தகசோழன் மக னை அரிகுல கேசரியின் தேவியால் கற்றளியாக இவ்வூர்ச் சிவா லயம் திருப்பணிசெய்யப் பெற்றதென்பதும்[2] இத்தலத்துச் சிவ பிரான் திருச்செந்துறைக் கற்றளிப்பரமேசுவரர், சந்திரசேகரர் என வழங்கப்பட்டனர் என்பதும் விளங்குவன. சம்பந்தமூர்த்தி கள், திருவாலந்துறையிற்போல இத்தலத்துக்கும் எழுந்தருளி வணங்கினர் எனப்படுதலால், அவர் திருப்பதிகம் பண்டு இதற்கும் இருந்ததாக வேண்டும்.

## III இடம்விளங்கும் வைப்புத்தலங்கள்

## (8) ஏமநல்லூர்

அப்பர்சுவாமிகளது அடைவுதிருத்தாண்டகத்தே 'எச்சி லிளமர் ஏமநல்லூர்' எனவருந் தொடருளது. இதனில், ஏமநல்லூர் என்று கூறப்படுவது, தஞ்சைப் பெரிய கோயிலிற் கண்ட சாஸன மொன்றில்,

> "மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய
> திரைலோக்ய மஹாதேவிச் சதுர்வேதிமங்கலம்"[3]

---

1 I. M. P. Tp. Nos. 367-379.

2 S. I. I. iii, 96.

3 Ibid. Vol. ii. 324. 336.

என்று கூறப்பட்டிருத்தல் கொண்டு ஷெ ஜில்லா கும்பகோணந் தாலுகாவில் உள்ள திரைலோக்கி என்ற ஊரே என்பது விளக்கமாகிறது.

## (9) இரும்புதல்

திருவீழிமிழலைக்குரிய திருத்தாண்டகத்தே 'இரும்புதலார் இரும்பூளையுள்ளார்' எனத் திருநாவுக்கரசுநாயனர் பாடியிருத்தல் காணலாம். இதனுள், இரும்புதல் என்பது ஷெ ஜில்லா பாவநாசந் தாலுகாவில் **இரும்புதலை** என வழங்கும் ஊரே என்பது அவ்வூர்ச் சிவாலயத்தே, முதல் இராஜராஜசோழன் முதலியோர் காலத்து அமைந்த சாஸனங்களிலே—

> "மனுகுலசூளாமணிச் சதுர்வேதிமங்கலத்துத்
> **திருவிரும்புதலுடைய** மஹாதேவர்"[1]

என வருந்தொடரால் தெளிவாகின்றது.

## (10) இடைக்குளம்

அடைவு திருத்தாண்டகத்தே 'வளைகுளமும்... இடைக்குளமும்' என இரண்டு தலங்கள் அப்பர்சுவாமிகளாற் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் இடைக்குளம் என்பது, ஷெ ஜில்லா கும்பகோணந் தாலுகாவில் உள்ள **மருத்துவக்குடி** என்ற ஊராகும். இதன்கணுள்ள சிவாலயத்துக் கண்ட சாஸனங்களில்,[2] இக்கோயின் மூர்த்தியை,

> "உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர்நாட்டு...
> **திருவிடைக்குள முடையார்**"

> "உடையார் **திருவிடைக்குள முடையார்**"

என வழங்குதல் காணலாம். ஆகவே, சோணாட்டு வைப்புத்தலமே இஃது என்பது பெறப்படுகின்றது.

## (11) வளைகுளம்

மேற்காட்டிய திருத்தாண்டகத் தொடருட் குறிக்கப்பட்ட வளைகுளம் என்ற தலம், வடவார்க்காடு ஜில்லா அரக்கோணந் தாலுகாவில் **வளர்புரம்** என வழங்கும் ஊராகத் தெரிகின்றது. இவ்வூரிற் கோயில் கொண்டுள்ள சிவபிரானை—

1 I. M. P. Tj. 994.
2 Ibid. Tj. 1000.

"வளைகுளத்து நாகீசுவர முடையார்"

என்று சாஸனங்கள்[1] வழங்குதல் ஈண்டு அறியத்தக்கது.

## (12) கண்ணை

க்ஷேத்திரத் திருத்தாண்டகத்தில் 'கண்ணை களர் காறைகழிப் பாலையும்' என்னும் தொடர், அப்பர் சுவாமிகளாற் பாடப்பெற்றுளது. இதனுள் கண்ணை என்பது, வ. ஆ. ஜில்லா திருவண்ணாமலைத் தாலுகாவில் உள்ள செங்கண்மா என்ற பழைய ஊரின்பெயராகத் தோற்றுகின்றது. மலைபடுகடாங்கொண்ட நன்னன்வேண்மானைச் **செங்கண்மாத்துவேள்** என முன்னோர் கூறுவதால், இவ்வூர் சங்க காலப் பிரசித்தியுடையதென்பது தெரியலாம். இதன்பால்உள்ள சிவாலயம், திருவிடபத்துறை எனச் சாஸனங்களில் வழங்கப்படுவதாம். இக்கோயிலின் தெற்குத் திருமதிலொன்றில்—

"திருவள ரும்புயன் **தென்கண்ணை** யாட்கொண்ட நாயகனிற்
பொருள்வள ரும்புவி யிற்பொலி வெய்திப் பொருந்திடவே
உருவளர் தோகையின் மேல்வந் துதித்தெழு ஞாயிறுபோற்
கருவளர் கந்தனைக் கற்பித் தடியிணை கண்டனனே"

எனத் தனியே வரையப்பட்ட செய்யுட்சாஸனத்து,[2] கண்ணை எனக் கூறப்பட்ட ஊர் இச்செங்கண்மா என்று தெரிவதால், தேவார வைப்புத்தலம் இதுபோலும்.

## (13) திருக்காரிக்கரை

திருநாவுக்கரசு நாயனாரும் ஞானசம்பந்தமூர்த்திகளும் திருக்காளத்திக்குச் சென்ற காலங்களில், இடையே **திருக்காரிக்கரை** பணிந்தனர் என்று சேக்கிழார் கூறுகின்றனர்.[3] இத்தலத்தையே சுந்தரமூர்த்திகளும் தம் திருவிடையாற்றுத் தொகையுட்குறிப்பிட்டலாயினர். திருக்காரிக்கரை என்பது செங்கற்பட்டு ஜில்லா, பொன்னேரித் தாலுகாவில் உள்ள **ராமகிரி** என்ற ஊரே என்பது அவ்வூர்ச் சிவாலயத்துக் கண்ட சாஸனங்களிலே—[4]

1 I. M. P. N. A. 146-8.

2 S. I. I. Vol. No. 117.

3 பெரியபு. திருநாவுக். 343; திஞான. 1015.

4 I. M. P. Cg. 741-2.

"ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் குன்றலத்தனக்
கோட்டத்து நின்றையூர்நாட்டு நடுவின்மலை
திருக்காரிக்கரையுடைய நாயனார்"

"திருக்காரிக்கரைப் பிள்ளையார்"

எனவருந் தொடர்களால் அறியப்படுவது. இதனை வாலீச்சரம் என்றும் அச்சாஸனம் வழங்கும். காரிநதியின் பக்கத்து உள்ளதனால் அத்தலம் இப்பெயர் பெற்றது. இந்நதி, இப்போது இராமகிரிக்குச் சிறிது விலகிச் செல்லும் காலேறு என்று கருதப்படுகின்றது. காலேறு என்பது தெலுங்கில் கறுப்புநதி என்ற பொருள் பயப்பதாகலின், அதுவே அப்பொருளிற் காரிநதி எனத் தமிழில் வழங்கியதாக வேண்டுமென்றும், அந்நதிப் பக்கத்துள்ள தலம் திருக்காரிக்கரை எனப்பட்டதென்றும் கொள்ளத்தக்கன. காரியாறு எனச் சங்கநூல்கள் கூறும் நதி இதனின் வேறாகும்.[1]

## (14) திண்டீச்சுரம்

திருநாவுக்கரசு நாயனரது அடைவுதிருத்தாண்டகத்தில்—

"கோடீச்சரங் கொண்டீச்சரந் திண்டீச்சரம்"

என்ற தொடர் வருதல் தெரியலாம். இதனுள், திண்டீச்சரம் என்ற தலம் தென்னார்க்காட்டு ஜில்லாவிலுள்ள பிரபலநகரான திண்டிவனம் என்ற ஊரே என்பது ஆங்குள்ள சாஸனங்கள் பலவற்றால் அறியப்படுகின்றது[2]. சங்ககாலத்தே, சிறுபாணாற்றுப்படை கொண்ட ஓய்மானாட்டு நல்லியக்கோடன் என்ற தலைவன் ஆட்சி புரிந்த கிடங்கில் என்ற நகரின் பகுதியே இத்திண்டீச்சரமாகும். "ஓய்மானாட்டு...கிடங்கில் திருத்திண்டீசுவரம்" என்பது சாஸனம்.[3] இதன் 'ஸ்தலவிருக்ஷம்' புளியமரமாதலின் திந்திருணீவனம் என்பது திண்டிவனம் எனத் திரிந்துவழங்கியதென்பர்; (திந்திருணீ—புளி). இத்தலத்துச் சிவாலயத்துள்ள சாஸனமொன்றிற் கண்ட வெண்பா வருமாறு:—

"சீராருந் தென்கிடங்கிற் றிண்டீச் சுரத்தானுக்
கேராருங் கன்மண் டபமெடுத்தான்—பாராரும்

1 சேரன் செங்குட்டுவன், பக். 102, கீழ்க்குறிப்புக் காண்க.

2 I. M. P. Cg. 448

3 S. I. I. vii, 420.

பொன்னுன பூமகள்கோன் புத்த ஸிராசசிங்கன்
என்னுனே யாரையா ரேறு"[1]

இவற்ருல், திண்டீச்சுரம் என்பது, அறிஞர்சிலர் கருதுமாறு, திண்டுக்கல் போன்ற தலமன்று என்பது சாஸனவழக்கால் தெரியவருகின்றன.

## (15) மயிண்டீச்சுரம்

சம்பந்த மூர்த்திகளது க்ஷேத்திரக்கோவை 7-ம் பாட்டில்—'மயிண்டீச்சுரம் வாதலூர் வாரணசி' எனவருதல் காணலாம். இதனுள் மயிண்டீச்சுரம் என்பது, சேலம்ஜில்லா, தர்மபுரித் தாலூகா அதமன் கோட்டையில் உள்ள சிவாலயத்தின் பழம் பெயராகும். இதன்கணுள்ள சோமேசுவரர் சந்நிதித் திருமதிலிற் கண்ட சாஸனங்கள் இக்கோயின் மூர்த்தியை, மயிந்தீசுவரமுடையார் என வழங்கியிருத்தல்[2] அறியத்தரும். மேலே கூறிய திக்திரிணீச்வரம் என்பது திண்டீச்சுரம் எனத் திரிந்தவாறு, மயிந்தீச்வரம் என்பது மயிண்டீச்சுரம் என மாறியதாம். இவ்வாலயமுடைய அதமன் கோட்டை என்பது அதியமான் கோட்டை என்பதன் மரூஉவாகும். இதனுல் இவ்வூரின் பழைமை பெறப்படும்.

இவ்வாறே, சாஸனங்களை நீள ஆராய்ந்து செல்லுமிடத்து, தென்னுட்டிற் பழைமைவாய்ந்த மூர்த்தி தலம் தீர்த்த முதலியவற்றின் விசேடங்களைப்பற்றி எண்ணிறந்தவை அறியலாகும். 'அதியரையமங்கை யமர்ந்தான் றன்னே' என அப்பர்சுவாமிகள் பாடிய தலம், திருவதிகையே என்பது கல்லெழுத்துப் பலவற்ருல் அறியப்படும்.[3] வைப்புத்தலமான திருவிடைவாய்க்குச் சம்பந்த மூர்த்திகளது திருப்பதிகம் புதியதாகக் கிடைத்திருப்பது[4] இச்சாஸனவாயிலாகவே யன்ருே? யான் மேலே எழுதியவை, தென்னுட்டுச் சிவாலயங்களைப்பற்றிச் சாஸனமூலம் அறியக்கிடப்பனவற்றுள் ஒரு பகுதியே என்க.

---

1 S. I. I. Vii, P. 423, M. E. R. No. 210 of 1902.
2 I. M. P. Sm. Nos. 68.73
3 Ibid. Pd. 76; S. I. I. iii, P. 234; M. E. R. 359-60 of 1921
4 M. E. R. 8 of 1918 செந்தமிழ், தொகுதி-17, பக். 161-172.

# 22. விலங்குப் போர்விளையாட்டு*

—: 0 :—

தொழில்மிகுதி மனக்கவலைமுதலியவற்றால் சோர்வுற்ற மக்கள் உள்ளங்களைத் தூண்டி உற்சாகப்படுத்துவதற்கு விளையாட்டுக்கள் என்பவை பெருந்துணை புரிவன என்பது யாவரும் அறிவர். விளையாட்டு என்பது, மனத்துக்கு இன்பம் விளைக்கும் ஆட்டம் என்று பொருள்படும். விளையாட்டின் பரியாயப் பெயர்களாகக் கெடவரல், பண்ணை என்ற சொற்களைத் தொல்காப்பியனார் கூறுகின்றார். **கெடவரல்** என்பது மனத்துன்பங்கெட நிகழ்வது என்றும், **பண்ணை** என்பது பண்ணப்படுவது அல்லது பண்ணுடன் அமைவது என்றும் பொருள் கொள்ளற்கு உரியன. இவ்வகை விளையாட்டுக்களாகத் தமிழ்நாட்டார் பண்டைக்காலமுதலே கையாண்டுவந்தவை பலவாகும். குரவை துணங்கை முதலிய கூத்து விகற்பங்களும், பொழில்விளையாட்டு நீர்விளையாட்டு முதலிய இன்பச் செய்கைகளும், மற்போர் விற்போர் முதலிய போலிப்போர்களும், 'பதினைந்தாம்புலி' போன்ற வல்லாட்டமும், ஏறுதழுவுதல், குதிரையேற்றம் முதலியனவும் ஆண்பாலரும் பெண்பாலாரும் தம் பொழுதுபோக்காக விரும்பி நடத்திவந்த பழைய செயல்கள் என்பது முன்னூல்களால் அறியப்படும். முத்தமிழினுள் ஒன்றான நாடகமும் அதனுறுப்பான மெய்ப்பாடுகளும் இத்தகைய விளையாட்டின் அடியாகவே தோன்றியன என்று தொல்காப்பியனார் கூறுவர். இதனை, "பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்" என்ற சூத்திரத்தாலும் அதன் உரையாலும் நன்கறியலாம். இவ்வாறு மனத்தளர்வுற்ற காலங்களிலெல்லாம் அது நீங்கப் பண்டைத் தமிழ் மக்கள் கொண்டொழுகிய விளையாடல்களிலே, இன்ப நுகர்ச்சிக்குரிய கூத்துமுதலியவற்றை அடுத்து, அவர்கட்கு அதிக மனக்களிப்பு அளித்துவந்தவை போர்விளையாட்டுக்களேயாகும். ஆடவர், தம்முள் மல்முதலிய போலிப்போர்களை நடத்தி மகிழ்ந்து வந்ததேயன்றி, ஒருசார் விலங்குகளுக்குள் உண்மைப் போரையே மூட்டி மகிழ்ச்சியுறுவதும் தொன்றுதொட்டு வந்த வழக்கம். விலங்கு என்றது, **திர்யக்** என்ற வடசொற்போல மிருகங்களையும் பறவைகளையும் பொதுவாக உணர்த்துஞ் சொல்லாதலால் அவ்விருசாதிகளின் போர்களுமே இங்குக் கொள்ளற்குரியன.

---

***கலைமகள், தொகுதி. vi. பக். 417-423.**

மிருகங்களிலே, யானை, தகர் (ஆட்டுக்கிடாய்) என்பனவும், பறவைகளிலே கோழி, குறும்பூழ் சிவல் என்பனவும் இப்போர் வினையாட்டுக்குச் சிறப்புடையவை. புறப்பொருள் வெண்பாமாலை என்ற பழையநூலின் ஆசிரியர், 'யானைவென்றி தகர்வென்றி முதலியவற்றைப்பற்றி முன்னோர் பாடிவந்த புறத்துறைகளை உதாரணச் செய்யுட்களுடன் கூறுகின்றார். அதனால், அவர் காலத்தும் அவர்க்கு முதனூலாசிரியர்காலத்தும் இப்போர்முறைகள் பெருவழக்கில் இருந்தன என்பது தெரியலாம். இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை"

"ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து"

என்னுங் குறள்களால், யானைதகர்களின் போர்ச்செய்தியை உவமை மூலங் குறிப்பிடலாயினர். இதனால் யானைப்போர் மூட்டுவோர் குன்றுபோலும் மேட்டிடங்களில் நின்று அப்போர் காண்பர்[1] என்பது தெரியலாம். போர் மூட்டப்பெற்ற காலத்தே, உயிர் போகும்வரை தம் இணையற்ற வீரத்திறமை காட்டி எதிர்த்துப் பொருபவை இவ்விருசாதி விலங்குகளுமேயாகும். இவற்றின் அதிசயவீரச்செயல்கள் தமிழ்மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து அவரது வீரச்சிறப்பை மேம்படுத்துவதற்குத் தூண்டுகோல்போல உதவி வந்தன. இதுபற்றியே இப்போர்மூட்டுவோரை வீரர்களாகவே முன்னூல்கள் பெரும்பாலும் கூறுவனவாயின. தொல்காப்பியனார், 'பாலறிமரபிற் பொருநர்கண்ணும்' என்ற பகுதியுள் வீரர் செயலாகவே இவற்றை அடக்குவதுங் காண்க.

"மறப்போர்க் கோழி மரபிற் பொருத்தும்
விறற்போ ராடவர்" (3, 4, 19-20)

என்றார் பெருங்கதையினும். இராமபிரான் அசுவமேதந் தொடங்கியதைக் கேள்வியுற்றதும் அந் நகரமாந்தர் நடத்திய கொண்டாட்டங்களைக் கூறுமிடத்தில், உத்தரராமாயணம் பாடிய பெரும்புலவர்

[1] மதுரையில் வையையாற்றின் வடபால் உள்ளதும், ஜில்லா கலெக்டரின் வாசஸ்தலமாகிய தமக்கம் என்ற உந்நமான வசந்த மாளிகை, யானைப்போர் முதலியன காண்பதற்கென்று நாயக்கவரசரால் கட்டப்பட்டது என்பர்.

"கோழிப் போருங் கொண்ட சினப்போர்த் தகர்மூட்டும்
பூழிப் போரு மஞ்சுத லின்றிப் பொருவோரும்
பாழித் திண்டோள் வீரர் பகற்கண் டிரவெல்லாம்
வீழிச் செவ்வா யார்கல விப்போர் மிகுவாரும்"

என்றும், அதிவீரராமபாண்டியர் தம் நைடதத்தில்,

"கறுவொடு மொன்றோ டொன்று காரண மின்றிச் சீறிப்
பொறியுடைக் குறும்பூழ் தம்மிற் போர்செயப் பொருத்து
[மோதை
செறிமயிர்த் தகர்கள் தம்மிற் றீயெழத் தாக்க நோக்கி
அறைகழல் வீர ரார்க்கு மமலையை யளிக்கு மாதோ"

என்றும் வீரர்செயல்களாகவே இவற்றைக் கூறுதல் காண்க. வீரர் மகிழ்ந்த இவ்விளையாட்டுக்கள், தமிழரசர்க்குந் தலைவர்க்கும் உவப்பூட்டும் பொழுதுபோக்காகவே இருந்தன. சேரமான் பெருமாள் நாயனர், திருவாரூர் சென்று சுந்தரமூர்த்திநாயனருடன் அளவளாவி மகிழ்ந்திருந்தபோது தெய்வதரிசன மொழிந்த காலங்களில்,

"நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளி னமர்விரும்பி யமர்கின்றார்" (126)

என்றும், சுந்தரமூர்த்திகள் கொடுங்கோளூர்சென்று சேரமானருடன் தங்கி மகிழ்ந்திருந்தபோது,

"செண்டாடுந் தொழின்மகிழ்வுஞ்சிறுசோற்றுப்பெருஞ்சிறப்பும்
வண்டாடு மலர்வாவி மருவியநீர் விளையாட்டும்
தண்டாமும் மதகும்பத் தடமலைப்போர் சலமற்போர்
கண்டாரா விருப்பெய்தக் காவலனர் காதல்செய்நாள்" (155)

என்றும் சேக்கிழார் தம் நூலுட் பாடுதலால், அரசரான அடியார்க்குமட்டுமன்றிப் பார்ப்பனரான அடியார்க்கும் இப்போர் விளையாட்டுக்கள் பெருமகிழ்ச்சி விளைப்பனவாய் இருந்தன என்பது தெரியலாம். இவற்றை, 'நங்கள்பிரா னருள்மறவா நல்விளையாட் டினை நயந்தார்' என்று அச்சேக்கிழார் நயம்படக் கூறுவர். அவ்வடியார்களது பத்தித்திறம் இத்தகைய காட்சிகளாற் சிறிதும் மாறவில்லை என்பதை, 'நங்கள்பிரா னருள்மறவா' என்பதனுலும், இவை அக்காலத்து யாவர்க்கும் உவப்பூட்டும் பொழுதுபோக்கா யிருந்தன என்பதை '**நல்விளையாட்டினை நயந்தார்**' என்பதனுலும் அப்புலவர் பெருந்தகை குறிப்பித்தல் காண்க. இங்

னனம் வீரரும் அரசரும் கைக்கொண்ட இவ்விளையாட்டுக்களைச் செல்வச்செருக்குள்ள மாக்தர்களும் இளையரும் தமக்கேற்பனவாக வுங்கொண்டு நடத்திப் பெரிதும் மகிழ்ந்தனர்.

"கோட்டிளந் தகர்களுங் கொய்ம்மலர தோன்றிபோற்
சூட்டுடைய சேவலுந் தோணிக்கோழி யாதியா
வேட்டவற்றி னூறுளார் வெருளிமாந்தர் போர்க்கொளீஇக்
காட்டியார்க்குங் கௌவையுங் கடியுங்கௌவை கௌவை
யே" (சீவக. 73)

"பூத்தலை வாரணப் போர்த்தொழி லிளையவர்
நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயிறர" (சீவக. 120)

"கலையின் வென்றியுங் கரிபரி யிரதமே காலாள்
மலையும் வென்றியுஞ் சூட்டுடை வாரணங் குறும்பூழ்
உலைய மோதுவன் கடாப்பிற போரிடை யுறுத்திக்
குலவும் வென்றியுங் கொண்டன வாடவர் குழுஉக்கள்"

என்பவற்றாலும், இத்தகைய போர்விளையாடல்களாற் பொலிவு பெறுவனவாக நகரங்களை வருணித்துக் கூறும் பிறபுலவர்கள் பாடல்களாலும் அக்காலத்தே இவ்விளையாட்டில் மக்கள் மனம் பெரிதும் பற்றியிருந்த செய்தி வெளியாகும். தமிழரசரும் வீரர் களும் போர்த்தொழிலின்றி அமைதிபெற்றிருந்த காலத்திலே, இவ்வகைப் பொழுதுபோக்குக்களை அதிகமாக விரும்பிவந்தனர் என்று தெரிகின்றது. முதற்குலோத்துங்க சோழன் என்ற **அபயன்** பட்டத்துக்கு வந்தபின் நாடு அமைதிபெற்றிருந்த தென்றும், அதனால் இத்தகைய விளையாட்டுக்களில் அவன் மனம் ஈடுபட் டிருந்த தென்றும்,

"வருசெருவொன் றின்மையினுன் மற்போருஞ்
சொற்புலவர் வாதப் போரும்
இருசிறைவா ரணப்போரும் இகன்மதவா
ரணப்போரும் இளைய கண்டே"

எனச் செயங்கொண்டார் தம் பரணியிற்பாடுதல் காண்க. இவ் அபயனது கொட்பாட்டனும் பெருவீரனுக விளங்கியவனுமாகிய முதல் இராஜராஜசோழனும் இவ்விளையாட்டுக்களில் மனம்பற்றி யிருந்தவனே. தஞ்சை இராஜராஜேசுவரத்திற் பொறிக்கப்பட்ட இவன் சாஸனங்களிலே,

"கேரள விநிவிடங்கனை வில்லவ மூவேந்த வேளான்"* தன்னை உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில்" (S. I. I. ii. p. 151).

என்று இவ்வாறுவருந் தொடர்களை நெடுகக் காணலாம் (Ibid. ii, pp. 461—63). இவற்றினின்று, மன்னரைச் சார்ந்தொழுகிய மக்கள், தங்கள் ஸ்வாமியான அரசன் நடத்திய சேவற்போரிலே அவன் கட்சி 'ஊத்தையட்டாமல்' (தோல்வி அடையாமல்) இருத்தலைவிரும்பித் தெய்வத்தை வேண்டித் திருவிளக்கு முதலிய தானங்கள் அளித்து வந்த செய்தி விளங்கும். இச் சாஸனத்துக்கண்ட 'கோழிப்போர்' என்பதற்கு 'உறையூரில் நடந்த போர்' என்று பொருள் கூறுவர், சிலாசாஸன அறிஞர். சேவற்சண்டையை ஒரு பொருளாக மதித்து இராஜராஜன் போலும் பேரரசன் அதனை நடத்தினன் என்றும், அதனில் அவன் தோல்வியடையாதிருத்தல் வேண்டி அவனைச் சார்ந்தோர் பிரார்த்தனை செலுத்தினர் என்றும் கொள்வதில் அன்னோர் விருப்பமற்றவராய் இப்பொருள் கூறினராதல் வேண்டும். ஆனல், யான் மேலே காட்டி வந்த இலக்கியப் பிரமாணங்களை நோக்குவார்க்கு அவ்வாறு கொள்ளவேண்டிய அவசியமில்லை என்பது எளிதில் விளங்கும். அன்றியும், இராஜராஜசோழன், தன் பழைய தலைநகரான உறையூரிலே கவலைக்கிடமான பெரும் போரொன்றை நடத்தியவன் என்பதற்கு, தஞ்சையிலும் பிறவிடங்களிலும் அகப்படும் அவனது அளவற்ற சாஸனங்களிலேனும் மெய்க்கீர்த்தியிலேனும் ஒரு குறிப்பும் காணப்படவில்லை. அதனல் கோழிப்போர்க்கு அவர் கொண்ட பொருள் பொருந்துவதென்று என்பது திண்ணம். எனவே, தம் முன்னோர் கையாண்டு வந்த பொழுதுபோக்குக்களுள் ஒன்ருன சேவற்போரிலே இராஜராஜசோழனும் ஈடுபட்டிருந்தவன் என்பதும், அதனில் அச்சோழனது சேவல் வெற்றி பெறுவதில் அவனுக்கும் அவனைச் சார்ந்தோர்க்கும் பெரு நோக்கம் இருந்தது என்பதும் சாஸனவாயிலாகவும் தெளிவாக அறியப்படுதல் காணலாம். போர்க்குணமுள்ள பறவைகளிலே கோழி மிகச் சிறந்ததொன்ரும்.

---

* 'தன்னை உடையார்' என்பதற்கு, 'தன் ஸ்வாமியான' என்று பொருள் கொள்ளுதலே பொருந்தும். இவ்வாறன்றி, மூவேந்த வேளான் போன்றவர் நடத்திய கோழிப்போரில் அவர்க்கு ஊத்தையட்டாமல் இருக்க வேண்டி, உடையார் ராஜராஜதேவர் ஏற்படுத்திய திருவிளக்கு—என்று பொருள் கொள்வதாயின் அது சிறவாமை காண்க.

"கறுப்புறு மனமுங் கண்ணிச் சிவப்புறு சூட்டுங் காட்டி
உறுப்புறு படையிற் றாக்கி யுறுபகை யின்றிச் சீறி
வெறுப்பில களிப்பின் வெம்போர் மதுகைய வீரவாழ்க்கை
மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும்"

என்று கம்பநாடரும் அதன் இணையற்ற வீரத்திறத்தை அழகாகப் புகழ்தல் காண்க. 'வீர வாழ்க்கை மாறுபட்ட ஆவிபேணு வாரணம்' என்று அவர் கூறிய உண்மையை அப்போர்க் காட்சியை நேரிற்கண்ட யாவரும் நன்கறிவர். "ஒரு தொடையான் வெல்வது கோழி" என்றார் நான்மணிக்கடிகையினும் வாகைத்திணைத் துறைகளுள் ஒன்றான கோழிவென்றிக்குப் புறப்பொருள் வெண்பாமாலையுடையார் காட்டிய,

"பாய்ந்து மெறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும்வாய்க் கொண்டுங் கடுஞ்சொல்லார்—ஆய்ந்து
நிறங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டுந் தான்வருமே போர்க்கு"

என்ற செய்யுளும், அதற்கு—

"எழப்பாய்ந்தும் காலின் முன்னையிட்டு அடித்தும் தாழ்ந்தும்பல காலும் கோவித்தும் கூடியும் கடிய சொற்கோழி...கோழிநூல் வல்லவர் சொல்லுக்குச் சொல் ஒப்பாகவிட்ட கோழியைப் புறங்கண்டும் தான் பின்பும் போர்க்கு வாரா நின்றது...சொல்லுக்குச் சொல் வெல்லும், ஆமைக்கு ஆமைவெல்லும், தெங்குக்குத் தெங்குவெல்லும்—எனக் கோழிகளின் நிறமறிந்து விடுதல். வித்தகர்-கோழி நூல் வல்லவர்"

என்று எழுதப்பட்ட பழைய உரையும் இங்கே அறியத் தக்கவை. இவற்றினின்று, கோழிகளின் வகைகளும் கோழிப் போர் பற்றி வழங்கிய பரிபாஷைகளும், கோழி நூலொன்று வழக்கிலிருந்தமையும் விளங்கும்.

"சிறகுக்குக் கைகொடுத்தது கோழிப் போரில் 'ஒரு கை பறந்தபடி' என்னும் வழக்குண்மையின்" (540, உரை)

என்று தக்கயாகப்பரணி உரைகாரர் எழுதிய குறிப்பும் அதன் வழக்குமிகுதியைக் காட்டுவதாம். இக்கோழிகளில் சொற்கோழி என்று வெண்பாமாலையுரைகாரர் கூறுவது போர்க்கோழியுள் சிறந்ததொரு சாதியென்று தெரிகின்றது. இத்தகைய சாதியுள் தோணிக்கோழி என்றுவேறொருவகையும் சிந்தாமணியில்(73) கூறப்பட்டுளது. இஃது அந்நியநாடுகளின்று கடல் வழியாக வந்த சாதி

போலும். இச் சேவல்களையடுத்துப் போர்க்குணம் வாய்ந்த பறவைகள் குறும்பூழ், சிவல் (செவ்வல்) என்பனவாம். இவை காடையினங்களாகும். தமிழ்த்தலைவர்கள் குறும்பூழ்ப்போரைத் தம் விளையாட்டாகக் கண்டு மகிழ்தல் இயல்பென்பது,

"செறிந்தொளிர் வெண்பல்லா யாம்வே றியைந்த
குறும்பூழ்ப்போர் கண்டே மனைத்தல்ல தியாதும்
அறிந்ததோ வில்லை" (கலித். 95)

என்று தலைவனொருவன் தன் தலைவியை நோக்கிக்கூறியதாக வரும் மருதக்கலியாலும் அறிக. "பொறிப்புறப் பூழின் போர்வல் சேவல்" என்றார் புறநானூற்றிலும் (321). வெண்பாமாலை நூலார்

"சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்காற்
சொல்லும் பலவுள சொன்னபின்—வெல்லும்
நலம்வர நாடி நடுங்காது நாற்கட்
புலவரா லாய்ந்தமைத்த பூழ்"

என்று காட்டிய உதாரணச்செய்யுளும், "நாற்பழக்கமின்றியே சொல்லுங் குறும்பூழாடிகள் வேண்டிற்றுச் சொல்லுக...சொல்லக் கடவ மந்திரமுள; அவற்றைச்சொன்னபின் வென்றிபெறும்... மதித்த (குறும்) பூழ்...சொல்லக்கடவ மந்திரமாவன :—தீற்றும் அரிசியோதுமந்திரமும் பச்சிலைபிசைந்து தடவும்போது சொல்லும் மந்திரமும் செவியுள்ளூறுத்தும் மந்திரமும்" எனவரும் அதன் உரைத்தொடரும் ஈண்டு அறியத்தக்கன. இதனால், இப்புட்களின் போரைப்பற்றிய நூலும், அப்போரில் உபயோகிக்கும் மந்திரங்களும் அக்காலத்து வழக்கிலிருந்தன என்பது பெறப்படும். இவ்வாறே, தகர்வென்றி, யானைவென்றி, சிவல் வென்றி முதலியவைபற்றிய புறத்துறைப்பகுதிகளை வெண்பாமாலையில் உதாரணப்பாடல்களுடன் காணலாம். இத்தகைய விளையாட்டுப் போர்கள், வேட்டைமுதலியவற்றிற்போல, சோர்ந்த காலங்களில் வீரர்மனங்கட்குப் பெருக்கம் அளித்து அவரது மறப்பெருமையைச் சிறப்பித்தற்குப் பெருந்துணையாயிருந்தன என்பது சொல்லவும் வேண்டுமோ? இக்கோழிப்போர் முதலியன, வேற்று நாட்டாராலும் விரும்பி நடத்தப்பட்டுவருஞ்செய்தி அவர் வரலாறுகளாலும் அறியப்படுகின்றது. இக்காலத்தும் நம் நாட்டுத்தலைவர் சிலர்க்கு இத்தகைய விளையாட்டுக்களே பெரிதும் பொழுது போக்காயிருத்தலைப் பலரும் அறிவர்.

# 23. அருகி வழங்கிய சில வினைவிகற்பங்கள்[1]

ஆசிரியர் தொல்காப்பியனார் "மரபேதானும், நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன" (செய். 80) என்பதனால், நால்வகை இயற்சொற்களும் மரபுபிறழாது யாப்பினிடம் பயில்வன என்று கூறினார். இதற்குப் பேராசிரியர்—

"எனவே, சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார் வழங்குமாற்றானே செய்யுள்செய்க என்பதாயிற்று. இதனது பயன் ஒருகாலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்து இலவாகலும் பொருள்வேறுபடுதலும் உடைய. அவை, அதோளி இதோளி உதோளி எனவும், குயின் எனவும் ஒருகாலத்து உளவாகி இக்காலத்து இலவாயின. அவை, முற்காலத்து உளவென்பதே கொண்டு வீழ்ந்தகாலத்துஞ் செய்யுள் செய்யப் படா. அவை ஆசிரியர் நூல்செய்த காலத்து உளவாயினும் கடைச்சங்கத்தார்காலத்து வீழ்ந்தமையின் பாட்டினுந்[2] தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்: அவற்றுக்கு இது மரபிலக்கணமாகலின் என்பது. இனிப் பாட்டினுந் தொகையினும் பயின்ற சொல்லே மீட்டொருகாலத்துக்கு உரித்தன்றிப் போயினவும் உள. அவை முற்காலத்து உளவென்பதேகொண்டு பிற்காலத்தும் நாட்டிச் செய்யுள்செய்யப் பெறா."

என்று விசேடவுரை எழுதிச் செல்வர். இவ்வுரையாளர் கூறியவாறே, கடைச்சங்கத்துக்குப் பிற்பட்ட சொல்வழக்குக்களும், அங்ஙனமே மரபுபிறழாது வழங்கற்குரியன என்பது சொல்லவேண்டா. இவற்றால், அவ்வக்காலத்துச் சொற்பொருண் மரபுகள் இன்னவின்ன என்பது தெரியவைத்தற்கண், முன்னோர்க்கிருந்த பெருநோக்கம் புலனாகின்றது. காலந்தோறும் வேறுபட வழங்கிய அம்மரபுகளை அறிய விரும்பும் பாஷாதத்துவவறிஞர் மேற்கூறிய சீரிய கருத்தைப் பெரிதும் போற்றிக்கொள்வர் என்பதில் ஐயமில்லை. "நாற்சொல் லியலான் யாப்புவழிப்பட்ட" அவ்வழக்குக்களுள், பெயர்ச்சொல் உரிச்சொற்களாக நம் முன்னோர்காலத்து வழங்கிப் பிற்காலத்து வீழ்ந்தவை எண்ணிறந்தன.

---

1 இக்கட்டுரை, 1937-ம் ௵ வெளியிடப்பட்ட ஸ்ரீமாந். ச. த. சற்குணர் B. A. அவர்களது அறுபதாம் ஆண்டு நினைவு மலரில் வெளிவந்ததாகும்.

2 பாட்டு-பத்துப்பாட்டு. தொகை-எட்டுத்தொகை.

அவற்றை விடுத்து, சங்கத்துக்குப் பிற்பட்ட சான்றோர்காலத்து வழங்கிய வினைவிகற்பங்களுள் அரியன சிலவற்றைமட்டும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேன்.

## (1) கின்றீற்று வினையெச்சம்.

'கின்று' என்னும் இடைச்சொல், சங்கத்துக்குப் பிற்காலத்தே நிகழ்காலவிடைநிலைகளுள் ஒன்றாக வழங்கலாயிற்றென்பதை நாம் அறிவோம். ஆனால் அவ்விடைச்சொல்லே அக்காலத்து வினையெச்ச விகுதியாகவும் பயின்றுவந்ததென்பது இதுகாறும் அறியப் படாததொன்றாகும். நக்கீரனார் இயற்றியதாகக் கூறப்படும் இறையனார் களவியலுரையுள்[1]—

"தலைப்பாய்த்து என்பது தலை பாய்கின்று, இடைநிலங் கிடப்பப் பாய்வதுபோல" (பக்கம், 57)

"பருந்தின் வீழ்க்காடு என்பது பருந்துவீழ்கின்று, நடுவேவீழ்ந்து தான் கருதினபொருள் கொண்டுபோம்' (ஷை)

"குழவி அழுகின்று, எனக்குப் பால்தம்மின் நீராட்டுமின் என்றழாது துக்கம்வந்ததாக அழும்" (140)

"(தலைமகன்) இவளுழைச் செல்கின்று, ஆயங்கள் ஐயுறுவோ எனின் (61)

"ஓதல் காவல்...முதலியவற்றுக்குப் பிரிகின்று, தலைமகளுந் தோழியும் அறியச்சொல்லிப் பிரியவும் உரியன்" (185)

என்றிவ்வாறு வருந்தொடர்களிலே, பாய் வீழ் முதலிய வினை முதல்களுடன் கின்று என்ற விகுதிகூடி வழங்குதலையும், அவை பாயின், பாய; வீழின், வீழ எனச் செயின் செய என்றவாய்பாட்டு வினையெச்சப்பொருள்கள் கொண்டுநிற்றலையும் காணலாம். இங்ஙனம் வழங்கும் வினையெச்ச விகற்பத்தைச் சங்கச்செய்யுட்களிலேனும் பிற்காலநூல்களிலேனும் காண்டல் அரிது. எனவே, அவ்விருவகைநூல்கள் எழுந்த காலங்கட்கும் இடைப்பட்டதோர் காலத்தே இத்தகைய வழக்குப் பெரிதும் பயின்றதென்பதும், உரைநடையிற் பெரிதும் ஆளப்படுதலின், உலகவழக்கினும் அது நடைபெற்றுவந்த தென்பதும் உணரப்படும். செய்யுள்வழக்கினும் இக்கின்றீற்று வினையெச்சம் பயின்றதுண்டோ எனின், ஒன்றல்ல

1 இவ்வுரை, நக்கீரனுரை ஆசிரியத்தலைவராகக் கொண்ட மரபில், பத்தாந்தலைமுறையினர் ஒருவரால் இயற்றப்பட்டதாகும். 'இளம்பூரணவடிகள்' எனப் பின்வருங் கட்டுரையுள் இதன் விவரங் காண்க.

பல என்க. நம்மாழ்வார் எனப்பெயரிய ஸ்ரீசடகோபர் தம் திருவாய்மொழி திருவிருத்தங்களில்—

"நாரணன்றன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று
...உரைத்தீரா யெனதுடலே" (1-4-9)

"கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று
எண்டாலுமின்றியே வந்தியலுமாறு" (2-10-5)

"எம்மாபாவியர்க்கும் விதி வாய்க்கின்று வாய்க்குங் கண்டீர்"
(5-2-7)

"அமரர்கோ னர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர்"
(10-2-6)

"ஆமகிழ்ந் துகந்தவை மேய்க்கின் றுன்னோ டசுரர்கள்
தலைப்பெயி லெவன்கொல்" (10-3-7)

"விதி வாய்க்கின்று காப்பாரார்" (5-1-1)

"கண் ணுலாகின்று வேல்விழிக்கின்றன" (திருவிருத். 57)

"நண் ணுதல் வேண்டும் வலவ கடாகின்று" (ஷை 50)

எனவருந் தொடர்களிலே, வகுக்கின்று வாய்க்கின்று முதலியவற்றை மேற்கூறிய எச்சப்பொருளில் வழங்குதலும், திருவாய்மொழியீடு முதலிய பேருரைகளினும், வாய்க்குமிடத்து மேய்க்குமிடத்து என்றிவ்வாறு பொருள்கூறப்பட்டுள்ளமையும் காண்க. நம்மாழ்வார் போலவே, இப்பொருளில்—

"முன்னின்று மூக்கின்று மூவாமைக் காப்பதோர்
மன்னு மருந்தறிவா ரில்லையே" (பெ. மடல், 92)

எனத் திருமங்கையாழ்வாரும்,

"நாளை யாகு நண்ணுகின்று நின்
கேள்வ னன்பு கெடாஅ ஞுகுதல்" (பெருங்கதை)

எனக் கொங்குவேளிரும்,

"மெய்யிற் கையொடு கால்குறைக்கின்று நும்மை
மறக்கினு மென்னைக் குறிக்கொண் மினே" (தேவா. 588-3)

எனச் சுந்தரமூர்த்தி நாயனாரும்,

"போகின்ற மாமுகிலே பொற்கயிலை வெற்பளவும்
ஏகின்று...என்னுள்ளுறுநோய் விண்ணப்பஞ்செய்"
(கைலைபாதி காளத்தி பாதியந்தாதி, 75)

எனப் பின்னவரான நக்கீரதேவரும் இவ்வழக்குச்சொல்லை ஆளு தல் அறியத்தக்கது. எனவே, இக் கின்றீற்று வினையெச்சம் உலக வழக்கேயன்றிச் செய்யுள்வழக்கும் பெரிதுடைய தென்பது வெளியாம். அன்றியும், இவ் வினைவிகற்பத்தை ஆண்ட முன்னோ ரெல்லாம் அவ்வாட்சி பயின்றகாலத்தே வாழ்ந்தவர் என்பதும் அறியப்படும். இத்தகைய வழக்கொன்றைப் பிற்காலத்துச் செய்யுள்களிலேனும் உலகநடையிலேனும் காண்டல் அரிதாயி னும், குடமலை நாட்டில் 11-ம் நூற்றாண்டிலே இது பயின்றுவந்த தென்று தோற்றுகின்றது. அந்நூற்றாண்டிறுதியில் ஆட்சி புரிந்த இராமர் திருவடிகள் குலசேகரசக்கரவர்த்தி என்ற சேர வேந்தர்காலத்திற் கொல்லத்துச் சிவாலயத்து அமைந்த சாஸன மொன்றில்.—

"தொள்ளாயிர நாழி செலவிடுவது... செலவு முட்டுகின்றே
ஐஞ்ஞாழி அரி தண்டப்படுவிது" (T. A. S.)

எனவருந் தொடர் குறிப்பிடற்பாலது. இதனுள் 'முட்டுகின்றே' என்பது 'முட்டுப்படுமிடத்தே' என்னும் பொருளதாதல் காண்க. இங்ஙனம், களவியலுரை திருவாய்மொழி முதலியவற்றிற் கண்ட இவ் விடைச்சொல்வழக்காற்றினை அறியாமையால், பாய்கின்று அழுகின்று முதலியவற்றைப் 'பாய்கின்றுழி' 'அழுகின்றுழி' என் றிவ்வாறே திருத்திக் களவியலுரையைப் பதிப்பித்தாரும் உளர். இதனால், பழைய மரபுநிலைசிதைதல் வருந்தத்தக்கதாயினும், முதன்முதல் அவ்வுரையை வெளியிட்ட ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், உள்ளவாறே அவ்விடங்களை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

## (2) இடைநிலையேற்ற எதிர்மறைவினை.

எதிர்மறைவினை முக்காலமுங்காட்டும் பொதுமை வாய்ந்தது என்பது தெரிந்ததாம். இவ்வினை, காலங்காட்டவேண்டின் செய்யாதிருந்தான், செய்யாதிராநின்றான், செய்யாதிருப்பான் என 'இரு' போன்ற துணைவினை யொன்றைப் பற்றியே வழங்கும். ஆயினும், வினைப்பகுதிகள் இடைநிலை யெழுத்துப்பெற்று மறை வினையில் எதிர்காலங்காட்டும் அரியவழக்குச் சங்கத்துக்குப் பிற் பட்ட சான்றோர்வாக்கினுட் பயின்றுள்ளமை அரியதோர் செய்தி யாகும். சடகோபர் அருளிய பெரியதிருவந்தாதியில்—

"இளைப்பா யிளையாப்பாய் நெஞ்சமே சொன்னேன்
இளைக்க நமன்றமர்கள் பற்றி—இளைப்பெய்த

நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான்
தாய்தந்தை மெவ்வுயிர்க்குந் தான்" (23)

"பேர்ந்தொன்று நோக்காது பின்னிற்பாய் நில்லாப்பாய்" (60)

"அயர்ப்பாய் அயராப்பாய் நெஞ்சமே சொன்னேன்" (83)

என்ற விடங்களில், இளைப்பாய், நல்குவான், நிற்பாய், அயர்ப்பாய் எனப் பகர விடைநிலைபெற்ற எதிர்கால வினைமுற்றின் மறையாக இளையாப்பாய், நல்காப்பான், நில்லாப்பாய், அயராப்பாய் என்பவற்றை ஆழ்வார் வழங்குதல் காண்க. இத்தகைய சொல்வழக்கை இவர்க்கொத்த காலத்துப் பெரியாரொருவர்வாக்கிலன்றி வேறிடத்துக் காண்டல் இல்லை. அவர், காரைக்காற் பேயம்மையாராவர். தம் அற்புத் திருவந்தாதியில், அவ்வம்மையார்—

"அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோ மென்றும்
அவர்க்கேநா மன்பாவ தல்லாற்—பவர்ச்சடைமேல்
பாகாப்போழ் சூடு மவர்க்கல்லான் மற்றொருவர்க்
காகாப்போ மெஞ்ஞான்று மாள்"

என்ற வெண்பாவில், 'ஆகாதிருப்போம், ஆகமாட்டோம்' என்ற பொருட்கண் 'ஆகாப்போம்' என வழங்கல் ஒப்பிடற்பாலது. இதனால், இவ்வழகிய வழக்கை எடுத்தாண்ட அவ்விருவரும் அது நடையாடிய காலத்தே வாழ்ந்தவர் என்பது நன்குபெறலாகும். தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிரவுரையுள், அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் ஒருவர்க்கொருவர் இட்டுக்கொண்ட சாபச்செய்தி கூறுமிடத்து, நச்சினார்க்கினியர்—

"சுவர்க்கப் புகாப்பீர் எனச் சபித்தார்"

என்ற தொடரை இருமுறை எழுதியிருத்தல் கற்றோரறிவர். இவ்வாக்கியம், முன்னோர் கூற்றை நச்சினார்க்கினியர் கொண்டு மொழிந்ததாகலின், பழைய நூலினின்று ஆண்ட தொடரென்பதன்றி, அவரது கூற்றென்று கொள்ளற்குரியதன்று. முன்னர்க் காட்டியவைபோலவே, இதனுள்வரும் 'புகாப்பீர்' என்பது 'புகாதிருப்பீர்' என்னும் பொருளதாதலின், இவ்வழக்கு அவ்வுரையாளர் காலத்துக்கேற்புடையதன்றென்பது திண்ணம். இவற்றால், இடைநிலையேற்ற எதிர்மறைவினையொன்றைப் பிறசான்றோர் பலரும் ஆண்டுள்ள செய்தி தெரிதல் காண்க.

## (3) கிடு, கிடாய் என்ற விகுதிகள்.

வியங்கோள் விகுதிகளும், கிடு கிடாய் என்பனவும் மேற்கூறிய பெரியார்கள் காலத்துப் பெரிதும் வழங்கியனவாகும்.

"ஆகிடு காண்" (பெரிய திருவந்தாதி. 9)

"மாதவ மாகிடு" (பொன்வண்ணத்தந்தாதி, 54)

"கழிந்த கழிகிடு" (திருநாவு. தேவா. திருவேகாதச. 3)

"கழிந்த கழிகிடாய் நெஞ்சே" (பதினொ. கைலை பாதி. 21)

"இறையானுங் காண்கிடாய்" (ஷெ. சிவபெ. திருவந். 35.)

"திரிபையிடுகிடாய்" (பெரிய திருமொழி. 2, 3, 9.)

"தணிகிடாய்" (நாய்ச்சியார் திருமொழி, 2, 2.)

எனக் காண்க. ஆகுக, கழிக, காண்க, இடுக, தணிக என்பன இவற்றின் பொருள்களாம். இவ்வரிய வழக்கினைப் பிற்காலத்தாரும் ஆள்வாராயினர்.

"போன படைத்தலை வீரர் தமக்கிறை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர்வரில்...திரள்சாயேனோ"
(கம்பரா. குகப், 20)

என்றார் கம்பநாடரும். இவர் காலத்து இயற்றப்பட்ட திருவாய்மொழி வியாக்கியானங்களில், இக் கிடு விகுதி—

கிடீர்—'கிடக்கிடீர்' (ஈடு. 11-3-8)
கிடும்—'கிடக்கிடும்' (ஷெ. 8-2-1)
கிடிகோள்—(1-2-9)

என வியங்கோளொடு முன்னிலையினும் பிற்காலத்து வழங்கலாயிற்று. 'வாருங்கிடீர்' என்பது போன்றவற்றைக் காலவழக்காய் வருபவற்றுள் ஒன்றாகக் கொண்டு மயிலைநாதர் எழுதியிருத்தலும் காண்க (நன். 256). ஆகிடு, கிடக்கிடு என்ற இவ்வழக்குக்கள் இக்காலத்து 'ஆகட்டும்' 'கிடக்கட்டும்' எனத் திரிந்து வழங்கலாயின.

## (4) ஆயிட்டு என்னுங் காரணக்கிளவி,

சைவசமய சந்தானகுரவருள் தலைவரான மெய்கண்டதேவர் தம் சிவஞானபோத வார்த்திகத்துள்—

"அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை
உணர்த்தும் ஆயிட்டு"

என்புழி, 'ஆயிட்டு' என்ற வழக்காறொன்றை ஆளுதல் காணலாம். இத்தொடர்க்கு உரையெழுதியவிடத்துச் சிவஞானமுனிவர்—

"ஆகலான் என்பதற்கு ஆயிட்டு என்பது அக்கால வழக்குப் போலும். அற்றாகலினன்றே 'நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு' (இருபாவிருபது, 4) என்றார் வழி நூலாசிரியரும்" (சிவஞா. சித். 2-ம் சூத். 1-அதிகரணம்).

என்று குறிப்பெழுதிச் செல்வர். இதனால் ஆயிட்டு என்பது காரணக்கிளவியாதல் விளங்கும். இச் சொல்வழக்கு, மெய்கண்டதேவர் காலத்தும், ஈடு எனப் பெயர்பெற்றதுமான திருவாய்மொழிப் பேருரையுள்—

"ஆயிட்டு, இவளை வேண்டா என்றன்றோ கொடுபுக்கது"

என்ற தொடருள், முற்குறித்த பொருளிற் பயிலுதல் அறியத்தகும். இங்ஙனம் 13-ம் நூற்றாண்டதான இவ்வழக்கு 10-ம் நூற்றாண்டிலும் பயின்றதொன்று என்பது சிலாலிகிதத்தால் தெரியவருகின்றது. மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன் (முதற் பராந்தகன்) காலத்தமைந்த உத்தரமேரூர்ச்சாஸன மொன்றில்—

"மஹாஸபையோம் எழுத்து.எம்மூர்த் தெற்கில் பரமேசுவரவதி நீராயிட்டு, காலியுங் களரும் உள்ளிட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட சாதியும் இசங்குவது அரிதாயிட்டு...முக்கோலகலத்தால் வதியட்டிக் கீழ்க்கடை நீர் போவதாகவும்" (S. I. I. Vol. VI. No. 293.)

எனவருந் தொடரைக் காணலாம். 'தெற்கே நீர்பற்றினமையாலும் பிராணிகள் அங்கே இயங்குவது அரிதானமையாலும் கிழக்கே வழிவெட்டி நீர் செல்வதாக' என்பது இதன் பொழிப்பு. இதனுள், ஆயிட்டு என்பது ஏதுப்பொருளில் ஈரிடங்களில் வழங்கல் காண்க. இவற்றால், காரணக்கிளவியொன்றன் பழையவழக்காறு நன்கறியப்படும்.

## (5) துணைவினைகள்.

தலைமைவினையுடன் 'இரு' முதலிய துணைவினை சேர்ந்து 'எழுந்திரு' என்பதுபோலப் பகுதிப்பொருளதாய் வழங்குதல் பலரும் அறிவர். இத்தகைய வினைகளுள் 'தர்' 'செய்து' முதலியனவும் அக்காலத்தே பெரிதும் பயின்றன. இவற்றுள் 'தர்' என்பது—

உழிதர்தல்—'ஊனைக்காவி யுழிதர்வருமரே'
(தேவா. நாவுக். பக். 338-1)

திரிதர்தல்—செற்றமே வேண்டித் திரிதர்வேன்'
(பெரிய திருமொழி, 1, 1, 8)

போதர்தல்—'போதர்கண்டாயிங்கே போதர்கண்டாய்'
(பெரியாழ். திரு. 2, 9, 6)

என்பன முதலிய இடங்களில் வழங்கல் காண்க. இவற்றினின்று, 'தா' என வழங்கும் வினைப்பகுதி 'தர்' என்பதன் திரிபோ என்று கருத இடமுண்டு. இனி, 'செய்து' என்பது 'இருக்கச்செய்தே' (ஈடு. 3, 5, 1) போகச்செய்தே என்றிவ்வாறு வினையெச்சச்சொல்லுடன் துணைவினையாகப் பெரிதும் வழங்குவதாம். இவை, இருக்கச்சே போகச்சே எனத்திரிந்து இக்காலத்துப் பயில்கின்றன.

இவ்வாறே, காலவழக்காய் வழங்கும் மரபியற்சொற்கள் பல. அவற்றின் வழக்காற்றினை அறிதற்கு, நூல்களேயன்றிச் சிலா தாமிர சாஸனங்களுந் தக்க துணைபுரிவனவாம். இவை யாவும் அவ்வக்காலத்தே உலகினும் செய்யுளினும் மரபுநிலைதிரியாமல் முன்னோரால் ஆட்சிபுரியப்பெற்றவை என்பது அறியத்தகும்.

---

# 24. தமிழரும் ஆந்திரரும்*

---

இந்தியாவின் தென்பாகத்தில் உள்ள தேசங்களிலே, தமிழ் தெலுங்கு கன்னடம் என்ற பாஷைகள் வழங்கும் நாடுகள், பழைமையும் பெருமையும் வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்தது. ஒன்றையொன்று மிக அடுத்துள்ள இத்தேசங்கள் அரசியலாலும் பாஷைவகையாலும் பழங்காலமுதலே சம்பந்தம்பெற்றிருக்கக்கூடியவையாதலால், அத்தகைய தொடர்புகள் யாவை என்று அறியமுயல்வதில் நம்மவர்க்கு விருப்பமிருப்பது இயல்பேயாகும். இவ் விருப்பமிகுதியே 'தமிழரும் ஆந்திரரும்' என்றவிஷயத்தை இம்மகாசபையில் வெளியிடும்படி என்னைத் தூண்டியது. கன்னடபாஷையானது வளமும் பழமையும் வாய்ந்ததேயாயினும், தமிழ்நாட்டுடன் அதிக சம்பந்தமுடையது ஆந்திரதேசமேயாதலின் அவ் விரண்டுநாட்டுக்கும் அமைந்த தொடர்பினையே இன்று ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளலானேன். நம் சகோதரவகுப்பினராகிய ஆந்திரமக்களால் தமிழ்நாட்டவர் பூர்வத்தில் அடைந்த

* இக்கட்டுரை, மதுரைச் சங்கத்து 23-ம் ஆண்டுத் திருவிழாவில், அக்கிராசனம் வகித்த சென்னை வித்யாவிலாகா மந்திரி: ஸ்ரீமாந். ஸர். பரசுராம பாத்ரோ அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய வித்வத்சபை முன்பு ஆசிரியாற் படிக்கப்பெற்றது (செந்தமிழ், தொ-22. ப. 265.)

நன்மைகளும் உண்டு; ஆதலின் அவற்றை மறவாது எடுத்துரைப்பதற்குத் தமிழின் தலைமைக்களமாகிய இத்தமிழ்ச்சங்கத்தினுஞ் சிறந்த இடம் வேறுண்டோ? இவ்வாறு காரணமுங் களமும் அமைந்திருப்பதுடன், காலமும் பொருந்தியதாயுள்ளது. அஃதாவது, ஆந்திரதேச சம்பந்தமுடையராய் இன்று சங்கக்கூட்டத்தில் தலைமைவகிக்கும் நம் வித்யாவிலாகா மந்திரியாரின் முன்னிலையில் இவ்விஷயத்தைப் பேசும்படி நேர்ந்திருப்பதேயாம். இனி, நான் தொடங்கிய விஷயத்துட் புகுவேன்.

பாஷாதத்துவநூலோர், திராவிடபாஷைகள் என்று பகுத்துள்ள தொகுதியுள், தமிழ் ஆந்திரம் கன்னடம் என்ற மூன்றும் ஓரினத்தைச் சார்ந்தவை என்பது, அறிஞரெல்லாம் ஒத்துக்கொண்ட முடிபாம். இவற்றுள், முதலிரண்டுமொழிகளுமே அதிகப்பழமை பாராட்டுதற்குரியவை. நூற்பெருமையால் கன்னடம் குறைவுடையதன்றேனும், அது, தமிழ் வடுகு என்ற இரண்டன்சேர்க்கையால் ஆனதொருபாஷை என்பதே தமிழ்முன்னோரின் கருத்தாகும். கி. பி. 11-ஆம் நூற்றாண்டினரும் கவிச்சக்கரவர்த்தி என்று மதிக்கப்பட்டவருமாகிய சயங்கொண்டார்—

"'மழலைக்குறு மொழியிற்சில வடுகும்பல தமிழுங்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்"

என்று, சிறுபான்மை வடுகும் பெரும்பான்மை தமிழுங்கலந்த மொழியே கன்னடம் எனக் கூறுவதுகாணலாம். இக்கருத்து, கன்னடத்தின் பழமைபெருமைகளை ஆராய்ந்துள்ள அம்மொழி வல்லாரால் ஆக்ஷேபித்தற்குரியதென்பர். இனி, மலையாள பாஷையைத் தமிழின் குழவிமொழி என்பதே தக்கதாம். மேலைக்கடலையொட்டிய மலைநாடு முழுதும் தமிழகத்தின் பழையபிரிவுகளுட் சேர்ந்ததாகவே இருந்ததென்பது, மலையாளபாஷையிலுள்ள பழையநூல்களாலும், அந்நாட்டுச் சிலாதாமிரசாஸனங்களாலும் தெளியப்பட்டது. இதுபற்றியே, கல்வியிற்பெரிய கம்பநாடரும், "வடகலை தென்கலை வடுகு கன்னடம், இடமுள பாடையா தொன்றி னுயினும்" என்று, தங்காலத்தே மலையாளம் தமிழின்வேறான பெரும்பாஷையாகக் கருதப்படாதலைதக் குறிப்பித்தல் காணலாம்.

இவ்வாறு, தமிழ் வடுகு கன்னடமொழிகள் ஒரு வகுப்பினதாயின் 'இவற்றுக்கு மூலமான தாய்மொழி யாது' என்ற கேள்வி அடுத்து நிகழக்கூடியதே. இதற்கு யாவரும் ஒப்பக்கூடிய விடையை இப்போது பெறுதல் அரிதென்னலாம். 'திராவிடத் தொகுதியுள் தமிழே தாய்மொழியாகத்தக்கது' என்பது நம்

நாட்டறிஞர் சிலர் அபிப்பிராயம். இப்பொழுது வழங்கும் தமிழ் நூல்களுள்ளே தொல்காப்பியமே பழமையும் பெருமையும் உடைய தென்பது யாவரும் அறிவர். அந்நூல், தமிழ்வழங்கும் நிலத்தைப் பன்னிரண்டு பகுதியாக்கி, அப்பன்னிரண்டுக்கும் புறம்பாகிய வடுகு முதலிய நாடுகளிலிருந்து தமிழில் வழங்கும் பதங்களைத் திசைச்சொற்கள் என்று பகுக்கின்றது. தொல்காப்பியர்காலத் தவராகிய பனம்பாரனரும் 'வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' எனத் தமிழ்வழங்கும்நிலத்தை வேங்கட மலைக்கு அப்புறம் நிறுத்தினரில்லை. காக்கைபாடினியார் என்ற பழம்புலவரும் "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக" என்று ஆந்திரபாஷை வழங்குநிலமே தமிழின்வடவெல்லையாகக் கொண்டார். இவற்றால், தொல்காப்பியனார்முதலிய முன்னோர்க்கு நெடுங்காலத்துக்கு முன்பே, தமிழும் வடுகுந் தனியே வேறுபட்டிருந்த பாஷைகள் என்று கருதப்பட்டமை தெளியப்படும். இங்ஙனம் பழைய தமிழ்ப்பிரமாணங்களைக் கொண்டு நோக்குமிடத்து, வடுகுக்கும் தமிழினளவு பழமையுண்டென்பது தெரியலாம்.

சங்ககாலத்துத் தமிழ்மக்கள் ஆந்திரரை **வடுகர்**[1] என்றும் அவர் மொழியை **வடுகு** என்றும் பெரும்பான்மை வழங்கிவந்தனர். அவ்வாறே ஆந்திரர் தமிழரை **அரவர்** என்றும், அவர் மொழியை **அரவம்** என்றும் வழங்கலாயினர். வடகர் என்பதற்கு வடக்கிலுள்ளவர் என்பது பொருளாம். குடக்கிலுள்ளது குடகு என்பது போல, வடக்கிலுள்ளது வடகு என்றாகி, பின் வடுகு எனத் திரிந்தது. "வடதிசை மருங்கின் வடுகு" (காக்கை பாடினியம்) "வடவடுகர் வாளோட்டிய" (புற. 378) என்ற பழந்தொடர்களிலே, வடுகு என்பது வடக்கடியாகப் பிறந்தது எனக் குறிக்கப்படுதல் காண்க. தொல்காப்பியப்பாயிரங் கூறுமாறு, வேங்கடமலைக்கு வடக்கணுள்ள பூமி இவ்வடுகர்தேசமாகவே கடைச்சங்கநாளினுங் கருதப்பட்டது. இதனை,

> "ஒங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்...
> வாணிணைப் புகலின் வடுகர் தேஎத்து" (அகம், 213)

> "புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து[2]
> நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்

---

1 மத்திய காலத்திலே **தெலுங்கர்** என்றும் வழங்கியதுண்டு; "சேனைமடி களங்கண்டு திகைத்து நின்றேந் தெலுங்கரேம்" என்று சயங்கொண்டார் பாடுதல் காண்க (கலிங்கத். 12, 158). பிற்காலத்தில் வடுகர் என்பதை ஆந்திரருட் பலிஜர் முதலிய ஒரு சாரார்க்குத் தமிழர் வழங்கினர்.

2 புல்லி குன்றம்—கள்வர் தலைவனுகிய புல்லிக்குரிய வேங்கடம்.

தொடையமை பகழித் துவன்றுயநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந்தார்க்கும்
மொழிபெயர் தேஎய மிறந்தன ராயினும்" (ஷ. 295)

என்ற தொடர்களால் நன்கறியலாம். இவ்வடுகர் என்ற சொல்லைக் கன்னடரில் ஒருசாரார்க்குச் சிறுபான்மை தமிழ்மக்கள் வழங்கியதுமுண்டு; "வடுகர்பெருமகன் பேரிசையெருமை......குடநாடு" (அகம் 115, 253) எனக் காண்க. இவ்வாறு ஆந்திரருங் கன்னடரும் வடுகர் என்ற பொதுச்சொல்லாற் சங்கநாளிற் கூறப்பட்டதுகொண்டு, அவ்விருவரும் அக்காலத்தே வேறன்றி ஓரினத்தவராயிருந்தவரென்றும், அவ்விருவர் பேசிவந்த பாஷையும் ஒன்ருய் வடுகு என்ற பெயர்பெற்றதாகல்வேண்டுமென்றும், பிற்காலத்தேதான் கன்னடபாஷை பிரிந்து தனிமொழியாயிற்றென்றும் அறிஞர் சிலரால்[1] கருதப்பட்டுள்ளது. ஆனல்—

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கருநாடர்" (சிலப். 25,156)

"கொங்கணக் கூத்தருங் கொடுங் கருநாடரும்"(ஷ.26,106)

எனச் சங்ககாலத்தவரான இளங்கோவடிகள், கன்னடமொழி பேசும் மக்களைக் கருநாடர் எனத் தனியே கூறுதலாலும்,

"கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம்" (அகத்தியம்)

"கன்னடம் வடுகு கலிங்கந் தெலுங்கம்" (நன், 272, மயிலை.)

எனத் தமிழ்நாட்டைச்சூழ்ந்த நிலங்களிலே, கன்னடந் தெலுங்குகள் பயிலுநாடுகள் பிரித்தெண்ணப்படுதலாலும் அவ்வறிஞர் கொள்கை முடிவுடையதாகத் துணியக்கூடவில்லை.

இனி, மைசூர்-ராஜ்யத்தின் வடபாகத்துக்கும், பல்லாரி அனந்தபுரஜில்லாக்களின் பகுதிகட்கும் படகநாடு என்ற வழக்குண்டு என்பது, அப்பக்கங்களிலுள்ள கன்னடர்க்குப் படகவாரு, படகநாட்டிவாரு என்ற பெயர்கள் இன்றும் வழங்குவதால் விளங்குகின்றது. படகநாடு என்பது வடுகநாடென்பதன் திரிபேயாம். அகநானூற்றில் நக்கீரனரால்,

"நேரா வன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை யெருமை நன்னுட் டுள்ளதை
அயிரியா றிறந்தன ராயினும்" (253)

1 The Tamils 1800 years ago, p. 29.

என்ற அடிகளிலே, வடுகர்பெருமகனை எருமையென்பானுக்கு உரியதாகவும், **அயிரி** என்ற நதியையுடையதாகவுங் கூறப்பட்ட குடநாடு என்பது இப்படகநாட்டைக் குறிப்பதென்றும், அயிரி யென்பது அந்நாட்டிலோடித் துங்கபத்திரையோடு கலக்கும் **அகிரிநதியே** என்றும், பழைய மௌரிய ஏகாதிபத்தியத்தின் தெற்கெல்லையாயிருந்தது இப்படகநாடே என்பதற்கு அசோக சாஸனம் ஆங்குள்ளதே சான்றுமென்றும் கருதப்படுகின்றன.[1] இங்ஙனமாயின், தமிழ்நாட்டின் வடபாலுள்ள தெலுங்கரும், மேல் பாலுள்ள படகக் கன்னடரும் வடுகரென்று பொதுப்பட வழங்கப் பட்டனர் என்பது பெறப்படும்.

> "குல்லைக் கண்ணி வடுகர் முனையது
> பல்வேற் கட்டி[2] நன்னாட் டும்பர்
> மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந்தொகை, 11.)

என்ற மாமூலனார்வாக்கில், கட்டியென்பவனது நாட்டிற்குமப்பால் வடுகர்முனையையுடைய மொழிபெயர்தேயம் உள்ளதென்று கூறப் படுகின்றது. கட்டியரென்பார் சங்கநாளில் வலிமைபெற்றிருந்த ஒரு சார் சிற்றரசர்; பல்வேற்கட்டியர்' (சிலப். 25: 157; குறுங். 11), 'கங்கன் கட்டி' (அகம். 44), 'போரடுதானைக்கட்டி' (ஷெ. 226) என்ற பழந்தொடர்கள் காண்க. விஜயநகரவரசர்காலத்தும் அதன்பின் பும் **கட்டிமுதலியார்** என்று பிரபலராய் விளங்கிய தலைவர்கள் இக்கட்டிமரபினராகவே தெரிகின்றனர். இன்னோரது ஆட்சிக்குட் பட்ட நாடு தமிழ் கன்னடதேசங்களின் இடைப்பட்ட சேலம் ஜில்லாவிற் பாதிக்குமேற்பட்டிருந்தது. மற்றும் இவர் வரலாறு கள் சரித்திரநூல்களால்[3] அறியத்தக்கன. தமிழ்நாட்டெல்லையில் இக்கட்டிநாடுள்ளதாக மாமூலனார் கூறியவாறே, அவர் மரபின

---

1 வடுகர் விஷயமாக நான் உசாவிவந்தபோது, சாஸன பரிசோத கரும் என் நண்பருமான ஸ்ரீஏ. ரங்கஸ்வாமிஸரஸ்வதியவர்கள் B.A., இவ்வபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

2 'பல்வேற்கட்டி' என்ற பாடத்தை 'வல்வேற்காட்டின்' என்று கொண்டு பழவேற்காட்டைத் தமிழ்நாட்டெல்லையாகச் சரித்திர மெழுதிச் செல்வாரும் உளர். 'பல்வேற்கட்டியர்' (சிலப். 25: 157) என்ற தொடர் முன்னூல்களிற் பயில்வதோடு, கட்டியர் என்றவர் தமிழ்நாட்டினெல்லைப்புறத்து ஆண்டவராக நூல்களிற் காணப் படுவதாலும், யானெழுதிய பாடம் ஏடுகளிற் காணப்படுவதாலும் அதுவே கொள்ளத்தக்கதென்க ("சேரன் — செங்குட்டுவன்", பக். 114-5.)

3 Gazetteer of Salem District' Vol. I, p. 69; Vol. II, p. 262-69.

ரான கட்டிமுதலியார்நாடும் பிற்காலத்தமைந்திருந்தமை அறியத் தக்கது. இக்கட்டிநாட்டுக்கும் அப்பாலுள்ளதாகக் குறுந்தொகை கூறும் வடுகர்முனையென்பது, மேற்கூறிய படகர்நாட்டைக் குறிப்பதாகவே கொள்ளற்பாலது.

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்" (அகம். 107.)

"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" (ஷை)

"சுற்றுரிக் குரம்பைக் கதநாய் வடுகர்" (ஷை)

எனச் சங்கச் செய்யுட்களினும்,

"வடுக வேடுவர் ...ஆறலைக்குமிடம்" (தேவா)

"வடுகர்வாழ் முருகன்பூண்டி" (ஷை)

எனச் சுந்தரமூர்த்திநாயனாரால் கொங்குநாட்டுத் திருமுருகன் பூண்டித் தேவாரத்துங் கூறப்பட்டவர்கள், இப்படகநாட்டவராக வேனும் அங்கிருந்து வந்தேறிய கன்னடவேடராகவேனும் கருதத் தகும். வேம்பத்தூர் திருவிளையாடலில், மூர்த்திநாயனார்காலத்தே மதுரையை வென்று கைப்பற்றிய சமணவரசனை, "கருநாடர் மன்னன்" என்று கூறிய அதனாசிரியர், அவனையே மற்றோரிடத்து "வடுகவேந்தன்" என்று பாடுகின்றார்.[1] இது மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவதாம். இப்போது நீலகிரியில் வாழும் படகர் என்ற கூட்டத்தார் மைசூரின் வடபாலினின்று ஆங்கு வந்தேறியவராகச் சொல்லப்படுதலால்[2] அவரும் இப் படகநாட்டவரேயாதல் வேண்டும்.

தமிழகத்தைச் சூழ்ந்த நிலங்களிலே, கன்னடம் வடுகு தெலுங்கம் என்பவை தனித்தனி நாடுகள் என்று நச்சினார்க்கினியரும் (தொல். சொல். 400—உரை), நன்னூற் பழைய உரைகாரரும் (272 மயிலை. உரை) கூறுகின்றனர். இவ்வாறு தெலுங்குநாட்டின் வேறாக வடுகநாடென ஒன்று எண்ணப்படுவது, மேற்கூறிய படக நாட்டைக் கருதியதாகக் கொள்ளலாம். இன்றேல், ஆந்திர தேசத்தின் வடபாகம் தெலுங்கம் என்றும், அதன் தென்பாகம் வடுகு என்றும்—செந்தமிழ்நாடு கொடுந்தமிழ்நாடு என்ற தமிழகப் பகுப்புப்போல—ஆந்திரமும் இருவேறாகத் தமிழரால் முற் காலத்து வழங்கப்பட்டது என்று கருதல்வேண்டும். எவ்வாறாயி

1 'பஞ்சவற்றுரந்து, மதுரை வவ்விய கருநடவேந்தன்' எனக் கல்லாடத்துக் (57) கருநடவரசனாகவே கூறப்பட்டுள்ளது.

2 Gazetteer of Nilgiri District, p. 128.

னும், பிற்காலத்துத் தமிழ்மக்களெல்லாம் அவ்வேறுபாடு சிறிதுங் கருதாது, ஆந்திரபாஷையையும் அதன் மக்களையுமே வடுகு வடுகர் என்ற சொற்களாற் பெரிதும் வழங்கிவரலாயினர்.

"சிலவடுகும் பலதமிழுங் குழறித் தரு கருநாடியர்" (கலிங். பரணி)

"வடகலை தென்கலை வடுகு கன்னடம்" (கம்ப")

"கருநாடகச் சந்தமும்......வடுகச் சந்தமும்" (யாப். வி)

"வடுக ரருவாளர் வான்கருநாடார்" (நன். மயிலை).

என்ற தொடர்களால், தெலுங்கும் வடுகும் வேறல்ல என்பது தெளிவாதல் காண்க.

இனி, வடுகர் என்ற பெயரை ஆந்திரமக்கள் தங்கட்குள் வழங்கினவர் என்பதற்கு ஆதாரங் கிடைக்கவில்லை. அவ்வாறே, அரவர் என்ற பெயரைப் பழைய தமிழ்மக்கள் தங்கள் பெயராக வழங்கினவரல்லர். ஆனல் 300-ஆண்டுகட்குமுன்னிருந்த அகராதி நிகண்டு நூலார் மட்டும், இச்சொல்லை 'அரவரென்பது தமிழ ராகும்' என்று பிறநாட்டுவழக்கை எடுத்தாண்டனர். ரவ என்ற வடசொற்கு ஒலி என்பது பொருளாயிருத்தல் கொண்டு, ஆந்திரர்க்குத் தமிழ் வெற்றொலியாகவே கேட்கப்பட்டமைபற்றி அதற்கு அரவப்பெயர் வழங்கலாயிற்று என்று தெலுங்கர்சிலர் பொருள் கூறுவதுண்டு. இது விநோதமானதோர் விற்பத்தியேயாகும். பழைய ஆந்திரர், தமிழர்க்கு வழங்கிவந்தபெயர் அருவர் என்பதேயன்றி அரவர் என்பதன்று. கலிங்கத்துப்போரிலே அந்நாட்டுச் சேனைகள் சோழர்படையைக் கண்டு 'தமிழர்! தமிழர்!!' என்று கதறிநடுங்கின என்பதைக் கூற வந்தவிடத்தே செயங்கொண்டார்—

"அருவர்! அருவர்!! எனு விறைஞ்சினர்
அபய மபய மெனு நடுங்கியே"

என்று பாடுகின்றார். இவ்வாறே, சோழர்நடத்திய அப்பெரும் போரைப்பற்றிய பழைய வெண்பாவொன்றும்,

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்துவட நாடர்
அருவ ரருவரென் வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது"

என்று தண்டியலங்காரத்தில் மேற்கோள் காட்டப்பட்டுளது. இப் பிரமாணங்களிலிருந்து, அருவர் என்பதே ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிய பெயரென்பது வெளியாம். தெலுங்குதேசத்தை ஒட்டியுள்ள தமிழகத்தின் பகுதிகள்—அருவா, அருவாவடதலை என்ற நாடுகளாம். இந்நாட்டாரை அருவாளர் என்பது பழைய தமிழ் வழக்கு. தம் பக்கத்து வாழும் தமிழராகிய இவ்வருவாநாட்டாரையே வடுகர் முதலிய அருவர் என வழங்க, அதுவே தமிழர்க் கெல்லாம் உரிய பொதுப்பெயராக அவரால் வழங்கலாயிற்று என்று, அச்சொற்கு உறுப்புப்பொருள் கொள்வதே நேரானதாம்.

இனி, தமிழரும் வடுகரும் முற்காலத்தும் பிற்காலத்தும் எவ்வகைத் தொடர்புகொண்டிருந்தவர் என்பதை நோக்குவோம். இத்தொடர்பை மூன்றுபகுதியாகக்கொண்டு ஆராய்ச்சிசெய்தல் தகும். முதலாவது—தமிழரும் ஆந்திரருந் தம்முட் பெரும்பாலும் நட்பினராய்வாழ்ந்த காலமாகும். இரண்டாவது—தமிழர் ஆந்திரரின்மேம்பட்டு ஆண்ட காலமாம். மூன்றாவது—ஆந்திரர் தமிழரின்மேம்பட்டு ஆண்ட காலமாகும்.

இவற்றுள், முதற்பகுப்புச் சங்ககாலத்துக்கு உரியது. சங்கச் செய்யுட்கள் என்றுவழங்கும் பழைய தமிழ்நூல்களை ஆராய்வோமாயின், தமிழகத்தின் எல்லைப்பக்கங்களிலே சிறுகலகங்கள் நடந்திருக்கக் கூடுமேனும், பெரும்பகைமை அவர்க்குளிருந்த செய்தியேனும், பெரும்போர்கள் விளைந்தன என்பதேனும் வெளியாகவில்லை.

> "முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
> தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு" (அகம். 281)

> "சோழர்பெருமகன் ...இளம்பெருஞ் சென்னி
> செம்புறழ் புரிசைப் பாழி நூறி
> வம்ப வடுகர் பைந்தலை சவட்டி" (ஷை. 375)

என்ற தொடர்களிற் கூறப்பட்ட வடுகர், முறையே மௌரியரும் நன்னனுமாகியவர்க்குத் துணையாகவந்த படைநாட்டுக் கன்னடராகத் தெரிகின்றனரேயன்றி, ஆந்திரநாட்டவராகத் துணியக்கூடவில்லை. இனித் தமிழரசராகிய சேரசோழபாண்டியர் மூவரும், வடவேங்கடந் தென்குமரிக்குட்பட்ட தமிழகத்துக்கும் அப்பால் தம் வீரப்பெருமையை விரித்தவர்களாயினும், தமிழ்கூறு நல்லுலகமே தங்கள் தேசம் என்ற அபிமானம் அவர்க்குள் மிகுந்திருந்தமையால் வேற்றுமொழி வழங்கும் நிலப்பகுதிகளைத் தமிழகத்துடன் கலப்பதில் அவர்கள் விருப்பின்றியிருந்தவர் என்றே சொல்லலாம்.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு" (சிலப்).

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (தொல்)

"தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே" (அகம்)

"பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (அகம்)

"கட்டிநன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந்)

எனவருந் தொடர்கள் இக்கருத்தையே குறிப்பிடக்கூடியன. ஆனால், அந்நியரான வடவேந்தர் தமிழ்நாட்டுட்புக முயன்றகாலங் களிலே தமிழ்மூவேந்தரும் ஒருங்கு திரண்டு, தமிழகத்துள் தலை நீட்டவுமுடியாமல் அவர்களைத் தடுத்துவந்தனர். அதனால், திக்கு விசயஞ்செய்து ஏகசக்கராதிபத்தியம் பூண்ட வடவரசர்க்கும் தமிழ்நாடு என்றால் விலகியேநிற்க வேண்டியதாயிற்று. பரதகண் டம் பெரும்பான்மையும் தன் ஒருகுடைக்கீழ் வைத்தாண்ட அசோகசக்கரவர்த்திகாலத்தும் தமிழராற்றல் ஓங்கியிருந்ததென் பது, அவ்வரசர்பெருமான் தமிழ்மூவேந்தரையும் தன்னோ டொத் தவராகக்கருதி நட்புமுறையில் அவர்களிடந் தூதுவர்களை அனுப் பிப்போந்த செய்தியால் தெரியலாம். மௌரிய ஏகாதிபத்தியம் தமிழகத்தின் எல்லைக்குமப்பால் மைசூர்ப் பிராந்தியத்தை ஒட்டி யிருந்தது என்ற செய்தி அறியத்தக்கது. பிற்காலத்தே பிரபலம் பெற்றெழுந்த குப்த-ஏகாதிபத்தியமும் தமிழ்நாட்டைத் தன்னுட் கொண்டதன்று. ஆகவே, சங்ககாலத்தே தமிழ்வேந்தர் பாஷை நடை முதலியவற்றால் வேறானமக்களை அடக்கியாள முயன்றிலர் என்பதும், தம் நாட்டில் அந்நியர் பிரவேசிக்கவும் இடங்கொடுத் திலர் என்பதுந் தெளிவாயின. அங்ஙனமே, அக்காலத்து வடு கரசரும் தமிழ்நாட்டை ஆளமுயன்ற செய்திக்குச் சங்கநூல்களி லும் ஆந்திரத்திலும் ஆதாரம் காணப்படாமையால், அவர்களும் முற்காலத்தே தமிழருடன் அமைதிபெற்று வாழ்ந்தவரென்றே சொல்லலாம்.

இங்ஙனமிருந்த தமிழர் வடுகர்களின் நிலைமை, சங்ககாலத்துக் குப்பின்புதான் மாறுவதாயிற்று. இம்மாற்றத்திற்குக் காரண மானவர், வடக்கிலிருந்து படையெடுத்துவந்த வேற்றரசரேயாவர். பல்லவர் சளுக்கர் என்ற வடவேந்தர், ஆந்திரங் கன்னட முதலிய தேசங்களை வென்றடிப்படுத்திய காலங்களில் அவர்கள் பேராசை

தமிழ்நாட்டையும் கவர்ந்தது. அதுமுதலே தமிழர்க்கும் வடவர்க்கும் தமிழகத்திலும் பிறவிடங்களிலும் நடந்த போர்ச்செய்திகள் மிகுதியாகக் கேட்கப்படுகின்றன. இறையனார்களவியலுரையிற் கண்ட பாண்டிக்கோவைப்பாடல்களும், ஆழ்வார்முதலியோர் பாசுரங்களும், சிலாதாமிர சாஸனங்களும் பிறவும் இச்செய்திகளைக் குறிக்கக்கூடியன. பல்லவர் தமிழ்நாட்டில் வேரூன்றிய காலத்தில் அவர்க்கும் வடுகர்க்கும் நடந்த போர்களு முண்டு.

"முலைபொழி தீம்பான் மண்சேறு படுப்ப
மலர் தலை யுலக மோம்பு மென்ப
பாசிலைத் தொண்டைப் பல்லவ னுணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுரங்
கடந்துகொண்ட பல்லா னிரையே"

(தொல். பொ. 55, நச். உரை.)

என்ற பழையபாட்டில் 'தொண்டைநாடாண்ட பல்லவனுடைய சேனை, பகைவராகிய வடுகரது போரிலே கவர்ந்துவந்த பசுக்கூட்டங்கள், உலகத்தை ஊட்டிக் காக்கக்கூடியவை' என்ற கருத்துப்படப் பாடப்பட்டிருத்தல், மேற்கூறிய போர்ச்செய்தியைக் காட்டும். இப்பல்லவரைப்போலவே, சளுக்கியவேந்தரும் பின்பு ஆந்திரதேசத்தில் வேங்கிநாட்டில் தம்மதிகாரத்தைத்தாபித்துப் பின் ஆந்திரரென்றே சொல்லும்படி ஆயினர். இவர்களுடன் பெரும்போர்களைச் சோழர்கள் தெலுங்குதேசத்திலே சென்று நடத்தவேண்டிவந்தது முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் முதலிய சோழர்கள் நடத்திய அப்போர்விவரங்கள் சாஸனங்களால் நன்கறியப்பட்டவை. இவ்வாறு நடந்த போர்களொன்றில், வீரராஜேந்திரன் என்ற சோழன் வேங்கிநாட்டை வென்று, விஜயவாடை (Bezwada) என்ற நகரிலிருந்தாண்ட விஜயாதித்தன் என்ற சளுக்கரசனுக்கு அதனை உதவினன் என்பது சரித்திரத்தால் அறியப்படுகின்றது.* வீர சோழியவுரையில்—

"வேங்கைவள நாடன் விசயவா டைக்கதிபன்
ஓங்கு புகழுதயா தித்தனுக்குத்—தாங்குகடல்
நேராமென் றூறு நிறந்தா லவன்செய்யன்
காரார் நிறமக் கடல்"

* சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம், பக். 25.

என்ற பழஞ்செய்யுளொன்று உதாகரிக்கப்பட்டுள்ளது. இதனிற் குறிக்கப்பட்டவரசன், மேற்கூறிய உதவிபெற்ற விஜயாதித்தனை அன்றி வேறொரு சளுக்கரசனை ஆதல்வேண்டும்.

இனி, சோழர்க்கும் வேங்கியரசரான சளுக்கர்க்கும் நடந்த இப்போர்களினின்று மற்றொரு விசேடமும் அமைவதாயிற்று. அஃதாவது—சோழர்கள் தங்கள் பெண்களை அச்சளுக்கியர்க்கு மூன்றுதலைமுறைகளாக மணம்புரிவித்து அவருடன் உறவுகொண்டாடிவந்ததேயாகும். கீழைச்சளுக்கியரில் முதல்வனாகிய விமலாதித்தன் என்பான் (கி. பி. 1015-1022) முதல் இராஜராஜசோழன் மகள் குந்தவையையும், அவன்மகன் சளுக்கிய ராஜராஜநரேந்திரன் என்பான் (1022—1061) கங்கைகொண்டசோழன்மகள் அம்மங்கதேவியையும், மேலைச்சளுக்கியரில் விக்கிரமாதித்தன் என்பான் வீர ராஜேந்திரசோழன்மகளையும் மணம்புரிந்துகொண்டவர்களென்பது சரித்திரமூலம் அறியப்படும்[1]. இத்தகைய சம்பந்தங்களால் ஆதியிற் பகைமைகொண்டிருந்த அவ்வரசரிருவரும் சமாதானம் பெறலாயினர். அன்றியும், இக் கீழைச்சளுக்கியத் தொடர்பானது, முடிவில் ஆந்திரதேசத்தையே தமிழரது உரிமை நாடாகவும் ஆக்கிவிட்டதென்பது குறிப்பிடத்தக்கது: எவ்வாறெனில்—முற்கூறியவாறு, இராஜேந்திரன்மகள் அம்மங்கதேவியை மணம்புரிந்துகொண்டு ஆந்திரதேசத்தை ஆண்டுவந்த சளுக்கிய ராஜராஜன் கி. பி. 1062-ல் இறந்ததும், அவன்மகன் இராஜேந்திரன் என்பான் அந்நாட்டுக்கு அரசனாயினன். அப்போது, சோழ ராஜ்யத்துக்கு வமிசமில்லாமையால் பட்டவுரிமைபற்றிப் பெருங் குழப்பம்நேரவே, தானே அந்த ராஜ்யத்துக்குத் தௌகித்திர பாத்தியங் கொண்டாடி அதனையுங் கைப்பற்றிக்கொண்டு சோழ சிம்மாஸனத்தில் கி. பி. 1070-ல் ஏறினன்.[2] அதனால் தமிழ்நாடுகளையெல்லாம் உள்ளடக்கிய சோழஏகாதிபத்தியமும் ஆந்திர தேசமும் இவனது ஒருகுடைக்கீழ் அடங்குவதாயிற்று. இவனே—அபயன், விஜயதரன், குலோத்துங்கன் முதலிய பெயர்கள்பெற்று விளங்கிய சோழன். தந்தைவழியால் சந்திரகுலத்துச் சளுக்கிய வமிசத்தவனாகவும், தாய்வழியால் சூரியகுலத்துச் சோழவமிசத்தவனாகவும் இவன் விளங்கினவன். அதனால்,

"இருண்முழுது மகற்றும்விது குலத்தோன் தேவி
யிகல்விளங்கு தபனகுலத் திராச ராசன்

1 சளுக்கிய விக்கிரமாதித்தன், 25

2 ஷெ, 31, 32.

அருடிருவின் றிருவயிற்றில் வந்து தோன்றி
ஆலிலையி லவதரித்தா னவனே மீள''

''திங்களி னிளங்குழவி செம்மலில னென்றும்
செய்யபரு திக்குழவி யையனிவனென்றும்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமும்
தனித்தனி யுவப்பதொர் தவப்பயனு மொத்தே''

என்று இவன்காலத்துப் புலவர்பெருமக்களால் உபயகுலோத்தம னெனப் புகழ்ந்துகூறப்பட்டான். இக்குலோத்துங்கன் பெருவீர னுண்மையால் தெற்கிலும் வடக்கிலும் பலதேசங்களைவென்று பகை யரசரெல்லாம் நடுநடுங்கும்படி செய்து ஒடுக்கினன். ஒருகால், கலிங்கநாட்டரசனுன சோடகங்கன் என்ற அனந்தபதுமன் தனக் குரிய திறையைக் கொடுக்க மறுத்தமைப்பற்றித் தன் சேனுபதி யாகிய கருணகரத் தொண்டைமானைக்கொண்டு அக்கலிங்கத்தின் மேற் படையெடுக்கச் செய்து வென்று அதனையுக் தன்கீழ்ப் படுத்தினன். இப்பெரிய வெற்றியே, சயங்கொண்டார் என்ற புலவர்பெருமானியற்றிய கலிங்கத்துப்பரணி என்ற நூலாற் சிறப் பித்துப் பாடப்பெற்றது. தன்மகன் வீரசோழன் விக்கிரமசோழன் என்புவர்களை வேங்கிநாட்டின் பிரதிநிதிகளாகவைத்துத் தான் கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து சோழ ஏகாதிபத்தியத்தைத் திறமையுடன் நெடுங்காலம் ஆட்சிபுரிந்து கி. பி. 1117-ல் இறந் தான். இவற்குப்பின் இவன் மகன் விக்கிரமசோழன் பட்ட மடைந்தனன். இவன்காலத்தும் இவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன், பேரன்-இராசராசன் (II) காலங்களிலும் ஒட் டக்கூத்தர், சேக்கிழார், பேராசிரியர்போன்ற பெரும்புலவர்கள் விளங்கினர். இவ்வரசரெல்லாம் தமிழ் ஆந்திரமென்ற இரண்டு தேசங்கட்கும் அதிபதிகளாய் ஆட்சிபுரிந்தவர்களே. இவர்க ளாட்சியில், சோழவமிசத்தைச்சேர்ந்த தலைவர்பலர் ஆந்திரதேசங் களிற் பிரதிநிதிகளாய் அமைய, அவ்வமிசத்தவர், **வெலநாண்டுச் சோழர் பொத்தப்பிச்சோழர்** முதலிய பெயர்களுடன் ஆந்திர தேசப்பகுதிகளை ஆண்டு, முடிவில் ஆந்திரர்களாகவே ஆனுர்கள். இவர்களைப்பற்றிப் பாடப்பெற்ற ஆந்திர நூல்கள் சிலவும் உண் டென்பர்.

மேலும், இக்காலத்துத் தமிழ்ப்புலவர் சிலர்க்கு ஆந்திர நூல் களில் ஆராய்ச்சியுமிருந்தது. உத்தேசம் 11-ம் நூற்றுண்டில் இயற் றப்பட்டதாகச் சொல்லக்கூடிய **யாப்பருங்கலவிருத்தி** என்றஅரிய உரைநூலிலே ஆந்திரபாஷையிற் பழைமையாக வழங்கிவந்த யாப் பிலக்கண நூலொன்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை,

—"இவற்றையெல்லாம்...குணகாங்கி* என்னுங் கருநாடகச் சந்தமும், வாஞ்சியார் செய்த வடுகச்சந்தமும் ஆகியவற்றுள்ளும், மாபுராண முதலாகிய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார்வாய்க் கேட்டுக்கொள்க" எனவரும் அவ்விருத்தி வாக்கியத்தால் அறியலாம். இதனால், கன்னட ஆந்திர பாஷைகளில் அமைந்த யாப்புநூல்களிலும் பண்டைத் தமிழ்ப் புலவர்க்கு உணர்ச்சியிருந்தமை புலப்படுவதன்றோ? வடுகச் சந்தநூல் செய்தவர் வாஞ்சியார் என்று அச்சுப்பிரதியிற் காணப்படுவதாயினும், ஏட்டெழுத்து முறையில் "அவரஞ்சியார் செய்த வடுகச்சந்தமும்" எனவும் படிக்கக் கூடியதாம். இத்தகைய பெயருடைய ஆந்திர வாசிரியரையும் அவர் நூலையும் பற்றி ஒன்றுமே இப்போது தெரியவரவில்லை. இங்ஙனம் ஆந்திரபாஷையில் மிகப்பிராசீனமான யாப்புநூலொன்றிலிருந்தது என்ற அரியசெய்தி 11-ம் நூற்றாண்டுத் தமிழ் மக்களது எழுத்திலிருந்து வெளியாவது, ஆந்திரமக்கள் அறிந்து மகிழத்தக்கதாம். யாப்பிலக்கணத்தை பழைமையாகவே ஒரு பாஷை கொண்டுள்ளதாயின், அஃது இலக்கிய வளத்தையும் முன்பே பெற்றிருக்க வேண்டுமென்பது திண்ணம். நன்னயபட்டர்க்கு முன்பு வழங்கிய தெலுங்கு நூல்கள் காணப்படாமையால், அப்பாஷை அவர் காலமாகிய 11-ம் நூற்றாண்டுக்கு முன்பு இலக்கியவிலக்கணவளம் பெற்றிருந்ததில்லை என்று கருதப்படுவதற்கு இடமின்றென்பது இதனால் விசதமாகக்கூடியது. இது நிற்க.

மேற்கூறிய விஷயங்களால், திராவிட ஆந்திரதேசங்கள் சோழர் பிராபல்யமிருந்திருந்த இரண்டு நூற்றாண்டுகள்வரை இராஜாங்க சம்பந்தத்தால் பின்னிக் கிடந்தன என்பது விளக்கமாம். 'வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்' என்று இலக்கண நூல்களில் எடுத்தாளப்படுந்தொடர், சோழர் ஆந்திரரின் மேம்பட்டு விளங்கிய இக்காலத்தெழுந்த வாக்கியமாகவே கொள்ளத்தக்கது. இந்நிலைமை 12-ம் நூற்றாண்டு முடிய நின்றது. 13-ம் நூற்றாண்டிலே சோழரது வலிமை குன்றவும், ஆந்திர தேசமும் பிறவும் அவர்கள் கையைவிட்டு நழுவுவனவாயின. இவ்வாறானதற்குக் காரணம் மேற்கேல் ஓரங்க (Warangal) நாட்டில் காகதீயவரசர் வலிமை பெற்றோங்கியதேயாகும். இவர்களில் முதற்பிரதாபருத்திரன் என்பான் (1162-1197) மிகப்பிரபலனாய்ச் சோழராட்சிக்கு உட்பட்டிருந்த வேங்கிநாட்டைத் தன் குடையின்கீழ்க் கொண்டுவந்தான். இவன் காலத்துச் சோழன்,

* 'குணகாங்கியம் என்னுங் கருநாடகச் சந்தமே போலவும்' என யாப்பருங்கலக்காரிகையுரையிற் காணப்படுகின்றது.

மூன்றாங்குலோத்துங்கன்*. என்பான். இவன் காலத்தும் இவன் மகன் மூன்றும் இராஜராஜன் காலத்தும் கம்பநாடர் என்ற கவிச் சக்கரவர்த்தி விளங்கினர் ஆவர். எக்காரணத்தாலோ இம் புலவர்க்கும் சோழவேந்தர்க்கும் கடும் பகைமை முற்றியதென்றும், அதனல் சோழனுடன் கோபித்துக் கொண்டு கம்பர் சோணுட்டை விட்டகன்று, மேற்கூறிய ஓரங்கல் வேந்தனைக்கொண்டு அவனை யடக்கவெண்ணி அவனிடஞ் சென்றனரென்றும் தெரியவருகின்றன. "கம்பர் பிரதாபருத்ரனிடத்திற் போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா" என்ற தலைப்புடன் உள்ள பழைய செய்யுளொன்று தமிழ் நாவலர் சரிதையிற் காணப் படுவது வருமாறு:—

"அவனிமுழு துண்டு மயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா நின்னுடைய ஓரங்க ளுட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்"

'பூமியிலுள்ளாரெல்லாம் வந்துண்ணுவதாலும், அயிராவதம் போலும் பட்டத்தியானையின்மேல் நீ பவனி வரும்போது உன்னைப் பார்த்த பருவமாதர்கள் காமவெப்பம் ஆற்றுமற் குளிர்ச்சிக்காகப் பரப்பிப் படுத்தலாலும், அரசே! உன்னுடைய நாட்டில் வாழைகள் குருத்தில்லாமற்போயின' என்பது இதன் பொருள். 'வாழைகள் குருத்தில்லாமற்போயின' என்று, தக்க சந்தர்ப்பமொன்றிற் கொடுக்கப்பட்ட ஸமஸ்யையைச் சமயோசிதமாகப் பாடிமுடித்துக் கம்பநாடர் அப்பிரதாபருத்திரனை மகிழ்வித்தனரென்பது இதனுற் புலப்படுகின்றது. இவ்வேந்தன் கவிஞரை பெரிதும் கௌரவித்துச் சிறப்பித்து வந்தவன் என்பது, இவன் பெயரால் 'பிரதாபருத்ரீயம்' எனவழங்கும் அலங்கார நூலாலும் அறியப்படும். இவ்வாறு வலிமை பெற்ற ஆந்திர வேந்தனிடஞ்சென்று தம் பெரும் புலமையால் அவனை வசப்படுத்தி அழைத்து வந்து, சோழன் முன் அவன் தனக்கு அடிமை போல நிற்கும்படி செய்து தம்மாற்றலைப் புலப் படுத்தினர் இப்புலவர் பெருமான் என்று தெரிகின்றது. ஆயின் இங்ஙனஞ் செய்த புலவரைப் பற்றி எத்தகையவெண்ணம், சோழன் கொண்டிருத்தல் கூடும்? அப்புலவரால் தனக்குப் பகையரசன் விளைக்குங் கேடு திண்ணம் என்பதை அறிந்த அவன், கம்பநாடரைக் கொல்லக் காலம் பார்த்துக்கொண்டே, அவரிடம்

* இக்குலோத்துங்கனே 'வீரன், தியாகவிநோதன்' எனக் கம்பரால் தம் இராமாயணத்துப் புகழப்பட்டவன் (சாஸனத் தமிழ்க் கவி சரிதம், பக்கம், 83-4)

கட்புடையவன் போல நடித்து வந்தான். அதனை உண்மையாகக் கருதிச் சோழனுடன் பழகிவந்த கம்பர் ஒருகால் அரண்மனைக்குட் புகுந்தபோது, அவ்விடத்துக் கட்டப்பட்டிருந்த புலியொன்றை அவன் அவிழ்த்துவிடச் செய்ய, அஃது அவர்மேற் பாய்ந்து வந்த நிலையிலே, அரசன் அப்புலியை எய்பவன் போலக் கம்பரையே தன்னம்பால் எய்து வீழ்த்தித் தன் பகையைத் தீர்த்துக் கொண்டனன். அம்புபாய்ந்து வீழ்ந்த அப்புலவர் பெருமான், நடந்த நிகழ்ச்சியை அறிந்து கொண்டு சோழனை நோக்கி,

> "வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானாலும்
> வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
> பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
> சுட்டெரிக்கு மென்றே துணி"

என்று சபித்துப் பாடினர். இங்ஙனம் சபிக்கப்பெற்றவன் மூன்றுங் குலோத்துங்கனேனும் அவன் மகனேனும் ஆதல் வேண்டும். இவருள் எவராயினும் தெய்வப் புலவராகிய இவர் வாக்கின் படியே சோழவமிசம், மூன்றும் இராசராசனுக்குப் பின்பு வலி குன்றி நிலைகுலைந்ததென்பதைச் சரித்திரபூர்வமாக நாம் நன்கறியலாம். ஓரங்கல் உருத்திரனைக் கம்பர் தம் வாக்குவன்மையால் வசப்படுத்தி அவன் தமக்கு அடைப்பை கட்டிவரச் செய்த செய்தியையே சேரனைக் கொண்டு அவர் அவ்வாறு செய்வித்ததாகவும், அம்பு பட்டிறந்தவன், கம்பரன்றி அவர் மகன் அம்பிகாபதி என்றும் இக் காலத்தார் மாற்றிக் கதையெழுத, அவையே இப்போது உண்மைச்செய்திகள்போல வழங்கிவருகின்றன. கம்பநாடர் பிரதாபருத்திரனிடஞ் சென்று வந்தனரென்பதற்கு ஏற்ப, அவரருளிச் செய்த இராமாவதாரமென்றுபெயர்கொண்ட இராமாயணத்திலே,

> "தாண் மிடைந்தன தம்மி மிடைந்தென" (எழுச்சி-30)
> "அக்கட விராவணற் கமைந்த வாற்றலே" (யுத்.மந்திர.32)
> "மசரத மனையவர் வரமும் வாழ்வும்" (திருவை. 22)
> "கிச்சிடை யிடுமெனக் கிளக்கின் ரூர்சிலர்" (பிணிவீட்.8)

எனவருந்தொடர்கள் வருகின்றன. இவற்றுள், தம்மி (=தாமரை), அக்கட (இரக்கக்குறிப்பு), மஸ (=மாயை, பொய்; மசரதம்—பேய்த்தேர், கானல்). கிச்சு (=நெருப்பு) எனக் கன்னடத்தும் தெலுங்கிலும் வழங்கும் சொற்களை அப்புலவர் பிரயோகித்திருத்தல் அவர் அந்நாட்டார்களுடன் நெருங்கிப்பழகிவந்தவரென்பதை குறிப்பிடக்கூடியதன்றோ? மேற்கூறிய சரித்திரங்களினின்றும்,

ஆந்திர கன்னட தேசங்களை ஆண்ட அரசர் தமிழ்ப் பெரும்புலவர்களையும் ஆதரித்துப் பெரிதும் கௌரவித்து வந்த செய்தி நன்கு விளங்கும்.

இனி, சோழர் ஆதிக்கங்குன்றிய இரண்டு மூன்று நூற்றாண்டுகட்குப்பின்பு, தெலுங்கர் தமிழரைக் கீழ்ப்படுத்தியாண்ட கால விசேடத்தைக் காணலாம். சோழர் ஆதிபத்தியத்தின் கீழ் அமைந்த சிற்றரசர்களும் சாமந்தர்களும், அத்தலைமையரசாங்கம் நிலைகுலையவும் தாமே பெரியவுஞ் சிறியவுமான நாடுகட்குச் சுவாதீனத் தலைவர்களானார்கள். அக்காலத்தே வடக்கிலிருந்து வேகமாகப் படையெடுத்து வந்த துருக்கவரசர் ஆந்திரநாட்டிலும் தென்னாட்டிலும் புகுந்து சூறையாடினர். அப்போது தென்னாட்டின் சநாதன தர்மங்களைக் காப்பதற்கென்றே விஜயநகரராஜ்யம் உதயமாயிற்று. 14-ம் நூற்றாண்டில் ஆரம்பமான அம்மஹாராஜ்யத்தின் பலபராக்கிரங்களால் தென்னாடு முழுமையும் பாதுகாக்கப்பட்ட வரலாறு, சரித்திரவறிஞரெல்லாம் நன்கறிந்ததே. அவ்விஜயநகர ஏகாதிபத்தியத்தை அம்பி (Hampi) மாநகரிலிருந்து ஆண்டுவந்த அரசர்களும் அவர் பிரதிநிதிகளும், தமிழ் நாட்டவரிடத்தும் அந்நாட்டுத் தேவாலயங்களிடத்தும் அபிமானமும் ஆதரவும்மிக்குள்ளவராயிருந்தனர் என்பதற்கு வேண்டிய பிரமாணங்கள் உள்ளன. அவ்வரசர் பெருமக்களிலே, மல்லிகார்ச்சுனராயர் (*1449—1466*) விருபாக்ஷராயர் (*1461—1485*) காலங்களில், தமிழ் நாட்டின் இராசப்பிரதிநிதியாய் அனுப்பப்பட்டு ஆட்சிபுரிந்து வந்தவர், **சாளுவத்திருமலைராயர்** என்பார். தென்னாட்டிற் பலவருஷம் அப்பதவியை நிர்வகித்து வந்த இவர், தமிழில் அறிவுடையராயிருந்ததோடு, தமிழ்ப் புலவர்களில் சிறந்தவர்களைப் பெரிதும்ஆதரித்தும் வந்தனர். இவர் காலத்திற்றான் **காளமேகப்புலவர்** என்ற ஆசுகவிச் சிங்கம் விளங்கியது. திருமலைராயர் சபைக்குக் காளமேகம் முதலில் எழுதிவிடுத்ததாகத் தமிழ் நாவலர் சரிதையிற்கண்ட பாடல் அடியில் வருமாறு:

**"தூதைந்து நாழிகையி லாறுநா ழிகையினிற்**
**பலசந்த மாலை சொலவும்**
**சூழுலா வந்தாதி யேழுநா ழிகையினிற்**
**றொகைபெற வகுத்தோதவும்**
**பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகையினிற்**
**பரணியொரு நாண்முழுதுநீள்**
**பாரகா வியமெலாமீரிரு தினத்தினிற்**
**பகரக் கொடிகட்டினேன்**

சீதஞ் செயுந்தொங்கன் மார்பினு னியலிசை
தெரிந்த திருமலைராயன்முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வரு
திருட்டுக் கவிப்புலவரைக்
காதும் பிடித்துக் கவித்துக் கதுப்பிற்
கரத்திட் டிடித்து முதுகிற்
கலனைவைத் தேமுகக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேக நானே''

தம் ஆசுகவித்திறமையை இங்ஙனம் அரசற்கறிவித்த காளமேகத்தின் தற்புகழ்ச்சியில் நம்பிக்கைகொள்ளாது அவ்வுண்மையையறியத் திருமலைராயர் பல வருத்தும் வழிகளாலுஞ் சோதிக்கலாயினர். அங்ஙனம் சோதித்தறிந்ததைக் குறிக்கும் செய்யுட்கள் தனிப்பாக்களாக வழங்குதலைப் பலரும் அறிவர். இச்சோதனைக் கெல்லாம் அப்புலவர் அஞ்சாதுநின்று தம் பெருங் கவித்திறமையைக் காட்டவே, அரசன் வியப்பும் உவப்பும் அடைந்து அவர்க்கு வேண்டிய வரிசைகளையும் கௌரவங்களையும் அளித்துச் சிறப்பித்தான். இங்ஙனம் திருமலைராசரால் வறுமை நீங்கித் தாம் பெருமைபெற்றதை அடியில் வருமாறு அப்புலவர் அழகுறப் பாடுகின்றார் :—

''இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான்
அக்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்துறு மக்களும் யானும்
அனிலம தாகு மமுதினைக் கொள்வேம்
ஆரெனை யுலகினி லொப்பார்
சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்தல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்தர புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினுற் குபேர னுக்கின னவனே
மாசிலீ சானனு வானே''

உடுத்த ஆடை பல் துளைக்கண்கள் உடையதென்பார் 'இந்திரன் கலையாயிருந்தான்' என்றும், பசி வயிற்றைவிட்டு நீங்கிற் றில்லை என்பார் 'அக்கினி உதரம் விட்டகலான்' என்றும், சிவ

ளதுபிக்ஷாடனருபத்தைக்கொண்டு திரியும் என்பால்வர யமன் அஞ்சினன் என்பார் 'எமனெனைக் கருதான் அரனெனக் கருதி, என்றும், அவ் யமனே இங்ஙிலையனுனபோது, பிறர்செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பார் 'நிருதிவந் தென்னையென் செய்வான்' என்றும், வறுமைத் துயரால் உண்டாம் அழுகைநீர் கண்களை விட்டு நீங்கிற்றில்லை என்பார் 'வருண விருகண்விட் டகலான்' என்றும், வாயுவே தன் குடும்பத்திற்கு உணவாயுள்ளது என்பார் 'அநிலமதாகு மமுதினைக் கொள்வேம்' என்றும், இங்ஙனம் திக்குப் பாலகரில் அறுவர் தம்வசமாயிருத்தலால் 'ஆறெரனையுலகினிலொப் பார்' என்றும், முடிவில் இவ்வருத்தங்கள் நீங்கத் தம்மைக் குபேர சம்பத்தில்வைத்தவன் திருமலைராயனுனதால் தாமே குபேரனென்றும் அவனே ஈசானனுகிய சிவபிரானென்றும் கூறினர்.

"இயலிசைதெரிந்த திருமலைராயன்" என்று புலவர்பாடுதலால், அத்தலைவர் தமிழறிவினுஞ் சிறந்தவராயிருந்தமை பெறப்படும். மேற்குறித்த பாடலினின்று, சாளுவவமிசத்துக் கோப்பயன் என்பவரின் புத்திரர் திருமலைராசர் என்பது தெரியலாம். ஸ்ரீரங்கத்தில் சகாப்தம் 1385-ல் அமைந்த சாஸனமொன்று இத்தலைவரைப்பற்றிக்கூறுகின்றது.[1] இவ்வாறே திருவானைக்காக்கோயிலின் தெற்குத்திருமதிலில் உள்ள சாஸனமொன்றும்[2] கோபராஜன் குமாரரான சாளுவத்திருமலைராசர் சகாப்தம் 137...ல். ஸ்ரீமுக-ஞு ஜம்புகேசுவரர்க்குத் திருவாபரணமொன்று அளித்ததாகக் குறிக்கின்றது. அக்காலத்துக்குச் சரியான கிறிஸ்தவாப்தம் 1453-ஆகும் இவற்ருல் காளமேகப்புலவர் 15-ம் நூற்ருண்டின்மத்தியில் வாழ்ந்தவரென்பது தெளிவாதல்காண்க. இவர்பாடிய செய்யுளிற்கண்ட கல்யாணி என்பது சாளுவவரசரது பூர்வகுடிப்பெயரும் விதரணராமன் என்பது அவரது பட்டப்பெயருமாகும் என்பர். இங்ஙனம் தம்மைப் பெரிதும் ஆதரித்த அரசனுடைய ஊரை மண்மாரியால் அழியும்படி இப்புலவர் பாடினரென்று பிற்காலத்தார் எழுதிப்போந்த கதை உண்மையுடையதென்று சொல்வதற்கில்லை.

இனி, இக்காலத்துக்குப்பின்பும் ஆந்திரவரசர்கள் தமிழ்ப்புலவர்களை நேரே அபிமானித்த செய்தி தெரியவருகின்றது. விஜயநகர வேந்தர்களிலே கிருஷ்ணதேவராயர் என்பவரே (1509—1529) மிகப் பிரபலராக விளங்கியவர். இவர்காலத்தில் விஜயநகர-ஏகாதிபத்தியம், ஆந்திரகன்னடதேசங்களையும் தமிழகத்தை

1. S. I. I , iv. p. 145. 2. M. E. R 67 of 1903.

யுந் தன்னுட்கொண்டதாயிருந்தது. இவ்வரசர் அறிவு திரு ஆற்றல் என்ற மூவகைச் சம்பத்தும் நிரம்பினவர். தாமே பெரிய கவியாய்க் கவிசிரேஷ்டர் பலரையும் ஆதரித்தவர். கோயில்களும் குளங்களும் இவர்காலத்துப் பேணப்பட்டும் பெருகியும் வந்ததுபோல வேறெக்காலத்தும் நிகழவில்லை. மற்றும் இவரது அருமை பெருமைகளை யெல்லாம் எடுத்து மொழிவதாயின் மிக விரியும். ஆயினும், சந்தர்ப்பத்துக்குப்பொருந்த ஒன்றைமட்டும் இங்கெடுத்துக்கூறல் தகும். அஃதாவது இவர் தமிழ்ப்பெரும் புலவர்களையும் அபிமானித்து ஆதரித்துவந்தமையேயாம். இதற்குச் சில சான்றுகள் கூறுவோம்.

ஒட்டரதேசத்தைக் கடகநகரில் (Cuttack) இருந்தாண்ட கஜபதியரசனாகிய பிரதாபருத்திரன் (*1497-1540*) என்பவன் தமக்கு அடங்காதிருந்ததனால், கிருஷ்ணதேவர் உத்தேசம் *1515*-ல் அவனாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அவனை வென்றதோடு, அவ்வரசன் மகளாகிய **துக்கா** என்ற பெண்மணியை மணம்புரிந்து கொண்டனர் என்பது அவ்விராயரது பிரசித்தசரித்திரங்களுள் ஒன்று. இதுநிகழ்ந்த காலத்தே அவ்வரசர்பிரானுடனிருந்த தமிழ்ப் புலவர் **குமார சரசுவதி** என்பார். இவர் அத்திருமணத்தைச் சிறப்பித்துப்பாடிய வெண்பாவொன்று தமிழ்நாவலர்சரிதையுள் தொகுக்கப்பட்டுளது. அதுவருமாறு :—

> **"கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று**
> **மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்**
> **பொன்னிட்ட மானக்ருஷ்ண பூபாலா வுன்றனக்குப்**
> **பின்னிட்ட வொட்டியன்போற் பெண்"**

என்பது. இதனுள் 'உனக்குத்தோல்வியுற்ற ஒட்டரதேசத்தரசனைப்போலவே, அவன்பெண்ணும், கலிங்கம் நுதிக்கைச்சங்கம் கடகமென்னும் இவற்றை உன்முன் நெகிழவிட்டாள்' என்று சிலேடை நயம்பெறக் கூறப்பட்டுள்ளமை தெரியலாம். 'ஒட்டியன் கலிங்கதேசத்தையும் துதிக்கையுடைய யானைக்கூட்டத்தையும்* கடகம் என்ற தலைநகரையும் போரில் இழந்தோடினன். அங்ஙனம் இழக்கும்படி செய்த உன்பிரதாபத்தை அறிந்த அவன்மகளும், வீரனான உன்னையடைய விரும்பியதனால் உண்டான தன் உடல் மெலிவால், தானும் கலிங்கத்தையும் (=வஸ்திரத்தையும்), நுதிக்கைச்சங்கத்தையும் (=முன்கையிலணிந்த வளைகளையும்), கட

* கஜபதியாதலின், யானைக்கூட்டங்களை இழந்தானென்க.

கத்தையும் (=தோள்வளையையும்) கழுவவிடலானன்' என்று கவி சொல்லணி பெறக்கூறும் அழகு அறிந்துமகிழத்தக்கதாம். இத ஞல், விஜயநகர வேந்தரின் ஆஸ்தானத்தில் பெருந்தமிழ்ப்புலவர் களும் எப்போதும் இருந்துவந்தனர் என்பதும் அவர்கள் சமயோ சிதமாகப் பாடுவதை அரசன்கேட்டு உவந்து சிறப்பித்தனனென் பதும் விளங்குகின்றன. இக் குமாரசரசுவதிபோலவே, கிருஷ்ண தேவராயரால் அபிமானித்துக் கௌரவிக்கப்பட்ட தமிழ்ப்புலவர் கள் பலர். தமிழிற் பிரபலமாகவழங்கும் சூடாமணிநிகண்டின் ஆசிரியரான **மண்டலபுருடர்** என்ற சைன சமயப்புலவர் இவ்வர சர்பெருமானல் ஆதரிக்கப்பெற்றவருள் ஒருவர். இவர் தம்நூற் கண்ணே 'கொடைமடம்' என்ற சொற்குப் பொருள் கூறும் போது,

"படைமயக் குற்ற போதும் படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான்கிருட்டிணராயன்கை போற்
கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே"

என்று, வரையாது யாவர்க்கும் கிருஷ்ணராயர் வழங்குவது போலக் கொடுப்பதே, அத்தொடர்மொழியின்பொருள் என்கின் றுர். இவ்வாறு பாடுதல், அவ்வேந்தரது கொடைப்பெருமையை அவரே நேரில் அறிந்தனுபவித்தவர் என்பதற்குத் தக்க சான்று மன்றோ? மண்டலவர் புகழ்ந்த இக் கிருஷ்ணராயரை இரட்ட வேந்தனை அமோக வர்ஷன் கிருஷ்ணன் என்று சிலர் கருதி யெழுதியது பொருந்தாதாம்.[1] இனி, இவ்வரசர்பெருந்தகைமேல் வேளாண்மரபினரின் குருவாகக் கச்சியம்பதியில் விளங்கிய **ஞானப்பிரகாசர்** என்ற பெரியாரொருவர், [2]'மஞ்சரிப்பா' என்ற பிரபந்தம் பாடியிருந்தார் என்ற செய்தி—

"வானப்ர காசப் புகழ்க்கிருட்ண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்ர காச குருராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர் வளர்தொண்டை மண்டலமே"

---

1 "மண்டலபுருடர்" எனப் பின்வரும் கட்டுரையுள் இப்பொருந் தாமை தெளிய விளக்கப்பட்டுளது.

2 கிருஷ்ணதேவராயர் மந்திரிகளுள் ஒருவரான அம்பி-அறம் வளர்த்த முதலியாரால் வேளாளர்க்குக் குருவாக நியமிக்கப்பட்ட வர் இவரென்பர் (அபிதான சிந்தாமணி).

என்னும் தொண்டைமண்டல சதகச் செய்யுளால் வெளியாகின்றது. இப்பிரபந்தம் இப்போது கிடைத்திலது. இதுவன்றி, தேவாலயங்கள்போன்ற தர்மஸ்தாபனங்களில் அதிக்கிரமங்கள் நடந்தால், அவற்றைத் தமிழ்ப்பெரியோர்களும் புலவர்களும் தம் மரசரான கிருஷ்ணதேவர்க்குச் செய்யுள்மூலமாக அறிவித்து வந்திருக்கின்றனர். திருவாரூர்க் கோயிலில், திருவிழாவை ஒழுங்காக நடத்தாமலே அங்குள்ள பட்டர்கள்சிலர் கொடியிறக்கப்புக, அதனைக்கண்டு மனஞ்சகியாமல் சைவத்துறவியும் புலவருமாகிய தத்துவப்பிரகாசர் என்பார்—

''மருவுபுகழ்க் க்ருட்ண மகராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகத் கொடியறுப்பார்[1] பாதந் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே''

என்று கொடியிறக்கவொட்டாமல் ஆணைகூறித் தகைந்துவிட்டு, அப்பட்டர்களுடைய அதிக்கிரமச்செய்கையை,

''ஊழித் துலுக்கல்ல [2]வொட்டியான ருனுமல்ல
வீழித் [3]துலுக்குவந்து மேலிட்டே—யாழி[4]
சிறந்ததிரு வாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிட்டிணரா யா''

என்று கிருஷ்ணதேவராயர்க்கு எழுதிவிடுத்தனர் என்றும், உடனே இராயர் அக்கோயிற்பட்டர்களை மாற்றிவிடக் கட்டளையிட்டனரென்றும், அப்போது அவர்களை நோக்கித் தத்துவப்பிரகாசர்—

''உண்ட வயிற்றி லுமிக்காந்த விட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்ப மவலென் றதிரசமுந் தோசைகளுங்
கப்புவது போச்சே கவிழ்ந்து''

---

1 தியாகராசருடையஉற்சவங்களிலே 'பாகற்கொடியறுத்தல்' அல்லது 'பாகல்வேட்டை' என்ற திருவிழாவும் ஒன்று. இதுபற்றித் திருவாரூருலா 421-ம் கண்ணி அரும்பதவுரையுள் மகாமகோபாத்தியாய-ஐயரவர்கள் எழுதிய குறிப்பு அறியத்தக்கது.

2 கிருஷ்ணதேவர் பட்டமடைவதற்குமுன், ஒட்டியரும் துருக்கரும் சேர்ந்து பிரவேசித்துத் தென்னாட்டையலைத்துவந்தமையால், 'ஊழித்துலுக்கல்ல ஒட்டியான்ருனுமல்ல' எனப்பட்டதென்க.

3 திருவீழிமழலையிலிருந்து ஸ்வாமிபூசனைபுரிந்துவந்த பட்டரது தீச்செயல்நோக்கி, அவரை வீழித்துலுக்கர் என்ருரென்க.

4 திருவாரூர்த்தேர்க்கு 'ஆழித்தேர்' என்ற பெயர்வழக்குண்டு.

என்று இகழ்ந்துகூறினரென்றும் தமிழ்நாவலர் சரிதையால் அறியப்படுகின்றன. இவ்வாறே மற்ளுருகால், அக்கோயிலிலிருந்த அறுபத்துமூவர்விக்கிரகங்களிலே இரண்டை, அருச்சகரோ அதிகாரியோ ஆகிய நாகரசநம்பி என்பவர் வெட்டியுருக்கியதை அறிந்த அத்தலத்தார், அச்செய்தியைக் கிளிக்குப் பாடப்பழக்கி, அதனைக் கிருஷ்ணதேவராயர் திருமுன்பு சொல்லும்படிசெய்தனர் என்று தெரியவருகின்றது. அப்பாடலாவது :—

"முன்னு ளறுபத்து மூவரிருந் தாரவரில்
இந்நா ளிரண்டுபே ரேகினர்—கன்னன்
நருக்குகின்ருன் விற்றுவிட்ட நாகரச நம்பீ
இருக்கின்ருன் கிட்டினரா யா" என்பது.

இனி, சைவ வைணவவாதங்களைப்பற்றிப் பாடப்பட்ட **இருசமய விளக்கம்** என்ற அரியநூலை இயற்றிய **அரிதாசர்** என்ற புலவர் இக்கிருஷ்ணதேவர் காலத்தவரென்பதும், அவரால் பெரிதும் அபிமானிக்கப் பட்டவரென்பதும் அறியத்தக்கன. ஷெ நூலின் பாயிரத்துள்,

"கிரிபோல் விளங்கக் கிளரும்புயக் கிருட்ணராயர்
தரைமீது சிங்காத் திரியிற்சயத் தம்ப நாட்ட
வரமா தரவா லளித்தேவட கூவ மேவும்
கருமா மணிவண் ணனைநீடு கருத்துள் வைப்பாம்"

என்றுள்ள பாடலினின்று மேற்கூறிய செய்திகளை அறியலாம். கிருஷ்ணதேவராயர் சிம்மாசலமென்ற திருமால் திருப்பதியில்[1] ஜயஸ்தம்பமொன்று நாட்டினர் என்ற விஷயம் இப்பாட்டிற் கூறப்படுகின்றது. அவ்வரசர் நாட்டிய இத்தம்பம், மேற்கூறிய கலிங்க அரசனை பிரதாபருத்திரனுடன் உத்தேசம் 1515—ல் அவர் நடத்தியபோரின் வெற்றிக்குறியேயாகும். அவ்வரசரே பாடிய **ஆமுக்தமால்யதா** (காண். 4,290) விலும், அவரது ஆஸ்தானகவியாகிய **அல்லசானிபெத்தன்ன** பாடிய மனுசரிதத்திலும் (காண். 1, பத். 36, 38), சாஸனத்தும் (Ep Rep. No. 74 of 1903) ஷெ ஜயஸ்தம்பத்தைப்பற்றிப் பேசப்பட்டுள்ளன என்பர்.[2] சிம்மாத்திரியில் ஷெ தம்பம் நாட்டப்பட்டதாக இருசமயவிளக்கமுடையார் கூறினும்

---

1 விசாகப்பட்டணத்துக்கு வடமேற்கே 4-மைலில் உள்ளது.

2 Gazetteer of Vizagapatam District pp. 28-29, 230.

சிம்மாசலத்தின் அடிவாரத்தில் சிம்மாத்திரிப்பொட்டுநூர்[1] என்று இப்போதும் வழங்கும் ஊரே, அத்தம்பம் நாட்டப்பட்ட இடம் என்று தெரிகின்றது. சிம்மாத்திரித் திருமாலிடம் கிருஷ்ணதேவர் பெரும்பக்திகொண்டிருந்தவர் என்பது சகஆ 1438, 1441-ல் அவ்வரசர் அநேக ஊர்களும் திருவாபரணங்களும் அத் திருமாலுக் களித்தனரென்று சிம்மாசலக்கோயிலிற் காணப்படும் சாஸனங்க ளால் விளங்குகின்றது. இத்தகைய கிருஷ்ணதேவராயரது வெற்றித்திறத்தைப் பாடிய அரிதாசர் அவ்வரசர்பெருமானல் பெரிதுங் கௌரவிக்கப்பெற்றவரென்பதும், இப்புலவர் திருமா லடிமையிற் சிறந்த பெரியார் என்பதும் இவர் நூலால்மட்டுமன்றிக் கல்லெழுத்துக்களாலும் தெளிவா யறியப்படுகின்றன[2].

இவற்றால், கோயில்முதலிய தர்மஸ்தாபனங்களின் குறைபாடு களை அவ்வப்போது கேட்டுத் தீர்த்து மன்னுயிரைத் தன்னுயிர் போற் பாதுகாத்துவந்ததோடு, தமிழபிமானமும் உடையரா யிருந்தனர் இவ்வரசர்பெருமான் என்பது பெறப்படும். பெருங் கல்விமானகவும், சிறந்தகவியாகவும் விளங்கித் தமிழ்காட்டின் பெரும்பாகத்தை ஆட்சிபுரிந்துவந்த பேரரசராகிய இவர்க்குத் தமிழ்ப்பாஷையில் அறிவும் ஆதரவும் இருந்தன என்பது ஓர் ஆச்சரியமன்று. இவ்வரசர் இயற்றிய கிரந்தமாகப் பலரும் அருமைபாராட்டிவருவது **ஆமுக்தமால்யதா** என்ற ஆந்திர நூலாம். சூடிக்கொடுத்தாள் என்பதே 'ஆமுக்தமால்யதா என் பதன் பொருள். ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தைப்பற்றி இவர் பாடி யுள்ள சொற்செறிவு பொருணயங்களைப்பற்றி, ஆந்திர அறிஞர்கள் புகழ்ந்துபாராட்டுவதைப் பலமுறை நான் கேட்டிருக்கிறேன். இவ்வரசர் அரசியன்முறையாற் பொதுநோக்கமுடையராயினும், சமயக்கொள்கையில் தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத் தைத் தழுவியவர். இவர்க்கு ஆசாரியர் இன்னரென்பதற்குத் தெளிவான ஆதாரமில்லையென்றும், ஆனல் இவர்பின்னோர் காஞ்சீ புரம் ஸ்ரீதாததேசிகன் திருவடிஸம்பந்திகளென்பதற்குப் பிரமா ணங்களுண்டென்றுங் கூறுவர். இவருடைய கிரந்தத்தில் ஸ்ரீஆண் டாள் பாசுரங்களின் அருமைபெருமைகளும், தமிழ்நாட்டின் சிறப்

1 சிம்மாசலத்துக்கு உத்தேசம் 30-மைலில் பொட்டுநூர்என்ற ஊரொன்றும் உள்ளது. அதனையே ஜெய ஜயஸ்தம்பம் நாட்டிய இட மாகச் சரித்திரவறிஞர் எழுதியிருப்பது பொருத்தமன்று.

2 சாஸனத்தமிழ்க்கவிசரிதம் என்ற நூலுள் அரிதாசர் என்ற தலைப்பின்கீழ் இவ்வாசிரியர் எழுதியுள்ள வரலாற்றால் இவையாவும் நன்கு விளங்கும்.

புக்களும், நம்மாழ்வார் ஆளவந்தார் உடையவர் வேதாந்ததேசிகர் மணவாளமாமுனிகள் அஹோபிலம்ஜீயர் என்ற ஸ்ரீ வைஷ்ணவ பரமாசார்யர்களின் அவதாரமகிமைகளும் அழகாகக் கூறப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. இதனால், மத ரீதியாலும் திராவிடபாஷையை இவ்வரசர்பெருமான் கௌரவித்துவந்தவர் என்பது விசதமாகும்.

அன்றியும், தென்னாட்டரசியன்முறைக்கென்று, தமிழமைச்சர் சிலரையும் இவ்வரசர் உடையராயிருந்தனர். அவ்வமைச்சருள் **அம்பி அறம்வளர்த்தமுதலியார்** என்பாரும், **வடமலையார்** என்பாரும் சிறந்தவர்கள். இவர்களுள், முற்கூறிய முதலியார் தொண்டைநாட்டுச் செம்பூரினர். இவர், கிருஷ்ணதேவராட்சிக்கு முன்பும் விஜயநகர ஏகாதிபத்தியத்தில் தலைமை வகித்தவர். இவ்வமைச்சரின் அபிமானத்தைத் தமிழரசர்களும் அக்காலத்து எதிர்பார்த்தவராயிருந்தனர். பாண்டியனொருவன், இவர்மேற் கலம்பகமொன்றுபாடிப் புகழ்ந்தனனாக. 'அவ்வாறு பாடியது தருமா? என்பதுபற்றி உசாவிய புலவரொருவர்க்கு விடையாக, அவ்வரசன்பாடிய செய்யுளொன்று அடியில் வருமாறு தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது.

**அறம்வளர்த்தமுதலியாரைப் பாண்டியன் கலம்பகம்பாடலாமோ என்ற புலவர்க்குக் கூறியது**

**"உங்கண் மனந்தெரி யும்புல வீரொரு சீர்மரபோந்**
**திங்கண் மரபினந் திங்களின் கூடச்செம் பூரறமா**
**துங்கன் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றே**
**எங்கண் மரபுண் டெனக்கவி பாடினம் யாமவற்கே"**

"சிவபிரான், திங்களுடன் கங்கையையுஞ் சடையிற் றரித்துள்ளமையால், திங்கள்மரபினராகிய எமக்கும் கங்கைமரபினராகிய முதலியார்க்கும் உறவுண்மைபற்றி, யாம் அவரைப் பாடலாயினேம்" என்பது இப்பாடற்கருத்தாதல் காண்க. செம்பூர் அறமாதுங்கன்—செம்பூர் அறம்வளர்த்தமுதலியார்; செம்பூர் இவரதுரிமையூரும், அம்பி (Hampi) இவர் உத்தியோகம்வகித்த நகருமாகக் கொள்ளத்தக்கன. ஒருகால், கிருஷ்ணதேவராயர் திருமுன்பு வேளானமகளிரைப்போல வேஷம்பூண்டு ஆடிய கூத்தர்சிலரைக் கண்டு இம்முதலியார் பொறுமல் தங்குலத்துக்கு அவமானமாக நடித்த அவர்களை வாளால்வெட்டி மடிவித்தாரென்ற சரித்திரமும் வழங்குகின்றது.

இது கி. பி. 1511-ல் நடந்ததென்று கூறுவர்[1]. இச்செய்தி அடியில் வரும் தொண்டைமண்டல சதகச் செய்யுளாலும் அறியத் தக்கதாம்.

"தாளாண்மை யுள்ள புகழ்க்கிருஷ்ண ராயன் சமுகத்திலே
வேளாண் மகளிரைப் போலே விநோதித்து வேடங்கொண்டு
கோளார் வயிரியர் கூத்தாடத் தங்கள் குடிமையெண்ணி
வாளா லவருயிர் மாய்த்ததன் றேதொண்டை மண்டலமே"

இனி, அடுத்த வடமலையார் என்ற அமைச்சர், இருசமய விளக்கம் பாடியவரும், கிருஷ்ணதேவராயர் சிம்மாத்திரியில் நாட்டிய ஜயஸ்தம்பச் செய்தி கூறியவருமாக மேலே குறித்த அரிதாசரின் தமையனாராவர். இவரையே, முன்பு கூறிய தத்துவப்பிரகாசர் "அரிய வடமலையாரா‍ணை" என்று குறிப்பிட்டதாஉம் என்க. அவற்றை இங்கு விவரிப்பிற் பெருகும்.[2]

இனி, கிருஷ்ணதேவராயர் காலத்துக்குப்பின்பு அவர் சகோதராய் ஆட்சி புரிந்த அச்சுததேவமகாராயரும் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவரே. பாகவதபுராணம் பாடிய நெல்லிநகர் அருளாளர் இவரால் அபிமானிக்கப்பட்டவரென்றே தெரிகின்றார்.[3] இவ்விராயரது பிரதிநிதியாய்த் தென்னாட்டில் வெல்லப்படாத பகுதிகளையும் வென்று ஆட்சி புரிந்து வந்தவர், **விட்டலதேவராயர்** என்பவர். இவருடைய சாஸனங்களில் 'வீரப்ராதப மகா மண்டலேசுவர ராமராஜ திம்மராஜ விட்டலதேவ மகாராஜா' என்று இவர் சிறப்பிக்கப்படுவர் (Ep. Rep 129 of 1905). இவர் இராயராட்சிக் கடங்காதிருந்த கேரள தேசத்தை வெல்லற்கு அதன் தலைநகராகிய அனந்தசயனத்தின் மேல் கி.பி. 1553-ல் படையெடுத்துச் சென்றனரென்றும், இவரது சேனைகள் தெற்கே கன்னியாகுமரிமுதல் வடக்கே நைஸாம்ராஜ்யத்து முதுகல் வரையுமுள்ள பிரதேசங்களை வென்றடிப்படுத்தின என்றும் சொல்லப்படுகின்றன. இவர் கன்னியாகுமரிவரை படையெடுத்துச் சென்று வென்றனரென்பதற்கேற்ப, அக்குமரிப்பக்கத்துச் சுசீந்திரம் கோயிலிலுள்ள சாஸனமொன்று, கொல்லமாண்டு 722-(கி.பி.1546-47-ல்)ல் இவர் பிறந்த நாளன்று அர்ச்சனை நடத்திவருதற்கென்று,

1 தொண்டைமண்டலசதகவுரை.

2 'சாஸனத்தமிழ்க்கவிசரிதம்' என்றநூலுள் 'அரிதாசர்' என்ற தலைப்பின் கீழுள்ள வரலாற்றில் இவ்வடமலையார் செய்திகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

3 நெல்லியார் பாகவதம் (பாயிரம்)

அந்நாட்டரசனுகிய பூதலவீரராமவர்மாவால் சில பொருள்கள் தானமளிக்கப்பட்டதைக் கூறுகின்றது.[1] இங்ஙனம், விட்டலதேவ ராயர் கன்னியாகுமரியை நோக்கிப் படையெடுத்துச் சென்றதையே. அப்போதிருந்த பாண்டியனெருவனும்—

"தொட்டி லிருக்கத் தொடங்கிய நாண்முதலா
அட்டதிக்கு நின்குடைக்கீ ழாயிற்றே—விட்டலேயா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாநீ
தென்குமரிக் கேகுவதென் செப்பு"

என்று பாடியிருக்குஞ் செய்தி, தமிழ் நாவலர்சரிதையாற் றெரியலாம். இதனுல் இவ்விட்டலதேவரும் தமிழறிவும் அபிமானமும் உடையராயிருந்தவர் என்பது பெறப்படும். இவ்வாறே, வேறு ஆந்திரத் தலைவர் சிலரும் உளர்.

இங்ஙனம் தென்னுட்டின் சநாதனதர்மங்களையும் தர்மஸ்தாபனங்களையும் பாதுகாத்துவந்து அதன் பெருவாழ்வுக்கு உரியதாய் விளங்கிய மகாராஜ்யமானது, 1565-ல் நடந்த தலைக்கோட்டைப் பெரும்போரிலே நிலைகுலைந்து வீழ்ந்தது. இது தக்ஷிணதேசத்தின் பெருந்துரதிர்ஷ்டமேயாகும். இவ்வேகாதிபத்தியம் நிலைகுலையவே இதன் பிரதிநிதிகளாய்த் தென்னுடாண்ட தலைவர்களும் வலியவர்களும், சிறியவும் பெரியவுமான இராஜ்யங்களை ஆங்காங்குத் தாபித்துக் கொண்டனர். அப்படித் தாபிக்கப் பெற்றவற்றுள் மதுரை நாயக்க ராஜ்யத்தைக் குறிப்பிடல் தகும். பாண்டியர்கட்குப் பின்பு இம்மதுரையம்பதியைத் தலைநகராகக் கொண்டு, பல தலைமுறைகளாக விஜயநகர வேந்தரின் பிரதிநிதிகளாய் ஆட்சிபுரிந்துவந்த இவ்வரசர்களுக்குள்ளே திருமலைநாயக்கரே (1623-1659) சிறந்தவர். பெரும்புகழாளராகிய இவர் காலத்திற் கோயில்களும் குளங்களும் செழித்ததும், மதுரையே புதுப்பிக்கப் பட்டதும் பலரும் அறிந்தவை. இவர் புகழ் தமிழ்ப் பெரும்புலவர்களாலும் சிறப்பிக்கப்பட்டது. குமரகுருபரமுனிவர், ஸ்ரீமீனுட்சியம்மைபேரிற்பாடிய பிள்ளைத்தமிழை இவ்வரசர் திருமுன் அரங்கேற்றினரென்பதும், அப்போது "தொடுக்குங் கடவுட் பழம் பாடல்" என்ற செய்யுள்வர, அதன் அருமைப் பாட்டுக்கு வசப்பட்டு ஸ்ரீ மீனுட்சியே ஒரு பெண்குழந்தை வடிவாக ஸபையில் எழுந்தருளியிருந்து கேட்டு உவந்து மறைந்தனளென்பதும் கன்னபரம்பரைச் சரித்திரம். அம்முனிவர் இயற்றிய 'மீனுட்சியம்மை குறம்' என்ற மற்றெரு பிரபந்தவிறுதியில்—

1 Tinnevelly Gazetteer, pp. 59

"நீர்வாழி தென்மதுரை நின்மலனா ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கண்ணிதிரு வருள்வாழி
சீர்வாழி **கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி**
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே"

என்று அம்முனிவர் திருமலைநாயக்கரை மனமார வாழ்த்தலும் அறியத்தக்கது. நாயக்கவரசர் பூர்வத்திற் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தவர் என்று சொல்லப்படுதலால், 'கச்சிநகர்த்திருமலைபூபதி' எனக் கூறப்பட்டனர் என்க. இவர் முன்னோருள் ஒருவராகிய கிருஷ்ண வீரப்பர் (கி. பி. 1572) என்பவரும் இவ்வாறே கூறப்படுதலை, "அன்னவ னரசர் சூழுங் **கச்சி வீரப்ப**னென்னும் — மன்னவன்" என்னும் சுந்தரபாண்டியப் பாயிரத் தொடராலும், 'கதிக்கும் பரமன்னர் பொன்னார் முடிகளைக் காலிலெற்றி—மிதிக்குங் கடா சலத்தான் **கச்சி வாழ்கிட்ண வீரப்பனே**" என்ற மதுரைத் திருப்பணிமாலைத் தொடராலும் அறியலாம். நிற்க, நாயகவரசர்கட்கு உள்ளடங்கிய தென்னாட்டுப் பாளையப்பட்டுக்கள் 74-ல், பாதிக்கு மேல் தெலுங்கத் தலைவர்கள் ஆட்சியைச் சேர்ந்தவை. இத்தலைவர்களிற் பலர் தமிழறிவுடையராய்த் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவர்களே. கூளப்பநாயக்கன்மேல் அமைந்த விறலி விடுதூது போன்ற சில்லறைப் பிரபந்தங்கள் சில இன்னோர் காலங்களில் எழுந்தவைகளாம். இத்தலைவர்களிலே எட்டயபுரத்தரசர்கள் தமிழறிவும் ஆதரவும் மிக்குடையவர்களாயிருந்தனரென்பது, அவர்களைப் பற்றிப் புலவர்கள் பாடிப்போந்த தனிப்பாடல்களினின்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாந்திரத் தலைவர்களும் வலிமைகுன்றிய சிலகாலத்திற்கெல்லாம், இவர்களையெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி மகமதிய ராஜாங்கம் மேலோங்கியது. அமைதிக்கே இடமின்றியொழிந்த இக்காலங்களில், தமிழ் வளர்ச்சிக்கே ஆதரவில்லையென்று நாம் துக்கப்பட நியாயமே இல்லை. பிறகு, ஆங்கில ஸாம்ராஜ்யம், நம் சென்னையிலிருந்து தொடங்கிப் பரதகண்டமுழுதும் வியாபிக்கவே, எங்கும்போல நம் நாட்டிலும் அமைதியும் நல்வாழ்வும் ஏற்பட்டுள்ளமை நாம் நன்கறிந்தது.

தமிழ் மக்கள் ஆந்திர தேசத்தை ஆண்ட காலங்களிலும் ஆந்திர மக்கள் தமிழகத்தை ஆண்ட காலங்களிலும் பாஷை நடையுடைகளாலும் மனோபாவங்களாலும் அவ்விருவரும் பெரிதும் கலப்புற்றிருக்க வேண்டுமென்பது சொல்லாமலே அமையும். ஆந்திரகவிகளில் நூற்றுக்கணக்கானவர், தமிழகத்தினின்று ஆந்திர தேசத்துக் குடியேறி அரசர் முதலியோராற் சிறப்

பிக்கப்பெற்ற தமிழரே என்று, சில்லாண்டுகட்குமுன் இம்மதுரை மாநகரிற் கூடிய "ஆந்திரஸாஹித்ய பரிஷத்" என்ற மகாசபையில் அதன் அக்கிராசனாதிபதி வெளியிட்டனர். இச்செய்தி, அவ்விரு நாட்டார்க்கும் இருந்த சம்பந்தத்தை நன்கு விளங்குவதன்றோ? இவ்வாறே சில நூற்றாண்டுகளாகத் தமிழகத்திற் குடியேறிவந்த ஆந்திர மக்களுள்ளே, பெரியோர்களும் வித்வான்களும் பலர் இங்கும் விளங்கி வந்தனர். இவர்களால் தென்னாடு அடைந்த பயன்களிலே, **ஸ்ரீ தியாகையர்** என்ற மகானால் கர்நாடக சங்கீதத் துக்கே ஒரு புதுத் தோற்றமும் கிளர்ச்சியும் உண்டான செய்தியை ஈண்டுக் குறிப்பிடல் தகும்.

ஆங்கில ஸாம்ராஜ்யத்தின் மாகாணப் பிரிவுகளிலே திராவிட மொழிகள் என்று கூறப்படும் தமிழ் தெலுங்கு மலையாளங் கன்னடம் என்ற பெரும் பாஷைகள் வழங்குந் தேசங்கள் ஒரு தொகுதியாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தேசப் பிரிவைச் சென்னை மாகாணம் என்று இடவமைதிபற்றிப் பெயர் கூறுவ தினும், 'திராவிட மாகாணம்' எனப் பாஷையமைதியைக் கொண்டு வழங்குவது மிகவும் பொருந்துவது எனலாம். பாஷைகள் வழங்கும் முறையாகவே தேசங்கள் பிரித்தாளப்படவேண்டும் என்ற கிளர்ச்சி சில. காலமாக ஆந்திர மக்கட்குள் அதிகமாக உண்டாயினும், இப்போது அமைந்துள்ள மாகாணப்பிரிவு, பூர்வ சரித்திர முறைக்கு ஒத்ததாய் மேற்குறித்த திராவிட மக்களையும் நெடுங்காலம் ஒருசேரவைத்து ஒற்றுமைப்படுத்தி வந்திருக்கிற தென்பது திண்ணம். இவ்வொற்றுமைக்கு, இன்று அக்கிராசனம் வகிக்கும் நம் வித்யாவிலாகா மந்திரியாரும் ஒரு சிறந்த சாட்சி யாவர். சென்னை மாகாணத்தின் வடகோடி நாட்டினராகிய இவர், செந்தமிழ்நாட்டின் தலைநகரில் அமைந்த தமிழ்ச்சங்கத்தை அபிமானித்து, இன்று இதன் வருஷக்கூட்டத்தின் தலைமை வகிப்பது, நான் மேலே கூறிப் போந்த சரித்திரங்களை ஞாபகப் படுத்துகின்றது. ஆந்திரத் தலைவர்கள் தமிழை அபிமானித்தது புதியதன்று என்பதும், இதுபோலும் சம்பந்தம் என்றுமிருந்து பரஸ்பரம் பாஷை முதலியவற்றுக்குப் பேருதவி அமையவேண்டும் என்பதுமே இவ்வுபந்யாசத்தை யான் இம்மகாசபையில் வெளிப்படுத்தியதன் நோக்கம். இத்தகைய தொடர்பு நீடு வாழ்வதாக.

---

# 25. சேரவேந்தர் தாயவழக்கு*

## 1. முன்னுரை

திருவாளர்: எஸ். சோமசுந்தரபாரதி அவர்கள் எழுதிய "சேரர் தாயமுறை" என்ற கட்டுரையொன்றைப் படித்துவரலாயினேன். 'மருமக்கட்டாயமே சேரர்க்குப் பழைமையாக உரியது' என்ற கொள்கையை நிலைநாட்டப் புகுந்து, அதற்கு வேண்டிய ஏதுக்களை அதனுள் இவர்கள் விரித்து எழுதியுள்ளார்கள். இதுவே முடிபு, காலஞ்சென்ற நண்பர் **ஸ்ரீ. எம். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்** அவர்களால் 19-ஆண்டுகட்கு முன்பு ஆங்கிலத்தில் வரைந்து வெளியிட்ட சரித நூலுள்† விரித்துரைக்கப்பட்டது. யான் **சேரன்-செங்குட்டுவன்** சரிதத்தை எழுதி வெளியிட்டபோது, ஐயங்காரவர்களது மருமக்கட்டாயக்கொள்கை பண்டைச் சேரர்க்கு ஏற்புடையதன்று என்பது ஆராய்ச்சியில் தெரிய வந்தமையின், அதனை அந்நூலுட் குறிப்பிடலானேன். அக் குறிப்பினையும் ஒருபடியாக நோக்கியே மக்கட்டாயக் கொள்கையைப் பாரதியவர்கள் மறுத்தெழுதியிருத்தலால், இவர்களது வாதமுறைகளையும் சோதித்து ஒரு முடிவுபெறவைப்பது இப்போது இன்றியமையாததாக உள்ளது. 'சேரர் மக்கட்டாயிகளா, மருமக்கட்டாயிகளா?" என்ற ஐயம் பாரதியவர்கள் கட்டுரையாற் பலர்க்கும் நிகழக்கூடியதாதலின், அவ் வையநீங்கப் பெற்றுத் தமிழ்ச் சரிதத்துறையொன்று தெளிவடைதற்கும் இத்தகைய ஆராய்ச்சி வேண்டப்படுவதேயாம். அதனால், சேரர் முன்னோர் தாயவழக்குப் பற்றிய இவ்வாராய்ச்சித்துறையுள் இறங்கி உண்மைச் செய்திகளாயுள்ளவற்றை வெளிக்கொணர விரும்பி இவ்வழக்கினுட் புகுகின்றேன்.

**[சேரர் தாயமுறையை அறிவிக்கும் முன்னோர் கூற்றுக்கள்]**

சேரர் குடித் தாயமுறையைத் தெரிவித்தற்குச் சிறந்த பிரமாணமாகக் கருதப்படுபவை—எட்டுத்தொகையுள் ஒன்றான பதிற்றுப்பத்தினுள் ஒவ்வொரு பத்தின் இறுதிதோறும் அமைந்துள்ள பதிகங்களேயாம். அப்பதிகங்கள், பதிற்றுப்பத்துப் பாடிய பழம்புலவர்களானன்றி, அவர்கட்குப்பின் நூல் தொகுத்த புலவரானோ அன்றி வேறொருவரானோ இயற்றப்பட்டனவாகும். அப் பதிகங்கள் கூறும் செய்திகள் அடியில் வருமாறு:—

* செந்தமிழ், தொகுதி - 27, பகுதி - 10, 11

† Tamil Studies—The Ten Tens. pp. 264—80.

(1) **இரண்டாம்பத்து:**—உதியஞ்சேரற்கு வெளியன்வேண்மாள் நல்லினி ஈன்ற மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.

(2) **மூன்றும்பத்து :**—இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது.

(3) **நான்காம்பத்து :**—சேரலாதற்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவி ஈன்ற மகன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது.

(4) **ஐந்தாம்பத்து :**—நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது.

(5) **ஆறும்பத்து :**—நெடுஞ்சேரலாதற்கு வேளாவிக் கோமான் றேவி ஈன்ற மகன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது.

(6) **ஏழாம்பத்து :**—அந்துவதற்கு ஒருதந்தை யீன்ற மகள் பொறையன் பெருந்தேவியீன்ற மகன் செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது.

(7) **எட்டாம்பத்து :**—செல்வக்கடுங்கோவுக்கு வேளாவிக் கோமான் பதுமன்றேவி ஈன்ற மகன் பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார் பாடியது.

(8) **ஒன்பதாம்பத்து :**—குட்டுவனிரும்பொறைக்கு மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளையீன்ற மகன் இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது.

[மக்கட்டாயமுறைக்குரிய காரணங்கள்]

இவையே சேரர் குலச் செய்திகளை விளக்கும் தொடர்கள். இவற்றினின்று பெறப்படுவது மக்கட்டாயமா? மருமக்கட்டாயமா? என்பது இப்போது நிகழும் ஆராய்ச்சி. மக்கட்டாயமன்றி வேறுமுறையொன்று பழைமையே உண்டு என்பதற்கு யாதொரு பிரமாணமும் இல்லாமையால், தமிழகம் ஆளும் உரிமையும் வழக்கவொழுக்கங்களில் ஒரு தன்மையுமுடைய முடிகெழுவேந்தர் மூவரும் அநாதியாகக் கொண்டொழுகியது அம் மக்கட்டாய முறையே என்பதும், மேற்காட்டிய பதிற்றுப்பத்துத் தொடர்கள் சேரர்க்கு அம்முறையுண்மையையே விளக்குவன என்பதும் என் கருத்து. இதனை, யானெழுதிய 'சேரன்-

செங்குட்டுவன்' சரிதநூலுள் தெளியக்காட்டியுள்ளேன்.* அக் கருத்துக்களே மருமக்கட்டாயங் கூறுவோரால் பெரும்பாலும் இப்போது மறுக்கப்படுகின்றன. அம் மறுப்புரைகளாக அவர்கள் எழுதியவற்றை அடியில் வருமாறு சுருக்கிக் கூறலாம்.

[மருமக்கட்டாயமுறைக்குக் கூறப்படும் காரணங்கள்]

(1) **தேவி** என்ற சொல் பேரரசன் அல்லது சிற்றரசன் மனைவியை யன்றிப் பிறிது குறியாமையால், 4, 6, 7-ம் பத்துப் பதிகங்களிற் பதுமன்**தேவி,** பொறையன் **பெருந்தேவி** என வருவன, பதுமனுக்கு மனைவி பொறையனுக்கு மனைவி என்ற பொருள் தரற்பாலன. அதனால், அப்பதிகத் தொடர்களிலே முதலிற்குறிக்கப்பட்ட சேரலாதற்கும் செல்வக் கடுங்கோவுக்கும் அந்துவற்கும் அத்தேவியர் இற்கிழத்தியராமாறு இல்லை.

2, 9-ம் பத்துப்பதிகத் தொடர்களில் வரும் **வேண்மாள்** என்ற சொல், தேவியென்பதனோடு ஒத்த பொருளுடையதேயன்றி இயற்பெயரன்று. அதனால், 'வெளியன் வேண்மாள்' 'மையூர் கிழான் வேண்மாள்' என்பவற்றுக்கு வெளியன் மனைவி, மையூர் கிழான் மனைவி என்பனவே பொருளாம்.

(2) 7–ஆம் பத்துப்பதிகத் தொடரிற் கண்ட 'அந்துவற்கு ஒரு தந்தையீன்ற மகள் பொறையன் பெருந்தேவி' என்பதற்கு, அந்துவன் என்ற சேரவரசனின் தந்தைபெற்ற மகள் பொறையன் பெருந்தேவி—என்பதே பொருளாகும். அதனால், அப்பெருந் தேவி அந்துவன் சகோதரியே என்பது பெறப்படும். படவே, அச்சோதரி அந்துவன் மனைவி யல்லள் என்றும், பொறையன் பெருந்தேவி என்பதனால் பொறையன் என்ற வேண்மானுக்கு அவள் மனைவியே என்றும் கொள்ளற்பாலன.

(3) 5–ஆம் பத்துப்பதிகத்தே 'நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன் செங்குட்டுவன்' என்பதனுள், மணக்கிள்ளி என்பது, ஏனையவற்றிற்போல 'மணக்கிள்ளி தேவி' என ஆதியில் இருந்த பாடமே தவறியதாதல் வேண்டும். அதனால் மணக்கிள்ளி என்ற சோழனுக்கு நெடுஞ்சேரலாதன் சோதரியிடம் பிறந்த மகனாய், அச் சேரலாதற்கு வழித்தோன்றலானவனே செங்குட்டுவன் என்பது பெறலாகும். ஆயின், 'நெடுஞ்சேரலா தற்குச் சோழன் **மகளீன்ற** மைந்தன்' என்று இளங்கோவடி களும், "நெடுஞ்சேரலாதற்குச் சோழன்றன்மகள் **நற்சோணை**

* இரண்டாம்பதிப்பு, பக். 138—9.

ஈன்ற மகன்" என்று அடியார்க்கு நல்லாரும் செங்குட்டுவனைக் கூறியுளாரே எனின், சோழன் மகள் என்பதிலுள்ள மகள் என்பது ஆண்டு மனைவியென்ற பொருளில் அமைந்ததேயாம்; 'நினக்கிவன் மகனாத் தோன்றியதூஉம், மனக்கினியாற்குநீ மகளாயதூஉம்" (மணிமே) என்பது முதலியன இதற்குப் பிரமாணமாம்.

(4) பதிற்றுப்பத்துப்பாடல்களில் 'நன்னுதல் கணவ' 'நல்லோள் கணவ' என்பன முதலியவற்றாற் குறிக்கப்பட்ட பெண்டிர் அம்மான் சேரரின் மனைவியர் என்பது, சேரர்குடியில் உரிமை பத்விகளற்ற அன்னோரைப் பெயர் கூறாது புலவர்கள் நெகிழவிடு தலாற் புலப்படும். அதனால், அரசுரிமையில் தலைமைபெற்றவரும், அது பற்றிப் பெயர் குறிக்கப்பட்டவருமாகிய நல்லினி, அந்துவஞ் செள்ளை முதலியோரின் அவர் வேறுவர். இக்காரணத்தாலும் அந் நல்லினி முதலியோர் சேர சகோதரியரே என்பது விசத மாகும்.

(5) மருமக்கட்டாய முறையில், மாமன்மாரும் அவர் சகோதரி யர் வயிற்று மருமக்களும் ஒருவர்பின் ஒருவராக வயக்கிரமத்தில் மூத்தவன் முறையே ஆட்சிபெறுவது வழக்கு. அவ்வழக்கினையே— இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டு வன் என்ற அம்மான்மாரின் ஆட்சிக்குப்பின்—களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் என்ற அவர் மருகர் மூவரும் மூத்தவன் முறையில் ஆண்டுள்ள செய்தி பதிற்றுப்பத்தால் நன்கு விளங்கா நின்றது. சேரரின் மற்றொரு கிளையினரான அந்துவன்முதல் இளஞ்சேரலிரும்பொறை யீறான சேரவேந்தர் நால்வரும் இம்முறையே ஆண்டவராவர்.

(6) பதிற்றுப்பத்தினும் மற்றச்சங்க நூல்களினும் "ஒரு சேரனையாவது அவன் தந்தைக்கு மகனென்று சுட்டுங் குறிப்பே கிடையாது. அதற்கு மாறாக, முன்னரசரின் தொடர்புகுறிக்கும் இடத்திலெல்லாம், பாட்டுடைச்சேரனை அம்முன்னோனின் மருகன் எனவே எல்லாப் பழம்புலவரும் யாண்டுஞ் சுட்டிப்போவதைப் பார்க்கிறோம்." மருகன் என்ற சொல் சோதரிமகன் மகண்மண வாளன் இவரையே குறிப்பது மரபு. மருமக்கட்டாயமுறையில், அச்சோதரிமக்களே வழித்தோன்றலராய் அரசுரிமை எய்துதற் குரியராதலின், மருகன் என்ற சொல் பின்பு வழித்தோன்றல் என்ற பொதுப்பொருள் கொண்டு மக்கட்டாயமுறையினும்

வழங்கலாயிற்று. ஆகவே, சேர நாட்டொழுக்கமான மருமக் கட்டாய முறையினின்றே, மக்கட்டாயமுடைய ஏனைநாட்டாரும் மருகன் என்ற சொல்லை வழித்தோன்றலுக்கு வழங்கினராதல் வேண்டும்.

(7) இங்ஙனம் மருமக்கட்டாயமுறை சேரர்க்குண்மை பண்டை நூல்களால் தெளியப்படுதலின், அம்முறையுடைய சேரவேந்தரது தலைநகர், அத் தாயம் வழங்கும் இடமான குடபுலத்துக் கொடுங் கோளூரேயாதல் துணியப்படும்.

(8) தேவிச் சொற்கு முன்புள்ள பதுமன், பொறையன் என்ற பெயரினரும், வேண்மாட்சொற்கு முன்புள்ள வெளியன், மையூர் கிழான் என்ற பெயரினரும் பதிற்றுப்பத்துப் பெற்ற சேரரின் தந்தையர் என்பதும், பதிகத்தொடர்களின் முதலில் குவ்வுரு பேற்று நிற்கும் உதியஞ்சேரல், சேரலாதன், செல்வக்கடுங்கோ, குட்டுவனிரும்பொறை முதலியோர் அப்பாட்டுடைச் சேரரின் தாயருடன் பிறந்த அம்மான்மாராய் அச் சேரராய மருமக்களைத் தம் வழித்தோன்றலராக உடையர் என்பதும் பதிகத்தொடர்களி னின்று பெறப்படும் பொருள்களாம். அதனல் மருமக்கட்டாயமே முடிபாகின்றது. "பதிகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோச் சேரனின் தாயையும் அவன் தந்தையொடு விளக்கி, அவ்விருவர் பெற்ற மகன் இனையன் என்பது துலக்கி, இன்ன பெருங்கோச் சேரற்கு இவன் மருமான் எனக் குறித்து விவரமெல்லாம் விரிக்கின்றது"

—என்ற இவ்வெட்டுமே, மருமக்கட்டாயமுறை சேரர்க்கு உரியது என்பதனை வலியுறுத்துங் காரணங்களாகக் கருதப்படு கின்றன. இவையன்றி வேறுசில ஏதுக்களும் உண்டேனும், அவை யாவும் இவற்றுள்ளே ஒருபடியாக அடங்குவனவேயாகும். இக்காரணங்கள் பொருந்துவனவா என்பது பற்றியும், ஏற்புடைக் கருத்து யாதாம் என்பது பற்றியும் அடியில் வருமாறு பகுத்துக் கொண்டு ஆராய்வேன் :—

மருமக்கட்டாயப் பொருளாராய்ச்சி
மக்கட்டாயமுறைக்கு அமைந்த பொருள்
பிறசான்றுகள்
முடிவுரை

## மருமக்கட்டாயம்.

### [ சேரர் மரபு I ]

| (மருமகன் வழி) | | (மகள் வழி) |
|---|---|---|
| உதியஞ்சேரல் | (சகோதரி) | வெளியன்வேண்மான் நல்லினி |
| நெடுஞ்சேரலாதன் | (முதல் சகோதரி) | பதுமன்றேவி |
| களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் ⎫<br>ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ⎭ | (இரண்டாம் சகோதரி) | சோழன்மனைவி |
| சேரன் செங்குட்டுவன் ⎫<br>இளங்கோ ⎭ | | |

### [ சேரர் மரபு II ]

| (மருமகன் வழி) | | (மகள் வழி) |
|---|---|---|
| அந்துவன் | (சகோதரி) | பொறையன்பெருந்தேவி |
| செல்வக்கடுங்கோவாழியாதன் | ,, | பதுமன்றேவி |
| பெருஞ்சேரலிரும்பொறை | ,, | அந்துவஞ்செள்ளை |
| இளஞ்சேரலிரும்பொறை | | |

## II. மருமக்கட்டாயப் பொருளாராய்ச்சி

### [1-ஆம் காரணம்]

(*1*) "சேரலாதற்கு ... பதுமன்றேவி ஈன்றமகன்" என்ற தொடரில் பதுமன்றேவி என்பது பதுமனுக்கு மனைவி என்ற ஒரு பொருளே உடையதென்று மருமக்கட்டாயமுறை கூறுவோரால் கருதப்படுகின்றது. அவ்வாறு தேவிச்சொல்லுக்கு மனைவி என்ற ஒரு பொருள்தான் உண்டென்ற கருத்துப் பொருந்தாதென்பது பின்பு விளக்கப்படும். அக்கருத்துப்படி, பதுமன்றேவி என்பது பதுமன் மனைவியையே குறிப்பதாயினும், அத்தேவி சேரனுக்குச் சகோதரியே என்பது எதனுற் பெறப்பட்டது? அவள் பிறனுக் குரியளாயிருந்து பின்பு சேரனுற் காதலிக்கப்பட்டவள் என்றேனும், பகைப்புலத்தில் பிறனிடமிருந்து கவரப்பட்ட சிறைப்பெண் என்றேனும் சிலர் வாதிக்குமிடத்துச் 'சேரசகோதரியே அவள்' என்பதை உறுதிப்படுத்தற்கு அத்தொடரிலுள்ள சான்றியாது? பேரரசர் சிலர் காமக்கிழத்தியரையும் உடையராயிருந்தவர் என்பது கற்பியலொழுக்கங்களாலும், வையாவிக்கோப் பெரும் பேகன் போன்ருர் வரலாற்ருலும், 'சோழ பெருமானடிகள் போகியார் நங்கை சாத்த பெருமானுர்'[1] என்பன போலும் சாஸனத்தொடராலும் தெரியலாம். ஆதலால், சேர சகோதரியரே பதுமன்றேவி முதலியோர் என்பதற்கு ஆதாரமின்ருதல் காண்க.

(2) அன்றியும், மருமக்கட்டாய முறையில் சேர சகோதரி யர்க்கே அரசியலில் உரிமையும் பதவியும் உள்ளன என்பதும், சேரரால் அன்பு பாராட்டி மணக்கப்பெற்ற அவர் மனைவியர்க்குள்ள நிலைமையினும் தாழ்ந்த நிலையிலே அச்சகோதரி கணவர்க்குப் பெண் கொண்ட இடத்தில் உண்டென்பதும் மருமக்கட்டாய வாதிகள் உட்பட யாவரும் ஒப்பியவை. பதுமன்றேவி, பொறையன் பெருந்தேவி என்போர் சேரசோதரியரேயாயின், அரசியலிற் பதவி பெற்றுள்ள அக்கோமகளிர் பெயரைப் பதிகவாசிரியர் குறிப் பிட்டுச் சிறப்பிக்க ஒருபோதுந் தவருரன்ரே.[2] அவ்வாறன்றிப் பதுமன் பொறையன் என அம்மகளிர் கணவரையே பிரபலராக்கி, அரசியலுரிமையும் கோச்சேரரையீன்ற பெருமையுமுடைய சேர சகோதரியரை, அக் கணவர்க்குத் தேவியரே என்றவளவில் தெரிய

---

1 S. I. I. Vol. v, p. 238

2 தாய்வழிச் சிறப்புடைய பழைய ஆந்திரவேந்தரும், 'கௌதமீ புத்ர ஸ்ரீசாதகர்ணி' 'வாசிஷ்டீ புத்ர புலுமாயி' என்று தம் தாயர் பெயருடன் இணைத்துத் தம் பெயரை வழங்குதல், ஈண்டு ஒப்பிடத் தக்கது.

வைத்துப்போதல் மருமக்கட்டாயத்தையே குறிப்பிக்கும் என்பது எவ்வாறு பொருந்தும்? அன்றியும், **பெருந்தேவி** என்பது பேரரசரின் கோப்பெண்டிர்க்கன்றிப் பிறபெண்டிர்க்கு யாண்டும் வழங்காப்பெற்றியதன்றே? இதற்கு முன்னூல்களே தக்க சான்றுதல் பின்னர்த் தெளிய விளக்கப்படும். சிற்றரசனை வேள் குலத்தவனுகவும், சேரசோதரி கணவனுகவும் பொறையன் என்பவனைக் கொண்டு அவனைப் பிரபலனுக்கியதோடு அமையாது, அப்பொறையனுக்குப் **பெருந்தேவி** என்றும் பதிகமுடையார் கூறினர் எனல் மருமக்கட்டாயத்தையே வற்புறுத்துவதாகுமோ? பெருந்தேவிக்குக் கணவன் பெருங்கோ என்று கூறற்குரியனேயன்றி அவனை வேள்குலச்சிற்றரசன் எனல் எவ்வாறு அமையும்? இனி, அப்பிறர் கருத்துப்படி, வேள் குலத்தவனே பொறையன் என்று கொள்வதற்குத்தான் சான்றியாது? வேளாயின்—வெளியன் வேண்மாள், மையூர்கிழான் வேண்மாள், வேளாவிக்கோமான் என்ற ஏனையிடத்துப்போல அப்பொறையனையும் வேள்குலத் தொடர்பு பெறவைத்துப் பதிகவாசிரியர் குறிப்பிக்கத் தவறுரன்றே? இன்னேரன்ன கேள்விகட்கெல்லாம் ஏற்ற விடையொன்றுங் காணுமையின், பதுமன், பொறையன் முதலியோர் சேர சகோதரியரின் கணவரே என்ற கருத்தும் பொருந்தாமை தெரியலாம்.

### [2-ஆம் காரணம்]

(1) இனி, 'அந்துவற்கு ஒரு தந்தையீன்ற மகள் பொறையன் பெருந்தேவி' என்ற தொடருள், 'அந்துவற் கொருதந்தையீன்ற மகள்' என்பதனல் அந்துவன் என்ற சேரனுடைய சகோதரி அம்மகள் என்பது பெறப்படுதலின், அச்சோதரியீன்ற மகன் அந்துவனுக்கு மருகனுவன் என்பது விளங்கும்' என்பது மருமக்கட்டாயங் கூறுவோர் வாதமாகும். பொறையன் பெருந்தேவி என்பாள் அந்துவதற்குச் சகோதரி என்பதே பதிகவாசிரியர் கருத்தாயின், 'அந்துவதற்கு உடன் வயிற்றுள், ஒருவயிற்றுள்' என்று சகோதரியென்ற பொருள் புலப்பட நேரே கூருது 'அந்துவற்கொருதந்தை யீன்ற மகள்' எனத் தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பதென்னே? அவ்வாறு சுற்றிச் சொல்லுதலாற் பெறப்படும் பொருட்பேறு ஏதேனும் உண்டோ? 'அந்துவதற்கு ஒரு **தாயீன்ற** மகள்' எனின், உடன்பிறந்த மகளிரே அத் தாயமுறையில் உரிமை பதவிகட்கு உரியராதலின் அது மருமக்கட்டாயத்துக்குப் பெரிதும் ஏற்றதாகும்; அங்ஙனஞ் சிறந்து நிற்கும் உரிமைத் தாயைப் பேரற்றவளாக அடியோடும் ஒதுக்கி

அவளது மணம்பெற்றதையன்றி அரசியலில் வேறு மணம்பெறாத அவள் கணவனைப் பிரதானனாக்கி அவன்பெற்ற மக்கள் என்ற கருத்துப்பட 'அந்துவற் கொரு **தந்தை** யீன்றமகள்' என்று சேர சகோதர சகோதரியர் குறிக்கப்பட்டனர் என்பதும், அரசியற் பதவியற்ற அத்தகைய கணவனைப் பெருந்தேவியையுடைய பெருங்கோ என்பது புலப்படக் கூறினர் என்பதும் நாயர்கேரள முறைக்கு நன்கமைவன ஆகா என்க.

(௨) இஃதன்றி, பதிற்றுப்பத்துத் தொடர்களிலே சேர வுரிமையடைந்த கோமக்களைக் குறிக்குஞ் சொல்லாலேனும், பதுமன்றேவி முதலியோர் சேரசகோதரியரே என்று முடிவு படுத்த இடமுண்டோ எனின், அதுவும் பெரியதோர் மாறுபாடாக உள்ளது. மருமக்கட்டாயமே பதிகவாசிரியர் கருதிய தாயின்—சகோதரியரைக் குறிக்குஞ் சொல்லாற் கூறாது போயினும்—அவர் பெற்ற மக்கள் இன்னார்க்கு மருகர் என்ற முறை இனிது விளங்கச் 'சேரலாதற்குப் பதுமன்றேவி யீன்ற **மருகன்**' என்று கூறியேனும் அவர் தெளிவிக்கலாகும் அன்றோ? அங்ஙனமுமின்றி, 'மகன்' என்ற சொல்லானே யாண்டும் வழங்கி, மருகன் என்பதனையே அவர் முற்றும் மறந்து செல்வது பெரிதுஞ் சிந்திக்கத்தக்கது. 'சேரலாதற்குப் பதுமன் றேவியீன்ற மகன்' என்ற தொடர்க்குச் 'சேரலாதன் பொருட்டுப் பதுமன்றேவியான சோதரியீன்ற இன்னான்' என்பதே பிறர்கூறும் பொருளாம். 'பதுமனுக்கு அவன் மனைவி **யீன்ற** இன்னான்' என்பதனானே, அவ்விருவர்க்கும் மகனே அவன் என்ற முறை தானேபோதரும். ஆயின், அத்தொடரில் தெளிவிக்கப்பட வேண்டியது சேரலாதனுக்கு அவன் மருமகனானவன் என்பதே. 'சேரலாதற்குப் பதுமன் றேவியீன்ற மருகன்' எனின், பதுமன்றேவி யீன்ற மகன் சேரலாதற்கு மருகனானவன் என்பதுடன் அத்தேவி சேரசகோதரியே என்பதும் தெளிவாகப் பெறப்படும். 'சாத்தனுக்கு இச்சிறுவன் எம்முறையினன்?' எனின், 'அவனுக்குக் கொற்றன் மனைவி பெற்ற **பேரன்** என்பது விடையாக இக்காலத்து மக்களும் வழங்குவர்; இதுவும் 'பேரன்' என்பதனால், கொற்றன் மனைவி அவன் **மகளே** என்பதைத் தெளிவுபடுத்துவதாம். இம் முறையானன்றிச் 'சேரலாதற்கு இன்னான் மனைவி யீன்ற **மகன்**' எனின்—மேற் குறித்தபடி அம்மனைவி சேர சகோதரியே என்பதற்கு யாதொரு குறிப்பும் இல்லாத நிலையில்—'பதுமனென்பானொருவனுக்குத் தேவியாயிருந்தவள் கருவில் சேரனுக்குப் பிறந்த மகன்' என்பது பட்டு விபரீதப் பொருள் பயக்கும் என்பது திண்ணம். அவ் விபரீதத்துக்கு உள்ளாகாதவாறு காக்க வேண்டின், சேரனுக்கு

அவன் மனைவியான பதுமன்றேவி வயிற்றுப் பிறந்த மகன் என்றே அத்தொடர்க்குப் பொருள் கூற வேண்டும். சேரர் சோதரியரல்லாதவரை அவர் சோதரியரென்றும், அவர் மருகரல்லாதவரை மருகரென்றும் மனோபாவம் பண்ணிக்கொண்டு, பழிகளைப் பல படியாக ஏறிட்டுக் கூற மூலத்திற் சிறிதும் இடமேயில்லை. இச் செய்தி பின்பு நன்கு விளக்கப்படுதலின் ஈண்டு விரித்திலேன்.

(3) இவ்வாறு தங்கொள்கைக்கு மகனென்ற சொல் நன்கமையாமையால், அச்சொற்கு 'வழித்தோன்றல்' என்ற பொருளு முண்டென்றும், அதனால் சேரலாதன் முதலியோர்க்கு அவர் சகோதரியரீன்ற வழித்தோன்றலரே அவர் என்ற கருத்தை அச் சொல் பயக்கும் என்றும் அன்னோர் கூறினர். ஆண்மகன், பெற்ற மகன் என்ற பொருள்களில் மகன் என்பது அசாதாரணமாக வழங்குவதன்றி 'வழித்தோன்றல்' என்ற பொருட்கண்ணும் அது வழங்குவதென்பது பிரமாணபூர்வமாயன்றி ஏற்கத்தக்கதன்று. "மருமான் பிறங்கடை யும்பல் வழித்தோன்றல்" என்பது திவாகரம். இதனுள் மகனென்பது வழித்தோன்றலின் பரியாயங்களுள் ஒன்றாகப் படிக்கப்படாமை காண்க. முன்னூல்களினும் அப்பொருள் வழக்கின்று.

"வென்வேற் கிள்ளிக்கு நாகநாடாள்வோன்
தன்மகள் பீலிவளைதான் பயந்த
புனிற்றிளங் குழவி" (மணி. 29, 3 - 5)
"பிரமசுந் தரனெனும் பெரும்பெயர் முனிவற்குப்
பழிப்பில் கற்பிற் பரமசுந் தரியெனும்...பத்தினி
விரும்பிப் பெற்ற புத்திரன்" (பெருங்கதை, 2, 11, 86 - 9)
"மதிமரு ணெடுங்குடை மறமாசேனற்கு
முதற்பெருந்தேவி திருநாளீன்ற...வாசவதத்தை"
(ஷெ 5, 7, 28 - 31)
"பிரச்சோதனற்கு...இயற்பெருந்தேவி வயிற்றகத் தியன்ற...
வாசவதத்தை" (ஷெ. 2, 4, 8 - 25)

என்ற முன்னோர் கூற்றுக்களிற்போல,[1] 'இன்னார்க்கு இன்னாளீன்ற மகன் அல்லது மகள்' என நேரே பொருள் கொள்வதை விட்டு, இன்னார்க்கு என்பதைக் கொடைப்பொருளில் ஏற்போனைக் குறிக்குமென்றும், இன்னாள் என்பது சகோதரி என்றும், மகன் என்பது வழித்தோன்றல் என்றும் வலிந்து பொருள்கொள்வது எற்றுக்கோ?

"அந்துவற் கொருதந்தை யீன்ற மகள்
பொறையன் பெருந்தேவி யீன்ற மகன்"

[1] இம்மேற்கோள்கள், மகாவித்வான் : ஸ்ரீ: ரா. இராகவையங்கார் அவர்களால் தெரியவந்தவை.

என்ற பதிகத் தொடருள், 'தந்தையீன்ற மகள்' என்பதற்குமட்டும் பெற்றமகள் என்று பொருள் கூறுவோர், அடுத்துள்ள 'பெருந்தேவியீன்ற மகன்' என்பதற்குப் 'பெருந்தேவி பெற்ற வழித்தோன்றல்' என்று பொருள் கொள்ள வேண்டிய இன்றியமையாமை என்னையோ? தாம் கருதிய மருமக்கட்டாய வழக்கை இயற்கையானன்றி அத்தொடரினின்று வலிந்து பெறவைக்கவே அவ்வாறு கூறப்படுதல் தெரியலாம். 'அந்துவற் கொருதந்தையீன்ற மகள்' என்பதற்கு 'அந்துவனுடைய தந்தை பெற்ற மகள்' என்பதன்றோ, அவர் சுற்றிக்கூறும் பொருள்? அப்பொருளில், அந்துவற்கும் தந்தைக்கும் உள்ள முறையைக் குவ்வுருபு காட்டி ஒழிந்ததாகும். ஆகவே, பொறையன் பெருந்தேவி ஈன்ற மகனை ஏற்றற்குரிய மாமனொருவன் இல்லையாகின்றான். அம்மாமன் அவ்வந்துவனேயாக வேண்டும் என்னும் நியதியில்லை. உதியஞ்சேரற்கு, சேரலாதற்கு என ஏனையிடங்களில் வரும் நான்கனுருபுகளை 'ஈன்ற' என்ற வினையோடு ஒருமுறையே நெடுக இயைத்துக் காட்டிவரும் பதிகவாசிரியர், ஈண்டுமட்டும் அம்முறையை மாற்றிக் குவ்வுருபைத் தந்தையுடன் இணைக்க முறைப்பொருளும், மகனுடன் இணைக்கக் கொடைப்பொருளுமாக இருவகையும் ஓரிடமே பெற அமைத்தனர் என்று மருமக்கட்டாயங்கூறுவோர் கூறும் கருத்து அறிஞர் ஏற்கத்தக்கதன்று. அது கருத்தாயின், ஈண்டு 'அந்துவதற்கு ஒரு தந்தையீன்ற மகள்' என்றவாறு, உதியஞ்சேரற்கு ஒரு தந்தையீன்ற மகள், சேரலாதற்கு ஒரு தந்தையீன்ற மகள் என்று கூறிச் சேரசோதரியரே அத்தேவியர் என்பதை ஏனையிடங்களிலும் தெளிவுபெறவைத்துப் பதிகவாசிரியர் கூறாமற்போகார் என்பதும் திண்ணம் என்க.

[3-ம் காரணம்]

இனி, இளங்கோவடிகள் தம் முன்றோன்றலான செங்குட்டுவனை—"சேரலாதற்குச் சோழன் மகளீன்ற மைந்தன்" என்று கூறிய உரைப்பாட்டுமடைத்தொடர் தம் மருமக்கட்டாயக் கொள்கையோடு பெரிதும் முரணுதலால், அதன்கண்ணுள்ள 'சோழன்மகளீன்ற **'மைந்தன்'** என்பதற்குச் 'சோழன் மனைவியீன்ற வழித்தோன்றல்' என்று பொருள் கூற வேண்டியதும் அன்னோர்க்கு அவசியமாயிற்று. அதனால், மகளென்பது மனைவிப் பொருளில் வருமிடங்களைத் தேடி அவற்றைத் தமக்கு ஆதாரமாகப் பற்றலாயினர், அன்னோர்.[1]

---

[1] மனைவிப் பொருளில் மகட்சொல்வருவதற்கு அவர் காட்டிய பிரயோகங்களிலே, 'கண்போன்ற மாமன் மகள்' என்ற சிந்தாமணித்

(1) அம்மேற்கோளைப் பற்றிக் கூறுதற்குரிய குறை ஈண்டு இல்லை. ஆனல், இளங்கோவடிகள் தம் தமையனது பிறப்புச் செய்தியை விளங்கக் கூறவந்தவிடத்தே மனைவிப் பொருளில் மகட் சொல்லை இட்டுவழங்கினர் என்பார் கூற்றே அக்குறைக்குப் பெரிதும் உரியதாகின்றது. செங்குட்டுவனுடன் ஒரு தாய் வயிற்றுப் பிறந்த அடிகள்—'நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மகளீன்ற மைந்தன்' என்பராயின், அத்தொடர் அவ்வடிகளது பிறப்புச் செய்தியையும் உணர்த்தியவாறேயாம். 'சோழன் மனைவி பெற்றவனும் சேரலாதன் மருமகனும் ஆனவனே செங்குட்டுவன்' என்று அவர் கருதியிருப்பின், 'சேரலாதற்குச் சோழன்றேவி யீன்ற மருகன்' என்று ஐயத்துக்கிடமின்றி விளக்கமாகப் பாட அவ்வடிகள் அறியாதவரல்லரே? பதிற்றுப்பத்துப் பதிகவாசிரியர் நெடுக மகனென்று கூறியதையொப்பவே, 'மகளீன்ற மைந்தன்' என்று இவரும் வழங்க வேண்டிய இறுதியமையாமை என்னே? உதயகுமரனும் மணிமேகலையும் முற்பிறவியிற் கணவனும் மனைவி யுமாகவிருந்த செய்தி கூறுமிடத்து—"நினக்கிவன் மகனுத் தோன்றியதூஉம், மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்" எனச் சாத்தனர் கூறலாயினர். இங்கு மகன், மகள் என்பன—வதூவ்ரர்க்குப் 'பிள்ளை, பெண்' என்ற வழக்குப் போலக் கணவன், மனைவியரையே உணர்த்துவனவன்றி வேறுணர்த்த இடமில்லை. மருமக்கட்டாயப்படி 'சேரலாதற்குச் சோழன்றேவி யீன்ற மருகன்' என்ற கருத்து விளங்க இளங்கோவடிகள் பாட வந்தவிடத்தே—'தம் தாயைப்பெற்றவன் சோழனே, சேரனுக்கு அத்தாயிடம் பிறந்த மகன் தம் முன்றேன்றலான செங்குட்டு வனே' என்ற பொருளே யாவர்க்குந் தோன்றித் தாங்கருதிய தற்கு மாறுன பொருள் பயக்கும்படி, தேவியைக் குறிக்க மகட் சொல்லையும், மருகனைக் குறிக்க மைந்தனையும் அவ்வடிகள் அமைத்தார் எனல் அறிஞர்க்கு ஏற்குமோ? பதுமனுக்குத் தனயை என்று கூருது தேவிப் பெயராற் கூறியது மக்கட்டாயங் கூறுவோரது பொருளிற் குற்றங்காண்போர், மருமகன் என்று கூற வேண்டிய இடங்களில் மகன் என்றே கூறியதால் உண்டாம் பெருங்குற்றங்களை மறந்தது வியப்பேயாம்! அவர் கருத்தின்படி சேரன் மருகனே செங்குட்டுவன் என்பதனைச் சேர சம்பந்தமில்லா

---

தொடருமொன்று. ஈண்டு 'மாமன் மகள்' என்ற சிந்தாமணியாசிரி யர் கருத்து—'மாமன் புதல்வி' என்பதன்றி, 'மாமனுக்கு மனைவி' என்பதன்று. 'மாமன்' என்றது சீவகற்கு அம்மானுன கோவிந்தனை. அதனுல், அவர் காட்டிய அம்மேற்கோள் ஈண்டு ஏற்புடைத்தன் றென்க.

தவரும் பிற்பட்டவருமான பதிகவாசிரியர் கூறுததுபற்றி அத்துணையாகக் குறைகூறுதற்கு இடமில்லை. நேர்மருகருள் ஒருவரான இளங்கோவடிகள் அம்மானுரிமையை அடைந்து விளங்கும் தம் தமையனைச் 'சேரலாதன் பொருட்டுச் சோழன்றேவியின்ற மருகன்' எனத் தாம் பாடப்புக்க உரைநடையிலும் தெளிவியாது அதற்கு முற்றுமாறான பொருளே வெளிப்படையாம்படி ஒரு தொடரை அமைத்தனர் எனல் சிறிதும் பொருந்தாதென்க.

(2) செங்குட்டுவனைச் சோழன்மகளீன்ற மைந்தன்' என அவனிளவலான அடிகள் கூறியது, சோழன் மகனே அவன் என்ற கருத்தாலன்று என்பதனை வேறு வழியாலும் தெளிவிப்பேன். பத்தினியின் கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) முடிந்த பின், செங்குட்டுவன் வேள்விச்சாலைக்கு எழுந்து சென்றபோது, உடன் செல்லவெழுந்த இளங்கோவடிகளை நோக்கிப் பத்தினிக் கடவுள் தேவந்தியென்ற பார்ப்பனமாதின்மேல் ஆவேசித்தவளாய்—

"வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
**நுந்தை** தாணிழ லிருந்தோய் ! நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரசாள் வேந்தென்
றென்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி"

என்று கூறியதாக அவ்வடிகளே தம் நூன்முடிவிற் பாடுகின்றார். வஞ்சிமாநகரில் ஆண்டுவந்த சேரன் தம் மாமனேயாயின், அவர் அம் முறைச் சொல்லைப் பெய்து தமக்கு அவனோடுள்ள உறவுமுறையை ஆண்டுந் தெளிவுபடுத்தாது '**நுந்தை** தாள்நிழ லிருந்தோய்' என்று அவர் பாடுவரோ? ஈண்டு நுந்தைச்சொல் மருமக்கட் டாயமுறையோடு பெரிதும் மாறுபட்டு நிற்றலால், அதற்கும் வேறு பொருளொன்று அத்தாயங்கூறுவோராற் கற்பிக்கப்பட வேண்டுவதாயிற்று. அஃதாவது—'நும் தலைவன்' என்ற பொருளே நுந்தைக்குரியது என்பதாம். 'எந்தை வாழிய வாதனுங்க' என்பது போன்றவை அப்பொருட்கு அவர் காட்டும்

பிரமாணங்களாம்.[1] அஃது இங்கு ஆராயற்பாலது. 'நுந்தை தாணிழ லிருந்தோய்' என்புழி, நுந்தைச்சொல் தலைவன் என்ற கருத்தைக் குறிக்க வேண்டி ஆண்டு வந்ததன்று; மற்றுச் சேரலா தற்குப்பின் அவனது 'அரசு வீற்றிருக்குந்திருப்பொறி'யுள்ள கோமகனைக் குறிப்பிட வந்தவிடத்தே, ஆவேசமுற்ற தேவந்தி இளங்கோவை அங்ஙனம் விளித்தனளாவள் அதனால் அந்நுந்தை மொழி, முன்னவற்குப் பின்னவனோடுள்ள உறவு முறையையும் அது பற்றி வரும் அரசுரிமையையும் குறித்தற்கு வந்ததென்றே கொள்ளற்பாலது. அவ்வாறன்றி, மருமக்கட்டாயப்படி அம்மான் என்ற முறையாலுங் கூறுதலொழித்து, யாவர்க்குந் தலைவனாதற் குரிய அரசனை 'உனக்குத் தலைவன்கீ ழிருந்தவனே' என்று பொதுப்பொருள்படத் தேவந்தி இளங்கோவை நோக்கி விளித்த னள் என்பது, ஆங்குள்ள சந்தர்ப்பத்துக்குச் சிறிதும் ஒவ்வாமை காணலாம்.

(3) இன்னும், மருமக்கட்டாயங் கூறுவோர் கருதுமாறு, சோழன் மணக்கிள்ளியே செங்குட்டுவன் தந்தையாயின், அக்கிள் ளியே அக்காலத்துத் தலைமை வகித்த சோழவரசனாவன். என் னெனில்—அப்போது ஆட்சிபுரிந்துவந்த சோழனிறந்ததும் அவ னாட்சியுரிமை பற்றி ஒன்பதின்மர் ஒருங்கு திரண்டு "இளவரசு பொறார் ஏவல்கேளார், வளநாடழிக்கும் மாண்பின"ராய்ப் பெருங்கலாம் விளைக்கச் செங்குட்டுவன் அரசுக்குரிய கோமக னுக்குத் துணையாகச் சென்று, நேரிவாயிலிற் பெரும்போர்புரிந்து அவ்வொன்பதின்மரையுங் கொன்று கலகத்தையொடுக்கி, அக் கோமகனையே சோழசிங்காதனத்தில் நிறுவினன் என்ற செய்தியை மாடலன் கூற்றாகவைத்து இளங்கோவடிகள் ஈரிடங் களிற்கூறுகின்றார்.[2] "ஒன்பது குடையுமொருபக லொழித்து" என்ற அவ்வடிகள் கூற்றால், சோழர் கிளை ஒன்பது பிரிவுபெற்று ஒன் பதின்மர் சோழரால் ஆளப்பட்டுவந்ததென்பதும், அவ்வொன் பதின்மரினும் வேறாய் அந்நாட்டின் தலைமையரசுக்குரியனாயிருந்த கோமகனே செங்குட்டுவனால் உதவிபுரியப்பெற்றவன் என்பதும் பெறப்படும். "ஆராத் திருவிற் சோழர்குடிக்குரியோ, ரொன் பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து" என்றார் பதிற்றுப் பத்துப்

---

1 'அஃதை தந்தை...அடுபோர்ச் சோழர்' என்பது, தந்தை முறையினரையே குறிக்கவந்த தொடராதலின், (தொல். சொல். 461, நச்.) அதனைத் தலைவன் என்ற பொருளில் வந்ததாக வாதியர் தமக்கு ஆதாரமாகக் காட்டியது பொருந்தாதென்க.

2 சிலப். 27, 118-23; 159-61.

பதிகவாசிரியரும் எனவே, செங்குட்டுவனால் அழிவுண்ட ஒன்பதின்மருட் சேராத தலைமைச் சோழனே மணக்கிள்ளி என்பதும், அவன் வழித்தோன்றலே சோழ சிங்காதனத்தில் நிறுவப்பட்டவன் என்பதும் சொல்லாதே அமைவன. அங்ஙனம் அரசியலில் நிறுவப்பெற்ற கோமகன் செங்குட்டுவற்கு மிக நெருங்கிய உறவினனாகவும் வேண்டும். இல்லையேல், ஒருவன்பொருட்டு பிறசோழர்குடி வேந்தரையெல்லாம் ஒருங்கே அழித்துவிட வேண்டிய ஆவசியகம் அவனுக்கு ஒருபோதும் நேர்ந்திராது. அதனால் மருமக்கட்டாயப்படி செங்குட்டுவனுடைய தந்தையாதற்குரிய சோழன் பெற்ற மக்களுள் ஒருவனாகவோ, மக்கட்டாய முறைப்படி அச்சேரனின் தாய்ப்பாட்டன் வழித்தோன்றலாகவோ அவனுதவி பெற்ற சோழ கோமகன் இருத்தல்வேண்டுமென்பது பெறப்படுகின்றது.

மருமக்கட்டாயத்தின்படி, செங்குட்டுவன் தந்தையான மணக்கிள்ளி பெற்ற மகனே அவனால் உதவிபுரியப்பெற்றவனாயின், அவன் அக்குட்டுவற்குச் சகோதரனாதல் வேண்டும். வேண்டவே, செங்குட்டுவனுடன் அவனுதவிபெற்ற கோமகனையும் இளங்கோவையும் சேர்த்து, மணக்கிள்ளிக்கு மூவர்மக்களிருந்தனர் என்பது முடிகின்றது. செங்குட்டுவற்கும் இளங்கோவுக்கும் அப்புதிய சோழகோனை இளவலாகக் கொள்ளுமிடத்து, மூத்தவனான செங்குட்டுவனே சோழவரசுரிமையையும் எய்துதற்கு உரியனாகின்றான். சளுக்கிய வேந்தற்குச் சோழன் மகள்பெற்ற புதல்வனான முதற்குலோத்துங்கன், தன் அம்மானது சோணாட்டை அடைந்தபின், தன் தந்தையின் வேங்கை நாட்டுக்குந் தானே உரிமைபூண்டு சோழ ஏகாதிபத்தியத்தைப் பெருக்கியவாறே, தன்னம்மானுரிமையான சேரநாட்டைப் பெற்ற செங்குட்டுவன் தன் தந்தையின் சோணாட்டுக்குந் தானே உரியனாய்ப் பேரரசனாக விளங்கவேண்டியவனல்லனோ? சோழவரசுக்குரியனான மூத்த மகனொருவனை, சேரர் குடியில் மகட்கொண்ட குற்றத்தால் அச்சேரற்கே சோழன் விற்றுவிட்டனனாயின், அது, முடிகெழுவேந்தர் மூவருள் ஒருவரான சோழர் மரபுக்கு இழிவு நிலையைக் கற்பிப்பதேயாகும். சோழற்கே கொடுத்துவிட்டதாகக் கொள்ளுமிடத்தும் அச்சோழவரசுரிமை செங்குட்டுவன் தம்பியான இளங்கோவுக்குத் தன்னடைவே இறங்கக்கூடியதன்றோ? அதனால், அவ்வரசுரிமை தன் தமையனுக்குக் கிடைக்கும்படி தான் மாமனிடத்தினின்று விலகிவிட்டுத் தந்தையுரிமையான சோணாட்டைத் தன்னடைவே பெறுதற்கு அவ்விளங்கோ யுவராஜ்யபட்டாபிஷேகம் பெற்றுக் காத்திருக்க வேண்டியவனேயன்றி, தமையன் அம்மா

னுரிமையடைதற்குத்தான் தடையாயிருப்பதாகக் கருதவும், அதன்பொருட்டுத் தன் அரச போகத்தை அடியோடு வெறுத்துத் துறவுபூணவும் அவற்கு நேர்ந்தன எனல் பொருந்துமோ? அன்றியும், பேரரசனை சோழன் தனக்குப் பிறந்த முதன்மை மக்களிருவரைச் சேரனுரிமை பெறவேண்டி அவன் வாயிலிற் காக்க வைத்திருந்தனன் என்பதும், அவருள் இளையவற்குத் தன்னுரிமையை அளித்துவிட்டுத் தான் துறவு பூணுது, அவ்விளைஞன் அரச போகத்தைத் துறந்து தவசியாகும்படி தான் பார்த்துக்கொண்டு ஆட்சிபுரிந்துவந்தனன் என்பதும் சோழர்குடிக்கே பழிப்பைத் தருவன வன்றோ?

இனிச் செங்குட்டுவற்கும் இளங்கோவுக்கும் மூத்தவனே சோழ சிங்காதனத்தில் நிறுவப்பட்ட கோமகன் எனின், அவ்விருவர்க்கும்போலவே இக்கோமகனுக்கும் நெடுஞ்சேரலாதன் அம்மானுதல் வேண்டும்: வேண்டவே, அவ்வம்மானுரிமையைச் செங்குட்டுவற்கு முற்பட இக்கோமகனே அடைதற்குரியன். இப்பொருந்தாமைகள் நிகழ்வதுபற்றி, செங்குட்டுவன் தந்தையாகிய சோழனுக்குத் தேவியரிருவரையும் அவருள் சேர சகோதரியான தேவியிடம் பிறந்த மக்களாகச் செங்குட்டுவனையும் அவனிளவலையும், வேருெரு குலத்துத் தேவியிடம் பிறந்தவனைச் சோழ சிங்காதனம்பெற்ற கோமகனையும் மருமக்கட்டாயங்கூறுவோர் இனிப் புதிதாகக் கற்பிக்க வேண்டியதேயாம். ஆயின் இக்கருத்தும் அமையாமையை இனி விளக்குவேன்.

(4) மருமக்கட்டாயப்படி சோழன் மகனுதற்குரிய செங்குட்டுவனுல் சோழ சிங்காதனம் பெற்ற கோமகன், அக்குட்டுவற்கு மேற்கூறியவாறு சகோதரனுயினும் பின்னேதரனுயினும் வேறியாவனுயினும் தந்தைவழியில் அவன் ஞாதியரசனே என்பதில் யாதோர் ஐயமும் நிகழ இடமில்லை. பகைத்து நின்ற நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி என்ற சோழவரசர்களை நோக்கி, "ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே, இருவீர்வேற லியற்கையு மன்றே" (புறம். 45) என்று கோவூர்கிழார் பாடியதும், சோழர்குடி முழுதும் ஒரு கோத்திரமுடையது என்ற கருத்துப்பற்றியதேயாதல் காணலாம். அதனுல் அக்குடி முழுதும் செங்குட்டுவற்கு ஞாதிவழியில் தந்தை, சகோதரன், மகன் போன்ற முறைகளுள் ஒன்றற்குரியதாகுமேயன்றி, தந்தையுடன் பிறந்தாள், தாயுடன் பிறந்தான் முதலிய பிறகோத்திரம் பற்றிவரும் முறைக்குரியதன்று என்பது தெளியப்படும். செங்குட்டுவனுக்கும் அவனுல் உதவப்பெற்ற சோழனுக்கு முள்ள உறவுத்தொடர்பு மேற்கூறிய முறைதவறி அமையுமாயின்,

அப்போது அவ்விருவரும் ஒரு கோத்திரமுடைய சோழர்குடிப் பிறந்தவர் அல்லரென்றும், வேறுபட்ட குடியினரே என்றும் ஐயமின்றி ஒருதலை துணியத் தடையில்லையன்றோ? இளங்கோ வடிகள் தம் தமையனுக்கும் அக்கோமகனுக்கும் உள்ள உறவு முறையை—

''நின் மைத்துனவளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பின ரொன்பது மன்னர்'' (சிலப். 27, 118—9).

என்ற தொடரிற் கூறுதல் குறிப்பிடற்பாலது. செங்குட்டுவற்கு அவனுதவிபெற்ற சோழன்மகன் மைத்துனனே என்று, உடன் பிறந்த அடிகள் முறை கூறிச் செல்வது, மருமக்கட்டாயக் கொள்கையைத் தலைகவிழ்ப்பதேயன்றோ? அத்தாயமுறைப்படி, சோழன் மகனை செங்குட்டுவற்கு அச்சோழ கோமகன் சகோத் திரனுதலின், மைத்துன முறைமை அவ்விருவர்க்கும் எவ்வாற் றானும் ஒத்தியைவதன்றே? தந்தையுடன் பிறந்த அத்தை, அன்றித் தாயுடன் பிறந்த மாமன் என்பார் மக்களேனும், அத்தை அம்மான் முறையினர் மக்களேனும், மனைவியுடன் பிறந்தார், அன்றி மனைவியின் சகோதரமுறையினரேனும் 'மைத்துனன் மைத்துனி' என்ற வழக்கிற்குரியரேயன்றி, ஞாதியர் அவ்வழக் கிற்குரியராகாமை நாடறிந்ததொன்றும். அதனுல், மகன், மகள், மைந்தன், தந்தை என்பவற்றுக்கு வேறு பொருள் கற்பித்தவாறு இதற்குங் கற்பித்து இணைத்தற்கு இடமில்லை. இங்ஙனம், செங் குட்டுவற்கு அவனுதவிபெற்ற சோழன் மகன் வேற்றுக்குடிப் பிறந்த மைத்துனன் என்பதனுலும், 'நுந்தை' எனச் சேரனைக் குறிப்பிடுதலாலும் அக் குட்டுவன் சேரர்க்குப்பிறந்த மகனே யன்றிச் சோழன் மகனல்லன் என்பதும், அதனுல், சேரலாதற்குச் சோழன் மகளீன்ற மைந்தன்' என்ற இளங்கோவடிகள் கருத்து, சேரனுக்குச் சோழன் தனயைபெற்ற புதல்வனே என்பதும் மலை யிலக்காதல் கண்டு கொள்க. இதனுல், '' அடிகளின் மூலவாக்கி யத்திலும் அடியார்க்கு நல்லாரின் உரைத் தொடரிலும் வருகின்ற மகள் என்னுஞ்சொல் தனயைப் பொருளிலேயே நிற்குமாயின், இதுவரை நாம் செய்த ஆராய்ச்சி யெல்லாம் விழல் நீராகும்'' என்று மருமக்கட்டாயக் கொள்கையினரே கூறியவாறு, மகட் சொல், அம்முன்னோர் கருத்துப்படி தனயைப் பொருளதேயாதல் கண்டு கொள்க.

[4-ம் காரணம்]

பதிற்றுப்பத்துத் தொடர்களிலே, புலவர்கள் பாட்டுடைச் சேரர் பெயர்களைக் குறிப்பிட்டவாறு, அவர் மனைவியர் பெயரை

ஓரிடத்தேனும் சுட்டாமல் 'நன்னுதல் கணவ' 'ஒண்டொடி கணவ' 'நல்லோள்கணவ' என்றிவ்வாறு அன்னோர் கூறிச் செல்லுதலே, மருமக்கட்டாயப்படி அரசியலில் உரிமை பதவியற்ற அம்மனைவியரின் சிறப்பிலாநிலைமை குறிப்பதாகும் என்று அத் தாயங்கூறுவோரால் வாதிக்கப்படுகின்றது. இவ்வாத முறையே நோக்கின், உரிமை பதவிகட்குரிய சேர சகோதரியரின் பெயர்கள் அத் தாயத்திற்கேற்பச் சுட்டிக் கூறப்பட வேண்டியது இன்றியமையாததாகின்றது. அவ்வாறு ஓரிடத்தேனும் அச்சேர சகோதரியர் பெயர்கள் பதிற்றுப்பத்துப் பாடல்களிலே பயிலாததென்னே? பதிற்றுப்பத்துப் பாடிய புலவர்கள் பலராய் முற்பட்டிருந்தவரென்பதும், அப்பத்துக்களைத் தொகுத்து அவற்றின் பதிகங்கள் பாடிய புலவர் ஒருவராய்ப் பிற்பட்டிருந்தவரென்பதும் ஈண்டு அறியத்தக்கன. இஃது, அச்சேரர்களின் நீண்டும் குறுகியும் உள்ள ஆட்சிக் காலங்களின் தொகையை ஒவ்வொருவர்க்கும் பதிகவாசிரியர் கூறிச் செல்வதாலும் அறியப்படும். மருமக்கட்டாயங் கூறுவோரும் இதனை மறுத்தனரில்லை (செந். பக். 128). அங்ஙனமாகவும் பதிகம் பாடியவரே பாட்டும் பாடியவராகக் கருதி அப்பதிகங்களில் மட்டும் பயிலும் சேர சகோதரியர் பெயர்கள் பதிற்றுப்பத்துப் பாட்டுக்களிலும் பயில்வதாகக் கூறியது மாறுபாடாம். இதனால், சேர மனைவியரைப் போலவே, சேர சகோதரியரையும் பதிற்றுப்பத்துப் புலவர்கள் பெயர் கூறினர் இல்லை என்பதும், அதனால் அச் சிறப்பின்மையின் அவ்விருவரும் ஒருதன்மையரே என்பதும் தெரியலாம். சேரரைச் சார்ந்த அம்மகளிர் மட்டும் அல்லர். மக்கட்டாயிகளாகவே மருமக்கட்டாயங் கூறுவோராலும் கொள்ளப்பட்ட சோழ பாண்டியரின் அரசரிமைத் தேவியரும் பிறரும் பெயர் கூறிச் சிறப்பிக்கப் பெற்றனரில்லை. "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறம். 3) எனப் பாண்டியன்றேவியையும், 'அறம்பாடிற்றே யாயிழை கணவ' (ஷை, 34) எனச் சோழன்றேவியையும், "மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்" (மலைபடு. 58) என நன்னன்வேண்மான் றேவியையும் பெயர் கூறாது, அவர் நன்னலமே விளங்கப் பண்டைப் புலவர்கள் பாடுதல் காண்க. "மக்களுட் பெண் பாடுதல் சிறப்பின்மையிற் 'செயிதீர் கற்பிற் சேயிழை கணவ' என்றாற்போலச் சிறுபான்மை ஆண் மக்களொடுபடுத்துப் பாடுப" (தொல். புறத். 26) என்பர் நச்சினார்க்கினியர். இவ்வரசியுரளவேயோ! "மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" (திருமுரு. 6), 'மங்கையர்கணவ' (ஷை. 269) எனத் தெய்வபத்தினியரும் இம்முறையே சிறப்பிக்கப்படுதல் காணலாம். ஒருகால், இத்தெய்

வங்களும் மருமக்கட்டாயத்தினரென்றே வாதிக்கவும் படுங் கொல்! இவற்றால் மருமக்கட்டாயங் கோடற்குப் பண்டைப் புலவர்கள் மனைவிபெயர்சுட்டாது சென்றமையைக் காரணமாக்கிக் கூறிய புறச்சான்று சிறிதும் பொருந்தாதென்க.

[5-ம் காரணம்]

பதிற்றுப்பத்திற் கண்ட சேரவரசர் இருகிளையினராவர் என்றும், ஒருகிளையினர் உதியஞ்சேரலையும் மற்றொருகிளையினர் அந்துவஞ் சேரலையும் மூலபுருடராக உடையரென்றும், மாமன்மாரும் மருமக்களும் மூத்தவன் முறையில் ஒருவர்பின்னொருவராக ஆட்சி பெறுதற்குரிய மருமக்கட்டாயப்படி, உதியஞ்சேரலின் மருகன் (1) நெடுஞ்சேரலாதனும், அவன் பின் அவன் தம்பி (2) பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் ஆண்டபின், அவ்விருவரின் சகோதரிகளுள் ஒருத்தியான பதுமன்றேவியின் மூத்தமகன் (3) நார்முடிச் சேரலும், அதன்பின் மற்றொரு சகோதரியான சோழன்தேவிமகன் (4) செங்குட்டுவனும், அவன்பின் முற்கூறிய பதுமன்றேவியின் இளையமகன் (5) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் பட்டம்பெற்றிருத்தலும்; மற்றொருகிளையில்—அந்துவற்குப்பின் மருகர்பரம்பரையில் இங்ஙனமே ஆட்சித்தொடர்பு அமைந்திருத்தலும் மருமக்கட்டாய முறைக்கே ஏற்றதாகும் என்றும் அத்தாயமுறைபற்றி வாதிப்போரால் தெளியக் கூறப்படுகின்றன. அன்றியும், இம்முறையை மக்கட்டாயத்துக் குற்றதாகக் கொள்ளுமிடத்து, சேரலாதற்குப் பின் அவன் மூத்தமகன் செங்குட்டுவன் பட்டம்பெறுதலை விலக்கி, அவன்பின்னோனை நார்முடிச்சேரல் ஆட்சிபெற்றிருத்தலும், செங்குட்டுவற்குப்பின், அவன் மகனைப் பதிற்றுப்பத்துக் கூறும் குட்டுவன்சேரல் பட்டம்பெறாது, அச்செங்குட்டுவற்கு மற்றொருபின்னோனை ஆட்கோட்பாட்டுச் சேரல் ஆட்சி பெற்றிருத்தலும் முறையல்ல என்றும் வாதிக்கப்படுகின்றது. மேலெழநோக்குமிடத்து, இவ்வாதம் அமைவுடையதுபோல் தோற்றினும், சரித்திர வுண்மைக்கு இது பெரிதும் முரண்பட்டு நிற்றலை இனிவிளக்குவேன்.

(1) பதிற்றுப்பத்துக்கூறும் சேரரையெல்லாம் ஓரிடத்தாட்சி செய்துவந்த ஒருகிளையினராகவே கொண்டு இம்முறை கூறுவதாயின், அது சிறிது சிந்தித்தற்குரியதாகும். அவ்வாறன்றி ஈரிடத்திருந்து ஆண்டுவந்தவராக அவரே பகுத்துக்கொள்ளுதலை முற்கூறிய அவர் கருத்தால் தெளியலாம். ஆயின், பலவிடத்துப் பலகிளையினராய் ஆண்டுவந்தவராகவும் அவரை நாம் பகுத்துக்

கொள்வதால் நேருந்தடையென்னே? உண்மையில் சங்ககாலிலே தமிழ்மூவேந்தரும் தனித்தனியே பலபகுதிப்பட்டிருந்தவர் என்பது ஈண்டு அறியத்தக்கது. ஆயினும், அவ் வேந்தர்குடியில் தலைமையரசனொருவன் அக் குடிக்குப் பொதுவான தலைநகரத்திருந்து ஆட்சிபுரிவதும், ஏனைய கோக்கிளையினர் தமக்குப் பகுத்தளிக்கப்பெற்ற நாடாட்சிபெற்றோ, தலைமையரசன் பிரதிநிதியராகவோ, அத்தலைவனுரிமைபதவிகளை ஒப்பியவராய் வாழ்ந்து வருவதும், அத்தலைமையரசக்குரிய தசாங்கங்களும் பிறவும் தமக்கும் உரியவாகவே கொண்டு அக்கிளைவேந்தர் பேணிப் பாராட்டிக் கொள்ளுதலும் தொன்றுதொட்டுவரும் மரபென்பது சங்க நூல்களால் நன்கறியப்படும்[1]. ஒருகுடியிலுதித்த வேந்தர் பலரை ஒரே புலவரும் அவர் சமகாலத்துப் புலவர்களும் அக்குடிச்சிறப்பெல்லாம் அமையப்பாடுதற்கு, இங்ஙனம் பல்பகுதியினராய் அவ்வேந்தர் ஆட்சிபுரிந்து வந்ததே காரணமாகும். இவ்வாறு கொள்ளாக்கால் ஒரே குடியில் தலைமைவேந்தர் பலர் ஓரிடத்தைத் தலைநகராகக்கொண்டு ஏககாலத்தே நாடாட்சிபுரிந்து வந்தனர் என்று கொள்ளவும், அதனால் சரித்திரவொற்றுமைகாணுது தலைதடுமாறவும் இடமுண்டாம். அம்முறையில், சேரரும் பலபகுதியினராயிருந்தவரே என்பதும், அவர்க்குத் தலைமையாட்சியிடம் வஞ்சிமாநகராயிருந்ததென்பதும் அறியத்தக்கன. நெடுஞ்சேரலாதன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன், தன் குலத்தில் தன்னின் முதியரானவர்க்குத் தன்னாட்டைப் பகுத்தளித்தான் என்று அவன்பதிகம் கூறுகின்றது. இது, சேரர்கிளை பல்கியிருந்தமைக்குத் தக்க சான்றாதல் காண்க. அப்பதிகத்தில் "முதியரைத் தழீஇ மண்வகுத்தீத்தவன்" அக்குட்டுவன் எனப்படுதலால், முதியவர்முறையில் வரும் மருமக்கட்டாயப்படி அவன் சிங்காதனமேறியவனல்லன் என்பதும் பெறப்படும். இங்ஙனம் பலராயிருந்த சேரர்கிளையினருள், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆட்சிபுரிந்த நாடு வடதிருவாங்கூர்ப் பிரதேசமாம்[2]. நெடுஞ்சேரலாதற்குப் பதுமன்றேவிவயிற்றுப்பிறந்த மக்களிருவரும் பூழிநாட்டையும் அதனைச் சூழ்ந்த பிரதேசத்தையும் ஆட்சிபுரிந்தவர்கள். அந்நாட்டை நன்னன் என்பான் கைப்பற்றியிருந்தனன் என்றும், தம்

---

1 பிற்காலத்தும், சோழர் இளையினராய் ஆந்திர நாடாண்ட வெலநாண்டுச் சோழர்களும், பாண்டிய குலத்தவராய்க் கன்னட நாடாண்ட உச்சங்கிப்பாண்டியர்களும் இங்ஙனமே வழங்கிக்கொண்டு தம் குலப்பெருமை பாராட்டுதலைச் சாஸனங்கள் வாயிலாகத் தெரியலாம்.

2 சேரன் - செங்குட்டுவன், பக். 117-8.

அரசுரிமை எய்தவேண்டியகாலத்தில் நாடின்றியிருந்த சேரவேந்தன் தன்னரசுக்குரிய கண்ணியும் முடியும் பகைவர்கவர்ந்ததனுல், களங்காயாற் கண்ணியும் நாரால்முடியுஞ்செய்து பட்டங்கட்டிக் கொண்டு, அந்நன்னனுடன் பெரும்போர்புரிந்து இழந்தநாட்டை மீட்டுப்பெற்றனன் என்றும், அதுபற்றியே 'களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்' என்று வழங்கப்பட்டான் என்றும் அவன் வரலாறு கூறப்படுகின்றது. இனி, அந்துவன்பின் செல்வக்கடுங்கோ முதலிய மூவரும் கொங்குநாட்டின் வடபகுதியை ஆண்டவர்கள். **வானி** என்ற பவானிநதியும் **நன்ரு** என்ற தேனன்ருமலையும் இவர் நாட்டனவே. யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறை முதலியோர் மேல்கடற்பக்கத்துத் தொண்டிசூழ்ந்த நாட்டை ஆண்டவர்கள். இக்காலத்தே நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மகள்வயிற்றுப் புத்திரனை செங்குட்டுவன் தலைமை வேந்தாய் வஞ்சிமாநகரிலிருந்து கொங்குநாடும் பிறவுமடங்கிய சேரமண்டலத்தை ஆண்டுவந்தவன். சேரலாதற்குத் தன்னொத்த சோழர்குடியில் உதித்த பட்டத்துத் தேவிக்குப் பிறந்தமகனுதலின் செங்குட்டுவன் தலைமையரசுக்குரியவ னுயினன் என்று கருதத்தக்கதாம். அன்றி, இருவேறு சேரலாதர்களைக்கொண்டு இவர்கள் வெவ்வேறு சேரநாட்டுப்பகுதிகளை ஆண்டவர்களெனினும் அமையும். ஆகவே, பதிற்றுப்பத்துச் சேரர் பலபகுதிப்பட்டிருந்தவரென்பதும், ஒரு கிளையினராய் ஓரிடத்தையே தலைநகராகக்கொண்டு மூத்தவன்முறையில் ஒருவர்பின் னெருவராக ஆண்டுவந்தவரல்லர் என்பதும் தெளிவாகப் பெறப்படும். இன்னும் இதனை விரிப்பிற் பெருகுமாதலின் முன்னூல்கொண்டு இவ்வுண்மை உணரத்தக்கது.

(2) பிறர்கருத்துப்படியே, அம்மான்மாரும் அவர்பின் மருமக்களும் மூத்தவன்முறையிற் சேரவரசுரிமையை ஓரிடத்திருந்து அடைந்தவர்தாமா—என்பதை வேறுவழியாகவும் இனிச் சோதிப்போம். பதிற்றுப்பத்துச் சேரருள்—சேரலாதனும் அவன் தம்பியும் அம்மான்மாராகவும், நார்முடிச்சேரல், செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் மூவரும் அவர்சகோதரியரிடம் பிறந்து அவ்வம்மான்களின் நாடாட்சிக்குரியரான மருமக்களாகவும் உள்ளவராதலால், இவ்வைவரும் ஏறக்குறைய ஒருகாலத்தில் விளங்கியவர்களாகவே மருமக்கட்டாயங்கூறுவோர் கொள்கைப்படி அமையவேண்டுவது அவசியமாகின்றது. இச்சேரரின் ஆட்சிக் காலங்கள் பதிகவாசிரியரால் ஒவ்வொருபத்தின் இறுதியிலும்

1 சேரன் செங்குட்டுவன், 16, 182.

குறிக்கப்பட்டுள்ளன. அந்நூல் கூறுஞ் சேரருள் முன்னவனை நெடுஞ்சேரலாதன் உத்தேசம் கி. பி. 100-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றவனாக வைத்துக்கொள்வோம். அச்சேரன் 58-யாண்டு ஆட்சிபுரிந்தவனாகப் பதிகவாசிரியர் கூறுதலால், அவனாட்சி 158-ல் முடிவுபெற்றதாகும். அச்சேரலாதன்பின் பட்டமெய்திய அவன்தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் 25-யாண்டு வீற்றிருந்தவனாதலின், அவனாட்சி 183-ல் முடிவுற்றதாகும். அவன்பின் மூத்தமருமகனாக நார்முடிச்சேரல் உரிமையெய்தியவனாயின், 25-யாண்டு அவனாட்சி நிகழ்ந்திருத்தலின், 208-வரை சேரசிங்காதனத்தில் அச்சேரல் வீற்றிருந்தவனாகின்றான். அவனையடுத்து இரண்டாம் மருமகனாகச் சோழன்மகள்வயிற்றுப்பிறந்த செங்குட்டுவன் பட்டமெய்தியவனாயின் 55-யாண்டு வீற்றிருந்த அவன் 263-வரை வாழ்ந்தவனாவன். அவனையடுத்து மூன்றாமருகனாக ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பட்டமெய்தியவனாயின், 38-யாண்டு அவனாண்டிருத்தலின் 301-வரை அவன் வாழ்ந்தவனாதல் வேண்டும். ஆகவே, கி. பி. 158-ல் ஆட்சி முடிந்த நெடுஞ் சேரலாதற்குப்பின், சேரநாடாட்சி பெறுவதற்கு அவன் மூன்றாமருகனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 105-யாண்டு வரையும், இரண்டாமருகனான செங்குட்டுவன் 50-யாண்டு வரையும் காத்திருந்தவர்கள் என்பது பெறப்படும். நெடுஞ்சேரலாதன் ஆயுளுடனிருந்தகாலத்தே செங்குட்டுவனும் இளங்கோவும் பிறந்து 15, 20-பிராயமுள்ள இளைஞராக இருந்தவராகவேண்டும் என்பது சிலப்பதிகாரத்தால் தெளியப்படுதலின், மூத்தவன்முறையில் செங்குட்டுவன் அரசியலடைந்தபோது அவனுக்கு 65, 70-வயதாயிருந்தது என்பதும் அவசியமாகின்றது. இத்துணை நீண்டகாலம் காத்திருந்து அவன் தன் அம்மானுரிமையை அடைந்தவனெனின், அதனிற் பல அசங்கதங்களும் நிகழக்கூடியனவாகும். நெடுஞ்சேரலாதன்பின் அவன் தம்பி ஆண்டு, அவனிறந்தபின் நார்முடிச்சேரலாண்டு, அவனிறந்தபின் செங்குட்டுவன் பட்டமெய்தியவனாயின், பல்யானைச் செல்கெழுகுட்டுவனே செங்குட்டுவற்கு முன்னாண்ட அம்மானாதலால், அவ்வம்மான்குட்டுவற்குச் சோழன்மகளீன்ற மைந்தன்' என்று இளங்கோவடிகளும் பதிகவாசிரியரும் பாடவேண்டியதே நேர்முறையாம். நார்முடிச்சேரலுக்கும் பல்யானைச்செல்கெழுகுட்டுவற்கும் முன்பிருந்தவனும், செங்குட்டுவன் பட்டமெய்தற்கு 50-ஆண்டுக்கு முன்பே இறந்துபோனவனுமான மூத்த மாமனை இழுத்துவைத்துக்கொண்டு 'சேரலாதற்குச் சோழன் மகளீன்ற மைந்தன்' என உடன்பிறந்த இளங்கோவடிகள் உறவு பாராட்டவேண்டிய அவசியமேயில்லையாகும்.

(3) இன்னும், "வஞ்சிமூதூர் மணிமண்டபத்திடைச்" செங்குட்டுவன் இளங்கோ இருவருடனும் சிங்காதனத்தில் வீற்றிருந்த சேரலாதனை நோக்கி நிமித்திகனொருவன் "அரசே! நீ துறக்கஞ் செல்லுங்காலம் நெருங்கியது; இனி, உன் அரசு வீற்றிருக்குந் திருப்பொறி மூத்தவனுன செங்குட்டுவற்கன்றி இவ் விளங்கோவுக்கே உரியது" என்று கூறினன் என்றும், அவ்வாறு முறைமை கெடச் சொன்னதனுலுண்டான செங்குட்டுவனது மனக் கவற்சி நீங்கும்படி இளங்கோ அப்போதே துறவுபூணலாயிற்று என்றும் அவ்விளங்கோவடிகளும் அடியார்க்கு நல்லாரும் கூறுதல் பலரும் அறிவர். இதனுல் சேரலாதற்குப்பின் அவனரசினை எய்தற்கு உரியராயிருந்தவர்கள் செங்குட்டுவனும் அவனிளவலுமே யன்றிப் பிறரல்லர் என்பது ஐயமின்றிப் பெறப்படும். மருமக் கட்டாயப்படி மூத்தவன் முறையாகச் சேரவரசு இறங்கி வந்திருப் பின், சேரலாதனுரிமைக்கு அடுத்த வழித்தோன்றலாய்க் காத் திருந்தவர்கள், அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் மூத்தமருமகனுன நார்முடிச்சேரலுமேயல்லரோ? அவ்விருவரையும் விட்டொழித்து, தாமும் தம் தமையனுமே அவனுட்சியடைதற் குரியராயிருந்தவராக இளங்கோவடிகள் தெளிவாகத் தம் நூலுட் கூறுவது, 65, 70-வயதிலன்றி அதிபாலியத்தேயே செங்குட்டுவன் பட்டமெய்தியவன் என்பதைக் கரதலாமலகமாகக் காட்டுவதாம்.

(4) மேலும், பதிற்றுப்பத்துப் பதிகவாசிரியர் பாட்டுடைச் சேரர்க்கு உரியனவாகக் கூறியுள்ள ஆட்சிக்காலங்களை ஒன்று கூட்டிச் 'சராசரி'க்கணக்கு நோக்கினுல், சேரரெண்மருள் ஒவ் வொருவர்க்கும் முப்பதாண்டளவே பெறப்படுகின்றமை தெரிய லாம். அதனுல், அவ்வாசிரியர் கூறிய ஆட்சிக்காலவளவுகள் மிகை படக் கூறப்பட்டனவல்ல என்றும் சரித்திரவுண்மைக்குரியன என்றுங் கொள்ளத்தகும். செங்குட்டுவற்குமுன் ஆண்டவராகச் சொல்லப்படும் நார்முடிச்சேரற்கும் பல்யானைக்குட்டுவற்கும் தனித்தனி 25-ஆண்டே பதிகங்கூறுதலின் சிறுகிய அவ்வாட்சியள விலும் குறைந்தகாலத்தைப் பண்டையரசர்க்குக் கூறவேண்டிய அவசியமின்மையுங் காண்க. அவ்வாட்சிக்காலங்களின்படி, மருமக் கட்டாயமுறையில், சேரலாதற்குப்பின் செங்குட்டுவன் தன் 65-ம் ஆண்டுகட்குப்பின்பே பட்டமெய்தியவனுதல் வேண்டுமென்பது மேலே தெளிவாக்கப்பட்டது. இம் முதிர்வயதில் அக் குட்டுவன் பட்டமெய்தியவனுகக்கொள்ளின், அவன் செய்திகளாயுள்ளவை அக்கொள்கைக்கு ஏற்பனவா என்பதை நோக்குவோம்.

வடநாட்டியாத்திரையை முடித்துக்கொண்டு பத்தினிக்கல் லுடன் செங்குட்டுவன் வஞ்சிமாநகர் புக்கதும், அவன் அப்பத்

தினியின் பிரதிஷ்டையைத் தொடங்கினன் என்றும், அப்போது அச்சேரனுக்கு ஐம்பதாம்வயது நடந்ததென்றும் மாடலன் கூற்றில் வைத்து இளங்கோவடிகள் தெளிவாகக் கூறுகின்றார்.

> "வையங் காவல் பூண்டநின் னல்யாண்டு
> ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்
> மறக்களவேள்வி செய்வோ யாயினை" (28. 129 - 32)

என்பது அவ்வடிகள் திருவாக்கு. இவ்வாறு 50-ம் வயதிற் பத்தினிப்பிரதிஷ்டை நடத்த அச்செங்குட்டுவனுக்கு 65, 70-ம் வயதில் மகுடஞ்சூட்டியலங்கரிப்பது மருமக்கட்டாயமெனின், அம்முறையினை நாம் என்னென்பது! செங்குட்டுவன் நடத்திய பெரும்போர்களும் வடநாட்டியாத்திரையும் பிறவுமாகிய அரியபெரிய செயல்கள்யாவும் அவனது 40-வயதுக்குமுன் நிகழ்ந்தனவேயன்றி அதன் பின் நிகழ்ந்தனவல்ல என்பது இளங்கோவடிகள் வாக்கால் நன்கறியப்பட்டது. மருமக்கட்டாயப்படி நோக்கின், செங்குட்டுவனரசியற்காலத்தில் ஒருசெயலுமே நிகழவில்லையென்றும், அவன் செயல்யாவும் அவனுக்கு முன்பாண்ட நார்முடிச்சேரல் காலத்து நிகழ்ச்சிகளே என்றும் முடிதல் காணலாம். இவையெல்லாம் எத்துணை அசங்கதமுடையன!

(5) 'வையங் காவல்பூண்ட நின்னல்யாண்டு, ஐயைந்திரட்டி' என்று மாடலன் கூறியது, செங்குட்டுவனது 50-ஆம் ஆட்சி வருஷமே என்று கொள்வோமெனின், அதுவும் உலகமலேவாகும். 'மக்களாயுளில் நினக்குப் பாதி கழிந்தும், நீ அறஞ்செய்யாது மறமே செய்தல்தகாது' என்றே மாடலன் கருதிக் கூறியதாகலின், ஆங்கு ஆட்சியாண்டை அவன் குறிப்பிடவேண்டிய சந்தர்ப்பமேனும் பொருத்தமேனும் இல்லாமை காண்க. ஆட்சியாண்டே அவன் கூறியதாயின், 65, 70-ம் ஆண்டிற்பட்டமெய்தியவனாகிய செங்குட்டுவன் தன் 115, 120-ஆம் வயதில் வடநாடு சென்று பத்தினிப்பிரதிஷ்டை நடத்தியவன் எனல் வேண்டும். இது மக்களின் ஆயுளளவுக்கு மேற்பட்டதாதல் காணலாம். இத் தொண்டு கிழவயதில் பேருற்சாகமும் அதன் பயனான வீரச்செயல்களும் செங்குட்டுவற்கு மிக்கு நிகழ்ந்தன என்பது இயற்கைமலேவாதல் அறிக. அன்றியும், செங்குட்டுவன் வடநாடு சென்றகாலத்தே அவன் பிரிவாற்றாது வருந்திநின்ற பெருந்தேவிக்கு, அந்நாட்டினின்றும்

அவன் திரும்பிய செய்தியறிந்ததும், அவளது ஆயச்செவிலியரும் பிறரும்—

"தோட்டுணை துறந்த துயரீங் கொழிக" என்றும்,
"பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தான்
"நறுமலர்க் கூந்தல் நாளணி பெறுக" என்றும்,
"வானவன் வந்தான் வளரிள வனமுலை
தோணலமுணீஇய" என்றும்—

பலவாறு கூறினராக அடிகள் பாடியதினின்றும், பரணர் பாடிய பாட்டுக்களினின்றும் செங்குட்டுவனும் அவன்றேவியும் இன்ப நுகர்தற்கேற்ற பருவநிலை தவறியவர் அல்லர் என்பது நன்கு தெளியலாம். அப்பருவம் 112, 120-வயதுக்கு மேற்பட்டதாகக் கூறுவது உலகவியல்புக்குப்பொருந்துவதாயின், மருமக்கட்டாயங் கூறுவோர்கூற்றும் பொருந்துக. 'நாற்ப திகந்தா னரைத்தூது வந்தது'[1] என்ற முன்னோர் கூற்றுப்படி 50-ம் ஆண்டில் செங்குட்டுவன் நரை முதிர்ந்தவனயிருந்தனன் என்ற அடிகள் கூற்று, உலகவியல்புக்கு ஒத்ததேயாதல் காண்க.

(6) இனி மருமக்கட்டாய முறையில், சேரலாதனுக்கு மூன்ரு மருகனன ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆட்சிகாலத்தை மேற்கூறியமுறையே நோக்குமிடத்து, தன்னம்மானிறந்து, 105-வருஷங்கட்குப்பின் அவன் ஆட்சிதொடங்கினன் என்பதும், 'சேரலாதன் பொருட்டுப் பதுமன்றேவியின்றமகன்' என்று இம்மருகனும் கூறப்படுவதனல், அச்சேரலாதன் காலத்தே இவனும் பிறந்தவனுதல் வேண்டும் என்பதும் பெறப்படும். மாமன் இறந்தபோது இம்மருகனுக்கு 10-வயதாகவே கொண்டாலும், 115-ஆம் வயதில் இவன்பட்ட மெய்தி 38-யாண்டுவாழ்ந்து பின்—அஃதாவது தன் 153ஆம் வயதில்—இறந்தனன் எனல் வேண்டும். அங்ஙனங் கொள்ளுமிடத்து, முன் செங்குட்டுவற்குக் கூறியவற்றினும் பெரியவான இயற்கைமலைவுகளை இவன் விஷயத்தும் நாம் காணத்தடையில்லை. சேரலாதற்குப்பின் 3-தலைமுறை கழித்துச் செங்குட்டுவனுரிமையை அடைந்தவனகச் சொல்லத்தகும் இச்சேரனை ஒரு நூற்றுண்டுக்குமுன்பே இறந்துபோன அச்சேரலாதன் பொருட்டுப் பதுமன்றேவி பெற்றுக்கொடுத்த மகன் என்ற கருத்துடன் பதிகவாசிரியர் கூறினர் என்பது எவ்வாற்ரு

1 வளையாபதித் தொடர்.

னும் பொருந்தாமை தெரியலாம். ஆகவே, நெடுஞ்சேரலாதன் பெருந்தேவியான சோழன்மகளிடம் பிறந்தமக்களே, செங்குட்டுவன், இளங்கோ இருவரும் என்றும், அச்சேரலாதனிளந்தேவியான பதுமன்மகள்வயிற்று மக்கள்—நார்முடிச்சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனிருவரும் என்றும், செங்குட்டுவன் பட்டமகிஷிக்குப் பிறந்தவனாயினும் நார்முடிச்சேரல் அக்குட்டுவற்கு முன்னும், ஆடுகோட்பாட்டுச் சேரல் அவனுக்குப் பின்னும் தலைமையரசக்குரியளாகாத இளந்தேவியிடம் பிறந்தமையால் வெவ்வேறிடங்களில் ஆண்டுவந்த பாட்டுடைச்சேரர்கள் வயதுமுறையில் வைத்தே பதிற்றுப்பத்திற் கூறப்பட்டனர் என்றும் கொள்ளுதலன்றி வேறு கூறற்கு இடமில்லை. நெடுஞ்சேரலாதன் தேவியர்பலரை உடையனாயிருந்தவன் என்பது, அவனிறந்தபோது உடனுயிர்நீத்த மனைவியர் செய்தியைக் கழாத்தலையார் பாடுதலால் அறியலாம் (புறம். 62). இவ்வாறன்றி, நார்முடிச்சேரல் ஆடுகோட்பாட்டுச்சேரல் இருவர்க்குந் தந்தையானவன், வேறொரு சேரலாதன் என்று கொள்ளினும் ஆம். எங்ஙனமாயினும், தன் ஞாதியரசரின்வேறாய் வஞ்சிமாநகரிலிருந்தாண்ட செங்குட்டுவனுக்கு, மேலே கூறிய ஆட்சிக்காலம்பற்றிய தடுமாற்றம் அமையச் சிறிதும் இடமில்லை என்பது தெளிய அறியலாம்.[1]

[6-ம் காரணம்.]

மருகன் என்றசொல் சகோதரிமகன் மகண்மணவாளன் இவரைக்குறிப்பதே பண்டை வழக்கென்றும், மருமக்கட்டாயமுறையில் உடன்பிறந்தாள்மகனான மருகனே மாமனுக்கு வழித்தோன்றலாய் அவனதுரிமை பெறுபவனாதலின், அச்சொல் 'வழித்தோன்றல்'

---

1 வஞ்சிமாநகரை, ஏனை ஞாதிச்சேரர்க்கும் உரிமையாக்கி முன்னோர் கூறுதலால் அவ்வஞ்சியிலிருந்தாண்டவரே சேரர்யாவரும் என்று கூறுவர் சிலர். பதிற்றுப்பத்துப் பதிகங்களிற் கண்ட ஆட்சிக்கால அளவுகளைக் கொண்டு நோக்குமிடத்து இக்கொள்கையும் முற்கூறிய அசங்கதங்களை யெல்லாம் கொள்வதோடு, ஓராட்சியிடத்தில் தலைமையரசர் பலரையும் நிறுத்தித் தடுமாறவும் நேரும். அதனால், இக்காலை ஆங்கில ராசப்பிரதிநிதிகள்போல, வரையறுத்த சிலவாண்டுகள்வரை ஒவ்வொருவரும் ஆண்டு கழிந்தவராகச் சேரவேந்தர்களைக் கொள்ள வேண்டும். இங்ஙனமாயின், இளங்கோவடிகளும் பதிற்றுப்பத்துப் பதிகமுடையாருங் கூறிய சேரர் வரலாறுகளும் ஆட்சிக்காலங்களும் அடியோடு அழிபடுவனவாகும். அதனால் 358-ம் பக்கத்து யானெழுதிய காரணங்களே ஏற்புடையனவென்க.

என்ற பொதுப்பொருள்கொண்டு மக்கட்டாயிகளாலும் அப்பொருளிற் பின்பு வழங்கப்படலாயிற்றென்றும், சேரர்முன்னோரைக்கூறி 'அவர்மருகர்' எனப் பாட்டுடைச்சேரரைச் சுட்டிப் பதிற்றுப்பத்துக் கூறுதலால் மருமக்ககட்டாயமே தமிழகத்தின் தொன்மை வழக்கென்பதை மருகர் என்றசொல்லே உணர்த்தவல்லது என்றும் கூறப்படுகின்றன.

இக்கொள்கையும் மாறுபாடுடையதாகும். மருகன் மருமான் என்பவற்றுக்கு வழித்தோன்றல் என்ற பொருளே பழமையானதாகும். சோதரிமகன், மகண்மணவாளன் என்றபொருள்கள் பிற்காலத்துத் தோன்றியன என்பதைச் சங்கநூல்களைக்கொண்டே நாம் மெய்ப்பிக்கலாம். அங்ஙனமாகவும் அவற்றை மாற்றிக் கூறியது என்னே? சகோதரி அல்லது சகோதரி முறையினர்மகன் என்ற பொருள் பழைமையானதாயின்—மருகன், மருமான் என்பவற்றை எடுத்துமுழங்குதற்குப் பதிற்றுப்பத்தினும் உரிமையும் சிறப்புமுடைய நூல் பிறிதுமுண்டோ? அவ்வாறு ஓரிடத்தும் அந்நூல் எடுத்தாளாததோடு, மகன் என்பதனையே அதன் பதிகங்கள் எல்லாவிடத்தும் எடுத்து முழங்குவது எதன்பொருட்டு? அங்ஙனம் பெருக வழங்கும் மகன் என்பதனைத் தங்கொள்கைக்கேற்ப மருகன் என்ற பொருளில் இழுத்துக்கொள்வதுதானே மருமக்கட்டாயங்கூறுவோர் கொள்ளும் பெருமுயற்சியாயுள்ளது? இவ்வாறு மருகன் என்பதனை அந்நூல் விட்டொழியவும் மகனென்பதனையே அதன் பதிகங்கள் பெரிதும் வழங்கவும்—மகனென்பதை விட்டொழிந்து மருகனென்றே அந்நூல் எடுத்து முழங்குவதுபோல நெடுக எழுதிச் செல்வது பெருவியப்பேயாம். மருகன் என்ற சொல்லைப் பதிற்றுப்பத்து வழங்கிய இடங்கள் இரண்டே. அவை —மாமனுடைய சோதரி அல்லது அம்முறையினள் மகன் என்ற பொருளிலன்றி — வழித்தோன்றல் என்ற பொருளில் வந்தனவேயாம். பிறர்கருத்தின்படி, இளஞ்சேரலிரும் பொறையைப் பெருஞ்சேரலிரும்பொறையின் மருகன் என்று அந்நூல் கூற வேண்டியது நிற்க, 'அவ்விருவரின் முன்னோன் ஒருவனுக்கு வழித்தோன்றலே அவன்' என்பதுபட 'விறல்மாந்தரன் விறல் மருக' என்று அது கூறுவதும், இவ்வாறே செல்வக்கடுங்கோவைச் 'சேரலர் மருக' என்று—சேரமுன்னோர்க்கு வழித்தோன்றல் என்ற பொருளிலே வழங்குவதும் கண்டுகொள்க. ஈண்டு மாந்தரன் எனப்பட்டான் 'மாந்தரன் பொறையன் கடுங்கோ, (அகம். 142) என்ற சேரமுன்னோனே என்பது அறியத்தகும். இம்மருகன் போன்ற வழக்குடையனவே மருமான், பிறங்கடை உம்பல் என்ற

சொற்களும். சேரனைக் 'குடபுலங்காவலர் மருமான்' என்று கூறிய நல்லூர் நத்தத்தனார், ஏனைச் சோழபாண்டியரையும் 'குணபுலங் காவலர் மருமான்' 'தென்புலங்காவலர் மருமான்' என வழித் தோன்றல் என்ற பொருளில் முறையே வழங்கியதுங் காண்க (சிறுபாண்). இவற்றால் 'விறன்மாந்தரன் விறன்மருக' என்று இளஞ்சேரலைப் பெருங்குன்றூர்கிழார் பாடுதற்குத் தக்க காரணம் மருமக்கட்டாயமே என்ற பிறர் கூற்றுச் சிறிதும் பொருந்தாமை கண்டுகொள்க,

[7-ம் காரணம்]

மருமக்கட்டாயம் பழைய சேரர்க்கு உரியதாகாமை, மேலே யான் விரிவாகக்கூறிப்போந்தவற்றால் தெளிவாக அறியப்பட்டமையின், அத்தாயமுறை வழங்கிய மலையாளக் கொடுங்கோளூரே சேரரது பழைய தலைநகராதல்வேண்டும் என்ற கருத்தும் வலியற்றதாதல்காணலாம். கொங்குக்கருவூரே சேரரிருந்தாண்ட பழைய தலைநகரன்றி வேறெதனைக்கூறினும் அது முன்னூல் பின்னூல் வழக்குக்களுடனும், சாஸன வழக்குக்களுடனும்* பெரிதும் முரணுவதாம். இதனைச் 'சேரன்–செங்குட்டுவன்' என்ற நூலின் இரு பதிப்புக்களினும் விளங்க விரித்தெழுதியுள்ளேன். கொடுங்கோளூரைச் சேரர் தலைநகராகக்கோடல் சிறிதும் பொருந்தாதென்பது நல்லறிஞர் பல்லோருடைய முடிபுமாம். அது "வஞ்சிமாநகர்" என்ற தனிநூலாலும் பிறவற்றாலும் நன்கறியப்படும். அவற்றிற் கூறப்பட்டவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பது மிகையாதலின், அவ்வாராய்ச்சியுரைகள் நோக்கித் தெளியற்பாலன.

## III. மக்கட்டாயமுறைக்குரிய பொருள்.

இதுவரை விரிவாக யான் கூறிப்போந்தவற்றால், பதிற்றுப் பத்துப்பதிகத்தொடர்களும் இளங்கோவடிகளது கூற்றும் மருமக்கட்டாயமே குறிப்பனவாகக் கருதிப் பிறர் கூறிய பொருள்களும் புறச்சான்றுகளும் சிறிதும் பொருந்தாமையின், மேலேகாட்டிய 8-ம் காரணமும் ஏற்புடையதன்றாகின்றது. ஆகவே, மக்கட்டாயமே அத்தொடர்களை அமைத்த ஆசிரியர் கருத்து என்பது கூறவேண்டாதது. அம்மக்கட்டாயமுறைக்குப் பதிற்றுப்பத்துத்

---

* இத்தொகுதியுள் 'சேரர்வஞ்சியும் சிலாசாஸன வழக்கும்' என்ற தலைப்பின் கீழமைந்த கட்டுரையாலும் அறிக.

தொடர்களும் பிறவும் எங்ஙனம் சொன்முறைபொருண் முறைகளில் அமைந்துள்ளன என்பதை இனி விளக்குவேன்.

[**தேவிச்சொல்லின் பொருள்**]

"சேரலாதற்கு வேளாவிக்கோமான் **பதுமன்றேவி** ஈன்ற மகன்"

"அந்துவற் கொருதந்தை யீன்ற மகன்
**பொறையன்பெருந்தேவி** யீன்ற மகன்"

என்ற தொடர்களிற்கண்ட **தேவி** என்ற சொல், மக்களுள் பேரரசன் சிற்றரசன்மனைவியையன்றிப் பிறிதுகுறியாதென்று கருதப் படுகின்றது. மனைவிப்பொருளில் தேவிச்சொல் பெரிதும் வழங்குவதேனும் அதற்கு வேறுபொருளேயில்லை என்பது சிறிதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. வடமொழிநாடகமுதலியவற்றில், தலைவியரைக் குறிக்குமிடங்களிலே தேவிஎன்ற சொல்லால் அவரைத் தனித்து வழங்குதல் பெருவழக்காம். அங்கெல்லாம் அச்சொல் மனைவியென்னும் பொருளிலன்றிக் கோமகள், தலைவி என்ற பொருளில் கௌரவவாசகமாகவே நிற்றல் காணலாம். "வளர்த்த தாய்க்குச் சித்திரத் **தேவிப்பட்டந்** திருமகன் நல்கினனே" என்று, சீவகன் தன்னை வளர்த்த சுநந்தைக்குத் தேவி என்றபட்டஞ் சூட்டிய செய்தியைச் சிந்தாமணி கூறுகின்றது. இப்பட்டத்துக்கு மனைவி என்பது பொருளன்றென்பதும், தன்னை வளர்த்த தந்தைக்கு அரசுநிலை நல்கியவாறே, அத்தகைய தாய்க்குக் கோமகள் என்ற பெருஞ் சிறப்புப்பெயரைச் சீவகன் நல்கினன் என்பதுமே கருத்தாதல் கண்டுகொள்க. சீதாதேவி, தாராதேவி, கமலாதேவி என வழக்கினும் கௌரவவாசமாகவே இத்தேவிச்சொல் வழங்குதலை யாவரும் அறிவர்.* இவையாவும் வடநூல்வல்லார்வாய்க் கேட்டறியத்தகும்.

தேவிச்சொல்லின் பொருண்முறை ஒருபுறம் நிற்க. 'பதுமன்றேவி' 'பொறையன் பெருந்தேவி' என்பன, சேரின் கோப் பெண்டிர்க்கு அக்காலத்து நன்மக்கள் வழங்கிய சிறப்பியற்

---

* இக்கருத்துப் பற்றியே—ஸர். மானியர் வில்லியம்ஸ் என்ற ஆங்கிலேய பண்டிதர். இயற்றிய ஸம்ஸ்கிருதப் பேரகராதியிலும்- "Devi - The Consecrated wife or daughter of a king; lady" ("தேவி- அபிஷிக்த அரசன் மனைவி அல்லது அவன் மகள்; தலைவி" என்று பொருளெழுதப்பட்டுள்ளமை காண்க. (p. 496).

பெயர்கள் என்றே ஈண்டுக்கொள்ளற்குரியனவாம். அக் கோப்பெண்டிரிற்சிலரைப் பதிகவாசிரியர் நல்லினி, அந்துவஞ்செள்ளை என இயற்பெயராற் குறிப்பிட்டவாறே, அவருள் வேறுசிலரைப் பதுமன்றேவி, பொறையன் பெருந்தேவி என நாட்டார்வழங்கிய சிறப்பியற்பெயர்களாலும் அவர் குறிப்பிடலாயின ரென்பது, பண்டைவழக்குக்களை நோக்கின் தெளிய அறியப்படும். மூவேந்தர் வழிவந்த பேரரசரின் பெருங்கோப்பெண்டுகளிற் பலர்,

(1) { வில்லவன்மாதேவி, வானவன்மாதேவி
பஞ்சவன்மாதேவி, மீனவன்மாதேவி

(2) சோழன்மாதேவி, வளவன்மாதேவி

என இவ்வாறு சிறப்பியற்பெயர்கொண்டு வழங்கப்பெறுதலைச் சாஸனங்கள்வாயிலாக நன்கறியலாம். பிறபெருங்குடிப் பிறந்த இப்பெண்டிர்க்கு, அவர்தம் பெற்ருேரிட்ட இயற்பெயர்களும் வேருக வழங்கியிருத்தல் கூடியதே. ஆனல், பேரரசர் குடியிற் புக்கபின் அவை நாட்டாரால் மறக்கப்பட்டு மேற்காட்டிய வானவன்மாதேவி போன்ற சிறப்புப்பெயர்களே அவர்க்கு இயற்பெயர்போல வழங்குவனவாயின. எனினும், நல்லினி, அந்துவஞ்செள்ளை என்பனபோலக் கோக்குடியிற் புகுமுன் கொண்டிருந்த இயற்பெயரால் அன்னோர் வழங்கப்பட்டதும் உண்டு. இவ்வாறு பெருவேந்தர்வழியிற்புக்க கோப்பெண்டிர் கொண்டிருந்த இத்தகைப்பெயர்வழக்குக்கள், அவர் முன்னோராய் அவ்வழியிற்புக்க பெண்டிர்க்கும் உரியனவே என்பது பின்னர் விளக்கப்படும். அம்முறையில், பதுமன்றேவி, பொறையன்பெருந்தேவி என்பன கோப்பெருந்தேவியர்க்கு அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற்பெயர்களே என்பது ஈண்டுக் குறிக்கொள்ளத்தகும்.

மேற்குறித்த பெருங்கோப்பெண்டிருள் **வில்லவன்மாதேவி** என்பாள் முதற்பராந்தகனுடைய கோப்பெருந்தேவி.[1] இவள் கேரளராஜன் மகளாவள். **வானவன்மாதேவி** என்பாள் இற்றைக்கு ஓராயிரவாண்டுகட்குமுன் சின்னமனூர்த் தானசாஸனஞ்செய்வித்த பாண்டியன் இராசசிங்கனின் தாயும், சடையன் சிரீபராந்தகன் என்ற அவன் தந்தையின் பெருந்தேவியும் ஆவள். "**வானவன்மாதேவியெனு** மலர்மடந்தை முன்பயந்த, மீனவர்கோ னிராசசிங்கன்" என்பது அவன் பிரசஸ்தித் தொடர். இதுவே பெயர்

1 M. E. R. 188 of 1923; T. A. S. iv, p. 144.

முதலிராஜராஜசோழனுடைய தாய்க்கும் வழங்கியது. இவள் இரண்டாம்பராந்தகனான சுந்தரசோழற்குப் பெருந்தேவியாய், அவனிறந்தபோது தன் அரசிளங்குழவியையுங் கருதாது தீப்பாய்ந்து உடனுயிர் நீத்தவள்.[1] இங்ஙனம் சோழவமிசத்தும் பாண்டிய வமிசத்தும் புக்க வில்லவன்மாதேவி, வானவன்மாதேவி என்ற பெயருடைய கோப்பெண்டுகள் **சேரர்மகளிரே** என்பது ஐயமறத் தெளிந்தது. இனிச் **சோழன்மாதேவி** என்பாளும் **பஞ்சவன்மாதேவி** என்பாளும் முதல் ராஜராஜசோழன் பெருந்தேவியர் ஆவர். இவ்வாறே முதற்பராந்தக சோழன் மகனான இராஜகேசரிவர்மன் தேவியரிருவர்க்கு **வளவன்மாதேவியார், தென்னவன்மாதேவியார்** என்பன பெயர்களாயுள்ளன[2]. இவர்களுள் பஞ்சவன்மாதேவி, தென்னவன்மாதேவி இருவரும் பாண்டியர்பெற்ற மகளிராய்ச் சோழர்மரபிற் புக்கவரென்பது அவர் பெயர்களால் தெரியலாம்.

இப்பெயர்களை ஆராயுமிடத்து, மேலே குறித்த பெயர்களுள்—மாதேவி என்ற சொல் இருவேறுவகையில் வழங்குதல் தெளிய அறியப்படும். வில்லவன்மாதேவி, வானவன்மாதேவி, பஞ்சவன்மாதேவி, தென்னவன்மாதேவி என்ற தொகைமொழிகள் வில்லவன் மகளான, வானவன்மகளான, பஞ்சவன்மகளான, தென்னவன்மகளான மாதேவி என விரிந்தும், சோழன்மாதேவி, வளவன்மாதேவி என்ற தொகைமொழிகள் சோழனுக்குப்புக்க, வளவனுக்குப்புக்க, —மாதேவி என்று விரிக்தும் நிற்றலையும், முன்வகையில் மாதேவி என்பது 'கோப்பெண்' என்ற பொருளிலும், பின்வகையில் அது 'ராஜபத்தினி' என்ற பொருளிலும் வழங்குதலையும் நாம் நன்கறியலாகும். இவ்வாறன்றி, அச்சோழன் மனைவியரை வானவற்குப் புக்க, பஞ்சவற்குப் புக்க—மாதேவி எனினும், சோழன்பெற்ற, வளவன் பெற்ற—மாதேவியெனினும், அவை பொருண்மலைவு உடையனவாகும். இங்ஙனம் தேவிச்சொல் வழங்கிய பொருண்

---

1 "செந்திரு மடந்தைமன் சீராச ராச(னும்), புவியைப் பயந்த பொன்மான் கவியைக், கரந்து கரவாக் காரிகை சுரந்த, **முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுங், தலைமகற் பிரியாத் தையல் நிலை** பெறுந், திருப்புய முயங்குந்தேவி விருப்புடன், வந்துதித் தருளிய **மலையர்திருக் குலத்தோர்**" என்ற முதலிராஜராஜசோழன் சாஸனப் பகுதியுள் (செந்தமிழ் தொ-4, பக். 232-5). **கணவனுடன் தீப்பாய்ந் திறந்த அவன் தாய் சேரர் குலத்தவளாகக் கூறப்பட்டிருத்தல்** காண்க [மலையர்—சேரர்; "சேரன் மலையன் பொறையன்" என்ற **இளங்கோவடிகள் வாக்கும், பழைய நிகண்டுகளும் காண்க.**]

2 S. I. I. Vol. V, pp. 221, 287.

முறையே பதிற்றுப்பத்துப் பதிகங்களிற் கண்ட கோப்பெண்டிர் பெயர்களையும் நாம் கொண்டு நோக்கத்தக்கது. அம்முறையில், வேளாவிக் கோமான்றேவி என்பது வேளாவிக்கோமான் மகளான தேவி எனவும் பொறையன் பெருந்தேவி என்பது பொறையனுக்கு (சேரனுக்கு)ப் புக்க பெருந்தேவி எனவும் விரிந்து பொருள்பெறும். இவற்றால், தேவி என்பது மனைவி என்ற பொருளுமுடையதேனும் அப்பொருளொன்றற்கே உரியதென்றும், கோப்பெண் தலைவி என்ற பொருட்கு உரியதன்றென்றும் கருதுதல் சிறிதும் பொருந்தாமை தெரியலாம். இங்ஙனம் உறுப்புப்பொருளுடைய வானவன்மாதேவி சோழன்மாதேவி என்ற இருவகையும்போலவே, பதுமன்தேவி, பொறையன் பெருந்தேவி என்பன பெருங்கோப்பெண்டிர்க்கு அவ் விருவகைப் பொருள்களிலும் அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற் பெயர்களே என்பது நாம் மறக்கற்பாலதன்று,

[வேண்மாட்சொல்லின் பொருள்.]

இனி, **வேண்மாள்** என்ற சொல்லை நோக்குவோம். இதுவும் தேவிச்சொற்போலவே, பேரரசர் சிற்றரசர் மனைவியரையன்றிப் பிறிது குறியாதென்றும், செங்குட்டுவன்மனைவியை 'வேண்மாள்' எனவும் நன்னன்மனைவி உதியன்மனைவியரை முறையே நன்னன் வேண்மாள் உதியன்வேண்மாள் எனவும் முன்னோர் வழங்குதலால் அது பெறப்படும் என்றும் கூறப்படுகின்றன. இக்கருத்துக்களும் தவறும். வேண்மாள் என்பதற்கு வேளிர்குலமகள் என்பது பொருள். இதன் ஆண்பாற்சொல் 'வேண்மான்' என்பது. நன்னன் வேண்மான், இருங்கோ வேண்மான் என்ற இயற்பெயர்கள் கொண்ட சிற்றரசருளர்; நன்னன் என்றவேளின் குலத்தோன்றல், இருங்கோ என்ற வேளின் குலத்தோன்றல் என்பன இவற்றின் உறுப்புப்பொருள்களாம். பிறர்கருத்துப்படி வேண்மாள் என்பது மனைவிப்பொருளதேயாயின், வேண்மான் என்பது கணவன் என்ற பொருளினையே உணர்த்தல்வேண்டும். அவ்வாறு யாண்டுந் தமிழ் வழக்கின்மை காண்க. அன்றியும் செங்குட்டுவன்மனை விக்கு இளங்கோவேண்மாள் என்ற பெயர் வழக்குண்டென்பது—

"வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்திகை வெள்ளி மாடத்து
**இளங்கோவேண்மா ளுடனிருந் தருளி**" (25, 3—5)

என்ற இளங்கோவடிகள் வாக்கால் உணரப்படும். இதற்கு '**இளங்கோ வேண்மாள்** பெயர்; **நன்னன்வேண்மாள், உதியன்**

**வேண்மாள் என்பன போல'** என முன்னோரான அரும்பதவுரையாசிரியர் எழுதியுள்ள குறிப்பு ஈண்டுக் குறிக்கொண்டறியக் தக்கது. இவ்வாறு இளங்கோ வேண்மாளை ஒருபெயராகக் கால வழக்குநோக்கிக் கொண்ட அவ் உரையாசிரியர்க்கு, அதற்கு ஒத்த உதாரணங்களாக அவர் காட்டிய நன்னன்வேண்மாள் உதியன் வேண்மாள் என்ற தொகைமொழிகளும் ஒரு பெயர் நீர்மையன என்பதும், செங்குட்டுவன்மனைவிக்குப்போல மூவேந்தரின் பேரரசியர் சிலருக்கு அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற்பெயர்களே அவை என்பதும் கருத்தாதல் தெளிவாம். வேண்மாட்சொற்குப் பிறர்கருதியவாறு மனைவியென்பதே பொருளாயின், 'இளங்கோ வேண்மாள்' என்பதற்கு இளங்கோவின் மனைவி என்பதே பொருளாதல் வேண்டும். செங்குட்டுவனே பெருங்கோவன்றி இளங்கோ வல்லன். அவனிளவலோ, அரசபோகத்தைச் சிறுபருவத்தே துறந்த பெரியோராவர். ஆயினும் இளங்கோவேண்மாள் செங்குட்டுவன்தேவியேயன்றி வேறெவளும் அல்லள். அதனால், வேண்மாள் என்ற பெயரின்முன் நிற்றல்கொண்டு, இளங்கோ என்பது வேளிர் குடிகளுள் ஒன்று என்று ஈண்டுக்கொள்ளுவதன்றி வேறுவழியில்லையாம்; இதுபோன்றனவே நன்னன்வேண்மாள், உதியன் வேண்மாள் என்பனவும். நன்னன்மனைவி, உதியன்மனைவி என்ற கருத்துடன் அரும்பதவுரையாசிரியர் அப்பெயர்களை உதாகரித்தவரல்லர் என்பது இளங்கோவேண்மாட்கு ஒத்தபெயர்களாக அவற்றை அவர் காட்டிப்போதலால் மிகவிளக்கமாம். ஆகவே, இளங்கோவேளிரின் குலமகளே செங்குட்டுவன்தேவி என்றும், நன்னன்வேண்மாள், உதியன்வேண்மாள் என்பனவும் நன்னன் வேளின் குலத்தவள், உதியன்வேளின் குலத்தவள்[1] என்ற உறுப்புப் பொருளுடன் ஒருபெயர்நீரவாய்ப் பேரரசியர்க்கு வழங்கிய சிறப்பியற்பெயர்களாம் என்றுமே கொள்ளத்தக்கன. இளங்கோ என்பார் வேளிர்குடியினரென்பது செங்குட்டுவன் தேவிப்பெயர் கொண்டுமட்டும் ஊகித்தறிந்ததன்று. இருங்கோ வேள், இருக்குவேள், **இளங்கோவேள்** என்பன, 'கொடும்பை' என்று சிலப்பதிகாரங்குறிக்கும் கொடும்பாளூரில் இருந்தாட்சி புரிந்த வேளிர்க்கு வழங்கிய குலப்பெயர்களாகும்.[2]

"செம்பியன் **இளங்கோவேளார்** பூதி ஆதிச்சன்"
"தென்னவன **இளங்கோவேளார்** பூதி ஆதிச்சபிடாரன்"

---

1 சோழன்மாதேவி என்பது சோழனுக்குப் புக்க மாதேவி என்று பொருள் பயத்தல்போல, உதியன்வேண்மாள் என்பது உதியனுக்குப் புக்க வேள்குலமகள் என்று கொள்ளினும் அமையும்.

2 Ep. Rep. *1908*, pp. *87—9*; Ibid. *315* of *1913*.

என முன்னோரான கொடும்பாளூர்வேளிர் சிலாசாஸனங்களிற் கூறப்படுகின்றனர். பிற்காலத்தும் சோழவதிகாரிகளிற் பலர், இம்மரபினராகவே விளங்கினர் என்பது **இளங்கோவேளார்** என்ற சிறப்புப்பெயருடன் அன்னோர் சாஸனங்களில் வழங்கப்படுதலால் அறியலாகும்.[1] இளங்கோவேளிர், இருக்குவேளிர் எனப்பட்ட வேள்குலத்தவருள் ஒருவரே கொடும்பாளூர் இடங்கழி நாயனார் என்பதும் அறியத்தக்கது. இவ்வாறு இளங்கோ என்பது வேளிர்தலைவர்க்கு வழங்கியது போலவே, நன்னன், உதியன் என்பனவும் வழங்குதலை—"நன்னன் வேண்மான்" (அகம். 97) நன்னனுதியன்' (௸, 258) என்பனவற்றால் அறிக.

இங்ஙனம் இளங்கோ என்ற வேள்குலமொன்று பழைமையாகவே உள்ளமையாலும், வேளிர்குலத்தினின்றே மகட்கோடல் மூவேந்தரின் தொன்றுதொட்ட மரபாதலாலும்[2], நன்னன் வேண்மான் உதியன் வேண்மான் எனப் பெருவேந்தரின் கோப்பெண்டிர்க்குப் பெயர் வழக்குண்மையாலும் '**இருங்கோவேண்மாள்**—பெயர்' என்று தம்முள்ளத்துக்கு ஏற்புடைய சீரிய கருத்தை முதலிற் கூறலாயினர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர். இது பெரிதுஞ் சிறந்துகாட்டுதலை யாவரும் நன்கறியலாம். இனி, 'இளங்கோவேண்மா ளுடனிருந்தருளி' என்ற அத்தொடர்க்கே "வேண்மாளுடன் இருந்து, இளங்கோவை அருளிப்பாடிட்டு என்றுமாம்" என வேறுகருத்தொன்றையும் அவ்வுரையாளர் வெளியிடுகின்றார். அஃது ஈண்டுச் சிறிது ஆராயத்தக்கது.

சேரன் செங்குட்டுவன் இலவந்திகைவெள்ளிமாடத்து இளங்கோவேண்மாளுட னிருந்தருளியபோது "மஞ்சசூழ்சோலை மலைகாண்குவம்' என்றுகூறித் தன் பெரும்பரிவாரங்களுடன் பேரியாற்றங்கரைசென்ற செய்தியை இளங்கோவடிகள் அழகுறப்பாடுதல் பலரும் அறிந்ததே. இளவேனிற்பருவத்தே நீராவியமைந்த மாளிகையில் வசித்துவந்த செங்குட்டுவனை—'இளங்கோவேண்மாளுடனிருந்தருளியதாகக் கூறிய அடிகள்கருத்து, வேனிலின்பந் துய்க்கவேண்டித் தன்பெருந்தேவியுடன் அவ்வசந்தமாளிகையில் அவ்வேந்தன் தங்கியிருந்தனன் என்பதேயாகும். இவ்வான்றி அவ்வசந்த வின்பந்துய்த்தற்கு அவன் தன் இளவலையும் ஆங்கு உடன்கொண்டிருந்தான் என்றுகொள்ளின், அஃது இளங்கோவடிகளது

1 Inscriptions of the Madras Presidency, p. *1285*.
2 யான் எழுதிய 'வேளிர்வரலாறு' 22, 23-ம் பக்கங்கள் காண்க.

துறவு நிலைக்கு ஏற்புடையதன்றாகும். இவ் வேலாமையைக் கருத்துட்கொண்டே "இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" என்ற தொடர்க்கு, 'இளங்கோவுடனும் வேண்மாளுடனும் இருந்து என்று நேரே பொருள் கூறாது—'வேண்மாளுடனிருந்து இளங்கோவை அருளிப்பாடிட்டு"[1] என்று மொழிமாற்றி வேறுபொருள் கூறுவராயினர் அவ்வரும்பதவுரையாசிரியர். இதனால், வசந்த மாளிகையில் தன் தேவியுடன் தனித்திருந்தவனே செங்குட்டுவன் என்பதும், அப்போது மஞ்சசூழ்சோலை மலைவளங்காண்டலை விரும்பி, வேற்றிடத்து[2] வசித்துவந்த தன் இளவலான அடிகளையும் அழைத்துவர அவன் ஆணையிட்டனன் என்பதும் பெறப்படுதல் காணலாம். 'இருந்தருளி' என்பதனை இருந்து, அருளி என இரண்டுவினையெச்சமாக்கி, அவற்றை இளங்கோ, வேண்மாள் என்றுள்ள முறைக்கேற்ப நிரலே கூட்டாது எதிர்நிரனிறையாக்கி—'வேண்மாளுடனிருந்து, இளங்கோவை அருளிப்பாடிட்டு' என்று கூறும் இப்பக்ஷாந்தரப்பொருளே அடிகள்கருத்தென்று சொல்லற்குரியதன்று. அங்ஙனமாகவும், செங்குட்டுவன் தன் தேவியுடன் வசந்தவின்பந் துய்க்கும்போது துறவியான தன்னிளவலையும் உடன்கொண்டிருந்தவன் என்று பிறர் கூறும் புதுப்பொருள் எங்ஙனம் பொருத்தமுறும்? உடன்கொண்டிருந்தவன் என்றே பிறர் சாதிக்கமுயன்றாலும்—'இளங்கோவேண்மாளுடனிருந் தருளி' என்ற ஒரு தொடரை அடிகள் ஒருகாலும் அமைத்திரார் என்பது திண்ணமாம். அமைத்தவராயின், செங்குட்டுவனை யடுத்து அவன் பெருந்தேவியை வைத்து அவர் சிறப்பிக்கத் தவறார். அங்ஙனஞ் சிறப்பியாமையின், அத்தேவி பிற்படும்படி தம்மையே அரசனுக்கு அடுத்துவைத்துப் பெருமைப்படுத்திக்கொண்டனர் என்றும், அவ்வாறு கொண்டவிடத்தும் 'இளங்கோவுக்கு வேண்மாள்" (மனைவி) என்ற ஒரு விபரீதப்பொருளும் பயக்கும்படி ஒழுங்கற்ற தொடரொன்றை அமைத்தனரென்றும் அத்தொடரமைப்பிற்குறை

---

1 அருளிப்பாடு என்பது கடவுளர் அரசர் முதலியோரின் அழைத்தல் முதலிய ஆணைகளைக் குறிக்குஞ் சொல்லாகும். "சடைமுடியவ ரருளிப்பாடு" (பெரியபு. வெள்ளானை. 33) 'ஆயசீ ராகவ னருளிப்பாடு' (இராமா. உத்தரகாண். அசுவமே. 157), "கணநாத ரருளிப்பா டென்றார்கள்" (கோயிற்புராணம். இரணிய, 51) என்ற பிரமாணங்களுடன் ஒப்பிடுக. திருமால் கோயில் முதலியவற்றுள், இச்சொல் இப்பொருட்கண் இன்றும் வழங்குவதொன்றாகும்.

2 குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த...இளங்கோவடிகள்' (பதிகம்) என்பதனால், அவர் வசித்துவந்தவிடம் வேறென்பது தெரியலாம்.

கள்பல கூறவேண்டிவரும். அருந்துறவும் பெரும்புலமையுமுடைய அவ்வடிகள் திருவாக்கில் இத்தகைய குற்றநேரும்படி பொருள் கூறுதலே பெரியதோர் குற்றமாமென்க. வசந்தமாளிகையில் தாமும் தம் தமையனுடன் இருந்துவந்தவராயின், 'வேண்மாளிளங்கோவுடன் வீற் றிருந்து' என்றவாறு, மேற்கூறிய குறைகட்கிடனின்றிப் பாட இளங்கோவடிகள் அறியாதவரோ? ஆதலின், 'இளங்கோ வேண்மாள்' என்ற அவ்வடிகள் கருத்து. அரும்பதவுரையாசிரியர் கூறியவாறு, தம் தமையன்பெருந்தேவியை அவளது சிறப்பியற் பெயராற் குறிப்பிடுதலேயன்றித் தம்மை ஆண்டுக் கூறிக்கொள்வதன்று என்பது தேற்றமாமென்க. 'தமையன் மனைவியின் இயற்பெயரைத் தம்பி கூறுதலில்லை என்ற இக்காலத்தொருசாரார் வழக்குப் பண்டையோரும் கொண்ட தொன்று என்பதற்கு முன்னூற்பிரமாணம் ஒன்றுமே இல்லை. உள்ளதேனும், 'இளங்கோவேண்மாள்' என்பது சேரன்மாதேவிக்கு அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற்பெயரேயாதலால், அண்ணியின் இயற்பெயரைக்கூறி மரபுகெடுத்துவிட்டதாகப் பிறர் கூறும் பெருங்குற்றம் அடிகட்குச் சாருமாறுமில்லை என உணர்க.

இவற்றால், வேண்மாள் என்பது வேள்குலமகள் என்ற பொருளுடையதென்பதும், இளங்கோவேண்மாள் நன்னன்வேண்மாள் உதியன்வேண்மாள் என்பன, அவ்வேளிர்குலத்துதித்துப் பேரரசர்க்குப் புக்க கோப்பெருந்தேவியர்க்கு வழங்கிய சிறப்பியற் பெயர்களே என்பதும் தெளிவாயின. ஆகவே, பதிற்றுப்பத்துப் பதிகங்களிற்கண்ட வெளியன்வேண்மாள், மையூர்கிழான்வேண்மாள் என்பனவும்—வேளாவிக்கோமான் பொறையன்பெருந்தேவி என்ற பெயர்கள் போலச்—சேரமாதேவியர்க்கு வழங்கிய சிறப்பியற்பெயர்களே என்பது தானேபெறத் தடையின்றென்க.

[பதுமன்றேவி]

வேளாவிக்கோமான் பதுமன்றேவி என்ற தொகைநிலைத்தொடர், வேளாவிக்கோமான் மகளான பதுமன்றேவி என விரிந்து பொருள் பெறும்.

"அடிகள்கம்பன் மாறம்பாவை" (T. A. S. iii, 3)

"ஆழ்வார் ஸ்ரீபராந்தகன் குந்தவைப்பிராட்டியார்"

(I. M. P. Tj. No. 459)

என்றிவ்வாறு பழைய கோப்பெண்டிர் வழங்கப்பெறுதல் காணலாம். இப்பெயர்கள், அடிகள் கம்பனை மாறனுக்குமகள் பாவை,

ஆழ்வாரான ஸ்ரீபராந்தகன்மகள் குந்தவைப்பிராட்டியார் என இங்ஙனம் விரிந்து பொருள்பெறுதல்போல, வேளாவிக்கோமான் பதுமன்றேவி என்பதனையும் கொள்க. "அப்பெயர் மெய்யொழித்து" என்ற தொல்காப்பிய விதிப்படி[1] மாறம்பாவை, ஸ்ரீபராந்தகன் குந்தவைப் பிராட்டியார் என்பவற்றில் மாறன், ஸ்ரீபராந்தகன் என்பன—பாவை, குந்தவை என்ற மகளிரின் தந்தையரைக் குறிப்பன. அடிகள்கம்பன், ஆழ்வார் என அவற்றின் முன்னிற்கும் பெயர்கள்—மாறன், ஸ்ரீபராந்தகன் என்ற அத்தந்தையர்க்கு முறையே அமைந்தவிசேடணங்களாம். அதனால் அப்பெயர்களும் அத்தந்தையரையே குறிப்பன என்க. இது பின் வரும் விளக்கத்தாலும் தெளியப்படும். இவைபோலவே, பதுமன்தேவி என்பது பதுமன்மகளானதேவி என்ற உறுப்புப்பொருளுடையதாய்த் தந்தைபெயரையும் உடன்கொண்டதாயினும், அதன் முன்னிற்கும் வேளாவிக்கோமான் என்றதொடர் அப்பதுமனுக்கு விசேடணமாய் அவனையே உணர்த்திநின்றது. இவ்வாறே வெளியன்வேண்மாள் மையூர்கிழான்வேண்மாள் என்பன, மேற்கூறிய தொல்காப்பிய விதிப்படி, வெளியனுக்கு மகளான வேண்மாள், மையூர்கிழானுக்குமகளான வேண்மாள் என விரிந்து பொருள்பயக்கும். இவ்விரண்டு சிறப்பியற்பெயர்களும்முறையே நல்லினி அந்துவஞ்செள்ளை என்ற பெருந்தேவியர் இயற்பெயர்கட்கு விசேடணங்களாய் இருபெயரொட்டாயின. அஃதாவது 'வெளியன் வேண்மாளான நல்லினி' என்றிவ்வாறு விரியும். மையூர்கிழான் ஆவிக்கோமான் என்ற குடிப்பெயர்கள், கோப்பெண்டிரைப்பெற்ற தந்தையர்க்குச் சிறப்பியற்பெயர்கள்போல நின்றன. வில்லிபுத்தூர்க்கோன்கோதை என்பதனுள் வில்லிபுத்தூர்க்கோன் என்பதும் இத்தகையதே. மாந்தரஞ்சோல் குட்டுவன்சேரல் என்பன, மாந்தரனுக்குமகன் சேரல், குட்டுவதற்கு மகன் சேரல் எனப் பின்மொழி குடிப்பெயராய் ஆண்மக்கட்கு வழங்குதலும் உண்டு.

[பொறையன் பெருந்தேவி.]

இனி, மேலேகாட்டிய 2-வது வகையில் சோழனுக்குப்புக்க மாதேவி சோழன்மாதேவி, பாண்டியற்குப்புக்க மாதேவி பாண்டிமாதேவி[2] எனப்பட்டவாறு, பொறையனுக்குப்புக்க பெருந்தேவி பொறையன்பெருந்தேவி எனப்பட்டாள் என்க [பொறையன்—

1 இச்சூத்திரப்பொருள் பின்பு நன்கு விளக்கப்படும்; ஆண்டுக் கண்டுகொள்க.

2 'பங்கயச்செல்வி பாண்டிமாதேவி' என்பது சம்பந்தர் திருவாக்கு.

சேரன்.] பதிற்றுப்பத்தின் 7-ம் பத்துப் பதிகவாக்கியம் இத் தொடர் மொழிப்பொருள் மிகத்தெளிவாக விளக்கிநிற்பதாகும். அஃதாவது—

"அந்துவற் கொருதந்தை யீன்ற மகள்
பொறையன்பெருந்தேவி யீன்ற மகன்
செல்வக் கடுங்கோ வாழியாதன்" என்பதே.

"ஒப்பற்ற தந்தைபெற்ற மகளான பொறையன் பெருந்தேவி, அந்துவன் என்ற சேரற்குப்பெற்ற மகனுனவன் செல்வக் கடுங்கோ" என்பது இதன் பொழிப்பாம். ஈண்டு 'ஒருதந்தை' என்பது, 'ஒப்பற்ற பிதா' என்ற பொருளுடையது. இவ்வாறு கூறியது என்னையெனிற் கூறுவேன். பாட்டுடைச்சேரரின் தாய் வழித்தூய்மை குறித்தற்கு அத்தாய்ப்பாட்டன்மாரை வெளியன் ஆவிக்கோமான், மையூர்கிழான் என்று இவ்வாறு நெடுகக்குறித் துப் போந்த பதிகவாசிரியர்க்கு, செல்வக்கடுங்கோவின் தாய்ப் பாட்டனையும் அவ்வாறு குறிப்பிடவேண்டிய இன்றியமையாமை நேர்ந்துளதன்றே. ஆனல், ஏனையர்போல அத்தாய்ப்பாட்டன் பெயர் தெரியவந்திலதென்பதும், அதனல் அவன் உயர்குலப் பெருமையுடையவனே என்பது போதரப் 'பொறையன் பெருந் தேவியைப் பெற்றசிறப்புடைய ஒப்பற்றபிதா' என்ற கருத்தமை யக்கூறுகின்ருரென்பதும் தெரியலாகும். பிறசேர வரசியரை 'வேளாவிக்கோமான்றேவி' என்பது போல அவர் தந்தையருடன் இணைத்துக் கூறிப்போந்த அப்பதிகவாசிரியர், ஈண்டும் அத்த கைப்பெயராற் கூறவியலாமையின் 'தந்தையீன்றமகள்' என்றும்' அவ்வரசியின் புக்கவிடம் பற்றிப் 'பொறையன்பெருந்தேவி' என் றும் வேறுவகையாற் கூறலாயினர் என்பது அறியதாகும், இது பற்றியே அப்பதிகத்தொடர்க்குப் பொருளெழுதிய முன்னேரான அரும்பதவுரையாசிரியரும்—

"ஒருதந்தை என்றது பொறையன்பெருந்தேவியின்
பிதாவுடையது ஒரு பெயர்"

என்று யான மேற்கூறிய கருத்தையே தெளிவுபெறக் கூறுவராயி னர். இவ்வாறன்றி, மருமக்கட்டாயத்துக்கேற்றிப் பிறர் கூறுமாறு 'அந்துவனுடைய ஒரு தந்தை என்று இணைக்குமிடத்துப்பொருட் பேறின்மையையும், தாய்வழியைச் சிறப்பியாது தந்தைவழியைச் சிறப்பித்தல் முதலிய குற்றங்கள் நிகழ்தலையும் மேலே நன்கு விளக் கினேன். அதனல் 'அந்துவனுக்கு' என முறைப்பொருளில்வந்த

குவ்வுருபு 'மகன்' என்ற சொல்லுடன் இயைவதேயன்றி, 'ஒரு தந்தை' என்றதனுடன் இயைவதன்று என்பது தெளியத்தக்கது. இவ்வாறு, ஏனைத்தொடர்கட்குத் தாம் கருதியுள்ளபொருள் இது தான் என்பதைக் குறிப்பிக்கவே, இத்தகைய தொடரொன்றைத் தீபகம்போல அமைத்தனர் பதிகவாசிரியர் என்றே சொல்லலாம். 'ஒரு தந்தை[1] ஈன்றமகள் பொறையன்பெருந்தேவி'என்ற அவ்வாசிரியர்க்கு வெளியன் ஈன்றமகள் நல்லினி, வேளாவிக் கோமான் ஈன்ற மகள் பதுமன்றேவி, மையூர் கிழான் ஈன்ற மகள் அந்துவஞ்செள்ளை' என்பனவே கருத்தாமன்றிப் பிறிதாகாமை தேற்றமென்க. எல்லாத் தொடர்களையும், எளிதிற்பொருள்விளங்க ஒத்தகருத்து முறையில் வைத்துப்போந்த அவர், இத் தொடரைமட்டும் சுற்றிப் பொருள் கொள்ளவும், கொள்ளினும் குறைகள்தோன்றவும் வேறுமுறையில் அமைத்துக்கூறுராதலால், அத்தொடர்க்கு **அரும்பதவுரை பாசிரியர் கூறிய பொருளே** பெரிதும் அமைவுடையதாதல் தெளியப்படும்.

பொறையன்பெருந்தேவியைப் பெற்றவனே 'ஒருதந்தை'எனப் பட்டவனுயின், ஏனையிடங்களிற்போல அத்தந்தைபெயரைப்பதிக வாசிரியர் கூருதுபோகாராதலால் அது பொருந்தாதெனின், பிறர் கூறுமாறு அந்துவற்கு ஒருதந்தை என்றியைக்குமிடத்து, ஆண்டும் அத் தந்தைபெயர் காணப்படாமையால் அதுவும் பொருந்தா தாகும். மருமக்கட்டாயப்படி, அரசியலுரிமையுடைய கோத்தாயை அடியோடு மறந்து பொறையனுக்கு மனைவி என்றவளவிற் குறித்துப் போந்த அவ்வாசிரியர், அவ்வுரிமையற்ற தந்தையை 'ஒரு' என்பதனுல் அவனதொப்பின்மைகூறி விசேடித்தார் எனல்

---

1 பொறையன் பெருந்தேவியின் பிதாவுடையது ஒரு பெயர்' என்று அரும்பதவுரைகாரர் எழுதிச்செல்வதை நோக்குமிடத்து, ஒரு தந்தை என்பது ஓர் இயற்பெயராகவே ஆதியிலிருந்து பின் பாட மாறியதோ என்ற ஐயம் நிகழ்கின்றது. அவ்வாருயின், சாத்தன் தந்தை=சாத்தந்தை, கொற்றன் தந்தை=கொற்றந்தை என்ருய வாறு, ஒரு தன் தந்தை=ஒருதந்தை என்று முடிந்ததெனல் வேண்டும், ஒருதன் என்ற இயற்பெயர் மக்கட்கு வழங்கியதாகத் தெரிந்திலது. எனினும் ஒருஉத்தன் என்ற பெயர்வழக்கு உண்டென்பது 'ஒருஉத் தனர்' என்ற பழம்புலவர் பெயரினின்று (புறம்-275) தெரியலாகும். இதனுல் 'இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்' என்ற தொல் காப்பிய விதிப்படி (எழுத். 317), ஒருஉத்தன்தந்தை=ஒருஉத்தந்தை என்றிணைந்து அதுவே ஒரு தந்தை எனப் பிற்காலத்து மாறியது போலும் என்று கருதற்கு இடமுண்டு.

அத்தாய முறைக்கு அமைவுடையதுமன்று. 'ஒரு' என்பதற்கு 'ஒப்பற்ற' என்பதன்றி வேறுபொருள் கூறுவதாயின், அஃது அத்தந்தையின் பிரசித்தமற்ற நிலையையே காட்டுவதாகும். அந்நிலைமை யாவர்க்கும் வெளியாக அத்தந்தையை இழுத்து வைத்து இழிப்பதினும் அவனொருவனைக் கூறாது விட்டிருப்பதே மேலென்க. இவற்றால், பதித்றுப்பத்துரையாசிரியர் கூறியபடி, பொறையன்பெருந்தேவின் பிதாவையே அவ்வொருதந்தை என்ப தனுற் பதிகவாசிரியர் குறித்தனர் என்பது எவ்வகையால் நோக்கினும் விளக்கமாம். ஆகவே, 'ஒப்பற்ற தந்தையாற் பெறப் பட்டவளும் பொறையன் பெருந்தேவி என்று அழைக்கப்பெற்ற வளுமாகிய மனைவியிடம், அந்துவன் என்ற சேரற்குப்பிறந்தமகன் செல்வக்கடுங்கோ' என்பதே பதிகவாசிரியர்கருத்தாதல் கண்டு கொள்க.

'அந்துவதற்கு...பொறையன்பெருந்தேவி யீன்றமகள்' என்ற தொடருள், 'பொறையன்' என்பது சேரன் என்னும் பொருளது. 'சேரன் பொறையன் மலையன்' (சிலப்) என்ப. அப்பொறையன் யாவனெனின், இத்தொடரின் முன்னிற்கும் அந்துவனே அவன் எனவுணர்க.

"உடையார் ராஜராஜதேவர்க்கு நம்பிராட்டியாரான
சோழமாதேவியார்" (S.I.I.II 170, 178)

"சோழபெருமானடிகள் தேவியார் வளவன்மாதேவியார்"
(S. I. I. V. 221)

என்பனபோன்ற தொடர்கள் பண்டைக் கோப்பெருந்தேவியர்க்கு வழங்கிவந்தமை சாஸனங்கள் வாயிலாக மிகுதியும் அறியலாம். இவற்றுள் சோழமாதேவியார், வளவன் மாதேவியார் என்பவற்றி லுள்ள சோழனும் வளவனும் முறையே ராஜராஜன், சோழபெருமா னடிகள் என முன்னிற்கும் வேந்தரின் வேறல்லர். அத்தகைய தொன்றே 'அந்துவற்கு...பொறையன்பெருந்தேவி என்ற தொடரில் வரும் 'பொறையன்' என்பதும். மேற்காட்டிய சோழமா தேவி, வளவன்மாதேவிபோலவே 'பொறையன்பெருந்தேவி' என்பதும் சேரன் பட்டமகிஷி என்னும் பொருளதாய் ஒருபெயர் நீரது என்பது, இதனானும் தெளியப்படும். இவற்றால், மருமக்கட் டாயமுறை கொள்வதற்கு எத்தொடர் பெரிதும் அனுகூலமுடைய தாகக் கருதப்பட்டதோ, மகன் மகள் தந்தை மைந்தன் என் பனவும் எவற்றின்பொருட்டு வலிந்து பொருள்கொள்ளப்பட் டனவோ அத்தகைய தொடரும் சொற்களும் முடிவாக மக்கட்

டாயத்துக்கே பரமானுகூலஞ்செய்வனவாக அமைந்தமை கண்டு கொள்க.[1]

இனி, ஐந்தாம்பத்துப் பதிகத்துள், செங்குட்டுவனை—"சேரலாதற்குச் சோழன்மணக்கிள்ளி ஈன்ற மகன்" என்று பதிகவாசிரியர் கூறுகின்றார். "சேரற்குக் கிள்ளியாகிய ஆண்பால் மகப்பெறுதல் அசம்பாவிதமாகலின், ஏனைத்தொடர்களிற்போல, மணக்கிள்ளியை அடுத்திருந்த 'தேவி' என்றசொல் குறைந்ததாதல்வேண்டும்' என்று மருமக்கட்டாயங் கூறுவோர் கருதுவர். இக்கருத்தின் ஒருபகுதி ஏற்கத்தக்கதாயினும், அக்குறைச்சொல் அவர்கூற்றுப்படி தேவியேயாக வேண்டும் என்னும் நியதியில்லை. இப்பதிகத் தொடர்ப்பொருளை ஐயமின்றித் தெளிதற்கு வேறு ஆசிரியரின் வாய்மொழிகள் நமக்குப் பேருதவிபுரிவன. அவ்வாசிரியருள் ஒருவர் அப்பதிகத்தின் தலைவனை கோச்சேரனுடன் பிறந்த இளங்கோ ஆவர். அவர்கூற்றுப் பிற்பட்ட பதிகவாசிரியர் கூற்றினும் உண்மையும் மதிப்புமுடைய தென்பது சொல்ல

1 ஆண்மக்களின் இயற்பெயர்களை அடுத்துத் தேவி என்ற சொல் வழங்குந் தொடர்களைச் சங்கச்செய்யுட்களிற் காண்டல் அரிது. அத்தகைய தொடர்கள் பயின்றுள்ள இடம் பதிற்றுப்பத்துப்பதிகங்களேயாம். அப்பதிகங்களின் ஆசிரியர் சங்ககாலத்துக்குப் பெரிதும் பிற்பட்டவரே. அவர் வழக்குக்களைச் சங்க வழக்காகவே கொண்டு பிறர் எழுதிவருதல் தவறாகும் அன்றியும், அவ்வியற்பெயர் சிறப்புப் பெயர்களை அடுத்த தேவிச்சொல் மனைவியென்ற பொருளில் மட்டு மன்றி 'இன்னார் மகளான தேவி' (=தலைவி, கோப்பெண்) என்ற பொருளினும் வழங்கும் என்பதற்குக் காட்டப்பட்ட வானவன் மாதேவி முதலிய சாஸனவழக்குக்களைச்'சிலகம்மியர் செதுக்கிவைத்த தொடர்மொழிகள்' என இகழ்ந்தும், அவற்றிற்குச் சரித்திர மாறுபாடான பொருளைக் கற்பித்தும் அன்னோர் எழுதுவர். மூலசாஸனங்களின் பிரதிகளே அரசாணை பெற்றுக் கல்லிலும் செம்பிலும் கம்மியரால் பிரதிசெய்யப்படுவன என்பது சரித்திர அறிஞர் யாவரும் அறிந்தது. அங்ஙனம் பொறிக்கப்பட்டதனானே அவை கம்மியர் கற்பித்த வழக்காகக் கொள்வார்க்கு யாங்கூறும் விடையுமுண்டோ? அவை கம்மியர் தொடராயின், முன்னோர் எழுதிய நூல்கள்யாவும் சுவடியெழுதும் எழுத்தாளர் வழக்காகவே முடியத் [illegible] பண்டை வழக்குக்களையும் சொற்பொருண்மரபுகளையும் அரியபெரிய சரிதவுண்மைகளையும் பல்வகையினும் வெளியிடுவனவாகச் சரித்திராசிரியரும் பிறருங் கருதி மதித்து வருவதும் அதுபற்றி அரசாங்கத்தாரால் பெரும்பொருள் செலவிட்டுப் பேணப்பட்டு வருவதுமான சாஸனங்களின் வழக்குங்களை இவ்வாறு 'கம்மியர்கட்டிய வழக்காக' இகழ்வதற்குக் காரணமெல்லாம், தாம்கொண்ட கொள்கையை அவ் வழக்கு மாற்றுதல் பற்றியேயன்றிப் பிறிதன்றென்க.

வேண்டாதது. மற்றொருவர் அவ் வடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திற்குப் பேருரையிட்ட அடியார்க்குநல்லாராவர். இவருள், இளங்கோவடிகள்—

"குமரியொடு வடவிமயத்
தொருமொழிவைத் துலகாண்ட
சேரலாதற்குத் திகழொளிஞாயிற்றுச்
**சோழன்மக ளீன்ற மைந்தன்**
செங்குட்டுவன்" (சிலப். 29)

என்று கூறுகின்றார். இங்ஙனம் அச்சேரனுடன்பிறந்தவரே கூறுதல் 'சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்ற மகன்' என்ற ஐந்தாம்பதிகத் தொடர்ப்பொருளை அங்கைநெல்லிக்கனிபோல் விளக்கிக் காட்டுவதன்றோ? 'சேரலாதற்குச் **சோழன்மகளீன்ற மைந்தன்**' என்று தம் தமையன்பிறப்பை அடிகள் தெளிவாகக் கூறியதனால், அப்பதிகத்தொடரும் சோழன்மகளீன்றபுதல்வனே செங்குட்டுவன் என்ற பொருளில் வழங்கியதாகவேண்டுமென்பது ஐயமின்றிப் பெறப்படும். அதனால் அப்பதிகத்துள் மகண்முறை குறிக்கும் ஒரு சொல்லே மணக்கிள்ளியை அடுத்திருந்து, பின்னர் விடுபட்டதாதல்வேண்டும் என்பது தெரியலாம். அக்குறைச் சொல் இன்னதென்பதனை அடியார்க்குநல்லார் தெளிவாகக் கூறுதல் அறியத்தக்கது. அவர், சிலப்பதிகாரப் பதிகவுரைத் தொடக்கத்தே—

"குமரியொடு வடவிமயத்
தொருமொழிவைத் துலகாண்ட
சேரலாதற்குத் திகழொளிஞாயிற்றுச்
சோழன்மகள் நற்சோணையீன்ற
மக்களிருவருள்"

என்றுள்ள பழையதொடர்களை எடுத்தாளுகின்றார். இதனால் மணக்கிள்ளி என்பதனையடுத்து 'நற்சோணை' என்ற பெயரிருந்து பின்பு குறைபட்டதென்பதும் அந்நற்சோணை சோழன்மகளே என்பதும் நன்கு புலனாதல் தெரியலாம். இதுவே அக்குறைச்சொல்லாதல் வேண்டும் என்பதனை—"இக்கதையை (செங்குட்டுவனிளங்கோ வரலாற்றை)ப் பதிற்றுப்பத்தினுள் அஞ்சாம்பத்தின் முடிவின்கண் 'வடவருட்கும் என்ற கவியுள்ளும்......காண்க" என அடியார்க்கு நல்லார் அப்பதிகவுரையிலே எழுதியுள்ள குறிப்பு வலியுறுத்துவதாம். 'வடவருட்கும்' என்ற 'கவியாவது, "சேரலாதற்குச் சோழ மணக்கிள்ளியீன்ற" என்ன மேற்குறித்த தொடரமைந்த பதிற்றுப்பத்துப்பதிகமேயாம். ஆகவே 'மணக்கிள்ளிதன்

மகள் நற்சோணையீன்ற' என்று தொகாநிலையாகவோ, மணக்கிள்ளி நற்சோணையீன்ற என்று தொகைநிலையாகவோ ஆதியிலிருந்த தொடரே 'மணக்கிள்ளியீன்ற' என இடையில் மாறியதாயிற்று என்பதும், 'மணக்கிள்ளி ஈன்ற மகன் செங்குட்டுவன்' என்பது சேரசகோதரியின் கணவன்பெற்ற மகன் என்ற பொருளுடைய தாதலின், சேரற்கு மருகனே அச்செங்குட்டுவன் என்பது பெறப் படுமென்று கூறிய புதியகருத்தும் பொருத்தமற்றதென்பதும், பாட்டுடைச்சேரனின் தாயர்பெயரை அத்தாயரைப்பெற்ற தந்தை யர்பெயருடன் சேரவைத்துக்கூறுவதே பண்டையோரெல்லாங் கொண்டுவழங்கியமுறை என்பதும் ஐயத்துக்கிடமின்றிப் பெறப் படுதல் கண்டுகொள்க. இங்ஙனம், கோமகளிரை அவர் தந்தையர் பெயர்விளங்கக் கூறுமுறைப்படியே—

> "வென்வேற் கிள்ளிக்கு நாகநாடாள்வோன்
> தன்மகள் பீலிவளை தான் பயந்த
> புனிற்றிளங் குழவியை" (மணி. 29, 3-5)

எனச் சாத்தனர், வேற்றுநாட்டுவேந்தரைக் கூறுமிடத்துந் தெளிவாகவழங்குதல் குறிக்கொண்டறியத்தக்கது. இத்தகைய வழக்கினை,

> "தெங்கநாடுகிழவன் றன்மகள் ஆய்குலமாதேவியான
> முருகஞ்சேந்தி" (T. A. S. I.17)

> "பழியிலிசிறியநங்கை"
> "பராந்தகன் குந்தவை" } (Ibid. I. 156)
> ஆதிச்சனுமையம்மை" (Ibid. III, 3)

எனப் பிற்காலத்துச்சாஸனங்களிலும் பரக்கக்காணலாம். முருகன் மகள் சேந்தி, பழியிலி என்பான்மகள் சிறியநங்கை, பராந் தகன்மகள் குந்தவை, ஆதிச்சன்மகள் உமையம்மை—என இக் கோமகளிர் பெயர்கள் விரிதல் காண்க.

> 'வில்லிபுத்தூர்க்கோன்கோதை' 'புதுவையர்கோன்கோதை'
> 'பட்டர்பிரான்கோதை' 'விட்டுணுசித்தன் கோதை'

என ஸ்ரீஆண்டாள் தம்மைக்குறித்து வழங்கிய தொடர்களும் இவ் வாறே விரிவனவாதல் அறியத்தக்கது. இவற்றால், பதிற்றுப் பத்துப்பதிகங்கள்—

> "உதியஞ்சேரற்கு வெளியன்வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்"
> "சேரலாதற்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவி ஈன்ற மகன்"

என்று கூறுவனவற்றுள்—'உதியஞ்சேரற்கு' 'சேரலாதற்கு' என்ப வற்றால், பாட்டுடைச்சேரர் பெருவேந்தரைத் தம் தந்தையராக

உடையர் என்பதும், நல்லினி, பதுமன்றேவி என்பவற்ருல் அவா தாயர் இன்னரென்பதும், வெளியன், வேளாவிக்கோமான் என்பவற்ருல், அத்தாயர், வேந்தரின்காதற்கிழத்தியர்போற் குலத்தாழ்வுடையாரன்றி, பேரரசற்கு மகட்கொடைக்குரிய உயர்குலத்து வேளிர்செல்வியர் என்பதும் 'ஈன்றமகன்' என்பவற்ருல், இவ்வாறு தந்தைவழியாலும் தாய்வழியாலும் மாசமறுவற்று உத்தமகுலத்தவரான அவ்விருவர்க்கும் ஔரஸபுத்திரராக உதித்தவரே பாட்டுடையார் என்பதும் அழகுற விளக்கப்பட்டவாறு காண்க. இங்ஙனம் இருவழியாலும் அரசலரைப் பெருமைப்படுத்துக் கூறல் பழைய மரபென்பதனை—

"தண்ணங்குருகூர்ச் சேயிருமாமரபுஞ் செவ்வியான்"
(சடகோபரந்தாதி

எனச் சடகோபரைக் **கம்பநாடரும்,**

"திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றுஞ்
செய்யபரு திக்குழவி யையனிவ னென்றுந்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்
தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே"

என அபயனுகிய முதற்குலோத்துங்கசோழனைச் **செயங்கொண்டாரும்,**

"இன்னற் பகைவ னிவன்கா ணகளங்க
மன்னர்க்கு மன்னன் மகனென்பார்—முன்னர்
முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
விதுகுல நாயகனே யென்பார்" (குலோத். உலா. 221-2.)

என அநபாயனுகிய இரண்டாங்குலோத்துங்கனைக் **கூத்தரும்** ஆகிய கவிச்சக்கரவர்த்திகள் மூவரும் பாடுதலால் அறியலாகும். இத்துணையுங் கூறியவற்ருல், பதிற்றுப்பத்தின் பாட்டுடைச்சேரர் பிற உயர்குடித் தாயர் வயிற்றில் உதித்து அரசுரிமைபெற்ற நன்மக்கள் என்பதே அந்நூற்பதிகவாசிரியர் கருத்தாம் என்பது நிலைநாட்டப்பட்டது. இக்கருத்தை வலியுறுத்தும் பிறபிரமாணங்களை இனி யெடுத்து மொழிவேன்.

## IV. மக்கட்டாயமுறையை வலியுறுத்தும் பிறசான்றுகள்

[செங்குட்டுவற்குச் சோழன் மைத்துனமுறையினனுதல்]

செங்குட்டுவனுற் பட்டத்தில் நிறுவப்பட்ட சோழன்மகனை "**மைத்துனவளவன்** கிள்ளி" என்று, அச்சேரனுடன் பிறந்தவ

ரான இளங்கோவடிகள் கூறியது, மருமக்கட்டாயமுறையோடு பெரிதும் முரணுதலை முன்னர் விளக்கினேன். இனி மக்கட்டாயத்துக்கே அம்முறை பொருந்துமாற்றைக் கூறுவல். "திகழொளி ஞாயிற்றுச் சோழன்மகள் ஈன்ற மைந்தன் செங்குட்டுவன்" என அவனிளவலே உரைப்பாட்டுமடையிற் றெளிவுறக் கூறுதலால், அச்சோழன் அக்குட்டுவதற்குத் தாய்ப்பாட்டனுனவன் என்பதும், அப்பாட்டன் செங்குட்டுவன் தந்தை சேரலாதற்குச் சமகாலத்தரசாண்ட சோழவேந்தன் என்பதும் தாமே போதரும். இதனால், செங்குட்டுவனது நீண்ட ஆட்சிக்காலத்தில், தாய்ப்பாட்டனை சோழன்மகனுய் அவன்பின் பட்டமெய்தியவனே—அஃதாவது செங்குட்டுவன் தாயுடன்பிறந்த அம்மானே—சோணுட்டை அக்குட்டுவன்காலத்து ஆண்டுவந்தவன் என்பதுந் தெரியலாம். பத்தினிக்கல் எடுத்துவரச் செங்குட்டுவன் வடநாடு சென்றதற்குச் சிறிதுமுன்புதான், சோணுட்டுக்கலகத்தை அடக்கிச் சோழன் மகனைப் பட்டத்தில் அவன் நிறுவினன். இச்செய்தி, கங்கைக் கரைப்பாடியில் மாடலனை நோக்கிச் சோணுட்டுநிலைமைபற்றி அச்சேரன் உசாவியவற்றால் விளக்கமாம். அப்போது செங்குட்வற்கு 46, 47-வயதென்பது, அவன் 32-மாதங்கட்குப்பின் வடநாட்டினின்று திரும்பிவந்ததும் அவற்கு 50-ஆம் பிராயம் நடைபெற்றதாக இளங்கோவடிகள் தெளிவாகக் கூறுதலாற் பெறப்படுகின்றது. இவற்றினின்று, செங்குட்டுவனது 46, 47-ஆம் பிராயத்துக்குச் சிறிது முன்பு சோணுடாண்ட தன் அம்மான் இறந்தனுக, அதனால் உண்டான நாட்டுக்கலகத்தைத் தானே படையெடுத்துச் சென்று அடக்கித் தன் அம்மான்சேயைப் பட்டத்தில் நிறுவிவந்தனன் அச்சேரன் என்பது தெளிவாகத்தடையில்லை. எனவே, 'மைத்துனவளவன்' என்று இளங்கோவடிகளாற் கூறப்பட்டவன் அவ் வம்மான்மகனேயன்றி வேறெவனுமல்லன் என்பது அறியலாம்.[1] இம் மைத்துனச்சோழன் பெயரைப் **பெருங்கிள்ளி** என்று

1 'ஒன்பது குடையும் ஒருபக லொழித்து' என்ற தொடரில்வரும் முற்றும்மையால், அக்குடையரசர் ஒன்பதின்மரினும் வேருன கோத்திரத்தவனே மைத்துனவளவன் என்றும், அதனால், "இறந்த சோழற்கு ஞாதித்தாயத்தாளல்லாத சம்பந்தவழியினனொருவனை அவன் மைத்துனனுன செங்குட்டுவன் அரசு பெறுவித்தான்" எனவும் கொண்டு, மருமக்கட்டாயக் கொள்கையை வலியுறுத்த முயன்றனர் சிலர். இவ்விசித்திரமான சரித்திரக் கற்பனையினின்று, 'மைத்துனவளவன்' என்ற இளங்கோவடிகளின் தொடர், அவர் கருத்துக்கு விளைத்துவரும் இடையூறு எத்தகையது என்பது அறிஞர்க்கெல்லாம் வெளியாகத் தடையில்லை. 'பாண்டவர்க்கு ஞாதியர் நூற்றுவர்; அந்நூற்றுவரையும் அப்பாண்டவர் போரிற்

அவ்வடிகளும், **பெருநற்கிள்ளி** என்று அடியார்க்குநல்லாரும கூறுவர். இவற்ருலும் மக்கட்டாயமுறையே சேரர்க்குரிய தென்பது வெள்ளிடைமலையாக விளங்கும்.

**[சேரர்மனேவியரே உடன்முடிகவித்தற்குரிய தேவியராதல்]**

(1) பெருந்தேவி, கோப்பெருந்தேவி, பெருங்கோப்பெண்டு முதலிய சிறப்புப்பெயர்கள், அரசரின் பட்டமகிஷியர்க்கன்றிப் பிறர்க்குவழங்காப் பெற்றிய வென்பது—

"பாண்டிபன் பெருந்தேவி" (சிலப். 20, 19)

"கோவீற் றிருப்புழிப் பூவீற் றிருந்த
திருமகள் போல ஒருமையிஞெட்டி
உடன்முடி கவித்த கடனறி கற்பின்
இயற்பெருந்தேவி" (பெருங்கதை, 2,4, 21—5)

"கோப்பெருந்தேவிக் கல்லதை யிச்சிலம்பு
யாப்புறவில்லை" (சிலப். 16, 21)

"கோப்பெருந்தேவி" (பெருங். பக். 64, 119, 143, 219)

"பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்"
(சிலப்.25,86)

"பூதப்பாண்டியன்றேவி பெருங்கோப்பெண்டு" (புறம். 246)

"கோப்பெருங் கிழவோள்" (பெருங். 2. 11, 48.)

என்பன முதலியவற்ருல் அறியலாம். மருமக்கட்டாயமே தமிழகத்தின் பண்டைமரபாயின், அத்தாயமுறையிற் சேரர்மனேவியர்காமக்கிழத்தியர்போன்ற நிலையினரேயாதலின், அரசுரிமைக்குரிய அவர் சகோதரியரே மேற்கூறிய சிறப்புப்பெயர்கட்கு உரியராதல்வேண்

---

கொன்ருர்" எனின், நூற்றுவரின் வேருன கோத்திரத்தவரே அப்பாண்டவர் என்றுதான் முற்றும்மைக்குப் பொருள் கொள்ளவேண்டியது போலும்! மைத்துனவளவற்கு "**ஒத்தபண்பினர்** ஒன்பது மன்னர், இளவரசு பொருஅர் ஏவல்கேளார்" ஆனமையால் ஒன்பது குடையுமொருபக லழித்தான் செங்குட்டுவன் என்று அவனிளவல் பாடுகின்ருர். 'ஒத்த பண்பினர்' என்பதனுல் 'சோழர் குடிக்குரியோ' ராய் ஞாதியராயிருந்தவர் அவ்வொன்பதின்மர் என்பதும், 'இளவரசுபொருஅர்' என்பதனுல் இறந்த சோழனது உரிமையை அடைவதற்குரிய யுவராசனே அம்மைத்துனன் என்பதும், 'ஏவல் கேளார்' என்பதனுல், தாயாதப்பொருமையால் அவ்விளவரசுரிமையை ஏற்று முன்போல் ஏவல்கேட்டொழுக மறுத்தனர் அவரென்பதும்-விளக்கமாம். ஆகவே, மகன் மகன் மைந்தன் நுந்தைச் சொற்களுக்குப் போல மைத்துனபதத்துக்கு அவர் கற்பித்த உறவு முறையும் போலியே என்க.

டும். அம்முறைமாறிச் சேரர்மனைவியரே அப்பெயர்களாற் சிறப்பிக்கப்படின் அஃது அத்தாயமுறைக்குப் பெருவிரோதமென்னத்தடையில்லை; என்னை? "கோவீற்றிருப்புழி...உடன்முடிகவித்த கடனறி கற்பி வியற்பெருந்தேவி[1] எனப்படுதலானும், இவ் உடன்முடிகவிக்குஞ் சிறப்புச் சேரசகோதரியர்க்கு அமைவதன்றாகலானும் என்க. எனவே, "ஒக்க வபிடேகஞ் செய்யு முரிமைக்கட், டக்க தலைமைத் தனித்தேவி" எனப்பட்ட பட்டமஹிஷியர்க்கே மேற்கூறிய பெயர் வழக்குக்கள் அமைவனவென்பது சொல்லவேண்டாதது. அம்முறைப்படியே, சேரன்செங்குட்டுவன் மனைவியை அவனிளவலான அடிகள்—

"கோப்பெருந்தேவி,
வால்வளை செறிய வலம்புரி வலனெழ
* * * *
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்" (சிலப் 27. 251-5)

எனக் கூறுதலும், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையின் மனைவியைப் 'பெருங்கோப்பெண்டு' என முன்னோர் வழங்குதலும் (புறம்-245) ஈண்டு அறியத்தக்கன. செங்குட்டுவன் வடநாடு சென்றபோது அவன் தேவியான இளங்கோவேண்மாள் கொண்டிருந்த பிரிவாற்றாநிலையையும் அவன் தன்னொடு நோக்கி வருகின்ற செய்தி அறிந்ததும், அவ்வேண்மாளின் ஆயச்செவிலியரும் சேரநாட்டு நால்வகைநிலத்துமகளிரும் அவள் வருத்தநிலை நீங்குமாறு உவந்துகூறிய மகிழ்ச்சியுரைகளையும் இளங்கோவடிகள் கூறுஞ் சிறப்பினை நோக்கும் அறிஞர்கள், 'வதுவைவேண்மாண் மங்கலமடந்தை' எனப்பட்ட அப்பெருந்தேவியைக் காமக்கிழத்தியர் நிலையினும் அதிக கௌரவம்பெறாத மருமக்கட்டாய மனைவியென்று கூறவும் ஒருப்படுவரோ? செங்குட்டுவன் தன் பெரும் புகழை ஐந்தாம்பத்தாற் பாடிய புலவர்பெருமானை பரணர்க்குத் தன் மகன் குட்டுவஞ்சேரலையே தானளித்தற்குரிய பெரும்பரிசிலாக வழங்கினன் என்று அப்பத்தின் பதிகம் கூறுகின்றது.[2] மருமக்கட்டாயப்படி அரசியலில் உரிமைபதவியற்றவனான மகனொருவனைத் தன்னைப் பாடிய புலவர்க்கு உத்தமப்பரிசிலாக அவன் அளித்தான் என்பது, எவ்வாறு அப் பரிசினைச் சிறப்பித்துக்

[1] குலோத்துங்க சோழனுலா, கண்ணி - 71.

[2] இங்ஙனம் மகனைப் பரிசளித்தான் செங்குட்டுவன் என்பது, பரணரிடம் கற்றுவல்லனும்படி அம்மகனைக் குருகுலவாசஞ் செய்ய நியமித்ததையே குறிப்பதென்னலாம்.

காட்டும்? சிறந்துகாட்டவேண்டின், தன்னுரிமைக்குரிய மருகனையன்றே அவன் அவர்க்கு வழங்கியிருத்தல்வேண்டும்? 'தன்னிடமிருந்து நிலைதவறிவாழ்வதினும், புலவரை அண்டியேனும் புகழ்பெறுக' என்று கருதிப் பரணரிடம் செங்குட்டுவன் தன்பதவியற்ற மகனைச் சேர்த்தனன்கொல்லோ? இவற்றால் கோப்பெருந்தேவி பெருங்கோப்பெண்டு என்பவை, முறையே செங்குட்டுவன், மாக்கோதை என்பவரின் திருநிலக்கிழமைத் தேவியரே[1] என்பதும், செங்குட்டுவனது அரசுக்குரிய பெருமகனே பரணர்க்குப் பரிசிலாக அளிக்கப்பட்ட குட்டுவஞ்சேரல் என்பதும் நன்கறிந்துகொள்க. இங்ஙனம் சேரர் பெருந்தேவியரின் திருவயிறு வாய்த்த செல்வமக்களே அவருரிமை பதவிகட்கு உரியராகவிளங்கியவர் என்பதனைப் பதிற்றுப்பத்து ஆசிரியர்களே ஐயந்திரிபற விளக்கிச் செல்லுதலை இனிக் கூறுவேன்.

[சேர்மனைவியர் அரசுக்குரிய புதல்வரையுடையராதல்]

(2) தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையை அடுத்துப் பட்டம் பெற்றவன் ஒன்பதாம் பத்துக்குரிய இளஞ்சேரலிரும்பொறை என்பது மருமக்கட்டாயங் கூறுவோர்க்கும் ஒத்ததே. அவர்கருத்தின்படி, அவ்விளஞ்சேரல் பெருஞ்சேரலின் மருகனாதல் வேண்டுமன்றோ? பெருஞ்சேரலைக் கூறுமிடத்தே அரிசில்கிழார் என்ற பெரும் புலவர்—

"ஒடுங்கீ ரோதி யொண்ணுதல் கருவின்
எண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையு முளப்படப் பிறவும்
காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை" (74, 17 - 21)

என்று பாடுதல் காணலாம். "தன் கற்புடைமனைவியின் கருவிலே உத்தமகுணங்களும் உலகபரிபாலனத் திறமையுடைய பெருமை தங்கிய புதல்வனை நீ பெற்றுச் சிறந்தனை" என்று அவர் புகழ்தல் ஈண்டு அறியத்தக்கது. 'ஒண்ணுதல்' என்பதனால் கற்புடைத் தேவியையுடையவன் சேரன் என்பதும், அவள் 'கருவிற்புதல்வனை பெற்றனை' என்பதனால், அம்மனைவியிடம் தனக்கு ஔரஸபுத்திரனை அவன் அளித்தவன் என்பதும், 'காவற்கமைந்த அரசுதுறை போகிய' என்பதனால், அப்புத்திரன் தந்தையின் அரசுரிமையெய்

[1] மணிமேகலை, 23, 4,

தற்குரியனும் யுவராஜ்யபட்டாபிஷேகம் பெற்றவன் என்பதும், 'வீறுசால் புதல்வன்' என்பதனுல், தன்னுட்டினை முன்னேர்க்கிருந்த அறிவுதிருவாற்றல்களுடன் ஆளவல்ல மகன் என்பதும் மிகவழகாகக் குறிக்கப்பட்டிருத்தல் காண்க. இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட புதல்வன், பெருஞ்சேரலின்பின் பட்டமெய்திய இளஞ்சேரலே[1] என்பதும், அவனைப் பெற்ற தாய் மையூர்கிழான் மகள் அந்துவஞ்செள்ளை என்பதும் பதிற்றுப்பத்துப் பதிகத்தால் நன்கறியப்பட்டவை. மகன் முதலிய சொற்களுக்குக் கூறியவாறு, புதல்வன் என்பதற்கு—மருமக்கட்டாயத்தின்படி வேறு புதுப்பொருள் கற்பிக்க ஈண்டு இடமில்லை. தன் 'ஒண்ணுதல் கருவிற் புதல்வற்' பெறுபவன் தந்தை எனற்கு உரியனேயன்றிப் பிறனுகாமை தெளிவு. பிறனுகக்கொள்ளின், உரைக்கத்தகாத பெரும்பழி எய்தலின் அஃது அடாததாம். நல்லினி, பதுமன்றேவி, அந்துவஞ்செள்ளை முதலியோரைச் சேர சகோதரியராக முடிவு செய்துகொண்டு, அச்சோதரியரைச் சோதரருடன் சேர்த்துப் பழிவினைத்துவிட்டதாகக் கருதி அதற்குப் பரிகாரந் தேடப்புக்கோர் சேரர் மனைவியராயினுரை அவர் தந்தையுடன் சேர்த்துச் சேர வமிசத்துக்கே உண்மையிற் பெரும்பழியுண்டாக்கிவிட்டது முழு விபரீதமாக முடிந்தவம காண்க. இளஞ்சேரலிரும்பொறை என்பது 'இளம்பஞ்சபாண்டவர்' என்ற வழக்குப்போல யுவராசனை சேரலிரும்பொறை என்ற பொருள்கொள்ளற்குரியது. 'குட்டுவனிரும்பொறைக்கு...அந்துவஞ்செள்ளையீன்ற மகன்' இவ்விளஞ்சேரல் என்பது, பதிற்றுப்பத்து 9-ம் பதிகத் தொடரால் அறியப்படும். இவ்வாறன்றி, அவ்விளஞ்சேரலைப் பெருஞ்சேரலின் தம்பி எனின், இருதாயமுறைப்படியும் அப்பெருஞ்சேரலின் முன்னேனை செல்வக்கடுங்கோவையே இவ்விளவற்கும் முன்னேனென்று பதிற்றுப்பத்துப் பதிகங் கூறல் வேண்டும். அங்ஙனங் குறியாமல் வேறு கூறலின் அது பொருந்தாதென்க.

இங்ஙனம், பெருஞ்சேரலின் மகனே இளஞ்சேரல் என்று அரிசில் கிழாரால் ஐயத்துக்கிடமின்றிப் பாடப்பட்டவாறே, அப்பெருஞ்சேரலின் தந்தை செல்வக்கடுங்கோவாழியாதனை—தேவர், முனிவர், தென்புலத்தாரென்ற மூவர் கடன்களையும் முறைப்படி முடித்தவன் என்று புகழுமிடத்து—

---

1 'வளங்கெழு தாயத்து வழியடையாகிய, இளங்கோ நம்பியும்' (பெருங். 1, 37, 222-3) "இளங்கோப்பருவத்த' (முதற்குலோத். மெய்க்கீர்த்தி) என்பவற்றிற்போல, இளஞ்சேரல் என்பது யுவராசனை சேரல் என்பது குறிப்பதாம்.

"வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்" (பதிற். 70, 18 - 22)

என, நல்லிசைப் புலவரான கபிலரும், சேரலாதன் மக்களுள் ஒருவனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை—

" இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூ லடங்கிய கொள்கை
ஒண்ணுதன் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்க ணஞ்சும்
புரவெதிர் கொள்வனை " (பதிற். 57, 10 - 15)

எனக் காக்கை பாடினியார் நச்செள்ளையாரும் பாடுதல் காணலாம். இப்புலவர் கூற்றுக்களால் செல்வக்கடுங்கோவுக்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதற்கும் இரண்டிரண்டு புதல்வர் பிறந்திருந்த செய்தி பெறப்படும். 'ஒருமரமுந் தோப்பில்லை, ஒரு மகனும் மகனில்லை' என்ற மூதுரைப்படி, 'இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த' என்று சேரமாதேவியர் சிறப்பிக்கப்பட்டன ரென்க. மருமக்கட்டாயமாயின், அரசியற்குரிமையுடைய மருகரையன்றோ புலவர்கள் அவ்வாறு புகழ்ந்துரைத்தல் வேண்டும்? அவரை அடியோடு மறந்து புதல்வரையே 'வணங்காவாண்மையுடையார்' என்றும், அவரைக் கொண்டு முதியரைப் பேணித் தொல்கடனிறுத்தவன் தந்தை என்றும், அப்புதல்வர் 'காவற்கமைந்த அரசதுறைபோகிய வீறுசான்றவர்' என்றும் நல்லிசைப் புலவரெல்லாம் நயமுறப் பாடவும் ஒருப்படுவரோ? ஆகவே மக்கட்டாயமே தேற்றமாதல் கண்டுகொள்க.

## [சேரரின் வேறொரு கிளையினரும் மக்கட்டாயமும்]

(3) அதிகமான்கள் என்ற தமிழ்த் தலைவர் சேரர்கிளையிருனள் ஒருவராவர். இச் செய்தி—சேரர்க்குரிய பனந்தோட்டுமாலை இவ்வதிகர்க்கும் உரியதாக முன்னோர் கூறுதலாலும் "இவனுக்குப் பனந்தார் கூறியது உதியவேந்தாதலின்"[1] என்று புறநானூற்றுரைகாரர் எழுதிச் செல்லுதலாலும், பிற்காலத்தில் விளங்கிய இம்மரபினர்—"வஞ்சியர்குலபதி எழினி"[2] "சேரமானுர்வமிசத்து அதிகமான்எழினி" என்று தம்மைக் கூறிக்.

[1] 'சேரமாற்கு உறவாதலின்' என்றும் பிரதிபேதமுண்டு.
[2] "ஸ்ரீமத் கேரளபூப்ருதா யவனிகா நாம்நா" என்பது இதன் வடமொழிப் பகுதி (S. I. I. i, 107).

கொள்ளுதல் சாஸனங்களிற் காண்டலாலும் விளக்கமாம். இவ்வதிகமான் குலத்து நெடுமானஞ்சி என்பானுக்கும் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் தாயநாடாட்சிபற்றித் தகடூர் என்ற களத்திற் பெரும்போர் மூள, அதனில் அவ்வஞ்சி கொல்லப்பட்டான். இவ்வாறு அதிகன் மரபோர் சேரர்கிளையினர் என்பது தெளியப்படுதலின், சேரர்க்குரிய தாயமுறை முதலிய வழக்க ஒழுக்கங்களையே அம்மரபினரும் கொண்டிருந்தவர் என்பது பெறப்படும். அம்முறை மருமக்கட்டாயமன்றி மக்கட்டாயமேயாதல் அறியத் தக்கது. அதிகமான் நெடுமானஞ்சி வேற்றிடத்துப்போரொன் றன்கண்ணே மூண்டுநின்ற காலத்தில் தனக்குத் **தவமகன்** பிறந்தான் என்ற செய்தி தெரிந்து, அப்போரினிடையே தன் மகவைக் காண்டற்குச் சென்றுவந்தான் என்ற செய்தி நல்லிசைப் புலவரான ஔவையார் திருவாக்கால் (புறம். 100) அறியலாம். 'சேரலாதற்குப் பதுமன்றேவியீன்ற மகன்' முதலிய தொடர்களில், மகன் என்பது வழித்தோன்றலையே குறிக்குமென்று வாதிப்போர் ஈண்டுத் தனிநிற்கும் 'மகன்' என்பதற்கு எவ்வாறு பொருள் கொள்வரோ? **தவமகன் பிறந்தானே** எனவரும் புறநானூற்றுத் தொடரால் அம்மகன் தன் அரசவழி வளர்த்தற்குரியனாகத் தன் தேவியிடம் அதிகற்குப் பிறந்த புதல்வனே என்பது பெறப்படும். அப்புதல்வன், அதியமான் அஞ்சிக்குப்பின் **அவனரசுரிமையெய்திய பொகுட்டெழினி** என்பது ஔவை வாக்கானே (புறம்-96) நன்கறியக்கிடக்கின்றது. ஆகவே, மக்கட்டாயமே சேரர்க்கும் சேரர் கிளையினர்க்கும் உரிய பழைய முறையாதல் கண்டுகொள்க.

[**இளஞ்சேரலிரும்பொறையின் தாய்ப்பாட்டன்**]

(4) பெருஞ்சேரலின்பின் பட்டமெய்திய இளஞ்சேரலிரும்பொறையைக் குறிக்கும் பதிகத் தொடருள்—

"குட்டுவனிரும்பொறைக்கு மையூர்கிழான்வேண்மாள்
அந்துவஞ்செள்ளை ஈன்ற மகன்"

என்ற தொடர் வருகின்றது. அந்துவஞ்செள்ளை என்பது, முற்கூறியபடி, அந்துவற்கு மகளான செள்ளை என்று விரிந்து பொருள் பயக்கும். பண்டை நல்லிசைப் புலமை மெல்லியலார்களை—

"பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார்" (புறம்)

"அஞ்சிலாந்தையார் மகள் நாகையார்" (அகம்)

என்று, இன்னார்மகள் என்பது விளங்க விரித்துக் கூறுதல் போலவே,

"பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்" (அகம்)

"கழாஅர்க் கீரனெயிற்றியார்" (நற். 44)

என முன்னோரும்; மாறம்பாவை, நக்கன்கொற்றி, பராந்தகன்குந்தவை எனப் பின்னோரும் அப்பொருள்படத் தொகுத்துக் கூறுவதும் பண்டை மரபாதல் காணலாம். பிற்காலத்துக் கேரள நாடாண்ட ஸ்ரீவல்லவன்கோதை என்ற அரசனுடைய தேவிக்கு 'ஆதித்தனுமையம்மை' என்பது பெயர். இதுவும் ஆதித்தன் மகள் உமையம்மை என்ற பொருளினதென்பர். இவை போன்றதே அந்துவஞ்செள்ளை என்பதும். அந்துவஞ் சாத்தன் என்ற ஒட்டியற் பெயர் (புறம்) அந்துவனுக்கு மகன் சாத்தன் என விரிதலும் ஒப்பிடுக. செள்ளை என்பது பெண்பாலார்க்கு வழங்கி வந்த பழைய இயற்பெயராதல் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற பண்டைப் பெண்புலவர் நாமத்தாலும் அறியத்தகும். அந்துவஞ்செள்ளை என்ற தொகைமொழியுள் அந்துவன் என்பது செள்ளையின் தந்தையைக் குறிப்பதாம் ஆகவே, மக்கட்டாயப்படி, இளஞ்சேரலிரும்பொறையின் தாயைப் பெற்ற பாட்டன் அந்துவன் என்ற இயற்பெயரினனாதல் தெரியவரும். இனி, மருமக்கட்டாயப்படி, அவ்விளஞ்சேரலின் தாயான செள்ளையையும் பெருஞ்சேரலிரும்பொறையையும் பெற்றவன் பதுமன் என்ற வேளாவிக்கோமான் ஆகின்றான். தனக்கு மாமனைப் பெற்றவர்களே தன் தாயையும் பெற்றவர்களாக வேண்டுமன்றோ? பதுமன் மகளே இளஞ்சேரலின் தாயான செள்ளையாயின், பண்டையொட்டுப் பெயர் வழக்குப்படி, அவள் 'பதுமஞ்செள்ளை' எனற்குரியளேயன்றி அந்துவதற்கு மகளெனப் பொருள்தரும் அந்துவஞ்செள்ளை என்ற தொடரால் அழைக்கப்படாள். அதனால் மருமக்கட்டாய முறையில், தாய்ப்பாட்டன் வழிகள் வெவ்வேறாகப் பெயர் மலைவு கொண்டு இயையாமை கண்டுகொள்க.[1]

மேற்குறித்த தொடரையே மக்கட்டாயப்படி நோக்குமிடத்து, 'பெருஞ்சேரலிரும்பொறைக்கு மையூர்கிழான் வேண்மாளாகிய அந்துவஞ்செள்ளையிடம் பிறந்த மகன் இளஞ்சேரலிரும்பொறை'

[1] இவ்வியையாமையை இணைக்க முயன்று, பெருஞ்சேரற்குத் தாய்வழியைச் சார்ந்த சகோதரி முறையாளொருத்தியின் மகனே அச்சேரலை அடுத்துப் பட்டம் பெற்ற இளஞ்சேரலாகிய மருகன் என்றும், அதனால் தாய்வழிகள் மாறலாயின என்றும், முற்கூறிய கருத்தை மாற்றிமொழிவர், மருமக்கட்டாயவாதியர். மலையாள அரசர் தலைவர்களின் பிற்காலத்து வழக்கவொழுக்கங்களையெல்லாம் பழைய சங்க நூல் வழக்குக்களாகவே கொண்டு அவர் எழுதி வருவன யாவும் பிரமாணமற்ற கற்பனைகளேயன்றிப் பிறிதன்று. அதனால், மேலே விளக்கியபடி, பெருஞ்சேரல் மனைவியின் "கருவிற் காவற் கமைந்த அரசுதுறை போகிய புதல்வ"னைப் பிறந்தவனே இளஞ்சேரல் என்பதுதான் முடிபென்க.

என்பது பொருளாகும். அந்துவன்மகள் சென்னை என்ற பொருளில் வந்த அந்துவஞ்சென்னை என்ற தொகைமொழி, 'மையூர்கிழான் வேண்மாள்' என்ற சிறப்பியற்பெயருடன்கூடி, இருபெயரொட்டாய்—அச்சென்னையின் தந்தை இன்னான் என்பதனையும், அத்தந்தை வேளிர்குடியினன் என்பதனையும், அவ் வுயர்குடிப் பிறப்பினளே அச்சேரன்மனைவி என்பதையும் ஒருங்குணர்த்தி நின்றது. வேள்ஆயின் குலத்தவனாய் 1600-ஆண்டுகட்குமுன் ஆண்ட விக்கிரமாதித்திய வரகுணன் என்பான் தேவியை—

> "தெங்கநாடு கிழவன்றன்மகள்
> ஆய்குலமாதேவியான முருகஞ்சேந்தி" (T. A. S. I.)

என்று அவன் சாஸனங்கூறுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கது. இதனுள் முருகஞ்சேந்தி என்பதற்கு முருகன்மகள் சேந்தி என்பது உறுப்புப் பொருளாம். ஆயின், தெங்கநாடுகிழவன் என்று சேந்தியின் தந்தை வேறாகக் கூறப்பட்டனனே எனின், அத்தெங்கநாடுகிழவன் பின்வந்த முருகனின்வேறாகக் கருதத்தக்கவனல்லன்; என்னை? "தெங்கநாடுகிழவனாயின முருகன்" என அவனதியற்பெயர் முருகன் என்பதைத் தெளிவாக அச்சாஸனமே கூறுதலின் என்க. இவ்வாறே, ஆண்மக்கள்பெயரும் வழங்குவதுண்டு என்பது 'செல்லூர் கிழார்மகனார் பெரும்பூதங்கொற்றனார்' (அகம்-250), மாற்றூர் கிழார்மகனார் கொற்றங்கொற்றனார் (ஷை-54) என்பன போன்றவற்றால் அறியலாம். மேற்கூறியவற்றுள் தெங்கநாடு கிழவன், செல்லூர் கிழார், மாற்றூர்கிழார் என்பன தந்தையரின் குடிப்பெயர்கள் என்பதும், முருகஞ்சேந்தி, பெரும்பூதங்கொற்றன், கொற்றங்கொற்றன் என்ற தொகைமொழிகளுள் முருகன், பெரும்பூதன், கொற்றன் என்பன அத்தந்தையரின் இயற்பெயர்கள் என்பதும், அவ்வியற்பெயர்கள் அவர்தம் மக்கள் பெயருடன் இணைக்கப் பட்டுவிட்டமையின் அவற்றைநீக்கித் தெங்கநாடுகிழவன்" செல்லூர்கிழார், மாற்றூர்கிழார் என அத்தந்தையர் குடிப்பெயர் விளங்கப் பிரித்துக்கூறப்படுகின்றனர் என்பதும் நன்கறியலாம். இவைபோலவே, சேரமாதேவிபெயரான அந்துவஞ்சென்னை என்பதனுள், அந்துவன் என்பதனால் சென்னையின் தந்தைபெயர் பெறப் பட்டமையின் அதனைவிலக்கி, மையூர்கிழான் என அவன் குடிப் பெயரைக் குறித்து, அவற்குப்பிறந்த வேள்குலமகள் என்பது போதர, 'மையூர்கிழானீ வேண்மாள் அந்துவஞ்சென்னை' எனத் தொகைநிலைத்தொடராகப் பதிகவாசிரியரால் அத்தேவி கூறப் பட்டாள் என உணர்க.

## சேரவமிசாவளி

### மக்கட்டாயம்

**[சேரர் மரபு I]**

உதியஞ்சேரல் × வெளியன் வேண்மாள் நல்லினி

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் × (2) பதுமன்றேவி, × (1) சோழன்மகள்

(1) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

(2) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

(1) சேரன் செங்குட்டுவன் × இளங்கோவேண்மாள்

(2) இளங்கோ

குட்டுவஞ்சேரல்

**[சேரர் மரபு II]**

அத்துவன் × பொறையன்பெருந்தேவி

செல்வக்கடுங்கோவழியாதன் × பதுமன்றேவி

பெருஞ்சேரலிரும்பொறை × அந்துவஞ்செள்ளை

இளஞ்சேரலிரும்பொறை

## [தொல்காப்பியமும் தாயமுறையும்.]

மிகப்புராதனமான தமிழ்நாட்டு வழக்குக்களை அறிவதற்குத் தொல்காப்பியத்தினும் பழைமையான கருவி பிறிதில்லை என்பதும், அந்நூல் தமிழ்கூறுநல்லுலகத்து வழக்குக்களையே மொழிவதென்பதும் கற்றூர் அறிவர். தமிழ்கூறுநல்லுலகம் என்பது மூவேந்தர்க்கும் பழைமையாகவே, உரிமை பூண்டதாம். 'வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்' பாகிய இத்தமிழகத்தின் பழைய தாயமுறையை இத்தொல்காப்பியத்தைக் கொண்டும், அஃதிலக்கணமாக எழுந்த சங்க இலக்கியங்களைக் கொண்டும் நோக்குமிடத்து, மக்கட்டாயமன்றி வேறுதாயமுறை தமிழ்மக்கள் அறியாததென்பது மலையிலக்காகும். தமிழ்நாட்டுத் தலைமக்களின் மணச் செய்திகளையும் வாழ்க்கை நிலைகளையும் களவியல்கற்பியல்களாலும் பிறவியல்களாலுங் கூறும் தொல்காப்பியனூர், தலைவனுந் தலைவியும் தெய்வங் கூட்டக் கூடியபின் கற்பியன் முறையில் நின்றொழுகித் 'தாயத்தின் அடை'தற்குரிய புதல்வர் பயந்து இவ்வாழ்க்கையின் மகிழ்தலும், அவ்வாழ்க்கையிறுதியிலே—

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"

என்றபடி வீட்டுநெறியிற் பயிறலுமாகிய தமிழ்வழக்கினை விளங்கக் கூறுகின்றூர். இம்முறை, தமிழரசர் முதலிய தலைமக்கட்கெல்லாம் பொதுவாக அமைந்ததேயாம். அவ்வரசருள்ளும் மக்களுள்ளும் ஒருசாரார் மட்டும் வேறுதாயமுறையில் ஒழுகியவராயின், தமிழ்கூறுநல்லுலகத்து வழக்காகிய அதனையும் தொல்காப்பியனூர் தெளிவுபடக் கூருமற்போகார் என்பது ஒருதலையாம்[1]. அங்ஙனம் ஒருகுறிப்பும் மருமக்கட்டாயம் பற்றி அவர் குறியாததோடு, 'தந்தையரொப்பர் மக்கள்' 'புதல்வற்பயந்த புனிறு' 'மக்களொடு

1 தொல்காப்பியனூர் கூறியன யாவும், **செந்தமிழ்நாடு** என்ற ஒருசார் தமிழ் பகுதியின் வழக்குக்களே என்றும், **சேரமண்டலம் அதனின் வேறுபட்ட வழக்குடைய நாடென்பதே ஒரு தலை** என்றுங் கூறித் தம்கொள்கையை அமைக்க முயல்வர் மருமக்கட்டாயவாதியர். இதுவரை செந்தமிழறிஞர் எவருமே நினைந்திரா த புதிய கருத்து இது! "வடவேங்கடந் தென்குமரியாயிடைத், **தமிழ்கூறும் நல்லுலகத்தின்**" வழக்கையுஞ் செய்யுளையும் அடிப்படையாகக்கொண்டு, அவை செந்தமிழ்நிலத்து நூல் வழ்க்குக்களுடன் பொருந்துமாறு வைத்துத் தொல்காப்பியனூர் தம்பெருநூலை இயற்றியவர் என்று கூறிய பனம்பாரனூர் பாயிரத்தோடும், 'வண்பொழில் **மூவர் தண்பொழில்** வரைப்பின்,

துவன்றி' என்றிவ்வாறெல்லாம், தாயவுரிமை ஔரஸபுத்திரர்க்கே உரியதென்று தெளியவைத்தலுங் காணலாம். அன்றியும், தந்தையொடு மக்கள் பெயரினையும் ஒட்டியபெயர்வழக்கிற்கு எழுத்ததிகாரத்துள் 347-முதல் 351-வரையுள்ள சூத்திரங்களில் விதிகூறி அவ்வாசிரியர் விளக்குதல் நன்கறியலாம். அச்சூத்திரங்களுள்—

"அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியே
நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉம் பெயர்வயி னான"

என்பதும் ஒன்று. தந்தை பெயர்க்குப்பின் மக்கள் பெயர் வருமிடத்து அத்தந்தை பெயரின் ஈற்றிலுள்ள 'அன்' இயல்பாதலேயன்றி, அது கெட்டு 'அம்' ஆதலும் உண்டு என்பது இச்சூத்திரக் கருத்து. ஈண்டு மக்கள் என்றது தந்தையரைநோக்கி வந்ததேயாகும். 'தந்தையரொப்பர் மக்கள்' 'கிழவனுங்கிழத்தியும் ... மக்களொடு துவன்றி' எனப் பிறண்டும் ஆசிரியர் இந்நோக்கத்துடன் கூறுதல் காண்க. மகன், மகள் என்ற இருபாலாரும் அடங்க ஆசிரியர் 'மக்கண்முறை தொகூஉம்' என்றார். இதற்கு உதாரணங்கள் மேலே பலவாகக் காட்டப்பட்டன. இங்ஙனம், இருபாற்பட்ட மக்களின் இயற்பெயர், 'தந்தை' என்ற சொல்லையும் தந்தையின் இயற்பெயரையும் முன்னும் பின்னும் அடுத்து வரும்போது உண்டாம் புணர்ச்சிவிதி கூறுதலே ஆசிரியர் கருத்தாதலை மேற்குறித்த எண்ணுள்ள ஐந்து சூத்திரங்களாலும் நன்கறியலாம். அதனால், சேந்தன் பூதன், சேந்தம்பூதன்; அந்துவஞ்செள்ளை, பட்டர்பிரான்கோதை — என்பன போன்ற ஒட்டியபெயர்கள் இயல்பாகவும் திரிந்தும் சேந்தனுக்கு மகன் பூதன், அந்துவற்கு மகள் செள்ளை, பட்டர்பிரானுக்கு மகள் கோதை என்றிம்முறையே பொருள்படுவனவன்றி,[1] வேறு முறைப்பொருட்குரியனவல்ல என்பது தேற்றமாகும். இத்தகைய பெயர்கள்-மாந்தரஞ்சேரல், குட்டுவஞ்சேரல், குட்டுவன் கோதை எனச் சேர வேந்தரிடையும் காணப்படுவனவாம். மாந்தரன் என்ற சேர

---

நாற்பெயரெல்லை யகத்தவர் வழங்கும்" யாப்பினைத் தாம் மொழிவதாகத் தொல்காப்பியரே கூறியதனோடும், அவற்றைப் பின்பற்றி மொழிந்த ஆசிரியர்பலருடைய கருத்துக்களோடும் மாறுபடும்படி, அன்னோர் சேரநாட்டைத் தமிழ்வழக்கற்ற நிலமாகக் கொண்டதற்கு, தொல்காப்பியக்கூற்று முழுதும் தங்கொள்கையோடு பெரிதும் முரணுதலே காரணம் என்பது யாவர்க்கும் விளக்கமாம்.

1 "சங்கரனுக்கு மகனாயுள்ள சாத்தன்-சங்கரஞ்சாத்தன்" என்றார் வீரசோழியவுரைகாரரும் (தொகைப். 1. உரை).

னொருவன் உளனென்பது 'அறன் வாழ்த்த நற்காண்ட விறன்மாந்தரன்' என்பதனால் அறியத்தகும். "மாந்தரன் புதல்வனாதலின் இவனுக்கு (மாந்தரஞ்சேரலிரும்பொறைக்கு) இப்பெயர் வந்தது" என்று மகாமகோபாத்தியாய - ஐயரவர்களும் இத் தொகைப் பொருளை விளக்குதல் காண்க.[1] இனி, குட்டுவஞ்சேரல் என்பதற்குக் குட்டுவற்குமகன் சேரல் என்பது பொருள். இப்பெயருடையான் செங்குட்டுவன் மகன் என்பது பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகத் திறுதிவாக்கியத்தால் அறியப்படும். செங்குட்டுவனைக் குட்டுவன் என்றே கூறுவர் பரணர் முதலியோர். அதனால், அவன்மகனும் குட்டுவனெனப்படானாதலின், தந்தையாகிய (செங்) குட்டுவற்கு மகனான சேரல் என்பதே குட்டுவஞ்சேரற்குப் பொருளாம் என்க. பிற்காலத்தே கேரளநாடாண்ட வேந்தரும்—ஸ்ரீவல்லவன்கோதை, கருநந்தடக்கன் என்றும், அவர் மனைவியர் முறையே ஆதிச்சனுமையம்மை (சேரமாதேவி), முருகஞ்சேந்தி (ஆய்குலமாதேவி) என்றும் இத்தகைய ஒட்டியற்பெயர்களால் வழங்கப்படுதலைச் சாஸனங்களிலே பெருகக் காணலாம். இவையும், மேற்கூறியவாறு தந்தையரும் மக்களுமாக விரிக்கற்பாலன. மலைநாட்டு அரசர் தலைவர்கட்குள் மட்டுமன்றி அந்நாட்டுக் குடிமக்களுள்ளும் இவ்வகைப்பெயர்கள் அசாதாரணமாக வழங்கிவந்தன என்பதற்கு, அக் கேரளநாட்டுள்ள எண்ணிறந்த தமிழ்ச்சாஸனங்களே போதிய சான்றாகும்.[2] ஏனைத் தமிழ்நாடுகளிலோ இவ்வொட்டியற்பெயர்கள் அத்துணையாகக் காணபடுவனவல்ல. இவ்வாறு அரசரையும் அவர் குடிமக்களையும் தந்தைபெயருடன் சார்த்தி அநாதிகாலமாக வழங்கிவரும் குடமலைநாடு, பிறர்கருத்துப்படி மருமக்கட்டாயத்தையே பழைமையாக உடையதாயின், தமிழ்கூறு நல்லுலகத்து அடங்கிய அந்நாட்டு வழக்குமிகுதிநோக்கி—'ஒட்டியற்பெயர்கள் தந்தை மக்களையே யன்றி, மாமன்மருகரையும் உணர்த்துவன' என்ற கருத்தமைய ஆசிரியர் சூத்திரம் அமைத்துக்காட்டத் தவறுவரோ? "இயற்பெயர் முன்னர்த் தந்தைமுறைவரின்" என்று தொடங்கி, அத்தந்தையே அதிகாரப்பட்டுவரப் பின் ஐந்து

---

1 புறநானூறு, பாடப்பட்டோர் வரலாறு, பக் 66. ('சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை' பார்க்க.)

2 இவற்றுள் ஒரு சாஸனத்துக் கண்ட ஒட்டியற்பெயர்கள் வருமாறு:—பாண்டன் சங்கரன், சேந்தன் நாதன், குமரன் அச்சுதன், மணியன் கண்டன், சடையன் நாராயணன், கண்டந் துப்பிரமணியன், சங்கரன் சடையன், 'ச்டம்பந்தாயன், நக்கன் மாதவன், கண்டன் சாத்தன், சிதரங் குமரன், கண்ணஞ் சாத்தன் — என்பன (T. A. S. I. p. 199).

சூத்திரங்களையும் தொல்காப்பியனார் அமைத்துச்செல்லுதலால், தந்தையும் மக்களுமன்றி வேறு முறைச்சொற்கள் அச்சூத்திரங்களிடையே புகுதற்கில்லை. ஆகவே, சேந்தம்பூதன் என்றாற் போன்றவை சேந்தன்மருகன் பூதன் என்பது முதலிய பொருளில் அவர்காலத்து வழங்கினவல்ல என்பது தேற்றமாகும். அன்றியும், முருகன்மருமகள் சேந்தி, அந்துவன் மருமகள் செள்ளை என்ற பொருளிலன்றி, முருகன் மகள் அந்துவன் மகள் என்ற பொருட்கண் முருகஞ்சேந்தி, அந்துவஞ்செள்ளை என்று சேரநாட்டரசியர் பெயர் வழங்குதலை மேலே தெளிய விளக்கியுள்ளேன். அதனால் முற்காலத்தும் பிற்காலத்தும் சேரநாட்டு வழங்கிய ஒட்டியற் பெயர்கள் யாவும் தந்தையர்க்கும் அவர் பெற்ற மக்கட்குமுள்ள முறையைக் காட்டுவனவேயன்றிப் பிறவாறில்லையென்பது விளக்கமாகும். இங்ஙனம் தந்தை மக்களையே குறித்து வருதற்கு மலைநாட்டுப் பெருவழக்கும், சங்கச்செய்யுளாகிய பேரிலக்கியங்களும் தொல்காப்பியப் பேரிலக்கணமும் தக்க சான்றாக நிற்றலால், மருமக்கட்டாயமே மலையாளத்தின் அநாதிவழக்கென்பார் கூற்று முற்றிலும் பொருத்தமற்றதென்க. எனவே, தொல்காப்பியர் வாய்மொழிகளாலும் ஒட்டியற்பெயர்க்கு அவர் கூறிய விதிச் சூத்திரங்களாலும் வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பாகிய தமிழகத்தில் மக்கட்டாயமே தமிழரசர் மூவர்க்கும் உரியது என்பது மலையிலக்காகின்றது.

### [சேரர்தாயமுறையும் சாஸனவழக்கும்]

சேரரின் கிளையினரான அதிகமான்கள் மக்கட்டாயமுறையினரே என்பது முன்னர் விளக்கப்பட்டது. அச்சேரரின் நேர்வழியினராய்க் கொங்குமண்டலத்தையும் குடமலைநாட்டையும் கி. பி. 7, 8-ம் நூற்றாண்டுகட்குப்பின்பு ஆட்சிபுரிந்த சேரவேந்தரும் அம்மக்கட்டாயிகளே என்பது சாஸனவழியாலும் நன்கறியக்கிடப்பதாம். உத்தேசம் 10-ம் நூற்றாண்டதான நாமக்கல்-தாமிரப் பட்டயமொன்றிற் கண்ட சேரவம்சாவளியிலே—

(1) மணிதட்டுவன், அவன்மகன் (2) கோதை, அவன்மகன் (3) இரவி I அவன்மகன் பல்லராஜகுமாரியை மணந்த (4) கண்டன், அவன் மகன், கங்கராஜபுத்திரியை மணந்த (5) இரவி II, அவன் மகன் (6) கண்டன் II

என அரசர் அறுவர் கூறப்பெற்றுள்ளார்.[1] இவரெல்லாம் மருகன் முறையில் அரசெய்தியவர் அல்லர் என்பது தெளிவாக

---

1. M. E. R. 1906, p. 75; 1912, p. 54.

அறியப்படுவதாம். இவருள், (5) இரவி II என்பான் 'ஸ்தாணுரவி' எனவும் வழங்கப்படுவன். முதலாம் ஆதித்தசோழன் (கி.பி 880-907) காலத்தவன் இச் சேரன். இவன் மகன், (6) கண்டன் II என்பான் கோக்கண்டன் வீரநாராயணன் எனவும் சாஸனங்களிற் கூறப்படுகின்றான். இவன் முதற் பராந்தகசோழனுக்குச் சமகாலத்தவன்[1]. இவரும் இவர் முன்னோரும் கொங்குமண்டலமுட்படச் சேரநாடு முழுமையும் ஆண்ட சேரவேந்தர்களே என்பது சாஸனங்கள் பலவற்றாலும்[2] தெளிய அறியப்பட்டது. ஆகவே, மக்கட்டாயமே சேரர் கொண்டொழுகிவந்த பழையமுறை என்பது மலையிலக்காதல் காண்க.

## V. முடிவுரை.

இதுகாறும் விரிவாகக் கூறிப்போந்தவற்றால், படைப்புக் காலந்தொட்டுவரும் பழந்தமிழ்க் குடியினராய முடிகெழுவேந்தர் மூவரும் வழக்கவொழுக்கங்களாலும் மனைபாவனைகளாலும் பெரிதும் ஒற்றுமையுந் தொடர்புங் கொண்டிருந்தவரே என்பது பண்டை நூல்களால் தெளிய அறியப்படுதலின், அவருள் சோழ பாண்டியரை விலக்கிச் சேரராகிய ஒருபிரிவினர்க்குமட்டும் பிற்காலத்துண்டாகிய புதிய தாயமுறையைப் புகுத்துவது கற்பனையாகுமேயன்றிச் சரித்திரவுண்மைக்குச் சிறிதும் உரியதன்று என்பது தெளிய அறியத்தக்கது.

## குறிப்பு

தமிழ்ச்சரிதத்துறையின் முக்கியமான பகுதிகளுள் தமிழ் மூவேந்தரின் தாயமுறையும் ஒன்றாதலின், அதுபற்றி நிகழ்ந்த ஐயங்கள் நீங்கி உண்மை விளங்கவே இவ்வழக்குக்கட்டுரை **ஆராய்ச்சித் தொகுதியுட்** சேர்க்கப்பெற்றது. இது **செந்தமிழில்** வெளிவந்த சிலமாதங்கட்குப்பின், இதற்கு மறுப்பாக அப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்று உண்டு. அதனுள்—இவ்வாசிரியர் கூறாத கருத்துக்களை ஏறிட்டும், கூறிய கருத்துக்களைத் திரித்தும், மருமக்கட்டாயவாதியர் கருத்துக்களைச் சமயோசிதமாக மாற்றியும், இவ்வாசிரியர்கூறிய எதிர்வாதங்களில் முக்கியமானவற்றை நெகிழவிட்டும் போந்தவை பல. பண்டையோர் எழுதிய உரைப்பகுதிகளை இவ்வாசிரியர் கூற்றாகவே கொண்டு மறுத்தவை சில. வசைகளையும் விதண்டைகளையும் வளம்படப் பெருக்கிய இடங்களோ மிகப்பல. இத்

1 I. M. P. Cb 107; 196; Tv. 80, 90.

2 இவ்வாராய்ச்சித்தொகுதி, 252-3; 259-ம் பக்கங்கள் காண்க.

தகைய முறைகளைக் கையாளுவதும், அம்முறையின் தகுதியின்மை பற்றி எதிர்வாதிகள் அதனைப் பொருட்படுத்தாது நெகிழவிடுவராயின், அதுவே தம் வெற்றிக்குறியாகக் கொண்டு ஆரவாரித்து மகிழ்வதும் இக்கால வாதியர்சிலரின் இயல்புகளாக உள்ளன. இதுவே அவர் விரும்புவதாயின் 'அவ்வளவின் அவர் மகிழ்க.' அதனால், இக்கட்டுரையிற் கண்ட முடிவுகட்கு நேரும் இழுக்கொன்றுமே இல்லை. துரபிமானமின்றிச் சரித்திரச்செய்திகளைப் பழைய பிரமாணங்களையெல்லாந் துணைக்கொண்டு ஆராயவல்ல நல்லறிஞர், உண்மைகளை உணரவல்லர் என்பது திண்ணம். மேற்குறித்த மறுப்புக்கட்டுரையிற் பிறர்க்கு ஐயம் நிகழக்கூடியவற்றுக்கெல்லாம் தக்க சமாதானங்கள் இப்பதிப்பினுள் விளக்கமாக ஆங்காங்கு ஆசிரியரால் மூலத்தும் கீழ்க்குறிப்பினும் வரையப்பட்டுள்ளன.

---

## 26. இளம்பூரணவடிகள் [1]

---

இப்பெரியோர், பழைய தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்துக்கு முதன்முதல் உரையிட்ட ஆதியுரைகாரர். ஆதியுரையாளர் என்பதுபற்றியே **உரையாசிரியர்** என்னும் பொதுப் பெயரே இவர்க்குரிய சிறப்புப்பெயராக வழங்குவதாயிற்று. பிறர் உட்புகுந்து காணமுடியாவண்ணம் இருண்டுகிடந்த **தொல்காப்பியம்** என்னுஞ் சரக்கறையுள் தம்மறிவென்னும் அவியாவிளக்கைக் கொண்டு துருவி, ஆங்கே குவிந்துகிடந்த அரதனக்குவியல்களை உலகிற்கு முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகையார் இவரே. இவர்க்குப்பின்வந்த உரைகாரரது செய்கையெல்லாம், தொல்காப்பியச் சரக்கறையில் இவ்வடிகள் ஏற்றிவைத்திருந்த நந்தாவிளக்கினுதவியால், அங்கிருந்த அரதனக்குவியல்களைக் கண்டு வியந்ததும், அவ் வரும்பெறற்பொருள்களை மாசுநீக்கித் தூசிபடியாவண்ணம் சுத்தஞ்செய்துவைத்ததுமேயாகும். பின் வந்த சேனவரையர் முதலிய பிரபல ஆசிரியர், இளம்பூரணவடிகள் ஒரோவிடங்களிற் றவறியதை யறிந்தவராயினும், அதுபற்றி அவ்வடிகள்பால்வைத்த மதிப்பை மாற்றினவரல்லர் உரையாசிரியர் கொள்கையைச் சேனவரையர் மறுக்க நேரும் இடங்களில் "அவர் பிறர்மதம்பற்றிக் கூறினரென்க" எனவும், "மாணாக்கர்க்கு உய்த்துணரவைத்தல் அவர்க்கியல்பாகலாற் செய்யுண்முடிபென்று கூறாராயினர்" எனவும், "உரையாசிரியர்க்கு அது

---

1 செந்தமிழ், தொகுதி - 4, பகுதி - 7 (1906).

கருத்தன்றென்க" எனவும் இவ்வாறே—எவ்வளவு அச்சத்துடனும் மரியாதையுடனும் எழுதுகின்றாரென்பதைச் சேனாவரையத்தால் அறியலாம். அறிதற்கரிதாகிய தொல்காப்பியக்கடலைத் தம் மதிவலி கொண்டு கடைந்து முதன் முதல் இலக்கணவமுதம் அளித்த பெரியார் மானுடவியற்கைக்குற்ற தவறுகளுடையராதல் பற்றி இகழற்பாலரல்லரென்பதும், பெருங்காரியமொன்றைத் தொடங்குவோர் ஒரோவழிமயங்குதல் மானிடவியற்கையில் அமைந்த குறையேயன்றிப் பிறிதன்றென்பதும் சேனாவரையர் முதலியோரது மேலான கொள்கைகளாகும். இவ்வாறே சிவஞான முனிவர், சேனாவரையர் கொள்கைகள் சிலவற்றை மறுக்க நேர்ந்தவிடத்தில், அவரைப்பற்றி எழுதிய அழகிய வசனங்கள் இவ்வுரையாசிரியர்க்கும் ஏற்கும்; அது வருமாறு:—

"அவர் (சேனாவரையர்) இன்னும் ஒரோவிடங்களில் இவ்வாறே மயங்கிக் கூறுவர். அங்ஙனம் ஒரோவழி மயங்குதல் பற்றி அவரை இகழற்க. (சிலர்)போல யாம் பிடித்ததே சாதிப்பேமென்னுஞ் செருக்கால் யாண்டும் மயங்காமையின், முக்குணங்களும் மாறிமாறி வருதலின், எனைத்துணை நுண்ணறிவாளரும் ஒரோவழி மயங்குதல் இயல்பென்க. இக்கருத்தே பற்றியன்றே "அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா, லின்மை யரிதே வெளிறு" "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாருமென்பது. இங்ஙனமாகலின், வடமொழியினும், ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சிலவற்றைத் தம்முடைய சூத்திரங்களால் எடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அவ்விருவரையும் ஒரோவிடங்களில் ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அது பற்றி அவர் இகழப்படாரென்க" என்பது.

இளம்பூரணவடிகள் தொல்காப்பிய முழுமைக்கும் உரைசெய்தவரென்று தெரிகின்றார். எழுத்ததிகாரவுரை முன்னரே அச்சேறியுள்ளது.[1] சொல்லதிகாரவுரை, கையெழுத்துப் பிரதியில் இச்சங்க முதலிய சிலவிடங்களிலுண்டு.[2] பொருளதிகாரத்தில் செய்யுளியற்கு மட்டும் உரையாசிரியரானுரையுண்டென்பது, 'செந்

[1] 'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய,பொருந' என்னும் மதுரைக் காஞ்சியடியுரையில், 'இராவணன் தென்(றிசை) ஆளுதல் பாயிரச்சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானுமுணர்க" என நச்சினார்க்கினியர் கூறியவாறு, அச்சிட்டுள்ள எழுத்ததிகார இளம்பூரணத்திற் காணப்படவில்லை. இதன் காரணந் தெரிந்திலது.

[2] இது, திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்களாற் சில்லாண்டுகட்குமுன் வெளியிடப்பெற்றுளது.

தமிழி'ல் வெளிவந்த தொல்காப்பியச் செய்யுளியல் நச்சினார்க்கினியத்தின் கீழ்க்குறிப்புச் சிலவற்றால் வெளியாகிறது. ஏனைய பகுதிக்கும் உரையுண்மை இனி அறியப்பட வேண்டும்;[1]

உரையாசிரியர் துறவுபூண்ட பெரியாரென்பது, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திலே "உரையாசிரியராகிய இளம்பூரண வடிகள்" எனக் கூறுதலாலும், 'அடிகளென்றது துறத்தலான்' என அவரே 'அடிகள்' என்ற சொற்குப் பொருளுரைத்தமை யானும் தெளிவாகின்றது.

இனி, நன்னூலியற்றிய பவணந்தி முனிவர், தம் சூத்திரங்கள் சிலவற்றை, இளம்பூரணவடிகள் உரைக் கருத்தைத் தழுவியே இயற்றிப்போந்தமையால், பவணந்திக்கு முந்தியவர் உரையாசிரியர் என்பது துணியப்படும். உரையாசிரியர் கொள்கைகள் சிலவற்றைப் பிரபல நியாயங்காட்டிச் சேனாவரையர் மறுத்துப் போந்தவற்றில் ஒன்றையுந் தழுவாதே உரையாசிரியருரைக் கிணங்க நன்னூலார் சூத்திரித்துச் செல்லுதலின், அச்சேனாவரையர் நன்னூலார்க்கும் பிற்பட்டவராகவே தெரிகின்றார். இதற் கோருதாரணம் வருமாறு:—

"எப்பொரு ளாயினு மல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்"

"அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்"

எனவரும் தொல்காப்பியக் கிளவியாக்கச் சூத்திரங்களிலே "அல்ல தில்லெனின்" என்பதற்குத் 'தன்னுழையுள்ளதல்லதை இல்லெனின்' எனவும், 'அப்பொருளல்லாப் பிறிதுபொருள் கூறல்' என்பதற்கு 'இனப்பொருள் கூறுக' என்றும் உரையாசிரியர் கூறிய பொருளையே, பவணந்தி முனிவர்,

"தம்பா லில்ல தில்லெனி னினனா
யுள்ளது கூறியு மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே"

எனத் தழுவியுரைத்தார். சேனாவரையர் அச் சூத்திரத்து வரும் 'அல்லதில்லெனின்' என்பதற்கு 'அல்லதில்லென்னும் வாய்பாட்

[1] பொருளதிகார முழுதுக்கும் உரிய இளம்பூரணருரை, சென்னை யூனிவர்ஸிடி தமிழ்ரீடர் ஸ்ரீமான்: எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் ஆராயப்பெற்றுச் சமீபத்தில் வெளியிடப்பட்டுளது.'

டாற்கூறின்' என மிகச்சிறந்த பொருள் கூறி, உரையாசிரியருரை பலபடியாலும் வழுவுதலை விளக்கியிருக்கின்றார். பவணந்தி முனிவர், சேனாவரையர் கூறிய உரைப்பொருளை அறிந்தவராயின், சீரிய அச் சேனாவரையக்கருத்துக்கேற்பவே சூத்திரித்திருப்ப ரென்பதில் ஐயமில்லை. இவ்வாறே சேனாவரையரது உயர்ந்த உரைக்கருத்தையன்றியே உரையாசிரியருரைக்கேற்ப நன்னூலார் கூறிச்செல்லுதலைப் பல்லிடத்துங் காணலாம். இவற்றால் சேனாவரையர்க்கு முற்பட்டவர் பவணந்தியாரென்பதும்,[1] அப்பவணந்திக்கும் முந்தியவர் இளம்பூரணவடிகளென்பதும் வெளியாகின்றன. பவணந்திமுனிவர், இப்போது மைசூர் ராஜ்யத்தைச் சார்ந்துள்ள குவளாலபுரத்து (கோலார்) அரசனும் இற்றைக்கு 750-வருஷத்துக்குமுன்னிருந்தவனுமாகிய "அமராபரணன் சீயகங்கன்" காலத்தவராதலால் இளம்பூரணவடிகள் அக்காலத்துக்கு முற்பட்டவராதல் வேண்டும். இவை நிற்க.

அச்சிடப்பட்டுள்ள இறையனார் களவியலுரைக்கும் இளம்பூரணவடிகட்கும் ஏதாவது தொடர்பிருத்தல் கூடுமோ என்பது நெடுங்காலமாக எனக்குள் நிகழ்ந்துவரும் ஆராய்ச்சியாகும். இதற்குரிய காரணங்கள் பல. இவ்விஷயத்தைச் சிறிது இவ்விடத்து விரித்துரைக்க விரும்புகின்றேன்.

இப்போதுள்ள இறையனார்களவியலுரை, கடைச்சங்கத்தாராகிய நக்கீரனார் இயற்றியதென்ற கொள்கையில் ஐயம்பெரிதுமுண்டாதலைப்பற்றிப் பலர் எழுதி வெளியிட்டிருக்கின்றனர். இவ்விஷயமாகக் காலஞ்சென்ற ஸ்ரீ வி. கனகசபைப்பிள்ளையவர்களும், சென்னை ஞானசாகரபத்திரிகையில் அதன் பத்திராசிரியரோடு யானும் சில வருஷங்கட்குமுன்னர் ஆராய்ந்தெழுதியுள்ளோம். சென்றமாதத்துத் தஞ்சைத்தமிழகத்திலும் ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராயரவர்கள் அவ்வுரையைப்பற்றிய வியாசமொன்று வரைந்திருக்கின்றார். இப்போதுள்ள களவியலுரை, நக்கீரனார் செய்த உரையின் வேறுதல் வேண்டுமென்பதற்குக் கூறப்படும் காரணங்கள், பிறரால் நியாயமுறையினின்று மறுக்கப்படக்கூடியவை யென்று தோற்றவில்லை. ஏனெனில், அக்களவியலுரையிலே, நக்கீரர் செய்த உரையைப்பற்றி யெழுதுமிடத்து:— 'அதனால், உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசருமன் செய்தது

1 '**சாஸனத்தமிழ்க்கவி சரிதம்**' என்ற நூலுள், 'சேனாவரையர்' என்ற தலைப்பின்கீழ், அவ்வுரையாளர் காலம் இவ்வாசிரியரால் விளக்கப்பட்டுளது.

இந்நூற்குரை என்பாருமுளர். அவர் செய்திலர்; மெய்யுரை கேட்டா ரென்க. மதுரை ஆலவாயிற்பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்ட தென்க. இனி உரை நடந்தவாறு சொல்லுதும்" என்று தொடங்கி, வந்த பத்து ஆசிரிய பரம்பரையுங்கூறி, 'இங்ஙனம் வருகின்றதுரை' என்று பாயிரத்துள் உரைக்கப்பட்டிருத்தலோடு, நூலினுள்ளே "மேற் பாயிரத்துளுரைத்தாம்' என்று இருமுறை எழுதப்பட்டு முள்ளது. இவற்றால், நக்கீரனர் கண்ட களவியலுரை நெடுங்கால மாக ஆசிரியபரம்பரையிலே வழங்கிவந்ததை, நீலகண்டனார்க்குப் பிற்பட்டுவந்த உரையாளரொருவர் உரைநடையில் எழுதிவைத்தா ரென்பதும், அவ்வாறெழுதியவர் காலத்திலேயே, ஆதியுரைசெய்த வர், நக்கீரனரா அன்றி உருத்திரசன்மரா என்னும் ஐயமிருந்த தென்பதும், அச்சிடப் பெற்ற களவியலுரை நாவில் (அவ்வுரை "குமரக் கடவுளின் அவதாரமான உருத்திரசருமரான் செய்யப் பட்டதென்பாரும் உளர். அவர் செய்திலர். நக்கீரனாற் செய்யப் பெற்று, உருத்திரசருமரான் அவையில் கேட்கப்பட்ட நூலே" என்ற தொடர்கள்வருவதைக் காணலாம். இதனால், ஆதிக் களவியலுரை இயற்றியவர் யாவர்என்ற கேள்விமுற்காலத்தே இருந்தமைதெரிய லாம். கல்லாடம் பாடிய ஆசிரியர் காலத்தில் அவ்வுரை, குமரக் கடவுள் அவதாரமான உருத்திரசருமர் கூறியதே என்ற கொள்கை வழங்கியதென்பது, புதியதாக அறியப்படுகின்றது. இது "பரணர் கேட்ப, களவியலுரை உரைத்தவனும், பாய் பாரறிய நீயே" என முதல் சங்ககாலத்து முருகன் துதிப் பாடலில் வருதலில் அறியத் தகும். இக்கல்லாட ஆசிரியர், சங்ககாலத்தவரன்று, 9—10ஆம் நூற்றுண்டவரே என்க. அக்களவியற்பாயிரமும் நாலுஞ் செய்தார் ஒருவரேயென்பதும் நன்கு அறியப்படுகின்றன. இவற்றைக் குறித்த விவகாரத்தை ஞானசாகரமுதற்பதுமத்து ௬-ம் இதழிலும் நன்கு விளக்கியுள்ளேன். இவ்வாறு ஆசிரிய பரம்பரையில் வந்த நக்கீரனுரை, பாண்டியன் நெடுமாறன் காலத்துக்குப் பிற்பட்ட பழைய உரையாசிரியரொருவராலே எழுதப்பட்டிருத்தல் வேண் டும். ஏனெனில், அக்களவியன் மேற்கோட்செய்யுட்களில் நெடு மாறனென்னும் பாண்டியன் நெல்வேலிப்போர் வென்றவனென்று கூறப்பட்டிருத்தலோடு, உ௫௪, உ௩௭-ஆம் பாடல்களில் அப்பாண் டியன் சிவபத்திமிக்கானகவுங் குறிக்கப்பட்டுள்ளான். இங்கே காட்டிய நெடுமாறனென்னும் பெயருடைமையும், நெல்வேலிப் போர்வென்றமையும், சிவபத்திமிக்குடைமையுமாகிய மூன்றும்— சிவனடியாருள் ஒருவராக வைத்தெண்ணப்படுபவரும் திருஞான சம்பந்தமூர்த்திகள் காலத்தோருமாகிய "நெல்வேலி வென்ற நின்ற சீர்நெடுமாற' நாயனுரே அக்களவியன் மேற்கோட்செய்யுளிற்

கூறப்பட்டவரென்பதை மெய்ப்பிக்கின்றன. எனவே, அப் பாண்டியனைப் பற்றிய பாடல்களை மேற்கோள்புரிந்த களவிய லுரைகாரர், ஞானசம்பந்த சுவாமிகள் காலத்தாராகிய நெடுமாற நாயனார்க்கும் பிற்பட்டவராதல் ஒருதலையாம். அஃதாவது, இற்றைக்கு 1200-வருஷங்கட்குப் பின்பு என்பதே.

மேலே கூறியவாறு, இறையனார்களவியலுக்கு நக்கீரருரையே யன்றி, பிற்காலத்தாசிரியரொருவரால் எழுதப்பட்ட உரையுமுண் டென்பதற்கு முன்னூற் பிரமாணமும் உண்டு. தொல்காப்பியமர பியலில், "வினையினீங்கி" என்னுஞ் சூத்திரவுரைக்கண்ணே, பேராசிரியர்[1] அடியில் வருமாறு எழுதுகின்றார்:—

"என்றார்க்கு முந்துநூலெனப்பட்டன முற்காலத்து வீழ்ந்தன வெனக் கூறித் தொல்காப்பியர் அகத்தியத்தோடு பிறழவும் அவற்று வழிநூல் செய்தாரென்றக்கால் இழுக்கென்னையெனின், அது வேத வழக்கொடு மாறுகொள்வார் இக்காலத்துச் சொல்லினும் இறந்த காலத்துப் பிறபாசண்டிகளும் மூன்றுவகைச்சங்கத்து நான்குவருணத் தொடுபட்ட பிறசான்றோரும் அது கூறார் என்பது; என்னை? கடைச் சங்கத்தாருட் களவியற்பொருள்கண்ட கணக்காயனார்மகனார் நக்கீ ரர் 'இடைச்சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம்' என்றாராகலானும், பிற்காலத்தார்க்கு உரை யெழுதினோரும் அதுகூறிக் கரிபோக்கினாராகலானும், அவர் புலவுத் துறந்த நோன்புடையராகலாற் பொய் கூறாராகலானும் என்பது" எனக் கண்டுகொள்க.

இவற்றுள்ளே, நக்கீரனார்கூற்றை முதலிற்சொல்லிப் பின்னர், பிற்காலத்தார்க்கு உரையெழுதினோரும் அதுகூறிக் கரிபோக்கி னாராதலானும்' என்று குறித்திருத்தலால், நக்கீரர் களவியற் பொருள்கண்டு நெடுங்காலமானவாறே அந்நூற்கு மற்றோராசிரிய ரால் உரைசெய்யப்பட்டிருக்கதென்பதும், அவர் முந்திய நக்கீரர் கூற்றுக்களையும் எடுத்துச் சொல்லியுள்ளாரென்பதும் கரதலாமலக மாக விளங்குவனவன்றோ. இனி, அப் 'பிற்காலத்தார்க்குரைசெய்த' வரைச் சுட்டி 'அவர் புலவுத்துறந்த நோன்புடையராகலாற் பொய் கூறாராகலானும்' என்னுந் தொடர்மொழி[2] அடுத்துவருதலால் அக் களவியலுரைகாரர் துறவுபூண்டோர் என்பதும் பெறப்படுகின் றது. இவ்வாக்கியத்திலுள்ள 'அவர்' என்னுஞ்சுட்டு, தனக்கு முன்னுள்ள 'பிற்காலத்தார்க்குரைசெய்த' ஆசிரியரைக் குறிக்குமே

---

1 இம்மரபியற்கு உரைசெய்தவர் பேராசிரியரேயென்பதனை, "அச்சிட்ட தொல்காப்பிய மரபியலுரைகாரர்" என்னுந் தலைப்பின் கீழ், சேது ஸம்ஸ்தான மகாவித்வான்-ஸ்ரீ: ரா. இராகவையங்கா ரவர்கள் எழுதிய அரிய ஆராய்ச்சியுரையால் அறிக. (செந்தமிழ், தொகுதி-ட, பகுதி-கக).

2. "புலவூண் டுறந்து பொய்யா விரதத்து...மெய்வகை யுணர்ந்த விழுமியோர்" (சிலப். 10, 15-7) எனச் சைனமுனிவரை இளங்கோ வடிகள் இவ்வாறே சிறப்பித்தல் அறியத்தக்கது.

யல்லது, அவ்வாசிரியர்க்கும் முன்புள்ள நக்கீரனாரைக்குறித்தல் ஒருகாலுங்கூடாதென்பது மேலே காட்டிய தொடர்மொழிகளை உற்றுநோக்குவார்க்கு நன்கு விளக்கமாம். ஆகவே, களவியலுக்கு நக்கீரனார் கண்ட உரையினும் வேறானவுரை உண்டென்பதும், அது செய்தவர் துறவியென்பதும் தெளிவாயின. இப் பிற்காலத்துக் களவியலுரைகாரர் இன்னாரென்று துணிந்துரைத்தற்கு இப்போது போதிய சான்றுகள் அகப்படவில்லையாயினும், அவர், "இவ்வாராய்ச்சிக்கெடுத்துக்கொண்ட உரையாசிரியராக இருத்தல்கூடுமா" என்பது யான் கொண்டுள்ள ஐயம். அவ்வையத்துக்கு இனி எழுதப்படுபவை ஏதுக்களாகும்.

மரபியலுரை செய்த பேராசிரியர், இக் களவியலுரைகாரரை "புலவுத் துறந்த நோன்புடையராகலாற் பொய்கூறாராகலானும்" எனத் துறவியென்று குறிப்பித்ததற்கேற்ப, இளம்பூரணவடிகளும் துறவுபூண்டவராயிருக்கின்றார். அவ்வடிகள் துறவியேயென்பதை முன்னர் விளக்கினேன். மேலும், களவியலுரையைப் பழைய உரையாசிரியரெல்லாம் எடுத்தாளுதலினின்று அது மிக முற்பட்ட நூலாகத்தெரிதலின், அதனை யியற்றியவர், **ஆதியுரையாசிரியர்** என்று சிறப்பிக்கப்படும் இளம்பூரணராகவேயிருத்தல் பொருத்தமேயாகும். அன்றியும், களவியலுரையிலுள்ள சொல்லும் பொருளும் உரையாசிரியரது தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையிலுள்ளும் பயில்கின்றன. அக்களவியல் முதற்சூத்திரவுரைமுடிவில் என்மனார் என்னுஞ் சொற்கு—"என்ப என்னும் முற்றுச்சொல் குறைக்கும் வழிக்குறைத்தலென்பதனாற் பகரம் குறைந்து விரிக்கும் வழி விரித்தல் என்பதனான் மன் ஆர் என இரண்டிடைச்சொற் பெய்து விரித்து 'என்மனார் புலவர்' என்றாயிற்று" என்று முடிபு கூறப்பட்டுள்ளது. இச் சொல்லும்பொருளுமே, சொல்லதிகார முதற்சூத்திரத்திற்கு உரையாசிரியர் எழுதியவுரையினும் பயில்கின்றன. சேனாவரையரும் இவ்வென்மனார் என்னுஞ் சொன்முடிபு உரையாசிரியர் கொள்கையென்றே கூறி மறுத்தனர். களவியலுரைகாரர்க்குமுரிய இவ்வபிப்பிராயத்தை உரையாசிரியருடையதென்றுமட்டும் சேனாவரையர் கூறியதென்னை? இனிக் களவியல் ஏழாஞ்சூத்திரவுரையில் "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்" என்னுஞ் சூத்திரத்துள் "இலேசினான் (வரவென்பதும்) முடியுமாகலின் அமையும்; அதுவாகலினன்றே 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' என்று சான்றோர் சொல்லியதென்பது" என்று கூறப்பட்டுள்ளது. இப்பொருளே "ஏனையிரண்டும் ஏனையிடத்த" என்னுஞ் சொல்லதிகார இளம்பூரணத்திலும் பயில்வதாம். சேனாவரையரும் அச்சூத்திரவுரையில் "தூண்டில் வேட்டு

வன் வாங்க வாரா' தென்பதனை (உரையாசிரியர்) அமைத்தாராக்கின், அவர்க்கது கருத்தன்றென்க" என உரையாசிரியர் அமைத்ததாகவே கூறினார்; களவியலுரைகாரரும் அமைத்ததொன்றை உரையாசிரியரது கருத்தாகமட்டுங் கூறியதென்னை? இவ்வாறே வேறு சிலவுமுள. இக்குறிப்புக்களாலும், இளம்பூரணரும் களவியலுரைகாரரும் ஒருவர்போலும் என்று கருத இடமுண்டாகின்றது. இனி, அடியார்க்கு நல்லார் "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் " என்னுஞ் சிலப்பதிகார வடியுரையிலே பின் வருமாறு எழுதுகின்றார்:—"குமரியாறு கடல்கொண்ட செய்தி எற்றாற் பெறுதுமெனின்—நக்கீரர் **உரைத்த இறையனார் பொருளுரையாலும் இளம்பூரணவடிகள் முகவுரையாலும்** பெறுதும்" எனக் காண்க. இத்தொடர் மொழியில் '**இளம்பூரணவடிகள் முகவுரையாலும்**' என்னுமிடத்தில், இன்ன நூலின் முகவுரை யென்று அவ்வடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுக் காட்டினரில்லை. அதனால், முன்புள்ள தொடர்பு கொண்டு அஃது இறையனார்களவியலின் முகவுரை போலும் என்று கருத இடந்தருகின்றது. 'இளம்பூரணவடிகள் முகவுரை' யென்பது தொல்காப்பிய முகவுரையாயின் அதனை அவ்வுரையாளர் சுட்டாது விட்டதென்னையோ? இதனால், அத்தொடர் சொல் நக்கீரனாருரையேயன்றி, களவியற்கு இளம்பூரணர் சம்பந்தமும் உண்டென்பதைக் குறிப்பிப்பதாகவே தோற்றுகின்றது.

இப்போது வெளிவந்துள்ள களவியலுரை என் கருத்தின்படி, உரையாசிரியர் செய்ததாக முடியுமாயின் "கேட்போன், யாப்பு, என்மனார்" முதலியவற்றுக்குத் 'தெய்வப்புலமை நக்கீரனாருரைத்த பொருள்களையும் சிவஞான முனிவர் மறந்து வேறுரை கூறிப்போந்தார்' என்று சொல்லப்படுவது முற்றுமாறுவதுடன், அம்முனிவர் மறுத்தனவெல்லாம் உரையாசிரியர் கொள்கைகளையே யென்றுங் கொள்ளப்படும். சிவஞான முனிவர், களவியலுரைகாரர் கொள்கைகள் சிலவற்றைத் துணிந்து மறுத்ததை நோக்கினும், அவ்வுரை செய்தவர் அத்தெய்வப் புலவரல்லர் என்பதே அம்முனிவர் கருத்தென்று கொள்ளும்படி உள்ளது.

யான் மேலே கூறியவை, களவியலுரைகாரர் இளம்பூரணர் தாமோ என்னும் ஐயத்தை எழுப்புதற்குக் காரணமாயிருந்தவற்றைக் காட்டியபடியாம். இதற்குப் பிரசான்றுகளும் வேண்டியிருத்தலின் இக்கொள்கையே முடிவுடையதென்பது என் கருத்தன்று. ஆயின், இதனை ஈண்டுத் கூறவந்ததென்னையெனின், இப் புதிய கருத்து வெளியிடப்படின், அது பின் ஆராயப்பெற்று முடிவடைதற்குங் காரணமாகலாமென்னும் எண்ணங்கொண்டே யென்க.

# 27. கலிங்கத்துப்பரணிக் குறிப்புக்கள்*

## (1) செயங்கொண்டார்

புலவர் பெருமானாகிய செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியின் வாக்கினிமையும் சொற்செறிவு பொருட்பொலிவுகளும் தமிழறிஞரெல்லாம் நன்கறிந்தவை. இப்பரணி, அபயன் என்ற முதற்குலோத்துங்கசோழன் கலிங்கப் போரில் அடைந்த பெருவெற்றியைப் புகழுமுகத்தால், அச்சோழன் பெருமையையும் அவன் சேனாபதி பெருமையையும் நிவுலகில் நிலைபெற நிறுத்துவதாம். இந்நூல் வாயிலாகச் செயங்கொண்டார் அபயனுக் களித்த நிலைத்த புகழ்க்கொடை, அவன் அவர்க்கு உதவியிருக்கக் கூடிய நிலையாப் பொருட்கொடையினும் பல்லாயிரமடங்கு பெரிது என்பது சொல்லவும் வேண்டுமோ?

> "காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
> பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
> யாகாப் பொருளை யபயனளித் தான்புகழாம்
> ஏகாப் பொருளளித்தேன் யான்" (தமிழ்நா. சரி. 115)

என்று, ஒருகால் அபயனிடம் முனிவுடன் இப்புலவர் பாடியதாக வழங்கும் வெண்பாவாலும் இஃது அறியத்தக்கது. சோழராஸ்தானத்தே கூத்தர் கம்பர்களுக்கு முன்பு கவிச் சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயர் பெற்று விளங்கியவர் இப்புலவர் பெருமானே யாவர். இப் பெருஞ்சிறப்பினைக் கூத்தரே—

> கலிங்கமேழ் பாழ்போக வென்ற...
> பாடற் பெரும்பரணி தேடற்கருங்கவி
> கவிச்சக்ர வர்த்தி பரவச்
> செஞ்சேவகஞ் செய்த சோழன் திருப்பெயர"
> (குலோத். பிள். 14)

என இரண்டாங்குலோத்துங்கனைப் பாடுமிடத்து வாயாரப் புகழ்தலாலும், அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரவுரையுள் (5, 76-88), இந்நூற்றாழிசைகளை மேற்கோள் காட்டியவிடத்து எழுதிய குறிப்புக்களாலும், "குலோத்துங்க சோழபெருமானுக்குத் **தீங்பகுடி கவிற்சண்டிதன் கவிச்சக்கிரவர்த்தி செயங்கொண்டான் பாடின கலிங்கத்துப் பரணி**" என்ற தெர்ட்டர் அப்பரணிப் பிரதியில் உள்ளதாகத் தெரிதலாலும் நன்கு புலப்படும். இத்தொடரி

* செந்தமிழ், தொகுதி - 23, பக். 97 - 179.

னின்று தீபங்குடி[1] என்பது இவரதூர் என்பது வெளியாதல் போலவே, தமிழ்நாவலர் சரிதையாலும் (*114*) அறியப்படு கின்றது. கவிச்சண்டிதன் என்பது அக்காலத்து இவர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர் போலும். இப்புலவர் பாடிய பரணியின் வாக்கிலும் போக்கிலும் ஈடுபட்டு முன்னேரும் பின்னேருமான தமிழ் மக்களெல்லாம் இதனைப் பாராட்டி வந்திருக்கின்றனர்

இப் பரணியன்றியும், புகார் நகரத்து வணிகரைப் புகழ்ந்து **இசையாயிரம்** என்ருெரு நூலும் சயங்கொண்டார் பாடியவர் என்பது—

"செட்டிகள்மேல் **இசையாயிரம்** பாடியபோது செக்கார்
'புகார் தங்கட்கு ஊர்' என்று பாடச்சொல்லியது"

"ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே—நீடுபுகழ்க்
கச்சிச்செப் பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப் பின்புகா ரூர்"

என, தலைக்குறிப்புடன் காணப்படும் தமிழ் நாவலர் சரிதை வெண் பாவால் (*166*) அறியப்படுகின்றது. இவ்விசையாயிரம் இப்போது கிடைக்கவில்லை.

இங்ஙனம், சொற்சுவை பொருட்சுவைகள் பற்றித் தமிழறிஞ ராலும், வெற்றிவேந்தனொருவனது வரலாற்றினை விளக்குதலாற் சரித்திர அறிஞராலும் போற்றப்பட்டுவரும் இப்பரணி, இதுவரை மூன்று பதிப்புக்கள் பெற்றிருப்பினும், பாடப்பிறழ்ச்சிகொண்டு திருத்தம்பெருதேபோனமையால், பலவிடங்கட்குப் பொருள்களும் சரித்திரக் கூறுகளுந் தெரிய இடமில்லையாயிற்று. நான்கா முறையாகத் தமிழ்ப் பண்டிதர் **ஸ்ரீ அ. கோபாலையரவர்களால்** புதிதாகப் பல பிரதிகளைக் கொண்டு இது பரிசோதிக்கப்பெற்று வெளிவந்துளது. இப்பதிப்பு முன்னையவற்றினும் திருத்தங்கள்

---

1 இவ்வூர், சோணாட்டில், திருவாரூர்ப்பக்கத்து உள்ளது.

2 கச்சிச்செப்பேடு என்பது, செக்கார் ஒழுகவேண்டிய விதிகள் பற்றி அரசாணையோடு பிறந்த சாஸனமாம். "திரிபுவனசக்கரவரத்தி ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு 5-வது . நாடுநகரமுங் கூடியிருந்து ஸ்ரீ காஞ்சிமாநகரில் செப்பேட்டுப்படி செய்யக் கடவ முறைமை" என்று தொடங்கிச் செக்கார்கள் செய்யக்கடவனவும் அல்லாதனவு மான விதிகளைக்கூறும் சாஸனமொன்று இச்செப்பேட்டைக் குறிப் பிடுதல் அறியத்தக்கது (S. I. I. Vol. vii. p. 436).

பல கொண்டுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆயினும் பாடங்களும், பொருள்களும், சரித்திரக்கூறுகளும் தெளிவுபட வேண்டியவை இப்பதிப்பினுள்ளுஞ் சிலபலவுள்ளன. அவற்றுட் சிறந்தன சில வற்றை மட்டும் ஈண்டுத் தொகுத்துக் கூறுவேன்.

## (2) கடைதிறப்பின் கருத்து

பரணியின் முதற்பகுதியான கடைதிறப்புக்குப் புதுப்பதிப்பின் அரும்பொருள் விளக்கத்தே அடியில் வருமாறு கருத்தெழுதப் பட்டுளது :—

**"விசயதரனதுபட்டினத்துள்ள பெண்கள் போர்க்குச்சென்றிருந்த தங்கணவர் திரும்பிவரத்தாழ்த்தமையாற் கவலையுற்றும் ஊடியும் கதவைத் தாழிட்டுக்கொண்டு வீட்டினுள்ளேயிருக்க, கவி (செயங்கொண்டார்), அப்பெண்களின் இயற்கையழகு, செயற்கையழகு, மென்மைத்தன்மை, முன்னாட்களில் அவர்கள் ஊடியுங் கூடியும் அனுபவித்த இன்பம் முதலியவற்றை எடுத்துக்கூறி அவர்களை அழைத்துக் கதவுதிறக்கவும் கலிங்கப்போரின் வெற்றியைக் கேட்கவும் வேண்டுதல்"** என்பது.

போர்க்குச் சென்றிருந்த தங் கணவரான வீரர்கள் திரும்பி வரத் தாழ்த்தமையால் தம் வீட்டுக் கதவை அடைத்துக்கொண்டு கவலையுற்றிருந்த அவர் மகளிரைப் பற்றியதே கடை திறப்பு என்று கருதுவதற்கு, அப்பகுதியுள் யாதொரு குறிப்புங் காணப் படவில்லை. ஆனல், அதற்கு மாருகக் கொழுநருடனிருந்து அவரோடு ஊடியுங் கூடியும் மகிழ்கின்ற நிலையில், மகளிரைக் கடைதிறக்கும்படி வேண்டும் பாடல்களே மிகுதியும் பயில்கின்றன. வீரர் மனைவியரே அதனுட் கூறப்படுவோரெனின்— 'கனவினிற் சயதரன் புணரவே பெறினும்' 'நரதுங்கனொ டணைவுருது' என்பன முதலியவை, அம்மகளிர்க்குச் சிறிதும் இயையாவாம். இயையுமேல், அவர் கற்புநெறி நிலைகுலையும். அதனல், பிரிந்த நிலையில் மகளிர் கணவருடன் துய்த்த ஊடல் முதலிய முற்செயல்களை நினைப்பூட்டிச் செயங்கொண்டார் அவர்களைக் கதவு திறக்கும்படி வேண்டினரென்று இதற்குக் கருத்துக் கூறுதல் பொருத்தமும் வழக்குமுடையதன்று. பழைய செய்திகளையே நினைப்பூட்டியவராயின், 'குழைந்தீர், புணர்ந்தீர்' என்றாற் போல இறந்த காலம்பட ஓரிடத்தேனுங் கவி தங் கருத்தைக் குறிப்பிடாமற் போகாரென்பதுந் திண்ணம். மற்றுக் கடை திறப்பின் கருத்தியாதோவெனின்—தம் அரசனும் அவன் தானைத் தலைவனும் அடைந்த கலிங்க வெற்றியைப் பாடுதற்குத் தலை நகரத்துள்ள பல்வேறு மகளிரும், காட்காலேயே எழுந்து தங்

தோழியர் வாயிற்கடைமுன்னின்று அவரைத் துயிலெழுப்புவதே யாம்.

"கேசவனைப் பாடவுநீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திற"

"பந்தார் விரலிநின் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக்கையாற் சீரார் வளையொலிப்ப, வந்து திறவாய்"
(திருப்பாவை)

என்று மார்கழி நோன்பில் மாயன் பேர்பாட ஆய்ச்சியர் தந் தோழியர் முன்றிலில் நின்று அழைத்தாற்போல ஈண்டும் நகர மகளிர் அபயன் பேர்பாட ஒருவரையொருவர் சென்றழைத்தனர் என்க.

"காஞ்சி யிருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ"

"கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ"

எனக் கடைதிறப்பின் இறுதியில், கலிங்க வெற்றியைப் பாடுதற்கே இங்ஙனம் அழைக்கப்படுகின்றனர் என்பதைச் செயங்கொண்டார் குறிப்பிட்டு அப்பகுதியை முடித்தலும் அறியத் தக்கது. இக்கடைதிறப்பு நாட்காலையே நிகழ்வதென்பது.

"புலர்ந்த தறியாதே கொழுநர்...ஆக வமளி மிசைத் துயில்வீர்"

"விடிவளவும் பொய்யே யுறங்கு மடநல்லீர்"

எனவருந் தொடர்களாற் பெறப்படும். இங்ஙனந் துயிலெழுப்பப் படுவோர் உயர்குல மகளிர், அரசனுந் தலைவரும் விழைந்த மகளிர் (24, 37), சிறையாகவுந் திறையாகவும் பெற்ற மகளிர் (41 - 45), வீரமகளிர் (பொருங்கண் வேலினீரே), ஓதல் முதலியன பற்றிப் பிரிந்த மகளிர் (51), பொதுமகளிர் (27, 30) முதலியோ ராவர்.

இனி, கடை திறப்பு ஏனைப்பொழுதுகட்கு ஏற்காமை மேலே (5) பெறப்பட்டமையின், எல்லா மங்கலங்களுந் தொடங்கற்குரிய காலையே பரணி விழாவின் தொடக்கத்துக்கும் உரியதெனல் நன்கு பொருந்தும். "பரணியாவது-காடுகெழு செல்விக்குப் பரணி நாட் கூழுந் துணங்கையுங் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது; அது, பாட்டுடைத் தலைவனைப் பெய்துகூறலிற் புறத் திணை பலவும் விராயிற்று" என முன்னோர் எழுதுவர் (தொல். செய். 149, நச்). இதனால் கொற்றவை பொருட்டுப் பரணி நக்ஷத் திரத்தில் நடத்தும் விழாவொன்றுளதென்பதும், அவ்விழாவில் தேவியின் பொருட்டுக் கூத்தும் பலியுங் கொடுத்து வழிபடுவ

துண்டென்பதும், அதனுள் தம்மரசனைப் பாட்டுடைத் தலைவனுக்கி அவன் வெற்றித்திறங்களைக் கொண்டாடுவரென்பதும் நன்கறியலாம். 'வழிபடுவதோர் வழக்குப் பற்றியது' என்பதனுனும் 'வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே' என்பதனுனும் அவ்வழக்கு மக்கள் வழக்கே என்பது இனிது பெறப்படும். பரணிப் பதிப்பாளர் கருதியதுபோல், அது பேய் வழக்கன்று. பேய் வழக்காயின் 'பேய்கள் வழிபடுவதோர் வழக்குப் பற்றியது' என்று விசேடித்துக் குறித்திருப்பரென்பது திண்ணம். 'கூழுந் துணங்கையுங் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு' என்பதனுல், அவை கொடுப்போர் மகளிரேயாவர்; என்னை? "மள்ளர் குழீஇய விழவி னுனும், மகளிர் தழீஇய துணங்கை யானும்" (குறுந். ௩௧) "இலங்குவளை மடமங்கையர்-துணங்கையஞ்சீர் தழூஉ மறப்ப" (மதுரைக்காஞ்சி, 159-60) என மகளிர்க்குரியதாகவே துணங்கைக் கூத்துக் கூறப்படுதலால் என்க. விழாக் காலங்களிற் கூழும் துணங்கை முதலிய கூத்துங் கொடுத்துத் தெய்வங்களை வழிபட்டுத் தம்மரசனையும் நாட்டையும் வாழ்த்துவது மகளிரது பண்டை வழக்காதலை—

"காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5, 67-73)

என்ற இளங்கோவடிகள் வாக்காலும் அறியலாம். இப்பரணி விழாவும் அத்தகையதொன்ருகலின், அபயனது போர்ச்செய்திகளைப் பெய்து பாடப்புக்க செயங்கொண்டாரும், களப்போர்பாடிக் களிக்கும் இவ்விழாவின் தொடக்கமாக, அதற்குரிய மகளிரின் துயிலெடை கூறலாயினரென்றும், மார்கழி நீராட்டின் பொருட்டு மகளிரெல்லாம் வைகறையிலெழுந்து தந்தோழியரைத் துயிலுணர்த்துமாறுபோல, இவ்விழாவைக் கொண்டாட வேண்டி நகர மகளிர் ஒருவரையொருவர் எழுப்பலாயினரென்றுங் கொள்வதே ஏற்புடைத்தென உணர்க. தக்கயாகப்பரணி, இரணியவதைப் பரணிகளுள் வருங்கடை திறப்புக்களிலே, வானரமகளிர், நீரரமகளிர், மேரு கயிலைகளில் வாழுமகளிர் முதலியோர் கடை திறக்க விளிக்கப்படுகின்றனர். பதிப்பாளர் கருத்துப்படி நோக்கின், கூத்தரும் இரணியவதைப் பரணியாசிரியரும், அவ்வானம் மேரு முதலிய இடங்கட்கு நேரே சென்று, ஆண்டுத்

துக்கத்தாற் பகலிற் கதவடைத்திருக்கு மகளிரைக் கதவு தட்டுபவராகக் கூறல் வேண்டும். இது சம்பாவிதமன்றே? இதனால், அவ்வவர்தம் தோழியரால், அவ்வம்மகளிர் விழாக் கொண்டாட அழைக்கப்படுகின்றார் என்பதே குற்றமற்றதென்க. குறித்த விழாநாள் தொடங்கவும், இரவில் நிகழ்ந்த ஊடல்கூடல் முதலிய செய்கைகளால் அயர்ந்து துயிலெழாது காலையில் உறங்கிக் கிடக்கும் மகளிரை, அவர் செய்திகளைப் பலபடியாகவும் அசதியாடிக் கூறித் துயிலுணர்த்துமுரிமை—தாமேயவரே என்ற வேற்றுமையற்ற அவர் தோழியர்க்கேயுண்டென்பது சொல்லாமலே அமையும். திருப்பாவையிற்போலத் தோழியர் கூற்றென்று வெளிப்படக் கூறினராயின், வேறு ஆராய்ச்சிக்குமிடமுண்டோ? முன்னோரால் விளக்கப்படாத கடைதிறப்பின் கருத்தை, அப்பகுதியுட் கூறப்படுவனவற்றோடும் பண்டை வழக்குக்களோடுங்கூட்டி ஏற்பதொன்றைக் கொள்வதே உரியதென்க. தம் அரசனது பெருவெற்றியைக் கேட்டதும், அதனைத் தம் தலைவியர்க்குக் காலையிற் சென்று துயிலெழுப்பியுணர்த்திப் பாட்டொடு தொடுத்து வாழ்த்துவது அவராயத்தார் கொண்டொழுகிய மரபென்பது செங்குட்டுவனது வடநாட்டு வெற்றியைத் தெரிந்த ஆயச் செவிலியர், அதனை அவன் தேவிக்கு உணர்த்திப்போந்த முறையால் தெரியலாம். இதனை—

"வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்ற
... ... ... ...
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு
எறிந்துகளங் கொண்ட வியறேர்க் கொற்றம்
அறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்லாண்டு வாழ்த்த"

(சிலப். 27, 195—213)

என்னும் இளங்கோவடிகள் கூற்றால் அறிக. விழாக் காலங்களிலே துணங்கை குரவை முதலிய கூத்துக்களையும், அம்மானை பந்து ஊசல் முதலிய ஆட்டங்களையும், தம் அரசனது போர் வெற்றிகளைப் புனைந்து பாடிக்கொண்டே நிகழ்த்துவது மகளிர்வழக்காதல், சிலப்பதிகார முதலிய முன்னூல்களால் தெளியத்தக்கது. அங்ஙனம் பாடுவது, வேந்தன் வெற்றித்திறங்களேயாயின், அவற்றுட் களவழி முதலிய புறத்துறைகள் பலவும் அமைதல் கூடியதன்றோ? அதனால் செருக்களத்தியல்புகளைப்

புலவர் மகளிர் கூற்றுகக் கொண்டு கூறிச் சிறப்பித்ததனுற் குற்ற மென்னை என்க இவற்றால், கடைதிறப்புக்கு யான் கூறிய கருத்து, முன்னூல் வழக்குக்களோடும் சயங்கொண்டார் குறிப்புக்களோடும் பெரிதும் ஒத்து முடிதல் தெளியலாகும்.

## (3) சிறைபிடிக்கப்பட்ட மகளிர்

"மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக வோடிக்
கானம்புக வேழம்புகு மடவீர்கடை திறமின்"

இதற்கு அரும்பொருள் விளக்கங் கூறும் பொழிப்புரையாவது :—

'மீனக்கொடியையுடைய பாண்டியர் கண்ணீர்சிந்தக் காட்டிற் புகுதலால் அப்பாண்டியரை எதிர்த்துச்சென்ற விசயதரனது யானை திரும்பிவருகின்றது; (அதனைக் காண) மடவீர் கடைதிறமின்' என்பது.

இப்பொருள் கூறின், தாம் பாடப்புக்க கடைதிறப்பிற் கலிங்கப் போரின் செய்தியன்றிப் பாண்டியனுடன் சோழன் நடத்திய போரின் வெற்றியைச் சயங்கொண்டார் கூறினவராவர். இவ்வாறு, சந்தர்ப்பத்துக்கு ஏற்காததொன்றை அப்புலவர் பாடினரென்றல் கொள்ளத்தக்கதன்று.

இனி, 'வேழம்புகும்' என்று இப்போது திருத்தப்பட்ட தொடர் முன்னைப் பதிப்புக்களில் 'வேனம்புகு' என்றும், மதுரைச்சங்கத்துள்ள பரணியேட்டில் 'வேளம்புகும்' என்றும் அமைந்துள்ளது. அச்சங்கப் பிரதியிலுள்ள சிறந்த திருத்தங்களைப் பற்றிச் செந்தமிழிற் பல வருஷங்கட்கு முன் நான் எழுதிய ஆராய்ச்சியில், 'வேளம்புகுமடவீர்' என அப்பிரதியிற் கண்ட பிரமாணங்களுடன் கூடிய பாடத்துக்குச் சிறந்த பொருள், பின்பு விளங்கியது ; அதனை ஈண்டு விளக்குவேன். சோழர்கள் பிறநாட்டரசரைப் போரில் வெல்லுங் காலங்களிலே அவரது களிறு நிதிக்குவை முதலியவற்றைக் கவர்வதோடு அவர்க்குரிய மகளிரைச் சிறைபிடிப்பதும், அம்மகளிரைத் தந்தலைநகரில் அமர்த்தித் தமக்குந் தந் தேவியர்க்கும் பணி செய்வோராக்குவதும் வழக்கமாகக் கொண்டிருந்தவர்.[1] இப்பரணிக்குரிய அபயனும் அவ்வாறு கவர்ந்தவனே என்பது,

"நடைவயப்பரி யிரத மொட்டகம்
நவநிதிக்குவை மகளிரென்

1 இங்ஙனம் பிடித்துவரப்பட்ட மகளிர் கரிகாலன் காலத்தில், அம்பலம் அல்லது கோயில்களில் திருப்பணி செய்வோராக அமர்த்தப் பட்டனர் என்பது பட்டினப்பாலை 246—249-அடிகளால் அறியக் கிடக்கின்றது.

நடைய வப்பொழு தவர்கள் கைக்கொளு
மவைக ணிப்பது மருமையே" (446)

"தென்ன ராதி நராதிப ராவைர்
தேவி மார்கடன் சேடிய ராகவே" (313)

"மலர்மாலே பணிமாறி யுடனே
புவனி காவலர்க டேவியர்கள் சூழ்புடைவர"

என்ற சயங்கொண்டார் பாடல்களாலும்,

"வேள்குலத் தரசர்
பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
ஒருவிசைக் கைக்கொண்டு"

என வரும் அபயன் மெய்க்கீர்த்தியாலும் அறியலாம். இங்ஙனம் சிறைபிடிக்கப்பட்ட மகளிர் அமர்ந்து வாழும்படி தலைநகரிற் சோழரால் தனியே அமைக்கப்பட்ட மாடமும் மாடப்புறமும் **வேளம்** என்று வழங்கப்பெறும். தஞ்சையிலும் பிறவிடங்களிலு மிருந்த இவ்வேளங்களைப் பற்றிச் சாஸனங்கள் அடியில் வருமாறு கூறுகின்றன :—

1. ஆனைமேற்றுஞ்சினார் தங்களாச்சி உடையபிராட்டியார் கிழானடிசள் **கீழைவேளத்துப் பெண்டாட்டி** ...... அவனி சிகாமணி (S. I. I. III. 378)
2. தஞ்சாவூர்க்கூற்றத்துப் **பழைய வேளத்துப் பெண்டாட்டி** போயன் திரிபுவன சுந்தரி (Ibid 382)
3. தஞ்சாவூர்ப் பெருமானடிகள் சோழமாதேவியார் **வேளத்து** (Ibid. IV, 174)
4. ராஜகேஸரிவர்மன் **வேளத்துப்பெண்டாட்டி மகாமல்லி** (I.M.P. Tp. 748)
5. உய்யக்கொண்டான் திருமஞ்சனத்தார் **வேளம்** (Ibid. T; 1204, S. I. I. II, 439)
6. உடையார் ஆனைமேற்றுஞ்சினார் **வேளம்**.( அபிமானபூஷணத் தெரிந்த திருவந்திக்காப்பு **வேளம்**(Ibid. 132)

இம் மேற்கோள்களைக்கொண்டு நோக்குமிடத்து, மேலே காட்டிய தாழிசைக்கு—'(போர்க்காற்றாது) பாண்டியர் கண்ணீர் சொரியக் காட்டுட்புகுதலால், (சோழரது) வேளத்திற்புகும் அவர் மகளிர்காள்! கடைதிறமின்' என்பதே உண்மைப் பொரு

ளென்பது தெளியலாகும். பாண்டியர் நாட்டிற் றுரத்தப்பட்ட அவர் மகளிர் வேளமேற்றப்பட்டனர் என்பது கருத்து. மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தும், இங்ஙனம் பகைமகளிரை வேளமேற்றும் வழக்கமிருந்ததென்பது—

"வீரபாண்டியனை முடித்தலைகொண்டு
அவன் மடக்கொடியை வேளமேற்றி" (S.I.I.III, 217)

என வரும் அச்சோழன் மெய்க்கீர்த்தியால் அறியலாகும். இவ் வேளத்தை ஆளும் மகளிரே முதலில் வேளாட்டி எனப்பட்டன ரென்றும், அச்சொல் வெள்ளாட்டி எனத் திரிந்து பிற்காலத்துப் பணிப்பெண்ணைப் பொதுவிற் குறிக்க வழங்கலாயிற்றென்றும் கருத இடமுண்டு. இங்ஙனம் வேளமேற்றிய மகளிரன்றிப் பர ராசாக்களால் திறையாகச் சோழர்களுக்கு அளிக்கப்பெற்ற மகளிருமுளர்.

## (4) கரிகாலன் காவிரிக்கரை கட்டிய வரலாறு

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிவைமிகைக்க ணென்
றிங்க ழிக்கவே யங்க ழிந்ததும்" (184)

இத்தாழிசையுள் 'இதுமிகைக்கண்' என்று முற்பதிப்புக் களிற் கண்ட பாடத்தை மாற்றி, 'இவை மிகைக்கண்' என்று புதிய பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளது. கரிகாலன் மரபினரான தெலுங்கு சோடரது சாஸனமொன்றில்—'தன் பாதகமலங்களிற் பொருந்திய கண்களையுடையவரான திரிலோசனன் முதலிய அரசரைக்கொண்டு கரிகாலன் காவிரிக்கரை கட்டுவித்தனன்' என்று கூறப்படுகின்றதென்றும், அவ்வாறு கட்டுவித்தபொழுது, தன்னாணைக்கடங்கிக் கரைகட்ட வாராத ஓர் அரசனை அவன் கண் கொண்டானென்று தெரிதலால், அவனே இங்குக் கூறிய முகரி யாதல் வேண்டுமென்றும், 'இதுமிகைக்கண்' என்று பாடங் கொண்டு அதற்கேற்ப வரலாறு கற்பித்துக் கூறுவாரும் உளர்' என்றும் அரும்பொருள் விளக்கத் தெழுதப்பட்டுள்ளன. இதனால் திரிலோசனனது கண்ணையன்றி, வேறு அரசனொருவன் கண்களை அழித்தவன் கரிகாலன் என்பது பதிப்பாளர் கருத்தென்பது தெரிகின்றது.

தெலுங்குச்சோடரின் சாஸனங்களிலே, பிரசஸ்தி (மெய்க் கீர்த்தி) கூறுந் தொடக்கத்தில், அவரது முன்னோனாகக் கரிகாலன்

புகழப்பட்டிருப்பது உண்மையே. அப்பிரசஸ்தியில் அவனைப் பற்றி வரும் வடமொழித்தொடர் வருமாறு:—

"சரண ஸரோருஹ விஹத விலோசன த்ரிலோசந
ப்ரமுகாகில ப்ருதிவீச்வர காரித காவேரீ தீர
கரிகாலகுல...மஹாமண்டலேச்வர"

என்பது இதன் பொருள்:—(தன்) 'பாதகமலத்தால் அழிக்கப் பட்ட 'விசேஷ நேத்திரங்கொண்ட திரிலோசனன் முதலிய அரசர்களாற் கட்டப்பட்ட காவிரிக்கரையையுடைய கரிகாலன் குலத்திற்றேன்றிய...இன்னுன்' என்பதாம். இதனுல், திரிலோசனன் என்பவன் காவிரிக்கரை கட்டுவதற்கு உதவி செய்ய வாராது கரிகாலனுடன் பகைத்தவனென்பதும், அவனுக்கு மிகையாக அமைந்த கண்ணை அக் கரிகாலன் தன் பாதகமலத்தால் அழித்தவனென்பதும், அவ்வழிவால் தன் வலிமை குன்றிப் பின்பு அப்பகைவன் காவிரிக்கரை கட்ட உதவினென்பதும் நன்கு பெறப்படும். இத்திரிலோசனன் பல்லவ வமிசத்தவனென்பதும் அவன் கொண்டிருந்த மிகைக்கண் (விலோசனம்) நெற்றியில் அமைந்திருந்த தென்பதும்—

'த்ரிநேத்ர பல்லவம் சருத்வா கர்விதம்...
...லலாடஸ்ய பக்நம் க்ருதவா வ்யராஜத"

எனச் சிதைந்து வழங்கும் மற்றொரு சாஸனகலோகத்தால்[1] பெறப் படுகின்றன. திரிநேத்திர பல்லவன் என்ற அரசனொருவன் தெலுங்கு நாட்டை யாண்டவனென்பதும், ஏறக்குறையக் கரிகாலன் காலத்தவனென்பதும் சாஸனங்களாலும் அறியப்படு கின்றன (I. M. P. Kt. 819).

இனி, தெலுங்கசோடனது சாஸனத்தில்—'தன் பாதகமலங் களிற் பொருந்திய கண்களுடையவரான திரிலோசனர்' என்ற பொருளிலுள்ளதாகப் பதிப்பாளர் காட்டிய வாக்கியம் மேற் குறித்த வடமொழிப் பிரசஸ்தியின் வேறனதன்று. அதனுல்,

1 காலஞ்சென்ற ஸ்ரீ வை. மு. சடகோபராமாநுஜாசாரியார் அவர்கள் எழுதிய கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியவுரை பார்க்க. மேலும், அவ்ஆசாரியரவர்கள், பிரதாபருத்திரன் என்பவன் முக்கண்ணுடையனைத் தனக்கடங்கடங்காதிருந்தனனுக, சோழன், அவனைப் படத்தில் எழுதிவரச்செய்து, அவனது நெற்றிக்கண்ணையழித்துப் போரில் அவனையும் வென்றனனென்று 'சோழராஜாக்கள் சரித்திரம்' என்ற நூலில் ஒரு வரலாறு உள்ள தென்று குறிப்பிட்டுள்ளார். இது, தெலுங்குசோடரது பிரசஸ்தி வாக்கியத்தின் கதையை ஒருபடியாக விளக்குவதாம்.

'சரணஸரோருஹ விஹத விலோசந' என வருந்தொடரிலே, விஹத (=அழிக்கப்பட்ட) என்ற பதத்தை விஹித (=வைக்கப் பட்ட) என்று மாற்றி அவர் அப்பொருள் கொண்டிருத்தல் வேண்டும். இங்ஙனமாயின், 'பாதகமலங்களில் வைக்கப்பட்ட கண்' என்புழி, வைக்கப்பட்டதற்குக் காரணம் யாது என்ற கேள்விக் கிடமுண்டாதலின், 'விஹித' என்ற பதம் இயையாமை யாலும், தெலுங்குச் சோடரது சாஸனங்கள் பலவற்றினும் 'விஹத' என்றே காணப்படுதலாலும், செயங்கொண்டாரும் இச் சொற்கேற்ப, 'இங்கழிக்கவே' என்று பாடுதலாலும், பகையரச னொருவனது பாதங்கள், 'சரணஸரோருஹ' என்று விசேடிக்கப் பட்டன என்பது சிறிதும் ஏற்காமையாலும் அவ்வாறு மாற்றிப் பொருள் கொண்டது பொருந்தாதாம். இங்ஙனம், முகரியின் கண்ணைப் படத்திலெழுதிக் கரிகாலன் அழித்த செய்தியைச் செயங்கொண்டார் கூறியவாறே—அவர்க்குச் சிறிது பிற்காலத்து விளங்கிய கவிச் சக்கரவர்த்தியான கூத்தர்—

'முழுகுல நதிக்கரசர் முடிகொடு வகுத்தகரை
  முகிழெட வகுத்த தறிவோம்
இகல் முகரீ முக்கணிலும் ஒருகணிழியக் கிழியில்
  எழுதுக ணழித்த தறிவோம்'' (குலோத். பிள். 53)

எனப்படுதலாலும் மேலே யாங் கூறிய பொருளே முடிபென்பது தெளியலாகும். இவ்வாறே,

"மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாற்
கண்கொண்ட சென்னி கரிகாலன்'' (குலோத். உலா)

"கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட வாராளே
எண்கொண்ட சோழ விரங்கேசா'' (இரங்கேசவெண்பா)

எனப் புலவர்களாற் பாடப்பட்டதூஉ மென்க. பரணிகொண்ட அபயன் காலத்தவனும், தெலுங்கு சோட அரசனுமாகிய கன்னர தேவன் என்பவனாட்சியில், கி. பி. 1122-ல் அமைந்த சாஸன மொன்றினும் (S.I.I. iv, No. 1328), கரிகாலன் செய்தி குறிக்கும் மேற்குறித்த பிரசஸ்தி வாக்கியம் வருகின்றது. இதனால், சயங் கொண்டார் தங்காலத்ததாகிய சாஸனவரலாற்றோடு ஒப்பவே மேற்காட்டிய தாழிசையைப் பாடியவர் என்பது ஐயமின்றிப் போதரும். இதுகாறுங் கூறிப்போந்தவற்றாலும், 'இவை மிகைக் கண்' என்று பன்மையாகக் கருதற்குக் காரணமின்மையாலும், 'இது மிகைக் கண்' என்ற பழைய பாடமே ஈண்டுக் கொள்ளத் தக்கதாமென்க.

(முகரி என்ற சொல்லின் பொருள்)

இனி, முகரி என்பது அரசனெருவன் பெயராகவேண்டுமென்றும், அவன் பெயரால் முகரி என்ற ஊர் உண்டாயிற்றென்றும் அரும்பதவிளக்கத் தெழுதியவாறு கருதற்கு ஆதாரங் குறிக்கப் படாமையால் அங்ஙனமே துணியக்கூடவில்லை. இங்ஙனமன்றி, வங்காளப்பிரதேசத்தில் ஆட்சிபுரிந்த மௌகரிகள் என்ற அரச வகுப்பினருள் ஒருவனைக் குறிப்பதாகக் கருதுவதும் ஏற்புடைத்தன்று. செயங்கொண்டாரும் கூத்தரும், தங்காலத்துச் சாஸனங் கூறும் வரலாறுகளைத் தழுவியே பாடுதலும், அச்சாஸனத்துக் கண்ட திரிலோசனனையே திரிநேத்திரபல்லவன் என்று மற்றொரு சுலோகம் வழங்குதலும் மேலே தெளிவாக விளக்கப்பட்டன. அதனல் அப்பகையரசன் பல்லவமரபினன் என்பது அறியக்கிடத்தலால், மௌகரியமரபுடன் அவனை இணைப்பதற்குச் சிறிதும் இடமில்லை என்க. மற்று, இச்சொற்குப் பொருள் யாதெனிற் கூறுவேன் :—

முகரி எனத் தமிழ்விகுதிபெற்ற வடசொல், ஆரவாரிப்போன் என்ற பொருளுடையதாம். முகரம் - ஆரவாரம்; 'முகரமிக்க வீரெடு' என்பது இரகுவமிசம் (இரகுவுற்-23). அஃது ஈண்டுத் தம்மாணை கூறி ஆரவாரிக்கும் குறும்பரசனைக் குறிக்கும். இப்பொருளில் 'அரட்டர்' என்ற பெயர் குறும்புசெய்யுமரசர்க்கு வழங்குதலும் ஒப்பிடுக. அங்ஙனமே, இம்முகரிச்சொல்லும் பண்டைநாள் முதலே அப்பொருளில் வழங்கிவருவதென்பது—

"முன்வாய தொழிற்பஞ்சேந் திரியவஞ்ச
    முகரிகாள் முழுதுமிவ் வுலகை யோடி.
நாள்வாயு மும்முடைய மம்ம ராணை
    நடாத்துகின்றீர்க் கமையாதே, யானேல் வானேர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
    நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவே னும்மால்
    ஆட்டுணே னேட்டந்தீங் கடையேன்மினே"
(தேவா. பக். 719. பாட். 9)

என்ற தேவாரப்பாசுரத்தால் அறியலாம். பஞ்சேந்திரியங்களைக் குறும்புசெய்யுந் தலைவராக உருவகப்படுத்திப்பாடுதல் பண்டையோர் மரபு. அம்முறையில், அவ்விந்திரியக் குறும்பரின் கொடுங்கோன்மைக்குத் தாம் அடங்காதிருந்தமையைத் திருநாவுக்கரசு நாயனர் பெருமிதம் பெறப் பாடுஞ் சிறப்பு நோக்கத்தக்கது.

ஈண்டு, முகரிச் சொற்குக் கூறத்தகும் பொருளே 'தொடரவந்திலா முகரி' என்பதில் வருஞ் சொற்கும் கொள்ளற்பாலதென்பதும், முதலிற் குறித்த சாஸனப்பிரசஸ்திக் கருத்தைத் தழுவியே செயங் கொண்டாரும், அவரைத்தழுவிக் கூத்தரும் பாடுதலின், திரிலோசனனையன்றி வேறெவனையும் அன்னோர் குறித்தவராகார் என்பதும் ஐயமின்றித் தெளியத்தக்கன.

## (5) ஏழிசைவல்லபி

"வாழி சோழகுல சேகரன் வகுத்த விசையின்
மதுர வாரியென லாகுமிசை மாதரிதெனு
ஏழு பாருலகொ டேழிசை வளர்க்க வுரியான்
யானை மீதுபிரி யாதுட னிருந்து வரவே"

அபயன் பரிவேட்டைக்குப் புறப்பட யானைமீது ஏறியபோது அவனுடன் விளங்கிய தேவியைக் குறிக்குஞ் சந்தர்ப்பத்தில் இத் தாழிசை பாடப்பெற்றுளது. இதனுள் 'ஏழுபாருலகொ டேழிசை வளர்க்கவுரியான்' என்று கொண்ட பாடம் முன்னையதினும் திருத்த முடையதேயாம். ஆனல், செயங்கொண்டாரது கருத்தாகாத பெருங் குறையொன்று இதனுட் காணப்படுகின்றது. அஃதாவது—'ஏழு பாருலகொடு' என முன்வரும் தொடரால் வளர்க்கு முரிமை அபயனுக்குரியதாகக் கருதி **'உரியான்'** என்று ஆண் பால்விகுதி புணர்த்து, ஏழுலகையும் ஏழிசையையும் வளர்க்க உரிமைபூண்ட அபயன்' என்று பதிப்பாளராற் பொருள் எழுதப் பட்டதேயாம்.

அபயனது ஆட்சியின் பிற்பகுதிக்காலத்தே அவன் மனைவிய ராக விளங்கியவர் — தியாகவல்லி, ஏழிசைவல்லபி என்பார் இருவர். முன்னவள் தலைமைத்தேவியும், பின்னவள் அபயனது பேரன்புக்கு உரிமைபூண்ட மனைவியுமாவள். அதனல், ஏழிசை வல்லபி, தன்னையகன் ஏறிய யானையில் வீற்றிருந்து உடன்சென் றதை இத்தாழிசையிலும், பட்டமகிஷி தனியாக உடன் போந்ததை அடுத்த தாழிசையிலும் கவி பாடலாயினர். இக்கருத்திற் பதிப் பாளரும் வேறுபட்டவரல்லர். அங்ஙனமாயின், 'தியாகவல்லி... சேர்ந்துவரவே' என்று தலைமைத்தேவியின் பெயரைக் குறிப்பிட்ட செயங்கொண்டார், ஒருகளிற்றில் ஏறிய காதலியாகிய ஏழிசை வல்லபியின் பெயரையும் அங்ஙனமே மறவாது குறிக்கவேண்டியவ ரன்றோ? அதனல், ஏழிசை வளர்க்க **உரியாள்'** என, ளகரவீற்றால் அவ்வேழிசைவல்லபியையே அவர் குறிப்பிட்டவராதல்வேண்டும் என்க. ஏழுபாருலகொடு ஏழிசைவளர்க்குமுரிமை பாட்டிற் கூறப்படுதலின், அத்தொடர் அபயனுக்கன்றி அவனிரண்டாந் தேவிக்குப் பொருந்துமாறு எங்ஙனமெனிற் கூறுவேன்.

சோழவரசர்களில், முக்கியமாக அபயனுடைய தேவியருள்ளே தலைமையானவளைப் புவனமுழுதுடையாள், உலகமுழுதுடையாள் என்றும், அடுத்த தேவியரை ஏழுலகுமுடையாள், திரிபுவனமுடையாள் என்றும் இவ்வாறு அவரியற்பெயர்களையொட்டி விசேடிப்பது, அக்காலத்துப் பெருவழக்காகும்.* அபயன் மெய்க்கீர்த்தியுள்,

"வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவனிடத் துமையெனத் தியாக வல்லி
உலகமுழுதுடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசைவல்லபி யேழுலகு முடையாள்
வாழி யமர்ந்தினி திருப்ப வூழியும்
வீரசிம் மாசனத்து வீற்றிருந்தருளின—"

என்று இம்முறையே பாடப்படுதல் நோக்கத்தக்கது. தங்காலத்ததாகிய மெய்க்கீர்த்தி 'ஏழிசைவல்லபி யேழுலகுமுடையாள்' என்று கூறியவாறே, செயங்கொண்டாரும்—இரண்டாந் தேவியின் இயற் பெயர் சிறப்புப்பெயர்களின் பொருள்களை விரிப்பவர் போல—'ஏழுபாருலகொ டேழிசைவளர்க்க வுரியாள்' என்று பாடலாயினர் என உணர்க. அபயன்மகன் விக்கிரமசோழன்தேவியை 'எண்ணுமுலகங்க ளேழுடைய பெண்ணணங்கு' என்றார் கூத்தரும் (விக். உலா). ஏழுலகுமுடைமையாவது—சத்த தீவங்களையுந் தாய்போல் வளர்க்கும் உரிமையாம். இசைமாதாகிய வளர்க்க வுரியாள் என இயையும். அரிது எனா—அரிய செயலென்று உலகம் கூற என்றவாறு. அரியது என்னாமல் எனினுமாம். இனி, பட்டத்துத் தேவியாகிய தியாகவல்லியை—'புவனிகாவலர்க டேவியர்கள் சூழ்புடைவர' என்று புலவர் சிறப்பித்தலால் அவள் புவனமுழுதுடையாள் என்பது பெறப்படுதலும், ஏழிசைவல்லபியை அபயனது காதற்றேவி என்று செயங்கொண்டார் வாக்குக் குறிப்பித்தல்போலவே, சிவபிரான் சடையிற்றரித்துச் சிறப்பித்த கங்காதேவியை அவட்கு மெய்க்கீர்த்தி உவமை கூறுதலும் ஈண்டு அறியத்தக்கவை.

### (6) திருமந்திரவோலையாள்

"முறையி டத்தரு மந்திர வோலையாண்
முன்வணங்கி முழுவதும் வேந்தர்தம்

* இங்ஙனம் வழங்குமுறையைக் கண்டு, டாக்டர் ஹுல்ஷ் (Dr. Hultzsch) துரையவர்கள் விவரமாக விளக்கியிருத்தல் அறியத்தக்கது. S. I. I. III, 171-2).

திறைபி டப்புற நின்றன ரென்றலும்
செய்த நோக்கில்லந் தெய்தி யிருக்கவே'' (315)

இத்தாழிசையுள்—'' தரு - வெளியிலுள்ளவர்களை அழைத்து வருகின்ற. ஓலை - வெளியிலுள்ளவர்கள் அரசனுக்கனுப்புவதும், அரசன் வெளியிலுள்ளவர்களுக்கு அனுப்புவதுமாகிய ஓலை 'என்று அரும்பதவிளக்கத்து எழுதப்பட்டுள்ளது. இக்கூற்று ஆக்கியோரது கருத்தன்றும். 'திருமந்திரவோலையாள்' என்பதே கவி கருதியமைத்த தொடர். இப் பாடம், சென்னை மியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியொன்றினுங் கண்டது. திருமந்திரவோலை என்பது, அரசன் கட்டளைகளை அவன் ஆணைப்படி எழுதுவதும் அவற்றை நிறைவேற்றுவதுமாகிய சோழராஸ்தான உத்தியோகம்.

''கோயில் நாயகஞ்செய்வார்களும் திருமாளிகைக்கூறுசெய்வார்களும் செய்யத் திருவாய்மொழிந்தருளினபடி......இப்படிச் செய்யப்பண்ணுவது. எழுதினான், **திருமந்திரவோலை** இராஜேந்திர மூவேந்தவேளான்'' (S. I. I. IV. P. 28.)

என்று, அபயனது 36-ம் ஆண்டுச் சாஸனமொன்று கூறுகின்றது. 'திருமந்திரவோலை கேரளாந்தகப் பல்லவராயன்' என்பவனும் அவ்வரசனது 30-வது ஆட்சி வருஷத்தில் அப்பதவியை அவன்கீழ் வகித்தவனாவன் (S. I. I. iii, 161). ஆகவே, இத்தாழிசைப்பொருளாவது -(பகையரசர் அரண்மனை வாயிலினின்று) முறையிட, 'அவர்தம் திறையைச் செலுத்தற்கு அரண்மனை வாயிற்புறம் நின்றனர்' என்று திருமந்திரவோலையாள் வணங்கிக்கூறவும்'' என்பதேயாகுமென்க.

## (7) கருணாகரன் மரபு

''இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
யெறிவ லென்றுகழ ரெழுதனன்
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே'' (328)

இத்தாழிசையுள், 'மறைமொழிந்தபடி மரபின்வந்த குலதிலகன்' என்பது கவியின் கருத்தமைதிபெற்ற தொடரன்று. 'வேதமொழிந்தபடி மரபில்வந்த குலதிலகன்' (கருணாகரன்) என்று, பொருளமையில்லாத தொடரொன்றைப் புலவர்பெருமான் பாடினராகாமை, ஊன்றி நோக்குவார்க்குப் புலனும். அதனால், இப் பாடத்துள் ஒரு தவறுண்டென்பது பெறப்படும். அத் தவறாவது **பதி** எனற்பாலது 'படி' என்று பிறழ்வுற்றதே என்க. மறைமொழிந்த பதியாவான் பிரமன். கருணாகரன் பல்லவமரபினனென்பது செயங்கொண்டார் வாக்கால் நன்கறிந்ததே. இப்

பல்லவவமிசம் பிரமனை ஆதியாகக் கொண்டது என்பதைப் பல்லவ சாஸனங்கள் பலவற்றாலுந் தெளியலாம். "ஸ்வஸ்திஸ்ரீ இவ்வகையே ப்ரஹ்மன் ஆதியாக வாராநின்ற பல்லவவமிசத்துள் பரமேசுவரப் போத்தரையன்" என்று பழையதொரு சாஸனம் கூறுதலும் காண்க (S. i. i. iv p. 10). ஒருவர்வாய்க்கேட்டு ஏடெழுதும்போது, பதிக்கும் படிக்கும் உள்ள ஒலிவேற்றுமை புலனாகாமையால் நேர்ந்த பாடப்பிறழ்வாகவே இது கருதற்குரியது.

## (8) தலைமைச் சேனாபதி

அபயனேவலாற் கலிங்கப்போர்க்கு ஆயத்தமாகிய தலைமைச் சேனாபதியும் உதவிச் சேனாபதிகளும் தத்தங் களிறுகளில் ஏறியவாற்றைச் சயங்கொண்டார் மூன்றுபாடல்களாற் சிறப்பிக்கின்றார். அவற்றுள், தலைமைச்சேனாபதியான கருணாகரத்தொண்டைமானைப் பற்றிய தாழிசை, புதுப்பதிப்பிற் காணப்படுவது வருமாறு:—

**"தண்ணார் மலர்சேர் திரடோ ளபயன்**
**தானேவிய சேனை தனக்கடையக்**
**கண்ணாகிய சோழ னிசக்கரமாங்**
**கருணாகரன் வாரண மேற்கொளவே" (350)**

இதனுள், 'சோழன சக்கிரமாம்' என்பது பழைய பாடம் அது, 'சோழ னிசக்கரமாம்' என்று இப்போது திருத்தப்பெற்றும், "சேனை முழுமைக்குங் கண்போன்ற (அபயன்மகன்) விக்கிரம சோழனும், படைத் தலைவனுக்கும் படைக்கும் உண்மையான கை போன்ற கருணாகரனுங் களிற்றை மேற்கொள்ள" என்று பொருளெழுதப்பட்டும் உள்ளது.

அபயன்மகனை விக்கிரமசோழன் இளவயதிலேயே கலிங்கத்தின் மேற் படையெடுத்துச்சென்று, ஆங்கு நடந்த போரொன்றில் வெற்றி பெற்றவனென்பது உண்மையே*. ஆயின், அது சயங்கொண்டார் பாடிய கலிங்கப்போர்தான் என்று துணிய இடமில்லை. மற்று, அப்போர் தெலுங்கவீமன் என்ற கலிங்கராசனுடன் நடத்தியதென்பது,

**"தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்**
**கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்**
**ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி**

* கூத்தர், விக்கிரமசோழனது கலிங்கவெற்றிபற்றிப் பாடிய பரணியொன்றும் உண்டென்பது, தக்கயாகப் பரணியுரையால் அறியப்படுகின்றது. அந்நூல், இக் கலிங்கவெற்றியைப் புகழ்வது போலும்.

வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி"

எனவரும் அவன் மெய்க்கீர்த்தியாற் றெளிவாம். கூத்தரும் தம் உலாக்களில்—

"ஏழைக் கலிங்கங்க ளேழனையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே" (விக்கிரம. உலா.)

"கலிங்கப் பெரும்பரணிகொண்ட பெருமாள்" (குலோத்.உலா)

என்று பாடியனவும் இக் கலிங்க வெற்றியாகவே கருதத்தகும். அபயன் நடப்பித்த கலிங்கப்போர் விக்கிரமனடத்திய அப்போரி னும் வேறனதென்பது, சாஸனபரிசோதகர்க்கும் ஒப்பமுடிந்த தாம். சயங்கொண்டார் பாடிய கலிங்கப்போர்க்கு விக்கிரமனுஞ் சென்றிருந்தவனுயின், உடன்சென்ற தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுத் தனித்தனித் தாழிசையாற் பாடும் அப் புலவர், இள வரசனென்பது விளங்க அவ்விக்கிரமன் பெயரையுங் குறிப்பிட்டுச் சிறப்பித்திருப்பரன்றோ? ஒரு தாழிசையிற் கருணகரனுடன் சேர வைத்தும், பெயர் விளக்காமலும், இளவரசனை அவனைச் 'சோழன்' என்றும் கூறினர் என்பது பொருந்துவதாகவில்லை. இனி, 'சோழ னிசக் கரமாம்' என்ற புதுப்பாடத்துக்கு—'அபய னுக்கும் படைக்கும் உண்மையான கைபோன்ற கருணகரன் என்ற பொருள் தரப்பட்டுளது. இப் பொருள்கொள்ளின் அவ் வபயன் கொண்ட கரம், போலிக்கையே என்பதுபட்டு, அவன தியற்கை வலியைக் குறைவுபடுத்துவதாகவே முடியும்.

"இராமன் தோள்வலி கூறுவோர்க்கே" (கம்பரா)

"மீண்டமரர், தாளிரண்டு, நோவத் தனித்தனியே யோடியநாள்
தோளிரண்டு மன்றே துணை" (நளவெண்)

"ஆளரி யேறு போல்வார்..... .........
தோளிணை துணையே யாகப் போயினர்" (பெரிய புரா.)

என்றாற்போல, வீரரது புசபலத்தை மாசறச் சிறப்பித்தலே பண்டையோர் வழக்காகும். இவற்றால், புதுப்பாடத்தாற் பொருட் சிறப்பொன்றும் பெறப்படாமை காண்க.

(கருணகரனைச் சக்கரமாக உருவகிக்கை)

இனி, இப்பதிப்பில் ஒதுக்கப்பட்ட 'சோழன சக்கிரமாங் கருணகான்' என்ற பழையபாடத்தை ஆராயுமிடத்து, அதுவே பொருட்பொலிவுகொண்டு திகழ்கின்றது. அதனை ஈண்டு விளக்கு வேன். 'சக்கிரமாம்' என்ற பாடத்தின்படி, தலைமைச்சேனபதியை

இத்தாழிசையும், உபசேனபதிகளை அடுத்துவருந்தாழிசைக ளிரண்டும் குறிப்பனவாக அமைகின்றன. 'சேனைமுழுதுக்குங் கண்ணனவனும், சோழ (அபய)னது சக்ராயுதம் போன்றவனுமாகிய கருணகரன்' என்பது இதன் பொழிப்பாம். மேலெல்லாந் திருமாலின் அவதாரமாக அபயனைப் புகழ்ந்துவந்ததற்கேற்பப் போர்க்கெழுந்த அவன் படைத்தலைவனை அவனது சக்கரப்படையாகக் கவி உருவகிக்கலாயினர். கலிங்கப்போர்க்குத் தானே படையெடுத்துச் சென்றவனல்லனாயினும் (458), பகையறுத்தற்குத் திருமால் தன் சக்கரத்தாழ்வானை ஏவுமாறுபோல அவனமிசமாகிய அபயனும், தன் சக்கரமாகிய கருணகரத்தொண்டைமானை ஏவினன் என்றார் கவி; என்றதன் கருத்து—துணைக்காரணமான கருணகரசக்கரத்தின் செய்கையாவும் அதனைத் திரித்துவிட்ட நிமித்தகாரணனாகிய அபயனுடையனவே என்பதாம். திருமாலாக உருவகித்து அபயனது அவதாரங் கூறியவிடத்தே, செயங்கொண்டார்—

**"சக்கர முதற்படையொ ரைந்துமுத னாளே**
**தன்னுடைய வானவத னுலவை நமக்குத்**
**திக்குவிச யத்தின்வரு மென்றவை பயிற்றிச்**
**செங்கைமலர் நொந்தில சுமந்தில தனக்கே"** (234)

என்பதனால், தெய்வாமிசமாகிய அவன் ஐம்படைதரியாமைக்குக் காரணங் குறிப்பிட்டார்; குறிப்பிட்டதற்கேற்ப—

**"கண்டு காணுன் படைவலி நீயும் அத்**
**தண்டு கொண்டவன் சக்கரம் வந்ததே"** (375)

என்று, கலிங்கராசனுக்கு அவன் மந்திரி, கருணகரன் படையெடுத்து வருவதைக் கூறுமிடத்தும் அவனை அபயன்சக்கரமாகவே உருவகித்துப்போந்தமை காணலாம். இனி, அனந்தபுரம் ஜில்லா, கொத்தசிவரம் என்ற ஊருள் உள்ள ஆஞ்சனேயர்கோயில் தம்பமொன்றில் வரையப்பட்டதும், முதல் இராசேந்திர சோழனது 10-ம் ஆட்சியாண்டில் அமைந்ததுமான சாஸனமொன்றில் அவன் படைத்தலைவனை **சோழியவரையன்** என்பான் நால்மடிவீமன், **சோழனசக்கரம்** என்ற பெயர்களாற் சிறப்பிக்கப்பட்டுள்ளான்[1]. இதனால், சோழரின் தானைத்தலைவர், 'சோழனசக்கரம்' என்ற சிறப்புப்பெயரால், அபயன் முன்னோர் காலமுதலே வழங்கப்பட்டு வந்தமை தெரிதலின், கருணகரனும் அத்தகைய பெயரைப்பெற்றுச் சிறந்தவன் என்பது நன்குவிளக்கமாம். ஆகவே, 'சோழன சக்கிரமாங் கருணகர'ன்' என்பதே செயங்கொண்டார் கருதி

---

1 **சாஸனத்தமிழ்க்கவிசரிதம்**, 55,56-ம் பக்கங்களில், மேற்கோள்களுடன், இதன் விவரம் காண்க.

யமைத்த தொடர் என்பது ஐயமின்றிப் போதரும். சந்தநோக்கி, 'சோழனசக்கரம்' என, ஆறுவதன் பன்மையுருபு ஒருமைக்கண் மயங்கியது. 'புல்லிய வேங்கடம்' (=புல்லி என்பானது வேங்கடம்) எனப் புறநானூற்றிலும் (385), 'தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக' எனப் பெரியாழ்வார் திருமொழியிலும் (1, 57,) 'என கருத்திடை' எனக் கந்தபுராணத்தும் (மேருப். 56) முன்னேரும் பின்னேரும் சிறுபான்மை இம்மயக்கம்படக்கூறுதலுங் கண்டு கொள்க. இனி, 'கண்ணகிய கோலியல்சக்கிரனெங் கருணகரன் என்ற பாடம் 'மியூஸியம்' புத்தகசாலைப் பரணிப் பிரதியொன்றிற் காணப்படுகின்றது. அதுவும் இவ்வாறே இயைத்துக் கொள்ளற்பாலதாம்.

## (9) அளத்திப்போர்

"தளத்தொ டும்பொரு தண்டெழுப் பண்டொர்நாள்
அளத்திற் பட்ட தறிந்திலை யையநீ" (372)

கலிங்கவரசனுக்கு அவன் மந்திரி, அபயனது வீரப்பிரதாபங் களைக் கூறிவருமிடையிலுள்ள இத்தாழிசையுள், 'அளத்திபட்டது' எனற்பாலது 'அளத்திற்பட்டது' என்று பாடப்பிறழ்வு கொண் டுள்ளது. பதிப்பாவர் அரும்பதவகராதியிற் குறித்தவாறு, செயங் கொண்டார் இப்பாட்டுட் கருதியது உப்பளமன்று; மற்று, அளத்தி என்ற ஊரில் அபயனல் நடத்தப்பட்ட போரே அவர் குறித்ததாம். சளுக்கியருடன் நடந்த அப்போரில் அபயனடைந்த வெற்றியை—

"சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின தீட்டமும்"

என, அவன் மெய்க்கீர்த்தி கூறுவதுங் காண்க. கஞ்சம் ஜில்லா 'பர்லாகிமெடி' தாலுகாவில், ஜமீனென்றன் தலைமையூராக 'அளதி' என்ப துள்ளது. அபயன் போர்க்களம் இதுவோ அன்றி வேறோ தெரியவில்லை.

## (10) அருவர்

"ஒருவ ரொருவரி னேடை முந்தினர்
உடலி னிழலினை யோட வஞ்சினர்
அருவ ரருவ ரெனவி றைஞ்சினர்
அபய மபய மெனுந டுங்கியே" (438)

இத்தாழிசைக்கு—'ஓடவஞ்சினர் சிலர், தம்முடலி னிழலையே (அருவர் அருவர் என =) மாயருபத்தோடு வந்த சோழவீர ரென்று எண்ணி, வணங்கினர்கள்' என்ற பொருள் புதுப்பதிப்பில் எழுதப்

பட்டுள்ளது. அருவரென்பதற்குக் கவிகருதிய பொருள் இஃ தன்று. மற்று இத் தாழிசைப் பொருளாவது :—

"(கலிங்கவீரர்) ஒருவர்க்குமுன் னொருவர் ஓடித்தப்ப முந்தின ராய், தம் நிழல் பின்தொடர்ந்துவர (அதனைப் பகைவர் வருகை யாக) அஞ்சி, 'தமிழர்! தமிழர்!!' என்று கதறிக்கொண்டு, அபய மிட்டு நடுங்கி அந் நிழலை வணங்கினர்"—என்பதாம். அருவர் என்பது, வடுகர் தமிழரைக் குறிக்கவழங்கிய சொல்; அஃது இக் காலத்து அரவர் எனத் திரிந்தது. 'அரவரென்பது தமிழராகும்' என்றூர் அகராதி நிகண்டுடையாரும். இவ்வாறே தண்டியலங்கார மேற்கோட்பாட்டொன்றும்,

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்துவட நாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தி[1] என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது"

என, இவ் அருவர் என்ற சொல்லை வடநாட்டார் (வடுகர்) கூற்றாகக் கூறுவதுங் காண்க. அருவரென்ற வழக்குப்பற்றித் 'தமிழரும் ஆந்திரரும்' என்ற தலைப்பின்கீழ் எழுதிய கட்டுரையுள்ளும்[2] விரித்து உரைத்துள்ளேன்.

குறிப்பு :—இவ்வாறே, கலிங்கத்துப்பரணிப் பதிப்பிற் செய்தற் குரிய திருத்தங்களும், பாடச்சிறப்புக்களும் பலவாகும். அவற்றுட் சரித்திரசம்பந்தமான அரிய சில திருத்தங்களும் பாடங்களுமே ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டன. ஏனையவை, செந்தமிழில் வெளிவந்த 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி' 'சங்கோத்தரம்' என்ற கட்டுரை களால் அறியத்தக்கன.

———

1 'தீத்தீத்தி' என்னும் அடுக்கும் தெலுங்குத்தொடரே என்பது இப்போது தெரியவருகின்றது. 'தீ' என்பது, அம்மொழியுள் 'வழிவிடு, ஒதுங்கு' என்ற பொருளில் வழங்குவதாம். சோழவீரரைக் கண்டதும், வடநாடர், அருவர் அருவர் என்றஞ்சி, ஒருவரொருவர்மேல் வீழ்ந்து ஓடுநிலையில் 'ஒதுங்கு ஒதுங்கு (வழிவிடுக, வழிவிடுக) என்று கூறிக் கொண்டு (போக்கிடம்பெறாது) சோர்வர்—என்பது இப்பாடற் கருத்தாமென்க. 'நெருப்பு நெருப்பு' என்று அடுக்குதற்குரிய முன் விகழ்ச்சியொன்றும் பாட்டிற் குறிப்பிடப்பெறுமையால், இப்பொருள் கூறுதலே தக்கதாதல் கண்டுகொள்க.

2 இப்புத்தகம், 317, 318-ம் பக்கங்களிற் காண்க.

# 28. கருணாகரத்தொண்டைமான்[1]

—:0:—

இப்பெயர்பெற்ற தலைவனைப்பற்றி முதன்முதலாக நமக்குத் தெரிவித்தவர், செயங்கொண்டார் என்ற புலவர்பெருமானென்றே சொல்லலாம். யாவரும் அருமைபாராட்டும்படி இவர் இயற்றிய கலிங்கத்துப்பரணியால், இத்தலைவன் வரலாறுகளுள் ஒருசில நமக்குத் தெரியவருகின்றன். இவற்றுடன் சாஸனங்களினின்று புதியவாக யான் கண்ட செய்திகளையும், சரித்திரவறிஞர் இவனைப் பற்றி எழுதியுள்ளவற்றைப் பரிசீலனை செய்ததில் அமைந்த என் முடிபுகளையும் ஒருங்கு திரட்டி, இப்போது இம்மகாசபைமுன் வெளியிட எண்ணுகின்றேன். செந்தமிழறிஞர் செவிசாய்த்துக் கேட்டருள்க.

சோழஸாம்ராஜ்யத்தை உயர்நிலையில் நிறுவிய அரசர்களுள்ளே, முதற்குலோத்துங்கன் எனப்பட்ட அபயன் என்பவனும் ஒருவன் என்பது சரித்திர நூலோர் அறிந்த விஷயம். நாற்பத்தெட்டு வருஷகாலம் (கி. பி. 1070—1118) ஆட்சிபுரிந்த இவ்வேந்தன் அடைந்த பெரும்புகழ்க்குச் சிறந்த காரணமாயிருந்தோர், இவன் கீழமர்ந்த தானைத் தலைவர்களேயாவர். அத்தலைவர்களிலெல்லாம் முதன்மை பெற்று விளங்கியவன், கருணாகரன் என்ற சிற்றரசன். கலிங்கப்போரை நேரிற்சென்று நடாத்தித் தன்னரசனை அபயனுக்கு வாகைமாலை சூட்டியோன் இத்தலைவனே. அதனால், ஏவுதற்கருத்தனை அபயனுடன் இயற்றுதற்கருத்தனாகிய இக்கருணாகரனையும் செயங்கொண்டார் தம் பரணியிலே பலவிடங்களினும் சிறப்பித்துப் பாடுவர்.

இக் கருணாகரன் வண்டை என்ற ஊரின் தலைவனென்பதும், பல்லவவமிசத்தவனாய்த் தொண்டைமான் என்ற சிறப்புப்பெயர் பெற்றவன் என்பதும், அபயனது சேனாபத்தியத்துடன் மந்திரத் தலைமையும் வகித்து விளங்கியவன் என்பதும்—

"வண்டை வளம்பதிபாடீரே.. பல்லவர்தோன்றலைப் பாடீரே"
(520)

மறைமொ ழிந்தபதி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே" (328)

---

1 இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 24-வது வருஷக் கூட்டத்தின் இரண்டாநாளில், ஸேதுஸம்ஸ்தான மகாவித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க்கூடிய அறிஞர் குழாத்தின்முன்பு படிக்கப்பெற்றது.—செந்தமிழ், தொகுதி 23, பக். 285—307. (1922-3)

**"வண்டைமன், தொண்டை மான்முதன் மந்திர பாலகர்
சூழ்ந்து தன்சழல் சூடி யிருக்கவே" (314)**

எனவரும் பரணித்தொடர்களால் அறியலாம். தொண்டைமண்டலசதகநூலார், இவனைத் தொண்டைநாட்டினனுகப் பாடுவர் :—

**"பண்டையோர் நாளையி லோரேழ் கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் நீட்டுவித் தோன்கழற் செம்பியன்சேய்
தொண்டைநன் ஞடு புரக்கின்ற கோனந்தி தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணு கரன்ருெண்டை மண்டலமே" (92)**

கருணகரனுக்குரிய இவ் வண்டை, தொண்டைநாட்டிலுள்ள **வண்டலூர்**[1] ஆம் என்று சரித்திர நூலோர் கருதினர்[2]. இங்ஙனங் கருதற்குக்காரணம், இத்தலைவன் பல்லவமரபினனுய்த் தொண்டைமான் என்ற சிறப்புப்பெயர் பெற்றிருப்பதும், தொண்டைநாட்டினனுக அதன் சதகத்திற் பாடப்பட்டிருப்பதுமே யாகும். ஆயின், இம்முடிபு ஏற்புடையதன்றென்பது, ஆராய்ச்சியால் **இப்போது புதியதாகத்** தெரியவருகின்றது.

மத்தியகாலத்துச் சோழர்நாளிலே, பல்லவ வேந்தர் தம் பழைய பெருவலிமை குன்றி, அச்சோழரின்கீழ் அமைச்சராகவும் படைத் தலைவராகவும் அதிகாரிகளாகவும் அமர்ந்ததோடு, தொண்டைநாட்டின்மட்டுமன்றிச் சோணுட்டிலும் பிறவிடங்களிலும் சிறியவும் பெரியவுமான ஊர்கட்குத் தலைவர்களாகவும் வாழ்ந்தவரென்பது சாஸனங்களால் நன்கறியலாம். அவ்வாறமர்ந்த பல்லவ வமிசத்தவருள் இக் கருணகரனும் ஒருவன். இவன் முன்னேர் தொண்டை நாடாண்டமைபற்றி, அவர் நாடு ஊர்களையும் செய்திகளையும் இவனுக்கும் உரியவாகப் புலவர்கள் சிறப்பிப்பராயினும், உண்மையில் இவன் சோணுட்டவனே. இவனூராகிய **வண்டை** யென்பது, இதுவரை கருதப்பட்டதுபோல் தொண்டைநாட்டிலுள்ள வண்டலூரன்றிச் சோழநாட்டிலுள்ளதோர் ஊரேயாகும். இவ்வுண்மைகளை அடியில்வரும் சாஸனம் நன்கு விளக்குதல் அறியத்தக்கது :—

**ஸ்வஸ்தி ஸ்ரீ. கோ. இராஜகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு நாற்பத்து மூன்று. ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில்**

1 இவ்வூர், சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் இடையில் ரயில் பாதையிலுள்ளது.

2 காலஞ்சென்ற ஸ்ரீ. வி. கனகசபைப்பிள்ளையவர்கள், டாக்டர். ஹூல்ஷ் (Dr. Hultzsch) துரை முதலியோர் இங்ஙனங் கருதியோர் (S. I. I. ii, 113).

நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத் துங்கசோழவளநாட்டுத் திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரி யுடையான் வேளான் கருணாகரனரான தொண்டைமானர் தேவி யார் அழகியமணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநுந்தா விளக்கு" (S. I. I. iv. No. 862.)

இச் சாஸனத்தினின்றும், வண்டாழஞ்சேரி என்பது சோழ மண்டலத்துத் திருநறையூர் நாட்டைச் சார்ந்த ஊரென்பதும், அதன் தலைவன் கருணாகரத்தொண்டைமான் என்பதும் வெளிப் படையாகும். மேற்காட்டிய சாஸனம், முதற்குலோத்துங்கனது 43-ம் ஆண்டில் அமைந்ததாதலாலும், அதனுட்கண்ட வண்டாழஞ் சேரியுடையானைக் 'கருணாகரனரான தொண்டைமானர்' என்றும் அவன் மனைவியைத் 'தேவியாரான அழகியமணவாளனி மண்டை யாழ்வார்' என்றும் உயர்பதவியினரை வழங்குமுறையில்வைத்துக் கௌரவித்தலாலும், வண்டாழஞ்சேரி என்பதை வண்டை என மரூஉவாக்கி வழங்குவது தொன்றுதொட்ட தமிழ்மரபுக் கொத்த தாதலாலும்[1] அபயனுடைய மகாசாமந்தனும் கலிங்கமெறிந்தவனு மாகிய கருணாகரத்தொண்டைமானே இச் சாஸனத்துக் குறிக்கப் பட்டவன் என்பது ஐயமின்றிக்கொள்ளற்குரியது. அரசர் அமைச் சர் போன்ற உயர்பதவியிலுள்ளோரின் மகளிரை ஆழ்வார் என்ற சிறப்புப் பெயராற் சோழர்காலத்தவர் வழங்கிவந்தவர் என்பது அடியில்வரும் சாஸனத் தொடர்களால் விளக்கமாகும்.

"நம்பெருமான்(அபயன்)திருத்தங்கையார் மதுராந்தகியாழ்வார்"
(S.I.I.IV.p.18)

"சுங்கந்தவிர்த்த குலோத்துங்கசோழன்மகளார் அம்மங்கை
யாழ்வார்" (Ibid, p. 35.)

"விருதராச பயங்கர வாணகோவரையர் தங்களாச்சி
சோழகுல சுந்தரி விச்சாதிரி யாழ்வார் (Ibid, III, p. 153)

இனி, வண்டாழஞ்சேரியைப்பற்றி ஆராயுமிடத்து, அது முதற் குலோத்துங்கனுக்குப் பலதலைமுறைகட்கு முன்பே, சோணாட்டிற் பிரபலம்பெற்ற ஊர்களுள் ஒன்றாயிருந்ததென்பது தெரியலாம். பர கேசரிவர்மனான முதற்பராந்தகன்காலத்தே, சோழவதிகாரிகளுள் ஒருவனாக விளங்கியவன்—"திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரியு

1 புதுச்சேரியைப் புதுவை என்பதுங் காண்க. ஊர்களின் பெயர் கள் இவ்வாறு மருவி வழங்குமுறையை, தொல்காப்பியச் செய்யுளில் 90-ம் சூத்திரவுரையுட், பேராசிரியரும் நன்கு விளக்குவர்.

டையான், மூவேந்தவேளான் சாத்தன் உலகன்" என்று சாஸனங் கூறுதலுங் காண்க[1] இவ்வூர் முதல் இராஜராஜன் காலத்தே, க்ஷத்ரியசிகாமணி வளநாட்டைச் சார்ந்ததாகவும்,[2] அபயன் காலத்தே குலோத்துங்கசோழவளநாட்டைச் சார்ந்ததாகவும் அமைந்திருந்தது. இப்போது கும்பகோணந் தாலூகாவின் தென்கிழக்கில், திருநறையூராகிய நாச்சியார்கோயிலுக்கும் திருச்சேறைக்கும் இடையில் **வண்டுவாஞ்சேரி** என மருவி வழங்குஞ் சிறு கிராமமாக உள்ளது.

இவ்வூர்த்தலைவன்கொண்ட கருணாகரன் என்றபெயர், ஸ்ரீராமபிரானது திருநாமங்களுள் ஒன்றாகும். தர்ப்பசயனமெனப்படும் திருப்புல்லாணித் திருக்கோயிலுட் பள்ளிகொண்டருளிய அப்பெருமானைப்பற்றிக் கூறுமிடத்தே—"வருணாலயத்தை வழிவேண்டிச் சரணமாகக் கிடந்த **கருணாகரப் பெருமாளையுந்** திருவடி தொழுது" என இராமாநுஜ திவ்யசூரிசரிதை (பக்.164) கூறுதலுங் காண்க. கம்பராமாயண ஏடுகள் சிலவற்றின் தலைப்பிற் கம்பநாடர் பாடிய இராமஸ்தோத்திரங்களுள் ஒன்றாகக் காணப்படும்,

> "நாராய ணாய நமவென்று நன்னெஞ்சர்
> பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
> காராரு மேனிக் **கருணா கரமூர்த்திக்**
> காரா தனையென் னறியாமை யொன்றுமே"

என்ற அழகிய பாட்டினும், கருணாகரமூர்த்தி என்று இராமபிரான் வழங்கப்பெறுதல் காணலாம். வருணனை வழிவேண்டித் தருப்பசயனத்திருந்து அப்பெருமான்புரிந்த பிராயோபவேசச் செயலைக் கூறுமிடத்தே—

> " தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
> பொருண யந்துநன் னூனெறி யடுக்கிய புல்லிற்
> **கருணை யங்கடல்[3] கிடந்தனன் கருங்கட லேநோக்கி**
> வருண மந்திர மெண்ணினன் விதிமுறை வணங்கி "

1 Inscriptions of Madras Presidency, Ct. 1045.

2 S. i. i. II p. 329.

3 இவ்வடிக்கு 'இரத்நாகரத்தை வழிவேண்டிக் கருணாகரம் கிடந்தது' என்பது கருத்தாகும். கம்பரது இவ்வடியையுட்கொண்டே 'கருணை யென்னுங் 'கடல் கருங்கடலைநோக்கிக் கிடந்ததே' என்று எழுதியருளினர், திருவாய்மொழிக்கு ஈடு என்னும் பேருரையிட்ட பெரியாரும் (ஈடு, 5, 10, 6 ; 6, 9, 3).

என்றும், குகப்பெருமாளுக்குத் தன் தாயைப்பற்றிப் பரதாழ்வான் கூறியதாகப் பாடுமிடத்தே—''கடுமையார் கானகத்துக் **கருணை யார்கலி** யேக' என்றும் கம்பநாடர் இராமபிரானை கருணைகரப் பெயரின் பொருளை விளக்கிச் செல்லுதலும் ஒப்பிடத்தக்கது. இது பற்றியே செயங்கொண்டாரும்—

**''இலங்கை யெறிந்த கருணா கரன்றன்**
**இசைவெஞ் சிலையின் வலிகேட்பீர்**
**கலிங்க மெறிந்த கருணா கரன்றன்**
**களப்போர் பாடத் திறமினோ''**

என்ற தாழிசையுள், இராமபிரானுக்கு அப் பெயர் வழக்குண்மை யைக் குறிப்பிட்டாரென்க. இருவரும் கருணைகரப் பெயருடைய ராயினும், ஒருவன் இலங்கையெறிந்த புகழுடையான், மற்றவன் கலிங்க மெறிந்த புகழுடையான் என்பது அப் புலவர் கருத்தாம்.

இனி, மேற்குறித்த சாஸனத்தினின்று, கருணைகரத் தொண் டைமான் தேவிக்கு, 'அழகியமணவாளனி மண்டை' என்பது பெயர் என்று தெரியலாம். திருவரங்கத்துப் பெரியபிராட்டியாரின் திரு நாமமாகிய 'அழகியமணவாளனி'[1] என்பதைத் தன் பெயராகக் கொண்டிருத்தலாலும், அத்திகிரித்திருமாலு (காஞ்சீபுரம் ஸ்ரீவரத ராஜப்பெருமாளு)க்குத் திருநந்தாவிளக்கொன்று அமைத்திருத்த லாலும் இத்தேவி திருமால்பத்திபூண்டவள் என்று கருதல் தகும். பல்லவருள்ளே திருமாலடிமைத்திறத்தாற் சிறந்தோரும் விளங்கிய செய்தி பெரியதிருமொழி சாஸனமுதலியவற்றால் நன்கறிந்தது.

நம் கருணைகரனுக்குப் **பல்லவரசர்** என்ற பெயர்கொண்ட தமையனொருவர் இருந்தனர் என்பது,

**''தொண்டை யர்க்கரசின் முன்வருஞ் சுரவி**
**துங்க வெள்விடை யுயர்த்தகோன்**
**வண்டை யர்க்கரசு பல்லவர்க்கரசு**
**மால்க ளிற்றின்மிசை கொள்ளவே''**

என்ற செயங்கொண்டார்வாக்கால் அறியப்படுகிறது. இவர், கருணை கரனுடைய உபசேனைபதிகளுள் ஒருவரென்பதும், இங்ஙனம் பதவி யில் இளையராயினும் உடன்பிறப்பால் மூத்தவரென்பதும்,

1 அழகியமணவாளன்—திருவரங்கத்துத் திருமால்; அக்கோயிற் பெரியபிராட்டியாரை 'அழகிய மணவாளனி' என்பது அக்காலவழக் குப்போலும். 'வாசுதேவி' (198 of 1928-9) முதலிய பெயர்வழக்குக் களும் இதனோடு ஒப்பிடற்பாலன.

வள்ளன்மையுள்ளவரென்பதும் 'தொண்டையர்க்கரசின் முன் வருஞ் சுரவி' என்ற தொடரினின்று நன்கறியக்கிடக்கின்றன.

> ''ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக வென்னா தவருள்
> அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்'' (புறம், 183)

என்பவாகலின், ஒருதாய்வயிற்றுச் சகோதரருள் மூத்தோனிருப்பவும் கருணாகரன் அரசியலிற் றலைமைவகிக்கநேர்ந்தது ஒக்குமென்க. 'முன்வருஞ்சுரவி' என்பதற்கு யான்கூறும் இப்பொருளன்றி வேறெதுவும் மேற்றொழிசையுட னியையாமை உய்த்தறியத்தக்கது. கருணாகரனது மூத்த சகோதரராகிய இப்பல்லவரசர், அபயன் காலத்தே படைத்தலைவருள் ஒருவராகவும் அரசியலதிகாரியாகவும் விளங்கிய—'இராசேந்திர மூவேந்தவேளார் சேனாபதிப் பல்லவரசர்'[1] என்பவராகக் கருதற்குப் பொருத்தம் உள்ளது. இப் பல்லவரசரைப்பற்றிய குறிப்புக்கள் யான் எழுதிய 'கலிங்கத்துப் பரணி யாராய்ச்சி'யாலும் (பக். 22-23.) அறியத்தக்கன. பராந்தக சோழன்காலத்தே அரசியலதிகாரியாக விளங்கிய ''வண்டாழஞ் சேரியுடையான் செம்பியன் மூவேந்தவேளான் சாத்தன் உலகன்'' என்பவர், இப் பல்லவரசர் கருணாகரனிருவர்க்கும் முன்னோர் போலும்.

இனி, கலிங்கத்துப்பரணியில், கருணாகரன் தன்னரசன் ஏவலாற் கலிங்கத்தின்மேற் படையெடுத்துச்சென்று, அந்நாட்டை வென்று அடிப்படுத்தியதைப்பற்றிச் செயங்கொண்டார் கூறும் செய்திகளைச் சாஸனங்கட்கு இயையவைத்துச் சுருக்கிக் கூறுவேன்.

(கலிங்கப்போர்)

சோணாட்டின் இராசதானியாக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில், முதலிராசேந்திரன் மகள்வயிற்றுப் பேரனும், வேங்கை நாட்டரசனான சாளுக்கிய - இராசராசன் மகனுமாகிய **விசயதரன்** என்ற இராசகுமாரன், சோழவமிசத்துக்கு நேரான சந்ததியில்லாதிருந்ததுபற்றி, அவ்வமிசத்துக்குரிய புத்திரனாக எடுத்துக்கொள்ளப்பெற்று, அவன் தாய்ப்பாட்டியாரான கங்கை கொண்டசோழன்தேவியால் அருமையோடு வளர்க்கப்பட்டு வந்தான். அக்காலத்து இவனுடைய தாய்மாமனான வீரராசேந்திரன் என்ற சோழன் ஆட்சிபுரிந்து வந்தனன். அரண்மனையில் வளர்ந்து வந்த இவ் அரசிளங்குமரன் அறிவு ஆற்றல் பெருமை முதலிய உத்தமகுணங்கள் நிரம்பி, 'இவன் ஓர் அவதாரபுருஷன்' என்று கண்டோர் புகழும்படி வளர்ந்து இளம் பிராயமும் அடைந்தான்.

---

1 I. M. P. Tj. 189 (திருப்பனந்தாட் சாஸனம்.)

அப்போது வடநாட்டிலுள்ள சக்கரக்கோட்டத்துத்[1] தாராவர்ஷனை அடக்கிவருதற்கு அந்நாட்டின்மேற் படையெடுத்துச் செல்லவேண்டிய அவசரவேளையில் இளைஞனான விசயதரனே ஏவப்பட்டான். அவன் அக் காரியத்தின்மேல் வடநாடு சென்றிருந்த சமயத்தே, தாய்மாமனான வீரராசேந்திரன் இராசதானிநகரில் தேகவியோகமாயினன். இது நிகழவும், சோழசிம்மாசனத் துரிமைபற்றி அங்கிருந்த அரசவமிசத்தினருள் விவாதமுண்டாகியதனால்,[2] நாடெங்கும் கலகமுங் குழப்பமும் விளைந்தன. தன் மாமன் இறந்ததையும், சோணாடு அராஜகமாய்க் குழப்பமடைந்திருப்பதையும் வடக்கே சென்று வெற்றிபெற்ற விசயதரன் கேள்வியுற்றதும், அதிவேகமாக அங்குநின்றுந் திரும்பிச் சோணாடடைந்து கலகத்தையடக்கி நாட்டில் முன்போல் அமைதியை உண்டாக்கியதோடு, தௌகித்திரனாய்ச் சுவீகாரம் புகுந்த தன்னுரிமைப்படி, சோழசிம்மாசனத்தில் தானே வீற்றிருந்து நாடு மகிழ நீதிதவறாது ஆட்சிபுரிந்தும் வந்தான். அக்காலத்து விசயதரனுக்கு—இராசேந்திரன், குலோத்துங்கன், அபயன் முதலிய பெயர்கள் வழங்கலாயின. இவ்விசயதரனது ஆட்சிக்காலத்தே, அவனது பெருவலிமைக்காற்றாது பகையரசரெல்லாம் அடங்கியொடுங்கி அவனுக்குத் திறை செலுத்தி வணங்கி வந்தனர்.

இங்ஙனம் நிகழ, ஒருகால், விசயதரன் காவிரிக்கரையில் வேட்டையாடிக் கொண்டுவந்தபோது, அங்குநின்று தொண்டைநாட்டுப் பாலாற்றங்கரையிற் பரிவேட்டையாடி வர விரும்பித் தன் பெரும் பரிவாரங்களுடன் கோலாகலமாகப் புறப்பட்டான். அப்பயணத்தில், அவன் முதலிற் சிதம்பரஞ் சென்று தங்கி ஆங்குச் சிவபிரானைத் தரிசித்துக்கொண்டு, அங்குநின்றுந் திருவதிகை சென்று பின் கச்சியம்பதியை அடைந்தனன். ஒருநாள், அக்கச்சிமாநகர் அரண்மனையின் தென்மேற்குமூலையில் அமைந்த

---

1 சக்கரகோட்டமண்டலத்து இராசதானியான பாரஸூருவிலிருந்து ஆண்ட ஸிந்தராஜன் - தாராவர்ஷனே (கி. பி. 1065) இவனென்பர் Ep. Rep. No. 538 of 1909).

2 தாய்மாமனான வீரராஜேந்திரனுக்கு நேர்மனைவி வயிற்றுப் பிறவாதவனும், அதிராஜேந்திரன் என்னும் பெயரினனுமாகிய மகனொருவன் இருந்தனனென்றும், சோழசிங்காதனத்துரிமை இவனுக்கில்லையாயினும், அபயன் வடக்கே யுத்தயாத்திரையாகச் சென்றிருந்த போது, இறந்த தன் தந்தையின் சிங்காதனத்தை இவன் கைப்பற்றவே குடிகள் கலகம்விளைத்து இவனைக் கொன்றுவிட்டனரென்றும், அதுவே பரணியிற் கூறப்படும் அராஜகநிலைக்குக் காரணமென்றும் சரித்திர அறிஞர் சிலர் கருதுவர்.

சித்திரமண்டபத்திலே[1] தன் பரிவாரங்கள் சூழ எல்லா இராச வைபவங்களுடனும் அபயன் சிங்காதனத்தில் வீற்றிருந்தபோது, அரசரெல்லாந் திறைகளைக் கொணர்ந்து அவனடி வணங்கி நின்றார்கள். அவற்றை ஏற்றுக்கொண்டு அவ்வவர்க்குரிய மரியாதைகளைச் செய்தபின்னர், அவ் வேந்தர்வேந்தன்—"இவர்களையொழியத் தம் கடமைகளைச் செலுத்தாதொழிந்த வேறு அரசரும் உளரோ?" என்று தன் கருமத்தலைவனான **திருமந்திரவோலை** நாயகனை உசாவினன். அவன் அரசனைப் பணிந்து, 'பெருமானே! தத்தந் திறைகளுடன் வந்து ஏனைவேந்தரெல்லாம் நின் கழல் வணங்கினராயினும், கலிங்கதேசாதிபதியாகிய **அனந்தவன்மன்**[2] என்பான்மட்டும், உரியதிறையொடும் இருமுறையாக வந்திலன்' என்றான். இதுகேட்டதும், வேந்தர்பெருமான் முகத்திற் புன்முறுவல் அரும்பியதேயன்றிச் சிறிதும் கோபக்குறி தோன்றியதில்லை, 'இதன்பொருள் என்னையோ? இனி நிகழ்வது யாதோ' என்று உடல்குலைந்து நடுங்கலாயினர், வந்துநின்ற ஏனைமன்னர்கள். அப்போது, சோழன் தன் தானைத்தலைவரை நோக்கி, 'கலிங்கராசன் படைவலியற்றவனாயினும், அவனது குன்றரண் பெருவலிமை கொண்டது; அதனால் நம் யானைப்படையுடன் நீவிர் சென்று அம்மலையரணை இடித்துக் கலிங்கனையும் பிடித்துவருதிர்' என்று கட்டளையிட்டனன். இவ்வாறு தன்னரசன் ஆணையெழுந்ததும், தலைமைச் சேனாபதியும் பல்லவகுலதிலகனுமாகிய கருணாகரத் தொண்டைமான் எழுந்து அடிவணங்கி—'ஏழு கலிங்கங்களையும், வேந்தர்வேந்தே! யானே படையெடுத்துச்சென்று அழித்து வருவல்' என்று கூறினான். இங்ஙனங் கூறி விரைந்து படையெடுக்கும் விருப்புடன், அவன் அரசன்பால் விடைகேட்க, அவனும் 'அங்ஙனமே செய்க' என்று ஆஞ்ஞையளித்தனன். அப்போதே, சேனாபதியின் கட்டளையால் நாற்பெரும் படைகளும் பல்லியங்களார்ப்பப் போர்க்கோலம் பூண்டு யுத்த யாத்திரைக்குச் சித்தமாயின. பிரதமசேனாபதி கருணாகரனும், உப சேனாபதிகளான

---

1 இச்சித்திரமண்டபம், முதற்பராந்தகன்காலத்தே (900—950 கி. பி.) விளங்கியதென்பது "யாண்டு 16-வது உடையார் கச்சிப் பேட்டுக் கோயிலினுள்ளால் தெற்கில் சித்திரமண்டபத்தெழுந்தருளியிருக்க" என்னும் சாஸனப் பகுதியால் அறியலாம் (S. I. I. III. p. 269).

2 இவன் சாஸனங்களில் அனந்தவர்மசோடகங்கன் (கி. பி. 1078—1146) எனக்கூறப்படுகின்றானென்பர் (M. E. R. 1905, p. 52-3).

பல்லவரசர், வாணகோவரையன்,* முடிகொண்ட சோழன் என்பாரும் தத்தம் மத்தயானைகளின்மேல் ஆரோகித்தனர். இங்ஙனமாகப் படைகளும் படைத்தலைவர்களும் யாத்திரை புறப்பட்டு இரவும் பகலும் வழிக்கொண்டு, இரைவேட்டெழுந்த புலிகள் போல இகல்மேற் சென்றனர். அப்பெரும்படை‡ [1]பாலாறு, [2]குசைத்தலை, [3]முகரி, [4]கொல்லி, [5]பெண்ணை, வயலாறு, [6]மண்ணாறு, [7]குண்டியாறு, [8]பேராறு, கோதாவரி, [9]கம்பை, [10]சந்தநதி, [11]கோதமை-என்ற நதிகளைக் கடந்து யுகாந்தக்கடல் கொதித்து வருவதுபோலக் கலிங்கதேசத்தினுட் புகுந்து, தங்கள் வருகையை அறிவிப்பவர்போல் நாடெங்குந் தீக்கொளுவிச் சூறையாடினர். அந்நாட்டார் சோழசேனைகளின் கொடுமைக்காற்றாது ஓடி, அத்தாணியில் அமைச்சருடனிருந்த தம்மரசனிடம், 'எடுத்துவரும்படைகள் சோழன் நம்மேல் விடுத்தனவாகும்' என்று நடுங்கித் தெரிவித்தனர் கலிங்கர்பதி அதனைக்கேட்டு, 'திறைகொடுக்க நான் மறுத்தமைக்காகச் சோழன் தன் படையை ஏவினன் ஆவன். வலியனான அபயனுக்கன்றி அவன் விடுத்த சேனைக்கும் நான் எளியனோ? காட்டரண், மலையரண், கடலரண் என்ற மூவகை அரணுமுடையது நம் கலிங்கதேசம் என்பதை அச்சோழன் அறியான்போலும்; அவன் சேனையை எதிர்த்தழிப்பேன்' என்று வீராவேசத்துடன் தன் மந்திரிகளிடங் கூறினன். கூறவும், அவ்வமைச்சருள் ஒருவனான **எங்கராயன்** என்பான் எழுந்து— 'அரசே! நீ சினந்தாலும் உறுதிகூறுதொழிதல் என்போன்றவர் கடமையன்று; அதனால் யான் சொல்வன சில உண்டு' என்று கூறிவிட்டு பாண்டியரைவரை

---

* வாணகோவரையன் முடிகொண்டசோழன் என்ற இருவரையும் பற்றிய விசேடச் செய்திகளை, யான் எழுதிய கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுட் காண்க. (பக். 23—24)

‡ 1, 2, செங்கற்பட்டு ஜில்லாவில் ஓடுவன; பின்னதைக் குசஸ்தலி என்று இப்போதும் வழங்குவர். 3-பொன்முகரி அல்லது ஸ்வர்ணமுகி எனப்பெற்று, ஸ்ரீகாளஹஸ்திப்பக்கத் தோடுவது. 4-வட ஆர்க்காடு, நெல்லூர் ஜில்லாக்களிற் செல்லும் கல்லாறு போலும். 5-வடபெண்ணை. 6—மன்னேறு என வழங்கப்பெற்று நெல்லூர் ஜில்லாவில் ஓடுவது. 7—குண்டூர் ஜில்லாவில் அப்பெயருடன் ஓடுவது; குண்டலகம்மா என்றும் வழங்குவர். 8—கிருஷ்ணா நதி; 'பேராற்றங்கரைக் கொப்பத்து' எனபது சாஸனத் தொடர். 9, 10, 11 என்ற மூன்றும் சப்தகோதாவரிகளைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

யும் அவர் நாட்டிலும், சேரரைச் [1]சாலை [2]விழிஞங்களிலும், [3]வத்தவனைச் சக்கரக்கோட்டத்தும், சளுக்கியரை நவிலை [4]அனத்தி என்ற ஊர்களிலும், இன்னும் வேந்தர்பலரைப் பல்லிடங்களிலும் அவ்வபயன் வென்றடிப்படுத்தியதெல்லாம் தான் நேரிற்சென்றன்று; தன் தண்டைக் கொண்டேயன்றோ? அவ்வாறே, இப்போதும் சக்கரவர்த்தியான அவனது சக்கரமாகவுள்ள கருணைகரனைத் தலைமையாகக் கொண்டு, அவன்சேனை நம்மைத் தாக்கவருகின்றது. இவ்வாறு கூறியதற்கு என்னை நீ முனியக்கூடுமாயினும், அவன் சேனைமுன் நீ நிற்கும்போது, இவ்வுண்மையை உணர்வாய்'—என்று கூறினன். இவற்றைக் கேட்ட கலிங்கவரசன் அவ்வார்த்தைகளைப் பொருது தன்னமைச்சனைப் பலவாறுகடிந்து, தன்படைகட்குமுன் எதுவும் எதிர்நிற்குந்தரத்த தன்று என்று கூறிவிட்டு, எடுத்து வருஞ் சோழன் சேனையை எதிர்த்து அழிக்கும்படி தன் படைத் தலைவர்க்குக் கட்டளையிட்டான். உடனே, யானை தேர் பரி காலாட்கள் என்ற நால்வகைக் கலிங்கசேனைகளும் சோழன் பெரும்படையைத் தாக்கலாயின; பெரும்போர் மூண்டது. இரு திறத்து வீரர்களும் அதிசயகரமான வீரச்செயல்களைக் காட்டிப் போர்புரிந்துவந்தனர். இருசேனைகளும் ஒத்த பலமுடையவாய்ப் பொருதுவரும்போது, சோழ சேனுபதி-கருணைகரன் மதகளிற்றின் மேற்கொண்டு நேராகவே போர் முகத்துள் நுழைந்தனன். அவன் யுத்தகளத்துட் புகுந்ததுமுதலே, சோழன் படைகள் உற்சாகமிகுந்து கலிங்கசேனைகளைச் சின்னபின்னஞ் செய்யலாயின. அதனுல் அப்பகைச் சேனை முழுதும் எதிர்த்து நிற்கும் வலியற்றுத் தோற்றோடியது. எண்ணிறந்த களிறுகளுடன், குதிரை தேர் ஒட்டகம் நிதித்திரள் மகளிர்கூட்டம் முதலிய கலிங்கர்செல்வமெல்லாவற்றையும் சோழசேனைகள் கைப்பற்றிக் கொண்டன. தோல்வியுற்ற கலிங்கர்பதி அப்போரினிடையே ஓடியொளித்தனன். இவ்வாறாகத் தன் சேனை பெருவெற்றி பெற்றபின்பு கலிங்க வேந்தன் ஓடிப் பதுங்கிய இடத்தையும் சோழசேனுபதி ஒற்ற

---

[1] சாலை-திருவனந்தபுரத்தைச் சார்ந்த காந்தளூர்ச்சாலை.

[2] விழிஞம்—மேலைக்கடற்கோடியி லுள்ளதோர் துறைமுகம்; திருவனந்தபுரத்துக்குத் தெற்கே 10-வது மைலில் உள்ளது. 'விழிஞக் கடற் கோடியுள்' என்பது இறையனுரகப் பொருள் மேற்கோள்.

[3] மத்திய மாகாணத்திலுள்ள சக்கரகோட்டமண்டலத்து வத்ஸராஜ்யத்தை (Bester State) ஆண்ட தாராவர்ஷன் ஆவன். (Ep. Ind. ix. p. 178).

[4] இது, மைசூர் இராச்சியத்தைச் சார்ந்த நவிலைநாட்டின் (Navale Nadu) தலைமையூராகக் கருதுவர் (S. I. I. III, p. 1307).

மூலந் தேடலானன். அவ்வேந்தன் தன் பெரிய பலத்துடன் மலை யரணென்றைப் பற்றியுள்ளான் என்ற சுவடு ஒற்றரால் அவனுக்குத் தெரியவந்தது. உடனே அவ்வரணைக் கருணாகரன் சேனைகள் அத்தமனத்துள் வளைந்துகொண்டு தாக்கலாயின. அங்கிருந்த கலிங்கப் படைகளும் சோழசேனையால் பெரும்பாலும் அழிக்கப் பட்டொழிந்தன. எஞ்சிநின்ற ஒருசிலர் மூலைக்கொருவராக ஓடி யொளித்தனர். இங்ஙனமாக—

"கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னேடுஞ்
சூடினன் வண்டையர்கோன் தொண்டை மானே"

இவ்வளவே, கலிங்கப்போரைப்பற்றிய வரலாறுகளாகப் பர ணியாலும் பிறவற்றாலும் அறியப்பட்டவை. இச்செய்திகளை அடிப் படையாகக்கொண்டு, காடுகெழுசெல்வியாகிய துர்க்கைக்குப் பரணி நாளிற் கூழுந் துணங்கையுங் கொடுத்து[1] வழிபடுவதோர் பழைய வழக்குப்பற்றி,

"கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்
கடிகண முரைத்தல் காளிக் கதுசொலல்
அடுபேய்க் கவள்சொல லதனுற் றலைவன்
வண்புக முரைத்த வெண்புறத் திணையுற
வீட்ட லடுகளம் வேட்டல்" (இலக். விளக்.)

என்பன முதலியவாகப் பகுத்துக்கொண்டு பேய்கள் கூற்றாகவும் தேவிகூற்றாகவும் சோழரது திருமுடியடைவையும்[2] அபயனது பிறப்புவளர்ப்பு முதலிய செய்திகளையும் புனைந்துரைவகையாற் புலவர்பெருமானாகிய செயங்கொண்டார் தம்பரணியுள் மிகவழகா கப் பாடுகின்றார். பரணிநாளின் அதிதேவதை கொன்றுயிர்பருகும் யமதருமனாகலின், பரணிக்களத்தைப் பகைவனுக்குரிய இட மாகவே யாண்டும் அமைத்துப்பாடுதல், பண்டையோர்கொண்ட

1 தொல்காப்பியம், செய்யுளியல், 149-ம் சூத்திரவுரையுள்— பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இங்ஙனம் எழுதல் காண்க.

2 கலிங்கத்துப்பரணியின் இராசபாரம்பரியப் பகுதிக்குத் திரு முடியடைவு என்ற பெயர்வழக்கு, சென்னை "மியூஸியம்" கையெழுத் துப் புத்தகசாலையிலுள்ள பரணிப்பிரதியொன்றிற் கண்டது. வைஷ் ணவசம்பிரதாயத்தில், சிம்மாசனாதிபதிகளான ஆசாரியபரம்பரையின் வரலாறுகூறும் நூல்கள் "பெரிய திருமுடியடைவு, சிறிய திருமுடி யடைவு" என்ற குறியீடுகள் பெற்றிருத்தலாலும், இவ்வரிய வழக்கி னுண்மை பெறப்படும்.

முறையாகும். கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணியும் பிறவும் இங்ஙனமே பெயர் பெற்றிருத்தலுங் கண்டுகொள்க.

கலிங்கத்துப்பரணித் தலைவனை அபயனது 45-ம் ஆண்டிற் பொறிக்கப்பட்ட ஆலங்குடிச் சாஸனமொன்றில்[1], இக்கலிங்கப் போரின் விவரம் காணப்படும் பகுதி வருமாறு:—

"வடதிசை வேங்கை மண்டலங் கடந்து
தாங்கிய கலிங்கமுந் தழலெரி பரப்ப
விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் கரியொடு பட்டனர் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மதிர்வரு
கோமட் டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிகலவ ரேச்சணன்
மாப்பிறள(?) மதகரி யிராசணன்
தண்டுபதி யாகிய தலைச் சேனாபதி
மண்டலிக தாமய னெஞ்பாத்(?) திசைமுகன்
போத்தயன் கேத்தணன் செருச்சே னாபதி
என்றிவரனைவரும்
வெற்ற வேழத்தொடு பட்டு மற்றவர்
கருந்தலை யோடு வெண்ணிணங் கழுகொடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துத்
தருங்கட லாடைத் தராதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டொருபகல்

* * * * *

வீரசிம் மாசனத்து வீற்றிருந் தருளின
கோவிராச கேசரி வன்மரான...
ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு—"

இவ்வடிகளினின்றும் கருணாகரன் சேனையோடு எதிர்த்துப் பட்ட கலிங்கசேனாபதிகள் இன்னாரின்னார் என்பது தெரியலாம். இவர்களுட் சிலர் பெயர்கள் தெளிவாகவில்லை. அபயனது மற்றச் சாஸனங்களெல்லாம் அவனது கலிங்கவெற்றியைப் பொதுவாகக் கூறுவனவேனும், அப்போரை விவரமாகச் சிறப்பித்துக் கூறும் சாஸனமாக இப்போது தெரியவருவது இஃதொன்றே எனலாம். இதனுட் கண்ட கலிங்கசேனாபதிகளுள் **எங்கராயன்** என்பவன், கருணாகரனுடன் எதிர்க்காது அவனோடு சந்துசெய்துகொள்ளும் படி தன்னரசனை கலிங்கராசனுக்குக் கழறிக் கூறியவனென்பது—

[1] S. I. I. iv. p. 136.

"என்று கூறவே யெங்க ராயனுன்
ஒன்று கூறுகே னென்று ரைக்குமால்"

எனவரும் பரணித்தாழிசையால்[1] அறியப்படுகின்றது. இனி மேற் காட்டிய ஆலங்குடிச்சாஸனத்தால் அபயனது 45-ம் ஆட்சி வருஷத் துக்குமுன்பு (கி. பி. 1115) கருணுகரனது கலிங்கப்படையெடுப்பு நடந்திருத்தல் வேண்டுமென்பது பெறப்படும். அபயன்மகனும் இளவரசனுமான விக்கிரமசோழன் கருணுகரனுடன் இக்கலிங்கப் போர்க்குச் சென்றவனென்று சரித்திரவறிஞர் சிலர் கருதுவர். அங்ஙனமாயின், அப்போர்க்குச் சென்ற சேனுபதி உபசேனுபதி களின்பெயர்களை எடுத்துச் சிறப்பித்துக்கூறும் செயங்கொண்டார் அவ்விளவரசனையும் அவ்வாறே கூருதுபோகாராதலாலும் வேறு சாஸனப்பிரமாண மில்லாமையாலும் அங்ஙனந் துணியக்கூட வில்லை. விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியுள்—

"தெலிங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி"

என்று அவனது கலிங்கவெற்றி புகழப்பட்டுள்ளதே எனின், அஃது, அபயன் கி. பி. 1095—6-ல் நடத்திய தென்கலிங்கப் போர்க்கு[2] அவ்விக்கிரமன் தன் சிறுபிராயத்திற் சென்றதைப் பற்றியதாகவே தோற்றுகின்றது. இரண்டாமுறையாக நடத்திய வடகலிங்கப்போரோ, அபயனது ஆட்சிமுடிவுக்குச் சிலவருஷங் கட்குமுன் கருணுகரன் நடத்தியதென்க.[3]

இனி, சென்னையிலே சென்றவாண்டிற் கூடிய "மூன்ருவது கீழ்த்தேச வித்தியாசங்க"த்தில்[4] அரங்கேறிய வியாசங்களுள்ளே- "கருணுகரத்தொண்டைமானும் ஸ்ரீஸூக்திரத்நஹாரமும்" என்பதும் ஒன்று. இதனை எழுதிப்படித்தவர், திருவனந்தபுரம் சாஸன இலாகா அத்யக்ஷரான **ஸ்ரீமாந். ஏ. எஸ். இராமநாத ஐயரவர்கள்,** B. A. ஆவர். 'ஸூக்திரத்நஹாரம்' என்ற பெயர்கொண்ட வடமொழி நீதித்திரட்டின் பிரதியொன்று, திருவனந்தபுரம் அரண்மனை ஸரஸ்வதிமாலில் உள்ளதென்றும், அந்நூலைக்

---

[1] இத்தாழிசை, பரணிப் புதுப்பதிப்பில், 365-ம் தாழிசைக்குப் பிரதியாகக் கீழ்க்குறிப்பில் வைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது; சாஸனத்துக்கும் மோனைக்கும் இயைய 'எங்கராயன்' என்று இதனுள் அமைதல் பொருந்தும்.

[2] M. E. R. 1905. p. 52—3.

[3] இப்புத்தகம், 421-2-ம் பக்கங்களினும் இச்செய்தி காண்க.

[4] All India Oriental Conference, Third Session—Madras.

குலசேகரன் என்ற தன்னரசன்பெயரிட்டுத் தொகுத்தவர் அவனுடைய தலைமை மந்திரியான காலிங்கராசர் என்பவரென்றும் ஐயரவர்கள் குறிப்பிட்டுவிட்டு, இக்காலிங்கராசர் முதற்குலோத்துங்கனாகிய அபயன் சேனாபதியாகவும் சிதம்பரமுதலிய கோயில்களிற் றிருப்பணிசெய்தவனாகவும் சாஸனங்களால் அறியப்பட்ட காலிங்கராயனேயாதல் வேண்டுமென்றும், இக்காலிங்கராயனது சாஸனங்களில் இவற்கு அருளாகரன் என்ற மறுபெயரும், தன்னரசனான அபயன்பொருட்டு வடவரசருடன் போர்கள்பல புரிந்த செய்தியும் காணப்படுதலால், இவனே அவ்வபயன் தலைமைச் சேனாபதியாய்க் கலிங்கமெறிந்த கருணாகரனாக வேண்டுமென்றும், வண்டையென்ற ஊரின் தலைவனாகக் கருணாகரனையும், மணவில் என்ற ஊரின் தலைவனாக இக்காலிங்கராயனையும் பரணியும் சாஸனங்களும் முறையே வேறுபடக்கூறினும், முதலில் வண்டையிலிருந்த கருணாகரனே கலிங்கம்வென்றதற்பின் மணவிலைத் தனக்குரிய ஊராக மாற்றியிருக்கக்கூடுமென்றும், ஸூக்திரத்நஹாரத்தில்—குலசேகரன் மந்திரியாக இக்காலிங்கராசனைக் கூறியுள்ளதே எனின், அக் குலசேகரப்பெயர் அபயனுக்குரியதென்பது 'வாழி சோழ குலசேகரன்' என்ற பரணித்தொடரால் அறியப்படுதலின், அவ்வபயனே அந்நீதிநூல் கூறும் குலசேகரன் என்றும் எழுதியிருக்கின்றார்கள்.

இவற்றால், குலசேகரன் மந்திரி காலிங்கராசன், மணவிற் காலிங்கராயனான அருளாகரன், கலிங்கம்வென்ற கருணாகரன் என்ற மூவரும் ஒருவரே என்பது ஐயரவர்கள் முடிபாதல் நன்கு விளங்கும். இக்கொள்கைக்கு ஆராய்ச்சியில் தடைகள் பல நிகழ்கின்றன. ஐயரவர்கள் ஈற்றிற் குறித்தபடி, 'சோழகுலசேகரன்' என்ற பரணித் தொடரைக்கொண்டு அபயனுக்குக் குலசேகரனென்ற பெயருண்டென்று கருதுவது ஏற்புடையதன்று. அத்தொடர் ஒன்றுடனொன்று இணைந்து 'சோழகுலத்துக்குக் கிரீடம் போன்றவன்' என்றபொருள் பயப்பதாம். 'சோழகுலதுங்கன்' (81), இரவிகுலோத்தமன் (12) உபயகுலோத்தமன் (2) என்பன போல, 'சோழகுலசேகரன்' என்பதும் பாடலமைதிக்காகக் கவி அமைத்துக்கொண்டதேயன்றி, இயற்பெயரைக் குறிக்குந் தொடராகாது. இங்ஙனம் முன்விசேடணமின்றித் தனித்த நிலையில் குலோத்துங்கன் என்பதுபோலக் குலசேகரனென்பது அபயனுக்கு எங்கும் வழங்கக்காணாமையால், ஸூக்திரத்நஹாரஞ்செய்த காலிங்கராசனை அவ்வபயன் மந்திரியாகக் கருதச் சிறிதும் இடமில்லையென்க. எனவே, ஐயரவர்கள் காட்டியவாறு, பாண்டியன்

மாறவர்மன்-முதற்குலசேகரனது (கி. பி. 1268–1308) மந்திரியாகச் சாஸனத்தால் அறியப்பட்ட காலிங்கராசனைகவே, குலசேகர-ஸமுத்திரத்தஹாரந் தொகுத்த காலிங்கராயனைக் கருதல் பெரிதும் பொருந்துவதென்னலாம். காலிங்கராசனென்ற பெயர் பாண்டியன்கீழமர்ந்த அதிகாரிகள் சிலர்க்கும் சாஸனங்களில் வழங்குதல் அறியத்தக்கது.

இனி, மணவிற் காலிங்கராயனது சாஸனங்களின் [1]வடமொழிப்பகுதியுள்—அவனுக்குச் சபாநர்த்தகன், மாணவதாரன், அருளாகரன் என்ற பெயர்களும், தமிழ்ப்பகுதியுள் கூத்தன், காலிங்கர்கோன், தொண்டையர்கோன் என்ற பெயர்களும் பயில்கின்றன. இவற்றுட் கூத்தன் என்பது சபாநர்த்தகன் என்ற வடபெயரோடு ஒத்த பொருளது. அவ்வாறே, அருளாகரன் என்பது கருணாகரனோடு ஒத்ததாய் ஒருவன் பெயர்களேயாம் என்றும், காலிங்கராசனுக்கு மணவில் என்ற ஊரையும், கருணாகரனுக்கு வண்டையென்ற ஊரையும் வேறுபடச் சாஸனங்களும் பரணியுங் கூறுகின்றனவே எனின், அப்பரணி கூறும் கலிங்க வெற்றிக்குப் பின்பு கருணாகரன் என்ற பெயர்நீங்கிக் காலிங்கராஜன் என்ற பெயரும், வண்டையை நீக்கித் தொண்டைநாட்டு மணவில் என்ற ஊரும் அபயன்சேனாபதி பெற்றவனாதல் வேண்டுமென்றும் ஐயரவர்கள் கருதுகின்றார்கள். இக்கருத்துக்களை ஆராய்வேன்.

தொண்டையர்கோ, அருளாகரன், காலிங்கராயன் என்ற பெயர்கள் கருணாகரனுக்கும் பொருந்தக்கூடியனவா யிருத்தல் பற்றிப் பொதுவாக அவ்வாறு கருதக்கூடுமேனும், ஊன்றிநோக்குமிடத்து அப்பெயர்களையுடையான் கருணாகரனின் முற்றும் வேறானவனென்பதே தெளிவாகின்றது. கருணாகரன் பல்லவவமிசத்தவனென்பது செயங்கொண்டார் வாக்கால் நன்கறியப்பட்டதாம். இக்காலிங்கராசனோ வேளாள மரபினன். இதனை "வேளாண் குடிமுதலான் தொண்டையர்கோன்" என்னும் திருவதிகைச்சாஸனப் பாடற்பகுதியால் (18) அறியலாம். பல்லவர், வேளாளமரபினரல்லர் என்பது திண்ணம். "பிரமனுதியாக வாராநின்ற"வர் என்றும், பாரத்துவாசகோத்திரத்தவர் என்றும் பல்லவர்க்குக் கூறப்படும் குலவரலாறுகள், வேளாளர்க்கு எவ்வகையினும் இயைவனவல்ல. "மறைமொழிந்தபதி மரபின் வந்த குலதிலகன்" என்று கருணாகரனைப் பிரமன் மரபினனாகவே

[1] S. i. i. IV, No. 225; திருவதிகைச் சாஸனம் (செந்தமிழ், தொ-௨௧ பக்-௧௩,-).

செயங்கொண்டார் பாடுதலுங் காண்க.[1] இனிக் காலிங்கராயனை 'வேளாண்குடி முதலான்' என்றதற்கேற்ப, அவனை 'அரும்பையர் கோன்' என்றும் சிதம்பரசாஸனப் பாட்டொன்று (23) கூறுகின்றது. "அரும்பாக்கிழான் பொன்னம்பலக்கூத்தன் காலிங்கராசன்" என்பது இவனைப்பற்றிய சாஸனத் தொடர்[2]. 'அரும்பூர்' 'அரும்பா' என்பன வேளாளரின் பழைய ஊர்ப்பெயராகும். 'அரும்பூர்க் கூற்றத்து வேளாளர்'[3] என்பது வழக்கு. இவற்றால், அருளாகரனை காலிங்கராசனும் கருணைகரத் தொண்டைமானுங் குலத்தால் வேறுபட்டவர் என்பது விளங்கியது.

இனி, தன்னரசனை 'அபயனுக்கேயாக - மலைகின்ற தொண்டையார் மன்' னாகிய காலிங்கராயனது போர்ச்செய்கைகளுள், மலை நாட்டில் அவனடத்தியவற்றையே, அவனைப்பற்றிய சாஸனப் பாடல்கள் மிகுதியுஞ் சிறப்பிக்கின்றன.

"தென்னன், குடமலை நாடெறிந்து கொண்டவேற் கூத்தன்"
(திருவதி. சா. 6)

"மலைநாடு கொண்டபிரான்" (ஷை. 14)
"வேணாடும் வெற்பனைத்துஞ் செந்தீ விளைவித்தான்" (ஷை. 22)
"வில்லவர்தம் வெஞ்சிலையி னாற்றலை மாற்றியகோன்"
(சிதம். சா. 5)
"சேர னளப்பரிய வாற்றற் கழிவு கண்டால்" (ஷை. 15.)

என்பன காண்க  கலிங்கப்போர்க்குப் பின்பே, இவன் காலிங்கராயன் என்ற பேரையும் மணவில் என்ற ஊரையும் பெற்றவனாயின், அப்போர்வெற்றிக்குப் பின்பு வரையப்பட்ட சாஸனங்களிலுள்ள வட மொழிச் சுலோகங்களும் தமிழ் 55 - வெண்பாக்களும், கலிங்கத்திலடைந்த அவன் பெருவெற்றியை வெளிப்படக் கூறிப் பலபடியாகப் புகழாமற்போகுமோ? அவ்விசயம் பற்றிய குறிப்பொன்றுமே அப்பாடல்களிற் காணப்படாமைக்குக் காரணம் யாது? சாஸனங்களில்:—

"வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் தொண்டையார் கோ" (சிதம் சாஸ. 2)
"மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெல்லாங் கொண்டு" (ஷை. 4.)

என்று பொதுவாக வடமன்னரைக்காலிங்கர்கோன் வென்றசெய்தி குறிக்கப்பட்டதாயினும், அவன் அப்பெயர் பெற்றதற்குச் சிறந்த

---

1 இந்நூல், 420.- 1 -ம் பக்கங்களில் இச்செய்தி காண்க.
2 M. E. R. 129 of 1929 - 30.
3 'அரும்புகட்டி வேளாளர்' என்று இக்காலத்தார் வழங்குவர்.

காணமாதற்குரிய கலிங்கப்போரைச் சுட்டிய பாடலொன்றுமே காணப்பெறாமையால், அவ்வடமன்னர் கலிங்கரன்றி வேறானவரென்பதே தெளிவு. அவ்வாறே, மணவில் என்ற ஊரும், கலிங்க வெற்றிக்குப்பின் அவன் வண்டையைவிட்டுமாற்றிக்கொண்டதென்பதும் பொருத்தமன்று. மேலே நான் விளக்கிப்போந்தபடி, வண்டையென்ற வண்டாழஞ்சேரி, சோணாட்டிலே கருணாகரனுக்குப் பல தலைமுறைகட்கு முன்பே சோழவதிகாரிகள் வாழ்ந்துவந்த பிரபல ஊராகும். அவ்வூரினாகிய சோழசேனாபதி கலிங்கவெற்றிக்குப் பின்பு, அவ்வூரின்வாசனையும் இல்லையாம்படி அதனை அறவே விட்டொழிய நியாயமில்லை. வண்டைக்கருணாகரன் என்று செயங்கொண்டாராற் பெரிதுஞ் சிறப்பிக்கப்பெற்றவன், மணவிற் காலிங்கராயனாக ஊரும் பேரும் மாறும்படி அவ்விரண்டற்குஞ் சேரநேர்ந்த தௌர்ப்பாக்கியநிலை என்னையோ? ஊரைமாற்றியவனாயின், மணவிற் சேனாபதியைப்பற்றிய 55 - சாஸனப்பாடல்களுள் ஒன்றேனும், அவனது பழைய வண்டையைச் சுட்டாதுபோகாதென்பதும் ஒருதலை.

இனி, காலிங்கராசனென்ற பெயரை மணவிற் சேனாபதி பெற்றதற்கு, பரணி கூறுங் கலிங்கப்போரே காரணமாகவேண்டுமென்னும் நியதியில்லை. அபயனது நீண்ட ஆட்சியில் அவனது 23 – வது ஆண்டுக்குமுன் (கி பி. 1095) ஒரு கலிங்கப்போரும், 45 - வது ஆண்டுக்குமுன் ஒரு கலிங்கப்போரும் நடந்தேறின என்பது சாஸன பரிசோதகர்க்கெல்லாம் ஒத்தது. அவற்றுள் முன்னதாகிய போரில் அச் சேனாபதி வெற்றிபெற்றதினின்று காலிங்கர்கோன் என்ற பெயர் அரசனால் அவன் பெற்றிருத்தல் கூடும். அன்றேல், வமிசபரம்பரையில் அப் பெயர் அவனுக்கு வழங்கியிருத்தலும் ஆம். இனி, இக்காலிங்கராயனும், கருணாகரனும் வெவ்வேறானவரென்பதற்கு மற்றொரு சிறந்த பிரமாணமும் கூறுவேன்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர், அபயன் மகனான விக்கிரமசோழன்மேல்[2] உலாப்பாடியுள்ள செய்தி பலரும் அறிவர். உலா என்பது தலைவனொருவன் யானையேறிப் பவனிபோந்ததை வருணிப்பதாய், அவன் இளமையைப் பலபடியாகச் சிறப்பித்துப் பாடும் பிரபந்தமாகும். அதனால் விக்கிரமசோழனது ஆட்சித்

[1] முதல் இராசேந்திரனாட்சியில் சோழவதிகாரிகளுள் ஒருவன் காலிங்கராசன் என்ற பெயர் கொண்டிருத்தலுங் காண்க. (T. A. S. vol. 1. p. 165.)

[2] இவ்வுலா, செந்தமிழ்ப் பிரசுரங்களுள் ஒன்றாகப் பலவருஷங்கட்கு முன் என்னாற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

தொடக்கத்தே கூத்தர் அவ்வுலாப்பாடியவர் என்பது பெறப் படும். அக்காலத்தில், தந்தையான - அபயனிடம் பிரபலராய் விளங்கிய சேனாபதிகளிற் பலரும் சீவிதராயிருந்தவரென்பது, இன்னாரின்னார் அவ்விளஞ்சோழனது பவனியுடன் போந்தனர் என்று விவரமாகக் கூத்தர் பாடுதலினின்று தெரியவருகின்றது. அங்ஙனம் உடன்சென்ற தானைத்தலைவருள்ளே, கருணாகரனை— "ஒருநாட்கொண்ட பரணி, மலையத் தருந் தொண்டைமானும்" என்று தலைவனாகக்கூறிவிட்டுப் பின், முனையர்கோன், சோழ கோன், கண்ணன், வாணன் என்ற இவர்களைக் குறித்து, அடுத்து ஆறுமவனாக—

"..................................வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும்—நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்"

என்று, காலிங்கராயனைத் தனியே சிறப்பிக்கின்றனர், ஒருகாலத் தவரான அக் கூத்தர். இதனால், கருணாகரனும் காலிங்கராயனும் வேறானவரே என்று மேற்கூறிப்போந்த என்முடிவு, ஐயத்துக்கிட மின்றி உறுதிப்படுதல் காண்க. இவ்வுலாவடிகளிற் காலிங்கர் கோன் புரிந்தனவாகக் கண்ட போர்களனைத்தும் இளைஞனான விக்கிரமசோழன் காலத்து நடந்தனவல்ல என்பதும், அவன் தந்தைகாலத்து நடந்தேறியவை என்பதும் சொல்லாதே அமை யும். உலாவிற் குறிக்கப் பட்ட காலிங்கர்கோனே சிதம்பர முதலிய சாஸனப்பாடல்கள் கூறும் காலிங்கர்கோன் என்பதற்கு, அவ்வுலாவடிகளிற்கண்ட போர்ச்செய்திகள் பலவும் சாஸனங்களி லும் சிறப்பிக்கப்பட்டிருத்தலே தக்க சான்றாகின்றது. கொல்லம் முதலிய மலைநாட்டில் நிகழ்ந்த போர்களை—

"தென்னன், குடமலை நாடெறிந்து கொண்டவேற் கூத்தன்"
(திருவதி, சா. 6.)

"தென்னுடன் சாவேற்றின்[1] திண்செருக்கை யன்றவித்தான்"
(ஷை. 16)

---

1 "கடன் மலைநாட்டுள, சாவே றெல்லாந் தனிவிசும் பேற, மாவே றியதன் வருதினித் தலைவரைக், குறுகலர் குலையக் கோட்டா றுட்பட, நெறிதொறு நிலைகளிட்டருளி" என்ற அபயன் மெய்க்கீர்த் தியால், சாவேறுகளின் செருக்கை யழித்து, மலைநாட்டுக் கோட் டாற்றுப்பக்கத்தென்பது விளங்கும். சாவேறு என்பது, போரில் உயிர்போந்துணையும் அஞ்சாது எதிர்த்துப் பொரும் மலைநாட்டுப் பெருவீரர்க்கு அந்நாட்டார் இக்காலத்தும் வழங்கும் பெயராம்.

"கொல்ல மழிவுகண்டான்" (சிதம்பர. சா. 15.)
என்பவற்ருலும், வேங்கை, இரட்டம், ஒட்டத்துப்போர்களை

"வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் தொண்டையார் கோ" (சிதம்பர. சா. 2)
"மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாங் கொண்டு" (ஷெ. 4 )

என்பவற்ருலும் சாஸனப்பாடல்கள் குறிப்பிடுதல் கண்டுகொள்க. மற்றைப் படைத்தலைவரினும்,காலிங்கர்கோன் புரிந்த போர்களைக் கூத்தரைப்போலவே சாஸனங்களும் மிகுதியாகக் கூறுதல் ஒப்பிடத்தக்கது.

இனி, தொண்டைமான் என்பது, தொண்டை நாட்டார்க்குத் தலைவன் என்ற பொருளுடையதாதலின், அங்ஙனந் தலைவராயினுர் பலர்க்கும் வழங்கக்கூடியதேயாம். கருணகரனுக்கு அச் சிறப்புப் பெயர், அவன் தொண்டைநாடாண்ட பல்லவமரபினனுதலால் வழங்கியதென்பதும், காலிங்கராயனுக்குத் தொண்டைமண்டலத்தில் அவன் தலைவனுயிருந்தமையால் வழங்கியதென்பதும், அவ்விருவகையார்க்கும் தொண்டைநாட்டின் பழைய தலைநகரங்களையும் உரிமையாக்குதல் கவிமரபென்பதும் அறியத்தக்கன.

அடுத்து, அருளாகரன் என்ற சிறப்புப்பெயரைச் சாஸனங்கள் காலிங்கராயனுக்கு வழங்குமுறையை நோக்குமிடத்து, அஃது அவன் கருணகரனின் வேருனவன் என்பதனையே தெளிவாக்குகின்றது. அருளாகரப்பெயரும் கருணகரப்பெரும் ஒருவனே கொண்டனவாயின், சாஸனத் தமிழ்ப்பாடல்களிலே மணிப்பிரவாளத்தொடரான அருளாகரன் என்ற பெயரை அமைத்துப் பாடுதல் ஏற்குமாயினும், அதன் வடமொழிச் சுலோகப்பகுதியுள், கருணகரன் என்ற வடதொடரையே அமைத்திருத்தல்வேண்டுமன்ருே? ஏதோ நிர்ப்பந்தமிருந்தாலன்றி, வடதொடரான கருணகரப்பெயரைவிட்டொழித்துத் தமிழ்கலந்த அருளாகரப்பெயரைச் சாஸன சுலோகங்கள் ஆள நியாயமேயில்லையாம். அதனுல், பல்லவனுன வண்டைக்கருணகரனின் வேறுபிரித்து மணவில் அருளாகரனைக் காட்டும் நோக்கத்தாற்ருன் அச்சுலோகங்களில் தமிழ்கலந்த அத்தொடர் வழங்கப்படலாயிற்று என்று கருதல் தகுமென்க.

மேற்கூறிப்போந்த பிரபல காரணங்களாலும் பிரமாணங்களாலும் ஸஹஸ்திரத்கஹாரஞ்செய்த காலிங்கராசரும், அபயன் சேனுபதிகளுள் ஒருவனுன மணவிற் காலிங்கராயனும், அவன் பிரதம

சேனாபதியான வண்டைக் கருணாகரனும் மூவேறு தலைவர்களே என்பதும் அம் மூவரையும் ஒருவராக முடிப்பதற்கு ஆதாரமில்லை யென்பதும் தெளிவாகத்தக்கன.

இனிக் கலிங்கத்துப்பரணிப் பிரதிகளிலும், தண்டியலங்கார மேற்கோள்களிலும் கலிங்கப்போரையும் கருணாகரனையும்பற்றிக் காணப்படும் பழம்பாடல்களைக் குறிப்பிட்டுவிட்டு இவ்வுபந்யாசத்தை முடிக்கின்றேன்.

*"தடங்குலவு நாண்மாலைத் தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள் விதிர்ப்ப—நடுங்கியதே
கோண்மேவு பாம்பின் கொடுமுடிய தல்லவோ
வாண்மே வியகலிங்கர் மண்"[1] (கலிங். பரணிப்பிரதி)

*"சரநிரைத் தாலன்ன தண்பனி தூங்கத் தலைமிசைச்செங்
கரநிரைத் தாரையுங் காண்பன்சொ லோகலிங் கத்துவெஃபோர்
பொரநிரைத் தார்விட்ட வேழமெல் லாம்பொன்னி [நாட்டளவும்
வரநிரைத்தான் றொண்டைமான் வண்டைமாநகர் மன்னவனே"
(ஷ)

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது" (தண்டி. 103.)

கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற" (தண்டி. 76)

"கரடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்" (ஷ. 57)

———

* இக்குறியுள்ள பாடல்களிரண்டும், சென்னை 'மியூசியம்' கையெழுத்துப் புத்தகசாலையிலும், தஞ்சைச் சரஸ்வதிமாலிலும் உள்ள பரணிப்பிரதிகளின் இறுதியிற் கண்டவை.

[1] 'மன்' என்றும் பாடம்.

# 29. நரிவிருத்தம்[1]

நரிவிருத்தம் என்பது நரியைப்பற்றிய பாடல்களாலான தொருநூல் எனப் பொருள்படும். விருத்தம் - யாப்பு. அன்றி, விருத்தம் என்பதற்கு விருத்தாந்தம் அல்லது கதை என்று பொருள் கொண்டு நரியின்கதையினைக் கூறும் நூல் எனக் கொளினும் பொருந்தும். இந்நூலிற்கூறப்படும் நரிக்கதையாவது:-வேட னொருவன் மலைப்பக்கத்தே தினைப்புனத்தை அழித்து நின்ற யானையைக் கொல்லவேண்டி, ஒருபுற்றின்மேல் ஏறிநின்று தன் வில்லை வளைத்து அதன் மத்தகத்தில் அம்பையெய்தானாக, அது பாய்ந்ததால் யானை மிகுசினத்துடன் எதிர்த்து, நெற்றியிலுருவிய அம்போடு அப் புற்றைத்தாக்கித் தானும் வீழ்ந்திறந்தது. அவ் யானையின் தாக்கால், புற்றிலிருந்த நாகமொன்று சினந்து வெளி யேறி அங்குநின்ற வேடனைச் சீறிக்கடிக்கவும், வேடனும் வெகுண்டு தன் வாளையுருவி அந்த நாகத்தை இரு துண்டமாகச் சேதித்துத் தானும் வீழ்ந்திறந்தான். இவ்வாறு தினைப் புனத்தையழித்த யானையும், யானையையெய்த வேடனும், வேடனைக் கடித்தபாம்பும் ஒருசேர இறந்துகிடத்தலைப் பக்கத்தே கண்டிருந்த ஒருநரி பெரு மகிழ்ச்சியுடன், "ஆ! நமக்கு நிரம்பவும் உணவு குவிந்துவிட்டது; யானை ஆறுமாதத்துக்கும், வேடன் ஏழுநாட்கும், நாகம் ஒரு நாட்கும் ஆகாரமாகும்" என்று பலவாறு நினைந்து, அப்பிணங் களின் அருகேவந்து, முதலில் வீழ்ந்து கிடக்கும் வேடனது கை வில்லின் குதைவாரைக் கடித்துண்ணத் தொடங்கவும், அவ்வார் அறுந்துபோக வில்லு விசையாக நிமிர்ந்து, கடித்த நரியின் வாய்க்குட் கோத்துக் கொண்டமையால் நரியும் விரைவிற் செத் தது. இக்கதை போன்றதே உலகவாழ்வும்—எனக் கண்டு கொள்க. இச்சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பலநீதி களும் உவமைக்கதைகளும் இந்நூலுட் கூறப்படுகின்றன. இந் நூல் இயற்றியவர் "வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய, பொய் யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்"[2]க் காப்பியமென்று சிறப்பிக்கப்படும் சீவகசிந்தாமணியை இயற்றியவராகிய **திருத் தக்கதேவர்** என்னும் புலவர்பெருமானே யாவர். இந்நரிவிருத்தத் தைத் தேவர்பாடியதன் வரலாறுவது[3]:—திருத்தக்க தேவர் சீவகன் சரித்திரத்தைப் பெருங்காப்பியமாகப் பாடத்

[1] செந்தமிழ்ப் பிரசுரம், 20 (1907)
[2] நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம்.
[3] சீவகசிந்தாமணிப் பதிப்பிலுள்ள திருத்தக்கதேவர் வரலாறு காண்க.

துணிந்து, தம்மெண்ணத்தைத் தம் ஆசிரியர்பாற்சென்று விண் ணப்பிக்க, ஆசிரியரும் அவ்வாறுபாடுவதிற் றம்மாணக்கர் வல்லு நராயிருத்தலை நன்குணர்ந்தவராயினும், மாணக்கர் கருத்தை அளந்தறிய ஆலோசித்திருக்கும் பொழுது, அவ்விருவர்க்கு மிடையே ஒரு நரியானது ஓடியது. அதனைக் கண்ட ஆசிரியர் மாணக்கரை நோக்கி, "இந்நரிச்சாதித் தன்மையை ஆதாரமாகக் கொண்டு உமக்குத் தோற்றியவாறே ஒரு சிறிய நூல் முதலில் இயற்றுதிர்" என்றுகூற, திருத்தக்கதேவரும் அவ்வாணைப்படியே நரியை ஆதாரமாகக்கொண்டு யாக்கைநிலையாமை செல்வ நிலையாமை முதலியனவெல்லாம் வெள்ளிடைமலைபோற் றெள் ளிதிற் புலப்படும் வண்ணம் விரைவில் "**நரி விருத்தம்** என்னும் நூலொன்றை இயற்றி ஆசிரியர்க்குக் காட்டவும், அவர் பெரிதும் வியப்புற்று அச்சீவகசிந்தாமணியைப் பாடும்படி கட் டளையிட்டனர்"—என்பது. இவ்வாறு திருத்தக்கதேவரால் நரி வரலாற்றுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட கதை அவராற் புனைந்துரைத்ததன்றிப் பழைமையானதாகவே தெரிகின்றது. வடமொழியிலுள்ள பழைய நூலாகிய **ஹிதோபதேசத்தே**[1] மித்தி ரலாபமென்னும் பகுதியில், '**வியாதமிருகசூகர சர்ப்பசிருகாலர் கள் கதை**' என்பதொன்று கூறப்பட்டுள்ளது. இத்தொடர்க்கு வேடன் மான் பன்றி பாம்பு நரி—இவற்றின் கதை என்பது பொருள். இதனுட்கண்ட வரலாறு நரிவிருத்தக்கதையுடன். பெரும்பாகம் ஒத்துச் சிறுபான்மையே வேறுபாடு கொண்டதாம். ஹிதோபதேசத்துக் கண்ட வரலாறுவது:—பைரவன் என்னும் வேடன் ஒருமானை எய்துகொன்று அதனை யெடுத்துக்கொண்டு வரும்வழியில் பன்றியொன்றைக் கண்டு, அதனை அம்பாலெய்ய, அது மிக்க சினத்துடனெதிர்த்து அவ்வேடனது முஷ்கதேசத்தில் அடித்து அவனைக்கொன்று தானும் இறந்தது. அவ்விருவரும் காலடித்து உதறியதனல் இடையில் அகப்பட்ட பாம்பொன்றும் இறந்தது. அப்போது உணவின்பொருட்டுச் சுற்றித்திரிந்த தீர்க் கராவன் என்னும் நரி, இறந்துகிடக்கும் மான் வேடன் பாம்பு பன்றி என்ற நான்கனையுங் கண்டு 'ஆ! எனக்கு இன்றைக்கு நல்ல போசனங் கிடைத்திருக்கிறது; ஒரு மாசத்துக்கு வேடனுடைய மாமிசம் போதும்; இரண்டு மாசங்களுக்கு மானும் பன்றியும் போதும்; பாம்பு ஒரு தினத்துக்குப் போதும்; இப்போது இந்த

[1] இது, வடமொழியினின்று தமிழில், சுன்னுகம் ஸ்ரீ: நாகநாத பண்டிதரால் மொழிபெயர்க்கப்பட்டு, டை யூர் வித்வான் ஸ்ரீ: அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்களால் 1886 - ஸூ த்தில் பதிப்பிக் கப்பட்டது.

விற்குதையில் ஒட்டியிருக்கும் வார்க்கயிற்றை உண்பேன்' என்று சொல்லி அவ்வாறே செய்ய, அப்போது வார்க்கயிறு அற்றுப் போக வில்லு விசையாய் மேலேகிமிர்ந்து அந்நரியின் நெஞ்சைப் பிளக்க அதனல் அந்தத்தீர்க்கராவனென்னும் நரி உயிர்விட்டது'' —என்பது. இக்கதைக்கும் நரிவிருத்தக்கதைக்குமுள்ள சிறு வேறுபாடுகளை நோக்கிக்கொள்க. இக்கதையே, திருத்தக்க தேவரால், பன்றியை யானை என்றது முதலிய சில விஷயங்கள் மாற்றிப்பாடப்பட்ட தென்று நாம் கருதத்தகும்.

இந்நூல் "உவமைக்கதைநீதி நரிவிருத்தம்" என்னும் அடையுடன் ஒரு பிரதியிற் காணப்பட்டது. இது, காப்பைநீக்கி ஐம்பது பாடல்களுடையது. இவற்றுள் நரியின் விருத்தாந்தம் கூறும் பாடல்கள் எட்டேயாம். ஏனையவற்றில் இக்கதையை ஆதாரமாகக் கொண்டு நீதிகளும் அந்நீதிகட்கேற்ற பல கதைகளும் கூறப்படுகின்றன. இந்நூலுள் வருங்கதைகள் பதினெட்டு. அவை முழுதும் ஜைன மத சம்பந்தமானவைகளே. இந்நூலின் வாக்குச் சிந்தாமணி வாக்கோடு பெரும்பாலும் ஒத்ததென்னலாம். யாக்கை செல்வங்களின் நிலையாமையும், பொய் கொலை களவு கட் காமம் என்பவற்ருல் அழிந்தவர்கதைகளும், அவையின்றி உயர்ந்தோர் சரிதங்களும், யதிதர்ம சிராவகதர்மங்களின் பெருமைகளும், பிற அறச் செய்திகளும் இதனுள் அடங்கியுள்ளன.

இவ்வாறு, நீதிபுகட்டும் சிறுகதைகள் சிலவற்றை ஆதாரமாகக்கொண்டு அரிய விஷயங்கள்பலவும் அமையப் பாடுமுறை பழங்காலத்தில் வழங்கியதேயாம். இந் நரிவிருத்தம்போலவே, கிளிவிருத்தம், எலிவிருத்தம், என்னும் வேறுநூல்களும் சைனர்களால் இயற்றப்பட்டு வழங்கிவந்தன. இச்செய்தி, வீரசோழிய யாப்புப்படலம், உசு-ம் பாடலுரையில், "**குண்டலகேசிவிருத்தம், கிளிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம்** முதலாயுள்ளவற்றிற் கலித்துறைகளும் உளவாம்" என்னும் வாக்கியத்தால் விளங்கும். இவ் விருத்த நூல்களெல்லாம், திருஞானசம்பந்தமூர்த்திகள் திருநாவுக்கரசரென்னும் சைவ சமயாசாரியர் காலத்துக்கு முன்பே இயற்றப்பட்டவை என்பதும், அவர்கள் நாளிலே, சைனர்களால் எப்பொழுதும் இவை பாராயணஞ் செய்யப்பட்டுவந்தன என்பதும்,

"கூட்டினுர் **கிளியின்விருத்த** முரைத்ததோர்'ரெலியின்றெழிற்
பாட்டு மெய்சொலிப் பக்கமேசெலுமெக்கர் தங்களை"

(திருவாலவாய்.)

"எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே" (ஆதிபுராணத் திருக்குறுந்.)

என்னும் பாசுரங்களால் நன்கு தெளியப்படும். இவற்றுள், பின்னதில்வரும் 'நரிவிருத்தமதாகுவர்' என்பது 'நரியின்விருத்தாந்தத்தினையுடையராகுவர்' என்று பொருள்தருவதாயினும், அந்நரிவிருத்தாந்தமும், கிளிவிருத்தம் எலிவிருத்தம்போன்றதோர் நூலினின்றே அக்காலத்துப் பிரசித்தமாக வழங்கியதென்றும், அப்பர் சுவாமிகளும் அவ்வாறு பிரபலமாயிருந்த நரிவிருத்தத்தின் வழக்கை உட்கொண்டே அங்ஙனம் பாடலாயினரென்றும், உடனெடுத்த கிளி எலிவிருத்தங்கள் இப்பாசுரங்களுட் பயில்கின்றமை பற்றிக் கொள்ளத்தகும்.

இந்நரிவிருத்தம் இக்காலத்து அருகிய நூலாயிருப்பினும், இதனுட்கூறப்பட்ட நரிக்கதை இந்நாட்டில் பண்டிதர் பாமரர் எல்லாரும் தெரிந்திருந்ததாகவே வெளியாகின்றது. நம்மவரில் மூத்தோர் பலர்க்குத் தாம் சிறுபருவத்தே கற்ற—

"கரியொரு திங்க ளாறு கானவன் மூன்று நாளாம்
இருதலைப் புற்றி னுக மின்றுணு மிரையா மென்று
விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக் கவ்வி
நரியினுர் பட்ட பாடு நாளைநாம் படுவோ மன்றே"[1]

என்னும் நீதிப்பாடல் இன்னும் ஞாபகத்திலிருக்கக்கூடும். இப்பிரசித்தமான பாட்டு, நரிவிருத்தக்கதையின் முடிவையே கூறுவதோடு, அந்நூலில்வரும் "களிறறுதிங்கட்காகும்" என்னும் செய்யுளின் சொற்பொருள்களைப் பெரும்பாலுங் கொண்டதாகவும் உள்ளமை காணலாம்.

இனி, வீரசோழிய உரைத்தொடரில், '**கிளி எலி நரிவிருத்தங்களில் கலித்துறைகளும் உளவாம்**' எனவருஞ் செய்தி மேலே குறிக்கப்பட்டது. ஆனல், நரிவிருத்தத்தே அவ்வாறு கலித்துறையொன்றும் காணப்பட்டிலது. அதனல், அக்கலித்துறைகளையுடைய கிளி எலிவிருத்தங்களோடு அஃதில்லாத நரிவிருத்தமும் பெரும்பான்மைபற்றிச் சேர்க்கப்பட்டதென்றேனும், நரிவிருத்தத்தே கலித்துறைப் பாடல்கள் சிலவிருந்து பின்பு

[1] விவேகசிந்தாமணி என்ற பெயருடன் வழங்கும் பலதிரட்டச்சுப் புத்தகத்தும் இப்பாடலைக் காணலாம்.

சிதைந்தன என்றேனும் கொள்ள இடமுண்டு. வெவ்வேறிடங்களி லிருந்து எனக்குக் கிடைத்த நரிவிருத்தப் பிரதிமூன்றும் முடிந்த நூலாகவும் ஈற்றுவாழ்த்துடனும் உள்ளமையால் முன்னதான னகம் பொருத்தமுடையதுபோல் தோற்றினும், உண்மை தெளிவாகவில்லை.

இந்நரிவிருத்தப்பிரதியொன்று தம்மிடமிருந்ததை எனக்கு அன்புடனனுப்பிச் "செந்தமிழில்" வெளியிட்டுக்கொள்ளும்படி உபகரித்தவர், பண்டிதர்: **ஸ்ரீ: பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியரவர்கள்.** இவர்களாற் கிடைத்த இந்நூலை வேறு பிரதிகளுடனும் வைத்து ஆராய்தல் வேண்டி, என் நண்பர்களாகிய மன்னார்குடி மிஷன்காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-சர்க்கரை: இராமசாமிப் புலவரவர்களையும், ஆரணி: ஸ்ரீமத்—சந்திரநாத நயினார் அவர்களையும் உசாவினேன். இவர்கள் பெரிதும் சிரமமெடுத்து அப்பக்கத்து ஜைனகிருகங்களிலிருந்த நரிவிருத்த ஏடுகளினின்று பிரதிகள் எழுதியனுப்பினார்கள். இன்னோர்களுடைய காலத்தினாற்செய்த நன்றிகட்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன். இந்நரிவிருத்தத்து வரும் ஜைனகதைகள் பெரும்பாலவும், இச்சங்கத்துள்ள மணிப்பிரவாள நடையினதாகிய ஸ்ரீபுராணம், உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாகிய ஜீவஸம்போதனை, மேருமந்தர புராணம், அருங்கலச்செப்புரை என்னும் ஜைனகிரந்தங்களால் நன்குவிளங்கின. சிலகதைகள், அவற்றிற்குரிய நூல்கள் இங்கின்மையால் விளங்கக்கூடவில்லை. அது பற்றி, தமது மதவாராய்ச்சியிற் றேர்ந்தவர்களான வீடூர்: ஸ்ரீமத்-அப்பாசாமிநயினாரவர்கட்கு எழுதிக்கேட்டேன். அவர்கள், என் வேண்டுகோட்படியே, விளங்காத கதைகள் சிலவற்றைச் சுருக்கமாக எழுதி அன்புடன் அனுப்பினார்கள். இவர்கள் உபகாரம் என்றும் என்னால் மறக்கத்தக்கதன்று. இவ்வாறு கதைகள் முழுதும் ஒருபடியாக விளங்கினமையால், அரும்பதவுரை யொன்றெழுதிச் செந்தமிழ்ப் பிரசுரங்களுள் 20-வதாக இந்நூல் என்னால் வெளியிடப்படலாயிற்று.

---

# 30. கூத்தச்சாக்கையன்[1]

---

*சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டித்தல் வேண்டி, வடநாடுசென்று இமயத்தினின்றுங் கொணர்வித்த சிலையினைத் தான் போரில்வென்ற ஆரியவரசர் முடிமேலேற்றிக் கங்கையில் நீர்ப்படைசெய்துகொணர்ந்து, தன்னரசிருக்கையாகிய வஞ்சிமாடம் புகுந்தனனெனவும், அங்கே அவன் தன் மனைவியாகிய இளங்கோவேண்மாளோடு மகிழ்ச்சியுடன் ஓலக்கமண்டபஞ் செல்லும்போது, இடையிலுள்ள நாடகவரங்கத்து நிகழ்த்தப்பெற்ற அழகிய கூத்தொன்றைக் கண்டு களித்தனனெனவும், அந்த நடனம் **கூத்தச்சாக்கையன்** என்பவனால் நிகழ்த்தப்பட்டதெனவும் சிலப்பதிகாரம் நடுகற்காதையிற் கூறப்பட்டுள்ளன : அது வருமாறு :—*

"ஆங்கவ டன்னுட னணிமணி யரங்கம்
வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்
திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழாது
உமையவ ளொருதிற னாக வோங்கிய
இமையவ னாடிய **கொட்டிச் சேதம்**
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
**கூத்தச் சாக்கைய** னாடலின் மகிழ்ந்தவ
னேத்தி நீங்க விருநில மாள்வோன்
வேத்தியன் மண்டப மேவிய பின்னர்" (சுஇ - எக.)

எனக் கண்டுகொள்க. இவ்வடிகளிற் சொல்லப்பட்ட ஆடல் கொட்டிச்சேதம் என்பது. இது கொட்டி எனவும் கொடுகொட்டி எனவும் வழங்கும்; திரிபுரந் தீமடுத்தெரியக்கண்டு, ஜயாநந்தத்

---

[1] செந்தமிழ், தொகுதி - 7, பகுதி - 1. (1908 - 9)

தால் சிவபெருமான் உமையவளுடன் இக்கூத்து ஆடினரென்பர்[1] (பாலைக்கலி-க). இவ்வாடல் தமிழிற் கூறப்பட்ட,

> "கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
> குடைதுடிமா லல்லியமற் கும்பம்—சுடர்விழியாற்
> பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
> கொட்டியிவை காண்பதினொர் கூத்து"

என்னும் பதினொரு புறநாடகங்களில் ஒன்றெனக் கூறுவர். மேற்கூறிய சிலப்பதிகார அடிகளால், இக் கொட்டிச்சேதம் சிவபிரானால் ஆடப்பட்ட விதம் இத்தன்மையதென்பது நன்கு விளங்கும்.

இனி, இந்நாடகத்தைச் செங்குட்டுவற்கு நடித்துக்காட்டியவன் 'கூத்தச்சாக்கையன்' என்றும், அவனுடைலக்கண்டு அரசன் மகிழ்ந்து சென்றனனென்றும் மேற்காட்டிய அடிகள் குறிக்கின்றன. சாக்கையரென்பவர், முற்காலத்தில் அரசர்க்கு "உள்படு கருமத்தலைவ"ராயிருந்தவருள் ஒருவர் என்பது 'வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க், குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்" என்னும் திவாகரத்தாற் பெறப்படுகின்றது. உள்படு கருமத்தலைமை—அரசரது ஆணைநடாத்தும் உத்தியோகத் தலைமை[2]. வள்ளுவரும் இத்தலைமை வகித்தவரேயாவர். கூத்தச் சாக்கையர் என்பார் அரசரை நடனத்தால் மகிழ்விப்பவராவர். இவருள், அரசாங்கத்தில் இசைத்தலைமையை வகிப்போர் 'சாக்கைமாராயன்' எனப்படுவர். சங்ககாலத்தில் "தமிழ் கூறு நல்லுகம்" ஆகவே விளங்கிய குடமலைநாட்டில், பழைய தமிழ் வழக்கங்கள் பலவும் காணப்படுதல்போலவே, இச்சாக்கையர் செய்தியும் அறியப்படுதல் குறிப்பிடற்பாலது. பிற்காலத்தும் இச்சாக்கையர் தம் பூருவவிருத்தியுடன் விளங்கி அரசர்களாலும்

---

[1] "கொட்டி யாடற் கேற்ற மொட்டிய, உமையவ ளொருபா லாகவொருபால், இமையா நாட்டத் திறைவ னாகி, அமையா வுட்கும் வியப்பும் விறைவும், பொலிவும் பொருந்த நோக்கிய தொக்க, அவுண ரின்னுயி ரிழப்ப வக்களம், பொலிய வாடின னென்ப மற்றதன், விருத்தங் காத்தற் பொருளொடு கூடிப், பொருத்த வருஉம் பொருந் திய பாடல், திருத்தகு மரபிற் றெய்வத் ததிப்பே" என்பதனால் இதனை அறிக.

[2] 'குயிலோனென்னும் படையுள்படுவோன்' (சிலப். 8, 12-3), 'சேனையுள்படுநரை யாணையி னேவி' (பெருங்கதை), 'கோயில் உள் பாடனும்' (T. A. S.) என்ற முன்னோர் கூற்றுக்களால் இப்பொருள் பெறப்படுகின்றது. இப்புத்தகம், 207-ம் பக்கத்துங் காண்க.

தமிழ்மக்களாலும் பெரிதும் அபிமானிக்கப்பட்டவர் என்பது அடியில் வரும் சாஸனப்பகுதிகளாலும் அறியலாகும்.

(1) குமரன் சிகண்டன் என்ற சாக்கையன் திருவாவடுதுறையாழ்வாரின் புரட்டாசித் திருவிழாக்காலத்து ஆறங்கம் ஆரியக்கூத்து[1] ஆட நிருத்ய போகம் ஆகிய சாக்கைக்காணி பெற்றது—(பரகேசரி இராஜேந்திரசோழன் சாஸனம்—120 of 1925)

(2) ஆலேயூர்ச்சாக்கை என்பான் கீழைப்பழுவூர்க்கோயிலில் சாக்கைக் கூத்து மூன்று நடத்தப் பொன்னும் நிலமும் பெற்றது (பரகேசரி வர்மன் சாஸனம்—250 of 1926)

(3) சாக்கை மாராயன் விக்கிரமசோழன், 3-சாக்கைக்கூத்து மார்கழித்திருவாதிரையிலும், 3-கூத்து வைகாசித்திருவாதிரையிலும் திருக்கார்க்கோடீசுவரமுடையார் திருமுன்பு ஆட நியமனம் பெற்றது (காமரசவல்லிச் சாஸனம்—1915, p. 98)

—முதலியன காண்க. இவற்றால், பிற்காலச்சோழர் நாளிலும் இச் சாக்கையர்கூத்துப் பிரபலமாக வழங்கிவந்தமையும் தமிழ்மக்கள் அதனிடம் காட்டிய அபிமானமும் விளக்கமாகும்.

இச்சாக்கையர் அப்பெயருடனும் அத்தொழிலுடனும் இன்றும் உள்ளமையும் அவரது வழக்கவொழுக்கங்களும் "மலையாளமும் அதில் வாழ்நரும்" (Malabar and its folk) என்னுந்தலைப் பெயருடன் ஸ்ரீ. T. K. கோபால பணிக்கரவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்ற நூலின் 184, 185-ம் பக்கங்களிற் காணப்படுபவை, அறிந்து மகிழத்தக்கன. அவை வருமாறு:—

"சாக்கையர்கூத்தென்பது அநாதிகாலமாக நடைபெறும் ஒரு புராதன விருத்தியாகும். சாக்கையர் ஒரு விநோதமான குலத்தைச் சார்ந்தவர். அவர், பிராமணப்பெற்றோர்க்கு பேஷ்டா கால ஸம்ஸர்க்கத்திற் பிறந்த சந்ததியார் என்று சொல்லப்படுகின்றனர். அதனால் அவர் தாழ்பிறப்பினராவர்.

"உற்சவகாலங்களிலும் மற்றக்காலங்களிலும், ஆலயங்கட்குச் சம்பந்தமானதும் கூத்துக்கென்றேற்பட்டதுமான உட்புறக்கட்டிடங்களிற் சாக்கையர்கூத்து நடத்தப்படுகிறது. கூத்தன், கால்களினுங் கைகளிலும் சதங்கை கட்டிக்கொண்டும், இடையைச் சுற்றி நகைப்புண்டாக்கத்தக்கதும் மிகுந்த மடிப்புக்களுடன் கூடியதுமான விநோதவுடையொன்றைத் தரித்துக்கொண்டும் தேகமுழுதும் விபூதிபூசியவனாய் வெறுந்தலையுடன் தன் கூத்தைத்

[1] ஆரியக்கூத்து - புராண இதிகாசக்கதைகள் தழுவிவரும் கூத்து.

தொடங்குவன். சாக்கைப்பெண்கள் "நங்கையர்" என்று சொல்லப்படுவர். சாக்கையர் ஆடும்போது அந்த நங்கையரிலொருத்தி எப்போதும் கூடவிருத்தல் வழக்கம். அவர், சுலோகங்கள் கூறி அவற்றின் அர்த்ததாற்பரியங்களை விளக்கிக்கொண்டு வருங்காலையில், நம்பியார் என்றழைக்கப்படுமொருவனால் இடையிடையே தம்பட்டம் அடிக்கப்படுவதுண்டு. புராணசுலோகங்களைச்சொல்லி அவற்றின் தாற்பரியங்களை விளக்குவதே இக்கூத்தர்கருரிய விசேடம். அதனை விநோதமாகவும் மிக நுணுக்கமாகவும் நடித்துக்காட்டுவர்.

"சாக்கையர், மக்களியல்புகளையும் உலகவியல்புகளையும் பற்றிக் குணதோஷ ஆராய்ச்சிசெய்வதில் பிரமிக்கத்தக்க வல்லமையுடையர். கூத்துக்காண்பவரில் முக்கியமானவர்கள் மிகவும் அதிசயிக்கும்படி சுலோகதாற்பரியங்களை எடுத்துரைப்பதிலும், அம்முழுக்கூட்டத்தையும் கொக்கரிப்புடன் குதூகலமடையச் செய்வதிலும் வேண்டிய வளவு சாமர்த்தியம் படைத்தவர்கள். சாக்கையர் கூத்தாடுங்கால் அவர் நிகழ்த்தும் பரிகாசாதிகளால் எவருஞ் சினங்கொள்வதில்லை. அவர்களை நோக்கிப் பிறர் அவமரியாதையாய் உரத்துச்சிரிப்பதுமில்லை. இது தொன்றுதொட்டு வரும் ஒரு மரியாதை. இம்மரியாதையில் ஏதேனுஞ் சிறிது குறைவுநேரிடுமாயின், அதுவே, அவர்கள் கூத்தை நிறுத்திவிடப் போதியதாகும். கோயில் தர்மகர்த்தர்களால் இன்னோர் சந்தேகமின்றிச் சம்மானிக்கப்பட்டுவருகின்றனர்" எனக் கண்டுகொள்க.

இவற்றால் சாக்கையர் என்போர் தமிழ்நாட்டிலுள்ள பழைய குடியினராய்க் கூத்து நிகழ்த்துவதில் தொன்றுதொட்ட பெருமையுடையரென்பதும், சிலப்பதிகாரத்தில் "இமையவனுடிய கொட்டிச்சேதம், பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க், கூத்தச் சாக்கையன்" ஆடினன் என்னும் செய்தி மேற்குறித்த மலைநாட்டு வழக்கத்தோடு பெரிதும் பொருந்துமாறும் நோக்கிக்கொள்க.

———

# 31. கருமாணிக்கன் கோவை

ஆகிய

# கப்பற்கோவை[1]

இப்பெயர்கள் கொண்ட கோவையொன்றைப் பற்றி நம்மவர் பலரும் நன்கறிவர். இந்நூற்பாடல்கள் சில தமிழ்நாட்டிற் பலர் வாயினின்றும் கேட்கப்படுகின்றன. இது, கருமாணிக்கன் கோவை எனவும் வழங்கும். இக் கோவையில் சிற்சில அரிய பாடல்கள் மட்டும் இப்போது கேட்கப்படுவதாயினும் நூன் முற்றும் இதுவரைவெளி வந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு வெளிவாராமைக்கு, நூன்முழுதும் அகப்படாது போனமையே காரணமாகும். ஆனல், இக்கோவை முழுதும் அடங்கிய பிரதி யொன்று, ஆழ்வார்திருநகரி ஸ்ரீமத்: தேவர்பிரான்கவிராயரவர் களால் இச்சங்கத்துக்குக் கிடைத்துளது. இந் நூன் முழுமையும், "செந்தமிழ்" வாயிலாகச் சமீபத்தில் வெளிவரவுங்கூடும். அங்ஙனம் வெளிவருமுன்பு, அந்நூலைப்பற்றி யான் தெரிந்து கொண்ட விசேடங்கள் சிலவற்றை அறிவிக்கின்றேன்.

இந்நூல் பாடிய ஆசிரியர் இன்னர் என்பது இப்பிரதி யினின்று அறியக்கூடவில்லை. இவ்வாசிரியர்,

"உமையாளு மீசனும் போலுட ளுயுயர் பூந்திருவும்
எமையாளு மாயனும் போலிருப்பீர்" (௯௯௪)

என்று கூறுதலால், இவர் திருமால்பத்தியிற் சிறந்தவரென்பது மட்டிற் புலப்படுகின்றது. இக்கோவையின் பாட்டுடைத்தலை வன் கருமாணிக்கனென்னும் சிற்றரசன். இவன் பாண்டிநாட்டுக் கப்பலூர், துவரை என்னும் ஊர்களிலிருந்து ஆட்சி புரிந்தவன்; பாண்டியனுக்கு மந்திரியாகவும், தளகர்த்தனுகவும் விளங்கினவன் இவனென்பது,

"கருமாணிக்கன் கைதவற்குப் பாராளும்வீரப் பரிவீரநாரணன்" (௨௯௧)

"கருமாணிக்கன் கைதவர்தந் தளத்துக்கொருவன்" (௯௪௦)

எனவரும் அடிகளாற் தெரிகின்றது. இக்கருமாணிக்கன், பாண் டியன் மந்திரியானமையால் "சுறவார்கொடி யுயர்த்தோன்" (௧௦௫) எனவும், செங்கழுநீர்மாலையும் துளவமாலையும் முறையே போர்ப் பூவும், தார்ப்பூவுமாக அணிந்தவனுனமையால் "கல்லாரநாண்

---

[1] செந்தமிழ், தொகுதி -6, பகுதி- (1907-8.)

மலர்த்தார்" (௭௯) "துளவம்புனைபுயன்" (௯௪) எனவும் கூறப் பட்டுள்ளான். இச்சிற்றரசன் யாதவகுலத்துதித்தவன் என்பது,

"சேயோ னெனுந்திற லான்றிருமேனி வலம்புரிபோற்
றாயோன் வழிவந்த தொண்டையர்கோன்" (௪௪)

"உலகம் புகழ்பதி னுரு யிரவ ருளங்கவர்ந்த
கலகன் குலதிலகன் கருமாணிக்கன்" (௩௭௧)

என, முறையே யாதவகுலத்தவதரித்த பலராமனையும் கண்ண பிரானையும் இவன் குலத்தலைவர்களாகக் குறித்திருத்தலால் தெளிவாகின்றது. 'தொண்டைமான்' என்ற பட்டப்பெயரால் இவன் இந்நூலுட் கூறப்படுவன். இதனல், இவன் முன்னேர் தொண்டை நாட்டவர்போலும். இக்கருமாணிக்கன் கல்விகொடை களில் சிறந்தவ னென்பதை,

"எண்ணெண் கலைதேர் கருமாணிக்கன்" (௩௯௦)

"உபயகுலோத்தமன், கொண்டலன்ன கைத்தாமரைத்தொண்
[டைமான்" (௧௮)

என்பவற்ருல் அறிக. இனி, இத்தலைவனது வீரப்பெருமைகள் சிலவும் இக்கோவையால் விளங்குகின்றன. இவன், வடநாட்டர சர் பலருடன் போர்புரிந்து வெற்றிபெற்றவனென்பதும், கன்னட வரசன் நாட்டையும், காடவமன்னன் மண்ணையுங் கவர்ந்தவ னென்பதும்,

"மதியா வடமன்னருடல், துள்ளப்படைதொட்ட தொண்டை
[யர்கோன்" (௪௭)

'போயறியா வடமன்னர் பின்னுனிப் பொருசரங்க
ளேயறியாத வில்லான்" (௭௮)

"கன்னடர் மண்கவருங் கருமாணிக்கன்" (௩௯௫)

"அடல்மானடவிக், காடவர்மண்கவருங் கருமாணிக்சன்"(௨௨௨)

என வருவனவற்ருல் உணர்க. இவனல் வெல்லப்பட்டவருள் வடவரசர்களும் ஒருவர் என்பது,

"வங்கருங் கொங்கரும் வந்துநின் றேத்த வடவரசர்
கங்கைகொண்டான் தொண்டைமான்" (௪௧)

என்று கூறுதலால் விளங்கும். இவனுடைய சகோதரன் காலிங் கர்கோன் என்பதை, "காலிங்கர்கோ விருக்துணைவன் தொண்டை மான்" என்னும் அடி குறிப்பிடுகின்றது.

இனி, இக்கருமாணிக்கனைப் படைத்தலைவனுகக் கொண்ட பாண்டியன் யாவன் என்பது துணிய இடமில்லை. ஆயினும், மேற் காட்டிய கருமாணிக்கன் வரலாறுகளில், வடவரசரைவென்றது, கன்னடர் நாடு கவர்ந்தது, காடவர்மண்கொண்டது என்னும் வீரச்

செயல்களை நோக்கும்போது, கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் பாண்டியநாட்டை ஆட்சிபுரிந்த ஜடாவர்மன் – சுந்தரபாண்டியன் இவன் தலைவனாயிருக்கக் கூடுமோ என்று தோற்றுகின்றான். "செந்தமிழ்" நான்காந்தொகுதி ௪௧௪ - ஆம் பக்கமுதலாகவுள்ள அப் பாண்டியன் சாஸனப் பாடல்களிலே—

"மீளா வழிச்செல்ல வேணாடர் தங்களை வென்றகடந்
தோளான் மதுரைமன் சுந்தர பாண்டியன் சூழ்ந்திறைஞ்சி
ஆளான மன்னவர் தன்னேவல் செய்ய அவனிமுட்ட
வாளால் வழிதிறந் தான்வட வேந்தரை மார்திறந்தே"

என அவன் வடவேந்தரை வென்றதும்,

"பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை பரக்கவெவ்
[வேந்
கண்பட்ட முத்த வடங்கண்டுங் காக்கிலன் காடவர்கோன்
எண்பட்ட சேனை யெதிர்பட் டொழிய வெழுந்தபுண்ணர்
விண்பட் டலையப் படைதொட்ட சுந்தர மீனவனே"

என அவன் காடவனை வெற்றிகொண்டதும்,

"பெருவரை யரணிற் பின்னகர்க் காக்கிய
கருநட ராசனைக் களிறுதிறை கொண்டு"

என, அவன் கருநடராசனைத் திறைகொண்டதும் கூறப் பட்டுள்ளமை காணலாம். இவை முறையே, பாண்டியதளகர்த் தனான கருமாணிக்கன் செயல்களாக மேற்குறித்தவைகளோடு ஒத்திருத்தலால், அப்பாண்டியனையே இவன் தலைவனாகக் கொள்ள இடமுண்டு. ஆயினும் அச் சுந்தரபாண்டியனை அடுத்து ஆண்ட ஜடாவர்மன் வீரபாண்டியன் (பட்டம். 1253), மாறவர்மன் குலசே கரன் (பட். 1268) காலங்களிலும் பிரபலனாகவாழ்ந்தவன் இத் தலைவன் என்றே தெரிகின்றான். பிற்கூறிய குலசேகர பாண்டியனான கோனேரின்மைகொண்டான் காலத்துச் சாஸன மொன்றில்—

"முத்தூற்றுக்கூற்றத்துக் கப்பலூரான உலகளந்த சோழநல் லூர்க் கரியமாணிக்காழ்வான்" என்று கூறப்படுபவன், இவனா கவே கொள்ளத்தகும்.[1] இங்ஙனம் சிறந்த தளபதியொருவனைப் பாண்டியன் படைத்திருந்ததனால்—

"எய்தலின் செம்மை யெளிதல்ல காணு மிறைவவென்று
கைதவன் பார்புகழுங் கருமாணிக்கன்" (௩௨) [௭௮௫]

"கருமாணிக்கன், கைதவற்குப் பாராளும் வீரப்பரிஸரநாரணன்"

---

1. இவ்வாசிரியர் எழுதிவெளியிட்டுள்ள சாஸனத்தமிழ்க்கவி சரிதம் என்ற நூலுள் (பக். 106 - 8) இச்செய்தியாவும் நன்குவிளக் கப்பட்டுள்ளன.

"சோமன் குலம்புரக்குந் தொண்டைமான்" (உசக)

"கைதவர் தந் தளத்துக் கொருவன்" (கூச0)

என்று இக்கோவையில் ஆங்காங்கே இத்தலைவன் பெரிதும் புகழப்பட்டனன்.

இனி, முத்தூற்றுக்கூற்றம் என்பது முத்தூர்க் கூற்றம் எனவும் வழங்கும். இது, கானடும் புதுக்கோட்டைச் சீமைப்பகுதியும் கொண்ட பிரதேசமாகும். இங்கு உள்ளனவே கருமாணிக்கனது கப்பலூர், துவரை (துவரங்குறிச்சி) என்ற ஊர்கள். "முத்தூர்த் துவரைகாவலன்" என்ருர் இக்கோவையாசிரியரும். அவ்வூருள்ள நாட்டில் மாஞ்சோலைகள் மிகுதியாக உள்ளன. இதற்கேற்ப—

"சூதவனம் புடைசூழ் துவராபதித் தொண்டையர் கோன்" (262)

என இக்கோவைகூறுதல் ஒப்பிடத்தக்கது. துவரையைத் தலைமையாகக் கொண்டமைபற்றித் 'துவராபதிநாடு' எனவும் இப்பிரதேசம் வழங்கப்பெற்றது. இத்துவரையான துவரங்குறிச்சி, சிற்றரசரிருந்த இடமென்றும், இப்பிரதேசத்தில் யாதவகுலத்தவர்கள் மிக்குள்ளாரென்று விளங்குதலாலும், இப்பக்கமே கருமாணிக்கன் ஆட்சிக்குட்பட்டதென்பது வலியுறுகின்றது. ஆனல், இக்கோவையில்,

"கப்பற் ெறன்னகரில், வகையார் வனமுதல் வைகைப்
புதுப்புனல்வந்ததென்று" (உ௫௫)

"கப்பல்வைகைப்புதுநீர்" (கூ௭)

என "புதுப்புனல் கண்டோர்" கூற்றில் வருதலால், இச்செய்தி வையையாற்றின் விலகி வெகுதூரத்துள்ள இவ்வூர்கட்கு விரோதமாயுள்ளது; இதனல், வையையாற்றுக் கிளையொன்று அக்காலத்து இப்பக்கங்கட்குச் சென்றதென்றேனும் பாண்டிநாட்டு ஓடும் வைகையை அந்நாட்டுள்ள "கப்பல்வைகை" என்று உபசரித்துக் கூறினரென்றேனுங் கொள்ளல்வேண்டும். இனி, இக்கோவைத் தலைவன் வரலாறுகளில்,

"கோவ லமர்முனி கொண்டுவந் தேத்துமுத் தூர்த்துவரை
காவலன்" (கூகூ0)

என்ற செய்தியொன்று கூறப்பட்டுளது. திருக்கோவலூரில் அக்காலத்திருந்த மடாதிபதியான[1] முனிவரொருவராற் பெரிதும்

---

1 'திருக்கோவல் எம்பெருமானுர்ஜீயர் மடம்' என்பதொன்று முற்காலத்தே பிரபலமாயிருந்ததென்று சாஸனத்தால் M. E. R. 516 of 1922) அறியப்படுகின்றது. கோவைகூறும் 'கோவலமர் முனி' என்ற தொடர் இந்த ஜீயரைக் குறிப்பதுபோலும்.

புகழப்பட்டவன் இவன் என்றும், அம்முனிவரைத் தன்னூர்க்கு அழைத்து வந்து போற்றியவன் எனவும் இத்தொடர்க்குப் பொருள் கூறலாம். 'கோவல் அமர் முனி' என்பார் அத்தலத்தில் மடாதிபத்தியம் வகித்த வைஷ்ண வப்பெரியார். இம்மடாதிபதிகள் தென்னாட்டுக் கோகுலத்தவர் பலர்க்கு ஆசாரியராக இன்றும் உள்ளவர் என்பர்.

இனி, இக்கோவை பழமைபெருமைவாய்ந்த நூலென்பதற்கு இற்றைக்கு 300-வருஷங்கட்கு முன் இயற்றப்பெற்ற இலக்கண விளக்கத்தில், அகத்திணையியலுரையிலே இந்நூலினின்று எட்டுக் கவிகள் மேற்கோள் காட்டப்பட்டிருத்தலும் ஒரு தக்க சான்றும் அப்பாடல் "இறவார்குருகு " (௪0௫) "இமையாத வேழம் (௩௩0) காரார்கொடை (௬0) காவைப்பொருவுசெங் (௩௩௩) தொடை வந்த தண் (௪௪௪) அது காமறிந்திலம் (௩௩௪) அரவுக்கு மெல்லிய (௪௪௫) நாம் வந்தவேற்கை " (௪௭௪)—என்பன.

இக்கோவையின் சொன்னயம் பொருணயங்களை இங்கே விளக்கத்தொடங்கின் மிகவிரியும்; அவற்றைச் "செந்தமிழ்" மூலம் இக்கோவைவெளிவரும்போது அறிந்து மகிழ்க.

குறிப்பு :—சிலவாண்டுகட்குமுன் மதுரைச் சங்கமாளிகையில் நேர்ந்த அக்கினிபாதையால் எரிவாய்ப்பட்ட கலடிகளுள், இக்கருமாணிக்கன் கோவையும் ஒன்று என்ற செய்தி யாவர்க்கும் பெருந்துக்கம் விளைக்கத்தக்கது. அதனால், இக்கோவையுள், மேலேயானெழுதிய பாடல்களுந்தொடர்களுமே இப்போது எஞ்சியுள்ளவை என்று சொல்லலாம். ஒருகால், இக்கோவைப்பிரதி வேறிடங்களில் உண்டாயின், அறிஞர் அதனை வெளியிட முந்துவார்களென்றே நம்புகின்றேன்.

---

## 32. வயிரமேக விருத்தி

கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் பாடிய தக்கயாகப்பரணி 16-ம் தாழிசையில் "முப்பத்துமூவ ராயவர்தம் ராசராசபுரி" எனவருந் தொடர்க்கு 'முப்பத்து மூன்று தேவர்கள் ஆராயுமவருடைய ராசராசபுரி' என்ற பொருளும், 'தேவர் ஆயுமவர் எனச் செய்யுமென்னும் பெயரெச்சத்தின் உகரமும் மகரவொற்றுங் கெட்டன எனவுணர்க; இது வயிரமேகவிருத்தியுள் விளங்கும்' என்ற குறிப்பும் அப்பரணியுரைகாரரால் தரப்பட்டுள்ளன. இதனால், வயிரமேக விருத்தி என்பது இலக்கணம்பற்றி அமைந்த உரைநூலென்பதும்,[1] இதற்கு மூலநூலொன்று உண்டென்பதும்

[1] Annals of Oriental Research of the University of Madras Vol ii.

புலனும். செய்யுமென் பெயரச்சம் இடைநிலையெழுத்துக்கள் கெட்டுப் புணர்தலைத் தொல்காப்பியனார்—

"செய்யு மென்னும் பெயரெஞ்ச கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்" (233)

என்பதனாற் கூறுவர். இதற்கு இளம்பூரணர் முதலியோரெல்லாம் 'வாம்புரவி' என, மெய்யுடன் உகரங்கெடுதலையே விதித்தவுதாரணமாகக்கொண்டு உரைகூறினர். "செய்யுமென் னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்" என்றார் நன்னூலாரும். ஆயின், அரிவாள் காய்கதிர் போன்றவற்றில், அவற்றுடன் ஈற்றுமெய்யுங் கெடுதலை அவரெவருமே குறிப்பிட்டிலர். அங்ஙனம் மகரவீறுங் கெடுமாயின் அது வினைத்தொகையாம் என்பது அன்னோர் கருத்து. "வாம்புரவி போம்புழை...... இவைமகரவொற்றுநிற்றலான் வினைத்தொகையாகா" என மயிலைநாதர் குறித்தலுங் காண்க. இவ் விருகொள்கைகளின் தாரதம்மியங்களைப் பற்றி இப்போது ஆராய்ச்சி யில்லை. மற்று, செய்யுமென் பெயரெச்சத்தில் மெய்யுடன் உகரங்கெடுதலையே முன்னோரெல்லாங் கொண்டவரென்பதும், அதனுடன் ஈற்று ஒற்றுங் கெடும் என்பதனை விளக்கியவர் வயிரமேகவிருத்திகாரர் என்பதுமே இங்கறியத்தக்கன. பிற்கூறிய கொள்கையை முதலில் வெளியிட்ட நூலாசிரியர், **நேமிநாதமுடையாரே** யாவர். அவர்,

"செய்யுமென்னும் பேரெச்சத் தீற்றுமிசைச் சில்லுகரம்
மெய்யொடும்போ மொற்றொடும்போம் வேறு" (63)

என்பதனால் இக்கருத்தை வெளியிடுதல் காணலாம். இதற்கு, செய்யுமென் பெயரெச்சத்தில் உகரங்கெடுதலும், உகரமும் மெய்யுங்கெடுதலும், அவற்றுடன் இறுதியொற்றுக் கெடுதலும் உண்டென்றும், இவற்றுக்கு முறையே 'தோழியுங்கலுழுமே' 'வாம்புரவி' 'அரிவாள்' என்பன உதாரணங்கள் என்றும் நேமிநாதவுரையாளர் விளக்கமெழுதியிருத்தலும், 'மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்' என்ற தொல்காப்பியனார் கருத்து, உகரமூர்ந்த மெய்யேயன்றி ஈற்று மெய்யின்கேடுமாம் என்றுகொண்டு, மேற்குறித்த தொல்காப்பிய சூத்திரத்தையே தங்கொள்கைக்கு அவர் பிரமாணங் காட்டியிருத்தலும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. இவற்றால், செய்யுமென் பெயரெச்சத்திற் பகுதிநீங்க ஏனைய எழுத்துக்கள் கேடுறும் என்றகொள்கைக்கு மூலமானவர் நேமிநாதமுடையாராயினும், சொற்சுருங்கக் கூறிய அவரது சூத்திரக்கருத்தினை முன்னூற் பிரமாணத்துடன் உதாரணமுகத்தால் விளக்கிப்போந்தவர் அந்நேமிநாத உரைகாரரே என்பது நன்கறியலாகும்.

ஆகவே, ஆயவர் என்பதனை ஆயுமவர் எனவிரித்து, அதற்கு விதி விளங்குமிடமாகத் தக்கயாகப்பரணி யுரைகாரர் கூறும் வயிரமேக விருத்தி என்பது, நேமிநாத விருத்தியே என்றுகருதப் பெரிதும் இடந்தருகின்றது. நேமிநாதவுரையை **விருத்தி** என்றே முன்னோர் வழங்கிவந்தனர் என்பது, அந்நூற் சுவடிகளாலும் அதன் பதிப்புமுகவுரையாலும் அறியப்பட்டது. இங்ஙனம் நேமி நாதவுரையே வயிரமேகவிருத்தியாயின், அவ்வுரைகாரர் பெயர் வயிரமேகன் என்பது பெறலாகும். இப்பெயர் பண்டைப்பெரு மக்கட்கு வழங்கியமை சாஸனங்களாலும் தெரிந்தது. இனித் தொல்காப்பிய உரையுள் ஒன்றாக வயிரமேக விருத்தியைக் கொள்ளல் கூடாதோ எனின், அங்ஙனமாயின், மேற்கூறிய பெய ரெச்சவிகற்பம் பற்றிய கருத்தைத் தொல்காப்பிய உரையாள ரான முன்னோர்களேனும் பிறவாசிரியர்களேனும் குறிப்பிடாமற் போகாராதலாலும், அங்ஙனம் ஒருவருமே குறியாமையாலும் அஃது ஏற்புடைத்தன் றென்க. தக்கயாகப்பரணி யுரையாலன்றி வேறொன்றால் அறியப்படாத இவ் வயிரமேகவிருத்தியின் கொள் கையினின்று, அது நேமிநாதவிருத்தியாகவே கருதற்குப் பெரிதும் பொருத்தமுண்மை மேற்கூறியவற்றால் தெரியலாம்.

---

# 33. பகழிக் கூத்தர்[1]

பகழிக்கூத்தர் என்ற பெயருடைய புலவரொருவர் பிரசித்த ராக இத்தமிழ்நாட்டவரால் நெடுங்காலமாகக் கூறப்பட்டு வரு கின்றார். இவரது பெருமையை அறிஞர்பலரும் அறிந்துகொண் டாடற்குச் சிறந்தகருவியாக உள்ள நூல், இவராற் பாடப்பட்ட **திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்** என்னும் பிரபந்தமேயாகும். இப் பிள்ளைத்தமிழின் பொருட்பொலிவும் நடைச்சிறப்பும் புலவர்க் கெல்லாம் பெருமகிழ்ச்சி தரத்தக்கவை. இதனுட் பற்பல சந்தங் கள் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பகழிக்கூத்தர், வைணவ மரபினரென்றும், இடையே உண்டான வயிற்று நோயால் இவர் பெரிதும் வருந்தி, திருச்செந்தில் சென்று முருகக் கடவுள்பேரில் இப்பிரபந்தம் பாடி அந்நோய் நீங்கப்பெற்றாரென் றும், அதுமுதல் சுப்பிரமணிய பத்திமானாக விளங்கினரென்றும் கர்ணபரம்பரையிற் கேட்கப்படுகின்றன. அன்றியும், இப்பிள்ளைத் தமிழின் அரங்கேற்றப்பெருமையைப் பற்றிய கதையொன்றும்

---

[1] "செந்தமிழ், தொகுதி - 6, பகுதி - 6. (1907 - 8)

உண்டு. இவர் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழைப் பாடி அவ்வூர் முருகக்கடவுள் சந்நிதியில் அரங்கேற்றி முடித்தவுடன், சபையோர் அதன் வாக்குக்கு மகிழ்ந்தனராயினும், அவரிற்சிலர், "வைணவராயுள்ள இவர்க்கு நாம் மரியாதை செய்தல் கூடாது" என்று தடைசெய்ய, பகழிக்கூத்தர் அம்மரியாதைகளைப் பொருட்படுத்தாது தம்நூல் சந்நிதியிலே அரங்கேற்றப்பட்டு முடிந்ததற்கு உவந்து தம்மிருப்பிடஞ் சென்றனர். அன்றிரவு, முருகக்கடவுட்கு விசேட அலங்காரமாகச் சாத்தப்பட்டிருந்த விலையுயர்ந்த அரதனப்பதக்கம் காணமற்போனதைத் திருவனந்தல் சமயத்திற்கண்ட கோயிலார் அதனை ஊரெங்குந் தேடிவரும்போது, அதிகாலையில் நித்திரைசெய்துகொண்டிருந்த பகழிக்கூத்தர் கண்டத்தில் அஃது அணியப்பட்டிருத்தல் கண்டு, "முருகக்கடவுளே இப்புலவர் பக்தியை வெளிப்படுத்தச்செய்தருளிய திருவிளையாடலிது' என்று முன்னைநாள் வரலாற்றால் தெரிந்து, அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு பகழிக்கூத்தரைப் பல்லக்கில் வைத்து ஊர்வலஞ்செய்வித்து, மற்றும்வேண்டிய மரியாதைகளைப் புரிந்தனுப்பினர் என்றும் அன்று முதல் இப்பிள்ளைத்தமிழ் தெய்வத்தன்மையுள்ளதென்று கருதப்பட்டுத் திருப்புகழ்க்கு ஒப்பச் சந்நிதியில் ஓதிவரும்படி செய்யப்பெற்றதென்றும் கூறுவர். இவர் வைணவரென்பதனை, அந்நூற் சிறப்புப்பாயிரமாகக் கண்ட,

> "செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
> கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தா—னந்தேர்
> திருமாது சேர்மார்பன் றேர்ப்பாகற் கன்பு
> தருமால் பகழிக்கூத் தன்"

என்னும் வெண்பாவாலும் உணரப்படும். இனி, மன்னார்குடி மிஷன்காலேஜ் தமிழ்ப்பண்டிதரும் என் நண்பருமாகிய ஸ்ரீ: சர்க்கரை—இராமசாமிப்புலவ ரவர்கள் இச்சங்கத்துக் களித்த **சீவகசிந்தாமணிச் சுருக்கம்** என்றொரு நூல் உள்ளது. இதன் முகப்பில் எழுதப்பட்டுள்ள குறிப்பில்,

> **"செம்பிநாட்டுச் சன்னசிக்கிராமத்துத் திருப்புல்லாணி மாலடியான் தர்ப்பாதனன் மகன் பகழிக்கூத்தன் வாக்கு"**

என எழுதப்பட்டுள்ளது. இந்நூலினுள்ளே, முதற்கண் விநாயகசுப்பிரமணிய ஸ்துதிகள் கூறப்பட்டிருத்தலோடு, சில இலம்பகங்களின் தொடக்கத்தே முருகக்கடவுள் தோத்திரங்கள் தனித்தும் வருகின்றன. இதனால், ஸ்ரீ சுப்பிரமணியபத்தியிற் சிறந்து விளங்கிய இப் பகழிக்கூத்தரே இச் சிந்தாமணிச்சுருக்கமும்

பாடினவராதல் வேண்டுமென்று கருதத் தடையில்லை. திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ் பாடிய இப்புலவர் வைணவரென வழங்கும் வரலாற்றோடு, மேற்கண்ட குறிப்பில், இவர் தந்தைக்கு "மாலடியான்" என்னும் அடை கூறப்படுதலுங் காண்க. இவற்றால், இவர் செம்பிநாட்டுச் சன்னசிக் கிராமத்தவரென்பதும், இவர் தந்தையார் பெயர் திருப்புல்லாணி மாலடியான் தர்ப்பாதனர் என்பதும் தெளிவாம். செம்பிநாடாவது, சேதுபதிகள் ஆட்சிக்குட்பட்ட சீமையாகும். ஒரு துறைக்கோவைபாடிய அமிர்த கவிராயர், சேதுபதியைச் "செம்பிநாடன், (௬௧, ௮௨) செம்பியர்கோன் (௨௦௯) செம்பிநாட்டிறை (௨௦௭) செம்பியர் தோன்றல்" (௨௪௮) என வழங்குதலுங் காண்க. சன்னசிக் கிராமமென்பது, சேதுசம்ஸ்தானம் காமங்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்தது; இன்றும் அஃது அப்பெயரானே வழங்கப்படுவது. இப்போது இது கவர்ண்மெண்டுகிராமமாக மாறியுள்ளது. இதனைச் "சதுர்வேத மங்கலம்" எனவும் கூறுவர். இவர் தந்தையின் இயற்பெயராகிய தர்ப்பாதனன் என்பது, திருப்புல்லாணியில் தருப்பசயனத்தே கண்வளர்ந்தருளும் இராமபிரான் திருநாமமாகும். 'தர்ப்பாதன மழகியார்' என்பர் முன்னோர். இனி, இச்சிந்தாமணிச்சருக்கத்தின் தொடக்கத்தே ஆசிரியர்வாக்காகவுள்ள பாயிரச் செய்யுளொன்று மேற்குறித்த வரலாற்றோடு பெரிது ஒத்துள்ளமை அறியத்தக்கது. அது வருமாறு:—

"மாரனு மெனவடிவு கொண்டசீ வகசரிதை
    மாமுனி யுரைத்த சிந்தா
மணியிற் பெருங்கதை யெவர்க்குமள விடவொணு
    மற்றது தனைச்சு ருக்கிச்
சேரநா னென்னுடைய புன்சொற்க ளாயினுஞ்
    செப்புவ னெனவிரும்பிச்
செந்தமிழ்ப் பாவாணர் திருவுளக் கருணையென்
    சென்னியுற வைத்து ரைத்தேன்
ஆரநாண் மலர்நெட் டிதழ்க்குவளை யகவயலி
    லகடுநொந் தொருகோடிசங்
கடைகிடக் கக்குருகு பெடையெனச் சிறகா
    லணைத்திடுஞ் செம்பி நாட்டு
வீரநா ராயணச் சதுர்வேத மங்கலம்
    விளங்கவே வந்த நெடுமால்
வேதியர் குலாதிபதி தர்ப்பா தனன்புதல்வன்
    மிக்கபக ழிக்கூத்தனே"

இப்பாட்டால், சன்னசிக்கிராமம் வீரநாராயணச் சதுர்வேத மங்கலம் என அழைக்கப்பட்டு வந்ததென்பது, "நெடுமால் வேதியர் குலாதிபதி" என்பதனால் இவர் வைஷ்ணவப் பிராமணகுலத்தினரென்பதும் விளங்குவன. அறியாதார் சிலர், இவர் மரபைப் பற்றி வேறுவிதமாகக் கூறியவெல்லாம், இவ்வரலாற்றாற் பொய்ம்மைப்படுதல் காண்க. இனி, அவையடகத்தில்,

"கொல்லையி ரும்புனக் குற்றியை யடைந்தபுல்
 கோடா [1] தெனப்ப ழைமைநூல்
கூறுந் திறத்தைக் குறித்துக் கருத்துடன்
 கூறினே னென்னுடையபுன்
சொல்லையும் பொருளையுங் காதையிற் படுவழுத்
 தொகையையு மளந்து கண்டு
சோர்வுரைக் கப்பெரும் பாரமோ பணைமுலைத்
 துடியிடைப் பவள வாய்வெண்
முல்லைநகை யங்கயற் கண்ணுமை மடந்தையுடன்
 முன்னே முளைக்கும் பிரான்
முடிசூடு மெம்பிரான் மூவாத தம்பிரான்
 முத்தமிழ்த் திருவாலவாய்
எல்லைதனின் மதுரைமா நகரியி லிருந்திவை
 யெடுத்துரைத் தேனதலால்
இத்தலவி சேடத்தை யெண்ணியும் பெரியோர்க
 ளிகழப்ப டார்காணுமே"

என்றொரு விருத்தம் உள்ளது. இதனால், இந்நூலை மதுரையிலிருந்து புகழிக்கூத்தர்பாடி அரங்கேற்றினரென்பது அறியப்படும்.

இவ்வேடு இலக்கணையாரிலம்பகம் முடியவுள்ளது; அது தானும் பதுமையாரிலம்பகம் வரையுமே சிதைவின்றிக் காணப்படுவதாகும். ஏனையவை செல்லரித்தும் ஒடிந்தும் போயின. இதன்பாடல்களின் மொத்தத்தொகை இவ்வளவென்று இப்போது கூற முடியவில்லை. எனினும்,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ௧. | நாமகளிலம்பகம் | ... | ௩௮ | ௬. | கேமசரியார் | ... | ௧௧ |
| ௨. | கோவிந்தையார் | ... | ௮ | ௭. | கனகமாலையார் | ... | ௨௧ |
| ௩. | காந்தருவதத்தையார் | | ௪௦ | ௮. | விமலையார் | ... | ௧௦ |
| ௪. | குணமாலையார் | ... | ௩௨ | ௯. | சுரமஞ்சரியார் | ... | ,, |
| ௫. | பதுமையார் | ... | ௩௦ | ௧௦. | இலக்கணையார் | ... | ௧௦ |

[1] "கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைத்தபு, லொல்காவே யாகுமுழவ ருழுபடைக்கு, மெல்லியரே யாயினும் நற்சார்வு சார்ந்தார்மேற், செல்லாவாஞ் செற்றார் சினம்" என்பது நாலடியார்.

என்று ஒருவாறு கணக்கிடப்பட்டது. இதன்கண்வரும் பாவின மெல்லாம், பதினன்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தங்களே யாம். "கற்றபுல .வோர்முதல் வகுத்தசீ ரேழ் கலந்துபத முறையி லெண்ணி" என இவரே கூறுதலுங் காண்க. பழைய செய்யுணடையில் அமைந்த சீவகசரிதையை, இவர் இனிமையும் எளிமையும் அருமையுமான வாக்கால் விளக்கிச்செல்வது காண லாம். இந்நூல், திருத்தக்கதேவரது சொற்பொருட்கருத்துக் களைப் பெரிதும் தழுவி அந்தாதித் தொடராக அமைக்கப்பட்டுள் ளது. இதனேடு அரைகுறையாக விருத்தலால், முழுதுமமைந் துள்ள பிரதி கிடைத்து வெளியிடப்படுமாயின், பகழிக்கூத்தர் பெருமை விளங்குதலேயன்றி, சிறந்த வாக்கொன்றிற் பழகுதற்கு மாணுக்கர்க்கு உதவியுமாம். மகாமகோபாத்தியாய: ப்ரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், சிந்தாமணிப்பதிப்பின் முகவுரையில், "**சிந்தாமணிமாலை** என்று ஒரு நூல் வழங்குகின்றது; அது சுத்தத் தமிழ்நடையுள்ள தன்று" என்று எழுதியுள்ளார்கள். இதனுல் பழைய பெரியபுலவர் இயற்றிய இச்சிந்தாமணிச் சுருக்கத்தைத் தவிர சீவகசரிதை சம்பந்தமான வேறொரு நூலும் உண்டென்று தெரிகின்றது. 'அகவல் விருத்தத் திறத்தால் உற்ற **சிந்தாமணி விளக்க**மென நாணும லுரைசெயுங் கதை" எனப் பகழிக்கூத்தரே கூறுதலின், "சிந்தமாணிவிளக்கம்" என்பதே இந்நூற்கு ஆசிரிய ரிட்ட பெயரென்பது விளங்கும். பகழிக்கூத்தர் காலம் இன்ன தென்று துணியக்கூடவில்லையேனும், திருப்புகழ் பாடிய அருண கிரிநாதர் காலத்தவராகச் சங்கித்தற்கு இடமுண்டு.[1]

---

[1] சாஸனத்தமிழ்க்கவிசரிதம் என்ற நூலுள் 'அருணகிரிநாதர்' வரலாறு காண்க (பக். 129-30).

## 34. "ஆழிவடிம்பலம்ப நின்றானும்" என்ற

# நளவெண்பாப் பாட்டுரை[1]

---

ஆழி வடிம்பலம்ப நின்றானு மன்றுருகா
லேழிசைநூற் சங்கத் திருந்தானும்—நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய்.

இவ்வெண்பா, புகழேந்தியார் பாடிய நளவெண்பாவிலே சுயம்வர காண்டத்து ௧௩௭-ம் பாடலாகும். தமயந்தியின் சுயம் வரகாலத்தில், சேடியர் பற்பலதேசத்தரசரின் குணவிசேடங்களை அவளுக்கு அறிவித்துக் காட்டுமிடத்துள்ள அழகிய வெண்பாக் களிலே இது நான்காவதாம். இதற்கு முன்புள்ள மூன்று வெண் பாக்கள் அடியில் வருவன:—

"பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னித்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னார்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண்"

"போர்வாய் வடிவேலாற் போழப் படாதோருஞ்
சூர்வாய் மதராிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டாற்
றிரித்தகோ இங்கிருந்த சேய்"

"வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போற்
குன்றருவி பாயுங் குடநாடன்—நின்றபுகழ்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து"

இவ்வெண்பாக்களிலே "பொன்னி......திருநாடன்" "மால் வரையைச் செண்டாற் றிரித்தகோ" "தனிக்கொடியின்மீதே சிலை யுயர்த்த வேந்து" என்னுந் தொடர்கள் வருதலால், இவை முறையே சோழபாண்டியசேரர்களைப்பற்றிக் கூறியவை என்று எளிதில் அறியலாகும். இவ்வாறாயின், இப்பாடல்களுக்கடுத்து வருவதும், இப்போது ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்டதுமான "ஆழிவடிம்பலம்ப" என்றபாட்டுத் தமிழ்நாட்டானல்லாத

---

[1] செந்தமிழ், தொகுதி - 6, பகுதி - 7 (1907-8)

வேற்றரசனொருவன் வரலாற்றைக் கூறவந்ததாகக் கொள்ள நேரும். அங்ஙனங் கொண்டே, அறிஞர்சிலர் உரையிட்டிருக்கின்றனர். அவர்கள், இப் பாடல் யதுவமிசத் தரசனைப்பற்றியதென்றும், இதனிற் கூறப்படுங் கதைகள் நான்கில், முதலிரண்டும் கடையிரண்டும் அவ்வமிசத்து உதித்த கார்த்தவீரியார்ச்சுனனையும், கண்ணபிரானையும் முறையே குறிப்பவையென்றும் சுருக்கமாகக் கதைகளைக்கூறிப் பொருள்தந்துள்ளார். ஆயின் இங்ஙனம் எழுதிய கதைகட்கு ஏற்ற பிரமாணங்களை அவர்கள் விளக்கினரல்லர். அதனால் இவ்வெண்பாவுக்குத் தீர்ந்தவுரை அதுவே என்று துணியக்கூடவில்லை. இனி, யான் இப்பாடல் பற்றி ஆராய்ச்சியிற் கண்ட பொருளை எழுதுவேன்.

இப்பாட்டின் முதலிலுள்ள "ஆழிவடிம்பலம்ப நின்றான்" என்ற தொடரை ஏனையரசர்க்கு எவ்வாறு இயைத்துக்கொள்ளினும், பாண்டியனொருவனுக்கே அஃது ஒரியற்பெயர்போலத் தமிழ் நூல்களில் மிகுதியும் வழங்கக் காண்கின்றோம். புறநானூறு, ௩-ம்பாடலின் விசேடவுரையிலும், வில்லிபாரதம் பதினேந்தாம் போர்ச்சருக்கம் ௬௮-ம் கவியிலும், வேம்பத்தூரார் திருவிளையாடலில் ௨௪-ம் படலத்து ௩-ம் கவியிலும், மதுரைக்காஞ்சியுரையிலும் அது பயிறல் காணலாம். சாஸனத்தும் "வடிம்பலம்ப நின்றருளி" என 12-ம் நூற்றாண்டினனான வீரபாண்டியன் புகழப்படுதலும் அறியத்தகும் (T. A. S. ii, p. 19). இவ்வாறு பாண்டியனது பிரபலமான சிறப்புப் பெயரை முதலாகக் கொண்டு இவ்வெண்பாத் தொடங்குதலால், இஃது அவ்வரசன் பெருமையே கூறவந்ததென்று கொள்ளத்தகும். இதற்கேற்ப இவ்வெண்பாவில் வரும் ஏனைவரலாறுகளும் பாண்டியனுடையனவாகவே தெளிவாகத் தெரியவருகின்றன. அவற்றை ஒவ்வொன்றாகக் கூறுவேன்.

முதல்வரலாறான "ஆழி வடிம்பலம்பநின்ற" கதையின் விளக்கத்தைப் பழைய தமிழ் நூல்களினின்று இப்போது தெரியக்கூடவில்லையேனும், மதுரைமான்மியங்களாகிய வேம்பத்தூரார், பரஞ்சோதியார் திருவிளையாடல்களில், கடல்சுவற வேலெறிந்த படலத்துள், அடியில் வருமாறு கதை கூறப்பட்டுளது. "ஒருகாலத்தில் பழமதுரையை நோக்கிப் பெருங்கடல் பொங்கியழிக்கப்போதலைப் பாண்டியன்கனவில் ஆலவாயடிகள் முன்னதாகக் கூறி, அக்கடல் வலியைத் தன் வேலை யெறிந்து அடக்கும்படி அருளிச்செய்து மறைய, பாண்டியன் துயிலுணர்ந்ததும் அவ்வாறே கடல் பொங்கியழிக்கவருதலை அறிந்து சினந்து, தன் கைவேலை எறிதலும், அக்கடலுந் தன் ஆரவாரமடங்கி அவன் கால்விளிம்பை அலம்பிப்பணிவுடன் சென்றது"—என்பது. இப்புராணக்கூற்றின்படி "வடிம்

பலம்ப" என்பதற்கு, கடல் "பாண்டியன் கால்விளிம்பை அலம்ப என்பது பொருளாகும். இவற்ருல், வடிம்பலம்பநின்ற கதை, பாண்டியனதேயாதல் காணலாம்.

இரண்டாம் வரலாருகிய "அன்ஞெருகால், ஏழிசை நூற் சங்கத்திருந்தானும்" என்பதனைத் தனியே விளக்கிக்காட்டும் மேற்கோள் இப்போது கிடைத்திலதேனும், பாண்டிநாட்டில் இயற்சங்கமொன்றிருந்ததுபோல இசைச்சங்கமொன்றும் இருந்ததென்பதனை முன்னூல்கள் குறிப்பிக்கின்றன. திருச்சிற்றம்பலக்கோவையாரில் தலைவனைநோக்கி "நின்னுடைய தோள்கள் மெலிந்து நீ இவ்வாறு தற்குக் காரணமென்னே" என்று பாங்கன் முந்துற்று வினவுமிடத்து,

> "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
> உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
> துறைவாய் நுழைந்தனை யோவன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
> இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே"

எனவருகின்ற பாடல் ஈண்டுக் குறிப்பிடற்பாலது. இதனிற் பாங்கன் கூற்றில், 'சிவபிரானது உயர்ந்த மதிலையுடைய கூடலின்கண் ஆராய்ந்த தமிழின்றுறைவிடத்து நுழைந்தனையோ? அன்றி, ஏழிசையினது சூழலின்கட் புகுதலானே, இறைவனே! பெரிய வரை போலும் நின்தோள்கட்கு மெலிவுபுகுந்தெய்தியது என்னே? என்று கூறப்பட்டுள்ளது. ஈண்டுத் தலைவனது தோண்மெலிவுக்குத் தீந்தமிழின்றுறைவாய் நுழைதலையும், ஏழிசைச்சூழல் புகுதலையும் காரணமாகக் கூறுதலினின்று, இயற்சங்கத்தோடு இசைச்சங்கமொன்றும் முற்காலத்திருந்ததென்பது புலப்படுவதாம். இச்செய்யுளில், "துறைவாய் நுழைந்தோ, ஏழிசைச்சூழல் புக்கோ" என்னும் வினைகளால், அத்துறையுஞ் சூழலும்—முறையே இயல் இசைச்சங்கங்கள் என்பது, "கூடலினாய்ந்த" என்னுந் தொடர் தமிழின்றுறைக்கும் ஏழிசைச்சூழலுக்குந் தனித்தனி செல்லற்குரிய பொது விசேடண மென்பதும் தெரியவருதல் காண்க. இவ்வாறு இசைச்சங்கமொன்றிருந்த தென்பதும், இயற்சங்கத்திற்போலப் பாண்டியன் அவ் விசைச்சங்கத்திலும் தலைமை வகித்து நடத்தியவன் என்பதும்—'இசையளவுகண்டான்' எனப் பாண்டியர் வீற்றிருந்த சிங்காதனத்துக்குச் சாஸனங்கள் பெயர் வழங்குதலாலும் விளக்கமாகின்றது. இத்தகைய சங்கச்செய்தியே வாதவூரடிகளாலும் கூறப்பட்டதென்க. இவ்விசைச்சங்கத்தை அவ்வடிகள் கருதாதவராயின், இறையனர் களவியலில் இதுவே துறையில்வரும் மேற்கோட்செய்யுளாவ.

"வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் னோடவைவேல்
கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்
ஒண்டுறை மேலுள்ள மோடிய தோவன்றி யுற்றதுண்டே
தண்டுறைவா சிந்தை வாடிட வென்னீ தளர்கின்றதே"

என்னும் பாடல்போல, "அன்றியுற்ற துண்டே" என இவரும் வாளா கூறிவிடுவர் என்பது திண்ணம். அவ்வாறன்றி, ஒருபுதுச் செய்தியை அறிவிப்பவர்போல, "அன்றி ஏழிசைச்சூழல் புக்கோ'" என இயற்சங்கத்துடன் இசைச்சூழலையும் சேர்த்துக் கூறுதலால், அது நளவெண்பாவில்வரும் "ஏழிசைநூற் சங்கத்திருந்தானும்" என்பதன் உண்மையை நன்குவிளக்குவதென்றே துணியலாம். தமிழ்மொழியில், இசைநுணுக்கம் இந்திரகாளியம் பஞ்சமரபு பரதசேனாபதியம் செயிற்றியமுதலாக எண்ணிறந்த பழைய இசை நூல்களெல்லாம் இயற்சங்கத்துதித்தன என்பதினும், "ஏழிசைச் சங்கத்" தினின்று எழுந்தன என்பது பொருத்தமாகவும் தோற்றுகின்றது. இவற்றால், "ஏழிசைநூற் சங்கத் திருந்தானும்" என்னும் வரலாறும் பாண்டியனுக்கு ஏற்புடைத்தாதல் தெளியப் படும்.

இனி, மூன்றும் வரலாறு "நீள் விசும்பில் நற்றேவர் தூது நடந்தானும்' என்பது. இது, பாண்டியன் சரிதமேயாமென்பதற்குத் தக்க பிரமாணம் உண்டு. இறையனார் களவியலில் "ஓதல் காவல்" என்னும் ௩௫-ம் சூத்திரவுரையில், "அல்லதூஉம், தேவரும் அசுரரும் அமர்செய்த காலத்து, தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யான் எனப் **பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்தது** போல, இருவரின் மிக்குச் செய்தீரை ஒறுப்பலென்று சந்துசெய்வித்தலுமொன்று, இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்றலுடையனாகலானென்பது" என வரும் தொடர் இங்கே குறிப்பிடற்குரியது. இதனுட்கண்ட பாண்டியன் மாகீர்த்தி என்பான் தலைச்சங்கத்துக் கவியரங்கேறிய பாண்டியருள் ஒருவனென்பது, வேனிற்காதை முதற்கண் அடியார்க்குநல்லார் எழுதிய உரையான் அறியப்படும். இப்பாண்டியனே தொல்காப்பியம் புலப்படுத்தியவனென்பர். இவன் தேவாசுரத்தைத்[1] தீர்க்கும்பொருட்டுத் தூதுசென்றான் எனவே, அவ்யுத்தம் "நீள்விசும்பில்" நிகழ்ந்ததென்பதும், தேவர்க்கனு

[1] தேவாசுரம் - தேவர்க்கும் அசுரர்க்கும் நடந்தபோர் (இந் நூல், 35, 36 - பக்கங்கள் பார்க்க). இப்போரைப்பற்றித் **தைவாசுரம்** என்ற பழைய வடநூலொன்று வழங்கியதைக் காத்யாயன முனிவர் குறிப்பிட்டுள்ளார் என்பர் (Indian Antiquary, Vol. Lii, p. 23.

கூலமாகவே சென்றுனென்பதும் உய்த்துணரலாகும். சின்னமனூர்ப் பெரியசெப்பேடும் இச்செய்தியைக் குறிப்பிடுகின்றது.[1] இவ்வாறு, பழைய நூலாகிய இறையனர்களவியலுரையும் சாஸனமும் சுருக்கமாகக் கூறுதலினின்று, "நற்றேவர் தூது நடந்த" வரலாறும் பாண்டியனதேயாதல் கண்டுகொள்க.

இனி, நான்காம் வரலாறு ''பாரதப்போர் செற்றுனும்" என்பது. இக்கதையைப் பாரதத்தால் நாம் எளிதிலறியக்கூடும். மகாபாரதப்போரில், தமிழ்வேந்தராகிய சேரசோழபாண்டியர் மூவருமே பாண்டவர்க்கு வேண்டிய உதவி செய்தவரென்பது, தமிழ் நூல்களால் மட்டுமன்றி, வடமொழிப் பாரதத்தாலும் அறியப்பட்டது. இவருள் சேரனுஞ் சோழனும் பாரதப்போரில் முனைந்துநின்றதோடு, அச்சேனைகட்கு உணவளிக்கும் பெருங்கருமமும் பூண்டவர்களென்று தமிழ்நூல்கள் கூறும்.[2] தருமபுத்திரர் நடத்திய அசுவமேதத்தில், பாண்டியனை பப்ருவாகனன் விருந்தினர்க்கெல்லாம் உண்டியளித்து உபசரித்தவன் என்று மகாபாரதம் கூறுதலும் அறியத்தகும் (இந்நூல், பக்கம் - 77-8). பாண்டியன், பாண்டவர் சகாயனாய் அப்பெரும்போரிற் கொடும்போர்புரிந்த வரலாறு வில்லிபாரதம் ௧௬-ம் போர்ச்சருக்கத்தும், பதினேழாம் போர்ச்சருக்கத்து ௧௭-ஆம் பாடல்முதல் ௧௧௬-ஆம் பாடல்வரையும் கூறப்படுதலால் அறியலாம். இங்ஙனம் பாண்டவர்கள் பாரதப்போர்வென்றதற்குப் பெருந்துணையானவனாதலால், பாண்டியனை அப்போர்செற்றுனென் றுபசரித்தார். சின்னமனூர்த் தாமிரப்பட்டயமும் "மாரதர் மலைகளத்தவியப் பாரதத்திற் பகடோட்டியும்" என்று இங்ஙனமே உபசரித்துக் கூறுவதாம். இவ்வாறு பாரதப்போரிற் கைகலந்தவேந்தனை, வில்லிபுத்தூரார், "கடல்விளிம்பலம்பநின்ற கைதவன்" என்பர் (௧௬-ஆம் போர்ச் சருக்கம், பாட்டு-௧௮). அருச்சுனன் மணந்த சித்திராங்கதையின் தந்தையான பாண்டியனை "மகோததி வணங்குந் தாளான்" என்று முன்பும் அவர் கூறியிருத்தல் காண்க. இதனால் "பாரதப் போர் செற்றுனும்" என்னும் ஈற்று வரலாறும் பாண்டியனதேயாதல் கண்டுகொள்க.

---

[1] 'நிகரில்வென்றி யமரர்க்குப் - பலமுறையுந் தூதுய்த்தும்' என்பது அச்சாஸனத்தொடர் (S. I. I. Vol. ii, p. 454).

[2] சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, "ஓரைவர்" என்னும் பாட்டும், கட்டுரை காதை ௫௫ ஆம் வரியும், முறையே இவ்வரலாறு குறித்தல் காண்க.

இவ்வாறு, நளவெண்பாச் செய்யுளில் கண்ட வரலாறுகள் நான்கும் பாண்டியனுடையனவென்று பிரமாண வாயிலாகத் தெரிதலால், இப்பாட்டு வேற்றரசனொருவனைப் பற்றியதன்று என்பது தெளிவாகும். ஆயின், முதலிற்குறித்த மூன்று வெண் பாக்களுள் இடை நின்ற பாட்டில், "பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டாற். றிரித்தகோ இங்கிருந்த சேய்" எனப் பாண்டியனைக் கூறி விட்டமையால், அங்ஙனம் பாண்டிய னையும் அடுத்துச்சேரனையுங் குறித்தவர் மறுபடியும் பாண்டியனைப் புகழ்ந்தாரெனல், முறைப்பிறழ்வும் கூறியது கூறலு மாகாதோ எனின், அற்றன்று. மேற்காட்டிய வெண்பாக்களிலே, "பொன்னி யமுத" "போர்வாய்" என்ற விரண்டும் சோழனையும், "வென்றி நிலமடந்தை" என்பது சேரனையும் குறித்தனவாகவும், இம்மூன் றுக்கும் அடுத்த "ஆழிவடிம்பலம்ப" என்னும் வெண்பாப் பாண்டியனைப்பற்றியதாகவும் கோடலே. ஈண்டைக்கு இயை புடைய தென்க.

இவ்வாறாயின், சோழனைப்பற்றியதாகக் கூறிய "போர்வாய்' என்னும் வெண்பாவில்,' பருத்ததோர் மால்வரையைப் பண்டொரு காற் செண்டாற், றிரித்தகோ இங்கிருந்த சேய்" என, பாண்டி யன் மேருவைச் செண்டாலடித்த கதையைச் சோழனதாகக் கொண்டது பொருந்துமோவெனிற் கூறுவேன்: அவ்வரலாறு பாண்டியனுக்கு வழங்குவதினும் சோழனுக்கே அது பெருவழக் காக உள்ளதாம். கரிகாற்சோழன் என்பான், உலகமுழுதுந் தன்னடிப்படுத்து வரும்போது, இமயமலை "தன்னொடு எதிர்த்து விலக்குதலின் அதனைப் புறங்காண்டற்கும், அதன் வடபாலும் தனதாணை செறற்கும் சாத்தனதருளால் தான் பெற்ற செண்டி னலே அதனை "அடித்துத்திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தா" னென்பது கதையாதல் காண்க. இதனை—

"கச்சி வளைக்கைச்சி காமர்கோட் டங்காவன்
மெச்சி யினி திருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு"

என்னும் பழம்பாடலாலும்,

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி னிமயச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிப்பொறி பொறித்தது மறித்த பொழுதே"

என்னும் கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியப்பாடலாலும் உணர்க. இவ்வரலாறு சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதையில்,

"அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பசைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"

[அடி ௧௫ - ௧௮.]

என்பதனுரையிலே அடியார்க்குநல்லாரால் நன்கு விளக்கப் பட்டுள்ளது.

இனி, ஏனையரசர்க்கெல்லாம் ஒவ்வொருகவியே கூறிய புகழேந்தியார் சோழனுக்குமட்டும் இரண்டுகவி கூறுவரோ எனின், அவர் சோழனது வாயிற்பெரும்புலவரும் அவனாற் பெரிதும் அருமை பாராட்டப்பட்டவருமாதலால், அவ்வபிமானம்பற்றிச் சோழன் குலப்பெருமையை ஏனையரினும் சிறப்பிக்கவேண்டி, இங்ஙனங் கூறினரென்றே கொள்ளத்தக்கதாம். பிறவுயர்ந்த அரசரிருக்கவும் அவர்களைப் பிற்படவும் தமிழ்மூவேந்தரை முற்படவும் வைத்துக் கூறுதலால் புகழேந்தியின் தேசாபிமானம் புலப்படுவதோடு, அம்மூவேந்தருள்ளும், 'சேர சோழ பாண்டியர்" அல்லது "சேரபாண்டியசோழர்" என்னுந் தமிழ்வழக்குப்படி, சேரனைத் தலைமையாக்காது சோழனை முதலில் வைத்துப்பெருமைப்படுத்தலின் அவரது இராஜாபிமானமும் நன்கு வெளியாதலால், அவ்வபிமான மிகுதியானே சோழனை இரண்டுபாடலாற் குறித்தாரென்க.

இவ்வாறு, நளவெண்பாச் சுயம்வரகாண்டத்துவரும் ௧௩௪, ௧௩௫, ௧௩௬, ௧௩௭-ம் பாடல்களிலே, முதலிரண்டும் சோழர்க்கும், ௧௩௬-வது சேரனுக்கும், ௧௩௭-வது பாண்டியனுக்குமுரியனவாகக் கொண்டு பொருள்காணாது போயின், இப்பாட்டுக்கு வலிந்தேபொருள் கொள்ளவேண்டி வரும். பிறர் எழுதிய உரைப்படி, இப்பாட்டு யதுவமிசத்தரசனைக் குறித்ததென்பதும், "அக்குலத்தில் கீர்த்தி மானுன கார்த்தவீரியார்ச்சுன னென்போன், நருமதாநதி சங்கமத்தண்டையில் இராவணனை மீட்கும்படி வந்த இராக்கதரைக் கொன்று கடலில் ஆயுதங்கழுவினன்' என்றுள்ள புராண கதையொன்றை உட்கொண்டு "ஆழிவடிம்பலம்ப நின்றானும்" என்று கூறப்பட்டதென்பதுமே கவி கருதியனவாயின், அக்கதையை நன்குவிரிக்குமிடமாகிய இராமாயண உத்தரகாண்டத்தே கார்த்தவீரியார்ச்சுனப் படலத்தும், விஷ்ணுமச்சமுதலியதலைமைப் புராணங்களில் அவ்வர்ச்சுனன் மகிமையைத் தனியே உரைக்கின்ற

விடத்தும் அவன் கடலில் ஆயுதங்கழுவிய அக்கதை காணப்படலாமன்றே. இவற்றுள், மச்சபுராணத்து, அவனது கதைக்கூறுகளிலே, அவன் சமுத்திரத்தைக் கலக்கி ஆன்மகோடிகளை வருத்தினனென்பது மட்டுமே கூறப்படுகிறது. இனி, நாரதமுனிவருக்கும் விசுவாவசு என்னுங் கந்தருவனுக்கும் நடந்த சங்கீதவாதத்திலே அவ்வர்ச்சுனன் சங்கத்தின் றலைமை வகித்தானென ஒருகதையுண்டென்றும் அதனையுட் கொண்டு, "ஏழிசைநாற் சங்கத்திருந்தானும்" எனக் கூறப்பட்டதென்றும் அவர்கள் எழுதிய கதையும் அப்புராணங்களிலே என் பார்வையிற் காணப்பட்டிலது. ஆனல் அவ்வர்ச்சுனனது யாகசாலைகளில் நாரதமுனிவர் வந்திருந்து, அவன் புகழை வீணையில் அமைத்துப் பாடினரென்பதை மட்டும் மச்சபுராணம் கூறுகின்றது. இனி, "நீள்விசும்பில் நற்றேவர் தூது நடந்தானும்" என்பதனை, அவர்கள் ரஜியின் கதைக்கிணக்கிச் சொற்களையிழுத்து வலிந்துபொருள் கூறுவர். அஃதாவது, "இந்திரனல் அனுப்பப்பெற்ற தேவர்கள் யதுவமிசத்தரசனை ரஜியிடம் வந்து வேண்டி, அவனை அழைத்துக்கொண்டுபோய் அசுரர்களைக் கொல்வித்தனர்' என்றுள்ள புராண கதையாம். இதற்கியைய, நற்றேவர் தூதாகவர நீள்விசும்பிற் சென்றவனும் என்றும், பார்-அதம்-போர் = பூமி நாசமாகத்தக்க போரைச் செயித்தவனும்—என்றும் அத்தொடர்களை வலித்திசைத்துக் கொள்வர் அன்னேர். இவ்வாறு, நற்றேவர் தூதுநடந்தானும் என்பதற்கு, நற்றேவர் தூதாகவரத் தான் நடந்தானும் என்று பொருள் கூறுவதும், பார்-அதம்-போர் என்று பிரிப்பதும் பொருத்தமோ என்பதை அறிஞர் நோக்கக்கடவர். அன்றி, கண்ணபிரானுக்குத் தூதுநடந்த விஷயத்தை இணக்கி அவர்கூறிய வேறுரையும் நேரே செல்லும் பொருளாகாமை காண்க. இனி, இப்பாட்டுப் பாண்டியனதாயின், யாதவருக்குப் பாட்டில்லையே யெனின்—சுயம்வரத்தில், ஒவ்வொரு வமிசத்தையுங் கூறி அரசர்களைச் சுட்டாமல், நாட்டின் பெயரைக்குறித்தே அவர்களை கூறிச்செல்லுதலாலும், யதுவமிசத்தரசர் பலநாடுகளிலுமிருந்து ஆண்டவராதலாற் புகழேந்தி கூறிய மச்சம் மத்திரம் பாஞ்சால முதலியவற்றிலொன்று அவர் நாடாயிருத்தல் கூடுமாதலாலும் இக்கேள்வி ஏற்றதன்று. மேற்கூறியபடி உரையிட்டவர்கள், யானறியாத வேறு புராணங்களிலிருந்து அச்சரிதங்களைக் கண்டு எழுதியிருக்கவுங் கூடும். அங்ஙனமாயினும், இவ்வெண்பாவிலுள்ள எல்லாவரலாறுகளும் யதுவமிசத்தரசர்க்கு நேரே ஒட்டக் காணும். இவற்றால், யான் மேலே குறித்த பொருளே புகழேந்தியார் கருத்தென்பது நன்கறியப்படும்

# 35. மண்டலபுருடர்[1]

தமிழ்மொழியுள் வழங்கும் சொற்களின் பொருள்களை நன்கு விளக்கி முன்னோர் இயற்றிய நிகண்டுகளுள்ளே, திவாகரம் பிங்கலந்தை சூடாமணி என்ற மூன்று நூல்களும் சிறந்தவை என்பதும், அவற்றுள்ளும் பிற்காலத்தே பெருவழக்குப்பெற்றுப் பயில்வது சூடாமணிநிகண்டே என்பதும் தமிழ்மக்கள் பலரும் அறிந்தவை. பிற்கூறிய சூடாமணியை இயற்றியவர் **மண்டலபுருடர்**[2] என்பார். இவர் தொண்டை நாட்டவர் என்பது "நிகண்டுசூடாமணி தானுரைத்த-மண்டலவன் குடிகொண்டது நீடொண்டை மண்டலமே' எனவரும் தொண்டைமண்டலசதகத் தொடரால் அறியப்படும். இவரது ஊர், வீரபுரம் வீரையெனப்படும் பெருமண்டூர் என்பர். இவர் சைனசமயத்தைச் சார்ந்தவர். இவர் இயற்றிய நூல் "சூடாமணி நிகண்டு" என இக்காலத்து வழங்கப்படினும், நிகண்டுகளிற் சிறந்ததென்னும் பொருள்பட 'நிகண்டு சூடாமணி' என்னும் பெயர் ஆசிரியரால் இடப்பட்டு வழங்கப் பெற்றதாகும். இது, "மன்னிய நிகண்டுசூடாமணியென வொன்றுரைப்பன்" என இவ்வாசிரியரே பாயிரத்துக் கூறுதலாலும், 'நிகண்டுசூடாமணியின்......தொகை' என இவ்வியாசமுடிவிற் காட்டிய வெண்பாவாலும், 'நிகண்டு சூடாமணி தானுரைத்த மண்டலவன்' என முன் குறித்த சதகத்தொடராலும் விளக்கமாகும்.

மண்டலபுருடர், தம் ஞானாசாரியரும், திருநறுங்குன்றையில் ஜைன குருபீடத்தில் விளங்கியவரும், தமிழ்மொழியினும் சோதிட நூல்களினும் வல்லவரும், தமிழ்மொழியைப் பாண்டியனைப்போல வளரச்செய்து புலவர்களாற் கவிமாலை சூட்டிப் புகழப்பெற்றவருமாகிய **குணபத்திரர்** என்பாரது ஆணையின்படி, முன்னூல்களான திவாகரம் பிங்கலந்தைகளை ஆராய்ந்து இந்நிகண்டை இயற்றலாயினர் (பாயிரம்).

இந்நிகண்டு செய்யப்படுவதற்கு முன், அருகக்கடவுளுடைய சரித்திரங்களைக்கூறும் புராணமொன்றும் இவ்வாசியரால் இயற்

---

[1] **தமிழர்நேசன்**, தொகுதி-10, பக். 225-240 (1913)

[2] மண்டலபுருடன் என்ற பெயர்வழக்கு முற்காலத்து மக்கட்கு வழங்கி வந்ததென்பது சாஸனங்களால் அறியப்படுகின்றது (M.E.R. 206 of 1930-1; Ep. Vol, x, p. 15).

றப்பட்டிருந்ததென்பது இந்நூற்பாயிரத்தின் இறுதிச்செய்யுளால் அறியக்கிடக்கின்றது. இவர், கிருஷ்ணராயர் என்ற அரசர் காலத்தவராய் அவரால் அபிமானிக்கப் பெற்றவர் என்பது—

"கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிணராயன் கைபோற்
கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே" (9-10)

என இவ்வாசிரியர் புகழ்தலால் விளங்கும். இவர் தம்மை மண்டலவர் என நெடுக வழங்குகின்றார். வடமொழியிற் பெருவழக்குப் பெற்றுள்ள நிகண்டியற்றிவர் அமரசிங்கர் என்ற சைன ஆசிரியராதல் போல, தமிழிற் பெருவழக்கினதான நிகண்டியற்றியவரும் சைனராகவே இருத்தல் அறியத்தக்கது. இவை நிற்க. தமிழ்ச் சரித்திர ஆராய்ச்சிவல்ல அறிஞர் சிலர்—

"திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்
பரந்தசீர்க் குணபத்ரன்றாள் பணிந்தமண் டலவன்றனே"

என்னும் பாயிரவடிகளில் வரும் "திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்" என்ற விசேடணத்தைக் குணபத்திரனுக்குரியதாக்கி, வடமொழியில் மகாபுராணத்தின் பிற்பகுதியை கி. பி. 898–ல் எழுதி முடித்தவரும், இரட்டர் எனப்படும் ராஷ்டிரகூடரின் அரசனாகிய கிருஷ்ணராஜன் (II) காலத்தவருமான குணபத்திராசாரியரே மண்டலவர்க்கு ஆசிரியரும், அவ்வரசனே அவராற் புகழப்பட்டவனும் ஆதல்வேண்டுமென்றும், அதனால் சூடாமணியின் காலம் 9–ம் நூற்றாண்டேயாகும் என்றும் கருதுவராயினர்.* இங்ஙனம் அரசன் பெயரும் ஆசிரியர் பெயரும் மண்டலவர் கூறியவற்றுடன் ஒத்து வருவதால், அம்மூவரையும் ஒருகாலத்தவராகச் சரித்திரவறிஞர் பொருத்த முயல்வது இயல்பேயாம். ஆயினும், பெயர்களின் ஒற்றுமைகளான் மட்டுமன்றி ஏனை வரலாறுகளாலும் வழக்குக்களாலும் அக்கொள்கை வலியுறுவதா என்பதைச்சோதித்துக்கொள்ளுதலும் இன்றியமையாததாகும். அதனால் அம்முறையில் அன்னோர் கொள்கையை ஈண்டு ஆராய்வோம்.

சூடாமணி நிகண்டின் பாயிரக்கவிகளுள் "சொல்லொடுபொருளுணர்ந்தோன்" என்பது முதல், "செகமெனும்பளிங்கு" என்பது

---

* இக்கொள்கையை முதன்முதற் கண்டெழுதியவர், தஞ்சாவூர் ப்ரும்மஸ்ரீ டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி அவர்கள். இவர்களது வியாசம் அப்போது நடைபெற்றுவந்த தஞ்சைத் 'தமிழகம்' என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

வரை உள்ள மூன்றுபாடல்களால் மண்டலவர் தம்மாசிரியரான குணபத்திரரின் புகழ்களைக் கூறிமுடித்து, பின் தம்மைப்பற்றிக் கூறுங் கவியிறுதியிலே "திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்...... குணபத்திரன்தாள் பணிந்த மண்டலவன்றானே" என்று புராண மியற்றிய செய்தியைக் கூறுகின்றார். புராணஞ் செய்தவர் குண பத்திரராயின் முன்பாடல் மூன்றினுங் குறித்த தம்மாசிரியரது பெருமைச் செய்திகளோடு மிகச் சிறந்த இவ்விசேடத்தையுஞ் சேர்த்து அவர் கூறுமற்போகாரென்பதும், தம்மைப்பற்றிய கவி யுள் ஐயத்துக்கிடமான நிலையில் அச்செய்தியை அவர் குறிக்க நியாயமில்லை என்பதும் நோக்குவார்க்கெல்லாம் எளிதின் விளங் கக் கூடியன. அன்றியும் புராணஞ்செய்தலைக் குணபத்திரர்க்கு ஏற்றுமிடத்து மண்டலவர்க்கு வேறு சிறந்த விசேடணம் இல்லா தொழிதலுங் காண்க. மணிமேகலையின் முதற்பதிப்புக் குறிப்பில், மகாமகோபாத்யாய: ஸ்ரீ சாமிநாத ஐயரவர்கள்—" இந்நூலாசிரி யர், ஜைனமதத்தினரும் பெருமண்டூர் என்ற வீரபுரத்திருந்தவரும், **அருகதேவன் சரித்திரத்தைப் புராணமாகச் செய்தவருமாகிய மண்டலபுருடர்** என்பவர்" என்று இந்நூலாசிரியரைப்பற்றி எழுதியிருத்தல், யான் மேற்கூறிய கருத்தே செந்தமிழறிஞர்க்கு இயல்பிற்றோன்றக்கூடிய தென்பதைக் காட்டுகின்றது. இங்ஙனம் மண்டலவர் செய்த திருப்புகழ்ப் புராணம் யாது என்பதைப்பற் றிப் பின்பு கூறுவேன். மேலும் உத்தரமகாபுராணம் இயற்றியவர், வடநாட்டாரும் ஆரியமொழியிற் பாரங்கதருமான ஆசிரியராவர். மண்டலவர் குறித்த ஆசிரியரோ, தமிழ்நாட்டுத் திருநறுங்குன்றை யில் வாழ்ந்தவரும், தமிழ்மொழியிலும் சோதிடத்தும் வல்லவரும், தமிழை வளர்த்துப் புகழ்மாலை சூடியவரும் ஆவர். பிற்கூறிய ஆசிரியரைப்பற்றிய சிறப்புக்களில், அவரது வடமொழி ஞானப் பெருமையைப் பாயிரம் சிறப்பியாமையுங் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவ்விருவரும் ஒருவராதல் ஒருகாலுங்கூடாது என்பது திண்ணமென்க.

இனி, சூடாமணி நிகண்டின் உள்ளீடான வழக்குக்களை நோக்கி னும் அஃது அவ்வளவு பழமைக்கு உரியதன்று என்பதே விசத மாகின்றது. அவற்றை ஒவ்வொன்றாக எழுதுவேம்.

(1) திவாகரரும் பிங்கலரும் தங்காலத்து விளங்கிய பிரபல அரசர் வமிசங்களைக் குறிக்குமிடத்துத் தமிழ் மூவேந்தரையும்

சளுக்கியவரசரையும்பற்றிக் கூறிச் செல்கின்றனர்[1]. மண்டலவர் 9-ம் நூற்றாண்டவராயின், அக்காலத்தாட்சி புரிந்த அவ்வரசர் மரபை, முன்னோர் முறையைப் பின்பற்றித் தாமும் எடுத்துக் கூறியிருப்பரன்றோ? ஒருகால் தம்மையுந் தம்மாசிரியரையும் அபிமானித்த இரட்டருடன் சளுக்கியருக்குப் பகைமையுண்டாதலால் அவரைக் கூறாது சென்றிருக்கலாம் எனின், அவ்வபிமானத்தால் இரட்டர் பெயரையேனும் கூறியிருக்கலாமே? அன்றியும் தமிழரசருள் தமக்கேற்காச் சிலரை அவர்பாலுள்ள முனிவுபற்றிக் கூறாமல் விட்டிருத்தலும் வேண்டும். அதனால் இவ்வாதம் ஏற்புடைத்தன்று. மேலும் தாம் சார்ந்தொழுகும் மதவிஷயங்களைக் கூறுமுறையே, ஏனைவைதிக மதக் கடவுளரையும் அம்மதச் செய்திகளையும் கௌரவமாகவே கூறும்போக்கால் மண்டலவரது நடுநிலைத்திறம் யாவர்க்கும் நன்கு விளங்கக்கூடியது. ஆதலால் முன்னூல்களினும் பின்னூல்களினுங் கண்ட தமிழ்ச்சொற்களின் பொருளைக் கூறப்புக்க அவர், தம் விருப்பு வெறுப்புக்களைக்காட்டி ஒருநூல் செய்தனர் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாதென்க. இனி, சளுக்கர் பெயரை எடுத்துமொழியாதது மட்டுமன்றி அவ்வரசகுலத்தாரொருவர் இருந்தவர் என்பதனையே அறியாதவர் போலவும் மண்டலவர் காணப்படுகின்றார். திவாகரர்—

"கேழல் வேள்புல வரசர் கொடியே"

என்பதனால் சளுக்கியர் வராகத்துவசமுடையர் என்பதனைக் குறிப்பிட்டனர். இத் திவாகரசூத்திரத்தை மண்டலவர் எவ்வகையானோ பிறழக்கொண்டு—

"பன்னிய கேழல்வேழப் பதாகையும் புலவருக்கே"

என்று பாடிவிட்டனர். இவரது கருத்தின்படி, பன்றியும் யானையும் புலவர்க்குரிய கொடிகள்—என்பது பொருளாகும். இவ்வாறு புலவர்க்குப் பன்றிக்கொடியும் யானைக்கொடியும் உரியவை என்பது முன்னோரும் பின்னோருமான தமிழ்மக்களுக்குப் பெரிதும் புதுமையானதேயாம். ஏடுகளிலே—

---

1 'வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்' (திவா. பிங்.) 'கேழல் வேள்புலவரசர் கொடியே' (திவா) எனக் காண்க. வடவரசருள்ளே சளுக்கர் மட்டும் இவ்வாறு பழைய நிகண்டுகளிற் கூறப்படுவதற்குக் காரணம், அன்னோர் பழைய வேளிரின் மரபினராய்ப் பிற்காலத்தும் தமிழரசர்க்கு மகட்கொடுத்துச் சம்பந்தஞ்செய்து வந்தமைபற்றியே என்பதும் தமிழ்நாட்டின் பெருவேந்தராயிருந்தமைபற்றி யன்று என்பதும் அறியத்தக்கன.

கெழலவெளபுலவாசாகொடியே

என்று அமைந்திருக்கக் கூடிய திவாகர சூத்திரத்தைச் சளுக்கியர் வரலாறு தெரியவராமையால்,

கேழல்வேள(ழ)ம்புலவர்கொடியே

என்று சிலவெழுத்துக்களைக் கூட்டிக்குறைத்துப் படித்துக் கொண்டு மேற்குறித்தவாறு இவ்வாசிரியர் பாடிவிட்டனர் என்றே தோற்றுகின்றூர். முன்னூல்களைச் சோதித்துச் சீரிய நிகண்டியற்றிய மண்டலவர், இவ்வாறு மயங்க நேர்ந்ததற்குச் சளுக்கரசர் கூட்டமே மறைந்து மறக்கப்பட்டுப்போன காலவிசேடத்தில் அவர் தோன்றியதே காரணமாகவேண்டுமென்று மேற் கூறியவற்றினின்று நாம் கருதலாம். பிங்கலமுனிவர்—" தாரகாரியும் **சளுக்கியர் வேந்தனும்**, வேனிலாளனும் வேளெனலாகும் " என்பதனுல், வேள் என்பது முருகன், சளுக்கரசன், காமன் என முப்பொருள் உடையதென்று கூற, மண்டலவரோ—'வேளறுமுகன் காமன் பேர்' எனச் சளுக்கரசரைக் கூருது செல்லுதலும் மேற்கருத்தையே வற்புறுத்துவதாம்.

(2) **காரிகை** என்ற சொற்கு—அழகு, பெண், கட்டளைக் கலித்துறை என்ற பொருள்களைத் திவாகரரும் பிங்கலருங்கூற, அவற்றுடன் **ஒருநூல்** என்ற பொருளை அதிகமாக மண்டலவர் கூறுகின்றூர் (*11-187*). ஒருநூல் என்பது தமிழ்நூல்களுள் ஒன்று என்று கொள்ளற்குரியதே யன்றி, தமிழ்வழக்குப் பெருத பிற பாஷை நூலொன்றை ஒருசொற் பலபொருள்களில் ஒன்ருகக் கூறினரெனல் பொருந்தாததாகும். ஆயின், அந்நூல் அளப்பருங் கடற்பெயரினராகிய அமிதசாகரர் இயற்றிய **யாப்பருங்கலக் காரிகையைப்** பற்றியதென்பது சொல்லாமலே விளங்கும்.

"அமிதசாகர நெடுந்தமிழ்த்தொகுத்த **காரிகைக்** குளத்தூர்"

"அமித சாகர முனியை...தண் சிறுகுன்ற நாட்டகத்திருத்திச்
சந்தநூற் **காரிகை** யவனைத் கண்டவன்" (நீடூர்ச்சாஸனங்கள்)

"காடுஞ் செடியுமென் னேதமிழ்க் **காரிகை** கற்றதுவே"
(படிக்காசுப்புலவர்)

"காரிகை கற்றுக் கவிபா டுவதினும்
பேரிகை யடித்துப் பிழைப்பது நன்று" (பழமொழி)

என்பவற்ருல் யாப்பருங்கலக் காரிகையைக் காரிகை என்றே முன்னேரும் பின்னேரும் வழங்கல் காண்க." இதனுல் காரிகை நூல் தமிழ்நாட்டிற் பெருக வழங்கிய காலத்தே மண்டலவர் வாழ்ந்தவரென்பது விசதமாகும். அமிதசாகரர் 11-ம் நூற்றுண்டுத்

தொடக்கத்தில் விளங்கியவரென்பதைச் சாஸனப் பிரமாணங் களைக்கொண்டு முன்னே நன்கு விளக்கியுள்ளேன்.[1]

(3) 11-ம் தொகுதியுள் **சோமன்** என்ற சொற்கு—சந்திரன், அட்டவசுக்களுள் ஒருவன் என்ற பொருள்களைத் திவாகரரும் பிங் கலருங்கூற மண்டலபுருடர் அவற்றுடன் **ஒரு வள்ளல்** என்ற பொருளை அதிகமாகக் கூறினர். சோமன் என்ற வள்ளலைப்பற்றிப் பண்டையிலக்கியங்களினும் நிகண்டுகளினும் ஒன்றுங் காணமை யால், அவன் சங்ககாலத்தேனும் அதனையடுத்தேனும் இருந்தவ னன்றிப் பிற்காலத்துவாழ்ந்தவன் என்பதே பெறப்படும். அவ் வாறே சோழராதிக்கம் ஓங்கியிருந்த 12-ம் நூற்றுண்டில் சோணுட் டுத் திரிபுவனம்[2] என்னும் ஊரின் தலைவனுய் அப்பெயர் பெற்ற வள்ளலொருவன் பிரபலமாக விளங்கியிருந்தனன்.[3] கவிச்சக்கர வர்த்தியாகிய கூத்தரைச் சில காரணத்தாற் கொலைசூழ்ந்து பழி காரர் சிலர் தொடர்ந்தபோது[4] அப்புலவர் இவ்வள்ளலுடைய மாளிகையில் ஓடி ஒளிந்துகொண்டனரென்றும், அஃதறிந்த சோமன் அவரைக்கண்டு காரணம் உசாவியபோது கூத்தர்—

"அடையென்பார் தன்ளென்பா ரன்பொன் நிலாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேங்—கொடையென்ருல்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே! நின்கடைக்கீழ்
வந்துஞ்சோ மாதலான் மற்று"

என்று கூறினரென்றும் தமிழ்நாவலர்சரிதை கூறுகின்றது. "பூவார் **புவனையிற் சோழன்** றரும்பழி போனபின்பு" என்று கூத்தரே ஈட்டி யெழுபதில் இச்சரித்திரத்தைக் குறிப்பிடுதலும் அறியத்தகும். ஒருகால், இவ்வள்ளல், சோழனைக் கண்டுவருமாறு

---

1 Journal of Indian History, No. 13; சாஸனத்தமிழ்க்கவிசரிதம், 'அமிதசாகரர்' பார்க்க.

2 திரிபுவனம் என்னும் ஊர் கும்பகோணத்துக்கும் திருவிடை மருதூருக்கும் இடையில் உள்ளது.

3 இவன்காலத்து ஆட்சிபுரிந்த சோழன், இராசராசன் (II) என்பான். இவன் விக்கிரமசோழன் பேரனும் குலோத்துங்கன் (II) மகனுமாவன். கூத்தரால் உலாப்பாடப்பெற்றவருளொருவன்.

4 ஒருகாலத்துச் செங்குந்தரிற் பலர் தங்குலத்தைச் சிறப்பித்து ஒரு நூல் பாடித்தரும்படி தம்மரபினரான கூத்தரைவேண்ட, தம் மரபைத் தாமே பாடுதல் அபிமானத்தாற் செய்ததாகுமென்று அவர் மறுத்தனராக, 'இவர் குலாபிமானமற்றவர்' என்று சிலர் அவரைக் கொலைசூழ்ந்தனர் என்ப. இக்கதை விரிவைச் "செந்தமிழ்" உ-ந் தொகுதி, 409-ம் பக்கத்துக் கண்டுகொள்க.

அவனது அரண்மனைக்குச் செல்ல, அப்போது அவ்வரசனுடன் அளவளாவி விடைபெற்று வெளியே வந்துகொண்டிருந்த தன்முன் கூத்தர் எதிர்ப்படவும், சோமன் அப்புலவரை நோக்கி "அரசருடைய சமயம் யாது" என்று உசாவப்—புலவர் "தன் தேவியர்க்கு வேந்தன் எடுத்துரைத்துக் கொண்டிருப்பது உன்னுடைய பெரும்புகழே" என்னுங் கருத்துப்பட—

"தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் முனுரைப்ப
துன்னுடைய கீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமா ருரைக்க வினி"

என்று கூறினர் என அத் தமிழ்நாவலர்சரிதை மற்றொரு செய்தியுங் கூறுகின்றது. இவற்றால் இவ்வள்ளல் தன் காலத்தே கவிச்சக்கரவர்த்தியாலும் புவிச்சக்கரவர்த்தியாலும்[1] அருமையாகப் பாராட்டப்பெற்ற பெருமைவாய்ந்தவன் என்பது விளக்கமாகும். இவ்வள்ளலின் கொடைச்சிறப்பினையே—"பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டிற் **சோமன்** கொடையருமை - புல்லரிடத் தேயறிமின் போய்" என்று பிறரும் பாராட்டுவாராயினர். இத்தகைய பெருமைவாய்ந்தவனையன்றி வேறு சோமவள்ளல் யாண்டுங் கேட்கப்படாமையால், "சோமனோர் வள்ளலிந்து" என்று மண்டலவராற் கூறப்பட்டவன், மேற்குறித்த புவனைச் சோமனே யாவன் என்க. எனவே இவ்வாசிரியர் காலமும் 12-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதென்பது தேற்றமாம்.

(4) மேற்குறித்த சரித்திரக்கூறுகளாலன்றிச் சூடாமணிநிகண்டிற்கண்ட சொற்பொருள் வழக்குக்களை நோக்குமிடத்தும்—சிந்தாமணி சூளாமணிகளின் காலமான 9-ம் நூற்றாண்டுக்கு அது சிறிதும் உரியதன்று என்பது புலப்படும். உதாரணமாக :—

**தாளம்போடுதல்:—'போடுதல்' என்ற சொல்வழக்கு மிகப் பிற்காலத்தது; 'போகடுதல்' என்பதே பழைய வழக்கு:"வண்டுபோகட்ட மலர்போல் மருண்மாலை-உண்டு போகட்ட வுயிர்க்கு" (நளவெண். சுயம். 119) எனக் காண்க. போடுதல் என்ற வழக்கு—'அவன்திருக் களத்திலல தலங்கள் போடேன்' (சேதுபு. அகத். 16). 'கடுக்கையைச் சிறிதும் போடா வல்விக்கொண்டு (இரகுவமி. ஆற்றுப். 17) எனப்**

1 சோழனது வாக்கான செய்யுளொன்றினும் "துலையிலங்கிய கொடைச் சோமன்வாழ் புவனையில்" என, அவனால் சோமன்கொடை சிறப்பிக்கப்பட்டிருத்தல் காண்க (தமிழ்நா. 175).

பிற்பட்ட இலக்கியங்களிலேயே பயிறல் காண்க. 'வீரமுங் களத்தே போட்டு' (கம்பரா, கும்பகரு. 1) எனக் கம்பர்வாக்காக அச்சுப் பிரதியிற் காணப்படுவது, 'வீரமுங் களத்தே விட்டு' என்றே ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுதலின், அது பிழைம்பாடமே என்க.

கெடிமன்னர்:—'கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிண ராயன்' (9–10) என்று மண்டலவர் தங்காலத்தரசனைச் சிறப்பிக்கின்றார். கெடி என்பது கீர்த்தி, வல்லமை, சீமை என்ற பொருளில் வழங்கும் தெலுங்கு மொழி. 'கெடி கொண்டதலமாறு' எனத் தாயுமானவரும் (சித்தர், 72) இப்பொருளில் வழங்கல் காண்க. விஜயநகர வேந்தர்பெருமானான கிருஷ்ணதேவராயர் தாமியற்றிய ஆமுக்தமால்யதா என்ற தெலுங்குக் காவியத்தில், கெடிமன்னரு என இத்தொடரைப் பலமுறை ஆண்டுளார் என்பது குறிப்பிடத் தக்கது.

மாயாவாதம்:— அறுவகைச் சமயங்களை எண்ணுமிடத்து— உலகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்ரம் என்று சூடாமணி கூறும். இத்தொகை திவாகரம் பிங்கலந்தைகளிற் கண்டவற்றுடன் வேறுபட்டதாகும். இதனுள் மாயாவாதம் என்பது அத்துவிதக் கொள்கையாம். இதனை அறு சமயங்களுள் ஒன்றாகப் பழைய நிகண்டுகள் ஆளாமையும், சிவஞான சித்தியார் முதலியவற்றில் மண்டலவர் கூறிய முறையே உண்மையும் குறிப்பிடத்தக்கன.

சாயல்:—'மென்மை' என்றே இச்சொற்குத் திவாகரம் பிங்கலந்தைகள் பொருள்கூற, மென்மையோ மேன்மையோ என்ற ஐயத்தால் "சாயலென்பது மேம்பாடு தருமழ குடனே மென்மை" எனச் சூடாமணி கூறும். இதுவும் பிற்பட்டெழுந்த வழக்கேயாம். இவ்வாறே—

அரக்கு:—கள் (5-66. வடநாட்டு உருதுச்சொல்)
மையம்:—மத்தியம் (தெலுங்குச் சொல்)
ஒற்றித்தல்:—ஒற்றையாக்குதல்(12-2)
அருந்தல்:— அருமை (11-202)
தராசு:—துலாக்கோல் (இந்தி)
சித்திரபானு:—ஒருவருடம்

என்பன முதலாக எண்ணிறந்த பிற்பட்ட வழக்குச் சொற்களும் பொருள்களும் உள்ளன. குணபத்ரன் (பாயி. 6) சரச்வதி (12-74) மாகேச்வரி (12-67) என்பன முதலிய வடமொழிக் கூட்டெழுத்துக்களை மிகுதியும் ஆளுமுறையும் இதன்பழமையைக் குறிப்பதாகாது. இவற்றால் மண்டலவர் முற்கூறியபடி, 12-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டவர் என்பதே தெளிவு.

மேற்கூறியவாறு மண்டலவர் 12-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டவராயின், அவர்கூறிய கிருட்டிணராயர் என்ற அரசரும் குணபத்திரர் என்ற ஆசிரியரும் பிற்காலத்தவராக வேறு யாவர் உளர்?

என்பது அடுத்தெழுங் கேள்வியாகும். இதற்குத் தக்க விடை பின்வருவன:—விஜயநகர ஏகாதிபத்தியத்தை ஆட்சிபுரிந்த அரசருள் கிருஷ்ணதேவராயர் கி. பி. 1509-முதல் 1530-வரை விளங்கினவரென்பதும், இவ்வரசர் கன்னட ஆந்திரதேசங்களோடு தமிழ்நாடு முழுமையும் ஆட்சி புரிந்தவரென்பதும் சரித்திரப் பிரசித்தமானவை. இவர் கன்னடராயினும் தமிழ்க்கவிஞரை அபிமானித்து அவராலும் பெரிதும் புகழ்ந்து பாடப்பெற்றவர்[1]. இவ்வரசர்பெருந்தகையே மண்டல புருடராலும் குறிக்கப்பட்டவராவர் என்க. கிருஷ்ணராயர் என்று இந்நிகண்டுடையார் பெயர்கூறுதல் போலவே, புலவர் பலராலும் கூறப்படுவர். 'கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிணராயன்' என மண்டலவர் வழங்கியவாறே, இவ்வரசர் பெருமான்'கெடி மன்னரு' என்ற தொடரைத் தம்நூலுள் அடிக்கடி ஆளுதலும் குறிப்பிடத்தக்கது. ஆயின், இவ்விராயர் காலத்தே குணபத்திரர் என்ற சைனாசாரியரொருவர் சிறந்துவிளங்கினரோஎனிற் கூறுவேம். சென்னை ராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையில், தமிழ்வசன நடையிலமைந்த "யதிதர்மம் சிராவக தர்மம்" என்னும் கிரந்தமொன்று உள்ளது. இது தக்க புலவரால் சிறந்த நடையில் இயற்றப்பட்டிலதாயினும், தங்காலத்துச் சைனமதவரலாறுகளை நன்கறிந்த சமணரொருவரால் எழுதப்பட்டதென்று கொள்ளத் தடையில்லையாம். இந்நூலில் "பண்டிதர் வயணம்" என்னுந் தலைப்பின் கீழ்வரும் விஷயத்துள்—"ராயர் **சந்ததிகளில் விஷ்ணுதேவராயர் அதிகாரத்தில் குணபத்ராசாரியர் நாளையில்** அர்ச்சகத் தொழில் செய்யா நின்ற இந்த ஜைனப் பிராமணர்கள்" என்ற தொடரும், சித்தாமூரினரான இக்குணபத்திரர் தமிழ்நாட்டில் ஜைனமார்க்கத்துள் நிகழ்ந்த சில மாறுபாடுகளை நீக்கி அம்மத தர்மங்களைக் காப்பதற்காகப் பண்டிதர்களை நியமித்தார் என்ற செய்தியுங் காணப்படுகின்றன. இதனால் இராயர்காலத்தே குண பத்திரர் எனப் பெயரிய ஆசிரியரொருவர், தென்னாட்டிற் சிறந்த ஜைனஸ்தலமான சித்தாமூர் மடத்துக்குத்

---

1 கிருஷ்ணதேவரை, குமாரசரசுவதி (223) தத்துவப்பிரகாசர் (225) நாகரசநம்பி (189) என்ற புலவர்கள் பாடியிருத்தலைத் தமிழ் நாவலர் சரிதையாலும், ஞானப்பிரகாசர் பாடியிருக்குஞ் செய்தியைத் தொண்டைமண்டல சதகத்தாலும் (40), அரிதாசர் புகழ்ந்துள்ள செய்தியை அவரியற்றிய இரு சமயவிளக்கப்பாயிரத்தாலும் அறியலாம். கிருஷ்ணராயன், கிருஷ்ணபூபாலன், கிருஷ்ணமகராயன் என இவ்வரசர் அப்பாடல்களில் வழங்கப்படுவர்—தமிழரும் ஆந்திரரும் என்ற கட்டுரைகாண்க (இத்தொகுதி) பக். 328-333.

தலைவராக விளங்கியிருந்தவர் என்ற வரலாறு நன்கு தெரியலாம்[1]. முற்குறித்த தொடரில் 'விஷ்ணு தேவராயர்' என்று பெயர்காணப் படினும், அப்பெயர் கொண்டவரொருவர் தென்னாடு ஆண்ட இராயர்வரிசையுட் காணப்படாமையின், அது கிருஷ்ணதேவராயர் என்பதன் மாறுபாடாய் எழுதியோரால் நேர்ந்த வழுவாகவே கொள்ளக் கிடக்கின்றது. இவற்றால், மேற்குறித்த கிருஷ்ணதேவ ராயரும் குணபத்திரருமே மண்டலவர் காலத்து அரசரும் ஆசிரியருமாக வேண்டும் என்பதும், இரட்டவரசனையும் உத்தரமகா புராணஞ் செய்த ஆசிரியரையும் அவர் காலத்தவராகக் கொள்ளுதற்கு பிற சரித்திரக் கூறுகளும் சொற்பொருள் வழக்குக்களும் சிறிதும் பொருத்தமுறாமற்போதலும் செவ்வனே உணரலாம்.

இனி, மண்டலவரே 'திருப்புகழ்ப்புராணம்' செய்தவராதல் வேண்டுமென்று முதலிற் குறித்தேம். இதனையே தம் நிகண்டின் பத்தாந்தொகுதி யிறுதியிலும்—

**"இறந்தது நிகழ்வு மற்றை யெதிர்வுமாம் புராணஞ்செய்தோன்**
**அறந்தரு குணபத் ரன்று ளரணெனச் சரண மானேன்**
**மறந்தலைப் படாதவீரை மன்னன் மண்டலவன் செய்தான்**
**சிறந்திடு மொலிபற் றும்பேர்ச் செய்யுளோம் பத்தி ரண்டே"**

என்று மண்டலவர் கூறுவர். இப்பாட்டின் முதலடியிறுதியிலுள்ள 'புராணஞ் செய்தோன்' என்ற தொடர், இரண்டாமடி இறுதியில் வரும் 'சரணமானேன்' என்பதுபோல, மண்டலவன் என்பவரைப் பற்றிய விசேடணம் என்பது நோக்குவார்க்கு எளிதின் விளங்கக் கூடியது. அன்றி அத்தொடர் குணபத்திரர்க்கு உரியதாயின்[2] 'புராணஞ் செய்த...குணபத்ரன்' என்று ஐயத்துக்கிடமின்றிப் பாடப்பட்டிருக்கும். அன்றியும் இரட்டன்காலத்துக் குணபத்திரர் மகாபுராணத்தின் பிற்பகுதியே செய்தவராதலால், ஆதி தீர்த்தக

---

1 இந்நூலுள் அவ்விராயர்காலம் கலிபிறந்த1200-ஆம் வருஷம் என்று ஓரிடத்தும், 'ஐந்நூற்றுச்சில்லரை வருஷங்கட்கு முன்பு' என்று மற்றோரிடத்தும் எழுதப்பட்டுள்ளன. இவ்விரண்டும் தவறானவைகளே. இதனால் சரித்திரவுண்மையை இந்நூலெழுதியவர் தெரிந்தவரல்லரென்பதும், பரம்பரையில் வழங்கிய செய்திகளையே குறிப்பிட்டவர் என்பதும், 'இராயர்காலத்தில் குணபத்திரரொருவர் தென்னாட்டிருந்தவர்' என்ற அவ்வளவே இவரெழுத்தினின்று நாம் கொள்ளற்குரியது என்பதும் விளங்கும்.

2 பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் வாழ்ந்த குணபத்திரர்க்குத் 'திருப்புகழ் புராணஞ்செய்தோன்' போன்ற அடைமொழிகளை ஏற்றியுரைப்பது தகுமா மண்டலபுருடர்க்கு ஏற்றியுரைப்பது தகுமா என்ற ஐயம் உள்ளது. மண்டல

ரரின் வரலாறான இறந்த செய்தியும் அவர் தம் புராணத்திற் பாடினர் எனல் இயையாமை காண்க. எனவே, முன்பு விளக்கிப் போந்த 'திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்' என்பதும், மண்டலவரை நோக்கியதென்பதே தெளிவு. இனி, இம்மண்டலவர் செய்த 'திருப்புகழ்ப் புராணம்' முக்கால வரலாறுகளையும் கூறுவதென்பது, மேற்பாட்டின் முதலடியால் தெரியலாம். திருப்புகழ்ப் புராணம் என்பதற்கு அருகதேவனுடைய புகழ்களைக் கூறும் புராணம் என்பது பொருள். திருநூற்றந்தாதி, திருக்கலம்பகம் என்னும் இடங்களிலும் **திரு** என்பது ஜினசம்பந்தமானதையே குறித்தல் காண்க. ஜினதர்மத்தைத் **திருவறம்** (7-66) என்று இவ்வாசிரியருங் கூறுவர். இப்புராணம் தீர்த்தகரர்களது சரித்திரங்களை விரித்துக் கூறுவதும், இலிய மணிப்பிரவாள நடையில் அமைந்ததும், ஆசிரியர் பெயர் அறியப்படாததுமான **ஸ்ரீபுராணம்** போலும். இது மேற்பாட்டிற் கண்டபடி, இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்கால வரலாறுகளையும் சைனசமயமுறையிற் கூறுவதேயாகும். அன்றியும், திவாகரரும் பிங்கலரும் கரும பூமிக்குரிய அறுதொழில்கள் இன்னவை என்பதுமட்டிற் கூறிச் செல்ல மண்டலவர் தம் நிகண்டில்—

"வரைவொடு தொழிலே வித்தை வாணிக முழவே சிற்பம்
உரைசெயும் போக பூமி யொழிவினி லாதி காலம்
விரைசெறி பிண்டி வேந்தன் விதித்தலி னஃதே யம்ம
கருமபூ மியெனும்பேர் கண்டதொன் றுண்டு நூலின்"

---

வர்க்கு உரைப்பதை ஆட்சேபிக்கின்றனா ஸ்ரீ புராணத்தை மிக வழகாகக்குறிப்புக்களுடன் ஆராந்ய்ந்துபதிப்பிட்டவித்வான் ஸ்ரீவேங்கடராஜு ரெட்டியார் அவர்கள் (முகவுரை). இவர்கள் ஆட்சேபங்கள் ஏற்புடையவாயின், திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்...குணபத்திரன் எனக் குணபத்திரர்க்கே ஏற்றுக்கொள்ளத் தகும். திருப்புகழ்ப் புராணம் என்பது ஸ்ரீபுராணத்தைக் குறிப்பதேன். உத்தரமகா புராணஞ் செய்த வடநாட்டுக் குணபத்திரசாரியரைத் தென்னாட்டவராகக் கருத இடமில்லை என்பதும் முன்னமே கூறப்பட்டன. ஆயின் பிற்காலத்தவரான ஆசிரியர்க்குக் குணபத்திரப் பெயர் எப்படி வந்தது என்பது கேள்வியாகின்றது. 8-ம் நூற்றாண்டினரான குணபத்ராசாரியர் செய்த முதனூலைத் தமிழ்மணிப்பிரவாள நடையில் எழுதியவராதலால் அவ்வாசாரியர்க்குச் சிறப்புப் பெயராகக் குணபத்திரப் பெயர் அமையலாயிற்றென்ற விடை பெரிதும் ஏற்பதாகும். காவியாதரிசம் என்ற வடமொழியலங்கார நூலியற்றிய தண்டியாசிரியர் பெயரை அதனை மொழிப்பெயர்த்த பிற்காலத்துத் தமிழாசிரியர்க்கும் வழங்குதலால் என்க.

என்று விரித்துக் கூறினர். இவ்விஷய முழுதும்—ஸ்ரீ புராணத்தில் ஆதி தீர்த்தகரரது காலத்து நிகழ்ந்த விசேடங் கூறுமிடத்து—"பரதக்ஷேத்ரம் ஷட்கர்மங்களாலே ப்ரவ்ருத்தித்தலின் போகபூமி என்னும் பெயர்தவிர்ந்து கர்மபூமி என்னும் பெயர்பெற்றது" "பகவான் ஜனங்கட்கு ஜீவனோபாயமாக உழவு தொழில் வரைவு வாணிபம் வித்யா சில்பம் என்னும் ஷட்கர்மங்களையும் உபதேசித்தருளி" எனவரும் வாக்கியங்களோடும் ஒப்பிட்டு அறிதற்குரியது. "ஆதிகாலம்.........பிண்டி வேந்தன் விதித்தலின்" என்பது ஆதி தீர்த்தகரரது காலச்செய்தி என்பதைக் குறித்தபடியாம். "திருப் புகழ்ப் புராணஞ் செய்தோன்' என்றதற்கேற்ப, ஸ்ரீபுராணம் மண்டலவரால் இயற்றப்பட்டதோ என்று சங்கித்தற்கு மேற்காட்டியவை குறிப்புக்களாகும். இனி, இந்நிகண்டின் மொத்தப்பாடற்றொகை இவ்வளவு என்பது—

"நிகண்டுசூ டாமணியி னின்ற முறையே
அகன்ற விருத்தங்க ளாய்ந்து—புகன்றவெலாம்
ஈரைஞ்நூற் றீரைம்பா னீரைந்து மூவைந்துஞ்
சோர்வின்றி யாய்ந்த தொகை"

எனப் பழைய ஏடுகள் சிலவற்றிற் காணப்படும் வெண்பாவால் அறியப்படுகின்றது. இப்பாட்டின்படி, 1125-விருத்தங்கள் மண்டலவர் பாடியவை என்பது விளங்கும். ஆயின் இப்போதுள்ள அச்சுப்பிரதிகளில் 1195–விருத்தங்கள் காணப்படுகின்றன. ஆக 70-பாட்டுக்கள் மிகையாக அமைந்துள்ளன என்பது பெறப்படும். இம் மிகைப்பாடல்கள் பாடகர் முதலியோரால் ஆங்காங்குப் பிற்காலங்களிற் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டும்.[1]

இனி, சூடாமணியுள்ளமுடையான் என்ற சோதிடநூலொன்றும் மண்டலவ ரியற்றியவரென்று அந்நூற்பதிப்பிலும் வேறுசிலர் எழுத்துக்களிலும் காணப்படுகின்றது. சூடாமணி என்னும் விசேடணம், நிகண்டுக்கும் உள்ளமுடையானுக்கும் ஒப்ப அமைந்திருத்தல்கொண்டு அவற்றின் ஆசிரியரும் ஒருவர் என்று சிலர் கருதலாயினர். அவ்வுள்ளமுடையானாசிரியர் கடலூராரியன் திருக்கோட்டி நம்பி என்று அந்நூலிறுதிச் செய்யுளால் நன்கறியப்படுதலால், அது தவறுதல் அறியத்தகும்.

1 இம்மிகைப்பாடல்கள் பெரும்பாலும் 11-ம் நிகண்டிற்றுன் சேர்க்கப்படலாயின என்பது, சென்னை மியூஸியத்தைச் சேர்ந்த இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள சூடாமணி நிகண்டுப் பிரதிகளைச் சோதித்ததினின்று வெளியாகின்றது. (A Descriptive Catalogue of the Tamil Manuscripts, 1912—Vol. I, pp. 11, 16).

# மேற்கோட் செய்யுளகராதி


அசைவிலூக் - 472
அடகுபுலால் - 227
அடல்வேலா - 169
அடலுடையிரா - 30
அடிசிற்கினி - 211
அடையென்பார் - 479
அதன்மருங்கு - 281
அந்தமிலழ - 20
அப்பெயர்மெய் - 394
அப்பொருள்கூ - 400
அமிழ்திற்றே - 64
அரவணைச்செல் - 274
அரனுரனை் - 276
அருளொன்று - 165
அரையளவு - 132
அல்லியம்பூ - 44
அலைவட்டங் - 17
அவ்வரங்கொ - 31
அவர்க்கேயெழு - 308
அவன்றனுட் - 81
அவனிமுழு - 324
அவைதாம் குற்றிய - 128
அன்னவரிய - 190
அன்னவாங்க - 113
ஆக்கமதர் - 165
ஆடுவதுஞ்செக் - 407
ஆமேயமர - 45
ஆய்ந்தவரும - 45
ஆயிரவேலி - 250
ஆயினரவ் - 29
ஆழிமழைக் - 190
ஆள்விளைமு - 22
ஆலில் பெண்டிர் - 149
இடனில்பரு - 216
இந்திரன்கலை - 327
இந்திரன்பூசை - 26
இப்பர்கவிப் - 158
இமயவில் - 50
இருண்முழுது - 321
இருபாற்சேனை - 39
இலங்கையெறி - 430
இளைப்பாயிளையா - 307
இறந்ததுநிக - 483
இறைமொழிந் - 420
ஈன்றுபுறந் - 169
உங்கண்மனந் - 334
உங்கையிற்பின் - 199
உண்டவயிற் - 331
உண்டாலம்ம - 217
உந்துதிரைக் - 51
உப்பக்கநோ - 56, 209
உபசாந்தசித் - 275
உருமிடிப்பு - 17
உழவுதொழி - 145
உழையரினுண - 27
உள்வழியுணரா - 25
உள்ளுவதெல் - 166
ஊக்கமுடையா - 298
ஊருணி நீர் - 215
ஊழித்துலுக் - 331
ஊழையுமுப் - 165
எகரஒகரத் - 122
எஞ்சாமரபின் - 28
எண்ணருநல - 21
எப்பொருளாயி - 400
எய்தயோசனை - 32
எல்லையினுண - 26
எத்கண்டறி - 173
என்றுகூறவே - 438
ஏர் தருமேழு - 51
ஏரணமுருவ - 152
ஏரியிரண்டுஞ் - 225
ஏழியன்முறை - 84
ஏற்றுன் புள் - 276
ஏனைக்கலிங் - 422
ஐந்தவித் - 25
ஐயாறு நூறு - 205
ஐயிருபதோச - 17
ஒத்ததறிவா - 215
ஒப்புரவினால் - 216
ஒடுங்கிரோதி - 386
ஒருநாளெழுநா - 227
ஒருவரொருவர்மே - 317, 425,
445,
ஒருவரொருவரின் - 424
ஓங்கியுலக - 168
ஓரைவரீண்ர்ம் - 87
கச்சிவளைக்கை - 471
கஞ்சன்வஞ் - 66
கடல்கிளர்ந் - 173

கடலுமலையு - 59
கடவுள்வாழ்த் - 436
கடத்கலிங்க - 436
கண்கொண்டான் - 416
கண்டகம்பற் - 237
கண்டீரென் - 111
கண்டுகாணுன் - 425
கதிர்முடிவேந் - 23
கமையடைந் - 43
கரடத்தான் - 445
கருதிடுஞ்சே - 31
கலிங்கமிழந் - 329
கலிங்கமேழ் - 406
கலையின்வென்றி - 300
கறுப்புறுமனை - 302
கறுவொடுமொ - 299
கன்னின்ரு - 172
கனைக்குமதிர் - 193
காஞ்சியிருக்க - 409
காணப்பட்ட - 138
காதலியைக் - 240
காப்பியத்தொல் - 97
காமநிலையுரைத் - 112
காமப்பகுதி - 53
காமஞ்சான்ற - 393
கார்நிறக்கோ - 43
காவலரீகை - 406
காவற்பூத - 410
கிரிபோல்வி - 332
குமரியொடுவட - 380
குரங்கினேற் - 118
குரங்குகள் - 35
குரங்குமேனி - 175
குல்லைக்கண்ணி - 315
குலநினையல் - 58
குழவிமருங் - 53
குற்றியலிகர - 125
குன்றநோக்கி - 269
குன்றேறி 298
கூடாரைவெல் - 195
கூட்டிஞர்கிளி - 448
கூடற்குடா அது - 267
கெடுகசிந்தை - 171
கெடுவாகவை - 216
கேசவேநஹநதே (சுலோ) - 95
கேட்டையென் - 111
கைதொழுதே - 286
கைம்மாறு - 215
கொங்குவிம்மு - 150
கொடிமுன்வரி - 54
கொடும்பைமா - 255
கொண்டுகுடங் - 45
கொலைதுமித் - 37
கொள்ளிடக் - 279
கோட்டந்திரு - 445
கோட்டிளந் - 300
கௌவித்தனைய - 13
சக்கரமுதற் - 423
சகரக்கிளவி - 103
சரணஸரோருஹ (சுலோ) - 415
சரநிரைத்தா - 445
சனகன்மொழி - 19
சார்ந்துவரி - 131
சானகிதன்னை - 29
சிந்திக்கநெஞ் - 68
சிற்றஞ்சிறு - 199
சிற்றில்நற் - 174
சிறைவான் - 468
சீமாலிகன - 269
சீரணியுந் - 89
சீராருந்தெ - 295
சுழல்விழித் - 19
சூரியனுர் - 19
செங்கண்மா - 66
செண்டாடுந் - 29
செண்டுகொண்டு - 178, 471
செந்தாமரைப் - 232
செருவெங்கா த - 182
செறிகழல் - 36
சேதுவின்கீழ் - 31
சேரனெடுஞ் - 253
சொல்லுஞ்சுவட் - 303
ஞாகாரைமுத - 117
ஞநமவ - 102
த்ரிநேத்ரபல்லவஞ் (சுலோ)4 - 15
தசயோர்ண (சுலோ) - 32
தடங்குலவு - 445
தண்ணுர்மலர் - 421
ததோஹேமமயந் (சுலோ) - 8
தம்பாவில்ல - 400
தயரதனும்பு - 19
தருணமங்கை - 429
தருமமுமீதே - 170
தள்ளாயசம் - 50
தளத்தொடும் - 426
தன்னுடையதே - 480
தனிமையாதல் - 147

தாழ்சடையு - 275
தாளாண்மை - 335
திங்களினிளங் - 322, 382
திண்ணமுடன் - 69
திருவளரும் - 294
திருவிழந்ததென் - 258
திரைக்கடற் - 289
துளிநீர்கூட்ட - 234
தூதைந்துநா – 326
தெலிங்கவிமன் - 421
தென்புலத்தார் - 212
தென்னலைச்சிரீ - 208
தேவர்கோனிட்ட - 223
தேவாசுரரா – 35
தேனுக்குநீ - 274
தொட்டிவிருக்க - 336
தொண்டையர்க்க - 230
தொல்லைவடிவின - 123
தொழுதுமன்னரே - 414
நடையினின்று - 20
நடைவயப்புர . 412
நயனுடையா - 216
நரம்பெழுந் – 172
நல்லிறைவன் - 160
நாராயணைய - 429
நான்மறையின் - 205
நிகண்டுருடா - 485
நிலைச்செண்டும் - 299
நிறையினுற்கு - 57
நீதமுடன் - 43
நீர்வாழி - 337
நீரின்வந்த - 160
நீணிறவண் - 60
நெடியோன்மய - 3
நெடுநுகத்துப் - 161
நெருநற்றுச் - 227
நேரிழையார் - 134
நேராவன்றேன் - 314
பஞ்சிதன்சொல் - 148
படைமயக்குற்ற - 330
பண்டையோர்நா - 427
பயன்மர - 215
பரிதிசூழ்ந்த - 15
பருகியநோக் - 21
பாய்ந்துமெரி - 302
பிழைத்ததுபொ - 26
பிறையெனுநு - 21, 23
புகழ்வரைச் - 150
புடையலங்க - 313
புள்ளியில்லா - 121, 131
பூண்டாழ்பொ - 74
பூத்தலைவார - 300
பூரத்திருவிழ - 291
பேணுஞ்சிறப் - 197
பொன்றிகழு - 276
பொன்னியமு - 466
போர்வாய் - 466
போலமறுப்ப - 113
ம்ருகோநபீம (வேதம்) – 269
மஃகான் புள்ளி - 102
மகதவினைஞ - 155
மகதத்தொர் - 106
மகரவாரி - 157
மண்கொண்ட - 416
மருவுபுகழ்க் - 331
மலிதிரையூர் - 89
மழலைக்குறு - 312
மற்றிவனைமா - 17
மறப்படைக் - 87
மாதர்கொண் - 190
மாமுதுதாதை - 38
மாமேலிருந் - 140
மாயவன்றன் - 58
மாயோன்மேய - 53
மாலேமணி - 198
மீனம்புகு - 412
மீனுண்கொக் - 170
முரசீபத்தனஞ் (சுலோ) - 11
முலைபொழிதீம் - 320
முழுகுலநதி - 416
முறையிடத்திரு - 419
முன்னுளறுப - 332
முன்னிக்கடலை - 191
முன்னைப்பழம் - 199
முனிவன்வா - 42
மூள்வாயதொ - 417
மெய்சொல்லா - 46
மெய்யினியற்கை - 122
மெய்யீரல் - 122
மேலதுவானத் - 38
மொய்த்தமூவறு - 229
யவனர்நன்கல - 153
வசிட்டனுங்கோ - 19
வஞ்சஞ்செய் - 57
வஞ்சிமூதூர் - 351
வடதிசைவேந் - 437
வடதிருவாலவா - 242
வடமொழியை - 85
வடவாரியர் - 180
வடாஅது வண் - 62

வடிவேலெறிந் - 89
வண்டுறைவார் - 469
வந்தபடை - 172
வந்தவரவே - 34
வந்திக்கவந் - 267
வருசெருவொன் - 300
வரைவொடுதொ - 484
வலங்கொணேமி - 274
வள்ளுவன்சா - 207
வளைவிற்பொறி - 161
வாங்கரும்பாத - 1
வாணிகமர - 15
வாதமாமகன் - 42
வாதுவல்வயி - 175
வாழிசோழ - 418
வாழியதுடிய - 174
வானப்ரகாச - 330
வானுரெழிலி - 242
வியந்துவிட - 40
வில்லம்பு - 325
விழுமிழைந - 57
வீங்குநீரரு - 270
வீரமுந்தியா - 419
வெயிலிளஞ் - 411
வெறிகொளறை - 217
வெண்வேற்கவுரி - 29
வெண்வேற்கிள்ளி - 348, 381
வென்றிடிங் - 190
வென்றிநில - 466
வேலேமலிதண் - 18
வேள்வியிற்க - 388
வைத்தணமில் - 27
வையங்காவல் - 362
வையத்துவாழ் - 199
ஸபபாதகரோ (சுலோ)-12

# பொருட் குறிப்பகராதி


அகத்திய சூத்திரம் - 84
அகத்தியன் - 100
அகஸ்தியமுனிவர் - 2, 5-7, 36, 48, 82-3, 46-8, 162
அகல்யாசாபம் - 25
அசித்திஜாதகம் - 222-3
அகிரிநதி - 315
அச்சுதேவராயர் - 335
அசுணம் - 151
அசோகசக்ரவர்த்தி - 224-5, 319
அஞ்சைக்களம் - 261
அடியார்க்குநல்லார் - 91, 241
அணிகலநூல் - 152
அணிற்கதை - 35
அத்திநாவம் - 158
அத்தியாத்மராமாயணம் - 20
அத்தியூர் - 225
அதமன்கோட்டை - 296
அதிகமான் எழினி - 251, 388-9
அதியரையமங்கை - 296
அதியன் - 250
அதிராஜேந்திரன் - 432
அதிவீரராமபாண்டியன் - 299
அந்தணர்களான மலையாளர்-249
அந்தரவானத் தெம்பெருமான்-241
அந்துவஞ்சென்னை - 389
அந்துவநல்லூர் - 291
அநிருத்தன் - 65-6
அப்பிரமேயப்புராணம் - 475
அப்ஸரஸுகள் பதினொருவர்-232-3
அபயன் - 300, 321
அம்பாவாடல் - 193-4,
அம்பி - 326,—அறம் வளர்த்த முதலியார்-330, 334
அம்மங்கதேவி - 321
அமரசிங்கன் - 475
அமாந்தம் - 196
அமிதசாகரர் - 478
அமிர்தகவிராயர் - 463
அமுதசுரபி - 222, 229
அமோகவர்ஷன் - 330
அயிரியாறு - 315
அயிரூர் - 250
அயிரைமலை - 254
அயிரையாறு - 262
அயோத்தி - 49
அயோமுகம் - 81
அர்த்தநூல்கள் - 152
அரவர் - 313, 317
அரிகுலகேசரி - 292
அரிதாசர் - 332-3, 482
அரியன் - 77
அருங்கலநூல் - 152
அருங்கலச்செப்பு - 450
அருணகிரிநாதர் - 275, 289, 465
அரும்புகட்டிவேளாளர் - 441
அரும்பூர் - 441
அரும்பையர்கோன் - 441
அருமணவன் - 155
அருவர் - 424-5, 317, 445
அருவாநாடு - 318
அருளாகரன் - 439, 440, 444
அருளிப்பாடு - 373
அல்லஸாணிபெத்தன்ன - 332
அல்லியரசாணிமாலை - 77,
அவந்திக்கொல்லர் - 155
அவந்திவேந்தன் - 182-3
அழகர்மலை - 266
அழகியமணவாளன் - 428-9
அளத்திப்போர் - 424
அற்புதத்திருவந்தாதி - 308
அறப்பணஞ்சேரி - 226
அறம்வளர்த்தமுதலியார் - 330, 334
அறவணவடிகள் - 219, 225-6
அறவோன்மகன் - 78
அறுதொழில் - 146, 167, 484
அனந்தபதுமன் - 322, 433
அனுமான் - 41-44
ஆசார்யஹ்ருதயம் - 68
ஆசிரியமாலை - 274
ஆடைநூல் - 157
ஆடைவகைகள் - 151
ஆண்டாள் - 186-203, 271, 381
ஆதிதீர்த்தகரர் - 483-4
ஆதிஸேது - 31
ஆதித்தசோழன் - 279, 290
ஆதித்தனுமையம்மை - 390
ஆதிமந்தி - 236, 238
ஆலங்குடிச்சாஸனம் - 437
ஆந்திரஸாஹித்யபரிஷத் - 338
ஆமுக்தமால்யதா - 333-3, 481

ஆய்தம் - 129-9
ஆயர்மணமுறை - 57
ஆயிட்டு - 309, 310
ஆரிடப்போலி - 237
ஆரியக்கூத்து - 453
ஆரியர் - 178
ஆருத்திராதரிசனம் - 195
ஆலையூர்ச்சாக்கை - 453
ஆழித்தேர் - 381
ஆவில்பெண்டிற் - 149
ஆனைமலைச்சாஸனம் - 262
இசைச்சங்கம் - 468-70
இசைநூல்கள் - 469
இசையளவுகண்டான் - 468
இசையாயிரம் - 407
இடங்கழிநாயனார் - 372
இடைக்கழிச்செங்கோடன்-100
இடைக்குளம் - 293
இடைச்சங்கம் - 9, 88-9
இடைநிலைபேற்ற எதிர்மறை வினைகள் - 307
இதோபதேசம் - 447
இந்திரவிகாரம் - 224-5
இந்திரை - 242
இப்பர் - 158
இமயவரம்பன் - 178
இயல்பளவை - 140
இயைபு - 116
இரணியவதைப்பரணி - 410
இராகவையங்கார் (ரா)-56, 263, 348, 403, 426 [322, 479
இராசராசசோழன் - I,369; -II, [368,255
இராசசிங்கன் (பாண்டியன்)
இராசேந்திரசோழன் - I, [181,423
இராஜாவலி - 94
இராதாதேவி - 60
இராமசேது - 30-4
இராமபிரான் -29
இராமநாடகம் - 41
இராமநாதஐயர் (எ. எஸ்.) [65, 438
இராமர் திருவடிகள் - 307
இராமராவணயுத்தம் - 35-36
இராமன்தம்பி - 39
இராமாநுசகாண்டின்க - 123
இராமாநுஜர் - 265, 270, 277
இராமாயணநூல்கள் - 17, 19
இராமாவதாரம் - 20
இராமாநுஜாசாரியர் (ம.வி.) 95
இராவணன் - 47, 50, 83, 472
இருசமயவிளக்கம் - 332
இருத்தி - 228
இருந்தவளமுடையார் - 241
இருந்தையூர் - 242;—கருங்கோழி [யார் - 243
இரும்புதல் - 293
இலக்கணவிளக்கம் - 45-49
இலக்கியசாஸனவழக்காறுகள் [-137
இளங்கிள்ளி - 224
இளங்கோநம்பி - 387
இளங்கோவடிகள் - 180-1, [219, 411
இளஞ்கோவேண்மாள் - 451
இளஞ்சேரலிரும்பொறை - 389
இளம்பூரணம் - 47 [400, 460
இளம்பூரணவடிகள்-92, 141, 305
இளம்பெருஞ்சென்னி - 318
இளையான்க்விரரயர் - 253
இறையனார்களவியல் - 80
இஷ்டபூர்த்ததத்தங்கள் - 212
ஈடு - 310, 429
உக்கிரகுமாரன் - 179
உத்தரமகாபுராணம் - 476
உத்தமசோழன் - 291
உத்தரகோசமங்கைப்புராணம் [- 51
உத்தரமதுரை - 209
உதயகுமரன் - 176
உதியஞ்சேரல் - 78, 87
உதியன்வேண்மாள் - 371
உபகேசி - 56, 209
உபத்மானீயம் - 128
உமாபதிசிவாசாரியர் - 289
உருக்குமிணிப்பிராட்டி - 55
உருத்திரசருமன் - 401
உருத்திரன் - 324
உருப்பிணிநங்கை - 55
உருவெழுத்து - 138
உரையாசிரியர் - 398
உல்லியர் - 152
உலகமுழுதுடையாள் - 419
உலகளந்த சோழநல்லூர் - 457
உலூரபி - 70
உவமைக்கதை நீதிவிருத்தம்-448
உள்படுகருமம்-452
உஷாதேவி - 65-6
எங்கராயன் - 438

எட்டயபுரத்தலைவர் - 337 [157
எட்டி—பட்டம்,-புரவு, பொற்பூ-
எம்பிரான் சதகம் - 69
எம்பெருமானார் ஜீயர் மடம்-458
எருமைகுடநாடு -314
எலிப்பாட்டு - 448
எலிமயிராடை - 150
எலிவிருத்தம் . 4489
எழுகலிங்கம் 422
எழுத்துநால்வகை - 137
எழுநாள்-227
ஏகபாதம் - 151
ஏகாந்தராமர்கோயில் - 29
ஏமநல்லூர் - 292
ஏழிசைவல்லபி - 418
ஏழு என்ற எண்வழக்கு - 226
ஏழுநாள் - 220
ஏழுலகுமுடையாள் - 419
ஏறுகோடல்மணம் - 57
ஐம்படைப்பருவம்-438
ஐயன் ஆரிதன் - 78, 88
ஐயனாரிதனார் - 271, 273
ஐவர்மலை (அயிரைமலை) - 254
ஒக்கூர்மாசாத்தியார் - 171
ஒட்டியற்பெயர் - 395
ஒட்டியான் - 331
ஒப்புரவறிதல் -213
ஒருதுறைக்கோவை-463
ஒருமுலையறுத்த திருமாவுண்ணி -234
ஒருஉத்தந்தை-377
ஒன்பதுகுடை - 352, 383
ஓணத்திருவிழா - 202
ஓரங்கல் - 323
ஔவைபாட்டு - 237
ககந்தன் - 204
கங்கவரசர் - 181
கங்கைகொண்டசோழன் - 181
கங்கைகொண்டான் - 456
கங்கோலி (O. C.)-162
கச்சிச்செப்பேடு - 407
கச்சித் தருமவதனம் - 224
கச்சிநகரின் உருவம் - 225
கச்சியராயர் - 247
கச்சிவீரப்பன் - 387
கசாகுடிப்பட்டயம் - 130
கட்டி, கட்டிமுதலியார் - 315
கட்டுரையெழுத்து - 139
கட்டூர் - 173
கடகநகர் - 329
கடல்கோள் - 80, 89-91, 94
கடலூராரியன் -485
கண்டன்மறவன் - 249
கண்ணகி-231, 234, 239, 240
கண்ணன் (தலைவன்)-443
கண்ணபிரான் - 58, 83 4, 467, 473
கண்ணெழுத்து - 140, 161
கண்ணெழுத்தங்கோல் - 141
கண்ணை -294
கணையன் - 245, 95
கப்பலூர் - 455
கபாடபுரம்-8—11, 204
கபிலபரணர்- 237-8
கபிலர் - 50 148
கம்பர் - 274, 309, 312, 3245, 332, 382, 429-30
கம்பை - 434
கர்க்காசாரியார் - 166
கர்ணிகை - 232
கர்மபூமி-146-5, 168, 484
கரந்தெழுத்து - 142
கரிகாலன் - 178, 416, 471
கரிமுகவம்பி - 158
கரியமாணிக்காழ்வான் - 457
கரியோன்திருவுறை - 242
கருணாகரத் தொண்டைமான் - 322, 201—1, 428
கருணாகரன் - சிராமபிரான் 429-
கருநடராசன் - 457
கருநாடகச்சந்த நூல் - 323
கருநாடியர் - 312
கருபதி-கருவூர் அரசன் - 256
கருமச்சார்பு - 107
கருமாணிக்கன்கோவை - 455
கருவூர்ப்பொன்வாணிகன் - 254
கலங்கரைவிளக்கம் - 158
கலிங்கசேனாபதிகள் - 437
கலிங்கப்போர் - 431
கலை-கர்ப்பூரவகை - 155
கலைமகள் (பத்திரிகை) - 218, 287
கவாடம்- 2, 8—11
கவிச்சக்ரவர்த்தி - 406
கவுந்தி - 240
கவுரியர்கோடி - 29
கழுமலநாதஸ்வாமி -246
கழுமலம் - 245 . 6
களவழியுரைகாரர் - 258, 404-5
களவியலுரை - 149, 204
கன்னரதேவன் - 416

கன்னடர் - 456
கன்னிகோட்டம் - 242
கன்னியாகுமரித்தலபுராணம்-30
கனகசபைப்பிள்ளை(வி)-401, 427
காக்கைபாடினியார் - 313; —நச்
[செள்ளையார் - 172
காடவர் - 456, 457
காடுகெழுசெல்வி - 436
காத்யாயனமுனிவர் - 76, 469
காத்யாயனீபூஜை - 187
காந்தமன்-6
காந்தனுர்ச்சாலை - 435
காப்பியத்தொல்குடி-97
காப்பியன் - 97
காமனேன்பு - 197
காமாட்சியம்மை - 229
கார்த்தவீரியார்ச்சுனன்-467,472
காரிக்கரை – 294
காரிகை - 478
காரியாறு . 295
காரிரத்னகவிராயர் – 41,43
காருகமடந்தை – 148
காரைக்காலம்மையார் - 308
காரைத்திவு - 222
காவடி - 262
காலிங்கர்கோன் - 456
காலிங்கராசர் – 439-40
காலேறு – 295
காவற்பெண்டு – 174
காளமேகப்புலவர் – 326-8
காளிதாசர் - 4, 7
கிஞ்சின்ஜிங்கா - 184
கிடங்கில் - 295
கிடாய்விகுதி 309
கிடுவிகுதி – 309
கிருதமாலை – 243
கிருஷ்ணசாஸ்திரிகள்
[(H)-257-457,
கிருஷ்ணதேவராயர் - 328-9,582
கிளிவிருத்தம் - 448–449
கின்றீற்று வினையெச்சம் – 305
கிஷ்கிந்தை - 1
கீழையூர் - 280, 282
குசைத்தலை – 434
குட்டுவஞ்சேரல் - 395
குட்டுவன்கழுமலம் - 246
குடக்கூத்து - 65
குடகொங்கன் – 248, 250
குடராசன் - 258
குண்டலகேசி - 228
குண்டலகேசி விருத்தம்-448
குண்டியாறு - 434
குணகாங்கி - 323
குணபத்திரன் - 474-6, 482-3
குணமலைநாடு - 249
குணவாயில் - 245-6
குணலைக்கூத்து – 272
குந்தவை – 321
குப்புஸ்வாமி சாஸ்திரி
(டி. எஸ்.)-475
கும்பகன் - 59
குமரகுருபரமுனிவர் - 336
குமரன்சிகண்டன் – 453
குமரித்துறை - 33-4
குமாரசரசுவதி – 329, 482
குமாரசுவாமிப்பிள்ளை(அ)-447
குரவைக்கூத்து – 48
குருந்தொசித்தது - 61-5
குலசேகரபாண்டியன் – 457
குலசேகரர் - 271, 249, 251, 271
[307 439
குலோத்துங்கசோழன்I-258,321,
406, 426; II–479; III–325
குலோத்துங்க சோழனுலா - 385
குவலயா பீடம் – 66
குழமணமொழிதல்-197
குழைபிடித்தல் – 228
குற்றியலிகரம் – 127-7
குற்றியலுகரம் – 124-6
குறும்பூழ்ப்போர் - 303
குறும்பூழாடிகள்–303
கூடலழகர்-242
கூடற்புராணம் – 243
கூத்தச்சாக்கையன் – 451
கூத்தர் (புலவர்) - 261,352,419,
கூத்துவகை - 452 [437, 442
கூவநூல் - 152
கெடவரல் - 257
கெடிமன்னர் - 330, 481, 482
கேரளம் - 2, 7-8
கேரளராஜன் - 249
கேரளன் - 250
கேரளாந்தகவளநாடு - 252
கேரளோத்பத்தி . 262
கொங்கச்செல்வி - 231
கொங்கர்-456—கோ-248, 251,
258
கொங்குசேரர் - 252
கொங்குவேளிர் - 49, 254, 306
கொட்டிச்சேதம் - 451

கொடுகொட்டி - 451
கொடுங்கோளூர் - 260
கொடும்பாளூர் - 453
கொடும்பை - 355-6
கொத்த சிவரம் - 423
கொல்லமழிவு - 444
கொல்லிப்பாவை - 189
கொற்கைமுத்து - 11
கோக்கண்டன் வீரநாராயணன் - 397
கோச்செங்கணான் - 247
கோசிபன் ஆதன் - 354-5
கோடி முன்றுறை - 29
கோதமனார் - 87
கோதமை - 434
கோதாவரி - 434
கோப்பயன் - 327 - 8
கோபாலபணிக்கர் 200, 453
கோபாலையர் (அ) - 407
கோபிநாதராயர் - 401
கோயில் உள்பாடன் - 452
கோயில்நாயகம் - 420
கோவந்தபுத்தூர் - 279
கோவலன்கதை - 233, 238-9
கோவலூர்முனி - 458
கோவிந்த ராஜர் - 9, 27
கோவிலடி - 182
கோழிப்போர் - 304, 1-2, 299 301-2
கோனேரின்மைகொண்டான் - 457
கௌடில்யர் - 10, 96, 149, 152
கௌரியர் - 76
கௌரீசங்கர் (Mount Everest) - 184
சக்கரக்கோட்ட மண்டலம் - 435
சக்கரவாளகிரி - 229
சங்கயாப்பு - 125-0
சங்கர்ஷணமூர்த்தி - 54
சங்கரநமச்சிவாயப்புலவர் - 125
சங்கரபகவத்பாதர் - 262
சங்கன் - 220
சங்காராமம் - 225
சங்கீதவாதம் - 473
சங்கேதவெழுத்து - 139
சடகோபர் - 271, 274, 306
சடகோபராமாநுஜாசாரியர்-415
சடைமுடி - 28
சதுக்கப்பூதர் - 229
சந்தநதி - 434
சந்திராதித்யகுலம் - 259
சபாநர்த்தகன் - 440
சம்பந்தமூர்த்திகள் - 46
சம்பாதிவனம் - 50
சமுத்திர தேவதை - 220
சயங்கொண்டார் - 312, 322
சயமாகீர்த்தி - 90
சளுக்கியர் - 477, 479
சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்ரம் - 320
சற்குணர் நினைவுமலர் - 304
சன்னுசிக்கிராமம் - 462
சாக்கைக்காணி - 453
சாக்கைமாராயன் - 452 - 3
சாக்கையர் - 452
சாத்தனார் - 204 - 5
சாமன் - 189
சாமிநாத ஐயரவர்கள் (R) 127
சாமிநாத ஐயரவர்கள்(டாக்டர்) [465
சாலினி - 231
சாவேறு - 443
சாளுவத்திருமலைராயர் 326 7
சிங்காத்திரி - 332
சித்திரசங்கேதலிபிகள் - 137
சித்திரமண்டபம் - 433
சித்திரவாகனன் (பாண்டியன்) [70
சித்திராங்கதை - 70, 470
சிந்தாமணிமாலை - 467
சிந்தாமணிவிளக்கம் - 466
சிம்மாத்திரிப்பொட்டுநூர் - 433
சிலைக்கொடி - 466
சிவகோசரிபிடாரன் - 287
சிவஞானசித்தியார் - 481
சிவஞானமுனிவர் - 126, 129 - [214, 310, 405
சிவப்பிரகாசமுனிவர் 47, 274
சின்னமனூர்ச்செப்பேடு-73, 255
சீகாளத்திப்புராணம் - 274
சீதைமதியுடன்பாடு - 21
சீமாலிகன் - 69
சீராமகதை - 16
சீவகசிந்தாமணிச்சுருக்கம் - 462
சுக்கிரீவன் - 1
சுந்தரபாண்டியன் - 157
சுந்தரமூர்த்திகள் - 306
சுப்பிரமணியஐயர் (V.K.)-290
சுப்பிரமணிய ஐயர் (G)-162

சுப்பிரமணிய சாஸ்திரிகள் (P.S.) 132, 209
சுவருபானந்தர் திருவெம்பாவை- 193
சுவேதாரணியம் - 12
சுவேதன் (பாண்டியன்)-72
சுள்ளற்கோல் - 141
சுள்ளிப்பேராறு - 127, 262
சூடாமணியுள்ளமுடையான்-485
சூர்ணீநதி - 262
சூளாமணி - 480
செங்கண்மா - 294
செங்குட்டுவன் - 36, 180, 220, 230, 234, 411
செங்கோன்தரைச்செலவு-100
செண்டு - 471
செந்நாப்போதார் - 210
செம்புநாடு - 462
செயங்கொண்டார் - 178, 382, 406, 426
செல்வக்கருவூர் - 255
செவ்வாரம் (மேல்வாரம்)-287
செவ்வைச்சூடுவார் - 64
சென்னிமாபுரம் - 242
சேக்கிழார்-52, 80, 261, 286-7, 299
சேதுமூலம் - 31
சேரர்கொங்கு - 253
சேரன்திருத்தளி - 242
சேனுவரையன் - 84, 399
சேனையுள்படுநர் - 452
சைனர்திருவெம்பாவை - 193
சொற்கோழி - 302
சோடகங்கன் - 322
சோணிதபுரம் - 65
சோணைநதி - 183
சோநகர் - 65
சோமசுந்தரபாரதி (s)-339
சோமன் - 479-80
சோழகேரளமண்டலம் - 252
சோழகோன் - 443
சோழமலை - 184
சோழமாதேவியார் 368, 378
சோழவமிசசரித்திரம் - 259
சோழனசக்கரம் - 423
சோழாந்தகன் 253
சோழியவரையன் - 423
சோனகர் - 154
ஞானசாகரம் - 401-2
ஞானப்பிரகாசர்-330, 482
தக்கயாகப்பரணி-260, 421, 437, 459, 461
தக்ஷிணமதுரை - 210
தகடூர்யாத்திரை
தகர்ப்பாய்ச்சல் - 294
தகர்வென்றி - 303
தசமுகன்தலைகளைத் திருமால் எண்ணியது-44
தண்டகநாடு - 6
தண்டகாரண்யதேசம் 5;—வரலாறு - 3-4
தண்டநீதிகள் - 206
தண்டாரணியம் - 5
தண்டியலங்காரம் - 318, 445
தத்தம் - 212
தத்துவப்பிரகாசர்-331, 482
தத்துவராயர் - 193
ததிபாண்டன் - 67-9
தம்பலந்தின்றல் - 227
தமக்கமாளிகை - 298
தமயந்தி - 466
தமிழ்நாவலர்சரிதை-326-7, 372
தமிழகம் - 177
தமிழர்நேசன் - 204
தமிளராஜ்யம் - 232
தர்ப்பாதனமழகியார் - 463
தர்ப்பாதனன் - 462
தருமதவனம் - 227
தருமபுத்திரன் - 87
தரையர்-அரசர்-248
தலைக்கோட்டைப்போர் - 336
தலைச்சங்கம் - 80, 469
தவத்துறை - 285-90
தன்மையெழுத்து - 138
தனியூர்ச்சேந்தன் - 109
தனுஷ்கோடி - 33
தாதெருமன்றம் - 58
தாப்புலிப்பாட்டு - 100
தாம்பூலம்வழங்கல் - 227
தாமோதரம்பிள்ளை (சி.வை)-307
தாயுமானவர் - 481
தார்ப்பூ - 455
தாரகாம்யம் - 35
தாராபுரம் - 261
தாராவர்ஷன் - 432
தாலமி - 251, 256
தாழிக்குவிடளித்தது - 67-9
திண்டீச்சுரம் - 295
தியாகவல்லி - 418
தியாகவிநோதன் - 324

தியாகையர் - 338
திரிநேத்ரபல்லவன் - 415
திரிபுவனத்தோன்றல் - 480
திரிலோசனன் - 414-5
திரிவர்க்கம் - 205-6
திருக்கடைமுடி - 280-2
திருக்கலம்பகம் - 484
திருக்காரிக்கரை - 294
திருக்காரியூர் - 260-1
திருக்குணவாயில் - 247
திருக்கோட்டிநம்பி - 485
திருக்கோவையாருண்மை - 192
திருக்கோளூர்ப்பெண் - 68
திருச்சடைமுடி - 246, 281-4
திருச்சிற்றம்பலக்கோவை - 468
திருச்சிற்றம்பலம் - 279
திருச்சிற்றேமம் - 279
திருச்சிற்றேமம் - 278-9
திருச்செங்குன்றுப்பகவதி - 239
திருச்செந்துறை - 292
திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ் - 461
திருச்சென்னம்பூண்டி - 280
திருத்தக்கதேவர் - 37, 142, 173, 445
திருத்தவத்துறை - 284-90
திருநடுவூர் - 242-3
திருநறுங்குன்றை - 474
திருநாவுக்கரசர் - 417, 448
திருப்பதியங்கள் - 287-8, 291
திருப்புகழ்ப்புராணம்-475-6, 483
திருப்புல்லாணிமாலடியான் -462
திருப்புறம் - 245-6, 283
திருப்பெருந்துறை - 190
திருப்பேர்ப்புறம் - 245, 283
திருமங்கையாழ்வார் - 42, 271, 286, 306
திருமந்திரவோலை - 419-420 ;— நாயகன் - 433
திருமலைநாயக்கர் - 336
திருமலைராயர் - 326-7
திருமழிசையாழ்வார் - 45
திருமாபத்தினி - 236
திருமாமணி - 231, 233
திருமாவளவன் - 178, 182
திருமாவுண்ணி - 234
திருமாளிகைக்கூறுசெய்வார்-420
திருமுடங்கை - 243
திருமுடியடைவு - 436
திருவட்டப்பிறைப்பிடாரியார் - [239
திருவண்ணாமலை - 189-90
திருவதிகைச்சாஸனம் - 440
திருவயிரை - 254
திருவள்ளுவர் - 25, 164, 204-5, 209
திருவறம் - 480
திருவாதவூரடிகள் - 80, 186-200
திருவாதவூரர்புராணம்-190, 192
திருவாதிரைக்களி - 203
திருவாதிரைத்திருவிழா - 200
திருவாய்ப்புடையார் - 242
திருவாய்மொழியீடு - 135
திருவாலந்துறை - 290
திருவாலவாய் - 242—3
திருவிசயமங்கை - 279—80
திருவிடபத்துறை - 294
திருவிடைவாய் - 289
திருவுறை-கோயில்-242
திருவெண்காடு - 12-3
திருவேங்கடபுராணம் - 266-7
திருவைகுந்தநாதர்பிள்ளைத்தமிழ் 3-4
திருவொற்றியூர்ப்புராணம்-239
திரையல்பளிதங்கள் - 227
திரைலோகி - 292
திலகம் - 8
திலகர் - 12, 27
திவ்யாவதானம் - 222
தீபங்குடி - 406-7
தீர்க்கராவன் - 448
தீர்த்தீயம் - 8
தீவதிலகை-220
துக்கா - 329
துணைவினைகள் - 310
துர்க்காதேவி கண்ணகி-231, 239
துருக்கர்-யவனர்-154
துவராபதி-82;—நாடு-458
துவரை-455, 458
தூங்கெயிலெறிந்தசோழன்-56
தெங்கநாடுகிழவன்-391
தெய்வச்சிலையார் - 240
தெவிங்கவீமன் - 421, 438-
தென்புலத்தார்கடன் - 212
தென்றமிழ்ப்பாவை - 231
தென்னுடுங்கண்ணனும்-52—5
தேவராயமகாராயர் - 289
தேவாகரம் - 35-6, 469
தைந்நீராடுதல் - 193—6

தொகை - சங்கம் - 79 - 80; எட்டுத்தொகை - 304
தொண்டரடிப்பொடியாழ்வார் - 35
தொண்டைமான் சக்ரவர்த்தி - 272
தொல்கபிலர் - 98
தொல்காப்பியம் - 393—6
தொல்காப்பியனார் - 96—9
தொழுநை - 57
தோணிக்கோழி - 300, 302
நக்கீரனார் - 402 - 4
நங்கையார் - 454
நந்திவன்மன்III, 280, 285, 287, [290
நப்பின்னை - 55 - 60, 210
நம்பிமார் - 454
நம்பிமூத்தபிரான் - 54, 63
நம்பியாண்டார் நம்பிகள் - 289
நம்மாழ்வார் - 57
நமச்சிவாயமுதலியார் நினைவு மலர் - 230, 399
நல்கூர்வேள்வியார் - 210
நல்லியக்கோடன் - 295
நவசத்திகள் - 192
நவபாஷாணம் - 29
நவிரமலை - 249
நள்ளாறு - 242
நற்சோணை - 380
நன்னயபட்டர் - 323
நன்னன்வேண்மான் - 371
நன்னூலார் - 460
நாக்னஜிதீ - 58 - 9
நாகநாடு - 223
நாகநாதபண்டிதர் - 447
நாகரசநம்பி - 482
நாஞ்சில்வள்ளுவன் - 208
நாமக்கல்சாஸனம் - 259
நாரதமுனிவர் - 473
நால்மடிவீமன் - 423
நாவலிடுதல் - 228
நாற்சீரடிப்பாக்கள் - 115
நான்மாடக்கூடல் - 243
நிகண்டுசூடாமணி - 474, 458
நிருத்யபோகம் - 453
நிலந்தருதிருவிற்பாண்டியன் „ 79, 91
நிலைத்துநூல் - 157
நீர்ப்பெயர்த்து - 158
நீலகண்டர் - 76
நீலகேசி - 228
நீனை - 56, 60
நெட்டிமையார் - 99
நெடியோன் - 265, 267 - 8
நெடுந்துறையன் - 100
நெடுமானஞ்சி - 389
நெருலூர்ச்சாஸனம் - 257
நெல்லிநகர் அருளாளர் - 59, 64, 335
நெல்லைமாநகர் - 246
நேமிநாதமுடையார் - 460
நேமிநாதவிருத்தி - 56
பஃறுளியாறு - 91, 99
பஞ்சமகாயஞ்ஞம் - 212
பஞ்சவர் - 76
பஞ்சவனீச்சரம் - 242
பஞ்சவன்மாதேவி - 368 - 9
பட்டர்பிரான்கோதை - 381
பட்டாரகர் - 284, 286
படகநாட்டிவாரு - 314
படைநாள் - 206
படையுள்படுவோன் - 452
பண்ணத்தி - 117
பண்ணை - 299
பத்தினிச்செய்யுள் - 237
பத்தினிதேவி - 238
பதினெண்குடிவேளிர் - 82
பதினெண்பாடைமாக்கள் - 229
பதினொருகூத்து - 452
பதுமன்றேவி - 367, 374 - 5
பதுமாபதி - 25
பப்ருவாகனன் - 71, 470
பரங்குன்றம் - 243
பரசுராமர் - 204
பரஞ்சோதி திருவிளையாடல்-467
பரணர் - 178
பரணி - 409
பரத்துவாசர் - 42
பரமேசுவரப்போத்தரையன் - 421
பராந்தகசோழன்I - 281, 285, 287, 288, 291, 310
பராந்தகன்குந்தவை - 381
பரிபாடல் - 193
பரிமேலழகர் - 194, 213 - 4
பரிவீரநாரணன் - 455
பரிவேட்டை - 418, 432
பல்யாகசாலை முதுகுடுமி - 99
பல்லவரசர் - 430
பல்வேற்கட்டி - 315
பவணந்தி - 148, 400

பளிக்கறை - 229
பளிதம் - கர்ப்பூரம் - 227
பழியிலிசிறியநங்கை - 381
பழுவூர் - 248—9
பனம்பாரனார் - 313
பனைக்கொடி - 54
பனைநாடு - 90 - 1
பாகல்வேட்டை - 331
பாகவதம் - 59, 187-8
பாஞ்சராத்ரம் - 481
பாட்டு - பத்துப்பாட்டு - 304
பாடுதுறை - 193
பாண்டிக்கோவை - 320
பாண்டியகவாடசம் - 10
பாண்டியகுலாசனிவளநாடு-290
பாண்டியகுலபதிவளநாடு - 290
பாண்டியன்மாகீர்த்தி - 469
பாண்டியன்நெடுமாறன் - 402
பாண்டியை - 77
பாண்டுகம்பலசிலை - 221
பாணினி - 76, 84—5
பாப்பானினம் - 41, 43
பாரதகாலம் - 88
பாரதசம்பு - 72
பாரதம்பாடியபெருந்தேவனார் - 274
பாரதாயன் - 97
பாலகாப்பியர் - 98
பாலை - 189, 197;—பாட்டு 192;—ஆடல் - 197
பிங்கலந்தை - 138, 197
பிஞ்ஞை - 56
பிடாரன் - 287
பிரத்தியும்நன் - 65, 66
பிரதாபசந்திரராய் - 73
பிரதாபருத்திரன் - 323.4, 329, 332
பிரதாபருத்ரீயம் - 324
பிரபஞ்சனன் - 71
பிரமதேவரும் திருவள்ளுவரும் - 205 - 6
பிரயோகவிவேகநூலார் - 75
பிராமிசாஸனங்கள் - 136, 254
பிராண்மலைச்சாஸனம் - 257
பிள்ளைப்பெருமாளையங்கார் - 68, 267, 272
பிள்ளைலோகம்ஜீயர் - 60
பிணைநி - 144
பின்பழகியபெருமாள்ஜீயர் - 271
பிக்ஷாபாத்ரம் - 229
பிக்ஷுக்கள் - 227
பிக்ஷுணி - 227
பீலிவலை - 348, 381
புகழியூர் - 250 254
புகழேந்தியார்-74, 238, 466-73
புணர் - சங்கம் - 79
புத்ரிகாதர்மம் - 71
புத்ரிகாபுத்ரன் - 71
புராணசாகரம் - 17
புல்லி - 313
புவனைச்சோமன் - 479
புள்ளிபெறும் எழுத்துக்கள் - 114 - 135
புறநாடகங்கள் - 452
பூங்கணுத்திரை - 170
பூர்ணத்ரயீசாலாமங்கலம் - 263
பூர்ணவாஹிநீ - 262
பூர்ணநதி - 262
பூர்ணிமாத்தம் - 196
பூர்த்தம் - 212
பூவைநிலை - 53
பூனைபோன்ற எலிவகை - 150
பெண்மகன் - 107
பெயரெழுத்து - 138
பெரிப்புளூஸ் - 34
பெரியவாச்சான்பிள்ளை - 46, 187 - 8
பெரியாழ்வார் - 44
பெருஞ்சித்திரனார் - 225, 237
பெருஞ்சோற்றுதியன் - 86
பெருமண்டூர் - 474 - 6
பேகன்தேவி - 234
பேடு (கூத்து)-66
பேயாழ்வார் - 45, 251, 275
பேராசிரியர் - 90, 129, 242, 428
பேராறு - 434
பொருட்டெழினி - 389
பொத்தப்பிச் சோழர் - 322
பொதியம் இசைக்குருகியது - 47
பொய்கையார் - 45, 245, 245, 271, 276
பொய்யாமொழிப்புலவர் - 47
பொறையன் பெருந்தேவி - 367, 375-6
பொன்னம்பலக்கூத்தன் - 441
பொன்னனி - 262
போதிசத்துவர் - 220 - 1, 226
போர்ப்பூ - 455
பௌண்ட்ரகம் - 149
மக்கட்டாயவமிசாவளி - 392

மகதநாடு - 182-3
மகதவினைஞர் - 155
மகரக்குறுக்கம்புள்ளிபெறல் - 132-3
மகாபுராணம் - 475
மகாமகோபாத்யாய-ஐயரவர்கள் 284, 331
மகாவமிசம் - 94, 223-4
மகாஜனகன் - 220
மகேந்திரன் - 224
மகோதை - 260
மங்கலாதேவி - 249
மச்சபுராணம் - 473
மஞ்சரிப்பா - 330
மண்டலபுருடர் - 330
மண்டலவன் - 475
மண்டையாழ்வார் - 428 - 9
மண்டோதரி - 50—1
மண்ணுறு - 434
மணக்கிள்ளி-379
மணலூர் - புரம் - 70, 75
மணவாளமாமுனிகள் - 334
மணவிற்காலிங்கராயன் - 439
மணலூர் - 75
மணற்புரம் - 75
மணிகுட்டுவன் - 259, 396
மணிகுளன் - 49
மணிபல்லவம் - 222—4
மணிபுரம் - 72
மணிமேகலாதெய்வம் - 219
மதுராந்தகன் - 253
மதுரைத்திருப்பணிமாலை - 337
மயின்மடச்சுரம் - 296
மயிரெலி - 150
மயிலைநாதர் - 130, 309, 460
மராட்டடக்கம்மர் - 155
மருத்துவக்குடி - 293
மருதனிளநாகனார் - 63-4, 234
மருமக்கட்டாயவமிசாவளி - 344
மருவிவழங்கியமரபுகள் - 118—9
மல்லாடல் - 66
மல்லிகார்ச்சுனராயர் - 326
மலயத்வஜன் - 72, 179
மலயபர்வதம் - 2, 5, 81
மலைமண்டலம் - 249
மலையாள அந்தணர் - 249
மலையாளபகவதி - 239.
மலையாளர் - 245
மறுவொடுபெயரியமதலை - 49
மறைஞானதேசிகர் - 140
மன்மதநாததத்தர் - 73
மனவிற்றுவினைச்சொல் - 905
மாசாத்துவாயர் - 159
மாடச்சிவிகை - 283
மாதாநுபங்கி - 209—10
மாந்தரஞ்சேரல் - 395
மாயாவாதம் - 481
மார்கழிநீராட்டு-410;-நோன்பு-197-9
மாறஞ்சடையன் - 290
மாறவர்மன்குலசேகரன் - 440
மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரிதம் - 284
மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ் - 336
முகரி (தலைவன்) 414;—நதி-416, 417
முசிறி - 11
முடத்திருமாறன்-92, 204
முடிகொண்டசோழன் - 434
முடிவழங்குசோழபுரம்-251, 252, 257, 259
முடிவெழுத்து - 138
முத்துவகைகள் - 10
முத்தூற்றுக்கூற்றம் - 458, 467
முதனூழி - 100
முயிரிக்கோடு - 260
முரசிபத்தனம் - 11
முரஞ்சியூர்முடிநாகராயர்-78, 86
முருகஞ்சேந்தி - 381, 391
முல்லைத்தெய்வம் - 52
முனையர்கோன் - 443
மூதின்முல்லை - 169
மூவறுபாடைமாக்கள்-229
மூவேழ்துறை - 152
மொஹிஞ்சதாரோ-143
மோரியர் - 318
மௌகரிகள் - 417
யதிதர்மசிராவகதர்மம் - 482
யவனத்தச்சர்-155
யவனாசிரியர்கள் - 144
யாப்பருங்கலம் - 139
யானைப்போர் - 298
யானையாழிசைக்கு வசமாதல் - 239
யுவான்ஸுவாங் - 224-6
ரங்கஸ்வாமிஸரஸ்வதி - 315
ரஜி - 473
ராஜராஜபுரி - 459
ராமகிரி - 294

ரோமேசசந்திரதத்தர் - 85
லால்குடி - 284
வங்கர் - 456
வச்சிரநாடு - 182-3
வசந்தன் - 40-1
வஞ்சி - 255;—மாடம்-451
வஞ்சிபாலர் – 261
வஞ்சிமாநகரம் - 227, 245, 260, 257
வஞ்சியர் குலபதி - 251
வஞ்சியூர் - 261
வட்டபுரியம்மன்–238
வடகரை மழநாடு–289
வடதிருவாலவாய்–242
வடதீர்த்தநாதர்–291
வடநாட்டுநதிகள்–434
வடமலையார் - 331, 334-5
வடிவெழுத்து - 138-9
வடுகச்சந்தநூல் - 323
வடுகர் - 313-4
வண்டாழஞ்சேரி - 428
வண்டை - 446–7
வணிகர் — வகை - 158 — எண் குணங்கள் 147
வத்ஸராஜ்யம் – 435
வயலாறு - 434
வயிரமேகவிருத்தி - 459
வரகுணபாண்டியன் - 479, 485
வராகமிஹிரர் – 12
வரிக்கூத்து - 23
வல்லபாசாரியர் - 209
வள்ளுவர் - 208, 254
வளர்புரம் - 293
வளவன்மாதேவி - 378
வளைகுளம் - 293
வாசவதத்தை - 233
வாசுகி–211
வாஞ்சியார் வடுகச்சந்தம் - 323
வாணகோவரையன்–434
வாணன்–66, 447
வாதவூரடிகள் - 468
வாலீச்சுரம்–295
வாளால்வழி திறந்தான் - 457
வான்மீகனார் - 15
வானவன்மாதேவி - 368
வாரேருக–155
விக்கிரமசோழன்-322, 421, 438
விக்கிரமசோழனுலா - 442
விசயதரன் - 43
விசயமங்கை - 279
விசுவாவசு (கந்தருவன்)–473
விஜயநிருபதுங்கன் – 220
விஜயமங்கலம் - 280
விஜயவாடை - 320
விட்டலதேவராயர் - 336
வித்தியாபாநு - 264
விமலாதித்தன் - 321
விருபாக்ஷராயர் - 326
வில்லவன்மாதேவி - 368-9
வில்லிபுத்தூர்க்கோன்கோதை - 381
வில்லிபுத்தூரர்–63, 74
விலேகசிந்தாமணி - 429
விழிஞம் - 435
விளக்குவகைகள் - 157
விளந்தைவேள் - 247
விஷ்ணுபுராணம் - 60, 72
வீரகேரளசக்ரவர்த்தி - 25
வீரகேரளமண்டலம், வளநாடு - 251
வீரராசேந்திரன - 320, 431-2
வீரசோழன் (சேரன்)-259
வீரபாண்டியன் - 457, 467
வீரபுரம்–474
வீரநாராயணச்சதுர்வேதமங்கலம் - 463
வீரமாகாளி - 239
வீரராகவசக்ரவர்த்தி - 252
வீரமாமுனிவர் - 123
வீரை - 474
விழித்துலுக்கர் - 33
வெலநாண்டுச்சோழர் - 322
வெள்ளியம்பலம் - 422
வெள்ளிவீதியார் - 438
வேகவதி - 243
வேங்கைமண்டலம் - 422, 320
வேணாடர் - 457
வேதாந்ததேசிகன் - 269
வேம்பத்தூரர் திருவிளையாடல் - 316, 467
வேள்புலவரசர் - 477
வேளம் - 412 - 3
வேளமேற்றுதல் - 414
வேளிர் வரலாறு - 83, 86
வைகாவூர் - 253
வையாபுரிப்பிள்ளை - (S)239, 400
வையாவிநாடு - 262
வையைநெடுமால் - 241, 243
ஜடிலவர்மன்பராந்தகன்-250
ஜனஸ்தானம் - 4

ஜிதவிஜயன் - 74
ஜீவஸம்போதனை - 157, 450
ஜிஹ்வாமூலீயம் - 328
ஜைனராமாயணம் -17 - 19
ஸ்ரீநிவாஸஐயங்கார் (M) - 339
ஸ்ரீபுராணம் - 146, 450, 484
ஸ்ரீவாணீவிலாஸினீ - 78, 88
ஸ்ரீவைஷ்ணவம் - 52
ஸ்ரீஸூக்திரத்னஹாரம் - 438
ஷட்கர்மங்கள் - 146, 484
ஸ்தாணுரவி - 397
ஸப்தரிஷீச்வரர் - 284
ஸில்வன்லெவி - 220
ஸுமேரியன்லிபி - 143
ஹரப்பா - 143
ஹரிஸமயதிவகாரம் - 264
ஹரிஹராகாரம் - 272, 275
ஹெர்குலஸ் - 77
ஹெரடோடஸ் - 148
ஹோளகம், ஹோளை - 186
ஹோளாதிகரணநியாயம் - 186
க்ஷௌமம் - 149
Annals of Oriental Research of The University of Madras - 244, 459
Beal's 'Siyu ki' - 225
Bhandarkar's History of Deccan [4
Bhandarkar's Vaishnavism etc
Buddhistic Studies - 225 [58
Burnell's South Indian Paleography - 123 [144, 152, 167
Civilisation in Ancient India -
Cowell (E. B. Prof.) 220
Dalavay Agraharam Plates - 130
Divyavadana - 222
The Early History of India - 77,
Epigraphica Indica 290 [224
Gazetteer of Nilgiri Dt 316— Salem Dt 315—Vizagapatam
Goldstucker (Dr) - 85 [332
Hand Gazetteer of India - 184
Hatigumpha Inscription - 158
Historical Inscriptions of India
Hultzsch (Dr) - 427 [256
Imperial Gazetteer of India - 180
Indian Antiquary - 469
Indian Historical Quarterly - 220
Inscriptions of Madras Presiden-
Jataka - 220, 222 - 3 [cy 372
Journal of Indian History - 479
Kasakudi Plates - 130
Lewis Rice - 181
Mackanzie's Miss. - 257
Madras Museum Plates - 250
Mahavamsa - 224
Malabar and its folk 207
More on Manimekhala - 220
Mysore and Coorg from the Ins-
Periplus - 34 [criptions - 181
Ptolemy - 256 [Society - 162
Quarterly Journal of the Mythic
Ramachandra Dikshitar (V.R.)
Sylvain Levi - 220 [225
The Tamil Studies - 339
The Tamilian Antiquary - 167
The Tamils 1800 years ago - 34, 75, 144, 314
Tennent's Ceylon-94

—o—

## அநுபந்தம்

# கையறுநிலை வெண்பா*

பெண்மணியைச் சுற்றமெலாம் பேணு பெருந்தகையைக்
கண்மணியைக் கற்புடையென் காதலியைத்—தண்மணியை
கட்டழலி விட்டேன் கருங்கடலில் என்பெறிந்தேன்
இட்டம் பெரிதுடையேன் யான். 1

கற்றார் உலகுண்மை கண்டு முனமுரைத்த
பொற்றாலி யோடெவையும் போமென்று—சொற்றபடி
இல்லாள் கைவிட்டதன்பின் இம்மைப் பெரும்பயன்கள்
எல்லாங்கை விட்டனவே எற்கு. 2

ஞானம் தலைசிறந்தாய் நல்லோர் அடிபணிந்தாய்
வானம் திறந்து வழிகாட்ட—மேனின்றே
மாமகனை ஏற்றாய் மருகியொடும் என்னை என்னோ
ஏமமறக் கைவிட்டா யிங்கு. 3

இன்பமர்ந்த வாழ்வில் இருத்தியநீ ஏகியபின்
துன்பமரும் வாழ்வு தொடர்வேனோ—அன்புடையாய்!
செல்வேன் பரகதிநீ சில்லாண்டில் வாவென்றாய்
வல்லே வருவன் மகிழ்ந்து. 4

தாய்போல் தலையளிசெய் தாய்நீதந் தாய்நலத்தின்
ஆய்பே ருறுதி அமைச்சன்போல்—சேயிழாய்!
இல்லாளு மாயினைவின் னில்லளரோ டேகியின்
றில்லாளாய் ஆக்கினையென் னில் 5

ஊர்விட்டேன் சூழும் உறவினரை விட்டேனிற்
சீர்விட்டேன் இல்லோர்வின் சென்றபின்பு—நேர்மைச்
சதுரன் இளைய தனயன்வாழ் மானா -
மதுரையே மற்றினியென் வாழ்வு. 6

வீடு விளங்கவைத்த மின்சார் விளக்கொளிதன்
கூடிழந்து மின்சோதி கூடியதே—ஈடா
மலபந்த மற்றேன் மனையாளும் சேர்ந்தாள்
நலமந்த மில்லதோர் நாடு. 7

---

* 1954-ஆம் ஆண்டு, ஆசிரியர் தமது அருமை மனைவியையும் மூத்த புதல்வனையும் குலவிளக்காம் மருகியையும் அடுத்தடுத்துப் பிரிந்து மறுகி நின்ற நிலையில் பாடிய இரங்கற் பாக்கள்.

மன்னியசீர் வைகுந்தம் பெற்றால்நீ மற்றெனையும்
என்னுடையா னென்றிறைபால் ஏற்பித்து—பொன்னேஉன்
கைப்பிடியால் அண்ணல் கழல்சேர்த்தி னன்றியுனை
எப்படியாற் காண்பே னினி.

நற்பிறவி நீபெறில்என் நல்லூழ்தான் நின்னோடும்
கற்பரசீ சேர்க்கக் கடவதே—அப்பிறப்பில்
இம்மைப் பயனெல்லாம் எய்தி இறையருளால்
செம்மைப் பதம்பெறுவோம் சேர்ந்து. 9

தெய்வத் திருவுருவங் காட்டாயோ சேயிழாய்!
மெய்வைத் துறுகனவில் மேம்படவே—பொய்வைத்த
மேனியழ கால்மருட்டேல் வேண்டுவதெல் லாமினியுன்
ஞான ஒளியுருவே நான். 10

என்னை நினைந்தாயோ ஏந்திழாய்! கங்கைமுதல்
முன்னே யுடன்கூடி மூழ்கியநீ—மன்னடிக்கீழ்
ஆனந்தக் கங்கைநீ ராடுங்கால் அன்றேபோல்
யான்என் துணையிலேன் என்று. 11

என்னைப் பிரிந்தாளோ உத்தமிதன் நல்லுளத்தில்
பொன்னைப் பொழிந்தவந்த புத்தகமே—அன்னே!
அருள்பிரியா நல்லாள் அகன்றிடினும் யான்சொல்
பொருள்பிரியாள் வீடு புகும். 12

கற்பரசி என்றும் கருணை பொறைசீலத்
தொப்பிலாய் என்றும் உனைப்புகழ்வார்—அப்படியே
செஞ்சாயல் மேனித் திருவே உனைநினைந்தென்
நெஞ்சார்வந் தீர்வன் நிதம். 13

சரணம் பரனடியே சார்ந்தாய்க்குத் தெய்வ
மரணமுற வானேறி வாழ்ந்தாய்—அரணிலேன்
நிற்கின்றேன் நேரிழாய் நின்னேர் நலம்பாடிக்
கற்கின்றேன் வெள்ளைக் கவி. 14

செல்வத் தலைமகனே! சேடாத் திரிகலைகள்
வல்வித் தகநல் வழக்கறிஞா—பல்விதத்தும்
பெற்று வளர்த்தேனைப் பேணாதே சென்றனையுன்
நற்றாய் வழியே நயந்து. 15

காண்டற் கினியாய்! கருணை பொறையாதி
பூண்டுள் ளழகும் பொருந்தினாய்—ஈண்டெனக்கு
முன்பிறந் தென்னோ முறைமைகெட என்னைப்
பின்பிறக்க வைத்தாய் பிரிந்து. 16

பற்றண் ஒளியனையாள் பாரி இலக்குமியென்
கற்பினாள் நற்பெருமை காட்டுமால்—பொற்பார்
முகவைக் குளக்கரையென் மூதாட்டி பேரால் 17
மிகஒளிரும் மின்சார் விளக்கு.

சீமந்த னைப்பிறந்து சென்றசே டாத்திரியென்
மாமைந்தன் பேரதனால் வண்முகவை—ராமபிராற்
கானி விழாவிறுதி யாடுதிரு மஞ்சனங்கண் 18
டுனமற வைத்தே னுணர்ந்து.

செப்பு புகழ்பெரிய சீயரவதரித்த
ஐப்பசி மூலத் தருமறையோர்—ஒப்பிவியல்
ஓதி அறுசுவையோ டுண்ண வைத்தேன் புல்லாணித் 19
தீதில் திருக்கோயில் சேர்ந்து.

ஆசா ரியன்றன் அடிமலரை எண்மதியுள்
தேசாரச் சென்றவென் தேவியொடு—மாசாரா
மூத்த மகன்மருகி மூவர்க்குமே ஞாப 20
கார்த்தமு நாம் இந்த அறம்.

மீனத் தொளிர்நான்கு மேடத் திருட்பதினொன்
றேனைத் துலாத்தி விருட்டசமி—ஆனமுறை
மேவினார் விண்பால் விசயசயத் தெண்மதியுள் 21
தேவி மகன்மருகி சேர்ந்து.

—o—